JL
Jm211N08V3
N15
162031

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸ௵ ஆனிமீ : 1915-௵ ஜூலைமீ } பகுதி 1

வேதாந்தத் திரட்டு

VEDANTIC SELECTIONS

ஞானானந்த வைபவம்

47 நேதிக உபதேசம்

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளியந்தப் பண்புக் கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்ற மில்லை
அந்தமில்லை யாதியில்லை நடுவு மில்லை
யகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை.

(—ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—20.)

48. ஸ்வரூப உபதேசம்

இல்லை யில்லை யென்னினொன்று மில்லா தல்ல
வியல்பாகி யென்றுமுள்ள வியற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதா யான்று னென்னத்
தோன்றுமெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி
அல்லைபுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே.

(—ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—21.)

49. அனுபவ உணர்வு

தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்றாம்
ஞானகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கும்
ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்.

(—ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—22.)

50. அனுபவநீதம்: பரபரப்பு

அதுவென்றா லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
யாதலினா லதுவெனலு மறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் ஜனக னாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்
பதியிந்த நிலையெனவு மென்னை யாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமானந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூரிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.

(—ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—23.)

51. பரவசம்

ஓதரிய சுகர்போல வேனோ னென்ன
வொருவரிலை யோவெனவு முரைப்பேன் றானே
பேதமபே தங்கெடவு மொருபே சாமை
பிறவாதோ வாலடியிற் பெரிய மோன
நாதனொரு தாமுலகம் பார்க்க விச்சை
நண்ணானோ வென்றென்றே நானா வாகிக்
காதன்மிகு மணியிழையா ரெனவா டுற்றேன்
கருத்தறிந்து புரப்பதுன்மேற் கடன்முக் காலும்

(—ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—32.)

52. ஆனந்த வாழ்த்து

காலமொடு தேசவர்த்த மான மாதி
கலந்துநின்ற நிலைவாழி கருணை வாழி
மாலறவுஞ் சைவமுதன் மதங்க ளாகி
மதாதீத மானவருண் மரபு வாழி
சாலமிகு மெளியேனிவ் வழக்குப் பேசத்
தயவுவைத்து வளர்த்தவருட் டன்மை வாழி
ஆலடியிற் பரமகுரு வாழி வாழி
யகண்டிதா காரவரு ளடியார் வாழி.

(—ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்—33.)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்

CALENDAR

சாலிசகம் 1837 கலியப்தம் 5016	பசலி 1325 கொல்லம்-1090	1915 வருஷம் ஜூலை-ஆகஸ்டு

162031

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸவருஷ ஆனிமீ: [பகுதி. 1

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (தொடர்ச்சி)

(யோகஸூத்ரம் முடிவு 4-ம் பாதம்)

IV கைவல்ய பாதம் :—33 ஸூத்ரங்களை உடையது. இதுவும் ஐந்து பாகங்களை உடையது. அவையாவன : ஸித்திவிஷயம், வாஸனை நுட்பம், யோகத்வைதம், கைவல்ய வழி, கைவல்ய ஸ்வரூபம் ஆகிய இவைகளே.

(i) ஸித்திவிஷயம் :—முன்கூறிய ஸித்திகள் பிறப்பு, மருந்து, மந்திரம், தவம், ஸமாதி இவைகளில் ஏதாவது ஒன்றுலேயே ஏற்படலாம். பிறவியாலேயே பக்ஷிகளுக்குப் பறப்பதும், தேவதைகளுக்கு பல்வகைப்பட்ட விபூதி ஸித்திகளும், நரகஜீவர்களுக்கு எளிதில் இறவாமையும், இதுபோல பலவிதமாக அமைந்துவிடும். தமிழ்நாட்டுப் பதினெண் ஸித்தர்களில் பலர் மருந்துகளாலும்; அஸ்திரஸித்தி, க்ஷுத்ர தேவதாஸித்தி, தேள் பாம்பு விஷங்களிறக்கும் ஸித்தி இவை மந்திர உருவேற்றத்தாலும், விச்வாமித்ராதி பல ருஷிகளுக்கும் ராவணாதிகளுக்கும்சூராதியருக்கும் தவத்தாலும், வஸிஷ்டவாமதேவ சுகஸநகாதிகளுக்கு ஸமாதியாலும் ஸித்திகள் கைகூடியுள்ளன. ஆகவே ஸித்திகளுக்குப் பலவழிகளிருப்பதால் ஸித்தி கைக்கூடிவிட்ட மாத்திரத்தில் பெருமை ஒன்றுமில்லை. அவை மோக்ஷத்திற்குத் தடையாகாது அப்யாஸ வைராக்யாதிகளுக்கு உபயோகப்பட்டு கைவல்யம் கைகூடும்வரையில் வேலியாகவிருக்கும்படி அமையப்பெறும், ஸமாதி வழியாக ஸித்திகளைப்பெற்று விளங்குவதே சிறந்தது. ஸமாதிவழியாக ஸித்தியைப் பெற்றவர் எப்படி அவைகளை மோக்ஷமார்க்கத்தில் உபயோகப்படுத்துவர் என்ற கேள்விவரலாம். அவர்கள் அதை உலகத்தவர்கள் கடைத்தேற சிற்சில ஸமயங்களிலும், தமது ப்ராரப்தானுபவம் சீக்கிரம் முடிந்து கைவல்யம் அந்தப் பிறப்பு முடிவிலேயே ஏற்படும்படி செய்வதற்கு அநேக ஸமயங்களிலும் உபயோகப்படுத்துவர். தமது இரண்டாவது வழியில் உருவத்தைப் பலவாக்கிக்கொண்டு புலியாதிகள் போன்ற சில ரூபங்களால் உலகத்தவர் தம்மை அணுகாவண்ணம் தடுத்து, ருஷியாதி உருவங்களால் தவம்,ஸுக துக்கானுபவம் இவைகளைச் செய்துகொண்டிருப்பார் தமது ஸித்திகளால். இப்படிச் செய்யுங்கால் இவர்களுக்குப் பல உருவங்கள், ப்ரகிருதியின் அணுக்கள் இவர்கள் இஷ்டப்படி சேர்ந்து பிரிவதால் தோன்றிஒடுங்கும். ஒவ்வொருசரீரத்திலும் இந்த யோகிகள்,மனதின் காரணமான ஸத்வநிலையான அஸ்மிதை என்ற ப்ருகிருதி பாகத்திலிருந்து தனித்தனி மனதை உண்டாக்கி, அமைத்து விடுவர். யோகிகளுக்கு இப்படி எல்லாம் செய்யும்திறன் புதிதாக உண்டாகிவிடுவதல்ல. ஏற்கெனவே ஈசாஞ்ஞைப்படி ஸமாதியாதிகளால் தேறிய மனதின் எண்ண விசேஷங்களின்படி சேர்ந்து பிரியவேண்டும் ப்ரகிருதி என்று ஏற்பட்டுள்ளது. ஸாதாரண மனங்களில் தடைகள் பல இருப்பதால் இந்த ஆஞ்ஞைப்படி பிரகிருதி எல்லோரிஷ்டப்படி சேர்ந்து பிரியாதிருக்கிறது. மனதின் தடைகளை யோகாதிகளால், முக்யமாக யோகத்தால்

ன்றும் ஸித்திகள் நீக்க தன் இயற்கை அமைப்பின்படி ப்ராக்ருதியோகிகள் சொன்னபடி ஈசானுக்கும் மீறுதிருக்கும்வரையில், ஆடி, அவர்களுக்கு உபயோகப்படும். இதற்கு பதஞ்சலி பகவான், குடியானவன் திருஷ்டாந்தம் கொடுத்து விளக்குகிறார். தண்ணீருக்கு மேட்டிலிருந்து பள்ளத்தில் ஓடிப்போவது இயற்கை, கால்வாய் வழிவரும் தண்ணீரை தன் பள்ளவயலுக்குக் கொண்டுவர எண்ணும் குடியானவன் அதை வரவொட்டாது" தடுத்திருக்கும் அடைப்பு மண்ணை எடுத்து மாற்றி அதைத் திறந்து விடுகிறான்; தண்ணீர் தானாக ஓடிவருகிறது. இதுபோலவேதான் யோகஸித்திகளால் காரியங்கள் பார்ப்பதும். யோகஸித்தியால் ப்ராரப்தம் சீக்கிரம் தீர அல்லது பலர்க்குபகாரமாக விருக்க, பூர்ப்பலும் பலரூபமுடைய யோகி ஒருவன் அவைகளினுள்ள மனங்களுக்கு எல்லாம் தன் மனதை அந்தர்யாமியாக அமைத்துக்கொண்டு காரியம் பார்ப்பன். இவ்வாறு முதலில் கூறிய ஐந்து வழிகளால் செய்யக் கூடுமாயினும் ஸமாதிவழியாகச் செய்பவனுக்குத்தான் இந்தக் காரியங்கள் வாஸனைகளையும் ப்ராரப்தகர்ம ஸம்ஸ்காரங்களையும் உண்டாக்காது, அவனுக்கு நிருத்தம் கைகூடியிருப்பதால். இப்படிச் செய்து ஒரு ஸம்ஸ்காரமும் எழப் பெறுதிருந்தவர்களுள் சிறந்தவர் மஹா யோகீச்வரரான கிருஷ்ண பரமாத்மாதான்: இவரது கோபிகா லீலையும், கார்ஹஸ்த்யலீலையும் இங்கு கவனிக்கத்தக்கது. சுகர், ஜைகீஷவ்யர், ச்யவனர் முதலியோர் விஷயமும் இப்படித்தான். விச்வாமித்திரர் போன்ற தபஸ்விகள், ராவணாதிகள் போன்ற அஸுராஸித்தர்கள் இவர்களுக்கு வேறு வழியால் ஸித்தி கைவந்ததால் பல ஸமயங்களில் ஸித்தி விளையாட்டுக்களால் தவமிழக்க இடரடும்படி ஆயிற்று. யோகஸித்தன் ஒழிந்த மற்றவர்கள் ஸித்திகள் மாறுனவழிகளில் உபயோகப்படுத்தப்பட்டு, அவர்கள் மனப்பக்குவங்களுக்கு ஏற்ப புண்யம் பாபம் மிச்ரம் ஆகிய மூன்றுவித ப்ராரப்த வாஸனாதி ஸம்ஸ்காரங்களை உண்டாக்கி அவர்களை கர்மபந்தத்தில் அகப்பட்டு உழலும்படி செய்துவிடும். (iv ஸூ-1-7)

(ii) வாஸனாநுட்பம்:—செய்யும் தொழிலால் ஏற்படக்கூடிய கர்மஸம்ஸ்காரவிவரம் II-ம் பாதம்(ii)வகுப்பான கர்மகதியில் விளக்கியாகிவிட்டது. இவைகளுக்கேற்ப பாபபுண்ய மிச்ரகர்ம ஸம்ஸ்காரம் ஸமாதிஸித்தனிடம்இருக்கஇடமே இல்லை என்பது வெளிப்படை. இவை இவனுக்கு நிருத்த நிலைப்பால் நீங்கி இருக்கும். வாஸனையின் விஷயம் யாது என்ற சங்கையை இங்கு விளக்கப் புகுவர் பதஞ்சலி பகவான். பலிக்கும் ப்ராரப்த கர்மங்களுக்கேற்ற வாஸனைகளே மனதில் முனைந்தெழும். நாம் எத்தனையோ விதமான ஜன்மங்களெடுத்தபொழுது அவைகளில் ஏற்பட்டிருக்கும் வாஸனைகள் எல்லாம் நமது மனதிலிருப்பினும் எல்லாம் ஒரே அடியாக வெளி வந்துவிடா. சில இந்த ஜன்மத்தில் வாராமலேஇருக்கலாம்: சில மாத்திரம் வரலாம். புலி ஜன்மத்தில் நமக்குப் பதிந்துள்ள பல கொடிய வாஸனைகளுள் ப்ராரப்தவசமாக வந்துள்ள மானிட ஜன்மத்தில் எல்லாம் முனையாது சில தகுந்த ஸாதாரண பொது வாஸனைகள் தலைதூக்கலாம்: அதாவது முன்கோபம், கொடுமை இவைகள் வரலாம்;கொலை செய்வது, சித்திரவதை செய்வது இவைகள் வாராதிருக்கலாம். இப்படிப்பட்ட முன் ஜன்மவாஸனைகள் மிகமுனைந்து இந்த ஜன்ம ப்ராரப்த விசேஷத்தால் முனைய இடமில்லாமலிருந்தால் ஸ்வப்னங்களில் வந்து அவை நம்மைத் தாக்கலாம். பக்ஷி ஜன்மத்தில் நமக்கு ஏற்பட்டிருக்கும் பறக்கும் வாஸனை மானிடஜன்மத்தில் வர இடமே இல்லை, சிறகு நமக்கில்லாததால். ஆனால் இந்தவாஸனை

வெகுமுனைந்துவிடின் நாம் பறப்பதான ஸ்வப்னத்தை உண்டாக்கிவிடும். இப்படி ப்ராரப்தத்தால் ஏற்படும் ஸந்தர்ப்பத்திற்கேற்ப வாஸனை முனைந்து தொழிற்படுமே ஒழிய, கர்ம வாஸனை இரண்டிற்கும் வேறு காரிய காரண ஸம்பந்தமே இல்லை. ஆகவே கர்மபலம்போல் வாஸனாபலமான தொழில் தடுக்கமுடியாததேயல்ல. வாஸனை ஒரு கர்மாவை அடிக்கடி செய்ததால் அதையே தகுந்த ஸந்தர்ப்பத்தில் செய்து தீர்க்கவேண்டும் என்று மனதில் ஏற்படும் நுட்பவேகமாதலால், அதன் வழிச் சென்று அதை நாமாகத் திடப்படுத்தினாலும் படுத்தலாம்; அல்லது அதைத்தடுத்து எதிரிடையான காரியங்களில்பழகி எதிர்வாஸனையை ஏற்படுத்தி முன்னதை வலி குன்றும்படியும் செய்தாலும்செய்யலாம். நல்வாஸனை அல்லது தீயவாஸனை ஆகிய இவைகளில் எது முனைந்து தொழிற்பட்டாலும் ஸுகதுக்கரூபமான கர்மபலன் இடையில் வந்தேதீரும்; தடுக்க முடியாது. இப்படி வரும் தன்மையால் இதை உணராமல் நல்ல வாஸனை கொடிய பலனையும், கெட்ட வாஸனை நல்ல பலனையும் தரும் என்ற துர்வாஸனைகள் நமது மனதில் ஏற்பட இடம் உண்டு. இது நிகழவொட்டாதும் எந்த துர்வாஸனை வழியும் மனம் செல்லாதும் சாஸ்திர வழி நடந்து நாம் நமது மனதைப் பாதுகாக்க வேண்டும். சிற்சில ஸமயங்களில் பிறவி, இடம், காலம் இவைகளால் தடுக்கப்பட்டிருப்பினும், திடீரென்று விஷயங்களால், வெளியில் உள்ள வஸ்துக்களின் சிறு ஒற்றுமையால் நினையாதிருப்பவை ஞாபகம் வருவதுபோல், அத்புத வாஸனைகள் முனைந்தெழலாம், வெளி ஸம்பவ விசேஷத்தால். வெகுநாள் வரையில் ஒழுங்காகவிருந்தசாமியார் திடீரென்று வெளி விஷயச் சேர்க்கையால் வாஸனை வசப்பட்டுக் கெட்டு விடுவது இந்த வழியால்தான். உள்ளூர. விஷய ஆசை இருந்திருக்கலாம்: நற்பழக்க பலத்தால் அது அடங்கியிருக்கலாம்: தாங்கமுடியாத பலமான விஷயத்தோற்றத்தால் அதோகதியும் அடையலாம். சுத்தாத்மாக்கள் ஒரே அடியில் லக்ஷக்கணக்கில் லஞ்சம் வாங்குவதும், உலகச்சிறப்பை துரும்பாக மதிப்பவர் பெரிய உத்யோகம் ராஜத்வம் இவைகளைக் கூசாது கைக்கொள்ளுவதும், நல்ல வைதிக வம்சத்தில் தலைக்கத்திரிப்பு, அநுசாரம் முதலிய அலங்கோலம் தலைஎடுப்பதும், வெளி நாட்டாரிடம் வேதபக்தி ஆசார ஸம்பத்து இவைகள் காணப்படுவதுமே இங்கு தடைக்கிடையே வாஸனை ஸமய பலத்தால் முனைவதற்கு உதாரணம். இவைகளைத்தடுத்து நிறுத்த முடியும்: கர்மாப்போலத் தடுக்க முடியாதவையே அல்ல: மிகுந்த பலமான முயற்சியால் தான் இது நிறைவேறவேண்டும். இதைத் தலைவிதி என்று எண்ணி மயங்கவேகூடாது. நாம் ஏமாந்து விட்டோமே என்று தான் தம்மையே நொந்துகொண்டு, இனி இம்மாதிரி ஸமயங்களில் மோசம்போகாதிருப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும் சீக்கிரமாக. இந்த வாஸனை அநாதி என்பது இதனுடன் ஸம்பந்தப்பட்ட இஷ்ட விஷய விருப்பு, அனிஷ்ட விஷய வெறுப்பு எல்லா ஜீவராசிகளிடத்தும் சிறுகுழந்தை நிலையிலும் இருப்பதால் வெளியாகும். இவைகளை அடக்க இவைகள் ஓங்கும் காரணமான ஆணிவேர், பயன், தாங்கலிடம், தூண்டுகோல் இவைகள் கவனிக்கப்படவேண்டும். இவை மழுங்கிக்கொண்டுவந்தால் வாஸனையும் அப்படியே யாகிவிடும். இவைகள் முறையே அவித்யாதி க்லேசங்கள் ஸகல்பவிருத்தித்தொழில்கள், அசுத்தமனம், அதாவது கலக்கம், சஞ்சலம் இவைகளை உடையதாக விருத்தல், வெளி விஷயங்கள் ஆகிய இவைகளே. இவைகளை சாஸ்திரத்தில் கூறியபடி க்ரியாயோகத்தா

லும், யம நியமங்களாலும், தாக்கி பலம் குன்
றச்செய்து ஸமாதியால் நசுக்கிவிடவேண்டும்.
(iv ஸூ-8-11).

(iii) யோகத்வைதம்:—இது II-ம் பாதம்
துக்கவிஷயம்போன்ற மத ப்ரக்ரியாபாகம். வஸ்
துக்கள் எல்லாம் இல்லாதிருந்து திடீரென்று
உண்டாகி பின்னர் இல்லாமற்போவனவேயல்ல;
அவை எப்பொழுதும் உள்ளவைதான். சில
ஸமயம் நுட்பமான வெளிப்படும் நிலையிலும்,
வெளிப்பட்ட நிலையிலும், நுட்பமாகி ஒடுங்கிப்
போகும் நிலையிலும்இருக்கும் அதாவதுஸ்தூல
ஸூக்ஷ்மகாரணம் என்ற மூன்றில் ஏதாவது
ஒரு நிலையிலிருக்கும், மரம், முளை, விதைபோ
ல. வஸ்துக்களுக்கெல்லாம் ஆதாரம் ப்ரகிருதி
ஒன்றுதான் அவை அதன் குணமட்ட நிலைபுரண்டு
வருவதால் அறிபவன் அறிவு அறிபடு பொருள்
நிலை ஏற்பட்டு ப்ரபஞ்ச பரிணாமமாகும் வஸ்து
ஒன்று தான். குண மாறுபாடு வேற்றுமை
யால் பலவென்ற தோற்றத்தை உண்டாக்கும்.
ஸ்வப்ந வஸ்துக்கள்போல ஒருவனுக்கே சிற
ப்பாக இல்லாது பலருக்குப் பொதுவாக இருப்
பதால் ப்ரபஞ்ச ரூபமான வெளிவஸ்து ஸத்யம்
தான். இப்படி ஸத்திய வெளிவஸ்து ஒன்றேயா
யினும் மன மாறுபாட்டால் பலருக்கு பலவித
மாயும் ஒருவனுக்கே காலமாறுபாட்டால் பல
விதமாயும் காணப்படும். அழகிய பருத்தஸ்திரீ
ஒருய்க்கு நல்ல ஆகாரம், ஸந்மார்க்கிகளுக்கு
வெறுப்புப்பொருள், காமிக்கு போக ஸாதனம்:
இப்படியே நல்லபோஜனம், குழந்தைப் பருவத்
தில் துக்கம், யௌவனப் பருவத்தில் ஸுகம்,
அதிலேயே வ்யாதி காலத்தில் துக்கம். இம்மா
திரியான மனம் விஷயங்களோடு ஸம்பந்தப்
பட்டு, அவைகள் வடிவமானால்தான் வெளி
வஸ்துஉணர்வு ஏற்படும், இல்லாவிடில் இல்லை.
மனதின் வேலை நம்மால் உணரப் படுவதாலும்
மனத்திற்குத் தன்னுணர்வில்லாததாலும், மன
தால் வஸ்துக்களையும் தன்னையும் உணருவது
இயலாதாகையாலும், ஞாபக விஷயம் விளங்
காதாகையாலும், ஓயாத் தர்க்கம் ஏற்படு
மாகையாலும் மனதைவிட வேறான புருஷன்
ஒருவன் அதன்காரியத்தைஉணர்த்தத்தனியாக
இருத்தல் வேண்டும். மனத்திற்கும் புருஷனு
க்கும் ப்ரதிபல ஸம்பந்தம் உண்டு. மனதில் புரு
ஷன் தோற்றம் ஏற்படுவதுதான் மனம்வெளிப்
பொருள்களை உணருவதுபோலவும், புருஷ
னில் மனம் ஓய்ந்து தோற்றுவதால் மனம்
புருஷனால் உணரப்படுவது போலவும் தோற்
றும். இப்படிப் புருஷன் ஒரு புறத்திலும்
விஷயங்கள் மறுபுறத்திலுமிருக்க இவை
களுடன் ஸம்பந்தப்படும் மனத்தால்தான் எல்
லாம் நிறைவேறுகிறது. மனம் விருத்தி செய்
யாது," ஓய்ந்து கலக்கம் தெளிந்து சஞ்சலம்
நீங்கி விட்டால் புருஷனிடம்ஒளிமழுங்கி மனம்
ஒன்றுபட்டு விடும் கைவல்ய நிலை உண்டா
கும். இந்த மனம் வாஸனைகளை முன்னிட்டு
பல கருவிகளுடன் சேர்ந்தே தொழிற்படுவ
தால் தன் பொருட்டல்லாது பிறன் பொருட்டு
(அதாவது ஆத்ம பந்த மோக்ஷத்தின் பொரு
ட்டே) தொழிற்படுகிறது. இப்படி புருஷ
ப்ரக்ருதிகளின் தன்மைகளை உள்ளபடி உண
ருபவருக்கே, நான் எனது என்ற பாவனைகள்
மங்கிவந்து அழிந்துவிடும் முடிவில்.
(iv—ஸூ—12—24)

(iv) கைவல்ய வழி :—முற்கூறிய ப்ரகிருதி
புருஷவிவேகம் மனதில் ஏற்பட மனம் என்ற
குட்டையிலிருந்து அதன் சக்தி என்ற நீர் பா
ய்ந்தோடும் விஷய விருத்திகள் என்னும் வாய்க்
காலைவிட, விவேக வாய்க்கால் ஏற்பட்டு பழக்க
த்தால் ஆழமாகிவிட, அதன்வழியே மனச்சக்தி
நீர்பாய்ந்து கைவல்யமென்ற கடலை நோக்கிச்
செல்லும், விஷயானுபவம் என்ற பாலைவனத்
தை நோக்கிச் செல்லுவதை விட்டு. இப்படிப்

போகும்பொழுதே புதுவாய்க்கால் இடப்படுமு
ன்னர் இடையில் கரையிடிந்து விழுந்து ஸமுத்
திரவழி தடைபடுவதுபோல, பழக்கம் முற்றாத
தாலும் புத்திபலக்குறைவாலும் ஸமாதியிலிரு
ந்து வெளிப்படுங்காலோ அல்லது ஏகாக்ரத்தி
ற்குஇடையிலோ ஸாத்வீகபரோபகாரிகள் என்
பதுபோன்ற விருத்திகள் ஏற்பட கைவல்யம்
நோக்கும் மனச்சக்தி தடைபட்டு ப்ரபஞ்சவழி
திரும்பிவிடலாம்; இப்படி இடமாக ஏற்பட்டு
விடாது பழக்கத்தை பலப்படுத்தி மேல் நோ
க்கி மனதைச் செலவிடவேண்டும். இப்பழக்க
முதிர்ச்சியால் க்லேச விஷயத்தில் கூறியது
போல ஏகாக்ர அப்யாஸ பலத்தால் வாஸனைகள்
ப்ரஹாண (குற்ற நீக்க) நிலையையும், நிருத்த
பலத்தால் ப்ரளய (அற நீக்க) நிலையையும்
அடைந்து ஓய்ந்து விடும். இப்படிப்பட்ட ஒழி
வில் ஒடுங்கும் நிலையில் தொழிலற்று தன் முயற்
சியை தலையெடுக்கவொட்டாது நின்று விட்
டால், அடங்கிய விவேகம் தானாக விரிவடைய
அதில் ஈசன் முக்ய தன்மையான ஆனந்த
மழை என்னும் தர்மமேக ஸமாதி கைகூடி
விடும். இது தானாக வந்தமையும் வஸ்து
தந்திர நிலை. பாபத்திலிருந்து பிரித்து, பா
பத்தை அறநீக்கியபின் மனதில் மிஞ்சி ஓங்கி
யுள்ள புண்யபதிவுகள் எல்லாம் அற மனதை
விட்டு நீங்கிவிட யோகி பாபபுண்யங்களுக்கு
அப்பாற் பட்டிருப்பன் இந்த ஸமாதி காலத்
தில்; வெளிப்படுங்காலத்தில் புண்யத்திலேயே
வந்து முன் வாஸனாபலத்தால் தங்கி அவைக
ளில் ஒருவிதப் பிடிப்புமின்றி தன் இயற்கை
போல அவைகளிலேயே உழலுவன். புண்யப்
பிடிப்பும் ஸமாதியில் நீங்கியே போய்விட்டபடி
யால். (iv—ஸூ 25—28)

(v) கைவல்யத்தின் தன்மை :— கைவல்ய
ப்ராப்தியால் க்லேச கர்மாக்களும்ஆசயம்என்ற
வாஸனையுடன் ஒழியும். விபாகமாகிய விதி
போகிக்கு ஒழிந்தும், ஒழியாததுபோலப் பிற
ருக்குக் காணப்படும். இதுபற்றி அந்த விஷயம்
தனித்துக் கூறப்படவில்லை. ப்ராரப்தத்துடன்
யோகிக்கு உள்ள போலிஸம்பந்தமான தேஹ
ஆயுஸ் போகம் என்ற தாக்கும் தன்மைகள் தே
ஹம் நழுவுங்கால்தான் பிறர் த்ருஷ்டியிலும்
அற நீங்கிவிடும். ஆகலால்தான் யோகியின் மர
ணத்திற்கு ஸத்தி, பூர்ணமாதல் என்றபெயர்க
ளிடப்பட்டுள்ளன சாஸ்திரங்களால். இந்நிலை
யில் புத்திமறைப்பு அற நீங்கிவிட உணரப்
படும் விஷயங்கள் அல்பமாகிவிடும். ஸாதன
மில்லாமல் ஸாதிக்கும் தன்மையும் வந்து
விடும் இப்படியாக, தன்னோடு பேதமற நிற்
கும் ஈசன் தன்மையிலேயே புத்திமழுங்கப்
பெற்ற புருஷன் நின்றுவிடுவன் அற்பமான ப்ர
கிருதியையும் மறந்து. க்ஷணகாலத்தை ஆதா
ரமாய் ஒரு மாறுபாடுமுடியுங்கால் முன் மாறு
பாட்டைக்குறிக்கும் தன்மையுடைய ப்ரகிருதி
யின் மாறுபாடுவரிசைகள் இவன் விஷயத்தில்
பயனற்றனவாகும். இப்படி ப்ரகிருதி, புரு
ஷன் விரும்புவனவான பந்த மோக்ஷங்களைத்
தரும் சக்தியை எவன் விஷயத்தில் இழந்து
தன்முன்னிலைக்கு மாறாக ஓய்ந்து விடுகிறதோ,
எவன் புத்தி ஒளியிழந்துதான் அடங்கும் ஸ்வ
ரூபத்தில் அடங்கிவிடுமோ, அவனே கைவல்
யம் கைகூடினவனாவன். (iv ஸூ 29-33.)

இதுவரையில் ராஜயோகத்திற்கு ஆதார
மான பதஞ்ஜலி பகவான் யோக ஸூத்ரம்
சுருக்கமாக எடுத்துக்காட்டப்பட்டது. இது
தான் நமது வைதிகமதபலசிக்ஷை என்னலாம்.
இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் நன்குவிளங்
காது, மோக்ஷத்தின் நேர் வழியான வேதாந்
தம் விளங்கவேமாட்டாது. இதில் கூறப்பட்ட
பழக்கவிசேஷங்களின்றி வேதாந்தத்தை அனு
கிப் பழகுவதற்கு வேண்டிய ஸாதனங்களும்
ஆற்றலும் ஏற்படவே மாட்டா. கர்ம
பக்திகள் அடங்கப்பெற்ற யோகத்தையே
வேதம் உபாஸனை என்றழைக்கும். இந்த
யோகத்தில் பழகும் விதத்தைத் தகுந்த
குருக்கள் அல்லது உபாஸனாமூர்த்தங்கள் மூல
மாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இப்ப
ழக்கங்களுக்குவேண்டியவிசாரணாவிஷயங்களை

இனி எடுத்து ஆராயப் புகவேண்டும். இந்த ராஜ யோகத்திற்கு யமம், நியமம், தாரணை த்யானம் ஸமாதி ஆகிய அங்கங்கள் ஐந்துதான். இவைகளில் பழகிவந்தால் மற்றையமூன்று அங்கங்களும் தாமே வந்தமைந்து நிருத்தம்மை கூடி கைவல்யம் வந்து அமரும். இந்த ஐந்து அங்கங்கள் கைகூடுவதற்கே பின்வரும் விஷயங்களில் தெளிவான உணர்வு இருத்தல் வேண்டும் இவ்விஷயங்களாவன கர்மா, கர்மகதி, கர்மபலன், மரணம், லோகாந்தரம், வர்ணாச்ரமம், ஜீவன், ஈசன், ஈசன் வழிபாடு, வேதங்கள், அவைகளை உணரும்வழி, ஆகிய இவைகளே இவைகளைப் பின்னர் எடுத்தாராய்வோம்.

மெத்தனைப் படுத்து நித்திரை செய்தல்.— "மெத்தெனப்படுத்தல் நித்திரைக்கழகு" என்று ஔவையார் உரைத்த முதுமொழி என்கிறார்களே. மெத்தைத்திண்டு திவாசு தலையணை துப்பட்டி முதலான 12 வகை சுகங்கள் எவ்வளவு விரும்பாமல் தூங்குகிறோமோ அவ்வளவும் தேகத்துக்கு வலிவும் உருக்குலையாவடிவமும் முக்கியமாக ஸ்திரீகளுக்கு அமையும். மல்லாந்து மெத்தெனப் படுத்தவர்களுடைய தோள்பட்டை நரம்புகள் சுருங்கிப்போவதும், மார் குறுகிவருவதும் அங்கங்கே மூச்சுப்பிடித்துக் கொள்வதும், கழுத்து நரம்புசுருட்டிக் கொள்வதுமாகிய விகாரங்களுண்டு: இடதுபக்கமாக சிலநேரமாவது படுத்து தூங்கினால் ஜீர்ணசக்தி குன்றாமலிருக்கும். உரப்பான படுக்கையின் மீது படுத்துத் தூங்கினால் நரம்புகளும் வளர்ந்துவலிமைபெற்று உதரம் பாய்கிற வழிகளும் தடைபடாமல்சென்று தேகம் திடப்பட்டு அங்கங்கள்கோணலில்லாமல் வளர்ச்சிபெறும். முக்கியமாக வேனிற்காலத்தில் அதிகதிண்டு தலையணையும் கம்பளங்களும் துப்பட்டிகளும் விலக்கப்படாமலிருந்தால் தேகத்தில் சூடு அதிகரித்து தேகம் மெலிந்து போவதோடு துணிச்சுமைகளாலே இரத்த ஓட்டம் தடைபட்டுப்போகிறது. தேகத்துக்கு இவ்வளவுசுத்தமான காற்று இருக்கவேண்டுமென்று ஓர் அளவிருக்கின்றது அதிகபோர்வைகளை வழங்கினால் சுத்தமானகாற்று குறைந்துப்போய்விடும். மிதமான தூக்கமும் உரப்பான படுக்கையும் சௌக்கியத்தைத் தரும். அவைகளில்லாமல் குளிர்தேசங்களை விட வெப்பமான தேசங்களில் வசிக்கும் ஜனங்கள் படுக்கைத் துணியும் போர்வையும் இலேசானவையாயிருப்பதால் உருக்குலையாமலும் கூன்வளையாமலும் அழகாக இருக்கிறார்களென்று ஐரோப்பியர் எண்ணியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் சரியானபக்கத்தில் படுத்துத் தூங்குதலும் மெத்தெனச் சௌக்கியம் தேடாமையுமேயாமென்கிறார்கள். மல்லாந்து படுக்காமல் சரியான பக்கத்தில் ஒருக்களித்துப் படுத்தால் ஜலதோஷமும் நெருங்காது. நோயற்று வாழ்வதே வாழ்வு.

சேரன் செங்குட்டுவன்

CHERAN CHENGUTTUVAN

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்று தொல்காப்பியர் கூறியபடி, சேரசோழ பாண்டியர் என்ற மூவரும் தொன்றுதொட்டுத் தென்னாடுகளை ஆண்டுவந்த தமிழ் வேந்தர்கள் என்பதும், தமிழகத்தின் பழைய பெருமையைச் சிறப்பித்து வந்தவர்களென்பதும் யாவரும் அறிந்தவை. இவருள், முதல்வராகிய சேரவரசர் செய்திகள்பல சங்கநூல்களால் நன்கு விளங்குகின்றன. இவ்வமிசத்தில் உதித்த கடைச் சங்ககாலத்து வேந்தர்களிலே, சேரன் செங்குட்டுவன் என்பவன் அறிவு திரு ஆற்றல்களாற் பெரும்புகழ்பூண்டு விளங்கியவனென்பதை, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரமுதலிய நூல்களால் அறியலாம் இந்நூல்களுள் பதிற்றுப்பத்து, அவ்வரசன் காலத்துப் புலவர் பெருமானாகிய பாணராலும், சிலப்பதிகாரம் அச்சேரன் தம்பியாகிய இளங்கோவடிகளாலும் இயற்றப்பட்டவை. ஆகவே, இவ்விரண்டினுங் கூறப்படும் விஷயங்கள் உண்மையுடையனவாக மதிக்கத் தடையில்லையாதலால், இவை கூறும் செய்திகளை மற்றச் சாதனங்களுடன் கூட்டி, செங்குட்டுவனது வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கமாக இங்கு எழுதுகின்றேன்.

சேரவமிசம்

சேரவமிசம் மிகப்புராதனமான தென்பது, இராமாயண பாரதங்களிலும் இதனைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப் படுதலால் தெரிகிறது. வான்மீகி முனிவர், கேரள தேசத்தையும், அதன் துறைமுக நகரமான முசிரியையும் தம்மிதிகாசத்திற் குறிப்பிடுவர். இவ்வமிசத்துதித்த உதியஞ்சேரல் என்பவன் மஹாபாரதயுத்தத்தில் பாண்டவசேனைக்கு உணவளிக்குஞ் செயலை மேற்கொண்டானென்று பழைய நூல்களிற் புகழப்படுகிறான். பிற்காலத்தில், இப்பாதகண்ட முழுதும் ஆட்சிபுரிந்த அசோக சக்கரவர்த்தியின் நாளிலும் இச்சேரர் தென்னாட்டில் சுதந்தர அரசராகவே விளங்கினர் இவ்வமிசத்தவரெல்லாம் வீரம் நியாயம் தியாகம் முதலியவற்றால் ஒப்புயர்வற்று விளங்கினவர்.

சுற்றத்தார்

வடநாடெங்கும் தன் வெற்றிப்புகழ் பரப்பியவனும், கடற்போர்புரிந்து, பகைவரது கடம்ப மரத்தை வெட்டிய வீரனுமாகிய நெடுஞ்சேரலாதன் என்பவனுக்கு நற்சோணை என்ற சோழன்மகளிடம் உதித்தவன் நம் சேர் பெருமான். செங்குட்டுவன் என்ற இவன் பெயர்க்கு, செம்மை நிறம் வாய்ந்த குட்டுவன் என்பது பொருள். [குட்டுவன்—குட்டநாடுடையோன்] இவன் சிறிய தந்தையாய், வீரனும் ஞானியுமாக விளங்கியவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பான். செங்குட்டுவனுக்கு மாற்றாந்தாய்ச் சகோதரராய் இவன் காலத்தே சேரநாட்டின் பகுதியை ஆண்டுவந்தவர்கள், நார்முடிச்சேரலும், அவன் தம்பி ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுமாவர். நம் சேரனுக்கு ஞாதியான வேறு அரசர் சிலரும் மலைநாட்டின் சிலபிரதேசங்களை ஆட்சிபுரிந்து வந்தனர். இச்செங்குட்டுவன்மனைவி, இளங்கோ வேண்மாள் என்றும், மகன் குட்டுவஞ் சேரல் என்றும் கூறப்பட்டுள்ளன. நம் சேரனுக்குத் தாயுடன்பிறந்த அம்மான் நெடுங்கிள்ளியும், அம்மான்சேய் பெருநற்கிள்ளியும் ஆகத் தெரிகின்றனர்.

போர்ச் செயல்கள்

செங்குட்டுவன் தன் பால்யத்திலும் முதுமையிலும் பெரு வெற்றியுடன் நடத்திய யுத்தங்கள் முக்கியமாக ஆறு என்று ஒருவாறு கணக்கிடலாம். அவையாவன:—

(1) தன் தாயாகிய நற்சோணையை கங்கையில் நீராட்டிவரும்பொருட்டுச் சென்ற காலத்தில் ஆரியவரசர் பலருடன் இவன் நடத்தியது.

(2) கொங்கர் செங்களத்தில் நடத்தியது

(3) கப்பல்களைச் செலுத்திக் கடலில் நடத்திய பெரும் போர்.

(4) மோகூர்த்தலைவனும் பாண்டியன் சேனாபதியுமாகிய பழையன் மாறனுடன் நடத்திய கொடும்போர்.

(5) தன் மைத்துனச் சோழனுக்கு விரோதமாகக் கிளம்பிய சோழவமிசத்தவர் ஒன்பதின்மரை நேரிவாயிலில் அழித்தது.

(6) உத்தரகோசலத்துச் சென்று, குயிலாலுவத்தில் ஆரியவரசராகிய கனகவிசயர் முதலியோரை வெற்றிகொண்ட போர். இவற்றின் விரிந்த வரலாறுகள் சங்கநூல்கள் நோக்கி அறியத்தக்கன.

இரண்டு சரித்ர நிகழ்ச்சிகள்

செங்குட்டுவன் காலத்தில் தமிழ் நாட்டார் என்றும் மறக்கக்கூடாத இரண்டு சரித்திர விசேஷங்கள் நிகழ்வனவாயின. இவை கோவலன் கண்ணகிகளைப் பற்றிய செய்தியும், மணிமேகலை செய்தியுமாகும். சுருக்கமாக இந்நிகழ்ச்சிகளைக் கூறுவேன்.

கோவலன் கண்ணகிகள் சரிதம்:—காவிரிப்பூம்பட்டினத்தில் பெரிய வியாபாரியொருவன் மகனான கோவலன் என்பவன் தன் கற்புடை மனைவியான கண்ணகியுடன் இல்லறநடத்திவருங்கால் மாதரி என்ற நாடகக் கணிகையைக் காதலித்துக் கைம்முதலை யெல்லாம் அவள் பொருட்டுச் செலவிட்டு ஊழ்வயத்தால் அவளிடமும் வெறுப்புற்று வாணிகஞ் செய்து பொருளீட்டவேண்டித் தன்மனைவியுடன் மதுரை வந்து சேர்ந்தான். சேர்ந்தவன், தன் மனைவியின் விலையுயர்ந்த காற்சிலம்பொன்றை விற்றுவரக் கடைத்தெருவிற் சென்று அதனை அரண்மனைத் தட்டானொருவனிடம் காட்ட அவன் தான் முன்பு கவர்ந்த அரசன் தேவியின் சிலம்புபோல அது இருந்ததனால் தன் மேலிருந்த ஐயத்தை இப்புதியவன்மேல் ஏறிட்டுத் தீர்த்துக் கொள்ளக் கருதி அச்சிலம்பைப்பற்றி அரசனுக்குத் தெரிவித்து வருவதாகக் கோவலனுக்குக் கூறி அவனை ஓரிடத்திருத்தி, அரசனிடஞ்சென்று "தேவிசிலம்பைத் திருடியவனைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறேன்," என்றான். அரசன் இவன் சொல்லைக் கேட்டதும் ஆராய்ச்சி செய்யாமலே, "ஆயின் அக்கள்வனைக் கொன்று சிலம்பைக்கொண்டு வருதிர்," என்று காவலாளர்க்கு ஆணையிட, அவருடன் தட்டான் சென்று கோவலனைக் காட்டவும், அக்கொலையாளருள் ஒருவன் தன்கைவாளால் கோவலனை வெட்டி வீழ்த்தினன். இச்செய்தி அவன்மனைவி கண்ணகிக்கு எட்டியதும் அவள் மூர்ச்சித்துத் தெளிந்து பெருஞ்சினங் கொண்டவளாய்ப் பாண்டியனெதிற் சென்று அவன் புரிந்த கொடுங்கோன்மையைத் தன் மற்றொரு சிலம்பைக்கொண்டு விளக்கிக் காட்டவும் அரசன்

தான் செய்த பேரநியாயத்தை அறிந்து சோகித்து உயிரைவிட்டான். அவன் தேவியும் கணவன் சென்றதறிந்து சோகித்து உயிர் துறந்தனள். பின்பு கண்ணகி தன்சினந்தணியாதவளாய்த், தன்னிடக் கொங்கையைத் திருகி எறிந்து மதுரையை எரியுண்ணும்படி செய்துவிட்டு, வைகைக்கரைவழியே சென்று, மலைநாட்டுள்ள செங்குன்று என்னும் மலையின் மேல் ஒரு வேங்கைமரத்தி னடியிற் சேர்ந்து நின்றாள். அப்போது, தேவர்கள் கண்ணகி முன் வந்து, அவள் கணவனை அவளுக்குக் காட்டி, அப்பத்தினியையும் உடனழைத்துக்கொண்டு விண்ணுலகஞ் சென்றனர்—என்பதாம்.

மணிமேகலை சரிதம்:—இவள், கோவலனுக்கு, அவன் கணிகையாகிய மாதரியிடம் பிறந்தவள். கோவலன் தன் காரணமாகப் பிரிந்து மதுரையிற் கொலையுண்ட செய்தி கேட்டதுமுதல் மாதரி தன்மகள் மணிமேகலையுடன் பௌத்த சங்கத்தில் சேர்ந்து பிக்ஷுணியாயினள். இக்காலத்தே, மணிமேகலை தெய்வங்களினருள்பெற்றுப் பல பெரிய சித்திகளடைந்து அற்புதங்களை நிகழ்த்தியதும் பல சமயவாதியரோடு அளவளாவி, முடிவில் பௌத்ததர்மத்தைக்கைக்கொண்டு காஞ்சியில் தவம் புரிந்ததும் இவள் சரித்திரத்தின் சுருக்கமாகும்.

செங்குட்டுவன் வடநாட்டி யாத்திரை

கண்ணகி மேற்கூறியவாறு, செங்குன்றில் விண்ணடைய, அதனை நேரிற்கண்ட மலைவேடுவர் பலர் திரண்டு சென்று, அச்சமயம் பேரியாற்றங் கரையிற் பாடியிறங்கியிருந்த சேரன் செங்குட்டுவனிடம் தாங்கள் கண்ட அதிசயத்தை விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். அப்போது, அரசனுடன் வந்திருந்த மதுரைப்புலவராகிய சாத்தனார், தம்மூரில் தாம் நேரிலறிந்த கோவலன் கொலை விவரத்தையும் கண்ணகி செய்கைகளையுங் கூறி, ‘அவளே தங்கள் நாடடைந்த நங்கை’ என்பதை விளக்கினார். இவ்வாறு தன் கற்பின் மாட்சியைக் காட்டிச் சேரநாடடைந்த அப்பத்தினியைப் பிரதிஷ்டித்துக் கௌரவிக்க விரும்பி, கண்ணகியின் பிரதிமைக்கு இமயத்திலிருந்து சிலையெடுத்துக் கங்கைநீராட்டி வரவும் அதனுடன் தமிழரசரை இகழ்ந்துநின்ற ஆரியவரசராகிய கனகவிசயரை அடக்கிவரவும் முடிவுசெய்து உடனே தன்னிராஜதானியாகிய வஞ்சிமாநகர்க்குச் செங்குட்டுவன் புறப்பட்டான். அவன் நகரடைந்ததும் வடதேசயாத்திரைக்கு வேண்டியவை யெல்லாம் சித்தஞ்செய்யப்பட்டன. மறுநாட்காலை செங்குட்டுவன் பிரயாணமாகி நீலகிரியையடைந்து, அங்கு வந்துசேர்ந்த தன் பெருஞ் சேனைகளுடனும் பரிவாரங்களுடனும் யாத்திரையைத் தொடர்ந்து நடத்தி முடிவில் கங்கையின் தென்கரை யடைந்தான். அப்போது செங்குட்டுவன் நட்பினரும் வடவேந்தருமாகிய கன்னர் என்பவரால் கங்கைக் கரையைச் சேனைகள் கடப்பதற்கு வேண்டிய மரக்கலங்கள் சித்தஞ் செய்யப்பட்டிருந்தன. அவற்றினுதவியாற் சேரன் சேனைகளுடன் அம்மஹாநதியைக் கடந்து சென்று உத்தரகோசலத்தை நெருங்கினன். இவ்வாறு தமிழ் வேந்தனொருவன் பெருஞ்சேனையுடன் பகைமைபூண்டு தம் நாட்டை சமீபித்தானென்ற செய்தி தெரிந்ததும், அந்நாட்டாளும் கனகவிசயர் முதலியோர் போர்க்கோலங்கொண்டு எதிர்ந்தனர். அப்போது தமிழ்ச் சேனைகட்கும் ஆரியப்படைகட்கும் பெரும் போர் மூண்டது. அப்போரில், சேரன்படை, ஆரியப்படையை முற்றவும் முறியடித்து வெற்றி பெற்றதோடு கனகவிசயரிருவரும் அக்களத்திற் பிடிக்கவும் பட்டார்கள். இங்ஙனம் ஜெயம்பெற்றதும், செங்குட்டுவன், தன் சேனைத்தலைவனான வில்லவன் கோதையால் இமயத்திற் பத்தினிக்குச் சிலையெடுப்பித்துக்கொண்டு திரும்பி, கங்கையின் தென்கரையில், நட்பரசரான கன்னரால் அமைக்கப்பட்ட பாடியிலிறங்கிப் பத்தினிச்சிலையைக் கங்கை நீராட்டித் தூய்மைசெய்வித்தும், இறந்த வீருடைய மைந்தர்களையும் இறவாத வீரர்களையும் தன் ஆஸ்தானத்தில் அழைத்து, அவர்கட்கெல்லாம் பொன்னாலாகிய வாகைப்பூக்களை அளித்துக் கௌரவித்தும் ஆதரவுகாட்டினன். இங்ஙனம் செங்குட்டுவன் பாடியிலமர்ந்திருந்த காலையில், சோழ நாட்டவனும், கோவலன் நட்பினனும், கங்காயாத்திரை செய்துகொண்டு வருபவனுமான மாடலன் என்னும் மறையவன் சேரர்பெருமானை அப்பாடியிற் கண்டுகளித்துத், தன் வரலாறுகளையும் தமிழ் நாட்டின் விசேஷங்களையும்பற்றிக் கூற அரசன் அவற்றைக் கேட்டு மகிழ்ந்து அவ்வந்

தணனையும் வெகுமானித்தான். பின்னர்ச் செங்குட்டுவன் தன்னாற் போரிற் பிடிக்கப்பட்ட ஆரியவேந்தரைச் சோழபாண்டியர்க்குக் காட்டிவரும்படி தூதுவருடன் அவரை முன்னதாக அனுப்பி விட்டுச், சில நாள்களில் தானும் தன் பெரும்பரிகாரங்களுடன் நெடும்பிரயாணஞ் செய்து ஜயசீலனாய்த் தன் இராஜதானியாகிய வஞ்சிமாநகர் அடைந்தனன். இங்ஙனம் செங்கு



ட்டுவன் தந்நகரில் வீற்றிருந்த காலத்தில், கனகவிசயரைச் சோழபாண்டியர்க்குக் காட்டி மீண்டு வந்த தூதுவர், ‘போரிற் புறங்கொடுத்தோடிய பகையரசரை இங்ஙனம் நடத்துதல் தகாது’ என்று அத்தமிழ்மன்னர் இகழ்ந்து கூறிய வார்த்தைகளைச் செப்பிநிற்கச் சேரனுக்கு அவர்கள்மேற் கோபம் பெருகியது. அதனை, பக்கத்திருந்த மாடலமறையவன் அறிந்து, இனிமையும் பெருமையு முடைய மொழிகளைச் சேரனுக்கு எடுத்துக்கூறி அவன் சீற்றத்தைச் சமனஞ்செய்தனன். பின்னர், அம்மறையவன் சொற்படியே, பத்தினியைப் பிரதிஷ்டிப்பதற்கு வேண்டிய யாகசாந்திகளைத் தொடங்கி அப்பிரதிஷ்டையையும் பெருஞ்சிறப்புடன் நிறைவேற்றினன். இவ்விசேஷத்திற்கு இலங்கை யரசனாகிய கயவாகு முதலிய வேற்றரசர்களும்வந்திருந்து சிறப்பித்தனர். இவ்வாறு, செங்குட்டுவன் தன் சங்கற்பங்களை நிறைவேற்றி விளங்கிய காலையில், கண்ணகியின் உற்றாருறவினர் சிலர் அப்பத்தினி கோயிலை யடைந்து செங்குட்டுவனுக்குத் தங்கள் வரலாறுகளைக் கூறினார்கள். பத்தினி தேவி ஆங்குவந்திருந்த தன் பார்ப்பனத் தோழியான தேவந்தியின்மேல் ஆவேசித்து, பல அற்புதச் செய்திகளைச் செங்குட்டுவனுக்குக் கூறியதோடு, தன் கடவுட்கோலத்தையுங்காட்டி

அவ்வேந்தனையும் அவன் தம்பி இளங்கோவடிகளையும் வாழ்த்தி யனுக்கிரகித்தாள். இங்ஙனம், செங்குட்டுவன் பத்தினிக்குக் கோயிலெடுத்துச் சிறப்பித்தவாறே, மற்றத் தமிழரசரும் இலங்கைக்கயவாகு முதலிய வேற்றரசரும் தங்கள் நகரங்களிலும் அப்பத்தினிக்குக் கோட்டமெடுத்துத் திருவிழா நடத்திச் சிறப்பிப்பாராயினர்—எனக்காண்க. இச்சரிதமுழுதும், சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தே இளங்கோவடிகளால் விரிவாகவும் அருமையாகவும் பாடப்பெற்றுள்ளது.

சமயம்

சேரன் செங்குட்டுவன் கொண்டொழுகிய மதம் வைதிக சமயமேயாகும். அதிலும் இவனைச் சைவாபிமான முள்ளவன் என்று கூறுதல் பொருந்தும். ஆயினும் மதாந்தரங்களில் அத்துவேஷியாய் யாவரையும் ஒப்பநாடி ஆட்சி புரிந்தவன். இவன் காலத்தில், பல சமயத்தாரும் கொள்கைவேறுபாடுடையாராயினும் உறவுமுறையிலும் நீதிமுறையிலும் ஒற்றுமை பூண்டு விளங்கினரென்று தெரிகின்றது.

சமகாலத்தரசர்

இவன்காலத்தே சோணாட்டில் உறையூரென்ற இராஜதானியிலிருந்து ஆண்ட சோழர் நெடுங்கிள்ளியும் பெருநற்கிள்ளியுமாகத் தெரிகின்றனர், இவ்விருவரும் செங்குட்டுவனுக்கு முறையே தாயுடன்பிறந்த அம்மானும், அம்மான்சேயுமாவர். இவ்வாறே காவிரிப்பூம்பட்டினமென்ற மற்றொரு நகரிலிருந்தாண்ட சோழர், கிள்ளிவளவனும் நலங்கிள்ளியுமாதல் வேண்டும். நம் சேரன் காலத்துப் பாண்டியவரசர், கோவலனைக் கொல்வித்த ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனும் அவன் தம்பி வெற்றிவேற் செழியன் என்ற நன்மாறனுமாவர். அந்நியவரசராக இவனாளில் விளங்கியவர், இலங்கைக் கயவாகு, கொங்கிளங்கோசர், அறுகை நூற்றுவர்கன்னர் முதலியோர்.

இருபெரும் புலவர்

செங்குட்டுவன் காலத்து விளங்கிய புலவர் பலராயினும், இவனால் நேரில் அபிமானிக்கப்பட்ட நல்லிசைப்புலவர் பரணரும் சாத்தனாரும். முன்னவர், பதிற்றுப்பத்துள் 5-ம் பத்தால் இவனைப்பற்றிப்பாடி இவ்வேந்தனால் பெரிதும் சம்மானிக்கப் பெற்றார். பின்னவரான சாத்தனார் மணிமேகலை என்ற நூலியற்றியவர் என்பதும், செங்குட்டுவன் சபையை அலங்கரித்தவ ரென்பதும், கண்ணகி வரலாற்றைப்பற்றி தாம்மூரில் தாம் நேரிலறிந்தவாறு செங்குட்டுவனுக்கும் அவன் தம்பி இளங்கோவடிகட்கும் கூறி சிலப்பதிகாரத்தை அடிகள் பாடக் காரணமாக இருந்தவர் என்பதும் பலரும் அறிந்தவை. செங்குட்டுவன் வரலாற்றையும் தம் நூலுள் இவர் சுருக்கமாகப் பாடியுள்ளார்.

நாடும் நகரமும்

செங்குட்டுவன் ஆண்ட சேரநாடு, கோயம்புத்தூர் சேலம் நீலகிரி ஜில்லாக்களும், மைசூரின் சிலபகுதிகளும், மலைநாடுமாம். இவன் தலைநகரமாகக் கூறப்படும் வஞ்சி என்பது, இப்போது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அடங்கிய கருவூரேயாகும். இக்கொள்கைக்குரிய இலக்கியப் பிரமாணங்களையும் சாஸன ஆதாரவுகளையும் இங்கு விரிப்பிற் பெருகும். விரிந்த நூல்கொண்டு அறியத்தக்கது.

அரசியல்

செங்குட்டுவன் தன்காலத்தில் இணையற்று விளங்கிய பெருவீரனாவன். இவனுக்குத் தரைப்படையோடு, கடற்படையும் மிகுந்திருந்தது. இவன், ஒருகாலத்துக் கடற்போர் ஒன்று நடத்தி வெற்றிபெற்றவனாதலால், 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' என்று விசேஷித்து வழங்கப்பட்டான். இவன் குடிகளெல்லாம் இவன்பால் மதிப்பும் விசுவாசமும் வைத்திருந்தனர். இவன் அரசியலில், தலைமை வகித்தோர் அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்பவர்கள். இவனுடைய முக்கிய சேனாபதியாக விளங்கியவன் வில்லவன் கோதை என்றும் அரசிறை மந்திரியாக இருந்தவன் அழும்பில் வேள் என்றும் தெரிகின்றன. முன்னவனே, வடநாட்டுப்போரில் சேனைகளை நடத்தி வெற்றிபெற்றவன். செங்குட்டுவனது அரசியல் முத்திரை, வில் கயல் புலி மூன்றுஞ்சேர்ந்தது. இதனால், இவன் அக்காலத்துத் தமிழரசருள் தலைமை வகித்திருந்தமை பெறப்படும். மற்றும் இவன் அரசியல் முறைகள் விரிந்தநூல்களால் அறியத்தக்கன.

குணாதிசயங்கள்

செங்குட்டுவன் இந்நிலவுலகில் 55 ஆண்டு வீற்றிருந்தான். இவனது 47-ம் வயதில் வடநாட்டியாத்திரை தொடங்கி 32 மாதங்கட்குப்பின், தன்னாடு நோக்கித் திரும்பினான். இவனாட்சிக் காலம், தமிழ்நாட்டின் மகோந்நத நிலைமைக்கு முக்கிய காரணமாயிற்று. தன்னாடு வந்து, இவன் 5 வருஷம் அமைதியுடன் ஆட்சிபுரிந்து பரகதியடைந்தனன். இவன் தெய்வபக்தியிற் சிறந்தவன். கண்ணகி வணக்கம் நாடெங்கும் பரவுதற்குக் காரணமானவன் இவனே. ஏகதார விரதமுடையவன்; வீரக்குணமே மேம்படவிளங்கியவன். தமிழரது பெருமையிலும் வீரத்திலும் பெருமதிப்பு வைத்திருந்தவன்; தமிழர் வீரத்திற் குறை கூறியது பற்றியன்றோ, இவன் வடவரசரை வெற்றிகொண்டது? வீரமிகுதியுடன் மதிநுட்பமும் உடையவன். நல்லிசைப்புலவர்களை நன்கு மதித்து அபிமானித்தவன். செங்கோலுடையவன். இவ்வளவு பெருமையுடன் சிறிது முன்கோபமுடையவன்; ஆயினும், அஃது உடனே ஆறிப் பெருநன்மை செய்பவன். பெரியோர் உபதேசங்களையும் பிராமண தர்மங்களையும் பெரிதும் பேணிவந்தவன். இவற்றுடன் சிவந்த நிறமும் பலமும் பருமனுங்கொண்ட உருவுடையவன். அதிககாலம் ஆட்சிபுரிந்த சேரவரசருள் ஒருவன். இக்காரணங்களால், தமிழகத்தை அக்காலத்துப்பெரிதும் அலங்கரித்தான். இவன் காலம் கி.பி. 2-3-ம் நூற்றாண்டென்பது இதுவரை வழங்கியுள்ள கொள்கை; ஆனால், வேறு பிரபல பிரமாணங்கள் புதியனவாக அகப்பட்டவற்றை நோக்கும்போது, கி.பி.4, அல்லது 5-ம் நூற்றாண்டே இவன் வாழ்ந்த காலமாதல் வேண்டுமென்பது உய்த்துணரப் படுகின்றது. அக்காரணங்களை விரிப்பின் விரியும்.

முடிவுரை

இவற்றால், செங்குட்டுவன் சரிதத்தை ஒருவாறு அறியலாம். ஒவ்வொரு பிரிவிலுமுள்ள விசேஷ வரலாறுகளை இலக்கியம் சாஸனமுதலிய கருவிகள் கொண்டு ஆராய்ந்து, தனி நூலொன்று என்னால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. "சேரன்-செங்குட்டுவன்" என்ற பெயர் கொண்ட அந்நூலால், தமிழகத்தின் பண்டை நாகரிகச்சிறப்புகளும் நடையுடைபாவனைகளும் நன்குவிளங்கத் தடையில்லை: ஆயினும், இத்தகைய பெருவேந்தனது வரலாற்றை, 'விவேக போதினி' யபிமானிகள் சுருக்கமாகத்தெரிந்து கொள்ளவேண்டி, இச்சிறு வியாசம் வரையலாயிற்று.

மு. இராகவையங்கார்.

இந்திய தர்மங்களும் மேனாட்டு நாகரிகமும்

INDIAN IDEALS AND WESTERN CIVILIZATION

தற்காலம் நடந்துவரும் ஐரோப்பிய யுத்தத்தை ஒருவன் சிறிது ஆராய்ந்து பார்ப்பானாயின், மனிதனுக்குரிய பல இயற்கைகளும் ஆற்றல்களும் இத்தன்மையன என்று வெளியாகும். மனிதன் தன் நுட்ப அறிவைக்கொண்டு எல்லா வழிகளிலும் சிறந்து முதன்மையடைந்திருக்கிறான் என்பதும் பலவித சூக்ஷ்மமான ஆயுதங்களைக்கொண்டு தன் ஸ்வஜாதியாரைக் கொன்றுவிடவும் அந்த அறிவே உபயோகப்படுகிறது என்பதும் அதே ஸமயத்தில் உலகத்திற்கு நன்மை பயக்கக்கூடிய விஷயங்களுக்கும் அவ்வறிவு வினியோகப்படுத்தப்படுகிறது என்பதும் ஏற்படுகின்றது.

சிறு பீரங்கிகள், பெரு பீரங்கிகள், கத்திகள், வெடிகுண்டுகள், கடற்சுரங்கங்கள் முதலியவைகள் செய்வதற்கு வேண்டிய ஆயுதசாலைகள் ஒருபுறத்திலும், இவைகளுக்கும், மற்ற நெசவு, கிருஷி முதலிய பலவிதக் கைத்தொழிற் சாலைகள் முதலியவைகள் மற்றொரு புறமும் உள்ளன. மற்றும், மனிதன் நல்வழியில் உபயோகிக்கக்கூடிய பொருள்களை உண்டாக்கக்கூடிய பலவிதத் தொழில்களும் உண்டாயிருக்கின்றன.

மற்றும் போர்க்களத்தையே சற்று நோக்குவோமாயின், அதோ ஒருபுறத்தில் இரத்தவெறி கொண்டு ஆரவாரம்செய்து பேராசையுடன் போர்செய்வோர் இருக்கின்றனர். இன்னொரு புறத்தில், ஏன்? இவர்கள் இடையிலேயே, எதையும் லக்ஷ்யம்செய்யாமல் தர்மமே உருவெடுத்து வந்திருப்பதுபோல் போரில் காயம் பட்டுத் தத்தளிக்கும் வீரர்களுக்குச் சிகித்ஸை செய்யக் காத்திருக்கும் அரிய பெண்மணிகள்

நிற்கின்றனர்! ஆம், இத்தகைய காலங்களில்தான் மானிட அறிவின் உண்மைக்குணம் வெளிப்புலப்படுகின்றது. எப்படி மங்கிக்கிடக்கும் உலோக சட்டத்தைத் தீயிலிட்டுத் தட்டினால் ப்ரகாசத்துடன் நிற்குமோ, அதுபோலவே மனிதனும் தான் பற்பல இடுக்கண்களை அனுபவிக்குங்காலத்தில்தான் தன் ஸ்வபகுணத்தைக் காட்டிநிற்கிறான். ஸ்ரீராமரது தயாளத்வமும், ஹரிச்சந்திரனது ஸத்யநிலையும், பாண்டுபுத்ரரது பொறுமையும், ப்ரஹலாதாழ்வானது பக்திப் பெருமையும் இன்னும் இவர்போன்ற மஹான்களது உண்மை நிலையும் அவர்கள் கஷ்டப்பட்டகாலத்தில் அல்லவா தெற்றென விளங்கின. ஆகையால் பெரும் போர்களும் மானிடகோடிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களும் இத்தகைய நன்மை உண்டாக்குகின்றனவாதலின், அவைகள் இருப்பது அத்தியாவசியமென்று ஒருக்கால் சிலருக்குத் தோற்றலாம்.

ஆயினும் பேராசைகொண்டு வேற்று நாடுகளைக் கைப்பற்றி ஆளவிரும்புவதினும் தனக்குள்ளதுடன் திருப்தியடைந்திருப்பது மேலன்றோ? மதவெறிகொண்டு தாம் இன்னது செய்கிறோம் என்பதும் அறியாமல் ஆரவாரம் செய்வதினும் அப்படி ஆர்ப்பரிக்காமல் இருப்பது சிறந்ததன்றோ? பலஜீவராசிகளை ஹிம்ஸித்து ஆனந்தப்படுவதினும் அவைகளைக் காப்பாற்றிப் பழக்குதல் ஆனந்தத்தைத் தாத்தக்கதன்றோ? தன்னினத்தாரின் கழுத்தைத் தறிப்பதினும் அவனை ஆதரித்து அவனுடன் அளவளாவியிருத்தல் பெரும் புண்ணியமன்றோ? ஆகவே, மேலைநாட்டார் ஒருவருடன் ஒருவர், அடிக்கடி போர்செய்து உலகத்தையே இரத்தவெள்ளமாக்கி, பிறகு ஸமாதான ஸங்கங்கள் கூட்டி பிறகு நெருங்கிப்பழகிவருதல்போல் அபிநயித்தல் எப்படியிருக்கின்றது! இப்படிப்பட்டவர்களுக்கு ஸமாதான ஸங்கங்கள் இருந்தென்ன இராமலிருந்தென்ன? அவர்களது உயர்ந்த நாகரிகமும் ஒழுங்கும், அவர்கள் கல்விச்சாலைகளும், தொழிற்சாலைகளும், ஜீவகாருண்ய சங்கங்களும், எப்பொழுதும் எங்கும் ஸமாதானத்தையும் நன்னம்பிக்கையையும் பொருத்தக்கூடிய மதமும் இருந்தும் யாதொரு பயனும் அற்றனவாய் அல்லவா இருக்கின்றன?

இம்மாதிரி இருப்பதினாலேயே மேலைநாட்டார் பற்பல வழிகளிலும் விருத்தியடையவேண்டியிருக்கிறது. கீழ்நாடுகளில் எந்தெந்தவிஷயங்கள் யாதொரு முயற்சியுமில்லாமல் நடைபெறுமோ அந்த விஷயங்களுக்கெல்லாம் மேல்நாடுகளில் முயற்சியெடுத்துக்கொண்டும் நடைபெறுவது அரிதாயிருக்கின்றது. நாம் இதை இரண்டொரு சிறிய திருஷ்டாந்தங்களினால்வெளிப்படுத்துவோம். ஜீவஹிம்ஸை செய்யாமலிருக்க வேண்டியதென்பது எல்லா நாட்டாரும், எல்லா மதத்தினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயம். இந்திய நாட்டுச் சிறுவன் ஒருவனுக்கு ஜீவஹிம்ஸை செய்யாதே என்று சொல்லக்கூடிய ஸங்கமும் வேண்டாம். அதற்குரிய முயற்சிகளும் வேண்டியதில்லை. ஆனால் மேல்நாடுகளிலோ பக்ஷிக்கூடுகளைக்கலைக்கவேண்டாம் என்றுசொல்லவும் ஜீவஹிம்ஸை செய்யாதவர்களுக்கு பரிசளிக்கவும் பல ஸங்கங்கள் வேண்டியிருக்கின்றன. இந்திய நாட்டில் வெகுகாலமாய் வைத்தியசாலைகள் இருந்து வந்து மானிடகோடிகளுக்கும் அற்ப ஜீவராசிகளுக்கும் உதவிபுரிந்து வந்திருக்கின்றன. இந்திய நாட்டரசர்கள் எவராவது அலக்ஸாண்டர், நெபோலியன் அந்நிய நாடுகளைக் கைக்கொள்ளவேண்டும் என்னும் துராசையைப் பின்பற்றியவர்களாயிருந்தார்களா என்பதே இதற்குச் சாட்சி பகரும். கலிங்க ராஜ்யத்தின்மீது படையெடுத்து அதில் உண்டான உயிர்ச்சேதங்களுக்காக பச்சாத்தாபப்பட்டு மனமுருகி, எல்லா உயிர்க்கும் நன்மை புரிதலையே மேற்கொண்ட பகவான் புத்தரைப் பின்பற்றியொழுகின சக்கிரவர்த்தி அசோகரைப்போல் அந்நாடுகளில் எவரையேனும் காணமுடியுமா?

தவிரவும், மேல்நாட்டுச் சிறப்புகளும் நூதன வழிகளும் பொது நன்மையைப் பயப்பனபோலிருப்பினும், காலக்கிரமத்தில் அவைகள் எந்த கதிக்கு வந்துவிட்டன என்பது தற்காலத்திய பெரும்போரே வெளிப்படுத்துகின்றது. இருப்புப்பாதைகளும், தொழிற்சாலைகளும் நூதன சக்திகளும் நல்வழியில் உபயோகிக்கப்பட்டால் உலகமுழுவதற்கும் எவ்வளவோ நன்மை தாத்தக்கன என்பதற்கு ஐயமேயில்லை, அதே சமயத்தில் அவைகள் எவ்வளவு அபாயகரமானவை, எவ்வளவு சீக்கிரத்தில் அழிந்து போகக்கூடியவை என்பதை இந்த யுத்தமே தெரியப்படுத்தியிருக்கிறது. ஆனால் நம் நாட்டிலோ எப்பொழுதும் அழியாத்தன்மையான பெரும் உதவிகளை நம்முன்னோர் செய்திருக்கின்றனர். தற்காலத்து ஐரோப்பிய ஜனங்களாலும் கட்டிமுடிக்க முடியாத அணைகளும், ஏரிகளும் பொது ஜன நன்மையைக் கருதியே இந்திய அரசர்கள் செய்திருக்கின்றனர். மேல்நாட்டாரது நுண்ணிய அறிவிற்கும் எட்டாத நுட்பமான ரணவைத்தியாயுதங்களும் செய்திருக்கிறார்கள். மனிதர்களுடைய கஷ்டங்களைக் குறைப்பதற்குரிய வழிகளையே நம் நாட்டாரும் தேடி நிரந்தரமான வழியைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

ஆகையினால் நாம் கேவலம் வெளித்தோற்றத்தைமட்டும் கண்டு மயங்கிவிடாமல் அவ்வகைகளின் அந்தரங்க நுட்பங்களையும் உணர்ந்து எது சாச்வதமான நன்மையை எல்லா ஜீவகோடிகளுக்கும் பயக்கின்றதோ அதையே பின்பற்றவேண்டும் என்றாகிறது. ஆனாலும் இவைகள் இடைவிடாமல் நடந்து கொண்டே வரவேண்டுமாயின், இவைகளைச் செலுத்தும் யந்திரங்களும் அவசியமாயிருத்தலால் அத்தகைய நுட்பங்களை மேனாட்டாரிடமிருந்து கைக்கொண்டு நம் நாட்டு புராதன தர்மங்களையும் பின்பற்றி நடக்கக் கடவோம்,

K. S. வீராஸாமி ஐயர், பீ.ஏ., எல்.டி.

ஐரோப்பிய மஹா யுத்தம்

இப்பொழுது ஐரோப்பியநாடுகளில் சென்ற ஒரு வருஷகாலமாக நடந்துவரும் மஹா யுத்தத்திற்கு ஏற்பட்ட காரணங்கள், ஐரோப்பிய தேசங்களின் சரித்திரம், அதன் மூலமாய்வெளியாகும் அநேக ஸூக்ஷ்மமான ரஹஸ்யங்கள், மற்றும் இந்தயுத்தத்தில்ஸம்பந்தப்பட்ட எல்லாவிபரங்களும் அடங்கிய புத்தகம் ஒன்று (ஐரோப்பிய மஹாயுத்தம், 256 பக்கங்கள், 58 அழகிய ஆப்டோன் படங்கள் விலை ரூ. 1-4-0) வெளியிட்டிருப்பதை நம் நேயர்கள் அறிவார்கள். இப்புத்தகம் கூடியவரை சுத்தமாயும் விஸ்தாரமாயும், தெளிவாயும், படிப்பவருக்கு மனோத்ஸாகத்தை யுண்டுபண்ணும் விதமாகவும் எழுதப்பெற்றிருக்கிறது. 'இம்மாதிரி யுத்த புஸ்தகம் அனேகம் வெளிவந்திருப்பினும், நமது ஆபீஸ் பதிப்பு, மிகவும் சிலாக்கியமாயிருக்கிறதென்று' நமது சந்தாநேயர்கள் அநேகர் எழுதியிருப்பது எமக்கு மிகுந்த திருப்தியைத் தருகிறது. தவிர, இப்புத்தகத்தைப்பற்றிய முக்கிய பத்திரிகைகளின் சிறந்த அபிப்பிராயங்கள், இச்சஞ்சிகையின் பின் பாகத்தில் இங்கிலீஷிலியே ப்ரசுரிக்கப்பட்டிருப்பதை நம் நேயர்கள் அறிய விரும்புகிறோம்.

ஆரோக்கிய சாஸ்திரம்

THE SCIENCE OF HEALTH

மனுஷ்ய சரீரம் வெகு விசித்ரமான யந்திரம். ஜனங்களுக்கு ஸௌகர்யத்தை உண்டுபண்ணக்கூடியதும், சில ஸமயம் நாசத்தை விளைவிக்க வல்லமையுள்ளதுமான நீராவியந்திரம், பீரங்கி முதலிய கருவிகளைப் போலவே, இவ்வுலக வாழ்க்கை ஸுகத்துக்குக் காரணபூதமான நம்முடைய சரீர யந்திரமும் சிக்கலாய் அமைக்கப்பட்டு, வெகு ஜாக்கிரதையாய் நடத்தப்படவேண்டியதாயிருக்கிறது. நீராவியந்திரம், கடிகாரம்போன்ற கருவிகளுக்கும், நமது தேகத்திற்கும் அனேக அம்சங்களில் ஒற்றுமையும், சில பாகங்களில் வேற்றுமையுமுண்டு. மற்ற யந்திரங்கள்போல், மானுடதேகமும், பலவித அங்கங்களும், அனேகம் உறுப்புகளும் ஒன்றோடொன்று பொருத்தப்பட்டு, சலனாதி வ்யாபாரங்களை செய்யக்கூடிய ஸ்திதியிலிருக்கிறது. வேலைசெய்யக்கூடிய சக்தியானது சில யந்திரங்கள் விஷயத்தில் நிலக்கரி, கட்டை, ஜலம், வெடிமருந்து முதலிய உபகரணங்களாலும், கடிகாரம் போன்ற மற்றவைகளில் விசைகளை முடுக்கி சாவி கொடுப்பதாலும், ஏற்படுகிறது. இவ்விதமே நமது தேகயந்திரமும், நாம் உட்கொள்ளும் உணவு, பானம், ப்ராணவாயு முதலிய வஸ்துக்களின் ஸஹாயத்தால் நடமாடவும், வேலைசெய்யவும் சக்திபெறுகிறது. மற்ற யந்திரங்களிற்போல, நம்முடைய சரீரத்திலும், காசாணாதி அங்கங்களும் உறுப்புகளும் இடைவிடாமல் செய்யும் வேலையினாலுண்டாகும் அழுக்கையும், வெளியிலிருந்து உடம்பின் மேல் படியும் புழுதி முதலிய அசுத்தத்தையும் அடிக்கடி துலக்கி, தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும். யந்திரங்கள், தங்களுக்குரியவேலையைச் செய்யாமலிருந்தால், எப்படி துருப்பிடித்து, உபயோகமற்றதாய் ஆகுமோ, அதுபோலவே நமது சரீரத்துக்கும், தனது நிலைமைக்குத் தகுந்த தேகப்பயிற்சி (Physical Exercise) இல்லாவிட்டால, அது சரியான வளர்ச்சியில்லாமல், நோய்களுக்கு இரையாகி இவ்வுலகவாழ்க்கையின் ஸுகத்தைக் கெடுத்துவிடும். ஆனால், நினைக்கவும் பேசவும் கூடிய சக்தியும், பகுத்தறிவும், ஸ்வயமாய் நட

மாடி வேலைசெய்யும் ஸாமர்த்தியமும் நமது
சரீரத்துக்கு இருப்பதுபோல், மற்ற யந்திரங்க
ளுக்கில்லை. இன்னும் மற்ற அம்சங்களில் நமது
தேகத்திற்கும் மற்றக் கருவிகளுக்கு முள்ள
ஒற்றுமை பேதம் பலவாறுயிருக்கும். அங்கங்
கே ஸமயானுகுணமாய் விவரிக்கப்படும்.

தேக அமைப்பு வெகு விசித்ரமென்று ஏற்
கனவே சொல்லப்பட்டது. நமக்குண்டாகும்
பலவித ஸுகதுக்கானுபவத்திற்குக் காரணபூத
மான ஐம்புலன்களும், ஹ்ருதயம், ச்வாஸப்பை
இரப்பை, குடல் போன்ற பெரிய உறுப்புகளும்
எலும்புகளும்; இன்னம் பற்பல சிறு உறுப்புக
ளும் வெகு ஆச்சர்யமாய் ஒன்றமைக்கப்பட்டு,
சரீரமுண்டாகிறது. ஒவ்வொரு அவயவம்,
உறுப்பு முதலியவைகளின் பருமன், உத்பவம்,
உபயோகம், வேலை செய்யும் ரீதிகள் வெவ்
வேறு. இவைபற்றிய விபரங்களை விஸ்தார
மாய் எடுத்துச் சொல்வது சரீரசாஸ்திரம்,
பிஸியாலஜி (Physiology). அதிலும் அவ
யவாதிகளின் ஸ்வரூபம், ஒன்றோடொன்று
அமைப்பு இவைகளை விசேஷித்து எடுத்துரை
ப்பது அனடமி (Anatomy) என்று சொல்லப்
படும். அங்க விபாக விவரண சாஸ்திரம்.
மேற்கண்ட அங்காதி உபகரணங்களை சரிவர
வ்ருத்தியாகும்படிசெய்தும் நமது வீடுகளையும்
அவைகளைச் சுற்றிலும் சுத்தமாய் வைத்தும்
நோயற்று, தீர்க்கசரீரத்துடன் ஸுகமாய் வாழ்
வதற்குரிய மார்க்கத்தை உபதேசிப்பது ஆரோ
க்கிய சாஸ்திரத்தின் (Hygiene) நோக்கம்.
இச்சாஸ்திர ஞான ஸம்பாதனத்துக்கு முக்கிய
ஸாதனமான அங்காதி சரீர உறுப்புகளின்
குண, தர்மங்களை வெகு ஸ்தூலமாயாவது ஒவ்
வொருவரும் தெரிந்துகொள்ளல் மிகவும் அவ
சியம்.

நமது சரீரம் ஸாமான்யமாய் மூன்று பாகங்
களுடையதாகச் சொல்வதுண்டு. (1) சிரஸ்
(the head); (2) கைகள் தவிர, கழுத்து முதல்
இடுப்பு வரையிலுள்ள மத்தியதேகம் அல்லது
முண்டம் (the trunk); (3) கைகள், கால்க
ளாகிற சரீர அங்கங்கள் (two pairs of limbs)
இம்மூன்று சேர்ந்த முழுசரீரமும் ஸ்கெலிடன்
(the skeleton) என்று சொல்லப்படும் எலும்
புக்கூட்டின் பேரில் அமைக்கப்பட்டிருக்கிறது.
வீடு, ஆலயம் முதலிய கட்டிடங்களுக்கு ஸ்த
ம்பம் சுவர்போல் நமது தேகத்திற்கும் எலும்
புக்கூடு முக்கிய ஆதாரமாயிருக்கிறது. முதிர்ந்
தவன் எலும்புக்கூட்டில் பெரிதும் சிறிதுமாய்
இருநூறு எலும்புகளுக்கு மேலிருக்கின்றன.
அவைகளின் ஸ்தானம், உருவம், அமைப்பு,
முதலியதைப்பற்றி ஸவிஸ்தாரமாய்த் தெரிந்து
கொள்வது ப்ரகிருத விஷயத்துக்கு அவசிய
மில்லாவிடினும், அவைகளுடைய அமைப்பின்
உத்தேசமும், உபயோகமும் அறியவேண்டிய
விஷயம். (1) எலும்புக்கூட்டினுல் சரீரத்துக்கு
உருவமும், வலிவும் ஏற்படுகின்றன. எலும்புகள்
உறுதியும், அடி முதலிய விசைதாக்கினுல்
அநேகமாய் இணங்காமலிருக்கும் திறமையுமுள்
ளன. அவைகள் உறுதியாயில்லாவிட்டால், நம
க்கு ஸரியான தேக உருவம் ஏற்படாமல், நாம்
நிமிர்ந்து நிற்கவும், நடமாடவும் முடியாமல்
சக்தியற்றிருக்கும்படி நேரிடும். எலும்புகள்
நோய்வடைந்து இருபக்கங்களில் ஸரியாய்
வளராவிடில் கூன் முதுகு, முதலிய அவலக்ஷண
முண்டாகிறது. (2) இதுதவிர, எலும்புக்கூடா
னது, சரீரத்திலுள்ள மூளை, ஹ்ருதயம் போ
ன்ற ம்ருதுவான உறுப்புகளுக்கு ஸம்ரக்ஷிக்கக்
கூடிய ஆவரணமாகி (protective covering)
தேகத்தின் வெளிப்பக்கம் தாக்கும் அடிமுதலி
யவற்றால் அவைகளுக்குக்கெடுதிநேராமல் தடுப்
பதற்குஸாதனமாயிருக்கிறது. மேற்சொன்னது
தவிர மற்றொரு முக்கிய உபயோகமுமுண்டு.
எலும்புக்கூடு தனித்துப் பார்த்தால், மிகவும்
விகார ரூபமாயும், பயங்கரமாயுமிருக்கும். ஆனா
ல் தோல், சதை, தசை (muscle) இவைகளால்
மூடப்பட்டு தசை, தசைநார்களால் (Ten-
dons) ஒன்றோடொன்று பொருத்தப்பட்டால்
மிகவும் மனோஹரமாயும், ஆடை, ஆபரணம்,
சந்தனம், மாலை, முதலிய உபசாரங்களுக்கு
அர்ஹமாயும் நினைக்கப்படுகிறதுடன், நடக்க
வும், ஓடவும், இன்னம் பலவிதமாய் பயிற்சி
செய்வதற்கும் காரணமாகிறது. எலும்புகளை
ஒன்றோடொன்று இசைக்கும் தசைகளுக்கு
நாம் நினைக்கும்போதும், சிலசமயம் நம்மிச்சை
யில்லாமலேயும் சுருங்கவும், மறுபடியும் நீண்டு
ஸ்வரூபத்தையடையவும் ஸ்வபாவசக்தி உண்டு.
ரப்பர் பந்து போன்ற வஸ்துவானது ஏதாவ
தொரு விசையால் பருமன், நீளம் முதலிய
வற்றில் உருவம் மாறி, அவ்விசை நீங்குங்கால்,
தன் பூர்வரூபத்தை அடையக்கூடுமானுல் அந்த
பூர்வஸ்தி திஸ்தாபகமான சக்தியானது ஆங்கி

லேய பாஷையில் இலாஸ்டிஸிடி (Elasticity)
என்று வ்யவஹரிக்கப்படும். (3) நாம் நினைக்கும்
போது தசைகள் சுருங்கி நீளுவதால்தான் எலு
ம்புகள் சலித்து நடமாடக்கூடிய சக்தி நமக்கு
ஏற்படுகிறது. 'நிழலின் அருமை வெய்யிலில்
போனுல் தெரியும்' என்பதுபோல் எலும்பு



தசை இவைகள் நோய்பட்
டு, முடவன்போல் நடமாட்
டம் இல்லாதவன்தான் இவ்
வித உபயோகத்தை நன்கு
ணரக்கூடும். பாரிச வாயு
வால் அவஸ்தைப் படுபவ
னுக்கல்லவோ, கை கால்
களை யதேச்சையாக உப
யோகிக்கும் சக்தியின் மஹி
மை யதார்த்தமாய் விளங்
கும்.

தலை:—'எண்சாண் உடம்
பிற்கு சிரஸே ப்ரதானம்'
என்பதுபோல், நமது சரீர
மாகிய கட்டிடத்துக்கு உன்
னதஸ்தானத்திலும், மிக
வும் உத்க்ருஷ்டமாயுள்ளது
தலை. இது மற்ற பாகங்களை
க்காட்டிலும் உயர இருப்
பது முறையே. நம்மைச்
சுற்றிலுமுள்ள வஸ்துக்க
ளின் அறிவானது சிரஸின்
பாகங்களாகிய புலன்களால்
ஏற்படுகிறது. கண்ணும்,
காதும், சரீரத்தின் வேறு
பாகங்களி லிருந்தால் நாம்
எவ்வளவு தூரம் பார்க்கவும்
எவ்வளவு கேட்கவும் கூடு
மோ, அதைவிடப் பலமடங்
கு அதிகமாய் இப்புலன்க
ளின் உபயோகம் தலை
உயர இருப்பதால் உண்டா
கிறது. தவிர், பார்க்கவும்,
கேட்கவும், ருசி யறியவும், நினைக்கவும், பேச
வும் இதரகார்யங்கள் செய்வதற்கும் வேண்டிய
சக்தி விசேஷங்களுக்கு மூலஸ்தானம் மூளை
Brain) இதிலிருந்து வெள்ளிக் கம்பி போ
ன்று எங்கும் பரவி, இந்திரியங்களுக்கு அதற்
குரிய பார்த்தல், கேட்டல் முதலிய மூளையி
லிருந்துண்டாகும் உணர்வைத் தருகின்றன.
வெளிப்பிரபஞ்சஞானத்தை ஸம்பாதிப்பதற்கு
முக்கிய காரணங்களாகியபுலன்களுக்கு சமீபத்
தில், அவைகளின் சக்திக்கு ஆதாரமான மூளை
யிருப்பது ஸௌகர்யம் என்று சொல்ல வேணு
மா? இம்மூளையானது மிகவும் ம்ருதுவானதால்
அடி முதலிய இடையூறிலி
ருந்து ஸம்ரக்ஷிப்பதற்காக
எலும்பால் அமைக்கப்பட்ட
மூளைப்பெட்டி அல்லது மூ
ளை ஆவரணம் (Brain-box
or brain-case) என்ற ஒரு
கூட்டில் வைக்கப்பட்டிருக்
கிறது. இந்தக் கூட்டிலு
ள்ள எலும்புகள், குழந்
தைப் பருவத்தில் கொஞ்
சம் ம்ருதுவாயும், வயது
ஆக ஆக உறுதியாயுமா
கும்.

தலையில்தான், உணவும்
காற்றும் தேகத்தினுள் பிர
வேசிக்கும் வழி இருக்கி
றது. இந்த வழிகள் வெவ்
வேறு. மூக்கினுல் சுவாஸ
மும், வாயால் உணவும்பான
மும் உட்செல்லும். பே
சும் பாடும் ஸமயம் தவிர,
மற்ற காலங்களில் வாயால்
மூச்சுவிடக்கூடாது. நாம்
உட்கொள்ளும் உணவை
நன்றாய்க் கடித்து மென்று
அது ஸுலபமாய் ஜீரண
மாக வேண்டிய ஏற்பாடு
செய்து, உணவு மார்க்கக்
குழாயில் (Gullet) விழும்
படிசெய்யும் பற்களும், நாவு
ம் இருக்கும் ஸ்தானமும்
சிரஸே.

தலையின் எலும்புக்கூடு
கபாலம் (Skull) என்று பெயர். இது மு
துகு எலும்பின் (Back-bone) மேல் வைக்க
ப்பட்டு, மேலும் கீழும், ஒரு பக்கத்திலிருந்து
மற்றொரு பக்கமும் ஸுலபமாய் அசையும்
சக்தியுள்ளதாயிருக்கிறது.

A. வரதாசாரி, பீ.ஏ., எல்.டி,

உருத்திராக்ஷ மகிமை

THE SANCTITY OF SACRED BEADS

பரமபதியாகிய சிவபெருமானை வழிபடும் அடியவர் அகத் திலக்கணமாக அவரது பஞ்சாக்ஷரம் என்னும் ஐந்தெழுத்தைத் தியானம் செய்வர்; புறத்திலக்கணமாகத் தமது மெய்யில் திருநீற்றையும் உருத்திராக்ஷத்தையுந் தரிப்பர். இம் மூன்று பொருள்களின் சிறப்பு இவ்வளவு என எடுத்தியம்ப இயலாது. சிவஞானக் கடலுட் டிளைத்து விளையாடும் பெரியோருக்கே இவைகளின் அருமையும்பெருமையும் விளங்கும். காஞ்சிப் புராணம் பாடின சிவஞான சுவாமிகள் "சைவ சித்தாந்த வழிதேறி யதீதவாழ்விற், போயண்மி அஞ்செழுத்தும் திருநீறும் கண்டிகையும் புனையாக்கொண்ட, நாயன்மார் திருக்கூட்டம் பணிந்தொழுகும் பெரும்பேறு நான்பெற்றேனால்" என முழங்கிய முழக்கை யாவரே அறியார்? ஐந்தெழுத்தின் பெருமையை அறிவிக்க,

> "நல்லவர் தீய ரெனாது நச்சினர்
> செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
> கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
> தல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே"

என்னும் தமிழ்வேதமும் திருநீற்றின் பெருமையைத் தெரிவிக்க,

> "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
> சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
> தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
> செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான்
> திருநீறே."

எனத் துவக்கும் தேவாரத் திருப்பதிகமும் போதாவோ? இவை தம்முள் ஐந்தெழுத்தைத் தியானிப்பது ஐம்புலன்களால் ஆட்டுண்ணும் நமக்கு எளிதன்று. சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிதல்லவா? "இவ்வரும் பிறவிப்பௌவநீர் நீந்துமேழையேற் கென்னுடன் பிறந்த ஐவரும் பகையே" எனப் பெரியோருரைத்த திருவாக்கு பொய்ப்படுமா? இனித் திருநீறு வியர்வு முதலிய காரணத்தால் மறைபடும். இவ்விரண்டு இடர்ப்பாடுகளுமில்லாது எளிதில் இன்பம் பயப்பது உருத்திராக்ஷம் அணிவது. உருத்திரமூர்த்தியின் அக்ஷம் [கண்] உருத்திராக்ஷமாம். "முன்னர்ப் பிறந்திறவா மூர்த்தி முகக்கண்ணாகித் தொன்மை யனவாய் ஒழியாப் பவந்தொலைக்கும்" என்னும் திருவாக்கு உணரற்பாலது. இம் மணியின் பெருமையை எளிதில் உணர்த்தும் சுதைபோற் சுவைக்கும் கதை ஒன்றை ஈண்டெழுதுவாம்:

பூச்சக்கரம் என்னும் நகரத்தில் சுப்பிரதீபன் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் பிள்ளைகளும், பிள்ளைகளுக்குப் பிள்ளைகளுமாக நிறைந்த வாழ்வினனாய்ச் சுகமுற்றவன். சிவபக்தி முதிர்ந்த செல்வன். உருத்திராக்ஷமல்லது வேறு அணிகலன்களை விரும்பாதவன்: அவன் மனைவியும், மக்களும், உறவினரும் பொற்கலன்களை வெறுத்து இந் நற்கலனும் கண்டிகையையே புனைவர்; அம் மறையவனும் இம் மணியை யணியாதவரைப் பொருட்படுத்துவானல்லன்; அவர்களுக்கு உண்ண உணவும் அளியான். இத்தகைய உத்தமனது வீட்டுக்கு யோகாங்கன் என்னும் முநிவர் ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் சுப்பிரதீபன் இவர் தவத்திற் சிறந்த தகைமைய ரெனினும் பசியால் வருத்தப்படுபவரெனினும், கண்ணுதற் பெருமானுக் குகந்ததாம் உருத்திரமணியில் ஒன்றுவது அணிந்திலராதலால் இவருக்குப் பிச்சையிடுவதும் பாவம் என எண்ணி வெருண்டார். யோகாங்க முநிவர் பசித்தீ வாட்ட நின்று நின்றிரந்தார். அது கண்ட சுப்பிரதீபர் ஐயா! மாதவரே! ஒரு உருத்திர மணியேனும் அணிந்திலீர்! போம்! போம்! என்றனர். யோகாங்கர் போயினாரில்லை. இதைப் பார்த்து நின்ற சுப்பிரதீபர் இல்லத்துச் சிறுவர்கள் யோகாங்கரை வளைத்து வெருட்டி வெளியே தள்ளினர். யோகாங்கருக்குக் கோபம் மூண்டு "இரப்பவர்க்கு இரங்கி ஈதலை விடுத்து வெருண்டு பேசினீர்! எனது யோகதண்டத்தைப் பிடித்திழுத்தீர்! மறையவர் குலத்துட் டோன்றிப் பாதகம் பயின்றீர்! என்னே உங்கள் ஒழுக்கம்'—என உரைத்து அந் நகரத்து அரையன் மாட்டுச் சென்று நடந்த விஷயங்களைச் சொன்னார். இது கேட்ட அரசன், மனம் கொதித்தவனாய் "மறையவன் சுப்பிரதீபனைக் கொணருதிர்" என உரைக்க ஏவலாளர் அவ்வந்தணரை அழைத்து வந்தனர். அவரைக்கண்டதும் அரசன் "தவசிரேஷ்டர்கள் வீடேறி விருந்தாகவந்தால் அவரைக் கோபித்து வெருட்டுவதோ தருமம்? அது தானா அருள்" என்றனன். அதற்குச் சுப்பிரதீபர் "மாநுட சன்மம் எடுத்தோரெல்லாம் உருத்திரமணியைத் தரித்தல்வேண்டும். அது தரியாதவரைக் கண்டவர்க்கும் நரகம். அதனை அணியாதவர் என்ன மாதவம் செய்தவராயினும் தென்றிசையே போய்ச் சேருவர்" என்றார்.

இம்மாற்றத்தைக் கேட்டு நின்ற யோகாங்கர் பெருஞ்சினங் கொண்டவராய், "அரச! இம்மறையவனது மணியின் பெருமையையும் என்னுடைய தவத்தின் பெருமையையும் இப்பொழுதே சோதித்தறிவாயாக. யான் இத்தேகத்தைக் கொண்டே விண்ணுலகஞ் சென்று கற்பகவிருக்ஷத்தின் நறுமலரைக் கொண்டு வருகின்றேன். அவ்வண்ணம் சுப்பிரதீபன் கொண்டுவருவானா கேட்பாயாக" என்றனர். இதனைக்கேட்டுப் புன்னகை செய்து "மன்னவ! விண்ணுலகஞ்சென்று கற்பகப்பூ மாத்திரம் அல்ல, கற்பக விருக்ஷத்தையே ஒரு பூனைபோய்க் கொண்டு வரும்படி செய்குவன் காண்பாயாக" எனச்சுப்பிரதீபர் உரைத்தனர். பின்னர் யோகாங்கர் யோகாப்பியாசத்தால் தேவலோகஞ்சென்று கற்பகப்பூக் கொண்டுவந்தார். இதனைக்கண்ட அரசனும் அருகு நின்றோரும் அதிசயித்தனர். சுப்பிரதீபர் தன் வீட்டிலுள்ள பூனையை வரவழைத்தனர். அதன் கழுத்தில் உருத்திராக்ஷமாலை விளங்கிற்று. அப்பூனையை நோக்கி "நீ போய்ப் பொன்னுலகம் சென்று நருமணம் வீசும் கற்பகவிருக்ஷம் ஒன்றைக் கொணருதி" எனச் சொல்லிவிடுத்தனர். விடுத்தலும் அதனையறிந்த இந்திரன் அப்பூனை வருவதற்கு ஓரொப்பற்ற விமானம் ஒன்றை அனுப்பித் தானும் வெள்ளை வாரணத்தின்மீ தாரோகணித்து எதிரேற்று வணங்கி அதை அழைத்துக்கொண்டு சென்றான். உருத்திரமணி விளங்கும் உருப்பொலிவைக் கண்டு உள்ளங்குளிரவும் மெய் சிலிர்ப்பவும் மகிழ்ந்து நின்று நான்மறை வல்ல எங்கள் அந்தணாளர் சுப்பிரதீபர் சௌக்கியமா யிருக்கிறாரா என க்ஷேமம் விசாரித்து அப்பூனையை எடுத்தணைத்து உச்சிமோந்து மடியின் மீதிருத்தி வந்த விசேஷம் என்னென வினவினான். பூனை உரைத்த விஷயங்களைக்கேட்ட தேவேந்திரன் பேரானந்தம் உற்று இத்தகைய பாக்கியம் நமக்குக்கிடைத்ததேஎன மனங்களித்து, தேவசித்தன் என்பான் ஒருவனைக் கூஉய்-வாராய்! தேவசித்த! நமது கற்பக விருக்ஷங்களில் ஒன்றை வேருடன் பறித்து விமானத்தில் வைத்து இப்பூனையுடன் பூவுலகுக்குச் செல்க" என்றனன். அவ்வண்ணமே கற்பக தருவும் பூனையுமாக விமானம் மென்மெல விண்ணினின்றும் இறங்கியது. இறங்கின விமானம் சுப்பிரதீபர் முதலியோருள்ள ராஜசபையில் வந்து நின்றது. இவ்வற்புதத்தைக்கண்ட அரசன் உச்சியிற் கைகூப்பினன். வந்த பூனை மறையவர் சுப்பிரதீபரை வலம் வந்து அருகில் அமர்ந்தது. தேவசித்தன் சுப்பிரதீபரை வணங்கி—"ஐயரே! உமதருளால் தேவேந்திரன் விண்ணுலுகத்தாசு செவ்வனே புரிகின்றனன்" என்றனன். பிரமித்து நின்ற அரசன் பொன்னுலகம் போய்வந்த பூனையை நோக்கி—நீ தேவலோகஞ் சென்றதும், உனக்கு அங்கே தேவேந்திரன் கற்பக விருக்ஷம் கொடுத்தனுப்பியதும் எவ்வாறு? அதை விரிவாகச் சொல்ல வேண்டுகிறேன் எனக் கேட்க, பூனை சுப்பிரதீபர் முகத்தைப் பார்த்தது. அவர் பகருதி என உத்தரவளிக்கப் பூனை சொல்லலுற்றது. "இங்கிருந்து புறப்படும் போதே நவரத்ன விமானம் கிடைக்கப்பெற்றேன். அவ்விமானத்திலேறி விண்ணுலகஞ் செல்ல, வழியில் வெள்ளை வாரணத்தனும் இந்திரனே எதிரேற்றுவந்து வேண்டிய பூசை முதலிய உபசாரங்கள் செய்து என்னை மார்போடணைத்து உச்சிமோந்து எம்மிடம் யாது விரும்பி இப் பொன்னுலகுக்குப் போந்தனை என வினவினன். இங்கு நிகழ்ந்த செய்திகளை யான் அவனுக்கு உரைத்தேன். அதுகேட்டு உவந்து இக்கற்பக விருக்ஷத்தையும் விமானத்தையும் உதவி அனுப்பினன். அச்சமயத்தில் இந்திரன் தேவியாம் இந்திராணி மிக்க அதிசய முற்றவளாய்—"இஃதென்னை—* பூசைக்குப் பூசை புரிந்தாய்! அதன் முன்பு நின்று அழலிற்பட்ட அரக்கென உருகினை! கற்பகதருவைத் தந்தனை! இப்பூசை எவ்வாறு மேம்பட்டது? உரைத்தருளுதி" எனத் தன் கொழுநனை உசாவ, இந்திரன் கூறுகின்றான்—சிறுத்த இடையும் சிவத்த இதழும், வெளுத்த நகையும் கறுத்த குழலுங் கொண்ட பாவாய் கேளாய்! அரனுக்கு இருவிழிகளை ஒத்து பழவினைப்பற்றைப் பாழ்படச் செய்யும் சிறப்பினைக் கொண்ட உருத்திர மணியை இப்பூனை தரித்துளதாத

* பூசை=பூனை.

வின் யானொருவன் அல்ல மும்மூர்த்திகளும் இதனை வணங்குதற்குரியர். அந்த மணியின் பெருமையை அளவிடல் அரிதரிது.

அம்மணியின் விசேடத்தைச் சொல்லுகின்றேன் கேள். நேற்றுநான் எம்பெருமானது திருநடநத்தைத்தரிசிக்கவேண்டி, திருக்கயிலைக்கேகினேன். அங்கு சிவபிரான் முன்னிலையில் தென்றிசைக்கிழவனும் இயமனும்அவன் கீழ்க்கணக்கெழுதும் சித்திரகுத்தனும்பணிந்து "எல்லாம் வல்ல இறைவனே! பூமியிலுள்ள ஆன்மகோடிகள்இயற்றும் நல்வினைதீவினைக்குப் பொருந்த நற்கதியும், நரகதண்டனையும் விதித்துள்ளாய். தீயசெய்தவர் தென்புலத்தில் யான்விதிக்கும் தண்டனைகளுக் குட்படவும், நல்ல செய்தோர்,நின்னடிமலர் பெறவும் வகுத்தனை. உனதாணையின் வழியே இதுகாறும் யான் தீயவரை ஒறுத்தும்,பெரியோரைப் பணிந்தும்,நடுநிலைதவறாது 'நடுவன்'என்னும் பெயரும் தருமநிலைபிறழாது'தருமன்' என்னும் நாமமும் பூண்டேன்" என உரைக்க, ஈசன் 'நன்று' இப்போது என்னகுறை? எனவினவக் கூற்றுவன் 'பிறந்தநாள்முதல் பாபத்தொழிலே செய்தவன். தருமம் என்பதே தெரியாதவன். அருளென்பதே அறியாதவன். கொலைத்தொழில் புலையன். இத்தகைய பாபி இறந்துழி அவனைப் பிடித்துத் தீவாய் நரகத்து இட்டோம். இடனும் சிவகணங்கள் என்னுடைய தூதரைச் சீறி அவனை ரத்னவிமானத்தி லேற்றுவித்துச் சென்றார்கள். அதைக்கண்டு இங்கு வந்தேன். யான் ஒரு தவறும்இழைத்திலேன்' என்றான். இதனைக்கேட்டுஅங்கு நின்ற பைரவமூர்த்தி மறலியை நோக்கி 'கொலைத்தொழிலல்லது நல்த்தொழில் அவன் ஒன்றும் செய்திலனோ? ஆராய்ந்துரைத்தி' என உருத்துரைத்தனர். இயமனும் பாபபுண்ணியத் தொழில்களை ஒன்றுவிடாதெழுதும் சித்திரகுத்தனைப் பார்த்து அத்தீயோன் கணக்கை முற்றிலும் உரைத்தி என்றனன். சித்திரகுத்தனும் சிவபெருமானை வணங்கி பைரவ மூர்த்தியை நோக்கித் தன் கணக்குப் புத்தகத்தினின்றும் படிக்கிறான்.

கலிங்க தேசத்தில் வியாக்ரபுரத்தில் அந்தணர் குலத்தில் தோன்றினவன், இவன் தாய் கற்பு நிலை தவறினவளானாள், இவன் தந்தை ஆயுள் முடிந்து இறந்தான். இவன் தாய்க்கு ஒரு சோர புருஷன் இருந்தான். தாயும் தந்தையும் இறந்த பின்னர் அச்சோர புருஷனே இவனைத் தன் குழந்தை போல வளர்த்து வந்தான், உபநயனம் முதலிய விவாக சடங்குகளைச் செய்வித்தான். பிள்ளையோ தீக்குணம் மிக்குத் திருட்டுத் தொழிலிற் சிறந்தான். வளர்த்த தந்தை இதைக்கண்டு இவனை அடித்துத் துரத்தினான். பிறகு கொலையும், களவும் கள்ளுண்ணலும், புலாலுண்பதுவுமாக எண்ணிறந்த தீமைகள் செய்தான். இவன் பெயர் சாமித்திரன். தன்னை வளர்த்த தந்தையின் பொருள்களைக் கவர எண்ணி அவனையுங் கொன்றான். பிறகு ஒருநாளிரவு ஒருவன் மனைவியை அபகரித்துக்கொண்டு அவளுடன் செல்லும்போது அரசன் காவலர் பிடித்து நகரத்துக்கு வெளிப்புறத்தில் இவன்உயிரைமாய்த்தார்கள். இவன் இறந்து நான்கு நாள் ஆயிற்று. இப்படிப்பட்ட பாதகனை விமானத்தி லேற்றுவித்தார்கள் சிவகணத் தலைவர்கள்."

இவ்வாசகங்களைக் கேட்டுநின்ற பைரவமூர்த்தி—இப்போது கூறின எல்லாம் உண்மையே. அவன் பெரும்பாவி என்பதும் சரதமே. இவனுக்கு ஒரு நல்வினைப்பயன் ஒன்றுளது. அதை நீவிர் உணர்ந்திலீர் போலும். யான் கூறுகின்றேன்.

கேளுங்கள்.—"சக்கரவாகு என்றொரு அரசன் இருக்கின்றான். அவன் புதல்வி அங்கசுந்தரி. அவள் நீர்விளையாடக் கருதி ஒரு தடாகத்துக்குச் சிலதியரொடு வந்தாள். இடையிடையே வெண்முத்துக்களைக்கோத்தஉருத்திராக்ஷமாலையைக் கழற்றிக் குளக்கரையில் வைத்துவிட்டு நீராடும்போது ஒருகாகம் அவ்வெண்முத்துக்களைச் சோறென நினைத்து அம்மாலையைக் கௌவிக்கொண்டு பறந்து செல்லும்போது அது நழுவி இவனது பிணத்தின் தலையில்வந்து அணிந்ததுபோலப் பொருந்தியது. அப் புண்ணியத்தால் இவன் பரிசுத்தனாய்த் திருக்கயிலையிற் புகுந்தான்" என்றனர். இதைக் கேட்ட இயமன் உயிரொழிந்த உடலிற்பட்டு உருத்திராக்ஷம் எவ்வாறு உயர்கதி தரும் என்று கேட்க அருகிலிருந்த நந்திதேவர் மாபாதகம் செய்தோருடைய எலும்புகளைக் கங்கையிலிடுவதால் அன்னோர் நற்கதி அடைகின்றார்களே—அவ்வாறுதான்" என்றனர். இம்மாற்றத்தைக் கேட்ட மறலி உள்ளம் அஞ்சினவனாய் உண்மை உணர்ந்தவனாய் உமாபதியின் திருவடியில் வீழ்ந்து வணங்கினன். இறைவனும் விபூதி உருத்திராக்ஷம் அணிந்தவர்களைக் கண்டால் அவரை வழிபட்டுஉய்வாயாக! உன்தூதர்களுக்கும் அவ்வாறே கட்டளையிடு! நல்லது போ" என விடைகொடுத்தனுப்பினர்.

இது நான் நேற்று கயிலையிற்கண்ட காட்சி.ஏலவார் குழலாய்! உருத்திர மணியின் பெருமையை இப்போது உணர்ந்தாயா! உலகத்தார் இம்மணியால் எளிதில் நற்கதி அடைவார்கள்" என இந்திரன் கூற, இந்திராணியும் அன்புமிக்கவளாய் என்னை எடுத்தெடுத் தணைத்துக் கொண்டு, பூமியில் விடுவதற்கு மனமில்லாதவளாய் வருந்தி விடுத்தாள். இதுதான் யான்சென்ற பொன்னுலகத்தில் நடந்த விருத்தாந்தங்கள் எனப் பூனை கூறி முடித்தது. இதைக் கேட்டோரெல்லாம் ஆச்சரியங் கொண்டனர். பேரற்புதங்கொண்ட அரசன், சுப்பிரதீபரை வணங்கித் தங்கள் திருக்கரத்தால் எனக்கு ஓர் உருத்திராக்ஷம் தந்தருளவேண்டும் எனப் பிரார்த்தித்தான். அவரும் அன்போடுதர அதைப்பணிந்து வாங்கிச் சிரமிசைச் சூடினன். அங்கிருந்த யோகாங்கரும் சுப்பிரதீபரை நோக்கி, "உம்முடைய பெருமையை உரைசெயற்கரிது" என உரைத்து வணங்கினர்.

மானிடப் பிறவி வாய்த்தல் மாதவப் பயனே யென்பர்
மானிடக் காத்தான் பாத மலரடி மனதிற் றோய
ஊனிடத் தெய்வ நீறும் உருத்திர மணியும் மெய்யிற்
றானிடத் தரும்பேறொக்கும் பேறொன்று தரையில்
[உண்டோ?

வ. சு. செங்கல்வராயன், எம். ஏ.

ஒரு முக்கிய அபிப்ராயம்

M. R. Ry. Dewan Bahadur. S. R. M. M. Ramaswami Chettiar Avargal:—தங்களாற் பிரசுரம் செய்யப்பட்டுத் தமிழ் நாடெங்கும் பரவிவரும் "விவேக போதினி" என்னும் பத்திரிகை வாயிலாகத் தற்காலத்திற்கேற்றபடி நன்மையைத் தரும் விஷயங்களை யாவரும் எளிதில் படித்துணருமாறு இனிமையான நடையில் வெளிப்படுத்திவருவது தமிழ் நாட்டிற்குச் செய்கின்றதோர் பேருபகாரமாகும். இப்பத்திரிகையில் வெளியாகும் விஷயங்கள் அருமையுடையனவாயும் எவரும் பாராட்டத்தக்கனவாயுமிருக்கின்றன. கற்பிக்கும் உபாத்தியாயர்கள், கற்கும் மாணவர்கள், என விருதிறத்தார்க்கும் இப்பத்திரிகை அதிகமான நன்மை பயக்கும் என்பது எனதபிப்பிராயம்

மூன்று சூதாடிகள்

THE THREE REVELLERS

(ஒரு சிறிய கதை)

ப்ரான்ஸ் தேசத்து வடக்கிலிருக்கும் ப்ளாண்டர்ஸ் (Flanders) மாகாணத்திலுள்ள ஒரு நகரில் சில மனிதர்கள் தங்கள் காலத்தை தமாஷிலும் வேடிக்கைகளிலும் கழித்து வந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் ஒருவிதசட்டத்துக்கும் கட்டுப்படாமல், சத்திரம் ஹோடல் ஒன்று பாக்கியன்றி எல்லாவற்றிற்கும் போய் சூதாடிக் குடித்து கேவலம் சோம்பேறிகளாயிருந்து வந்தனர். இப்படியிருக்க ஒரு நாட் காலையில் இவ்வடங்காச் சிறுவர்களில் மூவர் ஒரு சாராயக்கடையில் புகுந்து வேண்டிய மட்டும் குடித்துவிட்டுப் பேரிரைச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று தெருவிலிருந்து ஒரு மணிச்சத்தம் இவர்கள் காதில் விழுந்தது. முன்னால் ஒருவன் பண்டைக்காலத்து வழக்கத்தை யனுஸரித்து ஒரு பெரியமணியை அடித்துக்கொண்டுபோக, பின்னால் சிலர் சவமொன்றைத் தூக்கிச்சென்று கொண்டிருந்தனர். அம்மணி ஓசையின் தாத்பர்யம், அப்பொழுது ஒரு ப்ரேதம் ஸ்மசானத்துக்குக் கொண்டுபோய் அடக்கமாகப் போகிறது என்பதே!

சூதாடிகள் மூவரும் இந்த த்வனியைக் கேட்டதும் வெகு ஆவலுற்றவர்களாய் சேவகன் ஒருவனைபழைத்து தெருவில்போய் யாருடைய ப்ரேதம் போகிறதென்று தீரவிசாரித்துவரச் சொன்னார்கள். அதற்கு அவன் "அது யாருடையதென்று எனக்கு முன்னமேயே தெரியும், அவன் நேற்று இங்கு உங்களுடன் மதுபானம் செய்து கொண்டிருந்தவர்களில் ஒருவன், அவன் வீடுபோய் உட்கார்ந்திருந்தபோது 'சாவு' என்ற ரகஸ்யத்திருடன் அவன் ஹ்ருதயத்தில் கத்தியால் குத்திவிட்டு ஒரு வார்த்தையும் பேசாமல் வந்தவழியே போய்விட்டான். கொஞ்சநாள்முன், ஊரில் கொள்ளை நோய் வந்த காலத்தில் ஆயிரக்கணக்காய் மனிதர்களை அவன் கொன்றிருக்கிறான், ஆகையால் ப்ரபுக்களே! நீங்களும் வெகு பத்ரமாயிருக்க வேண்டும், ஒரு வேளை உங்களை அடுத்தபடி எதிர்க்கலாம்" என்று எச்சரிக்கை செய்தான்.

சத்திராதிகாரியும் "ஆம், கனவான்களே, சேவகன் சொன்னதில் பிசகில்லை. இவ்வருஷம் தான் 'சாவு' ரொம்ப அநியாயம் செய்கிறான். சுமார் ஒரு மைலுக்கப்பால் ஒருபெரிய க்ராமம் உண்டு. அதில் 'சாவு' புகுந்து புருஷர் ஸ்த்ரீ குழந்தை யாராயிருந்த போதிலும் பாராமல் குத்திக் கொலைபண்ணி அட்டஹாஸம் செய்து வருகிறான். அவன் இன்னும் அங்கேயே இருப்பதாகக் கேள்வி. ஆகையால் அவன் தெரியாமல் வந்து நம்மில் ஒருவரைக் குத்திவிடாமல் நாம் பார்த்துக்கொள்வதே உசிதம்," என்று சொல்லிவிட்டுத் தன் அலுவல்களைக் கவனிக்கப் போனான்.

உடனே, குடிகாரர்களில் ஒருவன் "அப்படியா! இவனை எதிர்ப்பதில் அவ்வளவு கஷ்டமுண்டா? கிடக்கட்டும் நான்போய் அவனைக் கண்டு பிடிப்பதாக இதோ ப்ரதிக்ஞை செய்கிறேன். அண்ணன்மார்களே! சற்றுக் கவனியுங்கள், நாம் மூவர் இருக்கிறோம், நாம் ஒன்று சேர்ந்து இவ்வளவு கொலை செய்திருக்கிற இக்கொடிய பயலை தொலைத்துவிடுவோம் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று வெகு பரபரப்புடன் கேட்டான். மற்றிருவரும் இதற்கிணங்கி, ஒருவர்க்கொருவர் எக்கஷ்டத்திலும் விட்டுக்கொடுப்பதில்லை என்று சபதம் கூறிக்கொண்டு, குடி மயக்கத்துடனேயே 'சாவு' இருப்பதாகச் சொல்லப்பட்ட க்ராமத்தை நோக்கி ப்ரயாணமானார்கள். அரைமைல் தூரத்துக்குமேல் சென்றதும், அவர்கள் ஒரு வயலைத் தாண்டிப்போக நேர்ந்தது. அத்தருணத்தில் ஒரு கிழவன் குறுக்கிட்டான். அவனைக் கண்டதும் இவர்கள் நெருங்கிப்போய், "என் ஐயா, வயோதிகரே, என்ன வ்யாதி உங்களுக்கு? ஒருவரும் அறியக்கூடாதபடி முகத்தைமட்டும் விட்டு உடம்பு முழுதையும் போர்த்துக்கொண்டிருக்கிறீரே, தலைமயிர் தாடிமயிர் எல்லாம் நரைத்தும் இவ்வளவுகாலம் உயிரோடிருக்கிறீர்!" என்று பலவாறாகச் சொல்லி சிரித்துக் கூத்தாடினார்கள். அது கேட்டுக் கிழவன், "சிறுவர்காள், இப்புவி முழுதும் நான் அலைந்தும் என் கிழத்தனத்தை மாற்றி எனக்கு யௌவனதசையைக் கொடுப்பவர் யாருமில்லை. ஈசனுடைய ஆக்ஞை அதுவாகையால் சாவு வந்து என் கஷ்டங்களை நிவர்த்திக்கும்வரையில் நான் இப்படித்தானிருக்கவேண்டும். நாள்தோறும் பகலோ இரவோ எந்தவேளையிலும் இந்தமாதிரித்தான் ஓய்வு ஒழிச்சலில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறேன். அடிக்கடி பூமியின்மேல் இந்தக் கழியால் தட்டி 'என் தாயே, என்னையும் நீ இருக்கிற விடத்திற்கு அழைத்துக் கொள்ளக் கூடாதா? என் தேகத்தில் எலும்பும் தோலும் மட்டும் பாக்கியிருப்பது உனக்குத்தெரியவில்லையா? அந்தோ! இந்த ஜீவனை வைத்துக்கொண்டு எவ்வளவு வருந்துகிறேன்!' என்று நான் என்ன கதறியும் என் வேண்டுகோளுக்கு இப்பூதேவி இணங்கவில்லை. அதனாற்றான் என் முகம் வெளுத்து சோர்ந்து சுருக்கமடைந்திருக்கிறது. நீங்களும் என்னை ஒரு தொந்திரவும் செய்யாமல் விட்டுப் போனீர்களானால் உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்," என்று விடையளித்தான். சூதாடிகள் இதைக் காதில் வாங்காதவர்களாய் அதெல்லாம் உம்மை யார்கேட்டது? நீர் இப்பொழுது 'சாவு' என்பவனைபற்றிப் பேசினீரன்றோ? ஆதலால் நீர் அவனுடைய சிநேகிதர்களில் ஒருவராய்த்தானிருக்கவேண்டும்! இப்பொழுது நீர் அந்தப் பயலிருக்கிற விடம் சொல்லுகிறீரா அல்லது உம்முடைய தலையை இங்கேயே வாங்கிவிடட்டுமா என்று வெருட்டினார்கள். உடனே கிழவன் "அப்படியானால் இதோ சொல்லி விடுகிறேன், இந்த வயல்தாண்டி கொஞ்சதூரம் போனதும் ஒரு தோப்புயிருக்கிறது, அங்கே ஒருபெரிய மரத்தடியில் 'சாவு' உட்கார்ந்திருக்கிறான். இப்போதுதான் அவனை விட்டு நான் வருகிறேன். நீங்கள்போய் என்ன இரைச்சலிட்டுக் கூத்தடித்தபோதிலும் அவன் அஞ்சிப் பதுங்கமாட்டான், இது தான் வழி போங்கள், ஈசன் கருணை உங்களுக்கு வெகுவாயிருக்கவேண்டியது" என்று சொல்லி முடித்தான்.

கிழவன் வாய் மூடுவதற்குள் இம்மூவரும் இரைக்க இரைக்க ஓடி தோப்பில் குறிப்பிட்ட மரத்தண்டை வந்தார்கள். ஆனால் அங்கே அவர்கள் எவ்வளவு தேடியும் 'சாவை'க்கண்டு பிடித்த பாடில்லை. அதற்குப் பதிலாய் ஏழெட்டுப்பெட்டிகளில் வைக்கக்கூடின பவுன்நாணயங்கள் குப்பல் குப்பலாய் கொட்டிக்கிடந்தன. இவைகளைக் கண்டதும் துஷ்டர்கள், சாவை

மறந்து அங்கேயே உட்கார்ந்துகொண்டு அவ்வளவு பெருந்தனத்தை என்னசெய்கிற தென்று யோசிக்கலானார்கள். கடைசியில்ஒருவன், "நான் அடிக்கடி பரிகாசமாய்ப்பேசுவது வழக்கமாயிருந்தபோதிலும் நான் புத்திமான் என்பதில் சந்தேகமில்லை, ஆதலால் நான் சொல்வதைக் கேளுங்கள், இக்குவியல்களை லக்ஷ்மி தேவியே நமக்கென்று இங்கே கொட்டி வைத்திருக்கவேண்டும், அதனால் நாம் ஆயுள்முழுதையும் வெகு உத்ஸாகமாய்க் கழிக்கலாம்! எவ்வளவு லகுவாய் நம்மிடத்தில் அது வந்ததோ அவ்வளவு லகுவாய் நாம் அதைச் செலவிட என்ன தடை? ஆனால் இதை நம்முடைய வீட்டுக்குக் கொண்டுபோனா லல்லவோ நமக்கு நலம். அப்படிச் செய்வது பகலில் கூடாதகாரியம். ஜனங்கள் நம்மைக் கண்டுவிட்டால் வந்துவிட்டது உடனே அநர்த்தம், நம்மைத் திருடர்களென்றுசொல்லி மூவரையும் தூக்கில் மாட்டிவிடுவார்கள், ஆனதுபற்றி இராவில்தான் இதைத் தூக்கிப்போக நாம் ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது நாம் சீட்டுப்போட்டுப் பார்த்து எவன் பெயர் அகப்படுகிறதோ, அவன் போய் நமது பசியைக் தீர்க்க கொஞ்சம் தின்பண்டம் வாங்கி வரட்டும். மற்றிருவரும் இங்கிருந்து இப்பொக்கிஷத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளட்டும். இரவுவந்ததும் எல்லோருமாய் இதை எடுத்துக்கொண்டுபோய் பத்திரமாயிருக்கக்கூடிய விடத்தில் சேர்த்து விடுவோம் என்றான். இதற்கு பாக்கி இரண்டு பேரும் சம்மதித்து சீட்டுப் போட்டதில் அவர்களுக்குள் யார் ரொம்பச் சிறுவனோ அவன் பெயர் அகப்பட்டது. அவனும் வாய்பேசாமல் பட்டணத்தை நோக்கிச் சென்றான். பிறகு ஒருவன் மற்றவனைப்பார்த்து "நீ என்னுடைய ஆபத்துக் காலத்திலும் மித்திரனானபடியால் உன் நலத்தை நாடியே உனக்கு ஒரு விஷயம் சொல்லப் போகிறேன், நம் நண்பனோ பட்டணம் போயிருக்கிறான், இப்பணக் குப்பல்களோ மூவருக்கும் பங்கிடவேண்டியதாயிருக்கிறது, அப்படிக்கில்லாமல் நாமிவருர் மட்டும் இவற்றை யனுபவிப்பதாயிருந்தால் உனக்கு நான் நல்லது செய்ததாய் ஆகாதா' என்று வினவினான். மற்றவன் "ஆமாம், நல்ல யோசனைதான் ஆனால் அவனும் சீக்கிரம் வந்துவிடுவான். நாமும் அதற்குள் ஓரிடத்திற்குப் போய்விட முடியாது, போனாலும் அவன் வெளியில் சொல்லி நம்மைச் சந்தியில் இழுத்து விடுவான். உன் யுக்தி எப்படியோ" என்று அதிசயப்பட்டான். அதற்கு நண்பன், 'சொல்லுகிறேன் நீ அதைப் பரமரகஸ்யமாய் வைத்துக்கொள்ளவேண்டியது, முண்டனுக்கு இரண்டாள் என்று நீ கேட்டிருக்கலாம், அவன் வந்து இளைப்பாறுகையில் பரிகாசமாய் நீ அவனை குஸ்திபோட வரும்படி அழை; நீங்கள் குஸ்தி போட்டுக் கொண்டிருக்கும்பொழுது நான் என் ஈட்டியால் அவன் மார்பில் குத்திவிடுகிறேன். பிறகு நீயும் ஒரு குத்துக் குத்தினால் அவன் அத்தருணம் இறந்து விடுவான், நீயும் நானும் பிறகு தனத்தைப் பிரித்துக்கொண்டு நீடூழிகாலம் சுகமே வாழலாம் என்றான்.

இவ்வாறு இருவரும் ஈட்டிகளைக் கூறாக்கி வைத்துக் கொண்டிருக்க பட்டணத்துக்குப் போவதாகச் சொன்னவன் தான் பின்னால் விட்டு வந்த தனமே தியானமாய் வெகு பரபரப்புடன் போய்க்கொண்டிருக்கையில் அவன் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. "எப்படியாகிலும் அந்த த்ரவ்யம் முழுவதும் என் வசமிருந்து நானே அதையனுபவிப்பதாயிருந்தால் என்னைவிட ஸுகசாலியொருவனையும் இப்பூமியில்காண்பதுண்டோ! ஆகா! இப்பொழுதுதான் எனக்கு ஒரு புத்திதோன்றுகிறது! நான் போகிறவிடத்திலிருந்து கொஞ்சம் பாஷாணம் வாங்கிவந்து அதைத் தோப்பிலிருக்கும்இருவருக்கும் கொடுத்துவிட்டால் அதுதான் உசிதம் என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு நகரம் போய்ச்சேர்ந்தான். அங்கே ஒரு வைத்தியர் கடைக்குப் போய் "ஐயா என் வீட்டில் எலிகளின் உபத்ரவம் வெகு ஜாஸ்தியாயிருக்கிறது, தவிர காட்டுப்பூனையொன்று கோழிகளைக் கொண்டுபோய் விடுகிறது, இவற்றைத் தொலைக்க தங்களிடம் உக்ரமான பாஷாணமிருந்து தந்தீர்களானால் க்ரயம் எவ்வளவாயிருந்த போதிலும் கொடுத்து விடுகிறேன் என்று வேண்டினான். வைத்தியர் பாஷாணத்தைக்கொண்டு வந்து கொடுத்து 'இதில் ஒரு எள்ளளவு எடுத்து உணவோடோ அல்லது நீரோடோ சேர்த்து ஒரு மனிதன் சாப்பிட்டு விட்டானாயின் அவன் ஐந்து நிமிஷத்துக்குள் இறந்து விடுவான் என்றால் இந்த விஷத்தின் குணத்தைப் பற்றி அதிகம் சொல்வானேன்" என்று சொ

ல்லி யனுப்பிவிட்டான். சூதாடி க்ரயத்தைக் கொடுத்துவிட்டு பாஷாணத்தை பத்திரமாய் எடுத்துக்கொண்டுபோய் மற்றொரு கடையில் மூன்று பெரிய குப்பிகளை வாங்கி இரண்டில் இந்தப் பாஷாணத்தைப் போட்டான். கடைசியாய் ஒரு சாராயக் கடையில் புகுந்து மூன்றிலும் சாராயத்தை நிரப்பிக்கொண்டு அதிக வேகமாய் சிநேகிதர்களிருந்தவிடம் வந்து சேர்ந்தான். இம்மூன்று துஷ்டர்களையும்பற்றி அதிகம் நாம் விவரிக்கவேண்டியதில்லை. பவுன் குவியல்களைக் காவல் காத்திருந்த இருவரும் முன் செய்த யோசனைப்படி மற்றவனைக் குத்திக் கொலைசெய்துவிட்டனர். பிறகு ஒருவன் மற்றவனைக் நோக்கி "நமது உத்ஸாகத்துக்கு இனி அளவேது? இந்தச் சாராயத்தில் கொஞ்சம் உரிஞ்சினால் பிற்பாடு நாம் இந்த சவத்தைப் புதைக்கலாம் என்று சொல்லி தெய்வச் செயலாய் பாஷாணமிருந்த ஒரு குப்பியை எடுத்தான். பாதி குடித்துவிட்டு மறுபாதியைத் தன் சிநேகிதனுக்குக் கொடுக்க இருவரும் பொட்டென விழுந்து மாண்டனர்! இவ்வாறு கிழவன் சொன்னது பூர்த்தி பெற்றது.

T. S. ராஜகோபாலன்.

மைசூர் பிராவிடேண்ட் பண்டு.—மைசூர் சமஸ்தானத்திலுள்ள கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களுடைய முதுமைப் பருவத்தில் அவர்களுடைய குடும்பங்களுக்கு ஜீவனோபாயத்திற்கு வேண்டிய ஆதாரங்களைச் செய்து வைப்பதற்காக பிராவிடெண்டு பண்டு ஒன்று இம்மாதம் முதல்தேதி முதல் ஸ்தாபிக்கப்படும். அது கண்ட்ரோலரின் மானேஜ்மெண்டில் இருந்துவரும். அது சம்பந்தமான கணக்குகளெல்லாம் கண்ட்ரோலருடைய ஆபீசில் வைக்கப்படும். ஒவ்வொரு வருஷக் கடைசியிலும், அதில் நடந்துவரும் வேலையைப்பற்றி ஒரு ரிபோர்ட்டை கண்ட்ரோலர் தயார்செய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பவேண்டுமென்று மைசூர் கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த நிதிக்கு வேண்டிய சந்தா மெம்பர்கள் சேரும் வரையில், அது சம்பந்தமான வேலையை நடத்துவதற்கு கண்ட்ரோலர் ஆபீஸில் வேறு ஸிப்பந்திகள் வைக்கப்படமாட்டா.

உபவாஸமும், பாரணையும்

FASTING AND PRAYER

நமது தேசத்தில் ஆதிகாலந்தொட்டு அடிக்கடி உபவாஸமிருப்பதும், மறுநாள் அதற்காகப் பாரணை செய்வதும் உயர் குலத்தவர்களின் ஓர் அருமையான வழக்கமா யிருக்கிறது. வரவர, இப்பொழுது அந்த வழக்கத்தை அநுசரியாமல் அநேகமாகக் கைவிட்டிருப்பதோடுகூட, அதனுண்மை இன்னதென்று தெரியாமல் அப்படி உபவாஸமிருக்கிற வழக்கம் கெட்ட வழக்கமென்றும் பலர் இகழத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஆய்ந்து பார்க்குமளவில் இந்து தேசத்தில் ஆதிகாலத்திலே ஆரியர்கள் ஏற்படுத்திய ஆசார வியவஹாரங்கள் கர்மாநுஷ்டானம் முதலான சகலகாரியங்களும் மிகவும் உத்தம மானவைகளென்று இக்காலத்தில் ஐரோப்பாகண்டத்துக் கல்விமான்கள் பலரும் கொண்டாடி, அவற்றைத் தாங்களும் அநுஸரிக்க ஆவல்கொள்ளும்படி யிருப்பதால், அப்படிப்பட்ட அருமையான முன்னோர்களின் பழக்கங்களைத் தமது அறியாமையால் அநேகர் இகழ்ந்து, அனைவராலும் அவமதிக்கத்தக்கவையான அற்பமான வழக்கங்களைக் கைக்கொள்ளப் பார்ப்பது மிகவும் அவிவேகமான காரியம். இதற்குத் திருஷ்டாந்தமாக நம் முன்னோர்கள் கையாண்டுவந்த ஆசாரங்களுள் ஒன்றாகிய உபவாஸத்தின் பெருமையைச் சற்று யோசித்துப் பார்ப்போம்.

உபவாஸமென்றால் பட்டினி கிடப்பதுதானே. பட்டினி கிடந்தால் தேகத்தில் நாளுக்கு நாள் வலிவுகுன்றிக் கட்டுந் தளர்ந்து உடம்பு ஒன்றுக்கு முதவியில்லாமற் போய்விடுமே என்று அநேகர் ஆக்ஷேபிக்கலாம். பட்டினியின் பெருமையை அறிந்தால் அவர்கள் அப்படி ஒரு போதும் ஆக்ஷேபிக்கத் துணியார்கள்.

"மீதூண் விரும்பேல்" என்றும், "அற்றாலளவறிந்துண்க" என்றும் இப்படிப் பலவிதமாக முன்னோர் கூறியிருப்பதெல்லாம் இந்தப் பட்டினியின் பெருமையைக் குறிக்க வந்தவைகளேயன்றி வேறில்லை. ஆகையால் உபவாஸமிருக்கும்படியான வழக்கமுண்டாவது தேகத்தையும் மனத்தையும் சுத்தப்படுத்தித் தேகத்திற்கு வலிவும், மனதிற்குத் தெளிவும் உண்டாக்குகின்றது. ஆதலால் உபவாஸமானது இம்மையில் நோயற்றுச் சுகதேகிகளாக வாழச்செய்வது மாத்திரமே யன்றி, மறுமையில் பேரின்பம் பெற விரும்புகிறவர்களுக்கு, வேதாந்த விசாரம் செய்வதற்கு மனத்தையும் பண்படுத்திப் பரிசுத்தமாக்குகின்றது. அதிகமான போஜனமானது விஷயங்களை ஆலோசிக்க வொட்டாமல் மனத்தை மந்தப்படுத்துகின்றது. வயிறு கொண்டவளவு போஜனம் செய்து விட்டால், பிறகு அந்தப் போஜனம் அவனை என்ன செய்யச் சொல்லுகிறது? புத்தியை மயக்கி உடனே எங்கேயாவது திண்ணை தேடிப் படுக்கச்சொல்லுகிறதல்லவா? அந்தச் சமயத்தில் ஏதாவது கொஞ்சம் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டுமென்றால் எவ்வளவு வருத்தமாகத் தோன்றுகிறது. பாருங்கள், ஆனாலொன்று: மிதமாகப் போஜனஞ் செய்த காலத்திலும் போஜனஞ் செய்தானவுடனே உடம்பில் சற்றே இளைப்பு உண்டாவது யாவருக்கு மியற்கையே. அதனால் தெரியவருவது என்ன வென்றால், போஜனஞ் செய்தானவுடனே வேலையிலிறங்காமல் சற்றுநேர மிளைப்பாறியிருப்பது உண்ட உணவு நன்றாக ஜீரணமாவதற்கும் தேகஸௌக்கியத்திற்கும் இன்றியமையாததென்று கடவுளுடைய கட்டளையாக அமைந்திருப்பதென்று ஊகித்தறியவேண்டியதாகின்றது. எது எப்படியானாலும் போஜனம் மதிமயக்கத்தை யுண்டாக்குவதென்று ஏற்படுவதனால், போஜனமில்லாமலிருப்பது புத்திக்குத்தெளிவையுண்டாக்குகிறதென்பது, தானே ஏற்படுகிறதல்லவா? போஜனம் கூடாதென்றால் முதலே ஒன்றுமில்லாமல் சும்மா இருந்து விடலாமா? அப்படிச் செய்தால் தேகம் திடமாக நிலைத்திருப்பதெப்படி? சுவரை வைத்துக்கொண்டல்லவோ சித்திரமெழுதவேண்டும். ஆகையால் தேகபோஷணத்திற்குப் போதுமானவளவு மிதபோஜனம் செய்துகொண்டு வாழ்கிற வாழ்க்கை உத்தமமான வாழ்க்கையாம். அப்படியின்றி மிதமிஞ்சிப் பட்டினி கிடப்பதென்றால், தேகத்தில் பலவீனமும் பலவகைக் கோளாறுகளும் உண்டாகத் தலைப்படுமென்று யாவருக்கும் தெரிந்த விஷயமே.

ஒரேதடவை இரண்டு மூன்றுநாள் நீடித்து உபவாஸ மிருக்கவேண்டுமென்றால், அதற்குத் தக்கபடி வேண்டிய ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகப் பழக்கஞ் செய்யவேண்டும்; அப்படியன்றித் திடீரென்று போஜனத்தை நிறுத்திவிட்டால் தேகத்தில் அநேகவிதமான அசவுக்கிய முண்டாகுமென்பது நிச்சயம்! தேகம் வளருகிற நிலைமையிலிருப்பவர்களுக்கு அதிகமான கஷ்டங்கள் உண்டாகும்; ஆகையால் அவர்கள் விஷயத்தில் அதிக ஜாக்கிரதை யிருக்கவேண்டும். ஏனெனில், வளருகிற சரீரங்களுக்கு அன்றாடம் உண்டாகும் அழிவுகளுக்கு மாத்திரமே பிரதியாக உணவு அளித்துக்கொண்டிருப்பது போதாது; அதனோடு தேகம் மேன்மேலும் வளருவதற்கும் கொஞ்சம் உணவு அளித்துவரவேண்டும். சரீரம் நன்றாக முதிர்ந்த பெரியோர்களைக் காட்டிலும் தேகம் வளரும் பருவமான சிறுவர்களுக்கு எப்போதும் பசியதிகமாகி மேன்மேலும் உணவில் அபேக்ஷை அதிகமாயிருப்பதே இதற்குப் போதுமான அத்தாட்சியாம். பட்டினி யிருப்பதென்பது புருஷர்களைப் பார்க்கிலும் ஸ்திரீகளுக்கு அதிகமாகப் பொருந்தியதா யிருக்கிறது; ஸ்திரீகள் அநேகமாய்ப் பட்டினியையும் கஷ்டங்களையும் பொறுக்க வல்லவர்கள். அவர்களுக்கு வைதிகச் சடங்குகளில் விசுவாஸமும் எதையும் செய்ய வேண்டுமென்கிற ஆசையும் அதிகம். ஆதலால் அது விஷயத்தில் அவர்களுக்குள்ள மனவுறுதியால் தேகசிரமம் அதிகமாகத் தோன்றாமல் பொறுக்கும்படி யாகிறது.

பட்டினியைப் பொறுத்திருக்கிற விஷயத்தில் ஸ்திரீகளுக்கு அடுத்தவர்கள் வயதான புருஷர்கள். சிறுவர்களைப் பார்க்கிலும் பெரியோர்களுக்குத் தீனி கொஞ்சமாக வேண்டியிருப்பதால் பட்டினியைப் பொறுக்கிற வல்லமை அவர்களுக்கு அதிகமாயிருக்கலாம்.

சரீரத்தில் உணவு அதிகமாயில்லாத காலத்தில் மனது மிகவும் தெளிவாயிருப்பது நமக்குப் பிரத்தியக்ஷமாயிருப்பதால், அதிகமான உணவு ஏற்றுக்கொள்வது பிசகானதென்பது உறுதியாய் ஏற்படுகின்றது. இந்த உதாரணத்தைக் கொண்டே இது மிதமான உணவு, இது அளவுக்கு மிஞ்சின உணவு என்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். கொஞ்சகாலம் வைத்தியருடைய சிகிச்சையிலிருந்து

சில நாள் மிதபோஜனம் செய்து வரும்படி நாட்டுப்புறத்திற்கு அனுப்பப்பட்ட சிலர் வைத்தியருடைய ஏற்பாட்டின்படி தாங்கள் மிதபோஜனஞ் செய்துவருங் காலத்தில் தங்களுடைய புத்தி மிகவும் தெளிவாயிருந்ததென்றும் வேலைசெய்ய மிகவும் உடம்பு சுவாதீனமாயிருந்ததென்றும் சொல்லுகிறார்கள்.

மிதமான போஜனம் செய்துகொண்டே எப்பொழுதும் ஜீவிக்க வேண்டுமென்றால், அது வருத்தமான காரியமல்ல ; எளிதுதான் அப்படியே உபவாஸமிருப்பது மெளிதுதான். ஆனால் அதற்குச் சாஸ்திர சப்பந்தமான விதிகளையும் அநுபவத்தால் தெரிந்த மற்ற விஷயங்களையும் அநுஸரித்து ஒழுங்கு தவறாமல் நடக்கவேண்டும். சாஸ்திர மூலமாகத் தெரிகிற விஷயமென்னவெனில், தக்கவயது வந்த மனிதர்களுக்கு எப்போதும் தேகபோஷணத்திற்காகச் சிறிது அளவு உணவு அவசியமே. நீடித்து உணவே ஏற்றுக்கொள்ளாமலிருந்தால், தேகவலிமையும் புத்திவலிமையும் குறைந்து தேகத்தில் பலவிதமான கோளாறுகளுண்டாகத் தலைப்படும்! உண்ட உணவை ஜீரணம் செய்விக்கச் சரீரத்திற்குள் ஏற்பட்டிருக்கும் பலவிதமான உறுப்புகளுக்கு வேலையில்லாமையால் அவை அசையாமல் சும்மா இருந்து விடும். இரைப்பையும் தனக்கு ஒருவேலையு மில்லாமையால் இரையை ஏற்றுக்கொள்ளும் வேலையைமறந்து சோம்பேறியாகி விடும். இப்படிப்பட்ட கோளாறுகளால் தலைநோய் வயிற்றுநோய் முதலான பலஉபாதிகளுமுண்டாகத் தலைப்படும். இப்படிப் பட்டினியிருந்துவிட்டுப் பிறகு பாரணைசெய்யப்போனால் அதுவரையில் வேலையொழிந்திருந்த உறுப்புகளெல்லாம் புதிதாக வேலைசெய்ய ஆரம்பிக்க வேண்டுமாகையால் அப்போது உடனே ஜீரணமாவதும் அதிகவருத்தமே. ஆதலால் மிதபோஜனம் செய்யப் பழகுகிறவர்களாயினும், உபவாஸ மிருக்கப் பழகுகிறவர்களாயினும் திடீரென்று உணவைக்குறையாமல் தினம் கொஞ்சங்கொஞ்சமாக அந்தக் குறைவு தோன்றவொட்டாமலே, குறைத்துக்கொண்டு வந்து, அது வழக்கமான பிறகு எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். பாரணை செய்வதும் அப்படியே. நெடுநேரம் பட்டினியிருந்து பிறகு திடீரென்று காணாதது கண்டதுபோல் அதிகமான போஜனம் செய்து விடலாகாது. இச்சென்னை ராஜதானியில் சில வருஷங்களுக்கு முன்னே பெரும் பஞ்சமொன்று உண்டானது அநேகருக்குத் தெரியுமல்லவா? அக்காலத்தில் நாட்டிலுள்ள நாநாஜாதி ஜனங்களும் குடிக்கக் கூழுமில்லாமல் பல நாள் பட்டினிகிடந்து, பிறகு துரைத்தனத்தாரால் பிரஜைகளைக் காப்பாற்றுவதற்காக அங்கங்கே ஏற்படுத்தப்பட்ட கஞ்சித்தொட்டிகளில்போய் சோற்றிலிருந்த ஆவல் பொறுக்கமாட்டாமல் வயிறு கொண்டவளவு தின்று, பிறகு அந்த உணவு ஜீரணமாக வழியில்லாமல் அப்படி யப்படியே கூட்டங்கூட்டமாக மாண்டுபோன சங்கதி பிரத்தியக்ஷமானதன்றோ? ஆதலால் முதலில் இரண்டொருநாள் உபவாஸமிருந்துவிட்டால் பிறகு பாரணை செய்யும்போது பத்தியமாக மிதபோஜனம்செய்து அது ஜீரணமானபிறகு கொஞ்சங்கொஞ்சமாய் உணவேற்றி வழக்கமான உணவினளவுக்குக் கொண்டு வரவேண்டும். ஆனதுபற்றியே விரததினங்களில் உபவாஸமிருக்கும்படி விதித்த இந்து தருமசாஸ்திரங்கள் அதற்கு முதனாளும் விரதமிருந்து மறுநாளும் பத்தியமாகப் பாரணை செய்யவேண்டுமென்று உறுதியிடுகின்றன.

இப்போது இந்த ராஜாங்கத்தில் குற்றவாளிகளாய்ச் சிறைச்சாலையில் அடைபட்டவர்களுக்கு அவரவர்செய்யும் வேலைக்குத் தகுந்தபடி அளவிட்டு உணவளிப்பதும், அவர்களுடைய உணவைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்து மிதப்படுத்துவதும் யாவருக்கும் பிரத்தியக்ஷமாகத் தெரிந்தவிஷயமேயல்லவா? அதனால் அவர்களுடைய தேகவலிவாவது வேலைசெய்யுந் திறமாவது குறைகிறதோ, இல்லை. ஒருவேலையும் செய்யாமல் சும்மா இருக்கிற தனவந்தர்கள் உண்ணும் உணவைக்காட்டிலும் ஏழைகளான உழைப்பாளிகள் பலர் அரைவயிறோ கால்வயிறோ கிடைத்தமட்டில் கூழோ கஞ்சித்தண்ணீரோ குடித்துவிட்டு மிகக்கடினமான வேலைகளையெல்லாம் அலக்ஷியமாகச் செய்து வருவதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்த்து வருகிறோமல்லவா? ஆதலால் மிதபோஜனம் உடம்புக்கு மிகவும் ஆரோக்யமானது; உபவாஸ மிருக்கப் பழகுவது அதற்கு மிகவும் அனுகூலமாகும்

———

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

ஆத்திசூடி விளக்கம்

52 சையெனத் திரியேல்

வெறுத்த இகழும்படி நீ நடந்துகொள்ளாதே என்பது இந்த ஸூத்ரத்தின்பொருள். உலகில் எல்லோருக்கும் நல்லவனாக நடந்துகொள்ளுவது என்பது முடியாதகாரியம். தீயோர் அல்லது இழிந்தவர்களை திருப்திப்படுத்தி அவர்கள் புகழ நடந்துகொள்வது ஒழுக்கவிரோதமே யாகிவிடுமாதலால், நல்லோர் அல்லது பெரியோர் இகழ நடவாதே என்ற பொருள்தான் இங்கு கொள்ளவேண்டும். இப்பெரியோர்களை லௌகீக வைதிகர்களென்று இருவகையாகக்கொண்டு இந்த ஸூத்ரத்துக்குப் பின்வருமாறு பொருள் கொள்ளலாம்.

(1) லௌகீகர் வெறுக்க நடவாதே:—நடை, உடை,பாவனை,பேச்சு, முதலியவைகளில் ஒழுங்கு தவறி நடந்தால் லௌகீகப் பெரியோர்களுக்குப் பொதுவாக வெறுப்பு ஏற்படும்: இப்படி ஏற்படும்படி நடக்கலாகாது. தத்காலத்திய நாகரீக விஷயத்தையும் இது உள்ளடக்கிவிடும். கச்சேரி போலீஸ் முதலிய இக்காலத்திய உத்யோகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒழுங்குகள் வெவ்வேறு விதமாக நடை உடையாதிகளில் உள்ளன. இவைகளுள் எதனுள் புகுந்தாலும் அதற்கு ஏற்ப நடந்துவிட்டு பின்னர் தனித்திருக்கையில்தான் தன் வழி நடக்க வேண்டும். இக்காலத்தவர் தமது நடையை முற்றிலும் மாற்றி உத்யோக வழியே திருப்பி, வெறும் பகல்வேஷக்காரரேயாகிவிடுகின்றனர். இது பெருங்கொடுமை என்பது வைதிகபாக ஆராய்ச்சியிலிருந்து விளங்கும். 'ஊருடன் கூடி வாழ்' 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்' என்ற ஸூத்ரங்கள் இந்த ஸூத்ரக் கருத்தையும் பயனையும் அடக்கியுள்ளன. ஆகவே பெரியோர் பழிக்கத் திரிந்தால் அவர்கள் அதிருப்தி ஏற்பட நமது உத்யோகத்திற்கே கேடு வந்துவிடும். வயிற்றுப் பிழைப்பிற்குப் போட வேண்டிய வேஷத்தை ஒழுங்குப்படிப் போட்டே தீரவேண்டும் காரியமாகும் வரையில். இக்காலத்தவர்களுக்கு இதை அதிகமாக விஸ்தரிக்க வேண்டியதில்லை.

பொதுவான நடையுடையாதிகளை நோக்கில் அசுத்தியான துணி முதலியன இல்லாது குளியாமலிராது சுத்தமாகஇருத்தல்வேண்டும் என்பதே இதன் பொருளாகும். தேஹ சுத்தி வஸ்திர சுத்தி இவையோடுங்கூட கர்மவ்யாதிகள் உண்டாயிருப்பின் அது பிறர் கண்ணில் பட்டு வெறுப்புண்டாகா திருக்கும்படியும் நடந்து கொள்ளவேண்டும் என்பதாகும். தேஹத்தில் துர்நாற்றம்போகப் பல் தேய்த்தல் மலஜலங் கழுவல், கால் கை கழுவல், 'குளித்தல்; நல்ல வெள்ளை வஸ்திரம் உடுத்தல்; குரூபம், வ்யாதி, இவைகளுடைய அங்கங்களை நன்றாக மறைத்தல், பேசுங்கால் அவசியமானதைப் பிறரை வருத்தாதும் பொய் கலவாதும் பேசுவது, எல்லோரிடத்தும் பரிவுடன் ஸாதாரணமாக இருத்தல் ஆகிய இவைகளைப் பின்பற்றுவதே சையெனத் திரியாமையாகும். இவைகளுக்கு மாறாக நடப்பது சையெனத் திரிவதே. மைத்ரேயர், சொன்ன புத்திமதிகளைக் கவனியாததோடுங்கூட இடது தொடையை அலக்ஷியமாய்த் தட்டிக்கொண்டு இறுமாந்திருந்த துரியோதனன் சையெனத்திரிந்ததால்'இடது தொடையில் அடிபட்டிறக்கக்கடவாய்;' என்ற சாபம் ஏற்கும்படியாயிற்று.எதிர்த்து சண்டை செய்து பீஷ்மத்ரோணாதியரை பாண்டவர்கள் கொல்லும்படி நேரிட்ட போதிலும், யுத்தாரம்பத்தில் தர்மபுத்திரர் சையெனத்திரியாது அவர்களைப் பரிவுடனணுகி அடிபணிந்து யுத்தம் தொடங்க உத்தரவு கேட்டதால் அவர்கள் அனுக்கிரஹம்பெற்று செழித்தோங்கினர்.உலகில் பல சண்டைகளும் மனக்குழப்பங்களும், சிறு விஷயங்களில் சையெனத்திரிவதால்தான் ஏற்பட்டு வருகின்றன. பொதுவாக விட்டுப்பிடித்தலைப் பின்பற்றுவது சையெனத்திரியாமை, முரட்டுத்தனமாகத் தன் விஷயம் ஸாதித்தல் சையெனத்திரிவதே. ஆகவே மனஸ்தாபகாரணங்கள் வரக்கூடிய ஸந்தர்ப்பங்களில் நல்வழி முரட்டுத்தனத்தையும் பின்பற்றாது பக்குவமாக காரியங்களைக்கொண்டுபோய் நல்ல முடிவுக்குக் கொண்டுவர முயன்றால் எல்லாம் இன்பமாகவே இருக்கும். இது தவறி எந்தச் சிறந்ததை முடிக்க முயன்றாலும் அது சையெனத் திரிந்ததாகத்தான் முடியும்.

(2) வைதிகர் வெறுக்க நடவாதே:—வேத சாஸ்திர ஒழுங்குகளான வர்ணாச்ரம ஸ்திரீ

புருஷ தர்மங்களுக்கு விரோதமாக நடப்பதே வைதிக சிகாமணிகள் வெறுப்பவைகள்: இவைகளின்படி நட என்பது இந்த ஸூத்ரத்தின் பொதுக் கருத்து. இந்தப்படி சையெனத்திரியாதிருக்கும் ஒருவனால்தான் உள்ளபடி லௌகீகத்திலும் சையெனத்திரியா திருக்கமுடியும். இவ்வாறின்றி லௌகீகத்தில் சையெனத்திரியாதிருப்பவர் தம் நயமான பொருள் கீர்த்தி இன்வகைகளைக் கருதியே அவ்வாறிருப்பர். இவைகள் ஸம்பந்தப்படாத ரஹஸ்ய விஷயங்களில் அவர்கள் சையெனத்தான் திரிவர். வைதிக ஒழுங்கைப் பின்பற்றித் திரிபவருக்கு எப்பொழுதும் எந்நிலையிலும் சையெனத்திரியாமை கைகூடிவிடும். இவர்களால்தான் லௌகீகத்தில் லௌகீக ஒழுங்காயும், அது ஒழிந்த தனி நேரங்களில் வைதிகமாயும், சையெனத் திரியாதிருக்க முடியும். வெறும் லௌகீகர் போல இவர்கள் ஒரு தருணத்தில் சையெனத் திரியா திருத்தலும், மற்றொரு ஸமயத்தில் கண்டபடி திரிவதுமாக இருக்கவே மாட்டார்கள். ஆகவே வைதிக ஒழுங்கு இருந்தால் மாத்திரம்தான் சையெனத் திரியாமை பின்பற்றியதாகும். இக்காலத்தில் வைதிகம் குறைந்து லௌகீகம் ஏறி சையெனத் திரிவதே பலமாகி வருவது மிகக்கொடிய விஷயம்.

இதோடு நின்று விடாமல் லௌகீகவிஷயம் வைதிகத்தைதாக்கிவருகிறது. லௌகீக சையெனத்திரியாமையை எப்படி வயிற்றுப் பிழைப்புக்காகமாத்திரம் வைத்துக் கொள்ளவேண்டும் என்று முன்னர் குறிக்கப்பட்டதோ, அப்படியே வைதிக சையெனத்திரியாமையும் உபயோகப் படுத்தப்பட்டுவருகிறது. இக்காலக்கொடுமையால் மனத்தூய்மை இல்லாதோர் எல்லாம் வெளித் துறவி வேஷம் போட்டு ஸாதுக்களை மயக்கத்தொடங்கி, ஸுகஜீவனம் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

கையொன்று செய்ய விழியொன்று நாட கருத்தொன்றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால் கமழு, மெய்யொன்று சாரச்செவியொன்று கேட்க,

நிஷ்டையில் நிலைத்திருப்பவர்போல வேஷம் போட்டு பிறரை மயக்குவதே லௌகீக ஸம்பந்தத்தால் வைதிகத்தில் சையெனத்திரிவது. இப்படிச் செய்வதுதான் இக்காலத்தில் வெகு ஸாதாரணமாகிவிட்டது. இப்படிச் செய்யாது வேதநோக்கம் உணர்ந்து வைதிகத்தில் நிலைத்து சையெனத்திரியா திருக்கவேண்டும். இப்படி சையெனத்திரிபவர் உலகத்தையும் தம்மையும் ஈசன் கோபத்திற்காளாக்கி வீழ்வர் வீண் நரகிலே.

இவ்வாறு வைதிகவழியில் நடந்துவந்தால் மனம் சாந்தப்பட்டு சையெனத்திரிவதற்குமூல காரணமான விஷயப்பற்று ஒழிந்துவிட உண்மையான திடமான சையெனத்திரியாமை கைகூடிவிடும். இதற்கு முக்யஸாதனம் சாஸ்திரத்தில் காட்டியிருப்பனவான பாபங்களின் வழி நாடாமையே. இப்படி இருந்தால் சையெனத் திரியாமை வரவர விருத்தியாகி, தடைக்காரணமான விஷயப்பற்று நீங்க, அது திடப்பட்டுவிடும். இந்த விஷயம் பட்டணத்துப் பிள்ளையால் பின்வருமாறு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது :—

ஆவியொடு காய மழிந்தாலும் மேதினியில்
பாவியென்ற நாமம் படையாதே—மேவியசீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

ஆகவே சையெனத்திரிவதாவது பாபியாவது மூன்றுவித வாஸனைகளுட னிருப்பது ஆகிய இவைகளை சையெனத்திரியாமையாவது செத்தாரைப்போல திரிவதே. அதாவது பிணம்வெளிவிஷயஏற்றத்தாழ்வு முதலிய த்வந்த்வத்தாக்கின்றி எப்படி இருக்கிறதோ அப்படி விஷயங்களுக்கிடையில்விஷயப்பற்றின்றி, பாபி, வாஸனாவசத்தன் ஆகிய இவர்கள் ஆகாது, சாஸ்திரீய வழிகளில் இயற்கையாகவே நடந்து வருவதே சையெனத்திரியாமையாகும். இவ்வாறு உள்ளபடி சையெனத்திரியா திருப்பதற்கே மற்றைய விதங்களான சையெனத்திரியாமை ஸாதனமாகும்: ஆகவே நிலை ஏறஏற அங்குள்ளவர்கள் வெறுக்கக்கூடியவைகள் வெவ்வேறுவிதமாகவிருக்கும் அவைகளுள் மஹான்கள் வெறுப்பது ஈசன் ஈடுபாடுவிட்டு விஷயவழிச் செல்வதே. இப்படிச் செல்லாது ஈசனிடமுள்ள பிடிப்பு நீங்காமலே பிணம்போல விஷயத்தாக்கே இல்லாது அமர்ந்திருப்பதே இவர்கள் நோக்கில் சையெனத்திரியாமை. இந்நிலையை அடைய, கீழ்நிலைகளில் நம்மால் கூடியவரையில் சையெனத்திரியாமையில் மனதாரப் பழகிவருவோமாக.

கஸபியான்கா

CASABIANCA

1798-ம் வருஷம் இங்கிலீஷ்காரருக்கும் பிராஞ்சுக்காரருக்கும், மத்தியதரைக்கடலில், நீலநதியின் முகத்வாரத்தில், கடும்போர் நிகழ்ந்தது. இருதிறத்தாரின் கப்பல்களும் வருஷித்த குண்டு மாரியால் உயிர்ச்சேதம் மிகுதி. இக்கப்பல்களில் ஒன்று "ஓரியண்ட்" என்பது. அஃதொரு பிராஞ்சியக் (French) கப்பல். அதன் தலைவன் "கஸபியான்கா" என்பவன். இவனுக்கு 13 வயதுள்ள சிறு புதல்வன் உண்டு. இப்புதல்வன் பெயரும் "கஸபியான்கா" தான். இம்மகனே நமது பாட்டுடைத் தலைவன்.

யுத்தம் தொடங்கியபோது, தந்தை தன் மகனை அக்கப்பலின் ஒரு பக்கத்திருத்தி, "எக்காரணத்தையிட்டும் இவ்விடத் தினின்றும் அகலக்கூடாது" என்று சொல்லிப்போயினன். போன சின்னாழிகைக்கெல்லாம், எதிரி குண்டால் அக்கப்பல் தீப்பற்றியது. பற்றவே, அதில் எஞ்சிய மாலுமிகள், முதலிய யாவரும் ஜீவரக்ஷ ஓடங்களில் ஏறி, உயிர் தப்பி ஓடினர். ஓடும்போது, பையனையும் அழைக்க, "தந்தையின் கட்டளையின்றி வரமுடியாது" என்று கூறிவிட்டான். ஐயோ! பாவம்!! அவன் தந்தை பெருங்குண்டால் தாக்குண்டு இறந்து, கப்பலின் ஓர்பால் கிடந்தான். இஃதறியா மைந்தன் தந்தையைவிளித்து, "என்தொழில் முடிந்ததா?என்று இரைந்து வினவினான். வினவும்போதே அவனைநோக்கிவந்துகொண்டிருந்ததீ, அவனது ஆடையிற்பற்றிக்கொண்டது. பையன் சூடு பொறாமல், "இப்போதேனும் இவ்விடத்திருந்தகல எனக்கு உத்தரவோ?" என்று அலறினான். பதிலின்மையால், அங்கிருப்பதே தன் தந்தையின் விருப்பமென்று எண்ணித் துடிதுடித்த வண்ணமாய் ஓடாமல் நின்றான். கடைசியாக, தீ உடலிற் பற்றித் தலைமயிரையுங் கொளுத்தி வருத்தவே, "அப்பா! அப்பா!! நான் இருந்தே தீரவேண்டுமோ?" என்று கூவினான். இதற்குள் கப்பலிலிருந்த வெடிமருந்துக் குவியலில் தீப்புகவே படீரென்னும் பேரொலிகேட்டது. கப்பல் சுக்கல் சுக்கலாய் நாலுபக்கங்களிலும் சிதறியது; பையனைக் காணோம். மருந்து அவனை எங்கோ தூக்கியெறிந்துவிட்டது. ஆ! ஆ!! யாது காரணத்தால் இக்கட்டளை தனக்கு இடப்பட்டதென்று கூடக் கேட்காமல் தந்தை கட்டளையை மறுப்பதிலும் இறப்பதே மேல் எனத்துணிந்த இவனோ இறந்தவன்? "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்பதைக்கடைப் பிடித்தவனும், பொன்றாத புகழுடம்பு வாய்ந்தவனுமாகிய இப்புதல்வனுடைய செய்கையைப்பற்றி 'மிஸிஸ் ஹிமான்ஸ்' என்னும் நல்லிசைப்புலமை மெல்லியலார் கூறும் ஆங்கிலப்பாக்களும், அவற்றின் தமிழ் மொழி பெயர்ப்புச் செய்யுட்களும் வருமாறு:—

1. எரிகலத்தின் மேற்றளத்தில்
இளஞ்சிறுவன் நின்றனன் ; அவ்
ஒருவன் ஒழிந் தெல்லவரும்
ஓடிவிட்டார் அங்கிருந்தே.
புரி சமரில் நொறுக்குண்டு
போனகலம் தனைப்பற்றி
எரிசுடர்அங் கிறந்தோர்மீ
திவனைச் சூழ்ந்தொளிர்ந்ததுவே.

2. எனினும், உரு வினிற்சேயே
என்றாலும் கம்பீர
மனிதனையே போன்றவனாய்
மாவீரம் வாய்ந்துள்ள
அனையன் புயற் காற்றினையும்
ஆளஅல தரித்தவன்போல்
சனஅழகுள் ளவனாயும்
காந்தியொடும் நின்றானால்.

3. வெந்தழல்மேன் மேல்சுருண்டு
விரைந்து படர்ந்தது ; எனினும்
தந்தையின்கட் டளையின்றித்
தனதிடம் விட்டவன் பெயரான்
இந்தத் தந்தையுணர்வற்
றிறந்தே கொண்டிருந்ததனால்
அந்தோ மைந்தற்குமொழி
அவன் எதும் புகன்றிலனே.

4 " என்தந்தாய் ! எனதுதொழில்
யாவும்நிறை வேறியதோ ?
இன்றோ ? எற் கியம்பிடுக ;
இயம்பிடுக" என உரைத்தான்.
தன்சேயைப் பற்றியசிந்
தனைஎதும் இல்லானாய்,
அன்றோ அத்தலைவன் இருந்
தான், அவன் ஈதறிந்திலனே.

5. "இப்போதாயினும் யான் இவ்
இடம்நீங்கிச் செலல் ஆமோ ?
செப்பாய்தந் தாய் " என அச்
சேய் அலறினான் மீண்டும்.

அப்போது வெடிகுண்டே
அதற்குவிடை அளித்ததுவே
எப்போதின் மிசவிரைவா
எரியும் எழுந்தோங்கியதே.

6. அனல் உமிழ் காற்றவன் முகத்தும்
அலைகின்ற அவன்குஞ்சி
யினும்தாக்கிற் றிட்டதென
இனிதுணர்ந்தான் ? உயிர்வெறுத்தான்
மனஅமைதி யேஉற்றான் ;
மாதுணிவுற்றான் ; பார்த்தான்
தனியேஅப் படுநிலையில்
தங்கியவன் சுற்றிலுமே.

7. இனி " எந்தாய் ! இங்கேயான்
இருந்திடலே நின்மனமோ ? "
எனமற்றும் ஓர்முறையே
இரைந்துரைத்தான். இதற்குள்,சூழ்
கனல்கப்பற் பாய்க்குள்ளும்
கயிற்றேணிக் குளும்புகுந்து
நனிவிரைவில் அவன்பாலே
நாடிச்சென் றிட்டதுவே!

8. சுற்றியதீ பயங்கரமார்
சோபையுடன்மீ தெழுந்து,
முற்றிலும்அக் கப்பலினை
மூடிஉயர் துவசத்தைப்
பற்றியந்தத் தீமிகு பையன்சிர
மேலெழும்பி,
உற்றுவிணிற் கொடிச்சீலை
ஒப்ப அசைந்தது காற்றில்.

9. வந்தது ஓர் இடிஒலியே
மாணும் அதிர்வெடியினொலி—
மைந்தனவன் எங்கிருந்தான் ?
மற்றிக்கேள்விக்கு விடை
தந்தொழிலைத் தவறின்றித்
தாங்கியபாய் மரம் சுக்கான்
சந்தமிகு கொடி இவற்றைத்
தண்கடலில் வெகுதொலையில்,

10. நாலுபக் கங்களிலும்
நன்கிறைத்த அக்காற்றை
யேநீ கேட்டறிந்துணர்க.
இறந்தவெலாம் அரியனவோ
ஆனால்அவ் அரியவற்றுள்அரிய
பொருள் ஆய்ந்திடிலோ
ஆனது தன் கடனை ஆற்றிய
அச்சிறியோனே.

M. கோபாலகிருஷ்ணய்யர்.

CASABIANCA

The boy stood on the burning deck,
Whence all but he had fled ;
The flame that lit the battle's wreck
Shone round him o'er the dead. 1

Yet beautiful and bright he stood,
As born to rule the storm ;
A creature of heroic blood,
A proud, though child-like form. 2

The flames roll'd on—he would not go
Without his father's word ;
That fahter, faint in death below,
His voice no longer heard. 3

He call'd aloud :—" Say, father say
If yet my task is done ! "
He knew not that the chieftain lay
Unconscious of his son. 4

" Speak, father ! " once again he cried,
" If I may yet be gone ! "
And but the booming shots replied,
And fast the flames roll'd on. 5

Upon his brow he felt their breath,
And in his waving hair,
And looked from that lone post of death
In still, yet brave, despair. 6

And shouted but once more aloud,
" My father, must I stay ? "
While o'er him fast, through sail and shroud
The wreathing fires made way. 7

They wrapt the ship in splendour wild,
They caught the flag on high,
And streamed above the gallant child,
Like banners in the sky. 8

There came a burst of thunder sound—
The boy—oh' where was he ?
Ask of the winds that far around
With fragments strewed the sea,— 9

With mast, and helm, and pennon fair,
That well had borne their part ;
But the noblest thing that perished there
Was that young and faithful heart. 10

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

மாதவீகங்கணம்

இரண்டாம் பாகம்

அத்யாயம். 1

அடிமைப் பெண்

(முதல் பாகம் 7-ந்தொகுதி 480-ம் பக்கத் தொடர்ச்சி)

நரேந்த்ரன் ஊரைவிட்டு நாட்டைவிட்டு வந்து ஒன்பது வருஷகாலமாயிற்று. இந்த ஒன்பது வருஷமும் அவன் ஜயாபஜயங்கள் பெற்றுப் போர்க்களம் போர்க்களமாய்க் காலங்கழித்து வந்தான். இப்போது அவனுக்கு வயது இருபத்தைந்து. அப்பாது ஸைந்யத்தில் உயர்ந்த உத்யோஹம் வஹித்திருந்தான். ஆனால் அவனுடைய ஜமீன்மாத்ரம் இன்னும் கார்பஸ்தர் பார்வையில்தானிருந்தது. வீரநகரத்திலிருந்தாவது தேவிபுரத்திலிருந்தாவது அவனுக்கு ஒரு ஸமாசாரமும் எட்டவில்லை. ஓயாமல் ஊரூராய் ஸேனையுடன் திரிந்துகொண்டிருந்தபடியால் தன்வீடு வாசல்,பந்து மித்ரர்களைப் பற்றி நினைக்கக்கூட நரேந்த்ரனுக்கு அவகாசமில்லாமல் போயிற்று. யௌவன பர்வத்தின் ஆரம்பத்தில் தோன்றும் அவர்க்கள், உணர்ச்சிகள், தூண்டுதல்கள் யாவும் காலத்தால் தளர்வடைந்து பலங்குன்றிவிடுகின்றன;பிரிவினையாலுண்டாகும் துக்கமும் மனவருத்தங்களுங்கூட காலக்கிரமத்தில் மறைந்துவிடுகின்றன. ஆண்டுகள் கடக்கக்கடக்க யௌவன பர்வத்திய ஆசைக்கேடுகளும் கார்யவிக்நங்களும்ஸஹஜமாய் விடுகின்றன. இருந்தபோதிலும், பால்யகால ஞாபகங்களும் நினைவுகளும்வீரநகரத்தில்அரண்மனை உத்யானவனமும், குளக்கரை ஆலயமும் சிற்சில ஸமயங்களில் நரேந்த்ரனது மனதில் தோன்றிக் கொண்டிருந்தன். நிலையான வீடுவாயிலின்றிக் கூடாரமே வாஸஸ்தலமாகப்பெற்று, வேளை அன்னம்வேளையிலகப்படாமல் மழையிலும் கானலிலும் கஷ்டப்பட்டு, யுத்தகோலம் பூண்டு, காலங்கழிக்கும் நரேந்த்ரன், அன்பும் பரிசுத்தமுமே உருக்கி வார்க்கப்பட்ட தனது மனதுக்கினிய விக்ரஹம் ஞாபகத்துக்கு வா ஸகலவித கஷ்ட நிஷ்டூரங்களையும் மறந்து அடிக்கடிப் பெருமூச்செறிவான்.

ஆனால் தத்ஸமயம் பேச்சுமூச்சற்று ப்ரஞ்ஞை தப்பிப் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் நரேந்த்ரனுக்கு ஆதிநாளைய ஞாபகங்களெல்லாம் சற்று மப்படைந்திருந்தது. அவன் அநேக தினங்களாகக் கடுஞ் ஜ்வரத்தால் ஸ்மரணையற்றுக் கிடந்தான் ; முகமறியாத நாட்டில் முன்பின் பரிசயமில்லாத ஸ்த்ரீகள் அவனுக்கு சிச்ருஷை செய்துகொண்டிருந்தனர் ; நிம்மதியற்றுப் படுக்கையில் புரண்டவண்ணமாயிருக்கும் அந்த வ்யாதிபஸ்தன் கைநாடியைப்பார்த்து ப்ரபல வைத்யர்களெல்லாம் கைவிட்டனர். திடகாத்ரமும், யௌவன ரக்தமும், அவ்விடத்தில் அவனுக்கு ஏற்பட்ட ஓய்வும், தேவதா சிச்ருஷையுமே கடைசியில் அவனை மரணத்தினின்றும் தப்புவித்தன.

ஒரு நாள் நல்ல நிசி; அவன் கண்விழித்துக் கொண்டான். அவன் படுத்திருந்த அறையில் வெள்ளிச் சங்கிலிகளால் தொங்க விடப்பட்டிருக்கும் பெரிய பெரிய விளக்குகள் அதிக ரமணீயமாய் ப்ரகாசித்துக் கொண்டிருந்தன. சுவர்களெல்லாம் மணற்கற்களால் கட்டப்பட்டு ஆங்காங்கு வெள்ளை, கறுப்பு ஸலவைக்கற்கள் பதிக்கப்பெற்றிருந்தன. கொடிகளைப்போலும் புஷ்பங்களைப்போலும், விலையுயர்ந்த கற்களால் இழைக்கப்பட்டிருந்த பல கல் ஸ்தம்பங்கள் மிகவுங் கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தன. மேலிருந்து பட்டுப் படுதாக்கள் தொங்கிக்கொண்டிருந்தன. தரை தெரியாதபடி சிறந்த ரத்நகம்பளங்கள் போடப்பட்டிருந்தன. அறையின் நடுமத்தியிலுள்ள ஒரு குழாயிலிருந்து ஜலம் அதிவேகத்துடன் மேல்கிளம்பி மழைச்சாரல்போல் அவ்விடமிருந்த ஒரு ஸலவைக்கல் தொட்டியில் பூப்பூவாய் விளக்கொளியில் ஜ்வலித்துக்கொண்டு விழுந்தன. அந்தத் தொட்டியின் உட்புறத்தில் பல நிறமான கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. ஜலம் நிறைந்து வழிந்துகொண்டிருக்கும் அந்தத் தொட்டியைப் பார்த்தவர்களெல்லாம் அதில் வெவ்வேறு விதமான மீன்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன என்றெண்ணினார்கள். அறை முழுவதும் சந்தடியற்றிருந்தது. குருட்டுப்ரகாசமாயிருந்த அவ்வறையில் ஒரு நல்லவாஸனை வீசிக்கொண்டிருந்தது. நரேந்த்ரன் திக்ப்ரமையாய் மதிமயங்கி நாலாபக்கமும் சுற்றிப் பார்த்தான். எல்லாம் அவனுக்குக் கனவுபோ

லிருந்தது. அது கனவா, நினைவாவென யோசிப்போம் என்றால் அவனுக்குச் சக்தியில்லை. பழையப்ரகாரம் படுக்கையின்பேரில் தலைசாய்த்துத் தூங்கிவிட்டான்.

காலையில் ஸூர்யனது செவ்விய க்ரணங்கள் பட்டுப் படுதாக்கள் வழியாய் உட்ப்ரவேசித்துக்கொண்டிருந்தன. நரேந்த்ரன் மறுபடியுங் கண்ணைத் திறந்தான். விளக்குகளிலுள்ள ஸுகந்தம் வீசும் எண்ணெய் குறைந்துவிடவே தீபங்களும் அணையும் ஸ்திதியிலிருந்தன. நிசியிற் போலவே அதே அறைதான். அதே பட்டு பீதாம்பர ரத்ந கம்பளங்கள்தான். ஆனால் இரவில்போலன்றி இப்போது அவ்வறையில் அவனைத் தவிர இதர மனுஷ்ய ஸஞ்சாரமிருந்தது. முகத்தோற்றத்தையும் உடைகளையும் கண்டு ராஜபுத்ர ஸத்ரீயெனச் சொல்லக்கூடிய ஒரு வயது முதிர்ந்த ஸ்திரீ அவ்விடம் தரையின்மீது இன்னும் நித்ராவஸ்தையிலிருந்தாள். வ்யாதியஸ்தனுக்கு ஆஹாராதிகள் தயார்செய்ய அமர்த்தப்பட்டிருந்த ஒரு ப்ராஹ்மணச்சிறுவன் அறையையடுத்த ரேழியில் நின்றுகொண்டிருந்தான். ஸூர்ய வெப்பத்தாலும் அதிக வேலையாலும் சிறிது கறுத்திருந்த போதிலும் காண்பவர் கண்களைக் கவரும் ரூபலாவண்யமுடைய வதநமும், ஊடுருவிப்பாயும் இருண்ட கண்களும் கறுத்த புருவங்களுமுடையஓர் யௌவனமாதுசிரோமணி நோயாளியை அதிக ஊக்கத்துடன் கவனித்துக்கொண்டு மௌனமாய்ப் படுக்கையண்டை நின்றிருந்தாள். அவள் தலையில் ஒரு கறுப்புக் குல்லாய் தரித்திருந்தாள். தலையிலிருந்து சுருள் சுருளாய்த் தொங்கிக்கொண்டிருந்த அவளது கேசங்கள் அவளது ப்ரகாசமான இதர அங்கங்களைப் பின்னும் சோபிக்கச்செய்தன. பொன்ஜரிகைவேலை செய்திருந்த உயர்ந்த பட்டாடை தரித்திருந்தாள். அந்த ஆடை நாளானபடியால் மாசுபடிந்து மங்கலாயிருந்தது. அழகிற் சிறந்த அவளது நீண்ட கைகள் அதிக வலியுடையவை. பொன்னிற எழுத்துக்களெல்லாம் கலைந்திருந்த அவளது அரைக்கச்சையினின்று ஈட்டியொன்று தொங்கிக்கொண்டிருந்தது. ஒரு காலத்தில் நல்ல பச்சை நிறமாயிருந்து, இப்போது சாயம்போய்விட்ட ஒரு சல்லா வஸ்திரம் மேலே தரித்திருந்தாள். அவள் கட்டியிருந்த பாவாடை சற்றுக் குட்டையாயிருந்தபடியால் கணிக்காலின்பேரில் இழுத்துக் கட்டப்பட்டிருந்த தளர்வாயிருந்த மஸ்லின் நிஜார்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டிருந்தது. அவளுடைய பாதங்களில் செருப்புகளொன்றுமில்லை. நல்ல உயரமும் ஒற்றைநாடியுமான அந்தத் தருணீமணியின் ஊடுருவிப்பாயும் இருண்ட கண்கள் எத்தகைய தீரபுருஷர்களையும் எளிதில் அரைநொடியில் வசப்படுத்தும் ஆற்றலுடையன. கண்களை ஸரியாய்த் திறந்து பார்க்கக்கூடமுடியாதநிலைமையிலிருக்கும் நரேந்த்ரன் இவ்விஷயங்கள் ஒன்றையுங் கவனிக்கவில்லை. அவன் வாய்திறந்து பேசியதெல்லாம் "தாகமாயிருக்கிறது தீர்த்தங்கொடு" என்பதுதான். அப்பெண் உடனே மின்னற்கொடிபோல் மறைந்துவிட்டாள்.

அவன் மறுபடியும் 'தாகமாயிருக்கிறது தீர்த்தங்கொடு' என்று கேட்டான். வாயிலில் நின்றுகொண்டிருந்த ப்ராஹ்மணச் சிறுவன் படுக்கையண்டை வந்து சிறிது கஷாயம் பருகக்கொடுத்தான். அதைக் குடித்துவிட்டு நரேந்த்ரன் திரும்பவும் சற்றுக்கெல்லாம் தூங்கிவிட்டான்.

இவ்விதமாய்ப் பல தினங்கள் கழிந்தன. நரேந்த்ரன் இன்னும் படுத்த படுக்கையாய்த்தானிருந்தான். அவனுக்கு உபசாரணை செய்துகொண்டிருந்தவர்கள் ஒருவரும் அவனுடன் பேசவில்லை. அவனும் எப்போதும் மயக்கமும் உறக்கமுமாகவே இருந்தபடியால் அவர்களை வரையும் கவனிக்கவில்லை. இரவில் சிலவேளை முன்னர் தான் கண்ட இளங்கொடிபோன்ற கட்டழகி தன்னருகே நின்று மௌனமாய்த் தன்னை உற்று நோக்குவதாக அவன் கனவு கண்டான். ஒடிந்து விழுவது போலிருக்கும் அவ்வுருவத்தினை அவன் சில தினங்கள் நேரிலுங் கண்டான். ஒரு நாளோ இரண்டு நாளோ காலையில் விழித்தெழும்போதுக் கம்பளத்தின்மீது மெதுவாய்ச் சப்தமின்றி செல்லும் காலடியோசை அவன் காதிற்பட்டது; இரண்டொரு தடவை ஒரு நிழல் தன் படுக்கைப் பக்கமாய் வேகமாய்ச் செல்வதையுங் கண்டான்.

வந்த ஆபத்துத் தொலைந்தது; கவலையைத் தரக்கூடிய காலம் கழிந்துவிட்டது. இனி நரேந்த்ரனுக்கு ப்ராணபயமில்லையென நிச்சயமாய்த் தெரிந்தது. படிப்படியாய் நாளாவர்த்தியில் சொஸ்தமடைந்து வந்தான். பழைய நாட் ஞாபகங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அவ

மனதுக்கு வந்தன. ராஜாமான்ஸிங் அவர்கள் கீழ்ப் புலயுத்தங்களில் பொருது அவன் வாகைமாலை சூடினான். பலநகரங்கள் பிடிபட்டன; எத்தனையோ காட்டு ப்ரதேசங்கள் அக்பரது ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப் பட்டன. ஆப்கானியர்கள் அடியோடு நாசமுற்றனர்; போர்ச்சுகல் தேசத்தாரது கொட்டம் அடங்கிற்று. வங்காள முழுதும் ராஜா அவர்களுடைய ஆளுகையில் ஸமாதானமுடைந்து ஸுபிக்ஷமாயிருந்தது.

ஆனால் 1598-ம் ஆண்டில் மான்ஸிங் வங்காளத்தை விட்டகன்றார். அன்றே விஜயலக்ஷ்மியும் மொகலாயரை விட்டுப் பிரிந்தனள். அவருடைய மகன் ஜகத்ஸிங் என்பவன் நல்ல தைர்யசாலி. மஹா வல்லமையுடைய யுத்த வீரன். இருந்தென்ன? அவன் ராஜ்ய விஷயங்களைக் கவனிப்பதே கிடையாது; மந்த்ராலோசனை மண்டபத்தில் அவனைக் காண்பது அபூர்வம். எப்போது பார்த்தாலும் கேளிக்கை நண்பர்களுடன் கூடிக் குடிப்பதே தொழிலாயிருந்தான். ஆப்கானியர்கள் மொகலாயரை எதிர்த்து ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றிக்கொண்டனர். 1600-ம் வருஷத்தில் பத்ராக் செருக்களத்தில் மொகலாய ராஜபுத்ர வீரர்கள் ஸரியான தளகர்த்தனின்றி ஆப்கானியர் முன் புறங்காட்டி யோடினர். வீராவேசங்கொண்ட உஸ்மான் கான் என்னும் ஆப்கானியப் படைத்தலைவன் சக்ரவர்த்தியவர்களுடைய படையைத் தாக்கி அவர்களுடைய அணிவகுப்பைக் கலைத்துச் சிதறடித்தான்; ஆண்மையற்று அவஸரமாய் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போகும் மொகலாய வீரர்களை அவன் சின்னபின்னமாக்கினான். இந்த யுத்தத்தில்தான் நரேந்த்ரன் குண்டால் அடிபட்டுப் படைத்தலைவனாகிய கஜபதிஸிங்குக்கருகில் ப்ரஞ்ஞையற்று விழுந்து கிடந்தான்.

சக்ரவர்த்தியவர்களுடைய ஸேனை பத்ராக் படுகளத்திலிருந்து ராஜமஹல் நோக்கி அபஜயபூர்வகமாய்த் திரும்பி வந்த மானக்கேடு நரேந்த்ரனுக்கு நினைவுவந்தது. காயம்பட்ட இதர ராணுவ உத்யோகஸ்தர்களைப் போல் நரேந்த்ரனும் யுத்தகளத்திலிருந்து கஜபதிஸிங்கவர்களுடைய தயவால் ஸிஹிச்சைக்குக் கொண்டுவரப்பட்டான். ஸாவகாசமாய்த் தங்கிக் காயத்தை ஆற்றிக்கொள்வதற்கு நேரமில்லை. ஏனெனில் வங்கதேசாதிபதி இன்னொரு முறை ஒரு பலத்த ஸேனையைச் சேர்த்துக்கொண்டு ஆப்கானியரைத் தாக்க அனுமதி வேண்டுமென்று அக்பரவர்களுக்குச் செய்தி அனுப்பினான். அந்த வேண்டுகோளைச் சக்ரவர்த்தியவர்களுக்கு அறிவிப்பதற்குக் கஜபதிஸிங்தான் தூதனாக அனுப்பப்பட்டான். அத்தருணம் போர்முனைக்கு உதவாத ஸ்திதியிலிருந்த நரேந்த்ரனும் கங்கா நதியில் ப்ரயாணம் செய்வதால் போதுமான ஓய்வும், தேஹபலமும் உண்டாகக்கூடுமெனக் கருதித் தன் எஜமானருடன் புறப்பட்டான். அந்த ப்ரயாணத்தால் அவன் சுகமடையவில்லை; முன்னிலும் அதிக துர்ப்பலமானான், காயம் ஆறவில்லை; வட இந்தியாவில் ராக்காலங்களில் அடிக்கும் குளிர்க்காற்றால் அவனுக்கு ஜ்வரம் கண்டது. இது வரைக்கும்தான் நரேந்த்ரனுக்கு ஞாபகமிருந்தது; அது முதல் அவனுக்கொன்றும் நினைவில்லை, ஸ்மாரணை அற்றான். மறுபடியும் இந்த நூதனமான அறையில், நூதன வஸ்துக்களுக்கிடையில்தான் அவன் கண்விழித்துக்கொண்டான். அன்றுமுதல் இன்று வரைக்கும், நடந்த ஸமாசாரங்கள் ஒன்றும் அவனுக்குத் தெரியாது.

நரேந்த்ரனுக்குத் தன்ஞாபகம்வந்து தன் சரீரஸ்திதியைத் தெரிந்துகொள்ளப் போதுமான சக்தி வந்தவுடன், ராஜபுத்ரஸ்த்ரீ அவனைவிட்டகன்றாள். அதுமுதல் அவள் அவ்வறைக்கு வருவதை நிறுத்திவிட்டாள். அந்த ப்ராஹ்மணச் சிறுவனுக்கு, நரேந்த்ரன் பேசும் பாஷை தெரியாது. நரேந்த்ரனுக்கோ கவலையும், எண்ணங்களும் அதிகரித்தன. தான் இருப்பது எவ்விடம். தான் அங்கே எவ்விதம் கொண்டுவரப்பட்டான், சாளரங்களும், கதவுகளும் பலமாய் மூடப்பட்டிருந்த அக்காராக்ருஹத்திலிருந்து வெளியேறும் வகை யாது என்பவையொன்றும் அவனுக்குப் புலப்படவில்லை.

ஓரிரவு இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் அவன் படுக்கையண்டைக் காலடிச்சப்தம் கேட்க நரேந்த்ரன் திரும்பிப்பார்த்தான். தான் கனவிலும் நேரிலும் பலமுறை கண்டுள்ள இளங்கொடியன்ன உருவம் அவன்முன் நின்றது. அவளது உருவிப்பாயும் கம்பீரமான நேத்ரங்களைக்கண்டு நரேந்த்ரன் திடுக்கிட்டான். இந்திய ஸ்த்ரீகளுடைய வதனங்களைக்காட்டிலும் அவளுடைய வதனம் அதிக

ப்ரகாசமாயிருந்தது. சிவிங்கிக் குட்டியைப் போல் சுறுசுறுப்பும் நெளியுந்தன்மையுமுள்ள அங்காரீமணி சந்தடி செய்யாமல் மெதுவாய் அடிமேலடி வைத்து வருவதைக் கண்ட நரேந்த்ரனுக்குத் தான் பலமுறை கண்ணுற்றிருக்கும் ஆஹாரம் நாடிப் பதுங்கிச் செல்லும் வனவிலங்குகளின் ஞாபகம் வந்தது.

சித்தப்ரமை தெளிந்தவுடன் நரேந்த்ரன் அந்த ஸௌந்தரியைப் பார்த்து "அழகிற் சிறந்த மானுசிரோமணீ! நான் எத்தனையோ தினங்கள் உன்னை ஸ்வப்நத்தில் கண்டிருக்கிறேன். அல்லது ஒருவேளை நான் நினைவு தப்பியிருந்த போது நீ என் தேஹஸ்திதியைக் கவனித்துக்கொண்டு என் படுக்கை பக்கம் நின்றிருந்தனையோ அறியேன். என்மீது சிறிது அன்பு கூர்ந்து நான் தத்காலம் இருக்குமிடம் யாதெனத் தெரிவிக்கவேண்டும். வாய்திறந்து ஒரு வார்த்தை பேசி என் மனக்கவலையை நீக்கு" எனக் கேட்டான்.

அப்பெண் வாய்திறக்காமல் தன் கைவிரலை உதட்டின்மீது வைத்து மௌனமாயிருக்கும்படி எச்சரிக்கை செய்தாள். எவ்வளவுதான் அவள் மேலும் மேலும் எச்சரித்தபோதிலும், நரேந்த்ரன் ஓய்ந்தபாடில்லை.

"வீரமணீமணீ, என் கேள்விக்குப் பதிலில்லையா? நீதானா இந்த மாளிகையின் அதிபதி? குண்டுகாயம்பட்டு வருந்தும் ஓர் எளியபோர் வீரனுக்குத் தங்குமிட மளித்து அவனை ரக்ஷித்த புண்யவதி நீதானே? என் காயத்தை சொஸ்தமாக்கி எனக்கு உயிர்ப்பிச்சை தந்த தெய்வம் நீதான் என்று நான் பூர்ணமாய் நம்புகிறேன். நாதனற்று நேசனற்று முன்பின் பரிசயமில்லாத நாட்டில் வருந்திய அகதிக்கு நீதான் நாதனும் நேசனுமாயினை" என்று நரேந்த்ரன் கூறினான்.

இன்னும் அம்மாது வாய்திறந்து பேசாமல் பளிங்குபோல் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் பயங்கரமான கண்களுடன் தன் அழகிய திருமேனி பதின் மடங்கு அதிகமாய் ப்ரகாசிக்க உதட்டின்மேல் விரலுடன் அவன் முகத்தை உற்றுநோக்கிய வண்ணமாக மௌனமாய்ச் சிலைபோல் நின்றுகொண்டிருந்தனள்.

தான் என்ன சொல்லியும் அவள் வாய்திறக்காமல் நிற்பதைக்கொண்டு சிறிது ஆத்ரமுற்றவனாய் நரேந்த்ரன், 'நீ யார்? நரஜாதிதானா? அல்லது மனிதரது துரதிர்ஷ்டங்களையும் கஷ்டங்களையும் கண்டு ஏளனம்புரியும் வேற்றுலகவாஸிகளைச் சேர்ந்தவளா? உன் உடைகளைப் பார்த்தால் நீ உயர்குல முஹம்மதிய ஸ்த்ரீயெனத் தோற்றுகிறது. மனிதரது மக்கட்களுள் உன்னைப்போன்ற கட்டழகி வேறொருத்தியைக் காண்பதரிது.' என்றான்.

அவள் தேவதையோ, மண்ணுலகப் பெண்தானோ, அல்லது பிசாசு ஜாதியைச் சேர்ந்தவளோ எவ்விதமாயிருந்தாலும் ஸரி நமக்கு அவச்யமில்லை; இந்தமுகஸ்துதிவார்த்தைகளைக் கேட்டவுடன் இதர ஸ்த்ரீகளைப்போல் அவள் மனம் இளகிவிட்டனள். அவள் சற்று ஏளனமாய்ப் புன்னகை செய்தாள்; ஆனால் வாயை மாத்ரம் திறக்கவில்லை. நரேந்த்ரனுக்குச் சிறிது தைர்யமுண்டாயிற்று. தும்பப் புஷ்பம் போன்ற அவளுடைய ம்ருதுவான கரங்களைப்பற்றி இனியகுரலாய் 'ஸ்த்ரீநாயகமே, உத்தமஸ்த்ரீகளைப்போல் நீ இளகிய மனதுடையவள். அதற்கேற்றவாறு என்னிடம் பக்ஷம் பாராட்டி என் மனக் கவலையைத் தீர்ப்பதற்குத் தடையென்ன?' என்று கேட்டாள்.

ஸந்தோஷத்தால் கண்கள் சிறந்து விளங்கப் பனிக்கட்டியையொத்த வெண்மையான பற்கள் வரிசைச் சிறிதே வெளித் தெரியும்படி நகைசெய்து, "இத்தனை நாழியாயிற்றா என்னை ஸ்த்ரீயென்று கண்டுபிடிக்க? இப்போதாவது நிச்சயப்பட்டதா நான் மனுஷ்ய ஜன்மந்தானென்று? என் கைகளும் உன்னுடையன போல் ரக்தம் சதை இவைகளாலாக்கப் பட்டவைதானா?" எனக்கேட்டாள் அம்மாது.

"அது மாத்ரமா? உஷ்ணரக்த ஓட்டத்தால் உனது கை நாடிகள் படபடவென்று அடித்துக்கொள்வது எனக்கு நன்றாய்த் தெரிகிறது" "படுத்த படுக்கையாயிருந்தும் நல்ல யௌவன யுத்தவீரனாகிய நீ என்னை ஸ்த்ரீ யென்று கண்டுபிடித்தது நிரம்ப ஆச்சரியம்தான்."

"உன் முகம் அயல்நாட்டு முகமாயிருந்தாலும் அதில் அன்பு குடிகொண்டிருக்கின்றதென்பதையும் நான் உணர்ந்தேன்."

"நாமோ முன்பின் பரிசயமில்லாதவர்கள். என்னுடைய அயல் நாட்டைப்பற்றி, உனக்கென்ன தெரியும்?' என்னுடைய தயாளகுணத்தைப்பற்றி அவஸரப்பட்டு ஒன்றும் தீர்மானித்துவிடாதே. எல்லாம் போகப் போகத் தெரியும். உனக்கு எவ்வளவு யோக்யதையுண்டோ அவ்வளவுதான் உனக்குக் கிடைக்கும்."

"என் யோக்யதையளவு கிடைத்தால் போதும்; அதிகமாய் வேண்டாம். என் யோக்யதையை நீ ஏற்றக்குறைச்சலின்றி மதிப்பிடுவாய் என்பது நிச்சயம்."

"ஏது, நீ ஸாமாந்யனாகக் காணோம். பேச்சில் கைதேர்ந்தவனாயிருக்கின்றனையே? உன்னுடைய நயமொழிகளும், மாதுர்ய வசநங்களும் எந்த நாட்டுப் பெண்ணாயிருந்தாலும் ஸரி, அவளை மயக்கிவிடும். இந்நயமொழிகள் ஒன்றும் ப்ரயோஜனமில்லை. இன்னும சில தினங்களுக்குள் பயனற்ற இவ்வார்த்தைகளைவிட எவ்வளவோ கடினமான வேலைகள் நீ செய்ய வேண்டியிருக்கிறது."

"என்னால் உனக்கு ஆகவேண்டியதென்ன சொல்."

"சுத்தவீரன் எனப்படுபவனுக்கு அவச்யம் இருக்க வேண்டிய வீரதீரமும் எவ்வித ஆபத்துக்கும்பின்னடையாத துணிவும் அஞ்சாநெஞ்சமும்தான் உன்னிடமிருந்து நான் எதிர்பார்ப்பது."

"நீ கூறும் லக்ஷணங்கள் எவற்றிலும் நான் இளைத்தவனல்லன். தோற்றால் உனது ஆக்ஞைக்கு உட்படுகிறேன்.

வாய்ப்பேச்சு அதிகம் வேண்டாம். பேச்சு உன்னதமாயிருக்குமிடத்தில் கார்யம் சூந்யமாயிருக்கும். வீரமாய்ப் பேசிவிடுவதில் பலனில்லை; கார்யத்தில் நடத்திக் காண்பிக்க வேண்டும். ஆனால் உன்னைப்பற்றி நான் எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன்; கொஞ்ச காலமாக நேரிலும் உன் முகக்குறிகளைக் கவனித்துவருகிறேன். நான் கொண்ட அபிப்ராயம் ஒருபோதும் பொய்க்காது; நான் இத்தனை நாட்களாகத் தேடித்திரிந்த மனிதன் நீ தான் போலும்."

"ஹே கன்னிகாமணியே, மறைபொருளாய்ப் பேசாதே. எவ்வளவு ரஹஸ்யமாயிருந்தாலும் தாராளமாய் என்னிடம் சொல்லலாம். ஒருஎழுத்துக்கூட நான் வெளிவிடமாட்டேன். அதைப்பற்றிக் கிஞ்சித்தும் ஸம்சயம் வேண்டாம்."

சற்று மௌனமாயிருந்தாள். சிறிது நேரங் கழித்து முக்யார்த்தமான குரலில் கொசகொசவென்று மெள்ளமாய்ப் பேசத் தொடங்கினாள். "என்றென்றைக்கும் மித்ரனை மறக்காதவளும் சத்ருவை மன்னிக்காதவளுமாகிய தார்தாரி தேசத்துப் பெண் நான். என் ஸொந்த மனுஷ்யர்கள் எனக்கு இஸ்லாம் மதத்தைப்பற்றி யொன்றும் போதிக்க வில்லை; பல்வேறு மதங்கள் செழித்தோங்கும் இந்நாட்டிற்கு வந்தும் நான் இஸ்லாம் மதத்தைப்பற்றி ஒன்றும் கற்கவில்லை. ஆனால் மரணகாலத்தில் எனதருமைத் தாயார் எனக்கு மித்ரர்களுக்கென்று ஒரு மந்த்ரோபதேசமும் சத்ருக்களுக்கென்று ஒரு கட்டாரியும் அனுக்ரஹித்துச் சென்றாள்." நரேந்த்ரனும் அவள் பேசிய முக்யார்த்தத்வனியாகவே, "திக்கற்று நாதனற்றுப் படுகிடையாய்க் கிடந்தபோது அல்லும் பகலும் அக்கறையாய்க் கவனித்துத் தேவதாசிச்ருஷை செய்து என்னை நமன் கைகளினின்றும் மீட்டின புண்யவதியான உனக்கு நான்என்றைக்கும் கடமைப்பட்டவனானேன். என்னை உன் மித்ரனாகக் கொள். நான்எத்தருணம் அந்த ஸ்நேஹத்துக்கு த்ரோஹம் நினைக்கிறேனோ தடையின்றி அத்தருணமே நீ உன் கட்டாரியை என்மீது ப்ரயோஹிக்கலாம்" என்று வாக்குறுதி கூறினான்.

"சுத்தவீரனே, நீ கூறும் வார்த்தைகள் பொய்க்கும் என்று எண்ண எவ்வித ஹேதுவும் கிடையாது. உன் வதனத்தைக் கண்ணுறுவோர் யாவரும் உன்னை ஸத்ய ஹரிச்சந்த்ரன் என்று தடையின்றிக் கூறுவார்கள். நான் உன்னிடம் முழுநம்பிக்கை வைத்தேன், ஜாக்ரதை, மித்ரபேதம் என்பதைக் கனவிலும் நினைக்கவேண்டாம். என்னிலும் பல்லாயிரமடங்கு அந்தஸ்தில் சிறந்தவளும் மித்ர பரிபாலன சத்ரு நிக்ரஹ விஷயங்களில் ஸர்வாதிகாரமுடையவளுமாகிய ஓர் உயர்குல நாரீமணி உன்னை நம்பி அந்தரங்க ஏவல்கள் சில உனக்கிடப்போகிறாள்."

"அழகே அலங்காரமாகக்கொண்ட பெண்மணியே! நீ இன்னும் ஸங்கதிகளை விட்டுச் சொல்லாமலே இருக்கின்றனையே?"

"அன்னிய புருஷர்கள் அடியெடுத்து வைத்தறியாத ஒரு நவமணி மண்டபத்துட் செல்லும் பாக்யம் உனக்குக் கிடைக்கும். நாட்டிலெங்கும் இணையற்ற ரூபலாவண்யமுடைய ஒரு மாது உனக்குச் சில கட்டளைகளிடுவாள். அவ்விடத்தில் வீரஸிம்ஹங்களென்று பெயரெடுத்த ரணசூரர்களே நடுங்கிப் பின்வாங்கும்படியான ஆபத்துகளுக்கு நீ ஆளாகவேண்டும்.

விசேஷக் குறிப்புகள்

NEWS & NOTES

மைசூர் பொருளாதாரக் கான்பரன்ஸ்:—மைசூர் சமஸ்தானத்தில் பொருளாதார நிலைமை உயர வேண்டுமென்று முயற்சிகள் செய்வதற்காக ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அதன் கூட்டம் பிரதி வருஷமும் கூடிவருகின்றது. இச்சங்கத்தின் 6-ம் வருஷக் கூட்டம் சென்ற மாதம் 20வ மைசூரில் திவான் ஸர் எம். விச்வேச்வய்யாவின் தலைமையின்கீழ் கூடிற்று. அப்போது இச்சங்கத்தின் பல கமிட்டிகளால் ரிபோர்ட்டுகள் வாசிக்கப்பட்டன. பட்டுப்பூச்சி வளர்ப்பதும் புது ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டதும் சில இடங்களில் படிப்பைக் கட்டாய மாக்கி யிருப்பதும், பலவிடங்களில் புஸ்தகசாலைகள் ஸ்தாபித்திருப்பதும் வியவசாயம் வியாபாரம் இவைகளுக்காக ஸ்கூல் ஏற்படுத்தி யிருப்பதும் இச்சங்கம் ஏற்கெனவே செய்திருக்கும் காரியங்கள். திவான் அவர்கள் செய்த பிரசங்கத்தில் மைசூர் சமஸ்தானம், விவசாயம், தொழில் இவைகளில் போதுமானபடி விருத்தியடையவில்லை யென்றும், மேற்படி துறைகளில் வேண்டிய விருத்தி செய்வதற்கே இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும் இதன் அபிவிருத்தியில் மகாராஜாவும் மிகுந்த அக்கரை பாராட்டுவதாகவும் சொன்னார்.

காலேஜ் ஆப் ஆடிட்டிங்:—இப்பெயர்கொண்ட காலேஜ் ஒன்று சென்னையில் கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்படும். இன்ஷியூரன்ஸ் சங்கங்கள், பாங்கிகள் இவைகளின் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டியதற்காக, இந்தியச் சிறுவர்களைப் பழக்குவதே இக்காலேஜின் நோக்கமாகும்

***

இந்தியன் நாஷனல் காங்கிரஸ்.—இவ்வருஷத்திய காங்கிரஸ், பம்பாயில் கூடும். ராஜப்ரதிநிதி நிர்வாக ஸபையில் மெம்பராயிருந்த ஸர் S. P. ஸின்ஹா அக்கிராஸனம் வகிப்பாரெனத்தெரிகிறது.

***

மதுரைகாலேஜ் ப்ரின்ஸிபால்—காலஞ் சென்ற மிஸ்டர் ஏ. ராஜாராமய்யருக்குப் பதிலாக, அக்காலேஜிலேயே ஸுமார் முப்பது வருஷமாக உழைத்துவரும் மிஸ்டர் C. கணபதி அய்யரவர்களை, ப்ரின்ஸிபாலாக மேற்படி காலேஜ் நிர்வாக ஸபையார் நியமித்திருப்பது யாவருக்கும் திருப்தியைத் தரும்.

***

லார்ட் ஹார்டிஞ்.—நமது காருண்ய ராஜப்ரதிநிதியின் ஆட்சிகாலம், இந்திய ஜனங்களின் ஏகோபித்துச் செய்த வேண்டுகோளை முன்னிட்டு, அடுத்த வருஷம் மார்ச்மாதம் வரை நீடிக்கப்பட்டிருப்பது ஒருவாறு திருப்தியையுண்டாக்கின போதிலும், இவ்வுத்தம புருஷனே, இப்பொழுது நடக்கும் கோரயுத்தம் முடிவாகிற வரையில், நமது ராஜப்ரதிநிதியாயிருந்து வரவேண்டுமென்ற நம்முடைய கோரிக்கை நிறைவேறாமலிராது என நம்புகிறோம்.

***

புதிய ஹைகோர்ட் ஜட்ஜ்.—ஸர். ஸி, சங்கரன் நாயர் அவர்கள் இராஜப் பிரதிநிதியின் நிர்வாக ஸபையில் கல்வி மெம்பராக நியமிக்கயப்பட்டிருப்பதை முன் சஞ்சிகையில் தெரிவித்திருக்கிறோம். அவர் தமது புதியஸ்தானத்தை அடுத்த அக்டோபர் மாதத்தில் வகித்துக்கொள்வார். மிஸ்டர் நாயருக்குப் பதிலாக மயிலாப்பூரில் பிரபலவக்கீல்களுள் ஒருவரான மிஸ்டர் கே. சீனிவாஸய்யங்கார் நியமிக்கபபட்டிருப்பதை நம் நேயர்கள் அறிவார்கள். மிஸ்டர் ஐயங்காரவர்கள் தமது ஜட்ஜ் ஸ்தானத்தை நாளது மாதம் 12ந்தேதி திங்கட்கிழமை வகித்துக்கொண்டு வேலை பார்ப்பார்.

***

இரண்டு துக்க ஸம்பவங்கள்.—'போதினி' யின் அபிவிருத்தியில் அக்கறைகொண்ட இரு நண்பர்கள் சென்ற மாதத்தில் அகால மரணத்தை யடைந்துவிட்டனர். ஒருவர் மிஸ்டர் T. R. சுப்ரமணிய சாஸ்திரியார், பீ. ஏ. மற்றொருவர் மிஸ்டர் K. S. வீராஸாமி அய்யர், பீ. ஏ., எல். டி. இவ்விருவரும் பால்யர்கள் தான். இவர்கள் பிரிவினால் நாம் மிகவும் வருந்துகிறோம். இவர்கள் குடும்பங்களிடம் நமது அனுதாபத்தை இப்பத்திரிகை வாயிலாக வெளியிடுகிறோம்.

இன்றிரவு இதற்குமேல் ஒன்றுஞ் சொல்ல முடியாது. இன்னும் ஒரு வாரம் பொறு. அதற்குள் உன் மனதையும், சரீரத்தையும் திடப்படுத்திக்கொள். அருணோதயமாகிறது: நான் செல்லுதல் வேண்டும்—"

படபடவென்று அதிவேகமாய் மார்பு அடித்துக்கொள்ள நரேந்த்ரன், "நீ இன்னாள் என்பதை எனக்குத் தெரிவித்து விட்டுத்தான் போகவேண்டும்; அதற்குமுன் உன்னை விடமாட்டேன். உன் அந்தரங்க ஸமாசாரத்தை இன்னும் விவரமாய் நான் அறியவேண்டும்" என்று அவளுடைய மெல்லிய கரங்களைப்பற்றி இழுத்தான்.

நாகரத்னம்போல் நேத்ரங்கள் ஜ்வலிக்க அப்பெண்மணி ஓர் எளனப் புன்னகை செய்து "உன்னை நம்பக்கூடாது. நீ லேசான பேர்வழியல்ல. காதற்றொழில் என்பது உனக்குப் புதிதன்று. இன்னொரு நாள் ரஹஸ்யத்தைப் பூர்த்தியாய்த் தெரிவிக்கிறேன். என் நாமதேயம் ஜெலீகா." அவள் நிஷ்க்ரமித்தாள்.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸஹு ஆடிமீ : 1915-ஹு ஆகஸ்ட்மீ } பகுதி 2

வேதாந்தத் திரட்டு

VEDANTIC SELECTIONS

53. வேண்டுகோள்

அந்தணர் நால்வர்காண வருட்குரு வாகிவந்த
எந்தையே யெல்லாந்தானென் றியம்பினை னெனைப் படைத்த
தந்தைநீ யெம்மைக்காக்குந் தலைவனே நுந்தயன்றோ
பந்தமில் சித்தமுத்தி படைக்கிநின் னருள்பாலிப்பாய்.

(தேன்முகம்—10)

54. கையறு நிலை

வாழ்வனைத்து மயக்கமெனத் தேர்ந்தேன்றேர்ந்த
வாறேநா னப்பாலோர் வழிபாராமற்
றாழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்னமாயந்
தடையுற்றேன் மேற்கதியுந் தடையதாமே
ஊழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத்தோவிங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தாயின்
பாழவதிப் படவெனக்கு முடியாதெல்லாம் (னம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசினனே.

(பன்மாலை—4)

55. தன் நிலை விளக்கம்

நானெனிங் கெனுமகந்தை யெனக்கேன்வைத்தாய்
நல்வினை தீவினையெனவே நடுவேநாட்டி
ஊனுருமுடற் சுமையென் மீதேன்வைத்தா (ய்
யுயிரெனவு மென்னையொன்று வுள்ளேன்வைத்தா
ஆனமை யாயகில நிகிலபேத
மனைத்தினுள்ளுந் தானாகி யறிவானந்தத்
தேனாகிப் பாலாகிக் கனியாய்க்கன்னற்
செழும்பாகாய்க்கற்கண்டாய்த்திகழ்ந்தவொன்றே.

(பன்மாலை—5)

56. மூர்த்திபேத ஒற்றுமை

ஒன்றாத மூவுருவா யருவாய்ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே மாயையெனுந் திரையைநீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைப்போர்நெஞ்சம்
மன்றாக வின்பக்கூத் தாடவல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தேநால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோனஞான
மமைத்தசின்முத் திரைக்கடலே யமரரேறே.

(பன்மாலை—8)

57. முக்திநிலை ஈடுபாடு

திரையில்லாக் கடல்போலச் சலனந்தீர்ந்து
தெளிந்திருக்கும்பொன்போலச் செகத்தையெல்லா
கரையவே கனிந்துருக்கு முகத்திலேநீ (ங்
கனிந்தபர மானந்தக் கட்டியிந்நாள்
வரையிலே வரக்காணே னென்னாற்கட்டி
வார்த்தை சொன்னாற் சுகம்வருமோ வஞ்சனேனை
இரையிலே யிருத்திநிரு விகற்பமான
வின்பநிட்டை கொடுப்பதையா வெந்தநாளோ.

(பன்மாலை—9)

58. அனுபவ நிலைகள்: ஸாதனம்

நினைவொன்று நினையாம னிற்கினக மென்பார்
நிற்குமிட மேயருளா நிட்டையரு ளொட்டுந்
தனையென்று மறந்திருப்ப வருள்வடிவா னதுமேற்
றட்டியெழுந் திருக்குமின்பந் தன்மயமே யதுவாம்
பினையொன்று மிலையந்த வின்பமெனு நிலயம்
பெற்றாரே பிறவாமை பெற்றார்மற் றுந்தான்
மலையென்று மகவென்றுஞ் சுற்றமென்று மசுத்த
வாதனையா மாசையொழி மன்னொருசொற் கொண்டே.

(நினைவொன்று—1)

ராக்ஷஸஹு ஆவணிமீ CALENDAR—பஞ்சாங்கம்

யோ	து	இங்	தமிழ்	வார	ராக்ஷஸஹு ஆவணி மீ { சாலிசகம் 1837 கலியப்தம் 5016 } { பசலி 1325 கொல்லம்-1090 } { 1915ஹு ஆகஸ்டுமீ செப்டம்பர்மீ
சு	5	17	1	செ	சப் 35-19, சுவா 15-14, சுப் 13-31, கர 8-2, திவி 20-20, அக 31-0, பிராகஸ்தசுக் 23-38, சூன்யதிதி சப் விரு சீத லாசப்தமி விஷ்ணுபதி ஸமார்கம். [3 சுக் 55-42, சூன்யதிதி கரிநாள்.
செபு	6	18	2	புத	அஷ்.29-25, விசா 11-24, பிரா 6-10, மா 52-24, பவ 29-25, திவி 20-43, திரு 1 செ 28-0, மக 4-புத 0-41, ஆயி
சு] பு	7	19	3	வியா	நவ 23-20, அனு 7-20, வை 50-55, கௌ 23-20, திவி 20-22, பூர 1 புத 52-0, சிம் சு நவமி தசமி திதித்வயம் வைசி.
ர	8	20	4	வெ	தச 17-17, கே 3-13, மூலா 56-1, விஷ் 43-23, கர 17-17, திவி 21-53, ரா 24-20, மக 2 ரவி 16-25, ஏகாதிதி வரலக்ஷ்மி விருதம். [திரு 4 ராகு ஆயி 2 கேது 56-46, சர்வ ஏகா.
புசுரா	9	21	5	சனி	ஏகா 11-28, பூரா 55-43, பிரி 36-11, பத் 11-28, திவி 19-54, அக 30-54, பூர 2 புத 44-25, ஆயி 4 சுக் 48-16,
ச	10	22	6	ஞா	துவா 6-5, உத்தி 52-44, ஆயு 29-22, பா 6-5, திவி 14-43, திரு 4 சனி 48-30, பிரதோ மழை 9-க்குள்.
ரசெ பு]	11	23	7	திங்	திர 1-15, சது 55-53, திரு 49-0, ஸௌ 23-3, தை 1-15, திவி 2-7, ரா 28-7, மக 3 ரவி 44-40, திரு 2 செ 51-9, பூர 3 புத 40-0, ரிக்வேதி சிராவணம் சிர உப. [சிராவண ரக்ஷ ப போ பூ சர்ப பெ.
சு	12	24	8	செ	◯பௌ 54-3, அவி 49-7, சோ 17-25, பத் 25-35, சே 2-7, ஸிம்ம சுக் 26-10, யஜுர்வேதி துதீய சிராவணம்
பு	13	25	9	புத	பிர 52-5, சத 48-51, அதி 12-35, பா 23-4, திவி 7-2, அக 30-50, சிரா பகு கன்யா 43-35, பூர 4 புத 36-15, இஷ்டி
	14	26	10	வியா	துதி 51-20, பூரட் 49-47, சுக 8-39, தை 21-42, திவி 5-6. [காயத்ரீஜபம் கரிநாள்.
ரபுசு	15	27	11	வெ	திரு 51-49, உத்தி 51-56, திருதி 5-43, வணி 21-34, திவி 14-39, மக 4 ரவி 12-22, உத் 1 புத 33-0, மக 2 சுக்
செ	16	28	12	சனி	சது 53-38, ரே 55-22, சூல 3-47, பவ 22-43, திவி 23-39, திரு 3 செ 20-6, சங் சது.[1-42, ஆவணியுச்சய் 12-22,
குசு	17	29	13	ஞா	பஞ் 56-33, அசு 59-53, கண் 2-52, கௌ 25-5, ரா 18-23, அக 30-45, பூரட் 4 வக்குரு 41-0, மக 3 சுக் 58-15. (39-39.
ரபு	18	30	14	திங்	சஷ் 60-0, பர 60-0, விர் 2-49, கர 28-16, திவி 26-6, பூர 1 ரவி 39-39, பச்சாதுதயபு 10-38, கன்னிபு 28-0, உச்சநிவர்தி
பு	19	31	15	செ	சஷ் 0-31, பர 5-26, துரு 3-30, வணி 0-31, ரா 7-51, உத் 3 புத 36-8, கார் உப மழை 7-க்குள்.
சு	20	1	16	புத	சப் 5-12, ✻கார் 11-37, வியா 4-46, பவ 5-12, ரா 25-12, மக 4 சுக் 33-26, ஜன்மாஷ்டமி காளாஷ்டமி சூரிய சா ம தசா ப விரு.
பு	21	2	17	வியா	அஷ் 10-10, ரோ 18-0, ஹர் 6-13, கௌ 10-10, ரா 2-49, அக 30-40, உத் 4 புத 45 0, ஸ்ரீஜயந்தி.
ரசெ	22	3	18	வெ	நவ 15-3, மிரு 24-15, வஜ் 7-36, கர 15-3, ரா 15-40, பூர 2 ரவி 1-39, திரு 4 செ 55-1, அஸ் 1 புத
	23	4	19	சனி	தச19-30, திரு30-4, வித் 8-43, பத் 19-30, தியா0-0, பூர1சுக் 18-19, ஏகாதி விய சி.[56-10, தச.
சு	24	5	20	ஞா	ஏகா 23-13, புன 35-8, விய 9-17, பா 23-13, திவி 2-36, ரா 25-53, அதிதி சர்வ ஏகா.
ரசு	25	6	21	திங்	துவா 25-53, பூச 39-8, வரி 9-7, தை 25-53, தியா 0-0, அக 30-35, பூர 3 ரவி 32-58, பூர 2 சுக் 48-20, துவாதிதி பிரதோ.
பு	26	7	22	செ	திர 27-21, ஆயி 41-59, பரி 8-44, வணி 27-21, திவி 12-39, அஸ் 2 புத 9-24, மாசி.
	27	8	23	புத	சது 27-33, மக 43-32. சிவ 5-58, சகு 27-33, திவி 12,45, போதாயனம் மழை 5-க்குள்.
ரசெ புசு]	28	9	24	வியா	● அமா 26-27, பூர 43-50, சித் 2-52, சா 56-1, நா 26-27, திவி 3-38, பூர 4 ரவி 59-30, புன 1 செ 39-0, அஸ் 3 புத 35-7, பூர 3 சுக் 35-16, அமாதிதி சர்வ அமா குசுல பீடோரா ரிஷப பூ போ இஷ்டி.
	29	10	25	வெ	பிர 24-13, உத்தி 43-4, சுப 53-54, பவ 24-13, திவி 1-36, அக 30-30, பாத் சுத் பிரதமாதிதி இஷ்டி சந்தரி.
	1	11	26	சனி	துதி 20-56, அஸ் 41-15, சுப் 48-3, கௌ 20-56, திவி 3-26, திதித்வயம் சாமக சிராவணம் பலராம ஜ.
புசு	2	12	27	ஞா	திரு 16-45, சித் 38-38, பிரா 41-37, கர 16-45, திவி 0-23, ரா 21-23, அஸ் 4 புத 0-55, பூர 4 சுக் 25-16, சதுர்திதி ஹரிதாளி விநாயக சதுர்த்தி தாமஸ ம. [25-5, ரிஷிபஞ்சமி கரிநாள்.
ர	3	13	28	திங்	சது 11-51, சுவா 35-18, மா 34-37, பத் 11-51, ரா 17-58, உத் 1 ரவி [சிம் சு சப்தமிதிதி அமுக்தா சப்
	4	14	29	செ	பஞ் 6-21, விசா 31-33, வை 27-16, பா 6-21, ரா 10-27, அக 30-25, சஷ் உப வை சிரா மழை 11-க்குள். [தமி.
செபு	5	15	30	புத	சஷ் 0-28, சப் 54-0, அனு 27-30, விஷ் 19-40, தை 0-28, ரா 10-9, புன 2 செ 21-2, சித் 1 புத 2-20, உத் 1 சுக் 3-10,
சு] ர	6	16	31	வியா	அஷ் 48-31, கேட் 23-29, பிரி 12-5, பத் 21-34, ரா 11-46, கன்யாரவி 50-22, அஷ்டமிதிதி, ஜ்யேஷ் தூர் அஷ்டமி.

குரு			செ சனி
	8 சிம் சுக் 13 கன்-பு		கே சுக்
ராகு			ர புத

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸஹு : ஆடிமீ [பகுதி. 2

மோக்ஷ ஸோபானம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

1. கர்மா

கர்மா என்ற சொல்லுக்குத் தொழில் அல்லது செய்கை என்பது பொருள். போதுவாக உயிருடையவைகளெல்லாம் எல்லாக்காலங்களிலும் ஓயாது உடல், உரை, உள்ளம் இவைகள் அசைவால், செய்துகொண்டிருக்கும் தொழில்களை எல்லாம் இச்சொல் அடக்கியுள்ளது. இந்தப் பொதுப்பொருளில்தான் இச்சொல் பின் காட்டப்படும் கீதை ச்லோகத்தில் அமைந்துள்ளது:—

கர்மத்தை விட்டிருத்தல் இல்லைக் கணமேனும்
இம்மண்டலத்தெவனும் எந்நாளும்—மும்மைக்
குணவயத்த ஞெயெவனும் கூர்ந்துவினைசெய்யத்
தணவறவே தள்ளுண்பான் தான் (III—5)

இதுவுமன்றி கர்மா என்னும் சொல் வேறு இருவிதமாகவும் நமது சாஸ்திரங்களில் வழங்கிவருகின்றது. அவைகள் பின் வருவன. முன் எடுத்துக்காட்டப்பட்ட கர்மா செய்தே தீர்க்கவேண்டிய மானிடாது தன்மையை ஒழுங்குபடுத்தி கர்மபந்தத்திலிருந்து அவர்களை விடுவிக்க ஈசாஞ்ஞையாக வேதாதி சாஸ்திரங்களில் ஏற்பட்டுள்ள சிறப்பான செயல்கள் என்பதுதான் கர்மா என்ற பதத்தின் இரண்டாவது பொருள். இப்பொருளில் இச்சொல் பின்வரும் கீதா ச்லோகத்தில் காணப்படுகிறது:—

விடக்கூடா கர்மங்காண் வேள்விதவம் தானம்
அடுத்தவற்றை ஆக்கலடன் ஆமே—திடப்படுமத்
தானம் தவம்வேள்வி சாற்றும் விவேகிகளுக்
கூனமறுத் துள்விளக்கும் ஓர் (XVIII—5)

நிஷ்காமயகர்மம், கர்மயோகம், கர்மம்(ஈமக்கடன்) என்ற தொடர்களில் கர்மா என்பதற்கு இந்தச் சிறப்புப்பொருள்தான்.

இப்படி எல்லாம் ஏற்படும் தொழில்களின் குறிகளாயும், மேல் பயன்பட்டு செய்தவனை ஸுக துக்கங்களுக்கு ஆளாக்கக்கூடியதாயும் உள்ள மனப்பதிவுகளான கர்மபலன் என்ற மூன்றுவதாகிய வழக்கப்பொருளும் கர்மா என்ற சொல்லுக்கு உண்டு. இப்பொருள்தான் பின்வரும் கீதா ச்லோகத்தில் கர்மா என்ற சொல்லுக்கு:—

மண்டியெரி இன்றதழல் வாய்த்திடுமோர் வல்விறகை
உண்டுனைத்தும் நீறுக்கும் உண்மைபோல்-கொண்டு
கர்மங்கள் முற்றுமற ஞானக் கனலெரித்து [புரி
வன்மையற மாய்த்திடுமே மற்று (IV-37)

ஸாதாரணமாக தலைவிதி என்ற பொருளில் கூறப்படும் "என் கர்மா இது! நான் என்ன செய்வது?" அல்லது 'கர்மவியாதி இது' என்ற தொடர்களில் இந்தப் பொருள்தான். கர்மப்பதிவுகளின் உண்மையை உணராததால் எல்லாம் விதிதான் என்ற கொடிய பொருள் கர்மகதி விஷயத்தில் பொருத்தப்பட்டு வருவது இந்த வழக்கப்பொருளால்தான். இதனால் கர்மகதி விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை மேலே நீக்கப்புகுவோம். இங்கு கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. இவ்வாறு கர்மா என்ற சொல் மூன்று பொருளில் சாஸ்திரத்தில் வழங்கிவரும் என்ற நுட்பம் உணராது

இக்காலத்தவர் எல்லா இடங்களிலும் பொதுப் பொருளைக்கொண்டு சாஸ்திர நோக்கம் உணராது குதர்க்கம் செய்யத்தொடங்கி நம்மையும் நமது வைதிக தர்மத்தையும் வேத ஆதாரவைக்கொண்டே கெடுக்க முயல்கின்றனர். இப்பொருள்களையும் இவைகளின் ஸந்தர்ப்பப் பொருத்தங்களையும் ஆய்ந்து ஓய்ந்து, இக்காலத்தவர் தர்க்க மயக்கத்தில் சிக்காது நாம் ஈடேற முயலவேண்டும். இதுபற்றி இம்முப் பொருள்களையும் இங்கு எடுத்தாராய்ந்து கர்ம விசித்ரத்தைக்கண்டு தெளிய முயல்வோம்.

(1) பொதுப்பொருள்: திரிகரணத்தொழில்.— கர்மா செய்வதற்கு 'நான் செய்கிறேன்' என்ற தம்முணர்வுடைய மானிடர்கள்தாம் தகுந்தவர். மற்றைய உயிர்ப்பிராணிகளுக்கு இவ்வித உணர்வில்லாததால் அவர்கள் செயல்கள் எல்லாம் கர்மகதிக்குரிய கர்மாக்களாகா. இப்படி மானிடர் செய்தே தீரவேண்டியதாகிய கர்மாக்களில் சாஸ்திரங்களில் காட்டப்படும் பொதுச் சிறப்பு இயற்கையால் அவை புண்யம், பாபம், மிச்ரம் என்ற மூன்று வகைப்படும். இவைகளையே தன்வினை, பிறவினை, ஒப்புக்கொள்வது என்ற தன்மைப்பற்றி நோக்குமிடத்து, அத்யுத்கடம், பலம், ஸாமாந்யம் எனக் கர்மா மூன்றுவிதமாகப் பிரிந்து நிற்கும்: இப்பாகுபாடு, கர்மாக்கள் நிகழும் கால அளவையையும், அவைகளின் பாப புண்ய வேகத்தையும் பொருத்தது. கொலை செய்பவனுக்கு அத்யுத்கடபாபம், அதற்கு உதவுபவனுக்கு பலமான பாபம், அது தகும் என்று ஒப்புக்கொள்பவனுக்கு ஸாமாந்யபாபம்: இப்படியே ஈசன் வழிபாடும், அதற்கு சிச்ருஷை செய்வதும், கண்டு களிப்பதும், புண்யவிஷயப் பாகுபாட்டைக் காட்டும். வேறுவகையில் மனதின் நிலையை நோக்குமிடத்து ஆவல், பிடிவாதம், குழப்பம் இவைகளால் நிகழுவதால் கர்மாக்கள் மூன்றுவிதமாகும். புண்யங்களில் ஈடுபட்டு கடவுள் வழிபாடாகச் செய்வது. ஆவலால்: பிறர் புகழ்வதற்காகப் புண்யம் செய்வது பிடிவாதத்தால்: கொடிய வட்டி வாங்கிப் பாபம் தீரப் புண்யம் செய்வது குழப்பத்தால்: இப்படியே பாப விஷயங்களிலும்.

இப்படி நான்குவிதமாகக் கர்மாவும் மூவ்வகைப்பட்டிருப்பதால் எல்லாம் சேர்த்துப் பார்க்குங்கால் கர்மாக்கள் 81 வகையாகப் பிரிந்து நிற்கும் பொதுவாக. இப்படிப் பல வகைப்பட்டிருக்கும் கர்மாக்களை சாஸ்திரங்களில் காட்டப்படும் இயற்கைகளாலும், நடைபெறும் கால அளவைகளாலும் உற்று நோக்குமிடத்தில் முக்யம் என்றும் அவாந்தரம் என்றும் இரண்டு பெரும் பிரிவாகக் காணப்படும். பல அவாந்தர கர்மாக்கள் ஒரே முக்ய கர்மாவுடன் பொருந்தி நிற்கலாம். பல பாபபுண்ய அவாந்தர கர்மாக்கள் ஒரே புண்ய கர்மாவுடன் ஸம்பந்தப்பட்டிருக்கலாம்: உதாரணமாகபொது நன்மைக்கு உழைப்பதாகிய குளம் வெட்டுதல் முக்ய புண்யகர்மா, அதனுடன் பெரும் பொருள் சிறு முயற்சியால் அடைவது, பொய் சொல்வது, ப்ராணிஹிம்ஸை, முகஸ்துதி, தகாத ஸௌகரிய ஸுகங்களை ஏற்பது, முதலிய அவாந்தர பாபகர்மாக்களும்; பக்தி, பூததயை, கைம்மாறு கருதா உழைப்பு, தந்நயம் கருதாமை விஷய நீக்கம், அன்னதானம், தருணத்தில் உதவுதல் முதலிய அவாந்தர புண்ய கர்மாக்களும் பொருந்தி நிற்கலாம். இப்படியே விரோதியைக் கொல்வது முக்ய பாப கர்மா: இதனுடன், கடவுள் வழிபாடு, தான தர்மம், பணத்தாசை நீக்கம் முதலிய அவாந்தர புண்ய கர்மாக்களும்; விரோதிகள் தோழரை வருத்துவது, கொடியவர் இணக்கம் முதலிய அவாந்தர பாபகர்மாக்களும் ஸம்பந்தப்படலாம். பலமானதும், ஸாமாந்யமானதுமான கர்மாக்கள் முக்யம், அவாந்தரமாக இருவைப்பட்டிருக்கலாம்; ஆனால் அத்யுத்கட கர்மா எப்பொழுதும் முக்ய கர்மாவாகத்தானிருக்கும். இந்தக் கர்ம விசித்ரம் தான் உலக மாறுபாடுகள் எல்லாவற்றிற்கும் ஆதாரமான கர்மகதிக்கு ஆணிவேர்.

(2) சிறப்புப் பொருள்: சாஸ்திரீயச் செயல்.— இது வேதசாஸ்திரங்களால் வர்ணாச்ரம ஸ்திரீ புருஷ தர்மங்கள் ரூபமாக, முன் காட்டப்பட்ட பலவகைக் கர்மாக்களை செய்து தீர்த்து கர்மகதியில் பட்டுச் சுழன்று திண்டாடும் கொடுமையை நம்மைவிட்டு நீக்கிவிட, ஈசனால் ஏற்படுத்தப்பட்ட உத்தரவுகளே. முக்தி நிலை கைகூடும் வரையில் இந்த கர்மாக்கள், மனதை சுத்தமாயும் உண்மைகளை ஆவலுடன் ஏற்றுத் தெளியக் கூடியதாயும் உள்ள நடுநிலையில் நிறுத்தி வைத்து, முத்தி வந்ததும் சுத்த மனமுடைய முக்தனிடம் இவைகள், புஷ்பத்தின் மணம் போல், இயற்கையாகவே அமைந்து, அவன் தேகம் நழுவும் வரையிலிருக்கும். ஆகவே வேதசாஸ்திர கர்மாக்கள் எல்லாம் முக்தனது முக்திக்கு தடையாகவிராது அவன் இயற்கையாக நடத்திவரும் கர்மாக்கள். அவைகளை நாம் மனப்பூர்வமாகப் பாடுபட்டுப் பின்பற்றினால் நாமும் எளிதில் முத்தியை அணுகலாம் என்பதுதான் இக்கர்மங்களை ஈசன் பொதுவாக வேதத்தில் தகுந்தவர்களுக்கு விதித்ததன் நோக்கமென்பது நம் சாஸ்திர நுட்பம்.

முக்த புருஷனும் இக்கர்மாக்கள் வழியல்லது வேறு வழியால் உலகத்தவரை தன்னிலைக்குக் கொண்டுவரவே முடியாது. இதுபற்றித்தான் சாஸ்திரங்களில் ஈசன் கைக்கருவி போல முக்தர் உலக உபகாரத்திற்காக உழைப்பாரென்றும் 'தன்னுயிர்போல மன்னுயிரையும் பார்ப்பர்' என்றும் கூறப்பட்டுள்ளன: தன் ஸுகமான ஆத்மானந்தமே எல்லோருக்கும் ஸுகமானது: அதுபோல விஷய ஈடுபாடு துக்கம்: இவைகளுள் பின்னதைவிட்டு ஒதுங்கி முன்னதை எல்லோரும் அணுக ஈசன் உத்தரவான கர்மாக்களைத் தவிர வேறு ஸம்பந்தம் தனக்கும் உலகத்தவருக்கும் இல்லை, தனது பொறியாதிகளும் ஈசன் உத்தரவுப்படி [illegible]கின்றன; இப்படி நடந்துவிடுவதுதான் மேலான உலக உபகாரம் என்ற மனோ நிலையின் ஸாரத்திலிருந்து கர்மானுஷ்டான பரனாக விருப்பதுதான் முக்தர் உலக வ்யவஹாரம். இது ஒழிந்த வேறு ஒரு உலகத்தொழிலும் அவர்களிடமிராது. ஆகவே முக்தர் கர்மாக்களில் முனைந்து கொண்டிருப்பினும் ப்ரஹ்மத்திலேயே இருப்பர் என்பது முக்யமாக இப்பொருளில்தான். வேறு பொதுப்பொருளைக் கொள்ள வேதம் இடங்கொடாது. பட்டிணத்தார் கூறிய,

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே

என்பதில், தொழில் அவஸ்தை என்பதற்கு காயிக வாசிக வைதிக கர்மாக்களையும், மானஸீக வைதிக கர்மாக்களையும்தான் கொள்ள வேண்டும், ஊண் உலாவுதல், உறக்கம் இவைகளைக்கூட சாஸ்திரத்தில் வரையறுத்து விட்டிருக்கிறபடியால். இப்படியே கீதையிலும்:—

ஆசையறுத் துள்ளத்தொ டாருடலைத் தானடக்கிப்
பேசுடைமை யாவுமறப் பின்விடுத்து—மாசில்வினை
தேகநிலை மாத்திரமாச் செய்திருப்போன் தீவினையை
சோகமுறத் துன்னான் துணி. (IV—21) (ச்

கேவலம் சரீரமாத்திர கர்மாவைச் செய்வன் என்னுமிடத்தும், மானிட உடல் எடுத்ததால் செய்யவேண்டிய வைதிக கர்மாக்களைவிடாது செய்வன் என்பதுதான் பொருள். இந்த நுட்பமுணராதவர் பலர், மிருகங்கள்போல முக்தர் தின்று தூங்கித்திரிவர் என்று வீண்குதர்க்கப் பொருள்கொள்வர் இங்கு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த வைதிககர்மாக்கள் பொதுவாக நான்குவகைப்பட்டுக் காணப்படும். (i)விஹிதம்:-சாஸ்திரங்களில்செய்என்று குறித்தவைகளே. இவைகளைச் செய்வதால் புண்ணியமும், செய்யாமலிருப்பதால் —— உத்தரவை மீறிய ——மும் வரும். இவைகள் வே——களில் குறிக்கப்பட்டு ஸ்மிருதி புராணங்களில் விஸ்தரித்து விளக்கப்பட்டுள்ளன. யாகங்கள், யஞ்ஞங்கள், ஜபங்கள் எல்லாம் இவைகளுள் அடக்கம். இவை மூன்று வகைப்பட்டுள்ளன. அவை பின்வருவன (1) நித்தியகர்மா: கால ஒழுங்குப்படி விடாது எப்பொழுதும் செய்து தீர்க்கவேண்டியவை. தினம் ஸாமான் துசிதட்டுவது போல, இவை மனதில் உலக வாழ்க்கையில் விஷயஇச்சை புதிதாக ஏற்பட்டு கஷ்டத்தை வளரவொட்டாது தடுத்துக்கொண்டேவரும். இவைகளைவிட்டால் பாபம் உண்டு. செய்தால் கடமையைச் செய்ததுதானாகும். உபநயநம்,சோமயாகம், ஸந்தியாவந்தனம், ஸ்திரீகளுக்கு விவாஹம், போல்வன. (2)நைமித்திக கர்மா:விசேஷகாலங்களில் தகுந்த காரணங்களை ஒட்டி நடத்தித் தீரவேண்டியவை; தர்ப்பணம், ச்ராத்தம்,ப்ராயச்சித்தம் போல்வன. இது பிறர் பொருட்டும் தன்பொருட்டும் செய்யவேண்டியதால், விட்டால் பாபம். (3) காம்யகர்மா: யாகங்கள்,புருஷர்களுக்குவிவாஹம்முதலியவைபோல்வன. இகபரம் இரண்டினிலும் விஷயானுபவ ஸுகம் ஏற்படும் இதனால். இவைகளைவிட்டால் பாபமும் இல்லை: ஆசையுடன் செய்யுங்கால் பராமுகமாக விருந்தால் கெடுதி நேரிடலாம். பலத்தில் இச்சைவிட்டு, ஈசன் உத்தரவுப்படி நடப்பது மிருந்த பொருளைச் செலவிட, அவரது ஆராதனம் இவை என்ற திடஉணர்வுடன் இவைகளையே செய்தால், பலமான நித்தியகர்ம பலனும் மோக்ஷ ஆசையை உண்டாக்கிவிடும். இவைகளை, காம்யமாகச் செய்தாலும் அடிக்கடி ஸ்வர்க்கத்திற்குக் கொண்டுசேர்த்து உலகிற்குக் கொண்டுவந்து நாளடைவில் இவைகளையே பலனைக் கருதாது செய்யும் திறனை அப்யாஸிக்கு உண்டாக்கிவிடும். ஆகவே விஹித கர்மாக்களால், மந்திர சப்தம், பாவனை, ஆராய்ச்சி, தேஹத்தொழில் இவைகள் வழியாக அப்யாஸியின் கர்மபந்தம் கழலத் தொடங்கும்.

(ii) நிஷித்த கர்மா:—சாஸ்திரங்களால் கூடாது என்று மறுக்கப்பட்டவைகள். இவைகளைச் செய்தால் பாபம், விட்டு நீக்கினால் கடமைப்படி நடந்த மனோபலம் ஏற்படும்: குடி, பிறன்பொருள் கவர்தல், துஸ்ஸங்கம் முதலியவைகள் போல்வன (iii) அவிஹிதா நிஷேத்தகர்மா:—சாஸ்திரங்களில் தடுக்கப்பட்டும் விதிக்கப்பட்டுமுள்ள பலகர்மாக்கள் இதனுள்தான் அடங்கும்: தன் விஷயங்களை வரம்புமீறி அனுபவிக்கலாகாது என்பது போன்றவை. இதை விஹிதம் நிஷித்தம் என்றுவது குழப்பிக்கொள்ளவேகூடாது. உதாரணம்:உண்ணும் சோற்றை நிந்திக்காதே, அரசர்கள் சூதாட அழைக்கப்படில்மாட்டேன் எனலாகாது என்பவைகளே.இதனால் இவைகளின்படி நடந்தால் புண்யம் அல்லது நடவாவிடில் பாபம் என்று எண்ணிவிடக்கூடாது. இவைகளின்படி நடந்தால் ஸமீபத்தில் இவைகளின் பயனான நன்மைகள் கைவந்து தோன்றும்; நடவாவிடில் தீமைகளும் வந்து சேர்ந்துவிடும் வெகு சீக்கிரமாக. இவைகளுக்கு காலாந்தரத்தில் பாபமாகவாவது புண்யமாகவாவது பலிக்கும் தன்மையே இல்லை. உதாரணத்தில் தேஹ ஸௌக்கியமும் ராஜ்ய அல்லது ஞானஜயமும் வரும்; எதிராக நடந்தால் அஜீரணாதி நோய்களும், அவமானமும் நேரிடலாம் இவ்வளவுதான். இவைகளில் ஸுகதுக்கானுபவம் முக்யம். ஆகவே இந்த சாஸ்திர நுட்பமான விஹித நிஷித்தங்கள், விதிநிஷேதம்போலக் காணப்படும்;

அவிஹிதா நிஷித்தங்கள் இவைகள் வேற்றுமை தகுந்த குருமூலமாக சாஸ்திரங்களில் கண்டறிந்து தெளியாவிடில் நமது வைதிக தர்ம நுட்பம் விளங்கவே மாட்டாது. இதனால் நமது மதத்தை மேனாட்டவர் எப்படி ஆராய்ந்தாலும், அவர்கள் ஆராய்ச்சியை நம்மவர் எவ்வளவு பின்பற்றிய போதிலும், வேத ரஹஸ்யம் ரஹஸ்யந்தான். இந்த அவிஹிதா நிஷித்த கர்மாவையே வேதத்தில் யதிர்ச்சை என்று பல காரணமாகக் கூறப்பட்டிருக்கிறது ச்வேதாச்வதர ச்ருதி I–2–ம் ச்லோகத்தில். இந்த நுட்பம் உணராதோர் யதிர்ச்சை என்பதை திடீரென்று அமைவது (Chance or accident) என்று பொருள்படுத்திக் குழம்புவர். இதைப் படிப்பவர் தெளிவைப் புகழவும் வேண்டுமோ!

(iv) உபேக்ஷித கர்மாக்களை சாஸ்திரத்தில் தனித்தனிக் குறித்து விதி விலக்குக்களால் காட்டப்பட்டிராது, வீண் மனப்பற்றையும் பரபரப்பையும் அனாவசியமான ஸுக விஷயங்களில் உண்டாக்கி, நம்மை பழக்கத்திற்கு அடிமைப்படுத்தும் கர்மாக்களைக் கைக்கொள்ளலாகாது என்று பொதுவாக இக்கர்மாக்களை சாஸ்திரங்கள் ஒதுக்கிவிட்டுள்ளன. இந்த வகுப்பைச் சேர்ந்த கர்மாக்கள்தான்: ஸோப் தேய்த்துக் கொள்வது, காபி குடிப்பது, சட்டை போட்டுப் பழகுவது, பொடிபோடுவது, உருளைக்கிழங்கு தின்பது, சீட்டாட்டம் இவை போன்ற தத்கால நாகரீக நடை, உடை, ஊண் முதலிய தொழிற்பாடுகளே. இவைகள் அவிஹிதா நிஷித்தம்போல விருப்பினும், அவைகளைப்போல வெளிப்படையும் தனித்தனியாயும் குறிக்கப்படாமையாலும், அவைகளைவிட சீக்கிரம் பலன்காட்டும் தன்மை உடையதாலும் அவைகளைவிட வேறானவைகளே. இவைகளில் பழக்க பலம் முக்யம்.

இதுவரையில் கூறப்பட்டுள்ள கர்மபேதங்களை உணர, சாஸ்திரம் தவிர வேறு வழியே இல்லை. மானிட புத்தி தனியாக இங்கு பயன்படாது. இதுபற்றியே பகவான் கீதையில்,

சாஸ்திரத்தில் சொற்றவிதி தன்னைத் துறந்தெவனே
சீர்த்தியில்தன் இச்சைவழிச் செல்கின்றான்-சாற்றும
சித்திபெறல் இல்லன் சுகம்பெறலும் இல்லன் (வன்
முத்திபெறல் தானுமிலன் முன். (சேர்

ஆதலினால் செய்தல் செயாதொழிதல் ஆமிவைக்குத்
தீதில்பிர மாணமது சாத்திரமே—போதவிழும்
தார்மார்ப சாத்திரத்தில் சாற்றுநெறி தேர்ந்திங்குச்
சீருடன்நீ செய்தல் கடன் (XVI 23,24)

என்று கூறியுள்ளார். இந்த ரஹஸ்யமுணராது கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் புகுந்த ஒரு மேதாவி,இவ்விரு ச்லோகங்களும் கீதை பொதுத்தன்மைக்கு விரோதமானவை: யாரோ ஒரு திருட்டு ப்ராஹ்மணன் எழுதி இதில் சேர்த்தவை என்று தீர்ப்புச்செய்து இதை மொழி பெயர்க்காமலே அடுத்த அத்யாயத்திற்குத் தாண்டிவிட்டார். இவர் புத்தியை என்னென்று வியந்து மகிழ்வதோ தெரியவில்லை!

(3)பழக்கப் பொருள்: தலைவிதி கர்மபலன்:—செய்யப்படும் கர்மா எப்படிப்பட்டதாயினும் மனத்தில் ஒரு மாதிரியானபதிவை உண்டாக்கி அதைக் கலக்கப்படுத்திவிடும். இது மேல் பலிக்கும் காலம் வருகையில் ஸுகமாகவோ துக்கமாகவோ இதன் புண்யபாபத் தன்மைக்கு ஏற்ப விதியாகப்பலிக்கும். இந்த பலனைக் கர்மா என்று நாம் ஸாதாரணமாகக் கூறுவது வழக்கம். நமது முயற்சி வீணாகிக் கோரியது கைகூடாவிடில் 'என்கர்மா நான் என்ன செய்வது' என்போம்: தீராவியாதியைக், 'கர்ம வியாதி' என்போம். இப்படிச்சொல்லிச் சொல்லி, சீக்கிரம் ஸுகம் தருவதாக நம்பியுள்ளவைகள் விஷயத்தில் பாபவழியிலாகிலும் கர்மாவைச்செய்து திண்டாடும்படி நேரிட்டாலும் 'கர்மா' என்று

கிளிப்பிள்ளைபோல நம்மவர் கூறத்தொடங்கிவிட்டனர். இது கர்மகதியின் நுட்பம் உணராக் கொடுமையால்தான். இதைக்கொண்டுதான் கர்மகதி இக்காலத்தில் பல குதர்க்கங்களுக்குக் காரணமாகிவிட்டது. இந்தக் கர்மகதி விசித்திரங்களைத்தான் பகவான் கீதையில்

விதித்ததொரு கர்மம் விலக்கியதோர் கர்மம்
மதிக்குமோர்அ கர்மமென வள்ளால்—கதித்தவினை
உய்த்துணரத் தக்கவழி கர்மத்தின் உண்மைநிலை
யைத்தெரிதல் தானரிதின் கார்ந்து. (IV—17)

என்று எடுத்துப் பாராட்டியிருக்கிறார்.

மேல் கர்மகதியையும் அதனால் ஏற்படும் கர்மபல விசித்ரங்களையும் பாகுபாடுகளையும் கூடியவரையில் எடுத்து விளக்கப்புகுவோம்.

பாபவிநாசம்.—இவ்வூர் அம்பாஸமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபமாயுள்ள ஒரு முக்ய ஸ்தலம். இத்தலத்தின் மஹிமை மிகவும் மேலானது. இவ்வூரின் சமீபத்தில்தான் தாம்பரவருணி நதியும் உற்பத்தியாகிறது. இதில் கலியாணதீர்த்தம் யென்னும் ஒரு க்ஷேத்திரமிருக்கிறது. இதில்தான் அகஸ்திய மஹரிஷி தபஸ் செய்து கொண்டிருந்ததாகவும் பரமசிவன் தமது கல்யாணக்கோலத்துடன் வந்து அம்முனிவருக்குத் தரிசனம் தந்தருளியதாயும், அதற்கு ஆறுமைல் தூரத்தில்தான் ஸ்ரீராமபிரான் தம் பாணத்தை நிறுத்தியதாகவும், அவ்விடத்திலுள்ள தீர்த்தத்திற்குத் தான் பாணதீர்த்தமென திருநாமமென்றும், இந்த க்ஷேத்திரங்களில் பெரிய பெரிய அருவிகள் மலையுச்சியினின்று விழுந்து ஜலம் அதிவேகமாக ஓடுகிறதென்றும் தெரிகிறது. இந்த க்ஷேத்திரங்கள் அகஸ்தியமலையின் உச்சியில் பலபாகங்களாக விருப்பதுமன்றி பல அருவிகளாக மலையிலிருந்து பயங்கரமான பெருஞ்சப்தத்துடன் ஜலம்விழுவதும் பேரிரைச்சலாக விருக்கிறது. அம்மலையின் உச்சிகளிலிருந்து பார்த்தால் அந்த அருவிகளிலிருந்து ஜலம் விழுவது மிகவும் ஆச்சர்யமாயும் ரமணீகரமாயுந் தெரியும். இதில் ஓர் சிவலாயமு மிருக்கிறது.

செய்யுள் நடையின் சிறப்பு

THE DIGNITY OF VERSE

நம் தமிழ் மக்கள் எல்லோரும் செய்யுள் நடையைப் போற்றுகிறார்கள். பல வித்வான்கள் செய்யுள் நடையிலே காவியங்களை இயற்றுகிறார்கள். செய்யுளியற்றுவது மிகவும் கடினமானது. செய்யுளில் கூறும் அபிப்பிராயங்களை யெல்லாம் வசனத்தில் எழுதுவது மிகவு மெளியது: படிப்போரும் விரைவில் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளலாம். அவ்வாறிருக்க, நாம் ஏன் செய்யுள் நடையைப் பாராட்டுகிறோம்? ஏன் புலவர்கள் செய்யுள் நடையைப் பெரிதும் உபயோகப்படுத்துகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்குச் சாதாரணமாகப் பின் வருமாறு விடை கூறலாம்.

எந்தச் செய்யுளைப் படித்தாலும் மனதில் ஒருவிதமான இன்பம் எழுகின்றது. பல்கவிகளின் செய்யுட்கள் பலவிதமாக நமக்கு இன்பம் பயக்கின்றன. கம்ப ராமாயணத்தைப் படித்தால், கம்பருடைய வாக்கும், செய்யுள் நடையின் போக்கும், சொற்களின் கோவையும் இனிய ஓசையும், சமயத்திற்குத் தகுந்தவாறு செய்யுள் அமைகிற ஒரு அழகும், இன்னும் பற்பல விஷயங்களும் ஒருங்குசேர்ந்து நமது மனதை வசப்படுத்துகின்றன. 'ஏன் அவ்விதமாக மனது கவரப்படுகின்றது' என்று விசாரிக்கப் புகுந்தால், அது மனோதர்ம சாஸ்திர மறிந்தோர்க்கும், சாரீரசாஸ்திர மறிந்தோர்க்கும் தீர்மானமாக உரைப்பதற்கு அரிதாயிருக்க நமக்கு எவ்வாறு புலப்படும்! நாமே வாசித்தாலும், பிறர் வாசிப்பதை நாம் கேட்டாலும், கம்பர் முதலிய மகாகவிகளுடைய பாடல்கள், நம்முடைய மனதை ஈர்த்துச்செல்கின்றன என்பதொன்றுதான் நமக்குத் தெரிகிறது. அத்தருணங்களில், நாம் பரவசமாகி ஆற்றில் மிதக்கும் தெப்பம் போலாகிறோம். கதாசந்தர்ப்பத்திற்கேற்ப நமது மனதும் மாறுகிறது. "கம்பராமாயணம் படித்தீரே, எவ்வாறிருக்கிறது" என்று நம்மை ஒருவன் கேட்டால், "அது மிகவும் அழகாகவிருக்கிறது," என்கிறோம். அதற்குமேல் ஒன்றும் சொல்

லுவதற்கு நம்மாலியல வில்லை. இதுபோலவே சிந்தாமணி, திருவிளையாடல், பெரியபுராணம், காஞ்சிபுராணம், மணிமேகலை, அஷ்டப்பிரபந்தம், அழகர் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்கள் வாசிக்கும்போதே நமது மனதைப் பற்றுகின்றன. ஒவ்வொரு நூலும் ஒருவிதமான இன்பம் தருகிறது. சிந்தாமணியையும், இராமாயணத்தையும் தனித்தனி படித்து எது அதிகமாக இன்பங்கொடுக்கிறதென்று பார்ப்போமாகில், இரண்டையும் படிப்பதால் எழும் இன்பம் ஒன்றற்கொன்று ஏதோ வித்யாசமுள்ளதாகச் சில வேளைகளில் தோன்றினும், அது கதை நிகழ்ச்சியால் ஏற்படுகின்றதோ, அன்றி அவரவர் அருள்வாக்கின் அமைப்பினாலேற்படுகின்றதோ என்பதை ஊகிக்கவும் நமக்குச் சாத்தியப்படுவதில்லை. பகவானுடைய திருமேனியில் ஈடுபட்ட பக்தர்களின் நிலையை "தோள் கண்டார் தோளே கண்டார்" என்று கம்பர் குறித்ததுபோல, நாமும் மஹாகவிகளது வாக்கின் போக்கிலே ஈடுபட்டு ஆங்காங்கு நின்றுவிடுகிறோம்.

இதுவேயன்றி, நாம் பரவசமாவதற்கு வேறொரு காரணமுள்ளது. அது கவிகளின் சொற்சாதுரியத்தால் எழுகின்றது. அவர்கட்குத்தான் அவ்விதப் பதங்கள் அமைகின்றன. தமிழ்ப்பாஷைஅவ்வவருடைய மனப்போக்குக்குத் தக்கபடி இடங்கொடுக்கிறது. இருவர் கவிஞர்கள் ஒரேவிதமான அபிப்பிராயங்களைச் சொன்னபோதிலும் அவரவர் செய்யுள்களைப் படிக்கும்போது நமக்கு மனக்கிளர்ச்சி யுண்டாகி அக்கவிகளைக் கொண்டாடுகிறோம். இருவரும் மிகவும் அழகாகச் சொற்களைக்கோத்துநயம்பட வுரைத்தாலும் நாம் படிக்கும்போதே தனித்தனியே ஒவ்வொருவரையும்பற்றி மேலாகப் புகழ்கிறோம். இவரைப்போல இவ்வளவு அழகாக வேறொருவருஞ் சொல்வது அசாத்யமென்கிறோம். இவ்விதமான புகழ்ச்சி நம்மிடம் தானாகவே கிளம்புகிறது. படிக்கப் படிக்க மகிழ்கிறோம். மெய்மறந்து வாசிக்கிறோம்; உள்ளக்கிளர்ச்சியால் பரவசமாகிறோம். நேரத்தையும் ஊணுறக்கத்தையும் கவனிக்கிறோமில்லை. படிக்கும் பாகம் முடிவுபெற்றாலொழிய நமது மனது நம்மிடந் திரும்புவதில்லை. இம்மாதிரி நம்மைச் செய்யவல்ல மஹாகவிகளி லீடுபட்ட நந்தமிழ்மக்கள், காலம் செல்வதைமறந்து மாசிலா மாணிக்கம்போலும் அரியபெரிய தமிழ்ப் பாடல்களைச் சரமாரியாகப் பெய்து பிரசங்கங்களில் சபையோரைப் பிரமிக்கச் செய்தல் ஒரு வியப்பாமோ? இவ்வித ஆனந்தத்தைத் தாமேயனுபவியாத தமிழ்மக்கள் யாவர்? நூல்களை வாசிப்பதன் பயன் இதுவே யன்றோ?

இன்னும் மூன்றாவதாக வொரு காரணங் கூறலாம், அதாவது, செய்யுட்களில் சுருங்கிய மொழிகளால் பலவிதமான அடைகள் கொடுத்து எதையும் வர்ணித்தல். வர்ணனையழகெல்லாம் செய்யுளுக்கு இன்றியமையாதன. செய்யுளும் ஆபரணமும் ஒருவிதத்தில் ஒற்றுமையுடையன. ஆபரணம் பிரகாசிப்பது, பொன்னாலு முத்தாலு மணியாலுமே. அதை 'நகாசு' செய்தால் முன்னிலுமது பிரகாசமடைகிறது. நகாசு வேலைப்பாடு எவ்வளவு சிறந்ததோ அதற்குத் தகுந்தபடி நகையுமொளி யடைகின்றது. அதுபோலச் செய்யுளும் இன்னிசை யெழுப்பும் பதங்கள் கோத்திருத்தலால் நமக்கு இன்பம் விளைவிக்கிறது. படிப்பதாலுண்டாகு மின்பம், கவியினது சாதுரியத்திற்கும் மனோபாவத்திற்கும் ஏற்பப் பெருகுகிறது. வர்ணனையி னழகிற்கும், சிறப்பிற்கும் பெருக்கத்திற்குந் தகுந்தவாறு வாசிப்போருடைய மனமகிழ்ச்சியு மோங்கி வளர்கின்றது. இவ்வித வர்ணனைகள்வசனநடைக்கு ஏற்புடையனவல்ல. சிலர் அவற்றை யுபயோகப்படுத்தினாலும், அவை தகுதியற்றவை போலத் தோன்றும். வர்ணனைகள் அதிகமானால் வசனநடை செய்யுளை யொட்டிநிற்கும்.

"பண்டலங்குதிசைக்களிற்றின் பணைமருப்பி
னிணையொடியப் படர்ந்த பொற்றோள்
விண்டலங்களுறவீங்கி
யோங்குதயமால்வரையின் விளங்கமீதிற்
குண்டலங்கள்குலவரையை வலம்வருவானிரவி
சொழுங்கதிர்சூழகற்றை
மண்டலங்கள் பன்னிரண்டும்
நாலைந்தாய்ப்பொலிந்தவென வயங்கமன்னோ."

என்றும்,

"காதங்கள் கோடி கடைசென்று காணு
நயனங்கள் வாரிகலுழக்
கேதங்கள்கூர வயர்கின்றவள்ள
றிருமேனி கண்டு கிளர்வான்"

"சுடுமயானத்திடை தன்றுணையேகத்
தோன்றறுயர்க் கடலினேகக்

கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியைக் கழற்கான் மாயன்
நெடுமையாலன் றளந்த வுலகெல்லாந்
தன்மனத்தே நினைந்து செய்யுங்
கொடுமையா லளந்தானையாரிவ ரென்
றுரையென்னக் குரிசில் கூறும்"

என்றும்,

"அல்லைச் சுருட்டி வெயிலைப் பரப்பி
யகலாசை யெங்கு மழியா
வில்லைச் செலுத்தி நிலவைத்திரட்டி
விரிகின்ற சோதி மிளிர
எல்லைக் குயிற்றி யெரிகின்ற மோலி
யிடை நின்ற மேருவெனு மத்
தொல்லைப் பொருப்பின் மிசையே விளங்கு
சுடரோனின் மும்மைசுடர"

என்றும் படித்தால் கவியின் கம்பீரவாக்கு நமக்கு உள்ளக்கிளர்ச்சியை யூட்டுகின்றது. நாமறியாமலே தலையசைந்து விடுகிறது. வசன நடையைப் படிப்பதுபோலப் படிக்கத் தொடங்கினாலும் இராக ஞானமில்லாதவனுக்கும் தானாகவே இராகம் வந்துவிடுகிறது. முடிவில் இராக மாலிகையில் முடித்து விடுகிறான். இவ்வாறு நமது மனதைக் கவரவல்ல செய்யுட்களைப் பதச்சேதஞ் செய்து அவற்றின் பொருளை வசன நடையில் எழுதிப் படித்தால் முன்பு நமக்கிருந்த மனக்கிளர்ச்சி யெல்லாம் சேதிக்கப்பட்டுப் பாழாகின்றன.

இனி, நான்காவதாக வேறொரு காரணங் கூறலாம். அதாவது செய்யுளினிடையில் சந்தர்ப்பத்திற் கேற்ப நீதியை யெடுத்துரைப்பதாம். இதை வேற்றுப் பொருள் வைப்பணி யென்று கூறுவர் பெரியோர். சிலவேளைகளில் கவிகள் உலக வழக்குகளையும் பழமொழிகளையும் அமைத்துக் கூறுவர். அவ்வாறு கூறவே எடுத்துக் காட்டுவகையால் நமக்கு அவை பெரிய தருமோபதேச மாகின்றன. படிப்போர் ஒவ்வொருவருடைய நெஞ்சிலும் அவ்வடிகள் ஊன்றிப் படிகின்றன. நினைக்கும் போதெல்லாம் நாவிலெழுகின்றன.

ஐந்தாவதாக, ஒரு சிறந்த காரணமுளது. ஒருவருக்கொருவர் வாதிக்கவும் சாதுர்யமாய்ப் பேசவும் வசன நடை முக்கியமாய் உபயோகப்பட்டாலும், செய்யுள் நடையில் அவ்வசனங்களமைந்தால் எவ்வளவு இன்பம் விளைவிக்குமோ, அவ்வளவு இன்பம் அவ்வசன நடை கொடுப்பதில்லை. தமிழ்க் கவிகளின் நூலைப்படித்தோர் யாவர்க்கும் இது தெரிந்ததே. நாடகங்களாடும்போது நடிப்பவர் வசன நடையிற் பேசாது கவிகொண்டு பாடினால் நமக்கு எவ்வளவு ஆனந்த முண்டாகின்றது! புகழேந்தி ஒட்டக்கூத்தரிருவரும் சமயோசிதமாக ஒருவரை யொருவர் அடக்குவதற்குப் பாடின கவிகளைக் கேட்க மிக்க இன்பமுண்டாகிறதல்லவா? இதுபோலவே மஹாகவிகளாகிய கம்பர் முதலியோருடைய காவ்யங்களில் எத்துணையோ இடங்களைக் குறிப்பிடலாம். சூர்ப்பணகைக்கும் இராமருக்கும் நடந்த சம்வாதத்தையும், இராவணனுக்கும் சீதைக்கும் நடந்த சம்பாஷணையையும், இராமருக்கும் வாலிக்கும் நடந்த தர்க்கத்தையும், யுத்தபூமியில் கும்பகர்ணனுக்கும் விபீஷணனுக்கும் நடந்தவார்த்தைகளையும் படித்தவரெவர்தான் கம்பருடைய கற்பனாசக்தியைப்பற்றிப் புகழாது நிற்பார்? சிலசமயங்களில் பல கருத்துக்களை அவாய் நிலையா யமைத்து ஒரு சிறு சொல்லால் புகல்வர். இதைக் கம்பசூத்திர மென்று பெரியோர்கள் சிறப்பித்து வியந்து கூறுவர். மேற்கூறிய விடங்களை உற்றுநோக்கினால் சம்பாஷிப்பதற்கும் வாதிப்பதற்கும் செய்யுளே சிறந்ததெனப்புலப்படுகின்றது. அதனாலன்றோ பிற்காலத்துக் கவிஞர்களும் தமது வரவைச் சீட்டுக்கவிகளால் சீமான்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். காளமேகப்புலவர் தம்முடைய எதிரிகள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தடையின்றிக் கவிகளால் விடைகொடுத்ததை இன்றும் படித்து நாம் ஆநந்திக்கிறோம். சிறிது காலத்திற்கு முன்னிருந்த தமிழ் வள்ளலாகிய முகவை ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்கள், திருவாவடுதுறைத் தம்பிரான் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கட்கும் அவ்வாதீனத்துத் தமிழ்ப் பெருங்கடலாகிய மஹா வித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கட்கும் பாடல்களில் கடிதமெழுதுவதும் அவர்களுமவ்வாறே பாடல்களால் பதிலெழுதுவதும் வழக்கமென்று, அத்தேவர் அருமைக் குமாரரும் தமிழின் தவப்பயனும் மதுரைத் தமிழ்ச் சங்கஸ்தாபகருமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் பாண்டித் துரைசாமித் தேவரவர்கள் பலமுறை சொல்லக் கேட்டதுண்டு. இவ்வாறு செய்யுளில் கடித மெழுதுவது அவர்களுக்கு ஒரு பெரிதல்ல. பாடல்களில் வித்வான்கள சம்பாஷித்

தாரென்பதற்குப் பல சான்றுகளுள்ளன. "செந்தமிழும் நாப்பழக்கம்" என்றபடி அதில் பழகிய மஹான்களுக்கு மடை திறந்தால் வெள்ளம் பெருகுவது போல, "இம்மென்றால் எழுநூறு மெண்ணூறும் அம் மென்றாலாயிரமும்" பாடல்கள் நினைத்த மாத்திரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக உதிக்கின்றன. கல்வியிற் பெரிய கம்பர் பகல் ஒன்றிற்கு 700 பாடல்களாகத் தமது இராமயணத்தைப்பாடி முடித்தாரென்பது நமக்குள் பெரு வழக்காயிருக்கிற தல்லவா? சில கவிஞருடைய சரித்திரமெல்லாம் அவர் சொன்ன கவிகளால் மட்டுமே தற்காலத்தில் வெளியாகின்றன. அவரைப்பற்றிய வேறு விவரங்களை அறிவதற்குப் பிறசான்றுகள் நமக்குக் கிடையா. இவ்வாறு செய்யுள் உபயோகப்படுமென்றால் "செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்வவ்விய" சிறந்த வரகவிகளுக்கே அவ்விதம் செய்வது எளிதாகுமே யல்லது மற்றவர்களுக்கு எளிதாகுமா? அவ்வரகவிகளை நாம் பொன்போற் போற்றுகிறோம். தமிழ்ப்பாஷை உலகத்தில் பேசப்படும் வரை அக்கவிஞர்கள் தமிழ் மக்களால் பாராட்டப்படுவா ரென்பதற்கு ஐயம் சிறிதுமில்லை.

கடைசியாக இன்னும் ஒருகாரண முள்ளது. இதுவே எல்லாவற்றிலும் முக்கியமானது. அதாவது வசன நடையில் விரித்து எழுதக் கூடிய ஒரு விஷயத்தை மிகவும் சுருக்கமாகவும் அழகாகவும், கேட்பதற் கினியதாகவும் படிப்பதற்கு ஆநந்தமுள்ளதாகவும் செய்யுளில் அமைத்துவிடலாம். முற்காலங்களிலெல்லாம் செய்யுளை மிகவும் பயின்று வந்தது. இது எல்லா ஜாதியாருக்கும் பொதுவாயிருக்கிற ஒரு கொள்கை. எல்லா ஜாதியாரும் ஒருகாலத்தில் தங்கள் தங்கள் பாஷையை எழுதுவதற்கு வழிதெரியாது பேசிமட்டும் வந்தார்கள். பின்னரே, எழுதக் கற்றுக்கொண்டார்கள். அவ்வாறு எழுதத்தெரிந்த பின்னரும், அச்சில்லாத பெருங்குறையாலும், கையாலெழுதுவதா லுண்டாகும் கஷ்டங்களாலும், எழுதுவதற்குத் தகுந்த சாதனக் குறைவுகளாலும் புஸ்தகங்கள் பரவுதற்குச் சாத்ய மில்லாமற்போயிற்று. அதனால் பூர்வ ஜனங்களுக்கு விஷயங்களைப் பாட்டிலமைத்து அதைஞாபகப்படுத்திக்கொள்வது அவசியமாகவும் அவ்விதஞ்செய்வதே சௌகரியமாகவுமிருந்தது. ஆகையாற்றான் எல்லா ஜாதியாருடைய பூர்வ கிரந்தங்களெல்லாம் பாட்டில் அமைந்துள்ளன. அச்சியந்திரங்களும் காகிதமும் சாதாரணமாகப் போன இக்காலத்தில்தான் வசனநடையில் விரிவாக புஸ்தகங்கள் எழுதப்படுகின்றன. நம்முடைய செந்தமிழும் இந்த விதிக்கு உட்பட்டதுதான். செந்தமிழ்ப் பூர்வ கிரந்தங்களெல்லாம் செய்யுளிலே அமைந்துள்ளன. ஆயிர வருஷத்திற்கு முன்னெழுதப்பட்ட தமிழ் நூல்களில் நமக்கு ஒரு சிறிதே இப்பொழுது எஞ்சியுள்ளது. எஞ்சிய நூல்களெல்லாம் அநேகமாய் ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு முதலிய நூல்களிலடங்கிவிடும். தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி முதலிய சமயநூல்களும் பெரும்பாலும் இக்காலத் தனவாம். எத்துணையோ காலங்களாக வழங்கப்பட்டும், போற்றப்பட்டும் வந்த தமிழிலுள்ள நூல்களெல்லாம் இவ்வளவே யென்றால் யார்தான் அதை ஒப்புக்கொள்வார்கள்? பல்லாயிர வருஷங்களாக நடைபெற்று வந்ததாகச் சொல்லப்படும் முச்சங்கங்களைச் சேர்ந்த புலவர்களை யெண்ணிக் கணக்கிடுதல் கூடுமோ? முச்சங்கங்களிலு மெழுந்த நூல்கள் பலவா யிருத்தல் வேண்டுமே? அவையெல்லா மிப்போது எங்குள்ளன? எஞ்சியுள்ளவைகளையும் அச்சேற்றுவதற்கு ஏன் கஷ்டப்படுகிறது? இக்கேள்விகளுக்கு விடையளிப்பது மிகவும் எளியதே. நம்முடைய நூல்களெல்லாம் பனையோலையில் எழுதப்பட்டுள்ளன. பனையோலையி லெழுதிவைப்பதா லுண்டாகும் சிறந்த நன்மையைத் தெரிந்துகொண்ட நமது முன்னோரை நாம் எவ்வாறு புகழ்வது? அவர்கட்கு நமது நன்றியை எவ்விதஞ் செலுத்துவது? அவர்களியற்றிய நூல்களெல்லாம் என்றும் நிலைத்திருக்கவேண்டுமென்றே அவர்கள் அவ்வாறு ஓலைகளில் எழுதிவைத்தார்கள். ஓலைகளி லெழுதப்பட்ட ஏட்டுப்பிரதிகள் சரியானபடி காப்பாற்றப்பட்டால் ஆயிரக்கணக்கான வருஷங்க ளிருக்குமென்பதற்கு சாக்ஷி வேண்டுமோ? வேண்டுபவர் மதுரை, தஞ்சை, சென்னை முதலிய நகர்களிலுள்ள ஏட்டுப் புஸ்தகசாலைகளிற் கண்டுகொள்ளலாம். அங்கு பழுதுபடாத 800 வருஷத்திற்கு முன்னெழுதிய ஏட்டைக்கூடக் காணலாம். காகிதப் புஸ்தகங்கள் 100 வருஷத்தில் முறிந்துபோய்

விடும். அவ்வாறிருக்க ஏன் ஏட்டுப்பிரதிகள் அதிகமாக நம்மிடமில்லை? ஏன் நூல்களும் மிகக் குறைவாக வுள்ளன? இதற்குக் காரணம் நாமே. நாம் வெகுகாலமாக நமது அருந்தமிழைப் போற்றாது கைவிட்டோம். ஏடுகளையும் சேமித்து வைக்காது, தீய்க்கும், கறையானுக்கும் இராமபாணத்திற்கும் இரையாக்கினோம். ஏடுகளின்னவை யென்று பார்க்கவும் மனமின்றி பதினெட்டாம் பெருக்கன்று, வீட்டிலுள்ள ஏடுகளை யெல்லாம், முழுமூடத்தனமாய் ஆற்று வெள்ளத்திலும், பாழுங்கிணற்றிலும், குளங்களிலும், முழுவதையு மப்படியே கட்டி யெறிந்துவிட்டால் ஒருவேளை இறந்துபோகாது தப்பிவிடுமோவென்று பயந்து ஒவ்வொரு ஏட்டையும் பிரித்துத் துண்டு துண்டாய்க் கிழித்து எறிந்துவிட்டோம். தமிழ் பள்ளிக்கூடங்களிலும் நஞ்சிறார்களுக்கு அவ்விதஞ் செய்வது தகுதியென்று கற்பித்தோம். அவர்களை ரகசியமாயும் வெளிப் படையாயும் ஏடுகளைப் பாழ் செய்யத் தூண்டினோம். இவ்வாறு பலவிதமாக ஏட்டுப் பிரதிகள் துன்பத்திற்குள்ளானால் எவ்விதம் அவை பிழைத்து நிற்கும்? நெருப்புப் பிடித்தெரியும்போது காற்று உதவியாயிருந்ததுபோல, ஏட்டுபிரதிகளுக்கு வந்த ஈனதசையோடு அந்நிய பாஷைகளை நாம் கற்க வேண்டிய நிமித்தங்களும், அச்சியந்திரம் வந்ததின் பேரில் அச்சுப்புஸ்தகத்தையே கையால்தொட்டுப் பயின்று ஏட்டுப் பிரதிகளைக் கையாலும் தொடாது விட்டது முதலிய பல காரணங்களும் ஒன்று சேர்ந்து, ஏடுக ளிறப்பதற்கு வழிகளாயின. இது நிற்க.

நாம் முன்கூறியபடி நமது ஆதி நூல்களெல்லாம் செய்யுளிலே அமைந்துள்ளன. கையாலெழுதுவதன் கஷ்டத்தாலும் அவ்வாறு வருந்திப் படிப்போரின் தொகைக் குறைவாலும் மிகவும் சாரமான நூல்களே நமக்கு இப்போது எஞ்சியுள்ளன. மற்ற நூல்கள் போற்றப்படாதிறந்தன. அச்சியந்திர உதவிபெற்ற இக்காலத்திலும் தினமொன்றிற்கு எத்துணையோ நூல்கள் கணக்கில்லாமலும், படிப்போரை யெதிர்பார்க்காமலும் அச்சிடப்படினும், திரும்பப் பலமுறை யச்சிடப்படும் நூல்கள் மிகச் சுருங்கியவைகளே. சில கர்ப்பத்திலே குழந்தைகளிறந்துபோவதுபோல அச்சாபீசிலேயே நின்றுவிடுகின்றன. வேறுபல பாலாரிஷ்டத்தால் வருந்திக் கடைசியிலிறக்கும் சிறார்களைப்போல சிறிதுநாள் கையாளப்பட்டுப் பின்னர் மறக்கப்படுகின்றன. தங்களுடைய அரிய செய்கைகளினால் தமது பெயரை நாட்டி இறந்தும் இறவாது இவ்வுலகில் புகழுடம்புபெற்று நிலவுறும் மஹான்களைப்போல, மிகச் சில நூல்களே படிக்கப்படிக்க இன்பந் தந்து மக்கட்கு அறிவூட்டி என்றும் நிலவுவன. இவ்வாறு நிலைமையுடைய நூல்கள்.—

"புவியினுக்கணியாயான்ற பொருடந்துபுலத்திற்றாகி
அவியகத்துறைகடாங்கி யைந்திணை நெறியளாவிச்
சவியுறத்தெளிந்து தண்ணென் றொழுக்க முந்தழு
[விச்சான் றோர்

கவி" களாலாவனவேயன்றி சாமான்யமாயமைதல் கூடுமோ? அந்நூல்களில் ஒரு செய்யுளை எடுத்து அதிலடங்கிய கருத்துக்களை விரிவாக வசன நடையிலெழுதப்புகின் அது பெரிய புராணமாக நீண்டுவளரும். அவ்வாறு எழுதிய பின்னரும் கவிகளினுடைய முழுக் கருத்துக்களும் வெளிபாவதில்லை. உரையாசிரியருடைய அறிவின் பெருக்கத்திற்கும் மனோபாவத்திற்கும் தகுந்தவாறு உரைநடை விரிகின்றது.

" ஆகாத தன்றா லுனக்கவ்வன மிவ்வயோத்தி
மாகாத லிராமனம் மன்னவன் வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர் நம்பூங்குழற் சீதையென்றே
ஏகா யினியிவ் வயி னிற்றலு மேதமென்றாள்."

என்ற அயோத்தியாகாண்டத்து நகர் நீங்கு படலச் செய்யுளுக்கும்

" வானின்றிழிந்து வரம்பிகந்த
மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனுமுயிரு முணர்வும்போ
லுள்ளும் புறத்து முளவென்ப
கூனுஞ்சிறிய கோத்தாயுங்
கொடுமையிழைப்பக் கோற்றுறந்து
கானுங்கடலுங் கடந்திமையோ
ரிடுக்கண்காத்த கழல்வேந்தை"

என்ற அயோத்தியாகாண்டத்துக் காப்புச்செய்யுட்கும்,

" உற்பத்தி யயனேயொக்கு
மோடும்போ தரியே யொக்கும்
கற்பத்தி னரனேயொக்கும்
பகைஞரைக் கலந்தகாலைச்

சிற்பத்தி னம்மாற்பேசச்
சிறியவோ வென்னைத் தீராத்
தற்பத்தைத் துடைத்தவென்றாற்
பிறிதொரு சான்றுமுண்டோ.

என்ற கும்பகருணன் வதைப் படலச் செய்யுளுக்கும் இன்னுமிது போன்ற பல செய்யுளுக்கும் வித்வான்கள் விஸ்தாரமாக வுரை செய்து சபையில் பிரசங்கம் செய்வதை நாம் கேட்டு களித்துள்ளோம். ஒரு பாட்டிற்குப் பலவிதமாகக் கருத்துரைப்பர். முடிவதற்கு நீண்டகாலஞ் செல்லும். உற்சாக மேலெழுவதற்குத் தகுந்தவாறு அவருடைய கருத்துரைகளும் விரிந்து செல்லும். கேட்போருடைய மனச்சலிப்பால் பிரசங்கம் முற்றுப்பெறுமேயன்றி, பிரசங்கஞ் செய்யும் வித்வான்களுடைய சிரமத்தால் ஒருக்காலு முற்றுப்பெறாது. சரியானபடி பொறுமையுடனிருந்து கேட்பாரிப்போதில்லையே யென்ற மனக்குறை அவர்களிடமெப்போதுங் குடிகொண்டிருக்கும். இவ்விதமான நீண்ட பிரசங்கங்களைக் கேட்டாலும் உரையாசிரியருடைய விரிந்த வசனநடைப் புத்தகங்களைப் படித்தாலும் நம்முடைய அபிமானமெல்லாம் செய்யுள் நூல்களிலேயே செல்லுகின்றன. அவைகளையே திரும்பத் திரும்பப் படிக்கிறோம்; மனப் பாடம் பண்ணுகிறோம்; பிரசங்கங்களிலுபயோகப் படுத்துகிறோம்.

இவ்வாறு நம்முடைய, மனதைக் கவர்ந்தும், நினைக்கும் போதெல்லாம், நாவிலெழுந்தும் நெஞ்சில் எப்போதும் குடி கொண்டும், வாசிக்கும் போதெல்லாம் நம்மைப் பரவசப் படுத்தியும் நம்மை நல்வழிப் படுத்தும் ஞான தீபமாயும் துக்க நிலையில் படித்தாலும் நமக்கு மனமகிழ்ச்சியையே விளைவித்தும் விளங்குகிற நமது சிறந்த செய்யுள் நூல்களை நாமெப்போதும் போற்றுவோமாக. தற்காலத்தில் வசன நூல்களிலே நமது புத்தி சென்றாலும் விரைவில் செய்யுள் நூல்களும் நம்மால் கொண்டாடப் படுமென்பதற்கு ஐயமில்லை.

ஆர். ரேங்காச்சாரி, எம்.எ., எல்.டி.

பம்பாயில் மோடார் வண்டிகள்.—1910-ம் வருஷத்தில் பம்பாய் நகரத்தில் 1015 மோடார் வண்டிகளிருந்தன. 1914-ம் வருஷத்திலோ 2193 வண்டிகளிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

அன்பு

BENEVOLENCE

அன்புஎன்றால் என்ன? அருள், கருணை, எனப்படும். அவ்வன்பை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். அவை சிற்றன்பு, பேரன்பு எனப்படும். சிற்றன்பு, பஞ்சேந்திரியங்களால் சுகமெனக் கொள்வதை சிற்றன்பு என்று கூறலாம். மனிதனுடைய சுபாவ குணமாய, தாமதகுணக் கருவிகளாகிய, காமக்குரோத லோபமோகம் என்றவைகளைக் கடந்து, ஆத்ம ஸ்வரூபத்தை நன்றாய் உணர்ந்து எல்லாவற்றிலும் இருக்கிறவன் ஒருவனே என்றறிந்து, ஜீவகாருண்யத்தை விருத்தி செய்வதே பேரன்பு. கருணையினாலே மனிதனும் அவனுக்கு வேண்டிய உதவிகளும் கடவுளாற் படைக்கப்பட்டன. அன்பு கரை புரண்டு கண் பனித்தாரைகாட்டி, மெய்சிலிர்த்து, உள்ள முருகுங்கால் மனிதன் சச்சிதானந்தமாகிறான். இந்த மனிததேகம் போனால் மீளவு மிந்தத் தேகம் வருமென்கிற நிச்சயமில்லாமையாலும் இந்த மனிததேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்ததேகமாகலாலும், இந்தப்பிறவியிலேயே மருள் நீங்கி அருள்செழிப்பது இடர்க்கடல் நீந்தும் வழி. அருள் வெள்ளத்தினாலே,

"நாயினுங்கடையே னென்செய்வேன்
பிணியானலின்ற னலிவினையறிந்து
தாயினு மினியாயின்னு நீ வரவு
தாழ்த்தனையென் கோலென்றறியேன்
மாயினுமல்லால் வாழினு நினது
மலரடியன்றி யொன்றேத்தேன்
காயினுமென்னைக் கனியினுநின்னைக்
கனவினும் விட்டிடேன் காணேன்."

என்று திருவருட் பிரகாசவள்ளலார் பாடியிருக்கிறார்.

நம்முடைய கருவிகாரணங்களில் ஜனிக்கும் எண்ணம், செயல்களின் பலனை ஈசுவரனிடத்தில் அன்பினால் அவருக்கு அர்ப்பணம்செய்வதே பிறவிக்கடலை தாண்டுவிக்கும் தோணி. மாந்தர்க்கணிகலம் மறை யெலாமோதும் வேந்தன் பாலன்பு; அன்பில் ஆழ்ந்த புண்ணியன் அநுபவிக்கும் ஆனந்தத்தை இங்ஙனம் சொல்லவெளிதோ? அனுபவிக்கக்கூடுமே யொழிய, நம் சிறுபுலன்களால் விவரிக்கவொண்ணாது. சிறு புலன்களிலடங்கக் கூடியதாயிருந்தால், சிற்றின்பாய்விடும், துரியா

நீதத்திலுள்ள மகான்களுக்கு அன்பே தேகமாகும். அந்த நித்யன் முக்தாவுக்கே சர்வ பூதங்களும் வசம். மாயை என்கிற பெண் அவர் முன்னிலையில் வெட்கமடைகிறாள். அன்பின் சிறப்பைப் புகலுமுன் மேற்குத் தேசத்திய தத்துவ சாஸ்திரிகள் இதன் உற்பத்தி ஸ்தானத்தைப்பற்றி யாது எழுதுகிறார்களென்பதைச் சற்று ஆராய்வோம். மனிதனுடைய சூழ்ச்சியின் இருப்பிடம் மனது. மனது என்றால் எண்ணுங்கருவியென்றாகும். மனு என்பவர் இந்து சாஸ்திரம் சட்டம் முதலியது எழுதியவர். அம்மனுதர்ம சாஸ்திரமே நம் வைதிக லௌகிகர்கள் பெரும்பான்மையும் அனுசரித்து வருகிறார்கள் என்கிறது நமக்குத் தெரியாததில்லை. அக்கர்த்தாவின் பெயரே காரணப்பெயரெனக்கொள்வர் பலர். மனு என்றால் தீர்க்காலோசனைக்காரர். ஆதலால்; மனது என்பதும் வடமொழிப்பாலாகக் காரணப்பெயர். அம்மனதின் திரிகுணங்களாவன :—அறிவு, உணர்வு, அபீஷ்டமாம். இரண்டாவது குணமான உணர்வுசகலபிராணிகளுக்கும்பொதுவாயமைந்தது. இதற்கு உபமானம் தேவையில்லை. நாம் ஒரு பிராணியை இம்சித்தால் அதற்கு உணர்ச்சி இருந்தாலும், மெய்வருத்தத்தை வாயால் சொல்ல முடியாது. மிருகங்களுக்கு பகுத்தறிவு இல்லை. மனிதனுக்குப் பகுத்தறிவிருந்தும் அநேகர் அதை உபயோகிக்கத் தெரியாமல் மிருகங்களை விடத்தாழ்மையாய் நடந்துகொள்வதைநாம் பார்க்கிறோம். ஐம்புலன்கள் முப்புலன்கள் ஒருபுலனுள்ள எல்லாவற்றையும் இந்துக்கள்தொண்டுதொட்டு ஒரேவிதமாய் பாவித்து வருகிறார்கள். உணர்ச்சியாவது, இந்திரிய உணர்ச்சி, பச்சாத்தாபம், எண்ணப்பயிற்சி என மூவகைப்படும். இம்மூவகையில் முதல், ஸ்பர்சம் முதலியவற்றால் ஏற்படும் பிரியம் அல்லது அன்பு. அநித்தியமான இந்திரியங்களில் உற்பத்தியாகி, அவ்விந்திரியங்களிலேயே முடிவுபெறுமாதலால், சிற்றன்பு அல்லதுசிற்றின்பமேயாம். இரண்டாவதுதான் நாம் பிரேரேபிக்கிற அன்புக்குப் பிறப்பிடமேயாம். அத்தியந்தன்பு பிரக்ருதியுடன் ஒற்றுமையை (Harmony) யேஉண்டுபண்ணுகிறது. வனத்தில் ஓடுகிற அருவி, மரத்தின் சலசலப்புள்ள இலைகள், பளபளப்பான சமுத்திரத்தின் மணல், பச்சைநிறமாய்த் தோன்றுகிற ஜலம் இத்தகைய வஸ்துக்கள் கவிக்கு உபங்கியாஸக் கருவிகளாக ஏற்படுகிறதை நாம் வாசிக்கவில்லையா? பாறையையும் உருகடித்து விடுகிறார்களே! ஆனந்த பாஷ்பம் அருவியாய் வடிகிறதே ஏன்? கவிகள் தாம் பார்க்கும் பொருள்களுடன் ஐக்கியமாய் விடுகிறார்கள். அவர்களுடைய முன்னிலையில் அவைகளும் ஜீவராசியைப்போல் பேசுகின்றன. இது அன்பினலொழிய வேறல்ல. ஏதாவதுஒருநூதனத்தோற்றம்ஏற்பட்டால் அவர்கள் தங்களைமறந்துவிடுகிறார்கள், அவ்வன்பர்களுக்கன்றோ இவ்வுலகம்! சுபநயம் பாராட்டாமையே பேரன்பு, இவ்வுலகவாஞ்சையில் தம்மை யிழந்து, ஜலத்திட்டதுரும்புபோல் மிதந்து தாம் எதற்காக இவ்வுலகில் ஜனித்தோமென்று சற்றும் யோசியாமல் உழலும் சிற்றின்பப் பிரியர்க்கோ இவ்வுலகம்!

" எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
    னியாதினு மரிதரிது கா
ணப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
    ஏதுவருமோ வறிகிலேன்
கண்ணகனிலத்துநானுள்ளபொழு தேயருட்
    சகன வட்டத்தி னின்று
காலூன்றி நின்றபொழி யானந்த முகிலொடு
    கலந்துமதி யவச முறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
    பதியா யிருந்த தேகப்
பரிவுகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
    பண்ணவித னருளி னுலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
    வேண்டுவே னுமதடிமை நான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
    வித்தகச் சித்தர் கணமே."

என்று தாயுமானவர் கூறியிருக்கிறதைக்கொண்டு அருட் பிரகாசத்தை நன்குணரலாம். அருளுணர்வே காயகல்பமாகும். கூன் குருடன்றி ஞானத்துடன் பிறந்ததற்கு ஈசுவரனை நாம் பக்தி செய்யவேண்டும். காற்று எல்லா விடமும் பாவி, யதேச்சையாய் இருக்கும் சமயம் அதன் குணம் விரிவாயுள்ளது. அதைப் பலவர்ணமான புட்டிகளில் அடைத்தால், அக்காற்றுடலவர்ணமாகத் தோன்றுகிறது. அதுபோல், பரமாத்மா கர்மகாரணமாயமைந்த ஸ்தூல சரீரங்களில் சிறிது காலம் வசிக்கிறதினால் அதை ஜீவாத்மா வென்கிறோம். நாம் நம் மனைவி குழந்தைகள் பெற்றோர் சுற்றத்தார் இவர்களை நேசிப்பது ஒவ்வொரு தன்மையாகிறது. எல்லா

வற்றிலும் ஒரே ஆத்மஸ்வரூபம் இருப்பதினால் அன்புபாராட்டுகிறோமென்று சற்றும் நினையாமல் ஜடசம்பந்தமாய் ஏற்பட்ட அக்ஞானத்தில் மூழ்கி என் மனைவி, என் பொருள் என்கிறோம். என்னுடையதென்பது எந்தமட்டுமென்பது மாயவலைக்குட்பட்டுத் தவிக்கும் அக்ஞானிகளுக்குத் தோன்றுவதில்லை. "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்று, பட்டணத்தார் புலம்பியிருக்கிறார். நான் யார் எங்கிருந்து வந்தேன், எங்குச் செல்லவேண்டுமென்பதை சற்று யதார்த்தமாக கவனித்தால், இந்த மானிட இரகசியம் வெளிப்படும். அந்தப் பரமபுருஷனை தூணிலும் துரும்பிலுமிருப்பவனென்பதை நன்குணர்ந்து சகல பிராணிகளுக்கும் ஜீவகாருண்யத்தைப் பெருக்கி அகங்காரத்தை நீக்கி நாம் பிரம்மமாய் விடுவோம். பெண்டிருமக்களும் எதுவரை நமக்குத் துணையாவார்களென்பதை வால்மீகி மகரிஷி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியிருக்கிறார். அதைச் சற்று இவ்விடம் எடுத்துரைப்போம். அவர் தன்னிளமைப் பருவத்தில் வேடனாய், கொலைகளவு புரிந்துகொண்டிருக்கையில் நாரத மகரிஷி அவ்வழியே செல்லுகையில், வால்மீகி இவரையும் இம்சிக்கத் தொடங்கும் பொழுது, ஏவேடா இதுவரை எத்தனை பேர்கள் உன்னால் உயிரிழந்தார்களென்று வினவ, ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு கல்லுப்போட்ட பத்தாயம் ஏழு நிரம்பிவிட்டதென்று வால்மீகி சொல்ல இப்பாபம் யாருக்காகப்புரிகிறீரென்று நாரதர் கேட்டார். தன் சம்சாரத்துக்காகச் செய்கிறேனென்று வால்மீகி சொல்ல, அவர்களை இக்கற்களில் ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்கிறார்களா வென்று கேட்டு வரச் சொன்னார். அவர்கள் மறுத்ததை வால்மீகி தெரிவிக்க, அத்தகைய அன்பு பேரன்பல்லவென்று விளம்பி, பேரின்பத்தைப் புகட்டிச் சென்றார்.

சிற்றறிவின் துர்க்குணத்தினால் யாதொன்றை நேசிக்கிறோமோ, அது அழியத்தக்கது. துக்கத்தை விளைக்கும். சகுணத்தினால் எல்லாவற்றையும் சமமாகபாவித்துக்குரோதமன்றி அன்பு பாராட்டி வருவதே, பேரன்பு. நாம் ஒருவரை நேசிக்குமுன், நம் எண்ணப் பிரதிமையை அவருள் செலுத்திப் பிறகு நேசிக்கத் தொடங்குகிறோம். நாம் நேசிக்கும் பொருள், நாமேயாகும். ஆதலால்தான் பிறருக்கு அவலட்சணமாய்த் தோன்றினாலும் காமிகளுக்கு ரமியமாய்த் தோன்றுகிறவை சில உள்ளென்பதை உலகியல்பில் நாம் பார்க்கிறோம். அதற்கு ஒரு சிறு திஷ்டாந்தம் இங்ஙனம் எடுத்துரைப்போம். சீரங்கத் தருகாமையில் ஒரு கிராமத்தில் ஒரு பயல்வான் ஒரு ஸ்திரீயை காதலித்துக் கொண்டிருந்தான். வெகு நேசமாயிருவரும் இருக்குங்காலை ஒரு நாள் ஸ்ரீரங்கம்போய் ஸ்ரீ ரங்கநாதர் தெரிசனம் செய்ய அவாக் கொண்டார்கள். ஏகாதசி யன்றையதினம் இருவரும் ஸ்ரீரங்கம் சென்று கோயிலை நோக்கிச் செல்லும் பொழுது, விசிஷ்டாத்வைத சித்தாந்தக்காரராகிய ஸ்ரீராமானுஜாசாரியர், நதியில் திருநீராடி காலைக்கடன் முடித்து சிஷ்யர் குழாத்துடன் எதிர்வந்தவர், ஒருபெண் மேல் சூரிய கிரணம் படாமலும், தான் வெயிலில் வருந்தியும், அப்பெண்மணிக்கு குடைபிடித்து வந்த புருஷனை நோக்கி திகைத்து நின்றார்.

சற்றுநேரம் பொறுத்து, 'ஏபுயவலிமையுடையவனே! நீ வெயிலில்வாடி, இந்த ஸ்திரீசற்றும் வருந்தா வண்ணம், குடைபிடித்திருப்பதேன்,' என்று அம்மகான் கேட்டார், 'ஸ்வாமி' சகல ஜீவராசிகளுக்கும் அமுதளிக்கும் கவலையேற்ற அப்பரமசிவனை ஒருபாகம் நாரிக்களித்தார். சர்வலோகரக்ஷகனான மகாவிஷ்ணுவே ஹிருதயத்தை ஸ்திரீக்கு தத்தம்செய்து விட்டார். நாரிகளுக்குக்கெல்லாம் சிரேஷ்டமான இந்த ஸ்திரீயின் கடைக்கண்பார்வைக்கே என் வாழ்நாளை தத்தம் செய்யவேண்டியதாயிருக்க, இச்சிச்ருஷை செய்வதுதானா தங்களுக்கு ஆச்சரியமாயிற்று. ஆ! தங்களைப் போலொத்த அறிஞர்களுக்கா ஸ்திரீயின் மகிமை தெரியுமென்று சொல்லிக்கொண்டு அவரைக்கடக்கக் யத்தனித்தான். ஓட்டையும் தங்கமாய் மாற்ற வல்ல சித்தர் அவ்விருவரை நிறுத்தி, ஏ! ரதியை யுகந்த மன்மதா, இவளுடைய விழிகளைவிட அழகிய விழிகள் காண்பிக்கிறேன் வா என்று ஸ்ரீரங்கநாதர் கோயிலுக்கு அழைத்துப்போய் பகவானுடைய ஆக்ருதியைக் காண்பிக்கவே, அப்புமான், கண்களினீர்பெருக, உரைகுளரி உடலெங்குமோய்ந்து அயர்ந்தவசமாகி, சமாதியிலிருந்துவிட்டார். இதைக்கேட்ட மருகியோ, அவ்விடம் சென்று, தன்னுபகனை விட பதின்மடங்கு பக்திபெருகி, ஆனந்த வெள்ளத்திலமர்

ந்தாள். மனிதனுக்கு இரண்டுவகையான அப்யாசங்கள் ஏற்படுகின்றன. துஷ்க்ருத்தியத்திலேயே மனதை ஊன்றி, அதன் வழியே செல்வதொன்று; அன்றி, ஸத்விஷயத்திலேயே நிலை நிறுத்துவது மற்றொன்று. இரண்டாவதுதான் முக்திநிலைக் கேதுவானது. எல்லோரையும் ஒரே மாதிரி நேசிப்போமானால், துர்ச்சனர்களால் நமக்குக் கஷ்டம் நேரிடுமோ வென்ன யோசித்து ஒரு மகான், ஒரு சிறு திருஷ்டாந்தம் கூறுகிறார். தான் ஒரு நாள் ஒரு காட்டின் வழிச் செல்லுகையில் பாம்புப்புற்றுஒன்று தோன்றிற்று. அதினின்று ஒரு ஸர்ப்பம் மாடுமேய்க்கும் பிள்ளைகளி லொருவரை சிறிது காலத்துக்கு முன் தீண்ட, அவ்விடம் யாவரும் வருவதேயில்லை. இதையறிந்து, அம்மகான் தம் சக்தியால் அச்சர்ப்பத்தை விளித்து, "ஏ துஷ்ட ஜந்து! உன்னைப்போலவே மற்றவரும் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களை நீ கொல்வதனால் பயனென்ன? ஒன்றுமில்லை யாதலால் இன்று முதல், யாரிடமும் பிரவேசியாமல் சும்மாவிரு; மறுபடி இவ்வழி வருகிறே னென்று சொல்லிப் போனார். அந்த நிமிஷம் முதல் இரை எடுக்கும் வேளை தவிர, அது வேறு சமயம் வெளிப்புறப்படுவதில்லை. இதன் சாந்தத்தை நோக்கி மாடுமேய்க்கும் பிள்ளைகள் கல்லெடுத்து அடிக்க ஆரம்பித்தார்கள். தினமும் இச்சிக்ஷையினால், சர்ப்பம் தேகமெல்லாம் காயப்பட்டு, மெலிவடைந்து, இறக்கும் தருணமாயிற்று. தன் இரைதேடக்கூட சக்தியற்றதாய் புற்றினுள்ளேயே மரணாவஸ்தைபட்டுக்கொண்டிருக்கும்பொழுது, பெரியவர், ஞானதிருஷ்டியாலுணர்ந்து பாம்பை அழைத்தார். இரண்டு தடவை கூவியும் வெளியில்அவ்வரவம் வாராமையால், அதன் தேகஸ்திதியை அறிந்து, தன் சக்தியால் அழைத்து, விருத்தாந்தம் வினவ, சுவாமி தங்களாக்ஞைப்படி ஸாத்வீகமாயிருந்தேன், என்கதி இவ்வண்ணமாயிற்று; என் கதையைத் தங்களிடம் சொல்லி உயிர் மாய்க்கவிருந்தேன்' என்று ஹீனக்குரலுடன், புலம்பிற்று. எளியபிராணியைக்கண்டு இரக்கமுற்று "ஏ சர்ப்பமே! நீ செய்தது அவிவேகம், உன்னை யாராவது தொந்தரவு செய்தால், கடிக்க மட்டும் கூடாதேயொழிய படத்தை விரித்துப் பயமுறுத்தித் துஷ்டர்களை என் விலக்கக்கூடாது. ஆகையால் பிறருக்குஹிம்சையில்லாமல் தன்னைக் காத்துக்கொள்வது சிறந்த தர்மம்" என்று புத்தி சொல்லிப்போனார். அன்பு, ஒரு மனிதனுள்ளே புகுவது, எப்படி என்றால், ஒரு மதயானையானது. ஒரு பழைய வீட்டில் நுழைந்து, அதைப் பிடுங்கியெறிவது போலாகும். மனிதனுள் விளையும் காமக்குரோத லோபமோகாதிகளை வேருடன் பிடுங்கி, ஈவு இரக்கம், பச்சாத்தாபம், இத்தகைய சாத்வீகக்குணங்களின் வித்தை பதிக்கும். அன்பு ஓங்க ஸ்ரீசங்கர பகவத்பாதர் சொல்லுகிறபடி தானிருக்கும் சங்கத்துக்கே ஜீவன்முக்தி உண்டாகும்படி அன்பமிர்தமுண்ட மனிதன் செய்கிறான்.

T. S. வேங்கடராமய்யர்.

ஸ்த்ரீ தர்மம்

WOMEN: THEIR DUTY.

நமது தேசத்தில் ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்தவேண்டுமென்று அவர்கள் சம்மந்தமாக அநேகவிதமான சீர்திருத்தங்கள் செய்வதற்கு பற்பல முயற்சிகள் சென்ற சிலவருஷங்களாக நடந்துகொண்டு வருகின்றன. பெண்களுக்கு ஸாதாரணமாய் எழுதப்படிக்க மாத்திரமல்லாது, உயர்தரக் கல்வியும் பயிற்றுவிக்கவேண்டுமென்றும், வீட்டிலும் வெளியிலும் அவர்கள் இப்பொழுதடைந்திருப்பதைக்காட்டிலும் அதிகமான ஸ்வதந்த்ரங்களையும் உரிமைகளையும் அவர்கள் பெறவேண்டுமென்றும், ருதுமதீவிவாஹமும், விதவைகள் விவாஹமும் தேசத்தின் நன்மையின் பொருட்டு அவசியம் நடத்தவேண்டியவைகள் என்றும், இன்னும் பலவாறான முயற்சிகள் நம் நாட்டின் நன்மையைக்கோரும் நல்லோர்களால் கைக்கொள்ளப்பட்டு ஒருவாறு நிறைவேறியும் வருகின்றன. அச்சீர் திருத்தங்கள் உண்மையில் நன்மை பயக்கத்தக்கனவா அல்லவா என்ற கேள்விக்கு ஒவ்வொருவனும் அவனவன் கற்றுக் கேட்டிருப்பதற்கு அனுகுணமாகவும் அவனவனது இயற்கை மனப்போக்கையும் ருசியையும் தழுவியுமே பதிலுரைக்கும்படியாயிருக்கும். ஆயினும் அடிக்கடி இது விஷயங்களில்சாஸ்திரங்கள்என்னசொல்லுகின்றன என்ற கேள்வியும் பிறக்கிறது. வடமொழியறியாதவர்களுக்கு அந்தக் கேள்விக்குப் பதில்

(இதன் தொடர்ச்சி 53-ம் பக்கம்)

(52-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்துகொள்வதில் சிறுபான்மை பயனளிக்கக்கருதி, சில பிராசின நூல்களில் ஆங்காங்கு ஸ்திரீகள் சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கும் சுலோகங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு கீழ்வருமாறு எழுதலாயிற்று.

தன் தேகத்தை இரண்டாகப் பிரித்து, (பிரம்மாவானவர்) ஒருபாதி புருஷனாகவும், ஒரு பாதி ஸ்திரீயாகவும் ஆனார். அந்த ஸ்திரீயினிடத்தில் "விராட்" என்னும் புருஷனை உண்டு பண்ணினார்.—மனுஸ்மிருதி அத்தியாயம், I, சுலோகம் 32.

ஸ்திரீகளின் பெயர் சுலபமாக உச்சரிக்கக் கூடியதாயும், மிருதுவாயும், அர்த்தம் ஸ்பஷ்டமாய் விளங்கக்கூடியதாயும், மனோஹரமாயும், மங்களகரமாயும் முடிவில் நீண்ட எழுத்துள்ளதாயும், ஆசீர்வசனம் பொருந்தியதாயு மிருக்க வேண்டும். —மனு, II-33.

ஜாதகர்மாதி க்ரியைகளையெல்லாம் சரீர ஸம்ஸ்காரத்தின்பொருட்டு, மந்திர மில்லாமல் அவையவைகளுக்கு விதித்த காலத்திலும் கிரமத்திலும் ஸ்திரீகளுக்குச் செய்ய வேண்டும். —மனு, II-66.

ஸ்திரீகளுக்கேற்பட்ட வைதிக ஸம்ஸ்காரம் உபநயனத்துக்குச்சமானமாயிருக்கும் விவாஹ விதிதான். தம் புருஷர்களுக்குச் சிச்ருஷை செய்வதுதான் ஸ்திரீகளுக் கேற்பட்ட குருகுலவாஸம்; வீட்டுக்காரியங்களுக்காக மூட்டப்படும் அக்னியே, பிரம்மசாரிகள் காலையிலும் மாலையிலும் ஆராதிக்கும் அக்னியாகும்.

—மனு, II-67.

(சிருங்கார சேஷ்டைகள் என்ற தப்பு எண்ணத்தினால்) ஸ்திரீகள் புருஷர்களுக்கு (அனுவசியமாக) தோஷம் கற்பிக்கும் ஸ்பாவமுடையவர்கள்; இதுகாரணத்தால், அறிந்தவர்கள் ஸ்திரீகள் விஷயத்தில்ஜாக்கிரதையாகவே இருப்பார்கள். ஸ்திரீகள் கற்றவனையும் கல்லாதவனையும் காமக்குரோத வசத்துக் குட்பட்டு நெறிதப்பி நடக்கச்செய்ய வல்லவர்கள்.

—மனு, II—213, 214

பால்யத்திலும் யௌவனத்திலும் விருத்தாப்பியத்திலும் எந்த வயதிலும் ஸ்திரீயானவள் எந்தச் சிறு காரியத்தையும் ஸ்வதந்த்ரமாக வீட்டில்கூடச் செய்யலாகாது. பால்யத்தில் தகப்பன் வசத்திலும், யௌவனத்தில் (தன்னைப்) பாணிக்கிரஹணம் செய்தவன் வசத்திலும், புருஷனிறந்தபின் புத்திரர்கள் வசத்திலும் ஸ்திரீகள் இருக்கக்கடவர்; ஸ்வதந்த்ரமாக (ஒருபோதும்) இருக்கலாகாது.

—மனு, V—147, 148.

தகப்பனிட மிருந்தாவது, புருஷனிடமிருந்தாவது புத்திரர்களிடமிருந்தாவது பிரிந்திருக்க ஸ்திரீயானவள் விரும்பக்கூடாது. அப்படிப் பிரிதலால் (தன் தகப்பன், புருஷன்) இருவர் குலத்துக்கும் இழிவை உண்டுபண்ணுகிறாள். —மனு, V-149

எப்பொழுதும் (புருஷன் அன்பாயில்லாவிட்டால்கூட) பிரஸன்னமான முகத்தையுடையவளாய், வீட்டுக்காரியங்களில் சாமர்த்தியமுள்ளவளாய், பதார்த்தங்களைப் பேணிப் பரிமளிக்கச் செய்பவளாய், அடக்கமான கையுடன் செலவு செய்பவளாய் இருத்தல்வேண்டும்.

—மனு. V-150.

தன் தகப்பனோ, தகப்பன் அனுமதியின்பேரில் தன் சகோதரனோ தன்னை யாருக்கு விவாஹம் செய்துகொடுத்தானோ அந்தக் கணவன் உயிருடனிருக்கிறவரையில் அவனுக்குச் சிச்ருஷை செய்து, அவனிறந்த பிறகும் அவனுக்கு வியபிசாரத்தினாலோ, சிராத்த தர்ப்பணங்கள் செய்யாமல் விடுவதனாலோ தீங்குண்டாகாவாறு நடக்கவேண்டும். —மனு. V-151

விவாஹ காலத்தில் ஸ்வஸ்த்யயனமும் ஹோமமும் (தம்பதிகளின்) க்ஷேமத்தையும் மங்களத்தையும் கருதியே செய்யப்படுகின்றன. (கன்யையை தானம்செய்த மாத்திரத்திலேயே (புருஷனுக்கு) அவளை ஆண்டு நடத்தும் அதிகாரம் உண்டாகிறது. —மனு, V-152

மந்திர பூர்வமாக விவாஹம் செய்த கணவன் (ஸ்திரீக்கு) இகலோகத்திலும் பரலோகத்திலும் எக்காலத்திலும் சுகத்தைக் கொடுக்கிறான். (ஆதலால்) நன்னடத்தையில்லாதவனும். காமுகனும், நற்குணமில்லாதவனுமாயிருக்கிற புருஷனைக்கூட எக்காலத்திலும் ஸாத்வியான ஸ்திரீயானவள் தெய்வத்தைப்போல் உபசரிக்கவேண்டும். —மனு. V-153,154

ஸ்திரீகளுக்குத் தனிமையாக யக்ஞம் கிடையாது (பர்த்தாவின் அனுமதியில்லாமல்) வ்ரதமும் உபவாஸமும் கிடையாது. தன் பர்த்தாவின் சிச்ருஷையாலேயே ஸ்திரீ ஸ்வர்க்கத்தில் பெருமை யடைகிறாள்.

புருஷன் உயிருடனிருக்கும்பொழுதும் இறந்தபிறகும், ஸ்வர்க்காதி லோகங்களையடைய விரும்பும் ஸாத்வியான ஸ்திரீ தன் கணவனுக்கு பிரியமற்ற ஒருவிதமான காரியமும் செய்யக்கூடாது —மனு. V—155,156.

ஸ்திரீகளை அவரவர் புருஷர்கள் எப்பொழுதும் ஸ்வாதீனத்தில் நடத்தக்கடவர். ஸ்திரீகள் விஷயங்களை யனுபவிக்குங்கால் புருஷர்கள் அவர்களைத் தம் வசத்தில் உறுதியாய் நிறுத்தக்கடவர். —மனு, IX—2.

இளமைப் பருவத்தில் (விவாஹத்துக்கு முன்) பிதாவும், யௌவனத்தில் கணவனும், விருத்தாப்பியத்தில் (கணவனில்லாமற் போனால்) புத்திரர்களும் ஸ்திரீயை ரக்ஷிக்கிறார்கள். ஸ்திரீ ஒருபோதும் ஸ்வதந்த்ரியாக இருப்பதற்குத் தகுதியல்லள். —மனு, IX—3

(கன்யாதானத்துக் சேற்பட்ட காலத்துக்குள் தன் பெண்ணை விவாஹம் செய்து கொடுக்காத தகப்பன் நிந்திக்கத் தகுந்தவனாகிறான். (சாஸ்திரத்தில் போகத்துக்காக விதித்திருக்கிற காலத்தில்) தன் பத்தினியைக் கூடாத புருஷன் நிந்தையை யடைகிறான். கணவனிழந்த தன் தாயைக் காப்பாற்றாத புத்திரன் நிந்திக்கத் தகுந்தவன். —மனு, IX-4.

ருதுவுக்குமுன் (கன்யையை) தானம் (செய்யவேண்டியது.) கௌதமர், VIII-2

/ S. மஹாலிங்கமையர், பீ.ஏ., பீ.எல்.

புதுக்கோட்டை கிராம பாடசாலைகள்.— இப்பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு சுகவழி சம்பந்தமான விதிகள், அதாவது கிராமத்தைக் கசமலங்களாலும் இதர ஆபாசங்களாலும் சீர்கேடடையும்படி விடாமல் பாதுகாப்பதற்காக என்னென்ன விதமான சுகாதாரவிதிகளை யனுஸரிக்கவேண்டுமோ அவ்வழிகளையெல்லாம் உபாத்தியாயர்கள் கற்பிக்கவேண்டுமென்றும், தொற்றுவியாதிகள் பரவாமலிருப்பதற்குச் செய்யவேண்டிய முறைகளைப்பயிலுவிக்கவேண்டுமென்றும், மேற்படி சமஸ்தானத்திலுள்ள கிராம பாடசாலை உபாத்திமார்களுக்குச் சுற்றுக்கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாயறிகிறோம்.

ராஜபக்தி

LOYALTY

ராஜபக்தி என்பது, நம்மையாளும் அரசரிடத்தும், அவர் குடும்பத்தினிடத்தும், அவருக்காக ராஜ்யபாரத்தைச் சுமந்து அவருக்கு உதவி செய்துவரும், ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் அனைவர்களிடத்தும் அரசரால் அங்கீகரிக்கப்பட்ட பல சட்டதிட்டங்களிடத்தும் நாம் கொள்ளும் முழுநம்பிக்கையும் விசுவாசமுமே.

நம் இந்துவேத சாஸ்திரங்களில் "சக்தித்திரயம்" அவையாவன: தெய்வசக்தி, குருசக்தி பிரபுசக்தி, என்ற இவற்றின் பெருமைகள் மிக விரிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றனவென நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். இவற்றுள் தெய்வசக்தியாவது உலகம் யாவையும் படைத்தளித்துக் காக்கும் முழுமுதற் கடவுளிடத்துள்ள சக்தி. குருசக்தியாவது இவ்வுலகிலுள்ள சகல ஆன்மகோடிகளிடத்துமுள்ள அஞ்ஞான இருளை நீக்கி ஞானஒளியை அளிக்கவல்ல பரம ஆசாரியர்களிடத்திலுள்ள சக்தி. பிரபுசக்தி என்பது, உலகிலுள்ள துஷ்டர்களை நிக்ரகம்செய்து நல்லோர்களைக் காத்து செங்கோல் வழுவாது நீதி நடாத்தும் மன்னவர்களிடமுள்ள ஆக்ஞா சக்தி. இம்மூன்றிற்கும் உடன்பட்டாற்கே தர்ம அர்த்த காம மோக்ஷம் அறம் பொருள் இன்பம் வீடு என்பவை சித்திக்கும் என்பது தெளிவு.

சகல அண்டங்களையும் படைத்து காத்தழிக்கவல்ல சக்தி கடவுளிடமே இருக்க, மனிதற்கு குருவினது கருணையும் பிரபுவினது தயவும் எதற்கு என யோசித்தால், சிருஷ்டிகர்த்தாவாகிய பகவான் உலகத்துள்ள ஜீவவர்க்கங்களனைத்திற்கும் மாதா பிதாக்களை ஏற்படுத்தியிருப்பதே இதற்கு சமாதானமாகும். இதுபற்றியன்றோ "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" எனக் கூறப்பட்டுள்ளது. இதனால் குரு, அரசர், இவர்களைக் கடவுள் சிருஷ்டிப்பதற்கு காரணம் ஏற்படுகிறது.

அவர்களுள் அரசர் தன் குடிகளுக்கு இடையூறு "தன்னால், தன் பரிஜனத்தால், ஊன மிகுபகைதிறத்தால், கள்வரால், உயிர்தம்மால், ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பது." ஒரு தாய் தன் குழந்தைகளைப் பசி,

தாகம், பலவகைப்பட்ட நோய்கள் முதலிய துன்பங்களினின்றும் காப்பதை ஒக்கும். குருவோ, பிதாவை ஒப்ப தன்னை அண்டினவர்க்கு வித்தை புத்தி ஞானம் இவற்றை அளிக்கிறார். இதுபற்றித்தான் "ஸர்வேஷாம் பிராணிவர்காணாம் பிரபுர் மாதா குருஃ பிதா" என ஆன்றோர் கூறினர். இதனால் ஒரு நாட்டின் ஜனங்களுக்கு அரசன், மாத்ரு ஸ்தானத்தையும் குரு பித்ரு ஸ்தானத்தையுமாக அடைகிறான் என ஏற்படுகிறது. இன்னும் அரசனை மாதாவுக்கு ஒப்பிடுதல் மாத்திரமன்றி "சார்ந்த சற்குரு ஒரு பிதா அவ மறுத்தாள் கின்ற வரசர் ஒரு பிதா" எனக் குமரேச சதகத்தார் பிதாவாகவும் கூறுகின்றார். ஆகையால் "அன்னையும் பிதாவும்" போல குருவும் அரசும் "முன்னறி தெய்வ"ங்களன்றோ.

'முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கிறை யென்றுவைக்கப்படும்': அதாவது செங்கோல் செலுத்தி குடிகளைக்காக்கும் மன்னவன் பிறப்பில் மனிதனாயினும் செயலால் மக்கள் யாவர்க்கும் கடவுளே எனத் திருவள்ளுவனாயனாரும்;'

" குலமகட்குத்தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வமனைவோர்க்குந் தெய்வ
மிலைமுகப்பைம் பூணிறை.

என நீதிநெறி விளக்கத்தாரும் கூறியிருக்கின்றனர். இன்னும்,

'' அரசனுபாத்யாயன் தாய் தந்தை தம்முன்
னிகரில் குரவரி வரிவரைத்
தேவரைப்போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங்கண்டநெறி. ''

என அரசரைத் தேவரைப்போல தொழவேண்டுமென்ற கருத்து பதினெண் கீழ்கணக்கிலொன்றாகிய ஆசாரக்கோவையால் ஏற்படுகிறது. ஆகவே மாதா, பிதா, குரு, அரசன் இவர்கள் கடவுளுக்குச் சமானமானவர்கள். "மாத்ருதேவோபவ, பித்ருதேவோபவ, ஆசார்யதேவோபவ" என்ற வேதவாக்யங்களும் இவற்றினுண்மையை சிறிது வற்புறுத்துகின்றன.

மேற்கூறியவற்றால் அரசனைப் போற்றுதல் வேதசாஸ்திர சம்மதமானது. கடவுளுக்குப் ப்ரீதியானது; நம் ஹிந்து மதத்திற்கும், லோகதர்மத்திற்கு மனுகுணமானது எனத் தெளிவாய் விளங்குகின்றது. இந்த விச்வாஸம் இவ்வுலகத்தில் இன்பங்களையும் பெருமையையும் தந்து, பின் வீடளிக்கும் தன்மையது. 'கும்பிடப்போனதெய்வம் குறுக்கே நிற்ப'தொப்ப மானிடர் ஒவ்வொருவரும் விரும்புகின்ற சதுர்விதபுருஷார்த்தங்களும்ராஜபக்தி, ஸேவை, விச்வாஸம் இவற்றால் கிடைப்பது திண்ணமாயிருக்க அவற்றை விரும்பாதார் உண்டோ?

"ஐங்குறவரா (அதாவது அரசனுபாத்தியாயன் தாய் தந்தை தம்முன்)ணை மறுத்தலும் ஆர்வுற்ற எஞ்சாத நட்பினுட் பொய் வழக்கும் நெஞ்சமர்ந்த கற்புடையாளைத் துறத்தலும் நற்புடையிலாதனர் தொழில்' எனத் திரிகடுகத்தில் கூறப்பட்டுளது. அவ்வாறாக "ஐங்குறவர் ஆணைமறுக்கும் நற்புடையிலாளர்' உண்டானால் அவர்கள் இவ்வுலகில் கொடுந்துன்பத்தை யடைந்து பின் பெருநரகையும் அடைவார்கள். இதற்குச் சந்தேகம் இல்லை.

" கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்களை கட்டதனோடு நேர்" அப்படிப்பட்ட கொடியோரைக் கொலைசெய்து நீக்குதல், நிலத்தில் களையெடுப்பதற்குச் சமானமாக நாயனாரால் கூறப்படுகிறது.

படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களுக்கு நாயகர்களாகிய பிரம்ம, விஷ்ணுருத்ரர்களுக்கு இறையாகிய ஆதியான் உலகில் அரசவிக்கிரகம் (ராஜ விக்ரகம்) ஒன்றை சிருஷ்டித்து அவரிடம் ஷடி தேவர்களின் அம்சத்தை அளித்து அஷ்டதிக்கு பாலகர்களின் பெருமை யருமைகளுக்குக் காரணமாகிய தனதம்சத்தையும் தர்ம தண்டமென்னும் ஆக்யா சக்தியுடன் அளித்து ராஜரீகம் நடத்த அனுக்ரகித்திருக்கிறார்.

அப்படியில்லாதிருப்பின் கணக்கிற் கெட்டாத மானிடப் பிறவிகளிப் பூமண்டலத்தில் தோன்றி இருக்க, மற்றவரில் சிறிதும் வேறுபடாத வெளித் தோற்றமுடைய ஒருவர் அவர்களனைவரையும் அடக்கி யாண்டளிக்கக் காரணம் யாது? இவ்வாறு ஏற்படுத்தியதனால், கடவுள், தன் பெருமையையும் சக்தியையும் யாவர்க்கும் காட்ட நினைப்பதாகத் தோன்றுவதன்றியும், பல உலகங்களுக்கும் ஓர் இறைவன் உண்டு, என்னும் விஷயத்தை அவரால் நியமிக்கப்பட்ட இறைவனது அருமை பெருமை

களால் யாவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் அவர் கொண்டிருப்பது போலும் தோன்றுகிறது.

கடவுளை நாம் காண்கிறதில்லை. ஆயினும் அவரது ஆக்ஞையாகிய தரும தண்டத்தால் சகல சராசரப் பொருள்களும் தத்தம் கருமங்களைச் சரிவரச் செய்துவருகின்றன. சூரிய சந்திரர்கள் ஆகாயத்தில் பிரகாசிக்கின்றனர். பல கோள வடிவான மண்டலங்களும் தத்தமக்குரிய நெறி வழுவாது நிற்கின்றன. இம்மாதிரியே ஒரு அரசன் தானாகவே தன்னாடு முழுவதும் சென்று குடிகளை நேரில்கண்டு அவர் குறைகளை விசாரிக்காவிடினும் அவரது தர்ம தண்டத்தின் சக்தியால் அவரால் நியமிக்கப்பட்ட பல உத்யோகஸ்தர்களும் தத்தமக்குரிய தொழில்களைச் சரிவரச் செய்து குடிகளைப் பரிபாலிக்கின்றனர். இதுதான் தர்மம். அரசன் தன் முக்கிய நகரிலிருந்துகொண்டு தன் செங்கோலோச்ச அவனது தர்மதண்ட சக்தி ராஜ்ய முழுவதும் பரவி பல்லோரையும் தத்தம் நெறியில் நாட்டுகின்றது. ஆகவே காவலன் தன் செய்கையில் கடவுளை யொப்பான்.

நாம் உலக வியவகாரங்களில் தலையிட்டபின், எவ்வளவோ நல்வினைகளையும் தீவினைகளையும் செய்திருக்கிறோம்; செய்தும் வருகிறோம். ஆயினும் நம்மவரில் தெய்வ சக்தியை நம்பினவர் அத் தீவினைக்காக, கடவுளது கோபத்திற்களாகிறோ மென்றஞ்சி இனியாகிலும் மனம் வாக்கு காயம் இவற்றின் செய்கைகளை சுத்தமாய் வைத்துக்கொள்ள நம்மாலான மட்டும் பிரயாசப் படுகிறோம். கடவுளுக் கஞ்சுவது போலவே அரசனுக்கும் அஞ்சவேண்டும். ஏனெனில் "குடி புறங்காத் தோம்பிக் குற்றம் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில்." தன் குடிகளிடத்துக் காணப்படும் குற்றங்களைத் தண்டனையால் விலக்குவது அவனது கடமை. அரசன் தனது கடமையைச் செய்தலே செங்கோன்மை.

ஒரு நாட்டிற் கரசனில்லா விடில் அது பாழ். ஆன்ம கோடிகளனைத்தும் தத்தமக் கிஷ்டமான காரியங்களில் தலையிட்டுக்கொள்ளும். அதனால் எங்கும் கலகமும் சமாதான மின்மையும் பிரிவினையும் ஏற்படும். செங்கோல்மன்னருடைய தருமத்திற்குக் கட்டுப்பட்டல்லவோ இவ்வுலகம் நாகரீகத்தில் முதிர்ந்து நாளுக்கு நாள் செழித்தோங்குகின்றது. "கண்ணெனப் படுவ மூன்று! காவலர் கல்வி காமர் விண்ணினைச் சுழல ஓடும் வெய்யவன் என்னும் பேரார் எண்ணினுன்றலைக் கண்வைத்த கண்ணுமொன்றில்லையாயின் மண்ணினுக்கிருளை நீக்கும் வகை பிறிதில்லை மன்னா!!" அரசனில்வழி இவ்வுலக வியவகாரங்கள் சரிவர நடைபெறாது என்னும் இவ்விஷயம் சூளை மணியில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வுலகமாகிற ஒரு சரீரத்திற்கு அரசனென்ற கண் அவசியம் வேண்டும். அது இல்லாவிடில் உலகத்திருள் (கலகம் அநீதி) முதலியன நீங்காது. "வானோக்கி வாழும் உலகெலாம் மன்னவன் கோனோக்கி வாழும் குடி" என்று தமிழ் வேதத்தில் கூறியபடி குடிகளெல்லாம் அரசனை நோக்கி வாழ்கின்றனர்.

ஆகவே இம்மாதிரியாக நம் தர்மநூல்களெல்லாம் அரசனைப் போற்றுதல் யாவர்க்கும் அழகு. அதனால் பலவித நன்மைகள் ஏற்படும் என முறையிடுகின்றன. இவ்வுண்மைகளைப் பற்றி சற்றே சிந்திக்குங்கால் நீதிக்கு வரம்பாகிய ஆங்கில அரசாக்ஷியால் நாம் அடைந்திருக்கும் நன்மைகள் பல. இரண்டொன்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன்.

நம் தாய் நாடாகிய இந்தியா முழுதும் வேற்றரசர் துன்பம், உட்போர், கள்வர் பயம், முதலிய இவற்றால் சிறிதும் அஞ்ச இடமின்றி நிம்மதியாய் இருக்கிறது. இப்படியிருப்பதினால் அவரவர்கள் தத்தமக்கிஷ்டமான ஜீவனோபாயங்களைத் தேடிக்கொண்டு பொருள் சம்பாதித்து இன்பம் அனுபவிக்கின்றனர்.

எந்த ஜாதியாரும் எந்த சமயத்தினரும் தத்தமக்கிஷ்டமானபடி கடவுளைப் போற்றும் சுவதந்திரம் இக்காலத்தன்றி எக்காலத்திருந்தது? சில மகம்மதிய மன்னர் காலத்தில் அந்தணர் நூலும் அறமும் என்ன கதியாயின வென்பதை நாம் அறிவோம். அவர்கள் மாத்திரமோ? இந்து அரசர்களும் தத்தம் மதத்திற்கு மாறுபட்டவர்களை எவ்வாறு வருத்தினர். இவற்றை யோசிக்குமிடத்து நாயனார் "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய் நின்றது மன்னவன் கோல்" என்று கூறியது, ஆங்கிலமன்னவர் செங்கோலுக்கு முற்றிலும் பொருத்த முடைத்து. இக்காலத்தில் அந்த

ணர் நூல் மாத்திரமன்றி சகல மதத்தவர் நூல்களும் தர்மங்களும் நிலையாய் நிற்கின்றன.

குடிகள் யாவர்க்கும் பொதுவாகச் சட்டதிட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யாவரும் அதற்கடங்கியே நடக்கவேண்டும். தண்டனையும் யாவர்க்கும் பொதுப்பட்டது. குடிகளில் யாவனானாலும் சரி, தக்க யோக்யதையுடையவனாயின் உயர்ந்த உத்யோகங்களை அடையலாம் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அவதார மெனத்தகும் விக்டோரியா மஹா ராணியவர்கள் "எந்த ஜாதியனராயினும் எந்த சமயத்தவராயினும் சரி, தங்கள் கல்வி சாமர்த்தியம் நாணயம் இவற்றால் ராஜகாரியத்தை நடத்த யோக்யதை யுடையவரானால் நம் ராஜாங்கத்தில் தக்க பதவிகளை அடையலாம்" எனக் கூறி யிருக்கின்றனர். அம்மாதிரியே நம்மவர்கள் தற்காலத்தில் ராஜாங்கத்தில் மஹா உன்னத பதவியை அடைந்து வருகிறார்கள். ஆனதால் ஆங்கில அரசர்க்குக் குடிகளில் "ஏதிலருமார் வலரு" மில்லை.

ஆங்கிலர் நம் நாட்டைக் கைக்கொண்ட பின்னன்றோ, ஐக்கியம், ஒற்றுமை இவைகள் ஜனங்களுக்குள் ஏற்படுகின்றன. பலமதத்தவர்களாயினும், ஒரு தாய் நாட்டார், என்ற எண்ணமும் இந்திய ஜனங்களுக்குண்டாகின்றது.

தவிர, மனத்தைத் சுத்தப்படுத்தும் கல்வியபிவிருத்தி செய்யக் கலாசாலைகளும் சரீர சுகத்தை விருத்திசெய்ய ஆஸ்பத்ரிகளும் இக்காலத்தில் ஒரு சிறு கிராமத்திலுங்கூட ஏற்பட்டிருக்கின்றன. தவிர, தந்தி, தபால், ரயில் இவற்றால் போக்குவரவுக்கும் வியாபாரத்திற்கும் எவ்வளவோ சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இதைப்போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான நன்மைகளை நாம் அடைந்திருக்கிறோம். ஈஸ்ட் இண்டியா கம்பனியாரிடமிருந்த இந்த ராஜ்யத்தை நம்முடைய மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியாரின் பிதாமகியாகிய விக்டோரியா மஹாராணியார் தானே ஆள விரும்பி, ராஜ்ய பாரத்தைக் கைக்கொண்டு செங்கோல் செலுத்தி சக்ரவர்த்தினி என உலக முழுவதும் தன் கீர்த்தி பரவ, அநேக நாள் ஆண்டபின், ஏழாம் எட்வர்ட் மகிபதியாரும் தன் தாயின் அருமைக்குணங்களைப் பின்பற்றி யாவருங்களிக்க உலகமுழுதும் ஓர் குடைக்கீழ் ஆண்டுவந்தார். ஈச்வர சங்கற்பத்தால் அவர் இவ்வுலகை நீங்க, அக்குடும்பத்திற்கே திலகமாய் விளங்கும், மாக்ஷிமை தங்கிய ஜியார்ஜ் மன்னர் நமக்கு சக்கரவர்த்தியாய் விளங்குகிறார். இவர் நம்மவரிடத்து கொண்டிருக்கும் அன்பிற்கு இவர் இந்நாட்டிற்கே வந்து, நம் பழமை க்ஷேத்திரமாகிய அஸ்தினாபுரமென்னும், டெல்லி மாநகரில் முடிசூட்டிக்கொண்டதே தகுந்த சான்றாகும். அக்காலத்து அவர் நமக்களித்த வரன்களும் அவர் நம்மேல் கொண்டிருக்கும் பிரியத்தை வெளிக்காட்டுகின்றன. தவிர, அவரால் தமக்குப் பிரதிநிதியாய் அமைக்கப்பட்ட லார்ட் ஹார்டிஞ் பிரபுவின் பெருமையைப்பற்றி நாம் தினமும் தினசரிப்பத்திரிகை முதலியவற்றில் படித்துள மகிழ்கின்றோம்.

நம் நாட்டிலுள்ள படியாத கிராமவாசிகளுங்கூட காலஞ்சென்ற நம் விக்டோரியா மஹாராணியாரின் பெருமையை இன்னும் புகழ்வதை நாம் தினமும் கேட்கிறோம். அக்குடும்பத்திற்றோன்றிய நம் மன்னவர் தம்பெரியோர்க்குக் குடிகளைக்காக்கும் திறனில் "பிது: சதகுணம் புத்திர:" என்றபடி சிறிதும் குறைந்தவரல்ல. இவர் டெல்லி மாநகரில் இருந்த போது சாதாரண ஜனங்கள் தம்மைக் காண விரும்புகிறார்களென அறிந்ததும் ஓர் உயரமான கட்டிடத்தில் யாவரும் கண்டுகளிக்க தன் தரும பத்தினியாகிய மாக்ஷிமைதங்கிய மேரியம்மையாருடன் இரண்டொருமணி நேரம் தினமும் காட்சிகொடுத்தார். நம்மவரில் டெல்லிக்குச் செல்ல யோக்யதையுள்ளவர்கள் ஆங்கே சென்று தாம் கண்களைபெற்றதன் பயனாக ராஜ தம்பதிகளைக் கண்டு களித்தார்கள்.

இந்நாகரீகம் முதிர்ந்த 20-ம் நூற்றாண்டில் நாம் இவ்வாறிருப்பது அதிசயமல்ல. நம் நாட்டார் எக்காலத்தும் ராஜபக்தியிற் சிறிதும் குறையாதவர். ஸ்ரீ ராமபிரான் கானக மேக நேர்ந்த காலத்து, குடிகள் எவ்வாறு பின்தொடர்ந்து வருந்தினர். ஹரிச்சந்திரன் நாடு விட்டு காட்டகமேகின காலத்து கலங்காத குடிகளுண்டோ? அக்குடிகள் பின்னும் அரசன் ராஜ்யத்தை யிழந்தவனாயிருந்தும் அவனது ஆஞ்ஞைக்குள்பட்டு ராஜ விச்வாஸத்தா

லன்றே, விச்வாமித்திர முனியை அரசாகக் கொண்டனர். பாண்டவரிடமன்புகொண்டு பரிதபித்த குடிகளைப்பற்றி, நாம் கேட்டதில்லையோ ?

இதிகாஸ புராண க்தாநாயகர்களைப் பற்றி பேசுவதென்னத்திற்கு? நம்மிந்து தேசசரித்திரத்தில் விவரிக்கப்படும் விக்ரமார்க்கன், சந்திரகுப்தன், சாலிவாகனன், அக்பர் முதலியோர் காலத்துக் குடிகள் எவ்வாறு தத்தம் இறைவர்களுடன் நடந்துகொண்டனர். இவைகளினின்றும் நம் நாட்டார் எக்காலத்தும் அரசபக்தியுடையவர்களாகவே இருக்கிறார்கள் என்பது வெளிப்படை.

நம் தமிழ் நாட்டில், "ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன?" என்ற ஒரு பழமொழி வழங்குகின்றது. இப்பழமொழி ஒரு கொடிய அரசன் ராஜ்யபாரம் தாங்கின காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. அக்காலத்தும் குடிகள், ஸ்ரீ ராமனைப்போன்ற செங்கோன் மன்னர் ஆண்டாலும் சரி, இராவணனைப்போன்ற கொடியோன் ஆண்டாலும் சரி, அரசன் எத்தகையோனாயினும் சரி, நாம் நம் கருமங்களைச் சரிவர நடத்தவேண்டும். ராஜ விச்வாசங்கொள்ளவேண்டும் என எண்ணி அரசனுக்கு வேண்டிய உதவி புரிந்து மிக்க த்ருப்தியுடன் வாழ்ந்திருக்கிறார்கள்.

நம் தரும சாஸ்திரக் கொள்கைகளும் பூர்வ சரித்திரங்களும் இவ்வாறிருக்க, நாமும் நம் முன்னோர்களைப் பின்பற்றி ராஜ பக்தியுடன் இருத்தல் நமது கடமையுடன் தருமமுமாம். நம்மைப்போல ஆசியர்களாகிய ஜப்பானியர்களுடைய பழக்க வழக்கத்தை இவ்விஷயத்தில் சிறிது பார்ப்போம். இந்துக்கள் வீடுகளில் பூர்வகாலத்தில் சுவாமியறையென்று ஓர் அறையிருப்பதுண்டு. இக்காலத்தும் சில பக்திமான்களின் வீடுகளில் அவ்வாறிருப்பதைக் காணலாம். அவ்வறைக்குள் அவரவர் தொழும் கடவுளின் விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும். சொந்தவீடும் போதுமான அறைகளும் இல்லாதவர்கள் ஒரு பெட்டியையாவது அறைக்குப் பதிலாய் உபயோகித்து ஓர் ஒதுக்குப்புறமாக வைத்திருப்பதுண்டு. இங்கு தெய்வ விக்கிரகங்களுக்கு எப்படியோ, அப்படியே ஜப்பான் தேசத்தில் ராஜவிக்கிரகங்களுக்கும் ராஜ படங்களுக்கும் ஒவ்வொரு வீட்டிலும் தனியறைகளோ ஒதுக்கிடமோ உண்டு. அவ்வாறில்லாத வீடே கிடையாது. அரசன், தன் வீட்டிற்கு எக்காலத்திலாவது வரக்கூடும், அதற்கு எப்பொழுதும் முன் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று அவர்கள் இவ்வாறு விடுதிகள் விட்டிருக்கிறதாகத் தெரிகின்றது. உண்மையில் அரசன் வருகிறதில்லை. ஆயினும் அது அத்தேசத்தவரின் ராஜ பக்தியை நன்கு விளக்குகின்றது.

இத்தகைய பக்தி சகலருடைய மனத்திலிருப்பதாலன்றே கடவுள் அவர்களிடம் கருணை கூர்ந்து அத்தேசத்தாரை சுமார் 50, 60 வருஷங்களுக்குள்ளாக மஹா உன்னத பதவிக்குத் கொண்டுவந்திருக்கிறார். ஆனதால், ஜப்பானியரைப்போல, நம்மரசர், அரசகுடும்பத்தார் இவர்களின் பிறந்த நாட்கள், இவர்கட்கு சந்தோஷமான தினங்கள் முதலியவற்றை, யாவர்க்கும் பொதுவான பண்டிகை நாட்களாகக்கொண்டு களிப்படைந்து அவைகளின் மூலமாக நம்மனதிலுள்ள ராஜ விச்வாஸத்தை வெளியிடுவோமாக. பிரபுசக்தி, குருசக்தி, தெய்வசக்தி, இவற்றால் ஏற்படக்கூடிய சகல நன்மைகளையும் கருணைபங் கடவுள் நமக்கு அளிப்பாராக !

S. சிவராமய்யர், பீ. ஏ., எல். டி.

பல்லாரி ஹைஸ்கூல்களில் பைனல் பரீட்சை முடிவு.—பல்லாரியில் முனிஸிபல் ஹைஸ்கூல் ஒன்றும், வார்ட்லா கலாசாலையைச் சேர்ந்த ஒரு ஹைஸ்கூலும் ஆக இரண்டு ஹைஸ்கூல்களிருக்கின்றன. இவ்விரு பள்ளிக்கூடங்களிலும் ஸ்கூல்பைனல் பரீட்சைக்குச் சென்ற மாணவர்களின் கதி மிக்க பரிதாபகரமாயிருக்கிறது. முந்தின பள்ளிக்கூடத்திலிருந்து இப்பரீட்சைக்கு 33 மாணவர்களும், பிந்தின ஹைஸ்கூலிலிருந்து 20 மாணவர்களும் அனுப்பப்பட்டதில்ஒருவராவது தேறவில்லை. பாஸ்காலம் பூஜ்ஜியமாயிருக்கிறது. இப்பரிதாபகரமான முடிவானது அப்பள்ளிக்கூடங்களில் கீழ்தர வகுப்பில்வாசித்துவரும் மாணவர்களைப் பாதிக்குமென்பதில் சந்தேகமில்லை, ஏனெனில் ஸ்கூல் பைனல் வகுப்பில் அதிக மாணவர்கள் கூட்டமாக இருப்பதை முன்னிட்டு 5-வது பாரத்திலிருந்து கல்வியில் மிகவும் கெட்டிக்காரத்தனமுள்ள மாணவர்களில் மிகவும் சொல்பமான பேர்தான் மேல் வகுப்புக்கு மாற்றப்படுவார்கள்.

தேகப்பயிற்சி

PHYSICAL EXERCISE

நம்தேசத்தில் நம் சிறுவர்களுடைய தேகப் பயிற்சி விஷயத்தில் நாம் போதுமான கவலை செலுத்துவதில்லை என்பது தெரிந்த விஷயமே. தம் பிள்ளைகள் நன்றாக வாசித்து சீக்கிரம் முன்னுக்கு வரவேண்டுமென்று மட்டும் பெற்றோர்கள் நினைக்கிறார்களே தவிர, அதற்கு ஆதாரமாக, தேகாரோக்யமுடையவர்களாயும், பலமுள்ளவர்களாயும், இருக்கவேண்டியதவச்யம் என்பது மட்டும், அவர்கள் மனதிற் படுவதில்லை. சிறுவயதிலேயே பிள்ளைகளை விளையாடக்கூட விடாமல், மிதமிஞ்சி படிப்பில் வாட்டுகிறார்கள். இதனால் அச்சிறுவர்களுக்கு அநேக கெடுதிகள் ஸம்பவிக்கின்றன. நாளுக்கு நாள் அவர்கள் பலவீனர்களாயும், சரீர ஸௌகமில்லாதவர்களாயும், ஆகிவிடுகிறார்கள். இதனால் அவர்கள் சிரமஸாத்யமான உயர்தரப்படிப்புப் படிக்கவும் பின்னால் ஊக்கத்தோடு தமக்குள்ள வேலையைச் செய்வதற்கும் அசக்தர்களாகிறார்கள். பிள்ளைகள் முன்னுக்கு வரவேண்டுமென்று ஆசைப்பட்ட பெற்றோர்களுக்கு, பிள்ளை பிழைத்தால் போதுமென்றாய்விடுகிறது. "உடம்பு வேண்டாம், கையை விடு" என்னும் பழமொழிக்குத் தங்களை திருஷ்டாந்தமாக்கிக் கொள்கிறார்கள்.

தத்ஸமயம் நம் சிறுவர்களுடைய தேகப் பயிற்சியின் நிலைமையை சற்று கவனிப்போம். பள்ளிக் கூடங்களில் வாரம் ஒருதரம், இரண்டு தரம் தேகப்பயிற்சிக்காக "கிளாஸில்" ட்ரில் (Drill) நடத்துகிறார்கள். ஆனால் கோபாலன் தனக்குக் காலில் சுளுக்கென்றும், கிருஷ்ணன் வயிற்று வலி என்றும் ராமன்வீட்டில் அவஸர வேலையிருக்கிறதென்றும் ட்ரில் கிளாஸை விட்டுத் தப்பவே வழிதேடுகிறார்கள். சிறு பையன்களின் மனோ நிலைமையையும், 'ட்ரில்'லின்,ஸ்வபாவத்தையும் சேர்த்து நோக்குவோருக்கு, இது ஆச்சரியமல்ல என்பது தெரியும். 'ட்ரில்' அப்யாஸத்தில் மனதிற்கு உத்ஸாக ஹேதுவாக ஒன்றும் இல்லாததால், அது ஒரு பெரும் உபத்திரவமாகத் தோன்றுவது இயற்கையே யல்லவா? இவ்வாறு நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக்கொள்ள, பொய்யேனும் சொல்லி தப்பித்து வீட்டிற்குவந்தால், சிறுவர்களின்கதி [illegible] வீட்டில், வைத்துவிட்டு விளையாடப் புறப்படும் ஸமயம் தகப்பனோ தாயாரோ இவ்விளையாட்டிற்கு க்ரோதியாகிறார்கள். பள்ளிப்பாடங்களை விளக்கடியில் உட்கார்ந்து படித்தாலொழிய முன்னுக்கு வரப்போகிறதில்லை யென்றும் வீட்டில் அமைதியாயிருந்து படிக்கும்படியும் "கொக்கிற்கு ஒன்றேமதி" என்று விளையாட்டிலேயே கவனத்தை செலுத்தாதபடியும், கடிந்துகொள்ளப் படுகிறார்கள். படித்து விஷயந்தெரிந்த தகப்பனார்களே, குழந்தைகளுக்கு தேகப்பயிற்சியின் ஆவச்யகத்தை கவனியாதுவிட்டால் படிப்பில்லாத தாய்கள் எவ்வாறு அதைக் கவனிக்க பிரமேயமேற்படும் ?

ஸ்வபாவமாகவே, சிறுவர்களுக்கு விளையாட்டில் விருப்பமதிகம். ஆகைபால் மெள்ள இந்தக் கட்டுப்பாடுகளினின்றும் தப்புவிக்கவும், பெற்றோர்களை ஏமாற்றவும் பார்க்கிறார்கள். அந்தோ பாபம்! இவ்வளவு பிரயாஸையின்மேல் வெளிச்சென்றவர்களுக்கு விளையாட ஸரியான ஸ்தானமும் ஸாதநங்களுமுண்டா? அதுவுமில்லை. புழுதிநிறைந்த தெருக்களும், சாக்கடை நாற்றமுள்ள சந்துகளுமே இவர்கள் ஒளிந்து விளையாடுமிடங்கள்! புழுதியும், துர்வாஸனையுமே நிறைந்த காற்றை உட்கொள்ளும் சிறுவர்கள் தேகம் கெடுதியடைவது ஸகஜமேயல்லவா ? மேலும், தெருவிளையாட்டில், கண்ட பையன்களோடெல்லாம் பழக நேரிடுகிறது. கெட்டஸாகவாஸத்திற்கு ஸௌலபமான வழியில்லையா இது ?இன்னமும், ஒருவர்மேல் ஒருவர் மண் கல் வீசுவதும், அடிப்பதும் காயப்படுத்துவதும் தினஸரி ஸம்பவங்கள் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. இதுமட்டா! இந்தப் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும், இப்பையன்கள் மூலமாய் மனஸ்தாபம் நேரிடுகிறது. வெளியிலேயே விடாமல் அடைத்துவிட்டாலோ, அவர்கள் வீட்டில், குறும்பு செய்துகொண்டும், அழுமூஞ்சிகளாயும், இருக்கும் சில நல்லகுணங்களை பிடிவாதத்தால் சிறிது சிறிதாய் இழந்துகொண்டும், காலங்கழிக்கிறார்கள்.

இக்காரணங்களை யெல்லாம் யோசித்தால் நம் சிறுவர்களுக்கு தேகாப்யாஸம் அவச்யமென்றும், அதற்கு வேண்டிய ஸாதகங்களை

நாம் செய்து கொடுக்கவேண்டுமென்றும் ஸித்தமாகிறதல்லவா ?

என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாம் என்று கவனிப்போம். இந்தப் பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தியிருக்கும் 'ட்ரில்'லினுல் பிள்ளைகளுக்கு நல்ல பிரயோஜனம் கிடையாது. தேகபலத்திற்கும், மனோத்ஸாகத்திற்கும் ஹேதுவான விளையாட்டுகள் எல்லாம் சிறுவர்கள் ஆவல்கொள்ளும் விதம் இருக்கவேண்டும். இவ்விஷயத்தில் ஐரோப்பியர்கள் தம் குழந்தைகளைப் பயிற்றும் விதத்தைக் கவனித்து அதைப் பின்பற்றினுல் நாம் நன்மையடையலாம் என்பதில் ஐயமில்லை.

மனிதன் இவ்வுலக இன்பங்களை நுகர்வதானுலும் ஸரி பரலோக ஸாதநம் தேடுவதானுலும் ஸரி, ஒருவனை தண்டிக்கவேண்டினும் ஸரி, தண்டிக்கப்படுவதாயினும் ஸரி, எதற்கும் இன்றியமையாதது தேகவன்மையே என்றுஐரோப்பியர்கள் நன்கு அறிந்துளார்கள். அதை யநுஸரித்தே வீடுகளிலும், பொது இடங்களிலும் கலா சாலைகளிலும், தேகப்பயிற்சிக்குத் தகுந்த ஸாதநங்களை குறைவின்றி யளித்து வைக்கிறுர்கள். இதுபோலவே, இவ்விடத்தும் ஒவ்வொரு ஊரிலும், பொது ஜநங்களும், கலாசாலை அங்கத்தினரும் தகுந்த முயற்சி செய்யவேண்டும். விளையாட ஏற்படுத்துமிடம் புல் படர்ந்த மைதானங்களாயும், மணல் தரைகளாயும் இருப்பது நலம்,சுத்தமான காற்று உலவும்படியான வெளிகளாகவேயிருத்தல் வேண்டும். இவ்வித வெளிகளில் கீழ்க்கண்ட சில ஏற்பாடுகளைச் செய்வது அநுகூலமாயிருக்கும்.

'ஸெகண்டரி' 'ஹைஸ்கூல்'களில், பெரிய மைதானங்களில் 'பாட்மின்டன் கோர்ட்டு' (Badminton Court) ஏற்படுத்தலாம். இந்தக் கோர்ட்டுகளில் பிள்ளைகளோடுஉபாத்யாயரும் சேர்ந்துவிளையாடுவது, பையன்களை உத்ஸாகப்படுத்துவதால் மிகுந்த நன்மை செய்யும். ஆரம்பத்திலாவது, இந்த விளையாட்டிற்கு வேண்டிய பந்து, வலை முதலியவைகளை, பள்ளிக்கூடத்துப் பண்டு (Fund) கொண்டு வாங்குவதே நலம். பணச்செலவு மிகுதியாக இருந்தால், அநேக சிறுவர்க்கு அந்த விளையாட்டில் கலக்க முடியாமற் போய்விடும். அவர்கள் உத்ஸாகமும் குறையும். பையன்கள் பெரியவர்களாயிருந்தால் காலடிப்பந்துமுதலிய சற்றுமுரட்டுத்தனமாயும், தேகப்பயிற்சிக்கு மிக்கச் சிறந்ததாயமுள்ள விளையாட்டுகளையும் ஏற்படுத்தலாம்.

இவ்விதம் தயார் செய்யும் விளையாட்டு மைதானங்களை சுத்தமாகவும், ரம்மியமாகவும் வைத்திருக்கவேண்டும். இவைகளில் சில பெரிய மரங்கள் வைத்திருப்பது நல்லது. பள்ளிக்கூடம் விட்டதும் இம்மைதானங்களுக்கு சிறுவர்களை உபாத்யாயர் அழைத்துவரப் பழகவேண்டும். மனோதத்வத்திற்கும், வயதிற்கும் தக்கபடி, பையன்களைப் பிரித்து, உபாத்யாயர், கிளியந்தட்டு, நொண்டி, கண் கட்டிப்பிடித்தல், பந்தாட்டம், முதலிய விளையாட்டில் குறைந்தது ஒருமணியாவது விளையாடச் செய்வது நன்மை விளைக்கும். சிறுவர்களுக்கும் உத்ஸாகமுண்டாகும். உபாத்யாயர் அருகிருப்பதால், சண்டையிடவும், கெட்ட ஸகவாஸத்திற்கும், கெட்ட ஸம்பாஷணைக்கும் இடமிராது. இதைவிட சிறுவர்களுக்கு நன்மை விளைப்பது எது?

மேலும், நமது பள்ளிக்கூடங்களில் எக்ஸ்கர்ஷன் (Excursion) என்னும் உபாத்யாயர் பிள்ளைகளுக்கு பல விடங்களையும், அங்குள்ள காட்சி விசேஷங்களையும், காட்டிவரும் வழக்கம் நடந்து வருகிறது. தேகபலத்திற்கும் மனோத்ஸாகத்திற்கும், அறிவு விசாலிப்பதற்கும் ஹேதுவான இந்த நல்ல ஸாதநம் இன்னும் அதிகமாகவேண்டும். வீட்டிலுள்ள பெரியவர்களும், அடிக்கடி பையன்களோடு வெளியில் ஓடி உலாவி வாவேண்டுவதும் அவச்யம்.

இவ்வாறு செய்தால், ஸரியாக ஓடி விளையாடி நல்ல காற்றை உட்கொள்ளுவதால், ரக்த சுத்தமும், ஜீரணமும், நல்லபசியும், ஸுக நித்திரையும் உண்டாகி, தேகம் புஷ்டியாக வழியுண்டாகுமல்லவா? பின்பு அவர்களே கூரிய புத்தியுடன் மேல்படிப்பை கவனிப்பதில் ஸந்தேகமில்லை. மற்ற காரியங்களைப்போல் இக்காரியத்திலும், பொது ஜநங்கள் தலையிட்டால் தான் சீக்கிரம் கைகூடும். ஆகையால் இந்தியாவின் அபிவிருத்தியை மனதில் கொண்டவர்களும், தம் பிள்ளைகள் உலகத்தில் சிறந்த கார்யங்களைச் செய்து கீர்த்தியடையவேண்டும் என்ற ஆசையுள்ளவர்களும், சிறுவர்கள் தேகப்பயிற்சி விஷயமாக உதவி புரிவதவச்யம்.

துறவி

'THE HERMIT'

வெகு தூரத்துக்கப்பாலுள்ள ஒரு வனத்தில், ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமல் பால்யம் முதல் புல் தரையைப் படுக்கையாயும், குகையை வீடாயும், விருக்ஷங்களின் கனிகளை உணவாயும், மாசற்ற கிணற்று நீரைப் பானமாயுங் கொண்ட சந்நியாசி யொருவர் வசித்து வந்தார். நாள் முழுவதும் கடவுளைத் தியானுஞ் செய்வதே அவரது வேலைகளாகும். அவனது குணாதிசயங்களைப்பற்றித் தோத்திரஞ் செய்வதே அவருடைய இன்பங்களாகும்.

தம் வாழ்நாளை யிவ்வாறு போக்குவதே மோக்ஷமெனக்கருதின அம்மாஹனுக்குத் திடீரென " இவ்வுலகில் சிற்சிலவேளைகளில் துன்மார்க்கர்கள் க்ஷேமமடைந்து சன்மார்க்கர்கள் வறுமையிற் றுன்பமனுபவிக்க, தருமமென்பது வலியற்றிருந்து அதருமம் வெற்றியடைவது நியாய மாகுமா? எல்லாமறிந்த ஈசன் சம்மதந்தான் அதிலுண்டோ?" என்ற ஒருவித சந்தேகம் மனத்திலுதித்தது.

உதிக்கவே, பரந்துள்ள ஓசைவற்ற தடாகத்தில் பிரகிருதியின் சாயல், நீர்மட்டத்தில் விருக்ஷங்கள் வேரூன்றிக் கீழே வளர்ந்து, நான்கு கரைகளும் கீழ் சாய்ந்து, அந்தந்த வர்ணங்களுடன் வானம் பிரதிபிம்பித்துத் தோன்றியும், அத்தடாகத்திலொரு கல் விட்டெறிந்தால் அதில் வரிசை வரிசையாய் அலைகளுண்டாகி அலைகளுடன் சூரியன் விண்டு விண்டும், செடி கொடி விருக்ஷங்களெல்லாம் ஆடியசைந்து கலங்கி ஒன்றன்பின் ஒன்றாய் ஓடுகின்றனவன்றோ? அம்மாதிரியே மஹானுடைய மனமுங்கலங்கி அவ்வனியாயத்தினுண்மையறிய அவாக்கொள்ளவே, அவரது எண்ணங்களெல்லாம் நிலைகுலைந்து பற்பல விஷயங்களிற் புகுந்துவிட்டன. புத்தகங்களிலிருந்தும் மானிடரிடமிருந்தும் அறிந்ததைத் தானே பரீக்ஷித்துச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டித் தண்டத்தைக் கையில் வாங்கிக் காஷாய வஸ்திரந்தரித்து, ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ச்சிசெய்யக் குகையிலிருந்து வெளிக்கிளம்பினர்.

காலைப்பொழுது முழுதும், விஸ்தாரமான அத்துவானத்தில் வழிதெரியாமல் அலைந்தார். சாயங்காலமானதும் சுந்தரமேனியோடு நல்லாடைதரித்து காற்றில் சற்றுச்சற்று அசைந்து நின்ற சுருட்டை மயிருடன் கூடின வாலிபனொருவன் எதிர்ப்பட்டான்: க்ஷேமவார்த்தை விசாரித்த பிறகு வழி நடக்கும் சிரமம் தோன்றுவண்ணம் பல வியவகாரங்களைப்பற்றிப் பேசி ஒருவரை விட்டொருவர் பிரிந்துபோக மனம் வாாமல் வயதிலவர்களுக்குள் வித்தியாச மிருந்த போதிலும் மனதொப்பி, இனிய மொழிகளிருவரும் பேசிச் சென்றார்கள். நேரான மார்க்க மடைந்து அவர்கள் சிறிது தூரம் போவதற்குள் சூரியன் அஸ்தமித்தான். சிருஷ்டியாவையும் அமர்ந்திருந்தன. மதியுந் தன்னுநந்த கரங்களாற் பத்மங்களை மூடி குமுதங்களினுதடுகளைத் தொட்டுப் புன்னகைமூட்டி வெளிவந்தான். கொஞ்சதூரத்துக்கப்பால் அளவிலாச் செல்வத்தைக் கொட்டிச் சிங்காரமாயலங்கரிக்கப்பட்ட மாளிகை யொன்று கண்ணிற்றென்பட அதை நோக்கி யிவர்களங்கு இராத்தங்கலாமென்று நினைத்தேகினர்கள்.

அம்மாளிகைக் குடையவர் அங்குவரும் வழிப்போக்கர்களுக்குக் கருணையுடன் விருந்தளிப்பதுண்டு. பிறர் தன்னை மெச்சவேண்டுமென்ற எண்ணம் நிறைந்த கருணையாதலால் அது வீண் பெருமையுடன் கூடியே யிருந்தது. யதீச்வரரும் வாலிபனும் வந்ததும் அவனுடையசேவகர்கள் அவர்களை ஆதரவுடனழைத்துப்போய் ஓராசனத்தில் அமர்த்தினர்கள். இவர்களங்கே விதம் விதமாய்ச் செய்து பொற்றட்டுகளில் பரப்பியிருந்த பக்ஷியங்களையுண்டு, வழி நடந்துவந்த களையைத் தீர்த்துக்கொள்ள இவர்களுக்காகப் போடப்பட்டிருந்த இறகுகளடைத்த பட்டுமெத்தையில் படுத்துச் சீக்கிரமுறங்கிவிட்டார்கள்.

விடியற்காலத்தில் மந்த மாருதங்கிளம்பி நீர்நிலைகளின்மேலும் விருக்ஷங்களின் சிகரங்களிலேயும் மெள்ள மெள்ள வீச ஆரம்பித்தது. பதிகர்களும் விழித்துக்கொண்டு எதிரில் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகளையும் உயர்ந்த பொற்கிண்ணிகளிலிருந்த திராக்ஷாரஸத்தையும் உட்கொண்டுவிட்டு எஜமானனிடம் விடைபெற்று இருவரும் வியப்புடன் கிளம்பிப் போனார்கள். நடுவில் ஒரு வேலைமாத்திரம் நடந்தது. பையன் அப்பொற்கிண்ணிகளிலொன்றை யெவ

ருமறியாவண்ணம் மறைத்துத் திருடிவந்துவிட்டான். அந்தோ! முனீச்வரர் துஷ்டவிஷ ஜந்துவொன்றைக்கண்டதுபோல் முன்செல்வதற்கும் பின் வாங்குவதற்கும் கூடாதவராய் திகிலடைந்துஇதுவென்ன விபரீதம்! இது வென்ன புதுமை குற்றமுள்ளவர்களுக்கன்றோ இங்கு நேரவேண்டும். உண்ட வீட்டிற்கிரண்டு நினைக்கலாமா? பகவானே! என்று மனது படபடத்தும் பையனைத் தன்னைவிட்டுப் பிரிந்துபோகச்சொல்லத் துணிவு பெறுதவராய் துக்கத்திலுழன்றுகொண்டே சென்றார். இவ்வாறிவர்கள் போகையில் திடீரென இரவின் ஒளி மழுங்கிற்று. கரியமேகங்கள் வானத்தைக்கவர்ந்து சூழ்ந்துகொண்டன. கண்மூடித் திறப்பதற்குள் இடிமின்னல் புசல் காற்றுடன் மழை தாரைதாரையாய்ப் பொழிய ஆரம்பித்தது. தங்குவதற்கிடந்தேடி இவர்கள் ஒரு கிருபணன் வீடு சேர்ந்து கதவைத் தட்டினார்கள். வெகு நாழிகை தட்டியும் கதவு திறக்கப்பட்டபாடில்லை. கடைசியாய் உள்ளிருந்தவன் வெளிவந்து கதவைக் கொஞ்சந்திறந்து குளிரில் விறைத்துக்கொண்டிருந்தவர்களை உள்ளழைத்துப்போய் ஒரு கட்டையைக் கொளுத்திப்போட்டான். அவர்களும் குளிர்காய்ந்து மனதின்றிக் கொடுத்த உணவை ஏற்றுக்கொண்டார்கள். புசல் மழை கொஞ்சமடங்கவே இவர்களைச் சமாதானமாய்ப்போய்விடும்படி உத்தரவளித்தான். "இவ்வளவு தனத்தாலெவ்வளவு எளிய குடும்பங்கள் பிழைக்கக்கூடும்! ஏன் கேவலம் வறுமையிலிருப்பவன் போலிவன் நடிக்கவேண்டும்? பணத்தைச் செலவிடாது குப்பல் குப்பலாகச் சேகரித்து வைப்பதற்கும் அப்பணத்தைமுழுது மிழப்பதற்குமேதேனும் வித்தியாசமுண்டோ?". என யோகி தனக்குள் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே என்ன அதிசயம்! எவ்வளவு மூடத்தனம்! எனிப்பித்து! இம்மதியீனம்! வாலிபன் தான் மறைத்துவைத்திருந்த பொற்கிண்ணியை யெடுத்து அக்கிருபணன் கையில் இதோ! வெனக் கொடுக்கின்றானே! முனிவர் அவ்வகிருத்தியத்தைப் பார்த்து ஒன்றுஞ்சொல்ல நாவெழாமல் மௌனமாய் வழி நடந்தார்.

சிறிதுதூரஞ் சென்றதும் ஆதித்தன் மேற்கு சமுத்திரத்தில் மூழ்கி யாழ்ந்தான். வழிப்போக்கர்கள் தங்க, இடமொன்று தேடிவந்து அதியுந்நதமும் தாழ்மையு மில்லாத நடுத்தரமான ஓரழகுவாய்ந்த பவனத்தை யடைந்தார்கள். அப்பவனமுடையவரும் அவர்களை யழைத்து "நமது குறைகளை நீக்கி, நமக்கு யாவற்று மீந்தருளும் கடவுளுக்கென்று என்னிடத்திருப்பதி லொருபாகத்தை எடுத்து வைத்திருக்கின்றேன். அவனாலனுப்பப்பட்டு நீங்களிப்பொழுது வந்ததும் என் பாக்கியமே. வீண்பெருமை பாராட்டாமல் என்னா லியன்றவரை உங்களுக் கூழியஞ் செய்கிறேன். வேண்டியதையுண்டு களித்துச் செல்லுங்கள்" என்று சொல்லிப் பக்குவமான பதார்த்தங்கள் கொணர்ந்து அவர்கள்முன் வைத்தான். அவைகளைப் புசித்துவிட்டு எல்லோரும் வெகு நேரம்வரை தருமப் பேச்சும் தரும சிந்தனையுமாகவிருந்து தத்தம் படுக்கைக்குச் சென்றனர்.

பொழுது விடியச் சுமார் நான்குநாழிகையிருக்கலாம்; இருவரும் படுக்கையிலிருந்தெழுந்தார்கள். உடனே சிறுவன் மெள்ள நகர்ந்துபோய்த்தொட்டிலில் தாமரை மலர்போல் விரிந்த முகத்துடனயர்ந்து நித்திரை போய்க்கொண்டிருந்த குழந்தையின் கழுத்தைத் திருகி இருதுண்டாக்கிக் கீழே எறிந்துவிட்டான் "ஐயோ! அச்சிசு இவனுக்கென்ன கெடுதி செய்திருக்கக்கூடும்? என்ன நன்றி! ஸர்வேச! உன்கண்ணாரக் கண்டுமிதை எவ்விதம் நீ சகிக்கின்றாய்? அவனது ஒரேபுதல்வனாயிற்றே! இது எங்கடுக்கும்? போதும், போது" மெனச் சந்நியாசி கலங்கி தாமரைமேல் நீர்போல் தத்தளித்து ஓடத்தொடங்கினார். சிறுவனவரை விடுகிற வழியாயில்லை. அநேக ரஸ்தாக்கள் சேருமிடம் நெருங்கி விட்டபடியால் சந்நியாசிக்கு எவ்வழி போவதெனப் புரியவில்லை. கடைசியில் ஒரு வேலைக்காரன் வழிகாட்டி முன்செல்ல இருவரும் பின்தொடர்ந்து சென்றார்கள். மார்க்கமத்தியில் ஓராற்றைக் கடக்க நேர்ந்தது. பெரிய மரமொன்றை யறுத்து அவ்வாற்றுக்குப் பாலமாகப் போடப்பட்டிருந்தது. அதன்மேல் இம்மூவரும் செல்லும்போது பையனதி விரைவாயோடி வேலையாளைப் பொத்தென நதிநடுவே தள்ளினான்! நதியின் வேகம் வெல்ல முடியாது வேலையாள் இரண்டு மூன்று வாய் நீர் குடித்து உயிர் துறந்தான். முனிவருக்கு வந்த கோபத்திற்களவில்லை. எவருக்குத்தான் இச்செயல்களைக்கண்டு கோபம் பொங்காது? "அடே!

மஹாபாபி! என்ன காரியங்கள் செய்கின்றனை?' என்று வினவுவதற்குள் அவ்வாலிப உருவம் மனித உருவைவிடப் பதினாயிரம் மடங்கு அழகுபடைத்தது. அணிந்திருந்த ஆடைகள் வெண்ணிறமாக மாறி, பாதம்வரை தொங்கிக்கொண்டிருந்தன. முகத்தில் சிவப்புமயமான தேஜஸொன்றுண்டாகி நாற்புறத்திலும் ஒளி வீசியது. நிற்குமிடமுழுதும் திவ்யமலர் வாஸனைபரவி இன்பமுண்டாக்கினது. விசாலமான இரண்டு சிறகுகள் அக்குகளில் நொடிப்பொழுதில் முளைத்துவிட்டன. துறவி பிரமித்து வெறித்த கண்ணோடு அவ்வுருவையே நோக்கி நின்றார்.

சற்று நேரம் பொறுத்து அவ்வுருவம் "ஓ, தபோதனரே! உங்களடிமை நான். உங்கள் ஜபதவங்கள் பக்தி பூர்வமானதால் பகவான் வீற்றிருக்கும் சிம்மாசனமணுகி ஜயக்கொடியுடன் அங்கிருக்குமனைவரையும் ஆநந்திக்கச் செய்கின்றன. உங்கள் மனத்திலுதித்த சந்தேகத்தைத் தெளியவைத்து மெய்ஞ்ஞானமும் புகட்ட அவனாலனுப்பப்பட்டிங்கிறங்கினேன். அவன் செயல்களனைத்தும் விசித்திரமாய்த் தோன்றினும் ஓரணுவளவும் நீதிதவறான்; மானிடர் கண்ணுக்குப் பிரத்தியக்ஷமாய்த் தோன்றாமல் ஹேதுக்களையும்செய்கைகளையுங்கொண்டே அவன் செங்கோல் செலுத்திவருகின்றானென நீங்களுறுதிகொண்டு, சிற்சில புலப்படா விஷயங்களில் ஜனங்களவனைத் திட்டினும் அவன் செய்வது யாவையுமவர்களின் நன்மைக்கென்றும் தருமத்தை நிலைநாட்டுவதற்கென்றும் த்ருடமான நம்பிக்கை உங்களுக்கேற்படவேண்டும்.

"வகை வகையாய்ப் பக்ஷியங்கள் செய்து தங்கத்தட்டுகளில் பரப்பி, தந்தப் பெட்டிகளிலுயர்ந்த திராக்ஷ ரஸம் முதலானது வைத்து பொற்கிண்ணிகளிலூற்றிக் கொடுத்து அதிதிகளாய் வந்தவர்களை நிர்ப்பந்தஞ்செய்து உபசரித்து விருந்தளித்தவன், தன் கிண்ணி காணாமற் போனதும் இனியம்மாதிரியான வீண் செலவு செய்யானல்லவா? அவனது வீண் பெருமையு மொருவாறு குன்றாதா?

"யாரைக் கண்டபோதிலும் சந்தேகங்கொண்டு எவருக்கும் இதுவரை அன்னாகாரமிடாத பாபி கிருபணனுக்கு அக்கிண்ணியை நான் கொடுத்ததால், மானிடன் தயவுடனிருந்து, கேட்பவருக்கு ஈந்தால் தெய்வமேஅவனுக்குச் சம்மானஞ் செய்யுமென்றவனறிந்து கொள்ளுகின்றான். அக்கிண்ணி பெற, தான் செய்தது தகாதெனச் சந்தேகிக்கிறான்.

"மூன்றுவன் வெகுநாள்வரை தெய்வபக்திகொண்டு நீதிநெறிதவறாதவனாயிருந்துவந்தும் ஒரு குழந்தை பிறந்ததும் அதன்மேலேயே நினைவாயிருந்து அக்கிருபைசெய்த கடவுளை மறந்து பூலோகவாழ்க்கை நித்யமெனக் கருதியதில் மூழ்கிவிட்டான். இவ்வயோதிகன் நல்வழி பெறவேண்டி அவன் மகனை நான் கொன்றது. தன் கண்ணுக்குங் கண்ணாயிருந்த குழந்தை பிறந்தவுடன் தான் செய்த தவறுக்கு விதிக்கப்பட்ட தண்டனை தகுதியாகு மென்றறிகிறான்.

"அந்தவேலையாளும் திரும்ப உயிருடனே சென்றிருந்தால் குழந்தை பிறக்கக்கொடுத்தவன் ஆஸ்தி யாவற்றையும் உத்தேசித்திருந்தது போலின்றிரவு கொள்ளை கொண்டிருப்பான்! அவ்வளவு தனமும் போயிருந்தால் அவன் செய்யக்கூடிய எவ்வளவு தானதருமம் குறைந்து போயிருக்கும்!

"ஆர்ய! நான் போய்வருகிறேன். இவ்வாறாக உங்கள் மனத்திலுண்டான புண்ணையாற்ற யானிங்கனுப்பப்பட்டேன். நீங்கள் இனிக்கவலையற்று உங்கள் வேலையை உற்சாகத்துடன் தொடருங்கள்," எனச்சொல்லிச் சிறகுகளை விரித்து ஆகாயமார்க்கமாய் அவ்வுருவம் பறந்துபோய் விட்டது.

சந்நியாசி ஆநந்தக்கண்ணுடன் நீண்டகாலம் அவ்வழியே நோக்கி, "ஜகத்ரக்ஷகா! பராபரவஸ்துவே! விண்ணுலகத்திற்போல் மண்ணுலகத்திலும் உனது எண்ணம் நிறைவேறுக" வெனத் துதித்துத் திரும்ப வனத்திற்றன் குகையடைந்து வாழ்நாளை தெய்வ விசுவாஸத்தோடும் பக்தியோடும் கழித்துப் பரலோகமடைந்தார்.

டி. எஸ். ராஜகோபாலன்.

பர்மாவின் கடல் வியாபாரம்;—கடந்த ஜூன் மாதம் பர்மாவிலிருந்து கடற்பிராந்தியத்தின் மூலமாகச் செய்யப்பட்ட வியாபாரத்தின் மதிப்பு 5,28,87,393 ரூபா. சென்ற வருஷத்தில் இதே மாஸத்தில் செய்யப்பட்ட வியாபாரத்தின் மொத்தம் 4,93,99,740 ரூபா.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

ஆத்திசூடி விளக்கம்

53. சொற்சோர்வு படேல்

சொற்களில் தளர்வுண்டாக இடங்கொடுக்காதே என்பது இந்த ஸூத்ரத்தின் பொதுப்பொருள். இங்கு சொற்கள் என்ற பதத்திற்கு நாம் சொல்லும் சொற்கள் என்றும்,பிறர் சொல்லும் சொற்கள் என்றும், இருவகையாகப் பொருள் கொள்ளலாம். இதனால் இந்த ஸூத்ரத்திற்கு 'நாம் சொல்லும் சொற்களில் ஒருவிதத் தளர்வும் ஏற்படாதிருக்க முயலவேண்டும்'; 'நமது ஸம்பந்தமாகப் பிறர் கூறும் சொற்கள் விஷயத்தில் ஒருவிதத் தளர்வும் ஏற்படாதிருக்க முயலவேண்டும்' என்று இருவிதமாகப் பொருள்கள் உரைக்கலாம். தளர்வென்ற சொல்லுக்கு முதற்பொருளில் மறதி, தவறுதல்,குற்றங்கள் என்ற பொருள்களையும், இரண்டாம்பொருளில் மறதி, பொருள் விளங்காமை, வீண் ஆவலுடன் எதிர்பாராமை இவைகளையும் பொருத்தி ஆராயலாம்.

(1) தளர்வின்றிச் சொல்லவேண்டும்:—நாம் பேசும்பேச்சுக்களில் ஒருவிதக் குற்றமும் இல்லாதிருக்கும்படி பாதுகாத்துக்கொள்ளவேண்டும். சொற்குற்றம் பத்து என்றும், சொல்லழகு பத்து என்றும் கூறுவர் அறிஞர். இவைகளில் முன்னவை ஏற்படாது காத்து,பின்னவை அமைந்து நமது சொல் ஏற்படும்படி முயலவேண்டும். முக்யமாக நாம் பேசும் பேச்சில் மறதி உண்டாகாமலிருக்கவேண்டும் ; பேசும் விஷயங்கள், அவைகளின் பொருத்தங்கள், பேச்சின் நோக்கம், இவைகளைப்பற்றி மறதி எழலாம். இது உண்டாக இடங்கொடுத்துவிட்டால் நமது சொற்களில் பத்துவிதக் குற்றங்களும் வந்து குடிகொள்ள இடம் உண்டாகிவிடும். இவை உண்டாக இடங்கொடாதிருந்தால் நயக்கு சொற்றெளிவு கைகூடி நாளடைவில் சொல்லழகு பத்தும் வந்து அமைந்துவிடும்.

இதுவரையில் கூறிவந்தது சொல்மாத்திரத்தில் ஏற்படும் அமைப்புக் குற்றங்களைப்பற்றித்தான். இனி,சொற்பொருளைப்பற்றி ஆராயுமிடத்து நான்கு குற்றங்கள் உள்ளன. அவையாவன பொய், குறளை, (கோள்சொல்), வன்சொல், பயனிலாச் சொல் என்பவைகளே, இவைகள் கலவாமல் சொற்களைக் காக்கவேண்டும். மானிடர்களுக்கு தொழில் காரணமான கரணங்கள் மனம், வாக்கு காயம் (உள்ளம், உரை, உடல்) ஆகிய மூன்றும்தான். இவைகள் ஒரேமாதிரியிருப்பது மஹான்கள் இலக்கணம்; முவ்வகைப்பட்டிருப்பது துஷ்டர் இலக்கணம்.முற்கூறிய நான்குபொருட்குற்றங்களில்மனதிற்கும்வாக்கிற்கும் தீர வேற்றுமை இல்லாமல்போகாது' இது முற்றிலும் நீங்குவதற்கு, ஒருவன் உண்மையாயும், வருத்தாததாயும், இனிப்பாயும்நன்மைபயப்பனவாயுமுள்ள சொற்களையே சொல்லவேண்டும். இதற்கேமௌனமென்றும்ஸத்யமென்றும் பெயர்' என்ற சாஸ்திரக் கோட்பாட்டைக் கைசோரவிடாது பற்றி நடக்கவேண்டியது அவசியம். மனம்ஒப்பி நடத்தமுடியாவிஷயங்களை கீர்த்திமைமாத்திரம் கருதி வாய்கூசாது பலர் முன்னிலைக்கூறிவிடுவதே வழக்கமாக உள்ள மஹான்கள் நிறைந்த இக்காலத்தில் இச்சூத்ர ஆராய்ச்சி அவச்யம் என்று கூறாமலே விளங்கும்.

நாம்சொல்லும் சொல்லில் சோர்வு ஏற்பட்டால் பெருங் கேடுகூட விளையும் என்பதற்கு அநேக உதாரணங்கள் எடுத்துக்காட்டலாம். இக்காலத்திய நியாயஸ்தல நடவடிக்கைகள் எல்லாம் சொல் வன்மையையே பொருத்தது. நியாய வியாஜ்யம் சொற்சோர்வால் கெட்டுப்போவதும், அநியாயவியாஜ்யம் சொல்வன்மையால் தழைத்து ஓங்குவதும் இக்காலத்திய ஸஹஜ ஸம்பவங்களே. ஆகவே இக்காலத்தில் நியாயம்கூட உள்ளபடி உண்மையாக விளங்குவதற்கு சொற்சோர்வு இருக்கவே கூடாது.மேலும் இக்காலத்தில் செய்யக்கூடாதவைகளை செய்வதாக பலர் மெச்சிக்கொள்ள உபந்யஸித்துவிட்டு பின்னர் ஒன்றும் சொன்னபடி நடத்த முடியாது தத்தளிப்பவர் அநேகர். இவர்கள் பயனிலாச்சொல் கூறிச் சொற்சோர்வுபட்டு வாக்குத் தவறுவோர் வகையைச்சேர்ந்து பெயர்கெட்டுத் திண்டாடுகின்றனர். இம்மாதிரி சொற் சோர்வால் பொதுஜன மதிப்பிழந்து வருந்துபவரே இக்காலத்தில் அதிகம். புராணங்களிலும் இதற்கு திருஷ்டாந்தங்கள் உண்டு. நித்யத்வம் கேட்க எண்ணிய கும்பகர்ணன் ப்ரஹ்மாவைக் கண்டதும் ஏற்பட்ட சொற்சோர்வால் நித்ரத்வப்

கேட்டுத் தூங்குமூஞ்சியானான்என்ற கதைகூட உண்டு. பீஷ்மர் தகுந்த தருணத்தில் சொற்சோர்வில் அழுந்தி திரௌபதிக்கு சூதாட்டகாலத்தில் நேர்விடையளிக்கமுடியாது தத்தளித்து, துர்யோதனனையும் கண்டித்துப்பேசமுடியாது போக, முடிவில் தேகத்தை கௌரவர்களுக்கும் மனதைப் பாண்டவர்களுக்கும் ஈடுபடுத்தி கஷ்ட காலக்ஷேபம் செய்யும்படி நேர்ந்துவிட்டது. விதுர விகர்ணர்கள் இருவரும் இப்படிப்பட்ட சொற் சோர்விற்கு இடங்கொடாது பீஷ்மர் பட்டபாடு படாது தப்புவித்தனர். துரோணர் தமது சொற்சோர்வால் தமது பாண்டவ பக்ஷபாதத்தை அடிக்கடி வெளிப்படுத்திவிட்டனர். தர்மபுத்திரர் சொற்சோர்வால் மனம் ஒப்பாத உண்மை போன்ற சொற்களைக்கூறிப் பொய் கூறியவராகும்படி நேர்ந்தது. தர்மபுத்திரரிடம் கோபம் மூண்ட அர்ஜுனனுக்கு சொற்சோர்வுபடாது நடந்துகொள்ளும் வழியை கிருஷ்ணன் காட்டிய அழகு 17-ம் நாள் மாலைப்போரில் நன்கு வெளியாயுள்ளது. ஸ்ரீராமன் வாலியைக்கொன்ற அவஸரத்தில்சொற்சோர்வுபடாது மறுமொழி கூறிவிட்டதால்தான் வாலி மனந்தெளிந்து தேறும்படியாயிற்று. இவ்வாறு சொற்சோர்வால் திண்டாடியவரும், சொல்வன்மையால் ஈடேறியவரும் அநேகக் கணக்காக புராணங்களிலும், உலகவாழ்க்கையிலும் ஆங்காங்கு கண்டுகொள்ளலாம்.

(2) தளர்வின்றி ஞாபகத்தில் வைக்கவேண்டும்:—நாம் கேட்ட அல்லது படித்த விஷயங்களைக் கூடியமட்டும் தெளிவாக ஞாபகத்தில் வைக்கவேண்டும் என்பதும் இந்த ஸூத்ரத்தின் கருத்து. இப்படிஞாபகத்தில் வைத்திருந்தால்தான் நமது மேல் அபிவிருத்தி தடையில்லாது ஏற்பட்டு நாம் நல்ல நிலையைஅடைய இடம்உண்டாகும்.தகுந்த தருணங்களில் வந்துதவாக் கல்வியால் பயன் என்ன ? இவ்வாறு வந்துதவுவதற்கு உதவியாக இருக்கும்பொருட்டே இக்காலத்தில் எழுத்து மூலவ்யவஹாரங்களும், புத்தகங்களில் அகாதிக் குறிப்பட்ட வகைகளும்வெகு ஸாதாரணமாகிவிட்டன.ஒருவேளை மறந்துவிடும்படி நேரிட்டாலும் இவைகள் மூலமாக ஞாபகத்தைத் தீட்டிக்கொள்ளலாம் என்பதுதான் கருத்து. ஆகவே கல்வியாதி விஷயத்தில் சொற்சோர்வு ஏற்படாதிருக்க இக்காலத்தில் அநேக உதவிகள் ஏற்பட்டுள்ளன. இவைகளைக்கொண்டு இக்குற்றத்தை நீக்கிக்கொண்டே இருக்கவேண்டும் வெகு கவனமாக.

நமது விஷயமாக பிறர் கூறுவதை எல்லாம் நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கூறுவதற்கும் ஒரு எல்லை உண்டு. அதை மீறிப் போனால் இச்சொற்சோர்வுபடாமையும் பேராபத்தாகத்தான் முடியும்.எல்லோரும் தாம் சொல்லுகிறபடியெல்லாம் நடப்பர் என்று எதிர்பார்ப்பது ஜனஸ்வபாவ அறியாமையாகத்தான் முடியும். ஒவ்வொருவனும் தன் வாக்குத் தவறாமலும், தவறக்கூடிய வாக்கை வெளியிடாமலும் ஜாக்ரதையாக நடந்து வரலாம். தான் நீங்கலாக எல்லோரும் நடக்கவேண்டும் இப்படியே, என்று ஒருவன் எண்ணுவதும், அவ்வாறில்லாவிடில் வருந்துவதும்,வீண்தான்என்பது உலக விசித்ரத்தாலேயே விளங்கும். இந்த ரஹஸ்யத்தை நன்றாக உணர்ந்த தர்மபுத்திரர் தாம் கர்ணனால் பட்டபாட்டின் வேகத்தால் சற்று மறந்து அர்ஜுனன் கர்ணனை தன் வாக்குப்படி கொன்றுவிட்டுத்தான் வருவன் என்று பரபரப்புடன் எதிர்பார்த்திருந்தார். இதனால் தர்மபுத்திரருக்கு ஏற்பட்ட அகாரண கோபமும், அர்ஜுனனால் ஏற்பட்ட அவமானமும் கர்ணபர்வ கதையில் காணலாம். நம் போன்றவர் அடிக்கடி உலகவிசித்ர உண்மையை மறந்து, அடிக்கடி வீண் எதிர்பார்த்தலுக்கு ஆளாகி "சொற்சோர்வுபடேல்" என்பதை வரம்புமீறி கைப்பற்றித் திண்டாடுவது வழக்கம். இந்த விஷய எல்லை யாதெனில் நமது அபிவிருத்தி நன்மை முதலியவைகளுடன் ஸம்பந்தப்பட்ட வரையில் பிறர் புத்திமதிச் சொற்களை மறவாதிருக்கவேண்டும் என்பதுதான் : மற்றவைகளை மறந்துவிடவேண்டியதுதான்.

இப்பொருளில் இந்த ஸூத்ரத்தைப் பார்த்தால்ஒரு சிறப்பான வைதிகப்பொருள்ஒன்றும் வெளிப்படும். வேதஸ்மிருதி,புராண சாஸ்திரங்கள் எல்லாம் நமது நன்மைக்காக ஏற்பட்டவைகள்: ஆகவே வேதாதிசொற்களை மறவாது நிலைத்து பழக்கத்தில் கொண்டுவரவேண்டும் என்ற பொருள் ஒன்றும் இந்த ஸூத்ரத்திற்கு ஏற்படும். இதன்படி உலகில் பழகுங்கால்

(இதன் தொடர்ச்சி 66-ம் பக்கம் பார்க்க)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

மாதவீ கங்கணம்

இரண்டாம் பாகம்

அத்யாயம் 2

அவள் ஸஹோதரி

ஒரு வாரமாயிற்று. நரேந்த்ரனுக்குத் தேக ஸௌக்யமும் ஊக்கமும் நன்றாய் வ்ருத்தியாயின. ஆனால் வ்யாதி அநுகூலமாகித் தன் ஞாபகம் தெரியத்தெரிய, அவனுக்கு மனக்கவலை அதிகரித்தது. தான் இருப்பது எவ்விடம், தான் அவ்விடம் வந்த விதம் யாது, தன்னை ஸந்தித்த அந்த ரமணீமணியின் வரலாறென்ன, தன்னை அவள் அழைத்த காரணம் எது, அவள் தன்னை எவருடைய அரண்மனைக்கு அந்தரங்கமாய்க் கூப்பிட்டாள், இந்த விஷயங்களெல்லாம் அவனுக்குச் சூந்ய ப்ரதேசமாயிருந்தது. அந்தச் சூந்யப்ரதேசத்தின் ரஹஸ்யங்களைக் கண்டறியத் தன்னாலானமட்டும் முயன்றான். தான் செய்யப்புகும் வீரதீரச்செயல்களைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் அவன் அளவில்லா மகிழ்ச்சி எய்தினான். ஆனால் அந்தக் கார்த்தரி தேசத்துப் பெண்கூறிய மொழிகளைக் கவனித்தால் தான் தலையிட்டுக்கொள்ளவிருக்கும் ஸாஹஸத்தில் அபாயங்கள் அதிகமாயிருக்குமென்று அவனுடைய மனதில் ஒரு பயம் ஜனித்தது. போர்க்களங்களில் எத்தனையோ அபாயங்களையெல்லாம் எதிர்த்து எவ்வளவோ துணிகரமான அத்புத வீரச்செயல்களெல்லாம் புரிந்திருக்கிறான். ஆனால் கத்தியின் உதவியைவிடக் கட்டாரியின் உதவியே அதிகமாய் வேண்டிய அந்தப்புர அந்தரங்க ஸாஹஸங்களுக்கு அவனுக்கு ஸாமர்த்யம் போதாதுதான். இதுகாறும் கண்டுங்கேட்டுமறியாததொரு அரண்மனைக்குள் ஸ்த்ரீகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அர்த்தராத்ரி கள்ளிருள் சூழ்ச்சிகள் அவனுடைய மனதில் ஆதியந்தமற்ற ஸந்தேஹத்தையும் நடுக்கத்தையும் உண்டுபண்ணின. அறை முழுவதும் சுற்றிப்பார்த்தான்; ஒன்றும் விளங்கவில்லை. அவன் வஸிக்கும் அவ்வழகிய சிறைக்கூடத்தின் ஸலவைக்கல் வேலைப்பாடுகளும் சித்ரங்களும், பூவேலை செய்யப்பட்டிருக்கும் கம்பளங்கள் படுதாக்கள் முதலியவைகளும் அவனுடைய ஸந்தேஹத்தை நிவர்த்தித்து ஸமாதானம் செய்யும் ஆற்றலற்றனவாயிருந்தன. கம்பிகளிடப்பட்ட அந்த அறையைச் சுற்றி நின்றிருந்த காவலாளிகளும் வாயடைத்திருந்தனர்.

அவ்வறைக்கு நேர்மேலேயிருக்கும் மாடிக்கு ஒரு சுழல்படிக்கட்டு மார்க்கமாய்ப் போய்வர நரேந்த்ரனுக்கு அநுமதியுண்டு. அவ்விடம் சென்று சுத்தவெளியான ஆகாயத்தின் நிர்மலமான காற்றை உட்கொண்டு வெகு நேரம் வரையில் உலவிக்கொண்டிருப்பான். கீழே இறங்கிவரும்போது சில தினங்கள் இருட்டிவிட்டாலும் இருட்டிவிடும். தனக்கு எதிரேயிருக்கும் முற்றத்தில் ஸேவகர்களும் போர்வீரர்களும் நின்றிருப்பதை அவன் பலமுறை கண்ணுற்றான். ஒரு பெரிய கற்சுவரால் மறைபட்டிருக்கும் கட்டடங்களின் ஸலவைக்கல் ஸ்தூபிகளும் அவனுடைய கண்களுக்குப் புலப்பட்டுக்கொண்டிருந்தன. அத்தகைய சிகரங்களையும் ஸ்தூபிகளையும் அவன் ராஜமஹலில்கூடக் கண்ணுற்றதில்லை. ராஜமாளிகையைவிடச் செல்வம், சீர், சிறப்பு எவற்றிலும் மேன்மையுற்ற அதிபதிகளுக்காகவா அல்லது வங்கநாட்டு ராஜஸ்த்ரீகளைவிடச் சிறந்த ஸ்த்ரீரத்நங்களுக்காகவா அழகிலும் அமைப்பிலும் நிகரற்றிருக்கும் இந்த மாடமாளிகைகள் கட்டப்பெற்றன? அவைகள் மஹாராணிகளும் மண்டலாதிபத்ய வீரர்களின் மனைவிமார்களும் வாஸஞ் செய்யும் பவனங்

(65-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாஸ்திர வரம்பை மறவாது ஒழுங்காக நடந்து, உலகை மறந்து கடவுள் வழிபாட்டி லிருக்குங்கால் வேத ஒழுங்கு ஆசார்யன் உபதேச ஒழுங்கு இவைகளைக் குறிக்கும் சொற்களைக் கைசோரவிடாது ஞாபகத்தில் வைத்து நிதானித்து நிலைத்துப் பழகிவர வேண்டும் என்றுகிறது. ஸாதாரணமாக சொற்குற்றங்கள் நேரவொட்டாது காத்துவருவதே இந்த வேதவாக்கு மறவாது பழகுவதான இந்த ஸூத்ரத்தின் முடிவான பொருள் குறிக்கும் நிலைக்கு நம்மை நாளடைவில் கொண்டு சேர்த்துவிடும் என்று கூறவும் வேண்டுமா!

களாய்த்தான் இருத்தல்வேண்டும். ஏனெனில் அக்கட்டடங்களைச் சுற்றியிருந்த செம்மணற் கற்சுவரில் நரேந்த்ரன் பார்த்தமட்டும் ஒரு சாளரமாவது ஒரு வாயிலாவது கிடையாது.

ஓரிரவு நன்றாய் இருட்டியவுடன், நரேந்த்ரன் மனோவேதனையால் பீடிக்கப்பட்டு வலியிழந்து களைத்தவனாய் மாடியினின்றும் இழிந்துவந்து ஸ்வல்ப ஆஹாரம் உட்கொண்டு அதிசீக்ரமாய்ப் படுக்கையிற் கிடந்து மருந்து மயக்கங் கொண்டவன்போல் உடனே அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்துவிட்டான்.

இரவின் முதல் ஜாமங் கழிந்து விட்டது. நகர்காவலிலிருந்து பறையொலி அப்பொழுதுதான் ஓய்ந்தது. ஜெலிகா, மங்கலான அவ்வறைக்குட் ப்ரவேசித்தாள். அவள் சுற்றிப் பக்கம் பார்த்துக்கொண்டு அதிக ஜாக்ரதையாய்ச் சப்தம் செய்யாமல் உள்ளே நுழைந்தாள். அவளுடைய கண்கள் நூதனமாய் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. கைகள் ஆடையின்றி வெளிக்குத் தெரிந்துகொண்டிருந்தன. அவள் தன் வலது கரத்தில் கட்டாரி பிடித்திருந்தாள். சந்தடியின்றிப் படுக்கையருகே வந்துநின்றாள்.

சில நிமிஷ நேரம் அவள் தூங்குபவனைக் கண்கொட்டாமல் பார்த்து நின்றாள். ஸ்வப்நங்கள் ஒன்றுமின்றி அயர்ந்து உறங்கும் அவ்வீரனுடைய ஸ்வாஸத்தைக் கவனமாய் உற்றுக் கேட்டாள். அவனுடைய மார்பின்மீது கை வைத்துப் பார்த்தாள்; அவனை நல்ல திடகாத்ரனெனத் தீர்மானித்தாள். அவளுடைய முகம் மலர்ச்சியடைந்தது; அவளுடைய மெல்லிய அதரங்களில் புன்னகை தவழ்ந்தது. அவள் சில பதங்களை உச்சரித்துக்கொண்டு தன் கட்டாரியை உயரத் தூக்கி நரேந்த்ரனது தலைக்கு நேராக அதை அசைத்தாள்.

உச்சாரணம் முடிந்தவுடன் ஜெலிகா தன் கட்டாரியின் முனையை நரேந்த்ரனுடைய வயிற்றின்மீது வைத்தாள். அவனுடைய வயிற்றினின்று ஒரு துளி ரக்தம் வெளிவந்தது; நரேந்த்ரன் ஆழ்ந்த நித்ரையினின்று விழித்தெழுந்தான். அவன் கண்ணைத் திறந்து மதிமயங்கினவன்போல் நாலாபக்கமும் திரும்பிப் பார்த்தான். கட்டாரியை உறையிலிட்டுவிட்டுப் புன்சிரிப்பு செய்துகொண்டு நின்ற அந்த விசித்ரப் பெண்ணின்மீது சென்றது அவனுடைய நோக்கம்.

"வீரசிகாமணீ, என்ன வெகுநேரம் தூங்கிக்கொண்டிருக்கிறாய்? எழுந்திரு, நீ காத்திருந்த ஸமயம் வந்துவிட்டது."

"ஒரு நிமிஷம் பொறு, இதோ நான் போர்க்கோலம் பூண்டு போர்வீரன் உடைதரித்துவருகிறேன். ஆலஸ்யமில்லை."

"நீ இன்றிரவு செய்யவேண்டியது போர்வீரன் தொழிலன்று. ஆதலால் நீ போர்வீரன் உடைதரிக்கவேண்டாம். உனக்கென்று நான் வேறு ஆடைகள் கொண்டுவந்திருக்கிறேன். அவற்றைத் தரித்துக்கொள்ளல் வேண்டும்."

நரேந்த்ரன் அவ்வாடைகளைப் பார்த்துவிட்டு அவற்றைக் கீழே வீசியெறிந்தான்.

"ஸ்த்ரீகளாடையாயிற்றே இது!"

"ஆமாம், ஸ்த்ரீகள் உடுக்கும்உடுப்புகள்தான்."

"அவற்றை மனிதன் எவ்வாறு தரித்துக்கொள்வான்? அதிலும் நான் சுத்தவீரனாயிற்று. எனக்கு ஏற்குமா அவ்வுடைகள்?"

ஏளனஞ்செய்வதுபோலிருந்த தனது உதடுகளில் புன்சிரிப்பு தவழ க்ரூரமாய்க் கண்களைக் கொட்டிக்கொண்டு ஜெலிகா "உனது உதவியைக் கோரிய பெண்ணுக்காக வாழ்விலும் சாவிலும் நம்பிக்கையாய் உழைப்பதாக வாக்களித்து வீரம்பேசினவன் நீதான் அன்றோ?" என்றாள்.

"ஆமாம், புருஷன் செய்யக்கூடிய கார்யமெல்லாம் செய்வதற்கு இப்போதும் ஸித்தமாயிருக்கிறேன்," என்று ஸாவதானமாய் விடையளித்தான் நரேந்த்ரன்.

மறுபடியும் புன்னகை செய்தாள் ஜெலிகா; உடனே அப்புன்னகை மறைந்துவிட்டது. அவள் அவனுடைய காதண்டை வந்து ரஹஸ்யமாய் "நரேந்த்ரா, உனது ப்ராணனும், எனது ப்ராணனும், ஓர் உயர்குலச் சீமாட்டியின் மானமும் யாவும் உன் ஸம்மதத்தைப் பற்றி நிற்கின்றன. நாழிகையாகிறது. தாமதித்தால் கார்யம் கெட்டுவிடும். சுத்தவீரா, யோசிக்க வேண்டாம். உனது கடமையை நிறைவேற்றுவதைப் பார்" என்றாள்.

சுத்தவீரன் கீழ்ப்படிந்தான். அவன் தரித்திருந்த அரைக்கச்சை, கத்தி இவைகளின் மீது ஒரு பெரிய பாவாடையொன்று கட்டப்பட்டது. தன்னாலானமட்டும் முயன்று பயன்படாமல் கடைசியில் ஜெலிகாவின் உதவியின் பேரில் நரேந்த்ரன் ரவிக்கையை ஸரியாய்ப் போட்டுக்கொண்டான். தலையில் பொய்மயிர்

வைத்து வாரிப் பின்னலிட்டுக் கொண்டான். முகத்தில் பாதிமட்டும் ஒரு மூடி போட்டுக் கொண்டான். மேலாடை யொன்று தோள்புறத்திலிருந்து முழங்கால் வரைக்கும் அழகாய்த் தொங்கிக் கொண்டிருந்தது. கழுத்தில் ஒரு பவளமாலையும், சதையற்றிருக்கும் கைகளில் பொன் வளையல்களும் தரித்துக் கொண்டான். அவன் நடந்து செல்லுங்கால் அவனுடைய கால்களில் வெள்ளிச் சிலம்புகள் கிண்கிணென்று சப்தித்துக்கொண்டிருந்தன.

நரேந்த்ரனது ஸ்த்ரீ வேஷத்தைக் கண்டு, "கமுகமரம்போல் உயர்ந்து வளர்ந்திருக்கும் இக்கட்டழகி நமக்கு ஒரு முத்தமிடாளா என்று அரண்மனையிலுள்ள யௌவனபுருஷர்கள் யாவரும் ஏங்கி நிற்பார்கள்" என்று ஜெலிகா சிரித்துக் கொண்டே சொன்னாள். தான் தரித்திருக்கும் கோலத்தைக் கண்டு அதிருப்தியடைந்து முகம் மாறியிருக்கும் நரேந்த்ரன் பதில் மொழி யாதும் கூறவில்லை.

பட்டப்பகல் வெளிச்சத்தில் கண்கொட்டாமல் தேடினாலுங்கூடப் புலப்படாமல் சுவரோடு சுவராயிருக்கும் ஒரு கள்ளக் கதவைத் திறந்தாள் ஜெலிகா. இந்தக் கதவின் வழியாகத்தான் ஜெலிகா அடிக்கடி தன் அறைக்குள் வந்து மாயமாய் மறைந்து சென்று கொண்டிருந்தனள் என்று நரேந்த்ரன் எண்ணினான். இருவரும் உள்ளே ப்ரவேசித்துக் கள்ளக்கதவை மூடித் தாளிட்டவுடன் அவ்விடம் இருள்மயமாய் விட்டது. நரேந்த்ரன் கையால் தடவித் தடவி வழியைக் கண்டு செல்லவேண்டியதாயிற்று.

"ஷரீபா, இவ்விடம் படிக்கட்டுகளும், நெருக்கமான திருப்பங்களும் அதிகமாயிருக்கின்றன. பத்ரம்" என்று ஜெலிகா உள்ளுக்குள் சிரித்துக்கொண்டு, "இனி நீ வடக்கு ப்ரதேசத்திலிருந்து வந்த எனது ஸஹோதரியாயிருப்பாய். இதை மறந்தால் நம்மிருவர் உயிரும் செல்லவேண்டியதுதான்" எனக் கூறினாள்.

தான் அப்போதிருந்த அபாயகரமானநிலைமையையும் இனிவிளையக்கூடிய தானறியா ஆபத்துகளையும் அறவே மறந்தவனாய் நரேந்த்ரன் தான் தரித்திருக்கும் வேஷத்தையும், தனது புதிய நாமதேயத்தையும் கண்டு ஸந்தோஷித்து வேடிக்கையாய்ப் பேசத் தொடங்கினான். அவன் வயிறு வெடிக்கச் சிரித்துச் சில படிக்கட்டுகளின்மீது காலிடறி விழுந்தான்.

"ஷரீபாத நீ என்ன இவ்வளவு அசடாயிருக்கிறாய்? ஆனால் நீ நமது ஜன்மபூமியாகிய வடப்ராந்திய வனாந்தரங்களினின்று வந்து அதிக நாளாகவில்லை. இந்திய கொல்லர்கள் கட்டும் இந்தக் கள்ளறைகளும், திருட்டுவழிகளும் உனக்கு எப்படி இதற்குள் தெரியும்? என் கையைப் பிடித்துக்கொள். நீ என்னுடனிருக்குமட்டும் உனக்கு ஏதாவது தீங்குநேர்ந்தால் உன் தாயார் என்னை லேசில் விடாள். இந்த அந்தகாரமான வழியில் இடர்கள் பல இருக்கின்றன. ஜாக்ரதையாய்ச் செல்லவேண்டும்."

கரும்பு தின்னக் கூலிவேண்டுமா? நரேந்த்ரன் அவளுடைய ம்ருதுவான கரங்களைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டான்.

"ஸஹோதரீ, ஏன் இவ்வளவு முரட்டுத்தனமாய்ப் பிடிக்கிறாய். என் கைகளைப் பிடிப்பதைப் பார்த்தால் உன்னைப் புருஷனென்று சொல்லவேண்டியிருக்கிறது. புருஷருக்குரிய இந்த முரட்டுத்தனம் எங்கே படிந்தது. பெண்ணென்பவளுக்கு இதைவிட சாந்தமான நடவடிக்கைகள் படியவேண்டும். ஏனெனில் அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு முதலிய குணங்கள் இருந்தால்தான் ஸ்த்ரீகள் தமது காதலருடைய மனதைக் கவரலாம்."

"அதிக நாணயமும் நாகரிகமுமுடைய ஸஹோதரீ, சில வேளைகளில் சிறு பெண்கள் புருஷருடைய தைர்யத்தைச் சிறிது விரும்புகிறார்களென்று எண்ணுகிறேன். கன்னிகா பெண்களாகிய நாங்கள் பௌர்ஷமற்ற மனிதனைப்பற்றி, அதிகமாய் நினைப்பதில்லை. சில ஸந்தர்ப்பங்களில் புருஷர்களுக்குரிய சிறு முரட்டுத்தனத்தை நாங்கள் ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை."

"இருக்கலாம் ஸஹோதரீ, இவ்வாறு பௌர்ஷத்தன்மையை அங்கீகரிக்கும் ஸ்த்ரீகள் இருக்கலாம். ஆனால் என் மட்டும், இந்த அதிக ப்ரஸங்கத்தைக் கண்டு நான் மயங்கு முன் எனது கட்டாரிக்கு ரோஷம் பிறந்து விடும்" என்று தீரமாய்ச் சொன்னாள் ஜெலிகா.

இவ்வாறு அவமானப்பட்ட ஜெலிகாவின் தோழியானவள், "எனதருமை ஸஹோதரீ, உனது பரிசுத்தகுணத்தைக்கண்டு நான் மெச்சினேன். நீ எனக்குப் புரிந்துள்ள பேருபகாரத்தை என்றைக்கும் மறவேன்" என்றாள்.

"இதுதான் உடன்பிறந்தாள் பேச்சு. பெண்பாலருக்குள் நாகரிகத்திற் சிறந்தவளைப் போல் நீ இப்போது பேசினாய். ஷரீபா, உன்னை மணம்புரிய உத்தேசித்துவந்த எந்த ஸௌந்தர புருஷனுடைய ஆண்மையைக்கண்டு நீ மதி மயங்கினையோ?

"ஜெலிகா, நீ சொல்லியது உண்மை. நான் படுக்கையாய்க் கிடந்தபோது உயரமும் ஒற்றைநாடி சரீரமுமான ஒரு ஸௌந்தர புருஷன் எனக்கு வெகுகாலம் சிச்ருஷை செய்தான். கடைசியில் அவன் என் மனதைக் கொள்ளைகொண்டான். அவனுடைய நீண்ட கைகளின் அழகே அழகு. அவனுக்கிருக்கும் கண்களும் நெற்றிப்புருவமும் வேறெவருக்குங் கிடையாது. என் மனம் அவனையேபற்றிச் செல்கின்றது. ஆனால் சிலவேளைகளில் அவன் ஒரு பரிஹாஸமான புன்னகை செய்து புருவங்களை நெறித்துக்கொள்வான்; அப்போது நான் சிறிது அச்சமுறுவேன். கடைசியில் ஒருவேளை அவன் என்னைப் பரிஹஸித்து ஏளனஞ்செய்யும் மோசக்காரனாய்த்தான் இருப்பானோ நான் அறியேன்."

"யாதுமறியாத பேதை நீ, அம்மனிதனை நம்பி மோசம்போகாதே. அவனிடம் காதல் கொள்ளவேண்டாம். காதல் கொண்டால் என்றைக்கும் அவனுடைய அடிமையாய்விடவேண்டும்."

"ஜெலிகா, ஸமயம் தவறிப்போய்விட்டது. நான் முன்னமே அவனுக்கு அடிமையாய் விட்டேன். அவன் என்னைக் காந்தம்போல் இழுத்துச்செல்கிறான். அந்தச் சக்தியை எதிர்க்க எனக்கு ஆற்றல் காணேம் ஸஹோதரீ, உனக்கு எப்போதாயினும் இத்தகைய அனுபவம் உண்டாயிருக்கிறதா?"

"இல்லை ஷரீபா, நான் பிறர் வழிபட்டுச் செல்பவளல்லள். நான் எப்போதாயினும் ஒருகாதலனைத் தேடுவேனானால் அடிமைச்சந்தை சென்று நானிட்ட கட்டளைகளைச் செய்துகொண்டு என்கால்கீழ் விழுந்துகிடக்கும்படியான அடக்கமுள்ள ஒரு புருஷனை வாங்கிவருவேன். நான் சிறுபெண்ணாயிருக்கும்போதே எனது தாயார் எனக்குக் கட்டாரியின் மஹிமையை உபதேசித்திருக்கிறாள். அதைக்கொண்டு நாம் மனிதர்களை நமக்கு அடிமைகளாக்கலாம்.

"ஸஹோதரீ, உன்னைக் கண்டு ஏங்கிக்கிடக்கும் அடிமைகள் எவர்மீதாவது—நீ மரணத்தினின்றும் காப்பாற்றிய நாடோடிப்போர்வீரன் உள்பட—அந்த மந்த்ரத்தை இதுவரைக்கும் ப்ரயோஹித்ததுண்டா?"

"என்ன ஆவல் உனக்கு? உனக்குக் குறும்புத்தனம் ஜாஸ்தி."

"நான் உன்ஸஹோதரிதானே. என் ஆவலை மன்னிக்கக்கூடாதா? என் மனவமைதியை அபகரித்த நயமான சரீரமும் ம்ருதுவான அங்கங்களும் கரிய விழிகளுமுடைய ஒரு ஸௌந்தரபுருஷரைப்பற்றி நான் உன்னிடம் சொல்லவில்லையா? நீ உன் கட்டாரியின் மந்த்ரத்தையோ அல்லது அதைவிட அதிக வச்யசக்தியுடைய ரூபலாவண்யமான உனது விழிகளின் மஹிமையையோ ப்ரயோஹித்திருக்கக்கூடிய துணையற்று நாதனற்று நாடோடியாய் வீட்டைவிட்டு இத்தேசம்வந்த புருஷன் எவனும் உனக்கு ஞாபகமில்லையா?"

"ஷரீபா நீ மஹா தந்த்ரக்காரி. உன் பார்வை ஸாதுத்தன்மையாயும் உனது கண்கள் சாந்தமாயிருந்தபோதிலும் நீ ஒரு நாணமற்ற சிறுமி. நீ சொல்வது நிஜந்தான். அழகும் தைர்யமும் பொருந்திய ஒரு யௌவன புருஷன்மீது ஒருகாலத்தில்நான் என்மந்த்ரத்தை ப்ரயோஹித்ததுண்டு. ஆனால் அவன் எவ்வளவுரூபலாவண்யமுடையவனோ அவ்வளவுக்கவ்வளவு நம்பிக்கைத்ரோஹிபோலிருக்கிறது. இந்நாட்டுச் சிறுவர்கள் ஸ்த்ரீகளை ஏமாற்றுபவர்களாயிருந்தாலும் இருக்கலாம். நான் தெரிந்தெடுத்த அடிமை என்னைப் வாய்பேச்சுப் பேசி ஏமாற்றிக்கொண்டிருக்கையில், அவனுடைய மனதை வேறொரு ஸௌந்தரி சிறைகொண்டிருந்தாலும் இருக்கக்கூடும்."

நரேந்த்ரன் திடுக்கிட்டான். இது என்ன, குருட்டடியாய்ப் பேசின வார்த்தையோ அல்லது அந்த விசித்ரப் பெண்மணிக்கு அவனுடையபூர்வசரித்ரம் தெரிந்திருக்குமோ? சற்று நேரம் இருவரும் ஒருவருடனொருவர் பேசாமல் நடந்தார்கள். அந்தகார வழி முடிவெய்தியது.

ஜெலிகா ஒரு சிறிய கதவைத் திறந்தாள். செம்மணற் கற்கள் பரப்பப்பட்ட ஒரு முற்றம்

அவர்களுக்குத் தென்பட்டது, நக்ஷத்ரங்களின் ஒளி ஜெலிகாவின் முகத்தில் விழுந்தது. அவள் முகம் வெளுத்திருந்தது; ஸந்தோஷக் குறிகளெல்லாம் அகன்றுவிட்டன. அவள் அம்முற்றத்தை மூலைமூலையாய்த் தன் நுட்பமான கண்களால் பரிசோதித்தாள். காவலாளிகளின் காலடியோசையையும் ராப்பக்ஷிகளின் ஒலியையும் கவனமாய் உற்றுக் கேட்டாள். வரம்பு கடந்த அச்சத்தால் அவளுடைய புருவங்கள் இருண்டன. எறும்பு ஊறும் த்வனியைவிடத் தாழ்ந்த த்வனியாய்க் காதோடு காதுவைத்துப் பேசத்தொடங்கினாள்:

"யௌவன வீரசிகாமணியே, நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். எல்லாவற்றையும் விட்டுச் சொல்லிவிடுகிறேன். உனக்கு ஸர்வமும் தெரியவேண்டும். இவ்விடம் நேரிடக் கூடிய ஸர்வ அபாயங்களையும் நீயே எதிர்த்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதோ ஆஹாயத்தை அளாவிநிற்கும் மதிற்சுவர்களால் சூழப்பெற்றிருக்கும் கோட்டை ஆக்ரா நகரத்துக் கோட்டை. உனக்கே தெரியலாம். இதைப்போன்ற கோட்டை இப்பூமண்டல முழுவதுங்கிடையாது."

"அப்போதே தெரிந்துகொண்டேன். மேலே விஷயங்களைச் சொல்லிக்கொண்டு போ, தடங்கல் வேண்டாம்,"

"நீ உன் அறையின் கூரையினின்று கண்ணுற்றது கோட்டையின் வெளிப்ராகாரம். ஸபா மண்டபங்களும், நாட்டிலுள்ள உயர்குலச் சீமான்களுடைய வாஸஸ்தலங்களும் அவ்விடம் அமைந்திருக்கின்றன. சக்ரவர்த்தியவர்களுடைய ஆட்கள் இரவும் பகலும் ஓயாமல் உருவினகத்தி உருவினப்ராகாரம் அவ்விடம் காவல்புரிகிறார்கள். நமது சக்ரவர்த்தியவர்களின் ராணிமார்களுள் ஒருவராகிய ஆம்பர் ராஜகுமாரியின் விருந்து. மண்டபமும் அவ்விடம் தானிருக்கிறது. அவ்விடம் தான் ராணியாருடைய ஜோதிஷ சாஸ்த்ரிகளும், நிபுண வைத்யர்களும் வாஸம். ராஜா மான்ஸிங் ராணியாருடைய மருமகன். உன்னை யாவரும் கைவிட்டபிறகு மான்ஸிங் அவர்களுடைய வேண்டுகோளின்பேரில் நீ விருந்து மண்டபத்துக்குக் கொண்டுவரப்பட்டனை. ராணியாருடைய ப்ரபலவைத்யர்கள் உன்னை இரவும் பகலும் கண்கொட்டாமல் கவனித்து உன் வ்யாதியை சொஸ்தப்படுத்தினர்."

"மஹா பெருந்தன்மையுள்ள ராஜா அவர்கள் என்வம்சத்தாரிடமும் என்னிடமும் அதிக பக்ஷம் பாராட்டி எங்களுக்கு எவ்வளவோ நன்மைகள் புரிந்துவருகிறார். நான் தண்டனைக்குப் பாத்ரனாயிருந்தபோது அவர் என்னை க்ஷமித்தருளினார்; நான் மரணாவஸ்தையிலிருந்தபோது எனக்கு உயிர்ப் பிச்சைக் கொடுத்தார்."

"அவருடைய அன்பு, பெருந்தன்மைகளின் அளவே அவருடைய பெருமையும் செல்வாக்கும். சக்ரவர்த்தியவர்களுடைய மூத்த மகனும் அவருக்குப் பின்னர் பட்டத்துக்கு வர வேண்டியவருமாகிய ஸலிம் ராஜகுமாரர் அவருடைய ஸஹோதரியை மணம்புரிந்திருக்கும் விஷயம் உனக்குத் தெரிந்திருந்தாலுமிருக்கலாம்."

"ஆமாம், கேள்விப்பட்டிருக்கிறேன்."

"இன்றிரவு நீ அந்த ராஜகுமாரரைப் பார்ப்பாய்."

"ஸலிம் இளவரசையா?'

"ஸலிம் இளவரசையும், அவருடைய தாயாரையும், இளவரசர் மனதைக் கவர்ந்திருக்கும் நாரீமணியொருத்தியையும் ஆக மூவரையும் நீ இன்றிரவுபார்க்கும் பாக்யம்பெறுவாய்."

"ஜெலிகா, நீசொல்வது விசித்ரமாயிருக்கின்றதே! ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களைத்தவிர இதர மனிதர்கள் ஜனானா ஸ்த்ரீகளைப் பார்ப்பது எப்போதாவது ஸாத்யமா?"

"ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள் தவிர, வேறெந்த புருஷரும் அவர்களைக் கண்ணுற்றதில்லை யென்பது வாஸ்தவமே. ஆனால் நீ இன்றிரவு ஒரு ஸ்த்ரீயாயிருக்கின்றனை என்பதை மறந்துவிட்டனையோ ஸஹோதரீ?"

நரேந்த்ரனோ மஹாவீரதீரன்; அஞ்சா நெஞ்சம் படைத்த இணையற்ற ரணசூரன். ஆயினும் ஜெலிகாவின் சூழ்ச்சிகளைக்கேட்டு அவன் முகம் ரக்தம் சுண்டி வெளுத்தது. நூற்றுக்கணக்கான வீரர்கள் இடைவிடாது காவல் புரியும் ஜனானாவினுள் ஸ்த்ரீவேஷம் தரித்து நுழைவது யமன் பட்டணத்துக்குச் செல்வதேதான். ஆனால் இவ்விதமெல்லாம் எண்ண

மிட ஜெலிகா அவனுக்கு அவகாசம் கொடுக்கவில்லை.

"இந்த முற்றத்துக்கப்பால் ஓர் உன்னதமான கற்சுவர் எழும்பியிருக்கிறது பார். அச்சுவருக்குப் பின்புறம்தான் ஆக்ரா ராஜ்யத்து ராணிகளும் பட்ட மஹிஷிகளும் வாஸம் செய்யுமிடம். இதுவரைக்கும் கடந்து ஒரு மனிதனும் உயிருடன் திரும்பிவாராத அம்மதிற்சுவரை நீ இன்றையதினம் தாண்டிச் செல்வாய். அந்நிய புருஷர்கள் இதுவரைக்கும் கண்டிராத வதனங்களைக் கண்ணுறும் பாக்யம் நீ பெறுவாய்."

"எல்லாம் இருக்கட்டும், மதிஹீனமான இந்த ஸாகஸமேன்?"

"உனக்குத் தைர்யம் இல்லையா? திரும்பிவிடலாம்."

"எனது கடமையென எனக்குத்தோன்றும் எக்கார்யத்தினின்றும் என்மனம் பின்வாங்காது. நமது மஹா பெரிய காருண்ய சக்ரவர்த்தியவர்களுடைய அந்தப்புரத்தின் நிபந்தனைகளை நிராஹரித்து ஸ்த்ரீவேஷம்பூண்டு ராஜபத்னிகள் வஸிக்கும் எல்லைக்குள் நான் கள்ளத்தனமாய்ச் செல்வது எனது கடமைகளிலொன்று என்று எனக்கு ரூபி.நான் பின் வாங்குவதில்லை"

"ராஜஸ்த்ரீகள் எல்லோரிலும் சிறந்து பேர்பெற்று சீர்பெற்று விளங்கப்போகிற மாதுசிரோமணி உன்னை அழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்திருக்கிறாள். அவளிடமிருந்து நீ சில கட்டளைகள் பெறுவாய்."

"முன்னே செல். பின்னரே வருகிறேன்."

அத்யாயம் 3

ராஜபுத்ர ராணியார்

ஆஹாயத்தில் சந்த்ர ப்ரகாசம் கிடையாது. நக்ஷத்ர வெளிச்சந்தான் தெரிந்துகொண்டிருந்தது. அவ்வொளியில் இருவரும் முற்றத்தைக் கடந்து சென்றனர்.

ஜனானா காவலைச் சேர்ந்த ஒரு நபும்ஸகன் உட் ப்ராகார வாயிலண்டை நின்றுகொண்டிருந்தான். அவன் தன்னுடைய ஸேவகத்தின் மஹிமையால் சக்ரவர்த்தியவர்களுடன் அதிக பரிசயம் ஏற்படும் அதிர்ஷ்டம் பெற்றவன். மஹாராஜாக்களும், சிற்றரசர்களும், ப்ரபுக்களும், ப்ரதானிகளும், ஆம்ராக்களும், மன்ஸப்தாரர்களும் அவனுக்கு ஏராளமாய்ப் பொன்னும் பரிசுமாய்க்கொடுத்து அவனது தயையை எதிர்பார்த்து இருந்தனர். அவனது நாமதேயத்தைக் கேட்டு நடுங்காத ஸேவக ஸ்த்ரீகளும், அடிமைப் பெண்களும் அரண்மனையில் கிடையாது. அவர்கள் ஒவ்வொருவருடைய பேர், ஊர் முதலிய ஸர்வ விஷயங்களும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அவன் மாத்ரம் பெரியமனது செய்யாமலிருந்தால் அவர்களுள் பலர் இதற்குள் இப்பூவுலகை விட்டு அகன்றிருப்பார்கள்.

"அவன்தான் முஸ்ரூர்" என்று சொல்லி ஜெலிகா உடல் நடங்கினாள்.

"யார் அது முஸ்ரூர் என்பது?"

"உச், மெள்ள" என்று உதட்டின்மீது கைவைத்தாள்.

ஜெலிகாவும் அவளுடைய தோழியும் வாசற்படியண்டை வந்தனர். முஸ்ரூர் புன்சிரிப்பு சிரித்துக்கொண்டே அவர்களைப் பார்த்து,

"ஹா! என்ன ப்ரதிதினமும் நிசியாகிறது? நாளுக்கொரு ஸ்நேஹம் புதிதாய்ப் பிடித்து வருகிறாய்போலிருக்கிறது. யார் அந்த 'அழகிய ஸ்த்ரீ, அரண்மனைக்குள் அழைத்துச் செல்கிறாய்? இதுவரைக்கும் நான் பார்த்திருப்பதாகக் காணோமே?" என்றான்.

"முஸ்ரூர், உமது தயைக்கு என்றைக்கும் காத்திருக்கிறேன். இப்பெண் எனது உடன்பிறந்தாள். ஹிந்துஸ்தானம் வந்து கொஞ்ச காலம்தான் ஆயிற்று. நமது ஜனானாவில் வேலை தேடி வந்திருக்கிறாள். அவள் அதிர்ஷ்டம் ஏதாவது வேலை அகப்படுமாயின் உனக்கு அவள் சீக்ரத்தில் ஸ்நேஹமாவாள்."

"அவளுக்கு வேலை அகப்படலாம். இக்காலங்களில் நல்ல கட்டாரிப் பழக்கமுள்ள தார்த்தரிப் பெண்கள்தான் அதிகமாய்த் தேவை. உனது ஸஹோதரி விசிறி பிடிப்பதைவிடக் கட்டாரிபிடிப்பதில் கைதேர்ந்தவளாகத் தோற்றுகிறது." இந்த அரண்மனைக்குள் வெளியுலகம் அறியாத செயல்கள் எத்தனையோ ஸர்வஸாதாரணமாய் நடைபெறுகின்றன—அல்லா நம்மை மன்னிப்பாராக. உன் ஸஹோதரியின் நடையுடை பாவனைகள் எனது மனதில் சிறிது ஸந்தேஹத்தை உண்டுபண்ணுகின்றன. ஆதலால் உள்ளே நுழைவதற்குமுன்

அவளுடன் ரஹஸ்யமாய் இரண்டொரு வார்த்தைகள் பேசவேண்டும்.

"முஸ்ளூர், அவளுடன் இன்றிரவு வார்த்தையாடுவது அஸாத்யமெனத் தோற்றுகிறது. ஏனெனில் அவளுக்கு இன்னும் இந்த இந்துஸ்தானத்தில் வழங்கும் பாஷை தெரியாது. ஆனால் அவள் சிறிது சுடியானவள். சீக்கிரத்தில் கற்றுக் கொண்டுவிடுவாள். அப்புறம் அவளே உன்னிடம் பேசவருவாள். ஆகையால், மன்னிக்கவேண்டும். நாங்கள் செல்கிறோம், அனுமதி அளியும்" என்று சொல்லும்போதே ஜெலிகாவின் முகம் பயமிகுதியால் வெளுத்தது.

"என் ப்ரிய ஸ்நேஹிதை, நீ சொல்வதற்கு மாறாகச் சொல்லமாட்டேன். ஆனால் உன் ஸஹோதரி இவ்விடம் வருவது இதுதான் முதல் தடவை. ஆதலால் அவள் உள்ளே செல்லுமுன் அவளுடைய முகத்தையாவது பார்த்தாகவேண்டும்."

ஜெலிகாவுக்கு ஆத்ரம் அதிகரித்தது. அவளுடைய நெற்றிக் கோவைப்பழமாய்ச் சிவந்தது. வேதனையாலும் ஸங்கடத்தாலும் உதட்டைக் கடித்துக்கொண்டாள். நா குழற அவள் பேசிய மொழிகளில் அவளுடைய பயமும், மனோவேதனையும் சிறிது வெளியாயிற்று: "நான் ஜோத்பாய் ராணியின் அடிமையென்பது நீ அறிந்த விஷயம். ராணியாரது கட்டளையின் பேரில் எனது ஸஹோதரி என்னுடன் வருகிறாள். முஸ்ளூர், இதோ பார் ராணியாருடைய முத்ரை மோதிரம். எனது உடன் பிறந்தாள் விஷயமாய் நீ ஏதாவது தடைசெய்தால் ராணியாருக்குப் பதில் சொல்லியாகவேண்டும்."

ஏற்கெனவே கறுத்த மேனியனாகிய அம் முஸ்ளூரின் முகம் பின்னும் இருண்டது. தன்னிடம் இவ்வளவு அலக்ஷ்யமாய்ப் பேசியதைக் கேட்டு அவனுடைய கண்கள் சிவந்தன. கோபாக்ராந்தனானான். அந்த நபும்ஸகன் மோதிரத்தைப் பார்த்துவிட்டுத் தலைவணங்கி மேல்வார்த்தை பேசாமல் ஜெலிகாவையும் அவளுடைய தோழியையும் உள்ளே செல்லவிட்டான்.

"ஜெலிகா, அவன் அகம்பாவத்தை அரை நொடியில் அடக்கி வைத்தனையே! இனி உன்னிடம் அவன் வாலாட்டமாட்டான். உன்னோடு பேசும்போது சற்றுமுன்பின் ஆலோசித்துத் தான் பேசுவான்,"

'அவன் ஸமாசாரம் உனக்குத் தெரியாது; அவன் மஹா பொல்லாதவன்; நிஷ்கண்டகன். பழிக்குப் பழிதீர்ப்பதில் நிபுணன். இன்றிரவு அப்படுபாவியை நான் பகைத்துக் கொண்டேன். ஆண்பாலாயிருந்தால் மறப்பான்; பெண்பாலாயின் மன்னிப்பாள். ஆணும் அற்றுப் பெண்ணுமற்ற இந்த அலி குற்றங்களை மறப்பதுமில்லை, மன்னிப்பதுமில்லை."

ஜெலிகா மௌனமுத்ரையிட்டு முன்னே சென்றாள்; நரேந்த்ரனும் உடன் சென்றான். ஸலவைக்கல் முதலிய விலையுயர்ந்த கற்களால் கட்டப்பட்டு நக்ஷத்ர ஒளியில் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் ஸ்தூபிகளையும் சிகரங்களையுமுடைய ரமணீயமான பல மாளிகைகள் கடந்து சென்றனர். வழியெல்லாம், கத்திகேடய ஸமேதர்களாய் விளங்கும் பல ஸ்த்ரீகள் காவல் புரிந்து நின்றனர். அரண்மனையிலுள்ள எண்ணிறந்த விளக்குகளின் ஒளியில் அவ்விரவு, மாரிகால இரவாகவே தோற்றவில்லை. கீழே ப்ரவஹித்துக்கொண்டிருக்கும் யமுனாநதியின் நீரோட்ட சப்தம் வெகு தூரத்தினின்று கேட்டுக்கொண்டிருந்தது. எத்தனையோ சுற்றுவழிகளெல்லாம் கடந்து இருவரும் வீணை முதலிய ஸங்கீத த்வனிகள் இனிமையாய் ஒலித்துக் கொண்டிருக்கும் ஜோதிமயமான ஒரு சிறந்த க்ருஹத்தை அடைந்தனர். ஜெலிகா மெதுவாய் ஒரு கதவைத் திறக்க அவர்களிருவரும் ஒரு பெரிய மண்டபத்துள் ப்ரவேசித்தனர்.

அக்பரது திவ்யபுத்ரரும், அக்காலத்தில் இணையற்று விளங்கிய மஹா பெரிய ராஜ்யத்து இளவரசுமாகிய ஸலீம் ராஜகுமாரர் நல்ல காசிபட்டு பீதாம்பரங்கள், சந்தன களபகஸ்தூரி முதலிய வாஸனை த்ரவ்யங்கள் அணிந்து உயர்ந்ததொரு ஸ்தானத்தில் கம்பீரமாய் வீற்றிருந்தனர்: நல்மணம் கமழும் தைலங்கள் விட்டு கொளுத்தப்பட்டிருந்த வெள்ளி விளக்குகளும், காபூல் ப்ராந்த்யத்தில் உற்பத்தியாகும் இனிய பழவர்க்கங்கள் நிறைந்த தட்டு தாம்பாளங்களும் அவர்முன் விளங்கிக்கொண்டிருந்தன. இளவரசருக்கு அதிப்ரியமான ஷிராஸ் சாராயம் முதலிய மதுவர்க்கங்களும் அழகிய கண்ணாடி அல்லது கல் கோப்பைகளில் விளக்கொளியில் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. அக்பரது ராஜபுத்ர பத்னியாகிய ஜோத்பாய் ராணியார் தமது திருமகனுக்கு விருந்து அளித்துக்

கொண்டிருந்தனர். மண்டபமுழுவதும் பட்டப்பகல்போல் வெளிச்சமாயிருந்தது. காஞ்சாணிகள் அல்லது ஸ்வர்ண விக்ரஹங்கள் எனப் பெயர் பெற்ற ஆக்ரா நகரத்துத் தாஸிகள் இளவரசு முன்னர் பிறைவடிவமாக நின்று கர்ணாம்ருதமானபாட்டுகள்பாடிக்கொண்டிருந்தனர்.

அவர்களுடைய வாய்ப்பாட்டுக்கிசைய கிண்கிணென்று ஒலிக்கும் அவர்களுடைய கால்களும் நடனம் புரிந்தன. சக்ரவர்த்தியவர்களுடைய புதல்வரை ஆலிங்கனம் செய்துகொள்ளப்போவதுபோல் அவர்கள் தமது வெண்மையான கரங்களை நீட்டும்போது, அவர்களுடைய ஆடைகளில் விளங்கும் பொன் ஜரிகைகள் விளக்கொளியில் மின்மினென்று ப்ரகாசித்தன. கடைசியில் பாட்டுகளும் வாத்யங்களும் ஓய்ந்தன. நாட்டியமாடும் அந்த ஸ்வர்ணவிக்ரஹப் பெண்கள் விம்மும் தமது மார்புகளின்மீது கரங்களை வைத்துத் தலைவணங்கி இளவரசரை நமஸ்கரித்து நின்றனர்.

ஸலீம் ராஜகுமாரர் ஆனந்தம் எய்தினர். அவருடைய முகம் குடிமிகுதியால் நல்லசிவப்பு நிறமாயிருந்தது. தன் முன்னர் தோன்றும் அபூர்வக் காட்சியைக்கண்டு அவர் புளகாங்கிதமாயினர். தாஸிகளுக்கு இருமருங்கிலும் அரண்மனை ஸேவாஸ்த்ரீகள் வணக்கத்தால் தலை குனிந்து மிகவும்கம்பீரமாய் அணிவகுத்து நின்றனர். அவர்களுக்கிடையில் ஜெலிகாவும் அவளது தோழியும் ஒரு ஸலவைக்கல் ஸ்தம்பத்து மறைவிலிருந்தார்கள்.

இவற்றையெல்லாம் கண்டு உத்ஸாஹமுற்ற இளவரசர் "என் அருமை அன்னையே? உனக்குப் பணிவிடை செய்பவர்கள் அனைவரும் நல்ல ஸௌந்தர ஸ்திரீகள். அவர்களுடைய கண்டமும் காதுக்கினிமையாயிருக்கிறது. நான் யுத்தத்தை முன்னிட்டு செல்லுமுன்னர் என்னைப் பரிவுடன் அழைத்து இவ்வளவு விமர்சையாய் விருந்தளித்ததை நான் எவ்வளவு தூரம் சென்றாலும் ப்ரதிதினமும் நினைத்துக்கொண்டிருப்பேன்" என்றார்.

மகன் பிரிவாற்றாத அன்னையாரும் தமது செல்வப்புதல்வனை நோக்கி, "இளவரசே, வீரஸிம்ஹமே, என்றைக்கும் நான் உன்னை என் கண்ணின் கருமணியாகக் கருதி வளர்த்துவந்தேன். உன்னை ஸதா கண்குளிரப் பார்த்துக் கொண்டிருப்பதே எனக்கு ஆனந்தம். நீ போரை முன்னிட்டு செல்லுமுன் உன்னை ஸந்தித்து. உனக்கு விருந்தளிப்பது எனக்கு எவ்வளவோ பெருமையாயிருக்கிறது. உனது தந்தையாரைப்போன்ற வீரதீர புருஷரும், தர்ம பரிபாலன கர்த்தாவும் இப்பூவுலகில் காண்பதரிது. அவரைப்போலவே நீ நடந்துகொள்ளவேண்டும். உனது ஜயவிஜய காலங்களில் உன் ராஜபுத்ர தாயாரை ஞாபகம்வைத்து ஹிந்து ப்ரஜைகளை ஹிம்ஸிக்காது அவர்களிடம் ஆதரவாயிருப்பாயென்று எண்ணுகிறேன்" என்றாள்.

மது மயக்கங்கொண்டு உழலும் இளவரசருக்கு இவ்வளவு பரிவுமொழிகளும் செவிடன் காதில் ஊதிய சங்குபோலிருந்தது. அம்மொழிகளில் ஓர் அக்ஷரமாவது அவர் செவியில் விழவில்லை. பால்யம் முதற்கொண்டு, சீரும் செல்வமுமாய்ப் பயமறியாத இளங்கன்றாய் வளர்ந்துவிட்ட அரசகுமாரருக்குத் தகப்பனாரது நற்குணங்களில் ஒன்றாவது படியவில்லை. அவர் கேளிக்கைக் குழந்தையாகவே யௌவனபர்வத்தை யடைந்துவிட்டார். ராஜ்ய ஸ்தாபக, ராஜ்ய நிர்மாண கர்த்தாவாகிய அக்பர் பெருமான் மாண்டபின்னர் ராஜ்யத்தின் கதி என்னாகுமோ என்று ஏங்கினர் மொகலாய ராஜ்யத்து மதியூஹிகள். இன்றிரவு ஸலீம் தமது தாயாரைத் தர்சிக்கவந்தது அவள் பரிவுடன் அளிக்கும் விருந்தை உத்தேசித்தன்று. தனது ஆவியைக் கொள்ளைகொண்டு மோகவலையிலாழ்த்திய கருவிழியாள் ஒருத்தியைக்கருதிவந்தவர் அவர். "நிசியாய்விட்டது. அகாலமாகிறது. பெண்மணிகளெல்லாம் அதிக ச்ரமப்பட்டிருக்கின்றனர்; முகமலர்களெல்லாம் வாடிவிட்டன; அவர்களுடைய கண்கள் நித்ரையை நாடுகின்றன. இந்தா, இந்தப் பொற்கிழியைக் கொடுத்து அவர்களை அனுப்பிவிடு."

யாவரும் போய்விட்டனர். தாயாரும் பிள்ளையும் நம்பிக்கையான சில ஊழியக்காரிகளுமே அவ்விடம் தங்கியிருந்தனர். அவ்வாறு தங்கியிருக்கும்படிக் கட்டளையிடப்பட்டவர்களுள் ஜெலிகாவும் அவளது தோழியும் இருவர்.

"எனதாசை மகனே, உன்னைக் காண்பது அத்திப் பூத்தது போலாய்விட்டது நீ ஆக்ராவில் தங்கியிருப்பதே அபூர்வமாயிருக்கிறது. ஓயாது இரவும் பகலும் போர்முனையில் உழைப்

பதால் உன் உடம்பு இளைத்துப் போய்விட்டது.”

“ஆக்ராவிலிருக்க எனக்கு இப்போது பிடிக்கவில்லை. இனி ஆக்ராவிலிருந்து பயனென்ன? போர்த்தொழிலால் மட்டுமே உடம்பு இளைக்காது. கார்ய விக்னமும் மனோவேதனையுமே என் உடம்பை உருக்கிவிட்டன.”

“நீ மணம்புரிய எண்ணியிருந்த அந்தப் பாரஸீக இளங்கொடியைப் பற்றியா பேசுகிறாய்? அந்த விஷயத்தில் உனது தகப்பனார் செய்த ஏற்பாடு ஸர்வோத்தமமானது. நமது ராஜ்யத்துப் பணிவான ஊழியர்களிலொருவரை மிஹ்ருந்நிஸா விவாஹம் செய்து கொண்டு நிம்மதியாயிருக்கிறாள். என் செல்வக் குமாரனே, உன் மனதில் எழும் துர்யோசனைகளை யெல்லாம் ஒழித்துவிடு. உனது உன்னத பதவிக்கேற்ப கம்பீரமாய் நடக்க வேண்டும்.”

ஸாலிம் இளவரசர் பதில்மொழி யொன்றும் புகலவில்லை.

“நான் உதித்த கம்பீர குலத்தில் தோன்றிய ராஜகன்னிகைகள் பலரை நீ மணம் புரிந்திருக்கின்றனை. அவர்களிடம் உனக்கு நவமணிகளான பிள்ளைகள் பிறந்திருக்கின்றனர். ராஜா மான்ஸிங் அவர்களுடைய ஸஹோதரி உன் மூத்தபிள்ளையின் அன்னையாவள். குஸ்ரு அழகிலும் தைர்யத்திலும் நிகரற்றவன். காஜா ஹாஸன் புத்ரிதான் பார்விஸ் தாயார். குழந்தையாயிருந்தும் எவரிடமும் காணப்படாத திடசித்தமும், கூரிய புத்தியும், முகப்ரகாசமும் பொருந்திய குர்ராம் ராஜகுமாரனைப் பெற்றெடுத்த உதயஸிங்கின் புத்ரியோ உனது மூன்றாவது மனைவி. தீபத்து ராஜ்யாதிபதியும் தன் மகளை உனக்கு அளித்திருக்கிறார். ராஜஸ்தான முழுவதுக்கும் நடுநாயகமாய் விளங்கும் ஜகத்ஸிங்கின் புதல்வியைக் கடைசி பத்னியாகக் கொண்ட பாக்யம் பெற்றுள்ளாய். நீ கைதொட்டுத் தர்மமாய் மணந்த மனைவிமார்களிடம் பூர்ண காதலையும் வைத்து அவர்களை நேசிப்பதுதான் உசிதம். இப்போது ஷெர் ஆப்கனின் பெண்டாயிருப்பவளின் காதலுக்கு ஆசைப்படாதே. அது அதர்மம், அக்பர் மகனுக்கு ஏற்றதன்று.”

“தாய்சொல்லின் மிக்க மந்த்ரமுண்டோ? நீ சொல்லிவிட்டால் அதற்குமேல் என்ன ஆக்ஷேபம்? தந்தையார் செய்த ஏற்பாட்டை நிராஹரிப்பது ஸாத்யமா? நிசிவேளைகூடத் தப்பிவிட்டது. எவ்வளவு நேரம் கண் விழித்திருப்பாய்? உன் உடம்புக்கு ஆகாது. இன்றொரு விருந்துக்கு நான் செல்லவேண்டும். எனது பெரியன்னை ராக்ய பீகம் ஸால்தானு என் வரவை எதிர்பார்த்திருப்பாள்.”

“எனது ஆருயிர்ச் செல்வமே, நீ நெறிதப்பி நெறி செல்கிறாய். நீ பார்க்கப்போவது எனது ஸஹகளத்தியையன்று. இந்த அவவேளையில் உன் வரவை எதிர்பார்ப்பவள் வேறொருத்தி. ஸரி போய்வா, அந்தப் பாரஸீகப்பெண்ணைக் கடைசிமுறைப் பார்த்துவா. ஆனால் இதுமாத்ரம் ஞாபகமிருக்கட்டும். அவள் இப்போது ஷெர் ஆப்கன் மனைவி. அவளிடம் மரியாதையாய் நடந்துகொள். அவள் கன்னிகையல்லள். எனது அடிமை ஜெலிகா உன்னை எனது ராஜஸஹோதரி பவனத்துக்கு அழைத்துச் செல்வள்.”

ராஜகுமாரர் இன்னொரு முறை குடித்துவிட்டுத் தாயாருக்கு வந்தனஞ் செய்து மண்டபத்தை விட்டு அகன்றார். ஜெலிகாவும் அவளுடைய தோழியும் அவரை அரண்மனையின் பிறிதொரு பாகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

நூதனமான ஆக்ரா கோட்டையின் மதிற் சுவர்களின்மீதும் அவ்விடம் அமைக்கப்பட்டிருந்த கொத்தளங்களின்மீதும் மோதிக்கொண்டிருந்தன யமுனாநதியின் அலைகள். மந்தமாய் வீசிக்கொண்டிருக்கும் காற்றுடன் உத்யானவனத்தில் புஷ்பித்திருக்கும் மலர்களின் நறுமணம் கலந்திருந்தது. அந்த நிசிராத்ரியில் எல்லாம் நிச்சப்தமாயிருந்தது.

ஆனால் ஸாலிம் இளவரசோ அவற்றை யொன்றும் கவனிக்க வில்லை. நக்ஷத்ர ஒளி ப்ரதிபலிக்கும் யமுனாநதியின் அழகும் காற்றின் நறுமணமும், சப்தமற்று நித்ரையிலாழ்ந்திருக்கும் ஆக்ரா நகரத்துக் காட்சியும், அக்கோட்டைக்குள் ஆங்காங்கு எழும்பியிருக்கும் ஸ்தூபிகள், உலாவிடங்கள் ஒன்றும் குடிமயக்கத்தால் வருந்தும் ஸாலிமுக்குத் தெரியவில்லை. மிதமிஞ்சி மதுபானம்செய்ததால் முகம் சிவந்து கண்கள் ரக்தவர்ணமாகிக் கால் தள்ளாடத்

தள்ளாட அவர் ராக்யபீகம் இல்லம் சென்றார்.

போகும்போது ஓரிடத்தில் சற்றே குடிமயக்கம் தெளிய அவர் ஜெலிகாவைப் பார்த்து “தார்த்தாரிப் பெண்ணே, உன்னைநான் இதற்குமுன் பார்த்திருக்கிறேன் போலிருக்கிறதே. உனது ஊடுருவிப்பாயும் இருண்ட கண்களை எளிதில் மறக்க முடியாது” என்றார். ஜெலிகா வணக்கமாய் “மஹாராஜா, நான் உமது பணிவான அடிமைகளில் ஒருத்தி. உமது தாயாருக்கு ஸேவகம் புரிபவள்” என்றாள்.

“இந்தப் பெண்உனது ஸஹோதரியல்லவா? தார்த்தாரிப் பெண்கள் நல்ல உயரமுடையவர்கள் போலிருக்கிறதே. உன் ஸஹோதரி உன்னைவிட ஒரு பிடி உயரமாயிருக்கிறாள். உன் முகத்தைப்போல் அவ்வளவு மனதுக்கினியதாயிராவிட்டாலும், அவள் முகத்தில் சிறிது ஆண்மைத்தனம் விளங்குகிறது. அதுவும் ஒரு விதத்தில் நன்றாய்த்தானிருக்கிறது.”

அச்சக்குறி கிஞ்சித்து மின்றி ஜெலிகா விடைபகர்ந்தாள்: “ராஜகுமாரரே, நாங்கள் காட்டில் வஸிக்கும் ஒரு முரட்டு ஜாதியார். எங்கள் ஜாதிபுருஷர்களுக்கு ஸதாஸர்வகாலமும் போர்த்தொழில்தான் கார்யம். எங்கள் பெண்கள் ஏகாந்தமான மலைப்ராந்தங்களில் ஆடுமாடு மேய்ப்பது வழக்கமாதலால் அவர்களுக்குக் கட்டாரி ப்ரயோஹம் நன்றாய்த் தெரியும்.”

“உனது உடன் பிறந்தாளுக்கு ஹிந்துஸ்தானப் பாஷை தெரியுமா? நான் ஒரு முத்தங்கொடு என்றுகேட்டால் அவள் அறிந்து கொள்வளா?”

“எனது ஸஹோதரிக்கு எங்கள் பாஷை தவிர வேறொன்றும் தெரியாது. எங்கள் நாட்டில் முத்தங்கொடுப்பது அவமானத்துக்கிடம். அதையொரு வசையான கார்யமென்று எங்கள் பெரியோர்கள் சொல்வார்கள். யாராவது முத்தமிட்டால் எங்கள் ஜாதிச் சிறுமிகள் அவர்களைக் கட்டாரியால் ஒரே குத்தாய்க் குத்திப் போடுவார்கள்.”

“காட்டு தேசத்துக்கேற்ற காட்டுப்பூனைகளாகத்தான் இருக்கிறீர்கள் நீங்கள்! சீறினாலும் பூறினாலும் பாதகமில்லை. இவளுக்கு நான் முத்தமிடுவேன். அவளது அதரங்களில் நல்ல சாராயத்துக்கொப்பான இனிய ரஸமிருக்கிறதென்று எண்ணுகிறேன். எனது விருப்பத்துக்கிசைந்தால்தான் என் அரண்மனையில் அவளுக்கு வேலை கிடைக்கும். முஸல்மான் ஸ்திரீகள் சிறிது பிதவுடையவர்கள்; ராஜபுத்ர மாதர்களோ லஜ்ஜைப்படுகிறவர்கள். இந்த முரட்டு ஜாதித் தார்தாரிப் பெண்கள்தான் போர்வீரர்களுக்கு ஏற்றவர்கள்.”

நரேந்த்ரனுக்குக் கோபமும் ஆத்ரமும் உண்டாக உதட்டைக் கடித்துக்கொண்டான். அவனையறியாமலே அவனுடைய கை அரைக்கச்சையை நாடியது. ஆனால் அத்தருணம் பதட்டம் சிறிதாவது தோன்றுமாயின் அந்தரங்கம் வெளியாய்விடும். ஜெலிகாவும் அவனும் ப்ராணன் இழக்கவேண்டிவரும். இந்தத் தர்மசங்கடத்தினின்றும் உபத்ரவத்தினின்றும் தப்பியோடவோ அல்லது ப்ராணனை விட்டுவிடவோ எத்தனிப்பவன்போல் நரேந்த்ரன் கீழே பாயும் யமுனாநதியை உற்றுநோக்கினான். ஆனால் ஜெலிகாவோ இந்த அரண்மனை அந்தரங்கங்கள் ஜனனை சூழ்ச்சிகள், கள்ள ஏற்பாடுகள் எல்லாவற்றிலும் கைதேர்ந்த பேர்வழி. அவளுக்கு ஸமயத்துக்கேற்ற யோசனை மின்னலைப்போல் திடீரெனத் தோன்றும். அவள் அதிக அமைதியும் சாந்தமும்உடையவள். அவளுடையநிதான புத்தி நிகரற்றது. தனது திடமான கரங்களால் ராஜகுமாரனை இரும்புபோல் பிடித்துக்கொண்டு ஜெலிகா தன் அதரங்களில் இனிய புன்னகை தவழ “உமது தயைக்குப் பாத்ரமாகி என் ஸஹோதரி தங்களுடைய திருமாளிகையில் வேலையிலமர்ந்தால் அவளும், எனது தகப்பனார் குலமும் கௌரவமடைவார்கள், ஆனால் இன்றிரவுதான் எக்காலத்தும் மறக்கவொணாத மன்மத ராஜகுமாரரைக் கண்குளிரக்கண்டு, அவரிடம் விடைபெற்றுச் செல்லவேண்டும் என்ற ஆவல் மேலிட்டவளாய்த் தெய்வலோக ரம்பையொருத்தி உமது வரவைக் கண்கொட்டாது எதிர்பார்த்து நிற்கிறாள். அந்த நவமணியைத் தாங்கள் இந்நேரம் காக்கவைப்பது ந்யாயமன்று,” என்றாள்.

“ஆம், நீ சொல்வது வாஸ்தவந்தான்; என் பெண்ணே, அக்கட்டழகியை நான் காக்க வைப்பது தர்மமன்று. அந்தப் பாரஸீக அழகியை ஒரு தரம் தர்சனம் செய்வதற்கு ஈடாகுமா இந்தத்தார்த்தாரி தேசத்துப் பெண்களும் ஹிந்து தேசத்துப் பெண்களும் எல்லாம் சேர்ந்து?”

மூவரும் துரிதமாய் நடந்தனர்; சீக்ரம் போய்ச் சேர்ந்துவிட்டனர். பல வகையான புஷ்பச் செடிகளும், நறுமணம் கமழும் மலர்க்கொடிகளும், அந்நிய தேசத்து ஸுகந்த புஷ்பங்களும் நிரம்பிக்கிடக்கும் பூங்காவனத்தால் சூழப்பெற்ற அழகியதோர் அரண்மனை அவர்கள் முன் கம்பீரமாய்த் தோன்றிற்று. யமுனா நதியிலிருந்து ஜலம் அரண்மனையைச் சுற்றிப் பாய்ந்துகொண்டிருந்தது. பூந்தோட்டத்திற்கு எவரும்பாய்ச்சாமலே ஜலம் ஸமர்த்தியாயிருந்தது. சாளரங்களுக்குப் பதிலாகக் கட்டப்பட்டிருந்த ஸலவைக்கல் வளைவுகளின் மூலமாய் உள்ளே எரிந்துகொண்டிருந்த தீபங்கள் தெரிந்தன.

ஜெலிகாவும் அவருடைய தோழியும் வெளியில் நின்றுவிட்டனர். ஸாலிம் இளவரசர் மாத்ரம் உள்ளே சென்றார். வெல்வெட் பட்டாடைகளும், பொன்னாபரணங்களும், கல் நகைகளும் முக்தாஹாரங்களும் அணிந்து நயமான பட்டு மறையாடை தரித்து நல்ல ரூபலாவண்யமுள்ள தோழிமார்கள் புடைசூழ ஒரு ஸ்த்ரீ ரத்னம் அவ்விடம் வீற்றிருந்தாள். அவள் தான் சக்ரவர்த்தியார் திருமகனின் மனதை மயக்கிய மிஹ்ருந்நிஸா.

புத்தகக் குறிப்பு

BOOKS RECEIVED

ஹேமலதா: * சிறந்த நாவல்களில் ஒன்றாகச்செல்லலாம். கதையின் போக்கு, புஸ்தகத்தை கீழேவைக்கமுடியாத வண்ணம், அமைந்திருக்கிறது. இதில் ஆசிரியர் காண்பித்திருக்கும் லோகாநுபவமும், மனித ஸ்வபாவ மனோதர்ம அறிவும், வியக்கத்தக்கனவாயிருக்கின்றன. இது இயற்றியது, ஒரு ஸ்திரீ என்றதைப் பார்க்கக் கூறிய புத்தியும் நல்ல கல்பனா சக்தியும் வாய்ந்தவரா யிருத்தல் வேண்டுமென்பது வித்தம். கல்வியினால் பெண்கள் என்ன பிரயோஜனமடையலாம் என்பதற்கு, இந்நாவல் ஒரு சாக்ஷி. இம்மாதிரி, ஸ்த்ரீகளும் சிறுவர்களும் அச்சமின்றி வாசிக்கத்தகுந்த புஸ்தகங்கள் அநேகம் வெளிவந்தால், தமிழ்ப் பாஷையின் ஒரு பெருங்குறை நீங்கும் என்று ஒருவாறு நிச்சயமாய்க் கூறலாம். இவ்வளவு அச்சுப்பிழைப் பேய்கள் இப்புத்தகத்தை பிடித்தாட்டவேண்டாம்.

---

* இப்புத்தகம் வேண்டுவோர் 'விவேக போதினி' ஆபீஸுக்கு எழுதிப்பெற்றுக்கொள்க. 343பக்கங்கள் கொண்டது விலை ரூ. 1—4—0

விசேஷக் குறிப்புகள்

NEWS & NOTES

ஆகஸ்டுமீ 4ந்தேதி.—வீண்கர்வத்தினால் ஐரோப்பாவிற்கே அழிவுதேடிய இராஜ்யத்தையடக்கி நல்ல புத்தியைப் புகட்டும்பொருட்டும், நடு நிலைமையை நிறுத்தும் பொருட்டும், கொடுத்தவாக்கைக் காப்பாற்றும் நிமித்தமும், அபயமென்ற எளிய ராஜ்யங்களைக் காக்கும் நிமித்தமும், ப்ரிடன், இவ்வைரோப்ய யுத்தத்தில் தலையிட்டு இன்றைக்கு ஸரியாய் ஒருவருஷமாகிறது. யுத்தவிளம்பரம் செய்ததினமாகிய 4-ந் தேதியில், ப்ரிடன் செய்யும் யுத்தம், தர்ம ஸ்தாபனார்த்தம் என்று தாங்களறிவதையும், ஆகவே முடிவில் ப்ரிடனே ஜயக்கொடி நாட்டும் என்பதில் சிறிதும் ஜனங்கள் ஐயப்படவில்லை யென்பதையும் விளம்பரப்படுத்த சென்னை வாஸிகள், ஒருங்கு கூடினார்கள். கவர்னர் அக்ராஸனம்வகிக்க, யுத்தத்தை தாங்கள் ஆமோதிப்பதாயும், ஜயம் நமதுதான் என்று அபிப்ராயப்படுவதாயும், ஜனங்களின் அபிப்ராயம் வெளியிடப்பட்டபிறகு, ஸபைகலைந்தது. இந்தப் பொது ஜனங்கள் பொது அபிப்ராயத்தை நாம் அங்கீகரிக்கிறோமென்றும், சீக்கிரம் ப்ரிடன் வெற்றியடைந்து உலகத்திற்கு ஹிதம் விளைப்பார்கள் என்று பிரார்த்திக்கிறோமென்றும் நாம் விசேஷமாய்ச் சொல்வது அநாவசியம்.

***

பேஹார் ஹைகோர்ட்டு.—தற்போது பேஹார் மாகாணத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்படடிருக்கும் ஹைகோர்ட்டானது அடுத்த வருஷம் மார்ச்சுமாதம் 1-ந்தேதி கூடப்போவதால் மேற்படி ஹைகோர்ட்டானது பிப்பிரவரி மாதத்தின் ஆரம்பத்தில் நமது ராஜப்பிரதிநிதியால் திறந்து வைக்கப்படுமெனச் சொல்லப்படுகிறது.

***

"கீதா ரஹஸ்யம்".—பால கங்காதர திலகர் அவர்களால் எழுதப்பட்ட 'கீதா ரஹஸ்யம்" என்னும்புஸ்தகமானது 6000 காப்பிகள் அச்சடிக்கப்பட்டது. அப்புஸ்தகங்களெல்லாம் வெளியான ஒரு வாரத்திற்குள் செலவழிந்து போய்விட்டதென்பதனால் அதன் பெருமை நன்கு விளங்குகிறது.

***

மைசூர் சமஸ்தானத்தில் கட்டாய எலிமெண்டரிப் படிப்பு.—மைசூர் கவர்ன்மெண்டார் தமது சமஸ்தானமுழுவதும் கட்டாய எலிமெண்டரி படிப்பை அனுசரணைக்குக் கொண்டுவர உத்தேசித்து கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பிரேரேபித்திருக்கிறபடி 5 முக்கியமான ஸ்தலங்களில் கட்டாய எலிமெண்டரிப் படிப்பை அனுஸரணைக்கு கொண்டுவருவதை அங்கீகரித்துவிட்டார்கள். மேற்சொன்ன ஸ்தலங்களில் பெங்களூர் நகரின் 9 டிவிஷன்களும் அடங்கியுள்ளன.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸளு ஆவணிமீ : 1915-ளு செப்டம்பர்மீ } பகுதி 3

வேதாந்தத் திரட்டு

VEDANTIC SELECTIONS

59. ஒருமொழிச் சிறப்பு

ஒருமொழியே பலமொழிக்கு மிடங் கொடுக்குமந்த வொருமொழியே மலமொழிக்கு மெனமொழிந்த, குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங் கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய், சருமொழியிங் குனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக் கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங் கண்டனைமேற், றருமொழியிங் குனக்கில்லை யுன்னை விட்டு நீங்காத் தற்பரமா யானந்தப் பொற்பொது வாய் நில்லே.

(நினைவொன்று—2)

60. ஸர்வஸாரம்

நில்லாத வாக்கைநிலை யன்றெனவே கண்டாய் நேயவருண் மெய்யன்றோ நிலயமதா நிற்கக், கல்லாதே யென்படித்தாய் கற்றதெல்லா மூடங் கற்றதெல்லா முடமென்றே கண்டனையு மன்று, சொல்லாலே பயனில்லை சொன்முடிவைத் தானே தொடர்ந்துபிடி மர்க்கடம்போற் றொட்டதுபற் றறில், லெல்லாரு மறிந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ யிராப்பகலில் லாவிடமே யெமக்கிடமென் றறிந்தே.

(நினைவொன்று—3)

61. உண்மை நோக்கு

பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போற்
பார்த்தனையே முடிவினின்று பாரேதுதா னின்ற,
தாராலு மறியாத சத்தன்றோ வதுவா
யங்கிருநீ யெங்கிருந்து மதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியை நாட்டாதே
யோராதே யொன்றையுநீ முன்னிலைவை யாதே
யுள்ளபடி முடியுமெலா முள்ளபடி காணே

(நினைவொன்று—5)

62. நிருத்த பரவசம்

உள்ளபடி யென்னவுநீ மன்றொன்றைத் தொடர்ந்தி
டௌங்கருத வேண்டாநிட் களங்கமதியாகித் (ட்
கள்ளமனத் துறவைவிட்டெல் லாந்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்கில்பக லற்ற
வெள்ளவெளிக் கடன்மூழ்கி யின்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வா யின்றி
கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக் (க்
கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே.

(நினைவொன்று—6)

63. நிருத்தர் தன்மை

அடிமுடியு நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டா
லத்துவித வானந்த சித்தமுண்டா நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்
தோலமெல்லா நன்றாகுங் குறைவுநிறை வரவே (த
விடியுமுத யம்போல வருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதும் தந்தாலுங் களியாப்
பாலருட னுன்மத்தர் பிசாசர்குணம் வருமே.

(நினைவொன்று—7)

64. வைராக்ய நிலை

பொன்னை மாதரைப் பூமியை நாடிடே
னென்னை நாடிய வென்னுயிர் நாதனே
யுன்னை நாடுவ னுன்னருட் டூவெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே.

(பொன்னைமாதரை—1)

65. உணர்வு நிலை

ஆவி யேயுனை யானறி வாய்நின்று
சேவி யேன்களச் சிந்தை திறைகொடேன்
பாவி யேனுள பான்மையைக் கண்டுநீ
கூவி யாளெனை யாட்கொண்ட கோலமே.

(பொன்னைமாதரை—3)

ராக்ஷஸவஹு புரட்டாசிமீ CALENDAR—பஞ்சாங்கம்

ராக்ஷஸவஹு புரட்டாசிமீ	சாலிவாகம் 1837 கலியுகம் 5016	பசலி 1325 கொல்லம் 1091	1915 வருஷ செப்டம்பர்மீ அக்டோபர்மீ
[illegible]			

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸவஹு : ஆவணிமீ [பகுதி. 3

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம (ஆராய்ச்சி)

2. கர்மகதி

முன் எடுத்துக்காட்டப்பட்ட விசித்ரங்களையுடைய கர்மா, பலிக்கும் வகை இன்னது என்பதை எடுத்து விளக்கப்புகுவோம். ஒரு கர்மா நடந்தேறியதும் செய்தவன்மனதிலுண்டாகும் பதிவுகளில் ஒருவிதப் பதிவுக்குத்தான் பிற்காலத்தில் ஸுகதுக்க ரூபமாகப் பலிக்கும் ஆற்றலுண்டு. இப்பதிவுக்கே பொதுவில் கர்மா என்ற பெயரும் உண்டு. இதுதான் கர்மா என்னும்பதத்தின் மூன்றாவதான பொருள் என்று முன்னமே குறிக்கப்பட்டுள்ளது. இது பலித்துவரும் தன்மையைப் பின்வரும் ஸூத்ரத்தால் நன்றாகக் குறிக்கலாம்.—

மக்கள்செய் ஒவ்வொரு வினையுமன்செய்மையில்
தக்கசீர்ப் பயனைத் தெரியவும் தருமே·

இ-வை-அ

இக்கருத்தை மிகச் சுருக்கமாக 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' 'நன்மை விதைத்தால் நன்மை விளையும். தீமை விதைத்தால் தீமை விளையும்' என்ற பழமொழிகள் அடக்கியுள்ளன. இனி இந்த ஸூத்ரத்தில் அடங்கியுள்ள பொருள் சிறப்புக்களையெல்லாம் பின்வருமாறு விவரித்துக் கர்மகதியின் நுட்பத்தை விளக்கலாம்

மக்கள்.—நன்மை தீமை என்ற பகுத்தறிவும், தொழில் நடத்துங்கால் நான் என்ற கர்த்ருத்வ பாவனையுமுள்ள ப்ராணிகளைத்தான் குறிக்கும். மற்றைய ப்ராணிகள் வாழ்க்கைகளும், அனுபவங்களும் முன் மனுஷ்ய ஜன்ம கர்மானுபவங்களையொழிய புதுக்கர்மாக்களை செய்ய இடமே கொடாதவைகள். ஆகவே இக்கர்மகதி மானிடர் தேவர் முதலிய தம் முணர்வுடைய ப்ராணிகளை நோக்கித்தான்.

செய்—நல்ல மனத்தெளிவுடன் விழிப்பு (அல்லது கனவு) முதலிய ஸாதாரண நிலைகளில் செய்வதாகிய (செயல்கள்).

ஒவ்வொரு வினையும் — 81 பாகுபாடுகளையும், பொதுச் சிறப்புத் தன்மைகளையும், முக்ய அவாந்தர வேற்றுமைகளையும் தாங்கியுள்ள ஒவ்வொரு கர்மாவும்.

மன்செய்மையில்.—பெரும்பாலும் நாளடைவில்: அதாவது இப்பொழுது செய்யும் வினைகள் மரணத்திற்குப் பின்னர் பலிக்கும்; முன் ஜன்மத்தில் செய்தவைகள் இப்பொழுது பலிக்கும் என்றபடி. இதுபற்றியே விதைப்பு விளைவு உவமை இவ்விஷயத்தில் எடுத்தாளப்படுகிறது. ஆதலால், இப்பொழுது செய்யும் செய்கைகளுக்கும், அவைகள் முடிவில் ஏற்படும் ஸுகதுக்கங்களுக்கும் ஸமான காரிய காரண ஸம்பந்தம இல்லவே இல்லை. இதனால் தான் இவ்வுலகில் பெரும்பாலும் நல்லோர் திண்டாடுவதும், தீயோர் தேறியிருப்பதும் என்ற மாறுபாடு ஏற்படுகிறது. நல்லோர் பூர்வ ஜன்மத்தில் செய்துள்ள கொடிய செயல்களை அனுபவித்து சீக்ரம் தொலைத்துவிடுவர், மேல் இவை தொடாவண்ணம் அவர் முயல்வதால் மேன்மை பின்னர் வரும் அவர்களுக்கு. தீயோ

ருக்கோ முன்செய்த நல்வினைப்பயனால் இப்பொழுது ஸுகம் வர, அதில் மூழ்கிப் பெரும் பாபம் செய்து, மேல் துக்கமே நிலைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை விடாது கைக்கொண்டு அவர் அதோகதியைப் பின்னர் அடைவர் என்பதற்கு ஸந்தேஹமில்லை. மரணத்திற்குப்பின் ஏற்படும் அனுபவங்களுள் ஸ்வர்க்க நரக அனுபவங்களும் அடக்கம். இந்த பாகம் நமது ஞாபகத்தைவிட்டு நழுவுங்கால்தான் நல்லோர் படுந்துயரத்தைக்கண்டு பரபரப்பும், தீயோர் வாழ்வைக்கண்டு படபடப்பும் வரும். ஸீதாதேவி கதிதான் என்ன! இருந்தவரையில் வனவாஸம், ராவணன் பீடை, கணவன் ஸந்தேஹம், பூப்ரவேசம். உலகில் ஸுகம் ஏது அவளுக்கு? தர்மபுத்திராதிகள் கதியாவது வேறு? துர்யோதனாதியர்கள் அடைந்த ஸுகங்கூட அவர்களுக்கில்லையே! ஆனதுபற்றி கர்மகதியைக் கவனியாது இவை போன்ற உலக ஸம்பவங்களைப் பார்க்குங்கால் இவ்வுலகம் காலம் எல்லாம் நல்லவர்களுக்குத் தகுந்தவையல்ல என்று தோற்றி நமது நல்வழி முயற்சி குன்றும்படியாகி விடும். ஏமாந்தால் கெட்ட வழி நடத்தலும் உண்டாகி நாம் அதோகதியடைய வேண்டியதுதான். இதைத் தடுப்பதற்கு இந்த சேய்மையில் என்பதன் ஸாரம் ஞாபகத்திலிருக்கவேண்டும்.

இதனுடன் பெரும்பாலும் என்பதைச் சேர்க்குங்கால [illegible]மை சீக்கிரம் கர்மாக்கள் பலிக்கலாம் என்பது த்வனிக்கும். [illegible] பட்ட கர்மாக்கள்தான், அவிஹிதா நிஷித்த உபேக்ஷித, அத்யுத்கட கர்மாக்கள்: இவைகள் உடனேயாவது ஏற்பட்ட தேஹம் நீங்கும் முன்னாவது பலித்துவிடலாம்.

தக்க பயன்.—தகுந்தபயன்: ஒவ்வொரு கர்மாவுக்கும் தனித்தனி வெவ்வேறு பயனுண்டு என்பது இதனால் விளங்கும். பொதுவாக ஒரு கர்மபலன் மற்றொரு கர்மாவின் பலனைத்தாக்கி மாற்றவோ, மாய்க்கவோ மாட்டாது. ஸ்ரீமத் ராமாயணத்தில் ஹனுமார், முதல்முதல் ராவணனைக் காணும்படி நேர்ந்த காலத்தில் 'ஏ! ராவணா! நீ முன்னர் செய்துள்ள பகவத் பக்தியெல்லாம் இப்பொழுது பயன்படாது. நீ செய்துள்ள பிறர் பெண்டிரைக் கவருதல் என்னும் பாபத்திற்குப் பலன் தனிதான். இது பலிக்குங் காலம் அணுகுகிறது. உன் பகவத் பக்தியின் பலன் தனி, அது இப்பொழுது வரும் ஆபத்தைத் தடுக்காது. ஆதலால் பெருங்குற்றம் செய்துவிட்டு முன் சிறப்பைக் கருதி இறுமாந்திராதே' என்று கூறி, தக்க தனிப்பயன் விஷய கர்மகதி ரஹஸ்யத்தை நன்கு வெளியிட்டார்.

மன், என்ற பதத்தை இத்தொடருடன் சேர்த்தால், பெரும்பாலும் தனிப் பயன் தரும் என்றதாகும். இதனால் சிறுபான்மையில் தனிப் பயன் தாராமலும் இருக்கலாம் என்று த்வனிக்கும்: அதாவது சில ஸந்தர்ப்பங்களில் ஒரு கர்மபலன் வேறொரு கர்மபலனைத்தாக்கி தனிப்பலனைத் தராமல் போய்விடலாம் என்றதாகும். வேதத்தில் 'நல்ல கர்மாக்களில் முயன்று செய்து, கெட்ட கர்மப்பதிவுகளை அழித்து விடலாம். எதிரிடையாக தொழிற்பட முடியாது' என்று ப்ராயச்சித்த விஷய வாக்கியம் உள்ளது. இதன்படி இப்பொழுது செய்யப்படும் ப்ராயச்சித்தங்கள் என்ற ஒருவகை ஸத்கர்மாக்கள் அவைகளுடன் ஸம்பந்தப்பட்டுள்ள [illegible]ட கர்மப்பதிவுகளை அழித்துவிடும் என்பது வெளியாகிறது. ஆனால், இவைகள்கூட எப்பொழுதும் இப்படிப் பலிக்கும் என்பதல்ல; பின் நடக்கப்போவதான பாபத்தொழிலின் பதிவுகளையும் (முன்னரே தெரிந்தால் அவைகளைத்தடுத்துவிடவேண்டியது) தெரியாத பாபப் பதிவுகளையும், பச்சா[illegible]பமின்றிச் செய்

தால் தெரிந்த பாபப்பதிவுகளையும் ப்ராயச்சித்தங்கள் நீக்கா. ஆகவே, ப்ராயச்சித்தமென்பது ஏற்பட்ட பாபம் தெரிந்ததும் பின்னர் நடக்கவேண்டிய, பச்சாத்தாபத்தை முன்னிட்ட ஸத்கர்மா என்றாகிறது." இப்படிப்பட்ட ஸத்கர்மா தனிப்பயன் தராது, முன்னுள்ள பாபப்பயனைத் தாக்கி அழித்துவிடும்.

சீர்பயன்.—நன்றாகப் பொருத்தமுடைய பயன்; உடல், உரை, உள்ளம், இவைகளால் ஏற்பட்டு, முக்ய அவாந்தர வேற்றுமையோடு, அத்யுத்கடம், பலம் ஸாமாந்யம் என்ற பிரிவுடைய கர்மாக்கள் அவ்வவ் வழியே ஸுகதுக்க பலன்களை ஒழுங்காயும், இசைந்ததாயும் தரும் என்பதுதான். தேஹபாபம் தேஹதுக்கத்தையும், வாக்புண்யம், வாக்ஸுகத்தை, மானஸீக கர்மா ஸ்வப்நபலத்தையும், முக்ய புண்யகர்மா பெரிய ஸுகத்தை, அதனுடன் சேர்ந்துள்ள அவாந்தர பாபகர்மா, இடையில் சிறிய துக்கத்தையும், அத்யுத்கடம், உடனே பலத்தையும், பலமான பாபம் நரகபலத்தையும், ஸாமான்ய புண்யகர்மா, நர ஜன்மத்தையும் கொடுக்கும்.

தெரியவும் தருமே:—வெளிப்படையாகத் தரும், அதாவது ஸுகதுக்கரூபமாக, ஸத்கர்மா ஸுகத்தையும், துஷ்கர்மா துக்கத்தையும் எப்பொழுதும் தரும். இதுதான் ஒழுங்கு. இதில் உள்ள உம்மையால் விளங்கா நுட்ப பலன் ஒவ்வொரு கர்மாவுக்கும் உண்டென்பதும், மன் என்பதை இதனுடன் பொருத்துகையில் சிறுபான்மையில் நுட்ப பலன்மாத்திரமாகவும் இருக்கலாம் என்றும் தோற்றும். இந்த நுட்ப பலனுக்குத்தான் வாஸனை என்று பெயர். இது ஒவ்வொரு கர்மா நிகழ்ந்ததும் மனதில் அதே கர்மாவை மறுபடி செய்யவேண்டும் என்று ஏற்படும் எண்ணவேகம். இது ஒரேகர்மாவை அடிக்கடி செய்யச் செய்ய தடித்துவரும் நுட்பப் பதிவு. இதற்கும் வெளிப்படையாகப் பலிக்கும் கர்மப்பதிவுக்கும் உள்ள வேற்றுமை ஒற்றுமைகளை மேல் விஸ்தரிக்கப்போகும் கர்மவாஸனாநுட்பத்தின்கீழ் எடுத்தாராய்வோம். ப்ராயச்சித்தம், உபேக்ஷித கர்மாக்கள் இவைகளுக்கு இந்த வாஸனாப்பதிவு பலம் அதிகம், அவிஹிதா நிஷித்தங்களுக்கு கர்மப் பதிவு பலம் அதிகம், மற்றைய கர்ம பேதங்களுக்கு இருவிதப் பதிவுகளும் ஸமமாக உண்டு.

இம்மாதிரி கர்மகதியின்படி பலிக்கும் கர்மப் பதிவுகளுக்கே கர்மா என்ற பெயர் சில இடங்களில் நமது சாஸ்திரங்களில் இடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பலிக்கும் மனப்பதிவுகளான கர்மா மூன்றுவிதம்.

ஸஞ்சிதகர்மா.—இப்பொழுதிருக்கும் ஜன்மாவுக்கு முன்னர் எடுத்த மனுஷ்ய ஜன்மாக்களில் செய்ததால் ஏற்பட்டுள்ள கர்மப்பதிவுகளுள் இடையிலேற்பட்ட பலவகை ஜந்துக்கள் ஜன்மாக்களில் அனுபவித்துத் தீர்த்துவிட்ட முக்ய பாபகர்மாக்களும், முக்ய அவாந்தரபுண்ய கர்மாக்களும் போக பாக்கியுள்ள கர்மப்பதிவு மூட்டைக்கே ஸஞ்சித கர்மா என்று பெயர். இவை இனிமேல் பலிக்கக்கூடியவைகள் எதிர் கர்மாக்களால் தாக்கப்படாமலிருந்தால். பதஞ்ஜலிபகவான் இதைக் கர்மா என்று பெயரிட்டழைக்கிறார். இவை குதிரிலிருக்கிற விதை நெல் போன்றவை. இவைகள் இரண்டுவிதம், துக்கமாகப் பரிணமிக்கக்கூடியவை, ஸுகமாக மாறக்கூடியவை, ஆகிய கெட்ட நல்ல ஸஞ்சிதங்கள் என்று. இவைகளுள் தகுந்த ப்ராயச்சித்தங்கள் வழியாக கெட்டவைகளை அழித்து மனது நல்லவைகளாலேயே நிறைந்திருக்கும்படி செய்துவிடலாம். நல்ல ஸஞ்சிதங்களும் ஞானத்தால் ஜன்ம ஸுகதுக்கந்தரும் தன்மையை இழந்தாவது அல்லது உருவின்றியே அழிந்தாவது போய்விடும், நெருப்பால் விதைகள் முளைக்கும் திறனை இழந்தாவது, சாம்பலாகவா

வது போய்விடுவதுபோல. இந்த ஸஞ்சிதங்களை உள்ளபடி தாக்காது விட்டு விட்டால், மேல் பலித்து, வாவா ஸஞ்சிதமூட்டை அதிகப்பட்டுக் கொண்டேதான் வரும், கர்மகதியை விட்டு விலக முடியாமலே போய்விடும்.

2. ப்ராரப்தகர்மா.—முன்னற்கூறிய ஸஞ்சித மூட்டையில் இந்த ஜன்மத்தில் பலிக்கும் தன்மை வாய்ந்துள்ளவைகளுக்கு ப்ராரப்தம் என்று பெயர். இவைகள் பலன் கொடுக்கத் தொடங்கிவிட்டபடியால் இப்பெயர் பொருத்தமுடையதே. பதஞ்ஜலி பகவான் இவைகளுக்கு விபாகம் என்று பெயரிட்டுள்ளார் ஸாதாரணமாக கர்மாஎன்ற பதம் விதி என்ற பொருளில் உபயோகப்படுங்கால் ப்ராரப்தகர்மா என்பதன் குறுக்கமே; இவைகள் முளைவிட்டிருக்கும் விதைகளைப் போன்றவை. இப்பிராரப்த கர்மாக்கள் மூன்று விதமாகப் பலிக்கும் தன்மை உடையவை. (i) தேஹம்:—உடல், ஜாதி, தொழில்,வர்ணம் இவைகள் ப்ராரப்தகர்மாவில் பலன் தர முனைந்துள்ள முக்யகர்மாவால் ஏற்படுவது. (ii).ஆயுஸ்:— தேஹம் விழும்முன் விட்டுத் தீர்க்கவேண்டிய மூச்சுக்கணக்கு, நாள் கணக்கேயல்ல, இது முக்ய அவாந்தர ப்ராரப்தங்களின் பொது வேகத்தால் ஏற்படுவது. கடைசி மூச்சுமுடியும் தருணம் எப்படிப்பட்டதாயினும் மரணம் நேர்ந்து விடும், இந்தக் கிளைப்பலனால். (iii) ஸுகதுக்க ஒழுங்கு.—அந்த ஜன்மத்தில் அனுபவிக்கவேண்டிய ஸுகதுக்க ஒழுங்குகள் அவாந்தர ப்ராரப்த கர்ம ஒழுங்கால் ஏற்படுவது. இப்படிவரும் ஸுகதுக்கங்கள் விஷயத்தில் ஏற்படும் ஸந்தர்ப்பங்களில் தாமாகச் செய்துகொண்டவைகள் என்று தோற்றுவன தவிர,மற்றவைகள் எல்லாம் ப்ராரப்தத்தின் முதல்பாகத்தைச் சேர்ந்தவை. இவைகளால்கூட கெட்டவாஸனைகள் ஏற்படலாகாதென்று சாஸ்திரங்கள் . ப்ராயச்சித்தங்கள் விதிக்கின்றன: உதாரணமாக கெட்ட ஸ்வப்நங்கள், பொய் அபவாதங்கள் முதலியன. மூன்றுவகையாகப் பலிக்கும் ப்ராரப்தங்களுள் முதல் இரண்டும் வந்த ப்ராரப்தம்; இவைகளைத் தடுக்கமுடியாது. மூன்றுவதற்கு வரும் ப்ராரப்தம் என்று பெயர். இது ப்ராயச்சித்தத்தாலும் ஞானத்தாலும் சற்று மாற்றமுடியும். முக்தர்கள், ஞானத்தாலும் ஸத்கர்மாக்கள் செய்யும் இயற்கை வழியாலும், தமக்கே இயற்கையாகிவிட்ட பலமான புண்ணிய கர்மாக்களின் வேகத்தாலும் வரும் ப்ராரப்தம் தம்மைத் தாக்காதுநிற்கும்படி செய்வர்.

ஆயுஸ்விஷயமான நுட்பம் இங்கு கவனிக்கத்தக்கது. இது மூச்சுக் கணக்கேயொழிய, நாள்கணக்கே யல்ல. ஆயுள் நாள் கணக்கை சாஸ்திரீய வ்யவஹாரங்களால் மூச்சுக்களைக் குறைத்து விட்டு பெருக்கிக் கொள்ளலாம்: அப்படியின்றிக் கண்டபடி ஸுகித்து உண்டு வ்யவஹரித்து மூச்சை அதிகமாக விட்டுக் குறுக்கியும் கொள்ளலாம். யோகிகள் தமது பழக்க விசேஷத்தால் ஆயுளை வெகுநாள் நீட்டிக்கொள்வர். ஒருவித சாஸ்திர முயற்சியுமின்றி,கண்டபடி வ்யவஹாரத்திலும் பாயாது மனதை அதிகமாகக் குழப்பிக்கொள்ளாது ஸுகஜீவனம் செய்யும் ஸந்மார்கி ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு 21,600 மூச்சு ஏற்படும். இக் கணக்கின்படி பூர்ணமான புருஷாயுஸ் 100 வருஷந்தான்: இந்த ஒரு நாள் மூச்சுக்கணக்குக் குறைந்தால் அல்பாயுளும் நீளும், அதிகப்பட்டால் பூர்ணாயுளும் குறையும். இப்படித்தான் தசரதர் 60,000வருஷமும் ராமர் ஸுமார் 10,000 வருஷமும், உயிருடனிருந்தது. பெரியோர்கள் செய்யும் ஆசீர்வாதம் மூச்சுக்கணக்கை அதிகப்படுத்தவேமாட்டாது: நமது வ்யவஹாரங்களை சாஸ்திரப்படி ஒழுங்குபடுத்

வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை நன்றாக நமக்குண்டாக்கி ஆயுள் நாள்களை அதிகப்படுத்தும் பெரும் ஆற்றலையுடையது. ஆகவே, யோகிகள் ஞானிகள் தவிர, மற்றையோர்கள் எல்லாம் ப்ராரப்தவேகத்திலபட்டுத் திண்டாட வேண்டியது தான்.

(3). ஆகாமிகர்மா.—இப்பொழுதிருக்கும் மானிடஜன்மாவில் இத்தருணமாகிய நிகழ்காலம் முதல், தேஹம் விழும்வரையில் மனதில் ஏற்படக்கூடிய கர்மப்பதிவுகளுக்கு ஆகாமிகர்மா என்று பெயர். இது ஏற்பட்டதும் ஸஞ்சித மூட்டையுடன் சேரும்: அத்யுத்கடமாகயிருந்தால் உடனே ப்ராரப்தமாகும். இது வயலில் அறுப்பதற்கு முன்னுள்ள கதிர்நெல் போன்றது. இந்தக் கர்மப்பதிவுகள் உண்டாக இனி நடைபெறவேண்டிய கர்மாக்கள் வேறு; ப்ராரப்தமான தடுக்க முடியாதவைகளேயல்ல. இவைகள் நமது ஸ்வதந்திரம் சேர்ந்தே நடைபெறவேண்டியவை. ஆனல் இது முன் கர்மவாஸனைகளால் தூண்டப்பட்டும் மேல்வரும் ப்ராரப்தத்தின்முன் வேகமான தருணநி ஸந்தர்ப்ப விசேஷங்களால் மொத்துண்டு இருக்கலாம். இதனல் இந்தக் கர்மாக்களை தடுக்கவே முடியாதென்பதல்ல. முன் பழக்கவேகத்தைப் பொருத்தது முயற்சிக்க வேண்டியதன் வலிமை. ஸரிவர முயலாது துர்வாஸனைக்கு இணங்கிவிட்டால், அதன் வலிமை அதிகமாக அது நம்மை முழுத்திவிடவேபார்க்கும்.ஆகாமி கர்மா ஸரிவர ஏற்படுவதற்கு நமது வாஸனைகளின் சுத்தமே காரணமாகும்: கர்மாவேயல்ல. இந்த வாஸனையைப் பதஞ்ஜலிபகவான் ஆசயம் என்று பெயரிட்டழைக்கிறர். இந்த வாஸனைகளை ஸரிவர உணர்ந்து நல்லவைகளின் வழிச்சென்று கெட்டவைகளைத்தடுத்து நீக்கமுயலுவதற்கே சாஸ்திரங்கள் உதவியாக ஏற்பட்டுள்ளன: ஒன்றுவது ப்ராரப்தகர்மாவைத் தடுப்பதற்கல்ல.இப்படி சாஸ்திரப்படி ஒழுகி துர்வாஸனைகள் கர்மாவில் ஏவுங்கால் அதன்வழி ஈடுபட்டு நிற்காதிருந்தால் நமது ஸ்வதந்தரம் வரவர விஸ்தாரப்பட்டு பலப்படும். சாஸ்திர ஸஹாயமின்றி ஆகாமி ஸஞ்சித மூட்டையை கனமாகா திருக்கும்படிச் செய்யமுடியாது: மனம் சுத்தப்படாது, கர்மகதியைவிட்டு விலகிவர முடியவேமுடியாது. முக்தனுக்கோ ஆகாமி அணுகவேமாட்டாது. அவன் எப்பொழுதும் இயற்கையாகவே நல்வழியிலேயே இருப்பானதலாலும், நற்காரியங்களில் ஸம்பந்தப்படாது நடத்தும் திறன் அவனுக்கிருத்தலாலும், இவைகள் பாறையில் விழுந்த நீர்போல அவனிடம் தங்காது சிதறிப்போய்விடும். முக்தன் எவ்வளவு நல்ல வழியிலிருந்தாலும் அது நம்போலியர் சிலருக்கு கஷ்டமாகவும் இருக்கலாம். ஸாதாரண மனதில் அத்தொழிலால் உண்டாகக்கூடிய பாப புண்யப் பதிவுகள் ஞானிக்கு ஏற்படாது சிதறுங்கால் முறையே அவனை அப்பொழுது கண்டு ஸந்தோஷித்து ஈடுபடுபவரிடமும், அவன் தொழிலைக்கண்டு இகழும் குடுக்குக்காரரிடமும்போய் அமரும் என்று சாஸ்திரங்கள் சாதுர்யமாகக் கூறும். ஆகவே ஞானி ஒழிந்த மற்றையோர்களுக்கு ஆகாமிப் பதிவு ஏற்படாமல் போகமாட்டாது. சாஸ்திரீய ஸத்கர்மாக்களோ இப்படி ஏற்படும் பதிவுகளில் சிலவற்றைக்கொண்டு முன்னுள்ள பாபஸஞ்சிதங்களை அழிக்கும்; சில நல்ல ஸஞ்சிதப்பதிவுகளை அதிகப்படுத்தும்; சில நல்ல கர்மப்பதிவுகள் ஏற்படாதவண்ணம் ஸத்கர்மானுஷ்டானம் செய்யத் தூண்டும்: இப்படியாக மேல் ஏற்படக்கூடிய ஆகாமி பலம் சாஸ்திரங்களால் குறைந்துகொண்டே வரும். ஆகவே சாஸ்திரமே இந்த மூன்றுவகை கர்மப்பதிவுகளையும் சென்று தாக்கி நம்மை கர்மகதியிலிருந்து விடுவிக்கும் திறனுடையது: இதை உள்ளபடி நிறைவேற்ற வேறு எவ்வழியிலும் முடியாது. இந்தக் கர்மப்பதிவுகள் நுட்பத்தையும் கர்மகதியின் எல்லையையும் பின்எடுத்து விவரிப்போம்.

குங்கிலியக் கலய நாயனர் சரித்திரம்

KUNGILIYA KALAYA NAYANAR
(A Life Sketch)

மாபாரதப் போரில் துரியோதனாதியரை வென்று பூமி பாரந்தீர்ப்பான் அவர்களைக் கொன்று, குவலயத்தார் கொழிக்க, தரும புத்திராதியர்கள் சிம்மாசனத்தைப் பெற்றும், தம் உற்றார் பெற்றோர் மடிந்தார்களே, இனி யாருக்காக அரசாள்வதென்ற எண்ணம் மேலிட்டுத் துக்க மாற்றாது, ராஜ்பத்தைத் துறந்து இமயமலைச் சாரலை நோக்கிச் சென்ற பாதர்களாண்ட பூமி இப்பாரத கண்டம். இக்கண்டத்தில் ஜனிக்க என்ன புண்ணியம் நாம் புரிந்திருக்கவேண்டும்!

மார்க்கண்டேயர் காலனைக் கண்டு நடுங்கி, அவன் பாசக் கயிற்றுக் கிணங்காது சிவனை அணைத்து தன்னைக் கைவிட, பரமசிவன் லிங்கத்தினின்றும் வெடித்து, யமனுடன் போர் புரிந்து வென்று அவனிடமிருந்து விடுவிக்கப்பட்டு, என்றும் பதினறு வயதாக வரம் பெற்ற விடமாகிய இச்சோழமண்டலத்தின்கண் திருக்கடவூரிலே, ஓர் அந்தணர் குலத்திலே சிவபக்தியிற் சிறந்த, கலயர் என்பவர் ஒருவர் இருந்தார். அழகிய குணங்களுடையவர் யாவரும் அந்தணராவர். இங்ஙனம் பிராமண குலத்தைக் குறித்தோம். அவர் அவ்வூரிலுள்ள வீரட்டான மென்னுங் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற சுயம்புவாகிய பரமசிவனுக்கு பிரதிதினமும் தவறாது குங்கிலியத் தூபம் ஏற்றி ஆராதனம் செய்துவந்தார். பக்தர்களைச் சோதிக்கும் திருவுளம்பெற்ற பரமசிவன், இவருக்கும் வறுமை யென்ற செல்வத்தைக் கொடுத்தார். பரமசிவன் திருவருளினல் வறுமை யோங்க, பக்தி சற்றேனுங் குன்றாது, குங்கிலியத் தூபம் நடத்திவந்தனர். ஆலவிருட்சம்போல் இவரைச் சுற்றி இருந்தவர்கள் அநேகர். இவரன்னம் புசிக்கும் கிளைகளனேகம். இவ்வறுமை வந்துற்ற காலையும் தருமம் செவ்வனே நடத்தினர். அவருக்கு ஒரு உத்தமி, பத்தினியாக வாய்த்திருந்தனள். அவ்வறுமை வந்த காலத்தும் தாம் பசியால் வருந்துகிறோமேயென்று நினையாது, தமது சுற்றத்தாருண்டிலரே யென்று அல்லும் பகலும் வருந்துபவளாயினள் அவ்வருந்ததி. இங்ஙனம் சிலநாள் கழிய, தம்மடிமைகளை விற்றும் நிலங்கள் மற்ற சொத்துக்கள் யாவற்றையும் பரித்யாகஞ் செய்து செலவழித்தும் அவ்வறுமைக் கீடுகொடாராயினர். அக்காலத்தும் திருப்பணியை விடாது நிறைவேற்றி வந்தனர். ஒரு நாள் அவர் தாரம், அரிசி முதலியன வாங்குவதற்கு ஒன்றும் இல்லாமையால் இரண்டு தினங்களாகப் பட்டினியிருந்து வாடுகின்ற புதல்வரையும் சுற்றத்தாரையும் நோக்கி மனமுருகித் தம் தாலியைக்கணவர் கையிலே, தன் கை கீழாகவும் அவர் கை மேலாகவும் கொடுத்து, அதன் விற்று முதலுக்கு, அன்று கழிக்க நெல் வாங்கிவரச் சொல்லி வேண்டினள். அத்தாலியின் பொறுமானம் அன்று கழிக்கத்தான் காணுமோ வென்றால், தங்கள் பசி மட்டுமல்ல, தம்மையடைந்தவர் பசியுமாறப் போதுமானது. அன்றை யன்றுக் காலங் கழிப்பதே பெரும்பாடாயிருந்தபொழுது மறுநாட் கவலை தோன்றவில்லை அவ்வம்மைக்கென்றும் கொள்ளலாம்.

குங்கிலியக்கலய நாயனர், அம்மாதுரைகொண்டு, தாலியை வைத்துக்கொண்டு, நெற்கொள்ளப்போனர். செல்லுங்கால், வழியிலேயொரு வர்த்தகன் குங்கிலியப் பொதிகொண்டு தமக்கு எதிரே வரக்கண்டு, அகம் புளகி, "ஸ்வாமிக்குத் தூபமிடும்படி குங்கிலியத்தைப் பெற்றுக்கொண்டேன், இதிலும் பார்க்க மேலான பேறு உண்டோ?" என்று குதித்து, பரவசமாகி தம்முடைய கரத்திலிருந்த தாலியைக் கொடுத்து அந்தக் குங்கிலியப் பொதியை வாங்கிக்கொண்டு 'கண்டேம்' 'கண்டேம்' என கூத்தாடிக்கொண்டு, ஆலயம் சென்று அங்குள்ள பண்டாரத்திலே அக்குங்கிலியத்தை வைத்துவிட்டு சுவாமியைத் துதித்தார். இது இங்ஙனமிருக்க, தமதடியார்க் கூழியனுயிருக்கச் சித்தமாயிருக்கிற பரமசிவன், சிவனடியாராகிய நாயனர் மனைவியார், குழந்தைகள் முதலியவர்கள் அன்றிரவு இவர் வரவை யெதிர்பார்த்துப் பசியினல் வருந்திக் களைத்துறங்குமிடம் தேடி வந்து, நெற்குவியலையும், பொற்குவியலையும், அரிசிக்குவியலையும், பிறவனங்களும் நிரம்பச் செய்து, அவ்வுத்தமிக்கு சொப்பனத்தில் தோன்றி அனுக்கிரகம் செய்தருளினர்.

பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான்,

"அனன்யாச் சிந்தயந்தோமாம், யேஜனா: பர்யுபாஸ்யதே; தேஷாந்நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம்"

என்று உபந்யஸித்திருக்கிறர். அவ்வண்ணம் பரமசிவ னருளிய செல்வத்தை, அப் பதிவிரதா சிரோன்மணி, திடுக்கென விழித்தெழுந்து கண்ணுற்று, அதுவும் அக்கிருபாநிதி அருளேயெனத் தெளிந்து தன் கணவருக்குத் திருவமுது பாகம் செய்ய யத்தனித்தனள். ஆலயத்தில் சிவபக்தியிலேயே லயமாகி, அமிர்தமுண்டு பசியாறிக்கிடக்கிற நாயனரிடம் பகவான் தோன்றி, "அப்பா, நீ இல்லஞ்சென்று, பாலன்னம் உண்டு பசியாறுவாயாக" என்று அனுக்கிரஹித்து மறைந்தார்.

இதைக்கேட்ட நாயனர் பகவதாஞ்யையை மறுத்தற்கு அஞ்சி, அவ்வண்ணலை கைகூப்பி நெஞ்சாரத் துதித்து, வாயாரப்புகழ்ந்து, சிவன் செயலாலே யாதும் வருமெனத்தேறேன், ஆனமவன் தரும் நினைவெல்லாம் அகற்றிலேன், என்றபடி உள்ளந்தெளிந்து, இல்லம்புக்கார். மனையெங்கும் மலையாய்க் குவிந்திருந்த செல்வம் நோக்கி, அதுவும் ஈசனருளென்று உன்னி, தன் மனையாளை நோக்கி, 'பெண்ணே, வறுமையால் வருந்தின நமக்கு இந்நிதிக் குவியல்கள் யாது சம்பவித்தன' வென்று வினவ, அவள் சிவலோகநாதனருளினல் வந்ததென்றாள். அடியேனை யாட்கொள்ள இதுதான் முறைபோ என்று பலகாலுமந்த பாசுபதனை வணங்கி, அய்யன் திருவிளையாட்டுக் கீடோவென்று வாயெல்லாம் புலம்புவராயினர். சிவனடியார்களுக்கு தூபதீபாராதனைசெய்து அமுது அளிப்பாராயினர். செல்வமும், கடலளவு பெருகி, அதிதியாராதனை தினம் நடந்து வந்தது. ஈசனடியிலேயே தம் மனத்தை இருத்தி அவ்விருவரும் காலங்கழிக்கையில் திருப்பனந்தாளென்னும் திருப்பதியில் வீற்றிருக்கின்ற சிவலிங்கம் சாய்ந்திருந்தமையால் அதை நிமிரப்பண்ணிக்கும்பிடுதற்கு இராஜாவானவர் யானைகளெல்லாவற்றையும் கயிறுகட்டி யிழுக்கச்செய்தும், மற்றும் தம் யுக்திக்குத்தோன்றினவாறு இழுக்கப் பிரயத்தனப் பட்டும், நிமிராதது பற்றி அன்னம் துயிலின்றி இரவுபகலாய்த் துக்கித்துசோர்வுற்றிருக்கும் நிலையைக்கண்டு மனம் பொறுக்காது, அடியேனும் இளைப்பைத்தருகின்ற இத்திருப்பணியைச் செய்யவேண்டு மென்று சிவலிங்கத்தின் மேல் கட்டியிருந்த கயிற்றைத் தன் கழுத்தால் கட்டிக்கொண்டு இழுக்கலாயினர். அக்கயிறு பலத்தினல் சிவலிங்கம் நிமிரவில்லை. ஸஹாதேவன் கண்ணபிரானுடைய சுபரூபத்தை பக்தி யென்னும் கயிற்றினல் கட்டி, அசையவொட்டாமல் செய்ததுபோல், நாயனரும் பக்திக்கயிற்றினல் சிவலிங்கத்தை நிமிரச்செய்து, தேக முயற்சியா லாகாதது மனே முயற்சியால சாத்தியமென்பதை விளக்கினர். இவ்வதிசயம் கண்டு இராஜாவும் சைன்னியங்களும் அளவற்ற ஆனந்தத்தை அடைந்து குங்கிலியக்கலய நாயனரை நமஸ்கரித்து சுவாமிக்கு வேண்டிய திருப்பணிகளை நிறைவேற்றிக்கொண்டு தம் நகர் போய்ச் சேர்ந்தார்.

குங்கிலியக் கலயநாயனர், சில நாள் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அங்கேயிருந்து, தமது பிறப்பிடமாகிய திருக்கடவூருக்குச் சென்று, சுவாமி திருப்பணிசெய்து வருநாளையில், சைவசமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு நாயனர் இவர்கள் அவ்வூருக்கு விஜயஞ்செய்ய, அவர்களை எதிர்கொண்டழைத்து வந்து, அமுது செய்வித்து அவர்களுடைய அனுக்கிரஹமும், பரமசிவத்தின் திருவருளும்பெற்று சிலகாலம் இப்பூலோகத்தில் தங்கி, பின்னர் காலகதியடைந்தார்.

டி. எஸ். வேங்கடராமய்யர்.

பெண் கல்வியின் அபிவிருத்திக்காக பரோடா மஹாராணியின் நன்கொடை — ஹிந்துஸ்திரீகளின் கல்வியபிவிருத்தியைக் கருதி பரோடா மஹாராணி, கல்வித்திறமைபெற்ற ஹிந்து ஸ்திரீகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்காக 1,50,000 ரூபாயைத் தண்டாக எடுத்து வைத்திருக்கிறர். இந்த நிதியை மேற்பார்வை பார்ப்பதற்காக மஹாராஜ குமாரர் ஜெயஸிங்ராவ் கைக்கோவார், ஆனரெபில் ஸர் விட்டல்தாஸ் தாமோதர தாக்கர்ஸே, ஸ்ரீமந்த் ஸம்பத்ராவ் கைக்கோவாட், ஆகிய இவர்கள் அடங்கிய டிரஸ்டிபோர்டு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. 29 ஸ்காலர் ஷிப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் 5 ரூபாய்வீதம் 16 பேர்களுக்கும் 10 ரூபாய்வீதம் 8 பேர்களுக்கும் 25 ரூபாய் வீதம் 4 பேர்களுக்கும் 35-ரூபாய் வீதம் ஒருவருக்கும் கொடுக்கப்படும். ஸ்காலர்ஷிப்புகள் ஹிந்து ஸ்திரீகளுக்கே யானலும், இந்தியாவில் படிக்கிறவர்களுக்காகவா அல்லது அன்னிய தேசத்திற் படிக்கிறவர்களுக்காகவா என்று சொல்லப்படவில்லை.

ஸ்விட்ஜர்லண்டு தேசத்து ஏரிகள்

THE LAKES OF SWITZERLAND

ஐரோப்பா கண்டத்திலிருக்கும் ஸ்விட்ஜர்லெண்டு தேசத்து மனோரம்யங்களில், முக்யமாக இருப்பவை அதன் ஏரிகளே. அவற்றில் விசேஷமானவை ஜெனீவா (Geneva), கான்ஸ்டென்ஸ் (Constance), ஜ்யூரிச் (Zurich), ல்யூஸர்ன் (Lucerne). இவைகள் பள்ளத்தாக்குகளிலமைக்கப்பட்டு, நீல நிறமான ஆகாயத்தையும் மண்ணிறமான பூமியையும் பிரதிபிம்பிக்கின்றன. ஸ்வீடன், ரஷ்யா தேசங்களிலுள்ள ஏரிகள் இந்த ஏரிகளைப்பார்க்கிலும் பெரிதானபோதிலும் இவைகளைப்போல அவ்வளவு அழகாய் இல்லை. அநேக அடி ஆழமிருப்பதால், இந்த ஏரிகள் சுத்த நீலநிறமுடையதாகக் காணப்படுகின்றன. இவைகளைச் சுற்றியிருக்கும் ஊர்த்தோற்றமோ, நிகரற்ற சௌந்தர்யம் பொருந்தியிருக்கின்றது.

ஜெனீவா என்பது, ஸ்விட்ஜர்லாண்டிற்கும் ஐரோப்பாவின் தென் பாகத்திலிருக்கும் ஸேவாய் (Savoy) என்னும் மாகாணத்திற்கும் நடுவில் ஒரு இளம்பிறை வடிவில் அமர்ந்திருக்கின்றது. ஜ்யூரா (The Jura) குன்றுகளிலிருந்து ஆல்ப்ஸ் (The Alps) மலைத்தொடர்ச்சியைப் பிரிக்கும் பெரிய பள்ளத்தாக்கின் விசேஷ பாகத்தை அடைத்துக் கொள்ளுகிறது. இவ்வேரியின் நீளம் 45 மைல், அகலம் 1-10 மைல் வரையில் சில இடங்களில் அகன்றும் சில இடங்களில் குறுகியு மிருக்கிறது. மிகவும் ஆழமான இடத்தில் இந்த ஏரி 1000-அடி இருக்கின்றது. முதன் முதலில் 1824-ம் வருஷத்தில் புகைக் கப்பல்கள் இவ்வேரியின் மீது பிரயாணஞ்செய்யத் தொடங்கின. லார்ட் பைரன் (Lord Byron) என்னும் ஆங்கிலகவி இந்த ஏரியை, "தெளிய, சாந்த முள்ள ஜெனீவா," என்று கூறியிருக்கின்றார். "சைல்ட் ஹாரோல்ட்," (Childe Harold) என்னும் விதானத்தில், இந்த ஏரியை மிகவும் அழகாக வருணிக்கின்றார்.

கான்ஸ்டென்ஸ் என்னும் ஏரி 42 மைல் நீளமும் சுமார் 9-மைல் அகலமு முள்ளது. ரைன் (Rhine) என்னும் நதியானது இந்த ஏரியின் கீழ் கோடியிற் பாய்ந்து மேற்கு பாகத்தில் வெளிச்செல்கின்றது. இவ்வேரியின் கரைகளும் கொஞ்ச தூரத்திலுள்ள சுற்றுப் பிரதேசங்களும் அதிக செழிப்பாய் இருக்கின்றன. அநேக அழகுள்ள காட்சிகளை இங்கே காணலாம்.

ஜ்யூரிச் என்பது, ஜெனீவாவைப்போல ஓர் இளம்பிறை வடிவில் இருக்கின்றது. இதன் நீளம் 23 மைல்; அகலம் 2 மைல். இந்த ஏரி ராப்பர்ஸ்சர்ல் (Rapperschuryl) என்னுமிடத்துள்ள ஜலசந்தியால், மேல் கீழ் என்று இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜலசந்தியின் குறுக்களவு அரை மைல். இதற்குக் குறுக்கே ஒரு மரப்பாலம் போடப்பட்டிருக்கின்றது. இது, ஐரோப்பாவிலிருக்கும் ஏரிகளுள் மிகவும் நேர்த்தியாய் இருப்பதோடு நன்றாய் பயிரிடப்படுகிற பூமியாலும் ஜன நெருக்கமுள்ள தேசத்தாலும் சூழப்பட்டிருக்கின்றது. அநேக விநோதக் காட்சிகள் காணப்படுகின்றன.

ல்யூஸர்ன் ஏரியானது, மலைகளுக்குமேல் இரண்டு சிகரங்களுக்கு நடுவில் அமர்ந்திருக்கிறது. இச்சிகரங்களில் ஒன்று, பிரயாணிகளுக்கு தங்குமிடமாக உபயோகப்படுகின்றது. மலைகளிலிருந்து பார்க்கும்பொழுது இந்த ஏரி அதி நேர்த்தியாகக் காணப்படுகின்றது. நீளம் 25 மைல். அகலம் அரைமைல் முதல், இரண்டு மைல் வரையில் வித்தியாசப்படுகிறது. இயற்கை ஊர்த்தோற்றமானது ஒப்பற்ற அழகுள்ளதாயிருக்கின்றது.

இயற்கையழகில் விருப்பமுள்ள ஐரோப்பியர், வெயிற்காலங்களில் இவ்வேரிகளின் கரைகளிலுள்ள ஊர்களில் தங்குவர். அவர்கள் பணச்செலவைக் கவனியாது, மலை இருப்புப்பாதைகளினுதவியால் இவ்வேரிகளுக்குச் சென்று சிலர் தம் தேகாரோக்யத்திற்காகவும், மற்றுஞ்சிலர், அவ்வேரிகளின் பொலிவைக்காணவும் வருகின்றனர். இவ்விதமாக வருபவர்களில் சிலர் அமெரிக்கா முதலிய தேசங்களினின்றும் வருகிறார்களென்றால் ஸ்விட்ஜர்லண்டிலுள்ள ஏரிகளின் சிறப்பு நன்கு விளங்கும்.

இவ்வேரிகள் மனதை உத்ஸாகப்படுத்துவதன்றியும், அத்தேசத்தாருக்கு நன்மையும் புரிகின்றன. மலையில் உற்பத்தியாகும் ஆறுகளினின்றும், ஏரிகளினின்று வெளிச்செல்லும்

(இதன் தொடர்ச்சி 87-ம்பக்கம் பார்க்க)

தேவாலயம்

THE TEMPLE

எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள எண்பத்து நான்கு கோடி ஜீவராசிகளையும் படைத்துக் காத்து ரட்சிக்கும் கருணாநிதியின் இருக்கையையே தேவனது ஆலயம் என்று கூறுவர்.

"அரிதரிது மானிடராதலரிது"

என்று ஔவையார் சொல்லியதின் கருத்தென்னை? தெருவிலும் கானகங்களிலும் அலையும் மிருகங்களைப்போலவே நாமும் பசிதாகங்களினால் வருந்துகின்றோம். அப்படியானால் அவைகளைவிட நாம் எவ்விதத்தில் உயர்ந்தவர் எனின், நம்மிடத்துள்ள பகுத்தறியுந் தன்மையினாலேயே. அருமையான பகுத்தறிவையுடைய மானிடஜன்ம மெடுத்து விட்டோமென்ற பெருமிதத்தால் அழிவுறும் பேதைகளைப் போல் அழிவுறாமல் அவ்வறிவினால் கடவுளின் திருவருளைப் பரிபூரணமாய்ப் பெற முயல்வதே மாந்தர்க்கழகாம்.

நமக்கு ஒருவன் சமயத்தில் ஒரு சிறு உதவியைச் செய்தானேயானால், அவனை நாம் உயிருள்ள மட்டும் புகழ்கிறோம். மற்று மொருவன் நம்மைப் பெரிய விபத்தினின்றும் காப்பாற்றினால் அவனை அநுதினமும் கொண்டாடுகின்றோம்.

(86-ம் பக்கத் தொடர்ச்சி)

நதிகளினின்றும் உண்டாக்கப்படும் மின்சார சக்தியினால் அவ்வூர்களிலுள்ள யந்த்ரசாலைகள் வேலைசெய்கின்றன. நிலக்கரியின் உதவியில்லாமலே ஸ்விஸ் ஜாதியார் தங்கள் தொழிற்சாலைகளை நடத்துவது நாம் கவனிக்கத்தக்கது.

இவ்விதம் இயற்கையழகைத், தொன்றுதொட்டு அநுபவிக்கும் ஸ்விஸ் ஜாதியார், ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் சிறியவற்றி லொன்றாக இருந்தபோதிலும் வேற்றரசா ஆளுகைக்கு டெல் என்பவன் காலந்தொடங்கிக் கீழ்ப்பட்டவரல்லர். பகைவரால் எளிதிலடைய முடியாத மலைச்சிகரங்களில், ஏரிகளை அரணாகக்கொண்டு; வாழ்ந்துவரும் ஜன்ம வீரரை அடக்கியாளுதல் அரிதன்றோ?

வீ. ராமச்சந்திர ராவ்.

நமக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இல்லமும் ஈந்து, நம்மைச் சதா சூழ்ந்திருக்கும் தீமையை நீக்கி நம் நன்மையை நாடும் பரமபுருஷன் யார்? அவர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பதென்னை?

நமக்கு இத்துணை உதவியைச் செய்யும் வள்ளல் ஆதியந்த மில்லாக் கிருபாநிதியே. அவர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பதெல்லாம்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா
முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் அருளொழுகும் திருக்குறளை மனத்துட்கொண்டு முழுமுதற் கடவுளை மனத்தில் இருத்தி இறுதியில் அவர் பொற்பாதம் சேர்வதேயாம்.

ஆம்! தேவனை வழிபடல் வேண்டுவது அவசியந்தான். ஆனால் அன்னவரை வணங்குவதற்கு ஆலயம் அவசியமோ! மனத்தினாலேயே அவனை ஸ்மரித்தல் போதாதோ? என்று கேட்கப் புகுந்தால், தேவாதி தேவனை மனதினால் தியானிக்கலாம் என்று சொல்வது எளிது.

"சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்று நம் நாயனார் கூறுவதுபோல் மானஸீக பூஜை செய்வது எல்லாருக்கு மியலாது. அது மிக்க ஞானிகளுக்கே கூடும். அவ்வித ஞானிகளும் நமக்கு ஆலயவழிபாடே சிறந்ததென்று ஸ்மிருதி மூலமாய் வெளியிட்டிருக்கின்றனர்.

மாடத்துக்குப் போகவேண்டுமானால் படிகளின் மூலியமாய் ஏறுவது சுலபமே யன்றி திடீரென்று தாவுவது அரிதாகும். அதேபோல் வேதங்களினாலும் அறியமுடியாத அம்பலவாணனை அறிவதற்குப் படிகள் போன்றன இவ்வாலயங்கள். நாதனில்லை யென்னும் நாஸ்திக வாதிகளின் படுகுழியில் விழாமல் தாங்கிக் கொள்ளும் ஊன்றுகோல் போன்றன இக்கோயில்கள். ஸதா இவ்வுலக வியாபாரங்களில் உழன்று அவதிப்படும் பாமரர்களாகிய நாம் பரமனைப் பக்தி செய்யாமல் பாவத்தைத் தேடிக் கொள்ளுகிறோம். நாம் தெருவழியாகப் போகும்பொழுது ஸர்வேச்வர

ரது இருக்கையைக் கண்டவுடன் நம் மனதில் ஒருவித உணர்ச்சி உண்டாகின்றது அவ்வுணர்ச்சியானது நம் மனதைப் பரமனிடத்தில் செலுத்துகின்றது. ஆலயத்தினுட் சென்றால் கவலையை மறந்து பக்த சிரோமணிகளின் ஆனந்த பரவசத்தில் மயக்குண்டு நம்மை அறியாமலே பரமனைப் பணிகின்றோம். இக்காரணம்பற்றி யன்றோ, நம்முன்னோர்கள் நதிக்கரைகளிலும், நாடு நகரங்களின் மத்தியிலும், காடுகளிலும் ஆலயங்களைக் கட்டிவைத்திருக்கின்றனர். காட்டில் வழிதப்பிப் போனவர்கள் இராக்காலங்களிலாயினும் பகற்காலங்களிலாயினும் ஆலயத்தைக் கண்டால் தங்கள் துக்கத்தை மறந்து என்றுங் கண்டிராத ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர்.

கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும், மற்ற மதஸ்தர்களும் தொழுவதற்கென்று பிரத்யேகமாக,மாதா கோவில்களும் மஜீதுகளும் அமைக்கின்றது எதற்காக?

பரிசுத்தமான ஓரிடத்திற்குச் சென்றால் நம் மனது பரிசுத்தமாகவிருக்கும் அவ்விடத்தில் தொழும் நம் ஸகோதரர்களைக் கண்ணுறுவதினால் நாமும் பரமனைப் பிரார்த்திக்க வேண்டுமென்னும் பேரவா நம்மைத் தூண்டும். மேலும் ஜகந்நாதனை ஆராதிப்பதற்கும், நம் மனதைக் கலைக்கும் சப்தமில்லாமல் உற்சாகத்தைக் கொடுத்து எம்பெருமானைத் தியானிப்பதற்கும் தகுந்த இடம் ஆலயமே.

சிலர் விக்கிரஹ ஆராதனை செய்தல் கூடாதென்று சொல்லுகிறார்களே அதற்கென் செய்வது? நாம் விக்கிரஹத்தை ஆராதனை செய்வது அச்சிலையை அன்று, அதனிடத்தில் அந்தர்யாமியாயுள்ள பரம்பொருளின் சக்தியையே. மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவதற்கு பக்தி என்பதே தக்க ஏணி. அவ்வேணியைச் சாத்துமிடம் தேவாலயமும் விக்கிரஹமும் என்று அறிதல் வேண்டும். ஆலய வழிபாட்டின் மேம்பாட்டை "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்னும் ஔவையின் வாக்கினின்று நன்கறியலாம்.

தேவாலயங்கள் நித்யத்துவம் வாய்ந்த நாதனைப்பணிவதற்கு மாத்திரமேயன்றி வேறுவிதங்களிலும் பயன்படுகின்றன. காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம், திருப்பதி, சிதம்பரம், சீயாழி முதலிய திவ்ய க்ஷேத்ரங்களுக்கு பற்பல திக்குகளினின்றும் பாகவத சிரோமணிகளும், அடியவர்களும் ஆண்டவனைச் சேவிக்க ஆவலுடன் கூடுகிறார்கள். அன்னவர்களின் சாதுர்ய சம்பாஷணையிலிருந்து மதசம்பந்தமாகவும், உலகவிஷயமாகவும் அநேக அரியவிஷயங்களை அறியலாம்.

"காணுதலெல்லாம் காணலாம் காஞ்சீபுரத்தில்" என்று பழமொழியும் வழங்குகின்றது. பொதுவாக ஆலயங்கள், கண்ணைக்கவரும் காட்சிகள் நிறைந்த இடங்களிலும் அழகிய ஆற்றோரங்களிலும், இருக்கின்றன. இக்காட்சியைக் காண்பதினால் நம் மனதில் ஒருவித ஆனந்தம் உண்டாகின்றது. அவ்வாநந்தம் நமக்கு வலிமையைத் தருகின்றது. வலிமை நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கக்கூடியது. யாத்திரைகளினால் அறிவு விசாலமாகின்றது. மேலும்,

'மூர்த்திதலந்தீர்த்தம் முறையாகத்தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" [ர்

என்று நம் தாயுமானவர் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். இச்செய்யுளின் கருத்தையுற்றுநோக்கின் ஸ்தலயாத்திரைகளினால் உண்டாகும் நன்மை ஹஸ்தாமலகமென்பது கரதலாமலகம் போல் விளங்கும்.

அதாவது ஆலயங்களுக்குச் சென்றும்,புண்ணியஸ்தலங்களை தரிசித்தும், எல்லாம் வல்ல இறைவனைப் பணிபவர்களுக்குத் தேவாதிதேவனே ஞானசம்பாஷணை அருளுகின்றானெனின் ஆலயத்தின் மேம்பாட்டைக் கூறவும் முடியுமோ? இதற்கு நந் தாயுமானவரின் சரித்திரமே ஏற்ற திருஷ்டாந்தம்.

மேலும்முற்காலத்தில் எல்லாக்கட்டிடங்களிலும் சிறந்ததும் பலமானதுமானவை கோவில்களே. இப்பொழுதும் திரிசிரபுரம் மலைக்கோட்டைக்குச் சென்றால் அங்குச் சுவர்களில் விசித்ரமான அக்ஷரங்களும், சித்திரங்களும் காணப்படுகின்றன. அவைகள்யாவை? முற்காலத்தில் அச்சு முதலியவைகள் இல்லாததினால் மன்னவர்களும் மற்றவர்களும் தங்கள் காலத்தில் நடந்த விசேஷ வர்த்தமானங்களைக் கல்லின்மேலும் கோவிற்சுவர்களின் மீதும் செதுக்கிவைத்த சிலாசாசனங்களே. இவைகளால் சிலாசாசன பரிசோதக உத்யோகஸ்தரின் வர்த்தமானங்களினின்று மறைந்து கிடக்கும் பல அரிய உண்மைகள் வெளியாகின்றன. இவைகளினால் நாம் அடையும் பயன்கள் அமோகமானவை.

தற்காலத்தில் பல இடங்களில் உன்னதமானதும் விசாலமானதுமாகிய பொதுக்கட்டடங்கள் கோவில்களே. பெரிய பட்டணங்களைச் சுற்றிப்பார்க்கும் அநேக அந்நியர்கள் ஆலயத்தைக் குறிப்பாகக்கொண்டு தங்கள் விடுதியை அடைகிறார்கள்.

மேலும் ஆலயங்களின் தர்மத்தினால் பல ஏழைகள் பிழைக்கின்றார்கள். மானிடர்களுக்குத் தர்மசிந்தையை புகட்டுவதற்கு ஆலயம் பிரதானமாயிருக்கின்றது. ஆலயங்கட்டுதல் சிறந்த தர்மமென்பது நம் சித்தாந்தமல்லவா?

மேலும் ஆலயங்கள் எல்லா நன்மைகட்கும் இன்றியமையாதனவாம்.

மேற்கூறியவற்றை யெல்லாம் கருத்துட்கொண்டன்றோ "கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம்" என்று நந்தமிழ் மூதாட்டியாரும் திருவாய்மலர்ந்திருக்கின்றனர். ஆலயமில்லா நகரம் ஆரண்யமே. கருணாகரனின் இருக்கை காடாயினும் அது மாடமாளிகை கூடகோபுரம் நிறைந்த நகரேயாகும். ஆலய மில்லாவிடம், அமைச்சரில்லா அரசுபோலும், கவிஞரில்லா ஸபைபோலும், தாமரையில்லாத் தடாகம் போலும், மதியில்லா வானம்போலும், கண்ணில்லா வதனம்போலும், பதியில்லா பத்தினிபோலும், சீர்குலைந்து போகுமென்பதற்கு ஐயமென்?

புண்ணியத்தைக்கண்டது யார்? பாவத்தைக் கண்டது யார்? என்று நாத்தழும்பேற மனங்கூசாமற் சொல்லும் மானிடப்பதர்களுக்கு நாதனைப்பணிந்து நற்கதியடைய நற்புத்தி புகட்டுவதற்கு ஆலயங்கள் அவசியமென்பதை வற்புறுத்துவதற்கு ஏதுவானவை மேற்கூறியவைகளேயன்றோ?

"தார்பயிறேயந்தன்னினுன் மறைநாட்டில்
விரவுதலொழிந்து தோன்றன் மிக்க
புண்ணியந்தானாகும்"

என்னும் சான்றோர் வாக்கின்படி மலைகளிலும் கானகங்களிலுமிருக்கும் கள்ளர், மறவர், வேடர் முதலியவர்களைப்போல் பிறவாமல் யாவராலும்புண்ணிய பூமியென்று புகழப்படும் பரதகண்டத்தில் பிறந்த நாம் ஈசுவரனது பொற்பாதத்திற்கு பாத்தியப் பட்டவரென் பதிற்கையமுண்டோ? இவ்வளவு பாக்கியமும் பரமனருளால் பெற்ற நாம் வீணாய்க் கழித்த நாட்கள்போக எஞ்சிநிற்கும் நாட்களை நல்வழியில் க்ருத்தனருளால் கழிக்க முயலவேண்டும்.

நம் நாட்டின் இதிகாசபுராணங்களையும், அவதார புருஷர்களையும், பக்தர்களையும், இக்கோளத்திற்கப்பாலுள்ளவர்களும் பெரிதும் புகழ்கிறார்கள். அவ்விதமான பெரியோரின் பாலர்களாகிய நாமும் அவர்களைப்போலாக முயல்வது அவசியமன்றோ?

தேவாலயம் அனாவசியமென்று பிதற்றும் அறிவீனர்களை அகட்டி, அவிவேகத்தை ஓட்டி ஆன்றோர்கள் ஸ்ம்ருதிமூலமாயும் அனுபவமூலமாயும் அருளியிருக்கும் ஆண்டவனை அறிவதற்கு ஏற்ற வழியாகிய ஆலயமென்னும் படியின் வழியால், பக்தி யென்னும் பாதத்துணை கொண்டு ஏறிச்சென்று மோக்ஷமென்னும் அழிவில்லாப் பதத்தை அடைவோமாக.

"கண்ணுதலாலய நோக்குங் கண்களே கண்கள்
கறைக் கண்டன் கோயில் புகுங்கால்களே கால்கள்
பெண்ணொருபாகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே நன்னா
பரன் சரிதை கேட்க படுஞ் செவியே செவிகள்
அண்ணல் பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக் கீழடிமை புகுமடிமையே யடிமை"

என்றபடி ஸர்ப்பாபரணரும்,சங்கரரும், காமதகனருமாகிய எல்லாம்வல்ல முழு முதற் கடவுளின் பொற்றாள்களை வணங்கி இகபர ஸாதகங்களை யம்மங்கைபாக னருளாற் பெற்று இனிது வாழ்வோமாக. சுபம்

வி. சு. கந்தசுப்பிரமணியன்.

மதனப்பள்ளி க்ஷயரோக சுகவசதிச்சாலை,— மதனப்பள்ளியின் சீதோஷ்ணநிலை, நோயாளிகளுக்கு மிகுந்த அனுகூலத்தைச் செய்யக் கூடியது. அது பற்றி நோயாளிகளா யுள்ளவர்கள் அவ்வூரில் போய் வசிப்பதுண்டு. அதுவேயன்றி, அவ்வூரில் க்ஷயரோகிகள் வசிப்பதற்கு ஏற்றவிடமென்பது வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயமாதலால், அவ்வூருக்கு க்ஷயரோகிகள் விசேஷமாய்ப் போகிறார்கள். அவ்வூரிலுள்ள ஆற்காடு அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த பாதிரியார்களும், அவ்வூரில் ஒரு ஆஸ்பத்திரி வைத்திருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரியையொட்டி ஆற்காட் அமெரிக்கன் மிஷன் பாதிரிமார்கள் சமீபத்தில் கட்டி முடித்த க்ஷயரோக சுகவசதிச்சாலைக் கட்டடத்தை லார்ட் பெண்ட்லண்ட் அவ்வூருக்குப் போயிருந்தபோது திறந்துவைத்தார். அப்போது அவர் பாதிரிமார்கள் அவ்வூரில் செய்திருக்கும் தருமவேலைகளை மெச்சிப் பேசினார்.

செவ்வாயென்னும் கிரகத்தில் பிராணிகள் வஸிக்கக்கூடுமா?

THE HABITABILITY OF MARS

சூரியனைச்சுற்றியுள்ள மண்டலங்களிலெல்லாம், அங்காரகமண்டலத்தில் மட்டும் பிராணிகள் ஜீவிக்க, ஸாதனங்கள் அனேகமிருப்பதாகத் தெரியவருகிறது. கிரகசாஸ்திரத்தினால் இம்மண்டலத்தைப்பற்றி நாம் அறிந்தது யாது?

கண்ணாடியின்றிப் பார்த்தால், இம்மண்டலம், ஆகாசத்தில் சிவந்த நிறமுள்ளதாயும், தூரதிருஷ்டிக்கண்ணாடியினால் பார்க்கின், உடலில் இரண்டுவெள்ளைப்புள்ளிகளோடும், காணப்படுகின்றது. இப்புள்ளிகள், துருவமுனைகளென்று ஊகிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும், சாஸ்திர ந்யாயங்களால், இம்மண்டலத்திலுள்ள வாயுவும், பூமியிலுள்ளவாயுவும் ஒத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். பூமண்டலத்திலுள்ள வாயுவில் ஜலஸம்பந்தமான ஆவியுள்ளபடியால் செவ்வாயிலுள்ள வாயுவும் அப்படியே யிருக்கவேண்டும்.

ஆனால், ஆவி எங்கிருந்துண்டாகும்? ஸமுத்திரங்களிலிருந்தும், நதிகளிலிருந்துந்தான் உண்டாகலாம். ஆகையால், இம்மண்டலத்தில் சமுத்திரங்களும் நதிகளும் இருக்கவேண்டியது அவசியம்.

மேலும் சூரிய வெப்பத்தினால் பூமியிலும் கடலிலுமிருந்து கண்ணுக்குத்தெரியாத அணுரூபமாக விடாது எழும்பும் நீராவி ஆகாசத்தில் உயர்ந்து, தடித்து, நுண்ணிய துளிகளாய்ச்சேர்ந்து மேகங்களாகிறதுபோல, இச்செவ்வாய் மண்டலத்திலேயும், நீராவிகள் நில்லாமல் ஏராளமாய் எழும்பும்போது சடிதியில் உண்டாகும் குளிர்ச்சியால், குளிர்ந்து மேகமாய் அமைந்த ஸ்திதியில் காற்றின் விசையினால் அடிக்கப்பட்டு, வெப்பமில்லாத விடங்களில் மழையாய்ப் பொழிவதனால், அவ்விடங்களை உஷ்ணமுள்ளதாய்ச் செய்கிறது.

அப்படிப் பெய்கிற மழை ஒருபாகம் ஓடைகளிலும் ஆறுகளிலும் சேர்ந்து பெருகி உத்தண்டமாய் ஓடிச் சமுத்திரத்தில்தான் போய்ச்சேரவேண்டும். மழைத்தண்ணீரின் மற்றைப் பங்கு எப்படி பூமிக்குள் இறங்கி அங்குள்ள சுனைகளில் கலந்து, சீவராசிகளுக்கும் தாவரங்களுக்கும் அனுகூலப்பட பூமியின் ஈரத்தைக் காத்துவருகிறதோ அப்படியே இம்மண்டலத்திலேயும் மழைத்தண்ணீர், ஜீவராசிகளுக்கும், புல், பூண்டு. மரங்கள் வளர்வதற்குந்தான் ஸாதனமாயிருத்தல் வேண்டும்.

இப்பூமியில் எப்படி பருவகாலங்களிருக்கின்றனவோ, அப்படியே செவ்வாயிலேயும் பருவகாலங்களுண்டு. மேலும் பூமியின் மணல்வெளிகளில் பிரசண்டமாருதம் எழும்பி, வானமும் பூமியுங் கலங்கவடித்து ஓரோர் சமயத்தில் பிரயாணக்கார வர்த்தகர்களுக்குச் சௌகரியமாகவும், மற்ற சமயத்தில் அவர்களுடன் செல்லும் சகலரையும் மூடிப்போடுஞ் சக்தியுள்ளதாகவுமிருப்பதுபோல, இம்மண்டலத்திலேயும் அப்படிப்பட்ட காற்று வீசவேண்டும். ஏனெனில், இக்காற்றில்லாவிடின் மேகங்கள் எப்படி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும்?

மேற்கூறிய பிரகாரம் பெருங் காற்றுகள் நாசஞ்செய்பவைகளாயிருந்தாலும், அவை ஆகாயத்தையும், தண்ணீரையும் புரட்டிச் சுத்தி பண்ணி ஜீவராசிகளுக்கு அனுகூலமாக்குகின்றன.

ஆகையால் இவ்வளவு ஸாதனங்களும் ஆறுகளும், நதிகளும், எங்குமோடி நிலத்தைச் செழிக்கச்செய்பவும், உயர்ந்த மலைகளும் குன்றுகளும், சமநிலங்களும், பள்ளத்தாக்குகளும் மேகங்களும், சூரியவெளிச்சமும், ஆகாயமும், காற்றும் இவைகளெல்லாம் பயிர்கள் முதலியவை வளர்ந்து செழிக்கவும், ஜீவராசிகளை காப்பாற்றும்பொருட்டு மல்லாமல் மற்றைக் காரணங்களுக்காக இயற்கை தவறி இருத்தலும் கூடுமோ?

என். கஸ்தூரிரங்கன், பீ. ஏ.

மிஸ்டர் P. ராமஸ்வாமி அய்யர்.—மிஸ்டர் P. ராமஸ்வாமி அய்யர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த கல்வியிலாகாவில் பலவித உத்தியோகங்களை வகித்து சென்ற 32-வருஷகாலமாக சிறந்த வேலைகளைச் செய்து நல்ல பேர்வாங்கினவர். கல்வியிலாகா டைரெக்டரின் பர்ஸனல் அஸிஸ்டண்டாக வேலைபார்த்த இவர், கல்வி யிலாகா டிப்டி டைரெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறதைக் கேட்டு ஸந்தோஷப்படுகிறோம்

மலைகள்

MOUNTAINS

மலைகள் மிக உயரமாகவும் வலிமையுடையனவாயும், பார்ப்பதற்குப் பயங்கரமாயும், புற்பூண்டு, செடி கொடி, விருக்ஷங்களால் சூழப்பட்டு மிருக்கின்றன. வெகுதூரத்திலிருந்து பார்த்தால் பச்சை நிறமாகத் தோன்றும். சில மலைகள் மிருகங்கள் போலவும், சில ஊர்வன போலவும் நானாவிதமாகத் தோன்றும் அம்மலைகளினுச்சியிலிருந்து நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்தால் அநேகவிதகாட்சிகள் வெகு அழகாய்த் தோன்றுவதன்றி, ஆறுகளும், நதிகளும், குளங்களும், கோவில்களும், பூந்தோட்டங்களும், உயர்ந்தகட்டடங்களும், சிறியகிராமங்களும் நன்றாகத் தெரிகின்றன. தூரதிருஷ்டிக்கண்ணாடி கொண்டு, நாலாபக்கமும் பார்ப்போமானால் தேசநிலையை ஒரு குறிப்பாகக் கொள்ளலாம். மலையடிவாரத்தில் நின்று உயர் நோக்கிப் பார்த்தால் மிகவும் பயங்கரமாயும் கம்பீரமாயும் தோன்றும் பர்வதங்களைச் சுற்றிலும் அநேக உயர்ந்த பெரிய விருக்ஷங்கள் ஆகாயத்தை அளாவிநிற்கும். புதர்களும், நீரருவிகளும், பயங்கரமான குகைகளும், ஆங்காங்கு கண்ணுக்குத் தெரிகின்றன.

சிற்சில மலைகளின் அடிவாரங்களில் பெரிய பட்டணங்களும், கிராமங்களுமிருக்கின்றன. சிலவிடங்களில் மலைகளின் உச்சியில பெரிய கோயில்களும், சிறிய பட்டணங்களும், கோட்டைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. மலைகள் தொடர்ச்சியாக ஒன்றன்பின்னொன்றாக இருக்கிற இடங்களில் அநேகம் பள்ளத்தாக்குகளும், செழிப்பான கிராமங்களும், மதில்களால் சூழப்பட்டிருக்கிற பல நகரங்களும், காடுகளும், நீர் வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன. சில மலைகள் அதிக நீளமாகவும், அகலமாகவுமிருப்பதன்றி, 20,000 அடிக்கு மேற்பட்டனவாயுமிருக்கின்றன. சிறுபான்மை சிறு பர்வதங்களாகவும், குன்றுகளாகவுமிருக்கின்றன.

மலைகளில் அநேகவிதங்கள் உண்டு. பெரிய மலைத்தொடர்கள், மலைப்பிரதேசங்கள், சாதாரண சிறு மலைகள், குன்றுகள், எரிமலைகள், முதலியன. சில இடங்களில் மண்மேடுகளே மலைகளாகத் தோன்றுகின்றன. எரிமலைகளும் பார்ப்பதற்கு ஸாதாரண மலைகளையே ஒத்திருக்கும். இம்மலைகள் பூமிக்குள்ளிருக்கும் உஷ்ணப்பொருள்களை வெளிக்கொண்டு வந்து பக்கத்திலுள்ள பட்டணங்களையும், கிராமங்களையும் நாசஞ்செய்கின்றன. எந்த தேசங்களில் எரிமலைகளிருக்கின்றனவோ, அந்த இடங்களில் பூகம்பங்கள் அடிக்கடி உண்டாகும். அதனால் அத்தேசத்தார்களுக்கு அதிக தொந்திரவுகள் ஏற்படுகின்றன. குன்றுகள் மலைகளைப் போலவே யிருக்கும். ஆனால் அவைகள் 2,000 அடிக்குக் குறைவாயிருக்கும். மண்மேடுகள் அல்லது மண்மலைகள் வனாந்திரங்களிலும், ஆற்றோரங்களிலுமிருக்கும். மலைகளிலெல்லாம் ஹிமயமலையே உயர்ந்தது.

மழை சிற்சில இடங்களில் பெய்தும், வேறு இடங்களில் வர்ஷிக்காமலிருப்பதற்கும் மலைகள் காரணமாம். ஏனெனில், அவை ஒரு பக்கமாகச் செல்லும் காற்றைத் தடுத்து மற்றொரு பக்கமாகத் திருப்புகின்றன. காடுகளடர்ந்த பர்வதங்களில் மேகங்கள் தாக்கப்பட்டவுடன் அங்கேயே மழை பெய்கிறது. உதாரணமாக மலையாள தேசத்தில் மலைகளிருக்கிறபடியால் அங்கே அதிக மழை பெய்கிறது. அம்மலைகள் அநேக பெரிய நதிகளுக்குப் பிறப்பிடமாயும் பெரிய ஊற்றுகளுக்கும், நீரருவிகளுக்கும், ஏரிகளுக்கும், ஆதாரமாயுமிருக்கின்றன. மலைகள் பனிக்கட்டிகளுக்கு உறைவிடமாகின்றன. கோடை காலங்களில் அப்பனிக்கட்டிகள் உருகுவதால், அதிக உஷ்ணகாலங்களில் வேனிற் காலங்களைவிட சில ஆறுகளில் அதிக நீர் வருகிறது. ஆகவே வருஷமுழுதும் உலகத்திலுள்ள சில பாகங்கள் செழிப்புடன் விளங்குகின்றன. மழை மலைகளில் பெய்வதால், அவைகள் கொஞ்சம் கொஞ்சமாகக்கரைந்து, சிறு பொடிமணல்களாக மாறுகின்றன. இந்த மணல்களையும் சிறு கற்களையும் ஆறுகள் அடித்துக் கொண்டு வருகின்றதனால் சிறு கூழாங்கற்களும், சாதாரண கற்சிலைகளுமுண்டாகின்றன. இவ்விதமே உலோகப் பொடிகளும் ஆறுகளுடன்வருகின்றன. சில உலோகங்கள் தண்ணீரை சுத்தம் செய்யக் கூடியவையாதலால், எப்பொழுதும் ஆற்று நீர் பரிசுத்தமாகவும், தேகத்துக்கு ஆரோக்கியமாகவுமிருக்

ஒன்றது. ஆனதுபற்றியே முற்காலத்தில் ஆரியர்கள் செழிப்பான நதிதீரங்களில் குடியேறினார்கள். இக்காலத்தும், பிராமணர்கள் ஆற்றோரங்களில் வசிக்கிறார்கள்.

மலைச் சாரல்களில் புற்பூண்டுகளும், தேக்கு, சந்தனம், மூங்கில், வேங்கை முதலிய உபயோகமுள்ள பலவித விருக்ஷங்களும், கனிவர்க்கங்களும் இயற்கையிலேயே வளருகின்றன; தேயிலை, காப்பி முதலியவைகளை நம்மவர்கள் பயிரிட்டு வருகிறார்கள்; ஆடு மாடுகளும், யானை, சிங்கம் புலி, கரடி முதலிய காட்டு மிருகங்களும் ஜீவிக்கின்றன. மலைகளிலகப்படும் மூலிகைகள் சிறந்த மருந்துகளாக பயன்படுவதை யாவரும் அறிவர். மலைப் பிரதேசங்களிலிருப்பவர்கள் பலசாலிகளாயும் நீடித்தகாலம் வசிக்கிறவர்களாயும், வியாதியற்றும் இருக்கிறார்கள். தேககாத்திரத்தையும் மனோகம்பீரத்தையும் உடையவர்களாகிய அவர்களோடு வேற்று தேசத்தார் போர் புரிந்து ஜயிப்பது அரிது; மூலிகைக் காற்றையும், வேறு நற் காற்றையும் சுவாசிக்கிறபடியால், சுக ஜீவிகளாயிருக்கிறார்கள். ஆனதுபற்றியே வியாதிஸ்தர்களை மலையடிவாரங்களுக்குக் கொண்டு போகிறார்கள். மலைகள் கோடை காலத்திற்குத் தங்குமிடமாயுமிருக்கின்றன. அநேகர் நீலகிரி, கொடைக்கானல், ஸிம்லா முதலிய சமசீதோஷ்ண இடங்களுக்குக் கோடையில் செல்லுகிறார்கள். மற்றும்மலைகளிலுள்ள குகைகளும், அடர்ந்தகாடுகளும், தபசிகளுக்குத் தகுந்த இடங்களாம். முனிவர்கள் ஒருவித தொந்திரவுமின்றி நித்யகர்மங்களை நன்கு நடத்தலாம். ராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும், வேட்டையாடுவோர்களுக்கும் தகுந்தவிடமாதலால் மிருகங்களை வேட்டையாடுகிறார்கள். அம்மிருகங்களின் தோல்களையும், யானைகளின் தந்தங்களையும் பலவிதங்களில் உபயோகிக்கிறார்கள்.

சிலநதிகள் மலைகளின்றும் செங்குத்தான பாறைகளிலிருந்து கீழ் விழுகின்றன. அப்படி விழுவதை நாம் நீர் வீழ்ச்சியென்று சொல்லுகிறோம். அந்நீர் வீழ்ச்சியின் சக்தி யந்திரசாலைகளை நடத்தவும், மின்சாரசக்தியை உண்டாக்கவும் உபயோகப்படுகிறது. பாறைகளும், கற்களும், பெரிய கட்டடங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றன. கோயில்களும் கோட்டைகளும் முற்காலத்தில் மலைகளின் உதவியால்தான் கட்டப்பட்டன. பாறைகளினின்றும் விக்ரஹங்கள் செய்யலாம். மலைகளுக்கு மத்தியிலுள்ள பள்ளத்தாக்குகளின் வழியே வியாபாரங்கள் நடத்தலாம். ஒருதேசத்தைச் சுற்றி மலைகளிருப்பதால் சத்துருபய மேற்படாது, ராஜ்யத்திற்கு ஒரு பாதுகாப்பாகும். இம்மலைகள், அடிவாரத்திலுள்ள நாடுகளை உஷ்ணக்காற்றினின்றும், புயற்காற்றினின்றும் நீக்கி சுகத்தை மானிடர்களுக்குப் பேணுகின்றன. இதனால் ஜனங்கள், சுறுசுறுப்புள்ளவர்களாயும், திடசாலிகளாயும், புத்தியுள்ளவர்களாயுமிருக்கிறார்கள். சிற்சில மலைகளில் தங்கம், வெள்ளி இரும்பு முதலிய சுரங்கங்களிருக்கும். பாறைகளோடு கலந்திருக்குமவைகளைப் பொடிப்பொடியாக்கி, தனியே எடுத்து பற்பலவிதமாய் உபயோகிக்கலாம்.

மழை, மாரிகாலங்களில் மலையின்மேற் பெய்தவுடன், சலசலவென மழைநீர் கீழே விழவும், நாலாபக்கங்களிலும் உன்னதமான பச்சை மரங்களடர்ந்த பர்வதங்கள் மழை நீரால் நனைந்து பளபளப்புடன் பிரகாசிக்கவும், பற்பல இடங்களில் நீர்த்தடாகங்களும், பூந்தோட்டங்களும், கனிவர்க்கங்களும் கண்ணுக்குத்தோன்றவும், குளிர்ந்தகாற்று வீசவும்,—ஆகிய இவ்வழகிய காட்சி வெகு விசித்திரமாயும், ரம்யமாயுமிருக்குமென்று நாம் கூறவும் வேண்டுமோ?

எம். எஸ். ராமச்சந்திரய்யர்.

போஸ்டல் டிபார்ட்மெண்ட்.—இந்தியாவிலுள்ள போஸ்ட் ஆபீஸ்களின் மூலமாய், சென்ற 15 வருஷத்துக்குள் அனுப்பப்பட்ட போஸ்ட் கார்டுகள், கடிதங்கள், பத்திரிகைகள் இவைகளின் விவரம் பின்வருமாறு.—

	போஸ்ட்கார்டு.	கடிதங்கள்.	பத்திரிகைகள்
1900-1	2180 லக்ஷம்	2500 லக்ஷம்	320 லக்ஷம்
1913-14	4550 ,,	4670 ,,	560 ,,

இவைகளில் பத்திரிகைகளின் தொகை, ஒன்றுக்கு ஒன்றே முக்காலாக அதிகமானது சந்தோஷத்துடன் குறிப்பிடப்படும். சென்ற 10-வருஷங்களாக ப்ரெஸ் ஆக்ட் (அச்சுக்கூடம்) முதலிய அடக்குத் திட்டங்கள் செய்யப்படாதிருந்தால் இந்தத் தொகை இன்னும் அதிகமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்தியப் பத்திரிகைகளே இப்படி அதிகமானதிற்குக்காரணம்.

வாலி ராம ஸம்வாதம்

RAMA & VALI : A Dialogue

(கம்பராமாயணம், வாலி வதைப்படலம்)

திருமால், தசரதராமன் என்னும் நாமத்துடன் அவதரித்து, தந்தையின்சொல்லை மெய்ப்பிக்கும்வண்ணம் வனம்புகுந்த காலத்தில், அப்பெருமானுடைய அருமைப் பத்தினியாம் ஜானகியை இராவணன் அபகரித்துச் செல்லவே, அவனையும் அவனுடனிருந்த கொடியவரக்கரையும் வேரறக் களைந்தெறிவதற்காக வானரவீரனாகிய சுக்கிரீவனது தோழமை கொண்டதும், அச்சுக்கிரீவனது தமையனும் வாலி என்பான் மீது அம்பு தொடுத்தவளவில், அப்பெருமானுக்கும் வாலிக்கும் நடந்த சம்வாதத்தைக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் வெகு அழகாகக் கூறியுள்ளார். அப்பாகம் "வாலி வதைப் படலம்" எனப்படும். அப்படலத்தை வசன நடையில் மொழி பெயர்த் தெழுத வேண்டுமென எனது நண்பர் பலர் அறிவித்ததனால், அதற்கிணங்கியே, அப்படலத்தை இச்சஞ்சிகையில் எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் மொழிபெயர்த்துதவ முன் வந்துளேன். அந்த வாலிவதைப் படலத்தை மொழிபெயர்க்குமுன், வாலியின் வரலாறு பராக்கிரமம் முதலியவற்றைச் சுருக்கமாகச் சொல்லுவது அவசியமாகும். அவை பின்வருமாறு:—

பூர்வத்திலே இத்தென்னாட்டில் கிஷ்கிந்தை என்றொரு மலையுண்டு. அம்மலையைச் சார்ந்த நாடும், கிஷ்கிந்தை என்னும் பெயர் கொண்டுளது. அந்த நாட்டை ஆண்டுவந்த அரசன் பெயர் வாலியெனப்படும். அவனுக்குச் சுக்கிரீவன் என்ற தம்பியொருவன் இருந்தான். அவ்விருவரும் வானர ஜாதியைச் சேர்ந்தவர். ஒருதாய்வயிற்றில் உதித்த மக்களாவர். அவர்களில் மூத்தவனான வாலியென்பான் முடிசூடி அரசாண்டுவர, அவனுடைய இளையவன் இளவரசனாயிருந்து வந்தான். அண்ணன் தம்பி இருவரும் மிகுந்த புஜபலபராக்கிரமம் பொருந்தியவர். ஆயினும் அவர்களில் வாலியே பெருவலியும் பரமசிவனது பேரருளும் பெற்றவன். முன்னொருகால் தேவரும் அசுரரும் பாற்கடலில் மந்தரகிரியை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் நாகத்தைக் கடைகயிறாகப் பூட்டி அக்கடலைக் கடைந்து அமுதமெடுக்க முடியாது மனஞ்சலித்து நின்றனர். தினந்தோறும அஷ்டதிக்குகளிலும் சென்று, அங்குள்ள கடல்களில் யக்ஞம் கொடுக்கும் வாலி அச்சமயம் பாற்கடலை அடைந்தான். அடைந்ததும் அங்கே சுராசுரர் வாடி நிற்பதைக் கண்ணுற்றவளவில், தானே அப்பாற்கடலைக் கடைய, அதினின்று அமுதம் திரண்டுவந்தது. அதுகண்ட அனைவரும் வாலியினுடைய பேராற்றலைப் புகழ்ந்தனரென்றால், அவ்வாலியின் பெருவலியை விரித்துரைப்பானேன்! இனி, வாலியின் புஜபலபராக்கிரமத்தை அறியாத இராவணன் ஒரு சமயத்தில் வாலியின் வலியை அழிக்க ஆசைகொண்டு அவன் தனது நித்தியகடன்களைக் கடற்கரையிலிருந்து செய்துகொண்டிருக்கையில், அவனுக்குப் பின்னே சென்று, அவனைத் தனது இருபது கரங்களாலும் இறுகக் கட்டிப் பிடிக்க முயன்றான். அதனை யறிந்த வாலியோ தனது வாலை நீட்டி, அதனால் இராவணனை ஒரேகட்டாய்க் கட்டித் தூக்கிச்செல்லவே, நானா திக்குகளிலும் அரக்கனது இரத்தம் சிந்தாத இடமில்லை. இத்தகைய வன்மைவாய்ந்த வாலி தனது நாட்டிலிருந்து அரசுபுரிந்து வருகையில் மாயாவி என்னும் அசுரனொருவன் வாலியை வலியப் போருக்கு அழைத்தான். உடனே வாலி சிங்கநாதஞ்செய்து யுத்தத்திற்குக் கிளம்பி அவ்வரக்கனைத் தாக்கினன். தாக்கியதும், அரக்கன் அடி பொறுக்கமாட்டாமல் ஓட்டமெடுத்தான். வாலியும் அவனை விடாது பின்தொடர்ந்துசெல்ல, அவ்வரக்கன் குகையொன்றில் புகுந்துகொண்டனன். அச்சமயம் வாலி தன்னுடன் வந்த தம்பியைநோக்கி, "அப்பனே! நான் இப்பிலத்துவாரத்தில் புகுந்து மாயாவியை மாய்த்துவருகிறேன். அது வரையில் நீ இங்கேயே இருப்பாயாக!" என்று சொல்லி அக்குகையில் புகுந்தனன். அவ்வாறு சென்ற வாலி அந்த அரக்கனைக்கண்டு 28 மாதகாலம் அவனுடன் யுத்தம் புரிந்துகொண்டிருந்தான். இது இப்படியிருக்க, அப்பிலத்தினுட்சென்ற தமையன் பல மாதங்களாகியும் திரும்பிவரவில்லையே என்று சுக்கிரீவன் பெரிதும் வருந்த நேரிட்டது. அத்தருணத்தில் வானரத் தலைவர்கள் பலரும் சுக்கிரீவனை அடைந்து "ஐயனே! உமது தமயன் இருபத்தெட்டு மாதமாகியும் திரும்பி வரவில்லை. ஆதலின், நீரே முடிசூடிக்

கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். பகைவனுடன் போருக்குச் சென்ற தமையன் திரும்பி வாராதிருக்கையில் சுக்ரீவன் அரசாள மனமிசைவது எப்படி? ஆதலின் சுக்ரீவன் தனது குலப்பெரியோரை விளித்து "மாயவரக்கனுடன் யுத்தத்திற்குப்போன எனது மூத்தவன் மீண்டு வராதிருக்க, அவனுடையகதி என்னவாயிற்றோ தெரியவில்லையே! ஆதலின், நானும் இப்பிலத்தினுட் புகுந்து, என் தமயனைத் தேடிவருவேன். ஒருவேளை அவன் அரக்கரால் ஆவிதுறந்திருப்பின், அவ்வரக்கனைக்கண்டு அவனுடன் சமர் முறுக்கி அவனை நமனுலகனுப்பி நானும் உயிர்விடுவேனேயல்லது, அரசுரிமையை ஏற்றுக்கொள்ளேன்" என்று மிகவும் மனங்கலங்கினன். அதுகண்ட குரங்கினத்தலைவர் அனைவரும் பல நீதிகளைச்சொல்லி, நாட்டையாண்டுவரும்படி சுக்ரீவனை யிரந்து வேண்டிக்கொண்டனர். பெரியோர்களின் சொல்லைத்தட்டி நடக்க முடியாத சுக்ரீவன், அரசுரிமையை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. ஆயினும் அவன் முழுச்சம்மதத்துடன் செங்கோலை ஒப்புக்கொண்டதில்லை. பின்னர் ஒரு சமயம் அம்மலைக் குகையின் வழியாய் மாயாவிமீண்டுவருவனோ என்று பயங்கொண்ட வானரர் பலரும் அப்பிலத்தைப் பாறைகொண்டு மூடிவிட்டனர். ஈதிங்ஙனமிருக்க, வாலியோ அக்கொடியவரக்கனைக் கொலை புரிந்து மதோன்மத்தனாய் அப்பிலத்தின் தலைப்பையடைய அதுமூடப்பட்டிருந்தது. உடனே தனது தம்பியைக்கூப்பிட்டுப் பார்த்தும் மறுமொழி இல்லாது போகவே, வாலிக்கு உண்டான கோபம் கட்டுக் கரையில்லை. உடனே அவன் அப்பெருமலையைத் தனதுபாதங்களால் உதைத்தான். உதைத்தவளவில் மலை பிளந்து போயிற்று. அந்த அதிர்ச்சியினால் அப்பிரதேசத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் கிடுகிடென ஒடுங்கின. பின்னர் வாலிதனது தலைநகரையடைந்தான். அதுகண்ட சுக்ரீவன் விரைந்தோடிச் சென்று, தன் தமையனுடைய அடியிணைகளில் வீழ்ந்து 'அண்ணா! நீர் நெடுநாளாகியும் திரும்பி வாராதது கண்ட நம் குலத்தலைவர்கள் அனைவரும் அரசுரிமையை ஏற்றுக்கொள்ளும்படி என்னைவேண்டிக்கொண்டனர். அவ்வேண்டுகோளை மறுக்க வஞ்சி, நான் முடிதரித்தேனேயல்லது என்னிடம் எவ்வளவும் வஞ்சனையில்லை. ஆயினும் என்மீதுள்ள குற்றத்தைப் பொறுத்தருளி, அரசாட்சியை ஒப்புக்கொள்ளுவீராக" என்று வணக்கமுடன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். ஆத்திரம் மிஞ்சியிருக்கும் வாலிதனதுதம்பியின் வார்த்தைகளைக் கவனியாது அவனைக் கடல் கடைந்த தன் கையினால் குத்தினான். அதைத் தாங்க முடியாத சுக்ரீவன் ஓட்ட மெடுக்கும்படி நேர்ந்தது. அப்பொழுதும் அவனைவிடாது, வாலி பின்பற்றிச் சென்று அவனைப் பிடித்து அந்தரத்தில் தூக்கி யெறிந்தான். பின்னர் சுக்ரீவன் மெதுவாய் வாலிக்குத் தப்பிப் பிழைத்து அந்நாட்டிற்கு அப்பாலுள்ள இரிசியமூகபர்வதத்தில் பதுங்கிக் கொண்டான். அம்மலைக்கு வாலி போகமுடியவில்லை. அதன்விவரம் என்னவெனில்.—

முன்னம் வாலியினால்கொல்லப்பட்டுப்போன மாயாவி என்பவனுக்கு உடன் பிறந்தவன் பெயர் துந்துபி. அவன் எருமைக் கடாவின் உருவம் பூண்டவன். மிகுந்த வரவலியும் புயவலியும்படைத்தவன். அவனை எதிர்த்துப் போரில் நிற்பார் எவருமிலர். ஆதலின் மிக்க செருக்குக் கொண்டு, பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனைப் போருக்கு அழைத்தனன். அது கண்ட பெருமாள் புன்முறுவல் பூத்து 'அப்பனே பெருவலி படைத்த உன்னுடன் போர் புரிவதற்கு ஏற்றம் வாய்ந்தவன் கங்காதரனேயாகும்' என்று பதிலளிக்க அவன் உடனே கைலை மலை சென்று அக்கிரியைத் தனது கொம்புகளாற்குத்திப் பெயர்க்கமுயன்றனன். அத்தருணத்தில் சிவபெருமான் புன்னகையுடன் தோன்ற 'ஐயனே! என்னொடு யுத்தஞ் செய்ய வரவேண்டும். அதுதான் என் காரியம்,' என்றான் துந்துபி. அப்பொழுது பசுபதி, 'அப்பா நீ தேவருலகம் செல்லின்உனது எண்ணம் ஈடேறும்,' என்றுரைக்க, அவ்வாறே அசுரன் இமையவருலகை மெய்தினான். அது கண்ட இந்திரன், அசுரனை விளித்து, 'உன்னோடு போர் புரிய எங்களாலாகாது. ஆயினும், நிலவுலகில் எம்மினும் வலிமிகப்படைத்த என் மகன் உளன். அவன் பெயர் வாலி. ஆதலின் அவனிடத்துப் போ,' என்றுரைத்தான். அங்ஙனமே அசுரன் கிஷ்கிந்தையை அடைந்து வாலியை அழைத்தான் யுத்தத்திற்கு. உடனே இருவருக்கும் கடும்போர்

விளைந்தது. அக்கடும் போரில், அவன் தான் வாலி, இவன் தான் துந்துபி என்று எவரும் காண முடியாதவாறு இருவரும் வலசாரி இடசாரியாக சுழல்வதும் விழுவதும் எழுவதுமாய் இருக்கையில், அந்த யுத்தத்தைக் காண வந்திருந்த தேவர்களும் அசுரர்களும் அவ்வுக்கிரத்தைக் கண்டு அஞ்சியோடினராயின், அக்கொடும் போரை என்னென்று எடுத்தியம்புவது! நெடுநாள் வரையில் அவ்விருவரும் வெற்றி தோல்வியில்லாது போர்புரிந்த பின்னர், வாலிக்குக் கோபமுண்டாக அவன் அசுரனது கொம்பைப் பிடுங்கி அது கொண்டு அவனைக் குத்தி ஆகாயத்தில் வீசி யெறியவே துந்துபியின் ஆவிபறந்தது. அவன் உடலோ இரிசியமூக மலையில் தவம் புரிந்துவரும் மதங்கமுனிவரின் ஆசிரமத்தில் போய் விழுந்தது. அதனால் அவ்விடமெங்கும் அசுத்தமாய்ப் போகவே, முனிவருக்குக் கோபமுண்டாயிற்று. உண்டாகவே, அவர் தமது ஞானக்கண்ணால் நோக்கி வாலியே இவ்விதஞ்செய்தான் என்று தேர்ந்து "அவன் இங்குவரின் தலை வெடித்து இறக்கக்கடவன். அன்றியும் அவனைச்சேர்ந்த மித்திரர்கள் இங்குவரின் அவர்களும் கல்வடிவமாகக் கடவர்" என்று சபித்தார். ஆதலின், வாலி அம்மலையை அணுகமுடியாது போயிற்று.

அந்த இரிசியமூக பர்வதத்தில் சுக்ரீவன் வாலிக்குப் பயந்து பதுங்கியிருக்கையில், தந்தையின் மொழியைத் தலைமேற்கொண்டு, மாற்றாந்தாயின் வார்த்தையைத் தட்டாமல் தசரதராமன் தன் தேவியும் தம்பியும் உடன் வர, வனம்புகுந்து, கோதாவரி நதிக்கரையிலே பஞ்சவடி என்னும் க்ஷேத்திரத்தில் தங்கியிருக்க, ஜானகியை இராவணன் வஞ்சகமாய் எடுத்துச் சென்றனன். பின்பு இரகுவீரனும் இளையவரும் சீதையைத் தேடிச் செல்லுகையில் சபரி என்பாளைக் கண்டனர். அவள் அவ்விருமைந்தரையும் உபசரித்த பின்னர், 'கிஷ்கிந்தைக்குச் சென்று, சுக்ரீவனைத் தோழமை கொண்டு, சீதையைத் தேடின் காரியம் கைகூடும்' என்றனள். அவ்வாறே இருவரும் புறப்பட்டுச் சென்று சுக்ரீவனது நட்பைத் தேடிக்கொண்டனர். பின்னர் வீரர் இருவரும் சுக்ரீவனது இருப்பிடத்தில் விருந்துண்ட சமயத்தில், "அப்பனே! நீயும் நின்மனைவியைப் பிரிந்தாய் போலும்" என்று சுக்ரீவனை வினவினார் இராகவன். உடனே அனுமான் ஜானகிரமணனை அடிபணிந்து, வாலி சுக்ரீவருக்குள்ள பகைமையை விரித்துரைத்ததுடன் சுக்ரீவனது மனைவியாம் உருமை என்பாளை வாலி அபகரித்துக் கொண்டதாகவும் வெளிப்படுத்தினான். அதைக் கேட்டதும் இராமன் அடங்காக் கோபங் கொண்டு சுக்ரீவனை நோக்கி "முதலில் உன் மனைவியை உனக்குத் தேடிக் கொடுத்து, உன்னைக் கிஷ்கிந்தை நகருக்கு அரசனாக்கியபின்பே, என் மனைவியைத்தேடி யடைய முயலுவேன்" என்று வாக்குறுதி செய்தார். அப்பால் இராமன் இலட்சுமணன் சுக்ரீவன் அனுமான் முதலிய பலரும் கிஷ்கிந்தையை நோக்கிப் பயணமாயினர்.

M. S சுப்பிரமணிய அய்யர்.

கல்மழை —மழைத்துளிகள் மேகத்தினின்று கீழே விழும்போது, சடிதியில் உண்டாகும் குளிர்ச்சியினால் இறுகிப்போனால், அது ஆலங்கட்டி அல்லது கல்மழையாகிறது. மேகம் இறுகி மழைத்துளிகளாக விழும்போது, திடீரென்று மிகவும் குளிர்ந்த காற்று அவற்றின்மீது பட்டால், அத்துளிகள் சில சமயங்களில் உறைந்து சிறு நீர்க்கட்டிகளாகின்றன. கல்மழையானது சாதாரணமாக அதிக சுவல்ப காலந்தான் பெய்யும்; கால்மணிநேரத்திற்கதிகமாகப் பெய்கிறது மிகவும் அரிது; ஆனால், சுமார் தொண்ணூறு வருஷங்களுக்கு முன்பாக வட அமெரிக்காவில் இரண்டு நாள் கல்மழை விடாமல் பெய்ததாகச் சொல்வார்கள். சாதாரணமாக ஆலங்கட்டிகள் சிறுபட்டாணியளவினவாக இருக்கும். இந்து தேசத்தில் சில இடங்களில் சற்றேறக்குறைய மூன்று நான்கு அங்குல கனமுள்ளனவாகவும், ஒவ்வொரு ராத்தல் எடையுள்ளனவாகவும் விழுந்திருக்கின்றன. பதினைந்து ராத்தல் எடையுள்ள ஆலங்கட்டிகளும் ஓர் காலத்தில் விழுந்தனவென்று சொல்வதுண்டு. கல்மழையானது சாதாரணமாகக் கொஞ்ச தூரந்தான் பெய்கிறது; ஆனால் ஏகதேசத்தில் விஸ்தாரமான பிரதேசத்தில் பெய்திருக்கிறது. 1788-ஞூத்தில் பிரான்சுதேசத்தில், சுமார் 600 மயில் நீளமும், 6 முதல் 12 மயில் வரையில் பரப்பு முள்ளதாக இரண்டிடங்களில் பெய்தது. ஆலங்கட்டிகள் பெரிய அளவாகவும் நீடித்த காலமாகவும் விழுமானால் சிறிய ஜெந்துக்களும் பயிர்பூண்டு முதலானவைகளும் அதிக நஷ்டமடையும்.

மிஸ்டர் கீர் ஹார்டி:—இங்கிலாந்திலும் இந்தியாவிலும், கூலியாட்களின் நன்மைக்காக மிகவும் உழைத்துவந்தவரும் இந்தியாவின் ஆப்தர்களில் ஒருவருமான மிஸ்டர் கீர் ஹார்டி என்னும் பார்லிமெண்ட் மெம்பர் நாளதுமீ 26ௗ இறந்ததில் இந்தியாவுக்கும் பெருந்நஷ்டமே.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

ஆத்திசூடி விளக்கம்

54. சோம்பித் திரியேல்

சோம்பலைப் பின்பற்றி ஒருபயனுமின்றி மனம் போனபடியே இழுபட்டுத் திண்டாடாதே என்பது இந்த ஸூத்ரத்தின் முழுப் பொருள். முதலில் சோம்பலை அடைந்துள்ளவர் ஒன்றுஞ்செய்ய மனம் எழாமலே தூங்கி வழிவர்; அப்படியிருக்க அவர்கள் திரிவதெப்படி என்ற சங்கை ஏற்படலாம். இதை நன்றாக நீக்கவே ஒளவையார், சோம்பேறிகள் திண்டாடும் வகையை கொன்றைவேந்தனில், 'சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்' என்று கூறி, நல்வழி முயற்சியில் மனஞ்செல்லாது பயனற்ற கொடியவழிகளில் மனதால் இழுபட்டு மிகுந்த வருத்தமடைந்து திண்டாடுவர் என்று விளக்கியிருக்கிறார்.

உலகில் எவனும் விழிப்பில் எத்தருணத்திலும் ஒன்றும் செய்யாமலே இருந்துவிட முடியாது. இதை பகவான் கீதை அத் III-5-ம் ச்லோகத்தில்:—

கன்மத்தை விட்டிருத்தல் இல்லைக் கணமேனும்
இம்மண்டலத்தெவனும் எந்நாளும்—மும்மைக்
குணவயத்தனாயெவனும் கூர்ந்துவினை செய்யத்
தணவறவே தன்னாண்பான் தான்,

என்றுகூறி அவனவன் வாஸனைகள் வழி இழுபட்டு ஏதாவது ஒருசெயலை மனத்தாலோ, சொல்லாலோ, உடலாலோ ஓயாது செய்துகொண்டே இருப்பன், தனது விழிப்பு முதலிய நிலைகளில் என்று நன்கு விளக்கியிருக்கிறார். ஆகவே சோம்பலென்பது நல்வழி முயற்சியை நோக்கித் தொழிற்படாது மனம்போன விஷயஸுக வழிபோக ஆயத்தமாகவிருக்கும் தன்மையே. இதற்குத்தான் தாமஸ நிலை என்று சாஸ்திரங்களில் பெயர். இந்தப் பெரும் மயக்கம் ஒருவனுக்கு வந்துவிட்டால், கெட்ட வாஸனைகள் முனைந்தெழுந்து அவனைக் கண்டபடி எல்லாம் இழுத்துத் துன்பப்படுத்திவிடும். ஆதலால் சற்றுநேரங்கூட நல்வழி முயற்சியான அறனை மறவாது அதைச்செய்ய விரும்பிக்கொண்டே இருத்தல்வேண்டும். இப்படி இல்லாத சோம்பேறியின் மனம் பாபக்களஞ்சியமாகத் தானிருக்கும். இதுபற்றியேதான் ஒளவையார் திரியேல் என்றாள்.

இம்மாதிரி நல்வழி முயற்சிக்குச் சோம்பியிருப்பதற்குக் காரணங்கள் யாவை என்ற கேள்வி பிறக்கலாம். முதலாவது நல்வழி முயற்சிகள் தொடக்கத்தில் மிகுந்த துயரத்தை உண்டாக்கிப் பின்னரே நன்மை பயப்பதால், அவைகளில் தொழிற்படுவதற்கே சிலருக்கு மனம் செல்லாதிருக்கலாம். முயற்சியின் முடிவைப்பற்றிய தெளிவும், நல்லோரிணக்கமுந்தான் சேர்ந்து இந்தச் சோம்பல் காரணத்தை வேரறுக்கவேண்டும். மேலும் மனம்போனபோக்கே போய் விஷயஸுகம் அனுபவிப்பது எவ்வளவுதான் முதலில் ஸுகம்போலத் தோற்றியபோதிலும் முதலிலும், இடையிலும், முடிவிலும் துக்கமயமே என்ற பகுத்தறிவு சோம்பித்திரிய விரும்பாது நம்மைச் செய்துவிடும். இப்படி சோம்பித் திரியாதிருக்க முயன்று வருகையில் எல்லாம் தம் நயத்திற்கே முயலும்படியாகவாவது அல்லது இப்படி நல்வழி முயற்சி குன்றிப் போவதைக் கண்டு இப்படிப்பட்ட முயற்சி எவ்வளவு நல்லதாயினும் வேண்டாம் என்றாவது இரண்டாவதாக சோம்பல் ஏற்பட இடமுண்டு. இதைப் பரோபகார சிந்தையாலும், ஈசனிருக்கிறார் எல்லோருக்கும் படியளக்க, நம்மால் நல்வழி முயற்சிதான் முடியும், அதுதான் நமது கடமை, அது பிறருக்குப் பயன்படுவது நமது திறனில்லை என்ற எண்ணம், ஆகிய இவைகளால் சோம்பல் வரவொட்டாது தடுத்து இந்த இரண்டாவது சோம்பல் காரணத்தையும் நீக்கிக்கொள்ளவேண்டும். சோம்பல் உண்டாவதற்கு மூன்றாவதான நுட்பகாரணமும் ஒன்றுண்டு. இது கற்றுத் தேறிய மூடரிடம் வந்து வெகு பலமாக அவர்களைச் சோம்பலில் அழுத்தி அவரது பலகால நல்முயற்சிகளை வீணாக்கிவிடும். இந்தக் காரணம் 'நாமோ மேலான நிலைக்கு வந்துவிட்டோம், இனி நமக்கு நல்வழி முயற்சியால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. அவைகள் எல்லாம் ஸாதாரண மந்தர்களுக்கு ஏற்பட்டவை' என்ற இறுமாப்பு உருவமாக நன்றாகக் கற்றுத்தேர்ந்த கவனக் குறைவுடைய மூடர்களிடம் குடிகொண்டிருக்கும். இது வந்து விட்டால், அவர்கள் மனம் எல்லாம்

கொடியதாக மாறிவிடும்: தம் நல்வழி முயலாச் சோம்பலை எல்லோருக்கும் எடுத்துக் கூறி பிறர் நல்வழி முயற்சிகளும் நடைபெறவொட்டாது தடுத்து வருவர். இக்காரணம் இதோடு அவர்களை விட்டுவிடாது. நாளடைவில் இந்த இறுமாப்பு, 'நாமோ நல்வழி தாண்டியஆண்டியாகி விட்டோம், நம்மைத் தீயவழி முயற்சி என்ன செய்யும்! அதற்கு அஞ்சி ஒதுங்குவது வெறும்பயங்கொள்ளித் தனமல்லவா? நமது தைர்யத்திற்கு இப்படி ஓடி ஒளிவது அழகா?' என்ற திடமான கொடிய நிலைக்கு மனதைக் கொண்டு ஏற்றிவிடும். ஆகவே நல்வழி முயற்சியில்லாது சோம்பேறியாகஇருந்த மேதாவி நாளடைவில் கெட்டவழிகளிலே தங்கு தடையின்றிப் பாய்ந்து திரியும்படியாகிவிடும். இதுபற்றியே இந்த ஸூத்ரத்தில் சோம்பலாக இருந்தால் வீண் குழப்பமும் சஞ்சலமும் ஏற்படும், அவ்வளவு தூரம் சோம்பலுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது என்பது தோன்ற சோம்பித்திரியேல் எனப்பட்டது.

விஷய ஸுக அனுபவத்தால் ஏற்படக்கூடிய சோம்பலுக்கும் அதனால் விளையும் தீங்குகளுக்கும் அநேக உதாரணங்கள் உண்டு. ஹாந்நிபல் என்ற கார்தேஜ் ஸேநாதிபதி தனது ஸேனைகளையெல்லாம் வெகுச்ரமப்பட்டு நடத்தி ரோமபுரியை நோக்கி வந்து அநேக விடங்களில் ஜயித்தும், ஆல்ப்ஸ் மலையை நல்ல விடா முயற்சியால் தாண்டியும், இடலியுள் வந்து ஜயம் பெற்றும். அங்கு ஸுகமான ஒரு பாகத்தில் தண்டிறங்கும்படி நேர்ந்தது. அங்கு அவன் ஸேனை, ஸுகங்களில் மூழ்கிவிட கொஞ்ச காலத்திற்கெல்லாம், இடலி தேசத்தவர்களால் அவர்கள் முறியடிக்கப்பட்டுத் தத்தளிக்கும்படி யாகிவிட்டது. நம் நாட்டு அரசர்களில் அநேகர் கண்டபடி விஷய ஸுகத்தில் மூழ்கித் தமது நாடுகளை நன்றாகப் பாதுகாக்க முடியாமல்போய்த் தத்தளித்துக்கொண்டிருந்தனர். பொதுவாக பணக்காரர் சீரழிந்து திண்டாடுவதெல்லாம் விஷய ஸுகத்தால் உண்டாகும் சோப்பலால்தான்.

சிலர் கொஞ்சகாலம் வெகு சுறுசுறுப்பாகவிருந்து தம் முயற்சிகள் பயன்படாதது கண்டு சோம்பலைக் கைக்கொண்டு விடுவர். இவர்களுக்குத்தான் ஆரம்ப சூரர்களென்று பெயர்கொடுக்கலாம். ஒரு நல்வழி முயற்சியில் இறங்குங்கால் தம்மால் எவ்வளவு வரையில் முயல முடியும் அது எவ்வளவுதூரம் பயன்படக் கூடும், என்பதை எல்லாம் ஆராயாது மிகுந்த பரபரப்பாய்த் தொடங்கி விடுவதால் அவர்களுக்கு மேல் தாங்கி நிற்கமுடியாச் சிதைவு வந்துவிடுகிறது. இதற்கு உதாரணம், இக்காலத்திய வ்யாபார விஷயங்களில் காணலாம். கடைகள் முறிந்துபோவது, பெரிய வ்யாபாரக்கூட்டங்களும் நிதிகளும் தமது பாதகங்களைத் தீர்த்துக்கொள்ள முடியா நிலைமைகளை அடைந்துவிடுவது, இவைகள் எல்லாம் தேம்பித்திரியும் சோம்பேரிகளை அதிகப்படுத்தும் வழிகள். இக்காலக் கொடுமையால் இவ்வித சோம்பேறித் திருடர்கள் அதிகப்படுவரேயல்லாது குறைபடார்கள். விஷய ஸுகவிருப்பம், அதைத் தீர்த்துக் கொள்ளப் பொருள் தேடுவது ஆகிய இவைகளே முக்ய நோக்கமாக உடைய இக்காலத்தில் இச்சோம்பலால் திரிவது அதிகப்படாமல் போகுமா? திண்டாடும் திருடர்களுள் பலர் தற்கொலையை வழியாகக்கொண்டு தமது வருத்தங்களைக் குறைத்துக்கொள்ள குறுக்கே பாய்ந்து விடுகின்றனர். வரவரத் தற்கொலை பெருகுமே ஒழிய ஒன்றும் ஒழுங்குபடாது. இப்படிப்பட்ட கொடிய நிலைக்கு பாமரர் வருவர் தர்மம் தவறி என்பதை உணர்ந்து அவர்களை நோக்கி ஒளவை இச்சூத்திரம் செய்திருப்பாளாயின் 'சோம்பிச் சாகேல்' என்றாவது கூறியிருக்கலாம். நம் பாதகண்ட வாஸிகள் எக்காலத்திலும் கண் மூடித்தனமாய் உலக விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு, மரத்துளையில் கால் நுழைத்துக்கொண்டு ஆப்பதனை அசைத்துப் பிடுங்கிய குரங்கு பட்ட பாடு படார்கள் என்று அறிந்தே மரண விஷயத்தை இச்சூத்திரத்தில் ஒளவையார் கூறாது விட்டாள் போலும்.

மூன்றாம் காரணத்தால் சோம்பித்திரிபவர் இக்காலத்திய ஆபாஸ வேதாந்திகளே. இவர்கள், 'ஞானிகளுக்கு கர்மமே இல்லை. அவர்களுக்கு நல்வினை தீவினைப் பகுத்தறிவே இல்லை. அவர்கள் என்ன செய்தாலும் செய்யலாம். ஒன்றும் அவர்களுக்கு பந்தம் விளைக்காது. ஞானியாவதற்கு நாமும் சாஸ்திரக் குப்பைகளுக்குள் சிக்காது, அவைகளில் விதிக்கப்பட்டுள்ள ஜாதிவர்ணாச்ரம ஸ்திரீபுருஷ விக்ரஹாராதனா தர்மங்களைவிட்டு விலகி ஞானவழியிலேயே நின்றுவிடவேண்டும்' என்று அபிப்ராயப்

படுவர். இதனால் இவர்களுக்கு சாஸ்திர அனுஷ்டானங்களில் சோம்பலால் மிகுந்த அசிரத்தையும் அனாதரவும் ஏற்படும்; அவைகளைக் கைக்கொள்ள மனம் எழாது. பிரஹ்ம விஷயத்திற்கும் இக்குதர்க்கிகளுக்கும் வெகு தூரம் என்று கூறவும் வேண்டுமோ? வைதிக வழியையே அணுகமுடியாத கொடிய துர்மார்க்கத்தில் சிக்கித் தத்தளிப்பதுதான் இவ்வித சோம்பேறிகளுக்கு ஏற்பட்ட மாருக்கதி. இப்படிப்பட்ட கற்றுத்தேர்ந்துபிடிவாதக்காரரான குதர்க்கிகள்தான், இக்காலத்தில் நமது மதம் ஒழுக்கம் இவைகள் நிலை குலைவதற்குக் காரணம். இவர்கள் அன்பார்ந்த உதவியில்லாவிடில் நம்மவரில் பெரும்பாலரும் வைதிக மதவிஷயத்தில் சோம்பித்திரிய இடமில்லாமலே போகும்.

இப்படி வைதிகவழி விஷயமாக சோம்பித்திரியாது தப்புவித்துக்கொண்டு நல்வழி நடந்து உய்யக் கருதி முயலும் ஸன்மார்க்கிக்குக்கூட மேல் நிலைகளில் இந்த சோம்பல் மாறுவேஷத்துடன் வந்து தாக்கும். நல்வழியில் மனதைச் செலவிட்டு ஸமாதி பழகுங்கால் திடீரென்று மனதிற்கு நான்குவிதத் தடைகள் வரலாம். இதை நன்கு விளக்க, அரசனைக்கண்டு நற்கதியடைய விரும்பிப்போகும் ஒருவனை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். இவன் வெகு தூரம் வழிநடந்து வந்த களைப்பால் அரண்மனைவாயில் வந்ததும் ராஜ தர்சனத்தைக்கூடக் கவனியாது அங்குள்ள ஸுகமான குளிர்காற்றில் படுத்துறங்கிப்போய்விடலாம். இதைப் போன்ற தடைக்கு லயம் என்று பெயர். இது முன் அப்யாஸ பலத்தால் தூக்கம்போல வந்து மூடிக்கொண்டுவிடும்: ஸமாதி கைகூடாது: ஒரு சூந்யநிலையில் சோம்பிநின்றுவெளிப்பட்டுவிடும்படிசெய்துவிடும். இப்படி வரக்கூடிய தருணங்களில்கற்ற சாஸ்திரஉண்மைகளை மனதில் கிளப்பிவிட்டு இந்த சூந்யத்திற்கும் ஸாக்ஷியாக உள்ள உணர்வை நாடி எழும்பவேண்டும். இதற்கு ஞானப்யாஸம் என்று பெயர். இதைத் தடுத்துவிட்டால் அரண்மனை விநோதத்தோற்றங்களில் ஈடுபட்டு காலம்போக்கலாம் ராஜபேட்டிக்கு வந்தவன். இதுபோன்றது விக்ஷேபம்என்பது. இது ஸமாதிப்பழக்கஇடையில் முன்னுள்ள தோற்ற ஸுகங்களையாவது, விட்டுவந்தஸுகநிலைகளையாவது மனம்நாடிச்செல்வது. இதுகுறுக்கிடுங்கால் வைராக்யபாவனைகளை முன்னிட்டு இதை அழுத்திவிடவேண்டும். தோற்றமயக்கத்தில் ஈடுபடாது தடுத்து விட்டாலும் அரண்மனையினுள் பாட்டு, கூத்து, ஸ்திரீகள், இவைகளில் ஈடுபட்டு மயங்கிச் சொக்கிவிடலாம் ராஜபேட்டிக்குவந்தவன். இதுபோன்ற தடைக்கு கஷாயம் என்று பெயர். முன் தடைகளை நீக்கி என்ன முயன்றாலும் மனதில் பூர்வ வாஸனா வேகமுண்டாகி மேலே முயற்சி ஏற்படாது அசைவற்று நின்று விடுவதுதான் இதன் ஸ்வரூபம். இது வந்துவிட்டால், அடுத்த கீழ்ப்படிக்குவந்து பழக்க பலத்தை அதிகப்படுத்திக்கொண்டு ஸாவதானமாக மறுபடியும் மேல்போக பலமாக முயலுவதாகிய பதுங்கிப் பாய்வதை கைக்கொள்ளவேண்டும். ராஜபேட்டிக்குப் போயுள்ளவன் பாட்டு கூத்துக்களையும் கவனியாது அரசனை அணுகிச்சென்றாலும் அங்குள்ள ராஜனது உறவினர்களைக்கண்டு ராஜனென்று மயங்கிநின்று விடலாம். இதுபோன்ற தடைக்கு ரஸாஸ்வாதம் என்று பெயர். முன்னுள்ள தடைகள் எல்லாம் நீங்கிவிடுங்கால் மனதிற்கு ஒருவித ஓய்வான சூந்யநிலை ஏற்படும். அதிலுண்டாகும் ஸுகத்தையே முடிவான ஸமாதி பலனான ஸாக்ஷாத்காரம் என்றுகருதி திருப்திபட்டுவிடுவதுதான் இந்தத் தடையின் ஸ்வரூபம். இதற்கும் ஸாக்ஷி விருத்தியான ஞானப்யாஸத்தை ஸூக்ஷ்மமாக கைக்கொண்டு வேறு ஒரு முயற்சியுமின்றி நின்று விடவேண்டும்.

முன்னர்க் கூறிய நான்கு தடைகளையும் சஞ்சலம், அஸ்திரம் என்ற இரண்டுள் அடக்கிக் கூறலாம். முன்னதில் விக்ஷேபரஸாஸ்வாதமும், பின்னதில் லயகஷாயமும் அடக்கம். விளக்கைத்தூண்டுவது போன்றது, முதல் மூன்று சோம்பல்களையும் நீக்குவது, சுடலடிப்பது போன்றது, நான்காவது கவிந்து கொள்ளாமல் தடுப்பது. இப்படி சோம்பல்களைத்தடுத்து விலக்காவிடில், இந்த ஸமாதி விஷயங்களைவிட்டு சஞ்சலத்தடைகள் நம்மை விஷயஉழற்சியில் இழுத்துவிடும். அஸ்திரத்தடைகள் நமது ஸன்மார்க்க முயற்சிகளை வீணாக்கிவிடும். இதுபற்றியே, ஔவையார் ஞானப்யாஸியை நோக்கி நான்குவிதசோம்பலை கைக்கொண்டு, கோரிய முடிவு கைகூடாது திண்டாடாதே என்றாள் இச்சூத்திரத்தில்.

மாணவரின் மனோலக்ஷ்யங்கள் *

STUDENTS : THEIR IDEALS

அறிவின் அபிவிருத்திக்கும், பொதுஜன உபகாரத்திற்கும் உழைத்துவரும் இதைப் போன்ற சங்கங்களில் சம்பந்தப்பட்டிருப்பதில் நான் உண்மையாய் ஆநந்திக்கிறேன்.

கலாசாலைகளிலும் சங்கங்களிலும் இளைஞருடைய நன்னோக்கங்கள், உயர் நாட்டங்கள், சுயநலமற்ற சிரத்தையோடு கூடிய உழைப்புகள் இவைகளுடன் சேர்ந்திருத்தல் எனக்கு எப்பொழுதும் பிரியம். சதா என் மனதைக் கவர்ந்துகொண்டிருப்பதும், உலகத்தில் இவைகளைப்பார்க்கிலும் நன்றாய் வாழ்க்கைக்குப் பொருத்தமானது வேறொன்றுமில்லையென்று நிரூபிக்கக் கூடியதுமான மேலான உத்ஸாகங்கள், சிறந்த மனோலக்ஷ்யங்கள் இவைகளைப் பற்றி என்னால் இயன்றமட்டும் அவர்களுக்குச் சொல்வது எனக்கெப்பொழுதும் மகிழ்ச்சியே. மனோலக்ஷ்யங்களைப்பற்றி இளைஞருக்கு எடுத்துரைக்கக் கருதுகையில் முகவுரையாவது வேண்டுகோளாவது அனாவசியம், அஸம்பாவிதமே. விவேகத்தோடும் மேன்மையோடுங்கூடிய ஜீவ்ய முறையில் மனோலக்ஷ்யங்கள் எவ்வித சம்பந்தம் உடையன? அவைகள் நமது செய்கைகளை உத்கிர்ஷ்ட நிலைமைக்குக் கொண்டுவருகின்றன. நமது காரியங்களைக் கழிந்ததற்கும் இனி வரப்போகிறதற்கும் தொடர்புடையதாகச் செய்கின்றன; சிரேஷ்டமான பலன்களையும் காரியாதிகளின் ஒருமைப்பாட்டையும் கொடுக்கின்றன; ஒவ்வொருவனுடைய இருதயத்திலிருப்பதும் இயல்பிலேயே அமைந்ததுமான பூர்ணத்துவ ஆசையைத் தீர்க்கின்றன. மனோலக்ஷ்யங்கள் இல்லையானால் வாழ்க்கையானது அதன் மேன்மையுள்ள அம்சங்களை இழந்துவிடுகிறது; வேலையானது உத்ஸாகமற்ற முறையாகிவிடுகிறது; சென்றதைவிட்டு யூகமாய்க்கிளம்பி இனி நடக்கவேண்டியதில் யூகத்துடன்முன்செல்கிறதில்லை; நமது காரியாதிகளும் ஒன்றுக்கொன்று குறுக்கிட்டுக்கொண்டு ஒன்றுக்கொன்றும்சக்திகேடு பண்ணிக்கொண்டும் இருக்கின்றன (அதனால் நிலையான கெடுதியில்லை, யென்றாலும் அபிவிருத்தியின்றி முன்னை இருந்த நிலைமையே ஏற்படுகிறது. உடர்வுள்ள சௌக்யத்திற்கும் பூர்ணத்திற்கும் நம்மிடம் இயல்பாயுள்ள ஆசையானது திருப்தியடையாதிருப்பதினால் நம்மைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொன்றைக் கண்டபோது நாம் மிகுந்த அதிருப்தி அடைகிறோம். ஆனால் இது வாஸ்தவம். ஒவ்வொரு காலத்திலும் மனோலக்ஷ்யங்கள் மாறிக்கொண்டு வருகின்றன. எல்லாக் காலத்திற்கும் எல்லாத்திற்கும் ஜனங்கள் மெச்சி ஸாக்ஷாத்கரிக்கவேண்டி ஒரேவிதமான மனோலக்ஷ்யங்களை உலகம் தனக்கு ஏற்படுத்திக்கொள்ளவில்லை. ஒவ்வொரு தலைமுறையிலுள்ளவர்கள் தங்களுக்காகத் தீர்க்கமான மனோலக்ஷ்யங்களை யேற்படுத்திக்கொண்டு கூடியமட்டும் நன்றாய் அவைகளைப் பிரத்தியக்ஷப்படுத்தத் தீர்மானித்தாலொழிய யாதொரு பிரயோஜனகரமான காரியமும் சிரேஷ்டமான பலன்களும் ஸித்தியாக முடியாதென்பதை ஐயமறக் கூறலாம். இந்த விஷயத்தில் சரித்திரமும் பொருந்தவே அத்தாக்ஷி கொடுக்கின்றது. அதை மறக்கவாவது அறியாதிருக்கவாவது முடியாது. ஜனஸமூஹத்தை வாழ்க்கையின் உத்கிர்ஷ்டபதவிக்குக் கொண்டு வந்திருக்கும் சிரேஷ்டர்களின் ஜீவ்ய சரித்திரங்களும் இம்முக்கிய விஷயத்திற்கே சாக்ஷியம் கூறுகின்றன. வெளிப்படையாயுள்ள ஜனங்க சம்பந்தமான விஷயங்களைச் சற்று கவனித்து ஆலோசிக்குங்கால் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு ஜாதியாருக்கும் மனோலக்ஷ்யங்கள் அவசியமாயிருப்பதுடன் நமது ஜாதியாருக்கும் அவைகள் கட்டாயமாய் அவசியமென்பது தெளிவாய் விளங்கும். நமது நாட்டில் பலஜாதி வகுப்பினர், பல மதங்கள் பலவித நாகரீகங்கள் இவைகளெல்லாம் சேர்ந்துள்ளன. இப்புதிய காலாரம்பத்தின் ஆரவாரங்கள் முன்பு ஒரு பொழுதும் நேர்ந்திராத வண்ணம் அனேகமாயும் பலத்ததாயுமிருக்கின்றன. நாம் நம்மரசனுக்கும், நாட்டிற்கும், தெய்வத்திற்கும் பக்தி பூண்டவர் என்பதற்

* இவ்வியாஸம், ம-ள-ள-ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரியார், பி.ஏ., பி.எல். அவர்களால், திருநெல்வேலி மாணவர் சங்கத்தில் சபாநாயகராய்த் தெரிந்தெடுக்கப்பட்டபோது உபந்யஸிக்கப்பட்டது.

கிசையுமேன்மையான நற்காரியத்திற் குரிய முக்கியஸ்தலமாக நமது நாட்டை சிறப்புறச் செய்து உலகத்திலுள்ள ஜாதியார்கள் அதனிடம் நேசித்துக் கண்ணியம் பாராட்டச் செய்யுமாறு, தீர்க்க புத்தியோடு மனோலக்ஷ்யங்களைத் தெரிந்து ஏற்படுத்திக்கொண்டு விடா முயற்சியுடன் அவைகளைப் பின்பற்றி வருதலே நமது கடன்.

இந்திய இளைஞருக்குத் தெரிவித்துக்கொள்வதில் எனக்குண்டான பேராவலுக்காக முகவுரையாவது வேண்டுகோளாவது அவசியமில்லை. உத்தம மனோலக்ஷ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு, அவைகளை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதில் மிகுந்த விருப்பமடைவதற்கான காலம் இளமையே. உத்ஸாஹம், நம்பிக்கை, தயாளகுணம், சுயநலமற்ற பரோபகாரச்செய்கை முதலியவைகளுக்குரிய காலம் அதுவே. நண்பர்காள்! பாரதகண்டம் உங்களை நம்பியிருக்கிறது மேலாம்பரமான பலன்களும் சாத்தியங்களுங்கூடியஎதிர்காலம் உங்களுடையதே எங்கள் காலமோ முடிவுபெற்றுக்கொண்டிருக்கின்றது. அன்பு வழியிலும் சத்தியமார்க்கத்திலும், தர்மநெறியிலும் எங்களைவிட நீங்கள் முன்னடைவதைப் பார்ப்பதே எங்களது புருஷார்த்தமாயும், பேரானந்தமாயுமிருக்கும். ஒரு நிலைமையிலிருந்து வேறொன்றுக்குக் கடந்து செல்லும் காலாவதியில் வசித்து வருகிறீர்கள். உத்தமஜீவிய மென்கிற நிர்மலமான ஜோதியில் பிரவேசித்தல் உங்களது காரியம். இதனால்தான் இச்சமயம் உங்களுடன் கூடியிருந்து நான் பிரீதிவைத்திருக்கிற கருத்துக்களிற் சிலவற்றை உங்களுக்குத் தெரிவித்தலை விசேஷ சுதந்தரமாகப் பாராட்டுகிறேன்.

தற்காலம் மாணவரிடம் தங்கியுள்ள குணசார்புகளைக் கண்டுரைப்போர் கல்விச்சாலைகளில் மாணவர் தங்கள் கடமையில் சிரத்தை யெடுப்பதையும், பொதுவாய் அவர்கள் கீழடங்கிப் பணிந்து இருந்தக்கூடியதையும், அவர்களது குணோத்கிர்ஷ்டத்தையும் ஒத்துக்கொள்ளும்போது அச்சந்தோஷத்துடன் சில குறைபாடுகளை யெடுத்துக்காட்டிக் குறிப்பான குற்றஞ் சிலவற்றையும் கூறுகின்றனர். நமது மாணவர்கள், அபிவிருத்தியின் மேலான நிலைமையிலிருக்கவில்லையென்பதும், அபிவிருத்தியடைய வேண்டிய பதவியை நெட்டுருப் போடுதலே வகித்துள்ளது என்பதுமே இக்குற்றங்களிலொன்று. கலாசாலையில் பொதுவாய் மாணவருக்கு வணக்கவொடுக்க வுபசாரமும் பயபக்தியு மில்லை யென்பதே இரண்டாவதானது. சமீபத்தில் குழப்பகாலம் உண்டாயிருந்தது காரணமாக, பொதுஜனத்திற்கும் இராஜாங்கத்தாருக்கும் தோன்றிக் கொண்டிருக்கும் குற்றத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். மாணவர் இராஜ தந்திரங்களில் தலையிடுகிறார்கள் என்றதே அது. குறைகளை அறிந்துகொண்டு அவைகளை நீக்க அதிக ஆவல் கொள்ளுதலே பின்னால் சீக்கிரத்தில் அக்குறைபாடுகளையே போக்கி விடுமாதலால் இவ்விஷயங்களைப்பற்றிக் கொஞ்சம் விரித்துரைக்கிறேன்.

அபிவிருத்தி யென்றாலென்ன? அபிவிருத்தி யென்பது இன்னபடியா யிருக்கிற தென்பதைப்பற்றிப் பலவகையானதும் அடிக்கடி ஒன்றுக்கொன்று வேறுபாடுடையதுமான சங்கதிகளை நீங்கள் கேட்கவும் வாசிக்கவும் செய்வீர்கள். நான் அதை மூன்றுவிதத்தில் அறிகிறேன். முதலாவது ஒருவன் வாழ்க்கையில் தன் பதவியையறிதல், இரண்டாவது யோக்கியதையோடு அதை வகித்தல், மூன்றாவது, ஜீவியம் விகாஸம்பெற்று அபிவிருத்தி யடைதலிலும், தைவிகமான ஜீவ்யாதாரங்களிலும் முழு நம்பிக்கைவைத்தல். அபிவிருத்தியென்பது நாம் பெரும்பாலும் பள்ளிக்கூடத்தில் அடைகிற பிரதிவஸ்துவல்ல, அது இதனின்றும் முற்றிலும் வேறுவிதமாயும் வேறுபடித்தானதாயுமுள்ளது. அது கல்வி (பயிற்சி) யென்னும் மகிமை தங்கிய நாமதேயத்தை அநீதமாய் அபகரித்துள்ள பலவிஷயங்களைப் புத்தியில் நிரப்பிக்கொள்ளும் செய்கையல்ல. இனி முன்கூறப்பட்ட அபிவிருத்தியின் அம்சம் மூன்றையும் தெரிந்துகொள்வோம். ஜீவியத்தில் நாம் நமது பதவியையறிந்துகொள்வது முதன் முதலான காரியம், நண்பர்காள்! ஒருவன் வாழ்க்கையில் தன் ஸ்தானத்தைத் தெரிந்துகொள்ளுதல் எவ்வகையிலும் கஷ்டமானதன்று என்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் அதுமிகக்கஷ்டமானதென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன், அது, ஆத்ம சிக்ஷையும் தீர்க்க திருஷ்டியும் அதிகமாய் வேண்டியதானகாரியம்.

(தொடரும்.)

K. S. ராமஸ்வாமி சாஸ்திரி, பீ.ஏ., பி.எல்.

16203

குளத்தங்கரை அரசமரம் (ஒரு சிறிய கதை)

THE PEEPUL TREE NEAR THE TANK (A SHORT STORY)

பார்க்கப்போனால் மரந்தான். ஆனால் நான் மனதிலுள்ளதை யெல்லாம் சொல்லுகிறதானால் இன்றைக்கெல்லாம் சொன்னாலுந்தீராது. இந்த ஆயுஸுக்குள் கண்ணாலே எத்தனைபார்த்திருக்கிறேன்! காதாலே எத்தனை கேட்டிருக்கிறேன்! உங்கள் பாட்டிகளுக்குப் பாட்டிகள் தவழ்ந்து விளையாடுவதை இந்தக் கண்ணாலே பார்த்திருக்கிறேன். சிரிக்கிறீர்கள். ஆனால் நான் சொல்லுகிறதிலே எள்ளளவேனும் பொய்யில்லை. நான் பழைய நாளத்து மரம்—பொய்சொல்லக் கற்றதில்லை. இப்போ தொண்ணூறு நூறு வருஷமிருக்கும். உங்கள் கொள்ளுப்பாட்டிகளின் பாட்டிகளெல்லாம் நம்ம குளத்தங்கரைக்குத்தான் குடமுங் கையுமாக வருவார்கள், சிலபேர் குழந்தைகளையுங் கூடக் கூட்டிக்கொண்டு வருவார்கள். பட்டுப் பட்டாயிருக்கும் குழந்தைகள். அதுகளைக் கரையில் விட்டுவிட்டு, புடவைகளை அழுக்குப் போகத் தோய்த்து, மஞ்சள் பூசிக்கொண்டு அழகாக ஸ்நானம்பண்ணுவார்கள். குழந்தைகளெல்லாம் ராஜகோபாலன்போலத் தவழ்ந்து கொண்டு மல்லிகைச் செடியண்டேபோய் மல்லிகை மொக்குகளைப்பார்த்துச் சிரிக்கும். அந்தக் காலத்திலே ஒரு பவளமல்லிகைச் செடி, முத்து முத்தாய்ப் பூ பூத்துக்கொண்டு அந்த ஓரத்திலிருந்தது. குளத்தங்கரை யெல்லாம் கம் என்று மணம் வீசும். இப்போது ஆதரிப்பாரில்லாமல் பட்டுப்போய்விட்டது. கொஞ்சம் பெரிய குழந்தைகள் அதன் புஷ்பங்களைப் பொறுக்கி ஆசையுடன் முகரும்......ஆ! அந்த நாளையெல்லாம் நினைத்தால் என்ன ஆசையாயிருக்கிறது!

ஆனால் இப்போது நான் உங்களுக்கு அந்தக் காலத்துக் கதை ஒன்றும் சொல்லுவதாக வில்லை. மனது சந்தோஷமாயிருக்கும்போது சொல்லுகிறேன். ஏழெட்டு நாளாய் எனக்கு ருக்மணியின் ஞாபகமாகவே யிருக்கிறது. பதினைந்து வருஷமாச்சு. ஆனால் எனக்கு நேற்றுப் போலிருக்கிறது. உங்களில் ஒருவருக்கும் ருக்மணியைத் தெரியாது. பார்த்தால் சுவர்ண விக்கிரகம் போலிருப்பள் குழந்தை. அவளுடைய சிரித்த முகத்தை நினைத்தால் அவளை எதிரில் வந்து நிற்பதுபோல விருக்கிறது எனக்கு. அவள் நெற்றியின் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். நல்ல உயரமாக இருப்பள். அவள் கையும் காலும் தாமரைத் தண்டுகள் மாதிரி நீளநீளமாயிருக்கும். அவள் சரீரமோ மல்லிகைப் புஷ்பம்போல மிருதுவாக விருக்கும். ஆனால் அவள் அழகெல்லாம் கண்ணிலேதான். என்ன விசாலம்! என்ன தெளிவு! என்ன அறிவு! களங்கமற்ற நீல ஆகாயம் ஞாபகத்துக்குவரும் அவள் கண்களைப் பார்த்ததும்—நீலோற்பலம் நிறைந்த நிர்மலமான நீரோடையைப் பார்ப்பது போலிருக்கும். பார்வையிலுந்தான் எத்தனை அன்பு! எத்தனை பரிவு! ஸோமவார அமாவாசைகளில் பரமாத்மாவைப் பஜிக்கிறதற்காக என்னைப் பிரதக்ஷணஞ்செய்வள். அப்போது அவள் என்னைப் பார்க்கும் பார்வையிலிருக்கும் அன்பை என்ன என்று சொல்லுவேன்! என்னுடைய காய்ந்துபோன கப்புகளுங்கூட அவளுடைய பிரேமையான பார்வை பட்டதும் துளிர்த்துவிடுமே! ஐயோ, என் ருக்மணித் தங்கமே? எப்போ காண்பேன் இனிமேல் உன்னைப்போலக் குழந்தைகள்?

அவள் குழந்தைப் பருவம் முதல், அவளுடைய கடைசிநாள் வரையில் இங்கே வராத நாளே கிடையாது. ஐந்தாறு வயதின் போதெல்லாம் ஸதாஸர்வகாலமும் இங்கேயேதான் விளையாடிக்கொண்டிருப்பாள். அவளைப் பார்த்ததும் வாரியெடுத்து முத்தங் கொடுக்க வேணுமென்று நினையாதவர் பாவம். எத்தனை அவசரமான காரியமிருந்தாலும் சரி, நம்ம வேணுகோபால சாஸ்திரி யிருந்தாரே, அவர் காலமே ஸ்நானஞ்செய்துவிட்டு, குழந்தை கைநிறைய மல்லிகைப்பூப் பறித்துக் கொடுத்துவிட்டுத்தான் போவர். நம்மூர் மாடுகன்றுகள்கூட எத்தனை முரடாக இருந்தாலும் சரி, அவளைக் கண்டதும் உடனே முரட்டுத்தனத்தையெல்லாம் விட்டு விட்டு, அவளுடைய சிறிய கைகளால் தடவிக்கொடுக்கவேண்டுமென்று அவள் பக்கத்திலேபோய்க் காத்துக்கொண்டிருக்கும்.

SL
7m211, N0848

எனக்கு? குழந்தைகள் என்றால் எனக்கு எப்பொழுதுமே ஆசை. ஆனால் அவள் வந்துவிட்டால் போதும், மெய் மறந்து போய்விடுவேன். அவள்பேரில் துளி வெயில் படக்கூடாது. அவள் கொஞ்சம் ஒதுங்கியிருந்தால் கூட என் கைகளை நீட்டி அவளுக்குக் குடை பிடிப்பேன். என்னுடைய ஆசை நாதனை சூரியனுடைய முகத்தைக் காலமே பயபக்தியோடு தரிசனம்செய்தானதும் எனக்குக் குழந்தை ருக்மணியின் ஞாபகம் வந்துவிடும். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டேயிருப்பேன். அவள் வந்ததும் எனக்குள் அடங்காத ஆநந்தம் பிறந்துவிடும். குழந்தைகளுக்குள் பேதம் பாராட்டக்கூடாதுதான். ஆனால் மற்ற யார் வந்தாலும் எனக்கு அவள் வருகிறதுபோலிருப்பதில்லை. நான் மாத்திரமா? ஊரிலுள்ள மற்றக் குழந்தைகள் கூட அவள் வந்தபிறகுதான் பூரணமான ஆநந்தத்துடன் விளையாடும். அவள்தான் அவர்களுக்குள்ளே ராணி. அத்தனை காந்த சக்தியிருந்தது அவளிடத்தில்.

அப்போதெல்லாம் அவள் அப்பா காமேசுவரய்யர் நல்ல ஸ்திதியிலிருக்கிறார். குழந்தை பேரில் அவருக்கு மிகுந்த பிரேமை. அவளுக்குச் செய்வதற்கு என்றால் அவருக்குச் சலிக்கிறதே இல்லை. கடைவீதியில் பட்டுத்துணுசுகள் புதிதாகவந்திருப்பது எதாவது பார்த்தால் நம்ம ருக்மணி அணிந்துகொண்டால் அழகாக இருக்கும் என்று உடனே வாங்கிக்கொண்டு வந்துவிடுவார். முதல்தரமான வைரமும் சிவப்பும் இழைத்து அவளுக்கு நிறைய நகைகள் செய்திருந்தார். அவளுக்குப் பத்து வயதாயிருந்தபோது கோலாட்ட ஜாத்ரைக்கு என்று ஒரு பாவாடையும் தாவணியும் வாங்கியிருந்தார். அந்த நிலவுக்கும் அவளுடைய அலங்காரத்துக்கும் அவளுடைய அழகுக்கும் என்ன ஏர்வை, என்ன ஏர்வை, கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது எனக்கு. அவள் குரலைப்பற்றி உங்களுக்குச்சொல்ல மறந்துபோய்விட்டேன். குயில் என்னத்துக்காச்சு? தங்கக்கம்பிபோலே இழையும் அவள் சாரீரம். இன்றைக்கெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாலும் சலிக்காது. ஜாத்ரைகளின் போதுதான் அவள் பாட்டை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் இப்போது நினைத்தாலுங்கூட அவளுடைய குரல் அதே இனிமையுடனும் நயத்துடனும் என்மனதில் கேட்கிறது.

அவளுக்கு வயதாக ஆக, அவளுடைய அன்பு வளர்ந்த அழகை என்ன என்று சொல்லுவேன்? குழந்தையாக இருக்கும்போதே யாரிடத்திலும் ஒட்டுதலாக இருப்பாள். இந்தக் குணம் நாளுக்குநாள்விருத்தியாகிக்கொண்டே வந்தது. தோழிகள் வேறு, தான் வேறு என்கிற எண்ணமே அவளுக்கு இராது. ஏழைவீட்டுப் பெண்ணாயிருந்தாலும் சரி, பணக்காரர் வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் சரி, அவளுக்கு எல்லாத் தோழிகள் பேரிலும் ஒரே பக்ஷந்தான். இன்னும் பார்க்கப்போனால் ஏழைக்குழந்தைகள்பேரில் மற்றவர்கள் பேரில்விட அதிகமான பக்ஷம்பாராட்டுவாள். யாராவது கஷ்டப்பட்டால் சகிக்கமாட்டாள். பிச்சைக்காரர்கள் வந்தால் கைநிறைய அரிசிகொண்டுவந்து போடுவாள். கண் பொட்டையான பிச்சைக்காரர்களைப் பார்க்கும்போது அவளையறியாமலே அவள் கண்ணில் தாரைதாரையாய்க் கண்ணீர் பெருகுவதை எத்தனை தடவைகளில் எட்டிப் பார்த்திருக்கிறேன்! அவர்களுக்கு மற்றவர்களுக்குப் போடுவதைவிட அதிகமாகவே பிச்சை போடுவாள். இப்படி அளவு கடந்த தயையும் இரக்கமும் அவளுக்கு இருந்ததனால்தான் அவளை நினைக்கும்போதெல்லாம் எனக்கு, கடினமான கோடைக்குப் பிறகு நல்ல மழை பெய்யும்போது உண்டாகுமே, அந்த நிரதிசயமான ஆநந்தம் உண்டாகிறது.

இவ்விதம் கண்ணுக்குக் கண்ணாய் நான் பாவித்து வந்த என் அருமைக் குழந்தையின் கதி இப்படியா போகணும்! நான் பாவிவைத்த ஆசை பழுதாய்ப் போகணுமா? பிரும்மதேவனுக்குக் கொஞ்சங்கூட கண்ணில்லாமல் போய்விட்டதே! ஆனால் பிரும்மதேவன் என்ன பண்ணுவான் மனுஷர்கள் செய்யும் அக்கிரமத்துக்கு?

ருக்மணிக்குப் பன்னிரண்டு வயதானதும் அவள் அப்பா அவளை நம்மூர் மணியம் ராமசுவாமி அய்யர் குமாரன் நாகராஜனுக்குக் கன்னிகாதானமாகக் கொடுத்தார். கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. தோழிப் பொங்கலன்றைக்கும், ஊர்வலத்தன்றைக்கும் அவள் ஸர்வாலங்காரத்துடனும் கிராமப் பிரதக்ஷிணம் வருவதைப் பார்த்தேன். கண்

பட்டுவிடும், அத்தனை அழகாயிருந்தது. அவள் தோழிகளுக்கு மத்தியில் இருந்ததைப் பார்க்கும்போது, மின்னற் கொடிகளெல்லாம் சேவித்து நிற்க மின்னரசு ஜ்வலிக்குமே, அம்மாதிரியேதானிருந்தது.

காமேசுவரய்யர் ருக்மணிக்குக் கல்யாணப் பந்தலில் நிறைய சீரும் சினத்தியும் செய்திருந்தார். ருக்மணியின் மாமியாருக்கும் மாமனாருக்கும் ரொம்ப திருப்தியாக இருந்தது. கலியாணத்துக்குப் பிறகு மாமியார் அவளை அடிக்கடி அழைத்துக்கொண்டுபோய் அகத்திலேயே வைத்துக்கொள்ளுவாள். ஆசையோடு அவளுக்குத் தலைபின்னி பூச்சூட்டுவாள். தன் பந்துக்களைப் பார்க்கப்போகும்போது அவளை அழைத்துக்கொண்டு போகாமல் போகவே மாட்டாள். இப்படி சகல விதமாகவும் ஜானகி (அதுதான் ருக்மணி மாமியார் பேர்) தனக்கு ருக்மணியின் பேரிலுள்ள அபிமானத்தைக் காண்பித்து வந்தாள். மாப்பிள்ளை நாகராஜனும் நல்ல புத்திசாலி. அவனும் ருக்மணியின் பேரில் மிகவும் பிரியமாக இருப்பான். கிராமத்தில் அவர்கள் இருவருந்தான் ரூபத்திலும் புத்தியிலும் செல்வத்திலும் சரியான இணை என்று நினைக்காதவர், பேசிக்கொள்ளாதவர் கிடையாது.

இப்படி மூன்று வருஷம் சென்றது. அந்த மூன்று வருஷத்துக்குள் எத்தனை மாறுபாடுகள்! காமேசுவரய்யருக்குக் கைபிளைத்துப் போய்விட்டது. தன் ரொக்க ஐவேஜியை யெல்லாம், ஏதோ அர்ப்பத்நாட் கம்பெனியாம், அதில் வட்டிக்குப் போட்டிருந்தார். நம்மூர்ப் பணம் நாலு கோடி ரூபாயையும் விழுங்கி விட்டு அது ஏப்பம் விட்டுவிடவே, காமேசுவரய்யர் ஒரு நாளில் ஸர்வ ஏழையாய்ப் போய்விட்டார். ருக்மணியின் தாயார் மீனாக்ஷியம்மா உடம்பிலிருந்த நகைகள்தான் அவருக்கு மிச்சம். பூர்வீக சொத்தான வீட்டையும் நிலங்களையும் விற்றுத்தான் அவர் கொடுக்கவேண்டிய கடன்களைத் தீர்க்கவேண்டியதாயிருந்தது. இப்போ குப்புசாமி அய்யர் இருக்காரே வாக்காங்கரை யோரத்திலே, அந்த வீட்டில் வந்து அவர் குடியிருக்கலானார். மீனாக்ஷியும் பார்க்கிறதற்கு மஹாலக்ஷ்மி மாதிரி இருப்பள். அவளுடைய சாந்தத்திற்கு எல்லையே இல்லை. இத்தனை பெரிய கஷ்டம் வந்துவிட்டதே, இருந்தாலும் அவள் மனம் கொஞ்சமேனும் இடியவில்லை. "ஏதோ இத்தனைநாள் சுகமாகவாழ்ந்தோம். ஆரைக் கேட்டுக்கொண்டு ஸ்வாமி கொடுத்தார்? அவர் கொடுத்ததை அவரே எடுத்துக்கொண்டுவிட்டார். இதனாலே என்ன இப்போ? அவாளும் ருக்மணியும் ஆயுஸோடு இருக்கிற வரையில் எனக்கு ஒரு குறைச்சலுமில்லை. இந்தத் தைமாசத்திலே ருக்மணிக்கு சாந்தி முகூர்த்தம் பண்ணி புக்காத்துக்கு அனுப்பித்துவிட்டால் அப்புறம் எங்களுக்கு நிர்விசாரம். கஞ்சியோ கூழோ சாப்பிட்டுக்கொண்டு வழக்கம்போல பகவத்தியானம் பண்ணிக்கொண்டே எங்கள் காலத்தைக் கழித்து விடுகிறோம்," என்று சொல்லுவாள். ஐயோ பாவம், நடக்கப்போகிற சங்கதியை அவள் எப்படி அறிந்திருப்பாள்.

காமேசுவரய்யர் ஐவேஜியில், கொஞ்சமேனும் தேறாது என்று ஏற்பட்டதும் ராமசுவாமி அய்யருக்கு அவருடனிருந்த சிநேகம் குளிர ஆரம்பித்துவிட்டது. இதற்கு முன்னெல்லாம் அவர் காமேசுவரய்யர் அகத்துக்கு அடிக்கடி வருவார். வழியில் அவரைக் கண்டால் பத்து நிமிஷம் நின்று பேசாமல் போகவேமாட்டார். இப்பொழுதோ, காமேசுவரய்யர் தூர வருகிறதைக்கண்டுவிட்டால்ஏதோ அவசர காரியமாகப் போகிறதுபோல இன்னொரு பக்கம் திரும்பி வேகமாகப் போய்விடுவார். இப்படிச் செய்பவர், அவர் வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டார் என்று நான் சொல்லாமலே நீங்கள் நினைத்துக் கொண்டு விடுவீர்கள். அவர் சமுசாரம் ஜானகியும் அதே மாதிரி மீனாக்ஷியம்மாளிடம் நெருங்குவதை நிறுத்திவிட்டாள். ஆனால் இதையெல்லாம் மீனாக்ஷியம்மாளும் காமேசுவரய்யரும் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. செல்வமுள்ள போது உறவு கொண்டாடுகிறது, அது போய் விட்டபோது வேற்று மனுஷியாள் போலப் போய் விடுகிறது,—இதெல்லாம் ஒரு சினேகத்தோடு சேர்த்தியா?

ஆனால் அவர்கள் ருக்மணி விஷயத்திலுங் கூட வேற்றுமை பாராட்ட ஆரம்பித்து விட்டார்கள். அர்ப்பத்நாட் உடைகிறதற்கு முந்தி சில மாதங்களாக ஜானகி பிரதி வெள்ளிக்கிழமையும் சாப்பிட்டானதும், ருக்மணியை அழைத்துவரும்படி வேலைக்காரியை அனுப்

பித்து விடுவாள். அன்றைக்கு அவளுக்குத் தலைபின்னி மைசாந்திட்டு சிங்காரித்து அகிலாண்டேச்வரி கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய் தரிசனம் பண்ணிவிட்டு, அன்றைக்கு இரவு முழுவதும் தங்கள் அகத்திலேயே வைத்துக் கொண்டிருந்து அடுத்த நாள் காலமேதான் அவளை அகத்துக்கு அனுப்புவாள். ஆனால் அர்ப்பத்துநாட்டில் போனது போனதுதான் என்று ஏற்பட்டுவிட்ட பிறகு, வந்த முதல் வெள்ளிக்கிழமை யன்றைக்கே "எனக்கு ஆத்தில் இன்னைக்கு ரொம்ப வேலையாக இருக்கும், அடுத்தவெள்ளிக் கிழமை ருக்மணியை அழைத்துப் போறேன்" என்று மீனாக்ஷிக்கு சொல்லியனுப்பிவிட்டாள். அடுத்த வெள்ளிக் கிழமை முதல் அவ்விதம் சொல்லியனுப்புவதைக் கூட நிறுத்திவிட்டாள். இது மீனாக்ஷிக்கும் காமேசுவரய்யருக்கும் மிகுந்த துக்கத்தைத் தந்தது. ருக்மணியும், நம்மை இவ்வளவு இளக்காரம் செய்கிறாள் பார்த்தாயா நம்ம மாமியார்கூட என்று மிகவும் வருத்தப்பட்டாள்.

* * * *

இப்படிக் கொஞ்சநாளாயிற்று. ஊரெல்லாம் குசுகுசு என்று பேசிக்கொண்டிருப்பார்கள். எல்லா ரகசியங்களும் குளத்தங்கரையிலேதான். ஆனால் அரைவார்த்தையுங் குறை வார்த்தையுமாகத்தான் என் காதில் விழுமே யொழிய முட்டமுழுக்க ஒரு பேச்சும் எனக்கு எட்டாது ஊரிலே இப்படி எப்போதுமிருந்ததில்லை. எனக்கு மனஸு குறுகுறுத்துக்கொண்டேயிருந்தது. என்னவோ கெடுதலுக்குத்தான் இத்தனை ரகசியம் வந்திருக்கிறது என்று எனக்கு அப்பொழுதே தோன்றிவிட்டது. ஆனால் யாருக்கு, என்ன, என்று மாத்திரம் தெரியவில்லை.

கடைசியாக அப்படியும் இப்படியுமாய், அத்தையும் இத்தையும் கூட்டி சேர்த்துப்பார்க்கப் பார்க்க கொஞ்சங் கொஞ்சமாய் சமாசாரம் என் மனஸுக்கு அத்துபடியாச்சு. ராமசாமியும் ஜானகியும் ருக்மணியை வாழாதே செய்துவிட்டு நாகராஜனுக்கு வேறு கலியாணம் செய்துவைக்க நிச்சயித்து விட்டார்கள்! என்ன பண்ணுவேன்? என் மனம் இடிந்து போய்விட்டது. குழந்தை ருக்மணியைத் தள்ளி வைக்கத் துணியுமா மனுஷியாளுக்கு? அடி பாவி! உன்னைப்போல அதுவும் ஒரு பெண்ணில்லையா! என்ன பண்ணித்து அது உன்னை? அதைக் கண்ணாலே பார்த்தால் கல்லும் இரங்குமே! கல்லையும்விட அழுத்தமா உன் நெஞ்சு! ......காமேசுவரய்யருக்கும் மீனாக்ஷிக்கும் முகத்திலே ஈ யாடாது. எனக்கே இப்படி இருந்தபோது பெத்த தாயார் தகப்பனருக்குக் கேட்கணுமா?

இனிமேல் நாகராஜனைப்பற்றி ஏதாவது நம்பிக்கை வைத்தால்தானுண்டு! அவன் பட்டணத்தில் படித்துக்கொண்டிருந்தான். மார்கழி பிறந்துவிட்டது. அவன் வருகிற நாளை எண்ணிக்கொண்டே இருந்தேன். கடைசியாக வந்து சேர்ந்தான். வந்த அன்று காலமே அவன் முகத்தில் சிரிப்பும் விளையாட்டுமாக இருந்தது. சந்தோஷமாக இருந்தேன். ஆனால் அன்றைக்கு சாயங்காலமே முகம் வேறாகிவிட்டது. தாயார் தகப்பனர் அவன் மனதைக் கலைக்க ஆரம்பித்துவிட்டார்கள். நாளுக்கு நாள் முகத்தில் கலக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது. 'கரைப்பார் கலைத்தால் கல்லுங் கரையும்' என்பார்கள். அவன் கலங்கின முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு வயிற்றிலே பகீர் என்னும் இனிமேல் ஏது? இந்த ஒரு ஆசை இருந்தது. அதுவும் போய்விட்டது. ருக்மணியின் கதி அதோகதிதான் என்று நினைத்துவிட்டேன்.

தை பிறந்தது. வெளிப்படையாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஏதோ கிழக்கத்திப் பெண்ணாம். தகப்பனருக்கு நாலுலக்ஷ ரூபாய்க்கு பூஸ்திதியாம். பிள்ளை கிடையாதாம். இந்தப் பெண்ணைத் தவிர இன்னும் ஒரே ஒரு பெண் தானும். காலக்கிரமத்தில் ராமசுவாமி அய்யர் குடும்பத்துக்கு இரண்டு லக்ஷ ரூபாய் சொத்து சேர்ந்துவிடுமாம். இதெல்லாம் எனக்குக் கர்ண கடூரமாக இருக்கும். ஆனால் என்னசெய்கிறது, தலைவிதியே என்று கேட்டுக்கொண்டிருப்பேன்.

இந்தப் பேச்சுப் புறப்பட்டது முதல் மீனாக்ஷி பகலில் வெளியிலேயே வருகிறதில்லை. சூரியோதயத்துக்கு முன்னையே குளத்துக்கு வந்து ஸ்நானம் செய்துவிட்டு தீர்த்தம் எடுத்துக்கொண்டு போய்விடுவாள். அவள் முகத்தைப் பார்த்தால் கண்டிராவியாயிருக்கும். சரியான தூக்கமேது? சாப்பாடேது? ஓஹோ என்று வாழ்ந்துவிட்டு, இந்த கதிக்கு

ஆளானோமே என்கிற ஏக்கம் அவள் அழகை அழித்துவிட்டது. வீடுவாசல் போய்விட்டதே என்றாவது, நகை நட்டெல்லாம் போய், வெறும் உரிசல் தாலியை மாத்திரம் கட்டிக்கொண்டிருக்கும்படி யாகிவிட்டதே என்றாவது அவள் வருத்தப்படவில்லை. கிளி போலக் குழந்தை அகத்திலிருக்க, ஜானகி அதன் பேரில் கொஞ்சமேனும் இரக்கங்கூடக் காட்டாமல் கண்ணுக் கெதிரே பிள்ளைக்கு வேறு விவாகம் செய்துவைக்க நினைத்துவிட்டாள் பார்த்தாயா என்னும் ஏக்கந்தான் அவளுக்கு இரவு பகலெல்லாம். அவள் முகத்தைப் பார்த்தால் ஜானகிக்குக் கூட மனது உருகிப்போய்விடும். ஆனால் ராணி, அவளெங்கே பார்ப்பள்!

அப்பொழுதெல்லாம் ருக்மணி எப்படி இருந்தாளோ, என்ன நினைத்தாளோ, எனக்கொன்றுந் தெரியாது. அறியாக் குழந்தையே அது, என்ன நினைத்திருக்குமோ? ஒருவேளை, மாமியார் நம்மைக் கட்டோடே கெடுத்துவிட மாட்டாள் என்று நினைத்தாளோ? அல்லது மாமியார் என்ன நினைத்தாலும் நாகராஜன் சம்மதிக்கமாட்டான் என்று நினைத்தாளோ? இன்னும் முட்டமுழுக்க அஞ்சு வருஷமாகவில்லையே அவர்களிருவரும் ஜோடியாய் நம்ம குளத்தங்கரையில் விளையாடி! கலியாணமான பிறகுங்கூட ஒருவருக்குத் தெரியாமல் எத்தனை தடவை பார்த்து, பழையநாள்போலவே அன்பும் ஆதரவுமாக நாகராஜன் அவளோடு பேசியிருக்கிறான்! அவன் கைவிடமாட்டான் என்றேதான் ருக்மணி நினைத்திருப்பாள்.

ஆனால் நாளாக ஆக நாகராஜனுடைய கலியாணப் பேச்சு முற்றிக்கொண்டே வந்தது. நாகராஜன் மனதில் மாத்திரம் இன்னது இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. பட்டணத்திலிருந்து வந்த அன்று, மாமனாரையும் மாமியாரையும் நமஸ்காரம் செய்வதற்காக அகத்துக்கு வந்தானே அவ்வளவுதான்: பிறகு ருக்மணியை அவன் ஸ்மரித்தான் என்பதற்கு எள்ளளவுகூட அடையாளமில்லை. ஆனால் முகத்தைவிட்டு முதனாள் போன உல்லாஸக்குறி மறுபடியும் திரும்பிவரவேயில்லை. யாருடனும் பேசாமல் எப்பொழுதும் சுழித்த முகமாகவே இருப்பான்.

கடைசியாக நாள் வைத்தாகிவிட்டது. பெண்ணகத்துக்காரர் வந்து லக்கினப் பத்திரிகையும் வாசித்துவிட்டுப் போய்விட்டார்கள். ஐயோ! அன்றைக்கு மேளசத்தத்தைக் கேட்க என் பஞ்சப்பிராணனும் துடித்தது. காமேசுவரய்யருக்கு எப்படி இருந்திருக்குமோ! மீனாக்ஷிக்கு மனம் எப்படித் துடித்ததோ! ருக்மணி எப்படி சகித்தாளோ? எல்லாம் ஈசுவரனுக்குத்தான் தெரியும்.

நாகராஜனுக்குக்கூட துளி இரக்கம் பச்சாத்தாபமில்லாமற் போய்விட்டது பார்த்தாயா என்று நான் அழாத நாள் கிடையாது. சில வேளைகளில், இப்படியெல்லாம் பண்ணினால் இவன்மாத்திரம் நன்றாக இருப்பானா என்றுகூடச் சொல்லிவிடுவேன்......இப்படி என் மனஸு தளும்பித் தத்தளித்துக் கொண்டிருக்கிறபோது ஒருநாள் வயிற்றிலே பால்வார்த்தாப்போலே ஒரு சங்கதி என்காதிலே விழுந்தது. நாகராஜனோடேகூட படித்துக்கொண்டிருந்தவனும், ஸ்ரீநிவாஸன் என்றொருபையன். அவன் நாகராஜனைப் பார்க்கிறதற்கு என்று வந்தான். அவர்களுக்கெல்லாம் ரகசியமாகப் பேச இடம் வேறெங்கே, நம்ம குளத்தங்கரை தானே. ஒருநாள் சாயங்காலம் ஏழெட்டு மணிக்கு எல்லோரும் போய்விட்ட பிறகு இவர்கள் இரண்டுபேரும் இங்கே வந்தார்கள். ஸ்ரீநிவாஸன் நிரம்ப நல்லவன். அவன் ஊர் 50, 60 கல்லுக்கந்தண்டையிருக்கிறது. நாகராஜன், பெண்ணிருக்கப் பெண் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறான் என்று யாரோ அவனுக்கு எழுதிவிட்டார்களாக்கும். உடனே தபால் வண்டிமாதிரி ஓடி வந்துவிட்டான். குளத்தங்கரைக்கு வந்ததும், தான் கேள்விப்பட்டதைச் சொல்லி இதெல்லாம் வாஸ்தவந்தானா என்று அவன் நாகராஜனைக் கேட்டான். நாகராஜனும், "அம்மாவும் அப்பாவும் சேர்ந்து நிச்சயம் செய்துவிட்டபோது நான் மாட்டேன் என்று சொன்னால் தான் தீரப்போகிறதா? தவிர, பெண்ணும் லக்ஷணமாக இருக்கிறதாம். [illegible] தகப்பனர், லக்ஷரூபாய் ஆஸ்தி அவள் பேருக்கு எழுதி வைத்திருக்கிறாராம். அவருக்குப் பிற்காலத்தில் இன்னொரு லக்ஷரூபாய் சொத்து சேருமாம். இப்படித் தானே வருகிற சீதேவியை எதற்கு வேண்டாமென்று சொல்லுகிறது?"

என்று சொன்னான். இந்த வார்த்தையெல்லாம் சொல்லும்போது ஸ்ரீநிவாஸன் முகம் போன போக்கை என்ன என்று சொல்லுவது? நாகராஜன் நிறுத்தினதும் அரைமணி தேசகாலம் ஸ்ரீநிவாஸன் அவனுக்கு, 'எத்தனை லக்ஷந்தான் வரட்டுமே, ஒரு பெண் பாவத்தைக் கட்டிக்கொள்ளலாமா, கலியாணப் பந்தலில் மந்திர ரூபமாகச் செய்த பிரமாணத்தை யெல்லாம் அழித்துவிடலாமா,' என்று நாலாவிதமாய் தர்மத்தையும் நியாயத்தையும் எடுத்துச்சொல்லி, கல்லுங் கரையும்படியாக ருக்மணிக்காகப் பரிந்து பேசினான். அவன் நன்றாக இருக்கவேணும், க்ஷேமமாக இருக்கவேணும், ஒரு குறைவு மில்லாமல் வாழவேணும், என்று நிமிஷத்துக்குநிமிஷம் நான் வாழ்த்திக்கொண்டே இருந்தேன்.

ஆனால் அவன் பேசியானதும் நாகராஜன் அவனைப் பார்த்து, "ஸ்ரீநிவாஸா, உன்னிடம் நான் இதுவரை சொன்னதெல்லாம் விளையாட்டாக்கும், நான் காசுக்காக இவ்வளவு அற்பமாகப் போய்விடுவேன் என்று நினைக்கிறாயா? நான் செய்யப்போகிற காரியத்தை யாருக்கும் தெரியாமல் வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்றிருந்தேன். ஆனால் எப்போ இவ்வளவு தூரம் பேசிவிட்டோமோ, இனிமேல் உனக்குத்தெரியாமல் வைக்கிறதில் காரியமில்லை என்று நினைத்துவிட்டேன். ஆனால் ஒன்றுமாத்திரம்: இதை நீ யாருக்கும் சொல்லக்கூடாது. இவர்களெல்லாம் ஆரியத்தன்மையைவிட்டு மிலேச்சத்தனமாய் நடக்க உத்தேசித்திருக்கிறதனால் இவர்களை நன்றாக அவமானம் செய்துவிடவேண்டியது என்று நிச்சயித்துவிட்டேன். நான் எத்தனை மறுத்தும் அப்பாவும் அம்மாவும் ஒரேபிடிவாதமாக இருக்கிறார்கள். ஆகையால் கொளிஞ்சிவாடிக்கேபோகிறேன்; அங்கே போயும் மாட்டேனென்றே சொல்லுவேன். ஆனால் கட்டாயப்படுத்தத்தான் போகிறார்கள், முகூர்த்தப் பந்தலிலும் உட்காருவேன். ஆனால் என்ன இருந்தாலும் திருமங்கலியத்தில் நா[illegible] முடிச்சுப்போடவேணும், வேறு ஒருவரும் போடமுடியா[illegible] [illegible]யத்தில் கண்டிப்பாக மாட்டேன் என்று விடப்போகிறேன். எல்லோரும் இஞ்சிதின்ன குரங்குபோல விழிக்கட்டும். ருக்மணியைத் தொட்ட கையினாலே இன்னொரு பெண்ணையும் நான் தொடுவேன் என்றிருக்கிறாயா"? என்று சொல்லி முடித்தான்.

"ஆனால் நீ விவாகத்துக்கு என்று போகுங் காலத்தில், ருக்மணி, அவள் அப்பா அம்மா மனதெல்லாம் எப்படி இருக்கும் என்று யோசித்துப்பார்த்தாயா?" என்று ஸ்ரீநிவாஸன் கேட்டான். அதற்கு நாகராஜன், "யோசித்தேன்; ஆனால் எல்லாம் போய்விட்டதென்று அவர்கள் நிராசையாய்த் தவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென நான் ஓடிவந்து மாமியார் மாமனாரை வணங்கி, 'துயரப்படாதீர்கள்! என் ருக்மணியை நான் ஒரு நாளும் கைவிடமாட்டேன்! பணத்தாசை பிடித்தவர்களையெல்லாம் மணப்பந்தலில் மானபங்கம் செய்துவிட்டு இங்கு வந்துவிட்டேன்,' என்று நான் சொல்லுங் காலத்தில் அவர்களுக்கு எத்தனை ஆநந்தமாக இருக்கும்! அதைப் பார்த்து அனுபவிக்க விரும்புகிறேன்" என்றான்.

"அந்த நாள் வரையில் அவர்கள் மனது எப்படி துடித்துக்கொண்டிருக்கும் நினைத்துப் பார்," என்றான் ஸ்ரீநிவாஸன். அதற்கு நாகராஜன், "இன்னும் 5 நாளில்லை. இன்று வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை இவ்விடமிருந்து எல்லோரும் புறப்படப் போகிறோம். அடுத்த நாள் முகூர்த்தம். அன்றைக்கே புறப்பட்டு அடுத்த நாள் காலையில் இங்கே திரும்பிவிடுவேன். இத்தனை நாள் பொறுத்தவர்கள் இன்னும் 5 நாள் பொறுக்கமாட்டார்களா?" என்றான். "என்னவோ அப்பா, எனக்கு இது சரியில்லை என்று தோன்றுகிறது" என்று ஸ்ரீநிவாஸன் பேசிக் கொண்டிருக்கும் போதே இருவரும் நகர ஆரம்பித்துவிட்டார்கள். எனக்கு மேலே ஒன்றும் கேட்கவில்லை.

அன்று இரவெல்லாம் எனக்குத் தூக்கமே வரவில்லை. பார்த்தாயா, நாகராஜனை வையக்கூட வைதேனே பாவி, அவனைப்போல ஸத்புத்திரன் உண்டா உலகத்திலே, என்று சொல்லிக் கொண்டேன். இனிமேல் பயமில்லை; அஞ்சு நாளென்ன, பத்துநாளென்ன, நாகராஜன் பிடிவாதக்காரன், சொன்னபடியே செய்துவிடுவான்; ருக்மணிக்கு இனிமேல் ஒருகுறைச்சலுமில்லையென்று பூரித்துப்போய் விட்டேன்.

ஸ்ரீ. பாக்கியலக்ஷ்மி அம்மாள்.

(இக்கதை அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

'[illegible]'

அத்யாயம். 4

பாரஸீஹப் பெண்[illegible]

ஹிந்து தேச சரித்ர முழுவதிலும் ம[illegible]ருந்நிஸாவின் சரித்ரமே அதிக ஸ்வாரஸ்யமானது. அச்சரிதத்தைப் படிப்பவர்கள் அதனைக் கற்பனைக் கதையோ வென்று ஸந்தேஹிப்பார்கள். அவளுடைய தந்தை பாரஸீஹ தேசத்து உயர்குலச் சீமான்களுள் ஒருவர். ஆனால் காலவித்யாஸத்தால் வீடு வாசல், நிலம் புலம் யாவையும் விற்கவேண்டி வந்தது; பரம தரித்ராராயினர். இளைத்த பின் உள்ளூரில் வாழ்ந்திருப்பது மர்யாதை அன்றெனக் கருதியும், மொகலாய அரசர்களின் கீழ் நல்ல உத்யோஹம் பெற்றுக் கூடியவரை நல்ல ஸ்திதியிலேயே காலக்ஷேபஞ் செய்யலாமென உத்தேசித்தும் அவர் இந்தியாவுக்கு வந்தார். வரும் மார்க்கத்தில் கண்டஹார் என்னுமிடத்தில் அவருக்கொரு பெண்மகவு ஜனனமாயிற்று: குழந்தை பிறந்த வேளையோ பெற்றோர்களுக்கு ஆற்றொணு வறுமை. ஸொந்தத்துக்குக் கால் வயிறென்றால் கால்வயிறு கஞ்சி தேடிக்கொள்வதே பகீரதப்ரயத்னமாயிருந்ததென்றால், குழந்தையை ஆதரிக்க அவர்களுக்கு திக்கு எங்கே? வறுமைப் பிணியின் கொடுமை, பத்து மாஸம் சுமந்து பெற்ற ரதிதேவியன்ன ஸ்வர்ண விக்ரஹத்தைச் சாலையோரத்தில் அநாதையாய்க் கண்ணீரும் கம்பலையுமாக விட்டுச் சென்றனர். என்னே வாழ்க்கை! என்னே வறுமை! பரிவாய்ப் பெற்றெடுத்த குழந்தையுமன்றோ ஒரு காலத்தில் பாரமாய்த் தோன்றிவிடுகிறது. கொடிக்குத் தன் காய்ப் பளுவாகுமோ என்பதுகூடப் பொய்த்துவிட்டது. வானம் போட்டுப் பூமி ஏந்திய இக்குழந்தையை, அவ்வழியே சென்ற ஒரு வர்த்தகன் எடுத்துத் தன் புத்ரியாகப் பாவித்து அதிக செல்வமாய் வளர்த்து வந்தான். குழந்தையின் தாயாரைத் தேடிப் பிடித்து அவளைத் தாதியாக அமர்த்தினான். இருபத்தைந்து வருஷங்க[illegible] [illegible]' என்னும் ஜஹாங்கீர் அல்[illegible]வய நாமதேயத்துடன் ஏகபோக பொருந்தியாய்த் தான் ஆட்சி புரியவிருக்கும் நாட்டில் மிஹ்ருந்நிஸா இப்போது இவ்வளவு சீரும் சிறப்பும் செல்வமும் ஸம்பத்துமாய் ஜனனமானாள்.

மிஹ்ருந்நிஸாவைத் தன் அபிமான புத்ரியாய் வளர்த்துக்கொண்ட வர்த்தகர் அவளுடைய பிதாவுக்கு அக்பர் ஸமஸ்தானத்தில் [illegible] உயர்ந்த உத்யோஹம் செய்து வைத்தார். அ[illegible]வுத்யோஹத்திலிருந்து அவர் அதிசீக்ரத்தில் ந[illegible] பேரும் பதவியும் பெறலானார். அவருடைய [illegible]வியும் நாளடைவில் ராஜஸ்த்ரீகளுடன் பரிசயமா[illegible]ள். அவ்வாறு ராஜஸ்திரீகளுடன் தனக்கு ஏற்பட்ட நட்பையும் பரிசயத்தையும் அஸ்திவாரமாகக்கொண்டு அதன்மேல் கட்டடம் கட்ட ஆரம்பித்தாள். தான் அரண்மனை செல்லும்போதெல்லாம் தன் மகளையும் உடனழைத்துச் செல்வாள். அரண்மனைக்குள்சென்றதும் ப்ரகாசமான நேத்ரங்களுடைய மிஹ்ருந்நிஸாவைப் புன்னகையுடனும் பூர்ண மனஸ[illegible]டனும் அழையாத அரசிளங்குமரிகளும் ராணிமார்களும் பேகங்களுமே கிடையாது. ஆனால் மிஹ்ருந்நிஸா பக்வகாலமடைந்து ஒப்புயர்வற்ற ஸ[illegible]ந்தராங்கியாய் விளங்கத் தொடங்கிய காலந்தொட்டு அவள் அரண்மனையில் வேறு சிலர்களுடைய நோக்கத்துக்கும் கருத்துக்கும் இலக்கானாள்.

தனது தந்தையாருடைய அரண்மனைக்கு அடிக்கடி வந்து போகும் பாரஸீஹக்கட்டழகியினிடம் மையல் கொண்டான் ஸாலிம் இளவரசு. காதல் அதிகரிக்க அதிகரிக்க, பிற்கால இந்திய ராஜ்யாதிபதி பாரஸீக நாடோடியின் பெண்ணை மணம்புரிய மனங்கொண்டான். ஆனால் அக்பர் பெருமான் அவ்வித ஸம்பந்தத்துக்கு ஒப்பவில்லை. அவர் மிஹ்ருந்நிஸாவை வீரஸிம்ஹமாகிய ஷெர் ஆப்கனுக்கு விவாஹம் செய்துவைத்தார். மணமகனுக்கு வங்காள ஆதிபத்யமும் ஏராளமான பூஸ்திதிகளும் அளிக்கப்பட்டன. ஸாலிம் இளவரசருக்கு எட்டாதபடி மிஹ்ருந்நிஸா தன் கணவருடன் வங்காளம் செல்லும்படி ஏற்பாடாயிற்று.

அவ்வாறு வங்காளத்துக்கு ப்ரயாணப்படுவ

தன்முன் அக்ப[illegible]பீகம் அவளைத் தன் அர[illegible]க்னியாகிய ராக்யாகழைத்தாள். அத்தருணம் ம[illegible]ஹிருந்துக் ஸாலிம் இளவரசரைக் கடைசிமுறையாய் ஸ்ரீ,தித்து அவரிடம் விடைபெற்றுச் செல்ல ஸம்மதித்தாள்.

தாதிமார்களெல்லாம் அறையை விட்டகன்றனர். மிஹ்ருந்நிஸா மாத்ரம் ஏகாந்தமாயிருந்தாள். இளவரசர் தன்மீது கொண்டிருக்கும் காதலை ஒருவாறு த்ருப்திசெய்ய வேண்டுமென்ற நோக்கங்கொண்டல்ல அவள் தனிமைய[illegible]யிருந்தது. ஸமஸ்தானத்தில் நல்ல [illegible]னத பதவியி லிருக்கும் உத்யோ[illegible]ஸ்தருடைய மனைவி இருக்கவேண்டி[illegible]யாதையை அவள் நன்கறிந்தவள். இ[illegible]வரசரை வரவேற்க பந்தாவுக்கு வெளிப்புறத்தில் இருந்தாளெனினும், அவள் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரைக்கும் கோஷா உடை தரித்திருந்தாள். இளவரசருடன் பேச இசைந்தாளானாலும் அவள் வாய்மொழியிலிருந்து அவனுக்கு ஒருவித ஆறுதலும் தைர்யமும் உண்டாகவில்லை.

தன்னை ஆதரவாய் அழைத்து தன் மனஸ[illegible]க்கு த்ருப்தி உண்டாகும்படி பேசாததைக் கண்டு அவமானப்பட்ட அவ்வரசிளங்குமாரன் தான் எண்ணிய எண்ணம் நிறைவேறப் பெறாதவனாய் அந்த ஸௌந்தரவதன ஸ்த்ரீரத்னத்தைப் பார்த்து, "ஏ, நாரீமணி, இதுதானா நாம் கடைசியாய் ஸந்திப்பது" எனக்கேட்டான். "ராஜகுமாரரே, முதன் முதலில் நாம் இம்முறையே ஸந்தித்திருக்கக்கூடாது. நானோ விவாஹமானவள். இவ்வுலகத்தையே கட்டியாளும் சீமானாயிருந்தாலும் ஸரி, அவன் கூட என்னைப் பார்க்கமுடியாது. ஆனால் பால்யம் முதல்கொண்டு ராக்யாபீகம் மஹாராணியாரவர்கள் என் விஷயத்தில் தாயைக்காட்டிலும் அதிக அன்பும் ஆதரவுமாயிருக்கிறாள். நானும் அவளிடத்தில் எவ்வளவோ அன்பாயும் பயபக்தியாயுமிருந்து வருகிறேன். ஆதலால் அவளது விருப்பத்தை நான் கட்டளையாகக் கொண்டு இப்போது உம்மிடம் வார்த்தையாடுவதற்கு இசைந்தேன்" என்று பொறுமையாய்க் கூறிவிட்டு மிஹ்ருந்நிஸா சிறு குரலாய் "அது மாத்ரமே காரணமன்று. நமது பழைய நாளைய நட்பும் ஒரு காரணமாகும்" என்று முடித்தாள்.

"மிஹ்ருந்நிஸா, சிறிதும் இரக்கமில்லையா? இவ்வளவு கடூரமாய்ப் பேசுகிறாயே, இம்மொழிகள் நீ ஸ்வதாவாய்ச் சொன்[illegible]வைய [illegible]ஸ்ரீயென்ற எண்ணத்[illegible]ன் பேசிய வார்த்தைகளல்ல. [illegible] 'மனைவி' என்னும் பதவியினின்று உலகத்தார் தூப்[illegible] அதற்கெவ்வாறு வெளிக்குப் பேசவே[illegible]ம்வா அவ்வாறே பேசினாய் என்று [illegible] கருதுகிறேன்."

"அ[illegible]குமாரரே. விவாஹமானவள் பதிவ்ர[illegible] தர்மத்துக்குப் பங்கம் வாராதபடி பேசுவதைவிட வேறு எவ்விதம் பேசக்கூடும்?"

"என்ன, ஆக்ராநகரத்து ப்ரதம காஜியைப் போல்பேசுகின்றனையே? மிஹ்ருந்நிஸா, இன்றிரவுநான் உன்னிடம் கோரான் படிக்கவரவில்லை."

"வல்லமை பொருந்திய வீரஸிம்ஹமே, ஒரு புருஷனை விவாஹம் செய்துகொண்டு அவரிடம் என்றைக்கும் பயபக்தியுடன் உண்மையாய் நடந்துகொள்ளவேண்டுமென்ற உறுதியைக்கொண்ட மனைவியைப்போல் நான் பேசுகிறேன். கோரானும் பதிவ்ரதாதர்மத்தின் லக்ஷணங்களைத்தான் நமக்குப் போதிக்கின்றது."

சற்றுநேரம் இருவரும் பேசாமலிருந்தனர். ராஜகுமாரன் அவளுடைய மனதை எப்படியாவது கலைக்கவேண்டுமென்ற தீர்மானத்துடன் வந்தவன். அவள் சற்றும் இடங்கொடுத்துப் பேசாததைக் கண்டு அவன் வருத்தமடைந்தான். அவன் மனது பெரிதும் சஞ்சலப்பட்டது. சிந்தாக்ராந்தனாய்ப் புத்தி ஒருவிடத்தும் செல்லாமல் தவித்தான். போனால் போகிறது, தன் அளவற்ற காதலை வாய்விட்டுச் சொல்லிப் பார்க்கலாம் என்றாலோ, அப்படி வெளிப்படையாகச் சொல்லும்பக்ஷத்தில் ஒருவேளை அவள் மனம் நோவாள் என்ற ஒரு பயம் அவன் மனதில் பூர்ணமாய்க் குடிகொண்டிருந்தது. இவ்வாறு அரசிளங்குமாரன் தாமரை இலையில் நீர்த்துளிபோல் சஞ்சலச் சித்தனாய் வருந்திக்கொண்டிருந்தான்.

"மிஹ்ருந்நிஸா, என்மேல் கோபிக்காதே, நான் சொல்வதைக் கொஞ்சம் நிதானித்துச் செவிகொடுத்துக் கேள். என்னமோ சொல்கிறேன் என்றிராதே. அன்ன ஆஹாரமின்றித் தாபஜ்வரத்தால் நெடுநாளாக வருந்தும் வ்யாதியஸ்தன் ஏதாவது தின்பண்டங்களைக் கண்டு நைப்பாசைப்பட்டு வைத்யனுடைய சொல்லை

மீறிநடப்பதில்லையா? அதேமாதிரி காதல்பிணியால் பீடிக்கப்பட்டவர்கள் மதக்ரந்தங்கள் கூறும் கோட்பாடுகளாகிய ஏட்டுச்சுரைக்காயைக்கண்டு தம் ப்ராணனைவிடப் பதின்மடங்கு அதிகமாய்ப் பாராட்டும் நாரீமணிகளின்மீது ஆசையை ஒழித்துவிடுவார்களா? கோரான் புஸ்தகம் இருக்கவே இருக்கிறது; எங்கே போகிறது அது? அது ஒரு பெரிய ஆக்ஷேபணையாய் விடுமா? நான் உன்னிடம் கொண்டிருக்கும் அடங்காக் காதலின் தன்மையை நீ நன்கறிவாய். என் உயிருடனே நசிக்கும் ஸ்வபாவமுடைய என் ஆசையை, நீயும் ஒருவாறு ஆமோதித்தனையென்று நான் எண்ணுகிறேன். கோரானைப் பற்றி ப்ரமாதமாய்ச் சொல்லுகிறாயே! அது மாத்ரம் என்ன சொல்கிறது? ஸ்த்ரீ புருஷர்கள் இருவர் ஒருவர்மீதொருவர் பரஸ்பர உண்மைக் காதல் கொள்வதே விவாஹத்துக்கு ஸமானமென்று அவைகள் கூறவில்லையா!"

"ஸ்வாமி, நீர் சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை. நானோ ஸரியான விதிப்படி ஒரு புருஷரை மணம்புரிந்துகொண்டேன். இப்போது நான் அவருடையபத்னி. அப்படியிருக்க நீர் கூறும் வார்த்தை எவ்வாறு பொருந்தும்?"

"விவாஹமாயிருந்தாலென்ன? நான் ஒரு வார்த்தை சொன்னால் முல்லாக்கள் அடுத்த க்ஷணமே அவ்விவாஹத்தை ரத்து செய்துவிடுகிறார்கள். அது ஒரு பெருங்கஷ்டமா? நாம் என்ன ஹிந்துக்களா? ஒருவனைக் கட்டிக்கொண்டுவிட்டால் ஆயுள் பர்யந்தம் இஷ்டப்பட்டாலும் ஸரி, படாவிட்டாலும் ஸரி அவனையே கட்டிக்கொண்டு அழவேண்டுமென்பதற்கு? இந்த விஷயத்தில் நமது மதம் வேண்டுமட்டும் இடங்கொடுத்திருக்கிறதே! ஹிந்துக்களைப்போல் நாம் என்ன உடன்கட்டை ஏறவேண்டுமா? அந்தஜாதிதான் அவ்வாறெல்லாம் குட்டி யுக்தி பண்ணிக்கொண்டு திரிகிறது. நமது மதம் இவ்விஷயங்களில் எவ்வளவோ நமக்கு அநுகூலமாயிருக்க இன்னும் ஆலஸ்யமேன்?"

"ராஜ குமாரரே, உடன்கட்டை ஏறுதல் முதலிய கோர ஸம்ப்ரதாயம் நமக்குள் இல்லை, வாஸ்தவந்தான். ஆனாலும் மனைவியெனப்படுபவள் உயிருள்ளமட்டும் கணவனிடம் பக்தியாயிருத்தல் வேண்டாமா? அவருக்கு த்ரோஹம் நினைப்பது ந்யாயமா?"

"மிஹ்ருந்நிஸா, நீ ஸம்மதியாவிட்டால் எனக்கு அது ஸஹகமனத்தைப் போலத்தான். நான் இப்பொழுது அநுபவிக்கும்ஹிம்ஸையில் பாதிகூட எந்த ஹிந்து விதவையும் அநுபவித்திருக்கமாட்டாள். ஒரு கிழப்பிணம் ஏதோ உத்தரவிட்டதாம்; அதற்காக நான் என் வாழ்க்கை ஸௌகத்தைப் போக்கடித்துக்கொண்டு உள்ள நாள் உள்ளமட்டும், இவ்வுலக வாழ்வில் ஊக்கமின்றி நடைப்பிணம்போல நாட்களைக் கணக்கிட்டுக்கொண்டு காலங்கழிப்பதா? என்ன மூடத்தனம்!"

"அரசரே, உமது தகப்பனாரைப்பற்றி இவ்வளவு அவமர்யாதையாய்ப் பேசுவது ந்யாயமல்ல. உமக்காக அவர் ஒரு பெரிய ராஜ்யத்தை ஸம்பாதித்து வைத்திருக்கிறார். அவர் காலத்துக்குப்பின்னால் நீர் அந்த அகண்ட நாட்டிற்கு அதிபதியாகப் போகிறீர். நீர் இவ்வாறு பேசுவது தகுதியன்று."

"உன்னை அடையும் பாக்யம் இராமல் எனக்கு என்னத்துக்கு ராஜ்யமும் ஸிம்ஹாஸநமும்? கொஞ்சங்கூடத் தாக்ஷிண்யம் என்பது இராமல் உன்னை என்னிடமிருந்து பிரித்து என்னை என்றைக்கும் துக்கஸாகரத்தில் ஆழ்த்தியவராகிய அவரிடம் நான் ஏன் நன்றிபாராட்ட வேண்டும்? ஸாலிம் இப்பேர்ப்பட்டவனென்று அவருக்குத் தெரியாது போலும்; ஸாலிமா இவ்வித உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன்? எனக்குக் கோபாவேசம் வருமானால் நான் என்னதான் செய்யமாட்டேன்? அவர் என்னமோ, 'நமது பிள்ளை; நாம் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொண்டிருப்பான்' என்று எண்ணியிருக்கிறார். என் ஸமாசாரம் அவருக்குத் தெரியாது. பட்டால்தான் தெரியும். ஆகட்டும் என் கையாலானதைப் பார்த்துக்கொள்ளுகிறேன்."

"உச், உச், இப்படிக்கெல்லாம் பேசாதீர். ஜனானாவில் சுவர்களுக்கும் சாளரங்களுக்கும் கூடச் செவிகள் இருக்கின்றன. மஹா புத்திசாலியும், வைதிகசிஷ்டரும், தர்ம ஸ்வரூபியுமாகிய உமது தந்தையார் சொல்வது உமது நன்மைக்கே. அவருக்குக் கீழ்ப்படாதிருப்பது மதிஹீனம். அவர் சொல்படி நடப்பதே ஸர்வோத்தமமானது."

"வைதிகசிஷ்டரா! மிஹ்ருந்நிஸா, அவரை முஸல்மான் என்று இனி சொல்லலாமா? ப்ரதிதினமும் ஆதித்யபூஜை செய்துவருகி

றார். அவருடன் ஒருவர் இருக்கிறாரே, மஹா பெரியவர் அந்த அபுல் பாஸல். இரண்டு பேர்களுமாகச் சேர்ந்து ஒரு நூதனமதம் ஸ்தாபிப்பதாக வேஷம் போட்டுக்கொண்டு நம்மை இந்தக் கேடுகெட்ட ஹிந்துக்களுடன் ஒன்று சேர்க்க ப்ரயத்னப்படுகிறார்களே. அவரா மதாபிமானி, வைதிகசிஷ்டர்?"

மிஹ்ருந்நிஸா அடங்காக்கோபத்வனியுடன், "இளவரசே, என்ன சொன்னீர் நீர்! போதும். இனி இவ்வித வார்த்தைகள் என் செவியில் விழ வேண்டாம். என துபுருஷனுக்கு ஊரும் பேரும் புகழுமளித்து ஸம்மானித்த நமது காருண்ய அதிபதியைப்பற்றிய அவமர்யாதைப் பேச்சுகள் ஒன்றும் இனி என் முன்னிலையில் பேச வேண்டாம். 'கேடுகெட்ட ஹிந்துக்கள்' என்று சொல்லுகிறீரே, உமது தாயார் யார்? பேரும் ப்ரதாபமும் பெற்றதொரு க்ஷத்ரிய வம்சத்தில் பிறந்த ஹிந்துஸ்த்ரீயன்றோ உம்மைப் பெற்றெடுத்த சீமாட்டி. பேசுவதென்றால் பேச்சுக்கு ஒரு அத்து இல்லையோ? வாயில் வந்தபடிக்கெல்லாம் பேசிவிடுவதா?"

இளவரசருக்கு மிகவும் அவமானமாய்ப்போய்விட்டது. மிஹ்ருந்நிஸா இவ்வளவு தூரம் தன்னைத் தார்க்கணித்துப் பேசுவாள் என்று அவர் எண்ணவேயில்லை. "நான் ஏதோ தெரியாத்தனமாய்ச் சொல்லிவிட்டேன் மன்னித்துவிடு. அவர் எனக்கு த்ரோஹம் செய்தபோதிலும் எனது உத்தம தகப்பனாரைப்பற்றியாவது அல்லது என்னுடைய சீலமுள்ள தாயாரைப்பற்றியாவது அவமர்யாதையாய்ப் பேச வேண்டுமென்று நான் எண்ணிவரவில்லை அவர் செய்த பிழையைச் சீர்திருத்திக்கொள்ளலாமென்று உன்னிடம் வந்தேன். நான் ஸகல ஏற்பாடும் தயாராய்ச் செய்து வைத்திருக்கிறேன். நீ ஒரு வார்த்தை சொல்லவேண்டியதுதான் தடை, என் ஜன்மம் ஸாபல்யமடைந்துவிடும்; என் கண்ணே!"

"இளவரசே, நீர் கூடார்த்தமாய்ப் பேசுவது எனக்குப் புரியவில்லை. சொல்லவேண்டியதை நன்றாய் வெளிப்படையாய்ச் சொல்லும்."

"நீ இவ்விடம் விட்டகன்றுச் சிறிது காலம் அஞ்ஞாதவாஸம் செய்யவேண்டும். இரண்டொரு மாஸத்தில் எல்லாம் ஸரியாய்விடும். என் தகப்பனார் கொடுத்ததைவிட எண்மடங்கு அதிகமான செல்வமும், ஏராளமான ராஜ்யமும் கொடுக்கிறேன் என்றால் ஷேர் ஆப்கன் உன்னை எனக்குக் கொடுத்துவிடுவான். அதற்கு ஸந்தேஹமில்லை. முல்லாக்கள் தான் என்ன, நான் சொன்னால் தடை சொல்லப் போகிறார்களா? ஏற்கெனவே மதவிஷயமாய் அவர்களுக்கும் எனது தகப்பனாருக்கும் சிறிது போதாது. என் தகப்பனார் காலத்துக்குள்ளேயே நாம் சதிபதிகளாய் ஸுகமாக வாழத் தொடங்கலாம்."

மிஹ்ருந்நிஸா பரிஹாஸ நகைசெய்து, "உமது ஏற்பாடு ரொம்பவும் ஸாமர்த்யமாய்த்தானிருக்கிறது. ஆனால் இரண்டொரு முக்யமான விஷயங்களைப்பற்றி மாத்ரம் நீர் யோசனை செய்யவில்லை. ஷேர் ஆப்கன் ரணசூரர்: அதி தைர்யசாலி. உமது ராஜ்யம் மாத்ரமன்று? உமது ராஜ்யத்தைப்போல் பத்து ராஜ்யங்களை ஒருங்கே கொடுத்தாலும் ஸரி, அவர் தம் ஆசை மனையாளை இன்னொருவர் கையாள ஸம்மதிக்கமாட்டார். ப்ராணன் உள்ளமட்டும் ஒரு கை பார்த்துத்தான் விடுவார். உங்களுடைய பணத்துக்கும் மிரட்டிற்கும் அவர் கீழ்ப்படியமாட்டார். இன்னும் இரண்டொரு மாதத்துக்குள் நான் உமது தகப்பனார் ஏற்பாட்டின்படிக்கு வங்காளம் சென்று அவ்விடத்தில் என் தலைவருடன் வஸித்துக்கொண்டிருப்பேன்."

"எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்யாமலா நான் இங்கு வந்திருப்பேன். மிஹ்ருந்நிஸா, நான் என்ன ரணயுத்தங்கள் புரியும் கைதேர்ந்த போர்வீரனல்லவா? அறையின் வெளிப்புறத்தில் கட்டாரி பிடித்திருக்கும் இரண்டு தார்தாரிப் பெண்கள் காத்திருக்கிறார்கள். உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆயுததாரிகளான பேடிகள் இருபது பேர் அந்தண்டைக் கூடத்தில் ஒளிந்திருக்கிறார்கள்."

"இந்தக் கோட்டையின் மதில்கள் ஸாமாந்யமானவை யல்ல. மேலும் எண்ணிறந்த போர்வீரர்கள் காவல் புரிந்து கொண்டிருக்கின்றனரே இவ்விடம்?"

"நதிமுக வாயில் என் கைக்கீழ் இருக்கிறது. வேண்டும்போது அதைத் திறந்து கொள்ள எனக்கு ஸ்வாதீனமுண்டு. ஆற்றில் ஒரு படகு தயாராய் நின்றிருக்கிறது. ஆற்றங்கரையில் வாயுவேஹமுடைய ஐந்நூறு குதிரையாட்கள் மறைந்திருக்கின்றனர்."

"சக்ரவர்த்தியவர்கள் அவ்வளவு ஏமாந்தவரல்லர். நீர் இவ்வுலகில் எங்கு எவ்வளவு தூரம் சென்றாலும் ஸரி, உம்மைப் பிடித்துவர அவருக்கு ஸாமர்த்யமுண்டு."

"இரண்டொரு தினங்களுக்குள் நான் என் ராணுவஸ்தலம் சென்றுவிடுவேன். அவ்விடம் என் கீழ் இருபதினாயிரம் வீரர்கள் யுத்த ஸந்நத்தராய் இருக்கின்றனர். என் ஸைந்யமென்றால் சக்ரவர்த்தியவர்களுக்குச் சிறிது யோசனைதான்."

"இளவரசே, உமது தந்தையாருடைய ஸேனை உமது ஸேனையைவிடச் சிறந்த ஸேனைகளுடனெல்லாம் அமர் செய்திருக்கிறது. உமது வீரர்களைத் தோற்கடித்து உம்மைச் சிறைக்கொள்வது அவருக்கு ஒரு ச்ரமமா? மான்ஸிங் இருக்குமட்டும் அவருக்கு என்ன குறை. புறங்காட்டி யோடுதலை இன்னதென்று அறியாத வீரஸிம்ஹம் அவர். அவர் முன் நீர் எம்மாத்ரம்?"

"நிஜந்தான். மான்ஸிங் இணையற்ற படைத்தலைவர்தான். ஹால்திகடம் என்னும் கணவாயில் நானும் அவருந்தான் மீவார் ராணாவைத் தோற்கடித்து அவருடைய ஸேனையைத் துரத்தியடித்தோம். ஆதலால் மான்ஸிங்கருடைய வீர சௌர்யத்தை நான் நன்கு அறிவேன்; ஆனால் மான்ஸிங்குக்கு இப்போது வங்காளத்தில் முதுகுநிமிர வேலையிருக்கிறது. திரும்பவும் கலஹம்விளைத்த ஆப்கானியர்களை யடக்குவது ஸுலபமான காரியமல்ல. மேலும் அவருடைய ஸஹோதரியை எனக்குக் கொடுத்திருக்கிறார். ஆதலினால் அவர் விஷயமாய் நான் யோசிக்கவேண்டிய செலவில்லை."

"ராஜகுமாரரே, நீர் செய்துள்ள ஏற்பாடுகள் யாவும் அத்புதமாயிருக்கின்றன. அவற்றில் குற்றங்குறை யொன்றுமில்லை. நீரோ ஆண்மகன்; நானோ பேதமை மிகுந்த ஒரு பெண்பிள்ளை. உமக்குத் தெரியாததும் தெரியக்கூடாததும் ஒன்றுமில்லை. ஆயினும் நான் ஒன்று சொல்லுகிறேன் அதை என்றைக்கும் கவனத்தில்வைத்துக்கொள்ளும். உமது தந்தையாரின் கண்களும் காதுகளும் அறுபது நாழிகையும் திறந்தவண்ணமாயிருக்கின்றன. அவருடைய காவல்வீரர்கள் எப்பொழுதும் உறங்குவதில்லை. நீர் இன்றைக்கு ஜனானா வந்தது அவருக்குத் தெரியும். நான் ராக்யா பேகத்தைப் பார்க்க வந்ததையும் அவருடைய ஒற்றர்கள் அறிவார்கள். யமுனா நதியினின்று நான் கோட்டைக்குள் நுழைந்தபோது வழியில் ஆற்றுக்கு அக்கரையில் ராஜவீரர்களுடைய ஆயுதங்களொலி ஸ்பஷ்டமாய் [illegible]க்குக் கேட்டது. இளவரசே, அடியேன்மீது இவ்வளவு [illegible] வைத்து வந்த, தங்களிடம் என் மனதிலுள்ளதை ஒளிக்காமல் சொல்லிவிடுகிறேன். மிஹ்ருந்நிஸா பதிவ்ரதா தர்மத்தைப் பூர்ணமாய்க் கொண்டவள்; தனக்கு மாலையிட்ட புருஷருக்கு அவள் ஒருக்ஷணமும் த்ரோஹம் செய்யக்கருதமாட்டாள். இது திண்ணம் அரசே. நாம் இப்போது மித்ராகப் பிரிந்து செல்கிறோம். இனி ஸந்திக்கப்போவதில்லை. இதுதான் நான் தங்களிடம் கடைசிமுறையாய் விடைபெற்றுக் கொள்வது."

"இப்போது விடைபெற்றுக்கொள்வதுவாஸ்தவந்தான். ஆனால் இது கடைசிமுறையன்று."

அந்தப்புரத்தினின்று ஓர் ஊதல் சப்தித்தது; ஸலிம், மிஹ்ருந்நிஸா இருவரும் திடுக்கிட்டனர். அந்தச் சப்தத்தின் பொருள் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்; அதனால் உண்டாகக்கூடிய கஷ்டங்களையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அறைக்கு வெளிப்புறமுள்ள ஸலவைக்கல் தரையில் காலடியோசை கேட்டது. நக்ஷத்ர ஒளியில் கத்திகளும் கட்டாரிகளும் ப்ரகாசித்தன. தூரத்தில் ஏதோ ஒரு பெரிய சந்தடி கேட்டது. மறுபடியும் எல்லாம் நிச்சப்தம். பழைய ப்ராகாரம் அரண்மனை மண்டபங்களின்மீதும் நந்தவனங்களின்மீதும் காற்றடித்துக் கொண்டிருந்தது. முன்போலவே யமுனா நதியின் அலைகளும் மதில்களின்மீது சாந்தமாய் அடித்துக்கொண்டிருந்தன. ஸலிமைச் சேர்ந்த பேடிகள் நிராயுதபாணிகளாயினர். அவர்களுள் பலர் மாண்டனர்; சிலர் கைது செய்யப்பட்டனர்.

மறுபடியும் ஒரு சந்தடி கிளம்பிற்று. ஆற்றுக்கு அக்கரையிலிருந்து துப்பாக்கிவெடி கேட்டது. ஸலிமுடைய குதிரையாட்கள் ராஜஸைந்யத்தால் சூழப்பட்டனர். சப்தத்தைக்கேட்டு ஸலிம் உடல் நடுங்கினான். குடிவெறியன்; சிற்றின்ப ப்ரியன்; ஸ்த்ரீலோலன். அக்பருக்கிருந்த சாந்தமும், பொறுமையும், நிதான புத்தியும் அவனிடம் மருந்துக்குக்கூடக் கிடையாது. அவருடைய முன் யோசனையும், தயாள

குணமும் அவருடனே போய்விட்டது. தகப்பனுது நல்ல குணங்கள் ஒன்றும் ஸாலிமுக்கு வாவில்லை. ஜயமடைந்தபோது அவன் சத்ருக்களிடம் நிர்தாக்ஷண்ய முடையவன்; பழிக்குப் பழி வாங்கும் துர்க்குண ஸம்பன்னனுகிய ஸாலிம் தோல்வியடைந்த சத்ருக்களை அடியோடு ஹதம் செய்யும் இயல்புடையவன். இப்பேர்ப்பட்ட சூரன் அபாயம் நேருமென்று முற்குறியுண்டாகும்போதே கைகால் வெலவெலத்துப் போய்விட்டான். தொலைவில் துப்பாக்கி வெடிகள் பலமாய்க் கேட்கவே அவன், கல் ஸ்தம்பத்தின்மீது சாய்ந்தான். சாய்ந்துகொண்ட கம்பத்தைப்போலவே அவனுடைய முகமும் வெள்ளைவெளேலென்று ஆய்விட்டது. கைகால்கள் உதறிய வண்ணமாகவே யிருந்தன.

அக்பாது மரணகாலம் முதல்கொண்டு தினே தினே க்ஷீண தசையடைந்து தத்தளித்துக்கொண்டிருந்த மொகலாய ராஜ்யத்தை நிலை நிறுத்திப் பூர்வ ஸ்திதிக்குக் கொண்டுவருவதற்கு அவருக்குப் பெரிதும் உபயோஹமாயிருந்த அந்த மனோதைர்யத்தின் சிறிது அம்சத்தை மிஹ்ருந்நிஸா இப்போது இந்த அபாய காலத்தில் வெளிப்படுத்தினுள்.

அளவிடக் கூடாத மனோதைர்யமும், வீராவேசமுமுடையவளாகிய மிஹ்ருந்நிஸா அவ்விளங் குமாரனைப் பார்த்து, "இளவரசே, உங்களுடைய ஆண்மை என்ன ஆண்மை? நீங்களா புருஷர்? மான்ஸிங்குடன் கூடி, மீவார் ராணுவை விரட்டியதாக ஜம்பமடித்த சூரா நீர்? நீரா அக்பாது ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கப் போகிறவர்? அக்பாது புதல்வர் நாம் என்ற ஞாபகம் இருந்தாலும் போதுமே, உமக்குப் போதுமான ஆண்மை உண்டாகுமே! இவ்வளவு பௌருஷமுடைய இளவரசரா இவ்விராஜ்யத்துக்குச் சக்ரவர்த்தியாகப் போகிருர்! ஸாலிம், இது ஜனுனு; ஸ்த்ரீகள் இருப்பிடம் இது. கத்திகைப்பிடித்த சூரர்களுடைய புகலிடம் அன்று இவ்வறை. வந்த விதமாகவே தைர்யமாக வெளிச்சென்று தங்களுடைய தந்தையை நேரில் பார்த்து, "நான்ஒரு காலத்தில் காதல்கொண்டிருந்த ஸ்த்ரீயை அவள் இவ்வூரைவிட்டுப் போவதற்கு முன்னர் கடைசி முறையாகப் பார்த்துவிட்டு வரலாமென்று சென்றிருந்தேன்" என்று உள்ளதைச் சொல்வீரானுல், அதி தயாளுவாகிய உமது தகப்பனுர் உமது குற்றத்தை மன்னித்து விடுவார். வேறு ஒன்றும் உம்மைக் கோபிக்கமாட்டார். இன்னும் தாமஸமேன்? புறப்படும். சற்றுமுன் உமது வீரதீரத்தைப்பற்றி மஹா ப்ரமாதமாய் வெண்கலக் கடை யானையைப்போல் பேசினீரே! உமக்குத் தைர்யமில்லையா; சொல்லும். நான்பெண்தானே. நான் போய் அவரைப் பார்த்து, இனிவாழ்வில் நான் காணக் கூடாத எனது நண்பரை மன்னிக்கும்படிக்கு சொல்கிறேன்! என்ன சொல்லும், புறப்பட்டீரா?"

பயம், என்ன விலையெனக் கேட்கும் இந்த வீரதீரப் பெண்மணிமுன், தனது ஸமாசாரத்தை வெளியிட்டுக்கொண்டதைப்பற்றி மஹா அவமானமடைந்தான் ஸாலிம். அவளுடைய வார்த்தையைக் கேட்டு ரோஷங் கொண்டவனுய் இளவரசன் தன் வழக்கப்படி ஜம்பமாய்ப் பேசலானுன்:

"ஸேனுதிபதியாயிற்று நான், இவற்றையெல்லாம் கண்டு நான் பயப்பட்டுவிடுவேனு? நமது அந்தரங்கங்கள் வெளியாய்விட்ட பின்னர் உன்னை இவ்வாண்மனையில்தனியாய்விட்டுப்போவது யுக்தமா அல்லவா என்று நான் சிறிதுநேரம் யோசித்துக்கொண்டிருந்ததைக்கண்டு, நீ என்னைப் பயங்கொள்ளி என்று தூஷிப்பது சிறிதும் பொருந்தாது. எனது படைக்காரர்கள் ஸித்தமாயிருக்கிருர்கள். நொடி நேரத்துக்குள் நான் என் குதிரையாட்களைச் சேர்த்துவிடுவேன். ஹிந்துஸ்தானமுழுவதும் ஜயபேரிகைகொட்டிய தளகர்த்தர்முன் ராஜஸைந்யம் நிர்த்தூளியாய்விடும். ஆனுல் உன்னைத் தனியாய் இவ்விடம் விட்டுப்போவது ந்யாயமா?"

"நிரம்பப் பதைபதைத்து விடுவதனுல் கார்யம் ஸித்தியாய்விடாது. ஆத்ரப்பட்டு எதாவது மூடத்தனமாய்ச் செய்தால், நீர் இன்னும் அதிகமான கஷ்டத்துக்குள் அகப்பட்டுக்கொள்வீர். உமது பேடிகளெல்லாம் கைதிகளாய்விட்டனர்; நதித்வாரம் சாத்தியாய்விட்டது; இந்நேரத்துக்குள் உமது வாயுவேக மனோவேகக் குதிரையாட்களும் நிராயுததாரிகளாய் விட்டிருப்பார்கள். நான் பெண்ணுயிருப்பினும் இவ்விஷயத்தில் நான் சொல்வதைக் கேளும். நாளைய தினம் சக்ரவர்த்தியவர்களிடம் சென்று ஸமாசாரங்களையெல்லாம் உள்ளபடி விவரமாய் அவரிடம் சொல்லும். அவர் உம்மை மன்னித்துவிடுவார்; அதற்கு நான் உத்தரவாதம். என்னைப் பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். எனக்குத் தெரியும் தப்பித்துக்கொள்ளவழி. நான் ராணியார் ராக்யா பீகம் அவர்களுடைய விருந்தாளி'; ஷெர்ஆப்கன் மனைவி. என்னை ஒருவரும் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். எனக்குப் பயமில்லை. நீர்மாத்ரம் நான் சொன்னபடி செய்யுங்கள்" என்று பேசிமுடித்தாள் மிஹ்ருந்நிஸா.

ஒரு ஸாமாந்ய சிற்றரசனின்மனைவி இவ்வாறு கம்பீரமாய்ப் பேசினுள். தனது அபூர்வ வல்லமையும் தைர்யமும், வருங்கால உயர்பதவியும் யாவும் அறிந்தவள்போலக் காணப்பட்டன அவளுடைய வார்த்தைகள். பிறரைத் தன் கீழ் அடக்கியாளுவதற்கென்றே அவதரித்த பெரியோர்களுடைய வதனத்தைக் கண்ணுறும் பேதைகளின்மனதில் உண்டாகும்ஆச்சர்யத்துடன் ஸாலிம், இவ்வளவு அபாயங்களுக்குமிடையில் சிறிதும் களங்கமடையாமல் ஸாவதானமாயிருந்த அவளுடைய முகத்தை உற்றுநோக்கினுன். அவளிடம் இப்போது அவனுக்கு ஒரு புதிய பக்தி உண்டாயிற்று. இவ்வாறு காதலும் பக்தியும் கலந்துள்ள ஸாலிம், மறுபடியும் கூறிய மொழிகள் அவ்வளவும் உண்மையேயெனத் தோற்றியது. "மிஹ்ருந்நிஸா, நீ கட்டளையிடவும் நான் அதற்கு வணங்கிக் கீழ்ப்படியவும் பிறந்திருக்கிறேம். ஓர் அகண்டராஜ்யமெல்லாம் உனது கட்டளைகளை எதிர்பார்த்து நிற்குங்காலம் ஒன்றுவரும். உன்னிஷ்டப்படியே நான் உன்னைவிட்டுச் செல்கிறேன்; நீ சொல்லியபடியே செய்கிறேன். ஆனுல். நாம் பிரிவதற்குமுன் நான் உன்னைக் கேட்டுக்கொள்ளும் ஒரு வேண்டுகோள் உண்டு. அதாவது, ஹே நாரீமணி, ஸ்த்ரீகள் நடுநாயகமே, நான் இந்த ஸ்வர்க்கலோகத்தைவிட்டுச் செல்லுமுன் உனது திவ்யமுகத்தை யொருதரம் எனக்குக் காண்பிக்கவேண்டும். அதுதான் நான் உன்னை வேண்டிக் கேட்டுக்கொள்வது. உன் கடைக்கண் பார்வையொன்றே எனக்கு அம்ருதத்துக்கு ஸமானமாயிருக்கும். நெடுநாள் மட்டும் மனவமைதியற்று இடமிடமாய்த் திரியப்போகும் ஓர் இளவரசன், உன்னையே த்யானித்துக்கொண்டிருப்பான். உன்னுடைய முகத்தை அவன் என்றைக்கும் மறவான்."

எத்தனை யிருந்தாலும் கடைசியில் மிஹ்ருந்நிஸாவும் ஒரு பெண்தானே. ஸாலிம் உருக்கமாய்ப் பேசியதைக் கேட்டு, அவள் அவன்மீது சிறிது இரக்கங்கொண்டாள். இப்போது தான் முதல் முறையாய்ச் சிறிது நடுக்கமுற்ற த்வனியாய் அவள், "நான் செய்வது தப்பான கார்யமாயிருக்கலாம். அல்லா என்னை மன்னிப்பாராக. நீர் கடைசியாய்க் கேட்ட வேண்டுகோளுக்கு நான் இணங்காதிருப்பது ஸரியன்று" எனக் கூறிக்கொண்டே அவள் தன் முகமறைவைத் திறந்தாள்.

லஜ்ஜையால் சிறிதுமாறிய புன்னகை தவழும் ஜோதிமயமான ஒரு ரமணீய வதனம் அங்கு ப்ரகாசித்தது. பாரஸீஹ முழுவதும் தேடித் தேடிப் பார்த்தாலும் அவ்வளவு வசீகரமான வதனம் காண்பதரிது; இந்தியா முழுவதும் அலைந்து திரிந்தாலும் காண்போர் மனதை அவ்வளவு கவரக்கூடிய கருவிழிகளும் கிடையா.

வீணே டில்லி நகரத்துச் சிற்பிகளும், மேல் நாட்டு கவீச்வரர்களும் அந்த ஜகஜ்ஜோதியைப் படங்களிலும் பதங்களிலும் சித்ரிக்க முயன்றனர். இன்னும் சிலர் வ்ருதாவாய் முயல்கின்றனர். அந்நாரீமணியின் லாவண்யம் எவராலும் வர்ணித்து வரையமுடியாது. மிஹ்ருந்நிஸாவின் அழகு அவளுடனே பிறந்து அவளுடனே நசித்துவிட்ட ஒரு வரப்ரஸாதம்.

அவளுடைய முகமண்டலத்தின் சோபையைப் பார்த்து ஸாலிம் பெருமூச்சுவிட்டான்; அவனுடைய மனது துடித்தது. மறையாடை திரும்பியும் மூடிக்கொண்டது. சற்று முன் மாயாஸ்வரூபமாப் விளங்கிய சந்த்ரபிம்பம் மறைபட்டது.

அத்யாயம் 5

ஸௌந்தர்யவதியுடன் ஸம்பாஷணை

நரேந்த்ரன் எத்தனையோ கதைகள் படித்திருக்கிறுன்; எத்தனையோ கதைகள் கேட்டுமிருக்கிறுன். ஆனுல் ஒரு கதையிலாவது அன்றிரவு நடந்த விஷயங்களைப் போன்ற அதிசயமான விஷயங்களை அவன் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, ஸாயந்த்ரந்தான் தன்னைச் சூழ்ந்திருக்கும் அந்தரங்களைக் கண்டறிய அதிக ஆவலுடனிருந்தான். இப்பொழுதோ

எல்லாம் வெட்ட வெளிச்சமாய்விட்டது. அக்பரது ஆரிய ஸாமர்த்யத்தால் யமுனா நதிதீரத்தில் காண்போர் அதிசயிக்கத்தக்க வண்ணமாய் எழுப்பப்பட்டிருந்த ஆக்ரா கோட்டைக்குள் நரேந்த்ரன் கொண்டுவரப்பட்டான். சக்ரவர்த்தியவர்கள் ப்ரதிதினமும் தன் குடிகளுக்குப் பேட்டியளிக்கும் ஸபாமண்டபம் கோட்டையின் வெளிப்ராகாரத்தில் அமைந்திருந்தது. அவ்விடம் தானிருந்தது ஆம்பர் விருந்தாளிகள் க்ருஹம். அந்த க்ருஹத்தில்தான் நரேந்த்ரன் சில மாஸங்களாகத் தங்கியிருந்தான். அவ்விடத்தினின்று அவனுக்கு அந்தப்புரத்திலுள்ள ராணிமார்களையும் பீகங்களையும் பார்ப்பதற்கு ஸந்தர்ப்பம் உண்டாயிற்று. அக்பரது ப்ரதம ராணியும், இளவரசரது தாயாருமாகிய ஜோத்பாய் சீமாட்டியைக் காணும் பாக்யம் அவனுக்குக் கிடைத்தது. அதன் பின்னர் இளவரசருடன் சென்று ஸலிம் போற்றும் பாரஸீஹக் கட்டழகியைக் கண்டான். இதுவரைக்கும், அவனுக்கு ஒருவித கஷ்டமும் ஏற்படவில்லை. ஆனால் இப்பொழுதோ எதிர்ப்பாராத ஸங்கடங்கள் உண்டாகும் போலத் தோற்றியது. இளவரசருடைய த்ரோஹ சிந்தை, அவர் செய்திருந்த அந்தரங்க ஏற்பாடுகள், மிஹ்ருந்நிஸாவிடம் அவர் ஜபம் பலிக்காமற் போனது, கடைசியாக அப்பெண்மணி அவரை ஏளனஞ்செய்து அவருக்குப் புத்திமதி கூறியது எல்லாம் இப்போது நரேந்த்ரனுக்கு வெளிப்படையாய்த் தெரிந்துவிட்டன. இனி என்ன நடக்கப்போகிறதோ, எந்தெந்தக் கஷ்டங்களுக்கும் அபாயங்களுக்கும் தான் உட்படவேண்டுமோ, கடைசியில் தன்விதி எவ்வாறு முடியுமோ எனப் பலவிதமாய்ச் சிந்திக்கலானான் நரேந்த்ரன்.

இளவரசர் போய்விட்டார். ஜெலிகாவையும் அவளுடைய தோழியையும் உள்ளே வரும்படி பாரஸீஹப் பெண் கட்டளையிட்டாள். பெண்ணுடை தரித்து உடல்நடுங்கிக் கொண்டிருக்கும் நரேந்த்ரனை ஒருமுறை கவனமாய்ப் பார்த்தாள் மிஹ்ருந்நிஸா. நரேந்த்ரனுக்குத் தன் நடுக்கத்தை யடக்கிக்கொண்டு ஸரியாய் நிற்பது கஷ்டஸாத்யமாயிற்று; இதற்குள் அவனுக்கு ப்ராணன்போய் ப்ராணன் வந்தது. ஆனால் அவன் சற்றுக் கெல்லாம் கைகூப்பித் தலை குனிந்து, வணக்கமாய் நின்றுவிட்டான்.

வீர தீரம் படைத்த அம்மாது சிரோமணி நரேந்த்ரனைப் பார்த்து,

"ரண வீரரே, நீர் தரித்திருக்கும் ஸ்த்ரீயாடையைக் கழற்றிவிடும்; போர்வீரருக்கு ஏற்றவையல்ல இவ்வுடைகள். மேலும் இவ்வுடைகளைத் தரித்துக்கொள்வதனாலேயே உமது முகத்தில் தோன்றும் ஆண்மகனுக்குரிய அடையாளங்கள் மறைந்துவிடுமா?"

நரேந்த்ரன் வெளியேபோய்த் தன் பூர்வாச்ரமத்துடன் திரும்பி வந்தான். மிஹ்ருந்நிஸா அவனைப் பார்த்து, "சக்ரவர்த்தியவர்களுடைய யுத்தத்தில் பலமாய்க் காயப்பட்டு ஸ்மரணையற்றிருக்கும் ஸ்திதியில், ஆக்ரா கொண்டு வரப்பட்ட வங்கதேசத்துச் சிற்றரசர் வம்சஸ்தர் அல்லவா இந்த யௌவன வீரர்?"

"ஆம், வங்க நாட்டைச் சேர்ந்தவர்தான் இவர்" எனப் பதில் சொன்னாள் ஜெலிகா.

"ராஜா தோடர்மாலை ஆப்கானியர்கள் பலமாய்த் தாக்கியபோது வங்கதேசாதிபதிகளுள் சக்ரவர்த்தி பக்கம் தனித்து நின்ற வீரசிகாமணியல்லவா இவருடைய பாட்டனார்?"

ஜெலிகா பதில் சொல்லவில்லை. அதைக் கண்டு நரேந்த்ரன், "ஹே, சீமாட்டி, ராஜஸைந்யத்துக்கு எங்களுடைய வம்சத்தார் என்ன ப்ரமாதமான உதவி செய்யக்கூடும்? ஏதோ தம்மாலானதை த்ரோஹமின்றி எனது பாட்டனார் சக்ரவர்த்தியவர்களுக்கு ஸமர்ப்பித்தார். அக்பர் அவர்களுக்குத் தம் ப்ராணனை அவர் அர்ப்பணம் செய்தார். அவ்வாறே ஏதோ என்னாலாகக்கூடிய கிஞ்சித் ஸேவகம் அவருக்குச் செய்ய நானும் ஸித்தமாயிருக்கிறேன்."

"ஆக்ரா பாஷை இவருக்கு ஸரியாய்த் தெரியவில்லை யாயினும், நமது கேள்விகளுக்கு த்ருப்திகரமான பதில் அளிக்கிறார். ஜெலிகா இவர் முதன் முதல் இக்கோட்டைக்குள் எவ்வாறு ப்ரவேசித்தார், அந்த விவரத்தைச் சொல்."

"இவர் துப்பாக்கிக் காயத்தால் மரணாவஸ்தையிலிருந்தார் ராஜா மான்ஸிங் அவர்கள் சக்ரவர்த்தியாரைப் பார்த்து இவரை ஆம்பர் அரண்மனைக்குள் விடும்படி உத்தரவு வாங்கிவந்தார். ராஜா அவர்களுடைய ஸஹோதரி, அதாவது, நமது திவ்ய சக்ரவர்த்தியாரின் ப்ரதம ராணியார் தமது அரண்மனை வைத்யர்களை

அனுப்பி நாதனற்ற இந்த வங்க தேசாதிபதியை ஜாக்ரதையாய்க் காப்பாற்றும்படி ஏற்பாடுசெய்தார்கள். எனது எஜமானியார் ஜோத்பாய்ச் சீமாட்டியாரும் அடிக்கடி இவருடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்" என்றாள் ஜெலிகா.

"இந்த யௌவன வீரர் நல்ல அதிர்ஷ்டசாலி. இல்லாவிட்டால் ஒப்புயர்வற்ற இவ்வரண்மனை ராணிமார்களுடைய தயையை எவர் ஸம்பாதிக்கக்கூடும்? சக்ரவர்த்தியவர்களுக்காகப் போர்புரிந்து தமது ப்ராணனை அபாயத்துக் குள்ளாக்கிய வீரர்களுக்கு ஸம்மானம் செய்வதில் ராஜபுத்ர ஸ்த்ரீகள் பின் வாங்குவதில்லை."

நரேந்த்ரன் தலைகுனிந்து ஸலாம் செய்தான்.

"ராணிமார்களுடைய தயை மாத்ரமேயன்றி இவருக்கு நல்ல சிச்ருஷையும் இருந்ததாமே? ஜோத்பாய் அவர்களுடைய தார்தாரி அடிமைப்பெண் ஒருத்தி வைத்யர்களைவிடப் பதின்மடங்கு அதிக கவலையும் அக்கறையும் எடுத்துக்கொண்டு இவருக்குப் பல விதத்திலும் சிச்ருஷை செய்துவந்தனளென நான் கேள்விப்பட்டேன் அது உண்மை தானா, ஜெலிகா?"

ஜெலிகாவின் முகம் சிறிது சிவந்தது: ஆனால் அவள் முன்போலவே மர்யாதையாய்ப் பதில் மொழி கூறினாள்.

"தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. என்னுடைய எஜமானியவர்கள் கட்டளையின்படி நான் ப்ரதிஇரவும் அவரிருந்த அறைக்குச் சென்று அவருடைய தேஹஸ்திதியை யறிந்துவந்து எனது எஜமானிக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தேன்."

"ஜெலிகா, சில தினங்கள் அரண்மனைக்குத் திரும்பிவர நேரமாயிருக்கலாம். அந்த யௌவன வீரபுருஷருக்கும் சில வேளைகளில் உன் சிச்ருஷை மிகவும் மனோஹரமாயிருந்திருக்கலாம். அதைப்பற்றியெல்லாம் பிறர் பன்னிப் பன்னிக் கேட்பது ந்யாயமாகாது."

மறுபடியும் ஜெலிகா முகம் சிவந்தது. ஆயினும் அவள் தன் நிலையையறிந்து மௌனமாயிருந்தாள். "பால்ய வீரரே, என் கணவனார் உம்மைப்பற்றி என்னிடம் பலமுறை கூறியிருக்கிறார். நீர் இக்கோட்டைக்குள் இருப்பதாகக் கேள்விப்பட்டு உம்மை ஸ்த்ரீயாடைதரித்து இவ்விடம், அதாவது ராணிமார்களின் பவனத்துக்கு அழைத்துவரும்படிச் சொன்னேன். ஜெலிகா ரொம்ப கெட்டிக்காரி; அதி ஸாஹஸமுடையவள். இக்கோட்டையிலுள்ளவர்கள் எவருக்கும், அவளுடைய சொந்த எஜமானிக்குக்கூடத், தெரியாமல் அவள் எவ்வளவோ பக்வமாய் உம்மை இங்கு அழைத்துவந்தாள். மஹா வீரசூரர்களும் நடுங்கும்படியான இத்தொழிலில் நீரும் எவ்வளவோ மனோதைர்யத்துடன் தலையிட்டுக்கொண்டீர். இவ்வாறு எத்தனையோ ஆபத்துகளையெல்லாம் லக்ஷ்யம் செய்யாமல் எனது வேண்டுகோளுக்கு நீர் இணங்கியதற்கு நான் வந்தனம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் வங்காளம் செல்லுகிறோம். அவ்விடம் முன் பின் அறியோம். அங்கே எங்களுக்கு ஒரு நண்பர்கூடக் கிடையாது. என் புருஷர் உமது ஸ்நேஹத்தை நம்பியிருக்கிறார். நானும் காலாகாலத்தில் உமது சௌர்யத்தை நம்பியிருக்கலாமோ?"

மிஹ்ருந்நிஸா மஹா தந்த்ரக்காரி; மிகுந்த வாசாலகமுடையவள். வார்த்தை ஸாமர்த்யத்தால் ஜன்ம விரோதியையும் வழிக்குக் கொண்டுவரும் சக்தியுடையவள்; அவளுடைய வாக்சாதுர்யத்தைக் கண்டு மயங்காதவர் வெகு சிலரே. நரேந்த்ரன் தலைவணங்கித் தன் கத்திப்பிடியை அவளிடம் கொடுத்தான். அவள் அக்கத்திப்பிடியைப் பிடிக்கும்போது, அவளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ,—அநேகமாய்த் தெரிந்தே என்று வைத்துக்கொள்ளலாம்,—அவளுடைய கை அவனுடைய கையை ஸ்பர்சித்தது. அந்த ஸ்பர்சமாத்ரத்தால் நரேந்த்ரனுடைய உடல் புளகாங்கித மெய்தியது; நரேந்த்ரனும் அந்தப் பெண்மணிக்குக் கீழ்ப்படிந்துவிட்டான்.

"என் புருஷர் பர்ட்வான் ப்ராந்த்யத்துக்கு ஜாகிர்தாராகச் செல்கின்றார். நண்பரே உமது ஊருக்கும் அதற்கும் எவ்வளவு தூரம்?"

"நான் என் துரிதமான படகில் ஆற்றுமார்க்கமாய் ஒரு தினத்துக்குள் சென்றிருக்கிறேன். நிலமார்க்கமாயும் பர்ட்வான் நகருக்கு ஒரு நாள் ப்ரயாணம்."

"உம்மைப்போன்ற யௌவன புருஷர்களுக்கு அது ஒரு தூரமில்லை. நீர் எப்போது வேண்டுமானாலும் எமது பர்ட்வான் அரண்மனைக்கு வந்து போய்க்கொண்டிருக்கலாம்."

"இந்த அநுமதியைவிடச் சிறந்த அநுமதி

வேறென்ன எனக்குக் கிடைக்கப்போகிறது? தாங்கள் கூறியபடியே நான் அடிக்கடி தங்களுடைய புருஷரைக் கண்டு செல்கிறேன்."

"கண்டு செல்வானேன்? நீரும் ஒரு சிற்றரசராயிற்று. என் புருஷரும் ஒரு சிற்றரசராயிற்று. இருவரும் ஸமான அந்தஸ்துடையவர்கள். உங்கள் தேசாசாரம் எப்படியோ எனக்குத் தெரியாது. உமது மனைவியும் உம்முடன் வந்தால் எனக்குப் பரம ஸந்தோஷம். நான் அவளை என் உடன்பிறந்தாளாகப் பாவிப்பேன்."

நரேந்த்ரனுடைய முகம் சிறிது விகாரமடைந்தது. அவனுக்குக் குரலெடுத்துப் பேச முடியவில்லை. ஹீனத்வனியில் "எனக்கு மனைவியொருத்தியுமில்லை. நான் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை" என்று விசாரத்துடன் சொன்னான்.

நரேந்த்ரனுடைய முகம் வெளுத்து விகாரமடைந்ததை மிஹ்ருந்நிஸா அறிந்துகொண்டாள். அவ்வாறு முகத்தோற்றம் மாறியதின் காரணம் அவளுக்குப் புலப்படவில்லை.

"வீரபுருஷரே, நான் அறியாமல் சொல்லிவிட்டேன். உமது வயதில் இந்நாட்டு புருஷர்களுக்கு விவாஹமாய் விடுகின்றதே. அதுவும் உமது மதத்தைச் சேர்ந்த அரசர்கள் தமது ராஜ்யத்தின் க்ஷேமத்துக்காகத் தமக்குப் புத்ர ஸந்தானம் உண்டாவதைப்பற்றி அதிக ஆவலுடையவர்களாயிற்றே. உமது விஷயத்தில் காலவித்யாஸத்தால் ஏதோ தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன போலும். இம்மொழிகளால் உமக்கு ஏதோ துக்கமான பூர்வஞாபகங்களெல்லாம் மனதுக்கு வருகின்றனவெனத் தோற்றுகிறது. இனி இவ்விஷயத்தைப்பற்றி நான் ப்ரஸ்தாபிப்பதில்லை."

நரேந்த்ரன் துக்காக்ராந்தனாய் "நான் சிறு வயதிலேயே போர்க்கோலம் பூண்டு வந்துவிட்டேன். அதுமுதல் நான் ஊருக்குப் போனதில்லை" என்றான்.

மிஹ்ருந்நிஸா நரேந்த்ரனுடைய மனோவேதனையை உணர்ந்தாள். இனி நாம் அவர் மனதைப் புண்படுத்தக்கூடாதென்று அவள் வார்த்தையை மாற்றினாள்.

விசேஷக் குறிப்புகள்

NEWS & NOTES

நூதன இருப்புப்பாதைவண்டிகள்.—கிழக்குவங்காள ஸ்டேட் இருப்புப்பாதையில் கொஞ்சகாலமாக நூதன வண்டித்தொடர் செல்லுகின்றது. அத்தொடரின் நீளம் 650 அடி, கனம் 361 டன்; அதை நிர்மாணிக்க ரூ. 2,45,000 பிடித்தது. மணிக்கு சராசரி 50 மைல் வேகம் ஓடும். முதல் வகுப்பில் 50-பெயர்களும், இரண்டாவதில் 63-பெயர்களும், இண்டர்மிடியட்டில் 104-பெயர்களும், மூன்றாவது வகுப்பில் 158-பெயர்களும் ஏறலாம். பலஹீனர்களுக்காக தகுந்த ஏற்பாடும், ஸ்நானஞ்செய்வதற்குத் தனி அறைகளும், மற்றும் பல சௌகர்யங்களும் செய்யப்பட்டுள்ளனவாம்.

***

புராதன ஜயின விக்ரஹங்கள்:—ரேவா நாட்டிலுள்ள ரிங்கோட் ப்ரகாஸ் என்னுமிடத்தில் ஒன்றின்மீதொன்றாய் அடுக்கப்பட்ட பல ஜயின விக்ரஹங்கள் அகப்பட்டன. பூஜைக்குரிய பாத்திரங்களும் அருகிலேயே யிருந்தனவாம். அந்தக் கிராமத்திலிருந்துகொண்டு கோயிற்பூஜைசெய்பவர்களுக்கு பலவித சாதனங்கள் கொடுப்பதாக துரைத்தனத்தார் கூறியிருக்கிறார்கள். அப்படிக் குடியிருப்பவர்களின் நிலங்களுக்குத் தீர்வையில்லை; அவ்விடத்திற்கு, இன்னம் கொஞ்சகாலத்தில் இருப்புப்பாதையும் போடப்படும். விக்ரஹங்கள் 600, 700 வருஷங்களாக அங்கிருந்திருக்க வேண்டுமென்று யூகிக்கப்படுகிறது.

***

தொல்காப்பியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு:—செந்தமிழ் நூல்களில் மிகப் பழமையான தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படி, தமிழபிமானியாகிய ம-ா-ா-ஸ்ரீ. பொன்னம்பலம் பிள்ளையவர்களை பரோடா அரசரான கைக்வார் அவர்கள் கேட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியுண்டாக்கும். நம் இராஜதானியிலும் லங்கைத்தீவிலுமுள்ள தமிழ்ப்பண்டிதர்கள் பலர் ம-ா-ா-ஸ்ரீ. பொன்னம்பலம் பிள்ளையவர்களுக்கு உதவிபுரிவதாக வாக்களித்தார்களாம். பரோடா அரசர், தமிழின்மீது அபிமானங்கொண்டிருப்பது, தமிழராகப் பிறந்து அதை வெறுக்கின்ற சிலருக்குப் புத்தி புகட்டுமென்பதற் கையமில்லை.

***

பரோடா மஹாராஜா அவர்களின் நன்கொடை.—போர்முனையிலே பிரிட்டிஷாரின் உபயோகத்திற்காக விமானங்கள்வாங்குவதற்கு பரோடாசமஸ்தான கெயிக்வார் 5 லக்ஷம் ரூபாய் நன்கொடை செய்ய, அக்கொடையை ராஜப்பிரதிநிதி அன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

1915 MADRAS.

தொகுதி VIII { ராக்ஷஸ௵ புரட்டாசிமீ : 1915-௵ அக்டோபர்மீ } பகுதி 4

வேதாந்தத் திரட்டு

VEDANTIC SELECTIONS

66. தேஹத்தின் இழிவு

புன்புலானரம்பென்புடைப்பொய்யு
லன்பர்யார்க்குமருவருப்பல்லவோ
வென்பொலாமணியேயிறையேயித்தாற்
றுன்பமன்றிச்சுகமொன்றுமில்லையே

(பொன்னைமாதரை—13)

67. கடவுள் சிறப்பு

நெஞ்சகந்தனைநேசித்தமார்க்கண்டர்க்
கஞ்சலென்றவருளறிந்தேயையா
தஞ்சமென்றுன்சரணடைந்தேனெங்குஞ்
செஞ்செவேநின்றசிற்சுகவாரியே.

(பொன்னைமாதரை—17)

68. சரணம் புகல்

சோதியேசுடரேசுகமேதுணை
நீதியேநிசமேநிறைவேநிலை
யாதியேயுனையானடைந்தேனகம்
வாதியாதருள்வாயருள்வானையே

(பொன்னையாதரை—22)

69. கடவுள் நிலை

ஆனமானசமயங்களாறுக்குந்
தானமாய்நின்றுதன்மயங்காட்டிய
ஞானபூரணநாதனைநாடியே
நினனேனின்பந்தேக்கித்திளைப்பனே

(பொன்னையாதரை—27)

தேக்கியின்பந்திளைக்கத்திளைக்கவே
யாக்கையாயெனக்கானந்தமாகியே
போக்கிறேடுவரவற்றபூரணந்
தாக்கிநின்றவாதன்மயமாமதே.

(பொன்னைமாதரை—28)

70. அநுபவ மேலீடு

அதுவென்றுன்னுமதுவுமறநின்ற
முந்தியஞானிகண்மோனப்பொருளது
வெதுவென்றெண்ணியிறைஞ்சுவனேழையேன்
மதியுணின்றின்பவாரிவழங்குமே.

(பொன்னைமாதரை—29)

வாரிக்கொண்டெனைவாய்மடுத்தின்பமாய்ப்
பாரிற்கண்டவையாவும்பருகினை
யோரிற்கண்டிடுமன்கனவென
யாருக்குஞ்சொலவாயிலையையனே.

(பொன்னைமாதரை—30)

71. மானஸ பூஜை

கண்ணிற்காண்பதுன்காட்சிகையாற்றொழில்
பண்ணல்பூசைபகர்வதுமந்திரம்
மண்ணொடைந்தும்வழங்குயிர்யாவுமே
பண்ணவேநின்னருள்வடிவாகுமே.

(பொன்னைமாதரை—33)

வடிவெலாநின்வடிவெனவாழ்த்திடாக்
கடியனேனுமுன்காரணங்காண்பனோ
நெடியவானெனவெங்குநிறைந்தொளி
ரடிகளேயாசேயருளத்தனே.

(பொன்னைமாதரை—34)

ராக்ஷஸஹு ஐப்பசிமீ CALENDAR—பஞ்சாங்கம்

யோ	துலு	இங்	தமிழ்	வார	ராக்ஷஸஹு ஐப்பசிமீ — சாலிசகம் 1837, கலியப்தம் 5016 — பசலி 1325, கொல்லம்-1091 — 1915ஹு அக்டோபர்மீ நவம்பர்மீ
ரசு	7	17	1	ஞா	நவ 5-49, திரு 29-46, திரு 2-1, சூல 53-52, கௌ 5-49, ரா 9-56, அக 29-32, துலாரவி 17-44, சுவா 1 சுக் 59-20, துலா சு தசமிதிதி விஜயதசமி சமிபூஜை சிர உப துலாவிஷு சூன்யமார்கம்.
	8	18	2	திங்	தச 1-57, ஏகா 56-55, அவி 28-0, கண் 50-29, கர 1-57, ரா 16-14, ஸ்மா ஏகா மழை 4-க்குள்.
சு	9	19	3	செ	துவா 57-5, சத 27-13, விர் 46-0, பவ 27-58, ரா 13-50, சுவா 2 சுக் 25-42, வை ஏகா.
ர	10	20	4	புத	திர 56-28, பூரட் 27-40, தரு 42-25, கௌ 26-46, ரா 22-48, சித் 4 ரவி 37-44, பிரதோ.
பு	11	21	5	வியா	சத் 57-4, உத் 29-8, வியா 39-48, கர 26-48, தியா 0-0, அக 29-25, புதவக்ரநிவர் 10-38.
செசு ரா]	12	22	6	வெ	◯ பௌ 59-6, ரே 31-56, ஹர் 38-13, பத் 28-5, திவி 0-33, பூச 4 செ 32-0, சுவா 3 சுக் 20-10, திரு 3 ராகு ஆயி 1 கேது 50-6. அன்னபிஷேகம் கோஜா கரி ஆகாசதீபம் ஆக்ரயணம் கார் ஸ்நா ஆ கரிநாள்.
ர	13	23	7	சனி	பிர 60-0, அசு 35-58, வஜ் 37-31, பா 29-33, திவி 25-18, ஆச்வின பகு சுவா 1 ரவி 57-44, இஷ்டி.
பு	14	24	8	ஞா	பிர 2-15, பர 41-2, வரித் 37-41, கௌ 2-15, திவி 2-0, அஸ் 4 ரிசபுத 30-0, மழை 3-க்குள்.
குசு	15	25	9	திங்	துதி 6-27, ✻ கார் 46-50, விய 38-26, கர 6-37, திவி 13-56, அச 29-22, விர்ச்சிகா 36-33, பூரட் 2 வக்குரு 30-0, சுவா 4 சுக் 15-25, விய சிரா சார் உப.
சு	16	26	10	செ	திரு 11-15, ரோ 53-9, வரி 39-36, பத் 11-15, ரா 1-42, பச்சாதுதய சுக் 23-38, சங் சது சாகசதுர்த்தி.
ரசு	17	27	11	புத	சது 16-27, மிரு 59-37, பரி 40-55, பா 16-27, திவி 8-40, சுவா 2 ரவி 17-44, விசா 1 சுக் 57-40, பஞ்சமிதிதி.
பு	18	28	12	வியா	பஞ் 21-35, திரு 60-0, சிவ 42-5, தை 21-35, திவி 22-44, சித் 1 புத 39-27, அதிதி.
	19	29	13	வெ	சஷ் 26-13, திரு 5-40, சித் 42-47, வணி 26-13, ரா 9-4, அக 29-16, சஷ்டிதிதி வருஷயோகம்.
ரசெ	20	30	14	சனி	சப் 30-6, புன 11-8, சா 42-52, பத் 30-6, ரா 3-21, சுவா 3 ரவி 37-44, ஆயி 1 செ 6-46, விசா 2 சுக் 33-30, காளாஷ்டமி.
சு] ச	21	31	15	ஞா	அஷ் 32-57, பூச 15-34, சுப 42-7, பா 1-31, ரா 20-6, சனிவக்ரம் 2-38.
பு	22	1	16	திங்	நவ 34-35, ஆயி 18-56, சுப் 40-26, தை 3-46, ரா 20-45, சித் 2 புத 24-51.
ரசு	23	2	17	செ	தச 34-57, மக 21-4, பிரா 37-43, வணி 4-46, ரா 12-8, அக 29-10, சுவா 4 ரவி 57-29, விசா 3 சுக் 12-40.
	24	3	18	புத	ஏகா 34-0, பூர 21-58, மா 34-0, பவ 4-28, ரா 10-43, சர்வ ஏகா மழை 2-க்குள்.
புசு	25	4	19	வியா	துவா 31-53, உத் 21-40, வை 29-23, கௌ 2-56, ரா 13-10, அனுபுத 15-26, விர்ச்சிகசுக் 58-30, கோவஸ்த துவா பிரதோ வை சிரா தீபாரம். நரகசதுர்தசி மா சி மந்திரதீபம் கரி.
	26	5	20	வெ	திர 28-43, ஹஸ் 20-40, விஷ் 23-55, வணி 28-43, ரா 10-39, தித்யோதிதி ஆலயபிரதோ
ரசெ	27	6	21	சனி	சது 24-38, சித் 18-4, பிரி 17-43, சகு 24-38, ரா 2-17, அக 29-5, விசா 1 ரவி 6-14, ஆயி 2 செ 44-0, சதுர்தசிதிதி தீபாவளி போதாயனம்.
புசு	28	7	22	ஞா	● அமா 19-49, சுவா 15-3, ஆயு 10-55, நா 19-49, திவி 28-13, சித் 4 புத 5-4, அனு 1 சு 42-39, திதித்வயம் சர்வ அமா ல கு பூ கேதா வி போ இஷ்டி.
	29	8	23	திங்	பிர 14-28, விசா 11-30, ஸௌ 3-40, சோ 52-28 பவ 14-28, திவி 20-51, கார் சுத் துதியா திதி இஷ்டி சா ஷரி பலிப்பிரதிபத் கோவர்தன பூ. [புத 30-0, பிராதுர் துதியா.
ரபு	1	9	24	செ	துதி 8-47, அனு 7-35, அதி 48-23, கௌ 8-47, திரு 20-38, விசா 2 ரவி 34-59, வா 1 [20-40, சது விரு.
சு	2	10	25	புத	திரு 2-57, சது 54-8, கேட் 3-31, மூல 55-57, சுக 40-37, கர 2-57, திவி 22-10, ரா 27-28, அக 29-0, அனு 2 சுக்
பு	3	11	26	வியா	பஞ் 51-28, பூரா 55-36, திரு 32-58, பவ 24-16, சே 0-28, திவி 19-49, சுவா 2 புத 54-13, ஸ்கந்த பஞ்சமி மழை 7-சகு.
ரசு	4	12	27	வெ	சஷ் 46-17, உத்தி 53-12, சூல 25-37, கௌ 18-52, திவி 14-48, விசா 3 ரவி 53-7, அனு 3 சுக் 60-0, ஸ்கந்த சஷ்டி உப. [பாதி விக்கிரமசக 1972
ச	5	13	28	சனி	சப் 41-40, திரு 49-22, கண் 18-39, கர 13-58, திவி 2-34, ரா 30-6, திருவா 4 வக்சனி 59-10, சப் விரு சிர உப கல்பாதி.
பு	6	14	29	ஞா	அஷ் 37-52, அவி 47-22, விர் 12-14, பத் 9-46, சே 2-56, அக 28-56, சுவா 3 புத 9-44, பனியாரம்பம். [கடமுகம்.
செசு	7	15	30	திங்	நவ 35-2, சத 46-20, துரு 6-33, பா 6-27, திவி 5-3, ஆயி 3 செ 12-0, அனு 4 சுக் 39-10 துலா சு நவமி கிரதயுகாதி

நவம்பர்மீ — 1334ஹு மொகர்ரம்மீ

			சனி
குரு	19-துலா		செ கே
ராகு	புத விர்ச் சிக சுக்		
		ரவிசு	புத

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸஹு : புரட்டாசிமீ [பகுதி. 4

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

3. கர்மவாஸனு விவேகம்

முன்னர் எடுத்துக்காட்டப்பட்ட கர்மகதியிலிருந்து, ஒவ்வொரு கர்மாவும் செய்தவுடன், பகுத்தறிவுடன் கூடிச் செய்யும் மானிடர் முதலியோர்கள் மனதில், இரண்டுவிதப் பதிவுகளை உண்டாக்குகின்றது என்பது விளங்கியிருக்கும். இவைகளுக்கு ஸம்ஸ்காரங்கள் என்று பெயர். இந்த சித்த ஸம்ஸ்காரங்களுள் பின்னர் ஸுகதுக்க ரூபங்களாக மாறுபடும் தன்மையை உடையவைகளுக்கு கர்ம ஸம்ஸ்காரங்கள் என்றும், ஒருவித கர்மாவை மறுபடியும் செய்துவிடவேண்டும் என்ற பரபரப்பை உண்டாக்கும் பதிவுகளுக்கு வாஸனு ஸம்ஸ்காரங்கள் என்றும் பெயர். இவ்விருவித கர்மப் பதிவுகளும் ஒரே கர்மாவால் ஏற்பட்டவை யாயினும், இவைகளுள் மிகுந்த வேற்றுமைகள் உண்டு. இவ்விருவகைப் பதிவுகளும் தத்தமக்குத் தகுந்த தருணங்களில் திடீரென்று வெளிப்பட்டு தொழிற்படும் விஷயத்தில் ஒரே மாதிரியானவை போலக் காணப்படினும், இவை தம்முள் உள்ள வேற்றுமை விளங்காவிடில் மோக்ஷ வழியில் ஸரிவர உழைத்து ஈடேறவே முடியாது. ஒவ்வொரு கர்மாவுக்கும் இவ்விருவிதப் பதிவுகள் மனதில் ஏற்படும் என்பதை விளக்க, காபி சாப்பிடுவதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். காபி ஒரு முறை குடித்ததுமே தேஹத்தை அதிகமாகச் சுறுசுறுப்புடனிருக்கச் செய்து அடுத்தபடியில் தளர்த்திவிடும்: இது காப்பியின் தன்மை. இதுவன்றி, தகுந்த தருணம் வருங்கால் காப்பியை மறுபடியும் சாப்பிட வேண்டும் என்ற அவனுக்கு வேண்டிய மனப்பதிவும் ஏற்பட்டுவிடுகிறது. இதனுல் ஒருவன் ஒரு தரம் திருடுவானுயின் தண்டனைக்குத் தகுந்தவனுகிவிடும் பதிவும், ஸமயம் வாய்த்தால் மறுபடி திருடித் தப்பிவிடவேண்டும் என்ற ஆவல் பதிவும் அவன் மனதில் ஏற்பட்டு விடும். முன் பதிவு கர்ம ஸம்ஸ்காரம், பின்னது வாஸனு ஸம்ஸ்காரம்.

இப்படி ஒரே கர்மாவினுல் ஏற்படக்கூடிய இருவித மனப் பதிவுகளான கர்மவாஸனைகளுக்குள்ள வேற்றுமையை நன்கு ஆராய்வோம். செய்யப்படும் தொழிலின் நன்மை தீமைத் தன்மையை ஒட்டி ஒருதரமாயினும் அதிலேயே மனதில் ஏற்பட்டு அதற்கேற்ற ஸுகதுக்கமாகப் பலிக்கும் தன்மையை உடையது கர்மா. இது பலிக்கும் தருணத்தில்தான் திடீரென்று மனதில் ஸுகதுக்க ரூபமான உணர்வை உண்டாக்கி மனதைக் கலக்கும். சிற்சில ஸமயங்களில் கர்மா பலிக்கும் விதத்தை மனதில் கிளம்பும் வாஸனுக் கூட்டங்களிலிருந்து ஒருவாறு ஊஹித் துணரலாம். வெகு வலிவுகுன்றியிருப்பினும், கர்மா பலிப்பதைத் தடுத்து விடவே முடியாது என்பது தான் முன் எடுத்துக் காட்டப்பட்ட கர்மகதியின் ஸாரம். இது, முன் செய்து பதிவுரூபமாக ஏற்பட்டுள்ள ஸஞ்சித மூட்டையில் பலிக்

கத் தொடங்கிவிடும் ப்ராரப்த கர்மப் பதிவு தான். சிற்சில ஸமயங்களில் தகுந்த ஸந்தர்ப்பங்களையும் அமைத்துக் கொண்டேதான் இப்பதிவுகள் தொழிற்படும். வாஸனையோ ஒரு கர்மா நடைபெறும்பொழுது உண்டாவதாயினும், அதையே மறுபடியும் மறுபடியும் செய்து வந்தால்தான் திடப்படும்: ப்ராரப்தானுபவ முடிவுகளிலும் வாஸனைகள் உண்டாகி திடப்படும். இவை, விளங்கக்கூடிய படிகள் வழியாகவேதான் ஒருவனை ஒருவிதத் தொழிலை நடத்தத்தூண்டும். ஆகவே, இவை எவ்வளவு பலமாக விருப்பினும், தகுந்த பலமான விடாமுயற்சியால் தடுத்து நாம் நிறுத்திவிடலாம். இவைகள் நல்லவை, கெட்டவை என இரண்டு விதமாக விருக்கும். ஆகாமி கர்மா நடைபெறுவதற்கு வேண்டிய எண்ணங்களை மனதில் கிளப்புகின்றவை இவ்வாஸனைகள்தாம். இவைகளை ஸரிவர ஒழுங்குபடுத்தி மானிடர்களை நற்கதி யடையச்செய்யத்தான் சாஸ்திரங்களெல்லாம் ஏற்பட்டுள்ளன. இப்படி இரண்டுவிதப் பதிவுகள், செய்யப்பட்ட ஒவ்வொரு கர்மாவுக்கும் ஏற்பட்டிருப்பதால்தான் நமது சாஸ்திரங்களில் 'எல்லாம் பூர்வகர்மாவின்படி நடப்பவை; மனிதனால் என்ன முடியும்?' என்றும் 'விதியை மதியால் வெல்லலாம்; நம் முயற்சியால்தான் எல்லாம் ஆகவேண்டும்' என்றும் இரண்டுவித கர்மவிஷய வாக்கியங்கள் காணப்படுகின்றன. இவைகள் தம்முள் ஒருவித விரோதமும் இல்லை. முன் வாக்கியத்தில் பூர்வ கர்மா என்பது இங்கு கூறப்பட்ட (ப்ராரப்த) கர்மப் பதிவு, எல்லாம் என்பது வந்தடையும் ஸுகதுக்கங்கள்தாம்: இரண்டாவது வாக்யத்தில் விதி என்பது வாஸனைப் பதிவான கர்ம பலன், எல்லாம் என்பது நன்மை தீமையான நடத்தைகள்: ஆகவே முன்வாக்கியம், 'இவ்வுலகில் ஏற்படும் ஸுகதுக்கமெல்லாம் ப்ராரப்தத்தால் வருவதால் அவைகள் விஷயத்தில் மனிதனால் ஒன்றும் செய்யமுடியாது. அவன் தலைகுனிந்து விடவேண்டியதுதான் என்றும்; இரண்டாவது 'இவ்வுலகில் நடத்தை விஷயத்தில் கர்மாவின் பலனான வாஸனையை விட மனிதன் விடாமுயற்சியே சிறந்தது' என்றும் கூறி கர்மவாஸனா விவேகத்தை திடப்படுத்துகின்றது. இந்த நுட்பம் உணராது பலர் முன்னர் கூறப்பட்ட இரண்டு வாக்கியங்கள் ஒன்றற்கு ஒன்று முரணுடையவை என்று கொண்டு கர்மகதி விஷயத்தில் ஒன்றைப் பின்பற்றி முறையே ஸ்வதந்திரமிழந்தோ அல்லது வீண் கர்வம் பிடித்தோ திண்டாடுகின்றனர். வேறு சிலர் நமது சாஸ்திரங்கள் வெறும் புரட்டு என்று எளிதில் தீர்மானித்து, மனம் போன போக்கே போகத் தொடங்கி அதோகதி யடைகின்றனர். இக்கொடிய நிலைகளெல்லாம் கர்மவாஸனா விவேக நுட்பமுணரா அறியாமையால்தான் உண்டாவன.

இப்படி ஸுகதுக்கமாக பலிக்கும் கர்மாவும், நல்ல அல்லது கெட்ட நடத்தைகளாகப் பலிக்கும் வாஸனைகளும் வேறானவைகளாக இருப்பினும் உலகில் இவைகள் நான்கு விதமாகக் கலந்து காணப்படுவதால் முன் எடுத்துக் காட்டப்பட்ட கர்ம கதிக்கு முரணாக உலக அனுபவம் இருப்பதுபோன்ற குழப்பம் எல்லோருக்கும் ஏற்படுகிறது. நல்ல கர்மா ஸுகமாகவும் தீயகர்மா துக்கமாகவும்தான் முடியும் என்பது கர்ம கதி. இதுவுமன்றி, வெகு காலங்கழித்துத் தகுந்த தருணத்தில்தான் இம்முடிவு ஏற்படும் என்பது கர்மகதியின் முக்ய பாகம். இப்படி இருப்பினும் உலகில் பின்னர் காட்டப்படும் நான்குவித கர்மவாஸனைச் சேர்க்கை ஏற்படுங்கால் நமது மனம் குழம்பித் திண்டாடாது போவதில்லை. (1) தீயோர் திண்டாடுவேது: தீயவாஸனைத் தொழிற்பாட்டின் முடிவில் துக்க ப்ராரப்தம் பலிப்

பது. திருடன் பிடிபட்டு தண்டனைப்படுவது போன்றவை நடக்குங்கால் நாம் ஸந்தோஷக் குழப்பத்தில் மூழ்கி கர்மகதி எவ்வளவு அழகாக நடைபெறுகின்றது: கெட்ட வழி நடக்கவேகூடாது என்று தீர்மானிக்கிறோம். இப்படியாவது திடப்பட்டு நல்ல வழிக்கு மானிடர் வரவே ராஜாங்கங்கள் ஈசன் ஏற்பாட்டிலுள்ள துக்கங்கள் நரகங்கள்போல தண்டனைகளையும், சிறைச்சாலைகளையும் அமைத்துள்ளன வெகு விரிவாக. (2) நல்லோர் செழிப்பது: நல்ல வாஸனைத் தொழிற்பாட்டின் முடிவில் ஸுக ப்ராரப்தம் வருவது. தர்மிஷ்டர்கள் ஸகல ஸம்பத்துக்களுடன் வாழ்வது போன்றவைகளைக் காணுங்கால் நம்மை யறியாது கர்மகதிப் புகழ்ச்சி உண்டாகி விடும். இவ்வழியில் மானிடர்களை முன்னுக்குக் கொண்டுவர ஸ்வர்காதி ஸுகங்களைப்போல, இனாங்களும் பட்டப்பெயர்களும் உத்தியோகங்களும் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டுவித மனமகிழ்ச்சியும் உலகானுபவம் அதிகப்படப்பட நிலைக்காதென்பது பின் வரும் இரண்டுவிதச் சேர்க்கையால் விளங்கும் (3) நல்லோர் வருந்துவது: நல்லவாஸனைத் தொழில்களின் முடிவில் துக்கம் வருவது. தர்மபுத்திரர், ராமர், ஸீதை இவர்கள் கதி, தர்மவான்கள் வ்யாதி முதலியவைகளால் திண்டாடுவது, இவை போன்ற கண்ராவிகள் உலகில் அதிகம் உண்டு. இதைக் கண்டதும் ஸாதாரணர்களுக்குக் கர்மகதி விஷயத்தில் கொடிய குழப்பம் ஏற்பட்டுவிடும். சிலர் தெய்வத்திற்குக் கண்ணில்லை என்று கொதிப்பர் இத்தருணங்களில். ஆனால் இந்த கர்மவாஸனைச் சேர்க்கைதான் கர்மவாஸனா விவேகத்தை நன்கு திடப்படுத்துவதால் பக்திமான்களால் மிகவும் விரும்பப்படும். இதுதான் இப்பொழுது வாஸனைகளை ஒழுங்குபடுத்தி நல்வழிநடப்பதால் ஸுகம் பின்னர் உண்டாகும், இப்பொழுது வரும் துக்கம் முதலியனவெல்லாம் முன்வினைப் பயன் என்று காட்டி கர்மகதியின் உண்மையை நன்கு விளக்கும். அதாவது இப்பொழுது முனைந்திருக்கும் தொழிலுக்கும் உடனே ஏற்படும் ஸுக துக்கங்களுக்கும் காரிய காரண சம்பந்தமே இல்லை, எவ்வளவு நெருங்கிய ஸம்பந்தமிருப்பதுபோலத் தோற்றிய போதிலும், என்பதுதான் கர்ம கதி உண்மை. இது முன்னர் எடுத்துக் காட்டிய இரண்டுவிதப் போலிச் சேர்க்கையிலும் முயற்சியின் நன்மை தீமைக்கும் பின் வரும் ஸுக துக்கத்திற்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நன்கு விளக்கினும், இந்த மூன்றாம் சேர்க்கையைப்போல இவ்வளவு நன்றாக விளக்காது. (4) தீயோர் தேறியிருப்பது:—கெட்ட வாஸனைத் தொழிற்பாட்டின் முடிவில் ஸுக ப்ராரப்தம் வருவது. இது பலர் மனதில் 'தெய்வத்திற்குக் கண்ணில்லை'? என்ற கொதிப்பை உண்டாக்கினாலும், மிகக்கொடிய சேர்க்கை. இதை கவனியாமலே உபேக்ஷைசெய்து ஒதுக்குவது நலம். ஸாதாரணர்களை இது வெகு எளிதில் படுகுழியில் வீழ்த்திவிடும்: தேரிவரும் விவேகிகளைக் கூட குழப்பி நிலைகுலைக்கப் பார்த்துவிடும். இவ்வாறு உலகில் காணப்படும் கர்மவாஸனைச்சேர்க்கை காரியகாரணத்தைப் பொருத்ததாக இல்லாது வெறும்நெருக்கமாயினும் பலவிதக்குழப்பங்களை உண்டாக்கும் தன்மை இருப்பதால் மூன்றாவது சேர்க்கையைத் தவிர மற்றவைகளை ஒருபொருட்டாக மதியாமலிருப்பின் நலம் என்று சாஸ்திரங்கள் கூறும். இவ்விஷயத்தில் சாஸ்திரங்கள்விதி வெகு தீர்மானமாகவும் உள்ளது. ஸுகிகளான நல்லோரிடம் உறவும், (மைத்ரீ), துக்கிகளான நல்லோரிடம் உருக்கமும் (கருணை), நடுநிலையிலுள்ள நல்லோரிடம் உவப்பும் (முதிதை) தீயோர் எப்படி இருப்பினும் அவரிடம் உதாஸீனமும் (உபேக்ஷ

யும்) பாராட்டவேண்டும்.' என்பதே. ஆதலால் இந்த கர்மவாஸனா விவேகத்தைக்கொண்டு கர்மகதியை பொருள்படுத்திஞல் விதி, புருஷப்ரயத்ன இவைகளின் பொருத்தமும், இடைவெளிகளும் நன்கு வெளிப்பட்டு, விதியே பெரிதென்ற அடிமைத்தனமும், தன் முயற்சியே பெரிதென்ற வீண்கர்வமும் உண்டாகாது, முன் ஸரிவர முயற்சிக்காததால் நம் ஸ்வதந்திரத்தை நம் கர்மவாஸனைகள் வந்து தாக்கும்: இப்படித் தாக்கவொட்டாது இனிமேல் ஸ்வதந்திர விருத்தி செய்து கொள்ளும் வழியும் இன்னது என்பதை கர்மகதியை வெளியிட்ட நம் சாஸ்திரங்களே விளக்கும்.

முக்கியமாகக் கர்மப்பதிவுகளைப் பற்றியது தான் கர்மகதி. இவைகளுள் உண்டாகும் ஸுக துக்கங்களோடு, இவைகளில் அகப்படுபவன் முயற்சி எல்லைக்கு அப்பாற்பட்ட ஸந்தர்ப்ப விசேஷங்களும் அடங்கும். இவ்விசேஷங்கள் ப்ராரப்தம்பலிக்கும் மூன்று வகைகளுள் ஜாதி அல்லது பிறப்பு என்ற பாகத்துள்ளடங்கும். ஆகவே ஒருவன் பிறப்பு மேலானதாயும், நடத்தை சிறந்ததாயும் இருக்க இருக்கத், தடைகள் ஸூக்ஷ்மமாயும் அதிகமில்லாதனவாயும் இருக்கும். உலகில் கெட்ட காரியத்திற்கு இணங்குகிறாயா, அல்லது இந்த நல்ல காரியத்தில் முனைவாயா? என்று பிறரால் கேட்கப்பட்டு ஒருவன் வற்புறுத்தப்படுதல் அவன் ப்ராரப்தம்தான், ஒருவழியாக அவன் முயலத்தொடங்குவது அவன் வாஸனையால்: ஆகவே முன்னதன் விஷயத்தில் இவனுக்கு ஒன்றும் செய்யவியலாது. பின்னதன் விஷயத்தில் இவன் முயற்சிதான் எல்லாம். ஈச்வரபக்தியால் கெட்ட ப்ராரப்தாதிகளைக் கண்டுபிடிக்க முடியும். தகுந்த ப்ராயச்சித்தங்களால் அவைகளைச் சுற்றியுள்ள வாஸனைகள் தடுக்கப்பட்டு, ப்ராரப்தங்களை பலமான ஈச்வரபக்திபோன்ற அத்யுத்கட புண்ய கர்மாக்களால் சற்று ஒழுங்கில் மாற்றி ஒதுக்கவும் படலாம். மார்க்கண்டேயரே இதற்குத்தகுந்த திருஷ்டாந்தம். விடாது முற்கூறிய கர்மாக்களைச் செய்துகொண்டேவந்தால் ஈச்வர பக்தியால் ஞானம் கைகூடும் வரையில் ப்ராரப்தகர்ம பலன்களை ஒதுக்கிக்கொண்டே வரலாம். முன்னர் கூறிய ப்ராயச்சித்தங்கள் கெட்ட ஸஞ்சிதங்களை நேரே தாக்கி ப்ராரப்தமாகவொட்டாது எரித்துவிடும். இதுபற்றியே நம் முயற்சி ஸம்பந்தமின்றி ஏற்படுவதான கெட்ட ஸ்வப்னங்கள், அபவாதங்கள் இவைகளால் வெளிப்படும் கெட்ட கர்மப்பதிவுகளுக்குக் கூட சாஸ்திரங்களில் ப்ராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இப்படி ப்ராயச்சித்தங்கள் செய்யாவிடில் கெட்ட ஸஞ்சிதங்களும், துர்வாஸனைகளும் பின்னர் ப்ராரப்தமாகி ஸுக துக்கமாக மாறிப் பயன்பட்டு பலவித கர்மவாஸனைகளை உண்டாக்கிக் குழப்பப்படுத்தித் தான்விடும். நல்ல ஸஞ்சிதங்களை ப்ராரப்தமாவதற்கு முன் ஒழித்துவிட ஈச்வரபக்தியால்வரும் ஞானத்தால் மாத்திரம் தான் முடியும். இந்த ஞானம் கெட்ட ஸஞ்சிதம் சிறிதாயினும் மனதில் இருக்குமளவும் அணுகவே மாட்டாது. இதுவந்துவிட்டால் ப்ராரப்தத்தின் வலிகூடக் குன்றிவிடும். ப்ராரப்தத்தின் முதல் இரண்டு பலன் மாத்திரம் இருக்குமே ஒழிய மூன்றாவதான ஸுகதுக்கமாற்றம் ஞானி விஷயத்தில் இருக்கவேஇராது. இக்காலக்கொடுமையால் நம்மில் பெரும்பாலாருக்கும் முற்கூறியபடி ப்ராரப்தகர்மப்பதிவுகளில் ப்ராயச்சித்த பக்தி, ஞானங்கள் வழியே நன்றாக உழைக்க முடியாது. ஆதலால் கூடியவரையில் ருஷிகளால் இக்காலத்திற்கேற்ப மாற்றிவைத்துள்ள வழிகளைப் பின்பற்றி கர்மப்பதிவுகளில் ஒருவாறுதான் நம்மால் உழைக்கமுடியும்.

வாஸனைகள் விஷயமோ இப்படியல்ல. இவைகள் நுட்பமாயினும் இவ்வாறு தொழில் செய்ய நம்மைத் தூண்டுகின்றன என்பது வெளிப்படை. முறையே வாஸனைகள் ஸங்கல்பங்களை உண்டாக்கி, ராகத்வேஷமாகத் தடிக்கச்செய்து, நிச்சயத்தைக் கிளப்பிவிட்டு, தொழிலாகிய சேஷ்டைகளை நடைபெறச்செய்யும். இந்த சேஷ்டை நிலையில்தான் பாப, புண்ணிய, புண்யபாபமின்மையான நிலைகள் ஏற்படும். உதாரணமாக நல்லமாம்பழம் போய்க்கொண்டிருக்க அதை ஒருவன் முதலில் பார்க்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். இந்த மாம்பழம் ருசியாகவிருக்கும் என்று தோற்றுவது வாஸனை ஸங்கல்பமாக வெளிவரும்நிலை. இது எனக்கு வேண்டும், அல்லது நான் நோயாளியாதலால் எனக்குத் தேடுதி வேண்டாம், என்பது ராகத்வேஷத்தடிப்பு நிலை: இதை எப்படியாவது பெறவேண்டும் அல்லது இதைவிட்டு ஒதுங்கிவிடவேண்டும் என்பது நிச்சயநிலை. இதற்கேற்றபடி தேஹத்தால் ஒதுங்குவதோ, பழம் பெற முயலுவதோ சேஷ்டைநிலை. வாஸனைகளை நிதானித்து நோக்கி சாஸ்திரவிதிப்படி ஒழுங்குபடுத்திப் பழகாவிடில் கண்பார்த்தும் தேஹம் செய்வதாகத்தான் தோற்றும்: இப்படிப்பட்டது வாஸனைக்கு அடிமையான நிலைதான்: நிதானித்துப்பார்த்தால் இந்நிலை வேறுபாடுகள் நன்றாக வெளிப்படும். முற்கூறிய மாம்பழவிஷயத்தில் தட்டிப்பிடுங்குவது பாபத்தொழில்: பணங்கொடுத்து வாங்குவது புண்யபாபமின்மையான தொழில்: பழங்கள் விலையாக உதவிபுரிந்து பழக்காரன் கொடுக்கும் பழத்தைப்பெறுதல் புண்யம். இவ்வாறுவாஸனைகள் சேஷ்டைகளாக நடந்தேறிவிட்டால் உடனே அவைகளுக்கு ஏற்ற கர்மவாஸனைப்பதிவுகள் மனதில் ஏற்பட்டு ஸஞ்சித மூட்டையுடன் சேர்ந்துவிடும். இவ்வாறு வாஸனை ஒருதரம் சேஷ்டையாக 'நாம் இதைச் செய்யவேண்டும்'

என்ற உணர்வு முதல் தொடங்கி 'நாம் இதைச் செய்தாகிவிட்டது' என்ற உணர்வுவரை வந்துவிட்டால், ஒரு கர்மா நிகழ்ந்தது என்பது நமது சாஸ்திரங்கள் துணிபு. இப்படி ஒரு கர்மா நிகழ்வதற்கு ஐந்து ஸாதனங்கள் வேண்டும் என்று பகவான், கீதை XVIII-13-15 ச்லோகங்களில் பின்வருமாறு விளக்குகிறார்:

எவ்வகையாம் கன்மமும் ஏதமற வேமுடிக்க
ஐவகையாம் காரணங்கள் ஆங்குளவாம்—செவ்விச்
செயல்முடிவாம் ஸாங்கியத்தில் செய்பவற்றை என்
வயமுடையாய் கேளாய் நீ மற்று. [யால்

சேரும் அதிஷ்டானமும், செய்பவனும் பல்வகையாத்
தேரும் கரணமும் சேஷ்டைகளும்—சீருடைய
தெய்வமும்என் றைவகையாம் செப்பிய அக்காரணங்
கெய்தவழும் வேலாய் நினை. [கள்

காயமொடு வாக்குக்கருத்தென்னும் இன்னவற்றால்
ஞாயமனி யாயமென நண்ணும்வினை—மேயநரன்
யாதொன்றைத் தானங்கியற்றிடினும் இவ்வைந்தும்
ஏது அதற்கென்றே அறி.

ஆகவே, வாஸனா வசமாக ஒரு கர்மா நடைபெற தேஹம், செய்பவன் என்ற உணர்வு, பலவகை இந்திரியங்கள், அவைகள் தொழிற்பாடுகள், அபிமானி தேவதைகளின் ப்ரஸாதங்கள் ஆகிய இவ்வைந்தும் வேண்டும். இவைகளில் முறையாக ஒவ்வொரு நிலையிலும், வாஸனைகளை சாஸ்திரவழிப்படி முயன்று அடக்கி முடிவில் அழித்து நாம் ஈடேறலாம். இந்த முயற்சியில் மனதில் எழும்வாஸனைகளிலிருந்து பின்வரும் ஸுகதுக்கங்கள் ஊஹிக்கமுடியுமாயினும், சகுனவிஷயங்களைப்போல வாஸனைகள் வெறும் குறிகளே ஒழிய பின்னவைகளுக்கு காரணங்களேயல்ல என்ற உணர்வு அவசியம். அடுத்த ஸஞ்சிகையில் வாஸனைகளை அடக்கும் வழிகளை நன்கு எடுத்தாராய்வோம்.

மிஸ்டர் ஜேம்ஸ் கீர் ஹார்டி

MR. JAMES KEIR HARDIE, M.P.

மிகத் தாழ்ந்த நிலைமையிலிருந்து ஆங்கிலேய அரசாட்சியின் மகுடமாய் விளங்கும் ஜனப்ரதிநிதி ஸபையில் ஒருவராய் நின்றவர் சென்றமீ 26வ. காலஞ் சென்ற மிஸ்டர் கீர் ஹார்டி. 1856ஹு பிறந்த இவர், தம் ஏழாம் வயதிலேயே வேல்ஸ் மாகாணத்திலுள்ள நிலக்கரி சுரங்கங்களில் கூலி வேலை செய்யச் சென்றார். மிஸ்டர் ஹார்டியின் பெற்றோரும் தம் சரீர உழைப்பாலேயே ஜீவித்து வந்தமையின் தம் மகனுக்குச் சரியான கலாசாலைக் கல்வி கற்க அனுப்ப முடியவில்லை. ஆனால் சிறு வயதுமுதல் படிப்பின்மீது அதிக விருப்பம் கொண்ட அவர் தம்மாலான வரையில் தாமாகவே கற்று வந்தார். புகை பிடித்த ஒருதகரத் தட்டின்மேல் சிறு குச்சியினால் எழுதி இவர் சுருக்கெழுத்து (Shorthand) கற்றனராம்.

இவ்விதமான ஆவல் கல்வியின்மீது வரவர அதிகரித்தது. தானும் கூலிவேலை செய்ததால், தன் நண்பர்களுடைய கஷ்ட நஷ்டங்கள் முதலியவற்றை நன்கறிந்தார். தன் முயற்சியினாலேயே சுரங்க வேலைக்காரர்களின் தலைவரான இவர், 24-ம் வயதிலேயே அவர்களுடைய சங்கத்திற்குக்காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்.

கல்வியில் நல்ல பாண்டித்தியம் இருந்ததால் 1882ஹு 'கம்மக் சமாசாரம்' என்னும் பத்திரிகைக்கு முதலில் பத்ராதிபராகவும், பிறகு 1887ஹு முதல் 1904ஹு வரையில் "சுரங்க வேலைக்காரன்" (The Miner), 'லேபர் லீடர்' (Labour Leader) என்னும் பத்திரிகைகளுக்குத் தலைவராகவுமிருந்தார். இவைகளைவிட பார்லிமெண்ட் மெம்பராக இவர் செய்த காரியங்களே அனைவருக்கும் இவர்மீது பற்றுண்டாகச்செய்கின்றது. 1886ஹு முதல் வேலைக்காரர்களுடைய நிலைமையைப்பற்றி இவர் மிகுந்த ஊக்கத்துடன் வேலை செய்துவந்தார். தாமே கூலி வேலை செய்தவராதலால் அவர் அப்படி உழைத்தது நியாயமானதே: 1892ஹு ஸௌத் வெஸ்ட்ஹாம் என்னுமிடத்திற்குப் பிரதிநிதியாக தெரிந்தெடுக்கப்பட்டார். நம்மவரில் சிலர் முனிஸிபல் கவுன்ஸிலில் அங்கத்தினராகும் பொருட்டு படும் கஷ்டமும், ச்ரத்தையும் அளவற்றதென்பதையும், அந்த கௌரவம் அவைகளுக்கீடாக இருக்கின்றதென்பதையும் பார்ப்பின், உலகமெங்கும் பரவிய ஆங்கில ராஜ்யத்தின் தலைமை யதிகாரிகளாயிருக்கும் காமனஸ் ஸபையின் அங்கத்தினராவது மிகச் சிறந்தது என்பது நாம் கூறாமலே விளங்கும்.

பார்லிமெண்ட் மெம்பரான பிறகு மிஸ்டர் ஹார்டி இடைவிடாது தொழிலாளிகளுக்காக உழைத்து வந்தார். இவைகளுக்கெல்லாம் ஓர் அறிக்கைபோல் லிபரல்ஸ் கட்சியார் 1905-ஹு முன்வந்தபோது தனித்தொழிலாளிகளின் கட்சி (Independent Labour-Party)க்கு அக்ராஸனாதிபதியாக மிஸ்டர் ஹார்டி தெரிந்தெடுக்கப்பட்டார். 1900-ஹு மேர்த்தைர் டைட்வல் என்னுமிடத்திற்கு ப்ரதிநிதியாகத்தெரிந்தெடுக்கப்பட்ட அவர் தாமிறக்கும் வரையில் பார்லிமெண்டில் ஒரு மெம்பராக இருந்தார். இவரது தீட்சண்ய புத்தியும் மனிதர்களின்மீது அபிமானமும் மிகுந்த நன்மையுண்டாக்கின. ஆங்கிலேய ஆட்சியில் ஜனங்களின் நிலைமையை யறியவிரும்பிய மிஸ்டர் ஹார்டி 1907-ஹு இந்தியாவிற்கு விஜயஞ் செய்து, தாம் கண்டவற்றை ஒரு சிறு நூலில் ப்ரசுரம் செய்தார். அவர் தாம் கண்ட குறைகளை மிகவும் தைர்யத்துடன் எழுதியது பலருக்குக் கோபம் மூட்டியபோதிலும், தீமைகளை எடுத்துரைத்தமையால் நன்மையே விளைத்தது என்று சொல்லலாம். நம் தேசத்தில் குழப்பங்களுண்டான அக்காலத்தில் மிஸ்டர் ஹார்டி ஸம்பவங்களை உள்ளபடியே உரைத்து இந்தியர்களுடைய நிலைமையை நன்றாய் எடுத்துக்காட்டினார். இதனால் பலர் அவரை வெறுத்ததுமுண்டு.

மிஸ்டர் ஹார்டி தாம் நடத்திவந்த பத்திரிகையில் இந்தியாவின் விஷயங்களை விரிவாக எடுத்துரைத்து, சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்யவேண்டியது அவசியமென்பதைக் காட்டினார். மஹாயுத்தம் தொடங்கிய பின்பு, மிஸ்டர் ஹார்டி, ஸமாதானமே மேலானது என்று வற்புறுத்தினதற்காக பலர் அவரைக் கடிந்தபோதிலும், உண்மையிலேயே அவர் பெருங்குணம் வாய்ந்தவர். நம்மிந்தியர்மீது அன்புகொண்டவர். இவர் காலமடைந்ததால் ஆங்கிலேயருள் நம்மவர்களுடைய ஆப்த நண்பர்களுள் ஒருவரை இழந்தோம் என்பதற்கு ஐயமில்லை.

சரித்திரம் படிப்பதன் பயன்

BENEFITS OF HISTORICAL STUDY

நம் நாட்டில் பலகலைகளிலும் வல்லுநராய்ப் பல மேதாவிகள் இப்போது விளங்குகிறார்கள். ஆதிகாலந்தொட்டு பல சாஸ்த்ரங்கள் இந்தியாவில் பயிலப்பட்டு வந்தாலும் சரித்ரமென்ற ஒரு பகுதி மட்டும் முற்றிலும் நடை பெறவில்லையென்றே சிலநாளாகச் சில மேன்மக்கள் கருதி வந்தார்கள். அக்கொள்கை சரியல்லவென்பதற்குச் சான்றுகள்பல தற்காலத்தில் ஏற்படுகின்றன. முன்னோர் எழுதிவைத்த தனி சரித்ர நூல்களும் சரித்ரத்தின் சில பாகங்களைக் குறிக்கும் ஏனை நூல்களும் சிறிது சிறிதாக வெளிவந்து கொண்டிருப்பதால் அவை பன்னெடு நாட்கு முன்னர் நிகழ்ந்தவற்றைக் கூறிற்றிலவாயினும், நடந்த விஷயங்களை எழுதிவைத்துச் செல்வதாகிய ஒரு வழக்கம் நம்மவர்க்குள் முன்னாள் முதல் இருந்ததென்பதை நன்றாக வெளிப்படுத்தும்.

தற்காலத்தில் சரித்ர நூல்களோ நாளுக்கு நாள் வ்ருத்தியாகின்றன. ராஜபாஷையிலன்றி தேசபாஷைகளிலும் பலதேசத்துச்சரித்ரங்கள் எழுதப்படுகின்றன. ஆதலின் சரித்ரங்களின் அருமை பெருமைகளை உணர்வதும் அவற்றைப் போற்றுவதும் நமது கடமையாகும்.

ப்ரடரிக் ஹாரிஸன் (Frederic Harrison) என்ற ஆங்கில நிபுணர் சரித்ரத்தின் தாத்பர்யத்தைப்பற்றி (The Meaning of History) ஒரு நீண்ட வியாசம் வரைந்துள்ளார். பின்வருவன அவ்வியாசத்தையொட்டித்தமிழ்க்கேற்பச் சில மாறுதல்களுடன் எழுதப்பட்டனவாகும்.

பண்டைக்காலத்து நிகழ்ச்சிகளையும் அக்காலத்து மனிதரின் குணகுணங்களையும் அவரது அபிப்ராயங்களையும் நாம் சரித்ர வாயிலாக ஒருவாறு அறிகிறோம். அவை எவ்வாறு நமக்குப் பயன்படுமென்பதைச் சற்று உற்று நோக்கி ஆராய்வது அவச்யம். அங்ஙனம் நோக்கினோரில் ஒரு சிலர், நன்று முதிர்ந்த நாகரீக காலத்திலுள்ள நாம் அநாகரீககாலத்துச் செய்திகளையும் மனிதர்களையும்பற்றிப் படிப்பதால் விசேஷமான பலனைப் பெறோமென்றும், அவ்விதப் படிப்பில் சென்ற நாட்களெல்லாம் வீணானவென்றும் கூறுவர். மற்றொரு சாரார் முற்காலத்துச் செய்திகளெல்லாம் நமக்குக் களிப்பும் வியப்புந் தருவனவென்றும், அக்காலத்து [illegible] யவைகளின் விளைவால் உலகமடைந்த மாறுபாடுகளை நாம் செவ்வையாக அறியலாமென்றும், அவ்வித மறிவதால் முன்னோர் செய்த தவறுகளை நாம் விலக்கிக் கொள்ளலாமென்றும், பல நீதிகளையும் அரசாட்சி முறைகளையும் அறிவது சுலபசாத்ய மாகுமென்றும், பின் விளைவனவற்றை முன்னமே கண்டறிந்து அவைகளைக் கையாள்வது எளிதாகுமென்றும், மனிதரின் அறிவின் முதிர்ச்சிக்குச் சரித்ரமே சிறந்த சாதனமாகுமென்றும் இன்னுமிவைபோல பல நன்மைகள் நமக்கு சித்திக்குமென்றும் கூறுவர். இவ்விரு கக்ஷியாருடைய கூற்றுகளையும் சீர்தூக்கிப் பார்த்தால், அவை தள்ளத்தக்கவையென்றே புலப்படும்.

முதற் கக்ஷியாருடைய கொள்கைகளைச் சிறிது கவனித்தால், அவை முற்றிலு மாறானவையென்று ஏற்படும். எவ்வாறெனின் காலத்திற்கேற்பப் பழையன கழிதலும், புதியன புகுதலும் மக்கட்கு அவச்யமாயினும், பழையனவற்றை முற்றுந் துறத்தல் கூடாது. நமது புதிய நாகரீகமெல்லாம் ஆதிகாலத்து அநாகரீகத்தை அடிப்படையாகக்கொண்டெழுந்தவை; நமது சிறந்த கொள்கைகளெல்லாம் பூர்வகாலக்கொள்கைகளின் முதிர்ச்சிதான். நமது அரசாட்சிமுறையாவும் ஆதிமுறைகளைப் பின்பற்றித் திருத்தப்பட்டனவாகும். நமது மதக் கோட்பாடுகளும், தேசாசாரங்களும், சாஸ்திரங்களும், நடையுடை பாவனைகளும் தொன்றுதொட்டு நம் முன்னோரால கையாளப்பட்டு, பல்வேறு சமயங்களில் பல்வேறு மாறுதல்களையடைந்து இன்னும் காலத்திற்கேற்பத் திருத்தமடைகின்றன. வெவ்வேறு துறைகளில் எத்தனையோ பேர்கள் முயன்று நம் முன்னோர்களைப் புதிய வழிகளில் திருப்பியுள்ளார்களென்பதை தேசசரித்திரங்கள் செவ்வையாகக் குறிக்கின்றன. இதனாலன்றோ நாம் பன்னெடு நாட்கு முன்னிருந்த ராமர், பாண்டவர், ஜனகர் முதலிய இதிஹாச புராணச் செல்வர்களையும், தற்காலம் சரித்திர பூர்வகமா யறியப்படுகிற சந்திரகுப்தன், அசோகன், விக்ரமார்க்கன், ராஜராஜன், அக்பர், ஔரங்கசீப் முதலிய இந்திய வேந்தர்களையும், க்ளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ், டல்

ஹௌஸீ, ரிப்பன் முதலிய ஆங்கில ராஜப்ரதிநிதிகளையும், புத்தர், மகாவீரர், சங்கரர், கிறிஸ்து, முகமது, ராமானுஜர், மத்வாசாரியர், கபீர்தாஸ், க்ருஷ்ணசைதன்யர், வாகீசர், அப்பர், சுந்தரர், தேசிகர், நாதமுனிகள் முதலிய சமயாசாரியர்களையும், மனு, யாஞ்யவல்க்யர், பாராசரர் முதலிய தர்மசாஸ்த்ர நிபுணர்களையும் அடிக்கடி நினைக்தும் அவரது அமுத வாக்யங்களை சமயோசிதமாக உபயோகித்தும் வருகிறோம். நமது தாய் நாடாகிய இந்தியாவை உலகில் ஒப்புயர்வற்ற நிலையில் வைக்கும்படி நாமிப்போது முயற்சிப்பது பூர்வம் இந்தியா உன்னத நிலையிலிருந்ததென்ற ஞாபகத்தால்தான். நாம் தற்காலத்தில் உழைத்துவரும் துறைகளில் புதிய வழிகளைத் தேடிச்செல்வதில் நமக்கு எவ்வளவு துயரமும் கஷ்டமும் விளைகின்றன. பூர்வ நடையுடை பாவனைகளும் கொள்கைகளும் சில சமயங்களில் நமக்கு அருவருப்பை விளைத்தபோதிலும் நமது முன்னோருடைய வழிகளை நாம் முற்றிலும் வெறுப்பதில்லை. நமக்கு வேண்டியவைகளைமட்டும் எடுத்துக்கொண்டு பிறவற்றைத் தள்ளிவிடுகிறோம். இவ்விதஞ் செய்வதிலும் நம்மவர்களுக்குள் ஒற்றுமை கிடையாது. இஷ்டப்படி அபிப்பிராய பேதங்களை வெளிப்படுத்துவதற்கு இடந்தருகிற இக்காலத்தில் அறிவின் முதிர்ச்சியால் வெவ்வேறு நிலைப்பட்ட மனதைக்கொண்ட நமக்குள்ளாக எவ்விதம் ஒற்றுமை யுண்டாகும்? இது நிற்க.

நாம் வாசிக்கும் இலக்கிய இலக்கண நூல்களெல்லாம், நம் முன்னோரியற்றினவைதாம். சிற்பம், சித்ரம், நெய்தல் முதலிய தொழில்களும், ஜ்யோதிஷம், வைத்யம் முதலிய சாஸ்த்ரங்களும் நமக்கு முன்னோரால் தரப்பட்டன. ஆதலின் தற்காலத்தில் வெவ்வேறு துறைகளின் ஊக்கிமுயல்கிற ஒவ்வொருவரும் முன்னோருடைய வழிகளைப்பற்றி நடந்து அவருடைய கருத்துகளோடு ஒருப்பட்டு அவர் தேடிப்பிடித்த அபிவிருத்திக்குரிய மார்க்கங்களைப் பன்மடங்கு பெருக்கியும் எளிதாக்கியும் விடுகிறார்கள். இவ்வித அரிய செயல்களைக் கண்கூடாகக் கண்டும் சரித்திரம் படிப்பதால் பயனில்லையென்று எவ்வாறு சொல்லக்கூடும்? ஆதலின் நாகரீக வ்ருத்தியையும் தேச மேன்மையையுங் கருதி முயற்சிப்பவனுக்கு முன்னோருடைய போக்குகளையும் கருத்துகளையும் உதறிவிடுதல் சாத்யமாகாது. ஒருமுறை தன்னை மறந்தாலும் அவைகளை மறத்தல் அவனுக்கு இயலாது.

அவைகளை முற்றிலுமவ்வாறு மறந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது நமது கதி ஏதாகுமென்று யோசியுங்கள்: தற்காலத்தில் நாமடைந்துள்ள நாகரீகம் பூர்த்தியாக அழிந்துபோம். விலங்கிற்கும் நமக்கும் வேறுபாடு தோன்றாது. நம்முன்னோருடைய அரிய செயல்களும், நாம் கையாளும் சாஸ்த்ரங்கள், கைத்தொழில்கள், நடையுடைபாவனைகள், அரசாட்சிமுறைகள் முதலிய யாவும் இறந்துவிடும். மனிதயத்னமென்ப தொன்றிருந்ததென்ற ஞாபகத்தையும் நாம் மறந்துவிடுவோம். குலம் கோத்ரம், பெண்டு பிள்ளைகள் முதலிய அபிமானங்கள் நம்மிடம் அற்றுப்போம். தமர், பிறர் என்ற வேறுபாடுகள் நமக்குத் தோன்றா. நமது ஸ்வதந்த்ரம் அனைத்தும் நீங்கிவிடும். நியாய நெறிகளை நாம் கண்டறியவழி காணமல் தட்டுத்தடுமாறி, மனநிலை குலைந்து சீர்கெட்டுத் திரிவோம். இத்தகைய தாழ்ந்தநிலை நமக்கு சம்பவித்தால், அதனை நீக்கி நம்மை உயர்த்திக்கொள்வதற்காகப் பன்மடங்கு வலியும் அறிவும் நாம் பெற்றாலும், அவ்விதஞ் செய்வது நமக்கு சுலபசாத்யமாகுமா? ஒருநிமிஷமேனும் பிறரோடு ஒத்து வாழ்வோமா? ஒருவர் சொன்னதை ஒருவர் கேட்போமா? யாவற்றையும் புதிதாக நாம்மறுபடியும் சிருஷ்டிப்பது மஹா துர்லபமாகும். மகாநிபுணர்களான சிரேஷ்டர்கள் அவதரித்தாலும் அவருடைய முயற்சியெல்லாம் சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம்போல வீண்கார்யமாக முடியும். நாடுநகரங்கள் யாவும் இரா. குடும்பங்கள் சொத்துகள் யாவும் பாழடைந்து போகும். இப்பரிதாப நிலைமையில் நாம் ஒவ்வொருவரும் ஒரு நூதன பாஷையில் பேசத்தொடங்குவோம். விரைவில் நாடெல்லாம் காடும் சதுப்பு நிலமுமாக மாறிவிடும். குரங்குக்கும் மனிதர்க்கும் வித்யாசந் தோன்றாது. இத்தகைய வேறுபாடுகள் நிகழ்வது உண்மையாயின், நாம் முற்கால வழிகளைப் பற்றாது நடப்பது அரிதினு மரிதாகும். இதுகாறும் கூறியவைகளால், 'எதிர்காலத்தை நோக்கிச் செய்பவையெல்லாம், இறந்தகாலவிஷயங்களை அடிப்படையாகக் கொண்டெழுகின்றன' என்பது வெளிப்படை.

இனி இரண்டாவது கக்ஷியாருடைய கொள்கைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். சரித்திரத்தில் அமைந்துள்ள அபிமானத்தால் பிறர் ஒவ்வாத பல விஷயங்களை அவன் தலையில் சுமத்திவிடுகிறார்கள். அவர் நினைப்பதும்ப[illegible] சில விஷயங்கள் பண்டைக்காலத்தில் நேர்ந்தது போலவே சில காரணம்பற்றி மறுபடியும் பிற்காலத்தில் நிகழ்தலுங்கூடுமென்று கொண்டால் அது உண்மையில் வெற்றுரையாகமுடியும். ஒருகாலத்தில் நிகழ்ந்தவை பிற்காலத்தில் நிகழா. மனிதர் வாழ்க்கை நிமிஷமேனும் ஒரு நிலைப்படாது காலசக்கரம்போல் சுழன்று கொண்டே வருகிறது. ஒருபோதுள்ள நிலை மறுமுறை திரும்பியதென்பது கிடையாது. இவ்வுலகில் நடைபெறும் விஷயத்தொகுதிகள், பல பகுதிகள், அங்கங்கள், களங்கள் கொண்ட ஒருபெரிய நாடகத்திற்கு ஒப்பாகுமேயன்றி, சிறிதுநேரம் நெருங்கி அமையத்திற்கேற்ப வட்டுகள் பொருதும் விலகியும் ஆட்டமுடிவில் தமது பழையநிலையில் சேருகிற சதுரங்க ஆட்டத்திற்கு ஒப்பாகாது. சரித்ரத்தைத் தீரவிசாரியாது நாம் கொள்ளும் நீதிகளெல்லாம் நன்மையைக்காட்டிலும் தீமையைத்தான் அதிகமாக விளைவிக்கும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் சரித்திரத்தில் ஓர் உதாரணங் காட்டலாம். கொடுங்கோன்மை ஜயம்பெற்றதற்கும், அக்ரமச்செயல்கள் சித்தியடைந்ததற்கும் சரித்திரத்தில் அத்தாக்ஷிகள் குறிப்பிடலாம். நமது தீச்செயல்களையும் புதிய ஏற்பாடுகளையும் சரியென்றே நிலை நிறுத்தலாம். ஆயினும் ஒரு தேசத்திற்குப் பொருந்தினது மற்றொரு தேசத்திற்குப்பொருந்தாது. ஒரு காலத்தில், ஒரு தேசத்தில் ஒரு காரணத்தால் நிகழ்ந்தது வேறொரு காலத்தில் வேறொரு தேசத்தில் முற்றிலுமாறான நிகழ்ச்சிகளாக அதே காரணத்தா லேற்படும்.

இனி, சரித்திரம் படிப்பதால் பல தேயத்துப் பல ஜாதியாருடைய குண விசேஷங்களும் மன நிலை வேறுபாடுகளும் நன்றாய் வெளியாகுமென்று கொண்டால், காவ்யங்கள், நாடகங்கள், நவீனங்கள் முதலியவைகளைப் படிப்பதாலும் அவை வெளியாகுமன்றோ? இராமாயணம், பாரதம் முதலிய இதிஹாஸங்களிலும், காளிதாசர் முதலியோரியற்றிய நாடகங்களிலும் பல பெரியோரின் குணகுணங்கள் வெளியாகின்றனவல்லவா? சிலரியற்றிய நூல்களின் கதாநாயகரது அரிய செயல்கள் உலக நடையை மிகவும் ஒட்டியிருப்பதால் நமக்குப் பேரின்பம் விளைப்பதோடு நம்மனதையுஞ் சிறைகொள்ளுகின்றன. ஆசை வீரம் முதலியன உலகிலொரு [illegible]வெடுத்ததுபோலச் சிறந்து விளங்கித் தமது அரிய [illegible] முயற்சிகளால் தனி நாயகம் பெற்றதாகச் சரித்ர[illegible] கூறப்படும் மகான்களை மேற்கூறிய மேன்மக்களோ[illegible]பிடுதலும் சாத்யமாகாது.

இனி, சரித்ரம் படிப்பதால் வியக்கத்தகுந்த பல விஷயங்களையும் நுண்ணிய அறிவினர் பலரையும்பற்றி யறிந்து கொள்ளலாமெனில், சரித்ரத்தில் நல்லவர்களுமுண்டு, பாவிகளுமுண்டு; கல்வியறிவொழுக்கங்களிற்சிறந்த உத்தமர்களுமுண்டு, கேவலம் கொடுமைகளிலும் தீச்செயல்களிலும் அழுந்திக்கிடக்கும் பழிகாரர்களுமுண்டு. பெரும்பான்மையாக இத்தீயோரின் செயல்களே வாசிப்போரின் மனதைக்கவர்கின்றன. அவற்றைப் படிப்பதைவிட கொலை, களவு, பழிபாவங்களைச் செய்ததற்காகத் தூக்கில் போடப்பட்டும் தீபாந்த்ரங்களுக்கனுப்பப்பட்டுமுள்ள கொடியோரின் ஜீவித சரிதங்களைப் படிக்கலாமே? எவரேனுமப் பாதகரோடு உறவாடுவார்களா? அவ்வாறே, சரித்ரங்களிலும் பாதகர்களைப்பற்றி ஏன் படிக்கவேண்டும்? அவர்களை ஏன் நாம் மனதில் சிந்திக்கவேண்டும்? இது வாசிப்போரின் குற்றமன்று, சரித்ராசிரியரின் குற்றமே. சரித்ர மெழுதுவோர், பெரும்பாலும் அயோக்யர்களையும், முடிச்சவிழ்ப்போர், பழிகாரர், இராஜத்ரோகி, குலத்ரோகி, முதலிய பதர்களையும்பற்றி விரிவாகவும் தெளிவாகவும் இனிதாகவும் நம்மைக் [illegible]ரக்கூடிய நடையில் எழுதுகிறார்கள். அக்கீழ்மக்கள் செய்கைகள் பல [illegible]ழுகளில் விரித்தெழுத இடந்[illegible]ருகின்றன. அதனாலன்றோ உயர்ந்[illegible]த்திர நூல்களில் கீழோர் மேலோரைப்பற்றிய விஷயங்கள் ஒருங்கே விரவிக் காணப்படுகின்றன. நமது தேசத்தில் இதுவரை நிகழ்ந்தவையெல்லாம் எவ்விதம் ஒரு வரையறைக்குள்ளடங்கி ஒருதொடர்புடையனவாகி ஒழுங்காக நடைபெற்று வருகின்றனவென்பதையும், நம்முன்னோரது அறிவு, பெருமை, நல்லொழுக்க முதலியவை எவ்வாறு சிறிது சிறிதாக வளர்ந்துவருகின்றன வென்

பதையும் சரித்ரங் குறிக்குமாயின், நம் முன்னோர் பிதிரார்ஜிதமாகத் தந்த அறிவு ஒழுக்கங்களின் தொகுதி நம்மை வசப்படுத்தி நமக்கு ஊன்றுகோல் போலாகி, ஸன்மார்க்கங்களில் நம்மைப் புகுத்துமாகில், தீயோராகிய மாளிடப் பதர்களைப்பற்றி சரித்ரத்தில …வெழுதுவது பெரும் பேதை…ஆகும். செந்நெற் பயிர் வி… செருவின் கண்களை பறித்தெறி…போல, தீயோரைப்பற்றிய ப்ரஸ்தாபங்களனைத்தையும் களைந்தாலன்றிச் சரித்ர நூல்களைப் படிப்பதில் சென்ற காலம் வீணாகும்.

நமது தற்கால நிலைமைக்கும் நாமனுபவிக்கும் சம்பத்துக்கும் காரணபூதராயுள்ளவர் அறிவிலும் வீரத்திலுஞ் சிறந்த நம் முன்னோரே. அம்மஹான்களைக் கணக்கிட்டெண்ண முடியாது. அவர் தமது வலியால் நாகரீக விரோதிகளைத் தொலைத்துத் தமது புத்தி நுட்பத்தால் இயற்கைப் பொருள்களை வசப்படுத்தி, மக்கட்குபயோகமாகும்படி செய்து கீர்த்திபெற்றிருக்கிறார்கள். பலர் தமதுயிரையே தாமெடுத்துக்கொண்ட தொழிலுக் கர்ப்பணஞ் செய்திருக்கிறார்கள். இவ்வண்ணம் நீண்ட காலமாக அன்னோர் செய்த முயற்சிகளையும் அவற்றின் பலன்களையும்பற்றி விரித்துக் கூறாமல், கேவலம் ஒரு பயனுமற்ற கடையர்களைப்பற்றி சரித்ராசிரியர் விஸ்தாரமாக எழுதுவதும் அதை விழுந்து விழுந்து படிப்பதும் என்ன அறியாமை! மனிதரடைந்த அபிவிருத்திகளைப் பற்றி ஒழுங்காகவும் தெளிவாகவும் சரித்ரங் கூறுமாயின், அதைத் தொடுவோம்; உலகமுள்ளளவும் தம புகழ் நிற்கும்படி அரிய செயல்களைச் செய்துள்ள நம் முன்னோரைப்பற்றிச் சரித்ரம் விரித்துரைக்குமாயின், அதனைப் படிப்…ம்; உலகிலுள்ள பல வகுப்பினரும் தம்மை உயர்த்திக்கொள்ள அவாவி அதற்கு வேண்டிய பல சாதனங்களைத் தேடுகிறாரென்பதை சரித்ரம் விஸ்தரித்துக் …மாயின், அதனைக் கொண்டாடுவோம்; அன்றேல் அதைத் தீண்டவுஞ் செய்யாது விடுப்போம்.

இனி, பூர்வம் நடந்த விஷயங்களை யறிவதற்கு சரித்ரம்படிப்பது அவச்யமென்று நினைத்தால், அவ்வாறு நிகழ்ந்த விஷயங்கள் யாவும் நமக்கு எவ்விதம் பயன்படும்? உலகில் நிமிஷத்திற்கு நிமிஷம் எத்தனையோ செய்திகள் நடக்கின்றன அவற்றில் பெரும் பாகம் கடியத்தக்கதே. அவ்விதம் சோதித்து நீக்காமல் முன் நடந்தவைகளை யெல்லாம் எழுதி வைப்பதால் சில உண்மைகள் பின்னுள்ளோர்க்கு வெளியாகினும், …புஸ்தகங்களால் மனிதர்க்குப் …அறிவு மேற்படாது. ஜனங்களினறிவைப் பெருக்குவதற்கு வழி அதன்று. பல விஷயங்களைச் சரித்ரத்தில் படித்து மனனஞ் செய்வதால் மக்கட்கு ஞாபக சக்தி வளருமே தவிர, அறிவு விருத்தியாகாது. ஆகலின் நாம் முக்யமாகக் கற்கவேண்டியது, நமது சக்தியையும் அறிவையும் பெருக்கி, கார்யங்களைத் துணிந்து செய்யும்படி நம்மைத் தூண்டுகிற வரலாறுகளைத்தான். அதுவே உண்மையான படிப்பு. அறிவைப் பெருக்கும் சிறந்த மார்க்கமுமதுவே. அவ்விதம் படித்தவன்தான் உயர்ந்த ஞானவான்.

நாம் படிப்பதெல்லாம் கார்ய சித்தி பெறுவதற்கான சாதனங்களைத் தேடும்பொருட்டே. நேர் வழிகளைக் கண்டறிய இடந்தரவேண்டும் நமது படிப்பு. தலையைச்சுற்றி மூக்கைத் தொடாது நம்மை அது பாதுகாக்கவேண்டும். கற்றபடி நடக்கத் தெரியாவிட்டால், நமது கல்வியெல்லாம் ஏட்டுச்சுரைபோலாகிப் பயனற்றுப்போம். 'கல்விக் கடலைக் கடந்தறிதல் எவர்க்கு மெளிதன்று.' அக்கடலுக்கோ துறைகள் பலவுள. அவ்வத் துறைகளில் நாம் கண்டறிகிற விஷயங்கள் நமக்கு எவ்வாறு பயன் தருமென்பதையும், அவை மூலமாக நாமெவ்வாறு மேன்மை பெறலாமென்பதையும், நீரொழியப் பாலுண் குருகைப்போல, தெள்ளிதின் உய்த்துணர்வது நம்முடைய முக்ய நோக்கமாக வேண்டும். என்று மிளமையோடிருக்கவும், மருத்துவரை யறவேயொழிக்கவும் கருதி நாம் சரீரசாஸ்த்ரம் கற்பதில்லை. சரீரத்தினது வியக்கத் தகுந்த அமைப்பையும், அதற்குள்ளடங்கிய பல கருவிகள் தந்தம் தொழில்களை எவ்வாறு செய்கின்றனவென்பதையும், எக்காரணம் பற்றிச் சரீரம் பலவிதமான மாறுபாடுகளை யடைகின்றதென்பதையும், எவ்விதம் நாமுணர்கிறோம், எவ்விதஞ் சிந்திக்கிறோம், சிந்தனைக்கு முணர்ச்சிக்கும் சம்பந்தமென்ன, என்பது முதலான அரிய விஷயங்களையும் அறிவதே சரீரசாஸ்த்ரங் கற்பதன் பலனாகும். இதுபோலவே, பிற சாஸ்த்ரங்களைப் படித்தாலும் நமக்கு விளையும் பயனையே முக்கியமாகக் கவனிப்பது நல்

லது. ஸ்தாவர சாஸ்த்ரம் படிப்பதால் வியாதிகளைப்போக்கும் புதிய மூலிகைகளும், பூகர்ப்ப சாஸ்த்ரம் (Geology) படிப்பதால் கனிகளின் நிலைகளும், நமக்கு வெளியாகா. 'ஞாயிறு சலியாது நிலைத்துள்ளது. பூமியே யதைச்சுற்றி யோடுகின்றது' என்ற உண்மை முதன் முதல் வெளியானபிறகு நம்முடைய அறிவு எவ்வளவு விரிந்து விட்டது பாருங்கள்! நமது நோக்கங்களும், அவைகளுக்கேற்ப ஊக்கங்களும் எவ்விதம் வளர்ந்துகொண்டே போகின்றன! ஆதலால் நாம் செவ்வையாகப் படித்தால் நமது அறிவு பெருகுகின்றது, நமது மனது திருந்துகின்றது, நமது நிலைவலி முதலியவைகளை நாம் உணர்கிறோம். பிறர்க்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைத் திருந்தச் செய்கிறோம். இங்ஙனம் பலவாறு சீர்பெறுவதை நாகரீகமடைதல் என்ப. இதே கருதித்தான் 'மக்களை யுணர்வது மக்களின் கடமை' என்றார் பெரியாரும்.

நீதி, தூய்மை, வாய்மை, அறிவு, கூட்டுறவு, அரசியல் முதலியவைகளில் மக்கள் தம்மை எவ்வாறு உயர்த்திக்கொண்டாரென்பதை நன்றாக வறிவது அவச்யமென்பது மேற் கூறிப்போந்தவற்றால் ஏற்பட்டது அவ்விதமறிவதிலுள்ள கஷ்டங்களை நோக்கினால் மனங் கம்பிக்கும்; நெஞ்சம் பனிக்கும். க்ரக சஞ்சாரங்களில் வேற்றுமையதிகமாக ஏற்படுவதில்லை. க்ரகங்கள் பல ஒருவீட்டிலமைதல், க்ரகணம், உற்பாத முதலிய நிகழ்ச்சிகளை நீக்கிவிட்டால், வானசாஸ்த்ரிக்கு ஒரு ஆண்டு போல் தானிருக்கும் மற்றோராண்டும். சரித்ராசிரியர்க்கோ ஆண்டிற்காண்டு வித்யாசம் தோன்றாமலிராது. மனிதருடைய நடையுடை பாவனைகள், அபிப்ராயங்கள், பலவும் நாளுக்கு நாள் மாறுதலடைகின்றன. அவை ஒரு காலத்திருந்தனபோல பிறிதோர் காலத்திரா. புதிய வழிகளில் புகுந்துகொண்டே வருகின்றன. ஒருகாலத்தில் மக்கள் ஒருவழியில் சிறப்படைகின்றார்கள். அடுத்த தலைமுறையில் அவரது மனம் வேறு வழியிற் சென்று சிறந்து விளங்குகிறது. அன்னோர் தமது சக்தியைத் தமது சந்ததியாருக்குங் கற்பித்துச் செல்வதால், நாகரீகமானது போகும் வழியெல்லாம் பல சிற்றாறுகளைத் தன்னிடம் பாய்வித்துச் செல்லுமோர் பேராறு போன்றதென்னலாம்.

இங்ஙனம் ஒரு நிலைப்படாது உயிருள்ளவை போல என்றும் வளர்ந்துகொண்டே போகிற நாகரீகத்தைப் பாகுபடுத்தி யுணர்வதற்குத் தகுந்த சாதனங்கள் சரித்திரத்திலேதான் கிடைக்கும். சரித்திரங்களைப் பல பாகங்களாக வகுத்து அவ்வக்காலங்களிலுள்ள மக்களின் முக்யாம்சங்களெவை, அவர் தேர்ச்சிபெற்றது யாதில், என்பனவற்றை ஆராய்ந்து பார்த்தால் நாகரீகத்தின் வளர்ச்சி நமக்கு இனிது விளங்கும். இவ்வித வாராய்ச்சியில், நாகரீக அம்சங்களனைத்தும் ஒருகாலத்தில் ஒரு ஜாதியாரிடங் காணப்படா. சிற்சில முன்னமே தோன்றி மறைதலுங் கூடும். மனிதர் முயற்சியால் அவை பின்னர் வெளிப்படுவதுமுண்டு. தற்காலத்தில் நாமடைந்துள்ள நாகரீகமானது, நிரம்பி முடிவுபெற்றதாக நாம் கருதுவது பெரும்பேதைமையாகும். எத்தனையோ புதிய அம்சங்கள் இனிமேலுந் தோன்றலாம். இவ்விதமாக சரித்ரத்தை அணுகி அமைவுடன் ஆராய்ந்தால், முன்னாள்முதல் இன்னாள் வரை பல் ஜாதியார் கையில் பல காலங்களில் நாகரீகமடைந்த சீர்திருத்தத்தைப் படிப்படியாக அறிந்து, சங்கிலிப் பின்னல் போலதைக் கோக்கவும், விடுபட்ட வளையங்களை நிரப்பவும், அற்றுப்போன வளையங்களைத் திரட்டி மறுபடி புதிதாக வளையவும், முடிவில் நாகரீகச் சிக்குகளை யறுத்துப் பின்னுள்ளோர்க்குப் பயன்படுத்தவும் நமக்கு சாத்யமாகின்றன. இது நிற்க.

நமது நாகரீகப்போக்கை உற்று நோக்கினோர்க்கு மற்றோரருமையான விஷயம் புலனாகின்றது. சரித்ரத்தை ஆழ்ந்து படித்தோரெவ்வொருவருக்கும் நாகரிகம் ஏதோவொரு குறிப்பிட்ட வழியில் செல்லுகின்றதென்பதும், முடிவில் அது உயர்நிலையையே நோக்குகிறதென்பதும், ஒருகாலத்துள்ளவர் பின்னுள்ளோர்க்கு வெகுமதியாகத் தமது முயற்சியின் பயனை அளித்துள்ளாரென்பதும், அதை பயபக்தியுடன் கடைப்பிடித்து அவரிட்டவழிகளில் நடந்தாலன்றி பின்னுள்ளோர்க்குக் கார்யங்கள் சித்தியாகா வென்பதும் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றன. நாம் அனுபவிக்கு மொவ்வொரு விஷயமும் இதற்குச் சான்று கூறும்.

நாம் வசிப்பதற்கு முதற் காரணமான உழவுத்தொழிலை முதலில் எடுத்துக்கொள்வோம்.

நம்முன்னோர் பன்னெடுநாள் முயன்று காடு கெடுத்து, சதுப்பு நிலத்து நீரை வற்றடித்து, நிலத்தைப் பண்படுத்தி நாடாக்காவிடின், நாம னைவரு மெங்ஙனம் இவ்வுலகில் சுகமாக வாழ்வது? தொன்று தொடங்கி மனிதர் கண்டறிந்த விஷயங்கள் கருவிகள் யாவும் நம்வாழ்க்கைக்கு இன்றியமையா திருப்பனவற்றிற்கு இன்றும் சிறந்த ஆதாரமாகின்றன. அவைகளை நாம் திருத்தலாம், கூட்டிக் குறைக்கலாம்; முற்றிலும் நீக்கி வேறாகிய கருவிகளை ச்ருஷ்டிப்பது கல் நாருரிக்கும் கயவர் தொழிலை யொக்கும்.

நமது அரசாட்சி முறைகளைப்பற்றி இனி விசாரிப்போம். இதிலும் நமக்கு ஸ்வதந்த்ரங்கிடையாது. தற்காலம் நமக்கேற்பட்டுள்ள அரசியல் முறையானது பலவிதமான சண்டைச்சச்சரவு சமாதானங்களின் பயனுலேற்பட்டதல்லவா? நமது பட்டணங்கள், சாலைகள், வர்த்தகமுறை, நியாயமுறை, தேசபரிபாலன முறை யாவும் காலத்திற்கேற்ப மாறுபட்டு வருகின்றன. அவை முழுவதையும் ஒரே யடியாக மாற்றிவிடுதல் நம்மாலாகுவதன்று.

இவை போலவே, நமது அபிப்ராயங்களும் மனோபாவங்களும், பழக்க வழக்கங்களும், மதப்பற்றுகளும், நீதி முறைகளுப், நியாய அநியாய உணர்ச்சிகளும், முன்னோக்கிய ஆசைகளும், நாகரீகத்துடன் ஒருங்கே வளர்ந்து வருகின்றன. இவைகளை நாம் மாற்றலாம், பெருக்கலாம், புதிய வழிகளிற் புகுத்தலாம். அவ்வாறு செய்வதற்கு அநுகூலமாக அவைகளைப் பற்றிய உண்மையறிவு நம்மிடமிருக்கவேண்டு மென்பது சொல்லாதே யமையும். அஃதின்றேல், நமது முயற்சியெல்லாம் பயன் பெறாது வீணுகமுடியும். ஒருவேளை அவை நமக்குக் கைகூடி, நாம் செய்த மாறுபாடுகள் சிறிது காலம் நிலைபெற்றாலும், பிறகு அவை நீர்க்குமிழ்போல நீடித்து நிலைக்கமாட்டா. வற்றிய கடல் பொங்கி யெழுவதுபோல, முன் நீக்கப்பட்டவைகள் பழையபடி தோன்றிவிடும்.

நமது எண்ணத்திற்கு முற்றிலுமாறாக, நாமழித்ததை எழுப்பியும், மறந்ததை நினைப்பூட்டியும், கைவிட்ட கொள்கைகளையும் சங்கங்களையும் மீண்டுதோற்றுவித்தும் இவ்வாறாக இறந்தவற்றிற்கெல்லாம் உயிர் கொடுப்பதும் எது வென்று வினவினால் அதை பூர்வவாசனை யென்பர் பெரியோர். இதுவரை மக்கள் எண்ணிச்செய்தவை யாவும் அதிலடங்கிவிடும். நாகரீகமெனப்படுவது மதுவே. அதன் சக்தியை யறிந்தால் வன்மையும், அதை யிகழ்ந்தால் மெலிவும் நமக்கு ஏற்படும். அதை எத்துணை யறிகிறோமோ அத்துணை நாமும் மக்கட்கு உபயோகமாயிருக்கலாம். ஆதலின் ஒன்றைப் புதிதாக ச்ருஷ்டித்துவிடலாமென்று இறுமாந்து எவரும் மயங்கவேண்டாம். நமது பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் முறையாக ஐயந்திரிபற ஆராய்ந்து அவற்றில் நிறைந்த ஞானமேற்பட்டாலொழிய, நாமவைகளை மாற்ற முடியாது. இந்த ஞானத்தை யடைவதற்கு ஏற்பட்டுள்ள சாதனங்களுள் முதன்மைபெற்றது சரித்ரமொன்றே.

சரித்ரஞானம், பண்டிதர்களுக்கும், மந்திரத்தலைவர்க்கும், அரசியலாராய்வோர்க்கும் பயன் படுமேயன்றி பிறர்க்குப் பயன்படாதென்று சில்லோர் கூறுவர். அக்கூற்று சரியானதன்று. நமது தேசம் செவ்வையாக நடைபெறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உதவிசெய்யக் கடமைப்பட்டுள்ளோம். பிறர்க்குச் செய்யவேண்டிய கடமைகளும் நம்மிடமுள்ளன. தனித்தனியே நாம் ஒவ்வொருவரும் நாட்டின் மேன்மையைக் கருதி உண்மையாகவும் ஒழுங்காகவும் நடந்தால், சர்வஜன அபிப்ராயமென்பதொன்று ஏற்படுகிறது. இராஜதந்த்ர மாளிகை கட்டுவதற்கு அவ்வபிப்ராயந்தான் அடிப்படை. அடிப்படை பலமானல் அதன்மேலமருங்கட்டிடமும் பலந்தான்; அன்றேல் அது சரியுமணல் மேற் கட்டிய மாளிகையைப்போல் நிலை குலைந்து போகும். ஆதலின் சர்வஜன அபிப்ராயத்திற்குக் காரணபூதராகிய நாம் ஒவ்வொருவரும் மந்த்ரியும் தந்த்ரியுமாவோம். நாம் ஒத்துவாராவிடில், நமது கொள்கைகளையும் அரசியல் முறைகளையும் எவன் மாற்றக்கூடும்? மேன்மையையும் நாகரீகத்தையும் நமது தேசமெவ்வாறு அடையக்கூடும்? அறிவினும் நாகரீகத்தினுமுயர்ந்த தேசவாசிகளே தேசம் மேன்மை பெறுவதற்குக் காரணமாவர். பூர்வ நிலையை யறிந்தவர்களே, பின்னுலேற்படும் நிலையைத் தவறாதறிவர். இதை யறியாதார் செய்கை குன்றுமுட்டிய குருவியின் செயலையும், கற்கிள்ளிக் கையிழந்தவன் கதையையுமொக்கும். அன்னோர் நமது கொள்கையை மாற்றலாம், திருத்தமுடியாது; அசைக்கலாம், பெருக்கமுடியாது, வலிய வளைக்கலாம்: முள்ளின்மேல் நடப்பவர் சுகந்தானவர்க்குக் கிடைக்கும்.

மேற்கூறியவற்றால், சரித்ர ஞானம் மக்கட்கு அவச்யமென்பது ஒருவாறு ஏற்பட்டது. இதன் மேலந்த ஞானத்தை எவ்விதந் தேடுவதென்ற கேள்வி எழாநிற்கும். ஸ்வதேச சரித்ரத்தையும், பிறதேச சரிதங்களையும் ஆதிமுதல் கற்றுணர நினைக்கும் ஒருவன், "கற்கப்புகும் விஷயங்கள் கடலினும் பரந்துள்ளனவே. புஸ்தகங்களோ எண்ணிறந்தன. புஸ்தகசாலைகளில் அவை மலைபோற் குவிந்துள்ளன. இக்கடலைக் கடப்பதற்கு நமது அருகிய வாணுளும் போதாதே. எங்ஙனம் பெருமுயற்சி செய்து அவைகளைக் கற்பது?" என்று திகைப்பது சகஜந்தான். நாம் பல நூல்களைப் படித்துப் பாண்டித்யம் பெறுமலே சரித்ர ஞானம் சிறிது பெறலாம். சரித்ரம் படிப்பதன் நோக்கந்தானென்னவென்று ஒருவர் தம்மைத் தாமே வினவினால் பின் வருகிற கேள்விகளுக்கு விடை பகரத் தெரியவேண்டுமென்பதுதான் அந்நோக்க மென்பது வெளியாகும். அவ்வினக்கள் பின்வருமாறு: மனிதரிடம் காணப்படுகிற கூட்டுறவு எவ்வாறு வளர்ந்தது? நாகரீகமெப்படிப் பெருகிற்று? வெவ்வேறு காலங்களில் சிறந்து விளங்கிய மேன் மக்களின் குணகுணங்களெவை? அவரது கொள்கைகள், சித்தாந்தங்கள் யாவை? பூர்வகால ராஜ்யங்கள் மனிதர்க்கு என்ன பலன்களைக் கொடுத்தன, என்ன கொள்கைகளைக் கற்பித்தன? அவைகளில் நீடித்துள்ளன யாவை? சென்ற 5000 ஆண்டுகளாக மனிதர் செய்துள்ள முயற்சிகளும் கார்யங்களும், அவரது எண்ணங்களும், மாத்தினிலைகள் சருகாகிப் பயனற்று உதிர்வன போல் நமக்கு யாதொரு பயனையுங் கொடாது தொலைந்து போகின்றனவா? பண்டைப்பெருமக்களுள் க்ரீஸ் தேசத்தோர் நமக்குக் கற்பித்தவை எவை? அவர் நூதனமாகக் கண்டறிந்தவை யாவை? ரோமாபுரிவாசிகளை நாம் ஏன் உயர்த்திப்பேசுகிறோம்? தமது புகழ், நீண்டு நிலைக்கும்படி அவர் செய்த கார்யங்கள் எவை? ஏன் இந்திய ஆரியர்களை நாம் கொண்டாடுகிறோம்? எவ்வித மவர் அறிவினும் நாகரீகத்தினும் மேம்பட்டு, உலகிலுள்ள அஞ்ஞான இருளைப்போக்கி மெய்ஞ்ஞானத்தை நிறுத்திக் கலங்கரைவிளக்கம்போல் இன்றும் பலதுறைகளில் நமக்கு வழிகாட்டிகளாக உதவுகிறார்கள்? மத்யகாலத்தில் ராஜபுத்ரர்கையில் இந்தியா முழுமையும் எவ்வாறு சிக்கிக்கொண்டது? அவரது யுத்தமுறையும், வீரச்செயல்களும், இந்து மதத்திற்கு அவர் செய்த உதவிகளுமெவை? அந்ய மதங்களும், நூதன மதங்களும் இந்நாட்டில் எவ்வண்ணமெழுந்தன? எவ்வாறு வளர்ந்தன? எவ்வித நிலையிலவை தற்காலமுள்ளன? அங்ஙனமிருப்பதற்குக் காரணங்கள் யாவை? ஐரோப்பாகண்டத்தின் பூர்வ நிலையென்ன? மத்தியகாலத்தில் அங்கெழுந்த ராஜபுத்ர ராஜ்யங்களையொத்த பாளையங்களின் உண்மைவரலாறு என்னை? அக்காலத்தில் கிறிஸ்தவ நாடுகளெல்லாம் ரோமாபுரிப் பாதிரியாகிய போப் என்பவர் கையில் ஏன் அடங்கியிருந்தன? பின்னர் அவர் அதிகாரம் ஏன் குறைவுபட்டது?

இவ்வினக்களுக்கெல்லாம் தவறாது விடை பகரத்தெரிந்த ஒருவனை சரித்திர நிபுணனென்று வாய்கூசாமல் அழைக்கலாம். சரித்ரங் கற்கப்புகும் ஒவ்வொருவரும் இந்நோக்கத்தை மனதில் வைத்துக்கொள்வது இன்றியமையாதது. மேற்கூறிய வினக்களுக்கு விடையளிக்கத்தகுந்த ஞானத்தையடைவதற்கு விரிவாயெழுதியுள்ள அரிய பெரிய புஸ்தகங்களைப் படிப்பது அவச்யமன்று.

(அடுத்த சஞ்சிகையில் முடிவு பெறும்.)

மாணவரின் மனோலக்ஷியங்கள்

STUDENTS: THEIR IDEALS

(100-ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தின் தன்மையையும், நாம் வாழ்க்கையில் செய்யவேண்டிய காரியங்களையும் அறிந்து இக்காரியங்களைச் சரிவரச்செய்து நிறைவேற்றுதற்கு நுண்ணிய ஆராய்ச்சியும், விவேகமும் பொறுமையுங்கொண்ட செய்கையும் ஆவசியகமாயிருக்கின்றன.

இதற்கு நாம் நமது கூட்டத்தாரிடத்தும், தேசத்தினிடத்தும், தெய்வத்தினிட்த்தும் செய்யவேண்டிய காரியங்களையும், நாம் செய்வதைப்போல் நன்றாக வேறெவரும் செய்யமுடி-

யாததும், நாமே அதை எல்லாவற்றிற்கும் மேன்மைவாய்ந்ததாய்ச் செய்யக்கூடியதாயுள்ளதும், நமக்குப் பிரத்தியேகமாயிடப்பட்ட கட்டளையாயுமிருப்பதை உணர்தல்வேண்டும். இத்தகைய கடமையையுணர்ந்து, சமர்ப்பணஞ்செய்த ஜீவியத்திற்குரிய பக்திமிகுதியுடன் அதை நிறைவேற்றி, அதைப் புரிதலே கைம்மாறென்று நினைத்து, இவ்வாறு நடத்திவருவதினால் மனுக்குலத்தின் அபிவிருத்தியையும், பகவத் பிரபாவத்தையும் உண்டுபண்ணுதலே. உண்மையாகவே இது பிரயாசமாயிருக்கிறதற்குத் தகுந்தவாறு ஸர்வோத்தமமாயும், கீர்த்தி பொருந்தியதற்கிசைந்த வண்ணம் கட்டாயமாய்ச் செய்து சாதிக்க வேண்டியதாயுமுள்ள கடன். நமது பதவியை யோக்யதையோடு வகித்தல் என்பதே நான் சொன்ன இரண்டாவது விஷயம். நம்மில் பெரும்பான்மையோர் வாழ்க்கையில் செய்யவேண்டிய காரியங்களை மனமில்லாது வாசிக்கும் பாடத்தைப்போலும், தவிர்க்கமுடியாத ஆபத்தையடைவதுபோலும் செய்துவருகிறார்கள். நாம் நமக்கு இடப்பட்ட அலுவலைச் சரிவரச் செய்தலே அதிசிரேஷ்டமான ஸந்துஷ்டியைக் கொடுக்கும்படியான மூலாதாரமாயிருக்க வேண்டுமென்றும், அது ஜீவியத்தில் மிகக் கௌரவம் பொருந்திய காரியமென்றும் கருதுகிறோமில்லை.

"ஏற்றமுந்தாழ்ச்சியும் நிலைமையா லேற்படா,
பொருந்தவுன் கடன்புரி, ஆகவே பெரும்புகழ்."

என்று கவியொருவர் நன்குகூறியிருக்கிறார். அபிவிருத்தி நேருமென்பதிலும் ஜீவியத்தின் தைவிகமாயுள்ள ஆதாரங்களிலும் வைக்க வேண்டிய பக்தியும், சிரத்தையும், முழு நம்பிக்கையுமே மூன்றாவதாய்க் கடைசியிற் கூறப்பட்ட சங்கதி. நமக்கு ஜீவியத்திற்கு சத்தைக் கொடுத்து பிரபஞ்சத்திலுள்ள மகாசக்திகளுடன் அதை சம்பந்தப்படுத்துவது. இதுதான் காலகதியில் மனிதனுடைய காரியசித்திகளைக் குறித்து எப்பொழுதும் இகழ்ந்துகூறித் தாழ்த்திக் கொண்டிருப்பவரைப் பார்த்துச் சகிக்க மாட்டேன்.

"உயர்கருத்தொன்றுள தெக்காலத்துமே,
இதிலைய மெனக்கிலை; எல்லாக்கிரகமும்
வருங்கால மாந்தரி னெண்ணமும்
மென்மே லென்றும் விரிவடைகின்றதே"

என்று பாடிய கவிசிரோமணியோடு அபிப்ராயங் கொள்கின்றேன்.

அபிவிருத்தியை வேறொரு விதமாகக் கூறுதலு முண்டு. அதையும் உங்களுக்குச் சொல்கிறேன். மனிதனிடத்திலுள்ள சக்திகளெல்லாம் ஒருங்கே விரிவடைதலே அதுவாம். எழிலுடைய உடம்பில் எழிலுடைய ஆன்மா என்பதான கிரேக்கருடைய பூர்ண மனோபாவனையின் சிறப்பைப்பற்றி நான் அதிகமாய் விஸ்தரித்துரைக்க வேண்டியதில்லை. ஒரே அடிக் கோட்டின் (மூர்த்தம்) பேரிலுள்ள திரிகோணமெல்லாவற்றிலும் மூன்று பக்கமும் ஒரே அளவான (ஒத்த பக்கமுள்ள) திரிகோணமே மிகுதியான இடத்தை யடைத்துக்கொள்ளுகிறதென்று கணித சாஸ்திர நிபுணர் உரைக்கின்றனர். தேகம், புத்தி, சன்மார்க்கம் இம்மூன்று விஷயங்களிலும் ஒரே படித்தாய் ஒருங்கே அபிவிருத்தி யடைந்துள்ளவனே மானுஷீகத்தில் அதியுசிதமானவன். சரீரசம்பந்தமாய் வெளியில் செய்யும் தேகப்பயிற்சிகளின் அவசியத்தைப்பற்றி எவ்வளவு எடுத்துரைத்தாலும் அதிகமாகாது. இத்தேகாப்பியாசங்கள் ஆரோக்கியசரீரம், தன்னம்பிக்கை (தற்சார்பு), ஐக்கியத்துடன் செய்யுந்திறம் இவைகளை யுண்டாக்கிபுறப்படுத்தி மனிதனை உள்ளும் புறமும் பழக்கித் திருத்திவிடுகின்றன. இப்பொழுது சிறிது காலந்தொட்டே இப்பயிற்சிகளின் ஆவசியகத்தை யறிந்து வருகிறோம். வெளி நிலவிளையாட்டில் போாவலோடு விருப்பம் வைப்பது ஆங்கிலேய ஜாதியாருக்கு இயல்பாகவிருக்கின்றது உவாட்டர்லூவில் நடந்த யுத்தமானது ஈட்டன் என்னும் ஊரிலுள்ள பள்ளிக்கூடத்துத் தேகாப்பியாஸஸ்தலத்திலே வெற்றி முழங்கப்பட்டதென்றும் சாதாரண மொழியை நீங்கள் கேட்டிருக்கலாம். இதன் விசேஷம் இன்னதென்றும் நாம் அறியக்கூடும். மனோசக்திகளின் அபிவிருத்தி சம்பந்தமாக முக்கியமான சில நற்குணங்களின் அவசியத்தை வலியுறுத்துகிறேன். கலாசாலைகளிலுள்ள போதகாசிரியர் யாவரும் கவனங்கொண்டு அவைகளைப் பரிபாலித்து வரவேண்டியது.

(தொடரும்).

இந்திய வீரர்கள்

1. சந்திரகுப்த மௌர்யன்

HEROES OF INDIA

1. Chandragupta Maurya

அன்னையாம் பாரதி மாதாவின் சரித்திரத்தை உற்றுநோக்குங்கால், சீரும் சிறப்பும் வாய்ந்த வீரர் பலர் அவள் அருமை மக்களாய்ப் பிறந்து அவளது மகிமையைப் பரவச்செய்து இந்தியர்களின் மேன்மையை நிலை நிறுத்தினர்களென்பது நன்கு விளங்கும். அவர்களது சரித்திரம் காலமென்னுங்கடலில் ஆழ்ந்து கிடந்து நமக்கு முழுவதும் தெரிவதில்லையாயினும், கடலிலகப்படும் முத்துச்சிப்பியேபோல், சிற்சில பாகங்கள் வெளித்தோன்றுகின்றன. அவைகளைக்கொண்டே நாம் நம் ஜன்ம பூமியின் பூர்வீக சரித்திரத்தை அறிய வேண்டியிருக்கிறது. மேற்கூறிய சிப்பிகளை எடுப்பது மிகவும் கடினமானது போலவே, நம் புராதன மன்னர்களின் அரசாட்சியு மிருக்கின்றது.

இன்றைக்கு ஏறக்குறைய 2,200 வருஷங்களுக்கு முன் அகண்ட ராஜ்ய மொன்றைத் தம் புயவலிமையாலும் மனோதிடத்தாலும் ஆண்டுவந்த மௌர்ய அரசர்களில் முதல்வனது சரித்திரத்தைக் கூறுவோம். "சந்திரகுப்தன்" எனப் பெயர்பெற்ற இவ்வரசன், புத்தருக்கு 200 வருடங்களுக்கப்பாற் றோன்றி, இந்திய அரசர்களின் செங்கோன் முறைமை எத்தகைத்தது என்று காட்டினமையின் அவனது வெற்றிகளையும், அவன் ராஜ்யமாண்ட வழியையும் விரித்துரைக்கலானோம்.

கிரேக்க தேசத்து அலெக்ஸாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்துச்சென்றபொழுது மகத ராஜ்யம், நந்த வம்சத்தைச் சேர்ந்த மஹாபத்ம நந்தனால் ஆளப்பட்டு வந்தது. இவனுக்குப் பிறகு அரசாண்ட மன்னன் தன் துர்நடத்தையினாலும், குரூரத்தினாலும் பிரஜைகளின் பகைக்குக் காரணமாயினான். அலெக்ஸாண்டரும் கி. மு. 323ஆவது இறந்துபோக கிரேக்காது இந்திய ராஜ்யமும் சீர்குலைந்து போயிற்றென்று சொல்லலாம். கிரேக்க தளகர்த்தர்களுடைய உட்பகையும், இந்தியரது அன்னிய அரசாட்சியின் வெறுப்பும், அலெக்ஸாண்டர் வென்ற ராஜ்யம் நிலைநிற்காதென்பதை நன்கு விளக்கின.

அக்காலத்தில் மகத ராஜ்ய வம்சத்தைச் சேர்ந்தவர் ஒருவருக்கும், மூரா என்னும் ஸ்திரீக்கும் சந்திரகுப்தன் எனப் பெயர்பூண்ட வீரனொருவன் தோன்றினான். அன்னையின் பெயர்கொண்டு அவன் வம்சம் "மௌர்ய வம்சம்" என விளங்கிற்று. சிறு வயதிலேயே மஹாபத்ம நந்தனால் தேசப்ரஷ்டஞ் செய்யப்பட்ட சந்திரகுப்தன், அலெக்ஸாண்டரிடம் சென்று, அரசன் கொடுங்கோன்மையினால் மகததேசத்தார் மனம் நொந்திருக்கின்றமையின் கங்கை நதியைக் கடந்தால், அத்தேசம் அலெக்ஸாண்டருக்கு மிகவுமெளிதாக கிடைக்குமெனக் கூறினன். தன் வீரர்கள் "இனி உன்னைப் பின்பற்றி வேற்றுநாடு ஜயிக்க வரோம்" எனக் கூறி, அவனைத் தன் ஜன்மதேசம் செல்லும்படி வற்புறுத்தாவிடின், அலெக்ஸாண்டர் சந்திரகுப்தன் கூறியபடி செய்திருப்பானென்று எண்ண இடமுண்டு. தேசப்ரஷ்டம் செய்யப்பட்டிருந்தபோதிலும் சந்திரகுப்தன் வீணாக விருக்கவில்லை. வடமேற்கு மாகாணங்களிலுள்ள வீரர்களைத் தன் கீழ்ச் சேனையாயமர்த்திக்கொண்டு, கிரேக்கர் பலங் குறைந்திருக்கும் ஸமய மறிந்து அவர்களின்மீது படையெடுத்து, நாட்டைவிட்டுத் துரத்தி "பஞ்சாப்" என இப்பொழுதழைக்கப்படும் தேசத்தைத் தன் வசமாக்கினான். இவ்வெற்றிச் சேனையுடனே மகத தேசம் சென்று, மஹாபத்மனின் குமாரனை மாய்த்து, அத்தேசத்திற்கரசனானான்.

நந்த வம்சத்தின் அரசர்களின்கீழ் மிகப்பெரியசேனையிருந்தது. அவைகளின் பலத்தினாலேயே நந்த அரசர்கள் ஒன்றையும் பொருளாக நினைக்காது பிரஜைகளை வருத்திவந்தனர். சந்திரகுப்தன் தன்படையையும் சேர்க்க 600,000 காலாட்படையும், 30,000 குதிரைப்படையும், 9,000 யானைப்படையுமுள்ள பெரிய சேனையாயிற்று. இச்சேனையின் உதவிகொண்டு சந்திரகுப்தன், விந்தியமலைக்கு வடக்கேயுள்ள நாடுகளையெல்லாம் வென்று, இந்து தேசத்து முதற் சக்கிரவர்த்தியானான். அவனது ராஜ்யம் அரபிக்கடலிலிருந்து வங்காளக் குடாக்கடல் வரையிலும் பரவியதும் இச்சேனையி னுதவியினாலேயே.

அலெக்ஸாண்டர் இறந்த பிறகு, அவன் ராஜ்யத்திற்காக, கிரேக்க ஸேனாபதிகள் தம்முள் சச்சரவிட்டு ஸ்வயமாகவே தம் கீழுள்ள தேசங்களை ஆளத் தலைப்பட்டனர். இவர்களிலொருவரான ஸெலூகஸ் நிகேடர் என்பவர், கி. மு. 303௵ இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். ஆனால் சந்திரகுப்தனின் பராக்கிரம சேனையினால் கிரேக்கர் தோல்வியடைய இருவரும் உடன்படிக்கை செய்துகொண்டனர். இதன்படி சந்திரகுப்தன் ஸெலூகஸுக்கு 500 யானைகளைத் தரவேண்டுமென்றும், தற்காலம் ஆப்கானிஸ்தானம், பலூசிஸ்தானம் எனக்கூறப்படும் தேசங்களை ஸெலூகஸ் சந்திரகுப்தனுக்குத் தருதல் வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. சந்திரகுப்தனும் ஸெலூகஸின் புத்திரிகளிலொருத்தியை மணந்தனன்.

சந்திரகுப்தனது அரசாட்சியில் இருவருடைய பெயர்கள் நன்கு விளங்குகின்றன. அவைகள் சாணக்யர், மெகாஸ்தனீஸ் என்பவைகளாம். முதன் முதலிலிருந்து சந்திரகுப்தருக்கு உதவிபுரிந்து, நல்லாலோசனை சொல்லி, ராஜ்ய காரியங்களை நடத்திவர உதவி செய்தவர் ப்ராஹ்மண முதன் மந்திரியாம் சாணக்யர். பிற்கூறியவர், ஸெலூகஸ்ஸால் ராஜ தூதனாய்ச் சந்திரகுப்தனது ராஜ்யஸபைக்கு அனுப்பப்பட்டவர். இவர் பாடலீபுரமென்னும் தலைநகரில் தங்கியிருந்தமையின், அக்காலத்து ஸம்பவங்களையும், ஜனங்களது நிலைமையையும் ஆராய்ந்தறிந்து எழுதியிருக்கிறார். அவரெழுதிய நூலிற் சிலபாகங்களே மிகுந்து தற்காலமிருக்கின்றன. அவைகளை வாசிக்கும்போதே அக்காலத்து நாகரிகமும், ராஜ்ய பரிபாலனமும் நமக்குப் பேராச்சர்யமும் ஆநந்தமும் விளைக்குமென்றால், அக்காலத்துச் சிறப்பை விவரித்துக் கூறுதல் எளிதோ? ராஜ்ய தந்திரங்களையும், நீதிகளையும், ஜனங்களது வாழ்வைப்பற்றியும் நடையுடை பாவனைகளையும், நகரபரிபாலன சங்கங்களையும் மெகாஸ்தெனீஸ் எழுதிய புஸ்தகத்திற் காண்பதினால், அவருக்கு நாம் மிகவும் கடன்பட்டுள்ளோம் என்பதற் கையமில்லை.

இவ்விதம் மெகாஸ்தனீஸால் கூறப்பட்டவைகளில் முக்யமானவற்றைக் கூறுவோம். பூர்வகாலத்தரசர்களில் பரந்த தேசங்களை ஆண்டவர்களில் சந்திரகுப்தன் ஒருவனென்றும், அவ்விராஜ்யத்தையடையச் செய்தது அவன் பெருஞ்சேனையேயென்றும் கூறினோம். இச்சேனை ரத, கஜ, துரக, பதாதிகளென நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, அவைகளுக்கென ஏற்படுத்தப்பட்ட சட்டத்திற் கடங்கியிருந்தன. இவைகளை யடக்கி யாளும் பொருட்டு முப்பது உத்தியோகஸ்தர் கூடிய ஒரு யுத்தசாலை 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதற் பிரிவு கடற்சேனையையும், இரண்டாவது, ப்ரயாணம், ஆயுதம் முதலியவற்றை யுண்டாக்கியும், முரசறைவோர், மற்றும் சில்லரைவேலைகளுக்கு வேண்டியவரைச் சேர்த்தும் சேனைக்கு வேண்டியவற்றை சேகரித்தல் முதலியவற்றையும், மூன்றாவது காலாட்படைகளையும், நான்காவது குதிரைப் படையையும், ஐந்தாவது ரதங்களையும், ஆறாவது கஜங்களையும் முறையே கவனித்து வந்தன. 600,000, வீரர்களடங்கிய பெரிய சேனையையுடையவனாயிருந்தபோதிலும், இந்திய (கிழக்கத்திய) சேனைகள், யாதொரு ஏற்பாடுமின்றி கும்பலாய் சண்டை செய்வர் என்று கூறுவார்க்கு எதிர்மொழிபோல், சந்திரகுப்தன் தன் சேனைகளைச் செவ்வனே அடக்கி யாண்டுவந்தான்.

இப்பெரிய சேனையினால் ஜயிக்கப்பட்ட நாடுகளை அரசனது ப்ரதிநிதிகள் ஆண்டுவந்தனர். அவர்கள் அநேகமாய் அரசகுலத்தைச் சேர்ந்தவரேயாம். நெடுந் தூரத்திலுள்ள நாடுகளில் நடக்கும் ஸம்பவங்களைத்தெரிவிக்கும்படிக்கும், ஜனங்களது நிலைமையையும், ஆட்சியையும், தெரிவிக்கும்படியும் "புலிஸானி," அல்லது "பதிவேதிகா" என்னும் உத்யோகஸ்தர்கள் அமைக்கப்பட்டிருந்தனர். பதிவேதிகள் அனுப்பிய ரகஸ்ய நிரூபங்கள் உள்ளதை உள்ளபடியே தெரிவித்தனவென்று மெகாஸ்தனீஸ் கூறுகிறார். நாட்டின் க்ஷேமலாபத்தைக் கருதி, குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக வேசிகளும் உபயோகப்படுத்தப்பட்டனர். இது நமக்கு ஆச்சர்யம் விளைக்குமெனினும் அக்காலத்து ஸம்ப்ரதாயங்களின்படி, நாட்டிலுள்ளவர் யாவரும், முக்கியமாக தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்கள், துரைத்தனத்தைச் சார்ந்தவர்களாகவே கருதப்பட்டுவந்தனர். அதனால்சிற்பியொருவனை யாவது, கைத்தொழிலாளி யொருவனையாவது

அவன்தொழிலுக்கு இடர்வரும்வண்ணம் ஒருவன் தீங்கிழைப்பானாயின் பிற்கூறியவன் மிகவும் கடினமான மரணதண்டனை விதிக்கப்படுவான். அங்கங்களை பின்னஞ் செய்வதும், மூக்கறையனாக்குவதும், அக்காலத்து தண்டனைகளிற் சிலவெனக் கூறலாம். இப்படி ஜனங்களது நன்மையைக் கோரி ஆளப்பட்ட ராஜ்யத்தில் துர்க்ருத்யங்கள் அதிகமாய் நடப்பதில்லையென்றும், அப்படிச்செய்யும் தீயோர் மிகவும் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டார்களென்றும் மெகாஸ்தனீஸ் கூறுகிறார். இப்படிக் கொடுமையான தண்டனைகளிருப்பது, குற்றவாளிகளுக்கு இரக்கம் காட்டுவது அரிதென்பதை விளக்குகின்றது.

யுத்தவீரர்கள் க்ஷத்திரிய குலத்திலிருந்தே தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார்களாகையால் வேளாண்மையை ஜீவனமாகக்கொண்ட ஜனங்கள் யுத்தத்தைப்பற்றின விசாரம் யாதுமின்றி க்ருஷி செய்துவந்தனர். அரசனது வருமானம் அநேகமாய் நிலத்திலிருந்தே கிடைத்தமையால், மௌர்ய அரசர்கள் தம் பயிரிடுங்குடிகளது க்ஷேமத்தை மிகவும் ஜாக்ரதையாகக் கவனித்துவந்தார்கள். அவச்யமான இடங்களிலெல்லாம் பயிரின் பாய்ச்சலுக்காகப் பல கால்வாய்கள் வெட்டினர். மற்றும் பல ஏரிகளும் நிருமாணித்தனர். மேற்கே கீர்நார் என்னுமிடத்தில் ஒரு சாஸனமிருக்கின்றது. அங்குள்ள பாறையின்மீதுள்ள சாஸனங்களில் க்ஷத்திரபதியான ருத்ரதாமன் செதுக்கியதும் ஒன்று இருக்கிறது. அதிற்கூறியபடி மேற்கேயுள்ள ஜனங்களின் நன்மையைக்கருதி சந்திரகுப்தனது நெருங்கிய பந்துவான புஷ்யகுப்தன் அரசனாணையினால் "ஸுதர்சனம்" என்னும் ஏரி வெட்டினதாகக் கூறப்படுகின்றது. இச்சாஸனம் கி. பி. 150-௵ செதுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஏரி அசோகனது காலத்தில் முடிக்கப்பட்டு, ருத்ரதாமன் காலத்தில் புயற்காற்றினுடைந்துபோக, அதையே ருத்ரதாமன் சீர்திருத்தினான். இவைகளைப்பற்றி மெகாஸ்தனீஸ் பின்வருமாறு கூறுகிறார்:—

"பாய்ச்சலால் நிலங்களில் பெரும்பாகத்தில் வருஷத்திற்கு இருபோகம் விளைகின்றது."

"சிலர் ஆறுகளை மேல்பார்த்தும், சிலர் எகிப்து தேசத்தைப்போல நிலத்தையளந்தும், மற்றுஞ் சிலர் யாவரும் ஸரியான பாய்ச்சல் நீரடையும்படி, மதகுகளைச் சீர்தூக்கிப் பார்த்தும் வருகிறார்கள்."

இப்படி மெகாஸ்தனீஸ் கூறுவது சாணக்யர் அல்லது கௌடில்யர் எழுதிய "அர்த்த சாஸ்திர"த்திலுள்ளதை ஒத்திருக்கின்றது. அதனால் மெகாஸ்தனீஸ் கூறுவது உண்மையென்றே சொல்லல்வேண்டும். நிலங்களுக்குப் பாய்ச்சல் முதலியவைகளைக் கவனிக்க ஒரு சபையுண்டாக்கினர் சந்திரகுப்தர் என்பது சந்தேகமற யாவருமறிந்ததே.

மௌர்ய ராஜ்யத்திலுள்ள யாவரும் துரைத்தனத்தாரால் நன்கு அடக்கியாளப்பட்டு வந்தனர். நான்கு வருணத்தாரும், வெவ்வேறு ஜாதியார்களும் அவரவர்களது தொழில்களைச் சரிவரசெய்து வருகின்றார்களாவென துரைத்தனத்தாரால் கருதப்பட்டு வந்தனர். பாதைகளும் செவ்வனே யமைக்கப்பட்டு, அரை கோசத்திற்கு ஒரு கல் நடப்பட்டிருந்தது. அரசனது தலைநகராம் பாடலிபுரத்திலிருந்து வடமேற்கு மாகாணங்களுக்கு ராஜபாதைபோடப்பட்டிருந்தது.

இனி அரசனது தலைநகரைச் சற்று கவனிப்போம். தற்காலத்தில் பாட்னாவென்று வழங்கும் பட்டணத்திற்கும் பாங்கிபூருக்கும் நடுவே பாடலிபுரமிருந்தது. அது உயர்ந்த மதில்களாலும் ஆழ்ந்த அகழாலும் சூழப்பட்டு சிறந்த கோபுரங்கள் பல நிரம்பியிருந்தது. நகர், நாற்கோணமாய் 9-மைல் நீளமும், $1\frac{1}{2}$-மைல் அகலமுமுள்ளதாயிருந்தது. அரசனது அரண்மனை ஓர் உத்யானவனத்திலமைக்கப்பட்டு பார்ப்போர் மனதைக் கவர்ந்தது. தங்கம், வெள்ளி முதலியவைகளாற் செய்யப்பட்ட அகன்ற பாத்திரங்களும் நவரத்தின கசிதமான ஸிம்ஹாஸனங்களும் நிறைந்த அரண்மனை பாரஸீக தேசத்து தலைநகராம் பேர்ஸிபோலீஸ்ஸை விட மிகச்சிறந்து, (ஆனால், பலவிதங்களில் அதை யொத்து) இருந்தது. இவைகளுக்கேற்ப அரசனும் ஆடம்பரத்துடன் விளங்கினானென்பதற் கையமில்லை. பல்லக்கின்மீது சில வேளைகளிலும் ராஜபவனிகாலங்களில் யானையின்மீதும் சவாரி செய்தான் மௌர்ய மன்னன். மல்யுத்தங்களும், பலவிதப் பந்தயங்களும் ஸபையிலுள்ளாரை ஆநந்திக்கச்செய்தன. வேறு தேசங்களிலிருந்து தருவிக்கப்பட்ட ஆயுதபாணிகளான அங்கனைகள் அரச

னது மெய்க்காப்பாளராய் வேட்டைக்குச்சென்றும் அரண்மனையைக் காத்தும் வந்தனர். இவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தும் அரசனது உயிருக்குத் தீங்கிழைக்கத் தேடினவர் அநேகர். கொலையாளிகள் பயத்தால் அரசன், தான் இரண்டு நாள் தங்கின இடத்தில் மூன்றுநாள் தங்குவதில்லையெனவும் சரித்திரமறிந்தோர் கூறுகின்றனர்.

தலைநகரின் அரசாட்சியும் யுத்தசாலையைப் போலவே ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முப்பது பெயர்களால் நடத்தப்பட்டு வந்தது. இப்பிரிவுகளை நோக்குமிடத்து தற்காலத்தில் ஐரோப்பிய தேசங்களி லேற்பட்டிருக்கும் ராஜ்யாதிகாரப் பிரிவுகள் நமக்குத் தோன்றும். அன்றியும் மேல்நாட்டார் தங்களது ராஜ்ய தந்திர ஸபைகளுக்காக வீண்பெருமை பாராட்டுவதும் மதியீனமே என்பதும் நன்குவிளங்கும்.

முதற்பிரிவு கைத்தொழில்களையும், அதைச் சார்ந்த வேதனம், பொருள்களின் தன்மை முதலியவைகளையும்; இரண்டாம் பிரிவு அந்ய நாட்டு ஜனங்களின் ஸௌகர்யத்தையும் அவர்கள் செய்கைகளையும் கவனித்ததுமன்றி, அந்நியர்களி லிறந்தோரைப் புதைத்தும், அவர்களுடைய பொருளை, இறந்தவர்களது வாரஸுக்காவது, உறவினர்க்காவது அனுப்பியும் வந்தது. இரண்டாம் பிரிவின் காரியங்களை நோக்குமிடத்து மௌர்ய ராஜ்யம் வேற்று நாடுகளுடன் மிகுந்த கூட்டுறவு உடைத்தாயிருந்திருக்க வேண்டுமென்பது புலப்படும். மூன்றும் பிரிவு ஜனத்தொகைக் கணக்கையும், ஜனன மரணப் பதிவுகளையும், நான்காம் பிரிவு வ்யாபாரத்தையும், அதைச் சார்ந்த வரி முதலியவற்றைப் பெறுதலையும், ஐந்தாம் பிரிவு தொழிற்சாலைகளையும் அவைகளைப்பற்றிய நிபந்தனைகளையும், கடைசியாக, ஆறும் பிரிவு விற்கப்படும் ஸாமான்களின்மீது வரிகளைப்பெற்றும், அப்படித் தராது ஏமாற்றிமோசஞ்செய்வோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நடப்பித்தும் வந்தன. தலைநகர் இவ்வளவு ஒழுங்காக ஆளப்பட்டது போலவே, மற்ற நகர்களும் இவ்விதமே பரிபாலித்து வரப்பட்டனவெனலாம்.

பூர்விக ராஜ்யங்களுள் மிகப் பெரியவைகளிலொன்றை சந்திரகுப்தன் தன் புஜபலத்தாலடைந்து தன் மனோபலத்தால் 24 வருஷங்கள் ஆண்டுவந்து, கி. மு. 297-ல் காலஞ்சென்றான்.

அவனது மகன் பிந்துஸாரன், தன் தந்தையைப் போலவே நன்கு செங்கோல் செலுத்திவந்தான். பௌத்த அரசனான அசோகனின் தந்தை இவனே.

சந்திரகுப்தனது ஆட்சியில் இந்திய நாகரிகம் மிகவும் தேர்ச்சியடைந்திருந்தது. இந்த நாகரிகம் இந்தியாவிலேயே தேர்ச்சியடைந்ததா, அல்லது வேறுதேசங்களிலிருந்து அடைந்ததா எனக் கேள்வியுண்டாக இடமுண்டு. அப்படியாயின் அந்நாகரிகம், ஐரோப்பா முழுவதற்கும் கல்வியிலும்மற்றவைகளிலும் நாகரிக வெள்ளத்தை யடையும்படிச் செய்த கிரேக்க நாகரிகம், அலெக்ஸாண்டருடன் பரதகண்டத்திற்கு வந்ததோ என்ற சங்கை நிகழலாம். இந்துதேசபூர்வசரித்ரத்தை நன்குணர்ந்த வின்ஸெண்ட், ஏ. ஸ்மித் என்பவர், கிரேக்க நாகரிகம் இந்தியாவிற்கு வந்து நிலை நிற்கவில்லை; அலெக்ஸாண்டர் இந்தியாவிலிருந்த 19 மாதங்களும் போரில் கழிந்தன; அவனிறந்தது, அவனுடைய எண்ணங்களும் அழியும்படியாக்கிற்று எனக்கூறுகிறார். தொன்றுதொட்டு இருந்த பாரசீகதேசத்தின் அரசாட்சியும் அதன் நாகரிகமும் இந்தியர்களின் முன், பலகாலம் விளங்கினமையால் மௌர்யர்களுடைய நாகரிகம் அங்கிருந்தே வந்ததென்றும், அந்ய தேசப் பழக்கங்கள் பாரஸீக தேசத்தவையே யன்றி கிரீஸ்தேசத்ததல்லவென்றும் கூறுகிறார். இவ்விதம் பாரஸீகரது நாகரிகம் பலவிதங்களிலும்— அரசாட்சியிலும், கட்டடங்களிலும், பெயர்களிலும்—மௌர்யர்களுக்கு நிதர்சனமாய் விளங்கிற்று.

இந்திய சரித்ர ஆராய்ச்சியின்பொருட்டு, பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நம் நண்பர்களிற் பலர் அறிவார்கள். இவைகளைச் சேர்ந்தவர்கள் சில ஸமயங்களில் பூமியிற் புதைந்து கிடக்கும் நகரங்களைப் பரிசோதிக்கின்றனர். இவ்விதமாகவே இடலி தேசத்திலுள்ள வெஸூவியஸ் எரிமலையின் அக்னிக் குழம்பால் மூடப்பட்டு பல நூற்றாண்டுகளாய் புதைந்து கிடந்த பாம்பி (Pompeii) ஹெர்குலேனியம் (Herculaneum) என்னும் நகரங்கள் சரித்ர ஆராய்ச்சிக்கு இடங்கொடுத்தன. இந்தியாவிலும் மௌர்ய அரசர்களது தலைநகரான பாடலீபுரத்தின் சோதனையை ஸ்ரீமான் ரத்ன நாதா என்பவரது

உதவியால் டாக்டர் ஸ்பூனர் நடத்திவருகிறார். அவர் தாம் பரிசோதித்தவைகளிலிருந்து, மௌர்யர்கள் பாரஸீகர்களே என்பதற்கு தகுந்த அத்தாட்சிகள் உள்ளனவெனக் கூறுகிறார். அவ்வத்தாட்சிகளை இங்கு சுருக்கமாகக் கூறி இவ்வியாஸத்தை முடிப்போம்:—

மெகாஸ்தனிஸ் கூறுவதிலிருந்து மௌர்யர்களது ராஜ ஸபையில் பாரஸீகரது வழக்கங்கள் மிகவும் பரவியிருந்தன என்பதை நாம் நன்கறியலாம். அசோக மௌர்யனது காலத்தில் மேற்கேயுள்ள ராஜ்யத்தின் பிரிவை துஷாஸ்பன் என்னும் பெர்ஷியனே ஆண்டு வந்தான்; அவன் சந்திரகுப்தனது காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல கால்வாய்களையும் பாபிலோன் தேசத்தியதைப்போன்று வெட்டி, சீர்திருத்தினான்.

மௌர்ய அரசர்களது அரண்மனைகளும், அவர்கள் ஏற்படுத்திய பாதைகளும், வருஷத்திற்கொருமுறை அரசன் தன் ஜனன தினத்தன்று அப்யங்கனஞ் செய்துகொள்வதும், பாரஸீகதேசத்தையே மிகவும் ஒத்திருந்தன. இன்னும் ஆழ்ந்து யோசிக்குமிடத்து, மஹாபாரதத்தில், அஸுரமயனால் பல அரண்மனைகளும் ராஜ ஸபைகளும் ச்ருஷ்டிக்கப்பட்டனவென்றும், அவை தானவர்களெனப்படும் ம்லேச்சர்களுக்கென்றும் தெரியவருகின்றது இவ்வரண்மனைகளின் அமைப்பை நோக்கினால் பாடலிபுரத்திலுள்ளவைகளை மிகவும் ஒத்திருக்கின்றது. அதுவுமன்றி, பாரஸீகரது தெய்வத்தின் பெயர் ஆஹுர்மாஸ்டா என்றும், அவரது அருளாலேயே பெர்ஷியாவின் பூர்வீகத் தலை நகரான பேர்ஸிபோலீஸ் நிர்மாணிக்கப் பட்டதென்றும் நாமறிந்திருப்பதை, பாடலீபுரம் ச்ருஷ்டிக்கப்பட்டதையும் அதன் சிற்பியாகிய தேவத்தச்சனும் அஸுரமயனென்னும் பெயரையும் நோக்கின், பாரஸீக ஆஹுர்மாஸ்டாவே இந்திய அஸுரமயனும் என்பது விளங்கும். இப்படியிருப்பின், பாடலீபுரத்தரசர்கள் பாரஸீகர்களென்றும், அவர்களது மதம் ஸோராஸ்ட்ரிய மதமென்றும் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது

இன்னும் "மௌர்ய" என்னும் பதத்தின் மூலத்தை விசாரிக்கப்புகின், மூரா என்னும் சூத்ர ஸ்திரீக்குச் சந்திரகுப்தன் பிறந்ததால் அப்பெயர் வந்ததெனக் கூறுவர்.

இவ்விதம் மௌர்ய என்பதற்குப் பொருள் கூறுவது நம்பக்கூடியதன்று. இதை நீக்கிப் பார்த்தல் வேண்டும். அகிமெனி சிலாஸனங்களில் கூறப்பட்டுள்ள மார்கு என்னும் பதம் மௌர்ய எனவும் சொல்லப்படும். மார்கு அல்லது மௌர்ய என்பவை, மௌர்வ், மேரு, மௌர் எனப்பலவாறு வழங்கும் ஊரின் ஜனங்களின் பெயராகும். மௌர்வ் என்பது பெர்ஸிபோலிஸ் இருக்கும் ப்ரதேசத்தைக்குறிப்பதாகக் கொண்டால், சந்திரகுப்தன் அரண்மனைகள் பாரஸீகத்தவைகளையொத்திருந்ததை விளக்குவதோடு அவன் பூர்வீக நகர் பெர்ஸிபோலிஸ் என்பதை விளக்குகின்றன.

சந்திரகுப்தன் மகத ராஜ்யத்தை யடைந்தது பாரஸீகச் சேனையின் உதவியினாலேயே; அவன் கட்டிய கட்டடங்களும், மௌர்யர்கள் வழங்கின நாணயங்களும் பாரஸீகத்தை அதிகமாகச் சார்ந்தவை. அவனது சிலா சாஸனங்களும், டேரயஸ் என்னும் பெர்ஷ்ய அரசனது சிலா சாஸனங்களைப் பின்பற்றியிருக்கின்றன. பாரஸீகனாகிய செலூகஸ் தன் குமாரத்தியை சந்திரகுப்தனுக்கு மணஞ் செய்வித்தான். சந்திரகுப்தன் ஒரு பாரஸீகனாக இருப்பின், மேற்கூறிய விஷயங்களெல்லாம் நன்கு விளங்குகின்றன.

செய்யவேண்டியவை

தன் உயிரைப்போல் மன்னுயிருக்கு இரங்கவேண்டும். தனக்கு விருப்பமானது பிறர்க்கும் விருப்பமாகத்தானே யிருக்குமென்றும், தனக்கு இஷ்டமில்லாதது எவருக்கும் இஷ்டமில்லாமலே யிருக்குமென்றும் எண்ணி நடக்கவேண்டும். இதுவே சிறந்த விதியாம்.

பெற்றோர்பேச்சைப் பொன்னாக மதிக்கவேண்டும். "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை, தாய்சொல் துறந்தால் வாசகமில்லை" என்று நீதிநூல் சொல்கிறது.

குருவாக்குக் கிணங்குதல் சீஷனுக்கழகு. சீஷனை நல்வழிப்படுத்திப் பிறர்க்கு உதவியாகும்படி செய்வதே அவர்களுடைய கருத்தன்றோ அறியவேண்டும்.

எதையும் ஏற்றகாலத்தில் செய்யவேண்டும். காலஞ் செய்கிறது ஞாலம் செய்யாது. ஆலசிம் என்பது வேலைக்கும் விநோதத்திற்கும் ஆகாது; ஆகையால் தான் "ஆலசியம் அமிர்தம் விஷம்" என்று நீதிநூல் முறையிடுகின்றதைப் பார்.

செய்வன திருந்தச்செய். செய்தால் உன்மேல் குற்றஞ்சொல்ல இடமிராது.

நல்லதைச் செய்ய நித்தம் நினை. அதுவே உனக்குச் சீரும் சிறப்புமாம்.

குளத்தங்கரை அரசமரம்
(ஒரு சிறிய கதை)
THE PEEPUL TREE NEAR THE TANK
(A SHORT STORY)

(106-வது பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை இவர்களெல்லாம் கொளிஞ்சிவாடிக்குப் புறப்படுகிறார்களென்று ஊரெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டது. ராமஸ்வாமி அய்யரையும் ஜானகியையும் வையாதவர்கள் கிடையாது. ஆனால் அவர்களைக் கூப்பிட்டு நல்லபுத்தி சொல்லுவதற்கு மாத்திரம் ஒருவருமில்லை. அப்படியே யாரேனும் சொன்னாலும் அவர்கள் கட்டுப்படுகிறவர்களுமில்லை.

அவர்கள் புறப்படுகிற அன்றைக்கு, ஊரிலிருந்து கண்ணாலே பார்த்தால் இன்னுங் கொஞ்சம் வயிற்றெரிச்சல்தானே அதிகமாகுமென்று நினைத்து காமேசுவரய்யரும் மீனாக்ஷியும் சனிக்கிழமை மத்தியானமே புறப்பட்டுக் கும்பகோணம் போய்விட்டார்கள். ஆத்தில் ருக்மணிக்கு அவள் அத்தை சுப்பலக்ஷ்மி அம்மாள்தான் துணை.

சனிக்கிழமை ராத்திரியாயிற்று. ஊரடங்க ஆரம்பித்துவிட்டது. ஒன்பது ஒன்பதரை மணி இருக்கும். நாகராஜன் தனியாக குளத்தங்கரைக்கு வந்தான். வந்து வேப்பமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் தூரத்தில் ஒரு பெண்ணுருவம் தென்பட்டது. அது குளத்தங்கரையை நோக்கி வந்துகொண்டிருந்தது. ஆனால் அடிக்கொரு தடவை பின்பக்கம் பார்த்துக்கொண்டே வந்தது. கடைசியாக நாகராஜன் உட்கார்ந்துகொண்டிருந்த இடத்தில் வந்து நிற்கும்போதுதான் அது ருக்மணி என்று நான் அறிந்துகொண்டேன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் உடனே தெளிந்துகொண்டு என்ன நடக்கிறது பார்க்கலாம் என்று கண்ணைத் துடைத்துக்கொண்டு உன்னிப்பாய் கவனிக்கலானேன்.

அஞ்சு நிமிஷம் வரையில் நாகராஜன் கவனிக்கவேயில்லை. ஆழ்ந்த யோசனையிலிருந்தான். ருக்மணியும் அசைவற்று அப்படியே நின்றுகொண்டிருந்தாள். எதிர்ச்சையாய் நாகராஜன் யோசனையினின்று விழித்தான். ருக்மணியைப் பார்த்தான், பார்த்ததும் அவனும் திடுக்கிட்டு விட்டான். பிறகு நிதானித்துக்கொண்டு, "ருக்மணி, இத்தனை நாழிகைக்குமேலே தனியாக இங்கே வரலாமா நீ?" என்று கேட்டான். "நீங்கள் இருக்கிற இடத்தில் தனியாகத்தான் நான் இருக்கவேண்டிய நாள் இன்னும் வரவில்லையே" என்று பதில் சொல்லிவிட்டு ருக்மணி நின்றாள். இரண்டு மூன்று நிமிஷத்துக்கு, ஒருவரும் வாய் திறக்கவில்லை. இருவர் மனமும் குழம்பிக் கொண்டிருந்தது. ஆனால் எவ்விதம் ஆரம்பிக்கிறது, என்ன பேசுகிறது, என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. கடைசியில் நாகராஜன், "இந்த வேளையில் நாம் இங்கேயிருப்பது தெரிந்தால் ஊரில் ஏதாவது சொல்லுவார்கள்; வா, ஆத்துக்குப் போய்விடலாம்" என்றான். அதற்கு ருக்மணி, "உங்களிடத்தில் சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று இந்த ஒருமாசமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன்; இன்றைக்குத்தான் நேர்ந்திருக்கிறது; அதைச் சொல்ல உத்திரவு கொடுக்க வேண்டும்" என்றாள். "சொல்லேன்" என்று நாகராஜன் சொல்ல, ருக்மணி பின்வருமாறு பேசலானாள். "எனக்கு உங்களிடத்தில் என்ன சொல்லுகிறது என்று தெரியவில்லை. இந்த மூணுமாசமாய் என் மனஸு படுகிற பாடு அந்த அகிலாண்டேசுவரிக்குத்தான் தெரியுமே யொழிய மனுஷியாளுக்குத் தெரியாது. நீங்கள் பட்டணத்திலேயிருந்து வந்த உடன் என் கலக்கமெல்லாம் போய்விடும் என்றிருந்தேன். மாமாவும் மாமியும் என்ன செய்தாலும் நீங்கள் என்னைக் கைவிடமாட்டீர்கள் என்று நம்பியிருந்தேன். ஆனால் நீங்களும் என்னைக் கைவிட்டுவிட்டால் அப்புறம் எதை நம்பிக்கொண்டு நான் வாழ்வேன்? வேலியே பயிரை அழித்துவிட ஆரம்பித்தால், பயிரின் கதி என்னவாகும்? இதுவரையில் நடந்ததெல்லாம் என் மனதை உடைத்துவிட்டது. நீங்கள் அதைச் சேர்த்து வைத்தால்தான் உண்டு; இல்லையானால் என் ஆயுசு இவ்வளவுதான் அதில் சந்தேகமில்லை." இந்த வார்த்தையைப் பேசும்போது ருக்மணியின் கண்ணில் ஜலம் வந்துவிட்டது. அத்தோடு நின்றுவிட்டாள். நாகராஜன் பேசவில்லை. ருக்மணியும் சற்று நேரம் வரையில் பார்த்துவிட்டு, "நாளைக்குப் பயணம் வைத்திருக்காப் போலிருக்கிறதே,

நீங்கள் போகத்தானே போகிறீர்கள்?" என்று கேட்டாள். கொஞ்சநேரம் யோசித்துவிட்டு நாகராஜன், "ஆமாம், போகலாம் என்றுதானிருக்கிறேன்" என்றான். அவ்விதம் அவன் சொன்னதும் ருக்மணிக்கு நெஞ்சை அடைத்துக்கொண்டு துக்கம் வந்துவிட்டது. உடம்பு கிடு கிடு என்று நடுங்கிற்று. கண்ணில் ஜலம் தளும்பிவிட்டது. ஆனால் பல்லைக் கடித்துக்கொண்டு அதையெல்லாம் வெளியில் காட்டிக்கொள்ளாமல், "அப்படியானால் நீங்கள் என்னைக் கைவிட்டு விட்டீர்கள் தானே?" என்று கேட்டாள். அதற்கு நாகராஜன், "உன்னை நான் கைவிடுவேனா ருக்மணி, ஒரு நாளும் விடமாட்டேன்; ஆனால் அம்மா அப்பாவைத் திருப்திபண்ணி வைக்கவேண்டியதும் கடமை தானே. அதற்காகத்தான் அவர்கள் பேச்சைத் தட்டாமல் புறப்படுகிறேன்; ஆனால் நீ கவலைப்படாதே. உன்னை நான் ஒரு நாளும் தள்ளிவிடமாட்டேன்" என்றான். ருக்மணிக்குப் பொறுக்கவில்லை. "தாங்கள் மறுவிவாகம் செய்துகொண்டுவிடுகிறது, நான் கவலைப்படாமலிருக்கிறது! என்னை ஒரு நாளும் கைவிடமாட்டீர்கள். ஆனால் அம்மா அப்பா சொல்லுகிறதை இது விஷயத்தில் தட்ட மாட்டீர்கள்! நான் சொல்லக்கூடியது இனிமேல் என்ன இருக்கிறது? என் கதி இத்தனை தானாகும்!" என்று சொல்லிக்கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

நாகராஜன் ஒன்றும் பேசவில்லை. 'கலியாணத்தை நிறுத்திவிடுகிறேன்' என்கிற ஒரு வார்த்தையைத் தவிர வேறு எந்த வார்த்தை சொன்னால்தான் ருக்மணியின் மனஸைத் தேற்றலாம்? அந்த வார்த்தையை இப்போது சொல்லவோ அவனுக்கு சம்மதமில்லை. ஆகையால் அவன் வாயாலொன்றும் பேசாமல் தன் மனதிலுள்ள அன்பையும் ஆதரவையும் சமிக்கினையினால் மாத்திரம் அவளுக்கு ஒருவாறு காட்டினான். அவள் கையைத் தன்னுடைய கைகளால் வாரி எடுத்து மடியில் வைத்துக்கொண்டு மிருதுவாய்ப் பிடித்தான். குழந்தையைத் தட்டிக்கொடுத்துத் தேற்றுவதுபோல, முதுகில் ஆதரவோடு தடவினான். அப்பொழுது அவள் தலைமயிர் அவன் கையில்பட்டது. உடனே திடுக்கிட்டுப்போய், "என்ன ருக்மணி, தலை சடையாய்ப் போய்விட்டதே; இப்படித்தானா பண்ணிக்கொள்ளுகிறது? உன்னை இந்த அலங்கோலத்தில் பார்க்க என் மனஸு சகிக்கவில்லையே! எங்கே உன் முகத்தைப் பார்ப்போம்; ஐயோ, கண்ணெல்லாம் செக்கச் செவேரென்று [illegible] போயிருக்கிறதே, முகத்தின் ஒளியெல்லாம் போய்[illegible]தே! என் கண்ணே, இப்படி இருக்காதே. உன[illegible]ன் கைவிடமாட்டேன் என்று சத்தியமாய் நம்பு. உன மனதில் கொஞ்சங்கூட அதைரியப்படாதே. என் ஹிருதயபூர்வமாகச் சொல்லுகிறேன். எனக்குப் பொறுக்கவில்லை உன்னை இந்த ஸ்திதியில் பார்க்க. சின்ன வயதுமுதல் நாமிருந்த அன்னியோன்னியத்தை மறந்து விட்டேன் என்று கனவில்கூட நீ நினையாதே. வா, போகலாம், நாழிகையாகிவிட்டது, இனிமேல் நாம் இங்கே இருக்கக்கூடாது" என்று சொல்லி முடித்தான்.

ருக்மணி எழுந்திருக்கவில்லை. ஏக்கம்பிடித்தவள்போல உட்கார்ந்திருந்தாள். அதைப் பார்த்ததும் நாகராஜனுக்குக் கண்ணில் ஜலம் ததும்பிவிட்டது. அந்த சமயத்தில் தன் மனஸிலுள்ள ரகஸியத்தைச் சொல்லித்தான் விடலாமே என்று அவன் புத்தியில் தோன்றிற்றுப் போலிருந்தது. சொல்லித்தான் வைச்சானா பாவி! ஆனால் அவனுக்கு அவனுடைய விளையாட்டுத்தான் பெரிசாய்ப்பட்டது. ஆகையினாலே அதைமாத்திரம் அவன் வாய்விடவில்லை. ஆனால் அவனுக்குத்தான் எப்படித்தெரியும் இப்படிக்கெல்லாம் வரும் என்று? அத்தனை வயசாகி எனக்கே தெரியவில்லையே அந்த சமயத்திலே, அவனுக்கெங்கே தெரிந்திருக்கப் போகிறது குழந்தைக்கு?

அப்படி சீவனத்துப்போய் உட்கார்ந்திருந்த ருக்மணியை நாகராஜன், மெள்ள பூத்தாப்போலே தூக்கி மார்போடு அணைந்துகொண்டு, "என்ன, ஒன்றும் பேசமாட்டேன் என்கிறாயே ருக்மணி, நான் என்ன செய்யட்டும்?" என்று கருணையோடு இரங்கிச்சொன்னான். ருக்மணி தலை நிமிர்ந்து அவனை ஏறிட்டுப்பார்த்தாள். அந்தப்பார்வையின் குறிப்பை உங்களுக்கு எப்படிச் சொல்லுவேன்? பிரவாகத்தில் அகப்பட்டு, கை அலுத்துப்போய், ஆற்றோடு போகிற ஒருவனுக்கு தூரத்தில் கட்டை ஒன்று மிதந்துபோவதுபோலத் தென்பட, அவனும் பதை பதைத்துக்கொண்டு ஆசையும் ஆவலு

மாக அதன் பக்கம் அரிதிலே நீந்திச்சென்று, அப்பா, பிழைத்தோமடா என்று சொல்லிக்கொண்டு அதைப்போய்த் தொடும்போது, ஐயோ பாவம், அது கட்டையாக இராமல் வெறும் குப்பைசெத்தையாக [illegible]துவிட்டால் அவன் மனஸு [illegible]ப்படி விண்டுவிடும், அவன் [illegible]படியாகிவிடும், அப்படி இருந்தது ருக்மணியின் முகமும் அந்த முகத்தில் பிரதிபிம்பித்துக்காட்டிய அவள் மனஸும்.

எல்லையில்லாத துன்பம், எல்லையில்லாத துயரம், அந்தப் பார்வையிலிருந்தது. அதைக் கண்டும் நாகராஜன் மௌனமாக இருப்பதைப்பார்த்து ருக்மணி மெள்ள ஒதுங்கிக்கொண்டு, “நான் சொல்லக்கூடியது இனிமேல் ஒன்றுமில்லை. கொளிஞ்சிவாடிக்குப் போகிறதில்லை என்கிற வார்த்தையைத் தாங்கள் எனக்குச் சொல்லமாட்டேன் என்கிறீர்கள். இன்றோடு என் தலைவிதி முடிந்தது, நீங்கள் எப்போது என்னை இவ்விதம் விடத் துணிந்தீர்களோ, நான் இனிமேல் எதை நம்பிக்கொண்டு, யாருக்காக உயிரை வைத்துக்கொண்டிருப்பது? உங்கள் மீது எனக்கு வருத்தமில்லை. உங்கள் மனது இந்தக் காரியத்துக்குச் சம்மதியாது. என்னுடைய விதிவசம், என் அப்பா அம்மாவுடைய கஷ்டம், உங்களை இப்படியெல்லாம் செய்யச் சொல்லுகிறது. இனிமேல், ருக்மணி என்று ஒருத்தி இருந்தாள், அவள் நம்பேரில் எல்லையில்லாத அன்பு வைத்திருந்தாள், பிராணனை விடுகிறபோதுகூட நம்மையே நினைத்துக்கொண்டுதான் பிராணனை விட்டாளென்று எப்பொழுதாவது நினைத்துக்கொள்ளுங்கள்; இதுதான் நான் உங்களிடம் கடைசி கடைசியாகக் கேட்டுக்கொள்ளுவது,” என்று சொல்லிக்கொண்டு நாகராஜன் காலில் விழுந்து, காலை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். நாகராஜன் உடனே அவளைத் தரையிலிருந்து தூக்கியெடுத்து, “பைத்யமே, அப்படி ஒன்றும் பண்ணிவைத்துவிடாதே, நீ போய்விட்டால் என் ஆவியே போய்விடும், அப்புறம் யார் யாரை நினைக்கிறது? மழைத்தூற்றல் போடுகிறது, வானமெல்லாம் கறுகி[illegible]கும் மென்றாகிவிட்டது. இன்னும் சற்றுப் போனால் சந்தரத்தாரையாய்க் கொட்டும் போலிருக்கிறது, வா ஆத்துக்குப் போகலாம்” என்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு இரண்டடி எடுத்துவைத்தான்.

வானத்தில் சந்திரன், நக்ஷத்திரம், ஒன்றுமே தெரியவில்லை. எங்குபார்த்தாலும் ஒரே அந்தகாரம். சற்றைக்கொருதரம் மேகத்தை வாளால் வெட்டுவதுபோல மின்னல் கொடிகள் ஜ்வலிக்கும். ஆனால் அடுத்த நிமிஷம் முன்னிலும் அதிகமான காடாந்தகாரமாகிவிடும். பூமியெல்லாம் கிடு கிடு என்று நடுங்க ஆகாயத்தையே பிளந்துவிடும்போல இடியேறுகள் இடிக்கும். காற்றொன்று சண்டமாருதம்போல அடித்துக்கொண்டிருந்தது. தூரத்தில் பிரமாதமாக மழை பெய்துகொண்டிருந்த இரைச்சல் அதிவேகமாக நெருங்கிக்கொண்டு வந்தது. இந்தப் பிரளயகாலத்தை ஒத்த அரவத்தில் ருக்மணியும் நாகராஜனும் பேசிக்கொண்டுபோன வார்த்தைகள் என்காதில் சரிவரப் படவில்லை. அவர்களும் வீடு நோக்கி வேகமாகச்சென்றுகொண்டிருந்தார்கள். ஒரு மின்னல் மின்னும்போது ருக்மணி வீட்டுக்குப்போக மனமில்லாமல் பின் வாங்குவதும் ஆனால் நாகராஜன் தடுத்து முன்னால் அழைத்துச் செல்லுவதும் மாத்திரம் கண்ணுக்குத் தென்பட்டது. அவர்கள் வார்த்தைகளும் ஒன்றும் இரண்டுமாகத்தான் என் காதில் பட்டது. “...பிராணன் நிற்காது......அம்மாவுடைய ஹிருதயம் திருப்தி ...வெள்ளிக்கிழமை காலமே......ஸ்திரீகளின் ....உடைந்துவிடும்....சொல்லாதே.... கொடுத்து வைத்ததுதானே......அந்தப்பெண்ணையாவது நன்றாய் வைத்துக்கொள்ளுங்கள்....மனப்பூர்த்தியாக வாழ்த்துகிறேன்....அன்றைக்குத் தெரிந்துகொள்ளுவாய்.......கடைசி நமஸ்காரம்... வரையில் பொறுத்துக்கொள்....” இந்த வார்த்தைகள்தான் இடிமுழக்கத்திலும், காற்றின் அமலையிலும், மழை இரைச்சலிலும் எனக்குக் கேட்டது. மழை தாரைதாரையாகக் கொட்ட ஆரம்பித்துவிட்டது. ருக்மணியும் நாகராஜனும் என் கண்ணுக்கு மறைந்துவிட்டார்கள்.

ஆச்சு, அடுத்த நாள் காலமே விடிந்தது. மழை நின்றுவிட்டது. ஆனால் வானத்தில் தெளிவு வாவில்லை மேகங்களின் கருக்கல் வாங்கவில்லை. காற்று, ஸமாதானஞ்செய்ய மனுஷியாளில்லாத குழந்தைபோல, இடைவிடாது கதறிக்கொண்டேயிருந்தது. என் மனஸிலும் குழப்பம் சொல்லிமுடியாது. எப்படி நிதானித்துக்

கொண்டாலும மனஸுக்குச் சமாதானம் வாவில்லை. என்னடா இது, என்றைக்கும் இல்லாத துக்கம் இன்றைக்கு மனதில் அடைத்துக்கொண்டு வருகிறது, காரணம் ஒன்றும் தெரியவில்லையே என்று நான் எனக்குள் யோசித்துக்கொண்டேயிருக்கும்போது, திடீரென்று மேலைக்கோடியாத்து மீனு, “என்னடியம்மா, இங்கே ஒரு புடவை மிதக்கிறது!” என்று கத்தினாள். உடனே பதட்டம் பதட்டமாய் அந்தப்பக்கம் திரும்பினேன். குளத்தில் குளித்துக்கொண்டிருந்த பெண்டுகளெல்லாரும் அப்படியே திரும்பிப்பார்த்தார்கள். பார்த்துவிட்டு என்னவோ காதோடுகாதாய் ரகசியம்பேச ஆரம்பித்துவிட்டார்கள். எனக்குப் பஞ்சப்பிராணனும் போய்விட்டது. புடவையைப் பார்த்தால் காமாக்ஷியம்மாள் புடவைபோல இருந்தது. சரி, அம்மா அப்பா தலையிலே கல்லைத்தூக்கிப் போட்டுவிட்டு ருக்மணிதான் மறுபடியும் வந்து குளத்திலே விழுந்துவிட்டாள் என்று நினைத்தேன். அதுதான் தெரியும். அப்படியே மூர்ச்சை போய் விட்டேன்.

அப்புறம் சற்றுநேரம் கழித்து எனக்குப் பிரக்கினை வந்தது. அதற்குள்ளே குளத்தங்கரையெல்லாம் கும்பலாய்க் கூடிப்போய்விட்டது. ஜானகியையும் ராமசுவாமியையும் திட்டாதவர் இல்லை இனிமேல் திட்டினாலென்ன, திட்டாதேபோனாலென்ன? ஊரின் சோபையையும், தாயார் தகப்பனார் ஜீவனையும், என்னுடைய சந்தோஷத்தையும் எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக்கட்டிக்கொண்டு ஒருநிமிஷத்தில் பறந்துபோய்விட்டாளே என் ருக்மணி! கீழே, அந்த மல்லிகைக்கொடி ஓரத்திலேதான் அவள் உடலை விட்டிருந்தார்கள். எத்தனை தடவை அந்த மல்லிகை மொக்குகளைப் பறித்திருக்கிறாள் அவள் பொன்னான கையாலே! குளத்தங்கரையெல்லாம், அவள் குழந்தையாக இருக்கையில் அவள் பாதம் படாத இடம் எது, அவள் தொடாத மரமேது, செடியேது! அப்யோ நினைக்க மனம் குமுறுகிறது. அந்த அழகான கைகள், அந்த அழகிய பாதங்கள், எல்லாம் துவண்டு, தோய்ந்து போய்விட்டன. ஆனால் அவள் முகத்தின் களை மாத்திரம் மாறவேயில்லை. பழைய துக்கக் குறிப்பெல்லாம் போய் முகத்தில் ஒருவித அத்தியாச்சரியமான சாந்தம் வியாபித்திருந்தது

இதையெல்லாம் கொஞ்சந்தான் கவனிக்க நேரமிருந்தது. அதற்குள்ளாக, “நாகராஜன் வ’றான், நாகராஜன் வ’றான்” என்ற ஆரவாரம் கூட்டத்தில் பிறந்தது. ஆமாம், நிசந்தான், அவன்தான் தலைகால் தெரியாமல் பதைக்கப் பதைக்க ஓடிவந்துகொண்டிருந்தான். வந்துவிட்டான். மல்லிகைச் செடியண்டை வந்ததும், கும்பலையாவது, கும்பலிலிருந்த தாயார் தகப்பனாரையாவது கவனியாமல் “ருக்மணி, என்ன பண்ணிவிட்டாய் ருக்மணி!” என்று கதறிக்கொண்டு கீழே மரம்போலச் சாய்ந்துவிட்டான். கூட்டத்தில் சத்தம் கப் என்றடங்கிவிட்டது. எல்லோருடைய திருஷ்டியும் நாகராஜன் மேலேயே விழுந்தது.

நெடுநேரம் வரையில் அவன் தரையில் மூர்ச்சையுற்றுக் கிடந்தான். ராமசுவாமி அய்யர் பயந்துபோய் அவன் முகத்தில் ஜலத்தைத் தெளித்து விசிரியால் விசிரிக்கொண்டிருக்கையில் அவனுக்கு அரிதில் பிரக்கினை வந்தது. கண்ணை மெல்ல விழித்தான். ஆனால் தகப்பனாரிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ருக்மணியின் உயிரற்ற சரீரத்தைப்பார்த்து, “என்னுடைய எண்ணமத்தனையும் பாழாக்கி விட்டு ஜூலியெத் † மாதிரி பறந்தோடிப் போய்விட்டாயே ருக்மணி! ஸ்ரீநிவாஸன் சொன்னது சரியாய்ப் போய்விட்டதே! பாவி என்னால்தான் நீ உயிரைவிட்டாய், நான்தான் உன்னைக் கொலைசெய்த பாதகன்! நேற்று நான் உன்னிடம் சத்தியம் முழுவதையும் சொல்லியிருந்தால் இந்தக் கதி நமக்கு இன்று வந்திருக்காதே! “குஸுமஸத்ருசம்........அங்கநாநாம்........ஸத்ய: பாதி ப்ரணய ஹ்ருதயம்” * என்கிற ஆழமான வாக்கியத்தை வேடிக்கையாக மாத்திரந்தான் படித்தேனே யொழிய அதன் சத்தியத்தை நான் உணரவில்லையே! இனிமேல் எனக்கென்ன இருக்கிறது? ருக்மணி! நீயோ அவசரப்பட்டு என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாய். எனக்கு இனிமேல் சம்சார வாழ்க்கை வேண்டாம். இதோ சன்னியாசம் வாங்கிக்கொள்ளுகிறேன்!” என்று சொல்லிக்கொண்டே யாரும்

† ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றின் கதாநாயகி.

* அருத்தம்: பெண்ணியலாரின் அன்பு நிறைந்த ஹ்ருதயம் பூப்போல மிகவும் மெல்லியது: அன்புக்குக் கேடுவரின், உடனே விண்டு விழுந்துவிடும்.

—காளிதாஸன், மேகஸந்தேசம்.

தடுப்பதற்குமுந்தி தான் உடுத்தியிருந்த வேஷ்டியையும் உத்தரீயத்தையும் அப்படியே தாருய்க் கிழித்துவிட்டான். அவன் தாயார் தகப்பனர் ஒருவரும் வாய்பேசவில்லை. நாகராஜனும் அவர்கள் திடுக்கிட்டதிலிருந்து சுதாரித்துக்கொள்வதற்குள் அவர்கள் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து தண்டனிட்டுவிட்டு யாருடனும் பேசாமல் கௌபீனதாரியாய்ப் புறப்பட்டுப் போய்விட்டான்.

இப்படி முடிந்தது என் ருக்மணியின் கதை. என் அருமைக் குழந்தைகளே! பெண்கள் மனஸு நோகும்படி ஏதாவது செய்யத் தோன்றும்போது இனிமேல் இந்தக்கதையை நினைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள். விளையாட்டிற்காகக்கூடப் பெண்ணுப் பிறந்தவர்களின் மனதைக் கசக்கவேண்டாம். எந்த விளையாட்டு என்ன வினைக்குக் கொண்டுவந்துவிடும் என்று யாரால் சொல்லமுடியும்?

ஸௌ. பாக்கியலக்ஷ்மி அம்மாள்.

குளத்தங்கரை அரசமரம்

முற்றிற்று.

செய்யவேண்டியவை

அற்பகாரியமானாலும் அசட்டையில்லாமல் செய்யவேண்டும்; "சிறு துரும்பும் பல்லுக்குதவும்."

நல்லது செய்து நடுவழியே போகவேண்டும். நற்செய்கையே நேரான வழியாம். நல்வினைசெய்து ஊரார் வாழ்த்துவதற்கென்று நினைக்கலாகாது.

செய்யவேண்டியதனைத் தவறாமல் செய். வறுமை வந்தாலும் கடமையைக் கைவிடாமையே நல்வழி.

நல்லவனுயிருந்து நன்மை செய்யவேண்டும். "நன்மை கடைப்பிடி" என்று ஔவையும் கூறினாள்.

செய்யவேண்டாதவை

ஈவிரக்கமின்றி முரடனுயிருக்கவேண்டாம்; தயை செய்து, வந்தனம், என்கிற சொற்களை அடிக்கடி சொல்ல ஒருபோதும் மறக்கக்கூடாது.

ஒருவருக்கும் பொல்லாங்கு நினைக்கவேண்டாம், அன்பாகவே பேசவேண்டும். குழந்தைகள், கிழவர்கள், மெலிந்தவர்கள் ஆகிய யாவரையும் ஆதரிக்கவேண்டும்.

சண்டைசச்சரவு ஒருபோதும் வேண்டாம். அடக்கம் ஆயிரம் பெறும்.

சுயகாரியத்தையே பெரிதாகப் பார்க்கவேண்டாம். பரோபகாரமே பெரிதென்று பார்த்து, உனக்குள்ள நன்மைகளை அவர்களுக்கும் பங்கிட்டுக்கொடுக்கவேண்டும்.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

ஆத்திசூடி விளக்கம்

55. தக்கோனெனத் திரி

நீ தகுதியுடையவன் என்று பிறர் கண்டு மெச்சும்படி நடந்துகொள் என்பது இந்த ஸூத்ரத்தின் திரண்ட பொருள். முன்னர், மனம் போனபடியே விட்டு, சோம்பித் திண்டாடித் திரியாதே என்றபின், இங்கு வெளிவ்யவஹாரத்தில் இப்படிப் புகுந்து நடக்கவேண்டும் சோம்பாது என்று குறிக்கிறாள் ஔவையார். இங்கு காட்டப்பட்ட சுருக்கப் பொருளில் தகுதி என்பது இப்படிப்பட்டது என்றும், பிறர் என்றால் இத்தகைய பிறர் என்றும் விளக்கிவிட வேண்டியது அவசியம். தகுதி என்பது சாஸ்திர ஒழுங்குப்படி எவ்வழியிலாவது, எந்த இன்ப அல்லது துன்ப நிலைகளிலும் மாறாது நிற்கும் பொது நிலையாற்றலுக்கே பெயர்: பிறர் என்பது இந்த சாஸ்திர நுட்பமறிந்த பெரியோர்களையே குறிக்கும். ஆகவே, பெரியோர்கள் சாஸ்திரவழி வழுவாது நடக்கும் ஆற்றலுடையவன் என்று உன்னைக் கண்டு மகிழுமாறு உலகநடவடிக்கைகளிற் புகுந்து பழகவேண்டும் என்பதுதான் இதில் அடங்கியுள்ள பொருட்சிறப்பு.

இந்தஸூத்ரத்தை உள்ளபடி நேராகப்பொருள் படுத்தினல் நமது கீர்த்தி எங்கும் பரவி எல்லோரும் நம்மைநன்குமதிக்கும்படி நடந்துகொள்ளவேண்டும் என்றுதான் ஏற்படும். இவ்வாறு, பொதுவாகக் கொண்டு நடப்பதற்கு எல்லையைக் குறிக்கும்படியான தர்ம சாஸ்திர வாக்கியங்களும் இருக்கின்றன. 'ஒருவன் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது' பிறர் புகழ்ச்சியை ஒரு பொருட்டாக மதிக்கச் செய்யும் லோகவாஸனை என்ற துர் வாஸனையை வேரறுக்கவேண்டும் என்ற இவை போல்வன இந்த ஸூத்ரத்திற்கு முரணுக இருந்து இப்பொதுப்பொருளின் எல்லையைக்குறிக்கும். முதல் கோட்பாட்டிற்கு உதாரணமாக, சந்தையில் தன் கழுதை ஒன்றை விற்று லாபம் பெற எண்ணிப் போன ஒரு தகப்பனும் பிள்ளையும் வழிப்போக்கர் கூறியபடியெல்லாம், கழுதை மேலேறியும், கழுதையைத் தூக்கியும் சென்று, வழியிலிருந்த ஓராற்றில் கழுதையை இழந்து திண்டாடிய கதையை எடுத்துக்கொள்ளலாம். உலகம் பல விதம்: பலவாறுகத்தான் சொல்லும். சிறந்த ஸீதாதேவியையே உலகம் எப்படிப் பழித்து விட்டது! ஸ்ரீராமர், கிருஷ்ணபகவான் முதலிய பெரியோர்கள் எல்லாம் ஊர்வாயில் அகப்பட்டுச் சின்னபின்னப்பட்டாராயின் நம் கதி எம்மட்டு? ஆதலால், உலகப் புகழையே மாத்திரம் ஒரு பொருட்டாக மதித்து, நல்வழிப் பழக்கத்தைக் கைப்பற்றலாகாது: பற்றினல் நல்வழியில் அச்ரத்தை சீக்கிரம் உண்டாகி தீய வழியை விடாது பற்றும் கொடிய நிலையும் நமக்கு வந்துவிடும் என்பதே இரண்டாவது கோட்பாட்டிற்குத் தகுந்த முகாந்திரம். ஆகவே இந்தப் பொருளைச் சற்று சீர்படுத்தித்தான் கொள்ளவேண்டும்.

எல்லோருக்கும் நல்வழியில் ஒருவித மதிப்பும் தீயவழியில் ஒருவித வெறுப்புந்தான் உண்டு. ஆயினும் நல்வழியைவிட ஸுகங்களில் அதிகப்பற்றும், துக்கங்களில் தீய வழியைவிட அதிக வெறுப்பும் இருத்தலால் எவ்வழியில் ஸுகத்தை அடைந்து, துக்கத்தை நீக்கலாமோ அவ்வழி நல்லதாயினும் கெட்டதாயினும் கைப்பற்றுவதே மாந்தர் மூடத்தனமாகிவிட்டது. இதில் மனிதர்களிடமுள்ள நல்லதைக் கொண்டாடுவதென்ற மதிக்கு ஏற்றதான சிறந்தவழிகளில் அவர் புகழ்ச்சியை ஒரு பொருட்டாக மதியாது புத்திமான் நடந்துவரவேண்டுமென்பதுதான் இந்த ஸூத்ரத்தின் கருத்து. அதாவது நாம் ஒரு வழியில் முனையத் தொடங்குங்கால், நமது உட்கருத்தையும் வழியையுமுள்ளபடி கல்விச் சிறப்புடைய மற்றவர் உணர்ந்தால் புகழ்வார்களா இகழ்வார்களா என்று நன்கு ஆராய்ந்துதான் தொடங்கவேண்டும். அப்படி ஆய்ந்து ஓய்ந்து பார்த்து சாஸ்திரீய வழிகளில் முயலுபவர்கள் பிறர் புகழ்ச்சியை எதிர்பார்க்கவே கூடாது, புகழ் வந்தால் மயங்கிவிடவும் கூடாது, இகழ்ச்சி ஏற்படின் மனம் நொந்து திண்டாடவும் கூடாது, என்பதை நன்கு கடைப்பிடித்துத்தான் வ்யவஹாரத்தில் புகுந்து புறப்படவேண்டும். இப்படியின்றி ஊர்வாய்க்குப் பயந்து நடப்பதென்றால் அநேக நற்செயல்களைக் கைவிடவேண்டியதாகவும், தீச்செயல்களைக் கைப்பற்றவேண்டியதாகவும் வந்துவிடும். நாளடைவில் தக்கோனெனத்திரிய முடியாமலே போய்விடும்.

முன் கூறியபடி நடந்துவந்தால் பொதுவாக நாம் ஒவ்வொரு ஸந்தர்ப்பத்திலும் இப்படித்தான் நடப்போம் என்பது நாம் வெளியிடாமலே பிறர் உணர்ந்துவிடும் தன்மை நமக்கு வந்துவிடும். ஆகவே நல்வழிக்கு மாறானவைகள் பேச்சையே நம் முன்னிலையில் மிகக் கொடியவரும் எடுக்கத் தயங்குவர். ஆகவே இதனால் தீய வழி நெருக்கமே நமக்கு ஏற்படவிடமிராது, நல் வழிப்போக்கே நமது இயற்கையாகிக்கொண்டுவரும். ஸனத்குமாரரைக் கண்ட ராவணனுக்குக்கூட கெட்ட எண்ணங்கள் மாறி 'எனக்கு நற்கதியடைய வழி ஏதாவதுண்டா?" என்று கேட்கும்படியான நிலை வந்துவிடவில்லையா? ஆகவே தகுந்த வழியில் நடந்துவந்தால் உலகப்புகழ் ஏற்படாவிடினும், தீயவழிச் சேர்க்கை நம்மை அணுகவே மாட்டாது. ஸாதாரணக்கொடியவர்கள் 'இவனிடம் போனல் நமது ரஹஸ்யகாரியங்களுக்கு வழி ஏற்படாது' என்றும், மிகக்கொடியவர்கள் 'இவன் கையிலாகாத பிச்சு! நமது காரியங்களை ஸரிவர நடத்த ஸாமர்த்தியம் இவனுக்கு ஏது?' என்றும் கூறி விலகிவிடுவர். ஆகவே இவனுக்கு நல்லோர் சேர்க்கையே மேலிட்டு வரும் தக்கோனெனத் திரிவதால்.

இப்படி லௌகிகமாகத் தக்கோனெனத்திரிந்து பழகிவருங்கால் லௌகிக நல்லோர் சேர்க்கை மாத்திரத்தில் பெரிய அபாயம் ஒன்றுள்ளது. நல்லோர் கண்டு வியந்து நம்மிடம் ஈடுபடவேண்டும் என்ற ஆவல் மேலிட்டுவிடுவதே இந்த அபாயம். இது வந்துவிடுமாயின், நமது நல்வழி நடப்பது வேருன்றி ஓங்காது அழுந்திப் போய்விடும். ஒரு நல் நடத்தை நம்மிடம் குடிகொண்டுவருவதை உலகத்தில் ஸன்மார்க்கிகள் உணர்ந்தால் நம்மை [illegible] அடைந்து நமக்கு மேல் [illegible] மேலும் நல்வழி நடக்க இடங்கொடாது நடுச்சந்திக்கு இழுத்து நம்மைக் கழுதையாக்கிவிடுவர். கொஞ்ச காலத்தில் நமது தன்மை வெறும் புரட்டாகவே போய்விடும். இந்நாலத்தில் சற்று பிடிவாதத்தால் மனம் அடக்கி சிறு ஸித்திகள் பெற்று ஸாமியாராக விளங்குபவர்களை எல்லாம் இக்காலத்து ஸத்துக்கள் அணுகி அவர்கள் ஸித்

திகளை நிலைநிறுத்த முபல இடங்கொடாது, புகழ், உபசாரங்கள் முதலியவைகளைக் காட்டி அவர்களை மெது சீக்கிரத்தில் தம் பதவி இழந்து தத்தளிக்கும்படி செய்துவிடுவர். சிலநாள்களுக்குள்ளாக ஸத்துக்களிடையில் தக்கோனெனத் திரியத்தொடங்கும் அப்யாஸி தகாத வழியான தன்னிடமில்லாததை உண்டென்று பிறருக்குக் காட்டி மோசஞ்செய்யும் தீய வழியிலிறங்கிவிடும்படி யாகிவிடும். ஆகவே லௌகிகத்தில் தக்கோனெனத் திரிவதற்கும், வைதிகத்தில் அவ்வாறு திரிவதற்கும் மிகுந்த வேற்றுமை உண்டு.

வைதிக வழியில் .தக்கோனெனத்திரிவதை வேதம் பால உன்மத்த பிசாசம்போல நட: அதாவது, குழந்தை, பித்தர், பிசாசுபோல நடக்கவேண்டுமென்று குறிக்கிறது. உலக வ்யவஹாரங்கள் ஸம்பந்தப்பட்ட வரையில் இப்படித்தான் இருப்பர் பெரியோர், இப்படித்தான் இருந்து பழகவேண்டும் மோக்ஷமடைய விரும்பும் அப்யாஸி. இதிலுள்ள போல என்பதன் ஆற்றலைக் கவனியாது இக்காலத்திய ஸாமியார்களிற் சிலர் குழந்தைபோல வாயாலேயே சாப்பிட்டு விளையாடுவதும், பித்தர்போல கண்டபடி உடலில் மலங்களைப் பூசிக்கொண்டு குப்பை மேட்டிற் கிடப்பதும், வாயில் வந்தபடி பேசுவதும், பிசாசுபோல கொடிய தன்மையுடன் கண்டவர் கலங்க நடப்பதுமாக இருக்கிறார்கள். இப்படி வேத நோக்கம் உணராது நடப்பவர்களுக்கு மோக்ஷம் வருமாயின் பால உன்மத்த பிசாசுகளுக்குத்தான் முதலில் மோக்ஷம் கைகூடியிருக்கவேண்டும். அப்படி இல்லாததால் இந்த உவமைகளில் கருத்து வேறென்றாச்சுது. பொதுவாக வைதிக வழிப்படி தக்கோனெனத் திரிபவருக்கு அடக்க ஒடுக்கம் வேண்டும். நீறுபூத்த நெருப்புப்போல் அவர் இருக்கவேண்டும். தம் உள்நிலையை எக்காலத்திலும் தாமே வெளிப்படுத் [illegible] கருத்தை வெளிப்படுத்தவே இங்கு கூறப்பட்டுள்ள மூன்று உபமானங்களும் வேதத்தால் வெளியிடப்பட்டன. பாலர்கள் மனதில் ஒருவிதக் கபடமுமின்றி சுத்த மனத்தராய் கிடைத்த ஆகாரங்களை உண்டு உறங்கி சொன்னபடி கேட்டுக்கொண்டு பொழுதுபோவதே தெரியாது எப்படி விளையாடிக் கொண்டிருப்பரோ, அப்படியே, பெரியோர்களும் ஆகார ருசி விஷயங்களை ஒரு பொருட்டாக மதியாது, பசி தீர உண்பதையும், உறங்குவதையும் கைக்கொண்டு இடைநேரங்களில் சாஸ்திரவிதிப்படி இயற்கையாக நடந்து பொழுதுபோவதே தெரியாது த்யானானந்த அனுபவத்திலேயே ஈடுபட்டு நிற்பர். பித்தர்கள் ஸுகதுக்கங்கள் விளக்கமில்லாது அரை வேஷ்டி நழுவுவதுகூடத் தெரியாது வெளி விஷயத்தாக்கேயின்றித் தம் மனவிஷயப்போக்கிலேயே ஈடுபட்டு எப்படித் திரிவரோ அப்படியே பெரியோர்கள் உலகஸுக துக்கத்தாக்கேயின்றி, உலகவிஷயங்களுக்கு அப்பாற்பட்டுள்ள தமது அனுபவ விஷயத்திலேயே மனஞ்செல்லப் பெற்றவர்களாக உலகில் வளைய வருவர். பிசாசுகள் எப்படி தம் இஷ்டத்திற்கு மாறாக நடந்தால் கோபித்துக் கொடுமைகளைக் காட்டி பிரமாதப்படுத்துமோ, அதுபோல சாஸ்திர விதி வரம்பிற்கும், தமது நிலைப் பிடிப்பிற்கும் மாறாக உலகத்தவர்கள் தம்மிடம் காட்ட வரும் மதிப்பு மரியாதைகளை, ஸத்துக்களாயினும் அவர்களிடமிருந்து ஏற்காது உதறித் தள்ளும் கடுமையுடையவராக இருப்பார் பெரியோர். ஆகவே ஊண் உறக்கம், நடவடிக்கை இவைகளில் சாஸ்திர வரம்பு மீறா சுத்த சித்தனையும், ஸுகதுக்கத் தாக்கில்லாது தன் சாஸ்திரீய அனுபவத்தில் நிலைத்தவனையும், உலகமதிப்பை உதறித் தள்ளுபவனையும், இருப்பதில் முறையே பாலர் பித்தர் பிசாசு இவர்களைப்போலேயிருந்து, மக்கள் வியந்து 'இவனே தக்கோன்' என்னும் படியாகத் திரி என்றாள் ஔவையார் இந்த ஸூத்ரத்தில் முமுக்ஷுவை நோக்கி.

செய்யவேண்டாதவை

ஒருகாலும் கல் எடுத்து எறியவேண்டாம், எறிந்தால் பலகணிகள் மேற்பட்டு உடையும், அயலார் மேலாவது விழும்

பார்வைக்கு அசுத்தமாகவும் அவலக்ஷணமாகவுமிருக்கவேண்டாம், உடுப்பும், உடம்பும் நிர்மலமாகவும் அழகாகவுமிருப்பது நன்று.

[illegible]ங்கிலும் அசட்டையாயிருக்க வேண்டாம், ஜாக்கிரதையில்லாதவர்கள் [illegible]காரியங்களைப் பாழாக்கிவிட்டிருக்கிறார்கள்.

போகவேண்டிய இடத்திற்கு வேளைதப்பிப்போக வேண்டாம். பாடசாலைக்குச் சரியான காலத்தில் போகாதபிள்ளைகள் தம்முடைய நன்மையைத் தாம் இழந்துபோவதுமன்றி மற்றப்பிள்ளைகளின் பாடத்தையும் தாமதப்படுத்திவிடுகிறார்கள்

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

மாதவீகங்கணம்

அத்யாயம் 5

ஸௌந்தர்யவதியுடன் ஸம்பாஷணை

"உங்களுடையதைப்போல் அவ்வளவு புராதனமானதும் பராக்ரமம் பொருந்தியதுமான இதர ஜமீன்கள் ஏதாயினும் உண்டோ வங்காளத்தில்?" எனக்கேட்டாள் மிஹ்ருந்நிஸா.

இக்கேள்விக்கு நரேந்த்ரன், "எங்கள் ஜமீனைவிடப் பணம் பெருத்த ஜமீன்கள் பல உண்டு வங்காளத்தில். ஆனால் எங்களுடையதைப்போல் அவ்வளவு புராதனமான ராஜ வம்சங்கள் வெகு ஸ்வல்பமே. ராஜபக்தியிலும் எங்களைவிடச் சிறந்தவர்கள் கிடையாது" எனக் கம்பீரமாய் விடைபகர்ந்தான். "ஜமீன்தார்கள் சக்ரவர்த்தியவர்களுடைய தீர்வையைக் கட்டி, அவருடைய உபயோகத்துக்காக ஒரு ஸைந்யத்தைப் போஷித்து, நாட்டை நீதியாய்ப் பரிபாலித்து வருகிறார்கள்."

"ஆம் அவ்வாறுதான் கேள்விப்பட்டேன். ஸர்வ ஜனங்களும்,சிற்றரசர்கள் யாவரும் மனப்பூர்வமாய் நேசித்து ஒன்றுகூடி உழைக்கும் ராஜ்யத்தின் மஹிமையை எவரால் எடுத்துரைக்கமுடியும்! ஆனால் கூடக்கூட ஆப்கானிய மொகலாய ஜாகிர்தாரர்கள் பலரும் அந்நாட்டில் இருக்கின்றனராமே?"

"ஆமாம், இருக்கிறார்கள். ஆதிகாலத்தில் ஆப்கானியர்கள் சொந்தமாய்ப் பல ஜமீன்களை ஸ்தாபித்துக்கொண்டார்கள். தற்காலத்திலும் நமது காருண்ய வள்ளலாகிய அக்பர் பெருமான் பல ஸேனாதிபதிகளுக்கு அவ்விடத்தில் ஜாகிர் அளித்துவருகின்றனர். இதுவரைக்கும் அவ்வாறு ஸன்மானிக்கப்பட்டவர்களுள் உமது புருஷரே சிறந்தவர்.முஸல்மான் ஜாகிர்தார்கள் அதிகமாய் யுத்தப்பயிற்சியிலேயே கருத்தாயிருக்கின்றனர். அவர்கள் கீழிருக்கும் ஹிந்து ஜமீன்தார்களிடமிருந்து அவர்களுக்கு வருஷா வருஷம் தவறாமல் வரும்படி வந்துகொண்டிருக்கிறது. அந்த ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்குமுடைய ப்ராசின ஸம்ப்ரதாய பாத்யதைகளை அவர்கள் மாற்றுவது கிடையாது."

"நீர் சொல்லும் விஷயங்களை நன்கறிந்துகொண்டேன். நான் உம்முடன் இவ்வளவு தூரம் வார்த்தையாடியதில் எனக்கு ரொம்ப ஸந்தோஷம். வங்காளத்தைப்பற்றி அவ்விடமே பிறந்து வளர்ந்தவர் மூலமாகச்சில விஷயங்கள் எனக்குக் கேட்க வேண்டுமென்றிருந்தது." "உன்னைவிட வேறெவர் எனக்கு இவ்வளவு விவரமாய்ச் சொல்வார்கள்? தன் புருஷருக்குத் தெரியாத ஓர் அந்நியனைக்கண்டு அவருடன் ஒரு ஸ்த்ரீ உரையாடுவதென்பது அவ்வளவு யுக்தமான கார்யமன்றுதான். ஆனாலும் என்ன செய்வது? சிலவேளை அப்பேர்ப்பட்ட ஆவச்யகங்கள் ஏற்படுகின்றன. எங்கள் மதத்தில் ஸிம்ஹாஸனம் ஏறி ஸைந்யம் நடத்திய மாதரசிகள் இருந்திருக்கின்றனர்."

இவ்வளவு தைர்யமாய்ப் பேசிய இம்மாதுசிரோமணி த்ரிகாலதர்சியா என்ன? தான் ஒரு காலத்தில் ஆசியாகண்டத்தில் நிகரற்றதென்று பெயர்பெற்றுவிளங்கிய ராஜ்யத்துக்கு அதிபதியாகிப்போர்க்களத்தில் ஸேனாநாயகியாய்விளங்கப்போகிறோம் என்ற ஆந்தரிக அவா அவள் மனதில் அக்காலத்தே குடிகொண்டிருந்ததா?

"சிற்சிலகாலங்களில் வங்கதேசாதிபதிகள் தமது சக்ரவர்த்தியவர்களுக்குத் தாம் புரிய வேண்டிய கடமையை மறந்து தமக்குள் ஒருவருடனொருவர் போர்புரிவது வழக்கமாமே? அது உண்மைதானா?"

"சில புராதனவம்சங்கள் தமக்குள் தொன்றுதொட்டுப் பரஸ்பர விரோதம் உண்டு. அந்த விரோதத்தின் காரணமாய்ச் சிலவேளைகளில் அவர்களுக்குட் சண்டை மூண்டுவிடுகிறது. ஆனால் அவ்வதிபதிகள் ஒருபோதும் சக்ரவர்த்தியவர்களுக்குத் தாம் புரியவேண்டிய கடமைகளை மறப்பதில்லை."

"உமது வீட்டாருக்கு அத்தகைய பகைவர்கள் எவராயினும் உண்டா?"

'எங்களுக்குந் தேவிபுரத்தாருக்கும் முந்நூறு வருஷகாலமாகப் பகைமையும், போர்களும், கலஹங்களும் அதிகமாய் உண்டு. இவ்வளவு விரோதங்களுக்கிடையிலும் ஸமயம் வந்தபோது நாங்கள் ஒருவருக்கொருவர் மரியாதை பாராட்டிக் கொள்ளுகிறோம். சக்ரவர்த்தியவர்களுக்கு நாங்கள் ஒருவருடனொருவர் போட்டிபோட்டுக்கொண்டு உழைத்துவருகிறோம். இந்தப் பரஸ்பர விரோதத்தை ஒழிக்கும் நிமித்தம்

எத்தனையோ முறை நாங்கள் ஒருவருடனொருவர் ஸம்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம். இதுவரைக்கும் ஒன்றும் பயன்படவில்லை."

"அதற்கென்ன, பெரிய குடும்பங்கள் தமக்குள் பரஸ்பர விரோதம் ஸர்வஸாதாரணம். ஆனால் ஸம்பந்தம் செய்துகொண்டோம் என்றீரே. அது விஷயமாய் ஒன்று உம்மைக் கேட்கவேண்டும். ராஜா மான்ஸிங்குடன் போர்முனை செல்லுமுன் தேவிபுரத்துப் பெண் ணி எவளையாவது நீர் மணம்புரிய உத்தேசித்ததுண்டா?" என்று புன்னகை செய்துகொண்டே கேட்டாள் மிஹ்ருந்நிஸா.

நரேந்த்ரன் தலைகுனிந்து பூமியைப் பார்க்கலானான். அவனுடைய முகம் கோவைப்பழமாய்ச் சிவந்தது. தன் பூர்விக சரிதம் இப்பெண்மணிக்குத் தெரியுமா? தெரிந்துகொண்டே தான் தன் மனதை இவ்வாறெல்லாம் வேணுமென்று ஹிம்ஸிக்கின்றனளா? தன் வாயை விட்டுச் சொல்லமுடியாத தன் அந்தரங்கத்தை எப்படியாவது க்ரஹிக்கவேண்டுமென்று இவ்வாறெல்லாம் தன்னைத் திருப்பித் திருப்பிக் கேட்கிறாளா? நரேந்த்ரன் அம்மாதுசிரோமணி கேட்ட கேள்விக்குப் பின் வருமாறு விடை பகர்ந்தான்.

"ஏதோ பால்யத்தில் இருந்திருக்கலாம். அவற்றையெல்லாம் இப்போது எடுத்துரைப்பானேன். புருஷனென்பவனுக்கு எத்தனையோ கோரிக்கைகள் இருக்கலாம். அவற்றுள் பல பொய்த்துவிடுகின்றன. அவையெல்லாம் தங்களுக்குத் தெரிவானேன்."

"ஒன்றும் சொல்லவேண்டாம். அவற்றையெல்லாம் சொல்வதற்கு உமக்கு வருத்தமாயிருக்கிறதுபோலும். இனி நான் அவ்விஷயமாய் ஒன்றுங் கேட்கமாட்டேன். உம்மை இங்கே அழைத்ததனால் நீர் எத்தனையோ அபாயங்களுக்கு உட்பட்டீர். உம்மை நம்பினவளும், வீரதீரான வீரநகரத்து அதிபதியின் உதவியை ஒரு காலத்தில் ஆச்ரயிக்கக் கூடியவளுமான ஒரு ஸ்நேஹிதையை நீர் இன்றைக்கு ஸந்தித்தீர் அல்லவா? இந்தாரும், இந்த ஸம்பாஷணையின் அடையாளமாக இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளும்."

மிஹ்ருந்நிஸா மோதிரத்துடன் தன்னிடத்தைவிட்டு எழுந்தாள். நரேந்த்ரனும் அந்தப் பெண்ணரசிமுன் முழந்தாளிட்டான். மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளும்போது இன்னொருமுறை அவர்களுடைய கைகள் ஸ்பர்சித்தன.

"எழுந்திரும், நீர் வாய்விட்டுச் சொல்லாததொரு விஷயம் நான் உமது முகத்தினின்றும் க்ரஹித்துக்கொண்டேன். நீர் பிறருக்கு வெளிப்படுத்தக்கூடாத ஓர் அந்தரங்கத்தை வைத்துக் காப்பதை நான் மெச்சினேன்.

"கோரிக்கை நிறைவேறாமையினால் ஏதாவது துக்கம் ஏற்படுமாயின், அந்தத் துக்கத்தால் மனிதனுடைய குணம் சீர்ப்படுகிறது. பால்ய பருவத்தில் நீர் ஒரு நற்குண ஸ்த்ரீயுடன் பழகியிருந்தால் அப்பழக்கத்தால் உமது வாழ்நாட்கள் பரிசுத்தமாகின்றன. தாயோ தமக்கையோ, பெண்ணோ பெண்சாதியோ யாராவது ஒரு ஸ்த்ரீயுடன் பழகாமலிருந்தால் அம்மனிதன் என்ன சௌர்யவானாயிருப்பினும் அரை மனிதன்தான். கடவுள் அவனுக்குப் பூர்ண மானிட ஜன்மம் அளிக்கவில்லையென்றே சொல்லவேண்டும்" என்று பேசிமுடித்தாள் மிஹ்ருந்நிஸா.

அத்யாயம் 6

அந்தப்புர ரஹஸ்யம்

ஸுமார் ஒரு மணி இரண்டுமணி ஸாவகாசமாயிற்று. ஜெலிகாவும் அவளுடைய தோழியும் அந்தப்புர வாயிலண்டை வந்தனர். கதவு தாளிடப்பட்டிருந்தது. காவலாளிகள் ஒருவருமில்லை.

"இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. ஸரி, அவன்தான் இதற்கெல்லாம் மூலகாரணம். நாம் சுவரின்மேல் ஏறிக்குதிக்கவேண்டும். அல்லது ஆற்றுவாசல் வழியாய் வெளிச்செல்லவேண்டும். இரண்டினுள் பின் கூறியதுதான் உத்தமம். சுவர் ஏறிக்குதிப்பது உசிதமன்று" என்று ஜெலிகா தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

நரேந்த்ரன் வாய்மூடி மௌனமாய்த் தார்த்தரிப்பெண் செல்லும் வழியே அவளைப் பின்பற்றி நடந்தான். அப்பெண் எத்தனையோ கோணல் வழிகள், இடுக்கு வழிகளெல்லாம் தாண்டிப் பரபரவென்று சென்றாள். கடைசியில் இருவரும் நதியண்டை வந்தனர். இருவரும் இரண்டு தண்ணீர்க் குடங்கள் ஸம்பாதித்துக்கொண்டனர். அந்த நள்ளிருளில் ஜெலிகாவும் அவளுடைய தோழியும் குடமும்

கையுமாய் நீர் மெள்ளவந்த இரண்டு ஸ்த்ரீகளைப்போல் யமுனா நதி தீரத்தில் நின்றனர்.

நரேந்த்ரன் ஒன்றுந் தோன்றாதவனாய்ச் சித்தப்ரமையடைந்து நின்றான். ஜெலிகா திடீரென்று சிரித்தாள். தான் அப்போது இருக்கும் ஆபத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்த நரேந்த்ரன் ஜெலிகா சிரித்ததின் காரணத்தை க்ரஹிக்கக்கூடாதவனாய்,

"என்ன ஜெலிகா, ஸமயம் ஸந்தர்ப்பம் அறியாமல் சிரிப்பதின் பொருள் எனக்குப் புலப்படவில்லையே!"

"நீ இன்னார் என்பது உனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறதோ இல்லையோ என்பதை நினைத்துச் சிரித்தேன்."

"பெண்ணே, நீ செய்யும் கார்யங்களெல்லாம் அத்புதமாயிருக்கின்றன. இவற்றையெல்லாம் கண்டு சிலவேளை நான் இன்னானென்பது எனக்கே மறந்துபோய்விடுகிறது. ஒருமணி நேரத்துக்குமுன் நீ என்னை உன் ஸஹோதரி ஷெரிபா என்று அழைத்தனை அல்லவா?"

"ஆமாம் நிஜந்தான். ஆனால் எனது ஸஹோதரி ஷெரிபா இவ்வளவு விடியற்காலத்தில் நீர் மெள்ள வரமாட்டாளே."

"ஜெலிகா, நானோ ஒரு போர்வீரன். இந்த ஸாஹஸங்கள், மாறுவேஷங்கள், புனைபெயர்கள் எல்லாம் எனக்கு ஒன்றுந் தெரியாது" என்று நரேந்த்ரன் சிறிது கோபத்துடன் கூறினான்.

"போர்வீரனா? போர்வீரன் வெளிப்ராகாரத்தில் விருந்தாளி மண்டபத்தில் ஸுகமாய் நித்திரை செய்துகொண்டிருக்கிறான். தோழீ, அப்போர்வீரன் அந்தப்புரத்துக்குள் அடிவைத்தால் இரண்டு துண்டாய்ப் போய்விடுவான். தெரியாதா?"

"ஸரி, நீ என்ன கட்டளையிடுகிறாயோ அவ்வாறே செய்கிறேன்."

"அது எப்படி? நான் யார் உனக்குக் கட்டளையிட. நாம் இருவரும் அடிமைகளாயிற்று. ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வில்லை. நான் மஹாராணியார் ஜோத்பாய் சீமாட்டியின் வேலைக்காரி, நீ மிஹ்ருந்நிஸா பீகம் அவர்களின் வேலைக்காரி. இருவரும் ஆற்றுக்கு நீர் மெள்ள வந்திருக்கிறோம். தெரிந்ததா?"

நரேந்த்ரன் கோபம் ஒரு பக்கமிருக்க அதை மறந்து புன்னகைசெய்து "தெரிந்தது. போதும் இன்றையுடன். இனி ஒருபோதும் ஒரு பெண் கையிலகப்பட்டு நான் இவ்வாறெல்லாம் தத்தளிக்கமாட்டேன். சிறிது நேரத்துக்குள் என்னவிதமெல்லாம் ஆட்டுவித்து விட்டாய்! இனியும் முடிந்தபாடில்லை" என்றான்.

"ஆகட்டும், அப்படியே செய், மறந்துவிடாதே. ஷெரீபா, என்ன, சுத்த அசடாயிருக்கிறாய். உன்மட்டுங்கூட முகம், தலைமயிர், துணிமணி இவற்றை ஸரியாய் வைத்துக்கொள்ளத் தெரியவில்லையே. அதோ பார், மயிர் எல்லாம் ஒரு பக்கம் தொங்குகிறது. இதை ஸரியாய் முடித்துக்கொள்ளத் தெரியவில்லையா? குழந்தையாயிருந்தபோது உன் தாயார் தலையை வாரி முடிபோடச் சொல்லிக்கொடுக்கவில்லையா? இங்கே வா, ஸரியாய் முடிக்கிறேன். இப்படி—இப்படி— இப்படி. ஸரியாய் வந்துவிட்டது பார். இது தெரியவில்லையே? ஸரி, துணியை ஸரியாய்க் கட்டிக்கொள்; எல்லாம் ஒரு பக்கமாய்ப் போயிருக்கிறது பார். கொஞ்சங்கூட வெட்கமென்பதே உனக்குத் தெரியவில்லையே. குடத்தைத் தலைமீது நேராக வைத்துக்கொள். இந்தா, இந்த இடது கையை இடுப்பின்மேல்வை. இடதுகாலை எடுத்துவைத்து, வலதுகையை வீசிக்கொண்டு நட. குற்றமில்லை நட. நீ என் வார்த்தையைக் கேட்டு நான் சொல்லுகிறபடி நடந்தால் சீக்ரத்தில் உனக்கு அரண்மனையில் வேலையகப்படும். உனது எஜமானி பீகமும் உனக்கு இன்னும் இரண்டு மோதிரங்கள் கொடுப்பார்கள்."

இப்படிக்கெல்லாம் பரிஹாஸம் செய்துகொண்டே தன்னை இப்படி, அப்படியென்று ஹிம்ஸித்துக்கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் தலையில் தன் குடத்தைப் போட்டு உடைக்கலாமா என்று ஆத்ரம் உண்டாயிற்று நரேந்த்ரனுக்கு. படிக்கட்டுகளில் தட்டித்தடுமாறி, உடம்பெல்லாம் ஜலத்தைக் கொட்டிக்கொண்டு, நிறைகுடத்தை அரை குடமாக்கி விதியில்லையென்று நடந்து சென்றான் நரேந்த்ரன்.

ஆற்றுப்பக்கம் பாரா இருந்த ஒரு காவல்காரன் அவர்களை நிறுத்தி, "நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"அவள் மிஹ்ருந்நிஸா பீகம் அவர்களின் வேலைக்காரி. அவள்பெயர் நஸிமா. நான் ஜோத்பாய் மஹாராணியாரின் அடிமை ஜெலிகா."

"நீ ஸரிதான். அவளை எனக்குத் தெரியாது.

இவ்விடத்துக்கு அவள் புதியவள். முஸ்ரூர் அவர்களின் உத்தரவு. இன்றிரவு அந்தப்புரத்துக்குள் பழக்கமில்லாத ஸ்த்ரீகள் ஒருவரும் போய்வருதல் கூடாது."

நரேந்த்ரன் மனது படபடவென்று அடித்துக்கொண்டது. அவனுடைய வலதுகையும் கத்தியை நாடிச்சென்றது. ஆனால் ஜெலிகா பக்கத்திலிருக்க அந்த அவச்யம் எதற்கு.

ஜெலிகா சிறிதும் அஞ்சாமல் "நஸீமா, உன் எஜமானியவர்களின் மோதிரத்தைக் காண்பி. அப்புறமும் அவன் தடை செய்தால் ராணியார் அவர்களுக்கு அவன் பதில் சொல்கிறான். நமக்கென்ன?" என்று தீரமாய்ச் சொன்னாள்.

நஸீமா மோதிரத்தைக் காண்பித்தாள். காவற்காரனும் தலைகுனிந்து அவர்களுக்கு வழிவிட்டான்.

இன்னும் இரண்டொருமுறை இவ்வாறே தொந்தரவு ஏற்பட்டது. "ஸரி, போர்வழியினுடைய ஏற்பாடு இது. அவன்மட்டும் அவன் என்னமோ தன் வலையை நாலாபக்கமும் நன்றாய் வீசியிருக்கிறான். இருந்தாலும் அம்மீன் அவன் கையில் அகப்படாது. இல்லாவிட்டால் எனக்குத் தார்த்தரிப் பெண் என்னும் பெயர் பொருந்துமா?" என்று ஜெலிகா தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

ஆம்பர் அரசியின் வேலைக்காரிகளாகிய சில ராஜபுத்ர ஸ்த்ரீகள் வழக்கப்ரகாரம் இந்த விடியும் நேரத்தில் ஆற்றங்கரைக்கு வந்திருந்தனர். அவர்கள் தங்கள் குடங்களை மணலின்மீது வைத்துவிட்டுச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்க்குமுன்னமே அவர்களுடைய வார்த்தை சப்தம் ஜெலிகாவுக்குக் கேட்டது. நிதானித்து உற்றுக்கேட்டாள். அவர்கள் இன்னார் என்பது அவளுக்குத் தெரிந்தது. மேலே நடக்கவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி உடனே யோசித்துவிட்டாள்.

"நஸீமா, நிரம்ப சமத்தாயிருக்கிறாயே! உடம்பெல்லாம் நனைந்துபோய்விட்டது. துணியெல்லாம் தெப்பமாயிருக்கிறது. சுவரின்மீது மோதித் தண்ணீர்க் குடத்தை உடைத்துவிட்டாய். ஸரி, அதைக்கீழே போட்டுவிடு."

"ஜெலிகா, போதும் இந்தப் பரிஹாஸமெல்லாம். இனி நான் பொறுக்கமாட்டேன். இதோ குடத்தைப் போட்டுவிட்டேன். உன் விளையாட்டு வேடிக்கைகளையெல்லாம் கட்டிவை. மேலே நடக்கவேண்டிய கார்யத்தைவிட்டுச் சொல்லிவிடு. யாரோ நமக்கு எதிரே பெண்கள் குரல் கேட்கிறது, அவர்கள் கண்ணுக்கு அகப்படக்கூடாது நாம்."

"அவர்களை நாம் ஸந்திக்க வேண்டிவரும், ஏனென்றால் ஒரு சிறு குடத்தைத் தூக்கித் தலைமேல் வைத்துவரத்தெரியாத அசட்டுப் பெண்ணுக்கு அவர்கள்தான் உதவி புரிய வேண்டும்."

"பைத்யம் பிடித்துவிட்டதா என்ன உனக்கு? அவர்கள் கண்ணுக்கு நாம் அகப்படக் கூடாது. அகப்பட்டால் நாம் தப்பித்துக் கொள்ளமுடியாது."

"அவர்கள்தான் நமக்கு உதவி செய்ய வேண்டும்," என்றாள் ஜெலிகா.

'வீணாய் நீ கற்றதையெல்லாம் இன்றைக்கே பேசிவிடாதே, உனக்கு என்ன தெரியும். இந்த ஸமாசாரமெல்லாம்? நீயோ ஸ்வபாவமாகவே மஹா புத்திசாலி; கூடப்போனாலும் போதாதற்கு நீ இந்த ஊருக்குப் புதியவள். சற்று உன் வாயை மூடிக்கொண்டு நான் சொல்கிறபடியே செய். உன் யோசனை ஒன்றும் இங்கு வேண்டாம், தெரியுமா?"

"யார் அங்கே? கொஞ்சம் ஒதுங்கி நில்லுங்கள். நாங்கள் தலையில் குடமெடுத்து வருகிறோம்" என்றாள் ராஜபுத்ர ஸ்த்ரீகளில் ஒருத்தி.

"ஸஹோதரீ, உங்களையெனக்குத் தெரியும், நீங்கள் வாருங்கள் ஒதுங்கியிருக்கிறோம், நீங்களெல்லோரும் மஹாசிறந்த ஆம்பர் ராணியாரின் ஆட்கள் அல்லவா? என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு?

"ஓஹோ நீயா! தெரிந்தது. நீ ஜோத்பூர் அரசியின் வேலைக்காரி ஜெலிகா அல்லவா?"

"ஆமாம், இவள் மிஹ்ருந்நிஸா பீகம் அவர்களின் வேலைக்காரி நஸீமா. ஆக்ராவுக்குப் புதிதாய் வந்தவள்."

"அவளும் உன்னோடு ஜலத்துக்கு வந்தாள் போலும், நீங்கள் உங்கள் வழியைவிட்டு வழிதப்பி வெகுதூரம் வந்து விட்டீர்களெனத் தோற்றுகிறது."

"இல்லை, கோட்டையின் வெளிப்ராகாரத்திலிருக்கும் விருந்து மண்டபத்தில் காயப்பட்டுப் படுத்திருக்கும் வங்கதேசத்து வீரனைப் பற்றி விசாரித்துவரும்படி ராணியார் ராக்யா

பீகமவர்கள் இவளை அனுப்பினாராம். வெளிக்கோட்டையின் கதவுகள் இன்றைக்கு மூடியிருக்கிறதாம், ஆற்றுவாயில் வழியாய் வந்தாள், உள்ளே போகவேண்டுமாம் விழித்துக்கொண்டிருக்கிறாள்.

"ஆமாம், வெளிக்கோட்டைக் கதவுகள் மாத்ரமன்று, எல்லாக்கதவுகளும் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. ஸலிம் இளவரசரின் தோழிகள் யாவரும் சிறைப்பட்டனர். இளவரசரும் ஆபத்துக் குள்ளாகியிருக்கிறார். இதெல்லாம் உனக்குத் தெரியாதா? கூட இளவரசரால் அனுப்பப்பட்ட ஒற்றனொருவன் மாறுவேஷம்பூண்டு மிஹ்ருந்நிஸா அறைக்குள் ப்ரவேசித்தானாம். ஒன்றும் உன் காதில் விழவில்லையா?"

"ஏதோ சச்சரவு சப்தம் காதில் பட்டது. ஆனால் கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேன்? தார்த்தரிப் பெண்ணுக்கேன் அந்த விசாரமெல்லாம்?"

"அது ஸரிதான், நீ ஏன் விசாரிக்க வேண்டும்? நான் எங்கள் ராணியாருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தேன். அப்போது யாரோ வந்து சொன்னார்கள். பயங்கரமான அந்த முஸ்ரூர் ஸூர்யோதயத்துக்குமுன் அந்த ஒற்றனைக் கண்டுபிடித்துவிடுவதாகக் கச்சை கட்டியிருக்கிறானாம்."

"அவன் மஹா ஸமர்த்தன். எப்படியாவது கண்டுபிடித்து விடுவான்." என்று புன்சிரிப்பு சிரித்துக்கொண்டே சொன்னாள் ஜெலிகா.

"எங்கே, எங்கேயோ ரொம்ப கார்யமாய்ப் போகிறாளே; அந்தவழியாய்ப் போனால் வெளிக்கோட்டைக்குப் போகமுடியாது."

"அதுதான் நானும் சொன்னேன். அவள் பாரஸீகப்பெண்; நம்பாஷை அவளுக்குத் தெரியவில்லை. மிஹ்ருந்நிஸா பீகத்தின் வேலைக்காரிகள் இந்த அரண்மனையில் அடிக்கடி வழிதப்பிப் போகிறார்கள். மஹாமூடங்கள்!"

"மூடமா, அந்தப் பாரஸீகப் பெண் நீ சொல்கிறபடி அவ்வளவு மூடமாகக் காணோம். பார்ப்பதற்கு அப்படியிருக்கிறாள். அவள் ஏதாவது சொந்த அலுவலை உத்தேசித்து ஆற்றங்கரைக்குத் தானே ஒருவரிடமும் சொல்லாமல் வந்திருக்கலாம். என்ன ரஹஸ்யமோ, என்ன அந்தரங்கமோ யாருக்குத் தெரியும். ராக்யா பீகம் அனுப்பினாள் என்பது வெளிக்கு வேஷமாயிருக்கலாம்."

"இருந்தாலும் இருக்கலாம், ஸஹோதரீ! அடிக்கடித் தமது காதலர்களைப்பற்றிப் பாடிக்கொண்டு கேளிக்கையில் காலங் கழிக்கும் இந்தப் பாரஸீகப் பெண்களைத் தார்த்தரிப் பெண்களாகிய நாங்கள் நம்புவதில்லை. ராஜஸ்தானத்துப் பெண்களைப்போல மதியூகமும் நற்குணமும் இவர்களுக்குக் கிடையாது. இந்த அசடு எந்தப் பாரஸீகப் புருஷனையாவது கண்டு மதி மயங்கி இப்படிக்கெல்லாம் அலைந்து அவஸ்தைப்படுகிறது. என்ன நஸீமா, அப்படித்தானா உண்மையைச் சொல" என்றாள் ஜெலிகா.

அதிகப்ரஸங்கியாகிய இந்த ஜெலிகா இவ்வாறெல்லாம் தன்னைப்பற்றிப் பேசியதைக்கேட்டு நரேந்த்ரனுக்குக் கோபமும் ஆத்ரமும் உண்டாயிற்று. அவன் உதட்டைக் கடித்துக்கொண்டான். அவனுக்கு வந்த அகங்காரத்துக்கு அளவேயில்லை. ஆனால் என்ன செய்வது. இப்போது அவன் அவள் கையில் அகப்பட்டிருக்கின்றான். பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில் ஏறித்தீரவேண்டும். ஏதோ இரண்டொரு மொழிகள் பேச வாயெடுத்தான்; ஜெலிகா அடக்கிவிட்டாள்.

"இந்த மக்கு, இடித்த புளிபோல் நிற்கிறது. வாயைத் திறக்கக்காணோம். கொஞ்ச தினங்களுக்கு முன்னாதான் பாரஸீகத்தினின்று வந்தது. நம்முடைய பாஷை இன்னும் தெரியவில்லை, என்ன வைதாலும் தெரியாது."

"அப்படிச் சொல்லாதே ஜெலிகா. நீ சொல்வதெல்லாம் அவளுக்கு அர்த்தமாகிறது. அர்த்தம் தெரியாமல் வாயை மூடிக்கொண்டு இல்லை. வாயைத் திறந்தால் தன் ரஹஸ்யம் வெளியாய் விடுமென்று மௌனம் ஸாதிக்கிறாள். இந்த நிச்சப்தமான இரவில் ரதிகை க்ருஷ்ணனைத்தேடி யமுனா நதிதீரத்துக்கு வந்திருக்கிறாள்."

"அவள் வேண்டுமானால் க்ருஷ்ணனைத்தேடி வந்திருக்கலாம். பனைமரம்போல் வளர்ந்திருக்கும் இந்த ரதிகையைக் கண்டு அவன் ஓடிவந்து விடமாட்டானோ?" என்றாள் ஜெலிகா. எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். நரேந்த்ரனுக்கு ஆத்ரம் அதிகரித்தது.

"ஸஹோதரீ, வெளிக்கோட்டையில் படுத்திருக்கும் ஸேனாதிபதியைப்பற்றி உனக்கு

எதாவது தெரியுமா சொல்; அவர் தேகஸ்திதி எப்படியிருக்கிறது" எனக்கேட்டாள் ஜெலிகா.

"ஆம்பர் விருந்து மண்டபத்தில்தானே அவர் இருக்கிறார். அவரைப்பற்றித் தெரியாதா எனக்கு? மேலும் என் எஜமானியாரது வைத்தியர்கள்தான் அவருக்குச் சிகிச்சை செய்கிறார்கள். அவருக்கு இப்போது நன்றாய்க் குணமாய்விட்டதென்றும், நாளையதினம் காலை அவர் கோட்டையைவிட்டுச் செல்வதாயும் ராஜாமான்ஸிங் என் எஜமானியாருக்கு நேற்றையதினம் செய்தியனுப்பினார்."

"அப்படியானால் துரிதஞ்செய். அவர் கோட்டையினின்றும் புறப்படுவதற்கு முன் இந்தப் பெண்ணைச் சற்று அவரிடம் அழைத்துச்செல். ஒழிந்து போகிறது. அசட்டுப்பெண் போய்ப் பார்த்து வரட்டும். வங்காளத்துக்குப் போகும் பிகம் ஏதோ சிலகட்டளைகள் அவருக்கு இட்டிருக்கிறாள் போலிருக்கிறது. அவள் சொல்வதினின்று அவ்வளவுதான் தெரிகிறது எனக்கு. பிகம் அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றிவிட்டால் இந்த அசட்டுப்பெண் தலை போய்விடும். ஐயோ பாவம். சற்று உபகாரஞ் செய் ஸஹோதரீ."

"ஜெலிகா, இந்த அயல்நாட்டுப் பெண்கள் ஆக்ராவுக்கு வருவது எனக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் நீ இவ்வளவு தூரம் சொல்வதால் இவளுக்கு உதவி செய்கிறேன்."

"ஸஹோதரீ, நீ மிகவும் நல்லவள். உனது எஜமானியாகிய ராணியாருக்கு ரொம்பவும் வேண்டியவள் நீ. உன்னைக் கண்டால் எந்தக் காவற்காரனும் பதில் வார்த்தை சொல்லமாட்டான்."

"நீ சொல்வது உண்மையே. காவற்காரன் தயை எதுக்கு? எங்களுடைய கதவின் சாவி என்னிடமிருக்கிறது. ஆம்பர் விருந்து மண்டபத்துக்குச் செல்லும் வழிக்கு அழைத்துப் போய்விடுகிறேன். அதற்குமேல் அவள்தான் சென்றுவிடுவாள் அல்லவா?"

"ஆம், அதற்குமேல் அவளுக்குத் தெரியும் வழி. நீ எனக்காக இவ்வளவு ச்ரமம் எடுத்துக்கொள்வதற்கு ப்ரதியுபகாரம் நான் என்ன செய்யப்போகிறேன். ராஜபுத்ரர்கள் என்றால் ராஜபுத்ரர்கள்தான். அவர்களைப்போல் அன்பும் நம்பிக்கையும் உடையவர்கள் வேறு எவர் இருக்கின்றனர்."

உடனே யாருக்குந் தெரியாமல் நொடிநேரத்துக்குள் ஜெலிகா நரேந்த்ரனண்டைவந்து "அந்த ராஜபுத்ர ஸ்த்ரீயைப் பின்பற்றிச் செல். அந்தகார வழியில் நின்றிரு. நான் வருகிறேன்" என்று சொல்லிப் போய்விட்டாள்.

ராஜபுத்ர ஸ்த்ரீ எத்தனையோ இடுக்குவழிகளெல்லாம் கடந்து ஆம்பர் ராணியார் அறைக்குச் சென்றாள். ராணியார் நல்ல நித்ரையிலிருந்தாள். எல்லாம் நிச்சப்தமாயிருந்தது. நரேந்த்ரன் அந்த ஸ்த்ரீ செல்லும் வழியே நடந்து சென்றான்.

பல அறைகள், மண்டபங்களைக்கடந்து இருவரும் அந்தப்புரத்துக்கும் வெளிக்கோட்டைக்கும் இடையிலுள்ள சுவரையடைந்தனர். ராஜபுத்ர ஸ்த்ரீ தன் மடியிலிருந்து ஒரு திறவுகோலையெடுத்துக் கதவைத் திறந்தாள். அந்த வாயிலைத் தாண்டி, அதற்கு அப்புறம் உள்ள முற்றத்தைக் கடந்து இருவரும் அந்தகார வழியண்டை வந்தனர்.

"இந்த வழியே நேராகச் செல். வங்க நாட்டு யௌவனவீரர் இருக்கும் அறையை அடைவாய். தெரிந்ததா நான் கூறியது?"

நரேந்த்ரன் தலையை ஆட்டி அந்த ராஜபுத்ர ஸ்த்ரீக்கு வந்தனம் புரிந்தான். அவளும் புன்னகை செய்து ஏதோ ஒரு பாட்டைப்பாடிக்கொண்டே திரும்பிச்சென்றனள்.

அந்த அந்தகாரத்தில் நரேந்த்ரன் நெடுநேரம் காத்திருந்தான். ஒருவரும் காணோம். எல்லாம் நிச்சப்தம். பேச்சு மூச்சு கிடையாது. ஜெலிகா என்ன ஆபத்துக்குட்பட்டாளோ என்று நினைத்து அவன் வருத்தப்பட்டான். காற்று ஜில்லென்று வீசியது. நரேந்த்ரனுக்கு மிகவும் குளிராயிருந்தது.

ஒரு ம்ருதுவான ஸ்பர்சம்: ஜெலிகா அவன் பக்கம் நின்றிருந்தாள் "கேட்டாயா அந்தச் சப்தத்தை?" என்றாள்.

"நான் ஒன்றும் கேட்கவில்லையே. காற்று வீசும் சப்தம்தான் என் காதில் பட்டது."

மறுபடியும் ஒரு சப்தம் உண்டாயிற்று. காற்று வீசும் ஒலியன்று. யாரோ ஒருவர் பயங்கரமாய் நகைப்பது போலிருந்தது. வீரதீரம் படைத்த ஜெலிகாவே நரேந்த்ரனைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டாள். அவளுடைய கால் கைகள் உதறலாயின.

"கடவுள்தான் காப்பாற்றவேண்டும்" என்று மெள்ளமாய் ப்ரார்த்தித்தாள் அவள்.

"என்னிடம் பாரஸீகப் பெண்மணியின் மோதிரம் இருக்கிறது. நமக்குப் பயமில்லை ஜெலிகா."

"ஒரு மனிதன் அரசருடைய அந்தப்புரத்துக்குள் சென்றிருந்தானென்றால், சக்ரவர்த்தியவர்களுடைய மோதிரமாயிருந்தாலும் ஸரிப்ரயோஜனப்படாது. அதிர்ஷ்டவசம் நீ ராஜபுத்ர ஸ்த்ரீயுடன் வந்தனை. உன்னை யாரும் ஸந்தேஹிக்கவில்லை. ஆனால் என்னைக் கவனித்தார்கள். அவர்கள் என்னைப் பின்பற்றி வருகின்றனர். ஆற்றங்கரை காவலாளிகளுக்கெல்லாம் கடும் உத்தரவுகொடுக்கப்பட்டிருக்கிறது."

"ஜெலிகா, நீ மஹா தைர்யசாலியாயிற்றே. நீயே இவ்வாறு அகாரணமாய்ப் பயப்படுகின்றனையே. உன்னைப் பின்பற்றி ஏன் வரவேண்டும்?"

"நான் ஓர் ஒற்றனை உள்ளே அழைத்துப் போனதாக அவர்கள் ஸந்தேஹிக்கிறார்கள்."

"வா, என்னுடைய அறைக்குப் போய்விடலாம். அங்கே பயமில்லை." என்றான் நரேந்த்ரன்.

"ஸரி. அவர்களுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகும். எல்லாம் வெளியாய் விடும். இருவரும் இறக்கவேண்டியதுதான்."

"அங்கே யார் வரப் போகிறார்கள்?"

"யாரா? யார் இருக்கிறான். அவன்தான். அந்தக் கொலைப்பாதகன்தான்."

"யார் அந்தக் கொலைபாதகன்?"

பதில் இல்லை.

சிறிது நேரங்கடந்தது. அவர்கள் நின்றிருந்த பக்கமாய் யாரோ வருகிற காலடிச் சப்தம் கேட்டது க்ஷணமே ஜெலிகா ஏற்பாடு செய்துவிட்டாள்.

"போய்விடு; நீ உன் அறைக்கு. நாம் இருவரும் இங்கே ஒன்றாய் இருக்கக்கூடாது. போ போ, இல்லாவிடில் செத்தோம். ஸூர்யோதயத்துக்குள் உன்னை மறுபடியும் வந்து பார்க்கிறேன். அதற்குள் நான் ஸந்திக்கவேண்டும் என்னுடைய—காதலனை."

மறுபடியும் ஒருமுறை ஜெலிகாவின் வெளுத்த முகத்தில் ஒரு புன்சிரிப்பு உண்டாயிற்று.

அவள் நிஷ்க்ரமித்தாள்.

நரேந்த்ரன் இம்முறைதான் ஜெலிகாவின் வார்த்தையைத் தட்டினான். அவன் அறைக்குப் போகாமல் அந்தகார வழியில் பிறருக்குப் புலப்படாவண்ணம் என்ன நடக்கிறது பார்க்கலாமென்று கத்தியுங் கையுமாய் நின்றான்.

காலடியோசை நின்றுவிட்டது. காவலாளி அப்புறம் போய்விட்டிருக்கவேண்டும். ஜெலிகாவும் உடன் சென்றிருக்கவேண்டும். அரைமணியாயிற்று. ஒன்றும் கேட்கவில்லை. கண்ணுக்கும் ஒன்றும் தென்படவில்லை.

வெகு தூரத்தினின்று ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. அது அவ்வளவு தெளிவாயில்லை. நரேந்த்ரன் நடுக்கிட்டான். அவன் கதவை நெருங்கினான். முன்னர் கேட்ட குரல் இப்போது கெஞ்சிக் கேட்பதும், இன்னொரு குரல் கோபத்துடன் விடையளிப்பதும், பிறகு மனதைப் பிளக்கும்படியான கதறலும் கேட்டது. கடைசியில் எல்லாம் அடங்கிவிட்டது.

மறுபடியும் தூரத்தினின்று மந்தமான சப்தம். ஒரு நெடிய கீச்சென்ற அழுகைக் குரல். நரேந்த்ரனால் ஸஹிக்கக்கூடவில்லை. அவன் வெளியே வந்து சுற்றிப்பார்த்தான். ஒரே இருள். காடாந்தகாரம்; ஒரு குரலொலியுமில்லை பின்பற்றிச் செல்லலாமென்றாலும்.

திரும்பவும் முன்போல் மந்தமான அழுகைக் குரல். மறுபடியும் நிச்சப்தம்!

ஸ்பர்ச உணர்ச்சி! ஜெலிகா அவன் கையைப் பிடித்துப் பரபரவென்று அவனுடைய அறைக்கு அழைத்துச் சென்றாள்.

இருவரும் உள்ளே நுழைந்தவுடன் ஜெலிகா உரக்க நகைத்தாள், நரேந்த்ரன் ஜெலிகாவை விளக்கொளியில் பார்த்தான்; திடுக்கிட்டான். அவளுடைய ஆடையெல்லாம் தாறுமாறாய்க் கிழிந்து கிடந்தது: தலைமயிரெல்லாம் அவிழ்ந்து கோணல்மாணலாய் விழுந்திருந்தது; அவளுடைய புருவத்தில் ஒரு ரக்தக்கறை.

நரேந்த்ரன் அவளைக் கண்டு பிசாசைக் கண்டு பயப்படுபவனைப்போல் பின்வாங்கினான். "சிரித்தற்குத் தருணமா இது, ஜெலிகா" என்றான் நரேந்த்ரன். "ஸலவைக்கல்லிட்ட அந்த முற்றத்தில் ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது. நீ அதை என்னிடமிருந்து மறைக்க வீணாய்ப் ப்ரயத்னப்படுகிறாய். சொல்லமாட்டாயா?"

"ஆம், விசேஷம் நடந்திருக்கிறது. அதை உன்னிடம் வெளிப்படுத்த எனக்கு விருப்ப

யில்லை. வீரஸிம்ஹமே, அரண்மனைக்குள் எத்தனையோ ரஹஸ்யங்கள் உண்டு. சிறிய பெண்களுக்கு எத்தனையோ அந்தரங்கங்கள் இருக்கும். அவற்றையெல்லாம் உனக்குச் சொல்ல வேண்டுமா?''

''ஜெலிகா, என் அன்பே, உனக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள பந்தம் கேவலம் ஸ்நேஹம் மட்டுமேயன்று. இத்தருணம் உனக்கு எவ்வித உதவிவேண்டுமாயினும் செய்ய ஸித்தமாயிருக்கிறேன். உன் மெல்லிய உடல் இவ்வாறு உதறுவதும், மார்பு படபடவென்று அடித்துக்கொள்வதும் காதல் வ்யவஹாரத்தால் உண்டாவது அன்று. உண்மையை என்னிடம் விட்டுச்சொல்ல மாட்டாயோ?''

''யௌவன வீரரே, நீர் ஸ்த்ரீகளின் உள்ளத்தை எளிதில் கண்டறிந்து விடுகிறீர். என்னைப் பார்த்தால் சிறிது அலங்கோலமாயிருக்கிறது போலும். அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். ஏதோ ஓர் அந்தரங்க ஆலிங்கனத்துக்குப்பின் உண்டாகும் மனோநடுக்கத்தின் காரணத்தை ஒரு பெண் வெளிக்குச் சொல்லிக்கொள்ளவேண்டுமா?''

''ஜெலிகா, இவ்வாறு பயனற்ற மொழிகளால் நீ வீண் காலஹரணம் செய்கிறாய். பொழுது விடிவதற்காயிற்று. நம்மிருவருக்கும் அபாயம் நேரிடும். தூரத்தினின்று என் காதிலோர் ஒலி விழுந்தது. அது காதல் ஸம்பந்தமாய் எழும் ஒலியன்று. கதறலும், அழுகைக்குரலும் காதலர் களிப்பால் எழுவதன்று.''

''உமக்குக்கூடக் கேட்டதா? ஆனால் உமக்கென்ன தெரியும் அந்தப்புர ரஹஸ்யங்கள்? நீர் கற்றுக்குட்டி இவ்விஷயங்களில். இவ்விடங்களில் காதலர் திரும்பிப் பிரிந்து செல்லக்கூடாத ஸந்திப்புகள் பல ஏற்படுகின்றன.''

''ஜெலிகா, சற்று நிதானி. மனதை ஸரிப்படுத்திக்கொண்டு பேசு. அர்த்தமாகாமல் ஏதோ வாயில் வந்தபடிக்கெல்லாம் பிதற்றுகிறாயே?''

தனக்கே தான் சொல்லிக்கொள்வதுபோல் ஜெலிகா, ''பேடிகளுக்கும் மற்றவர்களுக்கும்போல் ரக்தமும் சதையும் தானிருக்கிறது. அவர்களுக்கும் அந்தப்புரத்தின் கள்ள வழிகள் நன்றாய்த்தெரியும். தலை குனிந்து அதிகப் பணிவாயிருக்கும் அடிமைகளுக்கும் அவர்களுக்கேற்ற அந்தரங்கங்கள் உண்டு. இந்தக் கொடிய பேடிகள் அவர்களைப்பின்பற்றி அவர்களுடைய ரக்தத்தைத் தயைதாக்ஷண்யமின்றி உறிஞ்சுகின்றனர்'' என்றாள்.

''உச், உச்! வாயை மூடு. ஜெலிகா. பைத்யக்காரியைப்போல் பிதற்றுகிறாயே! உனது ஆப்த நண்பனுடைய வார்த்தையை சற்று கவனித்துக்கேள். உட்கார் என் பக்கத்தில். என்மீது சாய்ந்துகொண்டு சற்று புத்தியை ஸ்திரப்படுத்திக்கொள். நான் படுக்கையாய்க் கிடந்தபோது பலமுறை நீ எனக்கு உதவிசெய்துள்ளாய். இப்போது நீ துன்பப்படும்போது உனக்கு மனப்பூர்த்தியாய் உதவிசெய்யக் காத்திருக்கிறேன். ஜெலிகா, ஸமாசாரத்தைச்சொல். உன் கண்கள் முன்போலில்லை. நீ சிரிக்கும் சிரிப்பு ஸாதாரணமான சிரிப்பு அல்ல.''

ஜெலிகா மெதுவாய்க் கீழ்ப்படிந்தாள். நரேந்த்ரன் அவளுடைய கையைப்பற்றி இழுத்துப் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டான். தன்னுடன் பல ஆபத்துகளுக்கும் அபாயங்களுக்கும் உட்பட்டுத் தனக்குப் பலவாறு ஆறுதல் கூறும் அன்பு தவழும் அந்த ஸௌந்தர்ய வீரரின் முகத்தைப் பார்க்கப்பார்க்க அவளுடைய பார்வை சாந்தப்பட்டுக்கொண்டே வந்தது.

''ஜெலிகா, உன்னை இவ்வாறுகாண என் மனது அத்யந்த த்ருப்தியடைகின்றது.'' எனத்தொடங்கினான் நரேந்த்ரன். ''நான் சொல்வதைநிதானமாய்ச்செவிசாய்த்துக்கேள். உன் அந்தரங்கங்களைக் கண்டறியவேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை. ஆனால் ஒன்று மாத்ரம் நிச்சயம். நாமிருவரும் ஓரே அபாயத்துக்குட்பட்டிருக்கிறோம். இஷ்டமிருந்தால் உன் அந்தரங்கத்தை என்னிடம் சொல். இஷ்டமில்லாவிட்டால் சொல்லவேண்டாம். அதைப்பற்றி எனக்கு அவச்யமில்லை; நான் அதைப்பற்றிக் கவலைப்படவுமில்லை. ஆனால் நேசர் நண்பரற்றுத் தன்னந்தனியனாயிருக்கும் போர்வீரனால் ஆகக்கூடிய உதவி ஏதாவதிருந்தால் ஸங்கோஜப்படாமல் சொல். எவ்வளவு அபாயத்துக் கிடமாயிருப்பினும் ஸரி, உடனே செய்து முடிக்கக் காத்திருக்கிறேன்.''

காட்டுத்தன்மையுள்ள இந்தத் தார்த்தரிப் பெண்ணின் மனதை மாற்றியதெது? சற்று முன் ஜெலிகா அநுபவித்த கஷ்டங்கள், பயனுணர்ச்சிகள் இவற்றின் ப்ரதிபலனோ? அல்லது நரேந்த்ரனுடைய வாக்சாதுர்யந்தானோ? இதற்குமுன் ஒரு தடவையும் அவள் இவ்வளவு ஸாவதானமாய் உட்கார்ந்து புருஷருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்துக் கேட்டதில்லை.

இப்போது அவள் ஆட்டைப்போல் கீழ்ப்படிந்து நரேந்த்ரன் சொன்னதையெல்லாம் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டே அவன் நிறுத்துவதாகத் தோற்றியபோதெல்லாம்,

''ஆகட்டும், மேலே சொல்'' எனச்சொல்லி வந்தாள்.

''நான் என்ன சொல்லப்போகிறேன். ஒன்றும் ஜாஸ்தியில்லை. நடந்த விஷயங்கள் ஒன்றும் எனக்குத் தெரியாது. உன் அன்பையும், ஆதரவையும் முதன் முதலில் கண்டேன். பிறகு உனது சௌர்யத்தையும், தைர்யத்தையும் கண்டு மகிழ்ந்தேன். நீ சிறிது காட்டுத்தன்மை பொருந்தியவளாயிருந்தாலென்ன? அல்லது அரண்மனையில் அடிமையாய் உழைத்து வந்தாலென்ன? உனது ஸத்யமும், உனது வீர்யமும். உனது ஸமயோசித புத்தியும் மெச்சத்தக்கன. என்னை நம்பினால் உனக்கு த்ரோஹம் புரியமாட்டேன் இது ஸத்யம், இது திண்ணம்.''

ஜெலிகா இப்போதுதான் முதல்தடவை ஒரு துளி கண்ணீர் சொரிந்தாள். அவளுடைய மனோதீரம் சற்றே நிலைகுன்றியது. அவளும் ஸாமான்ய ஸத்ரீகளைப்போலாயினள். அந்த இரும்புக்கம்பி சற்றே இளகியது. அப்போது நரேந்த்ரன் அவளைக் கிட்டே அழைத்துக் கட்டித் தன் அதரங்களை அவளுடைய பளிங்கு நெற்றியில் வைத்து முத்தமிட்டான்.

அந்த ஸ்பர்சமானது ஜெலிகாவுக்கு ஒரு நூதன உணர்ச்சியை உண்டாக்கியது. அவள் கனவில்போல் பட்டதும் படாததுமாய ''ஸ்த்ரீகளைப்போல் புருஷர்களுக்கும் வச்ய சக்தியிருக்கிறது. தார்த்தரியப் பெண்ணைப்போலவே ஒரு யுத்தவீரனும் மாந்த்ரிக பலமுடையவன்'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

''உனது வச்யம், ஜெலிகா, ஸ்த்ரீகள் புருஷர்கள்மீது ப்ரயோகிக்கும் ஸர்வ வச்யங்களுள்ளும் மஹா சிறந்தது. அதாவது அன்பார்ந்த உனது ஆதரவும் சிச்ருஷையுமே. என் வச்யமோ உனது கண்ணீரைத் துடைத்து உனக்கு எல்லாவிதத்திலும் உதவிபுரியக்கூடியது. நாழியாகிறது. எல்லாவற்றையும் சொல்.''

''அப்படியானால் இந்தக் கட்டுகளையெல்லாம் அவிழ் அந்தரங்கம் வெளியாகும்.''

பலவிடங்களில் கிழிந்திருந்த முஹமல் ரவிக்கையின் கட்டுகளை யவிழ்த்தான் நரேந்த்ரன். உள் ரவிக்கை தோம்புத் துணிபோல் ரக்தத்தால் நனைந்து கிடப்பதைக்கண்டு தன்னையு மறியாமல் நரேந்த்ரன் கதறினான். மெள்ள மெள்ள அந்த உள்ளாடையை நீக்கிப்பார்க்கையில் வயிற்றுக்குமேல் ஒரு பலமான காயம் பட்டிருந்தது. இன்னும் அக்காயத்தினின்று ரக்தம் வேகமாய் வந்துகொண்டிருந்தது. கட்டாரி நேராக மார்பில் பதிய மயிரிழை தவறியிருந்தது.

நரேந்த்ரன் கண்கள் சிவக்க, குரல் நடுங்க ''ஜெலிகா, என்ன இந்த கோரமெல்லாம்?'' எனக் கேட்டான்.

''அதுதான் என் காதலருடைய ஆலிங்கனக் குறி'' என்றாள் ஜெலிகா. ''ஆனால் என் ஆருயிர்க் காதலர் நல்ல காட நித்ரையிலிருக்கிறார். தார்த்தரிப்பெண் ஆலிங்கனம் ஸாமான்யமானதன்று.''

''இந்த விடுகதையெல்லாம் சற்று அப்புறமிருக்கட்டும். நடந்ததைத் தெளிவாய்ச் சொல். உனது விடுகதைகளை விடுவிப்பதற்கு ஸமயமல்ல இது'' என்றான் நரேந்த்ரன்.

உடனே ஜெலிகா எழுந்து ''புறப்படு சீக்ரம். நீ இந்த க்ஷணமே கோட்டையை விட்டுச் செல்லுதல் வேண்டும். ஸூர்யோதயத்துக்கு இன்னும் இரண்டு நாழிகைதானிருக்கிறது. கதவுகளெல்லாம் அதற்குள் மூடப்படும்; கோட்டை முழுவதும் வலை போட்டுத் தேடுவார்கள். அரண்மனையின் வேட்டை நாய்கள் மோப்பம்பிடித்துத் தேடத் தொடங்கும். இப்போது கோட்டைக் கதவுகள் திறந்திருக்கின்றன. கால தாமஸம் வேண்டாம்'' என்றாள்.

''உன்னை இந்த நிலைமையில் விட்டுவிட்டு நான் இந்த அறையைவிட்டுச் செல்ல மாட்டேன். இங்கேயே தங்கியிருந்து உனக்கு உதவிபுரிவேன்.''

''ஸ்வாமீ, இதென்ன சோதனை! மனித ஜன்மமென்பது இவ்வளவு மூடஜன்மமா? கழு

த்துக்கு நேராகத் தொங்கும் கத்திகூடக் கண்ணுக்குத் தெரியாதா? இவ்வளவு மந்தபுத்தியா? என்ன ஆகாத்யம் பண்ணுகிறீர். நீர் நான் மடிவதைப் பார்த்துவிட்டுத்தான் அப்புறம் செல்வீர்போலும். இவ்வளவு கல்நெஞ்சா உமக்கு? என்னிடம் எவ்வளவோ அன்பு பாராட்டுவதாகச் சொன்னீரே! கடைசியில் நம்பிக்கை த்ரோஹியா நீர். மோசம் போனேனே" எனக் கதறினாள்.

"பெண்ணே, நான் நம்பிக்கை த்ரோஹியல்லன். உன்பொருட்டு என் ப்ராணனைக்கூட விடுவேன்."

"அப்படியானால் வெளியே செல்லும் இக்க்ஷணம். அது எனக்குப் பேருதவியாகும். நீர் இங்கு தங்கியிருந்தால் நான் இறப்பது திண்ணம், திண்ணம். நீர் சென்றுவிட்டால் அநேகமாய் நான் தப்பித்துக்கொண்டு விடுவேன். இதற்கு முன் எத்தனையோ முறைத் தார்த்தரிப் பெண்களும் அரண்மனைப்பேடிகளும் சண்டையிட்டிருக்கின்றனர். அந்தப்புரச் சச்சரவுகள் அன்றுடனே ஒழியும். அதைப்பற்றி நீர் கவலைப் படவேண்டாம்."

"ஜெலிகா, நீ ஸர்வமும் தெரிந்தவள். நீ கட்டளையிடும் விதமே நான் செய்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள். மறுபடியும் உன்னை ஸந்திப்பது எங்கே? என் ஆருயிர் ஸ்நேஹிதையும், எனக்கு உயிர்ப் பிச்சை அளித்தவளுமாகிய ஸ்த்ரீயை இன்னொருமுறை பார்த்து எனது நன்றியைக் காண்பிக்காவிட்டால் என் மனம் நிம்மதியடையாது" என்றான் நரேந்த்ரன்.

"அப்படியானால் இன்றைக்கு முப்பதாம் நாள்; நிசி! இக்கோட்டையின் வெளிவாயிலில் நாம் ஸந்திப்போம், யுத்த வீரரே!" எனத் தொடங்கிய ஜெலிகா சற்று நடுங்கிய குரலாய் "அப்போது நாம் அதிக நேரம் பேசவேண்டியிருக்கும். ஏதாவது அபாயம் ஆபத்து நேரினும் நேரக்கூடும். ஆனால் நான் உம்மிடம் பூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறேன். என் தாயாரைவிட்டு வந்தது முதல், எவரிடத்தும் காணாத ஒரு தைர்யக்குறி உமது முகத்தில் காணப்படுகிறது. நீர்தான் நான் நெடுநாளாய் நாடிநின்ற வீரபுருஷர்" என்று முடித்தாள்.

ஜெலிகா நிஷ்க்ரமித்து விட்டாள்.

ஸ்ரீகாசி ஹிந்து யூநிவர்ஸிடி

THE BENARES HINDU UNIVERSITY

"அடுத்து முயன்றாலு மாகு நாளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தா னீண்ட உயர் மரங்களெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா"

எனப் பெரியோர் கூறியபடி மானிடருடைய இஷ்டங்கள் ஸித்தியாவது பரமனது கிருபையினால் அவனருளிய போதன்றே நடைபெறும்! ஹிந்து யூநிவர்ஸிடி யொன்று ஸ்தாபிக்கும் பொருட்டு சென்ற சில வருஷங்களாக பகீரதப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டுவந்த போதிலும், இம்மாதம் முதல் தேதி, யூநிவர்ஸிடி மசோதா மாட்சிமைதங்கிய ப்ரதிநிதியவர்களின் சபையில் ஆமோதிக்கப்பட்டது. இனிக் கூடிய சீக்கிரத்தில் — அடுத்த ௵ ஜூலைமீ த்திலாவது—சர்வ கலா சாலைச் சபையை ஸ்தாபிக்க முயற்சிகளும் நடை பெற்று வருகின்றன. 1916௵ பிப்ரவரிமீ 8௳ வஸந்த பஞ்சமியாக இருப்பதால் அன்றையதினம் யூநிவர்ஸிடி கட்டடத்தின் அஸ்திவாரக் கல்லை நாட்டும்படி ராஜப்ரதிநிதியவர்களும் சம்மதித்திருக்கிறார்கள்.

"எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்" என்பதை விளக்க, ஒவ்வொரு ராஜதானித் தலை நகரிலும் யூநிவர்ஸிடிகள் தற்காலமிருக்க, புதிய தொன்று ஏற்படவேண்டியதேன்? தற்கால யூநிவர்ஸிடிகளுக்கும் புதிய ஹிந்து யூநிவர்ஸிடிக்கும் உள்ள தாரதம்யங்களும், புது யூநிவர்ஸிடியின் முக்ய நோக்கமும் இன்னதென அறிவது நம் கடமையாகும். ஆங்கிலேய நாட்டின் தற்கால நிலைமை யறிந்தவர் யாவரும் அத்தேசத்தில் பல யூனிவர்ஸிடிகளிருக்கின்றன வென்பதை நன்கறிவர். முக்ய பட்டணங்கள் ஒவ்வொன்றிலும், அதாவது நம் ராஜதானியிலுள்ள முக்ய பட்டணங்களைப் போன்ற நகரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு யூநிவர்ஸிடி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவைகளினுடைய கடமைகள் வேறுபட்டவை; ஆயினும் பொது நோக்கம் ஒன்றே. விரித்துக் கூறின், சில யூநிவர்ஸிடிகள் சரித்ரத்திலும், மற்றுஞ் சில சாஸ்திரத்திலும், வேறு சில கைத்தொழில்களிலுஞ் சிறந்தவை; மனிதனுக்கு ஏதாவது ஒரு சாஸ்திரத்தில்

பயிற்சி அதிக முண்டாக வேண்டுமென்று எண்ண முண்டாயின், மேற் கூறிய யூநிவர்ஸிடிகளி லொன்றைச் சேர்ந்து தன் அறிவை பரவச்செய்ய வசதி வேண்டுமென்பதே அவைகளின் கருத்து. நெபோலியன் போனபார்டியை 1815௵ வாடர்லூ என்னு மிடத்தில் வெலிங்டன் ப்ரபு முறியடித்ததைப்பற்றி பேசிக்கொண்டிருந்த ஒருவர் "வாடர்லூச் சண்டை ஈடனிலேயே முற்றி பெற்றது" எனக் கூறினாராம். பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் குணமே பிற்காலந் தோன்றுமாதலின், மேற்கூறியதும் உண்மையே யாகும்.

ஆங்கிலக் கல்வியினால் தமக்கும் பிறருக்குமுள்ள குறைகளை யறிந்த தேசாபிமானிகள் சிலர் அக்குறைய நீக்கக் கருதினர். நம் பூர்வீக சரித்திரந் தெரிந்த பண்டிதர்களால் இந்தியர்களுக்குக் கல்வி கற்பித்து அதனால் அவர்களுடைய பாஷைகளின்மீதும், மதத்தின் மீதும், பூர்வீக பழக்க வழக்கங்களின் மீதும் அன்பு கொண்டு, பாரத மாதாவின் அடிதொழுது, நம் முன்னோர்களுடைய பெயருக்கும் பழுது வாராத வண்ணம் செய்ய முயலுவதே ஹிந்து யூநிவர்ஸிடியின் நோக்கமும், அதன் ஸ்தாபகர்களின் கருத்தும். தற்காலத்தில், "ஹிந்துக்களாய்ப் பிறக்க நாம் பாக்கியங் கொடுத்துவைக்கவில்லையே" என அயல் நாட்டார் பலர் வாடிநிற்க, அவ்வாட்டத்தின் உண்மைப்பொருளை யுணராத நம்மவரிற் சிலர் ஸநாதநதர்மத்தின்மீது வெறுப்பும், பாஷையின் மீது தோஷமும், நம்முன்னோரின் ஆசாரங்களில் அச்ரத்தையுங்கொண்டிருக்கின்றனர் என்பதைப்பலர் அறிவர். மற்றும், "தனக்குத் தவிடு இடிக்கத் தள்ளாது; ஊராருக்கு இரும்பு இடிக்கத் தள்ளும்" என்னும் பழமொழிக்கிணங்க நம் தேசத்தை பல்லாண்டுகளாய் ஆண்டு வந்த அரசர்களின் பெயருந் தெரியாத கற்றறி மூடர் பலர் அயல் நாடுகளின் சரித்திரங்களில் மேதாவிகளாயிருப்பது, புதிய யூநிவர்ஸிடியொன்று அவசியமென்பதை நன்குவிளக்கும்.

ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னமேயே யூநிவர்ஸிடி யொன்று ஏற்படுத்தல் வேண்டுமென நம்மவர்களில் சிலருக்குத் தோன்றிற்று. அப்படியே "ஹிந்து யூநிவர்ஸிடிச் சங்கம்" ஒன்றும் ஏற்பட்டது. மூலதனஞ் சேகரிப்பதற்காக பல இடங்களில் ப்ரசங்கஞ்செய்தும், வீடுவீடாக இரந்தும் பாடுபட்டவர் பலர். தம்கீழ் ஓர் கலாசாலையிருப்பின் முதலில் அதை நடத்திவந்து, பிறகு அதையே ஓர் ஆதாரமாகக் கொள்ளலாமென மேற்படி சங்கத்தார் எண்ணினார்கள். இதற்குள் பணமும் வந்து சேருவதாயிற்று. இவை யெல்லாம் 1911௵த்தில் டண்டித மதன மோஹன மாலவ்யா என்னும் பாரத ஸத்புத்ரர் எடுத்துக்கொண்ட சிரமத்தின் பலனாகும். அனி பெஸண்டு அம்மையின் முயற்சிகளினால் முன்வந்த "ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ்" 1898௵ முதல் நடைபெற்றுவருகின்றது. அந்தக் காலேஜையே ஹிந்து யூநிவர்ஸிடி சங்கத்தார் தம் நிர்வாகத்திற்குள்ளாக்கி சென்ற௵ ஜூன்மீ முதல், தாங்களே நடத்தி வருகின்றனர்.

யூநிவர்ஸிடி மசோதாவும் ஏற்படுத்தப்பட்டு ப்ரதிநிதியவர்களின் ஸபையை யடைந்தது. பலருடைய அனுமதியும் அவச்யமானதினால் சீர்திருத்தங்களும், பல மாறுதல்களும் மசோதாவில் செய்யப்பட்டன. கடைசியில், ப்ரதிநிதியவர்களின் கருணையாலும் கல்வியிலாகா அங்கத்தினராய் மிகவு முதவிசெய்த ஸர் ஹார்கோர்ட் பட்லரின் உதவியாலும் மசோதா அங்கீகரிக்கப்பட்டது. பலகட்சியார்களுடைய எண்ணங்களைத் தழுவியிருந்தபோதிலும் சில குறைகளிருக்கின்றன வென்று பலர் எண்ணுகின்றனர். அக்குறைகளில் முக்கியமானது, அயோத்தி, ஆக்ரா ஐக்ய மாகாணங்களின் கவர்னர் ஹிந்து யூநிவர்ஸிடியின் விஸிடர், அல்லது மேற்பார்ப்போர் என்னும் நிலைமை வகித்து, அரசாங்கத்தாருக்கு விரோதமானவை என்று தாம் எண்ணினவைகளை மாற்றிவிடுதலாம். ஆயினும் இத்தகைய அதிகாரம் சீக்ரம் சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுமென்றும், இனி வரும் ஐக்யமாகாணங்களின் கவர்னர்களும் தற்காலம் கவர்னராக இருக்கும் ஸர் ஜேம்ஸ் மேஸ்டனைப் போலவே இந்தியர்களின்மீது அனுதாபங் கொண்டவர்களாகவு மிருப்பார்களென்றுமெண்ணுகிறோம்.

ஹிந்துக்களில் எல்லா ஜாதியார்களும் படிப்பதற்கு ஏற்பட்டுள்ள இச்சர்வகலாசாலை, நம்மவர்களுடைய தேசாபிமானத்தையும் கூட்டுறவையும் தெரிவிப்பதுடன், மேற்றேசக் கல்வி வீணாகவில்லையென்பதையும் நன்குவிளக்குகின்றது. ஹிந்து மதத்தின் கொள்கைகளை மேற்

படி சர்வகலா சாலையைச் சார்ந்த பாடசாலைகளில் கற்பிக்கலாமென்னு மதிகாரத்தை சங்கத்தாருக்குராஜாங்கத்தார் அளித்திருக்கின்றனர். ஹிந்துமதத்தைப் போதிப்பதே தற்கால இந்திய யூனிவர்ஸிடிகளுக்கும் இதற்கு முள்ள முக்யவேறுபாடாம்.

நமக்காக மனதார உழைத்துவரும் ஹார்டிஞ்சு ப்ரபு இந்தியர்களின் மனதைவிட்டு என்றும் நீங்கார். இந்தியாவிற்கு வந்த பின்பு அவர் பட்ட கஷ்டங்கள் பல. தம்முயிருக்கே அபாயம் டெல்லியில் வந்தும், ஸத்புத்ரனை ரணரங்கத்திலிறக்கக் கொடுத்தும் அருமை மனைவியைப் பறிகொடுத்தும், கொண்டகாரியம் விடாது இந்தியாது நன்மைக்காக அல்லும் பகலுமுழைக்கும் அவர் குணம் என்னே! ரிப்பன் ப்ரபுவிற்கப்புறம் இவரே இந்திய ப்ரதிநிதிகளில் இணையில்லாதவர். கல்வியிலாகாவை விட்டு நீங்கி பர்மாவிற்கு லெப்டினென்ட் கவர்னராய்ச் செல்லும் ஸர் ஹார்கோர்ட் பட்லரும் பெரிது முதவிசெய்தார். மேற்றிசைக் கல்வியால் மயக்கமுறாது, பண்டைகால சரித்திரத்தை நன்குணர்ந்து தம் சகோதரர்களின் க்ஷேமத்தைக்கருதி நாடெங்கு மலைந்து திரிந்த பண்டித மதன மோஹன மாலவ்யா, ஹிந்து யூனிவர்ஸிடிக்காக 50-லக்ஷம் ரூபாய் சேர்த்தனர். இன்னும் சேகரித்தற் பொருட்டு முக்ய நகரங்களில் ப்ரஸங்கஞ்செய்ய இன்னுங்கொஞ்சநாட்களிலாரம்பிப்பார். அவருடன் கூடவிருந்து உழைத்த பண்டித ஸுந்தரலாலும், தர்பங்கா மஹாராஜாவும் நம்மவருடைய மனதில் என்றும் நிலைபெற்றிருப்பார். ஹிந்து யூனிவர்ஸிடி மசோதா துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது; மற்றும் பல யூனிவர்ஸிடிகள் ஏற்படுத்த எண்ணியவர்களுக்கும் தைர்யங்கொடுத்தது.

புராண காலந்தொடங்கி புண்ய க்ஷேத்திரமாய்விளங்கிவரும் வாராணஸியென்னும் ஸ்ரீ காசியில், ஹிந்து யூனிவர்ஸிடி ஸ்தாபிக்கப்படுவது தகுதியே. பாரத மக்களும் தம் நாட்டின் நன்மையைக்கோரி, பெரியோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றுவர வேண்டுமென்று நாமனைவரும் பரமனைத் துதித்தல் வேண்டும்!

மைஸூர் பொது லைப்ரேரி:—இம்மாதம் 15உ கவர்ன்மெண்டின உதவியைக்கொண்டு மைசூரில் பொதுப் புஸ்தகசாலை ஒன்று யுவராஜா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

விசேஷக் குறிப்புகள்

NEWS & NOTES

போத்தனூர் பொள்ளாச்சி ரயில்வே:—இம்மாதம் 15உ யன்று சென்னைக் கவர்னர் H. E. லார்ட் பெண்ட்லண்ட் அவர்களால் இந்த ரயில் பாதையில் வண்டிகள், முதல் முதலாக ஓட்டுவிக்கப்பட்டன. இந்த ரயில்பாதை போட ஏற்பட்ட செலவு 12½ லக்ஷம் ரூபாய். 23 மாதகாலத்தில் வேலை செய்து முடிவு பெற்றது.

***

மிஸ்டர் ஜஸ்டிஸ், T. V. சேஷகிரி அய்யர்:—ஸர் C. சங்கரன் நாயரின் ஸ்தானத்தில் மிஸ்டர் ஐயர் சென்னை ஹைகோர்ட் காயம் ஜட்ஜிகளில் ஒருவராக நியமிக்கப்படிருப்பதாகக் கேட்டு மிகவும் சந்தோஷிக்கிறோம்.

***

மைஸூரில் ஒரு யூனிவர்ஸிடி:—இந்த சமஸ்தானத்திற்கென்று ஒரு ஸர்வகலாசாலை ஏற்படுத்த மைஸூர் மஹாராஜா அவர்களும், அவர் திவான் ஸர் M. விசுவேசுவரய்யாவும் அக்கறை யெடுத்திருப்பதனால் கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்பெறுமென்றே நம்பலாம்.

***

ஸர் ஹார்கோர்ட் பட்லர்:—இந்திய கவர்ன்மெண்டின் நிர்வாக ஸபையில் கல்வி மெம்பராயிருந்த இவர், பர்மா லெப்டினென்ட் கவர்னராக நியமிக்கப் பட்டிருப்பது நம் நேயர்களுக்குத்தெரியும். நாளது மாதம் 25உ ஷை வேலையை ஒப்புக்கொண்டார்.

***

ராஜப்பிரதிநிதி ஸ்தானம்:—மாக்ஷிமை தங்கிய நமது கவர்னர் ஜனரல் H. E. லார்ட் ஹார்டிஞ்சிற்குப் பிறகு லார்ட் மர்ரே ஆப் எலிபாங்க், லார்ட் பீச்சாம்ப், லார்ட் டர்பி, இவர்களில் எவரேனும் ஒருவர் நியமிக்கப்படாலாமெனச் சொல்லப்படுகிறது.

***

பிரைமரிப் படிப்பு கட்டாயமாய்விட்டது:—பம்பாய் மாகாணத்திலுள்ள ஆண்ட் என்னும் மஹாராஷ்ட்ர சமஸ்தானத்தில் தசராப்பண்டிகைதினம் முதல், பிரைமெரிப் படிப்பானது கட்டாயமாய் ஏற்பட்டுவிட்டது.

***

ஒரு துக்க ஸம்பவம்.—இந்தியரின் க்ஷேம அபிவிருத்தியில் அக்கரைகொண்டு, இந்தியாவுக்காக மனதார உழைத்து வந்த ஸர் ஹென்ரி காட்டன், சில காலமாக தேக அசௌக்யமாயிருந்து காலஞ்சென்று விட்டாரெனக் கேட்டு மிகவும் விசனிக்கிறோம்.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸஸுவ ஐப்பசிமீ : 1915-ஸுவ நவம்பர்மீ } பகுதி 5

பழமொழிப் போதம்

PROVERBS EXPLAINED

அருள்வாழ் வுதவு மமலேசன் மெய்யாங்
'குருபாதம் வைத்ததொ'ரு கொள்கை—தெரியிற்
சருவவிடை யூறுந் தவிர்க்குந் தகையே
பருவமுற மாணுக்கன் பால். (1)

'வித்தி லாமுறை மேலுமில் கீழுமில்'
நித்தி யானந்த நீள்களிப் பொன்றினால்
சுத்த மாயை யசுத்தமென் மாயையும்
ஒத்து முத்தி யுடன்றரும் பந்தமே. (2)

பம்பு மோர்தத் துவஞ்செயற் பட்டிட
இம்ப ரொன்றிஞென் றேய்ந்தெவை யும்முடி
யும்ப ரான்மா வுழியுண ரப்படும்
'சம்பு கூவல் சமுத்திர மெட்டுமோ'ல். (3)

என்று மாயை யினைத்தன் வயங்கொளா
நின்ற ஞுதிசித் தாய நிமலனே
கன்று சிற்சட காரணனுல் 'அவ
னன்றி யோரணு வும்மசை யாத'ரோ (4)

ஈசன்பால் அன்றேற் கிலாசங் கற்பமெனப்
பேசும்பல் கோடி பிரிவெண்ணில்—பூசல்
அடுக்கண்ட மாமாயை யாலவன்மா லொன்றுன்
'கொடிக்குத்தன் காய்கனக்குங் கொல்' (5)

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' எனலீசன்
தொல்லோ ஞெருவன் சுதந்தரனே—யல்லால்
சிருட்டிதிதி சம்மாரச் செய்கை நியதிப்
பொருட்டிலது வேறோர் பொறி. (6)

தேடிய தவத்தர்செயலன்—நீடதி சயப்படவிறை
மாடுவது மாயை 'வலியான்—ஆடியது பம்பாம'ரோ.

சதுர்த்நாதிசயப்பிசியாய் வதைக்காதுறு மாயையதாம்
அதற்காதியொடந்தமிலை'கதைக்கேது கழற்சிரசே'(8)

அதிகாரி குக்குடவண் டங்குடியி னம்மி
எதிராகா வாறுடைக்கு' மீசன்—திதிமாயா
சத்தியிற்கா லஞ்சீவர் தாமுறுமிச் சாவிடய
சித்தி பெலா மாய்க்குந் தெளி. (9)

'விளையாடச் சென்ற வினையாய் முடிந்த'
திளையாத பூரணமா மீசன்—களையா
இலீலையாற் றன்னைமறந் தெண்ணிலுயி ராகும்
புலீர்கோச காரமது போல். (10)

'மாங்காய் புளிப்பதோ வாய்புளிப்ப தோ'வுலகு
தீங்கோ மனந்தானே தீங்கு கொலோ—பாங்குற்ற
'வித்து முதலோ விருட்சமுதலோ'கருமம்
ஒத்ததுமுன் றேவுடல்முன் றே. (11)

'நடங்காணச் சென்றிடத்தே நண்ணியது பேய்'தான்
தொடர்ந்தே விசித்திரமாய்த் தோன்றிப்—படர்ந்த
விடயத்திற் சிந்தை விரோதமாய்ச் சென்றேற்
றிடும்வா சனை நிகள மே. (12)

'சணற்பன் மனைக்குருகு தானே நிகளம்
இணைத்துக் கொளும்' பிரவிர்த் திக்கோ—ரணித்து
மன்னும் பலபா வனைவசத்தே சங்கற்பம் [றையோர்
துன்னிக்கன் மஞ்சேர்த் துவர். (13)

ராக்ஷஸஹு கார்த்திகைமீ CALENDAR—பஞ்சாங்கம்

யோ	துலு	இங்	தமிழ்	வார	ராக்ஷஸஹு கார்த்திகைமூ { சாலிசகம் 1837 கலியப்தம் 5016 } பசலி 1325 கொல்லம்-1091 } 1915ஹு நவம்பர்மூ டிசம்பர்மூ
ரபு	8	16	1	செ	தச 32-56, பூரட் 46-23, வியா 1-58, ஹர் 55-57, தை 3-59, திவி 2-21. அக 28-52, விர்ச்சிகரவி 11-51, சுவா 4 புத 17-43, சூன்யதிதி விஷ்ணுபதி கரிநாள் சூன்யார்க்கம்.
	9	17	2	புத	ஏகா 32-25, உத் 47-39. வஜ் 54-59, வணி 2-40, திவி 10-53, விர் சு ஏகாதிதி சர்வ ஏகா உத்தானகா மழை 7-க்குள்.
புசு	10	18	3	வியா	துவா 33-11, ரேவ 50-10, வ்ரித் 53-2, பவ 2-48, திவி 18-54, விசா 1 புத 30-14, கேட் 1 சுக் 23-30, சுவாரோ ம கோமதம பூர் க்ஷீராப்தி பூ.
ர	11	19 கார்த்திகை	4	வெ	திர 35-13, அசு 53-53, விய 52-3, கௌ 4-12, ரா 14-27, அனு 1 ரவி 29-23, பிரதோ விய சிரா. [வைகுண்ட சது.
பு	12	20	5	சனி	சது 38-27, பர 58, 43, வரி 51-56. கர 6-50, திவி 19-49, அக 28-46, விசா 2 புத 36-30, பிராகஸ்தபுத 10-38,
சு	13	21	6	ஞா	◯பௌ 42-36, ✻ கார் 60-0. பரி 52-27, பத் 10-31, ரா 2-47, கேட் 2 சுக் 0-54, தக்ஷஸா ம கார் உப சர்வாலய தீபம் கார் ஸ்நா பூர்
ரபு	14	22	7	திங்	பிர 47-30, கார் 4-24, சிவ 53-30, பா 15-3, ரா 19-52, கார் பகு அனு 2 ரவி 46-55, விசா 3 புத ?5-40, இஷ்டி.
சு	15	23	8	செ	துதி 52-47, ரோ 10-40, சித் 54-48, தை 20-8, திவி 26-10, கேட் 3 சுக் 34-57. [புத 34-25.
செபு	16	24	9	புத	திரு 58-1, மிரு 17-6, சா 56-0, வணி 25-24. ரா 11-34, அக 28-42, சாபாய 48-15, ஆயி 4 செ 17-0, விர்ச்சிக
சு	17	25	10	வியா	சது 60-0, திரு 23-17, சுப 58-21, பவ 29-0, ரா 27-34, கேட் 4 சுக் 52-30, சங் சது கரிநாள்.
ரபு	18	26	11	வெ	சது 2-40, புன 28-51, சுப் 57-11, பா 2-40, ரா 21-51, அனு 3 ரவி 3-59, அனு 1 புத 33-30.
	19	27	12	சனி	பஞ் 6-38, பூச 33-40, பிரா 56-37, தை 6-38, தியா 0-0, மழை 3-க்குள் [58-38, சாபசுக் 48-20.
புகுசு	20	28	13	ஞா	சஷ் 9-27, ஆயி 37-22, மா 55-16, வணி 9-27 திவி 7-38, அக 28-36, அனு 2 புத 32-10, குருவக்ர நிவர்தி
ப	21	29	14	திங்	சப் 11-8, மக 39-49, வை 52-48, பவ 11-8, திவி 8-35, அனு 4 ரவி 20-42, காளாஷ்டமி வை சிரா.
பு	22	30	15	செ	அஷ் 11-27, பூர 41-1, விஷ் 49-22, கௌ 11-27, திவி 0-13, ரா 30-31, அனு 3 புத 28-0, பைரவாஷ்டமி. [டாகும்.
சு	23	1	16	புத	நவ 10-32, உத்தி 41-2, வரி 45-0, கர 10-32, சே 3-1, மூல 2 சுக் 30-0, சிலவிடங்களில புசல் காற்றுமழை இதுகள் உண்
ரபு	24	2	17	வியா	தச 9-20, அஸ் 39 54, ஆயு 39-43, பத் 9-28, திவி 1-38, ரா 30-43, அக 28-30, கேட் 1 ரவி 20-22, அனு 4 புத 22-0, கரிநாள். [சர்வ ஏகா.
கு	25	3	18	வெ	ஏகா 5-18, சித் 37-52, ஸௌ 33-42, பா 5-18, சே 3-13, ரா 22-44, பூரட் 3 ரிசு குரு 35-0,
புசு	26	4	19	சனி	துவா 1-17, திர 55-10, சுவா 35-0, சோ 27-2, தை 1-17, ரா 19-45, கேட் 1 புத 15-15, மூல 3 சுக் 5-30, சனி பிரதோ. [34-2, மா சி.
ரசெ	27	5	20	ஞா	சது 51-8, விசா 31-33, அதி 19-52, பத் 23-47, ரா 12-29, கேட் 2 ரவி 53-42, விம்மசெவ்
புசு	28	6	21	திங்	●அமா 45-25, அனு 27-43, சுக 12-22, சது 18-16, ரா 12-21, அக 28-25, கேட் 2 புத 3-30, மூல 4 சுக் 49-40, சர்வ அமா சோம அமா. [சம்பா சவாா.
	29	7 டிசம்பர்	22	செ	பிர 39-35, கேட் 23-39, திரு 4-36, சூல 52-10, கிம் 12-30, ரா 13-53, மார் சுத் இஷ்டி
பு	30	8	23	புத	துதி 33-46, மூல 19-33, சண் 49-0, பா 6-40, திவி 15-49, ரா 13-36, கேட் 3 புத 2-40, சந் தரி மழை 5-க்குள்.
ரபுசு	1	9	24	வியா	திரு 28-43, பூரா 15-37, விர் 41-30 தை 1-14, ரா 6-4, கேட் 3 ரவி 10-1, கேட் 4 புத 54-30, பூரா 1 சுக் 32-25, திருதியாதிதி.
	2	10	25	வெ	சது 23-7, உத்தி 12-6, துரு 35-24, பத் 23-7, திவி 21-36, அக 28-25, சதுர்திதி சது விரு நாகசதுர்த்தி சிர உப.
பு	3	11	26	சனி	பஞ் 18-36, திரு 9-8, வியா 27-46, பா 18-36, திவி 18-45, சாபபுத 49-20, திதித்வயம் நாகபஞ்சமி சஷ் உப.
ரசு	4	12	27	ஞா	சஷ் 14-51, அவி 6-52, ஹர் 21-48, தை 14-51, திவி 24-29, கேட் 4 ரவி 26-3, பூரா 2 சுக் 31-12, சப்தமிதிதி சம்பா
பு	5	13	28	திங்	சப் 12-7, சத 5-35, வஜ் 16-37, வணி 12-7, திவி 21-32, மூல 2 புத 35-40, நந்தனசப்தமி தத்தாசவாா. [சஷ் சப் விரு.
	6	14	29	செ	அஷ் 10-30, பூரட் 5-24, வ்ரித் 12-19. பவ 10-30, ரா 1-23, அக 28-25, கோஷ்டாஷ்டமி விய சிரா.
ரபுசு	7	15	30	புத	நவ 10-5, உத்தி 6-23, விய 8-57, கௌ 10-5, ரா 9-6, சாபரவி 42-15, மூல 3 புத 43-13, பூரா 3 சுக் 11-12, விர்சசிக சாப சு நசமிதிதி ஷடசீதி கல்பாதி.

			சனி
குரு	9விர்ச் புத 13சாப சுக்		செ கே
ராகு	20சிம் செ 26சாப புத		
	ரவி சுக்	புத	

விவேக போதினி

தொ.8] ராக்ஷஸஹு: ஐப்பசிமீ [பகுதி. 5

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

4. வாஸநா நட்பம்

முன்னரே வாஸனைகள் வெளிப்படைத் தொழிலாக மாறும் வழியாகிய ஸங்கல்பம், ராகத்வேஷம், நிச்சயம், சேஷ்டை என்பவை களை விளக்கியாகிவிட்டது. இங்கு வாஸனை கள் இத்தனைவகை என்பதும், அவைகளை இப்படி ஒழுங்குபடுத்தலாம் என்பதும் நன்கு எடுத்து விளக்கப்படும்.

பொதுவாக நோக்கில், வாஸனைகள் இரண்டு விதம்: அவையாவன நல்லவை, கெட்டவை என்பவைகளே. இவைகளுள் நல் வாஸனை மூன்று விதமாகக் காணப்படும். (i) சிறப்பானவை:— வேதசாஸ்திரங்களில், செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ள விஹித கர்மாக்களான ஸத்கர்மாக்களை அடிக்கடி செய்வதால் அவைகளையே மீண்டும் செய்யவேண்டும் என்று மனதில் ஏற்படும் வேகங்களுக்குத்தான் சிறப்பான நல் வாஸனைகள் என்று பெயர் (ii) தெளிவுண்டாக்குபவை, என்பவைகள் கிளம்பும்போது ஒரே அடியாகத் தொழிலாக மாறாது இடை வழிகளை நன்கு காட்டி, மெதுவாக இறங்கி, அவைகள் கெட்டவையாயின் தடுக்கவோ நல்லவையாயின் தூண்டவோ நமக்கு அவகாசங் கொடுப்பவை. இவை அடிக்கடி வாஸனா நுட்பவிசாரத்தால் ஏற்படும். (iii) அடக்கவாஸனைகள்:—பழக்கபலத்தால் தொழிலாக மாறும் வேகம் அதிகமுடைய கெட்ட வாஸனைகளைப் பழக்க பலத்தால் நிதானியாது தடுத்துவிடும் ஆற்றலைத் தருபவை. இவை அடிக்கடி கெட்ட வாஸனைகளை விடாமுயற்சியுடன் தடுத்து தொழிலாகவொட்டாது அடக்குவதால் ஏற்படும். இம்மூன்று வகை ஸத்வாஸனைகளால் முறையே மனதில் ஸத்வாஸனைகள் நிறையும், நிதானம் ஏற்பட்டு துர்வாஸனைகளின் வேகம் குறையும், துர்வாஸனை தடைபட்டு அழியும்.

துர்வாஸனைகள் பொதுவாக இரண்டு வகைப்படும். (i) சிறப்பானவை: வேத சாஸ்திரங்களில் விலக்கப்பட்ட நிஷித்தகர்மாக்களைச் செய்வதாலும் விஹிதகர்மாவை செய்யாது விடுப்பதாலும், இப்படி மறுபடியும் செய்துகொண்டே இருக்கவேண்டுமென்று மனதில் ஏற்படுபவை. (ii) வேகமானவை: நுட்ப நிலையிலிருந்து தொழிலாக மாறும் வழியிலுள்ள நிலைகளைக் காட்டாது திடீரென்று நம்மைத் தொழிலில் செலுத்துபவை. இவை ஆராய்ச்சியின்றி வாஸனைகள் வழிச் செல்வதால் ஏற்படும். துர்வாஸனைகள் உண்டாகி ஓங்குவதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அவையாவன தேஹம், உலகம், சாஸ்திரம்; இவைகளை நோக்க துர்வாஸனைகள் மூன்று வகைப்படும். அவை பின்வருவன:—

(1) தேஹவாஸனை:—தேஹத்தின் ஸம்பந்தமாக உண்டாகும் கோரிக்கைகளால் ஏற்

படுபவை. தேஹத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும், அடிக்கடி குளிப்பது, வாஸனை இட்டுக்கொள்வது, பற்பல துணிகளுடுப்பது முதலியவைகளால் என்ற ஆவலும், நன்றாக உண்டு திருப்தியடைய வேண்டும், பற்பல ருசிகளால் ஸுகிக்க வேண்டும், பலவகைப்பட்ட ஸ்திரீஸுகங்களைப் பெறவேண்டும். நல்லவீட்டில் பலவகை ஸுகக் கருவிகளால் ஸுகப்படவேண்டும் என்ற ஆவலும் தேஹவாஸனையைச் சேர்ந்தவை. இதோடு முற்கூறியவைகளுக்கு எதிரிடையானவைகள் வரவேகூடாது என்ற கோரிக்கையும் இந்த வாஸனையைச் சேர்ந்ததுதான். எல்லாவற்றிற்கும் தேஹஸம்பந்தம் இருப்பதால், இந்தவாஸனை எல்லா ப்ராணிகளிடத்தும் பொதுவாகக்காணப்படும். மனிதனிடம் பகுத்தறிவிருப்பதால் அதை தேஹவிஷயத்தில் உபயோகப்படுத்தி இந்தவாஸனையை அவன் மிகவும்பலப்படுத்திக் கொள்ளுவன். இதனால் மரண பயமும், உலகஸுக துக்கத்தாக்கும் மானிடர்களுக்கு அதிகமாக, இவர்களைத் தத்தளிக்கச் செய்கின்றது இந்த வாஸனை. இக்காலத்திய நாகரீகம் எல்லாம் இந்த தேகவாஸனாபலத்தை அதிகப்படுத்தி மனிதனை வரவர அதிகம் திண்டாட வைக்கும்.

(2) லோகவாஸனை: உலகத்தவரால் நன்கு மதிக்கப்படவேண்டும், அதற்குத் தகுந்த சீரும் சிறப்பும் வேண்டும், ஒருவரும் தன்னை இகழக்கூடாது என்ற பாவனா வேகத்திற்கு லோகவாஸனை என்று பெயர். இதற்கே கர்வம், இறுமாப்பு முதலிய பெயர்களும் உண்டு. இது மானிடர்களிடம்தான் சிறப்பாகக் காணப்படும்; மற்றைய ப்ராணிகளிடம் இது காணப்படாது. சில பழக்கக் கூடிய ப்ராணிகளான நாய், யானை முதலியவைகளிடம் சற்று காணப்படும். யஜமானன் ஸந்தோஷத்தை உணர்ந்து, அவனும் திருப்தி யுண்டாகுமாறு நடந்துகொள்ளும் ப்ராணிகளிடமெல்லாம் இந்த லோக வாஸனை ஒருவாறு காணப்படும்; ஆனால் இந்த வாஸனை பலர் திருப்தியையும் மதிப்பையும் எதிர்பார்த்தல் என்ற உருவத்தில் மனிதரிடம் மாத்திரம்தான் காணப்படும். இந்த வாஸனையால் நல்ல கர்மாக்கள் நடைபெறுமாயின், அவைகளுக்கு லௌகிக காம்ய கர்மாக்களென்று பெயர். இந்த வாஸனை இருக்கும் வரையில் ஸத்கர்மாக்கள் நம்முள் வேரூன்றா. ஒருவருக்கும் தெரியாது ரஹஸ்யமாக ஸுகம் தரக்கூடிய கெட்ட கர்மாக்களைச் செய்துவிடவேண்டும் என்ற ஆவலை இந்த வாஸனை தடுத்துவிட முடியாது: சிற்சில ஸமயங்களில் அதிகமும் படுத்திவிடும். இந்த வாஸனையை புதிய நாகரீகம் திடப்படுத்துகின்றதென்று கூறவும் வேண்டுமா?

(3) சாஸ்திர வாஸனை:— மதவிஷயம் நீங்கலான லௌகிகவிஷயக்கல்விகளையெல்லாம் கற்றுவிடவேண்டும், அவைகளில் தெளிந்துவிடவேண்டும், அவைகளின்படி நடந்துவிடவேண்டுமென்ற பேராவலுக்கே சாஸ்திரவாஸனை என்று பெயர். இது படித்தவர்களுள்தான் காணப்படும். இது ஒருவனை எப்பொழுதும் புஸ்தகமும் கையுமாக இருக்கச் செய்யும்: ஓயாது, வாணிபம் கைத்தொழில் முதலியவைகளில் முயன்று லாபம் கைவரத் திண்டாடும்படி செய்யும். இந்த வாஸனையின் வாய்ப்பட்டுத் தத்தளிப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு 24 மணிநேரம் போதாது என்றே தோற்றும்; அவஸரம் அதிகமாகிவிடும்; நாள் போகிறது, ஆயுஸ் குறைகிறது, வைதிக விஷய முயற்சி என்று ஒன்றுள்ளது என்ற உணர்வுகளே இரா.

இக்காலத்து நாகரீகத்தில் இவ்வாஸனை தலை சுற்றியாடுவதுபோல எதுவும் ஆடுவதில்லை. இந்த வாஸனை மனிதனை அவன் எடுத்துக்கொள்ளும் சாஸ்திரத்திற்கு அடிமையாக்கிவிடும்: ஸ்வப்நம்கூட அதைப் பற்றியே உண்டாகும்படிச் செய்துவிடும்.

பொதுவாக இம்மூன்று துர்வாஸனைகளையும், இக்காலத்திய நாகரீகம் தன் புதிய ஏற்பாடுகள், ப்ரகிருதி சாஸ்திரப் புதிய அமைப்புகள், விஸ்தார வ்யாபாரங்கள் இவைகளால், தலைவிரி கோலமாக ஆடும்படிச் செய்துவிடும். இந்த மூன்றுவாஸனைகள் இளமையில் கல்வி கற்றுத் தேறுவதற்கும், நல்வழிப் பழக்கத் தொடக்கத்திற்கும் சற்று உபயோகமுடையவையாயினும், வயது வந்து, வாழ்க்கையில் ஒரு தொழிலில் அமர்ந்தபின்னர் இவைகள் திடப்பட இடங்கொடுக்கலாகாது. இவை எல்லாம் நமக்கும் நமது பந்துக்களுக்கும் வயிறு வளர்க்க மாத்திரம்தான் உபயோகமானவை; மேல் மோக்ஷ வழியில் இவை பயன்படாது போவதோடுங்கூட, அநேகமாகப் பெரும் தடைகளாக வந்து தாக்கும் என்பதை நன்குணர்ந்து இந்த வாஸனைகளை வயிறு வளர்க்க மாத்திரம் உபயோகப்படுத்த வேண்டும், மேல் உள்ள நமது ஸந்மார்க்க ப்ரவிருத்தியில் இவைகள் குறுக்கிடாது தடுத்துவிடவேண்டும் புத்திமான்.

இப்படிப்பட்ட வாஸனைகள் பொதுவாகப் பிறவி, காலம், தேசம் இவைகளால் தடைபட்டு உள்ளூரவே நம்முள் மறைந்து கிடக்கலாம். தகுந்த தருணங்களில் வெளி விஷயப் பொருத்தத்தால் ஞாபகத்தைப் போல வெளிப்பட்டாலும் படலாம். ஒரு ஊரில் ராமன் என்ற நமது தோழனை வெகு காலத்திற்கு முன்பு நாம் கண்டிருக்கலாம், அவனைப்பற்றி நமது மனதில் ஒருவித எண்ணமும் இல்லாதிருக்கலாம், திடீரென்று அவனைப்போன்ற நடையுடையானை உடையவனைப் பின்னிருந்து பார்க்கும்படி நேர்ந்தால், இந்த நடை ஒற்றுமை ராமன் விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம்: ஒற்றுமை மிகநெருக்கமாக இருப்பின் 'அடே ராமா' என்று கூப்பிடும்படியும் ஆகிவிடும். அவன் திரும்பிப் பார்த்ததும் வேறு ஒருவன் என்று கண்டவுடன் 'நான் உம்மை வெகு காலத்திற்கு முன்பு பார்த்த தோழன் ராமன் என்று எண்ணினேன் நடை ஒற்றுமையால்; மன்னிக்கவேண்டும்' என்று அசட்டுச் சிரிப்புச் சிரிக்கவேண்டி வரும். இதுபோல வெளி விஷய ஒற்றுமையால் மனதில் புதைந்துகிடக்கும் வாஸனை திடீரென்று மிகுந்த பலத்துடன் வெளி வரலாம். இந்த விஷயம், யோகஸூத்ரச் சுருக்கம் கைவல்யபாதத்தில் விளக்கியுள்ளது. எந்த ஸமயத்தில் எந்த வாஸனை முளைந்து நம்மைக் கழுதையாக்கிவிடுமோ என்று ஜாக்கிரதையாய், ஈச்வர பக்தியால் தமது மனதைப் பரிசோதித்து, பாபங்களைக்கண்டு, கர்ம சிரத்தையால் தகுந்த ப்ராயச்சித்தங்களை அனுஷ்டித்துக்கொண்டு, மிகுந்த அடக்கத்துடனிருப்பர் மஹருஷிகள் போன்றவர்.

இனி இந்த வாஸனைகளை அடக்கி ஒழுங்குபடுத்தும் வகைகளைப்பற்றி ஆராய்வோம். ஹேது, பலம், ஆச்ரயம், ஆலம்பனம் ஆகிய இந்நான்குகளும் ஓங்க, வாஸனைகள் ஓங்கும்; குறையக்குறையும் என்று பதஞ்சலி பகவான் இவ்விஷயத்தில் பொதுப்படையாகக் கூறியுள்ளார். இவைகளுள் ஹேது என்பது எல்லாவாஸனைகளுக்கும் வேரான அவித்தை என்பதே. இதையும் இதன்

கீழ்ப்படிகளான நான்கும் ஆகிய க்லேசங்கள் ஐந்தும் முன்னரே யோக ஸூத்ரச் சுருக்கம் ஸாதனபாதத்தில் விளக்கியாகிவிட்டது. இவைதாம் கர்மாவுக்கும், அதனால் வாஸனைப் பதிவு ஏற்படுவதற்கும் முக்ய காரணம். இவைகளின் வலிவைக் குறைத்தல் வாஸனையை அடக்குவதில் ஒருவிதம்: பலம் என்பது ஸங்கல்பம், எண்ணவேகம் இவைகளைத் தடிக்கவொட்டாது தடுப்பது. இரண்டாவது விதம்: ஆச்ரயம் என்பது மனதின் கலக்கம் சஞ்சலமாகிய இவைகளே. இவைகளை கர்மானுஷ்டானம் சாஸ்திர விசாரங்களால் அடக்கி அழித்து முறையே வாஸனைக்கு ஆதாரமாகவுள்ள தாமஸ ராஜஸக்கலப்பை வேறறுத்தலாம். இது மூன்றாவது விதம் ஆலம்பனம்:—வெளிவிஷயங்கள் இவைகளைக் கூடுமானவரையில் விட்டுவிலகி இவைகளின் வாஸனை உண்டாக்கும் திறனைக் குறைப்பதால் வாஸனைகள் வலிவைக் குறைப்பது நான்காவது விதம். இவ்வாறு நான்கு விதமாக துர்வாஸனைகளின் வலிவைக் குறைத்துக் கடைத்தேறலாம். ஆனால் சூத்ரரும் ப்ரஹ்மசாரிகளும், நான்காவது விதத்திலும், வைச்யரும் க்ருஹஸ்தரும் கடைசி இரண்டு வழிகளிலும், வானப்ரஸ்தரும் க்ஷத்ரியரும் கடைசி மூன்று விதத்திலும், ப்ராஹ்மணரும், ஸந்யாஸியும் நான்கு வழிகளிலும் வாஸனைகளை அடக்க முயலலாம். ஜாதிவர்ணாச்ரம தர்மமே இந்த வாஸனை அடக்கும் ஆற்றலுடைமையைப் பொறுத்தது. ஸந்யாஸியிடம்தான் இந்த நான்கு வகை வாஸனைகளை யடக்க வழியும் பூர்ணமாகக் காணப்படும்: மற்றவர்களிடம் போகப்போக ஒருவாறு ஏற்றமாகத்தான் காணப்படும். ஆனால் எல்லோருக்கும் பொதுவாக ஆச்ரயநிலையான ராகத்வேஷம், ஆலம்பனம் நிலையான விஷயம் என்ற வாஸனா இறக்க நிலைகளே வாஸனையை முதலில் ஸரிவரத் தகைவதற்குத் தகுந்த இடம்; அதுவும் ஸ்வ வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்தால் தான் முடியுமென்று பகவான், கீதை III-ம் அத்யாயம் பின்வரும் 33-35 ச்லோகங்களில் விளக்குகிறார்:—

அறிவுடையோ னேனும் அவனியற்கைக் கொத்த
நெறியே நடந்திடுவன் நீடும்-திறலுடையாய்
பல்லுயிரும் அவ்வவற்றின் பண்பினையே பற்றியுறும்
வெல்லும்வகை யிற்றடுத்தல் வீண். (33)

இந்தியங்க ளின்விடயத் தென்றும் இயல்விருப்பும்
புந்திவிழை யாவெறுப்பும் புக்குளவால்—சிந்தித்
தவைக்குவசம் ஆகாமல் ஆர்ந்திடுக அன்ன
தவிர்க்கரிய சத்துருவென் றுய்ந்து. (34)

நன்கொழுகும் மற்றோர் அறந்தன்னில் நற்குணமில்,
தன்கடமை யாமறனே சாற்றின்மேல்—புன்கணுறத்
தன்னறத்திற் சாதல் நலமாகும் சார்ந்திடுமே
இன்னல்பிறர் தம்மறத்தால் ஈங்கு (35)

இவைகளுள், முதல் ச்லோகத்திலுள்ள ப்ரகிருதி என்பதற்கு வாஸனை என்பது தான் பொருள். அதை நேரிடத்தடுக்கமுடியாது வெகு நுட்பமாதலால், சேஷ்டை நிலையிலோ வெகு வேகத்துடனிருப்பதாலும் தடுக்க முடியாது. ஆகவே ஸங்கல்ப, ராகத்வேஷ நிலையில்தான் அதை அடக்கலாம். இவைகளில் ஸ்வதர்மானுஷ்டானத்தால் தான் தொழிற்படமுடியும். இவை இல்லாது வேறுவழியேயில்லை வாஸனைகளைத்தகைய. ஆகவே துர்வாஸனைகளை அதிகப்படுத்தும் விஷயங்களைவிட்டு ஒதுங்க, ராகத்வேஷாதிஉள் வாஸனா இறக்க நிலைகள் வெளியாகும்; அவ்விடங்களிலெல்லாம் தடைகளை அமைத்துப் பின்னர் வாஸனைகளை வெல்ல ஸரிவரத் தொடங்கலாம். இப்படியன்றி விஷயங்களுள் வலிய இருந்துகொண்டே வாஸனைகளைத் தடுத்துவிடலாம் என்று எண்ணுவது அழுக்குடைய அசையும் கண்ணாடியினால் நெற்றிக்குறி யிட்டுவிடலாம் என்பது போன்றதுதானாகும்.

இனி தேஹவாஸனையை அடக்குவதற்கு, தேஹத்தின் அழியும் தன்மை, வெறுப்புண்டாக்கும் தன்மை, ஓயா அசுத்தத் தன்மை இவைகளை அடிக்கடி சிந்தித்து, மோக்ஷவழியில் அது தடையாக இருக்காமல், தேஹவாஸனை ஒழுங்காகக் குறைய சாஸ்திரங்களில் காணப்பட்டுள்ள ஆசார விதிகள்படி நடப்பதே முக்கியவழி. இவை இரண்டுள் ஏதாவது ஒன்றுமாத்திரம் இருந்தால் போதாது. முன்னது மாத்திரமிருந்தால், அழிவதற்குமுன் கிடைக்கக்கூடிய ஸுகத்தை விடலாகாது, தேஹம் தாதுக்கள் பிரிந்தால் வெறுப்புண்டாக்குவதாயினும் சேர்ந்து அழகாக அமைந்துவிட்டால் ஸுகம்தானே உண்டாக்கும், தேஹ அசுத்தியே தேஹஸுக காலத்தில் இராது என்ற விஷயப்பற்று எண்ணங்கள் கழலாது. இதற்கு உதாரணம் இக்காலத்திய டாக்டர் என்ற வைத்யர்களே. இவர்களுக்கு தேஹதத்துவ விஷயம் நன்கு விளங்கியுள்ளது, ஆயினும் ஆசாரப்பற்று இல்லாததால் இவர்களிடம் தேஹ விஷயப்பற்றும் உலக விஷயப்பற்றும் மற்றவர்களை விட அதிகமாகத்தான் உள்ளன. ஆசாரப்பற்று மாத்திரம் இருப்பவர்களுக்கு தேஹ விஷய அபிமானமும், அதை எப்பொழுதும் வெகு சுத்தமாக வைக்கவேண்டுமென்ற வீணாவலும் காணப்படும். இதற்கு உதாரணம் ஆசாரமான கிழவர்கள். இவர்களுக்கு மரணத்திலிருக்கும் பயம்போல வேறொருவருக்கும் இராது; இவர்களுக்கு முற்கூறிய பகுத்தறிவு சற்று வந்துவிட்டால் இவர் மஹா ஞானிகளாவர். முன்னவர்கள் நிலை இப்படிப்பட்டதேயல்ல. ஆதலால் தேஹ விஷய ஆராய்ச்சியும், ஆசாரமுமே தேஹ வாஸனையை நன்றாகஅடக்கி அழித்துவிடும். லோக வாஸனையை நீக்குவதற்கு 'எல்லோரையும் திருப்திப் படுத்தமுடியாது. லோகம் பலவகைப்பட்டுள்ளது. ராமர் ஸீதை முதலிய பெரியோர்களும் ஊர் வாயில் அகப்பட்டுத் திண்டாட வில்லையா? அவர்களையும் உலகம் விடவில்லையே என்ற இவை போன்ற ஆராய்ச்சியும், இதன்படி உலக அபிப்ராயங்களை ஒரு பொருட்டாக மதியாமலே நல் வழிகளில் விடாது பழகுவதே, தகுந்த வழிகள். 'கல்லாதது கடலளவு, கற்றது கையளவு, ஆயுள் பறக்கின்றது, தடைகளுக்கோ கணக்கில்லை, முக்ய விஷயங்களைக் கடைப்பிடித்து நட; லௌகிகசாஸ்திரங்கள் எல்லாம் வயிற்றுப் பிழைப்பிற்கே: வெறும் சாஸ்திர உணர்வால் மாத்திரம் மோக்ஷம் வருமாயின், எல்லா விஷயங்களின் உணர்வை அடக்கியுள்ள புத்தகசாலைகளுக்கல்லவா மோக்ஷம் முதலில் வரவேண்டும்' என்ற இவைபோன்ற விஷய ஆராய்ச்சியும், வைதிக உணர்வு ஒழுக்கமுமே, சாஸ்திர வாஸனையை நீக்கும் வழி.

துர்வாஸனைகளை இவ்வாறு விடாமுயற்சியால் அடக்குதல் மாத்திரம் போதாது மோக்ஷ வழியில் நடக்க. இதனால் துர்வாஸனைகளை அடக்கும் எதிர்மறை வாஸனையான ஸுவாஸனை மாத்திரம்படிந்துவருமேயொழிய, மற்றைய ஸுவாஸனைகள் உண்டாக இடம் இல்லை, இந்த எதிர் மறை வாஸனை திடப்படவும் இடம் இல்லை. இதற்கு நேரான ஸுவாஸனைப் பழக்கம் வேண்டும். இதற்கு முக்யவழிகள் நல்ல சுத்த ஆகாரம், நல்லோரிணக்கம், சாஸ்திரீய நல்வழி நடத்தல், விலக்கிய வழிகளிலிருந்து விலகல்

ஆகிய இவைகளே. இவைகளில் எதையாவது ஒன்றைக்கூட, தேறிவருபவன் அஜாக்ரதையால் கைசோரவிடலாகாது. நீண்ட நூலை உருண்டையாகச் சுற்றுபவன் கவனக்குறைவால் அதைக்கைசோர விடுவானாயின் பல சுற்றுக்கள் கழன்று அவன் எப்படித் தத்தளிப்பானோ, அப்படியே அஜாக்ரதையான அப்யாஸி நல்வாஸனைப் பழக்க வழிகளில் எதையாவது ஒன்றைக் கைசோர்ந்துவிட்டால் பலநாள் நற்பழக்க பலனை இழந்து திண்டாடுவன், பழைய நிலைக்குவந்துசேர மிகக் கஷ்டப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

இவ்வாறு துர்வாஸனைகளை அடக்கி, ஸுவாஸனை பழக்கத்தால் அழித்து வந்தால் மனம் ஸுவாஸனைகளால் நிறைந்துகொண்டுவரும். இவைகளை நீக்கவோ நம் முயற்சி வேண்டியதில்லை. சாஸ்திர ஆராய்ச்சியால் ஏற்பட்டு, ஈச்வரபக்தியால் திடப்பட்டுக்கொண்டு வரும் உண்மை ஞானம் சுத்தமனதில் நன்றாகதிடப்படுங்கால் முக்திகைகூடும். அத்தருணம் தூங்குபவன் கை ஸுவாஸனைப் புஷ்பம்போல் ஸுவாஸனைகள் அவன் மனதைவிட்டுக் கழன்று நிற்கும். தேஹம் நழுவும் வரையில் உலகஉணர்விற்குத் திருப்பாமலே முக்தன் இருந்துவிடுவானாயின் ஸுவாஸனைகள் அவனைவிட்டு நழுவியே போய்விடும்; வாஸனாதீதனாகியே நிற்பன். உலக உணர்வில் முக்திநிலை மாறாதிருந்து அடிக்கடி ஸமாதியுள் போவதாக இருக்கும் முக்தனுக்கு. வ்யவஹார காலத்தில் ஸுவாஸனைச் சார்வும், ஸமாதியில் வாஸனாத்தாக்கேயற்ற நிலைதானிருக்கும். அவனுக்குக் கெட்டவாஸனை நெருக்கமே இராது, முன்னே அது நீங்கிவிட்டபடியால்; ஸுவாஸனைத்தாக்கும் இராது, அவனிடம் அது அறநழுவிப் பின்னர் அவன் முயற்சியன்றி அவன் இயற்கையாகவே அவனிடம் அமைந்துவிட்டபடியால். ஆகவே இந்த முக்தன் உலகத்தவர் திருஷ்டியில் ஸுவாஸனைக்கும் வாஸனாதீதநிலைக்கும் இடையேமாறிக்கொண்டிருப்பதுபோலக் காணப்படுவன். இது அவன் பிரயத்னமன்றியே நடந்து வருவதால் அவன் திருஷ்டியில் எப்பொழுதும் அவன் வாஸனாதீத நிலையிலேயே இருப்பன். ஈசாஞ்ஞையான சாஸ்திரீய வழிகளில் நம் முயற்சிகளை முன்னிட்டு வாஸனைகளை ஒழுங்குபடுத்துவது நிர்வாஸனா நிலையாகிய மோக்ஷத்தை அடைவதற்கே. வாஸனைகளை ஒழுங்குபடுத்த முயலுங்கால், கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்ற பழமொழி நமது ஞாபகத்திற்குவர, வாஸனைகளை அடக்குவது முடியாது, என்ற சோர்வு வந்துவிடலாம். இதையே திடப்படுத்துவதுபோல மஹாபாரதம் ஸபாபர்வத்தில் 'பொன்மான் உலகில் இல்லை, ராமர் அதுபோன்ற தோற்றத்தில் மயங்கி விரும்பினார் : பெரும்பாலும் சீக்கிரத்தில் ஆபத்துவருபவருக்கு புத்திமாருட்டம் ஏற்படும்' என்ற வாக்கியம் காணப்படும். ஆனால் வாஸனையின் காரியமாகிய விருப்பத்தின் வேகத்திற்கும், மேல்வரும் கேட்டிற்கும் சிறுபான்மை ஒற்றுமையில்லாமலும் இருக்கலாமென்பதை பெரும்பாலும் என்றசொல் நன்குணர்த்தி ; இந்தப் பொருத்தம் காரியகாரணப் பொருத்தமல்ல, சகுனம் போன்ற வெறும் அறிகுறிப் பொருத்தம் என்று விளக்கிவிடுகிறது. அதாவது மனதில் எழும் கெட்ட வாஸனைகளால் மேல்கேடு வரலாம் என்று ஊஹிக்கலாமாயினும், அவைகளின்படி நடப்பதையோ, நடவாமையையோ அது பொருத்ததல்ல. ஆகவே வாஸனை தொழிற்படுவதால் வெகு நாள் கழித்து வரக்கூடிய கேட்டைத் தடுக்கவே எப்பொழுதும் நாம் முயலவேண்டும், வாஸனைகளை அடக்கச் செய்யும் முயற்சிகளில், என்பதை மறவாதிருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட வாஸனாநுட்ப உணர்வும் கர்மவாஸனா விவேகமும் இல்லாவிடில் மோக்ஷ ஸோபாந ஒழுக்கத்திற்கு முக்யமாகிய ஈச்வர உணர்வு நன்கு ஏற்படாது. இதனால் குறிக்கப்படும் ஈச்வர உணர்வை மேல் எடுத்து விவரிப்போம்.

ஸர்பிரோஸ்ஷா மேடா, கே. ஸி. ஐ. இ.

SIR P. M. MEHTA, K. C. I. E.

*"முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவி
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவது" [லொரு*

பட்டினத்தார் பாடியதானாலும் பழக்கத்தில் யாவருமறிந்ததே. இந்தியநாட்டிற் கிவ்வருஷம் அது நன்றாக வெளிப்படை. ஸ்ரீமான் கோகலே, ஸர் ஹென்றி காட்டன், இவர் ஒருவர்பின் ஒருவராக இவ்வுலக வாழ்க்கையைத் துறந்த துக்கமேகம் இவ்விந்திய நாட்டைக் கவிந்து கலையாதிருக்க, மேகமில்லாவிடத்தில் இடியிடித்தாற்போல, இம்மாதம் 6-வது நாள், வெள்ளிக்கிழமை மாலைக்குள்ளாக, "ஆ என்றால் அழுதபிள்ளை வாய்மூடும்" என்னும்படி "பம்பாய் நகரத்து 'முடியா முடிமன்னன்' " என எவராலும் பாராட்டப்பட்டுத், தன் மொழிக்கெதிரில்லை என்று நிகரில்லாமல் வாழ்ந்த ஸர் பிரோஸ்ஷா மேடா அவர்கள் தேகபந்த மொழித்தார் என்று ஸமாசாரமெட்டியது, அகோ! பெருங்கஷ்டம். "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லை" என்று தாயுமானவர் சொன்னது மனத்திற்கு எவ்வளவுதான் சாந்தியுண்டாக்கக் கூடியதானாலும், துக்கத்தால் உண்டாகும் மயக்கத்தையும், படபடப்பையும், அதைர்யத்தையும் நீக்கக்கூடியதென்று பொது ஜனங்களால் சொல்லமுடியாது. அந்தக் கம்பீரத்தோற்றமும், கர்ஜித்தமொழியும், அழகிய உருவும், தொழச்செயும் நடையும், முட்கும், முகமனும், மட்டிலாத் தீரமும், யாரையும் வணங்கச்செய்யும் விரச்செயலும், அழியாத ஒழுக்கமும் பழியாதவழியும்—இவற்றை எல்லாம் ஒருங்கே யமன் சூறையாடிக்கொள்ளையிடுதல் தகுமா? ஏதோ சிலநாட்களாக மேடா அவர்களுக்குத் தேகஸௌக்கியக் குறைவென்றிருந்தபோதிலும், நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்குமென்றபடி நடக்குமென்று யாருநினைக்கவில்லை. "எல்லாமெனை யாளு மீசன்செயல்."

மேடாவின் தேகவியோகம், இந்நாட்டைக் கவிந்த துக்கமேகத்தைக் கடுமிருளாகச்செய்திருக்கிறது. ஜனஸமூஹத்தின் மனத்தை மயக்கி, அது துன்பமாரி பெய்வது நாம் சொல்லவேண்டியதில்லை. இந்தச் சமயத்தில் மேடா அவர்கள் தேஹம் நழுவியது நமக்குப் பரமதுரதிஷ்டம். இந்தியநாட்டிற்கு விசிஷ்ட ஸ்வயாதிபத்யவிஷயத்தைப்பற்றி கனம் ஸர் வெட்டர்பர்ன், ஸர் கிருஷ்ண குப்தா முதலிய பிரமுகர்கள் கவலை செலுத்திக்கொண்டிருக்க நெடுநாளாக ஜனசுகத்திற்கு ஜீவிய முழுதுமொழித்து அனுபவம்பெற்ற இந்திய பிரமுகர்கள் ஒருவர்பின் ஒருவராய் உலகைவிட்டு ஒழிவதானால் இவ்விந்திய நாடு தாங்குமென்று சொல்லமுடியாது. காலஞ் செல்லச் செல்ல அது தானே தெரியும்.

நிற்க. மேடா பிறவியால் பழைய பாரஸீக வம்சத்தினர். நாடிழந்த காலத்துத் தமக்கு நிழல்தந்த நாட்டிற்குக் கைம்மாறாகத் தம் ஜாதியார்க்காகத் தாமொருவராகவே முழுதுமுழைத்தவர். அழகிலுத்தம புருஷர்; ஸிம்ஹம்போல் கம்பீரத்தோற்றமுடையவர். அவரது நெடிய உருவமும் விசாலபுருவமும் யாரையும் தம் வயப்படுத்தும் கண்களும் இன்றைக்கெல்லாம் பார்க்கத்தக்கன. மங்கள வடிவத்துடன் உயர்ந்த படிப்பும் போக்கும் அவரிடம் குடிகொண்டன. சிறுவயதிலேயே படிப்பில் பிரமுகராய் விளங்கி 1864-ம் ௵ பி.ஏ. பட்டம் பெற்று, மற்றும் ஆறுமாதத்திற்குள் வெகுகௌரவமாக எம்.ஏ பரீட்சையில் தேறினார். அவர் படித்த எல்பின்ஸ்டன் காலேஜ் தலைவராகிய ஸர் அலக்ஸாண்டர் க்ராண்ட்* துரையின் விருப்பின்படி சீமை சென்று சட்டப் பரீக்ஷையில் தேறி 1868-ம் ௵ பாரிஸ்டராக பம்பாய் ஹைகோர்ட்டில் அப்யஸிக்க ஆரம்பித்தார். அவரிடம் லக்ஷ்மி கடாட்சம் எளிதில் குடிகொண்டது.

அவ்வாறு நியாயவாதியாக விளங்கிய சின்னாளிலேயே இவர் பொதுஜன விஷயங்களில் தலையிடவாரம்பித்தார். பம்பாய் நகரத்தின்மேல் முதல் முதல் இவர்கவனம் சென்றது. அந்நகரத்து முனிஸிபல் வியவஹா

* இவர் படிப்பில் வெகு நிபுணர்; கிரீக் பாஷையில் நல்ல தேர்ச்சியடைந்தவர்; கிழக்கத்தியபாஷைகளை விருத்திசெய்ய முயன்றவர். இங்கிருந்து சீமைக்குச் சென்றதும், எடின்பரோ நகரத்து ஸர்வகலாசாலைக்கு அத்யக்ஷகராக விளங்கினவர்.

ரங்களைச்சரிப்படுத்தமுயன்றார். அந்நாள் பம்பாய் நகரம் வியாதியாலும் மரணத்தாலும் அழிவடைந்து வருவதைத் தடுக்க, மேடா அவர்கள் முனிஸிபல் சீர்திருத்தத்தைப் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்து, முனிஸிபாலிடியின் அதிகாரத்தை நடத்திய ஆலோசனை ஸபையின் கோளாறுகளைப் பிரகாசப்படுத்தினார்; அதை எவ்வாறு தடுப்பதென்றும் வியவஹரித்தார். அவ்வுபந்நியாஸத்தோடிராமல், பம்பாய் கவர்ன்மெண்டில் முனிஸிபல் சட்டம் ஒன்றும் நிறைவேறும்படி உழைத்துப் பம்பாய் முனிஸியல் கார்ப்போரேஷனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அக்ராஸனாதிபதி தலைமைவஹிக்கும்படி உத்தரவு வரும்படி செய்தார். அவரது இயக்கத்தால் கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப்பட்ட பம்பாய் முனிஸிபல் ஆக்ட் இந்தியாவுள் அமுலுள் இருக்கும் அம்மாதிரியான சட்டங்களில் எல்லாவற்றிலுஞ் சிறந்தது. இவ்வாறு பம்பாய் முனிசிபாலிடியில் கவனம் கொண்டவர் அதன் தலைவராக இருந்ததல்லாமல், கடைசிவரையிலும் அத்துடன் தமது வாழ்க்கையை ஐக்கியப்படுத்தியிருந்தனர். நகராபிமானம் அவரைப்போல் யாருக்குத்தான் உண்டு?

இவரது பிரபல சக்தியைக்கண்டு பம்பாய் கவர்னர் இவரை 1886-ம் வருஷம் பம்பாய்ச் சட்டசபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தனர். பலகாலுமதில் உழைத்தவர் பின் இந்திய ராஜப்பிரதிநிதியின் சட்ட ஸபையின் அங்கத்தினராகவிருந்து அங்கு ஸ்ரீமான் கோகலேக்கு இடம் கொடுக்கும்படி விலகினார். தற்புகழைப் பிறர் பங்கிடக்கொடுத்த குணம் இவ் உலகத்தில் எத்தனைபேர்க்குண்டு?

மேடா அவர்கள் தேசத் தொண்டில் குறைந்தவர் அல்லர். முதலில் டேலாங், புட்ருட்டீன் டியாப்ஜீ இவர்களிருவருடன் கலந்து பம்பாய் இராஜதானிச் சபையை ஏற்படுத்தினார். பின் மிக்க அமைதியைக் குறைத்த இல்பார்ட் பில் விஷயத்தில் பிரபலமாக உழைத்து, அத்யத்புதமாகத் தமது மதியூகத்தையும் ஆழ்ந்த யோசனையையும் வெளியிட்டார்.

லார்ட் லிட்டன் கவர்னர் ஜனரலாக இருந்த காலத்தில் தேசியப் பத்திரிகைகளைப்பற்றிய சட்டத்தை இந்திய கவர்ன்மெண்டார் பிரேரேபித்தபோது இவர் அச்சட்டத்தால் வரக்கூடிய கஷ்டத்தை மிகப் பிரகாசமாக எடுத்துப்பேசினார். அம்மொழிகள் தற்காலத்திய இந்திய நிலைக்கும் பொருந்துமாறு இருப்பன அவரது தூரதிருஷ்டி நோக்கத்தையே காட்டும். பிறகு, ரிப்பன் பிரபு கவர்னர் ஜனரலாக வந்ததும் இவரது உயர்ந்த பாவங்கள் மேலும் பிரகாசமடைந்தன. முனிஸிபல் வியவஹாரங்களுக்கு ஆதாரங்கள் ஏற்படுத்திய இவர்க்கு இந்திய நாடு முழுதும் நன்மை பாராட்டாதிருக்க முடியாது.

1884ம் வருஷம், முனிஸிபல் கவர்ன்மெண்டிற்கு வேரூன்றிய கனம் ரிப்பன் பிரபு அவர்களுக்கு அவர் தமது தேசத்திற்குப் போகும்போது தக்க மரியாதை செய்ய இணையில்லா ஏற்பாடுகள் செய்து கீர்த்தி பெற்றார். மேடா பம்பாய் ஸர்வகலாசங்கத்தி லுழைத்தது மவ்விதமே பெருமை வாய்ந்தது.

மேலும் ஹ்யூம் முதலியோர் இந்திய ஜாதீய மஹாநாடு என்னும் இந்தியன் நாஷனல் காங்கிரஸ் பெருஞ்சபைக் குயிர்கொடுத்தபோது இவரும் உடன் கலந்துழைத்து, 1890 ம்வருஷம் அதன் அக்ராசநாதிபத்யம் வஹிக்கும் பெருமையை அடைந்தார். அன்றுமுதல் இச்சபையை நடத்தும் முக்கியப் பொறுப்பை வஹித்துத் தன் வழியை விடாமல் அச்சபை இன்றைவரை இருக்கும் நிலைமைக் காதாரமாய் இருந்தார். மேடா அவர்கள் ஸ்வதேசி இயக்கத்தில் உழைக்கவில்லையெனப் பலபேர் நினைப்பார்கள். அவர் ஸ்வதேசி என்னுமியக்கம் வருமுன்னமே அவ்வியக்கத்தின் உண்மையை வழக்கத்தில் கொண்டுவந்தார். தமது இளமையிலேயே ஜஸ்டிஸ் டெலாங்குடன் கூடி ஒரு ஸோப் செய்யும் சாலை ஏற்படுத்திப் போட்டபணத்தை எல்லாம் பாழாக்கினார். பம்பாய் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டை ஏற்படுத்தியவர்களில் அவர் ஒருவர். அவர் ஸ்வதேசியபிமானங் கொண்டாலும், அவ்வியக்கத்தினால் பிறரால் சொல்லப்பட்டபடி நமது நாட்டுத்தொழில் விருத்தியாலே

எல்லா ஸுகங்களும் தாமேவந்து சேருமென்ற நம்பிக்கை அவர்க்கில்லாமையால் அவர் அவ்வியக்கத்தில் சேரவில்லை. அவரது அபிப்பிராயம் ஜாதியத்தொழில்கள் எவ்விதம் க்ஷீணித்தனவோ அம்மூலமாகவே மேலேற வேண்டுமென்பது. கவர்ன்மெண்டாரது போஷணையின்றி நாட்டுத் தொழிற்செல்வம் நிலைபெறாதென்றது அவர்திடநம்பிக்கை.

இவர் தமது மனக்கோட்பாடு மீறாது நடப்பவர் என்பதற்கு மேல் சமாசாரமே அத்தாட்சி. அவரது அந்தக்குணமே யாவரையும் அவரிடம் அன்புகொள்ளுமாறு செய்தது. அதிமதிநுட்பம், பயமின்றி நடத்தல், திடமனோதைர்யம், வாக்ஜாலம், சாதுர்யம், யாவரையும் வசப்படுத்தும் வசைமொழி இவை எல்லாம் அவர் சட்டசபைகளில் பேசியபொழுது பிரபலமான இராஜாங்கத்துத்தலைமைகொண்ட அங்கத்தினர்களை அவரிடம்பயமும்பக்தியும்கவுரவமும்கொள்ளுமாறுச்செய்தன. போலீஸ் சட்டம் அங்கீகரிப்பதன்முன் அவர் பேசிய பேச்சுகளின் வளப்பத்தை நினைக்கநினைக்க இப்படியும் பேசுபவருண்டா என்று தோன்றும். சட்டசபையில் ராஜ்யபார அங்கத்தினர்களுக்குத் தகுந்த வாக்ஜாலத்துடன் விளங்கி அவர்க்குப் பெரும்பாரமாக இருந்தார். மேடாவின் அடங்காத் தன்மையும், ஒடுங்கா வன்மையும் உத்யோகத்தலைவர்கள் இவரிடம் பொறுமை கொள்ளுமாறு செய்யாதிருக்கவில்லை.

அத்யத்புதமாகப் பேசுந் திறமைவாய்ந்தவருள் இவர் ஒருவர்; காற்றும் மயங்கி விளங்கக்கேட்டோர் பிரமிக்கப் பேசக்கூடியவர். கடல்போல் ஆரவாரஞ்செய்து, கோடையிடி போலிடித்து, சப்த ப்ரவாஹம் எவ்விதத் தடையையும் புரட்டித் தள்ளிக்கொண்டோட, பிரசங்கமாரி பொழிந்து, உலர்ந்து கிடக்கும் இந்திய ஸுகப் புல் பச்சென்று விளங்க, ஸூர்ய தெய்வத்தைத் தொழும் ஜாதியில் பிறந்த இவர், ஸூர்யன்போல் ஜன ஸுகத்திற்குக் குளிர்நீங்கும்படியான சூடுண்டாக்கியவ ரென்பதற் கையமில்லை. பிறரது அபிப்ராயத்தை மதியா குணமொன்றே அவரது ஒரே குற்றம். "புல்லிதழ் பூவிற்குமுண்டு"; என் செய்வது? ஆனால் அவர் இந்தியப்பிரமுகர்களில் முதல்வர் என்பதற்கவரிடம் ஜனங்கள் வைத்த அபிமானமே சாட்சி. நமது அரசர் பம்பாயில் இறங்கியபோது இவரே அவரை முகமனுடன் முதலழைத்துவரும் பாக்கியம் அதற்குச் சாட்சிமாத்திரமன்று, கவர்ன்மெண்டா ரவரிடம் கொண்ட அபிமானத்திற்கும் சாட்சியாம்.

இருப்பது பொய் போவது மெய். நேற்றிருந்தவ ரின்றில்லை யானாலும், அவரது செயலும் மொழியும் இறந்ததில்லை. ஆணித்திறமாக விளங்கும் அம்மொழிகளை யாதாரமாகக்கொண்டு அவரைத் தேசத் தொண்டில் பின்பற்றினால் ஒருநாளும் வீணாகாது. அவர் போலவே எவ்விஷயத்திற்கும் பெரியவராகிப், பாராட்டப்பட்டு முன் அபிப்பிராயங் கேட்கும்படியான நிலையை யடையலாம்.

மூடுபனி.—ஆகாயத்தின் உயரத்தில் சாதாரண வாயுவிலுள்ள நீராவி குளிர்ச்சியடைந்தால் மேகரூபத்தை அடையும். அவ்வண்ணமாகவே, பூமிக்கருகில் சாதாரண வாயுவிலுள்ள நீராவியானது குளிர்ச்சியடைந்தால் மூடுபனியாகிறது. பனிக்கும் மூடுபனிக்கும் வித்தியாசம் என்னவென்றால், பனி பூமியின் மீதுள்ள பொருள்களில் உண்டாகும்; மூடுபனி பூமிக்குச் சற்று உயரத்திலுள்ள ஆகாயத்தில் உண்டாகும். மூடுபனியில் சிறிது ஜலத்தின்உருவைப்பெற்றுப் பூமியின்மீது விழும், சிறிது சூரியவெப்பத்தால் மறுபடி ஆவியின் உருவைப்பெற்றுச் சாதாரண வாயுவிற் கலக்கும் மூடுபனியென்பது பூமிக்குச் சமீபத்திலாவது பூமியைத் தொடும்படியாவது உள்ள மேகமேயாம். அது அதிநுட்பமான மழைத்துளிகள்போன்று எல்லாவற்றையும் மூடிக்கொண்டிருக்கிறது. அது காற்றில்லாமையால் பூமியின்மீது இறங்கின மேகமென்று சொல்லலாம் அப்படி இறங்காமல் ஆகாயத்தில் இன்னும் சிறிது காலமிருக்குமாயின் அதன் சிறு துளிகள் முன்னிலும் அதிகமாக இறுகி, ஒன்றோடொன்று சேர்ந்து பெருந் துளிகளாகி, சாதாரண மழையாக விழும்.

இயற்கையில் இறைவன் :
ஜீவஜந்துக்களின் ஸ்வபாவ உணர்ச்சி

PROVIDENCE IN NATURE
ANIMIAL INSTINCT

ஒருவன் தன்னைச் சுற்றியிருக்கும் இயற்கைப் பொருள்களை உற்றுநோக்கிப் பார்ப்பானாகில் அவனுக்குப் புதிய அழகுகள் வெளிப்படுகின்றனவென்பதை நாமெல்லாரும் அநுபவஸித்தமா யறிந்திருக்கிறோம். அதேவிதமாக, நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்கள் ஒழுகுதலைப்பார்த்தால் அவைகளை ஆளும் முறைகளுமிருக்கின்றனவென நாம் அறியலாம். இப்பொருள்கள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டும் அப்பாகுபாட்டில் ஒவ்வொரு பொருளும் மற்றொரு பொருளுடன் ஏதேனுமொருவகையில் ஸம்பந்தப்பட்டிருக்கிறது. இவ்வாச்சர்யங்களையெல்லாம் உற்றுநோக்கிப் பார்க்கப்பார்க்க நமக்குப் புதிய விநோதங்களும் புதிய ஸம்பந்தா ஸம்பந்தங்களும் எளிதில் வெளியாகின்றன. கடைசியில் நாம் ஒரேவித ஸம்பந்தத்தைக் காண்கிறோம்; அதாவது பரம்பொருளே!

உலகத்திலுள்ள எவ்விதமான ஜீவசரீரங்களின் அவயவங்களைப்பற்றி யோசித்துப்பார்த்தாலும் ஒரு ஸர்வக்ஞனாகிய கடவுள், அச்சரீரத்தை அபிமானிக்கும் உயிர்கள் வஸிக்கவேண்டிய இடத்திற்கும், புசிப்பிற்கும், சுகத்திற்கும் தக்கவிதமாக அறிந்து அமைத்திருக்கிறதாகப் புலப்படுகின்றது. இவ்வதியற்புதமான கார்யம் மானிடரால் முடியுமா? மேலும், அறிவற்ற பூதியங்களே கூடி இவ்வுருவத்தைப் பெற்றதாக நினைக்க முடியவில்லை. விருக்ஷ முதல், மனிதராகக் கொள்ளப்பட்ட ஜீவதேகங்களின் அவயவங்களெல்லாம் அச்சரீர அபிமானியாகிய ஜீவனின் இச்சைக்குத் தருந்தாற்போல் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் கடவுளின் பெருமை வாசாமகோசரமென்றும் மனிதரால் வர்ணிக்கமுடியாதென்றும் இசைக்கின்றார்கள்.

எப்படித் திரைக்குப்பின் சூத்திரதாரன் மறைந்திருந்து மற்றைய நாடக பாத்திரங்களை நடப்பிக்கச்செய்கிறானோ அப்படியே நாம் காணும் இவ்வுலகத்தையும் அதிலிருக்கும் பொருள்களையும் ஆட்டிவைக்கும் இறைவனொருவன் இருக்கிறானென்று எல்லாதேசத்தாராலும் நம்பப்படுகிறது. சூத்திரதாரனைச் செய்கைகளாலன்றி வேறெவற்றாலுமறியமுடியாததுபோல் இறைவனையும் அவன் செய்கைகளாலேயே அறியவேண்டியிருக்கிறது. இப்பொழுது நாம் உலகில் வசிக்கும் சில ஜீவஜந்துக்களின் தாவரஜங்கம சாஸ்திரத்திலிருந்து (Natural History) அவைகளின் உணர்ச்சியால் எப்படி ஸர்வக்ஞனாகிய கடவுள் இயற்கையில் வியாபித்து நிற்கிறாரென்பதைப் பார்ப்போம்.

மேலே சொன்னபடி ஒவ்வொரு ஜந்துவின் அவயவங்களும் மற்ற ஜந்துக்களின் அவயவங்களுக்கு முற்றும் மாறானதாயிருக்கின்றன. ப்ராணிகளின் திமில்கள் முதல் எள்ளுப்ரமாணமுள்ள எலும்புவரை ஒவ்வொன்றும் ஒரு கார்யத்திற்குபயோகமாகும்படியாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ப்ராணியின் அவயவங்கள் மற்றொரு ப்ராணிக்கு எவ்விதத்திலும் உபயோகப்படக்கூடியனவல்ல.

ஸமஸ்த ஜீவகோடிகளிடத்தும் தம் குடும்பத்தை வ்ருத்திசெய்வதற்காக காமவிகாரமும் (Lust), தானும் தன் குடும்பமும் வாழவேண்டி பசியுணர்ச்சியும் (Hunger) ஆகிய இவ்விரண்டுமிருக்கக் காண்கிறோம். ஒருவகை ஜந்துவின் தாய்க்கு அதன் வர்க்கத்தையும் குடும்பத்தையும்காப்பாற்ற உண்டாகும் அன்பும் கவலையும் மற்றொருவகை ஜந்துவினிடம் ஜனிக்கும் அதேவித அன்பும் கவலையும் காலக்ரமத்திலும் அளவிலும் வேறுபடுகின்றனவென்பதைப்பார்க்க நமக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. உதாரணமாக, பூச்சிகளும், மீன்களிற் சில வகுப்புக்களும் நேர்ந்த இடத்தில் முட்டையிட்டுச் செல்லுகின்றன. அவைகளைப்பற்றி அவை ஒருபொழுதுங் கவலைப்படுவதில்லை. முட்டையிடுவது மாத்திரந்தான் அவைகள் தொழில் போலும்! முதலை, நெருப்புக்கோழி, நல்லபாம்பு, முதலியவை தங்கள் முட்டைகளையிடத் தகுந்த இடமும், அவைகளினின்று வெளிப்படும் ப்ராணிகள் வஸிக்கத்தகுந்த இடமாயும் பார்த்து முட்டையிட்டுவிட்டு அப்பாற் சென்றுவிடுகின்றன. கோழி முதலியவை முட்டையிட்டு அடைகாத்து அவைகள் வெடித்து, குஞ்சுகளுக்கு நடமாடச் சக்தியுண்டாகும்வரை அவைகளைக் காப்பாற்றுகின்றன.

ஒவ்வொரு இனத்தைச்சேர்ந்த பறவைகள் கட்டுங்கூடுகள் ஒவ்வொரு விதமாகவும் அவ்வவ்வினத்தைச் சேர்ந்தவைகள் யாவும் கட்டுவன ஒரேவிதமாகவு மிருக்கின்றன. இவைகளில் ஒன்று கட்டுவதைப் பார்த்துப் பழகி மற்றொன்றுகட்டுகிறதென்று சொல்வதற்கிடமில்லை. ஏனெனில், ஒரு காக்கையை அதன் இனத்திலிருந்து பிரித்து ஒரு பெட்டைக்கோழி இருக்குமிடத்தில் சேர்த்து அங்கேயே முட்டையிடச்செய்தாலும் முட்டையினின்று வெளிப்படும் காக்கைக் குஞ்சு தன் இனத்தாரைப் போலவே கொஞ்சங்கூடப் பிசகாமல் கூடுகட்டிக் கொள்ளுகின்றது. இலையுதிர்காலத்தில் யாதொரு ஸ்வகதபேதமின்றி வெறுங்கட்டையாக நின்றமரங்கள் வஸந்த மாரிகாலத்தில் இலை, தளிர், பூ, காய், கனி, விதையாதிகளாற் றழைத்து விளங்கி அவைகள் யாவுந்தன்னைத் தேடிவந்தடையும் உயிர்களுக்கு ஒளியாமல் பக்குவப்பட்ட இலை, காய், கனியாதிகளை ஸகஜமாக உதிர்த்து, அவைகளைப் பெற உதவுகின்றன. மீள மீள இவ்வாறே செய்கின்றன. இவ்விருக்ஷத்தின் செய்கையை ஆழ்ந்து யோசித்தால் கடவுளுடைய காருண்ய சக்தியை உணரலாம். அதே காலத்தில் ம்ருகஜாதிகள் கவலையற்று ஒளிந்து வாழ அடர்ந்த மரங்களும், ஆகாரத்திற்காக புல் நிறைந்த வயல்களும், யதேஷ்டமான பூச்சிகளும், இளம்புகின்றன. இவையெல்லாம் இறைவனருளாலன்றோ?

ம்ருகாதிகள் தம் சந்ததியிடத்தில் தாய் தந்தைக்குரிய அன்பையும் காப்பாற்றுங் கவலையையும் எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலந்தான் காண்பிக்கின்றன. இவ்வன்பின் தன்மை எத்தகைத்தென்பது கீழிருக்கும் உதாரணத்தால் வெளியாகும். அங்கசேத ஸாமர்த்யமுள்ள ஒருவன் (A skilful dissectionist) ஒரு பெண் நாயைக் கிழித்தான். அந்த உபத்திரவந் தாங்காமல் வருந்தின அந்தநாய் தன்னிடத்தில் தன்குட்டியை காண்பித்துவைத்தவுடன் தன் உபத்ரவத்தை மறந்து அதை நக்கிக்கொடுத்தது. அந்தக் குட்டியையெடுத்துப்போகவும், அது ஊளையிட்டுக் கத்த ஆரம்பித்தது. அக்கத்தல், தான் குட்டியையிழந்ததற்காகவெனத் தோன்றியதேயொழிய, தான்பட்ட அவஸ்தைக்காகவென்று தோன்றவில்லை.

ம்ருகாதிகளிடத்துள்ள இவ்வன்பு மனிதர்களிடத்திலிருப்பதைக்காட்டிலும் அதிகமாகவே யிருக்கிறதென்று சொல்லலாம். அப்படியிருப்பினும், தம் குட்டிகளுக்கு இரைதேடச் சக்தி வந்ததும், தாய் அவைகளுக்கு இரையளித்து உதவுவதை நிறுத்திவிடுகிறது. ஆகவே, தகுந்த வயதிலேயே ஒவ்வொன்றும் தனக்குத்தானே இரை தேடிக்கொள்ள நேரிடுகிறது. இவ்வித ஸ்வபாவ உணர்ச்சியில் ஒரு அம்சம் கவனிக்கத்தக்கது. அதாவது, தாய் ம்ருகங்களும், பக்ஷிகளும் தம் சந்ததிகளை இரைதேடி ஜீவிக்கவிட்டுவிட்டாலும் அவை பிணியினால் வருந்திச் சக்தியற்றிருக்கும்பொழுது இரை கொடுத்துக் கவலையுடன் அவைகளே இரைதேடச் சக்திவருமளவும் கப்பாற்றுகின்றன.

நிச்சப்தமாயும் தொந்தரவில்லாமலும் மனுஷ்ய ஸஞ்சாரமில்லாமலும் இருக்கும்படியான இடங்களில் எவ்வளவு ஜாக்ரதையாய்ப் பெட்டைக்கோழிதன்கூடுகட்டுகிறது! முட்டையிட்ட பிறகும் அதி ஜாக்ரதையாய் அவைகளை அடிக்கடி திருப்பிக் கொடுத்து அடைகாத்து எல்லாப் பக்கமும் சூடேறும்படிச் செய்கிறதே! இரைதேட வெளியே சென்று தங்கிவிடாமல் முட்டைகள் குளிர்ச்சியடைவதற்குள் இரை தேடிக்கொண்டு அவை திரும்பிவருகின்றனவே! கோடைகாலத்தில் தாம் யதேச்சையாயிருக்கலாமென்றும், குஞ்சுகள் குளிரால் கஷ்டப்படக்கூடிய மாரிகாலத்தில் தாம இஷ்டம்போலிராமல் பாதி நேரம் வீட்டிலும், பாதி நேரம் வெளியிலுமிருக்க வேண்டுமென்றும் யூக புத்தியை அதற்கு யார்தான் கொடுத்திருப்பார்? முட்டையுடைக்குந்தருணம் வரும்பொழுது எவ்வளவு ஊக்கத்துடனும் கவலையோடும் சாமர்த்யமாயும் அவைகளைப் பெட்டைக்குஞ்சு பொரிக்கச்செய்கின்றது? இவ்வ

ளவு அழகாகக் குஞ்சுபொரிக்கச்செய்தல் ரஸாயன சாஸ்திரமுறையாலும் (Chemical Operations) அசாத்யமானதன்றோ?

தாம் பிறந்தவுடன் தமக்கு வேண்டிய ஆகாரத்தைச் சாப்பிடவும் தமக்கு வேண்டாததும் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாததுமான ஆகாரத்தைத் தள்ளவும் அறிந்திருக்கும் ஜீவ ஜந்துக்களின் உணர்ச்சியை நாம் என்னென்று சொல்வது? ஒரு ஆட்டுக்குட்டி பிறந்தவுடன் தானாகவே தாய்ப்பால் குடிக்கச் செல்லவில்லையா? மனிதர்களைப் போலவே எல்லா ம்ருகங்கள் பக்ஷிகளிடத்தும் சில தீயகுணங்களாகிய கோபம், வன்மை, பழிவாங்குகை முதலியவையிருக்கின்றன. ஆனால் இக்குணங்கள் அந்தந்த ஜந்துக்களின் தேகஆக்ருதிக்குத் தகுந்தபடியிருக்கின்றன. சாதாரணமாக ஒரு சிங்கத்தின் மூர்க்கத்தன்மை எவ்வளவோ, அவ்வளவு ஒரு ஆட்டுக்குட்டிக்குக்கிடையாது: இருக்கிற மூர்க்கத்தன்மையைக் காட்டிலும் அதிகமாயிருந்தும் அதற்குப் பயனில்லை. இதேமாதிரியாக ஒரு ஆட்டின் சாந்தமான தன்மை ஒரு சிங்கத்தினிடம் காண்பதரிது. என்ன ஆச்சரியம்! இதுவும் அவன் அற்புதச் செயலன்றோ?

நிற்க: ஒவ்வொரு ஜீவஜந்துவும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு நகங்களோ குளம்புகளோ, கொம்புகளோ கூரிய பற்களோ, நீண்ட வால்களோ விஷம் பொருந்திய கொடுக்குகளோ அல்லது நீண்ட அலகுகளோ, தும்பிக்கைகளோ ஏதேனுமொன்றை அவற்றின் உருவத்திற்குத் தகுந்தபடி கடவுள் கொடுத்திருக்கிறார். கடவுள் இவ்வாயுதங்களைத்தான் அவைகளுக்குக் கொடுத்தார்; அவைகளை உபயோகிக்க யார் கற்பிக்கிறார்கள்? இதுவும் கடவுள் செய்கையே! இது தாவர ஜங்கம சாஸ்திரிகளாலும் ஒப்புக்[illegible]கிறது. அந்த ப்ராணிகளுக்கு ஆயுதங்கள் முளைப்பதற்கு முன்னடியே அந்த இடத்தைக்கொண்டு அவை தம்மை காப்பாற்றிக் கொள்ளுகின்றன. உதாரணமாக, வீட்டுக்குள்ளிருக்கும் ஆட்டுக்குட்டி தன்னை எதிர்ப்போரைக் கொம்பு துளிர் விடுவதற்கு முன்னாலேயே தலையினால் முட்டித்தள்ளித் தப்பித்துக்கொள்ளுகிறது.

கடவுளின் யூக புத்தியும், யூகத்தன்மையும் காருண்யமான சக்தியும், அகழெலியின் அவயவங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அதன் ஒவ்வொரு அவயவமும் அதன் ஸ்வபாவத்திற்கும், பழக்க ஒழுக்கத்திற்கும், தகுந்ததாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் வாஸஸ்தானம் பூமிக்குள்ளிருப்பதனாலும் அங்கே ஒன்றையும் பார்க்க முடியாததனாலும், அதன் கண்கள், தாவர ஜங்கம சாஸ்திரிகள் (Naturalists) அதற்குக் கண் உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கும்படியான அவ்வளவு சிறியதாய்க் கொடுத்திருக்கிறார். பார்வையில் குறைத்திருப்பதற்குப் பதிலாக அதற்குக் கட்செவி போன்ற காதைக் கொடுத்திருக்கிறார். மனிதர்கள் காதுக் கெட்டாத எந்த சப்தமும் அதன் காதுக்கு வெகு சீக்ரத்தில் எட்டும்; மேலும் தன் சுற்றளவுக்கு வேண்டியவளவு கனமுள்ள குகை பண்ணிக் கொள்வதற்காக குட்டையான கால்களும் ஒரே தடவையில் அதிக மண்ணைத்தோண்டி எடுக்கச் சாதனமாக அகன்ற முன் பாதங்களும், பகைவர் தன்னைப் பிடிக்க இலகுவில்லாதிருக்கும்படி வெகு சிறு குட்டையான வால்களும் கொடுத்திருக்கிறார்.

இன்னும் நமது கண்ணுக் கெட்டாத தூரங்களிலும், கடல், வனாந்தரங்கள் போன்ற மறைவிடங்களிலும் ஸர்வலோக நாயகரின் அத்யற்புதச்செய்கைகளைக் காண்பிக்கக்கூடிய மிருகங்களும் பக்ஷி ஜாதிகளும் மறைந்திருக்கின்றன.

கடவுள் ஒரு தனியிடத்தி லிருக்கின்றாரெனவும் அவற்றை யடைய முயலுவதே மனித வாழ்க்கைக்குத் தொழிலெனவும் பிதற்றுகின்றார் சிலர். அவ்விடத்தை மோக்ஷமென்றும் சாயுஜ்ஜிய பதவியென்றும் பெயரிட்டழைக்கின்றார்கள். அந்தோ! ஒவ்வொருவர் கண் முன்னேயும், ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு ஜீவனிடத்திலும், அதன் செய்கையிலும், உணர்ச்சியிலும், நம் சொல்லிலுங்கூட உறையும் இறைவனைப் பிரித்து வேறாயிருக்கின்றாரென உரைத்தல் எவ்வளவு மடமை? பூர்வம் ப்ரஹ்லாதன் இரண்யனுக்கு, "இறைவன் தூணிலு

(இதன் தொடர்ச்சி 171-ம் பக்கம்)

செய்ந்நன்றி யறிதல்

GRATITUDE

இது பிறர் நமக்குச்செய்த உதவியை மறவாதிருத்தல் என்று பொருள்படும். இவ்விஷயத்தைப்பற்றிய விஷயங்கள் நமக்கு நன்றாய்ப் புலப்படவேண்டுமாயின், உதவி செய்தலின் வகை, அதன் உயர்வு, அதனை மறத்தலால் வருங்கேடு ஆகிய இவைகளை ஆராய்வதாலேதான் புலப்படவேண்டும். ஆகவே, முதலில் இங்கு அவ்வுதவியைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

அவ்வுதவியோ வெனில், ஒருவன், ஒருவனால் எவ்வித உபகாரத்தையும் அடையாத முன்னமே செய்வதென்றும், அவசியமான காலத்திலே செய்வதென்றும், எவ்வித உபகாரத்தையும் எதிர்பாராமலே செய்வதென்றும் என மூன்று வகைப்படும். இவற்றைத் திருக்குறளாசிரியர் "செய்யாமற் செய்த", "காலத்தினாற் செய்த", "பயன் றூக்கார் செய்த" என்ற திருக்குறள்களால் உபதேசித்து முறையே, மண்ணுலக விண்ணுலகங்களையும், புவியினையும், கடலினையுங் காட்டி இவைகளிலும் அவ்வுதவிகளே பெரியனவென்றும் விளக்கியுள்ளார்.

நிற்க, அவ்வுதவி எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்விதம் விளங்குகிறதென்று பார்க்கில், அஃது ஒரு பெரியோருக்குச்செய்யப்பட்டதாயின் தினையளவாகியது பனையளவாகி வளருகிறது; கீழோருக்குச் செய்யப்பட்டதாயின் பனையளவாகியது தினையளவுகூடப் பயனைத் தராததாகிவிடுகிறது. இன்னும், பெரியோர்க்கு ஏதேனும் ஒருசிறு உதவியை முதலிற்செய்து பிறகு வேண்டுமென்றே பல தீங்குகளைச் செய்தாலும் அவர்கள் நம்மால் அடைந்த அவ்வோருதவியையே நினைத்துப் பின் செய்த தீங்குகள் அனைத்தையும் பொறுப்பார்கள். அவ்விதமன்றி நாம் கீழோருக்கு முன்னம் பல உதவிகளைச் செய்ய, நம்மை அறியாது தவறி ஒன்று குற்றமாய் விடின், அவர்கள் முன் செய்த பல உதவிகளையும் குற்றமாகவே நினைப்பார்கள். இங்கு,

> "உதவி வரைத்தன் றுதவி யுதவி
> செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்றும்

> "ஒரு நன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
> பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
> கெழுநூறு நன்றிசெய் தொன்று தீதாயி
> னெழுநூறுந் தீதாய்விடும்" என்றும்

உள்ள வாக்கியங்கள் கவனிக்கத்தக்கன. இவைகளாற் பிறருக்கு நாம் மூன்று வகைகளால் உதவவேண்டு மென்றும், அவைகளும் அறிவுடையோர்க்காயின் உயர்வாகுமென்றுந் தெரிந்துகொண்டோம்.

இனி, இவ்வுதவியை மறத்தலால் வருந் தீங்குகள் என்ன என்பதைப் பார்ப்போம். மனிதர்களுக்கு அபகீர்த்தியும், பாபமும், அவைகளின் பயனாக நரகமுந் தீங்குகளாகின்றன. ஆனால், இந்நன்றி மறத்தலில் ஒருவனுக்கு இம்மூன்றும் ஒருசேர வந்தடைகின்றன. உதாரணமாக இன்றும், யாரேனும் ஒருவன் நன்றியை மறந்தால் அவனை "நன்றி கெட்டவன்" "நன்றிகெட்ட பன்றி" இவை போன்ற இன்னும் பல பழிமொழிகளால் உலகம் பழித்துக்கூறுதலைக் கேட்டிருக்கிறோம். மேலும், மேற்கண்ட மூவகைத் தீங்குகளையும் உண்டாக்குவது உலகத்தாருக்கு (அறிவுடையோருக்குச்) சம்மதமாகாத காரியங்களைச் செய்தலே. அவைகளிலும், நம்மாற் சொல்லுவதற்குக்கூடச் சம்மதிக்க முடியாத "சிதைவகல் காதற்றாயை," "அரவமல்கிய பதாகையாய்," "நன்றி புரிந்தோர்," "ஆன்மடியறுத்த" என்றுள்ள பிரபல வாக்கியங்களால் இந்நன்றி மறத்தல் மகா பாதகங்களிலும் பாதகமானதென்றேற்படுகிறது. இங்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறள் கவனிக்கத்தக்கது.

(170-ம் பக்கத் தொடர்ச்சி)

முளன், துரும்பிலுமுளன்" என்று சொன்னதை ஆலோசித்தால் மேற்கூறிய விஷயத்தை யாவரும் ஏற்றுக்கொள்வார் என்பதிற் சந்தேகமில்லை. ஆகவே: 'இயற்கையே இறைவன்; இறைவனே இயற்கை; இவ்விரண்டும் வேறுபடுவன வல்ல'.

எஸ். ரேங்கஸாமி அய்யங்கார்.

தவிர், "ஏதோ ஒரு சமயம் தங்களுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கியவர் நட்பைப் பெரியோர் எழுபிறப்பும் நினைப்பார்களென்றும், நன்மை யல்லாதவைகளை மறத்தல் தகுதியே யன்றி, நன்மையை மறத்தல் தகுதியன்றென்றும், பெரியோர் பிறர் தமக்குச் செய்த நன்றியைமட்டிற்றான் நினைப்பார்களென்றும், கர்ணன் பீஷ்மர் முதலாயினோர் துரியோதனாதிகள் செய்தது நியாய விரோதமென்று தெரிந்தும், நன்றி மறத்தல் என்னுங் குற்றம் தங்களை அடையாமலிருக்கும் பொருட்டே யுத்தஞ்செய்தார்கள் (செஞ்சோற்றுக் கடன் கழித்தார்கள்)" என்றும் நாம் நீதிநூல்களாற் செவ்வனே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

ஆகையால் 'கற்றபி, னிற்கவதற்குத் தக' என்ற வாக்கியத்திற் கேற்பத் தெரிந்து கொண்டவண்ணம் நடக்கவேண்டிய நாம், நமது கடமையை அறியாதவர்கள் ஆனோம் என்ற குற்றத்திற்குள்ளாகாதுப் பிறர் நமக்குச் செய்த சிறு உதவியையும் எப்பொழுதும் நினைப்பதோடு, அவர்களுக்கு எப்பொழுது எவ்விதம் உதவி செய்யலாமென்றும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்போமாக.

எஸ். வேங்கடராமய்யர்.

துத்தநாகம்.—இது சிறிது நீல நிறத்தோடுகூடிய வெண்மையான ஒரு உலோகம்; அது ஈயத்தைவிடச் சற்று ஒளியுள்ளது. அது கனமாயிருப்பதுமல்லாமல் சுத்தியினால் அடித்தால் நீளத்தக்கதே யன்றி ஒடியாது. அது ஜலத்தினும் ஏழுமடங்கு அதிக கனமுள்ளது. அது அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களிலும், ஐரோப்பாவில் இங்கிலாந்திலும் உள்ள கனிகளில் மிகுதியாக வெட்டியெடுக்கப்படும். அது எளிதில் களிம்பேறாத உலோகமாதலால் போஜன பதார்த்தங்கள் வைப்பதற்குரிய பாத்திரங்கள் அதனால் செய்யப்படுகின்றன. அதைத் தகடுகளாக்கிக் கூரைகள் முதலிய பல வேலைகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். துத்தநாகம் செம்போடு சேர்ந்து பித்தளையாகிறது.

கிராமக் கைத்தொழில்கள்

VILLAGE INDUSTRIES

பழைய காலத்தில் குக்கிராமங்களில் பல கைத்தொழில்களிருந்து வந்தன. ஊரிலுள்ள ஜனங்கள் அவைகளில் உழைத்துத் தங்கள் ஜீவனத்தைத் தேடி வந்தார்கள். இவர்கள் செய்துவந்த ஸாமான்கள் ஐரோப்பாவிற்கூட பிரசித்தி பெற்றுவந்தன. உதாரணமாக டேக்காவில் நெய்யப்பட்ட மஸ்லின்கள் ஐம்பது வருஷங்களுக்கு முந்தி ஐரோப்பியர்களால் நேர்த்தியானவையென்று கொண்டாடப்பட்டன. இப்பொழுதோ அவைகள் சீமையில் யந்திரத்தால் நெய்யப்படும் உடைகளுக்கு எதிரில் விலை மலிவாயிருப்பதால் தலைகாட்ட முடியவில்லை. இப்படித் தொழில்கள் கெடாதபடி நாம் செய்யவேண்டியதென்ன?

நம்முடைய தேசத்தில் முக்கியமாய் ஜனங்களெல்லாரும் நிலத்தை சாகுபடி செய்து அதனால் வயிறு வளர்த்துவருகிறார்கள். இவர்கள் சாகுபடியை நன்றாய்ச் செய்துவந்தால் இப்பொழுது விளைவதைவிட இரண்டு பங்கு விளையும். ஏராளமான விஸ்தீர்ணமுள்ள நிலம் தரிசாய்க்கிடப்பதை நாம் பல இடங்களிற் பார்க்கலாம். உவர் நிலமும், சதுப்பு நிலமும் எங்கே பார்த்தாலும் தரிசாய்ப் போடப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சீர்திருத்திச் செப்பனிட்டு, எருத்தழை நன்றாயடித்துப் பயிரிடும்படியான ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும். இது மாத்திரமல்ல. நன்செய் நிலங்கள்கூட நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட பலவிதத்திலும் லாபம் தரும்படி பயிர் செய்யப்படவில்லை. புதிது புதிதாய் எரு தினுசுகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒரே ஸ்தலத்தில் 2, 3 மாசூல் என்னமாய்ப் பயிரிடுகிறதென்று சாஸ்திர பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நம்மவர்கள் தெரிந்துகொண்டு நிலத்தை சாகுபடி செய்தால் நல்லது. இங்கே ஏகராவுக்கு 190 மரக்கால் விளையும் நிலம் இங்கிலாந்து முதலிய தேசங்களில் 300 மரக்கால் மாசூல் தரும்படி சாஸ்திரவிதிப்படி பயிர்செய்கிறார்கள்.

இப்படி விளையும் வஸ்துக்களை ஒழுங்காய் ஏற்றுமதி செய்வதற்குத் தகுந்த முயற்சியெடுத்துக்கொள்ளும் மனிதர்களின் தொகை மிகவும் கொஞ்சமாயிருக்கிறது. விவஸாயிகள் எல்லாரும் ஒன்றுகூடி ஏன் ஒரு பொது ஒப்பந்தக்காரனிடம் தங்கள் பண்டங்களை விற்கக்கூடாது? ஒவ்வொருவனாய்ப் போய், சில்லரைச் சில்லரையாய் விற்பதில் நம்முடைய தேசத்தவர்கள் அதிக நஷ்டமடைகிறார்கள். தவிர, சில வஸ்துக்களை நாம் உபயோகமில்லையென்று எறிந்துவிடுகிறோம். அவைகளைஐரோப்பியர்கள் மிகுந்த ச்ரத்தையுடன் சேகரித்துப் பதப்படுத்தி நம்மிடமே அதிகவிலைக்குத் திரும்பவும் விற்றுவிடுகிறார்கள். உதாரணமாக, பறைச்சேரியில் எறியப்பட்டுக்கிடக்கும் எலும்புகளைப் பொறுக்கச்சொல்லிக் காசு கொடுத்து அவைகளை வாங்கி இங்கிலீஷ்காரர்கள் தங்கள் தேசத்துக்குக் கொண்டுபோய் அங்கே அவைகளை ரஸாயனமுறைப்படி சிறந்த எருவாக மாற்றி நம்மிடம் ஒன்றுக்குப் பத்தாக விற்று முதல் செய்கிறார்கள். ஆட்டுத்தோல், மாட்டுத்தோல்கூட இந்த மாதிரிதான் விற்கப்படுகிறது. நமக்கு இந்த மாதிரி உபாயங்களெல்லாம் தெரிவதில்லை. தெரிந்தாலும் அதைப் பிரயோசனத்துக்குக் கொண்டுவருவது மிகவும் அபூர்வம். ஏன் நம் நாட்டார்,இவைகளில் சிரத்தையெடுத்துக்கொள்ளக்கூடாது?

ஆயினும் ஆங்கிலேயர்களால் ஸ்தாபிக்கப்பட்டும் கொஞ்ச காலம் வரையும் நடத்தப்பட்டும் வந்த சில கைத்தொழில்கள் நம்மவர் கைக்கு மாறிவிட்டனவென்பது ஒரு திருப்திகரமான விஷயம். சில உதாரணங்களைக் காண்போம். கல்கத்தாவில் சணல் சாகுபடியும், கான்பூரில் தோலினால் செய்யப்படும் ஸாமான்களின் தொழில் முயற்சியும், அல்யுமினியப் பாத்திரங்கள் செய்தலும் இவை முதலான தொழில்கள் பலவும், முதல் முதல் ஆங்கிலேயர்களால் ஆதரிக்கப்பட்டு பிறகு நம்மவர் கைக்கு மாறியிருக்கின்றன. இதனால் உண்டாகும் பலன்கள் என்னவென்று யோசித்துப் பார்ப்போம். முதலாவது, கையில் முதல் உள்ளவர்கள் தங்கள் பணத்தை நாணயம்தவறும்இடங்களிற்போட்டு நஷ்டமடையாமல் இத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக இவைகளிற் போட்டு லாபமடையலாம். ஒரு கைத்தொழில் நீடித்த காலம் நடந்து வந்தால்தான் அது ஆதாயத்தைக் கொடுக்கும். இதற்குக் கவர்ன்மெண்டின் பாதுகாப்பும் ஒத்தாசையும் வேண்டியிருப்பதால் முதலாளிகள் கவர்ன்மெண்டை நிலைபெறச் செய்வதில் ஊக்கமாயிருப்பார்கள். இரண்டாவது, இம்மாதிரியான தொழிற் சாலைகளில் மானேஜர்களாகவோ, சாஸ்திர நிபுணர்களாகவோ, ஓவர்ஸீயர்களாகவோ ஏஜண்டுகளாகவோ அல்லது குமாஸ்தாக்களாகவோ, அவரவர்கள் சக்திக்கும் புத்தி சாதுர்யத்துக்கும் தகுந்தபடிக்கு வேலை தேடிக்கொள்ள இடமேற்படும். மூன்றாவது, கிராமங்களில் தங்களுக்கு மனதிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, வேண்டா வெறுப்பாய் தலைமுறை தொட்டு வந்த தொழிலாயிற்றே என்று தொழில் செய்துவரும் தொழிலாளிகள் கிராமங்களை விட்டுவிட்டுத் தொழிற் சாலைகளிற் பிரவேசித்துத் தங்கள் ஜீவனோபாயத்தைத் தேடுவதற்கு வசதியாகிறது.

தற்காலத்தில் கிராமாந்தரங்களில் நடத்தப்பட்டுவரும் தொழில்கள் முக்யமாய்ப் பின் வருவனவையே. விவஸாயம், அதாவது நெல், துவரை, உளுந்து முதலிய நன்செய் புன்செய் தான்யங்களைப் பயிர்செய்தல், தச்சுவேலை, கருமார் வேலை, கொற்றுவேலை, பாய் நெய்தல், பானை வனைதல், கயிறு முறுக்கல், துணி நெய்தல் முதலியவைகளே. இவைகளைப்பற்றி இங்கே சொல்லவேண்டியதென்னவெனில், நல்ல ஆயுதங்களையும் பொருள்களையும் கொண்டு சீமைப் பொருள்களுக்குச் சளைக்காத அவ்வளவு நேர்த்தியாயும் நாணயமாகவும் நம் நாட்டுத் தொழிலாளிகளும் செய்ய முயலவேண்டுமென்பதே.

நிலத்தைச் சாகுபடிசெய்வது வெகுவாய் அநேகருடைய ஜீவனோபாயமாயிருப்பதால் அதைப்பற்றிச் சற்று இங்கே விவரித்து எழுதுவோம். ஸாமான்யமான குடியானவர்களுக்குப் பலவிதத் தீங்குகள் உண்டு. சிலர், தங்கள் எஜமான்களிடத்தில் விரை வாங்

கிப் பாடுபட்டு உண்டாகும் விளைவில் வாரமும் (அதாவது மாசூலின் ஒரு பகுதி, 4-ல் 3, கொடுப்பது வழக்கம்) தங்கள் எஜமான்களுக்குக் கொடு[illegible] விரைமுதலும வட்டியுடன் கொடுக்க வேண்டிருக்கிறது. வேறு சிலர், உழவு மாட்டுக்காகவும், மண்வெட்டி முதலிய கருவிகளுக்காகவும் தங்கள் எஜமானனிடத்தில்பணம் கடன்வாங்க வேண்டிவருகிறது. இப்படி வாங்கும் கடனுக்கு வட்டிமிகவும் கடுமையாகவிருக்கிறது. விரைமுதல், மாடு இவைகளெல்லாம் கடனாகவாங்கிக் குடியானவன் பாடுபட்டபோதிலும் காலா காலத்தில் மழையில்லாததால் விளைவு குறைந்துபோய் கடன்காரனாகிவிடுகிறான். ஒரு எளிய குடியானவன் சொந்தத்தில் மாடுவைத்துக்கொள்வது ப்ரயாஸம். ஏனென்றால், அதற்குப் போடவேண்டிய வைக்கோல், தீனிச்செலவு முதலியவற்றிற்கு அவனிடத்தில் பணம் கிடையாது. இதுமாத்திரமல்ல; அவன் சாகுபடிசெய்யும் நிலம் தனக்குச் சொந்தமானதல்ல வாகையால் அவன் அதில் எருத்தழை நன்றாயடித்துச் செப்பனிடவேண்டுமே யென்ற சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. அப்படி யவனுக்கு நிலத்தைச் சீர்திருத்த எண்ணமிருந்தாலும் அவனுடைய அறியாமையே அவ்வெண்ணத்தை நிறைவேற்றத் தடையாகவிருக்கிறது.

இவைகளையெல்லாம் சீர்திருத்த நாம் செய்யவேண்டியதென்ன? புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் விவஸாய முறைகளையும் எரு உரங்களையும் பரவச்செய்யும் பொருட்டும், நல்ல விதைகளை எப்படித் தேர்ந்தெடுத்து விதைப்பது என்று பலருக்கும் தெரிவிக்கும்பொருட்டும் விவஸாயச் சங்கங்களிற்கூடி இவைகளை ஆலோசித்தும் பிரஸங்கித்தும் அனுசரித்தும் வரவேண்டும். பலர் ஒன்றுகூடி, தங்கள் நிலங்களை ஒருமிக்கச் சேர்த்து ஒருவர்க்கொருவர் செய்யும் ஒத்தாசையைக்கொண்டு சாகுபடியை நன்றாய் ஏககாலத்திலே நடத்த முயலுதல் உத்தமம். பயிர் செய்வதற்குவேண்டிய முதற்பொருளை ஸ்வல்ப வட்டிக்குக் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் கோ ஆபரேடிவ் சங்கங்களின் உபயோகங்களையும் முற்றிலுணர்ந்து தாங்கள் லாபமடைவார்களாக.

மாணவரின் மனோலக்ஷ்யங்கள்

STUDENTS : THEIR IDEALS

(132-ம்பக்கத் தொடர்ச்சி)

அறிவுப்பயிற்சியில் யதார்த்தமுடைமை, மற்றவர்கள் நோக்கங்களையறிந்து ஒத்துக்கொள்ளச் சித்தமாயிருத்தல், தர்க்கத்தில் மரியாதையும் நேர்மையுங் காட்டல், உண்மைக் கடைப்பிடித்தல், உலகத்தில் கருதி வெளியிடப்பட்டிருப்பதில் மிகச்சிறந்தவைகளையே சேர்த்துக்கொள்ளுதல் முதலானவைகளே அக்குணங்கள். இவைகளின் உபயோகம் வெளிப்படையாய்த் தெரிந்ததே. நான் இவைகளைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஸன்மார்க்கச் சம்பந்தமாக அபிவிருத்தி யென்பது அனுதாபசீலம், மனிதரின் ஸகோதரத்வசிந்தை, பரமான சக்தியிடத்தில் (ஸர்வஜ்ஞனிடத்தில்) பக்தி இவற்றையெல்லாம் அடைந்திருத்தலே. இவ்விஷயங்கள் ஜனசார சம்பந்தமாயும், ஸன்மார்க்கபரமாயும், ஆத்மார்த்தமாயும் முக்கியமானவை யென்பதை மறுக்கமுடியாது; விஸ்தாரப் படுத்தவும் வேண்டியதில்லை. நான் இன்று உங்களுக்கு எடுத்துரைத்த அபிவிருத்தியின் பக்ஷாந்தரமிரண்டையும் அறிதலே இந்திய இளைஞர் சரியான மனோலக்ஷ்யங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு மிகவும் அனுகூலமா யிருப்பதுபற்றி அவைகளை வற்புறுத்திக் கூற விரும்பினேன்.

நமது நோக்கங்களின் வலிமையையும், நாம் அவைகளை இன்ன வழியிற் செலுத்த வேண்டுமென்பதையும் தீர்மானித்திருக்கிற சில பெரிய விஷயங்களையும் கருத்துக்களையும் உங்களிடம் சொல்லக்கேட்டுக்கொள்ளுகிறேன். ஆங்கிலேய அரசாட்சிக்கு நாம் எவ்வளவு கடன்பட்டிருக்கிறோமென்று நன்கு அறிபவர் நம்மில் சிறுபான்மையோர்தான். யுத்தங்களாலும், அரசின்மையாலும், நெறிதவறின அரசியலினாலும் கேடடைந்த தேசத்திற்கு ஆங்கிலேயர் சமாதானமென்ற சுவர்க்கத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சகலரும் உள்ளே செல்லுமாறு

அறிவுவாயில்களைத் திறந்துபோட்டிருக்கிறார்கள். மேனாட்டு நாகரீகத்தைக் காத்து வருபவராகவும் அதற்குப் பிரதிகாரர்களாகவும அவர்கள் யூகித்துணர்தல், சுவாதீன ஆராய்ச்சி, இத்தன்மைகளை ஆதரித்து வருகிறார்கள். ஆங்கிலேய நாகரீகம், அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகள் இவைகளைப் பற்றி வர்த்தமான பத்திரிகைகளிலும் உபந்யாஸங்களிலும் நாம் வெறுப்படையுமாறு குற்றங்கூறப்பட்டிருக்கிறது. இவைகளை விவகரித்து உங்களைச் சலிக்கச்செய்யேன். ஆயினும் முன் சொல்லப்பட்ட நன்மைகளுக்காக இராஜாங்கத்தாரிடம் நன்றி பாராட்ட வேண்டும். அடிமை நிவாரணம், யூகம், ஆண்மை, போராடாமை, இவை கொண்டு உலகிலெல்லாம் உத்தமமான அரசியலை அடைந்துள்ள ஜாதியாரிடமிருந்தே ஜனங்க ஸமத்வத்தையும் இராஜாங்கச் சுயாதீனத்தையும் (உரிமை) அறிந்ததற்குக் கடன்பாடுடையோம் என்ற சங்கதிகளைத் தெரிவிக்காமலிருக்கக்கூடாது. இங்கிலாந்திடம் இந்தியா ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்றும் ஈசுவர கடாக்ஷத்தின் பேறுகளைச் செவ்விதாய் அடைய வேண்டின் சோம்பேறித்தனக் கொள்கையையும், போக்கின்படி அமைதலான கொள்கையையும் விட்டுவிட்டு, சென்ற சிறிதுகாலமாக இருந்ததைப் பார்க்கிலும் அதிக ஊக்கம், உழைப்பு இவைகளுடன் ஜீவித்து வரவேண்டுமென்பதை நண்பர்காள்! நீங்கள் அறிந்து வருகிறீர்களா?

"குணதிசை குணதிசை குடதிசை குடதிசை
இணங்கியிவ்விரண்டும் பொருந்தாதென்றுமே"

என்று கலகப்பேய்க்குணமான கொடுங்கொள்கையுள்ள கவியொருவர் எழுதியிருந்தபோதிலும் இக்காலத்து அறிவுடையோர் இதற்கு மாறானதே யதார்த்தமென்று உணர்ந்திருக்கின்றார்கள். ஆனால் நமது முறைகளும், கொள்கைகளும், மனோபாவங்களும் இங்கிலீஷ் முறைக்கொத்தனவாய்ச் செய்தலானது அதிகரித்துவருகிறது. இது சந்தேகமும் அச்சமும் உண்டாக்குகிறது. இதனால் தீமைமுதலியவை வாராதிருக்கக்கடவதென்று வேண்டுகிறேன். ஒரு ஜாதியானது மற்றொன்றைப்பார்த்து அற்பமாய் அதைப்போல் நடித்துச், சரித்திரத்தில் மேன்மை யடைந்ததாகத் தெரியவில்லை. நமது நாகரீகத்தின் முக்கிய அம்சங்களைப் பரிபாலிப்பதுடன் அவைகளுடன் இசைந்து ஜாதிய அபிவிருத்திக்குத் தகுந்த துணைக்கருவிகளாயிருப்பவைகளையே மேனாட்டாரிடமிருந்து கிரகித்துக்கொள்ளவேண்டுமென்பதுதான் எனது விருப்பம். பின்னால் சில லக்ஷ்யங்களை உங்களுக்கு எடுத்துரைக்கப் போகிறேன். ஆதலால் மேற்சொன்னவைகளை வாக்சாதுர்யமாக மாத்திரம் மதிக்காமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். நமது மனோபாவம் ஆங்கிலேயருடையதில் அதிகாரம் வகிக்கும்படிப் பண்ணுவதும் நமது கடமையே. இம்முறையானது அமைதியாயும், குறித்த நோக்கமின்றியும் நடந்துவருகிறது. ஆனால் இவ்வேலை நோக்கத்துடனும், யூகத்துடனும் நடைபெறுங்கால் இதன் முடிவானது நாம் இப்பொழுது அதிக ஆவலுடன் கருதிய எண்ணங்களைப் பார்க்கிலும் மேலானதாகயிருக்குமென்று உறுதியாய்ச் சொல்லுவேன். எதிர்கால இந்திய நாகரீகத்திற்கு மேனாட்டு நாகரீகம் புரிந்திருக்கும் ஒத்தாசைகளைப் பற்றி டாக்டர் குமாரசுவாமி அவர்கள் பொருத்தமும் இனிமையுங்கொண்ட சொற்களாற் பின்வருமாறு கூறுகிறார்: "ஸ்தூலப்பொருளாளுகைக்குரிய ஊக்கம், ஆராய்ச்சி, வர்த்தமான யதார்த்தமுமுடைய கருத்து, இந்தியாவிற்குப் பிராகிருதமாயுள்ள உணர்வுகளை நவீன சாஸ்திர சம்பிரதாயப்படித் திரும்ப விவரித்தல்—இவைகளை மேனாட்டாரிடமிருந்து இந்தியா கற்றுக்கொள்ளும் விஷயங்கள்." மேலாம் பரமான அந்தர்முக நாட்டம், பரமான பரிபூர்ண ஆத்மார்த்த ஜீவியத்தின் தேறுதல்களும், பேரானந்தமும் தன்னுள்ளேயமைதலும் சமாதானமும் பொருந்திய ஜனங்க வாழ்வும் அரசியலுமாகியவைகளுக்காக மேனாட்டார் கீழ்நாட்டாரிடம் கடன்பட்டிருக்க வேண்டும். முன்சொல்லப்பட்டவரே அர்த்த பூர்த்திப் பதங்களுடன் பின்வருமாறு உரைக்கிறார்: "கீழ்த்திசைபோரின் நற்செய்தியாது? பொதுப்படையாக அது மேனாட்டார் பத்தொன்பது நூற்றாண்டுகளாக

அறியாமலிருந்ததுவே. தேவராஜ்யம் உன்னுள்ளேயே இருக்கிறது. அந்தர் முகமாய்ப் பார்—நீதான் புத்தர்: தத்வமஸி. மேற்றிசை அறிவிப்பது பேதமும், பிரிவினையும் பிரத்தியேக ஜீவனுமாயிருக்கையில், கீழ்த்திசையின் சுவிசேஷமானது ஸர்வ ஜீவைக்யத்வமும், ஒற்றுமையும், ஸர்வ வியாபக ஆத்மத்வமுமாயிருக்கின்றது." இந்த இரண்டு செய்திகளையும் தெளிவாய் முன்னுணர்ந்து அவைகளின்படி நடந்துவருதலே உண்மையான அபிவிருத்தியெனப்படும்.

முன் சொன்ன பிரகாரம் உண்மையான அர்த்தத்தில் அபிவிருத்தி யென்பதைக் கொள்ளுங்கால் விரும்பத்தகாதபடி அவ்வளவுக்கு நாம் அபிவிருத்தியின்றி இருக்கிறோமென்பதைக் காண அதிகமாக யூகிக்க வேண்டியதில்லை. இதன் காரணமாவது, மேனாட்டு நாகரீகத்தின் உயர்ந்தபடிப்பினைகளை நாம் நன்றாய்க் கற்கவில்லை. அந்நாட்டின் சிறந்த மனோ லக்ஷ்யாம்சங்களை நமது நாகரீகத்தில் அமைத்துக்கொள்ளவில்லை. உயர் நாட்டத்திலும் காரிய சித்தியிலுமுள்ள சரியான லக்ஷ்யத்திற்காக இன்னும் தடவிக்கொண்டே யிருக்கிறோம் என்பவைகளே. உபாத்தியாயர்களும் பெரியோர்களும் தாங்களே தங்கள் ஜீவியத்தில் அபிவிருத்தியைக் காட்டவேண்டும். அதை இந்நாடு முழுவதும் பரவச் செய்யவும் வேண்டும். இயற்கையான வழியிலும், படிப்படியாய் உறுதியான நிலைமைகள் மூலமாயும் உயர்ந்த அபிவிருத்தியை (பயிற்சி) மாணவருக்குப் போதிப்பதற்குப் பதிலாக வித்தியா முறைகளையும், நோக்கங்களையும் பலவிதமாக்கிச் சலிப்புண்டாக்குமாறு செய்வதற்கே இக்காலத்தில் பேராவல்உண்டாயிருக்கிறது. நமது போதனாமுறையின் குறைகளை விஸ்தரித்துரைக்க இது சமயமில்லை. என்றாலும் சுருக்கமாக இதைச் சொல்லாமலிருக்க முடியாது. சில வருஷங்களுக்கு முன்பு நடைபெற்று வந்த வித்யாமுறையின் குறைபாடுகள் வெளிப்படையாயும் அனேகமாயுமிருந்தன. பரீக்ஷையில்லாமலும், செலவு அதிகமாயும், சிலபேருக்குமாத்திரம் சாத்தியமாயுமிருந்தது. ஒரே பக்கச் சார்பாயும், கலை ஞானம், சாஸ்திரம், வித்தை-இவை சேர்ந்த முறையா யில்லாமலு மிருந்தது. ஒவ்வொருவருக்கு அமைந்ததாயுமில்லை, தனித்தனியான திறமையை விருத்திபண்ண முயற்சியுங்கிடையாது. ஆகையாலே கடினமாயுமிருந்தது. கேவலம் ஆதாயத்திற்குமாத்திரம் மதிக்கப்பட்டுவந்தது. பொருளும் அதிகாரமும் அடைதற்குரிய சாதனமாகமாத்திரம் கருதப்பட்டுவந்தது. ஒவ்வொருவனுடைய தன்மரியாதையையாவது ஜாதீய தற்கண்ணியத்தையாவது உண்டுபண்ணச் சக்தியற்றதாயுமிருந்தது. மதம், ஸன்மார்க்கம் இவைகளுடன் யாதொரு சம்பந்தமுமில்லை. ரஸஞானம் கொஞ்சமேனுங்கிடையாது. கீழ் வகுப்பு முதற்கொண்டே ஆங்கிலேய பாஷை வாயிலாகவே படிப்பு கற்பிக்கப்பட்டு வந்தது. இக்குறைபாடே நம்மிடம் நூதனமாய்க் கற்பிக்குந் திறமையின்மை, படித்தவர்க்கும் பொதுஜனங்களுக்குமுள்ள அசாத்தியமான வேறுபாடு, பதங்களைக் கடந்து அவை அறிவிக்கும் விஷயத்தைத் தெரியவியலாமை முதலியவைகளுக்குக் காரணபூதமாயிருந்து வருகிறது. கீழ் வகுப்புகளில் 'கிண்டர் கார்ட்டன்' முறை அனுசரிக்கப்படவில்லை, கல்வி விஷயமாக விட்டில் நடத்தப்படவேண்டிய வேலையின் பிரயோஜனத்தை முற்றிலும் மறந்துவிட்டது. தேகப்பயிற்சியைப்போதுமான படி கவனிக்கவில்லை. கடைசியில்,ஆனால் முக்கியமானது, ஒரு தலைமுறையிலுள்ள ஜனங்களை நடையுடைபாவனைகளில் மதானுசாரமின்றியும், ஆங்கிலேய வழியிலும் திருப்பி மிகவும் இழிவான பாசாங்குகாட்டுதலிலும் நடத்திவந்ததற்குப் பொறுப்பாளியும் அதுவே. நூதன வித்தியாமுறைச் சீர்திருத்தங்களின் நன்மையைப் பற்றி ஏதேனுங் கூற இன்னும் காலம் போகவேண்டும். ஆனால் வெளிப்படையாயுள்ள கெடுதிகளில் சிலவற்றை மாத்திரம் போக்க முயன்றிருக்கிறார்களென்பது எல்லாருக்கும் தெரிந்ததே. மிகப்பிரமாதமான குறைகளை நீக்காமல் அப்படி அப்படியே விட்டதுமல்லாமல் அனேகமான பஹிரங்க பரீக்ஷைகளென்னும் பிசாசத்தினின்றும கல்வியைக் கொஞ்சம் விடுதலைசெய்தலான தீர்க்க நன்மைக்குப்பதிலாக உபாத்தியாயர்களுக்கும், வித்தியா விசாரணைத் தலைவர்க

ளுக்கும் முன்னிலும் அதிக அதிகாரங்கொடுத்தல், கல்வியில் ஏராளமான பணச்செலவு நானா விதமாய்ப் பின்னலும் போலியுமாயிருத்தல் முதலிய குறைபாடுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் நமது வித்தியா முறைகளிலும் நோககங்களிலும் தொழிற்சாலை முறையே அதிகமாய் நடந்துவருகிறது. கலாசாலையிலேயே மாணவர் வசிக்கும் ஏற்பாட்டின் நன்மையானது போதுமானபடி உணரப்படவேயில்லை; நமது பெரிய கலாசாலைகளும் பட்டணத்திற்கு மத்தியிலிருக்கின்றன, ஒதுக்கமும் ஏகாந்தமுங்கிடையாது. உபாத்தியாயரோ சரசமாய்அலக்ஷியஞ்செய்யப்படுகிறார். தன் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்கிறதில்லை, மற்றவரிடமிருந்தும் பூஜ்யதை பெறுகிறாரில்லை. இத்தகைய நிலைமையில் இப்படிப்பட்டவர்களால் கற்பிக்கப்பட்டுவந்தவன் ஏதோ அங்குமிங்கும் சில விஷயங்களைத் தன்புத்தியிலமைத்துக்கொண்டுஇங்கிலீஷ்பாஷையைக்கற்று அதிகார பதவிகளையும் அடைகிறான். வயதுவந்ததும்

"வானோரும் வருத்தமடைய வம்பலத்தில்
சேட்டைகளவனும்செய்கின் றனன்றோ."

ஹுபின்ஸாங் என்பவர் நளந்தா ஸர்வகலாசாலையை வர்ணித்ததைச் சற்று கேளுங்கள்: "நீலத்தாமரை மலர்கள் விரிய எப்பக்கமும் ஸ்படிகம்போன்ற தடாகங்கள் விளங்கின. இங்குமங்கும் அழகிய கனக விருக்ஷங்கள் சிவந்தபுஷ்பங்களுடன் கவிந்தன. அவைகளுக்கு மத்தியில் இருண்ட மாந்தோப்புகள் நிழல்கொடுத்தன. பிராகாரங்களில் துறவிகளுடைய கிருஹங்கள் மேடை நான்குவைத்ததாய் உயர்ந்திருந்தன. மண்டபங்களின் ஸ்தம்பங்கள் ஸர்ப்பசித்திரங்களாலும்,உத்திரங்கள்,பஞ்சவர்ணஜோதியாயும் அலங்கரிக்கப்பட்டு நின்றன. சட்டங்கள் சிறப்புடன் செதுக்கப்பட்டும், தூண்களில் சிவப்பு வர்ணத்தாலான குதிரைகள் விமரிசையாய்ச் செய்யப்பட்டும் தூண் வரிசைகள் சித்திரவேலைகளால் வெட்டப்பட்டுமிருந்தன. கோபுரங்களும் கட்டடங்களும் தலைமுறை தலைமுறையாக ஆண்டுவந்த ஆறு அரசரால் நிருமிக்கப்பட்டன. அங்கே கல்விச்சாலைகளும் தடாகங்களும், கோவில்களும், நந்தவனங்களும், (ஈசுவரனை) வழிபடப் பரிசுத்த ஸ்தலங்களும் அமைந்திருந்தன. கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மேடைக் கட்டடங்களில் உபாத்தியாயர்களும், பௌத்த சன்னியாசிகளும் வசித்துவந்தார்கள். கோபுரத்தின் ஜன்னல்வழியாகக் கங்கா நதியைப் பார்க்கலாம். இந்த ஸர்வகலாசாலையில் பதினாயிரம் மாணவர்களும் ஆயிரத்து ஐந்நூற்றுப் பத்துப் போதகாசிரியர்களும் இருந்தார்கள். இவர்களுக்குக் கல்வியும், போஜனமும், இடமும், ஔஷதமும் கொடுக்கப்பட்டுவந்தன. இவைகளும் இலவசமாகவே. இம்மகத்தான காரியத்தை நடத்திவரப் பொருளுதவி ஏராளமாயிருந்தது. கலைகளும் மதமும், தத்வஞானமும் தர்க்க சாஸ்திரமும், இலக்கணமும் இலக்கியமும், வானசாஸ்திரமும் வைத்திய சாஸ்திரமும், மற்றுமுள்ள அனேக சாஸ்திரங்களும் இச்சர்வகலா சாலையில் போதிக்கப்பட்டுவந்தன." இன்னும் பின்வருமாறு சொல்லப்படுகிறது. "வித்தியா முறையெல்லாம் இக்காலத்து இந்தியாவில் கருதப்படாத விசாலமும் பொலிவும் அமையுமாறு ஏற்படுத்தப்பட்டுவந்தன. கணிதம், வானசாஸ்திரம், வைத்தியம், மற்றுமுள்ள சாஸ்திரங்களுமல்லாமல் சித்திரம், கல்வேலை, கைத்தொழில்கள் முதலியவைகளுக்குரிய சாலைகளுமிருந்தன. நளந்தாவில் அனேக பண்டிதர்கள் மதமும் தத்வ சாஸ்திரமும் போதித்துவந்தார்கள். ஆசியாவின் எல்லாப்பக்கங்களினின்றும் மாணவர்கள் அவ்விடம் சென்றார்கள். அங்கிருந்து பிரசாரகர்கள் தூரதேசங்களான சீனா, கோரியா, ஜப்பான் முதலிய தேசங்களுக்கு இந்தியாவின் மதம், தத்வஞானம், சாஸ்திரம், கலை இவற்றைக்கொண்டு வெளியேறினார்கள்." தற்கால வித்தியாமுறைகளுக்கும் நோக்கங்களுக்கும் பொறுப்பாயுள்ளவர்கள் தற்புகழ்ச்சியாய்ப் பேசுவதை நீங்கள் கேட்கலாம். இதற்குமுன் சித்திக்கப்படாத பூர்ண நிலைமைகளை நாம் அடைந்துவிடவில்லை. நமது காரியஜயத்தின் மேன்மைக்காக ஆனந்திக்குமுன் நமது புராதன ஸர்வகலாசாலையின் முறைகளிலிருந்தும் நோக்கங்களிலிருந்தும் அனேக விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியதாயிருக்

கிறது. உத்கிர்ஷ்டமான பயிற்சியை நடத்தி வருவதற்குரிய சாதனங்களை நமது வித்யா முறையில் ஒழுங்குசெய்து ஏற்பாடு பண்ண வேண்டியதாயிருக்கிறது. இக்காரியத்தை நிறைவேற்றுவது பின் தலைமுறையாரின் கடமையே. இந்திய இளைஞருக்குரிய லக்ஷ்யங்களில் நான் இதையே அதிமுக்கியமானதென்று நினைக்கிறதனால் இது சம்பந்தமான விஷயங்களிற் சிலவற்றைப் பின்னால் சொல்லுகிறேன்.

இவ்விதமாக அபிவிருத்தி (பயிற்சி) யின்மை என்ற குறைபாட்டைப்பற்றிச் சொல்லியாய்விட்டது. பயபக்தி வணக்கவொடுக்கமின்மை என்றதும் மதானுஸாரமின்மை என்றதுமான குறையைப்பற்றி இப்பொழுது கவனிப்போம். ஆங்கில கவிகளில் மிகத்தெட்பமும், ஆத்மார்த்தமும், மேன்மையும் வாய்ந்த கவியொருவர் "மெச்சிமதித்தல், நம்பிக்கை, அன்பு இவைகளினாலேயே வாழ்ந்துவருகிறோ" மென்று கூறியிருக்கிறார். வியப்படையுங் குணமும், பயபக்தி வணக்கமும் தைவிகமாய் மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. பசுத்தறிவை விட இழிந்த மனிதனுக்கும் ஏனைய தாழ்ந்த சிருஷ்டிப் பொருள்களுக்குமுள்ள வித்தியாசத்தைக் காண்பிக்கிறது. மனமொழி மெய்களில் வணக்க வொடுக்கம் பயபக்தியுபசாரமுடைமையென்ற இக்குணத்தை அனேகமா யழித்துவிடவே புதிய கல்வி முறையானது சார்ந்திருக்கிறது. மூப்பும் அனுபவமும், வித்தையும் வைதிகமும் பொருந்தியோரிடத்தும் பெண்பாலரிடத்தும் வணக்க வொடுக்க மரியாதை வாய்ந்தும் ஸகல ஜீவனையும் பரிபாலித்துவரும் சித்தினிடம் வரையறையின்றி ஆத்ம ஸமர்ப்பணம் செய்தும் வருதலே முற்காலத்து ஜனங்க வாழ்க்கையைச் சிறப்பித்துவந்தன. இவைகள் இப்போது நம்மிடமிருந்து நீங்கிக் கொண்டே வருகின்றன. இக்காலத்துச் சிறுவர் ஜீவியத்தில் மதசம்பந்தமான வழியே கிடையாது. இதன் முடிவு என்னவென்றால், அனேகர் தங்களது நல்ல நாட்களில் அஸந்தோஷமான அறியாவாதிகளாய் வசித்துவருகிறார்கள். சிலரிடம் மேலான சக்திப்பொருளை வழிபடுந்தன்மை மறுபடியும் கிளம்புகிறது. ஆனால் இவர் கொள்கையிலும்மதானுசாரத்திலும்சுதேச வழக்கமில்லாத விதங்களையும் வழிகளையும் பின்பற்றுகிறார்கள். இவ்விருதிறத்தாரும் மற்ற இனத்தாருடன் சேராதவர்களாய் வசித்து வருகிறார்கள். தாங்கள் தங்களுக்கு உபயோகமற்றிருப்பது போலவே இந்திய நாட்டிற்கும் பிரயோஜனமில்லாதவர்களா யிருக்கிறார்கள். சிறுவரடையும் கல்வியானது மத சம்பந்தமில்லா திருத்தலே இதன் முக்கியகாரணம். இராஜாங்கக் கலாசாலைகளில் மதச்சார்பில்லாத கொள்கையை நாம் நன்கு அறியலாம். அங்குங்கூட இந்நாட்டிலுண்டான மூன்று பெரிய மதங்களின் சிறந்த உண்மைகளை அந்தந்த மதத்தைத் தழுவியுள்ள சிறுவர்களுக்குப் போதிக்காததின் காரணம் எனக்குத்தெரியவில்லை. நூற்றாண்டுகளாக அறிவு விஷயமாகவும் தர்மநெறி சம்பந்தமாகவும் பட்ட கஷ்டத்தின் பலனாக அடையப்பட்ட ஸன்மார்க்கம், மதம் இவற்றின் உத்தம லக்ஷணங்களை மறந்து அவைகளற்றவழியில் பிள்ளைகளைப் பயிற்சிக்கும் பரிதாபமான நிலையை மற்றப் பள்ளிக்கூடங்களில் எவ்விதத்திலும் நீக்கிவிடக்கூடும். அறிவுச்சுடரானது ஞானக் கண்களுக்கு முன் உதயமாகி வந்தடையும்படி ஜாடை செய்தபோதிலும் அசையாமலிருப்பவர்கள் நமது மதம் வெவ்வேறு கொள்கைகளை யுடைத்தாயிருக்கையில் அதன் முக்கிய தத்வங்களை எவ்விதம் சொல்லப்போகிறீர்களென்று கேட்கிறார்கள். இவைகளைக் கண்டுபிடித்து இசைந்தவண்ணம் அழகாய்ச் சொல்வது இலகுவென்றே பதில் கூறுகிறேன். பிரியத்தோடும், பக்தியோடும், ஊக்கத்தோடும், நமது கடமையை நிறைவேற்றுவதைவிட அதைச் செய்யாமலிருக்க வேண்டி ஆக்ஷேபனை விதர்க்கங்களை யுண்டுபண்ணவே மிகச் சித்தமாயிருக்கிறோம். இதற்குக் காரணம், பரிதாபமான தாமஸ குணம் பொருந்துமாறு அவ்வளவுக்கு மனம் போனபோக்கின்படி யமைதலே. இப்பொழுது நடைபெற்றுவரும் பயபக்தியின்மைக்கு அனேகமாய் நம் உபாத்தியாயர்களை பொறுப்பாளிகளென்று எண்ணு

கிறேன். முற்காலத்தவைகளை மதித்து வரும்படி நம்மை அவர்கள் நடத்திவரவில்லை. பிரதானமாயுள்ள மதக் கோட்பாடுகளை நமக்குப் போதிக்கவில்லை. சிரத்தையோடு மதித்தல், மெச்சுதல் முதலிய சுபாவமான குணங்களை நம்முள் கிளப்பவில்லை. இப்படியிருந்துகொண்டே தங்களுடைய மாணவர்கள் வித்தியா பருவத்திலும்பிற்காலத்திலும் செய்யும் மனம்போன போக்கான தடுமாற்றங்களைக் கண்டு பிரமை யடைகிறார்கள். இந்த விஷயத்தில் நாமெல்லோரும் நமது கடமையைத் தவறவிட்டுவிட்டோம். இதையே (ஏனெனில்) நமது ஜாதியின் எதிர்கால முடிவுகள் நம் சிறுவரையே சார்ந்திருக்கின்றன. இவர்களிடம் தெளிவாய்த் தங்கியிருக்கும் நூதனமாயுண்டான பக்தி யுபசார ஹீன குணத்தைப் போக்க வெகுவாய் முயலவேண்டும்.

மாணவர்கள் இராஜாங்க விஷயத்தில் தலையிடுவது தப்பாயும், கெடுதி பயக்கக்கூடியதாயுமிருக்கிற தென்பதைப்பற்றி நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியது அவசியமில்லை. பக்குவமடைந்தோரே இராஜ தந்திரத்திற்குரியவர். மேலும், இராஜ்ய விஷயமாகச் சிரத்தை யெடுத்தல் மாணவரின் மனத்தை நியாயமான தங்களுடைய காரியங்களினின்றும் திருப்பிவிடுமென்பது திண்ணம். இன்னும், இராஜாங்க விஷயமானது ஒவ்வொரு தேசத்திலும் முக்கியமான படிப்பாயிருப்பினும் நமது நாட்டில் அத்தியாவசியகமாய்ச் செய்யப்படவேண்டியது கல்வி, ஜனாசாரம், இலக்கியம், கைத்தொழில்—இவை சம்பந்தமான காரியமே; நம்மில் பெரியவர்களும் அளவிற்கு மிஞ்சி இராஜ்ய முறையில் பிரவேசிக்கிறார்களென்றும் கருதுகிறேன். இதுபற்றியே, மாணவர்கள் இராஜாங்க முறையில் தலையிட்டு, பயிற்சியினாலுண்டாகும் நன்மைகளை யடைதற்கும் வாழ்க்கையில் தங்கள் கடமைக்காகச் சித்தப் படுத்தற்குமுரிய காரியத்தைக் கவனியாமலிருப்பது கேவலமாயும், வெறுக்கத்தக்கதாயும், கேடு விளைவிப்பதாயுமிருக்கிறதென்பது தெள்ளிதிற் புலப்படும்.

இங்ஙனம் மனோலக்ஷ்யங்களின் இன்றியமையாமையையும், பயிற்சி (அபிவிருத்தி)யின் மேன்மையையும், தற்கால இந்திய மாணவ ஜீவியத்தின் குறைபாடுகளையும், அவைகளை நீக்கும் வழிகளையும் பற்றிச் சொன்னேன். இனி எனது அபிப்பிராயத்தில்இந்தியஇளைஞர் ஊக்கத்தோடு சிரத்தையெடுக்கவேண்டியதாயும், நிறைவேற்றப்பட்டால் முன்னைக்காலத்திலும் அடையப்படாதமகிமையுள்ள மகோன்னத பதவிக்கு நமதுபரதகண்டத்தை உயர்த்தக்கூடியதாயுமுள்ள சில மனோலக்ஷ்யங்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவில் கல்விகற்ற இக்காலத்தவர் ஜீவனாம்ச காலக்ஷேபங்களில் மாத்திரம் மூழ்கி, வாழ்வில் பிறிதொரு நோக்குமின்றித் தங்களது பிற்காலப் படிப்பையும் (Post graduate study) விட்டுவிடுகிறார்களென்பதே அவர்களிடமுள்ள பெரிய குறைபாடு. அன்னிய பாஷையைக் கற்றல் மிகச்சிரமமான காரியமென்பது எனக்குத் தெரியும். வித்தியாகாலமெல்லாம் முடிந்தபின் ஒருவன் குற்றத்தண்டனைக்குரிய ஊழியத்தவணை தீர்ந்த பிறகு விடுதலை செய்யப்பட்டதுபோல் நினைக்கிறான். ஆனால் நமது ஜாதியின் சத்தானது மிகவும் க்ஷீணித்திருக்கிறது. இதனால் அது செய்யவேண்டிய காரியங்களை நிறைவேற்ற இயலாமலிருக்கிறது. நாமும் நமது வித்தியாகாலம் முடிந்தபின் நமது மனோத்ஸாகத்தையும் மனோதிடத்தையும் காப்பாற்றிக்கொள்ள முடியாமலிருக்கிறோம். வாழ்க்கையில் (உண்டு திரிவதைத் தவிர) வேறொரு நோக்கத்தை வைத்துக்கொண்டும், பிற்காலப் படிப்பின் மூலமாய் மனோமுயற்சியை அதிகமாய் விருத்திசெய்வதுமே ஜீவியதாதுவாயிருக்கின்றன. சோம்புதலும் கொழுப்பான போஷணையுங் கொண்டு மேல்நோக்கமின்றி மௌட்டியத்தோடுகூடிய வாழ்க்கையால் நேரும் கெடுதிகளினின்றும் இவைகளே நம்மைக் காப்பாற்றக்கூடியவை. நம்மில் ஒவ்வொருவரும் அவரவர் மனதுக்கிசைந்த விஷயத்தை யேற்றுக்கொண்டு நமது தாய்நாட்டின் நன்மைக்காக அதைச் செவ்வனே நிறைவேற்றிவரட்டும். பரவசப்படுத்தும் கவிகற்பனையாலாவது மனோரம்மியமான சங்கீதவித்தையாலாவது நம் சகோதரர்களைக் குதூகலப்

படுத்துவ்து நம்மில் எல்லாருக்கும் முடியாமலிருக்கலாம். நவநாகரீகமான சாஸ்திர ஆராய்ச்சியின் இரகசியங்களைக் கண்டுபிடித்து இன்பமூட்ட ஒவ்வொருவருக்கும் இயலாதிருக்கலாம்; தெய்வாம்சமான சௌந்தர்யத்தையும் ஆனந்தத்தையும் ஸாக்ஷாத்கரித்து அதனால் வரும் சொல்லொணாப்பெரும் பேறடையக் கூடாதிருக்கலாம். ஆனால் சிறியதாயினும் உபகாரமாயுள்ள காரியத்தையேற்றுக்கொண்டு நம்மாலியன்றவளவு பூர்ண மனதுடன் தாய் பூமிக்கு உழைத்து வருதல் நிச்சயமாய் நம்மால் சாத்தியமானதே. இதைப்போன்ற உயர் நாட்டங்களுடைய சமயங்களும் மானிடவர்க்கத்தின் சுகம்பெருகவும், ஸர்வேச்வரனை மாட்சிமைப்படுத்தற்காகவுமான கைங்கர்யங்கள் இருந்தாலொழிய வாழ்க்கையானது வாழ்க்கையெனப்படாது. கேவலம் சுயநல நோக்கங்களிலே நாம் அதிகமாய் மூழ்கியிருக்கிறோம்; அதனால் ஈச்வரனுக்கும், மனுஷ்யனுக்கும் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி நாமே ஞாபகப்படுத்தியும், அடிக்கடி பிறரால் உணர்த்தப்பட்டும் வந்தாலொழிய நாம் அவைகளை முற்றிலும் மறக்கும் இயல்புடையவராயிருக்கிறோம். ஆகையினால்தான் இது உங்களுக்குத் தெரிந்திருந்தபோதிலும் கூறலுற்றேன்.

இக்கால வித்தியா முறையானது, ஜாதியாரின் அபூர்வகுணத்தை வெளிக்கொண்டு வரவில்லையென்பது அதன்மேற் சாட்டப்பட்ட பெருங்குறைபாடுகளிலொன்று என்பது உங்களுக்குத் தெரிந்ததே. கல்வி முறையிலுள்ள குறைகளைப்பற்றி முன்னமே கொஞ்சம் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மனோபாவத் துறையிலும் நம்முன்னோர்கள் மகத்தான காரியங்களைச் சாதித்த இந்நாட்டிலேயே இப்பரிதாபமான நிலை வருவதற்குக் காரணம் மற்றும் சில உண்டு. ஜீவியத்தில் முன்புள்ள ஒருப்பாடும், காரியாதிகளின் ஒத்த சம்பந்தமும் வரவர நிரம்ப க்ஷீணமடைகிறதென்பது நமது ஜனாங்கத்தைச் சிறிது ஆராய்ந்து வெளிப்படையாய் நோக்கினாலும் தெரியாமற்போகாது. மனோ சுயாதீன காலாரம்பங்களிலெல்லாம் சிற்சில முக்கிய நிலைகள் ஸ்தாமேலிட்டுக்கொண்டிருந்தன. கலைஞானமும் கிரந்தங்களும் புதிதாய் விருத்தியடைந்த காலங்களில் ஜாதியார் மகோன்னத நிலைமைக்கு வருவாரென்பதில் சிரத்தையாயும் திடமாயும் நம்பிக்கையுறுதலும், சுயாதீனமான விசாரணையும், மேல் நோக்கிய மனோபாவமும் பிரகிருதமாயிருந்தன. இந்தியாவில் ஆங்கில அரசாட்சி நிலை நிறுத்தப்படும் வரை நமது ஜனாங்க ஜீவியமானது குழப்பமடைந்து சமநிலையற்றிருந்தது. பிராசீனமான ஜீவிய ஒருமைப்பாடு பலவிதமாய் நிர்ப்பந்தமடைந்தது. கலையும் கிரந்தங்களும் சிறப்பாவது ஜனாபிமானமாவது அடைந்ததில்லை. இந்தியாவில் ஆங்கில அரசியலும் ஆதிபத்தியமும் மேற்கொண்டபிறகு இரண்டு நாகரீகக்கலப்பின் காட்சி புலனாயிருந்தது. ஸ்தூலப்பிரபஞ்சத்தினின்று உபமானமொன்று கூறுவோம். பெரிய நீரோட்டங்களிரண்டு கலக்குங்கால் பல சுழிகளும் பின்னோக்கிய இழுப்பும் உண்டாவதைக் காணலாம். அதன் பிறகு இரண்டும் சேர்ந்து முன்னிலும் அதிகரித்த வேகத்தோடும் கம்பீரத்தோடும் பாய்கின்றன. இவ்விதமாக மனோ முயற்சி தேகமுயற்சியான இவ்விரண்டின் துறைகளொவ்வொன்றிலும் புதியதும் முரண்படுவதுமான கட்டுரைகளே நிறைந்துள்ளதையும் ஜனசமூக நிலையானது மிகுந்த திகைப்பையுண்டுபண்ணுகிறதென்பதையும் காணலாகும். நாம் எந்த மார்க்கத்தில் செல்கிறோமென்றும் நமது பிரவர்த்தியை எப்படிச் செலுத்திவருகிறோமென்றும் போதுமானபடி உணரவல்லவர்களாயிருப்பதற்கு இச்சமயம் நம்முடைய நிலைமையைத் தெரிந்து நியாயமாய்ப் புரியவேண்டிய கடமைகளையுணர்ந்துகொள்வதே செய்கடன். என் கருத்தின்படி முக்கியமாயும் சாத்தியமாயுமுள்ள தொழில் முறைகளைப்பற்றி இனி சொல்லுகிறேன். நான் எடுத்துரைக்கப்போகிற லக்ஷியங்களை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்றும் நமது காலத்திலேயே அவைகள் சித்திக்கப்பட்டு பலன்பெறும் என்றும் நம்புகிறேன்.

(இந்த வியாஸம் அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

சரித்திரம் படிப்பதன் பயன்

BENEFITS OF HISTORICAL STUDY

(131-ம் பக்கத் தொடர்ச்சி)

இது நிற்க, புஸ்தகம் படியாமலே நாம் பல விஷயங்களையுமுணரலாம். எஜிப்த், அஸ்ஸிரியா முதலிய பெரிய ராஜ்யங்கள் 3,000 ஆண்டுகட்கு முன் எவ்வித உன்னத நிலையிலிருந்தனவென்பதைக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சித்திரப்படங்கள், கற்சிலைகள், மாதிரிக் கட்டடங்கள், பழைய கருவிகள் முதலியன மிகவுந்தெளிவாக விளக்குகின்றன. இன்னும் பழைய ஆலயங்கள், குகைகள், கோட்டைக்கொத்தளங்கள் முதலியவற்றை நுணுகி ஆராய்ந்தாலும் முற்காலத்து நாகரீகத்தின் பெருமையும், அக்காலத்துள்ளவர்களின் சீரும் சிறப்பும் புத்திகூர்மையும், கைவன்மையும் இனிது விளங்கலாம்.

பலபுஸ்தகங்களைப் படித்துத்தான் பண்டைக்காலத்து நிகழ்ச்சிகளையுணரவேண்டுமென்ற நியதி கிடையாது. ப்ளூடார்க் என்றவனாசிரியர் எழுதியுள்ள க்ரீஸ் ரோமாபுரிவாசிகளுள் மேதாவிகளின் ஜீவித சரித்ரங்களைப்போலுள்ள நூல்களைப் படித்தால் சரித்திரத்தின் பல பகுதிகளை நாமுணரக்கூடுமாயினும், அவைகளின் தொடர்பு நமக்குப் புலனாகாது. தொடர்பை நீக்கிப்படிப்பது கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போலாகும்; உண்மையான ஞானத்தை அது ஒருபோதும் நமக்கு அளிக்காது. சரித்திரத்தின் ஒழுங்கும் உடலின் வளர்ச்சியும் பெரும்பாலு மொத்துள்ளன. ரக்தவோட்டம், எலும்புக் கட்டு, நரம்பு மண்டலம் முதலியவற்றை யறியாதானொருவன், தேகத்தைத் துண்டுபடுத்திப் பரிசோதித்தால் உடலினது அமைப்பை உண்மையாக அறிவானோ? அவ்வாறு சோதிக்கப் புகுவது பிணத்தைப் பரிசோதிப்பதை யொக்கும். அது போலவே, நாமும் சரித்திரத்தைத் துண்டு படுத்திப் படித்தால் நமக்கு அதில் கூறப்படும் விஷயங்களின் தொடர்பு ஒன்றும் விளங்காமல் யாவும் இருண்டு கிடக்கும். அவைகளின் சாராம்சங்களை க்ரகிப்பது துர்லபமாக முடியும். தெளிவாக எதையுமறிவது கூடாமைபற்றி மயங்கித் திகைப்போம். இவ்வாறன்றி, சரித்திர முழுமையுஞ் சோதித்துப் படித்தால், அதன் பல பகுதிகளின் தொடர்பும், காலத்திற்கேற்ப நாடு அடைந்த மாறுபாடுகளும் சீர்திருத்தங்களும், அவைகளின் காரணங்களும், நாகரீகம் படிப்படியாக வளர்வதும், நாடுகள் ஒன்றையொன்று பேதிப்பதும், பல அபிப்ராயங்கள் பல நிகழ்ச்சிகளுக்குக் காரணமாவதும், அந்நிகழ்ச்சிகளால் அவ்வபிப்பிராயங்களே பின்னால் முற்றிலும் மாறிவிடுவதும் ஆகிய பல அருமையான விஷயங்கள் அங்கையங்கனிபோல் வியக்தமாகத் தெரிகின்றன.

சரித்ரத்தினது போக்கை யறிவதற்கு அதன் பலபகுதிகளையும் ஊன்றிப்படிப்பது அவச்யமென்று முதலில் அறிந்ததன்பின் எழுகின்ற ஞானமானது சரித்ரத்தின் ஒரு பாகத்தையே நுணுகித் திரப்படிப்பதால் வரும் ஞானத்திலும் சிறந்ததாகும். சரித்ர முழுமையும் ஒழுங்காக அறிவதற்கு அதன் பலபகுதிகளைப் பொதுவாகக் கற்றுணர்வது இன்றியமையாததென்று தெரிந்துகொண்டபிறகு விஷயப் பரப்பைக்கண்டு நாம் திகிலடையோம். சரித்ரத்தின் ஸ்வயரூபத்தை அறிந்துகொண்டால், மனம் போனவாறு அதைத் துண்டித்துப்படிப்பது யாதொரு பலனையுந் தராதென்பதையும் அவ்விதஞ் செய்வது பலவுருவங்களடங்கிய சித்ரப்படத்தில் உருவமொன்றையே தனித்து நோக்குவதையும், பலவடிகள் கொண்ட பாக்களில் ஒரு அடியைத் தனித்துக் கேட்பதையுமொக்குமென்பதையும், எவரும் கண்கூடாக வறியலாம். பலகருவிகளில் வாசிக்கப்பெற்ற பாட்டுக்கச்சேரியில் ஒவ்வொரு கருவியும் அதனதன் தொனியால் ஒவ்வொரு ஆனந்தம் விளைப்பதோடு, அனைத்துமொன்றுபட்டு இணைந்து, ஒரு கருவி விட்டதை மற்றொரு கருவி தொடங்கிக் கேட்போர் மனதைக் கவர்ந்து, முடிவில் கருவிகளனைத்தும் பேரின்பம் பயப்பனபோல, சரித்ரத்திலும் பல பகுதிகள் ஒன்றோடொன்றிணைந்து பிந்தியகால முந்தியகாலச் செய்திகளை விரித்து விளக்கி, பின்னுள்ளோர் முன்னோரரிய வழி

ளைக் கைப்பற்றி. பல கிளைகளோடு ஓங்கி
வளரும் மரம்போல, முடிவில் பல பகுதிக
ளுமொன்ருய்த்திரண்டு, படிப்போர்க்கு ஒரு
தொடர்பினவாய் இன்பம் பயக்குகின்றன.

சரித்ரத்தை மிகவும் எளிதாக அறிவ
தற்கு மற்ருேர் வழியுள்ளது. சரித்ரத்தில்
கூறப்படுகிற பெரியோராகிய உத்தம சீல
ரின் அரிய செயல்களையும் குணகுணங்களை
யும்பற்றிப் படிப்பது அவ்வழியாகும். லோ
கோபகாரமாக அவர்கள் செய்த நன்மைகள்
யாவும் அவரது ஜீவித சரித்ரமூலமாக வெளி
யாவதோடு, அக்காலத்து நாகரீகத்திற்கும்
கொள்கைகளின் முதிர்ச்சிக்கும் அவரே அறி
குறியாதலின், அவைகளில் மக்களடைந்த
மேம்பாட்டை விஸ்தாரமாய் நாமறியலா
கும். நம்முன்ஞேரது சிறப்பை உண்மை
யாக அறிந்து அவரைப் போற்றுவோமா
கில், நந்தேசத்து முற்கால நிலைமையை நா
முள்ளபடி அறிந்தவராவோம். முன் நிகழ்
ந்த அருமையான செயல்களைப் படிப்பதில்
பக்தியும், விச்வாஸமும், களிப்பும் நமக்கு ஏற்
படாவிடில் அவைகளைப் படித்துத்தான்
பயனென்ன ? நம்மைப் பெற்று வளர்த்த
தாய்தந்தையரும், நமக்குக்கல்வி கற்பிக்கும்
ஆசானும், நம்மை நிழல்போல் தொடர்
ந்து உதவிவரும் நண்பினரும் சரித்ரங்கூறு
கின்ற அப்பெரியோரைப்போல அத்துணை
சிறந்த உபகாரிக ளாகார். நாம் தற்
காலத்தில் நன்கு மதித்துக்கொண்டாடுகிற
நாடு, ஸ்வயவதிகாரம், உடன்படிக்கை, கல்வி,
அறிவு, தொழில், கொள்கைகள், நியாய அநி
யாய வுணர்ச்சிகள் முதலியவெல்லாம் அவர்
தந்தவைகளே.

மனிதர் வ்ருத்தியடைந்ததைக் குறிக்கும்
சரித்ரத்தில் என்ன பொறுமை வெளியா
கின்றது! என்ன வீரம் வெளியாகின்றது!
தமக்கென வாழாது எத்தனைபேர் தமது
உயிரையும் தாம் எடுத்த கர்மத்திற்கு த்யா
கஞ்செய்திருக்கிருர்கள்! தன் பிள்ளைகளைப்
பாதுகாப்பதில் தான் பட்ட கடுந்துயரங்
களைக் கண்டெழுதிய பத்திரத்தைப்பின்னர்
அப்புத்ரர்களே படித்தறிந்து மெய் புளகி,
நெஞ்சங்களிந்து, கண்ணீர்பெருகி உருகுவது
போல, நமது பெரியோர்கள் நமக்காகப்
பட்ட கஷ்ட நிஷ்டூரங்களையும் அவரது அரிய
செயல்களையும் நாம் சரித்ரத்தில் படித்து
நெக்குருகி அனலிடையிட்ட மெழுகு போலா
கிரும். நாம் சுகப்படும் பொருட்டே அவர்
கஷ்டங்கட்குள்ளானர். நாம் அறிவினராவ
தற்கே அவர் துன்பக்கடலை நீந்தினர். நாம்
கவலையற்று வாழ்வதற்கே அவர் தமது குரு
தியை நீர்போற் சொரிந்து தம்முயிரையு
மிழந்திருக்கின்றனர். நம்பொருட்டின்றேல்,
வேறெவர்க்காக அவர் தம்முடல், பொருள்,
ஆவி, கீர்த்தி, மேன்மை முதலியவற்றைத்
துறந்திருக்கின்ருர்? "என் பேரழிக, எனது
நாடு வாழ்க" என்ற வுயர்ந்ததோர் கொள்
கையைக் கடைப்பிடித்து, எடுத்த கார்யத்
தைக் கைவிடாது சாதிக்கும் சீரியோர், கீர்த்
தியையும் பெருமையையுமடைய விரும்பி
வேலைகளைச் செய்யவில்லை. தொட்ட கர்மம்
கைகூடி அக்காலத்தவரும் பின்னுள்ளோ
ராகிய நாமும் கவலையின்றி உயிர் வாழ்வதற்
காகவே அவர்கள் முயன்ருர்கள். தங்களாலிய
ன்றவரை உலகத்தைமுன்னினும் மேன்மை
யடையச் செய்யவேண்டுமென்ற வைராக்
யமானது அன்னேரை மேன்மேலும் உழ
ன்று வேலைகளைச் செய்யும்படி தூண்டிற்று.
சில வேளைகளில் சில்லோர் சில காரணங்க
ளால் கார்யசித்தி பெருது தமது பதவியை
யிழந்து வறுமையி லழுந்தி மனம் நொந்து
கஷ்டப்படும் சமயத்திலும், அவரது மனே
வைராக்யமும் உயர்ந்த எண்ணங்களும்
அவர்க்கு மன ஆறுதலும் திடமுங்கொடுத்
தன. கன்மேலெழுத்துப்போல் என்றென்
றும் நின்று நிலவி உலகு கொண்டாடும்ப
டித் தமது அபிப்ராயங்களை அப்பெரியோர்
கள் எழுதிவைத்துச் சென்றுள்ளார்கள்.
பின்னுள்ளோர் அப்புஸ்தகங்களை மாணிக்
கம்போல் மதித்துக் கொண்டாடுவதை நாம்
இன்றும் கண்கூடாகக் காண்கிரும். இவ்
வண்ணம் எழுதிச் சென்றவர்களில் சிலர்
மேனட்டாரில் மில்டன், டாண்டி முதலியோ
ராவர். நம்மவருள் ஆளவந்தார், இராமானுஜர்
முதலிய பெருமக்களின் சரித்ரத்தை நாம்
படிக்கும்போது நமது மன நிலை எவ்வாறு
வேறுபடுகின்றதென்பதை ஒவ்வொருவரும்
நேரிற்கண்டறியலாம். இத்தகைய பெருந்த
கையாளரே உலகாப்புகழ்பெற்று பல்லூழி

(இதன் தொடர்ச்சி 183-ம் பக்கம்.)

ஜய உருமால்

THE TURBAN OF SUCCESS

(ஒரு சிறிய கதை)

இருதயபுரம் தாலூகாவைச்சேர்ந்த இடி
யநூரில் இருளப்ப முதலி என்ற இரண்டா
வது கிரேட் வக்கீலொருவரிருந்தார். அவ
ரொரு கர்நாடக கிரிமினல் வக்கீல். முதல்
ஸன்னது பெற்றபிறகு அவர் ஸிவில் கோர்
ட்டைக் கண்ணால்கூடக் கண்டதில்லை. அவர்
சொக்காய்களுக்குப் பொத்தா னென்பதே
கிடையாது. மேற் சொக்காய் குடுகுடுப்பாண்
டியைப்போல் குதிக்கால்வரை தொங்கும்.
அதைக் கழுத்துக்குப் பக்கத்திலும் மார்புக்
குக்கீழும் வெள்ளை நாடாவால் முடிந்துவைப்
பதுவழக்கம். தலையில்கட்டியிருக்கும் கறுப்பு
நிறமுள்ள உருமாலில் ஜரிகைக்கொட்டடி
போட்டிருக்கும். சுமார் 18 முழம் நீளமுள்
ளது. அது அவர் வைத்திருந்த மூக்கரச்சி
வைப்பாட்டியின் புடவை யென்றும், ஒரு
நாள் விடியற்காலததில் இருட்டாயிருக்கும்
பொழுது ஒரு கேஸ் விஷயமாக அவள்
விட்டிலிருந்து புறப்படுங்கால், சீலையும் 18
முழமாதலால் ஸ்டாண்டிலிருந்து மாறுதலா
யிதைஎடுத்துக்கட்டிக்கொண்டுவந்ததாகவும்
மாஜிஸ்டிரேட் உருமாலைப்பார்த்து புதுதினு
சாயும் அந்தஸ்தாயு மேற்வையாயு மிருப்ப
தாகப் பரிகாசஞ்செய்து சிரித்ததை, அப்பா
வியானதால் அவர் நிஜமென நம்பி அதிகாரி
யின் மனதுக்குச்சந்தோஷத்தையுண்டுபண்
ணவெண்ணி இச்சீலையையே தலையுருமா
லாக உபயோகித்து வருகிருர். மாஜிஸ்டிரே
ட்டுகள் பலபேர்கள் மாறிப்போனுலும் இந்த
உருமால் மட்டும் மாறவில்லை. இந்த உரு
மால் ஆவிவந்ததாம். வாஸ்தவமே அழுக்கு
ஜாஸ்தியாகவிருந்தால் தட்டினுல் ஆவிபுறப்
படும். அதிகப்பிரசங்கிகள் புடவை என்று
சொல்வது பிசகென்றும் இம்மாதிரிச் சீலை
கட்டுவதால் தன் விரோதிகள் சிலர் விபரீத
மாய்ச் சொல்வதை நம்பக்கூடாதென்றும்
வற்புறுத்துவார். இந்த ரகசியம், இதற்காக
முப்பது ரூபாய் கிரயம்பெற்ற மூக்கரச்சிக்கு
மட்டுந்தான் தெரியும். இந்த உருமாலைப்போ
லவ்வளவு உபயோகமுள்ள உருப்படி இல்லை
யென்று பிரசங்கஞ்செய்வார். எப்படியெ
னில், கேஸுக்காக வெளியூர்களுக்குச் செல்
லுஞ் சமயத்தில் ராத்திரி காலங்களில் துப்
பட்டியுமதுவே; தலையணையகப்படாத காலங்
களில் கேஸ்கட்டின்மேற் கட்டி தலைக்குக்கீழ்
வைப்பதுமதுவே; ஸ்நானஞ்செய்து வஸ்திர
முலரும்வரை பட்டுமடியுமதுவே; காம்பு
(Camp) களிலகப்படும் கரிகாய் தானியம்
வகையராக்களைக்கட்டும் சாக்குமதுவே; ஸர்க்
யூட்டில் கேஸ்போடுமிடங்களில் சாவடிக்
கெதிரிலிருக்கும் புளியமரத்தடியில் புழுதி
மேல் உட்கார விரிப்பதுமதுவே. ஆகையா
லிவரை புளியமரத்தடி வக்கீ லென்றும்
சிலர் சொல்வார்கள். இந்த உருமாலைக் கட்
டிக்கொண்டுபோய் கோர்ட்டில் நின்ருல்,
ஆஜராகும் கேஸ் நிச்சயமாய் ஜயிக்குமென்
று கட்சிக்காரர்களிடம் புகழ்ந்து பேசுவ
தாலிவ்வுருமாலைக் கட்டிவரும்படி குடியான
வர்கள் கேட்டுக்கொள்வது வழக்கமாயி
ருந்தது. உருமாலைத் தலைக்குவைத்து நீண்ட
மேற்சொக்காயையும் மாட்டிக்கொண்டு இடு
ப்பிலிருக்கும் வேஷ்டி அழுக்குப்படாமலி
ருக்க முழந்தாளுக்குமேல் தூக்கிக்கட்டி
கேஸ்கட்டைக் கைப்பிடித்து வெளிப்புறப்
படுவதைப் பார்க்கு மிக்காலத்துப் பாஷன
றிந்த (fashion) இளைஞர்கள் கொக்கரித்து
நகைப்பார்கள். "தாதா முண்டாசுமேல் ஒரு
சலகை நெல் வைத்தாலும் பாரம் தலைமே
லுரைக்காது" என்று சிறு பிள்ளைகள் ஏசு
வதைக்கேட்டுப் பேசாமற் சிரித்துக்கொ
ண்டுபோவார்.

ஆனல் குடியானவர்களிடம் பணம் பறிப்
பதிலும்குயுக்தியாய்கேஸுகளைப்புரட்டுவதி
லும் வெகு சமர்த்தர். நல்ல அறிவுள்ளவரா
தலால் சட்டத்தின் அபிப்பிராயத்துக்கி
ணங்க சாக்ஷிகளைத் தயார்செய்து கேஸ்
களைச் சரியான வழியில் நடத்தித் தன்னல்
கூடியமட்டில் ஜயிக்க ஏற்பாடு செய்வார்.
கேஸ் கொண்டுவருபவர்களிடம் ஸௌஜன்
யமாகச் சொல்லி முதலில் கொஞ்சமா

காலம் பல்லோராலும் போற்றப்படுகிருர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்ருமை நன்று"

என்ற தெய்வப்புலமை திருவள்ளுவனர்
வாக்கிற்கு அவரே இலக்கு.

கவே பீசு (Fees) பேசிக்கொள்வார். கேஸை நடத்த ஆரம்பித்தபிறகு கொஞ்சங்கொஞ்சமாகக் குடியானவர்களுடைய புதையற்குவியல்களைக் குறைப்பதற்கு வழிதேடுவார். சிற்சிலவாய் வெகு சாமான்களைக் கைப்பற்றுவார். அவர் வீட்டிலொரு பெட்டிக்குள் செல்வானதுபோக மிகுந்தது ஐந்து ரீமிக்குக் குறையாமற் காயிதங்களும் இரண்டு டஜனுக்குக் குறையாமற் பலவித பென்ஸலும் அரை ரூபாய்த் தலைகளும் காணப்படும். முதலிக்கு புத்திர சம்பத்து மிகுந்திருந்தமையா லிக்காலத்திற் பல நோட்டுகளை யபேக்ஷிக்கும் மக்களுக்காக இவைகள் குடியானவர்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டன. அவருக்கு குமாஸ்தா இல்லையானாலும் எழுத்துக்கூலிக்காக கேஸ்முடிவில் மூன்று ரூபாயாவது வாங்குவார். இதைக்கொண்டு மக்களுக்குச் சம்பளங் கொடுத்துவிடுவார். தர்ம காரியத்திற்கும் பொது நன்மைக்கும் ஒரு பைசாகூட மனதொப்பிச் செலவுசெய்யாத குடியான்,முறட்டுச்சண்டையால் விளையும் வியவகாரங்களில் விவரமில்லாமற் பணத்தைப் பை பையாய் வாரி இறைக்கத் துணிவான். சகஜமாகக் கேட்டால் தன்னிட மொருகாசுகூட இல்லை, சாப்பாட்டுக்குக் கடன் வாங்கினதாகச் சொல்லுமோர் குடியானைத் தக்ஷணமே நூறு ரூபாய் செலவு செய்யாவிடில் ரிமாண்டிலடைப்பார்கள் என்றால் இடுப்பைச் சுற்றிக் கட்டியிருக்கும் பையிலிருந்து ரூபாய் நூறும், தன்னைத் தப்புவிப்பதற்கு இனும் ரூபாய் பத்துங் கொடுத்துவிடுவான். இரக்கமற்ற சில கிழுத்தியோகஸ்தர்களும் பிடிஷன் ரைடர்களு மிப்படி பணம் பறிப்பது வழக்கம்.

கொடியனூரில் நடந்த ஒரு கொலைக் கேஸில் கோப்பராய கவுண்டனென்னு மவ்வூர் கொத்துக்காரனைச் சம்பந்தப்படுத்தி மாஜிஸ்டிரேட் விசாரணை முடிந்தவுடன் அவனை ஸெஷனுக்குத் (Sessions) தாக்கல் செய்து ஜில்லா கோர்ட்டில் விசாரணைக்கு வருஞ் சமயமாயிருந்தது. கொத்துக்காரக் கொப்பராய னென்பவன் ஏராளமாய்ப் பணத்தைக் கொப்பரையில் போட்டுப் தைத்துவைத்திருப்பதாக ஒரு வதந்தி. அவனுடைய மூத்தமகன் குட்டியண்ணனென்பவன், இருளப்பமுதலியிட மொருநாள்வந்து "தாங்கள் புத்திசொன்னபடியே பட்டணம்போய் ஒரு வக்கீலை ஏற்பாடுசெய்யவும், அய்யனை ரிமாண்டிலிருந்து விடுவிக்க ஹைகோர்ட்டில் அப்பீல்செய்யவும் தீர்மானித்திருக்கிறேன். இன்றைக்கே நீங்களும் கூடவரவேணும்" என்று கேட்டுக்கொண்டான். இருளப்ப முதலியின் சகோதரிக்கோர் மகளுண்டு. அப்பெண்ணின் புருஷன்மதராசில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் வேலையிலிருக்கிறார். அவர்களைப் பார்க்கப் போகவேண்டுமென்று சிலநாளா யெண்ணியிருந்தாரானாலும் சொந்தச்செலவு செய்துகொண்டு போய்ப்பார்க்கச் சம்மதமில்லை. இச்சமயத்திற் போக நேர்ந்ததை யுத்தேசித்து முன் கவுண்டனுக்குப் புத்திசொன்னது ஆனாலும் தனக்குப் பட்டணம்போவதால் பெருத்த நஷ்டம் விளையுமென்றும் தன்னுடைய மற்ற கேஸுகள் வீணாகுமென்றும் சாக்குச் சொல்லுவதுபோல் பாசாங்கு செய்தார். குட்டியண்ணன் கட்டாயப்படுத்தினதின்மேல் தனக்கு நஷ்டம் வந்தாலும் கவுண்டர் கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு புறப்பட யத்தனித்தார். ஜாஸ்தி செலவாகுமென்று ஜாடையாய்ச் சொன்னார். அச்சமயத்திலவர் ஸம்ஸாரம்வந்து அரிசிக்காரனுக்கு ஐம்பது ரூபாய் கடன் கொடுக்கவேண்டியிருப்பதால் பாதியாவது கொடுத்தால்தான் ஒரு மூட்டையரிசி யனுப்புவதாகச் சொல்லுகிறானென்று முணுமுணுத்துச் சொன்னாள். அதற்கு வக்கீல் தன்கையிற் பணமில்லையென்றும், கவுண்டர் காரியமாகப்பட்டணம் போவதால் வந்தபிறகு கொடுப்பதாகச் சொன்னார். அதுவரையில் பட்டினியாக இருக்கலாமா, கவுண்டரைக் கேட்டால் கொடுக்கமாட்டாரா என்று அந்தம்மணி கேட்டாள். அதற்கு முதலி, "நான் என்ன அவரோடே பட்டணம் போக பீஸா பேசியிருக்கிறேன். தாக்ஷண்யத்திற்காகப் போகிறேன். இருந்தாலுமிருக்கட்டும். கவுண்டரே, ஒரு மூட்டைக்கு 18 ரூபாயைக் கொடும். அப்புறம் பேசிக்கொள்ளலாம்" என்று கவுண்டரிடம் கை

யைநீட்டினார். ஜாஸ்தி செலவுக்கில்லாததால் 10 ரூபாய் போதாதாவென்று எடுத்துக் கொடுத்தார். முதலிக்கு கோபம்வந்துவிட்டது. "என்ன கவுண்டரே, பணமில்லாமலா என்னையுங் கூட்டிக்கொண்டு பட்டணம் போய் பெரியவக்கீலை பேசப்போகிறீர். நான் வரவில்லை. நீர் மாத்திரம் போகலாம். 8 ரூபாயிலேயா வந்துடுத்து, ஆயிரம் பதினாயிரமா செலவு செய்யரதிக்கிருக்கச்சே. பணமில்லாவிட்டால் நான் உமக்குக் கடன் வாங்கிக்கொடுக்கிறேன்". என்றார். கவுண்டரும் பயந்துகொண்டு 8 ரூபாயைக் கொடுத்தார். புறப்படும் சமயத்தில் எண்ணெய்க்காரி "5 ரூபாய் பாக்கி கொடுக்கவேணும். 3 ரூபாயாவது கொடுத்துவிட்டுப் போங்கள்" என்று சொல்லி எதிரேவந்து நின்றாள். "கவுண்டரே சரியாயிருக்கட்டும் 2 ரூபாய் கொடும்" என்று சொல்லி செக்காத்தியை அனுப்பிவிட்டு வண்டியேறினார். வண்டி நான்கடி சென்றதும், "அய்யோ ஜய உருமாலை மறந்துவிட்டேனே" என்று மங்களம் பாடிக்கொண்டு கீழே யிறங்கினார். அதற்குள்ளவர் ஸம்ஸாரம் அதை யெடுத்துக் கொண்டுவந்து கையிற்கொடுத்து "அலமிக்கும் கோமளத்துக்கும் 4 பாவாடை தெச்சுண்டு வரணும். பலமாதிரியாய் 10 தினுசு ரவிக்கைத் துண்டுகளும் கொஞ்சம் மஞ்சள் மிளகு முந்திரிப்பருப்பு பெருங்காயம் இன்னும் அகப்பட்டதை வாங்கிண்டு வரணும்" என்று கட்டளையிட்டாள். வக்கீல் சரியென்று சொல்லி கொஞ்சதூரம் போகும் பொழுது, அம்மாள் பெருங்காயம் மறக்க வேண்டாமென்றாள். ஸ்டேஷனுக்கருகே செல்லும்பொழுது "இன்றைக்கென்னமோ தலை வலிக்கிறது என்று சவுக்கத்தால் தலையை யிருகக் கட்டிக்கொண்டு, கவுண்டரே, நீரு மிரண்டாவது கிளாஸிலே ஏறிக்கொண்டால் சவுக்கியமாய் தூங்கிக்கொண்டு போகலாம்" என்றார். இருவர்களுக்குமே மூன்றாவது கிளாஸ் டிக்கட்டு வாங்க உத்தேசித்திருந்த கவுண்டர், வக்கீலுக்குப் பாசாங்குத் தலைவலியென்று சொன்னதால், அவருக்கு மட்டும் இரண்டாவது கிளாஸுக்கு டிக்கட்டு வாங்கினார்.முதலியும்மேல் தட்டில் (Berth) ஜய உருமாலை தலைக்குவைத்துப் படுத்தார்.

அடுத்தநாள் காலை 8 மணிக்கு மதராசில் வந்திறங்கும்வரை நிர்விசாரமாகத் தூங்கினார் கவுண்டரால் எழுப்பப்பட்டவுடன், 'அதற்குள் பட்டணம் வந்துவிட்டதா' என்று சொல்லி எழுந்து வெளியே வரும் பொழுது ஒரு கோச்சுவண்டியைத் தீர்மானம் செய்து அதில் ஏறிக்கொண்டார். கவுண்டர் 'ஜட்கா போதாதுங்களா' என்று கேட்டார். 'அந்தஸ்தாயிருக்காது; மருமகன் தகுந்த உத்தியோகத்திலிருக்கிறான். நீரும் இதிலேயே வரலா'மென்று அவரையுமேற்றிக்கொண்டு மார்க்கட்டு வழியாய்விட்டு "நான் கையில் ஒன்றும் கொண்டுவரவில்லையென்று உமக்கே தெரியும். வெறுங்கையோடு என் மருமகனைப் பார்க்கப் போகக்கூடாது. எனக்காக சாப்பாட்டுக்குச் செலவில்லை. அவர்கள் வீட்டிலேயே சாப்பிடலாம். நாலு கட்டு வெற்றிலை, ரெண்டுவிசை பாக்கு, ரெண்டுவீசை மஞ்சள், ரெண்டு வீசை சீனாகற்கண்டு, ரெண்டு டஜன் ஆரஞ்சி, ஒரு டஜன் ஆபிள் போரும். இவைகளை மாத்திரம் வாங்கிக்கொண்டு போனால்தான் மரியாதையா யிருக்கு'மென்று கவுண்டரிடம் 10 ரூபாய் வாங்கிச் சாமான்களை வண்டியில் நிரப்பிக்கொண்டு மருமகன் வீட்டில் போய்கம்பீரமாயிறங்கினார். உள்ளேசென்றபிறகு, மாமாவுக்கு கவுண்டர் ஞாபகமேயில்லை. ஸ்நானஞ்செய்து சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளையிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கவுண்டர், கான்ஸ்டேபிலிடம் உத்திரவுபெற்று உள்ளே தலையை நீட்டினார். "ஓகோ! இன்னும் சாப்பிடவில்லையோ. பக்கத்திலே காப்பி கிளப்புக்குப்போய் பலகாரஞ் செய்துவிட்டு வாரும், அப்புறம் வந்த காரியத்தைப் பார்ப்போம்" என்று ஒரு கான்ஸ்டேபிலுடனனுப்பினார். அங்கு சென்றதும் இருவருக்கும் ஸப்ளை செய்யும்படி போலீஸ்காரருத்திரவு செய்தார். பலகாரம் முடிந்தவுடன், பன்னிரெண்டணா கொடுக்கும்படி கேட்டதும் பலகாரத்துக்கு பன்னிரெண்டணாவா யென்று வயிறெரிந்து கொண்டு கொடுத்துவிட்டு வக்கீலிடம் வந்தார்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்)

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

ஆத்திசூடி விளக்கம்

56. தானமது விரும்பு

கொடுக்கவேண்டும் என்ற விருப்பம் மாருதிருக்கவேண்டும் ஒவ்வொருவனுக்கும் என்பது இந்த ஸூத்ரத்தின் பொதுக்கருத்து. நம்மது என்ற அபிமானம் உலகவஸ்துக்கள் விஷயமாக மானிடர்களிடம் பொதுவாகக் குடிகொண்டுள்ளது. இதனால்ஸுக கரமாயும் மனதைக் கவருவதாயும் உள்ள எல்லாவஸ்துக்களையும் நம்மது என்று ஆக்கிக்கொண்டுவிடவேண்டும் என்ற அடங்கா ஆவலாகிய பேய் மானிடஜன்மத்தையே பிடித்துக் கொண்டுள்ளது. இந்த தன்னயம் கருதுவதாகிய மானிடர் குறையே அவர்களை மோக்ஷ வழியில் நடக்கவொட்டாது தடுக்கும் பெரிய மறைப்பு. இதை ஸரிவர நீக்கத் தானத்தை இடைவிடாது விரும்புவதுதான் நல்லவழி. இதுபற்றியே ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் உபதேசம் பெற பிரஹ்மாவை அணுகிய தேவ, மனுஷ்ய, அஸுரர்களுக்குப் பிரஹ்மா பொதுவாக ஊ (த) என்றார். அது மனுஷ்யர்களது அபிமானமான பலத்திற்கேற்ப ஊத்த (தத்த) சோடு என்று அவர்களுக்குப் பட, அதை ப்ரஹ்மா ஸரி என்று ஒப்புக்கொண்டு 'உங்களுக்கு மோக்ஷத்திற்கு முக்கியத் தடையான வெளிவஸ்து அபிமானம் நீங்க, ஒழுங்குப்படி அபிமானவஸ்துக்களைப் பிறருக்குக் கொடுத்துவந்து, வரவர அபிமானம் குறைந்து முடிவில் அறநீங்கி, மோக்ஷம் அடையத்தகுந்தவர்களாகி விடுங்கள்' என்று விவரித்தார். இதுபற்றியே ஔவையாரும் 'ஈதலறன்' என்றாள்.

மேல் விஸ்தரிக்கப் புகுவதற்குமுன், ஔவையார் முதல் ஆத்திச்சூடி வாக்யம் போல இதுவும் முடிவதால் அங்கு கூறப்பட்டுள்ள அறத்திற்கும் இங்குள்ள தானத்திற்கும் உள்ள வேற்றுமை விளங்கவேண்டும். அறன் என்ற பதத்திற்குத் தர்மம் என்று பொருள். பொதுவாகக் கொடை என்னும் பொருளில் தானதர்மம் என்ற பதங்கள் வழங்கிவருகின்றன. ஆயினும் இவைகளுக்குச் சிறப்பான பொருள்கள் உள. வேத சாஸ்திரங்களில் குறிக்கப்பட்டுள்ள ஜாதிவர்ணாச்ரம, ஸத்ரீபுருஷப் பாகுபாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஏற்பட்டுள்ள அதனதன் நடை உடைபாவனைகளே அறன் அல்லது தர்மமாம். இவைகளுக்கு ஸ்வதர்மம் என்றும் ஸ்வகர்மம் என்றும் பெயர்கள் உண்டு; இதைத்தான் அர்ச்சுனனைப் பகவான் குருக்ஷேத்திர யுத்தகளத்தில் மயங்காது அநுஷ்டிக்கச் சொன்னது: ஔவையாரும் முதல் ஆத்திசூடி ஸூத்ரத்தில் இதைத்தான் வற்புறுத்தினாள். இங்கு கூறப்படும் தானம் என்பது இத்தர்மங்களுள் ஒன்றாயும் எல்லோருக்கும் . பொதுவாயுமுள்ள கொடை என்பதே. ஆகவே தர்மம் பொதுச் சொல், தானம் சிறப்புச் சொல். தானம் தர்மங்களுள் முக்யமான ஒன்று.

தானம் யார் வேண்டுமானாலும் செய்யலாம்: இதில் அதிகாரம் எந்த ஜாதி வர்ண ஆச்ரமத்தானுக்கும் உண்டு. இதுபற்றியே இந்த ஸூத்ரம் பொதுவாக எல்லோரையும் தானம் விரும்பவேண்டும் என்று வற்புறுத்துகிறது. வெறும் கொடைகள் எல்லாம தானமாகா. கூன் குருடு செவிடுமுதலியவைகளுக்குக்கொடுப்பது இங்கு விரும்பவேண்டி வற்புறுத்தப்படும் தானமேயல்ல. இந்த ஸந்தர்ப்பத்தில் விரும்பென்று சொல் உண்டாவது காக்கையே கருத்திடு, வேம்பே கசந்திடு என்று இயற்கையைப்பற்றி அனாவசியமாகக்கூறியதுபோலாகும். இம்மாதிரியான இடங்களில் கொடுக்காக் கண்மூடிமானிடன் ஒருவனும் இருக்கமாட்டான். ஆனால் இவைகளைத் தானமென்று கருதும் கற்றறி மூடர் அநேகர் உண்டு. இந்த வெறும் கொடையைச் செய்யும்படி மோக்ஷ வழி காட்டவந்த சாஸ்திரங்கள் அழுத்திக்கூற வரவில்லை, இவைகள் விஷயம வெளிப்படையாதலால். மானிடரிடம் இருந்து கவனக்குறைவால் வளுத்துவரும் உலக விஷய வஸ்து அபிமானத்தை வேரறுக்க வந்த சாஸ்திரீயக்கொடைகளையே இங்கு விரும்பவேண்டும் என்று காட்டப்பட்டுள்ளது.

ஒரு கொடை, தானம் என்ற இந்தச்சிறப்புப்பெயரை பெறுவதற்கு பொதுவாக ப்ரா

ஹ்மணனையே பெறுபவனாகக்கொண்டிருத்தல்வேண்டும். ப்ராஹ்மணன் தவிர மற்றவனுக்கு இங்கு விரும்பு என்று கூறப்பட்ட தானத்தை வாங்க அதிகாரம் இல்லை. சிற்சில ஸமயங்களில் முக்யமாக விவாஹத்தில் ஸ்வஜாதி மாப்பிள்ளைக்குப் பெண் கொடுப்பது கன்னிகாதானம் என்ற பெயர்பெறும். இது தவிர மற்றைய விஷயங்களில் ப்ராஹ்மணனுக்கு சாஸ்திரவிதிப்படிக் கொடுக்கும் கொடைக்கே தானம் என்று பெயர். மற்றையகொடைகள் எல்லாம் வெறும் மனக்கனிவு, இறுமாப்பு, தம்நயம் கருதுவது இவைகளை முன்னிட்ட உபகாரங்களாகும். இவைகளை விரும்பவேண்டும் என்று கூற சாஸ்திரங்கூட வேண்டுமா! உலகத்தவர்க்ளுக்குத் தாமே இவைகளில் முயற்சி உண்டாகிவிடும் மிகுந்த பழக்கமின்றி.

இப்படி எப்பொழுதும் விரும்பவேண்டிய தானத்தை பகவான் கீதை XVII-ம் அத்யாயம் 20-ம் ச்லோகத்தில்:—

கொடுத்தல்விதி என்றுகொடை யாதொன்றுகைம்மா
றடுத்தாகவா தாங்கரிய காலம்—வடுத்தவிரும்
தேசமொடு பாத்திரமும் தேர்ந்துதவப் பட்டிடுமோ
மாசிலது சத்துவமாம் மற்று.

என எடுத்துக்காட்டுகிறார். நீக்கவேண்டியதாயும் பொதுவாகத்தானம் என்று கூறப்பட்டு வருவதாயும் உள்ள வெறும் கொடையை பகவான் கீதை XVII-ம் அத்யாயம் 21, 22 ச்லோகங்களில் பின்வருமாறு விளக்குகிறார்.

எக்கொடைகைம் மாறுகருதோ வினைப்பயன் விழை
ந்தோ, துக்கமனம் நொந்தோ தரப்படுமால்—அக்
கொடையைக், கற்றோர் இராசதமாக் கண்டுரைப்பர்
காசினியில், பற்றறுக் கேறனையாய் பார்.

உரித்தல்லாக் காலத்தும் தேயத்தும் உற்றுப்
பொருத்தமிலாப் பூரியர்க்குப் பொற்பார்-திருத்தமுறு
பூசனையும் இன்றிப் புகழ்ச்சியறப் புக்களித்த
மாசுறுதானம் தாமதம்.

இவைகளுள் முதல் கூறிய ச்லோகத்தை விவரித்தால் புத்திமான் விரும்ப வேண்டிய தானம் இன்னது என்பது வெளியாகும்.

கீதை XVII-ம் அத்தியாயம் 20-ம் ச்லோகத்தில் மூன்றுவித தானங்கள், விளக்கப்பட்டுள்ளன, அவையாவன தேசகாலதானங்களும், பாத்ரதானங்களும். இவைகளுள் தேசதானம் என்பது தீர்த்தயாத்திரைகளிலோ அல்லது ஸாதாரணயாத்திரைகளிலோ திவ்விய தேசங்களில் அதாவது க்ஷேத்திரங்களில் ப்ராஹ்மணர்களுக்குச் செய்யவேண்டிய சாஸ்திரீய தானங்கள். சாஸ்திரங்களில் புண்ணியகாலங்கள் என்று எடுக்கப்பட்டுள்ள அமாவாஸ்யை, கிரஹணங்கள், விவாஹகாலம் முதலியவைகளில் ப்ராஹ்மணர்களுக்கு அல்லது மாப்பிள்ளைக்குச் செய்ய வேண்டிய தானங்கள், காலதானங்கள் எனப்படும். தானம் பெறத்தகுந்த ப்ராஹ்மணர்களிடம் கொடுப்பது பாத்ரதானம் இங்கு தேசகாலதானங்கள் ஒருங்கு சேர்த்துக் கூறப்பட்டது, அவைகள் விஷயம் எளிதில் ஸ்மிருதிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம் என்பதைக்குறிக்க. பாத்ரதானத்தை வேருகப்பிரித்துக் கூறியது ஸ்ம்ருதிகளிலிருந்து நன்றாக விளங்காததால்: முற்கூறிய தானங்களைவிட மிகச்சிறந்தது. முற்கூறியவைகள் ஸாதாரணமாக எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியது. பின்னது மஹாபக்த சிகாமணிகளுக்கு, முன்தானங்களில் வெகு காலப்பழக்க பலத்தால் தான் ஏற்படும். இந்த ரஹஸ்யத்தை உணராப் பெரும்பாலாரும் 'பாத்திரமறிந்து பிச்சையிடு என்பது பழமொழி; ஆகவே ஸத்பாத்திரத்தில் எப்பொழுதும் தானம் செய்வது மேல்: தேசம், காலம் இவைகளில் ஸத்பாத்திரம் கிடைக்காவிடில் தானத்தை நிறுத்திவிடலாம்: என்ற சிறப்புத் தோன்றவே இங்கு பிரித்துக் கூறியிருக்கிறது: மேலும் இக்காலத்தில் கூன் குருடு செவிடு முதலியவைகளைத் தவிர, தின்று கொழுக்கும் ப்ராஹ்மணன் ஸத்பாத்ரமேயாகமாட்டான் ஆகையால் எல்லா தானத்தையும் நிறுத்திவிடலாம்' என்று குதர்க்கம் பேசுவர். இப்படிப்பார்த்தால் பகவான் ஸாத்விகதானத்தைப்பற்றிக் கூறியிருக்க வேண்டியதேயில்லை. தேசகாலதானம் செய்யவேண்டும் என்றுகூறிப்பாத்திரத்தை உணர்ந்துதான் பிச்சையிடவேண்டும் என்றால் முன்னுக்குப்பின் விரோதமல்லவா? ஆகவே சற்று நிதானித்தால் லௌகிகமாக பாத்ரதானம் என்பதுவெளிப்படையான அபாத்ரமல்லஎன்று கண்டு சாஸ்த்ரீயமாகச் செய்வது என்பது தான்: அதுவும் ப்ராஹ்மணருக்கேதான்,

கூன் குருடு விஷயம் முன்னரே ஒதுக்கியாகி விட்டது.

இங்கு கூறப்படும் பாத்திரதானம் என்பதுதான் என்ன? அதன் சிறப்புத்தான் என்ன? என்று ஆராயவேண்டும். ஈச்வர துல்யராளான ப்ராஹ்மணனோ அல்லது ஈசனேயோதான் பாத்திரம் எனப்படும். இந்தப் பாத்திரம் தானம் கேட்கவந்து விட்டால் இன்னதுதான் கேட்கும் என்பதில்லை: பிள்ளையைக் கேட்கலாம் (தசரதர், சிறுத்தொண்டர் விஷயம்), பெண்சாதியைக் கேட்கலாம் (ஸுதர்சனர், இயற்பகை நாயனர் விஷயம்), மூன்றடிமண் கேட்கலாம் (மஹாபலி.அஸுரர்கள் விஷயம்). கொடுப்பவனுக்கோ முன்னர் கூறப்பட்டுள்ள தேசகால தானங்களில் சாஸ்திர முறைப்படி ஏற்பட்டுள்ள பழக்கவேகத்தால், முன் பின் யோசியாது ஈசன் ஆராதனமாக ஸத்பாத்ரங்கள் கேட்டதைக் கொடுத்து விடுவோம் என்று தோற்றும்: கொடுத்தும் விடுவன்: வாங்கும் ஸத்பாத்திரத்திற்கு இவைகளால் ஒன்றும் ஆகவேண்டியதில்லை, கொடுப்பவனுக்கும் கோரிக்கை ஒன்றுமிராது; ஆனால் தானம்கொடுத்ததற்கும் கொடுப்பவனுக்கும் சிறந்த மேன்மை ஏற்படும். இப்படி அமையும் தானத்திற்கே பாத்திரதானம் என்று பெயர். இது ஸ்மிருதி ஒழுங்கில் அகப்பட்டதாக இராது. மற்றைய தேச கால தானங்களைப்போல காம்ய பலனுடன் பொருந்தியதாக இராது. இது பற்றியே இது முன்னிரண்டிலிருந்தும் பகவானால் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தத்தானம் ஒன்றுதான் உபகாரம் கருதப்படாமலும், வாங்குபவன் உபகாரத்தைக் கருதாமலும் நடந்தேறக்கூடியது. மேலும் பிராஹ்மணர்களுக்கேதான் தானம் செய்யப்படவேண்டும் என்பதைக் காட்ட பாத்ரமாக தானம் வாங்கவந்துள்ள பெரியோர்கள் எல்லோரும் ப்ராஹ்மணர்களேயாயினர். துஷ்டநிக்ரஹத்தை முக்கியமாக உடைய பகவான் அவதாரங்கள் க்ஷத்ரியர்களாகவோ அல்லது ஜந்துக்களாகவோ காணப்படும். தானம் வாங்கி சிஷ்டர்களைப் பரிபாலனம் செய்வதை முக்யமாக உள்ள அவதாரங்கள் ப்ராஹ்மண அவதாரமாக இருக்கும். ஆகவே பாத்ர தானம் கிட்டுவது அரிது. தேசகால தானங்களில் பழகி நிலைத்த மஹான்களுக்குத்தான் கிட்டும்.

இக்காலத்திய நாகரீகத்தில் அழுந்தியுள்ளவர்கள் பார்ப்பனனுக்குக் கொடுப்பானேன்; தருந்தவர்கள் எந்த ஜாதியிலிருந்தாலும் கொடுக்கலாம் என்று குதர்க்கம் பேசுவர். கூடியவரையில் நல்ல பிராமணனை விசாரித்துக் கொடுக்கவேண்டியதுதான் என்பது சாஸ்திரங்களின் துணிபு. ஆனால் இதையே முக்யமாகக் கொண்டுவிட்டால் முடிவில்லாமலே போய்விடும். நல்லவன் என்று கண்டவனுக்குத் தானம் கொடுத்தபின்னர், அவன் துர்க்குணம் வெளியானால் மறுபடி அவன் கையிலிருந்து கொடுத்த தானத்தைப் பிடுங்கிவிடவேண்டும் என்று கூடச் சொல்லவேண்டிவரும். ப்ராஹ்மணரிடம் தவிர வேறு எங்கும் தானம் கொடுக்கச் சாஸ்திரமில்லை: போஸ்ட்மாஸ்டர் தவிர மற்றவரிடம் மணியார்டர் பணம்கொடுக்க சட்டமில்லாததுபோல. போஸ்ட் மாஸ்டர் லஞ்சம் வாங்குபவனும் திருடுபவனுமாகவிருந்தால் மேலதிகாரிகள்வழி தண்டனை வரவேண்டும், வரும்வரை பணம் அவனிடமே எப்படிச் செலுத்தப்படவேண்டுமோ, அப்படி ப்ராஹ்மணர் குணதோஷங்களை ஒரு பொருட்டாகக் கொண்டு கொடாமலிருப்பதே, தானம் கொடுப்போருக்கு அழகல்ல. அவர்களை தண்டிப்பது ஈசன் பாரம்.

இக்காலத்திய ஸமூகதானம் இங்கு கவனிக்கவேண்டியது. பரோபகாரப் பொதுஸங்கங்களான வைத்யசாலை, பாடசாலை, கைத்தொழிற் சாலை இவைகளுக்குப் பணத்தை மொத்தமாகக் கொடுத்து விட்டு பெரிய தானம் செய்துவிட்டதாக இறுமாந்திருப்பவர் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றனர். இப்பொழுது இதில் சற்றேறக்குறைய எல்லா தானங்களும் அரசன் செய்யவேண்டியவை. இவைகளில் சிப்பந்தி விஷயங்களில் முழுகிப்போனபணம்போக சிறுபாகந்தான் கோரினவரைச் சென்று எட்டும். இவைகளுள் முன்காலத்திய ஆலயப்ரதிஷ்டை வேத பாடசாலை இவைகளைத்தான் கூசாது விரும்பக்கூடியதானமாக எண்ணிச் செய்யலாம் எல்லோரும். மற்ற நாகரீகஸமூகதானங்கள்

(இதன் தொடர்ச்சி 189-ம் பக்கம்)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

மாதவீ கங்கணம்

அத்யாயம்-7

தர்பார் மண்டபம்

மனோஹரமாய் மந்தமாருதம் வீசிக்கொண்டிருக்கும் மாரிகாலத்தில் மப்பு மந்தாரமின்றி ஒரேநீலநிறமாயிருக்கும் ஆகாயத்தை இன்றைக்கெல்லாம் சலிக்காமல் பார்த்துக்கொண்டிருக்கலாம். நகர்ப்புறங்களிலிருக்கும் கூடகோபுர மாடமாளிகைகளின்மீதும், நாட்டுப் புறங்களிலிருக்கும் நெல்பயிர், பசும் புல்தரை முதலியவைகளின்மீதும் ஸூர்யனுடைய பொற்கிரணங்கள் விழுவதின் ஆச்சர்யமே ஆச்சர்யம். ரமணீயமான அன்றைய தினம் காலை, நரேந்த்ரனும் கஜபதி ஸிங்கும் அழகிய ஆக்ரா நகரத்தின் அகன்ற வீதிகளின் வழியாய் குதிரையேறிச் சென்றனர். அந்த ராஜ நகரம், அன்றைய தினம் அதிக கம்பீரமாய் விளங்கியது. முதன் முதலில் டில்லி நகரத்தைக் கட்டியவர் ஷாஜஹான். அதைப்போல் முதன் முதலில் ஆக்ரா நகரத்தை நிர்மாணித்தவர் அக்பர் மஹா சக்ரவர்த்தியாவர். மொகலாய அரசர்கள் கட்டுவித்த கட்டடங்கள்தான் இன்றைக்கும் உலகத்திலுள்ள புராதன கட்டடங்களு ளெல்லாம் சிறந்து விளங்குவன. இவ்வளவு அழியாப் புகழ் எய்திய கோரிகளையும், மசூதிகளையும், மாளிகைகளையும் கட்டுவிக்கத் தொடங்கியவர் அக்பரே.

ஆக்ரா, அல்லஹாபாத் முதலிய பட்டணங்களின் கோட்டைகளையும் அவற்றின் சாதுர்ய அமைப்பையும் நுட்பமாய்க் கவனிப்பவர்கள் அனைவருக்கும் அக்பருடைய அரிய ஸாமர்த்யமும், ராணுவத் திறமையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் விளங்கும். ஏற்றவிடங்களில் கோட்டை கொத்தளங்களை [illegible] அமைக்கும் ஆற்றல் வேறெவருக்குண்டு? அவருக்குப் பின்னர் அவருடைய பேரன் ஷாஜஹான் காலத்தில் மிகவும் ச்ரேஷ்டமான கட்டடங்கள் இரண்டொன்று கட்டப்பட்டன. அவைகளுள் ஒன்றாகிய தாஜ்மஹாலைச் சிற்பசாஸ்த்ர பண்டிதர்கள் உலகத்திலுள்ள ஒன்பது விநோதங்களுள் ஒன்றெனக்கருதுகிறார்கள்.

இக்காலத்தில் போலவே, பதினாறாம் நூற்றாண்டின் கடைசி பாகத்திலும் ஆக்ராவில் ஜனங்கள் அபரிமிதமாய் வஸித்துக்கொண்டிருந்தனர். ஆனால் கஜபதிஸிங் தன் தோழனுடன் அந்நகரத்துக்கு வெளிப்புறத்திலிருந்து ஆக்ராவைப் பார்க்கும்போது அது ஒரு க்ராமம்போலத் தோன்றியது; ஒரு பெரிய பட்டணமாகவே தோற்றவில்லை. உஷ்ண ப்ரதேசங்களுக்குரிய புல்பூண்டு, செடிகொடிகள் வளமாய்ப் பயிராயிருக்கும், நந்தவனங்களுக்குள்ளிருந்த வீடுகளில் சிற்றரசர்கள் ஜமீன்தாரர்கள் மிராசுதாரர்கள் முதலிய ப்ரபுக்கள் வஸித்திருந்தனர். அடர்ந்த காடுபோல் பச்சை நிறமாயிருந்த வ்ருக்ஷராசிகளுக்கிடையில் ஆங்காங்கு சிற்சிலவிடங்களில் தனலக்ஷ்மி வாஸம்புரியும் அரண்மனைகள் பல செறிந்துகிடந்தன.

குதிரை[illegible] தாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்து நகரத்துக்குள் ப்ரவேசித்தார்கள். முன்னர் தோன்றிய ஸௌந்தர்ய காட்சிகளெல்லாம் வரவர மறைந்துவிட்டன. அக்காட்சிகளுக்குப் பதிலாய் ஜனங்கள் கஜகஜவென்று நிறைந்திருந்த தெருக்களும் சந்துகளுமே கண்ணுக்குத் தென்பட்டன. வீடுகள் அநேகமாய்க் கூரைவீடுகள்தான்; தட்டோடு வீடுகள் மிகவும் சொற்பமே. சில்லறை வர்த்தக வ்யாபாரங்கள் செய்து ஜீவித்துவரும் ஸாமாந்ய மனிதர்களுடன் ஏராளமான போர்

எல்லாம் தம்நயம் கருதுவனவாகத்தான் முடியும். இவைகள் விஷயமும் சாஸ்திரங்களில் வரையறுக்கப்பட்டிருக்கிறபடியால், அவைகளின்படி நடத்தலாம். ஆகவே, கீதையில் முன்காட்டிய கருத்துக்கள் அடங்கியதும் பகவானால் ஸாத்விகதானம் என்று காட்டப்பட்டதுமான தானத்தை விரும்பு, மற்றைய ராஜஸ தாமஸ தானங்களை விட்டு விலகு, என்பதுதான் இந்த ஸூத்ரத்தில் அடங்கியுள்ள திரண்ட பொருள்.

வீரர்களும் தங்களுடைய பெண்டு பிள்ளை பரிவார ஸஹிதமாய்க் கூரைவீடுகளில் குடியிருந்தனர். அங்கங்கே தெருக்களில் ஒரு கோணியைப் பரப்பி மொத்தம் ஸுமார் நாலணு விலைக்கு மேல்படாத திநுஸுகளை வைத்து பேரம் செய்துகொண்டிருந்தார்கள் சில எளிய ஸ்த்ரீகள். பழக்கடைக்காரர்கள் காபூல், [illegible]ஸ்தானம் முதலிய மலை ப்ராந்த்யங்களில் உற்பத்தியாகும் பலவித பழவர்க்கங்களை வெகு ஒழுங்காய் அடுக்கி வைத்திருந்தனர். தெருவில் போகிறவர்களுக்குத் தெரியும்படி வைத்திருந்த மிட்டாய்களின்மீது ஈக்கள் மொய்ப்பதைக் கவனியாமல் பணத்தையே பெரிதாக நினைத்து வ்யாபாரம் செய்துகொண்டிருக்கும் கடைகளில் சிறுவர்கள் கூட்டங்கூட்டமாய்க் கூடியிருந்தார்கள். தெருவோரங்களில் அநேக ஸ்த்ரீகள் ஆட்டிறைச்சியைப் பொரியல் செய்து விற்றுக்கொண்டிந்தனர்.

ஸூர்யன் உதித்து இரண்டுநாழிகையாகவில்லை. காய்கறி மார்க்கெட்டிலும் அந்நிய பதார்த்தங்கள் விற்குமிடங்களிலும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். இந்தக் கடைகளுக்குப் போய்வரும் வழிகளில் வண்டிவந்துவிட்டால் ஜனங்கள் அக்கம்பக்கத்து வீடுகளில்தான் ஏறிக்கொள்ளவேண்டும்; அவ்வளவு விசாலமான தெருக்கள். நரேந்த்ரன் வங்காளத்தில் பார்த்திருக்கும் கடைத்தெருவுகளுக்கும் இவ்வூர் கடைத்தெருவுகளுக்கும் எவ்வளவோ வித்யாஸமிருந்தது. நீர்வளம் நிலவளம் ஸம்பூர்ணமாயிருந்த வங்காள நாட்டில் செழிப்பாய் உற்பத்தியாகும் காய்கறிகளில் கால்பங்குகூட ஆக்ராகடைத்தெருவிலில்லை. கீழ ப்ர[illegible]ங்களிலுள்ள காறுறுகளிலும், ஓடைகளிலும், நதிகளிலும் அகப்படும் மீன்களில் அரைப்பாகம் இராது யமுனாநதியில் அகப்படுவன. வங்கநாட்டில் கோழி, வாத்து முதலியவை ஏதேஷ்டமாய் அகப்படும். ஆக்ரா நகரத்துக் கடைத்தெருவிலோ காடை கவுதாரி,கோழி முதலியவைகள் அதிகமாய்க் காணும்.

ஜனநெருக்கமான இத்தெருக்களைக் கடந்து இரண்டு குதிரைவீரர்களும், நகரத்தின் நடுமத்தியில் செல்லும் விசாலமான ராஜவீதிகளிலொன்றையடைந்தனர். அத்தெருவில் மிகப்பெரிய கட்டடங்கள் பல காணப்பட்டன. ப்ரதிவீட்டிலும் மாடித்தாழ்வாரமும், வாசற்படியும், தெருத்திண்ணையும் அதிக கம்பீரமாய் விளங்கிக்கொண்டிருந்தன. அவ்வீதியில் வஸிப்பவர்களெல்லாம் வெகு தனிகர்கள். வெளியூர் வர்த்தகர்கள் அவ்விடத்தில் பட்டு வஸ்த்ரங்கள், கம்பளித்துணி முதலிய விலையுயர்ந்த ஆடைகள் விற்றுக்கொண்டிருந்தனர். கைதேர்ந்த தட்டார்கள், பார்ப்பவர்கள் ப்ரமித்து நிற்கும்படியான அழகிய சித்ர வேலைப்பாடு அமைந்த அநேக நகைகள் செய்துகொண்டிருந்தார்கள். காசி நகரத்துப் பித்தளை பாத்ரங்களும், டில்லி நகரத்து விலையுயர்ந்த நகைகளும், ஜரிகை வேலைகளும் ராஜஸ்தானத்துப் பளிங்கு ஸாமான்களும்; குஜராத் கத்தி கேடயங்களும், வங்க நாட்டு நேர்த்தியான மஸ்லின் ஆடைகளும் இவை முதலிய தனிகருக்குத் தேவையான வஸ்துக்கள் அத்தெருவில் அதிகமாய் விற்கப்பட்டன. இவ்வித விலையுயர்ந்த ஸாமான்களை வாங்க யோக்யதையிராதவர்கள் பலர் அவற்றைக் கண்டாவது களிக்கலாமென்று அத்தெருவுக்கு வந்துகொண்டிருந்தனர். வட இந்தியாவிலும் அண்டை அயல் நாடுகளிலும் செய்யப்படும் ஸகலவித பொருள்களும் ஆக்ரா கடைத்தெருவுக்கு வந்துவிடும். நானாவித கைத்தொழில்களையும், தொழில்காரர்களையும் அன்புடன் ஆதரித்துவந்த அக்பர் மகிபனை ப்ரஜைகள் யாவரும் வாயார வாழ்த்தினார்கள்.

இன்னும் இதர வீதிகளிலுள்ள கடைகளிலும்,மண்டி, மளிகைகளிலும்,பாரஸீகம், தார்த்தரி முதலிய அந்நிய நாட்டு வ்யாபாரிகள் வர்த்தகஞ் செய்துகொண்டிருந்தார்கள். ஐரோப்ய வ்யாபாரிகளும் ஆக்ராவில் குடியிருந்தனர். ராஜநகராகிய ஆக்ராவில் வஸிக்க கிறிஸ்தவர்களுக்கு அநுமதி கொடுத்ததுமல்லாமல், அவர்களை வரவழைத்து வ்யாபாரஞ் செய்யச்சொன்ன அக்பர் வள்ளலவர்களுடைய ஆதரவின்கீழ் போர்த்துகேசிய கிறிஸ்தவர்கள் ஓர் ஆலயங்கட்டி, அதில் இருபது முப்பது கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கு ரஹஸ்யமாய்ப் பாடஞ்சொல்லிக் கொடுத்துவந்தார்கள். இவர்களைப் பார்த்து

டச்சுக்காரர்களும் ஆக்ராவுக்கு வந்து ஒரு வ்யாபாரஸ்தலம் ஏற்படுத்திக்கொண்டு ஸ்வல்ப வர்த்தகஞ் செய்துவந்தனர்.

த்ரவ்யம் புரளும் கடைகளையும் கடைத்தெருக்களையும் கடந்து, ப்ரயாணிகள், வழிப்போக்கர், அந்நிய நாட்டு வர்த்தக வ்யாபாரிகள் இவர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்துக் கட்டப்பட்டிருக்கும் ஸத்ரங்களையும், முஸ்தாபரிகளையும் தாண்டிக் கஜபதியும் நரேந்த்ரனும் கடைசியாகக் கோட்டைவாயிலுக்கு எதிரேயிருந்த விசாலமான மைதானம் வந்து சேர்ந்தார்கள். செந்நிறமான மணற்கற்களால் எழுப்பப்பட்டிருக்கும் உந்நதமான மதிற்சுவர்களின் வலிவையும், அழகையும், அநேக அரண்மனைகளையும் நந்தவனங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நின்ற கோட்டையின் அரியகாட்சிகளையும் இப்போது மறுபடியும் ஒருமுறை கண்டு நரேந்த்ரன் அக்பரது அரிய ஸாமர்த்யத்தையும் அபூர்வ வல்லமையையும் சிலாகித்து நின்றான். யமுனையாற்றுப் பக்கம் தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் ஆழமான அகழிகள் கற்கட்டடத்தால் அமைக்கப்பட்டிருந்தன. ஜலம் ஸமர்த்தியாயிருந்த அவ்வகழிகளும் கோட்டையின் மதிற்சுவர்களுமே ராஜமாளிகைகளை நகரத்தினின்றும் பிரிப்பவை.

சக்ரவர்த்தியவர்களுடைய ராஜபுத்ர படைவீரர்கள் உருவின கத்தி உருவினபடியே மைதானத்தில் நின்று கோட்டைவாயிலைப் பாதுகாத்தனர். ப்ரதிதினமுங் காலையில் ராணுவக் குதிரைகள் இம்மைதானத்தில் பழக்கப்படும். அவற்றைப் பரீக்ஷிக்கும்பொருட்டு, ப்ரதம ஸேனாதிபதி தினந்தோறும் இவ்விடம் வருவார்.

நாலாதிக்குகளிலிருந்தும் ஜனங்கள் ஸமுத்ர அலைகள்போல் கும்பல் கும்பலாய் வந்துகொண்டிருந்தனர். நகரத்தின் நடுமத்தியாகிய இந்தக் கோட்டை மைதானத்தில் கண்கட்டி வித்தைக்காரன், யூனானி வைத்யன், ஜோதிஷ நிபுணர்கள், கரடி பழக்குவோன், குரங்காட்டி முதலியவர்கள் தங்கள் வேடிக்கைகளால் ஜனங்களை ஸந்தோஷிப்பித்துப் பணம் பறித்துக்கொண்டு செல்வார்கள்.

ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடும் இந்த இடத்தில் பலசரக்குக் கடைகளும், பொம்மை ஸாமான் கடைகளும், முக்கியமாய் மிட்டாய்க் கடைகளுமே அதிகமாய் வ்ருத்தியாய்விட்டன. ஸ்திரீகளும், சிறுவர்களும் இந்தக் கடைக்காரர்களைத் தவறுமல் ஆதரித்துவந்தார்கள். ப்ரபுக்கள் பல்லக்குகளிலும் குதிரைகளின்மீதும் ஏறிக்கொண்டு தங்களுடைய பரிவாரங்களுடன் ஜனங்கள் ஏகமாய்க் கூடியிருந்த இந்த மைதானத்தின் வழியாய் அதிக டம்பமாய்ச் செல்வார்கள். சக்ரவர்த்தி யவர்களுடைய முகமலரை ஒருமுறை இருமுறை தர்சித்து த்ருப்தியடையாதபடி அவ்வளவு வாத்ஸல்யம் அவரிடம் வைத்திருந்த அவருடைய ப்ரஜைகள் ப்ரதிதினமும் இவ்வழியாய் அரண்மனைக்குச்செல்வார்கள். நமது போர்வீரர்கள் இருவரும் இக்கோட்டை மைதானத்தைக் கடந்து பலமாய்க் காவல் புரியப்படும் கோட்டைவாயிலுக்குள் நுழைந்தனர். கோட்டையி னுட்புறத்தில், ராஜ்யத்திலுள்ள சிறந்த முஹம்மதிய ப்ரபுக்களும், மன்ஸாப்தாரர்களுமே காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். தெருக்களெல்லாம் அதிவிசாலம். இரண்டு பக்கங்களிலும் உன்னதமான மாடமாளிகைகள். அங்குமிங்கும் சில சிறு கட்டடங்கள். அவ்விடத்தில் அரண்மனைத்தொழிலாளிகள் வஸித்திருந்தனர். பொன், வெள்ளி,ஜரிகைவேலை செய்பவர்களும், தட்டார்களும்,சிற்பிகளும், ஜனனு ஸ்த்ரீகளுக்கு வேண்டிய நேர்த்தியான மஸ்லின் ஆடை நெய்பவர்களும், இன்னும் இதரத் தொழிலாளிகளும் காலை முதல் மாலைவரையில் உல்லாஸமாய்த் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டிருந்தார்கள். அரண்மனைக்கு வேண்டிய சரக்குகளெல்லாம் இவர்கள்தான் செய்துகொடுக்கவேண்டும். இத்தொழிலாளிகள் ஒவ்வொருவரும் தத்தம் வேலையில் ஒப்புயர்வற்றவர்கள். சக்ரவர்த்தியவர்கள் இவர்களைக் கண்ணுகப் பரிபாலித்துவந்தனர். அரண்மனை வேலைசெய்து ஓழிந்த வேளைகளில் இவர்கள் ஆக்ராநகரத்து ப்ரபுக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் வேண்டிய ஸாமான்கள் செய்துகொடுப்பார்கள்.

வழியில் இருபக்கங்களிலுமுள்ள அழகிய கட்டடங்களைப் பார்த்துக்கொண்டே நரேந்த்ரன் ஆம்பர் அரண்மனை வந்துசேர்ந்தான். உடனே கஜபதி அவனைப் பார்த்து, "அப்பா, நீபடுகிடையாயிருந்தபோது உனக்கு வைத்யம்செய்து உன்னை ஆதரித்துவந்த புண்யாத்மாக்களின் வீடு அல்லவோ இது! அரண்மனை வைத்யர்களுடைய சிகிச்சையில்லாவிட்டால், நீ இந்நேரம் யமன் பட்டணம் சென்றிருப்பாயன்றோ? வீரநகரத்து அதிபதி பாடு அன்றுடன் முடிந்துவிட்டிராதோ? இன்றையதினம் இங்கே நீ கஜபதியுடன் நின்றிருப்பாயோ?" என்றார்.

ஸூர்யனுடைய ஒளியால் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அந்த மாளிகையின் ஜன்னலை உற்று நோக்கும்போது, நரேந்த்ரனுக்கு வைத்யர்களுடைய ஞாபகமா இருந்தது? அவன் அவர்களைப் பற்றிச் சிறிதேனும் நினைத்துக்கொண்டிருக்கவில்லை. அவன் எண்ணிய எண்ணமும் வேறு; அவ்விடம் அவன் நாடிய பொருளும் வேறு. கோட்டைக்குள் தான் பூர்வகாலத்தில் புரிந்த ஸாஹஸமும், கண்ட காட்சிகளும், நேர்ந்த ஆபத்துகளும் ஒன்றன்பின் ஒன்றாய் அவனுடைய மனதில் தோன்றின.. அவன் சஞ்சலசித்தனானான்; உடல் முழுவதும்ஒருதரம் நடுங்கிற்று. முகம் வெளுத்தது. சற்றுக்கெல்லாம் கண்ணினின்றும் ஒரு நீர்த்துளி விழுந்தது. இவற்றையெல்லாம் அவன் தன் நண்பன் பாராதபடி சாதுர்யமாய் மறைத்துக்கொண்டான். கஜபதிக்குத் தெரியாமல் அவன் பலமுறை திரும்பித்திரும்பி அந்த ஜன்னலையே பார்த்துக்கொண்டு சென்றான். அவ்வாறு செய்ததற்குக் காரணம் யாதென்பதை நாம் இங்கு குறிக்கவேண்டியது அநாவச்யம். எத்தனை தரம்தான் பார்த்தபோதிலும், நரேந்த்ரன் நாடியதொன்றும்—வளையலிட்ட கையோ, வெண்பட்டுக் கைக்குட்டையோ—அவ்விடம் காணப்பட்ட பாடில்லை. அம்மாளிகையில் மனிதஸஞ்சாரமே இல்லையோவென அவன் ஸந்தேஹப்படலானான்.

நகர்காணுவினின்று பறையொலி சப்தம் கேட்டது. சக்ரவர்த்தியவர்கள் ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்துவிட்டாரென்று உணர்ந்த நரேந்த்ரன், திரும்பித்திரும்பி ஜன்னலைப் பார்த்துக்கொண்டே போவதையொழித்து விரைவாய்ச் சென்றான்.

தங்களுடைய அன்பார்ந்த தந்தையாராகிய ராஜாதிராஜ கம்பீரருடைய திருமுகத்தைக்கண்டு ஆனந்திக்க ப்ரஜைகள் அணைவரும் ஆற்று வெள்ளத்தைப்போல் புரண்டோடினார்கள். கஜபதியும், நரேந்த்ரனும் குதிரைகளைத் துரிதப்படுத்திச் சீக்ரமாகக் கொலுமண்டபம்போய்ச் சேர்ந்தார்கள்.

சக்ரவர்த்தியவர்கள் ப்ரதிதினமும் தம் குடிகளுக்குப் பேட்டி கொடுப்பவராயினும், ஆமத்நகரத்தை ஜயித்துத் திரும்பியபின் ஆக்ராவில் நடக்கும் இந்த தர்பார்தான் முதலாவதாகையால், நாட்டிலுள்ள ப்ரபுக்கள், ப்ரதானிகள், ஸேனாதிபதிகள், சிற்றரசர்கள் யாவரும் கொலுமண்டபத்தில் கூடியிருந்தனர். ஷாஜஹான் வீற்றிருக்கப்போகிற அவ்வளவு சிறந்த மயிலாஸனத்தை யொத்த சிறந்த ஆஸனத்தின் மீதில்லாவிட்டாலும், தமது அபூர்வ ஸாமர்த்யத்தாலும் வல்லமையாலும் ஒரு பெரியராஜ்யத்தை ஜயித்து அதனைத் தன் தர்மபரிபாலனத்தின் கீழ்க் கொண்டுவந்த ஒரு யுத்தவீரருக்கேற்ற ஸிம்ஹாஸனத்தில் அக்பர் வள்ளல் அமர்ந்திருந்தார். உயர்ந்து கம்பீரமாயிருந்த அவர் உருவமும், சிறிதே கறுத்திருந்த அவர் தேகமும், அவருடைய இருண்ட நுட்பமான விழிகளும், விசாலமான அவரது நெற்றியும், பகைவரைப் பறக்கடிக்கும் அவருடைய பருத்த புஜங்களும் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தின. ஜன்ம விரோதிகளுக்கும் அவரைக் கண்டவுடன் அவரிடத்தில் ஒரு பூஜ்யதை யுண்டாயிற்று. கோரமான யுத்தகளங்கள் பலவற்றில் அவருக்கு ஜயத்தை உண்டுபண்ணிய அவருடைய கைகளின் அழகே அழகு. பால்யம் முதல் போர்க்களங்களிலேயே காலங் கழித்து வந்ததனாலும், வயோதிகத்தினாலும். அவருடைய தேகம் கொஞ்சம் வலிவு குறைந்திருந்தது. அநேக சண்டைகளில் முன்நின்று போர்புரிந்தவராயினும், அவர் ஒருபோதும் ஜீவஹிம்ஸை என்பதே செய்தறியார்: இன்னொருவர் ஜீவஹிம்ஸை செய்வதையும் பார்த்து அவர் ஸஹிக்கமாட்டார். எடுத்த காரியத்தை முடிப்பதில் இணையற்ற திடசித்தராகிய அவரிடம் ஓர் அரசனுக்குரிய குணங்கள், வல்லமைகள் யாவும் ஒருங்கே அமைந்திருந்தன. அவர் மஹா தயாளு. மனப்பூர்த்தியாய் ஒருவருக்கும் தீங்கு இழைக்கமாட்டார். பொறுமையையே ஆபரணமாக அணிந்தவர். தஞ்சமென் றடுத்த பேரைத் தப்பாது ரக்ஷிப்பவர். ஜன்ம விரோதிகளையும் சாந்தப்படுத்தித் தன் வசப்படுத்தும் ஆற்றலுடையவர். அவர் வென்ற பகையரசர்கள் யாவரும் அவரைத் தம் ஆப்தமித்ரர்களாக பாவித்துவந்தார்கள். எழுதப்படிக்க அவர் அதிகமாய் அறியாராயினும், ஸமஸ்தானத்திலுள்ள தத்வ சாஸ்திரிகளுடைய ஸித்தாந்தங்களையும், தர்க்க சாஸ்திரிகளுடைய ஸம்வாதங்களையும், பல்வேறுமதாபிமானிகளுடைய கொள்கைகளையும், கவிகளுடைய இனிய பாடல்களையும், கவனமாகக் கேட்டு எளிதில் யாவற்றையும் க்ரஹித்துக்கொண்டு அந்நிபுணர்களுக்குக்கூடத் தெரியாத சில விஷயங்களை உபன்யஸிக்கும் ஸாமர்த்யமுடையவர். தெய்வகடாக்ஷத்தால் உண்டாயிருக்கும் நிகரற்ற புத்திசாதுர்யத்தோடு, எவ்வளவு வருத்தமான தொழிலையும் எளிதில் செய்துமுடிக்கும் வல்லமையும் பொருந்தியவராகிய அவர் தமது அகண்ட ராஜ்யத்தை ஓர் ஒழுங்குபடுத்திச் சீராப்ராஜ்ய பாரஞ்செய்து வந்தாரென்பது சரித்ராசிரியர்கள் யாவரும் அங்கீகரிக்கும் உண்மையே. ராஜ்யவ்யவகாரங்களின் ப்ரதி இலாகாவிலும், அவருடைய மதியூஹத்தைக் காணலாம்.

ஹுமாயூனிடமிருந்து பித்ரார்ஜித சொத்தாய்த் தனக்குக் கிடைத்த ஸ்வல்ப மாகாணங்களை ஆதாரமாகக்கொண்டு, தன் வல்லைமயால் வட இந்தியா முழுவதையும் ஸ்வயார்ஜ்ஜிதமாய் ஸம்பாதித்து, அப்படி ஜயிக்கப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலும் தனது தர்மபரிபாலனத்தை ஸ்தாபித்த அவருடையஸந்நிதாநத்தில் விளங்கிய, அமரிக்கையான யுத்தவீரர்கள், மேன்மையான ராஜதந்திரிகள், ஸமர்த்தரான ஸம்பிரதிகள், நிபுணர்களான வித்வசிரோமணிகள் யாவரும் அரண்மனை ரத்நங்களாவார்கள். பதினாறும் நூற்றாண்டில், ஸர்வமத ஸஹோதரப்பான்மையுடன் தம் குடிகளைப் பூர்ணமாய் நம்பி அவர்களுடைய சுகத்திற்காகவே ஸ்வயநயமில்லாமல்அரசு புரிந்த சக்ரவர்த்தி அக்பர் ஒருவர்தான்.

ஒருகுடையின் கீழிருந்து வட இந்தியா முழுவதையும்ஆட்சிபுரியும்பெருமைவாய்ந்த மொகலாயதிலகத்தினருகே, நின்றுகொண்டிருந்த அவரது புத்ரராகிய ஸலிம் இளவரசரிடமே ஸபையோருடைய நோக்கமெல்லாஞ் சென்றிருந்தன. அவர் சிலதினங்களுக்கு முன் தம் தகப்பனாருடைய ஆணையை மீறி நடந்த விஷயத்தை அரைகுறையாய் அவர்கள் யாவரும் அறிந்திருந்தனர் போலும்; ஆனால் உண்மை யொன்றும் வெளியாகவில்லை. அந்த விஷயத்தைப்பற்றி எவரும் வாய்திறக்கவில்லை. ஸிம்ஹாஸன மேடைக்குச் சற்றுக்கீழே, வெள்ளிக்கம்பிகளால் தடுக்கப்பட்டிருந்த ஓரிடத்தில் சிற்றரசர்கள், ஜமீன்தாரர்கள் ஜாகீர்தாரர்கள் முதலிய ப்ரபுக்களும், ப்ரதானிகளும், அயல் நாட்டு தூதர்கள் பலரும் கூடியிருந்தனர். இந்தியாவில் பலதிக்குகளில் தங்களுடைய வல்லமையால் பல ஜில்லாக்களை ஜயித்து, அவற்றை நீதியாயும் நியாயமாயும் அரசுபுரிந்துவர்த தளகர்த்தர்களும் அங்கு விஜயஞ்செய்திருந்தார்கள். கொலுமண்டபத்தின் முன், ஸாமான்ய ப்ரஜைகள் தங்களுடைய அன்பார்ந்த அரசருடைய வதநத்தை ஆவலாய்ப்பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

அழகாய் அலங்கரிகப்பட்ட அச்வங்கள் அக்கொலுமண்டபத்தின் முன்னர் அழைத்து வரப்பட்டன. சிங்காரமான அம்பாரிகளிடப்பெற்ற யானைகள், தங்களுடைய பாரி சரீரங்களுடன் மெதுவாய் அடிமேலடி வைத்துக் கம்பீரமாய் நடந்துவந்து ஸிம்ஹாஸனத்துக் கெதிரில் நின்று, அரசருக்கு வந்தனஞ் செய்வனபோல் முழங்காலை மடித்துத் துதிக்கையை மேலே தூக்கின. குதிரைகளும்யானைகளும் சென்றபின், மற்றுமுள்ள சில ம்ருகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன. பழக்கப்பட்ட கலைமான்கள், நீண்ட கொம்புகளையுடைய வங்காளத்துக் காட்டெருமைகள், சிறுத்தைப் புலிகள், வங்காளத்துப் பெரும்புலிகள், நானாவித வேட்டை நாய்கள் முதலியன அநேக ஆச்

சர்யமான செய்கைகள் புரிந்தன. கடைசி
யாக, ஸமஸ்தானத்து ப்ரபுக்கள் சிலர்,
இருப்புக் கவசம், சித்ர ஆடைகள் முத
லியவைகளால் அலங்கரிக்கப்பட்ட துரகங்
களின்மீது ஊர்ந்து சென்றார்கள்.

மறுபடியும் நகர்காணுவிலிருந்து பறை
யொலி கேட்டது. அன்றையதினம் கொலு
மண்டபத்தில் நடைபெற வேண்டிய கார்
யங்கள் துவக்கமாய்விட்டன என்றுயாவரும்
உணர்ந்தார்கள். மண்டபத்தில் கூடியிருந்
தவர்கள் யாவரும் குதூஹலத்தால் ஆரவா
ரஞ்செய்ய, ராஜாதிராஜ கம்பீரர் தமது
இனிய குரலுடன், "ஸாலீம் இளவரசே,
இந்த அகண்ட ராஜ்யத்து, வருங்கால அதி
பதியே, எனது செல்வக்குழந்தையே, தவப்
புத்ரனே," என்றழைத்துப் பேசத்தொடங்
கியவுடன்ஸாலிம் ராஜகுமாரர்வணக்கமாய்த்
தலைகுனிந்து அவரது ஆக்ஞைக்கு உட்படத்
தயாராய் எழுந்து நின்றார். "நான் உன்னைப்
பால்யமுதல் அன்பாய் வளர்த்துவந்தேன்.
அரசர்களுக்குரிய கலைகள் யாவற்றிலும்
உன்னைப் பயிற்றுவித்தேன். சீக்ரத்தில்
இன்னும் சில வருஷங்களுக் கெல்லாம்
உன்மீது விழப்போகும் பாரத்தைச் சுமக்க
நீ வல்லவனென் றெண்ணி நான் இது
காறும் அகமகிழ்ந்திருந்தேன். எப்போதும்
பால்யர்கள் கொஞ்சந் துடுக்கானவர்கள்
தான்; யௌவனத்திற்குரிய அவாக்கள்
அநேகம் சில வேளைகளில் தீமையாய் முடி
கின்றன; ஆனால், பச்சாத்தாபம் குற்றத்
தின் பழியைக் குறைத்துவிடுகிறது. பிள்ளை
யினிடம் அன்புடைய தகப்பனார் தன்னு
டைய அன்பின் மிகுதியால் தன் மகன் செய்
பாதகங்களை அறவே மறந்துவிடுகிறார்;
போனதெல்லாம் போகட்டும்; இனியாவது,
உன் அந்தஸ்துக்கேற்ப உன் கடமைகளைத்
தோஷமின்றிச் செய்து முடிப்பாயாக.
உனதுவீரதீரத்துக்கும் அஞ்சாநெஞ்சத்துக்
கும் தக்கவாறு நீதியாயும் ந்யாயமாயும்
இருப்பாயாக. ஸர்வத்துக்கும் கர்த்தாவாய்
விளங்குகின்ற ஒன்றான அந்த ஈச்வரனே
நினக்கு ஸன்மார்க்கத்தை உபதேசஞ்செய்து
நின்னை நல்வழியில் பயற்றிவருவாராக. நீ
இதுகாறும் செய்தனவெல்லாம் போகட்
டும், இனி அதைப்பற்றி யொன்றும்
பேசவேண்டாம். இந்தா, இந்த ராஜ
உடைகளையும், ராஜவம்சத்துக் கத்தியையும்
ஏற்றுக்கொண்டு, ஒரு தரம் நேசிக்கத் தொ
டங்கிவிட்டால் திரும்ப என்றைக்கும் அதி
னின்றும் மாறாத தன்மையராகிய உனது
தந்தையின் பக்கம் உட்கார்" எனச் சொ
ல்லி முடித்தார். தகப்பனார் வாயினின்று
பிறந்த மொழிகளைக்கேட்டு, அவர் கொடுத்த
ஆடைகளையும் கத்தியையும் பெற்றுக்கொ
ண்டு அவரைப் பணிந்து, அவருக்கு வலது
பக்கத்திலிருந்த ஓராஸனத்தில் அமர்ந்தார்
ஸாலிம். செய்த குற்றத்தை பொப்புக்கொ
ண்டு அதற்காகப் பச்சாதாபப்படும் தன்
குமாரனிடம், தந்தையும், அரசர்க்கெல்லாம்
அரசருமாகிய அக்பர் வள்ளல் காட்டிய
பொறுமையையும் மன்னிப்பையுங் கண்டு
வியப்புற்று, அங்குள்ள தநிகர் தரித்திரர்,
வலியோர் எளியோர், வாலிபர் வயோதிகர்,
கீழோர் மேலோர், ஒருவர் தவறாமல் யாவ
ரும் ஒருங்கே மங்களகோஷஞ் செய்தனர்.

ராஜவம்சத்திற் பிறந்த இதர ராஜகுமாரர்
களுக்கும் அவரவர்கள் அந்தஸ்துக்கேற்ற
வாறு பரிசளிக்கப்பட்டன. கடைசியில்
ராஜா மான்ஸிங் அவர்களுக்கு மரியாதைசெ
ய்யும் ஸமயம் வந்தது. அங்குள்ளோர் யாவ
ரும் ஆநந்தக்கடலில் மூழ்கினவர்களாய், கம்
பீரமாய்ச் சக்ரவர்த்தியவர்களுக்கு எதிரிடை
யில் நின்றுகொண்டிருந்த, வீரதீரமும் அஞ்
சாநெஞ்சமும், போர்முகத்தில் சலியாத
ஊக்கமும் படைத்த வீரஸிம்ஹத்தையே
கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தார்
கள்.

மொகலாய அரசர், அந்த தீரபுருஷனை
நோக்கிப் பின்வருமாறு சொல்லலுற்றார்:—

"அழகிய ஆம்பர் நாட்டு அதிபதியே,
உமது நிகரற்ற அந்தஸ்திற்கும், நீர் பால்யம்
முதல் இதுவரை ஸ்வநயம் சிறிதும் பாராட்
டாமல், இந்தியர்கள் உய்யும்பொருட்டு
நமக்கும், நமது ஹிந்து, முஸல்மான் பிரஜை
களுக்கும் செய்திருக்கும் பேருபகாரத்துக்
கேற்பவும், ஒப்புயர்வற்ற உமது சௌர்யத்
துக்கேற்பவும், உமதுஸமயோசிதமதியூஹத்
துக்கேற்பவும், மரியாதை செய்வது எம்மால்
ஸாத்யமன்று. நமது ஸமஸ்தான ஸேனாதி
பதிகளுள் நமது மாளிகைக்கு அத்திப்பூத்

தாற்போல் விஜயஞ் செய்பவர் நீர் ஒருவரே
யன்றோ? உம்மைப்போல் உலகெங்கும் ப்ர
ஸித்திபெற்ற வீரர் நமது ராணுவத்தில்
யாவருளரர்? உம்முடைய பெயர் நமது நாட்
டில் மாத்ரமன்று; அயல் நாடுகளிலும் பர
வியிருக்கின்றது. உமது நாமதேயத்தைக்
கேட்டு நடுங்காத பகைவர் உண்டோ? ஆப்
கானிஸ்தானத்திலும், காபூலிஸ்தானத்தி
லும் எமது அரசாட்சியை நிலைநிறுத்தியவ
ரும், அஞ்சாநெஞ்சம் படைத்த ஆப்கானிய
வீரர்களிடமிருந்து ஒரிஸ்ஸாவைக் கைப்பற்
றியவரும் நீரே. நீர் செல்லும் யுத்தங்க
ளுக்கெல்லாம் உமது ஸ்நேஹிதை விஜய
லக்ஷ்மி விஜயஞ்செய்கிறாள் போலும்."

"வேந்தர்க்கெல்லாம் வேந்தே, தங்களைப்
போல் அவ்வளவு சாதுர்யமாய்ப்பேச அடி
யேனுக்கு ஸாமர்த்யமில்லையாயினும், நான்
தங்களுக்கு என்றைக்கும் ஊழியனாக உழை
க்கக்கடமைப்பட்டவன். விஜயவீரசிகாமணி
யே, அடியேன் இப்போது வைத்திருப்பது த
ங்களுடைய கத்திதான். நீர்வளம், நிலவளம்
முதலியனயாவும் ஸம்பூர்ணமாயுள்ள வங்க
நாட்டை ஜயித்துத் தங்களுடைய ராஜ்யத்
துடன்சேர்த்தவன் அடியேனல்லேன். என்
னைக் காட்டிலும் ஸர்வாம்சங்களிலும் சிற
ந்த சுத்தவீரராகிய ஒருவர்தான் தங்களுக்
கும், அடியேனைப்போல இங்கே தங்களு
டைய தரிசனம்பண்ண வந்திருப்பவர்களுக்
கும் அப்பேருதவியைச் செய்தவராவர். என
க்கு முன், வீரஸ்வர்க்கம் எய்திய எனது
குருவானவர் சென்ற வழியிலேயே நானுஞ்
செல்கிறேன்" என்று பணிவாய் மொழிந்
தார் மான்ஸிங்கர்.

இவருடைய மொழிகளைக் கேட்ட சக்ர
வர்த்தியவர்கள் சிறிது வ்யஸனமான குரலு
டன், "காலஞ்சென்ற ராஜபக்தர்களையும்
ஆப்தமித்ரர்களையும் நாம் ஒருபோதும் மற
வோம். மிகவும் கஷ்டப்பட்டு இந்த ராஜ்
யத்தை யொன்றுசேர்த்து ஸமாதானப்ப
டுத்தி வ்ருத்திசெய்தவராகிய ராஜா தோடர்
மல் என்னும் ஸம்ப்ரதி எமது அரண்மனைக்
கோர் அணிகலமாய் விளங்கியவர். அவர்
தம் வ்ருத்தாப்ய காலத்தில் கங்கையாற்றங்
கரைக்குப்போய் வைதிக ஸிஷ்டராய்க் கா
லங்கழிக்க விரும்பி அங்கு சென்றார். ஆனால்
அந்த சிறந்த ராஜதந்த்ரி, அந்த நிகரற்ற
ஸம்ப்ரதி யன்ற அந்நேரத்துக் கெல்லாம்,
ஸ்தம்பமில்லா மண்டபமாயிற்று நமது
ராஜ்யம். உடனே அவர் எமது வேண்டுகோ
ளுக்கிணங்கித் திரும்பிவந்தார். தமது தாய்
நாட்டிற்காகவும் ஸஹோதரர்களுக்காகவும்
உழைத்துத் தேகவியோகமானார். ஓர்
எஜமானர் தன் ஊழியனுக்கு அளிக்கக்
கூடிய எவ்விதமான வெகுமதியையும் உப
சார வார்த்தைகளையும் பெறக்கூடாத ஸ்தி
தியில் அவர் இப்போதுஇருக்கிறார். இம்மண்
ணுலகை விட்டகன்ற நண்பருக்கு ஒரு சக்ர
வர்த்தி செய்யக்கூடிய சிறந்த உபகாரம்
யாது? கண்ணீர்தான்" என்று கூறும்போ
தே, அவருடைய இருவிழிகளினின்றும் நீர்
தாரைதாரையாய்ப் பெருகிற்று. ஸபையோ
ரெல்லாம் மௌனமாயிருந்தார்கள். "மான்
ஸிங், நம்மாலாகிய வெகுமதியை உமக்கு
அளிக்க நான் ஸித்தமாயிருக்கிறேன். பத்
ராக்கில் உமது குமாரரின் மேற்பார்வையின்
கீழ் நடந்த யுத்தத்தில் நாம் தோல்வியடைந்
தவுடன், வீரரத்நமே, என்றைக்கும் ப்ரபல
மாய் விளங்கக்கூடிய ஷெர்புரஞ் சண்டை
யில் நீர்ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றினீர். இது
வரைக்கும் ராஜ வம்சத்தவர்கள் தவிர வே
றெவரும் பெறாத ஒரு பதவியை உமக்கு
அளிக்க நாம் உத்தேசித்திருக்கிறோம். ஏழா
யிரம் படைவீரர்களுக்குத்தலைவராய்உம்மை
நியமித்திருக்கிறோம். இதோ, இந்த உடை
களையும், என்றைக்கும் மாறாத எமது நட்
பையும் ஏற்றுக்கொள்ளும்" என்றார் அக்
பர். தான் கனவிலும் நினைத்தறியாத அவ்
வளவு மரியாதையைத் தன் எஜமானரிடமி
ருந்து பெற்றுக்கொண்ட மானஸிங்கர்
ஆனந்தபரவசமானார். தனது நன்றியறிதலை
ஒரு வேளை அவர் வெளியிட்டிருந்தாலுமி
ருக்கலாம். அது நமக்குத் தெரியாது.
ஏனெனில், ஸபையோர்கள் பெருத்த ஆர
வாரஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

குதூஹலம் சிறிதே மட்டுப்பட்டவுடன்,
சக்ரவர்த்தியவர்கள் புன்சிரிப்புடன், "என்
அருமை மருமகனே, கங்காநதி ஸமுத்ர
ஸங்கமமாகுமிடத்திலிருந்து காபூல் வரைக்
கும் உள்ள ப்ராந்தியங்களையெல்லாம் ஒன்று
விடாமல் ஜயித்து, அம்மாகாணங்களிலெல்

லரம் உத்தம அரசாட்சியை நிலைநிறுத்திய ஒரு ஹிந்து ராஜாவைப்பற்றி, நமது நாட்டு சரித்ரம் உள்ளமட்டும் புகழ்ந்துகொண்டிருக்கும்" என்றார்.

அதற்கு, ராஜாமான்ஸிங் ஸ்நேஹபாவமாய், "மாமா, ஹிந்துக்களுக்கும் முஹம்மதியர்களுக்கும் பரஸ்பரம் உள்ள ஸ்நேஹாதரப் பான்மையை வ்ருத்திசெய்து, ஹிந்துக்களை அன்பினாலும் ஆதரவினாலும் தன் குடும்பத்துடன் சேர்த்துக்கொள்ளும் அரிய ஸாமர்த்யத்தையுடைய ஒரு மொகலாய சக்ரவர்த்தியையும் ஹிந்துதேச சரித்ரம் ப்ரபலமாய் எடுத்துரைக்கும்" என்று சொல்லிவிட்டு, ராஜா மான்ஸிங்கர் தம்மாஸனத்துக்கு வந்தவுடன், இன்னொரு தளகர்த்தர் அரசர் முன்னிலையில் வந்தார்.

கான்கானாகிய (அதாவது, ப்ரபுக்களுக்கெல்லாம் ப்ரபு) அப்துர் ரஹீம் வந்து அரசர்க்கு வந்தனம்புரிந்தபோது, அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும்,

"மாட்சிமை தங்கிய கான்கானன்!"
"குஜராத்தை ஜயித்தவர்!"
"வீரர்களுக்கெல்லாம் வீரர்!"
"கலைமகள் கருணைபெற்ற கவிஸ்ரேஷ்டர்!"....
"கலிகாலக் கர்ணன்!" என்று பல்வாறு புகழ்ந்துபேசி மகிழ்வுற்றனர்.

"கனம்பொருந்திய கான்கானன் வரவு நல்வரவாகுக" என்று பேசத்தொடங்கினார் அக்பர். "இத்தனை மாஸகாலம் வெளியே போயிருந்த நீர் நமது ஸமஸ்தானத்துக்கு இப்போது வந்தது நமக்கு அளவிலா ஆநந்தத்தைத் தந்தது. வங்க விஜயராகிய ராஜா மான்ஸிங்கைப்போல்,நீரும் குஜராத் மாகாணத்தை ஜயித்தவராவீர். வீரர்களுக்கெல்லாம் வீரரே, உம்மை ஐயாயிர ராணுவவீரர்களுக்குத் தலைவராக்கியிருக்கிறோம். உங்களுக்கு இன்னொரு விஷயத்தில் மரியாதை செய்யவேண்டியிருக்கிறது. உம்முடைய கத்தி துருப்பிடித்து நசித்துப்போனபின்பும், உமது காவ்யங்கள் உலகத்தாரை மகிழ்விக்கும். கொஞ்ச காலத்துக்குமுன் நீர் ஆமத்நகரத்தில் புரிந்த செய்கைகளை நாம் மெச்சுவதற்கறிகுறியாகக் கொடுக்கும் இந்த உடைகளைப் பெற்றுக்கொள்ளும்."

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

ஸ்ரீமத் ராமாயணமும், வால்மீகிரிஷியும்—வால்மீகிரிஷி கி மு 4ம் நூற்றாண்டில் ஸ்ரீமத் ராமாயணத்தை அருளிச் செய்யுமுன் இரண்டு ராமாயணங்கள் இருந்தனவென்று ராய்ஸாஹெப் தினேசசந்த்ரஸேன் என்பவர் கல்கத்தா ஸெனெட் ஹாலில் ப்ரஸங்கித்தார். கி. மு. 1600 வருஷங்களுக்கு முன்னிருந்து வழங்கி வந்த "தசரத ஜாதகம்" என்னும் நூல் கி. மு. 6-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. அதில் ராவணனைப்பற்றியாவது, ஸ்ரீராமர் அவனுடன் போர் புரிந்ததைப்பற்றியாவது ஒன்றும் கூறப்படவில்லையாம். லங்காவதார ஸூத்ரத்தில் ஸீதையை யபகரித்தானென்றாவது, ராமனுடன் போர் புரிந்தானென்றாவது கூறப்படவில்லை. கி.பி. 12-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "ஜயின ராமாயண"த்தில் ராவணன் செய்கைகளைப்பற்றி விஸ்தரித்து ஸ்ரீராமரைப்பற்றி சிறிதே கூறப்பட்டிருக்கிறதென்றும் 12-ம் நூற்றாண்டின் பிறகே இப்பொழுது நாம் அறிந்திருக்கும் ஸ்ரீமத்ராமாயணம் உண்டாயது என்றும் கூறினார்.

ஆங்கிலேய இம்பீரியல் கான்பரன்ஸும் இந்தியாவும்.—ஆங்கிலேய மாகாணங்கள் யாவும் தமக்குள்ளுள்ள விஷயங்களைப்பற்றி யோசிக்கும்படி கூடிய சீக்கிரத்தில் கூடப்போகின்றது. இந்தியாவும், அக்கான்பரன்ஸுக்கு ப்ரதிநிதி யொருவரை யனுப்பவேண்டுமென்று வைஸிராய் சபையில் மிஸ்டர் ஷாபி ப்ரேரேணை செய்ததின் பேரில், இராஜாங்கத்தார் அப்படியே ப்ரதிநிதி யனுப்பலாமென்று ஒத்துக்கொண்டனர்.

இந்தியாவில் கண்ணாடி செய்தல்.—யுத்தத்தினால் ஆஸ்டிரியாவிலிருந்து வரும் கண்ணாடி சிம்னிகள் முதலியவை நின்றுபோய்விட்டன. அப்படி நின்று போனவைகளை இந்தியாவிலேயே செய்யும்படி அம்பாலாவில் ஓர் சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஜப்பானியர் ஆறு பேர் வேலை செய்கிறார்கள். நல்ல சிம்னி முதலியவைகள் செய்யப்படுகின்றனவாம். கூடிய சீக்கிரத்தில் வளையல் முதலியவைகளும் செய்யப்படும்

யுத்தத்தில் ஓர் ஆட்டுக்குட்டியினுதவி:—பெர்ஸாகிளீர் என்னும் இடாலியப்படைகள் ஆஸ்டிரியப் பீரங்கிப் படைகளோடு யுத்தஞ் செய்கையில் ஓர் ஆட்டுக்குட்டியகப்பட்டது. பெர்ஸாகிளீர் வீரன் ஒருவன், அதை அன்புடன் வளர்த்து வந்ததினால் அவனை விட்டுப் பிரியாமலிருந்தது. ஒருநாளிரவு, ஆஸ்ட்ரியப் படைகள், காவலைத்தாண்டி பெர்ஸாகிளீப் படைகளிடம் வந்து விட்டனர். ஆஸ்ட்ரியர்களைக்கண்ட ஆட்டுக்குட்டி பயந்து கத்தவே இத்தாலியர் விழித்து எதிரிகளைத் தாக்கி ஜயமடைந்தனராம்.

விவேக போதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸஹு கார்த்திகைமீ : 1915-ஹு டிசம்பர்மீ } பகுதி 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JAN 1916
MADRAS

பழமொழிப் போதம்

PROVERBS EXPLAINED

எற்றே 'நீர் வாரா விராச்சியத் திற்கவர்தி
பெற்றோனே பித்தனும்' பெத்தநிலை—யுற்றோர்கண்
பாரமார்த் திகம் பயில்வோனுன் மத்தனெனத்
தீரமாத் தோற்றிடு ன்றேர். (14)

'பித்தர்க்குத் தங்கு னம் பெய்து லினும்நேர்மை'
பெத்தர்க்குப் பல்வகைய பேதத்தின்—வைத்துக்
கருதப் படும்வியவ காரிகமே பின்பந்
தருசத் தியமாகுந் தான். (15)

எழிற் சிவத்தின் இன்றியிப்
பொழிற்கண் மிக்க போதம்வைத்
துழப்பர் முத்தி யொன்றிடார்
'விழற்கிறைப்பர் வீணரே' (16)

திகழ்த்தின் முமூட்சுவலாச் சீவர்பலர் துன்பஞ்
செகத்தன் வடிவமெனத் தேறு—துகைக்தம்
உளஞ்சார் விடயத்தற் றேவா துழப்பார்
'இளஞ்சேய் பாமறியா தே' (17)

'அடாதசெ யவரே, படாதன படுவார்'
விடாதயல் விழைவோர், எடாவுரு வெதுவே. (18)

'கணிகைக்கு நல்கிக் கவியாவார்' சென்மப்
பிணிகலவா ஞேயப் பிரமத்—தனுகச்செய்
வ ணைமறி யாதுணர்வை மாயைப் புலன்வசத்தே
அண்ணுவித்துப் புன்பசுவா வார். (19)

'மட்டிரளை யாமண மகற்கெரு
முட்டைபணி கார'மெனல் பொய்யுடற்
கட்டுயிரி னுக்கிடர்க ளாய்மடம்
பட்டவிட யங்களொரு பஞ்சமே. (20)

'வேறுவாய் மெல்பவ ருக்கொரு வாயவல் விதிநேர்தல்' உறுமோர் பற்றில ராயு மவாநினை வொருகோடி, சேறிவா ருக்கிட மேவல் பொருட்படு சிற்றின்பம், பேறுமா றன்னவர் பின்வினை யளவெது பேசிரே. (21)

'முதலே தூர்ப்பலை, யதிலுங் கர்ப்பிணி'
சிதம்வீழ் சிற்றுயிர், எதிர்வன் பற்றதே. (22)

'எறும்பிற் குச்சிரட் டைப்புனல் சாகரம்' என்றல், உறும்பொய்த் தேகம்யா னெனுமபி மானமே வுயிர்க்குப், பிறங்கற் போன்றமெய்ப் பரத்திலோ ரணுவெனப் பெயரும், வேறம்பற் றாகிய மாயைநீப் பருந்துயர் விளைவே. (23)

உரைவிண்ட 'மூகைக் குளறுவாய் சண்டப்
பிரசண்ட' னென்பதுமெய்ப் பிம்ப—சொருபந்
தனையொழிந்தே நெஞ்சந் தனிற்சிதா பாசன்
புனையறிவா மென்றசொலும் பொய். (24)

'நகமுஞ் சதையும்' நவில்மனத்தி னேடே
தகவின் சிதாபாசன் றானும்—செகமேல்
'துரும்புதூ ணமோ' துளங்கிடுமோ பாசன்
பெரும்பிரம மாவனோ பின். (25)

'சிறியோர்தாஞ் செய்த பெரியார்மேற் சேர்தல்
செறியூன்மெய் யிந்தியங்கள் சிந்த—பிறியாத
சத்தாபோத் தாவியற்கை காணுமா ரோபத்தால்
சித்தாய வான்மாவிற் றேர். 6(2)

யோ	தி	இங்	தமிழ்	வார	ராக்ஷஸ வருஷ மார்கழி மீ { சாலிசகம் 1837 கலியப்தம் 5016 } பசலி 1325 கொல்லம்-1091 } 1915 வரு டிசம்பர் மீ 1916 வரு ஜனவரி மீ
	8	16	1	வியா	தச 10-57, ரேவ 8-39. வரி 6-41, கர 10-57, தியா 0-0 அக 28-25, சாபசு வகா தனுர் பூஜை ஸமாரம்பம்
புசு	9	17	2	வெ	ஏகா 13-10, அசு 12-10. பரி 5-21, பத் 13-10, திவி 1-35, ரா 8-35, மூல 4 புத 54-30, பூரா 4 சுக் 51-12, துவாதிதி சர்வ ஏகா வை தண்ட ஏகா.
ர	10	18	3	சனி	துவா 16-31, பர 16-44, சிவ 4-52, பா 16-31. ரா 21-3. மூல 2 ரவி 58-27, திரயோதிதி சனிப்பிரதோ கார் உப.
	11	19	4	ஞா	திர 20-50, ＊ கார் 22-14, சித் 5-11, தை 20-50, தியா 0-0, அதிதி மழை 9-க்குள்.
புசு	12	20	5	திங்	சது 25-48, ரோ 28-21, சா 6-7, வணி 25-48, திவி 6-19, ரா 14-25. அக 28-25, பூரா 1 புத 1-54, உத்தி 1 சுக் 31-12, சதுர்தசிதிதி பிரதியவரோ.
	13	21	6	செ	◯பௌ 31-5, மிரு 34-45, சுப 7-12, பத் 31-5, ரா 29-32, பிரத்தியவரோ தத்தாத்தரேய ஜ கரிநாள். [தெரிசனம்.
ரபு	14	22	7	புத	பிர 35-16, திரு 41-2. சுப் 8-29, பா 3-40, சே 1-57, மார்க பகு மூல 3 ரவி 14-39, பூரா 2 புத 4-10, இஷ்டி ஆருத்திரா
புசு ரா]	15	23	8	வியா	துதி 41-0, புன 4-53, பிரா 9-2, தை 8-38, திவி 13-57, மகராய 20-50, பச்சாதுதயபுத 10-38, மகாசுக் 11-12. திரு 2 ராகு பூச 4 கேது 43-26. [மழை 7-க்குள்.
பு	16	24	9	வெ	திரு 44-56, பூச 51-56, மா 9-52, வணி 12-58, திவி 8-34, அக 28-26, பூரா 3 புத 15-30, வை கரா கரிநாள்
ரசெ	17	25	10	சனி	சது 47-44, ஆயி 55-53, வை 9-36, பவ 16-20, திவி 26-2, மூல 4 ரவி 29-47, மக 2 செ 60-0, உத்தி 3 சுக் 51-12,
சு] பு	18	26	11	ஞா	பஞ் 49-21, மக 58-42, விஷ் 6-28, சௌ 18-32, திவி 27-17, பூரா 4 புத 25-25, கரிநாள். *[சங் சது.
	19	27	12	திங்	சஷ் 49-40, பூர 60-0, பிரி 6-5. கர 19-30, திவி 19-20, சிலவிடங்களில் பனி அதிகரிக்கும்.
ரபுசு	20	28	13	செ	சப் 48-40, பூர 0-7, ஆய 3-26, சௌ 56-1, பத் 19-10, திவி 18-12, அக 28-26, பூரா 1 ரவி 45-20, உத்தி 1 புத 34-0, உத்தி 4 சுக் 31-12, செறப்பிவாட்டம் 45-. [திஸ்ம ராஷ்டகா
செ	21	29	14	புத	அஷ் 46-29, உச 0-24, அஸ் 59-16, சோ 54-27, பா 17-34, திவி 21-9, செல்லாவசிரம் 2-8, சாளாஷ்டமி
பு	22	30	15	வியா	நவ 43-13, சித் 57-45, அதி 48-36, தை 14-51, ஜவி 18-46, மகரபுத 45-10
ரசு	23	31	16	வெ	தச 39-6, சுவா 55-3, சுக 42-6, வணி 11-9, திவி 11-7, பூரா 2 ரவி 58-52, திரு 1 சுக் 11-12.
பு	24	1	17	சனி	ஏகா 34-17, விசா 5-43, திரு 35-5 பய 6-41, திவி 8-16, அக 28-27, உத்தி 3 புத 55-30, சர்வ ஏகா [பிரதோ.
சு	25	2	18	ஞா	துவா 28-56, அனு 47-53, சூல 27-38. தை 28-56 திவி 1-5, திரு 2 சுக் 51-12, துவாதிதி
கு	26	3	19	திங்	திர 23-13, கேட் 43-47, கண 19-54, வணி 23-13, திவி 0-56, மீனகுரு 24-22, திரயோ மாசி.
ரபுச	27	4	20	செ	சது 17-24, மூல 39-43, விர் 12-3, சகு 17-24, திவி 5-26, ரா 7-15, பூரா 3 ரவி 16-27, உத்தி 4 புத 3-20, திரு 3 வக்ரசனி 13-12, திதத்வயம் சர்வ அமா.
சு	28	5	21	புத	●அமா 11-42, பூரா 35-48, துரு 4-17, வியா 52-24, நா 11-42, திவி 2-9, ரா 26-8, அக 28-27, திரு 3 சுக் 31-12, பிரதமாதிதி பிண்டபிய இஷ்டி அனுமத் ஜ.
	29	6	22	வியா	பிர 6-12, உத்தி 32-9, ஹர் 49-22, பவ 6-12, ரா 13-10, புஷ்யசுத சந் சரி மழை 4-க்குள்.
ரபு	1	7	23	வெ	துதி 1-3, திரு 55-32, துரு 29-3, வஜ் 42-36. கௌ 1-3, ரா 10-11, பூரா 4 ரவி 32-1, திரு 1 புத 40-10, சிர உப.
செசு	2	8	24	சனி	சது 52-57, அவி 26-41, வித் 26-24. வணி 24-45, ரா 15-44, மக 1 வக்செ 54-0, திரு 4 சுக் 11-12, சது வரு.
	3	9	25	ஞா	பஞ் 50-23, சத 25-11. விய 30-59, பவ 21-40, ரா 12-34, அக 28-30, தனுர் வியதிபாதம் சிரா.
ரபுசு	4	10	26	திங்	சஷ் 48-51, பூரட் 24-44, வரி 26-2, கௌ 19-37, ரா 20-30, உத்தி 1 ரவி 47-34, திரு 2 புத 1-30 அவி 1 சுக் 55-30, சஷ் உப.
	5	11	27	செ	சப் 48-35, உத்தி 25-5, பரி 22-40, கர 18-43, ரா 27-54, சப் விரு வணசங்கரி நவ கெற்பபோட்ட நிவர்த்தி 15.
	6	12	28	புத	அஷ் 49-39, ரேவ 27-28, சிவ 19-59, பவ 19-7, சே 0-24.
	7	13	29	வியா	நவ 51-55, அசு 30-33, சித் 18-17, பா 20-47, திவி 20-1, ரா 27-45, அக 28-32, அவி 2 சுக் 44-20, சாபசு நவமி திதி போகிப் பண்டிகை

(மார்கழி · 1916 ஜனவரி · தை)

			சனி
குரு	மகர சு 15 மக பு 19 மீன கு		கே
ராகு			செ
ரசு புத			

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸ வருஷ: கார்த்திகை மீ [பகுதி 6

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

5. ஈச்வரன்

ஈச்வரன் ஒருவன் உண்டென்று ஒப்புக்கொள்ளாத மதமே உலகில் இல்லை. ஆனால் சில மத உட்பிரிவுகளில், ஈச்வரன் ஒருவன் வேண்டியதில்லை என்று மறுக்கும் பாகம் காணப்படலாம். இப்படிப்பட்ட பிரிவுகளுக்கு, அந்தந்த மதங்களில் காட்டப்படும் ஈச்வர ஸ்வரூபத்தின் குற்றமாவது, அல்லது அந்த உட்பிரிவின் குற்றமாவது, அல்லது ஈசன் உண்மைத் தன்மையை பின்னர் நன்கு புகட்ட முன்னர் ஒதுக்கிவைத்துப் பேசுவதாவதுதான், காரணமாக இருக்கும். நமது வைதிக மதத்தில் காட்டியபடி ஈச்வரன் உணரப்படின், முன்னர் கூறிய முதல் இரண்டுவித முகாந்தரங்களும் அடிபட்டுப்போக, மூன்றுவது முகாந்தரமே தத்கால நிரீச்வரவாதத்திற்குக் காரணமாக இருக்கும். வெளிநாட்டார் நிரீச்வரவாதத்திற்கு, முன்னர் கூறிய முதல் இரண்டுந்தான் முகாந்தரங்களாகும்: வைதிக நிரீச்வர வாதத்திற்கு மூன்றுவதாகக் கூறியதுதான் முகாந்தரம். ஆகவே வைதிக ஸம்பிரதாயப்படி வெளியிடப்படும் ஈசன்; இல்லை என்று ஒருவராலும் ஸ்தாபிக்கமுடியாது. அத்தகைய ஈசன் தன்மையை இங்கு எடுத்து ஆராயப் புகுவோம்.

இதுவரையிலும் கூறிவந்த கர்ம நுட்பங்களிலிருந்து, உலகில் ஜீவர்கள் அநுபவிக்கும் ஸுகதுக்கங்களுக்கெல்லாம் அவர்கள் அப்பொழுது அப்பொழுது செய்யும் கர்மா காரணமேயல்ல: பெரும்பாலும் ஜீவர்கள் செய்யும் முயற்சிக்கும் பின்னே தொடரும் ஸுகதுக்கங்களுக்கும் ஏற்றத் தாழ்வு நன்றுகக் காணப்படுவதால் பின்னவைகளுக்கு வேறு காரணம் இருக்கவேண்டும்: அவை, அந்த ஜீவர்களது பூர்வகர்மாக்களின் ஸம்ஸ்காரங்களான ப்ராரப்தகர்ம வாஸநைகளே: இவைகளைத் தவிர, வேறு காரணங்களான காலம், ஸந்தர்ப்பம், ப்ரபஞ்ச காரணம், ஜீவன் தன்மை ஆகிய இவைகளை மாத்திரம் காரணமாக ஒப்புக்கொண்டால் போதாது என்று கண்டோம். அதாவது காலமும், வெளிவிஷயஸந்தர்ப்பங்களும் எப்பொழுதும் பொதுவாதலாலும், ஜீவன் தன்மைப்படி ஸுகம்வருவது அவன் இஷ்டத்திற்கேற்ப, ஆனால் துக்கம் அவனால் விரும்பப்படாததால் அதன் வரவுக்கு இது தகுந்த காரணமாகாததாலும், இவைகள் பொதுவாக ஸுகதுக்க வரவிற்குத்தகுந்த முகாந்தரங்களாகா. பொதுவாக ச்வேதாச்வதர உபநிஷத்தில் காட்டியபடி, காலம், ஸ்வபாவம் (வாஸனை), நியதி (கர்மா), யதிர்ச்சை (அவிஹிதா நிஷித்த கர்மாக்கள்) பூதங்கள் (வெளிவிஷயங்கள், யோனி (ப்ரகிருதி: ப்ரபஞ்சகாரணம்), புருஷன் (ஜீவன்) ஆகிய இவைகள் மாத்திரம் உலகில் ஜீவர்களுக்கு ஏற்படும் ஸுகதுக்கங்களுக்குத் தகுந்தகாரணங்களாகா. இவைகளில் கடைசியது ஒழிந்த மற்றை

யவைகள் எல்லாம் ஜடமானதால்; தாமாகத் தொழிற்படும் தன்மை யற்றனவாயும், முடிவிலுள்ள சேதனமோ தானாகத் தொழிற்படும் தன்மை உடையதாயினும், சிற்றறிவு ஸுகபக்ஷபாதம் உடையதாயும் இருப்பதுதான் இவைகள் தகுந்த ஸுகதுக்க காரணமாவதற்குத் தடையாக உள்ளவை. ஆகவே, இவைகளை எல்லாம் தத்தம் தன்மைகளின்படி தொழிற்படச் செய்து ஜீவர்களுக்கு ஸுகதுக்கங்களை ஒழுங்குப்படி ஊட்டுவிக்க ஒரு அறிவுடைய பொருள் வேறாக நடுநிலையில் இருத்தல்வேண்டும். இதற்கே, ஈச்வரன் என்று பெயர்.

இப்படி உலகில் நடைபெறும் தொழில்களுள் மிகவும் வியக்கத்தக்கதான ஸுகதுக்கவரவிலிருந்தேதான் ஈச்வரன் இருப்பு ஊஹிக்கப்படலாம்: இதைத் தவிர, முதலில் ஈச்வரனை உணர வேறு வழியே இல்லை. இந்தத் தொழிலின் சிறப்பை எடுத்து ஆராய்ந்தால் ஈச்வரனது தன்மைகள் நன்கு வெளியாகும். உலகிலுள்ள அநேகம் பொருள்கள் நேரில் நமது இந்திரியங்களால் உணரப்படுவதால் அவைகளின் இருப்பு நமக்கு விளங்கிவிடும். இதனால் நேரில் உணரப்படாதது இல்லை என்ற குதர்க்க புத்தி நமக்கு வரலாம். இதை ப்ருதிவி, அப்பு, தேஜஸ் ஆகிய இந்த பூதங்கள் மிகுந்துள்ள உலக வஸ்துக்கள் திடப்படுத்தலாம். ஆனால் வாயு பாகம் அதிகமாயுள்ள காற்றுப் போன்றவைகள், இந்த குதர்க்க புத்தியைச் சற்று மாற்றலாம். வாயு அசையாதிருப்பின் ஒரு இந்திரியத்தாலும் உணரப்படமாட்டாது; அசைந்தால் ஸ்பர்சேந்திரியத்தால்தான் உணரப்படும். நாமிருக்குமிடத்தில் அசையாது, வேறிடத்து அசையுமாயின் அதன் இருப்பை நாம் தொட்டு உணர்ந்துகொள்ள முடியாது: அவ்விடங்களிலுள்ள இலை முதலியவைகளின் அசைவால்தான், வாயு அங்குள்ளது என்று உணரவேண்டும். ஆகவே காரியத்தைக் கண்டு, தகுந்த காரணத்தை ஊஹித்துணருவதும் நேரிட உணருவதற்கு நிகர் என்ற நற்புத்தியை வாயு உண்டாக்கிவிடுகிறது. இதைக்கொண்டு சப்தத்தை ஸூக்ஷ்மமாகத் தாங்கிக் காதிற்கு வெளியாக்கும் தொழிலுக்குக் காரணமான அரூப ஆகாசம் என்ற பூதம் இருத்தல் வேண்டும் என்று உணரப்படும். மேலும் நம்முள் பற்பலவித எண்ணங்கள் ஒரு இந்திரிய உதவியின்றியே நடைபெறுவதாலும், அவைகளின்படி இந்திரியங்களே பெரும்பாலும் தூண்டப்படுவதாலும், முற்கூறிய பூதங்களைவிட அதிக நுட்பமானதும் தனித்துக் காட்ட முடியாததுமான மனம் எனும் பொருள் நம்முள் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட மனதின் எண்ணங்களை விலக்கி, ஒழுங்காக ஏற்படவேண்டிய ஸுகதுக்கங்களை மனதிற்கு ஊட்டுவித்துவிடும் பேராற்றலுடைய, மனதைவிட நுட்பமான பொருள் ஒன்று இருத்தல்வேண்டும் என்றும், அதுவே ஈச்வரன் என்றும் புலப்படுவதால் இவர் ஸர்வபூதங்களிலும் நுட்பமானவர் (ஸர்வபூதேஷு கூட:) என்பது விளங்கும். இதுபற்றியேதான் இவர் வெளிப்படையாக உணரப்படாமலிருக்கிறார். இப்பொருளின் தடுக்கும் சக்தி ஜீவர்கள் உள்ளதும், அவர்கள் ஸஞ்சரிக்கக்கூடியதுமான எல்லா உலகங்களிலும் காணப்படுவதால் இவர் எங்கும் வ்யாபித்தவராக இருத்தல்வேண்டும் (ஸர்வவ்யாபீ). இவர் மூலமாகவே ஜீவர்கள் மனதில் வெகு நுட்பமாக உள்ள வாஸனா கர்மங்கள் தம்

தம் தன்மைப்படி தொழிற்படுவதால் இவர் எல்லாவற்றுள்ளும் இருப்பவர் (அந்தராத்மா). இவரே ஸுகதுக்கம் தந்தபடி ஜீவராசிகளுக்கு ஊட்டுவிக்க அவர்கள் மனத்துள்ளேயே இருந்துகொண்டு எல்லாக் கர்மாக்களையும் எதிரிட்டறிபவராதலால் இவர் கர்மாக்களை ஊன்றிப் பார்ப்பவர் (கர்மாத்யக்ஷ:). ஆகாயம், வாயு உள்ளும் புறம்பும் பரவி, அதன் அசைவிற்கெல்லாம் இடம் தந்து, தான் எப்படி ஒருவித மாறுபாடும் அடையாமலே இருக்கிறதோ, அப்படி இவர் எல்லாவற்றிற்கும் தாங்கலாக இருப்பதால் எல்லா பூதங்களுக்கும் ஆதாரமானவர் (ஸர்வபூதாதிவாஸ:). இதுபற்றியேதான் இவர் தன்மையை நமக்குணர்த்த வந்த வேதம்,

'ஏகோதேவ:, ஸர்வபூதேஷு கூட:, ஸர்வவ்யாபீ; ஸர்வபூதாந்தராத்மா; கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ, சேதா, கேவலோ நிர்குணஶ்ச'.

என்று கூறியுள்ளது. இதில் கேவலன், நிர்குணன் என்ற சொற்கள் ஈச்வரனை முற்கூறியபடி எல்லாம் உணர்ந்து அனுபவித்துத் தேறுங்கால் அவன் நமக்குக் காணப்படும் விதத்தையும், அவன் எப்பொழுதும் உள்ள தன்மையையும் விளக்குவன ஆதலின் அந்த விஷயத்தை மேல் ஞானயோக விஸ்தாரத்தில் எடுத்தாராய்வோம்.

இதுவரையில் கூறிவந்த தன்மைகளை எல்லாம் ஸர்வஜ்ஞத்வம் என்ற ஈச்வரன் தன்மைக்குள் அடக்கிவிடலாம். இவ்வுலகிலுள்ள ஜீவராசிகளுக்கும், அவர்கள் கர்மவாஸனா பேதங்களுக்கும் கணக்கேயில்லை. இனி மற்றைய உலகங்களிலுள்ளவர்களையும் சேர்த்தால் கேட்கவேண்டுமா! இவர்கள் கர்மாக்களின் பேதங்களில் ஒருவிதக் குழப்பமுமின்றி அவரவர்களுக்குத் தகுந்த கர்மபலன்களை த[illegible] காலங்களில் த[illegible]தபடி கொடுப்பதற்கு வேண்டிய உ[illegible] தெளிவாக இருக்கவேண்டும் [illegible]. இப்படிப் பலவகைப்பட்ட தெளிவான உணர்வு அவன் தன்மை என்பதைச் சேதனன் என்ற பதம் காட்டி இங்கு காட்டப்பட்டவைகளை எல்லாம் அடக்கிவிடுகிறது ஸர்வஜ்ஞத்வத்துள். இப்படிப்பட்ட தொழிலை ஓய்வு ஒழிவின்றி, சளைக்காது செய்வதால், ஈச்வரன் தன்மை என்றும் மாறாததாயும், வெளி விஷயங்களால் தாக்கப்படாததாயுமுள்ள ஒருவித அமைதியான உள் திருப்தியுடன் கூடியதாய் இருத்தல்வேண்டும். இதுபற்றியே அவன் மாறா அமைதியுடையவனாதல் வேண்டும் (நித்யத்ருப்தன்). இந்த ஈச்வரன் நித்ய திருப்திக்குக் காரணமாகவுள்ள வஸ்து அவன் உண்மைஸ்வரூப உணர்வாகவே இருத்தல் வேண்டும். இல்லாவிடில், உண்டாகும் திருப்திக்கு ஏற்றத் தாழ்வு ஏற்பட்டுவிடும். மேலும் அந்த உணர்வு எப்பொழுதுமே அவனிடமிருத்தல் வேண்டும். ஆகையால் எப்பொழுதும் உணர்வையே உடையவனென்றுச்சுது (அலுப்தபோதன்). இத்தன்மைகளுடன் இப்படி எல்லா ஜீவர்களையும் தன்னுள் அடக்கியுள்ளவன் பிறரிடம் அடங்கியிருப்பது நியாயமில்லையாதலால் ஈச்வரன் தன்னாற்றலுடையோனாயிருத்தல்வேண்டும் (ஸ்வதந்திரன்). தொழில்நடத்தநடத்த தொழிலாளி வலிகுன்றுவது வழக்கம். ஈசன் விஷயம் அப்படியில்லாமல் உலகம் அனாதியாக இப்படியே ஓயாது நடைபெற்று வருவதால் அவன் ஆற்றல் குன்றாதவனே (அலுப்த சக்தன்) மேலும், கர்மபலனைப் பற்பல விதமாக, ஜீவர்கள் செய்யும் விடாமுயற்சிகளையும் விலக்கி, ஒழுங்குப்படி ஊட்டிவிடும்

திறனிருப்பதாலும், அப்படிச் செய்ய வாஸனா கர்மாக்களை தொழிற்படச்செய்வ தோடுங்கூட அவைகள் தொழிற்பட்டிற்கு உதவியாக இருந்து ஸுகதுக்கங்களை ஸரிவரக்காட்ட வெளிப்ரபஞ்சங்களை ஆக்கி.அளித்து, அழித்து, அடக்கி, ஆட்கொண்டு வரும் திறனிருப்பதாலும் வரம்புகடந்த திறனுடையவனாக இருத்தல்வேண்டும் ஈச்வரன் (அனந்த சக்தன்.) இதுபற்றியே, நமது சாஸ்திரங்கள்,

'ஸர்வஞ்ஞதா, திருப்தி: அனாதிபோத: ஸ்வதந்த்ரதா, நித்யம் அலுப்த சக்தி: அனந்தசக்தி: (ச); விபோ: விதிஞ்ஞா: ஷடாஹு: அங்கானி மஹேச்வரஸ்ய'

என்று, ஸர்வஞ்ஞத்வ முதலிய ஆறு ஈச்வரன் தன்மைகளை அவனது ஆறு அங்கங்களாக எடுத்துக்காட்டியுள்ளன. இவ்வாறு ஈசன் தன்மைகள் அவனது ஸர்வஞ்ஞத்வமான கர்மபலம் தருவதற்குத் தகுந்த ஆற்றலிலிருந்து நன்குணரலாம் என்பதையே பதஞ்ஜலிபகவான் யோகஸூத்ரம் ஸமாதி பாதம் 29-ம் ஸூத்ரத்தில்,

தத்ர நிரதிசயம் ஸர்வக்ஞபீஜம்

என்று காட்டியிருக்கிறார். மேற்கூறிய கர்மகதி ஸம்பந்தமே எப்பொழுதும் ஈச்வரனுக்கு இல்லையாதலால், க்லேச கர்மவிபாக ஆசய ஒட்டே எப்பொழுதும் இல்லாத உணர்வுப் பொருள் ஈச்வரன் என்று கூறிய பின்னர் நேராக இவனைப் போதிக்க வந்த இடத்தில் இந்த ஸூத்ரம் அமைந்துள்ளது. மேலும் இவனிடம் மோக்ஷ நிலைக்கு வேண்டியதான ஞானம், வைராக்யம், ஈச்வரத்வம், தபஸ், ஸத்யம், க்ஷமை, தாங்கல, ஸ்ருஷ்டி, உடபரவல், தனி நிலைப்பாயிருத்தல், ஆகிய தன்மைகளிருப்பதால் ஈச்வரனை இந்த குணங்களுடைய அருபப்பொருள் என்று நன்றாக உணரவேண்டும்.

இந்த ஈச்வரன் தன்மைகளாகக் காட்டப்பட்ட ஆறுசக்திகளுக்கும் மாயை என்று பெயர். கர்மகதிக்குள் அகப்பட்டுள்ளவர்கள் எல்லோருக்கும் ஈச்வரன்மாயையுடனேயேதான் காணப்படுவன். இவனுக்குத்தான் ஸகுணன் என்று பெயர். இவனை முன்காட்டியுள்ள தன்மைகளைப் பின்பற்றி மனதில் பதித்துக்கொண்டும், அவனிட்ட கட்டளையான வேதசாஸ்திர விதிப்படி ஆத்மகுணங்களில் பழகிக்கொண்டும், தேறி வருவதற்கு ஞானதபஸ் என்று பெயர். இதுதான் ராஜயோகம் விவேகபக்தி எனவும்படும். முன்னர் கூறப்பட்ட கர்மபக்தி யோகங்களில் செய்யப்படுவன காஷ்ட தபஸ், ஹடயோகம், மூடபக்தி எனப்படும். இந்த ஈச்வரன் அருபனாயினும் மாயையின் வல்லமையால் அநேக அவதாரங்களும், அவஸர ரூபங்களும் எடுத்து ஞான அல்லது காஷ்ட தபஸால் தம்மை ஆராதிப்பவர்களுக்கு அவர்கள் ஆராதனரூபமாகவே தோன்றி அனுக்ரஹிப்பான். இவைகளுள் ஞானதபஸில் தேறிவருபவருக்கு ஈச்வரன்நித்யதிருப்தித்வத்தில் ஈடுபட்டு நின்றுவிடும் பழக்கம் மேலிட்டுவிடுமாயின், மாயாசக்தி ஈசனை விட்டு அவர்கள் அனுபவத்தில் நழுவி விட, ஸகுண ஈச்வரன் எப்பொழுதும் ஏதாகவே தன்னை அனுபவித்துக்கொண்டே இருந்தும், நமக்கு ஸகுணனாக விளங்கிக்கொண்டே இருக்கிறானே, அந்த நிர்க்குணனந்த ப்ரஹ்மமாகி, ஞானியையும் விழுங்கியே நின்று விடுவன். அப்பொழுது வஸ்து ஒன்றாகவே தானிருக்கும் ஞானிக்கு, ஈச்வரன் அனுபவத்திலுள்ளதுபோல: இந்த நிலையைத்தான் வேதம் கேவலோ நிர்குணஶ்ச என்று

காட்டி முடித்தது, ஈச்வரன் தன்மையை விளக்கவந்த விடத்தில். இந்த நிர்குணத்தையும் வேதம் வெகுவாக வேறு இடங்களில் கூறாமல் கூறியுள்ளது, ஸகுணனை நேரே காட்டி: ஆகவே வஸ்து ஒன்றுதானாயினும், அதுவே மாயாசக்தி ஸஹித ஈச்வரனாக விளங்கிக்கொண்டிருக்கும் ராஜயோகிக்கு. அவன் ஞானயோகியாகித் தேறிவிடுங்கால், அது, அது மாத்திரமாக இருக்கும். இதுதான் ஈச்வரன் விஷய ஸகுணநிர்க்குணப் பொருத்தம்.

இப்படிப்பட்ட ஈச்வரன் கர்மகதிப்படி எல்லோருக்கும் அவர்கள் கர்மபலன்களைத் தருவதில் பொதுக்காரணம்; சிறப்புக் காரணம், அவரவர்கள் கர்மவாஸனைகள். ஈச்வரன் பெரிய மழைபோல; கர்மா, விதைகளின் குணதோஷங்களே, வாஸனா விதைகள் முளைத்தோங்கும் தன்மைகள்போல. வாஸனைகள், இப்படியிருந்தும் ஜீவர்கள் முயற்சிகளால் கூடியவரை அவைகள் ஒழுங்குபட, ஜீவர்கள் தேறி வரலாம். ஈச்வரன் பொதுவாகக் கர்மபலனை ஊட்டுபவனாயினும், கர்ம சக்ரத்தைவிட்டுத் தப்புவிக்க தன் அருளையும் காட்டுபவனே. இந்த அருள்தான் வாஸனைகளின் தன்மையாலும், அவைகளை ஒழுங்குபடுத்த எடுத்துக் காட்டியுள்ள சாஸ்திரங்களை வெளியிட்டிருத்தலாலும் தெரியவரும். இதுவுமன்றி, சிறப்பாக இந்த அருள் அவன் கட்டளையான வேதசாஸ்திர ஒழுங்குப்படி நடப்பவர்களிடம் நன்கு வெளியாகும். இவர்கள் கர்மாக்களுள் அபிவிருத்திக்குவேண்டிய புண்ய பாபபலன்களை முதலிலும், வேண்டாதவையும் தடுக்கக் கூடியவைகளுமானவைகளைத் தேறிய பின்னரும் பலிக்கும்படிச் செய்வர் ஈச்வரன் தமது அருள் விசேஷத்தால். வெகு திடமான கடவுள் வழிபாடு செய்பவருக்கு பலமான கெட்ட ப்ராரப்தங்களும் திடீரென்று ஒதுக்கி எறியப்பட்டு, ஈச்வரபக்தியின் பலன் உடனே உண்டாகி விடும்; அதில் மேன்மேலும் விடாது திடமானதும் புண்யமானதுமான ஈச்வர உபாஸனையையே செய்துவந்தால். அதன் முழு முடிவான ஞானம் வந்து அமரும் வரையில், தடைக் கர்மா பலிக்காமலே ஒதுங்கி நிற்கலாம் அவன் அருளால். ஆகவே ஈச்வரன்கிருபைக்கும் அவர் கர்மகதியில் அத்யுத்கட கர்ம ஒழுங்கிற்கும் ஒருவித முரணும் இல்லை. இந்த அருளைக்காட்டும்விஷயத்தில் ஈச்வரன் பக்ஷபாதியுமல்லன்; அவன் அருள் ஸூர்யன் ஒளி போல் எங்கும் எப்பொழுதுந்தான் உள்ளது: பக்தர்கள் தமது மனதை,பொது அருளைமுன்னிட்டு சாஸ்திர வழியில் சீர்படுத்திக் குற்றம் நீக்குவதால், கண்திறந்துகொண்டிருப்பவர் ஸூர்யன் ஒளிப்பயனைப் பெறுவது போல ஈசன் சிறப்பான கிருபைக்கு ஆளாகின்றனர்: மற்றவர்களோ, குருடர் கண்ணைத் திறவாதவர் இவர்களைப்போல, கிருபைக்கு ஆளாகாமலே திண்டாடுகின்றனர்.

இவர்களுக்கு கர்மகதி ஒழுங்குப்படி வர வேண்டிய கர்மபலன்களுள் இவர்கள் அபிவிருத்திக்கு எதிரான கொடிய கர்மாக்களை முன்னர் ஈச்வரன் பலிக்கச்செய்து இவர்களைத் தாழ்ந்த நிலைகளில் வீழ்த்தி மனஸ் ஸ்வதந்திரத்தின் அருமையை திண்டாட்டத்தால் உணர்ந்து ஆவலுடன் அதை விரும்பும்படிச் செய்வர். ஆகவே, ஈச்வரன் கொடுமையிலும், ஒருவிதக் கருணைதான் உண்டு. ஆனால் நழுவுவது வெகு எளிதாயும், மேலே கிளம்பி நற்கதி பின்னர் அடைவது மிக மெதுவாகவும் கிரமமாகவும் இருப்பதால் நமது சாஸ்திரங்கள், நாம் நழுவித் தாழாதிருக்க, 'முதல் கோணல் முற்றும் கோணல்: பாபத்திற்கு ஆளானால் மேல் நிவர்த்தியே இல்லை. தவறினால் போய் விடும் நற்கதி. அதோகதி யடைந்தவர்

மீளார்' என்றெல்லாம் நம்மை எச்சரிக்கை செய்கின்றன. ஆகவே, இங்கு காட்டியுள்ளபடி ஈச்வரன் கர்மகதியையும், கிருபையையும் ஒன்றுக்கொன்று முரணின்றி தன் தன்மைக்கு இணங்கவே நடத்திவருகிறான்.

இப்படிப்பட்ட ஈச்வரன் என்ற மிகுந்த வல்லமையுடைய பொருள், ஒன்று உண்டு என்று நம்பவேண்டியதே இல்லை என்ற ஆக்ஷேபனை நான்கு விதமாக எக்காலத்திலும் இருந்துகொண்டே இருக்கின்றன. (1) உலக விஷயங்கள் தொழிற்பட அவைகளின் ஸ்வபாவமே போதும், அவைகளை விட வேறான எங்கும் பரவியுள்ள சேதனப் பொருளான ஈச்வரனொருவன் வேண்டியதில்லை என்பவர் ஸ்வபாவ வாதிகளான ப்ரகிருதித்வ சாஸ்திரிகள். ஸ்வபாவம் ஜடமேயாதலால் அதை ஒழுங்காகத் தொழிற்படுத்துவதற்கும், ஒன்றுது தொழிற்படும்படி செய்வதற்கும், அறிவுடைய தூண்டுகோல் ஒன்று வேண்டியது அவசியம் என்பதே அதற்கு விடை. நீராவிக்கு எல்லாவிதத் தொழில்களையும் செய்யும் ஸ்வபாவமிருப்பினும், அந்த ஆற்றல் வெளியாகக்கூடிய நிலையில் நீராவி வண்டியிலிருப்பினும், அது ஒழுங்காகவும் குறைவின்றியும் நெடுங்காலம் தொழிற்பட அறிவுடைய ஓட்டுபவனது தூண்டுகோலையே பொருத்துள்ளது. இதுபோலவே ப்ரபஞ்சவிஷய ஒழுங்கான ஓய்வில்லா வ்யவஹாரத்திலும் ஈச்வரனது தூண்டுதலின்றி முடியாது (2) ஜீவர்களுக்கு வரும் ஸுகதுக்க விசித்ரங்களைப்பார்த்தால் ஈச்வரன் கொடியவன், பக்ஷபாதி என்று தோற்றுகிறதே; ஆதலால் அப்படிப்பட்ட ஈச்வரனை ஒப்புக்கொள்ளவேண்டியதில்லைஎன்பர் ஓயா ஸந்தேஹிகளான ஸம்சயர்கள். இந்த விஷயத்திற்குத்தகுந்த விடை இதன் முன்பாகத்தில் நன்கு கொடுக்கப்பட்டுள்ளது, ஈச்வரன் கிருபை கர்மகதி இவைகளைப்பற்றி விவரித்தவிடத்தில் (3) உலகில், இருக்கும் வரை ஸுகமாக இருக்க ஈச்வரன் உளன் என்று ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆதலால் ஈச்வரனை ஒப்புக்கொள்ளவேண்டியதில்லையேஎன்பர் பிரபுக்கள். ஈச்வர உணர்வு சற்றுக்கூடவாராது இவ்வுலகில்வாழவே முடியாது. நல்ல ஸுககாலங்களில் சற்று ஈச்வரனை மறக்கலாம். துக்க காலங்களில் ஈச்வரனைப்பற்றிய முன் பாவனைகள் சிதைந்து விடலாம். ஸாதாரண ஸமயங்களில் பிறர் ஸுகதுக்கங்களையும் தமக்கு அவை வந்துவிடுவது எளிதென்பதையும் கருதாதிருக்க முடியாததால் அவைகளை ஒட்டி ஒரு வித ஈச்வரபாவனையும் நமது மனதில் எழாதிருக்கமுடியாது. ஒருவிதக் கலக்கமும் இல்லாத தருணங்களில் நமது மனதின் தன்மையால் ஏற்படும் சிற்றறிவு சிறு எண்ணங்களுக்கு ஏற்ற பேரறிவு பேரெண்ணங்களைப்பற்றியவைகளை மனதில் ஊறிக்கொண்டிராது தடுக்கமுடியாதாதலால் இவைகளுக்கு இடனாக உள்ள ஒரு பெரிய அறிவுப்பொருளின் இருப்பு விஷயத்தை மறக்கவே முடியாது. ஆகவே ஈச்வரனைப்பற்றிய ஒருவித பாவனையும் இல்லாமலே ஒருவன் வாழ்நாட்களைக் கழித்துவிடவே முடியாது, மனிதன் ஆராயும் தன்மையுடனிருப்பவனாகையால். (4) வைதிக சாஸ்திரங்களிலேயே சிலவற்றில் ஈச்வரனை ஒப்புக்கொள்ள வேண்டியதில்லையென்று கூறப்பட்டுள்ளது என்பர் சாஸ்த்ரிக்ஞர்கள். இந்த சாஸ்திரங்களில் மோக்ஷத்திற்கு முக்ய ஸாதனமாகக் காட்டவந்தவைகளில் தேர்ச்சியடைந்த பின்னர், மேல் நிலையாகிய ஈச்வரன் விஷயம் கவனிக்கப்படவேண்டும் என்பது பற்றி, அவைகளில் ஈச்வரன் விஷயம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும், அவைகள் முடிவாகக் காட்டும் வஸ்துக்களில் ஈச்வரத்தன்மைகள் ஏற்றியே கூறப்பட்டுள்ளன: அதாவது அவைகள் கூற எடுத்த விஷயங்களில் ஈச்வரனை தனியாக ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை என்று மாத்திரம் அவைகள் கூற வந்தனவே ஒழிய, ஈச்வரன் வேதத்தில் கூறியபடி இல்லையென்று சாதிக்கஅவைகள் வரவில்லை. மேலும் ஈசனுளன் என்று வெறும் யுக்திவாத மாத்திரத்தில் ஸ்தாபிக்க முடியாதாயினும், வேதங்களில் கூறியபடி உணர்ந்து அனுபவித்தால் உள்ளபடி விளங்கக்கூடியது அந்தப் பொருள்; வெறும் யுக்திகள் முன்னுள்ள ஈச்வர வைதிக பாவனையை திடப்படுத்துமேயொழிய புதிதாகவொருபாவனையும் உண்டாக்கிவிடமாட்டா.

இப்படி உணரவேண்டிய ஈச்வரனை வழிபடும் வழிகளைப்பின்னர் எடுத்தாராய்வோம்.

ஸர் ஹென்றி காட்டன், கே. ஸி. ஐ. இ.

SIR HENRY COTTON, K. C. I. E.

இந்தியாவின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமானதான இக்காலத்தில் நமது நாட்டின் முன்னேற்றத்தின்பொருட்டு தம்மாயுள் முழுமையும் சிறிதும் அலுப்பின்றி யுழைத்துவரும் நண்பர்களையும் தேசமக்களையும் ஒருவர்பின் ஒருவராய் நாமிழக்க நேருவது நமது துரதிருஷ்டத்தையே காட்டுகின்றது. எக்காலத்தில் அவரது ஒற்றுமையும் அமைதியும் அனுபோகமுள்ள நல்லுபதேசங்களும் நமக்கின்றியமையாதனவா யிருக்கின்றனவோ, எக்காலத்தில் அன்னோரும் ஏனையோரும் எதிர்பார்த்திருக்கும் உன்னத முடிவின் ஒரு பெரும்பாகத்தைப்பெற எல்லோரும் எதிர்பார்த் திருக்கின்றனரோ, எக்காலத்தை லார்ட் மெகாலேபோன்ற தீர்க்கதரிசிகள் 'இங்கிலாந்து பெருமை யுணருங்காலம்' எனப் பகர்ந்துளரோ, அத்தகைய இக்காலத்தில் உண்மையான தேசாபிமானிகளிற் பலர் நம்மைவிட்டுச் செல்லும் வண்ணம் இப்பரதக்கண்டம் யாது பாபமுற்றதோ? (சகலமுமறிந்த ஈசன் அவனது ஆழ்ந்த அறிவில் நம் நாட்டிற்கெது வொத்ததென்பதை யறிந்தேயிருப்பார்). அத்தகைய பரமாத்மாக்களிலொருவரும், சென்ற அக்டோபர்௴ 23௳ காலஞ்சென்றவரும், இதுவரையில் பிறந்துள்ள எந்த ஆங்கிலேயருள்ளும் உதாரகுணத்திலும் அறிவு முதிர்ச்சியிலும் ஆழ்ந்தயோசனையிலும் குன்றாதவரும், நற்காரியத்திற் சிறிதும் பின்வாங்காது தலையிடலென்னும் பேரறிவைப்பெற்றவரும், நமது நாட்டிலேஜனித்து, அதற்கே உழைத்துத் தம் காலத்தைச்செலவிட்டவருமான ஸர் ஹென்றி ஜான்ஸ்டாட்மன் காட்டன் என்பவரின் திவ்யசரித்திரத்தைப்பற்றிச் சில வரிகள் எழுதத் துணிவாம்.

ஸர் ஹென்றி காட்டன் 1845-௵ ஸெப்டம்பர்௴ 13௳ தஞ்சைஜில்லாவில் கும்பகோணத்தில் ஜோஸப் காட்டன் என்ற ஸப் கலெக்டருக்குக் குமாரனாக அவதரித்தார். (காட்டன் குடும்பத்தார் ஐந்து தலைமுறைகளாக இந்தியன் ஸிவில் உத்தியோகத்தில்—அதனிலும் விசேஷமாக சென்னை இராஜதானியில்—அமர்ந்தவர்களாயிருப்பது ஓர் அபூர்வச் சேர்க்கையே யாகும். இப்பொழுதும் ஹென்றி காட்டனின் குமாரர்களிலொருவராகிய ஜூலியன்ஸ் ஜேம்ஸ் காட்டன் கோதாவரி ஜில்லாவில் நியாயாதிபதியாக விருந்து வருகின்றனர். ஸர் காட்டன், தாம் அவ்விதமான ஒரு வமிசத்தைச் சேர்ந்துள்ளதை மிக்க கௌரவமாக மதித்திருப்பதாகக் கூறியுள்ளார்.) அவர் மூன்று வயதுள்ளவரா யிருக்கும்பொழுதே சீமைக்கனுப்பப்பட்டார். அவரது பாலியப் போக்கைப்பற்றி நாம் அவ்வளவாக அறிந்துகொள்ளத்தக்க விஷயங்களில்லை. அவர் ஆக்ஸ்போர்ட் பாடசாலையிலும், லண்டன் கிங்க்ஸ் காலேஜி (King's College) லும் கல்விகற்றார். அப்பொழுதே, அவர் மிக்க பாஷாபிமானமும் சரித்திரஞானமும் பெற்றவரானார். அவர் 1865௵ இந்தியன் ஸிவில் பரீக்ஷையில் தேறி, பின்பு மிட்னபூர் 'ஜில்லாவில் 1867௵ அக்டோபர்௴ 29௳, உதவி கலெக்டராக நியமிக்கப்பட்டார். பின்பு அவர், நியாயம், பொதுவதிகாரம், முதலிய பல பிரிவினைகளிலும் பற்பல பொறுப்புள்ள வேலைகளையேற்றுவந்தார். அவர் ரெவினியூ போர்ட் காரியதரிசியாகவும், போலீஸ் கமிஷனராகவும், கல்கத்தா கார்பரேஷன் அக்ராசனாதிபதியாகவும் வேலைபார்த்துளார். இவ்விதம் அவர் படிப்படியாக அநேக பதவிகளைப்பெற்றுக் கடைசியாக 1895-௵ நவம்பர் மாதம் ஆஸாம மாகாணத்துப் பிரதான கமிஷனர் வேலையைப்பெற்றார். அப்பதவியி லிருக்கும்பொழுதுதான் அவரது பொதுநலப் பிரியமும், தாராளமான புத்தியும், ஞாயத்தோடு நோக்கும் தன்மையும், பொதுஜனங்களுக்கு வெளியாயின. அவரது அக்குணங்களே அக்காலத்து நமது இராஜப் பிரதிநிதியோடும் பிறரோடும் ஒவ்வாது, பின்பு அவரை அவ்வுத்தியோகத்தைவிட்டு விலகும்படிச் செய்தன.

ஸர் ஹென்றி, இந்தியாவுக்கு வந்தது முதல் அதன் க்ஷேமத்திற்கு உழைப்பதிலேயே கருத்துக்கொண்டிருந்தார். அவர் தேசாபிமானியாதலால், தம் நாட்டிற்குச் சுபாவமாயுள்ள பிரிட்டிஷ் நியாயம், சுவாதீனம், வலியோ [illegible] புறுத்தாமை என்னும் அரிய கொள்கைகளை

இந்தியாவில் அனுஷ்டானத்துக்குக் கொணரவேண்டுமென்றும், ஆங்கில மன்னர்கள் விக்டோரியா யம்மை நாள்முதல், வாக்களித்துள்ள உறுதி மொழிகளின் பயனை இந்தியர்கள் சீக்கிரத்தில் பெற்றுவிடவேண்டுமென்றும் கருதி உழைத்து வந்தார். இந்தியர்களின் தேவைகளைத் தம்நாட்டார் நன்கறியும் வண்ணம் பல பத்திரிகைகளில் எழுதி வந்ததுமன்றி, அவைகளைப் புத்தக ரூபமாகவும் எழுதி வெளியிட்டுளார். அவைகளில் முக்கியமானவை "சிட்டகாங்கு ரெவினியூ சரித்திரக் குறிப்பு" "இந்தியாவின் தேவையும், இங்கிலாந்தின் கடமையும்" என்ற இரு வியாஸங்களும், "தாய் நாடு, இந்திய நாடு, இவற்றின் ஞாபகங்கள்" (Home and Indian Memories) என்ற இரு புத்தகங்களும் பெயர்பெற்றவை. அவரே ஒருமுறை 1894-௵த்தில் ஸிவில் சர்விஸ் உத்யோகஸ்தர்களை நோக்கி "உங்கள்முன் கஷ்டங்கள் அளவற்றவைகளாகவிருக்கின்றன. நீங்கள் அவைகளை மிக்க ஆழ்ந்த நோக்கம் கருணை, பொறுமை, ஒற்றுப் போதலாகிய அரிய குணங்களைக் கைக்கொள்வதாலேயே வென்றுவரலா"மென்றியம்பி இருக்கின்றனர். இவைகளை யவர் தாமே மேற்கொண்டொழுகி வந்தமையினாலேயே, ஸ்ரீமான் துர்பங்க மகாராஜா அவர்கள் "ஸர் ஹென்றி காட்டன் நம்மை யறிவார். நாமுமவரை யறிவோம். நம்மிருவருள் ஒருபாசமுளது, அதனைக் காலமாவது தேசமாவது பிரிக்கவொண்ணாது" என்று இந்தியரின் பிரதிநிதியாக நின்றுரைக்கச் செய்தது.

இந்தியாவின் முன்னேற்றத்தை யுன்னி அவர் பிரயோகித்த முறைகளில் முக்கியமானவை அவர் இந்திய வாலிபரிடத்தில் கொண்டவன்பும் அவர்களுக்கடிக்கடி யுரைத்துவந்த ஆவேச மொழிகளுமேயாம். அன்னோர்களின் கல்வியிலேயே இந்தியாவின் முற்காலம் நிற்கின்றதென்பதை நன்கறிந்து, கீழ் மேல் ஆகிய இருநாட்டு நன்மைகளையும் நன்கு கற்றல் வேண்டுமென்று, நம் நாட்டு வாலிபர்களை அவர் பன்முறை தூண்டியுள்ளார். அவர் 1886-௵த்தில் "இந்தியர்கள் [illegible] கும், மதவறிவுக்கும் பெயர்பெற்றவர்கள். இக் கீழ் நாட்டுக் குணங்களிலொன்றேனும் குறைவுபடாமலிருக்கும் வண்ணம் வாலிபர்கள பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அவை மட்டுமேயன்றி, சுவேச்சையின்பொருட்டு இட்டுள்ள போர்களின்மூலமாக வெளியானவைகளும், பின்பு நெடுநாள் கழித்து மேல் ஐரோப்பாவில் மிகவும் பிரயோஜனகரமாயிருந்தவைகளுமான தன் மதிப்பு, தன்னடக்கம முதலிய அரியகுணங்களையும் இந்திய வாலிபர்கள் கைக்கொள்ள வேண்டும்" என உரைத்துள்ளார். மாணவர்கள் புஸ்தகப்படிப்பை மட்டுமேயன்றி நற்சகவாசத்தாலும பெரியோர் சரிதைகளைக் கற்றலாலும் உண்டாகும் நற்பயனையும் பெற்றுவரல்வேண்டுமென்பதவரெண்ணம். உண்மையான கல்வி வீட்டிலேதான் கொடுக்கப்பட வேண்டுமென்று அவர் சொல்வது வழக்கம்.

காட்டனது மற்றொரு அரிய குணம் அவர் எல்லோருக்கும் சகஜமாகப் பேட்டி கொடுத்து வந்ததேயாகும். இலகுவாக நடக்கக்கூடிய விஷயங்களில் 'காட்டனைப் பார்ப்பதுபோல' என்று சகலரும் பழமொழியாக வழங்கும் வண்ணம் அவர் நடந்துகொண்டாரென்பது அவரது மேன்மையையே காட்டுகின்றது. அவரைப்பற்றி பிறர் பெருமையாகப் பேசுவதை அவர் பொறுப்பதில்லை. ஒரு சமயத்தில் அவர், "கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தரில் ஒவ்வொருவன் மீதும் சுமத்தப்பட்டுள்ள சாதாரணமான கடமைகளிலொன்றை நான் மறக்காமலிருப்பதற்காக என்னைப் புகழ்கின்றீர்கள்........நான் வந்தவர்களை விசாரியாமற்போகச்சொல்வதில்லை. வீணுகக் காக்க வைத்ததில்லை. மிகுந்த சாவதானத்துடனும் அன்புடனும் நான் அவர்கள் சொல்வதைக் கேட்பேன். அதுவே இந்தியாவின் உபயோககரமானதும் ஜயம் பெறத்தக்கதுமான அரசாட்சி செய்வதற்கு அதனடியிற்றங்கிக்கிடக்கும் இரகசியமாகும்" என்று மிகவும் நுட்பமாக எடுத்துரைத்திருக்கின்றனர். அவ்வுபதேசத்தை நம் புத்தி யோகஸ்தர்களறிந்திருப்பரேல் எத்துணை சிறப்பாம்?

ஸர் ஹென்றி நம் தேசத்து ஜனசாரத்தைபற்றியும் நமக்குப் புகட்டச் சில புத்திமதிகள் வைத்துளார். ஜாதிபேதத்தைத்

தொலைத்தல் முடியாத காரியமென்றும், கூடுமோனுலும் மிகக் கஷ்டமான முடிவில் கொண்டுவந்து விடுமென்றும் அறிந்து ஜனசமூகத்தைப் பிணைத்துக் கொண்டிருக்கும் அஜ்ஜாதியேற்பாட்டை யடியோடு கெடுக்காமல், அதனைச் சீர் திருத்தி, அதனுடைய தனித்தனியான ஏற்பாடுகளைக் கெடுக்காமல் வைத்து, ஜனசாரத்தின் நன்மைக்காக ஏற்பட்ட ஒரு கோட்பாடாக்கவேண்டுமென்பது அவர் கருத்து. பாலியவிவாகங்களைக் குறித்தோ அவர் மிக்கப் பிடிவாதமாக அது பாலியர்களின் நன்னடத்தைக்கும் நல்லுணர்வுக்கும் முற்றும் மாறானதெனக் கூறுகின்றார். வாலிபத்திலுண்டாகும் அமிதமான எண்ணங்களை அடக்கப்பழக்குதலே சான்ற வழியாகுமேயல்லாது, அதனை விருத்திசெய்ய ஏதுவுண்டாக்குதல் பிசகெண அவர் கூறுவது வழக்கம். ஒருசமயத்தில் அவர் இவ்விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும் பொழுது "அழுக்கான எண்ணங்களினின்று மகனைக் காத்தல் மாதாவின் உயர்ந்த கடமைகளிலொன்றாகும். குழந்தைகளாயிருக்கும்பொழுது கலியாணங்களைப் பற்றியும், புருஷன் மனைவி இவைகளைப்பற்றியும், பெற்றோர்களும் பாட்டன்மார்களும், சிறுவர்களிடத்தில் பேசுவதைக் காட்டிலும் பெரும் பிழையான காரியம் வேறொன்று மில்லை. ஆனால் ஹிந்துக் குழந்தைகள் அப்படியே பழக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயினும் அஃது கற்றோரகற்ற முடியாதபடி அவ்வளவு அழுத்தமான பிழைகளிலொன்றாகாது. சட்டத்தின் மூலமாகவோ வேறு வாயிலாகவோ பொதுவபிப்பிராயத்தில் இதனைப்பற்றி ஓர் பெரும் மாற்றுணர்ச்சி யுண்டாகவேண்டும்" என்றிவ்விதமாகப் பாலிய விவாக மறுப்பைபற்றி மிகக் கடுமையாகப் பேசியுள்ளார்.

இவைகளெல்லாவற்றினும், ஸர் ஹென்றி காட்டன் நமது காங்கிரஸென்னும் மஹாசபையோடு ஒத்துழைத்து அதன் நன்னோக்கங்களை நிறைவேற்ற மிக்க முயன்று வந்தமையே நாமவருக்கு மிக்க வந்தனமளிக்கக் கூடியதும், சாசுவதமானதுமான உபகாரமாகும். அவர் 1902௵த்தில் உதவிச்சம்பளம் பெற்றுச் சீமைக்ககலுங்கால் கல்கத்தாவில் வங்காள வாசிகள் படித்த நல்வாழ்வுப் பத்திரத்திற்குப் பதிலுரைக்கும்பொழுது அவர் "நான் உங்களிடம் கடைசியாக வுத்திரவு பெற்றுக்கொள்ளவில்லை. ஈசன் ஆயுளையும் பலத்தையும் கொடுத்துதவுவரேல், நான் மறுமுறையு மிங்கு வருவேன்" எனக்கூறினர். அங்ஙனமே, 1904௵ டிஸம்பர்மீ பம்பாயிற் கூடிய காங்கிரஸுக்கு அதிபராகவந்து அதனை மிக்கச் சிறப்பாக நடத்திச் சென்றனர். அப்பொழுது அவர் மொழிந்துள்ள மொழிகள் மிகவும் உயர்ந்தவை. இராஜ்ய விவகாரங்களில் ஞானமுள்ள எவரும் அதனைப் படியாமலிரார். இந்தியாவின்மீது கொண்டவன்பு அவரது மொழிகள் ஒவ்வொன்றிலும் பிரதிபிம்பிக்கின்றது.

அவர் இந்தியாவில் மொழிந்து சென்றதுமன்றி அவைகளுள் ஒவ்வொன்றையும் நிறைபெறச் செய்யும்படி இங்கிலாந்திலும் சென்றுழைத்தனர். அவருடனுழைத்து வந்த நல்லோர்களில் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்னும் மகானும் காலஞ்சென்ற மிஸ்டர் ஆலன் ஹ்யூமென்னும் தீர்க்க தரிசியும் குறிப்பிடத் தக்கவராவர்.

ஸர் ஹென்றி காட்டன் 1906௵த்தில் நாட்டிங்காம் ஷைர் என்னும் மாகாணத்துக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்று சாமானியர்சபை(Houseof Commons)யின் அங்கத்தினராயினர். அங்கு அவர் தம் நாட்டுக் குறைகளைப்பற்றி மிகத்தீவிரமாக வாதாடி வந்ததோடுங்கூட நம்நாட்டின் க்ஷேமத்தின் பொருட்டும், நம்நாட்டாரது க்ஷேமத்தின் பொருட்டும் வாதாடிய தனந்தம். மந்திராலோசனை சபையில் அவர் மிக்கச் சாதுரியமாகவும் விநயமாவும் குறிப்பாகவும் பேசுபவரெனப் பெயர் பெற்றார். ஆனால் அவர் அங்கிருந்தது சொற்பகாலமேயாகும். அச்சொற்பகாலத்துள்ளும் அவரே ஒருமுறை "எவ்விஷயத்திலும், எவ்விடத்திலும் தாராளமான கொள்கைகளைப் பரவச் செய்யவேண்டியும், பேசுவதிலும் எழுதுவதிலும் சுவேச்சை யுண்டாக்கவும், பிரிட்டிஷ் குடிகள் சிறைச்சாலைக்கனுப்பப்படுமுன் தங்கள் பக்ஷமாகப்பேசப் பாத்தியதை பெறவும், ஓரேமொழியில், தாராள கக்ஷியாரின் கடமைகள் என்னவென்று மிஸ்டர்

கிளாட்ஸ்டன் கூறியுள்ளாரோ அவைகளனைத்தையும் போற்றவுமே நான் சாமானியர் சபைக்குச் சென்றேன்" எனச்சொல்லியிருக்கின்றனர். ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் "மிகவும் ஆழ்ந்த ஞானமுள்ளவரான ஹென்றி எதிர்க்க முடியாத வாதியாக நிற்பர். அவர் சண்டையிடுவதெல்லாம் அவர் பிறர் மாட்டுக்கொண்ட பச்சாத்தாபத்தின் காரணத்தாலேயாகும். எளியோர், உதவியில்லாதவர், பிறரிடம் ஒப்பந்தமடைந்த கூலியாள், சிறையிலடைக்கப்பட்ட நிரபராதிகள்—தனிமையாகவும் துயருற்றவராகவிருக்கும் எவர் பொருட்டுமே அவர் வாதங்கள் இடுவது வழக்கம்" என்று அவரது உன்னத குணங்களைப்பற்றிப் புகழ்ந்திருக்கிறார்.

இவ்விதம், சுயநலம் விரும்பாது பிறநலத்திற்குழைத்த நம் காட்டனைச் சிற்றிங்கிலாந்தனென்றும், இராஜத்துரோகியென்றும் இழிவு கூறியோர் பலர். ஆயினும் கடமையின் வழியே ஈடுபட்டுச் சாகுமளவு முழைத்து அப்பொழுது அறிந்தோர் யாவரும் கண்ணீர் சோர்ந்துணரும் வண்ணம் சென்ற அக்டோபர்மீ 23உ விண்ணுலகமேகிய காட்டனை நம்மிந்தியா ஒருக்காலும் மறவாதென்பது திண்ணம். அவரது திவ்ய ஆத்மா அமைதி பெறட்டும்! அவரது உள்ளுணர்ச்சியின் வேகம் நம் சிறுவர்களுக்குத் தூண்டுகோலாகட்டும்!

R. விசுவநாதய்யர்.

மாயைக்குணம், ஏழு:—அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசாசூந்நியம், மாச்சரியம், பயம். இவற்றுள் அஞ்ஞானமாவது, பொய்யை மெய்யென்று பொல்லாங்கு செய்தல்; பொய்யாவது, உள்ளதையில்லாதாகவும், இல்லதை யுள்ளதாகவும் சொல்லுதல்; அயர்வாவது, கண்டதை வழுந்தி மயங்கல்; மோகமாவது, காமத்தால் மயங்குதல்; பைசாசூந்நியமாவது, உண்டாகிய ஆசையை இல்லையென்றொளித்தல்; மாச்சரியமாவது பிறவுயிர்களைத் தாக்கவும், மாய்க்கவும் நினைத்தலும், கேடுநினைத்தலும்; பயமாவது, உயர்க்கிறுதி வருமென்று அச்சமுற்றுத் திரிதல்.

செடிகளின் உணர்ச்சி

SENSITIVENESS OF PLANTS

சென்ற இருபது வருஷங்களாக ஜகதீச சந்த்ர போஸ் என்னும் இந்திய சாஸ்திர நிபுணர், செடிகளின் உணர்ச்சியைப்பற்றி பல இடங்களில் ப்ரஸங்கஞ் செய்து வருவதை நம் நேயர்கள் அறிவார்கள். ரஸாயன சாஸ்திரம், தேகதத்வ சாஸ்திரம், மனோதத்வ சாஸ்திரம் முதலியவைகளில் கரைகண்ட ஐரோப்பிய பண்டிதர்களும் அமெரிக்க வல்லுநருமிருக்க, நம்மவரிலொருவர் அவர்களை விட மிகவுமுயற்சி செய்து, மேற்றிசை வித்வான்களால் அறியமுடியாத விஷயங்களைப்பற்றி விவரித்துரைப்பது நமக்கு மகிழ்ச்சியையும் பெருமையு முண்டாக்குகின்றன. இந்திய கவர்ன்மெண்டாரும் தங்கள் செலவிலேயே பன்முறை வேற்று தேசங்களுக்குச் சென்று செடிகளின் உணர்ச்சியைப்பற்றி ப்ரஸங்கஞ்செய்ய அனுப்பினதும், தேகதத்வ, மனோதத்வ சாஸ்திரங்களில் சிறந்த விற்பன்னர்கள், போஸ் அவர்களின் சாஸ்திரப்பயிற்சியை மிகவும் வியந்து, அவர் சொல்வதைக் கவனித்ததும், போஸ் அவர்களின் பெருமையை நன்கு விளக்கும். கணித சாஸ்திரத்தில் ஸ்ரீமாந் ஸி.வி. ராமன் என்பவரும் இவ்வாறே சிறந்து விளங்குகிறார். ஸ்ரீமான் இராமானுஜம் என்பவரும் இங்கிலாந்தில் உயர்தரக் கணிதம் கற்பதற்கு நம் இராஜதானியிலிருந்து இந்திய துரைத்தனத்தாரால் அனுப்பப்பட்டிருக்ககிறாரென்பது அனைவருமறிந்ததே.

1881-ஆம் இங்கிலாந்திற்குச் சென்ற ஸ்ரீமாந் போஸ் அவர்கள் 1884-ஆம் வருஷத்தில், பரீட்சைகளில் தேறி, தத்வநிபுணர் என்னும் பட்டம்பெற்று ப்ரகிருதி சாஸ்திர பண்டிதராக, கல்கத்தா இராஜதானிக் கலாசாலையிலமர்ந்தார். இவர் தம்பரீட்சை முடிவுபெற்றவுடன் மின்சாரத்தின் சக்திகளைப்பற்றிய விஷயத்தைப் பரிசீலனஞ்செய்து கொண்டிருந்தார். கம்பியில்லாத் தந்தியனுப்பும் விதம் அப்பொழுதுதான் மார்கோநி என்பவரால் பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மின்சாரத்தின் உதவியினால் மின்சார அலைகளை ஆகாசத்தில் செலுத்தலாமென்றும், அவைகளைக் கண்டு பிடித்தற்கு மிகவும் நுட்பமான கருவிவேண்டுமென்றும் நிபுணர்கள் எண்ணினர். அந்நுட்பமான கருவியொன்று டாக்டர் போஸ் ஏற்படுத்திக் காண்பிக்க அவர் பெயர் எங்கும் பரவியது.

இவ்வித ஆராய்ச்சியிலாழ்ந்திருந்தபோது, சில ஆச்சர்யமான சம்பவங்கள் டாக்டர் போஸின் பார்வையின்கீழ் நடந்தன. அவைகளே, நாம் இப்பொழுது விவரித்துரைக்கும் விஷயத்திற்கு மிகவும் உதவியாயும் காரணமாயும் நிற்கின்றன. அதாவது, உணர்ச்சியற்ற பொருள்களெனக் கருதப்படும் உலோகங்கள் பல, உணர்ச்சியுடையன என்பதும், அவைகளுக்கு இளைப்பாறுதல், இறத்தல் முதலிய அனுபவங்களு முண்டு என்பனவாம். மேற்படி பரிசீலனையில் உலோகமொன்றிற்குவிஷமிட, அது தன்சக்தியிழந்து மின்சாரத்தின் சம்பந்தத்தின்மேல் அது மின்சாரத்தின் சக்தியைத்தெரிவிக்கவில்லை. ஆனால் அவ்விஷத்திற்கு மாற்றுக்கொடுத்தவுடனே தன் சக்தி மீண்டு மடைந்து, மின்சார பரிசீலனைக்குத் தகுந்த பதிலளித்தது.

இவ்விதம் உலோகங்களுக்கு உணர்ச்சியுண்டென்பதை நன்கு அறிந்த பிறகு, அதை ஸ்ரீமாந் போஸ் வெளிப்படுத்தினார். இதனால் இவருக்குக் கீர்த்தி மிகவுமுண்டாயிற்று. ஆயினும் போஸவர்களுடைய அவா இதனுடன் முடிவு பெறவில்லை. ஜடபதார்த்தம் இவ்விதம் உணர்ச்சியுண்டென்பதைத் தெரிவிக்குமாயின், வளரும் சக்தியுடைய தாவரங்களுக்கும் இவ்வித உணர்ச்சி இருக்க வேண்டுமன்றோ? அவ்வாறு இருக்கின்றதோ? என்னும் எண்ணமவர்க்குண்டாயது. அதையறிய விரும்பிப் பல முயற்சிகள் செய்ய், தாவரங்களுக்கு உணர்ச்சி உண்டென்பது விளங்கிற்று.

மனிதர்க்கு உணர்ச்சியறிவிப்பது நரம்பு மண்டலமன்றோ? அதைப்போலவே செடிகளும் தங்களுடைய உணர்ச்சியைத் தெரிவிப்பனவாயின் நரம்பு மண்டலம் அவைகளுக்கு இருக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். இது, மேதாவிகளான பெப்பர், (Pfeffer) ஹாபர்லாண்ட் (Habarlandt) என்னும் ஜர்மன் நிபுணர்களுடை முடிவுக்கு நேர்விரோதமாயிருந்த போதிலும் உண்மையே யென்பது போஸவர்கள் செய்யும் பரிசீலனைகளால் விளங்குகிறது.

'செடிகளின் உணர்ச்சி நமக்கு எவ்விதம் புலப்படும்?' என்பது முதல் கேள்வியாகும். போஸவர்களின் கொள்கைப்படி, ஒரு செடியைக் கிள்ள, அது துடிக்கும்; அடிமேலடியடிப்பின் தாங்கமுடியாது தத்தளிக்கும்; லாகிரி வஸ்துக்களைக் கொடுப்பின் கள்ளுண்டவன்போல் கூத்தாடும்; விஷங்கொடுப்பின் இறக்கும். ஆயினும், செடிகளின் உணர்ச்சி, மிகவும் நுட்பமான அசைவினாலேயே அறிவிக்கப்படுமாதலால் அச்சலனங்கள் மிகவும் பெரிதாக விவரித்துகாட்டப்படவேண்டும். இதையே போஸ் நமக்குக் காட்டுகிறார். இந்தியர்களால் இந்தியாவிலேயே போஸவர்களின் மேற்பார்வையின் கீழ் அவருடைய சாஸ்திர ஆராய்ச்சி சாலையில் செய்யப்பட்ட அக்கருவிகள் 1/100 விநாடி நேரத்தில் செய்யப்படும் சலனங்களை விளக்குகின்றன. பரீக்ஷிக்கப்படும் இலையாவது, செடியாவது இக்கருவியுடன் சேர்க்கப்படுகின்றது. இக்கருவியின் மற்றொரு புறத்தில் கூர்மையான ஓர் ஊசி, புகையால் கருமையாக்கப்பட்ட கண்ணாடியில், செடியின் சலனத்தை கோடுகளால் விளக்குகின்றது. இது மின்சாரத்தின் சக்தியினால் ஒருதடங்கலுமின்றி நடைபெற, கண்ணாடியின்மீது காணப்படும் கோடுகள், விவரிக்கும் விளக்கால் (Magic lantern) பலருக்கும் பெரிய திரையில் நன்றாகத் தோன்றுகிறது.

இக்கருவியுடன் மற்றும் தாமே உண்டாக்கிய சில யந்திரங்களுடன் மிஸ்டர் போஸ் தம் பரீக்ஷைகளை நடத்துகிறார். செடியொன்றுடன் இக்கருவியை யிணைத்துவிட்டு, அச்செடியைக் கிள்ள, அது தான் துடிப்பதை, அசைவதால் நன்கு விளக்கிற்று. தாமஸகுண முள்ளவைகளெனப்படும் முள்ளங்கி முதலியவைகள் முதல், எல்லாச் செடிகளும் தம் உணர்ச்சியை இவ்வாறே விளக்குகின்றன. ஒரு பளுவான வஸ்துவை நாம் தலையிலிருந்து வைப்பதும் எடுப்பதுமாக வைத்துக் கொள்வோம். கொஞ்சநேரம் சென்றதும் நமக்கு ஓய்ந்து போகிறது. ஆனால் சற்றுக்களைப்பாறினால் மறுபடியும்

அப்படியே செய்யலாம். இதைப்போலவே பலதடவைகளில் தன் உணர்ச்சியை யறிவித்த ஒரு வேலமரம் களைப்படைந்து உணர்ச்சியைத் தெரிக்கவில்லை. ஆனால் கொஞ்ச நேரம் கழித்தபிறகு சக்திபெற்று தான் உணர்ச்சியுடைய தென்பதை நன்கு காட்டிற்று.

நம்மை ஒருவர் அடித்தால், அந்தஅடி நம்மீது விழுந்ததற்கும் நரம்பு மண்டலம்மூலமாய் அதை நாம் அறிந்ததற்கும், அளவிடக்கூடிய சிறிது நேரஞ் செல்லுகின்றதென தேக தத்வ நிபுணர் கூறுவர். இவ்விதமான கால அளவைக்கு 'ஆந்தர்ய காலம்' எனப் பெயர். ஆந்தர்யகாலம் செடிகளுக்கு முண்டு. அது சில வேளைகளில் 1/10 வினாடியும், வேறு சில நேரங்களில் 1/600 வினாடியுமாக மாறுபடுகின்றது. வெப்பமானபோது சுறுசுறுப்பும், மிக்ககொடிய குளிரில் விறைத்தலுமடைந்திருக்கிறது. லாகிரிவஸ்து, அபினி முதலியவைகளின் ஆவியை யுட்கொள்ளச் செய்வதினால் செடிகளை மயக்க வஸ்துக்களை பானஞ் செய்விக்கிறார். அப்பொழுது அவைகளின் நடத்தை குடிவெறிகொண்டவனைப்போலவே யிருக்கின்றது; மயக்கத்தினால் தத்தித்தள்ளாடி விழுந்த செடிகள் நிர்மலமான வாயு அவைகளின்மீது வீச, மயக்கந்தெளிந்து, தம் ஸ்வய நிலைமையை அடைகின்றன.

செடிகளுக்கு நரம்பு மண்டலமுண்டென்பதை விளக்க, வெளிக்காற்று முதலியவைகளின் சேர்க்கையில்லாமல் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வளர்த்தார். செடி மிகவும் செழிப்பாய் வளர்ந்து வந்தது. கடைசியில் வெளியே கொண்டுவந்து தம் உணர்ச்சியறியுங் கருவியுடன் இணைத்துப் பரிசோதித்துப் பார்த்தபோது, முதலில், உணர்ச்சியிருப்பதாக அச்செடி தெரிக்கவேயில்லை. வீட்டை விட்டு வெளியேசெல்லாமல் சும்மாவிருந்த மனிதன், வெளிச்சென்று தேகாப்யாஸம் செய்தல் எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டம் அச்செடிக்கு இருப்பதாக வெளிவந்தது. ஆனால், நிற்காது அடிமேலடி விழ, கடைசியில் மெள்ள மெள்ளத் தான் உணர்வதாக யந்திரமூலமாய்க்காண்பித்தது. நரம்பு மண்டலமில்லையாயின், எப்பொழுதும் ஒரே நிலைமையிலிருக்க வேண்டுமன்றோ? வெப்பமான காலத்தில் சீக்கிரமும், சீதளத்தில் மெள்ளவும் தன் உணர்ச்சியை அறிவித்த அச்செடி, பொடாஸியம் ஸையானைட் என்னும் கடூரவிஷம் அதன்மேல் வைக்கவும் ஐந்து நிமிஷத்தில் தன் சக்தியை இழந்தது.

'தொட்டாற் சிணுங்கி' என்னும் செடியைப் பலமுறை பரிசோதித்த இவர் பல புதியவிஷயங்களை யறிந்தார். இச்செடி போன்றவை காலை 6 மணிமுதல் 9மணிவரையில் அயர்ந்து தூங்கின பிறகு நடுப்பகலில் நன்கு விழித்துக்கொண்டு, வரவர மயக்கங்கொள்கிறதென்று மறிந்தார். மற்றும் தந்திச் செடி என்னும் தாவரமொன்றின் இலைகள் மேலும் கீழும் ஒரே நிதானமாக அசைகின்றனவென்று பலர் அறிந்திருந்த போதிலும் அதைப்பற்றி முழுவதும் ஒருவரு முணரவில்லை. போஸவர்கள் அதைப் பரீக்ஷித்துப் பார்த்தபிறகு, மிருகங்களுக்கு ஹ்ருதயம் அடித்துக்கொள்வது போலவே, இச் செடியின் இலைகள் அசைகின்றனவென்று தம் கருவியின் உதவியால் அறிந்தார்.

இவ்விதம் போஸவர்கள் கண்டுபிடித்த விஷயங்கள் வைத்தியம் முதலிய சாஸ்திரங்களின் அப்யாஸத்திற்கு மிகவு முபயோக மானவை என அனைவராலும் கருதப்படுகிறது. இவ்விஷயங்களில் இவர் கொண்ட ஊக்கமும், விடாமுயற்சியும் மிகவும் மெச்சத்தக்கன. சாஸ்திர விற்பன்னரான போஸவர்களது பெருந்தன்மையும், அடக்கமும், தேசாபிமானமும் காண்பதரிது. நம்முன்னோருடைய நிலைமையை யறிந்த இவர், தம் தாய்நாட்டிற்கே ஆயுளை அர்ப்பணஞ் செய்யும்படி தம்மைச் சார்ந்தவர்களைத் தூண்டுகிறார்.

இவ்விதம், மானிடரைப்போலவே, மிருகங்களும், செடி கொடிகளும், உலோகங்களும் முக்ய விஷயங்களிற் கூட ஒத்திருப்பது, எல்லாம்வல்ல இறைவன் பலமதத்தினர் விரும்பும் வெவ்வேறு ரூபமும் பெயருங் கொண்டு உலாவினும், அம்மதங்களெவற்றிற்கும் ஆதாரமாய்த் தானொருவனே இருத்தலைக் காட்டும் என்று நம் சாஸ்த்ர நிபுணர் வெளிப்படுத்துகிறார். 1902ஆ மே மாதத்

(இதன் தொடர்ச்சி 211-ம் பக்கம்.)

இந்தியாவில் நில ஏற்பாட்டு முறை *

LAND SETTLEMENT IN INDIA

இந்தியாவில் வழங்கிவரும் நில ஏற்பாட்டு முறை, உலகத்தில் வேறெந்த நாட்டிலுங் காணப்படாத ஒரு நவீன முறையே என்று சொல்லவேண்டியிருக்கிறது. இதர தேசங்களில் அநுஸரிக்கப்பட்டுவரும் முறைகள் எவற்றோடும் நமது முறையை ஒப்பிட்டுக் கூறமுடியாது.

இந்திய நில ஏற்பாட்டு முறை இரண்டு பிரிவுபடும். அவையாவன:—

1. ஜமீன்தாரி
   (1) சாசுவத ஏற்பாடு.
   (2) அங்காமி ஏற்பாடு.
2. ரயத்துவாரி.

முதல் முதலில், ஜமீன்தாரி இத்தகையது என்பதை ஆராய்வோம். ஜமீன்தாரி ஏற்பாடு, இரண்டு பிரிவுபட்டிருக்கிற தெனக் கூறினோம். அவற்றுள் சாசுவத ஏற்பாடு முதலாவதாகும். கவர்ன்மெண்டாருக்குத் தீர்வை செலுத்துவதொன்றைத் தவிர, நிலத்தின்மீது ஸர்வ ஸ்வதந்த்ர பாத்யதைகளும் நிலத்துக் குரியோனுக்குண்டு. வங்காளத்திலும், சென்னை, காசி இம்மாகாணங்களின் சில ப்ராந்த்யங்களிலும் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய தீர்வையின் தொகை இவ்வளவென்று என்றைக்கும் சாசுவதமாய் வரையறுக்கப்பட்டிருக்கிறது. சாசுவத ஏற்பாடென்றால், நிலத்திலிருந்து இவ்வளவு வரும்படி வந்தால் இவ்வளவு தீர்வை கட்டவேண்டு மென்ற,— அதாவது, வரும்படி அதிகரிக்குங்கால் தீர்வை அதிகரித்தும், வரும்படி குறையுங்கால் தீர்வை குறைந்தும்—ஏற்பாடல்ல. 1793-ம் ஆ த்தில் இந்தியாவில் கவர்னர் ஜனரலாயிருந்த லார்ட் காரன்வாலிஸ் என்பவர் எக்காலத்துக்கும் இந்த இந்த க்ராமத்திலிருந்து இவ்வளவு இவ்வளவு தீர்வைதான் வசூலிக்கப்படவேண்டுமென்று சாசுவதமாய் ஏற்பாடு செய்துவிட்டார். அதாவது, அக்காலத்தில் அவர் ப்ரதி க்ராமங்களுக்கும் ஏற்படுத்திய தொகையை இப்போது கவர்ன்மெண்டார் அதிகரிக்கவாவது குறைக்கவாவது கூடாமலிருக்கிறார்கள்.

இரண்டாவது, அங்காமியாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஜமீன்தாரி நிலங்களைப் பற்றிக் கவனிப்போம். இவ்வகுப்பில் வரும் க்ராமங்களில் நிலத்தீர்வைக்கு நிலச்சுவான்தாரன் மாத்ரம் தனியாகவாவது, அல்லது அவனும் அவனுடன் வ்யவஸாயத் தொழிலில் ஒத்துழைக்கும் கூட்டாளிகளும் சேர்ந்து கூட்டாகவாவது உத்தரவாதியாகிறார்கள். இந்தத் தீர்வையின் தொகை இவ்வளவுதான் என்றாவது, அல்லது நில வரும்படி இவ்வளவானால் தீர்வை இவ்வளவென்ற ஏற்பாடாவது ஒன்றும் சாசுவதமாகக் கிடையாது. இடம், காலம் இவைகளுக்கேற்ப 20, 25 அல்லது 30 வருஷங்களுக்கு ஒருதரம் இந்தத் தீர்வையின் தொகை வித்யாஸப்பட்டுவரும். அக்காலத்து நிலங்களைப் புதிதாக மதிப்பிட்டு அம்மதிப்புக்குத் தக்கவாறு தீர்வையை மாற்றுவார்கள். (தீர்வை ஏறினாலும் ஏறும்; குறைந்தாலும் குறையும். ப்ரக்ருதத்தில் ஏறிக்கொண்டு தான் வருகிறது.)

*[லண்டன் ராயல் எகனாமிக் ஸொஸைடி, அமெரிகன் எகனாமிக் அஸோஸியேஷன், இந்த ஸபைகளின் மெம்பராகிய ப்ரபுல்ல சந்த்ர பாஸு, எம்.ஏ., பி.எல். என்பவர் 1914-ம் ஆ அக்டோபர்மீ மாடர்ன் ரிவ்யூ ஸஞ்சிகையில் எழுதிய வ்யாஸத்தின் மொழிபெயர்ப்பு]

தில் ராயல் இன்ஸ்டிட்யூஷன் என்னுமிடத்தில் உபந்யஸித்தபோது ஸ்ரீமான் போஸவர்கள் கூறியது நாம் மறக்கக் கூடியதன்று. (இவைகளெல்லாவற்றையும்) நான் கண்ட போதுதான், என் முன்னோர்கள், கங்கைக் கரையில் முப்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்பிரபஞ்சத்தில் பலவாறு மாறித் தோன்றும் வஸ்துக்களெல்லாம் ஒன்றே என்றறிந்தவர்களே, அழியாத ஸத்யத்தை அறிவார்கள்; வேறெவரும், அறிய மாட்டார்கள்' என்று கூறிய அருள் மொழியின் பொருளைக் கொஞ்சம் முதன் முதல் அறிந்தேன்" என்றார்.

இவ்வித புண்ய புருஷர் வெகுகாலம் வாழ்ந்து நம் நாட்டின் புகழைப்பரவச்செய்ய அருள் புரியும்படி அருட்பெருங்கடவுளை வணங்குவோமாக!

இரண்டாவது, ரயத்துவாரி ஏற்பாடு. இந்தியாவின் பல பாகங்களில் இம்முறைதான் வழங்கி வருகிறது. இம்முறையில், சட்டப்படி நிலத்தின்மீது உரிய பாத்யதை இருவருக்கு உண்டு. கவர்ன்மெண்டாருக்கும் கவர்ன்மெண்டாரிட குடித்தனக்காரர்களாகிய குடிகளுக்கும் நிலத்தில் உரிமை பாத்யதை உண்டு. அதாவது, இதர தேசங்களிலும் அல்லது இதர முறைகளின்படிக்கும் நிலச்சுவான்தாரருக்கே மாத்ரம் உண்டான உரிமை பாத்யதையை இம்முறையின்படி கவர்ன்மெண்டாரும் அவர்களிட குடித்தனக்காரர்களாகிய நிலச்சுவான்தார்களும் பங்கிட்டுக்கொள்கிருர்கள். இம்முறையிலும், 20, 25 அல்லது 30 வருஷங்களுக்கொருதரம் நிலத்தைப் புதிய மதிப்பிட்டுத் தீர்வையை மாற்றுதல் உண்டு. நிலத்தைச் சாகுபடிசெய்யும் ரயத்து தன்சொந்த சிரமத்தாலோ, சொந்தச்செலவினுலோ, நிலத்தை உரப்படுத்தியதால் விளைந்த அதிக விளைவுக்காகக் கழித்ததுபோக மிருந்த வரும்படியில் 100-க்கு 50-க்கு மேற்படாமல், தீர்வை வசூல் செய்யலாம். இம்முறையனுசரிக்கப்படும் ப்ராந்த்யங்களில், நிலம் சிறிய சிறிய வயல்களாகப் பிரிக்கப்பட்டு ரயத்துகளுக்கு விடப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய எல்லாவிடங்களிலும் இவ்வளவு நிலந்தான் ஒரு ரயத்து வைத்துக்கொள்ளலாமென்ற ஒரு வரையறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

1911-12-ம் வருஷத்தில் மேற் கூறிய முறைகள் ஒவ்வொன்றின் கீழும் இருந்த நிலத்தின் விஸ்தீர்ணம்.

1
ஜமீன்தாரி

(1)
சாசுவத
ஏற்பாடு
12,18,65,000
ஏக்ரா

(2)
அங்காமி
ஏற்பாடு
20,06,35,000
ஏக்ரா

2
ரயத்துவாரி
28,56,33,000
ஏக்ரா

இப்படி நிலத்தின் உரிமையை நோக்கமாகக்கொண்டு வரையப்பட்ட பட்டி. இப்படிக்கின்றி. சாசுவத ஏற்பாடா, அங்காமி ஏற்பாடா என்னும் நோக்கத்துடன் ஒரு பட்டி வரையக்கூடும்.

(1) 1 (1)-ல் குறிக்கப்பட்டது சாசுவதம்.
(2) 1 (2)-லும், 2-லும் குறிக்கப்பட்டது அங்காமி.

அதாவது மொத்தம் 60,81,33000 ஏக்ராவில் அங்காமி ஏற்பாட்டிலுட்பட்டது 48,62,68000 ஏக்ரா. 100-க்கு 80, அங்காமி ஏற்பாடும், 20, சாசுவத ஏற்பாடும் ஆகிறது.

மேற்கூறிய விவரங்களிலிருந்து வங்காளத்திலும், இதர இரண்டொன்று மாகாணங்களின் சில பாகங்களிலுந் தவிர இந்தியாவின் மற்றெல்லாப் பாகங்களிலும் கவர்ன்மெண்டார்தான் உண்மையில் நிலத்துக் குரியவர்கள் என்று ஏற்படுகிறது. தனித்தனியாய் ஒவ்வொரு முறையையும் எடுத்தாராயும்போது, நாம் இவைகளைப் பற்றி ஸவிஸ்தாரமாகப் பேசலாம்.

இவ்வாறு நாட்டிலுள்ள நிலத்துக் குரியவர் கவர்ன்மெண்டாராயிருப்பதால் உண்டாகும் நன்மைகள் எண்ணிறந்தன என்று த்ரவ்ய சாஸ்த்ர நிபுணர்களான ஜான் ஸ்டுஅர்ட்மில் என்னும் இங்கிலீஷ் க்ரந்த கர்த்தாவும் ஹென்றிஜார்ஜ் என்னும் அமெரிக்க க்ரந்த கர்த்தாவும் பலமுறை வற்புறுத்திக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு வற்புறுத்திக் கூறுவதற்கு முக்ய ஆதாரம் 'தான்தேடாச் செல்வம்' (Unearned Increment) என்பதுதான். 'தான் தேடாச் செல்வம்' என்றாலென்ன? நிலத்தைச் சாகுபடி செய்பவனுடைய ஸ்வய ப்ரயாஸை காரணமாகவாவது, ஸ்வய த்ரவ்ய வ்ரய காரணமாகவாவது உண்டாகாமல், ஜன ஸமூகாதி அபிவ்ருத்திகளாலும், பணமிகுதியாலும் ராஜாங்க செல்வாக்காலும் உண்டாகும் நிலத்தின் விலையேற்றமே. இவ்வாறு உண்டாகும் விலை யேற்றம் நிலச்சுவான்தாரர்களுடைய ப்ரயத்னத்தாலானது இல்லையாதலால் அந்த விலையேற்றத்தால் உண்டாகும் லாபத்தை அவர்கள் அனுபவிப்பது தகாது: இத்தகைய விலையேற்றத்துக்குக் காரணம் ஜனங்களுடைய ப்ரதிநிதியாய் நிற்கும் கவர்ன்மெண்டாராதலால் அவர்கள்தான் அந்த லாபத்தை யடைவதற்குச் சரியான வார்சுதாரர். அந்த லாபத்தைத் தாங்கள் அடையவேண்டிய

நிமித்யமாகத்தான், தாங்கள் நிலத்துக் குரியவர் என்றும், ஆகையால் 20, 25 அல்லது 30 வருஷங்களுக்குள் உண்டாயிருக்கும் விலையேற்றத்தை மதிப்பிட்டு அந்த ஏற்றத்துக்கேற்ப, தீர்வையை அதிகப்படுத்துகிருர்கள். கவர்ன்மெண்டாரே நிலத்துக் குரியவராக இருப்பது நலம் என்பதற்கு முக்ய ஆதாரம் இது ஒன்று; இன்னென்றும் உண்டு. அதாவது, ஸாமான்ய ரயத்துக்கள், தங்கள் ஸ்வல்ப நிலத்தையும் ஸ்வல்ப த்ரவ்யத்தையும் வைத்துக்கொண்டு வ்யவஸாய அபிவிருத்திக்காகக் கண்டுபிடிக்கப்படும் நூதன யந்த்ரங்களையும், முறைகளையும் உண்மையில் பலனைத்தரத்தக்கவைகளா என்பதைப் பரீக்ஷித்துப் பார்க்கச் சக்தியற்வர்களாயிருக்கிருர்கள். ஆதலால் நாட்டிலுள்ள நிலத்துக்கெல்லாம் கவர்ன்மெண்டாரே உரியவர்களாயிருந்தால் அவர்கள் அதிகச் செலவு பிடிக்கும் நூதன அபிவ்ருத்தி முறைகளைக்கூடப் பரீக்ஷித்து அவைகளை யனுஸரிப்பது ஸாத்யமா, அவைகளால் லாபம் உண்டாகக்கூடுமா என்பதை ஸாமான்ய ரயத்துகளுக்குக் காண்பிக்கலாம்.

மில் என்பவரும் ஜார்ஜ் என்பவரும் பலமாய்க் கக்ஷிகட்டிக் கூறும் மேற்கூறிய முறையின் நன்மைகள் புஸ்தகங்களில் படிக்குங்கால் மனதைக் கவர்வனவாகவிருப்பினும், அம்முறையை நடவடிக்கையின் கீழ்க்கொண்டுவருவதற்காகப் பல நாடுகளில் எவ்வளவோ பகீரத ப்ரயத்னங்கள் செய்யப்பட்டும் அது இன்னும் ஏட்டுச்சுரைக்காயாகவே இருந்து வருகிறதென்பதை நாம் உறுதியாய்க் கூறுவோம். மிக்க மும்முறமான ஸர்வஜனஸமத்வ வாதிகள் (Socialists) கூடத் தங்கள் வரையும் நில ஏற்பாட்டில் இந்த முறையை ஸமீபத்தில் நடவடிக்கைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற உத்தேச மிருப்பதாகத் தெரிவிக்கவில்லை. இந்தியாவைக் காட்டிலும் ஸகல துறைகளிலும் அபிவிருத்தியடைந்திருக்கும் நாடுகளில்கூட இந்த முறை நடவடிக்கையில் காணேம். இதற்குக் காரணம் சொல்லாமலே விளங்குமெனை நம்புகிறேம். இவ்வாறு நமது நாட்டைவிட நானுவிதத்திலும் அபிவ்ருத்தியடைந்திருக்கும் நாட்டினர்களுக்கே இம்முறையை அனுஸரிப்பதற்குப் பல தடங்கல்களும் அஸௌகர்யங்களும் இருக்கும்போது நம்து நாட்டிற்குமட்டும் இந்த இடைஞ்சல்கள் இல்லையா? அல்லது, அந்த இடைஞ்சல்கள் நமது நாட்டில் அவ்வளவு முக்யமானவையல்லவா?

ஐரோப்பாவில் இந்த முறையை ஏட்டில் மிகவும் பலங்கட்டி வற்புறுத்திய செல்வ சாஸ்த்ர நிபுணருக்கே இதனை நடவடிக்கையின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் கிஞ்சித்தேனும் இராத காலத்திலேயே, இந்தியாவில் இம்முறை ஸ்தாபிதஞ் செய்யப்பட்டது. ப்ரக்ருதத்தில் இதர் நாடுகள் இரண்டொன்றில் இம்முறை பரீக்ஷார்த்தமாகச் சிற்சில பாகங்களில் அநுஸரிக்கப்பட்டுவருகிறது. அந்நாடுகளில், பரீக்ஷார்த்தமாய்ச் சில இடங்களில் மட்டுமே நடைபெற்று வருகிறது. நமது நாட்டிலோ, இம்முறை என்றைக்கும் மாறுதலடையாதபடி சாசுவத நிலைமையாய் ஒரு ராஜீய அங்கமாய் நிலைபெற்றுவிட்டது.

நாட்டிலுள்ள நிலங்களுக்குக் கவர்ன்மெண்டார் உரியவர்களாயிருப்பதால், அவர்கள் தங்களுடைய பொறுப்பை, அதாவது உத்தரவாதத்தை மறந்தவர்களாயும், சில ஸமயங்களில் அஜாக்ரதையுடையவர்களாயும் இருப்பதற்கு இடமாகிறது. தாங்கள் செய்யும செலவுக்கும், தங்களுடைய வரும்படிக்கும் எவ்வித ஸம்பந்தமுமில்லாமல் என்றைக்கும் ஓரே நிச்சயமாய், தங்குதடைகள் யாதொன்றுமில்லாமல் வ்ருத்தியாகிவரும் நிலத்தீர்வை வரும்படியையுடைய கவர்ன்மெண்டார் அநேகமாய்ப் பணத்தை மிதமிஞ்சி செலவுசெய்யப் பின் வாங்குவதில்லை. குடும்ப வ்யவகாரங்களில் போலன்றி ஸர்க்கார் விஷயத்தில் வரும்படி, செலவைப் பொறுத்ததாயிருப்பதால் வருஷா வருஷம் மதிக்கப்படும் செலவுக்கேற்ப வரும்படி மாற்றப்படுகிறது. வருஷாந்தர செலவு திட்டம் கவுன்ஸிலில் முன் அங்கீகாரத்துக்கு வரும்போது, அப்பட்டியில் குறிக்கப்பட்ட விவரங்கள் நியாயமான செலவா அல்லவா என்பதைப்பற்றிக் கேள்வி உண்டாவதில்லை; மதிக்கப்பட்ட செலவுக்கு வேண்

டிய பணம் எவ்வெவ்விதத்தில் வசூல் செய்யப்படலாம் என்பதே கவனிக்கப்படுகிறது. இந்தியாவிற்போல், ஸர்க்கார் தீர்வையை விதிப்பதைப்பற்றி செல்வாக்குள்ள பொது ஜன அபிப்ராயமில்லாத நாடுகளில் செலவு வரவர அதிகப்பட்டுக்கொண்டே வருவதால் தீர்வையும் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. இந்தியாவில் வசூலாகும் மொத்தத் தீர்வைத் தொகையில், நிலத்தீர்வைதான் ஜாஸ்தியாயிருக்கிறது. அதாவது, 1911-12-ம் வருஷத்திய கணக்கை எடுத்துக்கொண்டால் மொத்தத் தீர்வை 100 ரூபாயானால் அதில் நிலத்தீர்வை 38½ ரூபாயாகிறது. லெஜிஸ்லெடிவ் கவுன்ஸில் மெம்பர்கள், வருஷா வருஷம் மொத்த வரவு செலவு கணக்குத் திட்டத்தைப்பற்றிக் கவனிக்கிறார்களேயொழிய, நிலத்தீர்வையைப்பற்றி அவர்களுக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. அவ்விஷயம் நிர்வாக இலாகாவைப் பொறுத்தது. அவ்விஷயத்தில் அவர்கள் இட்டதுதான் சட்டம்.

ஜனங்களுடைய ப்ரதிநிதியாயிருக்கும் கவர்ன்மெண்டாருக்குத்தான் நிலங்களுக்கு உண்டாகும் ‘தான் தேடாச்செல்வம்’ போகக் கூடும். அவர்களுக்குத்தான் அது போக வேண்டும் என்பது இந்தியாவுக்கு எவ்வளவு மட்டும் பொருந்தும் என்பதை யோசிப்போம். இந்தியாவில் நிலத்துக்குரியவர்களுக்கு அநேகமாய் யாதொரு அதிகாரமுமில்லாமல், ஏறக்குறைய கவர்ன்மெண்ட் முழுதும் அந்நியர் கைவசமிருந்து அவர்களால் நடத்தப்படும்போது, “ஜன ப்ரதிநிதியாயிருக்கும் கவர்ன்மெண்டாருக்குத்தான் ‘தான் தேடாச் செல்வம்’ போக வேண்டும்” என்னும் வாதம் எவ்வாறு பொருந்தும்? நிலத்துக்குரியவர்களும் அதன் வ்ருத்தியபிவ்ருத்திகளைப்பற்றி அதிக கவலையெடுத்துக்கொள்பவர்களும் சேர்ந்து அதிகாரம் செலுத்துவதால் உண்டாகும் பொறுப்பு நமது கவர்ன்மெண்டில் எவ்வாறு உண்டாகக்கூடும்?

நிலத்தீர்வை அதிகரிப்பதால் வருஷத்துக்கு வருஷம் கவர்ன்மெண்டில் மிகுதிப் பணம் (Surplus) தொகையில் வ்ருத்தியாய்க் கொண்டுவருகிறது; ஆதலால் கவர்ன்மெண்டார், இதரத் தீர்வைகள் இரண்டொன்றின் தொகையைக் குறைத்தல் கூடும் என்றும் சிலர் சொல்வார்கள். ஆனால், அது இந்தியாவில் ஸாத்யமெனத் தோற்றவில்லை. இதர தீர்வைகள் குறைக்கப்படுவதால், அவ்வாறு குறைவுபட்ட தீர்வையினால் உண்டாகும் லாபத்தை, அதிகரித்த நிலத்தீர்வையைக் கட்டிய குடித்தனக்காரர்கள் அனுபவிப்பதில்லை. ஸகல ஜனங்களும் உபயோகிக்கும் வஸ்துவின்மீது தீர்வையைக் குறைத்து அதனால் ஸர்வ ஜனங்களுக்கும் நன்மை செய்யக் கூடும் என்பது இந்தியாவில் முடியாது. ஏனெனில் இந்தியாவில் அப்படி ஸர்வ ஜனங்களும் உபயோகிக்கும் தீர்வை வஸ்து ஒன்றும் கிடையாது. ஆயினும், இவ்வாறு தீர்வையைக் குறைக்காமல் ஸகல ஜனங்களுக்கும் நன்மை செய்யும் மார்க்கங்கள் பல இருக்கின்றன. உதாரணமாக, இந்தியாவின் சுகாதார முறைகளைச் சீர்திருத்திப் புதிய முறைகளை ஏற்படுத்துதல், எழுத்துப் படிப்பு என்பதின் வாசனையையே கண்டறியாத பாமரர்களுக்கு ஸ்வல்ப கல்விபோதித்தல், இன்னும் இவைகளைப்போன்ற பொது ஜன நன்மையான கார்யங்கள் பல நமது நாட்டில் நடைபெற வேண்டியிருக்கின்றன. ஆனால், இவ்வித பொதுஜன நன்மைகள் நடைபெற அடிக்கடி தூண்டுகோல் வேண்டும். இந்நன்மைகள் மந்த்ரத்தில் விழும் மாங்காய்களல்ல. கவர்ன்மெண்டார் செவிகொடுத்துக் கேட்டு, அதன்படி அவர்களை நடக்கும்படி செய்யக்கூடிய ஜனத்தலைவர்கள் யாவரும் கிடையாது. அத்தகைய செல்வாக்குள்ள ஜனத் தலைவர்கள் உதிப்பதும் அரிது. இம்முறை, நன்மை தீமைகள் பக்ஷபாதமின்றி வாதிக்கப்படும் முறையாயிருக்க இடமில்லை. ஆதலால் ‘பழைய கந்தன் பழைய கந்தனே’ என்கிறபடி வரவு செலவு திட்ட மசோதா, கவர்ன்மெண்டார் விருப்பப்படியே ப்ரதி வருஷமும் ஆமோதிக்கப்பட்டுவருகிறது. ராணுவச் செலவு அதிவிரைவாக அதிகரித்துக்கொண்டே வந்துகொண்டிருந்தது; சென்ற சில வருஷங்களாக இச்செலவு அவ்வளவு விரைவாக அதிகரிக்காததற்குக் காரணம் என்னவெனில் அச்செலவில் இன்னும் அபிவ்ருத்திக்கு இடமிராததே. கல்வி இலாகாவில் ப்ரதி வருஷமும் அதிகப்பணம் செலவாகிறதென்பது உண்மையே. ஆனால் வருஷாந்தர செலவு பட்டியின் விவரங்களை நோக்கும்போது, இன்ஸ்பெக்ஷன் (பள்ளிக்கூடங்கள் செய்யும் வேலையை மேல் பார்த்தல்) இலாகாவும் அதன் பரிவாரங்களுமே அதிக செலவுக்குக் காரணமெனத் தோற்றுகிறதேயொழிய, உபாத்யாயர்களுக்காக செலவு அதிகரித்ததென்று எண்ணுவதற்கு இடமில்லாமலிருக்கிறது. (ஸர்வகலாசாலைகளையொட்டிய உயர்தரப்படிப்பைப்பற்றி நாம் பேசவில்லை.) பாமரர்கள் பலர், ஸ்வல்ப கல்வி கற்பதைவிட, உயர்தர மாணாக்கர்கள் சிலர் மேல்தரப் படிப்பைப் படிப்பது முக்யமானதெனக் கவர்ன்மெண்டார் கருதுகிறார்கள் போலும். இந்தியாவைப்போன்று கல்வி யபிவ்ருத்தி விஷயத்தில் குழந்தைப் பருவத்திலிருக்கும் நாடுகளில், ஜனங்கள் கல்வியிலும், மதியூகத்திலும் முன்னுக்கு வரவேண்டுமென்று உழைக்குமிக்காலத்தில், உயர்தரக் கல்வியைவிட பாமரருடைய ஸ்வல்ப கல்வியே அதிக முக்யமானதென்பதைக் கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும். அல்லது, ஒருவேளை வேறு ஏதாவது இந்த அதிக செலவுக்குக் காரணமாயிருத்தல் கூடுமோ?

நிலத் தீர்வையைப்பற்றிய கவர்ன்மெண்டாருடைய கருத்தும், நோக்கமும், த்ருப்திகரமான நிலமையிலிராத நிர்வாக இலாகாவின் மூலமாய் முழுவதும் நடவடிக்கையின் கீழ் வருவதில்லை என்பது இந்தியாவில் ஒரு பெருங்குறை. டெக்கான் ப்ராந்த்யங்களில் நில ஏற்பாட்டு விஷயங்களை யறிய சிரமமெடுத்துக்கொண்ட கோபாலக்ருஷ்ண கோகலே என்பவரும் இன்னும் சிலரும், அவ்விடங்களில் சென்ற சில வருஷங்களாக மாசூல் அநேக க்ராமங்களில் குறைந்து வருவதாகவும், அவ்வாறு குறைந்துவந்த போதிலும் புதிய ஸெட்டில்மெண்ட் ப்ரகாரம் அந்நிலங்கள் அதிக மதிப்பிடப்பட்டு அதன் ப்ரகாரம் தீர்வையும் அதிகரித்திருக்கிறதென்ற முடிவுக்கு வந்தனர். உண்மையில் தற்காலத்தில் இந்தியஜனத்தலைவர்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் உள்ள அபிப்ராய வித்யாஸம் கவர்ன்மெண்டாருடைய கருத்தைப்பற்றியாவது நோக்கத்தைப் பற்றியாவதன்று; கவர்ன்மெண்டாருடைய தற்காலத்திய நடவடிக்கையைப் பற்றித்தான். அநேகமாய் அவர்களுடைய நோக்கங்களும், கருத்துகளும், ஏட்டுச்சுரைக்காயாகவேயிருந்து, குடித்தனக்காரர்களுக்கு நன்மையுண்டாகும்படிப் போதுமானவளவு, அவைகள் ப்ரக்ருதத்தில் நடவடிக்கையின்கீழ் வராத குறைதான்.

அழுக்காறு

ENVY

மனிதர்களுக்குள்ள குணங்களில் மிகவும் துன்பத்தை விளைவிக்கக்கூடியது அழுக்காறு. அழுக்காறு என்பதின் பொருள் பொறாமை. பொறாமை என்ற குணம் ஒருவனை வந்தடைந்தால், பிறகு அவன் சன்மார்க்கத்திற் பிரவேசித்து நன்மைகள் செய்யமாட்டான். தழலாற் புதர் எரிவது போல, பொறாமையினால் மனம் எரியும். பொறாமையுள்ளவனிடத்தில், அமைதியும் இன்பமும் காண்பதரிது. அழுக்காறுள்ளவன் பிறருக்குக் கெடுதலைத் தேடுவதிலேயே மிகவும் கருத்துள்ளவனாயிருப்பான். ஆனால், இறுதியில் தனக்கே துன்பத்தைத் தேடிக்கொள்வான். உதாரணமாக, சோழன் கம்பரைத் தன் நாட்டைவிட்டுத் துரத்தின பொழுது, கம்பர் சேரனிடம் போய் அடப்பைத் தொழிலில் அமர்ந்தார். ஒரு நாள் சேரன் சபையில் சில வித்வான்கள் இராமாயணப் பிரசங்கம் செய்தபொழுது கம்பர் அதைச் சந்தோஷத்துடன் கேட்கவில்லை என்பதை அறிந்த சேரன், அவரிடம் விஷயத்தைக் கேட்க, கம்பர் அச்செய்யுளின் பொருள் சரியாயில்லை என்று தான் விஸ்தாரமாகச் சொல்லக் கேட்ட அரசன் ஆச்சரியங் கொண்டு, கம்பரை முன்னிலும் பன்மடங்கு அன்பாய் நடத்திவந்தார். இதைக் கண்ட சில வித்வான்கள் பொறாராய், கம்பரை மோசம் செய்ய வெண்ணி, சேரன் முன், கம்பரை ஒரு அம்பட்டன் என்று விளக்கினார்கள். அதாவது, சேரனுக்கு

(இதன் தொடர்ச்சி 216-வது பக்கம் பார்க்க)

சுவரம் செய்யும் அம்பட்டனுடன் முன்னேற்பாடு செய்திருந்தார்கள். அம்பட்டன் கம்பரைத் தன் தமையன் என்று சொன்னவுடன், கம்பர் ஒன்றுந் தோன்றாதவராய் நாமகளைத் தன் மனதில் தியானித்து, அவ்வம்மையின் ஒரு காற்சிலம்பைத் தனக்கு அருளிச் செய்யும்படி வேண்ட, கலைமகளும் அப்படியே கொடுத்தருளினார். கம்பர் அம்பட்டனுடன் சபைக்கு வந்து சேரனுக்குச் சிலம்பைக் காட்டி அதை எடுத்தருளும்படி வேண்டினார். பிறகு கம்பர் அம்பட்டனைப் பார்த்து மற்றொரு சிலம்பைக் கொண்டு வரும்படி ஆக்ஞாபிக்க, அம்பட்டன் இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்து நின்றான். சேரன், இச்சிலம்பு எப்படி கிடைத்தது என்று கேட்க, கம்பர் தன் பாட்டனார் சம்பாதித்ததென்றும், பிறகு தான் ஒன்றும் அம்பட்டன் ஒன்றுமாக எடுத்துக்கொண்டதாகவும் சொன்னார். சேரன் அம்பட்டனை மற்றொன்றைக் கொண்டுவரும்படி அதட்டவும், கேட்காததனால் கம்பர் அவனை அடிக்கக் கட்டளையிட்டார். உடனே அம்பட்டன் வலி தாங்க முடியாமல், இக்காரியம் வித்வான்களால் செய்த சூழ்ச்சியென்றும், கம்பர் தன் தமையனல்லவென்றும் சொன்னவுடன் விடுவிக்கப்பட்டான். இதைக் கேட்ட சேரன், வித்வான்கள்மேற் கோபங்கொண்டு, அவர்களைக் கழுவேற்றக் கட்டளையிட்டார். உடனே வித்வான்களும் மனங்கலங்கித் தங்களுக்குள் "அழுக்காறெனவொருபாவித்திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும்" என்றெண்ணிக்கொண்டு தங்கள் மனைவியரைக் கம்பரிடம் போய் வேண்டிக்கொள்ளும்படி கெஞ்ச, அவர்கள் அப்படியே செய்ய, கம்பர் மனமிரங்கி அவர்களைப்போகவிடுமாறு சேரனை வேண்டினார். ஆகையினால் வித்வான்கள் தங்களுக்கே வினையைத் தேடிக்கொண்டார்கள். இது வித்வத்காய்ச்சலால் நேர்ந்தது. இன்னும் பொறாமை செல்வத்தினாலும் ஆற்றலினாலும் ஒருவனை வந்தடையும்.

பொறாமை என்ற பயிரை வளரவொட்டாமல் அது சிறு முளையாயிருக்கும்போதே அறிவு என்ற கருவியினால் அரிந்துவிடுவது நலம். அப்படிச் செய்யாவிட்டால் 'குடியைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு' என்பதைப் போல தனக்கும் தன் குடும்பத்திற்கும் இன்னலை விளைவித்துக்கொள்வான். ஒருவனுடைய ஆற்றலைக்கண்டு அழுக்காறடையாமல் தானும் அப்படிப்பட்ட ஆற்றலையடைவதற்கு முயற்சி செய்வதே மெச்சத்தக்க குணம். பொறாமையின் உதவியினால் சுகமடைந்தவர் யாவருமில்லை.

ஒரு ஊரில் சித்திரச்சாலை யொன்றிருந்தது. அவ்விடத்திலுள்ள அனேகம் மாணாக்கர்களில் மிகப்புத்திசாலியான சுந்தரன் என்னும் ஒரு பையனிருந்தான். சுந்தரன் தன் ஆற்றலினால் ஒவ்வொரு வருடமும் முதற் பரிசு பெற்று வந்தான். இதைக்கண்ட துச்சாதனன் என்னும் வேறொரு பையன் சுந்தரன்மேற் பொறாமையுடையவனாய்ச் சுந்தரத்தைக் கெடுக்கச் சமயம் பார்த்திருந்தான். ஆனால் இவர்கள்கூடப் படித்துவந்த சுகுணன் என்னும் மற்றொரு பையன் சுந்தரன்மேற் பொறாமை கொள்ளாது,

> சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
> வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
> நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
> கொடையும் பிறவிக் குணம்.

என்பதற்கேற்ப தானும் அப்படிப்பட்ட திறமையை அடைவதற்கு முயற்சித்துவந்தான். ஒரு நாள் அந்த வருஷத்துப்பரிசு இன்னதினத்தன்று அளிக்கப்படுமென்று சித்திரசாலை அதிகாரிகளால் அறிக்கையிடப்பட்டது. இதை அறிந்த சுந்தரம் மிக நேர்த்தியான படம் ஒன்று எழுதவாரம்பித்து, அதற்குக் கடைசிநிறம் கொடுக்கும் வரைக்கும் முடித்துவிட்டு, அடுத்தநாள் மீதியை முடிப்போமென்றெண்ணி வெளிச்சென்றான். இதைப் பார்த்திருந்த துச்சாதனன், சுந்தரத்தை அவமானம் செய்யக்கருதி, அந்த வர்ணத்தில் முதலில் நல்ல பிரகாசத்தைக் கொடுத்துப் பிறகு மெதுவாய் மங்கலைக் கொடுக்கும் தன்மையுடைய ஒரு எண்ணெயைக் கலந்துவிட்டான். சுந்தரன் திரும்பிவந்து அச்சூழ்ச்சியை அறியாது படத்திற்கு வர்ணம்கொடுத்து முடித்தான். பரிசளிக்கும் தினமும் நெருங்கிற்று. அங்கு வந்திருந்த யாவரும் சுந்தரனுடைய படத்தைப்பார்க்க ஆவலுடையவராய் வந்து படத்தைப் பார்த்தார்கள்.

அப்பொழுது அப்படத்தின் நிலைமையை என்ன சொல்வது! வந்திருந்த யாவரும் ஆச்சரியங்கொண்டார்கள். சுந்தரன் ஒன்றும் தோன்றாதவனாய்க் கற்சிலைபோல் நின்றான். சுகுணன் படம் சற்று நன்றாயிருப்பதைப் பார்த்து, அப்பரிசை அவனுக்கு அளித்தார்கள். உடனே சுகுணன் அதிகாரிகளைப் பார்த்து அப்பரிசு தனக்குரியதல்லவென்றும், சுந்தரன் படத்தை யாரோ மோசம் செய்ததாகவும் சொல்லித் தனக்கென்று வந்ததை சுந்தரனுக்குக் கொடுத்தான். உடனே அதிகாரிகள் சுகுணனது பெருந்தன்மைக்கு மெச்சி அவனுக்கு மற்றொரு பரிசளித்தார்கள். துச்சாதனன் ஒன்றும் அடைந்தானில்லை. அழுக்காறுள்ளவனிடம் சீதேவி ஒருநாளும் குடிகொள்ள மாட்டாள்.

மேற்படி கதைபோல, பாண்டவர்கள் மேற் பொறாமைகொண்ட துரியோதனாதிகள் யாது சுகமும் அடைந்ததாக விளங்கவில்லை. பொறாமை யுள்ளவன் முகத்தில் மூதேவி நர்த்தனம் செய்து கொண்டிருப்பாள். அவனிடம் சந்தோஷ மென்பதே காண்பதரிதாய் விடும். மிகவும் அன்பார்ந்த சிநேகிதர்களும் கூட, பொறாமையினால் பகைவர்களாகிறார்கள். உதாரணமாக, ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்குள் 'வெரோனாவிலுள்ள இரண்டு சீமான்கள்' என்ற நாடகத்தில் வாலண்டைனும், ப்ரோத்யூஸும் அன்பார்ந்த சிநேகிதர்களா யிருந்தார்கள். அவர்கள் உடல் இரண்டும் உயிர் ஒன்றுமாக விருந்தது. அற்பக் காதல் விஷயமாய் ப்ரோத்யூஸ் வாலண்டைன்மேற் பொறாமை கொண்டு அவனைத் துன்பத்திற்குள்ளாக்கின விஷயம் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். அக்காதலால் சிநேகிதன்கூட பகைவனாய்விட்டான். ஆதலால் நாம் எவ்விதத்தாலும் பிறர்மேற் பொறாமை கொள்ளக் கூடாது. அனேகர், பணத்தை இச்சித்தும், அதைப் பெரிதாகக் கருதி தனிகர்களைப் பார்த்தால்அழுக்காறடைவது வழக்கம். அப்படிச் செய்யாது நம்மைவிட எளியவர்களைப் பார்த்து நமக்கிருக்கும் செல்வம் போதுமானதென்று மனம் மகிழவேண்டும். அப்படியே கற்றவர்களையும் பார்த்து அவர்களைப்போலக் கற்க முயற்சிக்க வேண்டும்.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGFS

மாணவரின் மனோலக்ஷியங்கள்

(180-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது சுதேசபாஷைகளை விருத்திசெய்து நவீன வழிக்குக் கொண்டு வரவேண்டியது அவசிய மென்பதை முதலில் முக்கியமாக உங்கள் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவைகளை நாம் க்ஷீணித்துப் போகவிடுகிறதை இகழ்ந்துரைக்க வார்த்தைகளைப்போதுமானபடி கண்டுபிடிக்கஎன்னால் முடியவில்லை. மேலாம்பரமும் ஜீவதாதுவுமுள்ள கிரந்தங்கள், அன்னிய பாஷையில் ஏற்படா. ஆங்கிலேய கவித்துவத்திலும் வசன நடையிலுமுள்ள உத்தம இசைகளும் எழில்களும் நமக்குப் புறம்பாகவே இருக்கவேண்டும். ஜனசமூகக் கூட்டுறவிற்கு ஆங்கிலேய பாஷையே ஏகலிபியாய் வரலாம். ஆனால் ஆறுதலுக்கும் தேறுதலுக்கும் ஈச்வர கடாக்ஷத்திற்கும் சம்ஸ்கிருத கிரந்தங்களையும் சுதேச பாஷாவிலக்கியங்களையும் நாடாமல் முடியாது. ஒரு பாஷையை யழித்துவிடக் கூடுமாயின், அதுபோல் ஒரு ஜாதியாரையும் நசுக்கிவிடலாமன்றோ? அவ்வளவுக்கு ஒரு ஜாதியின் பாஷையானது அதன் மனோபாவ சுபாவங்களுடனும், திவ்வியமான மனஎழுச்சிகளுடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. தற்காலம், நமது பண்டிதர்கள் நம் சுதேச பாஷைகளை அபிவிருத்தி பண்ணி, இக்காலப் புது வழியிற் படுத்த இடங்கொடுக்கமாட்டார்கள். இலக்கியங்கள் செழித்தோங்கிய காலம் முன்புதான் இருந்திருக்கிறதென அவர்களுக்குத் தோற்றுகிறது. நமக்கோ அது எதிர்காலத்தை நோக்கியே யிருக்கிறது. வசித்துவரும் ஜனத்தின் பாஷையானது வளர்ந்து மாறுதலடையு மென்பது அவர்களுக்குத் தெரியாதுபோலும். உங்களிலொவ்வொருவருக்கும்அவரவர் மனத்திற்கிசைந்த புஸ்தகத்தைஐரோப்பிய இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அவரவர் சுயபாஷையில் மொழிபெயர்த்து லோகோபகாரமாக வெளியிட வேண்டுமென்பது நான் குறிப்பிடும் விஷ

யம். பணம் செலவு செய்து படிக்கும் ஜனாங்கம் இன்னும் இந்தியாவில் ஏற்படவில்லையாதலால் நீங்களே பொருளிட்டு இவ்விதம் நடத்தவேண்டும். நமது ஜனங்களை வாங்கும்படியாகச் செய்வோம். இவ்வாறு புஸ்தகம் தேவையா யிருக்கிறதென்பதை யுண்டாக்குவோம். ஒரு புஸ்தகத்தையாவது வெளியிடுதற்கு வேண்டிய பணம் ஒவ்வொருவருக்கும் நிச்சமாய்க் கிடைக்கலாம். தமிழில் தற்காலம் வெளிவந்து கொண்டிருக்கும் கற்பனா நாடகம், நவினம் (நாவல்) இவைகளில் பெருந் தொகையானது எனக்கு அச்சத்தை விளைவிக்கிறது. அவைகள் தேர்ச்சி, பயிற்சி, கலா சௌந்தர்யம் இவைகளற் றிருக்கின்றன. வித்யா விஷயத்தை வரப்பிரசாதமாகப் பெற்றவரும், சிறந்த, திவ்வியமான வித்யா கைங்கர்யப்படிகளில் நம்மை நடத்தக்கூடிய மகாகலைஞானி நம்முள் இப்பொழுதும் இருக்கக்கூடும் ஆனால், சுதேசபாஷையில் தேர்ச்சியோடு கூடாத பல நாவல்கள் எழுதுவதைவிட அனேக மொழிபெயர்ப்புகளையுண்டாக்கல் அதி முக்கியமானதென்று நினைக்கிறேன். இத்தாலிய இலக்கியங்களினின்றும் சிறந்த கிரந்த வகுப்பினின்றும் இங்கிலீஷ் பாஷையில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள் எலிஜபெத் ராணியார் காலத்திய கிரந்தவர்க்கங்களை யுண்டுபண்ணுதற்கு எவ்வளவு சாதகமா யிருந்ததென்பது உங்களுக்குத் தெரிந்ததே. தமிழ்ச் சங்கமொன்று ஸ்தாபிக்க வேண்டும். அது கீழ்நாட்டு இலக்கியங்களிலும், ஆங்கில இலக்கியங்களிலும் பயிற்சியுடைய வித்துவான்கள் அதிகாரத்தில் இருக்கவேண்டும். செய்யுள் நடையிலும் வசன நடையிலும் நூதன முறைகளையேற்படுத்த முயலவேண்டும். இதுதான் என் கருத்து. மதுரைத் தமிழ்ச்சங்கமானது மேற்கூறிய வழிகளில் நடத்தப் படவில்லை, ஆதலால் அதிலிருந்து மிகுந்தபயன் வராததென்பதைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. ஒரு விஷயத்தைக் குறித்து வற்புறுத்த அவாவுடையவனாயிருக்கிறேன். அதைச் சொன்னாலே வித்தியாசமாகத் தோன்றும். நமது நண்பர்களுக்குக் கடிதம் எழுதுகையிலும் அவர்களோடு சம்பாஷிப்பதிலும் நாம் நம் சுயபாஷையை ஏன் உபயோகிக்கக் கூடாது? சாதாரணமாய் வழக்கத்திலுள்ள மனோதர்மம் மிகக்குறைவாய் நடமாடும் கடிதத்திலும் சம்பாஷணையிலும் நமது எண்ணங்களை இயல்பாயுள்ள மொழியில் சொல்வதனால் இயல்புடைமை, (பிராகிருதம்), உண்மையுடைமை என்ற உத்தமகுணங்கள் உண்டாகிறதென்பதையுணர உங்களுக்குச் சிரமமாயிருக்கும். ஐயோ! இப்படிச் செய்வதை விட்டு விவாஹ முகூர்த்தப் பத்திரிகைகளையுங்கூட ஆங்கிலத்தில் அச்சிடுகிறோம்! அதற்குப் பல சமாதானமுஞ் சொல்லுகிறோம். ஆனால் மேற்சொல்லிய சங்கதிகளைச் செய்து முடிப்பதெக்காலம்? புதியதும், ஆண்மையுடையதும், ஒன்றைப் போல் பாவனையாய் நடிக்கப்படாததுமான ஜீவியத்தை எப்பொழுது நடத்துவோம்? முன்னர் நம் பாரத நாடானது தனியரசு செய்து, உலகிற்குப் புகழும், விதிகளை எத்துறைகளில் ஏற்படுத்தினதோ அவைகளான இலக்கியம், கலைகள் இவைகளில் அத்தாய் பூமிக்கு கௌரவ பதவியொன்றைச் சம்பாதிக்கவேண்டாமா? இதற்காக விரதம் பூணுவோமாக.

இரண்டாவது, நமது இந்துதேச சரித்திரத்தைத் திரும்பவும் புதிதாயமைக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகிறேன். இப்புண்ணிய பூமியின் இருதய தாதுவை அன்னிய தேசத்து நூலாசிரியரெவரும் கேட்கமுடியாது என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் நமது பாரதமாதாவின் அலங்காரங்களை வர்ணிக்கலாம், முன் காலத்தில் அது எவ்வளவு மகிமையடைந்திருந்ததென்றும், பின்பு பல நூற்றாண்டுகளாக விதிவசத்தால் தலையிறக்கமும் செழிப்புக் குறைவுமடைந்து வாழுமாறு நேர்ந்ததையும்பற்றி யெடுத்துக்காட்டலாம். ஆனால் நம் இந்தியாவின் ஜீவனானது எதைஆவல் கொண்டு நாடினதென்பதையும், எதைத் தேடி யடைந்ததென்பதையும் தெரிவிக்க முடியாது. இப்புராதன பூமியின் பக்த சிரோமணிகள், சுத்தவீரர்கள் இவர்கள் நிறைந்த உங்களாலேயேதான் இக்காரியம் முடியவேண்டும். ஆனால் இந்திய சரிதத்தில் எப்பாகத்தை நாம் எழுதியிருக்கிறோம்? நமது சரித்திரத்தில் பராக்கிரமம் பொருந்

திய காலங்களை யறியவேண்டுமானால் வின்ஸெண்ட் ஸ்மித், ஸி வல். டாட் என்பவர்கள் எழுதிய புஸ்தகங்களைத் தேடுகிறோம். சரித்திர சம்பந்தமான அறிவாவது சிரத்தையாவது நமக்குக்கிடையாது என்ற குறையை எப்பொழுது தீர்த்துக்கொள்வோம்? தனது முன்கால சரித்திரத்தை நன்றாயறியாத தேசமானது பிற்காலமேன்மையைத்தனக்கு ஏற்படுத்திக்கொள்ள முடியாது. அன்பர்காள்! பாண்டியர்கள் செய்த மகத்தான காரியங்கள் உங்களுக்குத் தெரியுமா? இப்பொழுது எனக்குச் சாவகாசமாத்திரம் இருக்குமாயின் மேனாட்டு சரித்திரத்தாலறியப்படாத வீரச் செயல்களின் விசேஷங்களால் உங்களைப் பரவசப்படுத்துவேன். இந்த வழியில் ஏதாவது காரியத்தைச்செய்து முடிப்பீர்களா? நீங்களும் அப்படிச்செய்து இந்தியாவில் மற்றவர்களும் உங்களைப் பின்பற்றி வருவார்களானால் இதைவிட மேலானதும் பரிசுத்தமுமான கைங்கர்யம் எனக்குத் தோன்றவில்லை. இதனால் இப்பொழுது நாம அறியாத அபூர்வஜாதீய நற்குணங்களும், தன் மரியாதையும், சிறப்பு மேற்படும்.

இதனுடன் நாம் நமது நற்கலைகளையும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டும். அவைகள் ஆதரிப்பாறற்றுக் குன்றிவரும் நிலைமையிலிருக்கின்றன. சிற்பவேலையில் உத்தமமான மாதிரிகளை உலகிற்கு வெளியிட்டதும், மதசம்பந்தமாய் மேலான மனோபாவனைகளைச் சிலையில் அமைத்துழைத்ததும், சித்திரவேலைக்குப் பேர்போனதும், மற்றெந்த நாட்டிலுமில்லாதவாறு சங்கீதத்தில் மகோந்நத நிலையுற்றதும், வேறெவ்விடத்திலுங்கிடையாதவண்ணம் ஜீவியத்தை இன்புறச்செய்வதோடுகூட ஆத்மாவைப் பரமகாருண்யரான பரமாத்மாவிடம் சேர்ப்பிக்கும் காவ்யங்களை வெளிப்படுத்தினதுமான தேசமொன்று தற்காலம் பரிதாபகரமான சோம்புதலோடு கூடியிருக்கிறது. அது தன் உத்தம மனோபாவங்களை நற்கலைகளில் பிரத்தியக்ஷப்படுத்தச் சக்தியற்றிருக்கிறது. நமது வீட்டிலுள்ள அலங்காரங்கள் இந்திய சுபாவத்திற்கு மாறானதாயும், பரதேசீயமாயும் இருக்கின்றன. நமது மாதரின் புராதனக் கொள்கைப் பற்றில்லையாயின் கலைகளெல்லாம் முன்னமே அழிந்துபோயிருக்கும். டாக்டர் குமாரசுவாமி அவர்கள் பின்வருமாறு நேர்த்தியாகச் சொல்லுகிறார். "ஒரு ஜனக்கூட்டத்தின் சத்துவத்தை நன்றாய்ப் பரிசோதிக்கவேண்டுமாயின், அவர்களுடைய அந்தர்முக பாவனையை உருவம், இலக்கியம், சங்கீதம் என்ற துறைகளிலன்றி வேறெவற்றிலுங் கூடாது. ஓர் ஜாதிய நற்கலையானது அந்த ஜாதியையேவெளிக்காட்டுகிறது. அதில் எதையும் ஒளிக்க முடியாது. ஆகையினால் இக்கலையானது இழிவாயும், விசாலியாமலும், கட்டுப்பா டில்லாமலும், யதார்த்தத்தில் ஒழுக்க விரோதமாயும், அதாவது, தகாததும் இசையாததுமாயிருந்தால் அந்த ஜனங்க ரீதியில் பெருங் கெடுதி யொன்றிருக்கிறதென்பதை நிச்சயமாய்த் தெரிவிக்கிறது. இந்தியர்கள், இங்கிலாந்தை ஸ்துதி செய்வதாகத் தங்கள் நாகரீகத்தை யழித்துக் கொள்ளுகிறார்கள் என்பதுதான் அக்கெடுதி. கலைகளையும், சங்கீதத்தையும், நாடகத்தையும், ஜீவியத்தையும் இழிவாக்குவதால் வெளியுள்ளதான இராஜாங்க முறை அல்லது சிக்கனமுறை இவைகளாலான சக்தியைவிட அதிகமாய் ஜாதீய வாழ்க்கைக்கு மகத்தான கெடுதிநேரிடுகிறது. நமது கீழ்மைக்குக்காரணம் நாம் இந்தியாவை நேசிக்கிறதில்லை, இங்கிலாந்திலுள்ள உபநகரத்தோற்றத்தையே விரும்புகிறோம், அதையே இங்கும் ஏற்படுத்த நினைக்கிறோம். இராஜாங்க விஷயமாய்ச் சுயாதீனமாய் அந்தர்முகமாய் ஐரோப்பாவினால் கீழ்ப்படுத்தப் பட்டுள்ள இந்தியாவானது முயற்சித்தடையப் பாத்திரமானதன்று என்கிற சங்கதியை ஒருதரமேனும் கவனித்துப்பார்ப்போமாக." சௌந்தர்யமும், சன்மார்க்கமும், பெருமையும் ஒன்றுக்கொன்று நுட்பமாயும் இரகசியமாயுமுள்ள சம்பந்தம் வாய்ந்ததாயிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. "ஜன சமூகத்திற்கு, சௌந்தர்ய ரஸஞானத்துடன்கூடிய இந்தியாவிற்நப் பதில் நவீன வித்தியாமுறையினாலும், நவீன வியாபார ரீதியின் நோக்கங்களினாலும் இழிவடையப்பெற்றுள்ள இந்தியாவானது ஈடாகாது" என்று ஒருவர் செவ்வையாய் எழுதியிருக்கிறார். காரியாதிகள் இவ்விதமிருக்

இன்றன? இதற்கென்ன பரிகாரஞ்செய்யலாம்? இந்திய கலைகளை அபிமானித்து விருத்திபண்ண இன்றுமுதல் விரதம பூணுங்கள். நம்நாட்டின் அற்புதமான அழகையறியப் பிரயத்தனப் படுங்கள். இச்சிறப்பான நம்முடைய ஜில்லாவையே எடுத்துகொள்வோம். அதன் மனோரம்மியத்தையும், வனப்பையும் கண்டுணர நம்மில் எவரேனும் முயன்றதுண்டோ? ஒரு நாள் நான் குற்றாலத்து மலைகளின்மேல் நின்றுகொண்டு கீழேயுள்ள விருக்ஷங்களும், பூபாகங்களும், நீர் நிலைகளும், நீரோட்டங்களும் சேர்ந்துள்ள பேரழகைக் கண்டேன். இவைகளெல்லாம் பிராதக் காலத்தில் பொன்னிறமான சூரிய காந்தியில் மூழ்கியிருக்கக் கண்டேன். அப்பொழுது சொப்பனம்போல் சிங்காரமான இக்காட்சியானது நமது இந்திய சகோதரர்களைக் களிப்புறச்செய்யுமாறு திரையில் சித்திரமாயெழுதமுடியவில்லையே என்று நினைக்கவும் என் கண்களில் நீர் ததும்பிற்று. இச்சிறந்த தொழிலை ஏற்றுக்கொண்டு நம்மவரில் சிலர் செய்து முடிக்கக்கூடாதா? இந்திய சுபாவத்திற்குப் பொருந்தாத அலங்கரிப்புக்களை உங்கள் கிருகங்களிலிருந்து எடுத்தெறியுங்கள். இந்திய கலா சாஸ்திரங்களில் சரியான சிரத்தையெடுத்துக்கொண்டு நமது கைத்தொழில் முயற்சியில் பகுத்தறியும் ரஸஞானம் வையுங்கள். அற்புதமான மரச்சித்திரவேலையும், தந்தவேலையும், உலோக வேலையும், சித்திரம் முதலானவைகளும் இன்னும் நம்மிடமிருக்கின்றன. நமது பள்ளிக்கூடங்களில் கலா சம்பந்தமான கல்வியும் போதிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்துங்கள். நாம் முன்பு சாதித்த உத்தமமான சௌந்தர்ய ரஸஞான விஷயங்களும் உண்மைப்பொருளான விஷயங்களும் நமது குழந்தைகளுக்கு உணர்த்தப்படாமல் நடத்திவருவதைவிட தன் நாசத்தைத் தேடிக்கொள்வது வேறேதேனுமுண்டென்று உங்களால் சிந்திக்கலாகுமா? ஜீவியத்தில் கலை ஞானத்தையும் சேர்க்கவேண்டும். நிரந்தரமாய் இன்பம் பயக்கக்கூடியதும் துக்கத்தில் ஆறுதல் தருவதும், இந்தியாவின் மேன்மைக்காக நமக்கு உயர்நோக்கங்களையும், காரிய சித்தியையும் பயக்கக்கூடியதுமா யிருக்குமாறு அதைச் செய்யவேண்டும்.

முற்கூறியவைகளோடு கைத்தொழில் சம்பந்தமாயும் (நவீன) சாஸ்திரப்படியாயுமுள்ள வித்தியாமுறையும், நமது கைத்தொழில்களை விருத்திசெய்துபுதியவைகளையேற்படுத்தலும் மிகவும் முக்கியமானதென்பதை மறவாதிருப்போமாக. வருஷந்தோறும் நாம் கைத்தொழில் சம்பந்த சபைகள் கூடிவருகிறோம். எவருடைய பிரயத்தனத்தையும் நான் இகழவில்லை. ஆனால் இச்சபைகளை அனுகூலமாய் நடைபெறச் செய்தவர்களில் மிகவும் சொற்பமானவர்களே ஏதாவது ஒரு தொழில் முயற்சியை ஸ்தாபித்து நடத்திக் காரிய ஜெயம் பெறுவதில் உழைத்திருக்கிறார்களென்று சொல்லலாம். இந்த ஜில்லாவில் இந்த வழிகளில்தான் உழைக்கவேண்டுமென்று குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது. என்றாலும், நீங்கள் செய்து முடிக்கக்கூடிய சில விஷயங்களை எடுத்துரைக்கிறேன். இந்த ஜில்லாவிலுள்ள நெசவுகாரர்களும் வியவசாயிகளும் இரண்டு முக்கியத் தொழில்களை நடத்திவருகிறார்கள். வீரவநல்லூரிலும் மற்றுமுள்ள விடங்களிலும் சிறிய நெசவுச்சாலைகளை யுண்டுபண்ணி வழிகளைச் செய்துகாட்டிப்போதிக்க வேண்டுமென்பதை யெடுத்துக்காட்டுகிறேன். பேராசையுடன் கூடிய பெரிய யோசனைகளை வைத்துக்கொள்ள வேண்டாம். அதிக நலமானது நலமானதிற்கு இடையூறாயிருக்கிறதென்பது பழமொழி. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத்தார் ஒரு சங்கங்கூடிச் சில நிலங்களைப் பிரத்தியேகப்படுத்தி மேற்பார்த்து வரவேண்டும். அங்கே புதியதும் திருத்தமானதுமான கிருஷி முறைகளை நடத்திப்பார்த்துச் சரிப்படி செய்து பரீக்ஷை பார்க்கவேண்டும். இதில் முதலில் ஒரு உபாயமான வேலையை ஆரம்பித்து அதைச் செவ்வையாய் நிறைவேற்றுவோம். நாம் விசுவாசத்தோடும் ஆத்மபரித்தியாகத்தோடும் நடத்திவரவேண்டும். இகலோக சம்பத்து சுகம் ஜன சமூகத்திற்கும், ஜாதிய மாக்ஷிமைக்கும் ஆதாரமென்பதை யுணரவும். இவைகளையறிவோமானால், பெரிய காரியசித்திகளைப் பெறலாம். உலகிலுள்ள ஜாதிகளுள் நாடும் அதன் (கௌரவ) ஸ்தானத்தையடைய மென்மேலும் தகுதி யுறுவதைப் பார்க்கலாம்.

ஜனங்கத்திற்காகச் செய்ய வேண்டிய காரியத்தில் பின்னொரு வகையுண்டு. அதைப் பற்றிச் சிறிது சொல்லுகிறேன். ஜீவியத்தில் நிறைவேறவேண்டிய பொதுக்கடமைகளைப் பற்றி இன்றைக்குப் பிரசங்கம்பண்ணி உங்களைச் சலிக்கச் செய்ய வேண்டுமென்பது எனது கருத்தல்ல. சீக்கிரத்தில் செய்து சாதிக்கக்கூடிய சில எண்ணங்களை உங்களுக்கு எடுத்துக் கூறவேண்டுமென்பது எனது நோக்கம். இப்படி யுண்மைப்படுத்தினால் பின்னால் பெரும் பாக்கியங்கள் நேருமென்பது திண்ணம். இங்கிலாந்திலுள்ள கலாசாலை யபிவிருத்தி யேற்பாட்டை யொத்துள்ள வித்தியாசாலையை ஸ்தாபிப்பதனாலான உபயோகத்தை உங்கள் மனத்தில் பதியச் செய்ய விரும்புகிறேன். நம்மவருள் வித்தியாபாரராயிருப்பவர்கள் நமது அதிர்ஷ்டத்தால் அதிகமாயடையப்பெற்ற வித்தியா நலங்களைப் படிக்காத நம் சகோதரர்களுக்கும் ஈந்து நம்மால் கூடியவரை உழைப்பதாக வித்தியாபட்டம் பெறுங் காலத்தில் வாக்குத்தத்தம் பண்ணினோமல்லவா? அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முயன்றவர் எத்தனை சொற்பமான பேர்? ஐரோப்பியர் மகத்தான பலன்களை யடைந்துள்ள சாஸ்திரங்களின் முக்கியாம்சங்களைப்பற்றி எளிய தமிழ் நடையில் நமது நண்பர்களுக்கு எடுத்தறிவிப்போம். இன்னும், நாம் சில இராப்பள்ளிக்கூடங்களை யேற்படுத்தி நமது கிருஷிகர்களுக்கும் கம்மாளர்களுக்கும் எளிதிலுணரக்கூடிய உபந்நியாசங்களையும் விநோதமான (மாஜிக் லான்டெர்ன்) காட்சிகளையும் நடத்திக் காட்டவேண்டும். இதனால் அவர்களுடைய உற்சாகமற்ற தொழிலும் சுகமற்ற தரித்திரமும் அவர்கள் வாழ்க்கையை விட்டகலும். இந்த ஏற்பாடுகள் யுக்திசாலிகளான நமது நண்பர்களுக்குச் சிறிது மனோ கற்பிதமாகத் தோன்றலாம். ஆனால் உலகில் மனோதிடங்கொண்ட சிலரின் பெருக்கமே அபிவிருத்திக்கு ஆதாரமாயிருக்கிறது. நமக்கு வேண்டியது உண்மையான ஊக்கமும் கருத்துடன்கூடிய காரியமேயன்றிப் பிரமாதமான பேச்சுக்களல்ல. தாழ்ந்த ஜாதியாரைக் கைதூக்கி விடுதற்கான பிரசங்கங்களில் மனோவசியமான பேச்சும், ஏட்டுப் பழமொழிகளும் வேண்டியவளவு கேட்டிருக்கிறோம். இலகுவில் ஜனாபிமானமடைய விரும்புகிறவனாவது, பதவிகளையும் பட்டங்களையும் பெற நோக்கங்களுடையவனாவது பேச்சை வைத்துக்கொள்ளட்டும். நாம் செய்கையில் காட்டவேண்டிய ஏற்பாட்டைப் பண்ணிக் கொள்வோம். தாய் பூமியிடத்துள்ள நமது அன்பானது நமது உயிரில் ஆழ்ந்த நிலைவரமான சக்தியாயிருக்கிறதென்று காண்பிப்போமாக.

நற்பழக்கங்கள் விஷயமாயும் பரஸ்பரம் நடந்துகொள்ள வேண்டிய விஷயமாயும் நாம் அப்பியஸிக்க வேண்டிய சில சங்கதிகளைப்பற்றிக் கொஞ்சம் நான் சொல்லட்டும். முன் காலத்திலுள்ள உடை மாதிரியும், அழைக்கும் விதமும் வணக்க முறையும் படிப்படியாய் மறைந்துபோதலை விசனமின்றி என்னால் கருதமுடியாது.

"இணங்கிய குணமும் பெருந்தகையிதயமும்
பயந்தனவொழுக்கமது வீண்படுமோ"

என்று மகா கவியொருவர் கூறியிருக்கிறார். அவைகள் வாழ்க்கையில் அலங்காரத்திற்காக மாத்திரம் வாய்ந்த பொருளன்று; ஆத்மாவே அவ்விதம் வெளிக்காட்டுகின்றது, நம் சகோதரர்களிடத்தும் பரமாத்மாவிடத்தும் நாம் வைக்கும் மனோபாவ மார்க்கத்தைத் தெரிவிக்கிறது. நமது உடையில் முக்யமாய் ஸ்திரீகளின் ஆடையில் அழகாய்த் தொங்கிக் கொண்டிருக்கும் மடிப்புகளைப் பார்த்து அனேக ஐரோப்பியர்கள் புகழ்ந்திருக்கின்றனர். சென்ற தலைமுறையிலுங்கூடத் தங்கியிருந்ததும் ஜனக்கூட்டுறவை மேன்மைப்படுத்தினதுமான மனோரம்மிய சம்பாஷணை விநய உபசாரங்களை வியந்துசொல்ல என்னாலாகாது. கொஞ்சம் நிதானமான பேச்சும், பிறருடைய எண்ணம் அபிப்பிராயங்களுக்கு இடங் கொடுத்தலும் வசீகரிக்கத்தக்க அடக்கமுமாகிய குணம்சங்கள் நம் வாழ்க்கையினின்றும் விரைவாக எடு

பட்டுப் போகின்றன. ஆங்கில ஜனங்கத்
தில் மனிதருடைய பேச்சையும் எண்ணத்
தையும் சீர்திருத்துவதில் மாதரும் கூட
விருத்தலானது எப்பொழுதும் அனுகூலமா
யிருக்கிறது. இந்துக்களின் நவீன நாகரீக
வாழ்வில் திகைப்பூட்டக் கூடிய வித
விதமான உடையாடம்பரமும், பேச்சில்
முரட்டுத்தனமும் கூச்சலுமான வார்த்தை
யும், பிறர்கருத்துக்களுக்குக் கொஞ்சமேனும்
இடங்கொடாது அவமதித்தலும், நல்ல யுக்தி
யில்லாமையும், வசீகரமான அடக்கமின்மை
யுமே காணப்படுகின்றன. பண்டிதர்கள்
பாவனைபண்ணும் பெரிய நடையில் நாமும்
பேசிநடிக்கவேண்டுமென்று சொல்லவில்லை.
பெருங் கூச்சலிட்டுப் பேசுதலானது சுத்த
மாயும் இயல்பாயும், கட்டுப்பாடின்றிச் சுயேச்
சையாயுமுள்ள சம்பாஷணை போன்றிருக்
கிறதில்லை யென்பதை மனத்திற்கொள்ள
வேண்டும். ஜனங்கக்கூட்டுறவின் அலங்கார
மேன்மைகள் தங்களளவில் அழகாக மாத்
திரமின்றி அந்தர்முகமான சீலசௌந்தர்
யத்தையும் தெரிவிக்கின்றன.

இனி, இக்காலத்தில் பெண்கல்வியின் பிர
யோஜனங்களை மெச்சிக்கூறல் உண்மையில்
அனுவசியமாயிருப்பினும் அதன் அம்சங்கள்
சிலவற்றைக் சுருக்கமாக எடுத்துரைக்கப்
போகிறேன். நமது பெண்களின் கல்வி
முறையானது முழுதும் ஜாதீய வழியாயிருக்
கவேண்டுமென்பதை வற்புறுத்தக் கோரு
கிறேன். இவர்களை நமது விநோதமான வித்
தியா பட்டதாரிகளின் எதிரொலியாக (அவ
ர்களைப்போல் நடிக்கும்படியாகச்) செய்ய
வேண்டுமென்ற பைத்திய மொன்றுண்டு.
அதுவும் எனக்குத் தெரியும். சில பித்தருக்
குரிய இவ்வீண்பாவனையானது முடிவுபெறு
மானல் ஜாதியாருக்கு இதைப் பார்க்கிலுங்
கொடிய துன்பம் ஏதேனும் நேருமென்பது
என்னல் எண்ணமுடியாதது. ஆங்கில
பாஷையிலுள்ள உத்தமமான அம்சங்களை
எப்படியும் நமது சுயபாஷையிலாக்கிவைப்
போமாக. நாம் நமக்குத் தெரிந்தெடுத்துக்
கொண்டிருக்கும் கேடான மார்க்மாக நமது
மாதரையும் அழைத்துக் கொண்டுபோவோ
மானல், நம் ஜாதீய மேல்நோக்கங்கள்யாவும்
நாசமடைகின்றன. ஒரு கல்விச்சாலையில் (பல
காரணங்களாக நான் மற்ற விவரங்களைச்
சொல்லப் போகிறதில்லை) சுதேச வழியில்
லாததும் இழிவாயுமுள்ள விதத்தில் சங்கீத
மானது நமது பெண்களுக்குக் கற்பிக்கப்பட்
டதைப்பார்க்க எனக்கு மிகவும் வருத்தமா
யிருந்தது. ஹிந்துவல்லாத ஸ்திரீயே இப்
பள்ளிக்கூடத்தில் தலைமை வகித்திருந்தது
தான் இதற்குக்காரணம். ஹிந்துப்பெண்கள்
கலாசாலை நடத்தும் அதிகாரம் முற்றிலும்
ஹிந்துக்கள் கையிலேயே இருக்கவேண்டு
மென்பது அதி முக்கியமான விஷய
மென்று எனக்குத் தோன்றுகிறது. இச்
சங்கதிகளைப்பற்றி யான் சொல்வதற்குக்
காரணமென்ன வெனில், இக்காரியத்தில்
விவேகமும் ஜாதீய சுபாவமுங்கூடிய நிலை
யை வகித்து நிற்கும் விஷயத்தின் முக்கி
யத்தை நாம் வேண்டியவளவு அறியவில்லை:
தப்பான நிலையை வகித்தலானது நமது
அபிவிருத்திக்குரிய மற்ற முறைகளை யெல்
லாம் நாளடைவில் நிச்சயமாய் நாசஞ்
செய்து ஒரு சிறந்த ஜாதியினத்தையும் உல
கத்திலிருந்து போக்கி, அதன் அழிவையும்
உண்டாக்குகின்றது.

நாம் பழக்கத்திற்குக் கொண்டுவர வேண்
டிய காரியாம்சம் இன்னென்றுண்டு. அதன்
மேல் எனக்கு மிகுந்த ஆசையுளது. இந்த
உபந்நியாஸத்தை முடிக்குமுன் அதைப்பற்
றிக் கொஞ்சம் சொல்லவிரும்புகிறேன். நம்
முள் மதவிஷயமானது, வர வர அப்பியாச
மின்றிக் குன்றிவருவதானது எனக்கு அள
விலாத் துக்கத்தை விளைவிக்கிறது; தியான
ஜெபங்கள் செய்யும் ஏகாந்த மண்டபங்க
ளும் பக்திரஸம் பெருகிவரக்கூடிய ஆலயங்
களும் பஜனை கூடங்களும்போய், அவைக
ளுக்குப் பதிலாகப் பிரசங்கமேடையும் உபந்
நியாஸ மண்டபங்களும் வந்திருக்கின்றன.
எம்பெருமானைப் பிரத்யக்ஷப்படுத்தற்குரிய
சாதனம் அவரிடம் அன்புசெலுத்தி தியா
னத்தினலும் ஸ்துதியினலும் பக்தியினலும்
ஹ்ருதயத்தில்வகித்து அவரை அடைவதே.
நம்மிடம் அந்தர்முகபாவக் (உண்ணீர்மை)
குறைவும் ஏகாந்தத் தியான நிலையை யொ
டுக்கிச் சிதைத்தலும், தியாகய்யர் முதலான

ஸங்கீத சிரோமணிகளின் ஹ்ருதயத்திலும்,
இத்தகையோரின் பாட்டைக் கேட்டுக்
கீதமாகிற சிறகுகளின் மூலமாய்த் தயா
நிதியின் திவ்விய ஜோதி மயத்திற்கு மேல
டைந்து உய்ந்தோரின் ஹ்ருதயத்திலும் கிள
ம்பின உத்தம பக்தி ரஸானுபவங்களான
வை மறைந்துவருதலும்மிகுந்ததுக்ககரமான
வையே. நாமெல்லோருங்கூடி ஸர்வவியாபக
மும் ஸர்வ ரக்ஷகமுமான பரமார்த்த ஜீவ
னில் ஒன்றுபட விருப்பதாக நினைத்தற்
குரிய பஜனைகூடமொன்றை இத்திருநெல்
வேலியில் ஸ்தாபிக்கவேண்டு மென்பதைச்
சொல்லொணுத ஆவலோடும் அதிசிரத்தை
யோடும் உங்களுக்குக்கூறுகிறேன். இப்படிப்
பட்ட மேலாம்பரமான நாட்டங்கள் நமது
ஹ்ருதயத்தில் மிகுந்திருந்தால், ஜீவியத்தில்
அதிசிரேஷ்டமாயுள்ளவிஷயங்கள், அன்பு,
பர கைங்கர்யமென்ற இவைகள்தானென்
றும் நாம் உணர்ந்தால், நமது ஊழியமா
னது கங்கையின் பரிசுத்தமான தீர்த்தத்
தைப்போல் பரமகாருண்ய ஸாகரத்தில்
தூய்மையும் பெருமையுங் கொண்டு சேர்ந்
தடைவதானல் அப்பொழுதுதான் நாம் ஆரி
யர் என்ற நாமத்திற்குத் தகுதியுடையவரா
வோம்; அப்பொழுதுதான் நாம் நமது பிர
சித்தமான முன்னோரின் மரபிலுதித்தவரா
வோம்; அப்பொழுதுதான் நமது பாரதமா
தாவானவள் நாட்கிரமத்தில் முன்னேறி முத
ன்மையடைந்து ஆத்மார்த்த விஷயமாய்
ஏகாதிபத்தியமென்ற ஜோதிக்கிரீடமணிந்து
உலகிலுள்ள ஜாதியாரெல்லாராலும் நேசிக்
கப்பட்டுக் கீர்த்திவாய்ந்து நிற்பாள்.

ஸகோதரர்காள்! முடிந்து விட்டது. நீங்
கள் அங்கீகரித்து நடத்துதற்குச் சில மனோ
லக்ஷ்யங்களை என்னலியன்றவரை உங்க
ளுக்கு எடுத்துரைத்திருக்கிறேன். நான்
சொன்னவை உங்கள் மனத்திற் பதிந்து நீங்
களும் ஏற்றுக்கொள்வீராயின், நாமும் இந்த
லக்ஷ்யங்களில் சிலவற்றை நிறைவேற்றிப்
பிரத்யக்ஷப்படுத்துதற்காக மனோ திடங்
கொண்டு எத்தனிப்போமாலும் நான் எடு
த்த பிரயாசைக்கு இதைப்பார்க்கிலும் சிறந்த
பிரதியுபகாரம் வேறெதையும் என்னல்
நினைக்க முடியாது. இந்திய மாதாவைப்பற்றி
நான் இயற்றியுள்ளசெய்யுளைக்கொண்டு இவ்
வுபந்நியாஸத்தை முடிக்க அனுமதி கேட்டுக்
கொள்ளுகிறேன்.

'வனப்பெனுங் கேடுசால் வாத்தைப் பெற்றும்,
ஆத்மானந்தமும் அமைதலுமடைந்தும்,
நெடியபாழ் நிலத்தின் மத்தியில் நறுமலர்
பூத்தமோ ஜாவாய்ப் பாவனை புரியும்
அனேக ஜாதியின் அழிவிலா வாசியே!
இரக்கமில் மாந்தர் தீங்குக ளிழைக்கையில்
இணையடி நோவும் ஓய்வுமேற்று நீ
இடியுடனடந்துன் இரகசிய வெழில்களை
மறந்து, குடதிசை வாய்மொழியனைத்தையும்
வேதவாக்காய்க் கொள்ளவும் வேண்டுமோ;
செவ்விய கண்களில் திவ்வியஜோதியும்,
மாண்புடைத்தெய்விக விலக்கினில் வைத்த
இதயமுமென்றும் இளமையுந் துணையும்,
தூய்மையும் இனிமையுமிவையெல்லாந் தொகுத்த
பாரததாயே! உன்னு யிர்பாடுங்
கீதந்தன்னைக் கேட்கவுமுந்தன்
மலாடிவாயினல் வாழ்த்திவணங்கவும்
கூடும்பொழுது காமக்குரோதம்
பொய்கள்லோபம்போற்றமுடியுமோ?''

பனி. சாதாரண வாயுவோடு கலந்து ஆகாயத்தில் நிற்
கும் நீராவியானது குளிர்ச்சியடைந்தால் அதன் அணுக்
கள் சேர்ந்து திரண்டு மேகரூபமடைகிறது. பூமிக்குச்
சமீபத்திலுள்ள சாதாரண வாயுவோடு கலந்துநிற்கும்
நீராவியானது, குளிர்ச்சியடைந்திருக்கும் பூமி, புல்,
பூண்டு முதலானவைகளிற் படும்போது அதிநுட்ப
மான நீர்த்துளிகளாக மாறி அப்பொருள்களின்மீது
தங்குகின்றது. முத்துகளைப்போன்ற இச்சிறு நீர்த்
துளிகளுக்குத்தான் பனி என்று பெயர். பனிக்கட்டி
யாவது குளிர்ந்த வேறு வஸ்துவாவது உள்ள ஓர் சீசா
வை உஷ்ணமாயுள்ள சாதாரண வாயுவிற் கொண்டுவந்
தால், அந்தச் சீசாவுக்கு வெளிப்புறத்தில் சிறு நீர்த்
துளிகள் வந்தடையும். சாதாரண வாயுவிலிருக்கும்
நீராவியானது குளிர்ந்திருக்கும் சீசாவின்மேல் பட்ட
வுடனே அதிலுள்ள உஷ்ணத்தை அச்சீசா கிரகித்துக்
கொள்ள, ஆவி குளிர்ந்து ஜலரூபமடைந்து, அப்பாத்
திரத்தின்மேல் ஒட்டிக்கொள்ளும். இதுபோலவே
பனியும் உண்டாகிக் குளிர்ந்திருக்கும் வஸ்துக்களின்
மீது தங்கும். பகற்காலத்தில் சூரியகிரணங்களால் பூமி
வெப்பத்தை அடைகிறது; சூரியன் அஸ்தமித்தவுட
னே பூமியிலிருக்கும் உஷ்ணமானது ஆகாயவழியாய்
வெளிப்பட, அதன்மீதிருக்கும் வஸ்துக்கள் அதிசீக்
கிரத்தில் குளிர்ச்சியடைகின்றன. அப்போது முன்
சொன்னபடி பனியுண்டாகின்றது. ஆகாயம் மந்தா
ரமாக விருக்கும்போது பூமியின்மேல் ஓர் கம்பளம்
மூடியதுபோலிருப்பதால், பனி அதிகமாக உண்டாவ
தில்லை. மேகசஞ்சாரமில்லாமல் ஆகாயம் வெளுத்
திருக்கும் இராக்களில் பனி அதிகமாக உண்டாகும்.

ஜய உருமால்

THE TURBAN OF SUCCESS

(183-ம் பக்கத் தொடர்ச்சி)

கவுண்டரைக் கண்டதும் "இதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். நேற்றுராத்திரி முழுவது மிதே ஞாபகந்தான். நான் இந்தக் கேஸுக்கு, கூட இருக்கிறவரையில், கேஸ் கண்டிப்பாய் ஜயிக்கும். மாப்பிள்ளை, போலீஸ் உத்தியோகஸ்தராயிருப்பது கவுண்டரதிர்ஷ்டந்தான். நான் கூடவந்தால் ரொம்ப அனுகூலம். வக்கீல் வரதராஜ சாஸ்திரியார் நல்ல கெட்டிக்காரராம். அவரை வைத்தால்தான் கேஸ் ஜயிக்குமென்று மாப்பிள்ளை சொல்லுகிறார். ஆனால் அவரை சாயங்காலத்துக்குமேல்தான் பார்கலாமாம். அதற்குள் மாப்பிள்ளையும் அவரிடம்நம்மைப்பற்றிப் பேசுவார். ராத்திரி ஏழு மணிக்குப் போகலாம். அதற்குள் இவ்வூரில் ஹைகோர்ட், ஹார்பர், பார்க், ம்யூஸியம் எல்லாத்தையும் பார்த்துவிட்டு வரலாம். நம்ம மருமகளும் விசேஷங்களைக் காண்பிக்க வருகிறேனென்று சொல்லுகிறாள். இரண்டு வண்டி வைத்துக்கொண்டு போய்விட்டுவரலாம்" என்று போலீஸ்க்காரரிடம் சொல்லி இரண்டு வண்டிகளைத் தயார் செய்துகொண்டு புறப்பட்டார்கள். வழியில் கடைகளில் சீட்டிவகையரு சாமான்களை வாங்கிக்கொண்டு கவுண்டரைப் பணம் கேட்டார். அவராக்ஷேபிக்க ஆரம்பித்தார். "ஆனால் நானிப்பொழுதே ஊருக்குத் திரும்புகிறேன்" என்று பயமுறுத்தின தின்மேல் கவுண்டர் பெருங்காயம் முதல் வாங்கிக் கொடுத்தார். இவ்வளவு வியாபாரத்திலும் கவுண்டர், தன் மகனுக்காக நான்கணாவில் ஒரு ஜரிகைப்பட்டைபோட்ட குல்லாவைத் தவிர வேறொன்றும் தனக்காக வாங்கவில்லை. திரும்பிவந்தவுடன், கவுண்டருக்கு கிளப்பில் போஜனம் முடிந்தது. உடனே இருவருமாக கேஸ்கட்டுடன் வக்கீல் வரதராஜ சாஸ்திரியார் வீட்டுக்குப் புறப்பட்டார்கள். இருளப்ப முதலி தன்னுடைய ஜய உருமாலை மறக்காமல் கம்பீரமாய் தலையிற் கட்டிக்கொண்டார். மேற்சொக்காய் அழுக்காயிருந்தது. வழியிலோர் கம்பெனியில் அவரளவுக்குச்சரியாய் பன்னிரண்டுரூபாயில்லாங் கோட் (Long coat) ஒன்றும், கேஸ்கட்டை வைத்துக் கைப்பிடிக்க ஆறு ரூபாயிலொரு தோல்பையும்(Brief bag) வாங்கினார். கவுண்டர் பணங்கொடுக்கத் தடுமாறினான். 'தாட்சண்யத்திற்காக வல்லவோ வருகிறார். ஏதாவது பீஸ் பேசாமற்போனேனே வேறு வழியில்லை தெய்வமே' என்று விசனப்பட்டுபெருமூச்சு விட்டுக்கொண்டு பணத்தை எண்ணினான். பிறகு வண்டியேறிச் சென்று, வக்கீல் வீட்டுக்குள் நுழைந்தார்கள். முன்றூமில் ஒருவர், நாற்காலியி லுட்கார்ந்து மேஜையின் மேற் சில கட்டுகளை வைத்துக்கொண்டு எழுதிக் கொண்டிருந்தார். நம் ஜய உருமால் வக்கீல் அவரிடம்சென்று சலாம் செய்தார். அவர் 'நீர் யார்' என்று கேட்டார். 'நானொரு வக்கீல். ஒரு கேஸ் விஷயமாக ஆலோசனை செய்யவந்தேன். ரிமாண்டிலிருந்து விடுவிக்க ஒரு அப்பீலும் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்யவேணும்' என்றார். 'தங்கள் கட்டைத் தந்தால் பார்க்கிறேன்' என்று கையை நீட்டினார். வக்கீலும், புதிய தோல் பையை பிரயாசப்பட்டுத் திறந்து கட்டையெடுத்துக் கொடுத்தார். அதைக் கையில் வாங்கிக் கொண்டு 'நீங்களெந்த ஊர்' என்று கேட்டார். 'நானிருப்பது இடியனூர். கவுண்டரிருப்பது கொடியனூர்; இருதயபுரம் தாலுக்காவைச் சேர்ந்தது' என்றார். 'ஓகோ? ஆமாம்! உங்களைப்பற்றித்தான் ஸப் இன்ஸ்பெக்டர், எஜமானரிடம் சாயங்காலம் பேசிக்கொண்டிருந்தார்' என்று சொல்லி கேஸ் கட்டை பக்கத்திலிருந்த அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு 'எஜமான் கிளப்புக்குப்பந்தாடப் போயிருக்கிறார். வர நேரமாகும். காலையிலே வந்தால் சாவகாசமாய்ப்பார்க்கலாம். நான் முன்னாடியே சொல்லிவைக்கிறேன். கவுண்டருக்கு வேண்டிய ஒத்தாசை நான் செய்கிறேன்' என்று அவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினார். 'கேஸ் கட்டை நாளைக்குக் கொண்டுவந்தாலாகாதோ' என்று கேட்டார். 'வக்கீலொரு சமயம் பார்த்தாலும் பார்ப்பார். இங்கேயே இருக்கட்டும். ஓடிப்போய்விடாது காலமே வாங்கோ, பேசிக்கொள்ளலாம். எனக்கு வேறே வேலையிருக்கு' என்று இவர்களை மேற்பேச்சுக்கிடம் விடாமல் அனுப்பி

விட்டார். வெளியே போகுமுன் கவுண்டரிடமிருந்து ஐந்து ரூபாய் வாங்கி குமாஸ்தாவிடம் கொடுத்தார். இதுதான் முதல் பொய்யென்று எண்ணினார் கவுண்டர்.

மறுநாள் காலை 7 மணிக்குப் பலகாரம் செய்துகொண்டு வக்கீலுடைய கிருஹத்திற்கு இருவருமேகினார்கள். முதலியார் உருமாலைப் பிரித்துக் கட்டிக்கொண்டார். அங்கு செல்லும்பொழுது மணி 7-45 இருக்கும். வேறொரு குமாஸ்தா விருந்தார். முதலியார் அவரிடம் சென்று, முந்தின நாள் கேஸ் கட்டுக் கொடுத்த விவரத்தைத் தெரிவித்தார். அவர் 'எனக்கொன்றும் தெரியாது. அந்த குமாஸ்தா வர நேரமாகும். அந்தப் பெஞ்சில் போயுட்காரும். தலைக்கட்டைக் கீழே வைத்துக் கொள்ளலாம். அதைப் பார்த்தாலெனக்குத் தலையை கனக்கிறது' என்று சிரித்தார். அங்கிருந்தவர்கள் தலைப்பாகையை உற்றுப்பார்த்தார்கள். அங்குவந்தவர்களில் ஒரு தாஸி, அதை வெகு ஊக்கத்துடன் நோக்கினாள். அச்சமயத்தில் வக்கீல் வந்துவிட்டாரென்று தெரிந்து ஒரு சீட்டில் தன் பெயரையும் ஸப் இன்ஸ்பெக்டருக்கு பந்து என்றும் எழுதியனுப்பினார். அரைமணி நேரத்திற்கப்புறம் முதலியாரைக் கூப்பிட்டார். அதற்குள் பெரிய குமாஸ்தாவும் வந்துவிட்டார். ஜய உருமாலுடன் முதலியார் உள்ளே சென்றதும், வக்கீல் கேஸ் கட்டைக்கேட்டார். குமாஸ்தா எடுத்துக்கொடுத்தார். அதைப் பிரித்துப் பார்க்குமுன் 'பீஸ் எங்கே' என்று கேட்டார். குமாஸ்தா 25-ரூபாய் கொடுக்கவேணுமென்று முதலியாரிடம் சொன்னார். உடனே கவுண்டரிடம் வாங்கிக்கொடுத்தார். பிறகு வக்கீல் கட்டைப் பிரித்துப்பார்த்து, 'உங்களுக்கு இக்கேஸில் என்னசெய்யவேணும், சுருக்கமாய்ச் சொல்லும்' என்றார். "ரிமாண்டிலிருந்து ஜாமீன் பேரில் விடுவிக்கவேணும். ஜில்லாகோர்ட்டில் ஆஜராகி கொத்துக்காரக் கவுண்டரை விடுவித்து வைக்கவேணும். அவருக்கு இந்த கொலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இது அபாண்டமாய் அவர் பேரிலேற்பட்டது" என்று சொல்லுமுன், வக்கீல் "நான் ஜட்ஜல்ல, வக்கீல்தான். அதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்லுகிறீர். நீரிங்கே பிளீட் (Plead) பண்ணவேண்டாம். ஹைகோர்ட்டில், ரிமாண்டு அப்பீல் தாக்கல் செய்து பேசுவதற்கு, ரூபாய் ஐநூறு கொடுக்கவேணும். ஜில்லாகோர்ட்டில் ஆஜராகவேணுமானால் தினமொன்றுக்கு பத்தாய், ஆயிரம் ரூபாயும் கேஸுக்காக மொத்தமாய் முன்பணம் மூவாயிரம் ரூபாயும் கொடுக்கவேணும், சம்மதமா" என்றார். முதலியார் வெளியேவந்து கவுண்டருடன் யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது அங்கிருந்த தாஸி, ஒரு டாணாக்காரனுடன் வந்து முதலியின் ஜய உருமாலைக் காட்டினாள். அவனதை யெடுத்துப் பிரித்துப் பார்த்தான். தாஸி சொன்ன அடையாளமதிலிருந்தது. உடனே முதலியை டாணாவுக்குக் கூட்டிக்கொண்டு போனான். இதற்குள் வக்கீலெழுந்திருந்து உள்ளே சென்றார். கேஸ்கட்டு மறுபடியும் அலமாரியில் வைத்து பூட்டப்பட்டது. குமாஸ்தாக்களும் கச்சேரிக்குப் போகப் புறப்பட்டார்கள்.

டாணாவுக்குச் சென்றதும், தாஸி பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்தாள். "இவர் தலையில் கட்டிக்கொண்டிருந்தது என்கொட்டடிப் புடவை. 5 வருஷங்களுக்கு முன் என் வீட்டில் திருட்டுப்போய் டாணாவில் எழுதி வைத்த சொத்துக்களில் இதொன்று. திருட்டுப்போன கொஞ்ச தினங்களுக்கெல்லாம், என்னிடமிருந்த ஊழியக்காரி ஒரு மூக்கரச்சி ஓடிப்போய்விட்டாள். அவளை எங்கு தேடியுமிதுவரையிலும் அகப்படவில்லை." என்றாள். முதலியும், தன் ஊரிலொரு மூக்கரச்சியிருப்பதாகவும் இதையவளிடம் முப்பது ரூபாய்க்கு விலைக்கு வாங்கி யிருப்பதாயும் சொன்னவுடன் அவரை ஸப் இன்ஸ்பெக்டரால் தயார் செய்யப்பட்ட இரண்டு ஜாமீன் பேரில் வெளியே விட்டார்கள். இரண்டு தினங்களுக்குள் மூக்கரச்சியையும் பிடித்து வந்தார்கள். முதலியாரை வாதிதரப்பு முதல் சாக்ஷியாய் விசாரித்தார்கள். அப்பொழுது முதலியாருடைய ஊழல்கள் வெளிப்பட்டன. மூக்கரச்சிக்கு ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. உருமாலும் புடவையாக மறுபடியும்மாறி பட்டணத்து தாஸியின் கையேறிற்று. ஐயோ பாவம்! ஜய

(இதன் தொடர்ச்சி 226-ம் பக்கம் பார்க்க)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

மாதவீகங்கணம்

அத்யாயம்-7

தர்பார் மண்டபம்

(196-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்புறம் அக்பர், அப்துர் ரஹீமைப் பார்த்து ஸ்நேஹபாவமாய், "கான்கானன், ஏதோ நீர் உமது அந்தஸ்துக்கு மிஞ்சி தானதருமஞ் செய்வதாகக் கேள்விப்பட்டேன். நிஜந்தானா? தங்களை வந்து கடைசியாய் யாசித்தவருக்குக் கொடுக்க ஒன்றுமில்லாமல், மசிக்கூட்டைக் கொடுத்துவிட்டீராமே. தங்களுடைய மசிக்கூடு தங்களை விட்டகன்றால், எமது ராஜ்யத்துக்கு அதிக நஷ்டம் உண்டாகுமே" என்றார்.

அரசரது சாதுர்யமொழிகளைச் செவியுற்ற கான்கானன், ராணியாராகிய ஸாலீம்பீகமவர்களுடைய கவித்திறமையை ஸபையோருக்கு அறிவிக்கும்பொருட்டு, "அரசே, இந்த மாளிகையில் என் காவ்யங்களைக் கொண்டுவர அவசியமில்லையே. மாட்சிமை தங்கிய தங்களுடைய அரண்மனையில் எங்கு பார்த்தாலும் கவிமயமாயிருக்கிறது" என்று சொன்னதை அக்பர் தவிர வேறெவரும் கவனிக்கவில்லை.

ரஹீம் போனவுடன், அவர் ஸ்தானத்தில் வந்தனஞ்செய்து நின்ற மீரா அஜீஜைப்பார்த்து, சக்ரவர்த்தியவர்கள், "இதோ இன்னொருவர் வருகிறார். நல்ல வைதிக ஸிஷ்டர்; நிகரற்ற கவி; பகைவரனைவரும் கண்டு நடுநடுங்கும் போர்வீரர். உண்மையான முஸல்மானைப்போல் மக்காவுக்கு யாத்திரை போய் வந்தீர். மகம்மதியர், ஹிந்துக்கள் ஆகிய இரண்டு மதத்தினரும் அறிந்து கொள்ளக்கூடாத ஒரே முதற்பொருளை நம்புவதால், இருதிறத்தாரையும் ஒன்றுசேர்க்க விருப்பங்கொண்டு நாம் ஸ்தாபித்த நூதன ஒளியையுணர்ந்து கடவுள் பக்தியை (தீன்—இலாஹீ) அனுசரித்தீர். வெகுதூரத்திலிருக்கும் பேஹார் மாகாணத்தில், நீர் நீதியாய் ராஜ்யபரிபாலனஞ் செய்ததைநாம்இன்னும் மறந்திலோம். உமது சாதுர்யமான பாடல்களைச் சிறுவர்கள் இன்னும் பாடிக் களிக்கின்றார்கள். பாத்திரமறிந்தே பிச்சையிடவேண்டியது. இடமறிந்தே மரியாதை செய்ய வேண்டும்" என்று கூறினார்.

மீரா அஜீஜ் பணிவாய் வெகுமதியைப் பெற்றுக்கொண்டு அகன்றபின், ஒருவர் பின்னொருவராக இதர அரசர்கள், சிற்றரசர்கள், ஸேனாதிபதிகள் வந்துகொண்டேயிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அக்பர் பெருமான் நயமொழிகள் கூறி மரியாதை செய்தனுப்பினார். அவர்களுள் ஒருவர், அக்பரவர்கள் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்ட காஸ்மீர ராஜ்யத்து முஹமதிய அரசர். ஆனால் தன் ஸொந்த மாகாணத்தைப் பறிகொடுத்து வருந்திய அச்சிற்றரசருக்குச் சக்ரவர்த்தியவர்கள் ஒரு விஸ்தாரமான ஜாகீரைக் கொடுத்து அவரைத் தகுந்த அந்தஸ்தில் வைத்திருந்தனராதலால், அவ்வரசர் மிகுந்த ராஜபக்தியும் ராஜவிஸ்வாஸமும் உடையவராய் அக்பரைத் தன் குலதெய்வமாகநினைத்து வந்தனம்புரிந்து சென்றனர். சக்ரவர்த்தியவர்களுடைய மருமகனாகிய மிர்ஜா ஷாருக் என்பவரும் அக்பரைக் கண்டுபோக வந்திருந்தனர். அவருக்குப் பின்னர், தம் ஸ்வய மாகாணத்தைவிட எல்லாவிதத்திலும் சிறந்துவிளங்கும் ஓர் இந்திய மாகாணத்தைப் பரிசாகப் பெற்றிருந்த காந்தஹார் நாட்டு மிர்ஜா ஸஹோதரர்களும், ராஜாதிராஜ ஸம்பன்னரை வணங்கிச் சென்றனர்.

இதுவரைக்கும் ஸாதாரணமாய்க் கைகொட்டி கோஷம் செய்துகொண்டிருந்த ஜனங்கள் திடீரென ஏககாலத்தில், செவி செவிடுபடும்படி ஆரவாரஞ் செய்தனர். அக்கூட்டத்தில் சற்று அப்புறம் இப்புறம் பார்த்துக் கொண்டிருந்த சிலர் இந்த ஆரவாரத்தைக்கேட்டு சக்ரவர்த்தியவர்கள் அமர்ந்திருந்த திசையை நோக்கினர். அவ்விடம் பாருள்ளளவும் க்ஷத்ரியதர்மத்தை மறக்காத இயல்பினராகிய க்ஷத்ரிய குலத்து உதித்த ஓர் யௌவன சுத்தவீரர் தமது தேசீய உடைதரித்து முகத்தில் வீரலக்ஷ்மியின் கலைகள் விளங்க அதிகம்பீரமாய் ஸிம்ஹாஸனத்தின் முன்பாகப் பணிவாய் வந்தனம் புரிந்து நின்றிருந்தார்.

உருமாலுடன் மூக்காச்சியையுமிழந்த முதலியார், கவுண்டரை யழைத்துக்கொண்டு 'பட்டணத்துக்கு நாமெந்த வேளையில் புறப்பட்டோமோ, சமயத்திற்கு செக்காத்தியும் குறுக்கே வந்தாள்' என்று மனதில் எண்ணிக்கொண்டு கேஸ் கட்டைத் திரும்ப வக்கீலிடம் பெற்று, ஊர் வந்து சேர்ந்தார்.

"ஹா, வாரும், ராஜகுமாரரே, ராஜபுத்ர படைவீர திலகமே, உமது ஆற்றல் வரம்பு கடந்தது. ப்ருத்விராஜரே, உமது கவித்திறமை சிறிதுகாலமுன்புதான் நமது செவிக்கெட்டியது. உம்முடைய போர்த்திறமையா, கவித்திறமையா, எது சிறந்தது என்று எனக்கு ஸந்தேஹம் உண்டாய்விட்டது. ராஜஸ்தானத்து புஜபல பராக்ரம சௌர்யங்கள் யாவும் உமது நாவன்மையால் இந்நாடெங்கும் பரவியுளதெனக் கேள்விப்படுகிறேன். அந்த பாக்யம் கிடைப்பது ஸாமாந்யருக்கன்று."

"மொகலாய நடுநாயகமே, எனக்கு முன்னிருந்த உத்தமகவிகளாலும் வரப்ரஸாதம் பெற்ற சாரணர்களாலும் அரிய ஆற்றலுடன் வர்ணிக்கப்பட்டிருக்கும் ராஜஸ்தானத்து ஸ்த்ரீபுருஷர்களுடைய மேன்மைகளையும், பராக்ரமங்களையும் கதைரூபமாகச் சிறுவர்களுக்குக் கூறும் சக்திகூட அடியேனுக்குக் கிடையாது. எமது சௌர்யம் பொருந்திய மூதாதைகள் ஒருவர் ஒருவராய்க் காலமாய்விட்டனர். ராஜஸ்தானத்தில் அத்தகைய புருஷர்கள் ஒருவரும் இப்போது கிடையாது. தப்பித்தவறி இருந்த இரண்டொருவரும் சிறிது காலத்துக்குமுன் விண்ணுலகஞ் சென்றுவிட்டனர். சிற்சில ஸமயங்களில் அப்பூண்டு அடியோடு அற்றுப்போய்விட்டதோ என்று ஸந்தேஹிக்க வேண்டியதாயிருக்கிறது."

"தெரிந்தது நீர்கூறுவது. இருபது வருஷகாலம் இடைவிடாமல் என்னுடன் போராடிக் கடைசிமட்டும் கீழ்ப்படியாமல் நிமிர்ந்த தலையுடனே வீரஸ்வர்க்கம் எய்திய மீவார்நாட்டு ராணா ப்ரதாப ஸிங்கைப்பற்றி நீர் இப்போது கூறுகிறீர் போலும்: காவ்யங்கள் மூலமாகப் பின்னும் பின்னும் வீராவேசம் புகட்டி ப்ரதாப ஸிங்கரைச் சண்டைக்குத் தூண்டி ப்ராணன் உள்ளளவும் கத்தியை உறையிலிடாதபடி அவ்வரைத் திடப்படுத்தியவர் நீரன்றோ? அவ்விஷயத்தில் உண்மையில் எமது பகைவர் நீர்தான்."

"ராணாவினுடைய வீரகுணங்களைப் புகழ்வது த்ரோஹமாயின், ஸ்வாமீ, அடியேனைவிட ஸகல விஷயங்களிலும் சிறந்து விளங்கும் ஒருவர் அக்குற்றத்துக்கு உள்ளாகிறார்" என்று சாதுர்யமாய் விடைபகர்ந்தார் பிகாநீர் நாட்டு அதிபதி.

பரமதயாளுவாகிய சக்ரவர்த்தியவர்கள் சாதுர்யமான இந்த ப்ரதியுத்தரத்தைக் கேட்டு ஸந்தோஷமடைந்து புன்முறுவல்செய்தார். "ஆம், தமது பந்து மித்ரர்களுக்காகவும், தமது குலத்துக்காகவும், தமது ஜாதிக்காகவும், தமது நாட்டிற்காகவும், இவற்றிலெல்லாம் சிறந்ததாகிய தமது மானத்துக்காகவும் தர்மயுத்தம் புரிந்து ப்ராணனைப் பலிகொடுத்த சுத்தவீரர் ஜன்மசத்ருவாயினும் அக்பர் புகழாமலிருப்பரோ? அவ்வாறு புகழாதிருப்பது சுத்தவீரனென்பானுக்கு ஸாத்யமா? எனது ராஜ்யத்திலுள்ள தளகர்த்தர்கள் பலர் என்மீது கோபங்கொண்டனர். ராஜா மான்ஸிங்கும், ராணாவுக்கும் தமக்கும் உள்ள பழையநாளைய சத்ருத்வத்தை மறந்தாரில்லை. யார் என்ன சொன்னாலும் ஸரி, என்மீது எவர் எவ்வளவு வருத்தங்கொண்டாலும் ஸரி, என் உயிருள்ளமட்டும் நான் அவருடைய புத்ரருக்கு ஸர்வ ஸ்வதந்த்ரமும் அளித்து அவருடன் ஸ்நேஹபாவங் கொண்டாடுவேன் என்பதற்கு ஒரு தடையுமில்லை. மீவார் நாட்டைப்போல் ஐம்பது மலைநாடுகளை க்ஷணத்தில் பெறலாம். எனது ஹிந்து ப்ரஜைகளின் நட்புக்கு ஈடாகுமா அவையெல்லாம்?" என்று பேசிமுடித்தார் அரசரெல்லாம் புகழ் கோமான்.

தம்முடன் போர்புரிந்து அபஜயம் பெற்றவர்களை யெல்லாம் தமது உதார குணத்தால் மன்னித்து என்றைக்கும் பிரியாத வண்ணமாய்த் தம்முடன் ஐக்யப்படுத்திக் கொண்டும்; அவ்வாறு அபஜயம் பெறாமல் ஸ்வதந்த்ரத்தை ப்ராணனைவிடப் பதின்மடங்கு அதிகமாய்ப் பாராட்டிப் போர்புரியும் அரசர்களிடம் மதிப்புப் பாராட்டி அவர்களுடைய நட்பை நாடியும் இவ்வாறு அவ

ரவர்களுக் கேற்றவாறு பெருந்தன்மையுடன் செங்கோல் நடத்தும் தமது காருண்ய ராஜனுடைய மொழிகளைக் கேட்டு ஜனங்கள் யாவரும் அவரைப் போற்றினர்.

இதர மன்னர்களும், ஸேனாதிபதிகளும் வரிசைக்ரமமாக அக்பரை வணங்கி மரியாதை பெற்றுச் சென்றனர். அப்புறம் தத்வம், சாஸ்த்ரம், ஸாஹித்யம், ஸங்கீதம் முதலிய பல்வேறு துறைகளில் பூர்ண பாண்டித்யம் பெற்று விளங்கும் புலவர்கள் ஒருவர்பின் ஒருவராய் ராஜ ஸபைக்கு வந்து வணங்கி நின்றனர்.

"அதோ ஒருவர், தீர்க்காலோசனை முகத்துடன் அதிக அமரிக்கையாய் அரசர் முன் நின்று வந்தனம் புரிகிறாரே, அந்த மஹான் இன்னாரென உனக்குத் தெரியுமா?" எனக் கேட்டார் கஜபதி.

"ஆமாம், அதோ நிற்கிறார், அவர் யார், எனக்குத் தெரியாதே?"

"இந்த ஸமஸ்தானத்திலிருக்கும் பண்டிதர்களுக்குள்ளெல்லாம் சிறந்த பண்டிதரும், ப்ரதி கலைகளிலும் பூர்ண அறிவு பெற்று ப்ரஸித்தியடைந்திருக்கும் நிபுணர்கள் பலர் தழைத்தோங்கும் இக்காலத்தில் அவர்கள் எல்லோரையும் ஒருங்கே தலை குனியச் செய்யும் ஆற்றலுள்ள அறிஞராவர் அவர். அவர் தரித்திருக்கும் ஆடை, அவரிடம் காணப்படும் பொறுமை, அடக்கம், அவர் நிற்கும் நிலைமை, அவர் பார்க்கும் பார்வை இவைகளுக்கும் அவருடைய உண்மை யோக்யதைக்கும் எவ்வளவு தாரதம்யம் இருக்கிறது பார். நிறைகுடமென்று எவராவது சற்றேனும் எண்ணுவரோ?"

"என்ன, நீ வாஸ்தவமாகவா சொல்கிறாய்?"

"நீ நம்பினாலும் ஸரி, நம்பாவிட்டாலும் ஸரி. அவர் நாமதேயம்தான் அபுல்பாஸல். சரித்ரம், சாஸ்த்ரம், தத்வம், இவற்றில் அவருக்கிணையே கிடையாது. இந்த ராஜ்ய முழுவதிலும் அவருடன் ஒப்பிடக்கூடிய ராஜதந்திரியைக் காண்பதரிது."

"சக்ரவர்த்தியவர்களுடைய ஸமஸ்தானத்து ப்ரதான அணிகலனாய் விளங்குபவர் இவர்தானா? இவரா ஹிந்துஸ்தான முழுவதும் பண்டிதர் பாமரர் யாவரும் ஸதா போற்றும் உத்தம புருஷர்!"

"ஆம், இவர்தான் அவர். ஹிந்துஸ்தானத்தில் இவரைப் போற்றுவாரும் உளர். தூற்றுவாரும் சிலர் உளர். பால்யத்தில் ஸமஸ்தானத்தினின்று துரத்தப்பட்டுப் பரம தரித்ரராய் ஊரூராய்த் திரிந்து சொல்ல முடியாத கஷ்டங்களெல்லாம் அனுபவித்தனர். ஆனால் நமது சக்ரவர்த்தியவர்களுக்கு யுக்தவயது வந்தவுடன் அவர் தம் நண்பரை ஸமஸ்தானத்துக்கு அழைத்து உயர்ந்ததொரு பதவியில் அமர்த்தினார். இப்போது ஹிந்து முஸல்மான் இவர்களை ஒன்றுபடுத்தும் உத்தேசத்துடன் சக்ரவர்த்தியவர்கள் நூதனமாய்ப் போதிக்கும் புதிய மதத்தை முதல் முதல் அவருக்கு உபதேசித்தவர் அபுல் பாஸல்தான். மொகலாய ஸமஸ்தானத்து முல்லாக்கள் அனைவரும் அவரை நெஞ்சாறப் பகைக்கின்றனர். அவர் உபதேசித்த நூதன முறையை யங்கீகரிப்பவர் வெகு சிலரே. ஸாலிம் இளவரசர் முகத்தைப் பார்த்தாயா? எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது. அவர் பட்டத்துக்கு வரும்போது கற்றறிந்த நமது சரித்ராசிரியர் கதி என்னாமோ அறியோம்."

நரேந்த்ரனுக்கு ஏதோ தன் பழைய நினைவு எழ, "இளவரசர் முகம் எப்போதும் இப்படியிருக்காது. ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களில் அவர் ஸந்தோஷ முற்றிருப்பார்" என்று புன்னகையுடன் கூறினான்.

"உச், உச், வாயைமூடு. பகல், பக்கம் பார்த்துப் பேசவேண்டும். நம்மைச்சுற்றி ஒற்றர்கள் பலர் இருக்கின்றனர். ராஜஸமூகத்தில் அரண்மனை வாஸிகளைப் பற்றிய குற்றங் குறைகளை ப்ரஸ்தாபிப்பது தகுதியான கார்யமன்று"

"அபுல் பாஸலின் ஸகோதரர் எங்கே? அவருடைய ஸாமர்த்தியம் சொல்லத் திறமற்றது. ஆக்ராவில் மாத்ரம் அல்ல; வங்காள முழுவதும் பாலர் வயோதிகர் பலர் அவருடைய பாடல்களைப் படித்துப் பாடிக் களிக்கின்றனர். ஸரஸ்வதி அநுக்ரஹம் ஸம்பூர்ணமாய்ப் பெற்றவர் அவர். பாய்ஸி என்னும் நாமதேயமுடைய அவரைக் கலைமகளுடைய செல்வக்குழந்தை யென்றே சொல்ல வேண்டும்."

"அந்தோ! அவர் போய் எத்தனையோ நாளாயிற்றே! இந்த ராஜஸபையில் அதிசோபையுடன் விளங்கிய அவர், பால்யத்திலேயே அகால மரணத்துக்குட்பட்டனரே!"

"வங்காளத்து க்ராமாந்தரங்களில் அக்பரைப்பற்றி வழங்கும் கட்டுக் கதைகள் அநேகங்களில் அவருடைய நாமதேயத்துடன் கூடி வழங்கும் பெருமைவாய்ந்த பர்பால் என்பவரும் காலமாய் விட்டனர். என்ன மரணங்கள்!"

"நல்லமைச்சும், சுத்த வீரரும், விகடஸ்ரேஷ்டருமாகிய அவர், மேற்கு ப்ரதேசங்களில் வஸிக்கும் யுத்தப்ரியமுள்ள ஜாதியாருடன் நடந்தபோரில் முடிவெய்தினர். தனது ப்ராணஸ்நேஹிதருடைய பிரிவையாற்றாமல் சக்ரவர்த்தியவர்கள் துக்காக்ராந்தராய் இரண்டொரு நாள் பர்யந்தம் அன்ன ஆகாரமில்லாமலிருந்தனராம். அதோ ஒருவர் பச்சை தலைப்பாகையும் நீண்ட தாடியுமாய் அபுல் பாஸலைச் சுடசுடப் பார்த்துக்கொண்டு நிற்கிறாரே அவர் யார் தெரியுமா?"

"கஜபதி, யார் அவர். நிரம்ப கர்வமுடையவர் போலிருக்கிறாரே."

"அவரும் ஒரு சிறந்த க்ரந்தகர்த்தாதான். நல்ல சொல் நயமுடையவர். சக்ரவர்த்தியவர்களுடைய சரித்ரத்தை எழுதிக்கொண்டிருக்கிறார். நன்றாய்ப் படித்தவர். நல்ல கூர்மையான புத்தியுடையவர். என்ன இருந்தாலும் வித்வத் காய்ச்சல் யுண்டே, அது லேசானதா? அபுல் பாஸலைக் கண்டால், அவர் பொறாமையால் வயிறு வெடித்துச் சாவார். அவர் பெயர் பாடோனீ"

நகரகானாவிலிருந்து பறைமுழக்கம் ஒலித்தது. வரவேற்பு உபசரணை முடிந்துவிட்டது. சக்ரவர்த்தியவர்கள் தம் ஆஸனத்தை விட்டெழுந்து தமது ப்ரபுக்கள், ப்ரதானிகள், குடிகள் யாவரும் கவனமாய்ச் செவிகொடுத்துக் கேட்டு அறியவேண்டிய விஷயம் ஒன்றுளது எனத் தெரிவித்தார். உடனே ராஜ உத்யோகஸ்தர் ஒருவர் எழுந்து நின்று, சக்ரவர்த்தியவர்களுக்கும் ஸபையோர்களுக்கும் வந்தனம் புரிந்து பின்வருமாறு பேசலானார்.

"தர்ம பரிபாலனரும், துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலன ஸம்பன்னரும், ஜகதீசனது ப்ரதிநிதியும், இந்த அகண்ட ராஜ்யத்து சத்ராதிபதியுமாக விளங்காநிற்கும் மஹா மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

கடற்ப்ரயாணத்திலும், வர்த்தக வ்யாபாரங்களிலும் மஹாப்ரஸித்திபெற்ற மேல்நாட்டு ஜாதியார் ஒருவர், ஸகல ஐச்வர்யங்களும், நீர்வளம் நிலவளம் முதலிய ஸர்வவளங்களும் அமையப்பெற்று சீரும் சிறப்புமாய் விளங்கும் தங்களுடைய ராஜ்யத்துடன் வர்த்தகஞ் செய்ய விரும்பி, பல காதமைல் தூரத்துக்கப்பாலுள்ள ஒரு தீவிலிருந்து தங்களுடைய ஸமூகத்தை நாடி வந்திருக்கின்றனர். ஹிந்துஸ்தானத்து ஜனங்களுடன் வ்யாபாரம் நடத்த மாக்ஷிமைதங்கிய தங்களுடைய அநுமதியைக் கோரி, அந்த வெள்ளையர் மஹாராணியார் ஒரு நிரூபம் அனுப்பியிருக்கின்றனர். இந்த ஜாதியார் மேற்கு ஸமுத்திரத்தில் இங்க்லண்ட் எனவழங்கும் ஒரு தீவில் வஸிப்பவர்கள்."

நிருபம்

"ஸர்வேச்வரரது திருவருட் ப்ரஸாதத்தாலும்,........ இங்க்லண்டுக்கு அரசியாயிருக்கும் எலிஜபெத், அத்யந்த பராக்ரமசாலியும், வெல்லற்கரியவரும், வீரக்கழல் புனைந்தவரும் காம்பேயா நாட்டதிபதியுமாகிய எலாப்திய எகிபர் விஜயவீரருக்கு எழுதிக்கொள்வதென்னவென்றால்,

"எல்லா நாட்டினர்களுடனும் வ்யாபாரஞ் செய்து, அதனால் உபய கக்ஷியார்களுக்கும் பரஸ்பரமுள்ள ஸ்நேஹபாவமான போக்குவரவு, வர்த்தகம், ஊதியம் முதலியவற்றை வ்ருத்திசெய்யவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் உலகத்தில் வெகுதூரத்துக்கப்பாலிருக்கும் தேசங்களுக்குப் போய்ப் பார்த்துவர எமது குடிகளுக்கிருக்கும் பேரவாவின் காரணமாய், இந்நிருபத்தைப் பெற்றுவரும் ஜான் ந்யூபரி என்பவரும், அவருடைய நண்பர்களும், நேர்மையும் யுக்தமுமான தைர்யத்துடன் தங்களுடைய ராஜ்யத்துள்ளும் எல்லைப்புற நாடுகளுக்கும் வருவதால் மஹாகனம்பொருந்திய தாங்கள் அவர்களை அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்பீர்களெனவும்.

எமது பொருட்டாகத் தாங்கள் அவர்களுக்கு உதவிபுரிந்து அதனால் என்றைக்கும் எங்களை மஹா பெருமைவாய்ந்த தங்களுக்குக் கடமைப்பட்டவர்களாக்குவீரெனவும் நாம் பூர்ணமாய் நம்பியிருக்கிறோம்: அவஸ்யமானால் இன்னும் எவ்விதம் வேண்டுமாயினும் எங்களுடைய நன்றியைக்காட்ட நாங்கள் ஸித்தமாயிருக்கின்றோம்.

“ஆனால் உலகத்தின் இறுதியாகிய இப்பாகத்தில் கேள்விப்படும் தங்களுடைய உதாரகுணத்தைப் பற்றிய மேன்மையான அபிப்ராயத்தை முன்னிட்டு அந்த பாரம் எம்மைவிட்டு நீங்கிவிட்டதெனத் துணிந்து நாம் வீணை நிருபத்தைப் பெருக்குவதொழித்து இரண்டொரு வார்த்தைகளில் தாங்கள் எமது ராஜபக்தியுள்ள குடிகளாகிய அவர்களை ஏற்றபடி யழைத்து உபசரிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்கள் தங்களுடைய திவ்யமான ராஜ்யத்தையடையுமுன் எவ்வளவு கடூரமான அபாயங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உட்பட்டார்களென்பதை உத்தேசித்து மஹாகனம் பொருந்திய தாங்கள் அவர்களுக்கு ப்ரயாண ஸ்வதந்த்ரமும், பாதுகாப்பும் அளித்து இன்னும் தங்களுடைய காருண்ய மனதுக்கிசைந்த ஸௌகர்யங்கள், ஸ்வதந்த்ரங்கள் சிலவற்றைக் கொடுத்து எம்மைக் கௌரவிப்பீர்களெனக் கேட்டுக்கொள்கிறோம். எமது வேண்டுகோளுக்கு இணங்கி, எமது விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்றுவிப்பீர்களாயின், எம்மாலானமட்டும் நாம் தங்களுக்கு மரியாதைகள் கெய்யத் தயாராயிருக்கின்றோம்: வந்தனங்கள்.”

தாங்கள் இதுகாறும் கேள்வியுற்றிராத ஒரு நூதன நாட்டினுடையவும், அந்நாட்டில் வஸிப்பவர்களுடையவும் கதைகளைக் கேட்பவர்களைப்போல்,ராஜப்ரதானிகள் யாவரும் இந்த விளம்பரத்தைச் செவியுற்றனர்.

“நீங்கள் யாவரும் விளம்பரத்தை ஸரிவரக் கேட்டிருப்பீர்களென்று எண்ணுகிறேன். இவ்விஷயத்தில் உமது அபிப்ராயத்தை அறிய ஆவல்கொண்டிருக்கிறேன். கான்கானன், முதன் முதலில் உமது அபிப்ராயமென்ன?”

“உலகமோ மிகப் பெரியது” எனத் தொடங்கினார் கான்கானன். இஸ்லாம் மதத்து பிறை த்வஜம் பாரஸீஹம், ஈஜிப்ட், கான்ஸ்டான்டிநோபில் இவ்விடங்களில் மட்டுமேயன்றி, ட்யூனிஸ், ஆல்ஜியர்ஸ், மொராக்கோ இவ்விடங்களிலும் பரவியிருக்கின்றது. நமது மதத்தினர்கள் சிறிது காலமுன்னர், ஸ்பெயின், ப்ரான்ஸ், ஹங்கெரி, ஆஸ்ட்ரியா இந்நாடுகளை ஜயித்தனராயினும், இந்த மேல்நாட்டுத் தீவைப்பற்றி நாம் ஒரு வார்த்தை கூடக் கேட்டதில்லை. ஆனால் ஒன்று மாத்ரம் நான் அறிவேன். மேனாட்டு ஜாதியார்கள் ஸாதாரணமாய்க் கப்பற்ப்ரயாணத்திலும் கடல் வர்த்தகத்திலும் கைதேர்ந்தவர்கள்; அவர்கள் அனைவரும் நீர்வளம், நிலவளம் ஒன்றுங் குறைவின்றி யாவும் நிறைந்திருக்கும் செல்வம் பெருகிய தங்களுடைய ராஜ்யத்தை நாடி வருகின்றனர்.”

“ராஜமன்ஸிங், உமக்கு ஏதாவது தெரியுமோ?” என வினவினார் சக்ரவர்த்தி பெருமான்.

வீரக்கழல் புனைந்த அவ்விஜய சிகாமணி “ஸ்வாமீ, மேல் நாட்டைப்பற்றியாவது அவ்விட ஜாதியார்களைப்பற்றியாவது அடியேனுக்கு ஒன்றுந் தெரியாது. யாக்ஷிமை தங்கிய தங்களுடைய கொடிச்சிலை ஆடிக்கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தானம், காபூலிஸ்தானம், பனியுறையும் ஹிந்துகுஷ் பர்வதம் இம்மட்டும்தான் தங்களுடைய ராஜபுத்ர ஸைந்யத்துடன் நான் சென்றிருக்கிறேன். அதற்கப்பால் எனக்கொன்றும் தெரியாது. அடியேனைவிடச் சதுரர்கள் பலர் இருக்கின்றனர்” எனப்பணிவாய் விடையளித்தார்.

சக்ரவர்த்தியவர்களுடைய நேத்ரகமலங்கள் அபுல்பாஸல் பக்கம் திரும்பின. தக்ஷணமே அவர் பேசலானார்:

“கான்கானன் சொன்னவிதமே உலகம் மிகப் பெரியது. இந்த மேனாட்டினர்கள் ஒரு நூதன உலகத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அப்புதிய பூமியில் ஸ்பெயின் நாட்டரசர் ஏராளமான பாகத்தைக் கைப்பற்றியிருக்கின்றனர். அதற்குக் கீழ்த்திசையெல்லாம் போர்த்துகேசியர்கள் கொடி பறக்கின்றது. டச்சுக்காரர்களும் நல்ல மாலுமிகள்

கடல் வ்யாபாரத்தில் சிறந்தவர்கள். ஆனால் இந்த இங்க்லீஷ்காரர்களோ, அவர்களெல்லோரையும்விடச் சிறந்தவர்கள். அவர்களுடைய ராஜ்யம் எல்லாவற்றிலும் சிறந்தது. சிறிது காலமுன்னர், அவர்கள் ஸ்பெயின் தேசத்துப் போர்க்கப்பல் குழாங்களைச் சிதறவடித்துச் சின்னாபின்னமாக்கினார்கள். அந்த தோல்வியுடன் அடங்கிவிட்டது ஸ்பெயின் ராஜனது கொட்டங்களெல்லாம். கடற்படையில் இப்போது இங்க்லீஷ்காரர்கள் தான் முதன்மைப்பட்டவர்கள். வ்யாபாரத்தால் நாடுகள் ஸுபிக்ஷமடைகின்றன. என்றைக்கும் தாங்கள் அயல் நாட்டு வ்யாபாரத்தை ஆதரித்து வருபவர்.”

“நண்பரே, ஸரியான யோசனை. கீழ்த்திசையார் மேல்திசையார் யாவரும் யாதொருவித நிர்ப்பந்தங்களுமின்றி எமது ராஜ்யத்தில் தாராளமாய் வர்த்தகஞ் செய்யலாம். மேனாட்டிலிருந்து இந்நிருபத்தைக் கொண்டு வந்த வர்த்தகர்கள் நமதுநாட்டில் ஸுகமாய் வ்யாபாரஞ் செய்யலாம். யாதொரு தங்குதடையுமில்லை.நமது ராஜஸஹோதரியாகிய இங்க்லண்ட் நாட்டு வெள்ளையர் மஹாராணியினுடைய நட்பை நாடும் நாம் அவர்களுக்கு வந்தனம் புரிகிறோம்” என்றார் மொகலாய மண்டலாதிபதி.

அத்யாயம் 8

மந்த்ராலோசனை மண்டபம்

அன்றையதினம் ஸாயந்த்ரம் மந்த்ராலோசனை ஸபை கூடிற்று. அக்பர் அவர்கள் வங்காள நாட்டின் நிலைமையை உள்ளவாறு அறியவேண்டி ராஜாமான்ஸிங்கையும் அவருடன் நரேந்த்ரனையும் ஸபைக்கு வரும்படிக் கட்டளையிட்டார். நரேந்த்ரனும், மந்த்ராலோசனை ஸபைக்கு அழைக்கப்பெற்ற தனது பாக்கியத்தைக்கண்டு அகமகிழ்ந்து சக்ரவர்த்தியவர்கள் ஆக்ஞைபடிக் குறித்த வேளையில் மண்டபம் வந்து சேர்ந்தான்.

தர்பார் மண்டபத்தைவிட மிகச்சிறியது இந்த ஆலோசனை மந்திரம். அக்பரவர்கள் மந்த்ரிமார், அந்நிய நாட்டு தூதர்கள் முதலியவர்களுடன் ராஜ்ய வ்யவஹாரங்களைப்பற்றிய ரஹஸ்யமான விஷயங்களை இந்த அறையில்தான் விசாரித்து ஆலோசனை செய்வது வழக்கம். இந்த அறைக்குள் அழைக்கப்படும் பாக்கியத்தைப் பெறுபவர் வெகு சிலரே. ப்ரதானிகளுள்கூட இரண்டொருவரே இந்த மரியாதை பெற்றவர்கள். இன்னும் இங்கு வருபவர்கள், அக்பரவர்களுடைய அதி நம்பிக்கையான ராஜாங்க ஊழியர்களில் சிலர் உண்டு. இவ்விடத்தில் அக்பர் ஸாமாந்ய உடைதரித்து, அகண்டதொரு ராஜ்யத்தின் ஸுகதுக்கங்களை இமைகொட்டாமல் பார்த்துவருவதால் உண்டாகிய மனக்கவலையால் வயோதிககாலம் வருவதற்கு முன்னரே, வயோதிக சின்னங்களடைந்த தீர்க்காலோசனை முகத்துடன் சிறிதும் சோம்பலில்லாமல் வெகுநேரம் வரை ராஜகார்ய நிர்வாகத்தொழிலில் ஆழ்ந்திருப்பார். அக்காலங்களில் அந்தக் கம்பீரவதனம் ஒன்று தவிர்த்து இதர ஆடையாபரணாதி ராஜசின்னங்கள் ஒன்றும் அவரிடம் காணப்படாது.

காய்க்கு மரமும், காயாமரமும்

BEING AND DOING

ஒரு தோட்டத்தில் காய்க்கும் மரம் ஒன்றும், காயாமரம் ஒன்றும் ஆகிய இரண்டு மாமரங்கள் ஒன்றுக்கொன்று சமீபத்திலிருந்தன. அவைகளுள் காயாமரமானது, காய்க்கு மரத்தை நோக்கி, “எனது வேர்கள் உனது வேர்களைப் போலவே பூமியில் நாற்புறமும் பரந்து ஓடி யிருக்கவில்லையா?” என்றது.

மற்றொரு மரம், “ஓடி யிருக்கின்றன, எனது வேர்களைப் போலவே நன்றாய்ப் பரவிப் பாய்ந்திருக்கின்றன” என்று சொல்ல;

“என்னுடைய இலைகள் உனது இலைகளைப்போல விரிந்தும் செழித்தும், அடிமரம் பருத்தும், பொரியரைபெற்று வைரமேறியும்,கப்புங்கிளைகளும் நிறைந்தும், கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கவில்லையா” என்று மலட்டு மரம் இறுமாப்புடன் மறுபடி சொன்னதைக்கேட்டு;

“ஆம், ஆம்” என்று சற்று அங்கீகரித்த காய்க்கும் தேமாவைப்பார்த்து, மறுபடியும்,

(இதன் தொடர்ச்சி 232-ம் பக்கம் பார்க்க)

"என்னுடைய இலைகள் சில இளம் பசுமையாயும், சில முதிர் பச்சையாயும், பார்ப்போர் கண்களுக்கு விநோதமாயும் இருப்பதால் உன்னிலும் நான் அழகாய் விளங்கவில்லையா" என்று மலட்டுமரம் இறுமாப்புடன் சொல்ல; அப்பொழுது காய்க்கு மரம், "நான் அரும்பெடுத்துப் புஷ்பிப்பதுண்டு" என்று விநயமாகச் சொல்ல, மற்றொரு மரம் "ஆ! ஈதொரு மேன்மையா? அரும்பும் பூவும் விசேஷமா?" என்று அலக்ஷியமாகப் பேசிற்று.

"சற்றுப் பொறு, அவசரப்படாதே, அரும்பும் பூவுமன்றிக் காய்த்துப் பழமும் தருகிறேன்" என்றது.

"கல்லுப் போன்ற காய்கள் கொத்துக் கொத்தாகத் தொங்குவதும் ஒரு கீர்த்தியா? உனக்குச் சுமையாய்க் கழுத்துக் கூன்விழும்படி விளைத்து விடுகின்ற காய்களுக்காகவா கர்வப்பட்டுப் பேசுகிறாய்? காய்த்த மரம் கல்லெறியுண்ணும்! என்னும் பழமொழிப்படி வழிப் போக்கரால் கல்லடிப்படுவது ஒரு பெருமையா? நிதானித்துப் பார்த்தால் உன்னைவிட நானே மேன்மை பாராட்டலாம்; பார்ப்பவர் கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும், வழிப்போக்கருக்குக் குளிர்ந்த நிழல் தந்து என்றும் மேனியழியாமலு மிருக்கிறேன்" என்று தற்புகழ்ச்சி செய்துகொண்டது.

மலட்டுமரம், இவ்வாறு கர்வங்கொள்ளுகின்றதே. தோட்டக்காரன் மதிப்பு எத்தன்மையதென்று சற்று விசாரிப்போம். அவன் காயாமரத்தினருகே நடக்கும்போதுகூட அதைச் சற்றும் மதிப்பதில்லை. வசந்த காலத்தில் அரும்பிட்டுப் பூத்து அழகாய் வாசனை வீசும் மற்றொரு தேமாவைக் கண்காணித்து, கோடைக் காலத்தில் பழுத்து மாம்பழங்கள் கொத்து கொத்தாகத் தொங்குவதைப் பார்த்துச் சந்தோஷித்து, அப்படிக் காய்த்த மரம் மென்மேலும் செழித்துத் தழைத்துப் பழங்களை அளிக்கவேண்டுமென்று அதைப் பாதுகாத்து இலை கழித்துக் கிளை யொதுக்கி வேனிற் காலத்தில் சுழல்காற்றிலடியுண்டு வாடாமல் தண்ணீர் இறைத்துக் கருத்துடன் இரக்ஷித்து வருகிறான்.

விசேஷக் குறிப்புகள்
NEWS AND NOTES

எல்லா இந்திய ஆயுர்வேத கான்பரென்ஸ்.—இந்த கான்பரென்ஸின் 7-ம்வருஷக்கொண்டாட்டம், சென்னை, விக்டோரியா ஸபாமண்டபத்தில், 19௳ ஆரம்பமாகி மூன்று நாள் நடந்தது. கல்கத்தா, ஆயுர்வேத வைத்தியர்களுள் முக்கியஸ்தரான ஸ்ரீமான் கவிரத்ன யாமினீ பூஷணராய், M. A., M. B. அவர்கள் அக்கிராஸனம் வகித்தார். அவருடன் கல்கத்தாவிலிருந்தும், இன்னும் பற்பல விடங்களிலிருந்தும் ஆயுர்வேத வைத்திய முறையில் தேர்ச்சிபெற்ற அநேகம் கனவான்கள் வந்திருந்தார்கள். ஆயுர்வேத வைத்திய முறையின் சிறப்பைப்பற்றி அநேக அருமையான விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. இவைகளைப் பற்றி அடுத்தபத்திரிகையில் விவரமாய் எழுதுவோம்.

***

எட்டையபுரம் ராஜா காலஞ்சென்றார்.—திருநெல்வேலிஜில்லா, எட்டையபுரம் ராஜா ஜகவீரராம வெங்கடேசுவர எட்டப்ப நாயகர் பஹதூர் நவம்பர்௴ 16௳ காலஞ்சென்றாரெனக்கேட்டு விசனிக்கிறோம். இவருக்கு சந்ததியில்லாததால், இவரது சிற்றப்பனாகிய வெங்கடேசுவர எட்டு பாண்டியர் சமஸ்தான அதிபதியாக நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறார்.

ஜர்மனியிலுள்ள ஸ்திரீகளின் தொகை.—சென்ற ஒன்றரை வருஷமாக நடந்துவரும் யுத்தத்திற்கு முன்பாக, ஜர்மனியில் புருஷர் தொகையிலும் ஸ்திரீகள் தொகை 30-லக்ஷம் அதிகமாயிருந்ததென்றும், இப்போது அத்தொகை ஒன்றரை கோடியாகவிருக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

***

கல்விக்காக ஒரு நன்கொடை.—இராமநாதபுரம் ஜில்லா, கானாடுகாத்தான், ம-ள-ள-ஸ்ரீ ராவ் பஹதூர் S. RM. MA. அண்ணாமலை செட்டியாரவர்கள், மதுரைக் காலேஜின் அபிவிருத்திக்காக சில நிபந்தனைகளின்பேரில், லக்ஷ ரூபாய் நன்கொடையளித்திருக்கிறார். இவர் ஸகோதரரும் சிதம்பரம் முனிசிபல் சேர்மனுமான, ம-ள-ள-ஸ்ரீ திவான் பஹதூர் ராமசுவாமி செட்டியாரவர்கள் ஷை ஊர் ஜலஸப்ளைக்காக லக்ஷ ரூபாய்க்குமேல் உதவி புரிந்திருப்பதன்றியில், கல்வியபிவிருத்தி விஷயமாகவும் தாராளமாய்ப் பொருளுதவி செய்துவருவது ஷை யாரின் பாஷாபிமானத்தையும் தேசாபிமானத்தையும் நன்கு வெளிப்படுத்துகின்றன. இவர்களைப்போலவே, ஆண்டிப்பட்டி ஜமீன்தாரரும், மதுரை தமிழ்ச் சங்கத்து உபஅக்கிராஸனாதிபதியுமான ம-ள-ள-ஸ்ரீ S. RM. M. CT. பெத்தாச்சி செட்டியாரவர்கள், தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியில் மிகுந்த அக்கரைகொண்டு தாராளமாய் பொருளுதவி செய்து வருவதும் மெச்சற்பாலதே. இவர்களைப் பின்பற்றியே மற்றையநகரத்தார்களும் கல்விவிஷயத்தில் உபகரிப்பார்களாகில், நம்தேசம் செழித்தோங்கத் தடையென்ன?

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 22 MAR 1916 MADRAS.

தொகுதி VIII { ராக்ஷஸ௵ மார்கழி௴ : 1916-௵ ஜனவரி௴ } பகுதி 7

பழமொழிப் போதம்
PROVERBS EXPLAINED

'சஞ்சனநீ றூற்பொன் கடனுக் குதவுங்கொல்'
நெஞ்சத் தெழுமகந்தை நீள்பிரமத்—தெஞ்சா
தயிக்கியமா மோஅவ் வகங்காரத்தின் சான்றாய்த்
தியக்கமில்கூ டத்தனலா தே. (27)

'சொத்திற்கு வந்தோன் றுரைத்தனஞ்செய் வான்
தத்தி விடயந் தமைச்சுட்டும்—புத்தி [கொலே'
பிரமத் தபேதமாம் பெற்றியதோ ஆங்குத்
திராமுற்ற சாட்சியலா தே. (28)

'பூசைக்கண்ணை மூடிடிற் பூமியந்த காரமோ'
பாசமெய்யை யானெனும் பற்றுயிர்ச் சுழுத்தியால்
மூசுஞால மோடதன் மூலமாயை தீர்வதோ
தேசின்ஞான நிட்டையிற் றேய்தலாவ தன்றியே' (29)

சைசகத் திரளை நாளுமுண் டெனவே
றெய்துமில் வுடலை யானெனக் கருது
மைமனந் துரிய வாழ்வினை யுடையா
'பொய்நவில் வாய்க்குப் போனக மிலதே' (30)

நைசி வைக்கிடம் நல்கிற் கிடைக்கிரு
மைகள் கேட்கும்' மனமொருக் காதுபோக்
கெய்த விட்டிடின் ஈரைம் பொறிவசத்
துய்வ றக்கவர்ந் தோர்வைச் சிதைக்குமால். (31)

'பெண்கள் உறையுள் பெருங்கலக சாரணை' மாம்
புண்கொள்சங் கற்பமெனும் பூவையர்சூழ்—பண்பில்
இதயம் பிரபஞ்சத் தேதுபழிப் பந்தம்
அதுசே ருயிர்ப்புருடற் காம். (32)

தளுமன தொன்றே, பளுமயல் என்றோர்,
'உளவனை யன்றிக் களவினை யின்றே.' (33)

கட்டு மாசையால் ஞானநன் னெறிசெலக் கருதாத்
துட்ட மெய்யையா னென்றுறு நெஞ்சமே துரிய
நிட்டை யாற்றிக ழும்பர மாத்தும நிலைசொல்
'முட்டு காற்காரம் பட்டவர்த் தனப்பரி யாமோ' (34)

'இயந்திரமில் லாருக் கிருப்பைப்பூக் கன்னல்'
வியந்த நிதித்தியினை மேவிப்—பயன்கொள்
விதியிலர்க்குப் புன்மை விடயானு போகங்
கதியிதனுற் றுன்பக் கடல். (35)

'உலோசனமில் கொக்கென்ன வுட்குள்மே சான்றாம்'
நலோய்சத் துவவிருத்தி ஞானம்—நிலாவுகிலாச்
சித்தத் தினர்தாந் தெரிவைமயல் பூமியுடன்
அத்தத் துழல்வா ரறி. (36)

நடிக்கு மெய்ப்பர ஞானம் விரும்பிடும்
படிக்கு வாரார் படர்கற் பனைப்பொருள்
பிடிக்கு மாற்றிற் பெரிது மகிழ்ந்திடல்
'தொடிக்குத் தன்னது குஞ்சுபொற் குஞ்சரோ.' (37)

'சுண்டைக்காய் காற்பொன் சுமைகூலி முக்காற்
பொன்', கண்டமயக் கச்சுகஞ்செய் காலையினும்—
மண்டுதுயர், ஆகும் விடயநசை யாலறிவோர பாக
மதன், போகமுற முப்பாகம் போம். (38)

'காணியிலா பங்கோடி நட்டமெனல்' விடயத்திற்
கலத்த லோடும்
பேணுறுசாத் திகவிருத் தியிற்பிரம சுகலேசப்
பிரதி விம்பம்
பூணுமெனி னும்பிரமா னந்தசமுத் திராழ்கும்
போத மார்க்கம் [தின்
வீணின்மன றந் தொழியுமவா வினையன்றே ஞானத்
விரோதி தானே. (39)

ராக்ஷஸவருஷ தைமீ CALENDAR—பஞ்சாங்கம்

யோ	ஆங்	இங	தமிழ்	வா	ராக்ஷஸவருஷ தைமாஸ — சாலிவாகனம் 1837, கலியுகாப்தம் 5016 — பசலி 1325, கொல்லம்-1091 — ஹிஜரி 1334 — 1916 ஜனவரீ ௴ பிப்ரவரி ௴
ர	8	14	1	வெ	தச 55-26, பர 34-54, சா 17-30, தை 23-40, சே 0-17, அக 28-32, மகரரவி 3-8, மக 6 தசமிதிதி உத்திராயணம் பொங்கல்பண்டிகை கரிநாள் சூன்யார்கம். [ம சார் உப கரிநாள்.
பு	9	15	2	சனி	ஏகா 59-53, ✳ கார் 40-14, சுப 17-39, வணி 27-39, திவி 7-34, திரு 3 புத 52-19, சர்வ ஏகா கோபூஜை வைகுந
சு	10	16	3	ஞா	துவா .60-0, ரோ 46-14, சுப் 18-15, பவ 29-56, திவி 24 14, கும்பசுக் 15-20, வஞ்சுளத்துவா கரிநாள்.
ர	11	17	4	திங்	துவா 4-59, மிரு 51-35, பிரா 19-18, பா 4-59, திவி 1-43, உத்தி 3 ரவி 18-41, பிரதோ மழை 6-க்குள்.
சு	12	18	5	செ	திர 10-17, திரு 58-59, மா 20-30, தை 10-17, திவி 15-49 அக 28-35, அவி 4 சுக் 60-0.
	13	19	6	புத	சது 15-29, புன 60-0, வை 21-36, வணி 15-29, ரா 3-23, பூர்ணிமாதிதி வை சிரா. [ஸ்நா ஆ குருதைபுஷ்யம்.
ர	14	20	7	வியா	◯பௌ 20-11, புன 4-58, விஷ் 22-17, பவ 20-11, திவி 16-42, உத்தி 4 ரவி 34-35, அதிதி வனசங்கா பூ மா
புசு	15	21	8	வெ	பி. 23-58, பூச 10-10, பிரி 22-18, கௌ 13-58, ரா 15-46, புஷ்ய பகு கும்பாயன 1-6, புதவக்ரம் 10-38, சத 1
	16	22	9	சனி	துதி 26 41, ஆயி 14-22, ஆயு 21-31, கர 26-41, ரா 17-14, அக 28-39, [சுக் 50-30, பிரதமாதிதி இஷ்டி.
ரபுகு	17	23	10	ஞா	திரு 28-8, மக 17-25, ஸௌ 19-49, பத் 28-8, ரா 8-21, திரு 1 ரவி 50-8 திரு 2 வக்புத 13-39, உத்தி 1 குரு 27-0,
செசு	18	24	11	திங்	சது 28-18, பூர 19-13, சோ 17-6, பா 28-18, ரா 7-41, கடகவக்ரசெ 60-0, சத 2 சுக் 2-50, கரிநாள். சங் சது.
	19	25	12	செ	பஞ் 27-11, உத்தி 19-47, அதி 13-25, தை 27-11, ரா 11-51, பஞ்சமிதிதி மழை 5-க்குள்
பு	20	26	13	புத	சஷ் 24-53, அஸ் 19-11, சுக 8-47, வணி 24-53, ரா 9-54, அக 28,44, பச்சாதஸ்தபுத 10-38, சஷ்டிதிதி.
ரசு	21	27	14	வியா	சப் 21-33, சித் 17-33, திரு 3-19, சூல 53-49, பவ 21-33, ரா 2-12, திரு 2 ரவி 6-28, சத 3 சுக் 25-24, இதித்வயம் காளாஷ்டமி திஸ்ரோஷ்ட
பு	22	28	15	வெ	அஷ் 17-21, சுவா 15-3, கண் 50-15, கௌ 17-21, திவி 28-19, திரு 1 வக்புத 5-0, நவமிதிதி.
சு	23	29	16	சனி	நவ 12-0, விசா 11-54, விர் 42-59, கர 12-30, திவி 21-17, சத 4 சுக் 51-30, பனி மிகுதியால் ஜனங்களுக்கு பீடை அதிகரிக்கும். [ஏ மா ஏகா கரிநாள்.
ர	24	30	17	ஞா	தச 7-9, அனு 8-15, துரு 35-22, பத் 7-9, திவி 21-19, அக 28-48, திரு 3 ரவி 22-48.
	25	31	18	திங்	ஏகா 1-24, துவா 54-8, கே 4-15, வ்யா 27-35, பா 1-24, திவி 22-53, ரா 27-16, வைஏகா.
புசு	26	1	19	செ	திர 49-45, மூல 0-8, பூரா 55-57, ஹர் 19-47, கர 22-38, திவி 22-31, உத்தி 4 வக்புத 26-0, பூரட் 1 சுக் 30-22, பிரதோ.
ர	27	2	20	புத	சது 44-16, உத்தி 52-21, வஜ் 12-7, பச 17-0, திவி 14-45, திரு 4 ரவி 39-31, மாசி மழை 11-க்குள். [அக 28-52, தை அமாவாசை சிர உப விய சிரா புண்யகாலம்.
	28	3	21	வியா	●அமா 39-15, திரு 49-8, ஸித் 4-3, வ்ய 55-59, சத 11-45, திவி 1-50, ரா 29-51.
சு	29	4	22	வெ	பிர 34-55, அவி 40-37, வ்ய 51-22, கிம் 7-5, சே 2 43, மாக சுத பூரட் 2 சுக் 12-40, இஷ்டி
	30	5	23	சனி	துதி 31-22, சத 44-54, பரி 45-40, பா 3-8, திவி 4-6, சந் தரி. [சுக் 53-43.
ரபுசு	1	6	24	ஞா	திரு 28-4, பூரட் 44-11, சிவ 40-49, கர 18-48, திவி 0-43, அவி 1 ரவி 55-14, உத் 3 வக்புத 44-0, பூரட் 3
செ	2	7	25	திங்	சது 27-22, உத்தி 4-35, சித் 36-51, பச 27-22, திவி 8-21, அக 28-57, ஆவி 3 வக்செ 59-0, சது விரு.
	3	8	26	செ	பஞ் 26-19 ரேவ 45-28, சா 33-9, பா 26-19, திவி 15-1, வஸந்தபஞ்சமி மழை 3-க்குள்.
புசு	4	9	27	புத	சஷ் 28-16, அசு 49-8, சுப் 31-53, தை 28-16, ரா 8-33, பிராகுதயபுத 10-38, மீனசுக் 34-40, சஷ் உப.
ரகு	5	10	28	வியா	சப் 30-38, பர 53-13, சுப் 30-51, கர 30-38, திவி 14-46, அவி 2 ரவி 13-14, உத்திரட் 2 குரு 35-0, ரதசப்தமி வைவ ம சூரி சங் விரு (கார் உப.
பு	6	11	29	வெ	அஷ் 34-8, ✳ கார் 58-19, பிரா 29-56, பத் 2-23, திவி 25-46, அக 29-3, புதவக்ர நிவர் 10-38, பீஷ்மாஷ்டமி
ரசு	7	12	30	சனி	நவ 38-37, ரோ 60-0, மா 31-15 பா 6-32, ரா 13-17, கும்பரவி 30-24, உத்தி 1 சுக் 26-30, மக 6 நவமிதித விஷ்ணுபதி.

(Left margin, vertical: தைமீ 14–20: புஷ்யம்; 21–28: ஸ்ரவணம் / பூர்வாசாடம் / சதயம் — partly legible.)

குரு			சனி
	3 கும சுக 11 கடக		கே
ர ரா சு பு	வக் செ 27 மீனசுக்		செ

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸவருஷ : மார்கழிமீ [பகுதி. 7

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

6 ஈச்வர உபாஸனை

வைதிக வழிப்படி ஈச்வரன் தன்மை இன்னது என்பதை முன்னர் எடுத்து விளக்கியாகி விட்டது எல்லா தனுகரண புவனபோகங்களையும் ப்ராணிகள் கர்மாதிகளுக்கு ஏற்ப அளந்துவிடும் ஸர்வக்ஞனும், ஸர்வவ்யாபியாயும், ஸர்வசக்திமானும், அருபியாயும், எந்த உருவம் வேண்டுமானாலும் எடுத்து அநுக்ரஹிக்கக் கூடிய ஆற்றலுடையவனும் உள்ள ஈச்வரன் என்ற பேரறிவுப் பொருளை எப்படி வழிபட்டு நற்கதி அடைவது என்பதை இங்கு எடுத்து ஆராயப் புகுவோம்.

ஈச்வரன் அருபப் பொருளாயும், எங்கும் வ்யாபித்துள்ளவனும், எந்த உருவத்தின் வழியும் தோற்றி அருளும் ஆற்றலுடையவனும் இருத்தலால், அவனுக்கும் ப்ரபஞ்சப் பொருள்கள் எல்லாவற்றிற் ம் அங்க, அங்கி பாவம் உண்டென்பது வே சிப்படை. இ தத் தன்மையை நாம் நன் ரா பா உடலையும் உயிரையுந்தான் எடுத் ப் பார்க்க வேண் ா. உயிர், உடலெல்லாம் பரவியுள்ள அருப வஸ்து: அதற்கு உடல் எல்லாம் அங்கம்தான். அந்த உயிரைத் திருப்திப்படுத்த நேரிட முடியாது: அதற்கு அதன் உடலின் எதாவது ஒரு அங்கத்தைத் திருப்திப்படுத்தித்தான் ஆகவேண்டும். உதாரணமாக, அழும் குழந்தையைத் திருப்திப்படுத்த வேண்டுமாகில் அதன் கையில் ஒரு பொம்மையையோ, ஒரு பழத்தையோ தான் கொடுத்தாகவேண்டும். இதனால் அதன் கையும், கண்ணும், வாயும் தான் நேரிட திருப்தி செய்யப்பட்டன. ஆனால் திருப்தி அடைந்தது அந்த அங்கங்களேயல்ல; உள்ளே அருபியாக இருக்கும் ஜீவாத்மாதான். இப்படியே நாம் பழகி வரும் பெரியோர் சிறியோர்கள் எல்லோர் விஷயத்திலும் ஆகும். நமக்கு நேரிடத் தெரிந்தவர்களாகிய அற்ப அறிவு வ்யாபகம் உடையவர் விஷயத்திலேயே நெருங்கிப் பழகி நாம் செய்ய வேண்டியதை அவர்களுக்குச் செய்ய அவர்களது ஜடமான அங்கங்களின் உதவிவேண்டியிருக்கிறது. இப்படி இருக்க, பேரறிவாகிய ஈசனை வழிபடவா அவன் அங்க உதவியில்லாது முடியும்? நமது மனம் ஈசனை நாட, அவன் வ்யாபகத்தின் லேசத்தில் அடங்கிவிடும் ப்ரபஞ்சத்துள்ளிருக்கும் ஒரு பொருளை உதவியாகக் கொண்டுதான் ஆகவேண்டும். இப்படி அங்கத்தின் வழியாக அங்கத்தை நாடுவதற்கு, வைதிக விக்ரஹாராதனம் என்று பெயர். ஆகவே விக்ரஹாராதனமில்லாது ஈச்வரனை அணுகவே முடியாது. சிலரது விக்ரஹம் ஸ்தூலமாக இருக்கும்; சிலரது ஸூக்ஷ்மமாக இருக்கும். பின்னவரில் சிலர் முன்னவர்களை மூடர்கள் மந்தர்கள் என்னலாம். இப்படிக்க ற்ற ஆ டர்களது பேரறிவை என்னென்று கூறுவது!

இப்பொழுது எந்த ப ப வஸ்துக்களை எடுத்துக்கொண்டு அவைகளின் வழி ஈச்வ

ரனை ஆராதிப்பது என்ற கேள்வி வரும். உடல் உயிர் திருஷ்டாந்தத்தையே மறுபடி ஆராய்வோம். உடலிலுள்ள அங்கங்கள் எல்லாவற்றிலும் உயிரின் இயக்கம் ஸமமே. எதில் ஸுகம் ஏற்பட்டாலும் உயிருக்கு ஸுகம்தான்; எதில் வ்யாதி முதலிய துயரம் வந்தாலும் உயிருக்குத் துக்கந்தான். இப்படி இருப்பினும், பிறர் உயிரைத் திருப்திப்படுத்துங்கால் ஒழுங்குக்கு மீறியும், தமது சுத்தாசுத்த புத்திக்கு மீறியும், நடக்கமுடியாதாதலால், ஒருவனது சுத்தமாயுள்ள அங்கங்களை ஒழுங்குக்கு மீறாது நல்வழிகளிலேயே உபசரிக்க முடியும். இதுபோல ஈசன் எங்கும் வ்யாபகமாயிருந்தும், எதன் வழியாகவும் வெளிப்படும் சக்தி உடையவனாக இருப்பினும், அவன் மாத்திரமாக நாம் ஏகாக்ரமாக நின்ற பின்னர்தான், கருதப்படும் அவன் உருவபாவனையின் வழியே வெளிப்பட்டு அனுக்ரஹிப்பன். ஆதலால் நமது மனது எளிதில் ஏகாக்ரப்பட, சுத்தமாயும் ஒழுங்காயும் உள்ள ஈசன் அங்கங்களே உபாஸிக்கப்படவேண்டும். இந்த ஈசன் அங்கங்கள் ப்ரபஞ்சத்தில் பொதுவாக இரண்டு விதமாகக் காணப்படும். அவையாவன சித்து ஜடம் ஆகிய இவைகளே. இவைகளுள் ஜடப்பொருள்கள் எல்லாம் ப்ருதிவி(மண்), அப்பு (நீர்) தேஜஸ் (ஒளி), வாயு, ஆகாசம் ஆகிய இவை ஐந்தனுள் அடங்கும். சேதனங்கள் ஸூர்ய, சந்திர, மஹா புருஷர் இவர்களுள் அடக்கம். ஆகவே ஈச்வரனுக்கு அஷ்ட மூர்த்தங்களுண்டு. இவைகளைக்கொண்டு வழிபடும் ஈச்வரனைப் பன்னிரண்டு மூர்த்தி பேதங்களாக வேதங்களில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. அவையாவன, ருத்ரர் (ஈச்வரன்), ருத்ரன் (சிவன்), தந்தி (பிள்ளையார்), நந்தி, ஷண்முகன், கருடன், பிரஹ்மா, விஷ்ணு, நரஸிம்ஹம், ஆதித்யன் (ஸூர்யன்), அக்நி, துர்க்கி (அம்பிகை) ஆகிய இவைகளே. இப்பன்னிரண்டு மூர்த்திகளைக் கொண்டு முன்னர் கூறிய எட்டு விக்ரஹங்கள் வழியே ராஜயோகத்தில் கூறப்படும் ஈச்வரப்ரணிதானமாகிய உபாஸனை பண்ணலாம். ஆனால் ஈச்வர மூர்த்தியையே எல்லா மூர்த்திகள் வழியாகக்கருதி உபாஸிப்பதே இந்த யோகத்திற்கு மிகவும் முக்கியம்.

இம்மூர்த்திகள் வழியாக ஈச்வரனை வழிபடுவதற்கு மூன்று வழிகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளை கிருஷ்ணபரமாத்மா கீதை 9-ம் அத்யாயம் 15-ம் ச்லோகத்தில்:—

ஞானமெனும் வேள்வியினால் நன்குநினைந்து தொழும்
ஏனையோர்கள் எங்கும் இலங்குமுகம்—தானுடைய
என்னையே ஏகமா, வேறாக, பல்வகையா
உன்னி இறைஞ்சுவர்காண் உற்று.

எனக்குறித்திருக்கிறார். இதில் ஏகமா என்று மொழிபெயர்த்துள்ள ஏகத்வேன என்ற பதத்திற்கு வேதம் ஞானகாண்டபாகத்தில் கூறப்படும் 'ஈசனே நான்' என்று செய்யப்படும் அபேத அகங்கிரஹோபாஸனைதான் பொருள். ப்ருதக்த்வேன என்பது வேறாக என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: இதற்கு உபாஸனாகாண்ட வழியான பேத ப்ரதீகோபாஸனைதான் பொருள். இதில் ஈசனை நம்மைவிட வேறாகக் கருதி வழிபட்டு முதல் உபாஸனை நிலைப்பதற்கு வேண்டிய முயற்சியே காணப்படும். இதனுள்தான் ஸாதாரண விக்ரஹாராதனைகளான ப்ரதிமோபாஸனை அடக்கம். பல்வகையா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகுதா என்பது கர்மகாண்ட வழியாகிய அங்காவபத்த உபாஸனையே. இதில் ஈசன் கட்டளையாகிய ஸத்கர்மானுஷ்டானமே முக்கியம். அதில் அங்கமாக ஈச்வரன் உபாஸனை அமைந்து காணப்படும். இவைகள் மூன்றிலும் வர்ணாச்ரம தர்மத்திற்கு உட்பட்ட வைதிகர்களாகிய நாம் எல்லோரும் கட்டுப்பட்டுத்தான் கடவுள் வழிபாட்டை நடத்தவேண்டும். இவைகளில் ஞானகாண்ட உபாஸனை, முதல் இரண்டின் முதிர்ச்சியில் நமது அற்பமுயற்சியால் ஏற்படவேண்டியதாதலால் மற்றைய இரண்டிலும் தான் நாம் முயன்று வரமுடியும். ஆகவே, ஈச்வரன் கட்டளைகளாகிய வர்ணாச்ரமாதி ஒழுங்குப்படி நமது சிறப்புப் பொது தர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டே, அவைகளில் ஈசன் உபாஸனையின் பொருத்தத்தைக் கண்டு தெளிந்து, ஏதாவது ஒரு ஈச்வர விக்ரஹத்தைக் கைப்பற்றி ப்ரதீகோபாஸனையும் செய்துகொண்டே வரவேண்டும். இந்த அங்காவபத்த, ப்ரதீகோபாஸனைக் கலப்பிற்கே பொதுவாக ஈச்வர உபாஸனை என்றுபெயர். மற்றொன்றான அகங்கிரஹோபாஸனைக்கு ஈச்வரத்யான ஸமாதி என்று பெயர். அதில் தேறிவருங்கால்தான் ஈச்வர ப்ரத்யக்ஷம், மோக்ஷாபேக்ஷை, ஸாக்ஷாத்காரம் இவைகள் முறையே ஏற்படும்.

முன்னர் கூறப்பட்ட ஈச்வர ஸ்வரூப உணர்வும், திட்டமான கர்மானுஷ்டானச்சேர்க்கையும் இல்லாது, பிடிவாதமாகக் கீழ்வருணத்தாருக்கும், சீரழிந்த சில மேல்வருணத்தாருக்கும், ஈச்வரன் உருவங்கள் ஒன்றில் 'எல்லோருக்கும் ஹிதம் செய்பவனாயுள்ள பெரிய பிரபுவான ஈச்வரன் இங்கு அமர்ந்திருக்கிறான்! நாம் கடைத்தேற அவரை வழிபட வேண்டியது அவசியம்' என்ற திட உணர்வுடன் ஈச்வரத்யான நிலைவரை மூர்த்தியினது சிலாதிபாவனை இழந்து, தம் மனதிலுள்ள கடவுள் பாவனையாக நின்று, ஈச்வரன் அநுக்ரஹம் பெறும் ஆற்றல் வந்துவிடலாம். மேல் அவர்களுக்கு மாறான வழிகளிலேயே மனம் போகாமல் தடைபட்டுவிடும். இந்த வழிக்கு மூடபக்தி என்று பெயர். இதன் விஷயமும், இதன் திருஷ்டாந்தமும், முன்னரே பக்தியோக பாகத்தில் விளக்கியாகி விட்டன. இந்த ராஜயோகத்தில் செய்யப்படும் ஈச்வர உபாஸனைக்கு விவேக பக்தி என்றுபெயர். இதற்கு ஈச்வர ஸ்வரூப உணர்வு, பற்று, அவன் கட்டளையான ஸ்வதர்மானுஷ்டானம் எல்லாம் அவசியம் வேண்டும். இதற்கு உதாரணமாகிய ப்ரஹ்லாதரது சரித்திரத்தை ராஜயோகமுடிவில் விஸ்தாரமாக எடுத்து ஆராய்வோம்.

இதுவரையில் வாசித்து வந்த சிலருக்கு ஒருவித சங்கை உண்டாகலாம். 'ஈச்வரனை உடலிலுள்ள உயிருக்கு நிகராகக்கொண்டு விக்ரஹாராதனையை அங்க அங்கிபாவத்தில் விதிப்பது முற்றிலும் பொருந்தாது. உயிருக்கு உடலில் அபிமானம் இருப்பதால் உடல் உபசரிக்கப்பட, உயிர் திருப்திபெற்று நற்பாவனையுடனிருக்கும். ஈச்வரனுக்கும், ப்ரபஞ்சத்திற்கும் அப்படி என்ன பொருத்தமிருக்கிறது?' என்பதுதான் அந்தச் சங்கை. ஈச்வரனுக்கு ப்ரபஞ்சத்தினிடம் ஒருவித அபிமானமில்லாவிடினும், ஜீவர்கள் கடைத்தேறவே ப்ரபஞ்சத்தைத் தன்தாக்கின்றியே விரியச்செய்திருப்பதால் தன் வ்யாபக லேசத்தில் அடங்கிய ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்கள் வழி தன்னை அணுகி ஈடேறமுயலும் ஸத்துக்களை அவைகளின்வழி அபிமானத்தை முன்னிடாமலே அநுக்ரஹிக்கும் ஆற்றலுண்டு ஈசவரனுக்கு. இதை விளக்க மஹாத்மாக்களான ஜீவன் முக்தர்களைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்ளுவோம். அவர்களிடம் உபதேசம் பெற்று ஈடேற

அவர்கள் தேஹத்தை உபசரித்தும், அவர்கள் வாக்கைக் கேட்டும்தான் ஆகவேண்டியிருக்கிறது. அவர்களுக்குத் தேஹாபிமானமே யில்லை. அவர்களும் நமது வழிபாடுகளைத் தேஹத்தாலேயே ஏற்று நம்மை அநுக்ரஹிக்கும் ஆற்றலுடையவர்களல்லவா? இப்படித் தேறிய் மானிடர்களாலேயே முடியுமாயின், ப்ரபஞ்சவஸ்து வழி, யோகியின் வழிபாடுகளை நன்கு ஏற்று அதன் வழியே அவனுக்கு அநுக்ரஹிக்க ஈச்வரனுக்கா ப்ரபஞ்ச அபிமானம் வேண்டும்? நம் உபாஸனை பலிக்க அது வேண்டியதேயில்லை.

முன் காட்டப்பட்ட படி ஈச்வர உபாஸனையான் விவேகபக்தி செய்வதற்கு உபயோகமான சித் ஜட உருவங்கள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. இவைகளைப் பலவாறாக எடுத்து, வேதம் ருத்ரம் மூலமாக வெளியிடுகிறது: வேறு பல இடங்களிலும் கூறியுள்ளது வேதம். இவைகளைத் தழுவியே, கிருஷ்ண பரமாத்மாவும், கீதை 10-ம் அத்யாயமாகிய விபூதியோகத்தில் முக்யமான விக்ரஹங்களை விளக்கிக் காட்டியிருக்கிறார். இப்படி எல்லாம் பலவாறாக இருப்பினும், இக்கலிகாலக் கலக்கத்திற்கு ஏற்ப ஜடவஸ்து மூலமாக ஈச்வரனை உபாஸிப்பதே மிகச் சிறந்தது. முதல்படியாகிய அங்காவபத்த உபாஸனையான வைதிகஜாக்ரத அவஸ்தையென்ற கர்மானுஷ்டானமே, ஸரிவர நடைபெற இடமில்லாக்காலம் இது. இதில் பலவிதமான ப்ரதீகோபாஸனை எல்லாம் எப்படி ஸரிவர உதவியாகவிருக்கும்? ஜீவர்களின் குணதுணங்கள் மறைந்தேயிருக்கும் காலம் இது. அன்னை, பிதா, குரு, பெரியோர் இவர்களிடம் உள்ள வழிபாடு முதலியன குறைந்து வருகிறது. இதில் எவரையும் மஹானென திடமாகக் கடைப்பிடித்து ஆராதிப்பது, இருதிறத்தார் இயல்பாலும் முடியாத கார்யம். சித்விக்ரஹ வழியாக உள்ள விக்ரஹாராதனம் பெரும்பாலும் இக்காலத்தில் நீடித்து நடத்தமுடியாது. மேலும் பெரியோரை ஆராதிப்பதற்கும் ஜடமான அவர் சரீர வழியாகத்தான் ஆகவேண்டியிருக்கிறது. சரீரமோ பொதுவாக மஹா அசுத்தமான வஸ்து. இவைகளை எல்லாம் ஈசனது அங்கஅங்கிபாவ ப்ரபஞ்ச ஸம்பந்தத்துடன் பொருத்திப்பார்த்தால், சுத்தமான ஜடப்பொருள்களான பஞ்சபூதங்களை விக்ரஹமாகக்கொண்டு ஆராதிப்பதுதான் இக்காலத்தில் நன்றாக நீடித்து நடைபெறக்கூடியது என்பது நன்கு விளங்கும். வேதத்தில் எட்டு மூர்த்தங்களும் துதிக்கப்பட்டிருப்பினும், பஞ்சபூதத் துதிகளைத்தான் நாம் நமது விக்ரஹாராதன மூலமாகக் கொள்ளவேண்டும். வெளி நாட்டாரும், அவர்களை ஆட்டுக்குட்டிபோலப்பற்றி ஓடும் நம் நாட்டார் பலரும், இந்த மூலவாக்யங்களின் நுட்பம் உணராது, வெறும் உணவுதரும் மண், வெப்பம் தணிக்கும் தண்ணீர், குளிர்தீர்த்து ப்ரகாசம் தரும் நெருப்பு, ஸுகம் தரும் காற்று இதுபோன்ற ப்ரபஞ்ச ஜடங்களையே அறியாமையால் ஈசனெனக் கருதித்தடுமாறிய மூடக்காட்டாளர்கள் பேரானந்தக் கொதிப்பே அவை என்று குணவிமர்சை செய்து குதூஹலிக்கின்றனர்! இவர் அறியாமையை ஆழம் பார்ப்பது எப்படி?

இந்தப் பஞ்சபூத விக்ரஹாராதனம்கூட முற்றிலும் எல்லோராலும் பின்பற்ற முடியாது. இவைகளில் ஆகாயமும், வாயுவும் அரூபமாதலால் அவைகளை யோகிகள்தான் எடுத்தாள முடியும். அக்நியையும், அப்புவையும் இருபிறப்பாளரால்தான் தம் ஸ்வதர்மங்களுக்கேற்ப நன்றாகப் பின்பற்றி வழிபட

முடியும். ஆகவே, எல்லோருக்கும் பொதுவாக ப்ருதிவி பூதம் ஒன்றுதான் உள்ளது. மேலும், ப்ருதிவியில் ஸ்ருஷ்டிக்ரமப்படி மற்றை நான்கு பூதங்களின் தன்மையும் இருப்பதால் இந்த ஆராதனை மிக ஸ்தூலமாக இருப்பினும், அதன்வழி ஈச்வரனை ஆராதிப்பதில் தாழ்வு ஒன்றுமில்லை. இப்பொழுது நாமெல்லோரும் ஆராதித்துவரும் சிலை, பாணலிங்கம், ஸாளக்ராமம், பஞ்சலோகங்கள், மரம் முதலியவைகளாகிய விக்ரஹங்கள் எல்லாம் பார்த்திவ விக்ரஹாராதனங்களே.

எங்கும் பரவியுள்ள ஈசன் ஒரு விக்ரஹத்தில் ஏற்படும் ஏகாக்ர பாவனைவழி வெளிப்படுவதெப்படி? அவன் ஸர்வாந்தர்யாமித்வத்திற்கு குறைவு வாராதா என்ற சங்கை இப்பொழுது ஏற்படலாம். இதற்குக் கட்டையின் திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்ளுவோம். கட்டைகளுக்குள்ளெல்லாம் நெருப்பு மறைந்து பரவியுள்ளது. ஏதாவது ஒரு கட்டையில் கடைதல் என்ற சிறப்புத்தொழிலைச் செய்தால் அதில் மறைந்துகிடக்கும் நெருப்பு விளங்கிக்கொண்டு வெளிப்படும். இப்படி வெளிப்பட்டு வருவதால், மற்றையக் கட்டைகளுள் இருக்கும் நெருப்பு குறைந்து போகுமா? இதுபோலவேதான், ஈச்வரன் எங்கும் பரவியிருப்பினும், பெரியோர்கள் செய்யும் ஸம்ஸ்கார விசேஷத்தால் எந்த உருவத்தில் வேண்டுமானாலும் தமது சக்தியை ஸ்தாபித்து ஏகாக்ரமாக வழிபடப்பட்ட மூர்த்திபாவனைகள் வழியாகத் தமது ஸர்வாந்தர்யாமித்வத்திற்குக் குறைவின்றியே தமது சக்தியை ஈச்வரன் காட்டலாம். அப்படி ஸம்ஸ்காரம்பெற்ற உருவங்கள் வெறும் கல்சிலைகளாயினும், வெளியிலுள்ள கற்கள் முதலியவைகளைவிட மிகச் சிறந்தவையே. முன்னுள்ள சுத்தர்கள் த்யானச் சிறப்பு அவைகளுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால் அவைகள் வழி, ஈச்வரனை வழிபடுபவர் மனதை அவை எளிதில் ஏகாக்ர நிலைக்குக் கொண்டுவரும் ஆற்றலுடையவை.

விக்ரஹங்களை ஸ்தாபித்து ஈச்வரனை வழிபடும் வைதிக வழியை நன்கு ஆராய்ந்து பார்த்தால், ஈச்வரனைத் தவிர மற்றையவர்கள் எவ்வளவு பெரியோர்களாயினும், ஈசன் உருவங்கள் மூலமாயல்லது நேரிடத் தனி உருவங்கள் மூலமாக வழிபடத் தகுந்தவர்களல்லர் என்பது விளங்கும். அங்க அங்கிபாவமுள்ள பொருள்களைத்தான் அதன் அங்கத்தின் வழி அங்கியாகக்கொண்டு ஆராதிக்கலாம். நமது ஆசார்ய புருஷாள், தாய் தந்தையர் முதலிய பூஜ்யர்கள் எவ்வளவு சிறந்தவர்களாயிருப்பினும் தனி விக்ரஹங்கள் மூலமாக அவர்களை ஆராதிக்க வேதம் இடங்கொடுக்கவே இல்லை. அவர்களுக்கு விக்ரஹங்களுள் எல்லாம் வ்யாபகமில்லை. அவர்களுக்கு விட்ட சரீரங்களிலேயே வ்யாபகம் இல்லையே. அவைகளுக்குக்கூட பிணம் என்று வ்யவஹாரம் ஏற்படும்போது அவர்கள் விக்ரஹங்கள் எப்படி ஆராதனயோக்யமாகும்? இப்படிப்பட்ட பூஜ்யர்களை ஆராதிக்க வேண்டுமாகில், அவர்களை உத்தேசித்து ஈச்வரன் விக்ரஹம் ஒன்றையோ அல்லது சிறப்பாக ஏற்பட்ட ச்ராத்தாதிகள் போன்ற அங்காவபத்த உபாஸனை மூலமாகவோதான் செய்யவேண்டியது. இவைகளைவிட்டு, இக்காலத்தில் கிளம்பியுள்ள போட்டோ சித்திரங்கள் பதுமைகள் முதலியவைகளது ஆராதனத்திற்கும், ப்ரேத ஆராதனத்திற்கும் பேதமே இல்லை. மனுஷ்யர் படங்களை வெறும் அறிகுறிகளாக வைத்துக் கொள்ளலாமே ஒழிய, வைதிக விக்ரஹாராதன பூஜைக்கு அவை

தருந்தவையேயல்ல. இதுபற்றித்தான் நமது பெரியோர்கள் தம்மைப் படமெடுக்க இடங்கொடுப்பதும் இல்லை; அவர்கள் சிஷ்யர்கள் ஆசாரியன் திருமேனியைப் பதுமைகளாகச் செய்து வைத்துக்கொள்ள விரும்புவதுமில்லை. கலிகாலக் கொடுமைக்கேற்ப இந்தப் படாதி ஆராதனமான அவைதிகவழி திடப்பட்டுக்கொண்டும் ஈச்வரன் விக்ரஹாராதனை குறைந்துகொண்டும் வருகிறது. ஈச்வரன் ஸம்ஸ்கார விசேஷத்தால் ஒரு மூர்த்திபாவனையின்வழி, வழிபடுபவரைத் தமது ஸர்வாந்தர்யாமித்வத்திற்குக் குறையின்றி அனுக்ரஹிப்பார். அப்படி ஏகதேசிகளான மஹா புருஷரால் முடியாது. அவர்கள் ஆற்றலை விக்ரஹங்களுள் இழுத்து நிறுத்தச் செய்யும் நமது முயற்சி அவர்களுக்கும் நமக்கும் ஒருவித நன்மையையும் பயக்காது. இது முழு அவைதிகமே.

ஈச்வரனை விக்ரஹமூலமாக ஆராதிக்க வேண்டியதில்லை என்று பெரும் பேரிகை அடித்துவந்த மஹான்கள் ஒவ்வொருவரும் தமது திரு உருவப்படத்தை சிஷ்யர் எடுத்து வழிபட இடங்கொடுக்கவில்லையா? இவர்கள் உபதேசமொழியை ஸத்யமென்று நம்பும் அறிவிலிகளுக்குத் தாமஸமான ப்ரேதாராதனமாகிய உயிர் நீங்கிய உருவ வழிபாடேதான் கைகூடும். பொதுவாக, ஒரு குருவின் உருவத்தை ஆராதிப்பது மேன்மையா, அல்லது அந்த குருபோன்ற பல குருக்கள் ஆராதித்துக் கடைத்தேறிய ஈச்வரனது திவ்யமங்கள விக்ரஹத்தை ஆராதிப்பது மேன்மையா? இப்படி உண்மை இருந்தும் நமது மதத்தில் விக்ரஹாராதனைப் பழிப்பு இருக்கிறதே அதற்கு என்ன ஸமாதானம் சொல்வது என்ற கேள்வி வரலாம். இவை இங்கு நாம் எடுத்துக் காட்டப்புகுந்த வைதிக அங்க அங்கி பாவம் மறந்துபோன மஹான்கள் அறியாக் கூற்றாயும் இருக்கலாம்; அல்லது புத்தி நுட்பமுடையவர்கள் மூடபக்தி வழிபோவதைவிட விவேகபக்தி வழிபோவது நலம் என்று கூறவந்த எச்சரிக்கைகளாக இருக்கலாம். விக்ரஹாராதனத்தையே விட்டுவிட வேண்டும் என்று தடுக்க வந்த வாக்யங்களாக அவைகளைக் கொள்ளக்கூடாது. விக்ரஹாராதனத்திற்கு விரோதமாகக் கூறப்படும் 'நட்டகல்லை' என்ற சிவவாக்கியர் பாடலிலும் கூட 'சுட்டசட்டி சட்டுவங்கறிச்சுவை அறியுமோ?' என்ற பாகத்தில் விக்ரஹமே நேரிடப் பயன்கொடுப்பதல்ல, அதன்விஷயமாக நமக்கு ஏற்படும் ஏகாக்ர ஈச்வர பாவனையே. இப்படி இருப்பினும், சட்டிசட்டுவமின்றி கறி சமைக்கமுடியாதது போல, விக்ரஹங்களன்றி ஈச்வர பாவனை நமக்குத் திடப்பட வழியும் இல்லை என்பது குறிக்கப்படுகிறது. ஆகவே மூடபக்தியை முன்னிட்டு ஏகாக்ரய் வருவதற்குமுன் உலக வழிகளில் ஒழுங்கு தவறி இறுமாப்பால் நடந்து கெட்டுப்போவதைவிட, விவேகபக்தியைக் கடைப்பிடிப்பது நலம் என்பதைப் பொது ஜனங்களுக்கு ஸ்தாபிக்கவந்தவைகள் இந்தக் கண்டனங்கள். இதுபோல உள்ள வெளிநாட்டார்கள் கண்டனம் இப்படிப்பட்டதல்ல. அவர்கள் முழுமூட விக்ரஹாரானதம் செய்து பூசாரிகள் திருட்டுத்தனத்திற் காளாகித் திண்டாடிய திருவாழ்த்தான் பூனைகளே. விக்ரஹம் என்றால் அவர்களுக்கு நடுக்கமும் வெறுப்பும் உண்டாகும். வைதிக விக்ரஹாராதனமோ அவர்களுக்குத் தெரிய இடமேயில்லை. ஆகவே அவர்களும் அவர்கள் வாக்கை வேதவாக்கென்று நம்பும் நம்மவரும் நமது மதத்தில் காணப்படும் விக்ரஹாராதன விஷய எச்சரிக்கைகளைக் கொடிய கண்டனமெனக் காட்டி நம்முன் மந்தர்களைக்கெடுத்துத் தாம் விழுந்துள்ள படுகுழியில் வீழ்த்தி வருகின்றனர். இவர்கள் வாக்கை நம்பி மோசம் போகலாகாது.

'விக்ரஹாராதனை, வழிபடுபவன் பாவனை மாத்திரமே. உண்மை வஸ்துவை உணரும் ஆற்றலில்லாதவர் செய்யும் குருட்டு முயற்சியே. அந்தப் பாவனையைவிட பாவிப்பவன் மேல். ஆதலால் தன்னையே ஈசன் என்று உணர்ந்து அமர்ந்து விடவேண்டும் விக்ரஹாராதனையை விட்டு' என்பவர் இக்காலத்திய ஆபாஸ வேதாந்திகள். இவர்கள் உபயோகிக்கும் பாவனை என்ற சொல், இல்லாததை உள்ளதாகக் கருதுவது என்ற பொருளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. விக்ரஹத்தில் ஈசன் இல்லை என்று கூற வேதாந்தியால்தான் முடியுமா? ஆகவே எங்கும்

உள்ள ஈச்வரனையே விக்ரஹத்தில் சிறப்பாகக் கருதுவதால் அந்த வழிபாடு வெறும் பாவனையே அல்ல. வழிபடுபவன் கருத்துக்கு இசைந்த வஸ்து கருதுபவனையும், கருதப்படும் பொருளையும் எல்லாவற்றையும் அடக்கியுள்ள வஸ்து ஆதலால் அது கருதுபவனைவிடத் தாழ்ந்ததல்ல. வ்யவஹார உணர்வில் ஈச்வரனை வழிபடாது ஞானிகளாலும் இருக்கமுடியாது. இப்படி இருப்பினும், ஆபாஸ வேதாந்திகளுக்கு ஆதாரம் தருவனபோன்றுள்ள வாக்கியங்கள் வேதத்தில் காணப்படுகின்றன. அவை அகங்க்ரஹோபாஸனையான ஈச்வர த்யானத்தைச் சிறப்பித்துக் கூறவந்தவை: அந்த வாஸனையே இல்லாது, விக்ரஹாராதனையை இடித்துத் தகர்க்கவந்துள்ள ஆபாஸ வேதாந்திக்குப் பிடிகொடுக்க வந்தவைகளல்ல: அவை விக்ரஹாராதனைமுதிர்ந்து ராஜயோக முடிவில் ஸாக்ஷாத்காரத்திற்காகச் செய்யப்படும் ஞானயோக விஷயவாக்கியங்கள். அவைகளை ஸரிவர உணர்ந்து ஈடேறும் ஞானியிடம் விக்ரஹாராதனரூபமான கடவுள் வழிபாடு உள்ளபடி முழுவதும் அமைந்து காணப்படும். அவனிடம் விக்ரஹாராதனை* யைப் பழிக்கவேண்டும் என்ற எண்ணம் தலைகிளம்பாது, அவனுக்கு அதன் அருமையும் ஆழ்ந்த உண்மையும் தெரியுமாதலால்.

இந்த ஈச்வர உபாஸனை என்பது அத்புதக்கட புண்யகர்மாவில் சேர்ந்தது; உடனேயே பலிக்கும் தன்மையுடையது. இதைச் செய்யாது, மற்றையத் தொழில்களில் உழலும் ஜீவராசிகள், எப்படி கர்ம சக்கரத்தில் சுழலுவர் என்பதை இனி எடுத்து விஸ்தரிப்போம்.

திருக்கண்ணப்ப நாயனார்

TIRUKKANNAPPA NAYANAR

அடியார்களுக்கு ஊழியஞ்செய்யக் காத்துக்கொண்டிருக்கிற ஈசனை வசமாக்கும் வழி வெகு எளிது. 'உன்பற்றொழிய ஒருபற்றில்லை' யென்று அன்புருவாகிப் பிரியும்போதெல்லாம், தாய் கன்றைவிட்டகல உழல்வதுபோல் உருகி எவ்விதம் நாம் சிவனைப் பூஜித்தாலும், அதுவே தேவர்களுக்கு மியலாத அர்ச்சனை. மனதில் களங்கமில்லாமல் ஏற்படும் சொற்களே வேதகோஷங்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவான், பார்த்தனுடைய செருக்கைக் குறைக்குமாறு, தம்மெதிரே செல்லும் புஷ்பவண்டிகளை நோக்கி 'ஏ அர்ச்சுனா! இப்பூக்கள் எங்கிருந்து செல்லுகின்றன அறிவையோ?' என்று வினவ, தனக்குத் தெரியாதென்று அவ்விஜயன் சொல்ல, 'வீமன் பாசுபதனுக்கு அர்ச்சிக்கும் பூக்கள்' என ஹ்ருஷீகேசன் சொன்னார். இதைக்கேட்ட அர்ச்சுனன் இதனிலும் சிறந்த பக்தி யாதென்று தான் வெட்கினார். அங்ஙனம் ஏக சித்தனாகி, பத்திரம், புஷ்பம், பழம், ஜலம், எதை நைவேத்தியம் செய்கிறோமோ, பகவான் அதை ஒப்புக்கொள்கிறார். 'மத்த மதகரி முகிற்குலமென்ன நின்றிலகு' என்றுவரும் தாயுமானஸ்வாமி பாடற்கிணங்க, கரடி புலி வாழ்கின்ற குகை யூடிருந்து மூச்சைப்பிடித்துக் கொண்டிருந்தாலும் அன்பில்லாவிடத் தருளில்லை. முத்த நகையார்களோடு முத்து முத்தாய்க் குலாவி மோகத்திருந்தாலும், சிந்தையைப் பரமசிவனடியிருத்தினால், தேவர்கள் வாழ்வுக்கு மேல் பதம் கிடைக்கும். அன்பு மிகுந்து, அரனைப் பூசித்த சிவனடியார் திருக்கண்ணப்ப நாயனார் சரித மிங்கெடுத்துரைப்போம்.

போத்தப்பி நாட்டிலே, உடுப்பூரிலே, வேடுவர் குலத்திலே, எயினர்க் கிறைவனாய் விளங்கிய நாகன் என்பவன், தத்தை என்னும் தன் மனைவியோடு வாழ்ந்திருந்தனன். 'மக்கள் மெய்தீண்டலுடற்கின்ப மற்றவர் சொற்கேட்டலின்பஞ் செவிக்கு' என்றபடி மக்கட்பேறு பெரும் பேறு. அப்பேறின்றி, தம்பதியிருவரும் சென்ற விடமெல்லாம் திரிசூலியான

* ஈச்வரன் உபாஸனைக்கு முக்யமான விக்ரஹங்களின் சிறப்பை, முன்னரே விக்ரஹாராதனையைப் பற்றி விஸ்தாரமாக எழுதிய இடத்தில் காட்டியாகி விட்டது. அவைகளை எல்லாம் சேர்த்து விக்ரஹ விஷயம் என்ற தனிப்புத்தகமும் தயாராய்விட்டது. அதில் கூறாமல் விட்ட பொது விஷயங்களே இங்கு குறிக்கப்பட்டுள்ளன.

சுப்பிரமணியக் கடவுளை வழிபட்டு அக்கடவுளுக்குக் கோழிகளையும் மயில்களையும் விட்டு வந்தனர். குறிஞ்சிக் கடவுள் திருவருளால் தத்தை யென்பவள் வயிறு வாய்த்தனள். முறையே, பரமசிவனே கருவுருவாகி திருவுரு வெடுத்தாற்போல் ஒரு மகவை ஈன்றனள். கையில் எடுத்தபொழுது திண்ணென விருந்தபடியால் அக்குழவிக்குத் திண்ணன் என்று நாகன் நாமகரணஞ் செய்தான். அத்திண்ணனார் வளர்ந்து, உரியபருவத்திலே தன் குலத்துக்கேற்க, வில்வித்தை பயிலத் தொடங்கி அதைக் கசடறக்கற்றார். இவரது சாமர்த்யம் தெரிந்து இவர் தந்தை முதியோனானதால், வேட்டைமுயற்சியில் இளைத்தவனாகி, தன்றொழிலை மகனுக்கு நியமித்தான். திண்ணனார் வேட்டைக்கோலங்கொண்டு, வனத்தில் வேட்டையாடுங்கால், ஒரு பன்றி வேடனது வலையறும்படி எழுந்தோடினதைக் கண்ணுற்று, அப்பன்றியைத் துரத்திக்கொண்டோடினார். இவருக்குப்பின்னோடினவர்கள் நாணன், காடன் என்ற இரண்டு வேடர்கள். அப்பன்றி நெடுந்தூரம் போய் இளைப்பினால் மலைச்சாரலிலே ஒரு விருட்சத்தின் நிழலில் நின்றது. திண்ணனாரும் வெகு விசையுடனே அதனடிவழியே சென்று, அப்பன்றியை அணுகினர். அணுகவே, தன்னுடைவாளுருவி அவ்விலங்கை இரண்டு துண்டாக வெட்டினர். வெட்டித் திரும்புங்கால், நாணனும், காடனும் இவர் வலிமையை வியந்து, திண்ணனாரை வணங்கி, 'நாம் வெகுதூரம் நடந்தும் ஓடியும் வந்தமையால் நம்மைப் பசிவருத்துகிறது, இறந்து கிடக்கின்ற பன்றியை நெருப்பிலே காய்ச்சிப் பதப்படுத்தித் தின்று தண்ணீர் அருந்தி வேட்டைக் காட்டுக்கு அசைவோம்' என, திண்ணனார், அவர்களைக் கண்ணுற்று, 'நண்பர்காள்! இவ்வனத்தில் குடிக்க நீர் எங்கு கிடைக்கு'மென்று வினவ, நாணன் கையைக் காட்டி 'அத்தேக்க மரத்துக்கப்பால் மலையருகாமை பொன்முகலியாறு ஒன்றுண்டு' என்றான். அதைச் செவியுற்ற திண்ணனார், 'ஆனால் அப்பன்றியை எடுத்துக் கொண்டு வாருங்கள். அங்கேயே செல்வோம்' என்று சொல்லி அதை நோக்கி நடந்து அரைக் காத வழி தூரத்துக்கப்பால் தோன்றின திருக்காளத்திமலையை நோக்கி தன் நண்பரிடம் நமக்கு முன்னாகத் தோன்றுகின்ற மலைக்குப் போவோமென்று சொல்ல, மூவரும் அவ்வழியே சென்றனர். நாணன் அந்த மலையிலே குடுமித்தேவரிருக்கிறார், நாம் கும்பிடலாம் என்றான். இவ்வாறு வனமிருகங்களை வேட்டையாடிப் பல்லுயிர்களை மாய்க்கின்ற வேடுவனுக்குப் பரமசிவன் அருள் எவ்வாறுவரும் என்ற சந்தேகம் ஜனிக்கலாம். ஏனென்றால் கொல்லாவிரதமே பெரிய விரதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவகாருண்ய மில்லாதவர்க்கு எப்படிக்கருணாகரனருள் கிடைக்கும்? கொலைத்தொழிலில் சற்றும் இச்சை வையாது தன் குலதர்மத்தை யனுசரித்து, உஜ்ஜீவனார்த்தம் வேட்டையாடி வந்தவன் இந்த வேடன். வனப்பிரதேசங்களில் ருஷி முதலிய தபசிகளுக்கு இடைஞ்சலை யுண்டாக்குகிற துஷ்ட மிருகங்களை வேட்டையாடுவதே தபோவிருத்திக்கு நன்மை. மரபாரதப்போரில் தர்மத்துக்கு விரோதமாய் நடந்த கௌரவர்களையே ஸம்ஹாரகாரணார்த்தம் பகவான் உத்பவித்தார். துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் சிறந்ததர்ம மாதலால், நன்மைபயக்கும் வேட்டை நல்வேட்டை. இதனைக் கைக்கொண்ட திண்ணனார், மலையைச் சமீபிக்குங்கால் தன் பளுகுறைவது போலும், இனி உண்டாவது யாதோவறியேனென்று அதி விருப்பத்தோடும் விரைந்துசென்று, பொன்முகலிநதி சேர்ந்து அதன் கரையில் இருக்கின்ற விருட்ச நிழலிலே கொண்டுவந்த பன்றியை இருத்திக் காடனைநோக்கி 'தீக்கடைகோல்செய்து நெருப்பை உண்டாக்கு, நாங்கள் இம்மலைமேலேறி சுவாமிதரிசனம் செய்துகொண்டு வருவோ' மென்று சொல்லி, நாணனோடும், பொன்முகலி நதியைக்கடந்து, மலைச்சாரலையடைந்து, மலையிலே நாணன் முன்னே ஏற, தாமும் ஏறிச்சென்று, சிவலிங்கம் இருத்தலைக்கண்டார். காணவும் பரமசிவத்தின் க்ருபா ஸாகரத்தில் மூழ்கி, இரும்பைக் காந்தமிழுக்கின்றவாறு, தன் வன்குணங்கள் மாறி, அன்புருவமானார். சிவலிங்கத்தைச் சமீபித்ததும், வெகுநாட் பிரிந்திருந்த சேயைத் தாய் கண்டதுபோல், அகம்புளகி, ஆனந்த பரவசமாகிச் சிவலிங்கத்தைக் கட்டித்தழுவி பல முறை உச்சிமுகந்து, 'குழந்தாய்! யார் உன்னைக்

கரடி வெம்புலிகள் வாழும் இக்கொடிய காட்டில் தனியே விடுவித்தார்? இரவில் உன்னை யார் காப்பார்கள்? உன் பசியறிந்து உண்டியளிப்பவர் யாவர்? ஐயோ ஏதொன்றும் சொல்லாய்!' என்று அழுதுபுரண்டு சமீபத்தில் பார்க்குமளவில் தலைமீது பச்சிலை இருக்கக்கண்டார். பச்சிலைதான் சிவலிங்க ஆராதனை முறையோ வென்று ஊகித்து, நீரை வார்த்துப் பச்சிலையைப் போட்டதாரோ வென்று வினவ, நாணன், 'முற்காலத்தில் உம்முடைய பிதாவுடன் வேட்டையாடிக் கொண்டு நான் இங்கே வந்தபொழுது, இவர் முடியிலே ஒரு பிராமணன் நீரைவார்த்துப் பச்சிலையைத் தூவி சிற்சில வார்த்தைகள் பேசினதுண்டு' என்று சொன்னான். ஆனால் அப்படியே அடியேனும் செய்வனென்று சிறிதுதூரம் போவார், திரும்பி ஓடிவந்து 'குழந்தை! நான் உன்னை விட்டுப்போனால் உனக்குத்துணையார்? இக்கானகத்தில் உறையும் விலங்குகள் உன்னைத் தின்றுவிடுமே' யென்று வில்லைக் கீழே யெறிந்து புரண்டு அழுவார். பின்னும் 'உன் பசிதீர்க்க என்னிடம் இறைச்சி இருக்கிறது—அதை வாட்டி ருசி பார்த்து உனக்குக் கொண்டுவந்து கொடுத்து உன் பசியாற்றுவே' னென்று சிறிது தூரம் விரைவர். 'கானகத்துறையும் தெய்வங்காள்! எந்தன் அருமைக் குழவியைக் குறிக் கொண்மின்; நீங்காத அன்புமிக்கானை விட்டு ஏதிலன்போல் போகின்றேன்யான்' என்று கதறுவார். இவ்வாறு மனம், அனலிலிட்ட மெழுகுபோல் உருகி, ஒரு பக்கம் இழுக்க, தேஹமானது சிவலிங்கமாகிய குழந்தை ஸம்ரட்சணார்த்தம் இறைச்சியண்டை இழுக்க, கடைசியில் சிநேகிதர்கள் இருக்குமிடம் வந்துசேர்ந்தார். திண்ணனார் பசிநோக்காமல், தீயில் தன் அம்பினால், இறைச்சியைக் கொத்தி வாட்டுவார்; வாட்டினதும் பல்லில் கடித்துப் பதமாயிருந்து ருசியாயிருந்தால் சிவனுக்கென்று இடுவார்; இல்லாவிட்டால் எறிந்துவிடுவார். இவ்வாறு செய்துகொண்டிருந்த திண்ணனாரைப் பார்த்த சிநேகிதர்கள், 'ஐயோ, தானும் தின்று பசியாறான், நம் பசியையும் ஆற்றான். இவனுக்கென்ன பயித்தியம் பிடித்தாற் போலும்' என்று திகைத்துச் சற்று நின்று, இப்பயித்தியம் நிவர்த்திசெய்ய நம்மரசிடம்போய்ச் சொல்லுவோமென்று, பசியுடன் திரும்பினர். திண்ணனாரோ, சபரி இலந்தைப்பழங்களைக் கடித்து ருசிபார்த்து ஸ்ரீராமருக்குக் குவித்திருந்ததுபோல், இறைச்சியைக்கடித்து ருசியா யிருந்ததை இலைத் தொன்னையில் ஏந்திக்கொண்டு பொன் முகலிநதியில் மூழ்கி வாயில் நீர்கொண்டு, பச்சிலை யெடுத்துத் தலைமயிரில் சொருகிக் கொண்டு சிவலிங்கத்தண்டை சென்றார். சிவலிங்கத்தின் சிரமேலிருந்த பச்சிலையைத் தன் செருப்பினால் தள்ளிவிட்டு, தன் வாய் நீரினால் திருமஞ்சனம் செய்வித்துத், தலையிலிருந்த பச்சிலையைச் சிவலிங்கத்தின் மேலிட்டு, 'என் சேய், நான் கொண்டு வந்திருக்கிற மிருதுவான இறைச்சியைப் புசித்துப் பசியாற வேண்டும். நாளை இன்னும் நல்ல மாமிசம் தருவேன்' என்று புலம்பலுற்றார். கண்ணினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரியும் ஆதிசேஷனவதாரமாகிய லக்ஷ்மணப் பெருமான், சீதையும் இராமனும் துஞ்ச, கண் கொட்டாமல் வில்லை யூன்றி கங்குலெல்லை காண்பளவும் காவல் நின்றதுபோல், திண்ணனாரும், தன் அருமைக் குழந்தையைத் துஷ்ட மிருகங்கள் அணுகா வண்ணம் விடியும் வரையும் காத்துவிட்டு, இரைதேடப் போவார். வைகறையிலே சுவாமிக்கு இறைச்சி கொண்டுவரும் பொருட்டு வேட்டையாடுவதற்கு மலைச்சாரலுக்குப் போனவர், வாயில் நீரும் தலையில் பச்சிலையும் தேக்கிலைக் கல்லையில் இறைச்சியும் கொண்டுபோய்ப் பகற்பொழுது உள்ளன்பு உமிழ்வார்போல் நீராட்டி, அர்ச்சித்து, நைவேத்தியம் செய்து, தன் கருத்து ஆசையெல்லாம் தீபாராதனை செய்வர். கருவிகரணங்களோய அசைவற்று நிற்பார். கட்டியணைத்து முத்தமிடுவர். காட்டில் சிவனும் அவரும் ஆடும் ஆட்டம் திருவிளையாடலாயிற்று.

இது நிற்க, அறிவு, அருள், அடக்கம், தவம், சிவபக்தி முதலிய நற்குணங்களெல்லாம் திரண்டு ஒருருவெடுத்தது போன்றவரும், நல்வினை தீவினைப் பயன்களால் பந்தப்படுத்தப் படாதவரும், சுகதுக்கங்களைச் சமமாய்ப் பாவித்தவரும் தெய்வலோகத்

துப் பெண்களாலும் சித்தத்தைக் கலக்க முடியாதவரும், பிறர் மனையைத் தாயெனவும், பிறர் பொருளை எட்டிப் பழம்போலவும் மதிக்கு மகா முனிவரும், திருக்காளத்தியப்பரைத் தினந்தோறும் சிவாகமப்படி பூஜிப்பவருமான சிவகோசரியார் என்பவர் பிரும்ம முகூர்த்தத்திலே எழுந்துபோய் பொன்முகலி யாற்றிலே திருநீராடி திருக்காளத்தியப்பரை யர்ச்சிக்கும் பொருட்டுத் திருமஞ்சனமும் பத்திரமும் புஷ்பமும் எடுத்துச், சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு சுவாமி சந்நிதானத்தில் சேரவும், அங்கே இறைச்சியும் எலும்பும் கிடக்கக் கண்டு நடுநடுங்கி, உடல் பதறி, தாவிக் குதித்து, மனம் வாடி, நாத்தழும்ப, 'ஐயோ, நமக்கு வேண்டாதவரோ, கானகத் துறையும் துஷ்டமிருகங்களோ, தேவரெதிரில் புன் புலாலைக் கொண்டு வந்திடத் துணிந்தார்களே! இது என்ன பாவம்! சிவனே இதுவும் உமது திருவிளையாட்டோ! அடியேனைப் பரிசோதிப்பது இவ்வண்ணம் தானோ' வென்று அலறுவார்; நோய் கொண்டவன் போல் புரளுவார்; ஜன்னியால் வாதனைப்படுபவர்போல் அங்குமிங்கும் சுவாதீனமற்றோடுவார். 'தேவாதி தேவனே, பரமசிவனே, நிராமயனே, உன்முன் இந்த அநியாயத்தைச் செய்த சண்டாளனைத் தண்டியாதிங்ஙனம்விடுத்தால் அவ்வாறுதாங்கள் விடுதல் நீதியோ?' வென்று பல முறை புலம்புவார், மூர்ச்சைதப்பிக்கீழேவிழுவார். இவ்விதமாகச் சிலநேரம்சென்று சிவனுக்கு அர்ச்சனை செய்தல் தப்பாமற் செய்வதே நெறியென உகந்து இறைச்சியையும் எலும்பையும் கோவிலுலகற்றி, பொன் முகலிக்குத் திரும்பப் போய் நீர் கொண்டுவந்து, இஷ்டலிங்க அபிஷேகம் செய்து, பூவிட்டு, கீதமுறையாக சாமவேதம் பாடி அனலிலிட்ட மெழுகு போலுருகி ஆனந்த நிட்டையிலமர்ந்து மீளவும் ஜாக்கிரித்து, தபோவனம் செல்வார். பிரதி தினம் இச்சிரோன்மணி, தாம் வருவதும், இறைச்சி எலும்பு காணுவதும், தீராத் துயரங் கொண்டவராய் பூஜை செய்து அகலுவர்.

பரமசிவனுக்கு மண்ணும் பொன்னும் ஒன்றென்பதற்கு ஒரு சிறு திருஷ்டாந்தம் எடுத்துக்காட்டுவோம். தான் வழிபடும் தெய்வத்தின் மேல், ஒரு தனிகன் ஏராளமான ஆபரணம் போட்டு அலங்கரித்திருந்தான். இரவில் ஒரு திருடன் அந்த நகைகளை அபகரித்தான். மறுநாட் காலையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அங்கு விஜயம் செய்கையில் 'தேவரீர்! இத் தெய்வத்துக்குக் கண்ணில்லை போலும். நான் இவர்மேல் ஏராளமான நகைபூட்டியிருந்தேன். திருடன் எடுத்துப்போக விட்டார். தெய்வத்துக்குக் கண்ணிருந்தால் திருடர்களை உடனே தண்டிக்காதா?' எனக் கோபாவேசங்கொண்டு புலம்பினார். அது கண்டு அந்த ஸாது, 'பகவானுக்குத் தூசியும் தங்கமும் ஒன்றுதான்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். விருப்பும் வெறுப்பு மற்றவர் பகவான்; அவர் முன்னிலையில் அன்புடன் திண்ணனாரிட்ட இறைச்சியும் எலும்பும் கிடக்கச் சிவகோசரியார் துயரம் நீங்காதவராய் ஐந்து தினம் வரையில் அர்ச்சித்து வந்தார். பசித்தாலும் பொறுப்பர், அடித்தாலும் பொறுப்பர், தன் பக்தன் வருந்துவதைச் சற்றேனும் சகியாரீசன். சிவகோசரியாருடைய துக்கத்தை நீக்கும் பொருட்டு, ஐந்தாம் நாள் இரவில் பக்தருக்குக் கனவில் பிரசன்னமாகி, 'ஏ பக்த சிரோன்மணி, நீ வருந்தும்படிச் செய்தவன் வேடுவனல்ல,என்மேல்வைத்த அன்புருவேயன்றி வேறல்ல. அவன் என்மேலிடும் திருமஞ்சனம் உள்ளன்புமிழ். அவன் பேசும் பேச்சுக்கள் எனக்கு யாழினுமினிது. அவன் நைவேத்தியம் செய்யும் இறைச்சி தேவர்கள் இடும் அமிர்தத்தினுமினிது. அவன் பக்தி அளவற்றது. அவனுக்குச் சமமான பக்தன் தேவாதிதேவர்களுள்ளும் யான் கண்டிலன். அவனுடைய கால் செருப்போ,என் அருமைப்புதல்வன் சுப்பிரமணியன் பாதங்களுக்கும் மேலானது. அவன் அறிவோ நம்மை அறியும் அறிவு. அவன் தலை சொருக்கிலே கொண்டுவருகிற புஷ்பமோ, பிர்மா விஷ்ணு முதலியவர்களாலும் அர்ச்சனை செய்யப்படுவனவைகளுக்கு எத்தனையோ மடங்கு மேலானது. அந்நிஜ பக்தன் என்னுடன் கதறுவதோ, சேயினிடம் தாய்க்கு வாய்ந்த ஆசையினும் மேலானது. நாளைய

பகலில் என் பின்னின்று அவன் படும்பாட்டைப் பார்ப்பாயாக' என்றருளி மறைந்தார்.

சிவகோசரியார் சொப்பனவத்தை நீங்கி ஜாக்கிரதையாய்ப் பரமசிவன் தனக்கு நள்ளிருளில் தோன்றி ஓதியதைப் பல முறை நினைந்து நினைந்து, 'அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடுவகுலத்திலுதித்த வேதாந்தகனிடம் பரமசிவனிவ்வளவுஅருள் புரிந்துள்ளார்! சாஸ்திர விதிப்படிப் பூஜை செய்யும் நாயினும் கடையேனாகிய எனக்கு அருள் புரிந்தாரில்லை. வேதகோஷங்களுக்கும் மேலானது அவன் சொற்கள் என்கின்றார். சேயென்றார், தாயென்றார். அமரர்களும் அவனுக்குச் சமானமாக மாட்டார்களென்கின்றார். ஈசன் திருவுளமேதோ வறியேன்' எனத்தேறினார். இது நிற்க, திண்ணனார் கொண்ட தெய்வப்பித்தை, நாணனும் காடனும் நாகனிடம் போய்த் தெரிவிக்க, பிரமத்தனாய் நாகன் தேவராட்டியைக் கொண்டுவந்து திண்ணனாரைப் பற்பல திறத்தினாலே வசிக்கவும், அவர் வசமாகாமையைக்கண்டு ஊணுறக்கமுமின்றி, சிந்தை நொந்து இனி என்ன செய்வோம் என்று சொல்லிக்கொண்டு அவரைவிட்டுத் திரும்பிப்போய் விட்டான்.

திண்ணனாரோ, மலைச்சாரலிலே போய், பன்றி, மான், கலை, மரை, கடமை என்னு மிருகங்களைக் கொன்று அவைகளினிறைச்சியை முன்போல பக்குவப்படுத்தித் தேக்கிலையில் வைத்துக் கோற்றேனைப் பிழிந்து, அதனோடு கலந்து, யதாப்பிரகாரம் திருமஞ்சனமும் புஷ்பமும் கொண்டு மலையிலேறி சுவாமி சந்நிதானத்தை யடைந்து, முன்போல பூஜைசெய்து, இறைச்சியை முன்னே வைத்து, 'நேற்றிலும் இன்று கொண்டு வந்த இறைச்சி, இனிப்பானது; தேன் கலந்தது; அடியேனும் சுவை பார்த்திருக்கிறேன்' என்று சொல்லி உண்பித்து அவர் பக்கத்திலே பிரியாமல் நின்றார்.

இருவினையொப்பும்மலபரிபாகமுமுடைய திண்ணனார், பகற்காலத்திலே மிருகங்களைக் கொன்று இறைச்சியை ஊட்டியும் ராத்திரியில் கண்கொட்டாது ஊன்றிய வில்லும் கையுமாய் காவல் தொண்டு செய்தும் வந்தார்.

இது நிற்க. சிவகோசரியார் சிவாஞ்ஞைப்படி வ்ருஷத்காலத்திலே யெழுந்து, பொன்முகலி நதியில் நீராடி, திருமஞ்சனமும் நீரும் கொண்டுபோய், முன் போலவே அர்ச்சித்துச் சுவாமிக்கு மறைவிலே ஒளித்திருந்தார். சர்வலோகமும் மறைக்கச் சக்தியுள்ள, ஈச்வரனுக்குச் சிவகோசரியாரை திண்ணனார் கண்ணுக்குப் புலப்படாமல் செய்வது அசாத்தியமல்ல. திண்ணனார் வழக்கம்போல் மலைச்சாரலிலே வேட்டையாடி, கன்றை நினைந்து தாயோடிவருவது போல், இறைச்சியை எடுத்துக்கொண்டு திருமஞ்சனம் புஷ்பம்கொண்டு வருகையில் உதிரங்காட்டுகிற பல துர்ச்சகுனங்கள்தோன்ற 'ஆ கெட்டேன், என் கண்மணிக்கு என்ன அபாயம் நேர்ந்ததோ, தனியே வனத்தில் விட்டுவந்தேனே.காலெழாமல்,நாவெழாமல், பதறுதே என்னெஞ்சம்,' என விரைந்தோடினார். அடியார்களுடைய பக்தி வலையில் அகப்பட்ட அருட்பெருஞ்சோதி, திண்ணனாருடைய உள்ளன்பைச் சிவகோசரியாருக்குக் காண்பிக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டு தம்முடைய வலக்கண்ணினின்றும் இரத்தம் சொரியப்பண்ணினார். திண்ணனாரோ, இதைத் தூரத்திலே கண்டு பதைக்க ஓடி வந்து, இரத்தம் சொரிதலைக்கண்டு அசைவற்று நிற்க, திருமஞ்சனமும் சிந்த, வில்லும் விழ, இறைச்சியும்சிதற, தலைமயிரிலே சொருகப்பட்டபுஷ்பங்களும் கீழே உதிர,சூத்திரக் கயிறற்ற பாவைபோல் உயிரற்று, உணர்வற்றுத் தான்சாய்ந்தார். சாய்ந்தவர் எழுந்திருந்துபோய்இரத்தத்தைப்பலமுறைநிறுத்த முயன்றும் இயலாதது பற்றி, திரும்ப மெய்யலர்ந்து, என்செய்வேனென்று அலறி நிலத்தில் விழுந்தார். நெடுநேரம் உள்ளுயிர்த்தலின்றி சவம்போலே கிடந்தார். ஒருவாறு இப்படிச்செய்தவர் யாரோவென்று எழுந்து சுற்றிலும்பார்த்தார். ஏதொன்றும் காணவில்லை. 'ஐயனே அன்பர் மனம்சோதிக்குங்கால், யாரிருப்பர்! வேடுவர்களில் எனக்குப் பகைஞர்களாலோ அல்லது இவ்வரண்யவாசிகளாகிய துஷ்ட மிருகங்களாலோ என் கண்மணிக்கு இவ்வாபத்து விளைந்தது' என்று வில்லில் அம்புகளைத்தொடுத்து மலைப்பக்கத்திலே வெகுதூரம் போனார். யாதும் புலப்

படாது திரும்பி வந்து கன்றினுக்குச் சேய்தாய் கனிந்திரங்கல்போல் மனம் துன்பத்தினால் விழுங்கப்பட்டவராகி கண்ணீர் சொரிய வாய்விட்டலறி என்னுயிரினும் அரிய தாயும், தன்னை யடைந்த அன்பர்களைப் பிரியச் சகியாதவருமாகிய சுவாமியைக் கட்டிக்கொண்டு அயர்ந்தார். 'ஐயனே உன்னிடர் தகர்க்க ஒரு மருந்தும் அறியேனே. வேடுவர்கள் அம்பினால் பட்ட காயத்துக்கும் பச்சிலைகள் உண்டு. அவைகளைக் கொண்டுவந்து பிழிகிறே'னென்று சிறிதுதூரஞ் சென்று பச்சிலைகளைக் கொணர்ந்து சுவாமி கண்ணிற் பிழிந்தார். போலி நித்திரை புகுவரை எழுப்புவது சாத்தியமா? ஒன்றாலும் இரத்தத்தைத் தடைப்படுத்த முடியவில்லை. ஊனுக்கூன் வேண்டுமென்ற பழமொழி அவருக்கு நினைவு வர, கண்ணுக்குக் கண் கொடுப்பேனென்று மனமகிழ்ந்து, சுவாமி திருச்சந்நிதானமிருந்து, அம்பை யெடுத்துத் தம்முடைய நேத்திரத்தைத் தோண்டி யெடுத்து பகவானுடைய கண்ணிலே அப்பினார். இரத்தம் நிற்கக்கண்டு, களிகொண்டு தன்னை யறியாமல் கூச்சலிட்டு ஆரவாரித்தும், புஜங்கள் தட்டிக் குதித்தும், ஆனந்த சாகரத்திலமர்ந்தவராகி, 'அன்பே அன்பினுருமானந்த வெள்ளமே என்றென்று மெனைக் காவாய் என் கண்ணுளாடு பாவாய்' என்று புலம்பலுற்றார். பக்தர்க்கு அடிமையாயிருக்கின்ற இறைவன் இவரன்பை இன்னும் சிவகோசரியாருக்குப் புகட்டுமாறு, தன் வலதுகண் உதிரம்நிற்க, இடது கண்ணினின்றும் இரத்தம் வடிக்க ஆரம்பித்தார். திண்ணனாருக்கோ, தமக்கு ஒருகண் நன்றாயிருக்க கவலை அதிகரிக்கவில்லை. 'சேய், உன் கண் இரத்தத்தை நிறுத்த மருந்தறிந்தேன். 'குணமது கைவிடேலென்றபடி' இனி அதைக்கைவிடேன்', எனவிரைந்து, அம்பையெடுத்து, தன் மற்றொரு கண் விழியையும் தோண்டவாரம்பித்தார். ஏற்கெனவே, ஒரு கண் போயிருந்ததால் இக்கண்ணையும் தோண்டினவுடன் சுவாமிக்கு இரத்தம் காறுண்ட கண் அடையாளம் தெரிகிறதற்காகத் தனது ஒரு காலைத்தூக்கிச் செருப்பினால் குறித்துக்கொண்டு, தன் கண்ணைப் பிடுங்குங்கால், கருணாசாகரனாகிய சிவபெருமான் சகியாதவராகி 'கண்ணப்ப' நில்லென்று கையைப்பிடித்தருளினார். வானுளோரெல்லாம் இவர் பெருமையை வியந்து, வேத கோஷங்கள் பொழிந்து பூமாரி பெய்தனர். சிவகோசரியார், வேடுவன் பக்தியினாலே ஆறு தினத்தில் சிவதரிசனமடைந்ததைத் தன்னுள்ளே எண்ணியெண்ணி ஆச்சரியமுற்றார். வேடுவனால் தனக்கும் ஈச்வர ஸன்னதி கிடைத்ததைப் புகழ்ந்து புலம்பலுற்றார். 'ஐயனே, உனதொளி கண்டபின் உற்றுன்றன் பரவெளியிற் கலந்தேன் என் கற்பகமேதேனே?' யெனத்திண்ணனார் தன்வசமழிந்து பரவசமானார். சிவபெருமானோ, 'கண்ணப்ப உன் பக்தி சிறந்தது. என் வலப்பக்கத்திலே எப்பொழுதும் இரு' என்றருளி நிஷ்டையிலமர்ந்தார். 'முற்றமுழு மணிப்பூணுக்குப் பூண்வெண்டாயாரே, அழகுக்கழகு செய்வார்?' இதைவிடக் கண்ணப்ப நாயனாருக்கு வேறு நிதி வேண்டுமோ?

இந்தியன் ஸிவில் ஸர்விஸ்:—இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள இந்தியன் ஸிவில் ஸர்விஸ் (I. C. S.) உத்தியோகஸ்தர்களின் தொகை பின்வருமாறு:—

	மொத்தம்	ஐரோப்பியர்	இந்தியர்
வங்காளம்	178	165	13
பம்பாய்	185	173	12
சென்னை	176	165	11
அஸ்ஸாம்	43	43	...
பீஹார்—ஒரிஸ்ஸா...	116	111	5
பர்மா	125	123	2
மத்யமாஹாணம் ...	97	93	4
பஞ்சாப்	150	145	5
வடமேற்கு மாகாணம்	15	15	...
ஐக்கிய மகாணம் ...	239	227	12
	1,324	1,260	64

ஆக, ஸிவில் ஸர்விஸில் 1324 உத்தியோகஸ்தர்களில், 1260 பேர் ஐரோப்பியர்கள்; மீதி 64 பேரே இந்தியர்கள்.

பண்டையோர் கற்ற முறை

OLD EDUCATIONAL METHODS

இத்தலையங்கம் ஈண்டு நமது செந்தமிழ்ச் சான்றோர் கல்வி பயின்றுவந்த வரன்முறையையும், அன்னார் அடைந்த பயனையுங் கூறுவதாகும்.

இவ்வியாசத்துட் கூறவேண்டுவன முக்கியமாய் அக்காலத்திய ஆசிரிய, மாணாக்கர்களின் தன்மை, கடமை முதலியவைகளே.

இதனுள் முதலில் ஆசிரியரைப்பற்றிச் சிறிது கூறிப் பின்னர் மாணாக்கரைப்பற்றிக் கூறி இவ்வியாசத்தைப் பூர்த்திசெய்வோம்.

ஆசிரியர் என்று பலராலுங் கொண்டாடப்படும் நிலைமையில் அக்காலத்தில ஒருவர் வருவதாயின் அவர்கள் அடியிற் காணுங் குணங்கள் தம்மிடம் இருக்கின்றனவா என்று அவசியம் தம்மைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டியவர்களா யிருந்தார்கள். அவை வருமாறு:—

சீவகாருண்யம், கடவுள் வழிபாடு, பலவகைப்பட்ட நூல்களிலேபழகிய தெளிந்த அறிவு, தம்மாற் கற்கப்பட்ட நூல்களிலடங்கிய பொருள்களை எளிதில் மாணாக்கர் அறிந்துகொள்ளுமாறு விரித்துத் தொகுத்துச் சொல்லுஞ் சொல்வன்மை, தம்மிடத்தில் இவ்வளவுதான் இருக்கிறது என்று பிறரால் அறியமுடியாத அவ்வளவு நிறைந்த கல்வியறிவின் பெருமை, சந்தேகநிவர்த்திக்காகவோ அல்லது வாதஞ்செய்து வெற்றி பெறுவதற்காகவோ தம்மை நெருங்கிக் கேட்கும் ஒவ்வொரு வினாவுக்குந் தருக்க நெறிதவறாது கோபியாமலுங் கலங்காமலும் விடையளிக்குந்திடம், மாணாக்கர் பரிகசித்தல் முதலிய குற்றங்களைச் செய்யின் அதைக் கவனியாது, "தம்மையிகழ்தமை......கடன்" என்னும் நாலடிச் செய்யுட்கேற்பப் பொறுக்குஞ்சக்தி, நெடுந்தூரத்தி லுள்ளவர்களுங் கேட்டுப் புகழ்ந்து சொல்லக்கூடிய கீர்த்தி, பொருளையே பெரிதாக நினையாது வருவாய் குறைந்தகாலத்திலுங் கல்விபோதிக்கவல்ல தாராள சிந்தை, இருவர் மாறுபட்ட காலத்தில் ஒருவர் புறஞ்சாயாது, தம் மனத்திற்கேற்ப நடுவுநிலைமை பிறழாது உண்மை உரைக்குந்தைரியம், எக்காலத்தும், எதற்குந் தம்மையே யாவரும் முதலில் விரும்பி அழைக்கவல்ல அவ்வளவு சாந்தகுணம், எப்பொழுதும் சந்தோஷமும் நிறைவுங் குடிகொண்ட மனம் ஆகிய இவைகளே.

தவிர, மாணாக்கருக்குப் பாடஞ்சொல்லப் புகுமுன் தகுதியான காலத்தையுந், தகுதியான இடத்தையும், பரிசுத்தமானதாகப் பார்த்துச், சிறந்த இடத்திலிருந்து, முதலிலே தன் வழிபடு கடவுளைத் துதித்துத், தம்மால் எவ்வளவு நன்றாய்க் கற்கப்பெற்றதாயினும் அன்றையப் பாடத்தின் பொருளை அப்பொழுதும் ஒருதரம் தம் மனத்தே காரண காரியங்களுடன் நன்கு பதியவைத்துக் கொண்டு, விரைவாயுங், கோபத்தோடுஞ் சொல்லானுகிப், பிரியத்துடன் மலர்ந்தமுகத்தோடு மாணாக்கர் எளிதிலே தெரிந்துகொள்ளுமாறு, மாறுபாடில்லாத மனதோடு கூறுதலும் அவர்கள் வழக்கமாயிருந்தது.

இனி, மாணாக்கரைப்பற்றிச் சிறிது கூறுவோம். ஒவ்வொருவருக்கும் தன் மகன், ஆசான் மகன், அரசன் மகன், பொருள் மிகுதியுங் கொடுத்துப் பாடங்கேட்போன், தாம் சொன்னவற்றை விரைவில் மனத்திற் பதித்துக்கொண்டு மறவாதிருக்கும் அறிவுடையோன் ஆகிய இவர்கள் மாணாக்கராவார்கள்.

இம்மாணாக்கர்களும், ஆசிரியராற் சொல்லப்படும் பொருள்களிலுள்ள குணத்தையுங் குற்றத்தையும் வேறுவேறாகப்பிரித்துக் குணத்தை மாத்திரங் கைக்கொள்ளுதலும், மிக்க கல்வியறிவுடைய ஒரு நல்லாசிரியனைக் கண்டால் அவரிடங் கற்கக்கூடியவற்றைக் கற்றுப்பின்பு ஓரிடத்துப் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற்குக் கொண்டுவந்து சிந்தித்து அவற்றை என்றும் மறவாது தம் மனத்திலே நிலைநிறுத்திக்கொள்ளுதலுமாகிய உத்தம குணமுடையவர்களாயிருக்க வேண்டுமென வரையறுக்கப்பட்டிருந்தது.

அன்றியும், முற்கூறிய நற்குணம் வாய்ந்த ஓர் ஆசிரியரிடம் மாணாக்கர் தத்தமக்குப் பாடஞ்சொல்லுவதற்கென்று குறிப்பிட்ட காலத்திற் சென்று, அவருக்குச் செய்ய வேண்டிய வழிபாடுகளில் ஒரு சிறிதுங்குறையாது, வெறுப்பின்றிச் செய்து, அவரது குணத்தோடு பழகிக், குறிப்போடு சேர்ந்து,

உட்காரு என்று சொன்னபின்னர் உட்கார்ந்து, பாடத்தைப் படியென்று சொன்னதின்பின் படித்துப், பசித்தவன், பசிதீர அன்னத்தை எவ்விதம் விரும்பி வாயால் உட்கொள்வானோ, அவ்விதமே தமது புலமை நிரம்புதலாகிய பசிதீர, ஆசிரிய வசனமாகிய அன்னத்தைக், காதாகிய வாயினால் உட்கொண்டு, தாம் ஆசிரியரிடங் கேட்டவற்றை மறந்துவிடாது மனத்திலே நிறைத்துக்கொண்டு, அவர் உத்தரவு கொடுத்த பின்னே போகுதலென்றும் வரையறுக்கப் பட்டிருந்தது.

நிற்க, இவ்விதம் பாடங்கேட்ட மாணாக்கர்கள் அம்மட்டோடு நின்றுவிடாது, உலக வழக்குச் செய்யுள்வழக்கு ஆகிய இருவகை நடையினையும் அறிந்து, தம்மால் முன் கற்கப்பட்ட மூலபாடங்களையும் மறவாது பயின்று வந்ததோடு, அவைகளுக்குத் தாம் தமது ஆசிரியர்பாற் கேட்டபொருள்களைப் பலகாற் சிந்தித்துச் சந்தேகம் நேர்ந்த காலத்து மீண்டும் அவைகளை ஆசிரியரை அடுத்துக்கேட்டுத் தம் மனத்தையே பொருந்தும்படி செய்துகொண்டு, தம்மோடொத்த மாணாக்கர்களாகியதோழர்களோடு பழகி,அங்கு வினாவியும், விடையளித்துந் தத்தமக்கு நேர்ந்த ஐயங்களை நீக்கிக்கொண்டு தாம் அறியாமையினின்றும் நீங்கிப் பின்னும் சின்னாள் இவ்வாறு பழகிக் கடைசியாகத் தாங்கற்றவற்றைப் பிறருக்குப் போதித்துத் தமது புலமையை நிறைத்துவந்தார்கள்.

இத்துணையுங் கூறியவாற்றால் நமது பண்டைச்செந்தமிழ்ச் சான்றோர்கற்ற முறைமை ஒருவாறு பூர்த்தியாகுமாயினும் அவர்கள் எப்புத்தக வரிசையாகக் கற்றுவந்தார்களென்பது இங்கு கூறப்படில் அது மிகையாகாது. அன்னார் முதலில் (நிழ்க்கணக்குக் கற்றபின்) ஆத்திசூடி போன்ற சிறுவாக்கியங்களடங்கிய அறிய நூல்களைக் கற்று ஒருவாறு நாக்குப் பழகியபிறகு சிறிய நூல்களைக் கற்று அப்பால் எந்நூற்பொருள்களையும் எளிதிற் சந்தேகமறத் தெரிந்துகொள்ளச் சாதகமாகும்பொருட்டு நிகண்டு போன்ற நூல்களைக்கற்றுப் பிறகு காலத்திற்கும், படிப்போர் மனத்திற்கும் ஏற்பச் சிற்றிலக்கியங்களாகிய பிரபந்த முதலிய நூல்களையும், பின்னர், பேரிலக்கியங்களையுங் கற்று அதன்பின்னரே இலக்கணங் கற்று வந்தார்கள். இங்குப் பண்டைக் காலப்படிக்குந் தற்காலப் படிக்குமுள்ள வித்யாசங் கவனிக்கத்தக்கது.

இவ்விதம் அன்னார் கற்றுவந்ததால் அவர்கள் படித்த ஒவ்வொரு நூலிலுள்ள கருத்துக்கள் மூலபாடத்தோடு மறவாத நிலையில் மனத்திலே தங்கிவிடுகின்றன. அதனால் அவர்கள் எந்த சமயத்திலும் எவ்விஷயத்தைப்பற்றியும் பயமின்றிப் பத்துவகைக் குற்றமுஞ் சேராது, பத்துவகை அழகும் பொருந்தச் 'சொல்வன்மை' என்ற அதிகாரத்துள் நாயனார் சிறப்பித்துக் கூறியவண்ணம் பலர் முன் விரித்துக் கூறுந்திறமையுடையவர்களானார்கள். அவர் வழியைப் பின்பற்றின், என் பெருமை வாராது போகும்? பின், வழிபடாதிருப்பதெதனாலோ?

ஜில்லாபோர்டுகளுக்குக் கிராண்டுகள்—1916-17-ம் வருஷத்திற்காக மாகாண கவர்ன்மெண்டார், ஜில்லா போர்டுகளுக்குக் கீழ்க்கண்டபடி கிராண்டுகள் கொடுத்திருக்கிறார்கள்.

போர்ட்கள்	தொகைகள்
அநந்தபுரம்	22,793
வட ஆற்காடு	56,358
தென் ஆற்காடு	73,600
பல்லாரி	25,769
தென் கன்னடம்	1,13,425
செங்கற்பட்டு	49,682
சித்தூர்	42,405
கோயம்பத்தூர்	56,589
கடப்பை	26,371
கஞ்சம்	83,060
கோதாவரி	1,00,591
குண்டூர்	94,941
கிருஷ்ணா	1,54,874
கோராபட்டு	10,091
கர்நூல்	36,068
மதுரை	50,582
மலபார்	1,48,530
நெல்லூர்	70,978
நீலகிரி	3,150
ராமநாதபுரம்	51,938
சேலம்	43,396
தஞ்சாவூர்	81,901
திருநெல்வேலி	60,764
திருச்சினாப்பள்ளி...	57,172
விசாகப்பட்டணம்	86,329
மொத்தம் ரூ.	16,04,357

ஐக்கிய சங்கங்கள்

CO-OPERATIVE SOCIETIES

இம்மாதிரியான மஹாநாடு கூடுவதால் ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிக்கொள்ளவும், ஒரு சங்கத்தார், அநுபோகத்தால் தெரிந்துகொண்ட விஷயங்களை மற்ற சங்கத்தாரும் கேட்டுத்தெரிந்துகொண்டு பயனடையவும் ஒரு சமயம் ஏற்படுகிறது. ஆதலால், அவரவர் சங்கங்களில் உண்டான சிரமங்களையும், ஏற்பட்ட இடையூறுகளையும், அவைகளை நீக்கிய விதத்தையும்பற்றி இச்சபைக்கு முன்பாகச் சொல்லுவீர்களென்று நம்புகிறேன்.

இம் மஹாநாட்டிற்கு வருவதால், நமக்கு ஒரு ஊக்கமும் உற்சாகமும் உண்டாகி, அவரவர் சம்பந்தப்பட்டிருக்கும் சங்கமானது அடுத்த வருஷத்துக்குள் சிறிதேனும் விருத்தியடையும்படி முயற்சிசெய்யத் தூண்டுதல் ஏற்படுகிறது. சங்க அங்கத்தினர்களின் சங்கியையை அதிகரிப்பதும், டிபாஸிட்டுகளும் மூலதனமும் பெருகுவதும் மாத்திரமே சங்கம் விருத்தியடைந்ததற்கு அடையாளமன்று. எந்தக் காரியத்துக்காகக் கடன் வாங்கப்பட்டதோ, அந்தக் காரியத்திற்கே அந்தப்பணம் செலவாகும்படிக் கவனித்து, ஒவ்வொருவனும், சொன்ன சொல்லுக்கு மாறாக நடக்காதபடிச் செய்யவேண்டும்; குறித்த தவணையில் வட்டியையும்,முதல் முழுமையும் அல்லது ஒரு பாகத்தையும் செலுத்தும்படிச் செய்வதால் காலந்தவறாது காரியங்கள் செய்யும் பழக்கத்தை உறுதிப்படுத்தவேண்டும்; தகுந்த காரணங்களின்றி கெடுத் தள்ளிக்கொடுக்காமல், எல்லோருக்கும் ஒழுங்கான பழக்கங்கள் படியும்படிச் செய்யவேண்டும். கடன் வாங்கிக் கடனடைக்காமல், கஷ்டப்பட்டு சம்பாதித்ததிலிருந்து மீத்து ஒவ்வொருவனும் தனது கடனடைக்கும்படிச் செய்து செட்டை விருத்திசெய்யவேண்டும். உங்களில் ஒவ்வொருவருக்கும் சங்கத்துடன் ஐக்கியபாவம் உண்டாகி, சங்கத்தினது லாபநஷ்டங்களை உங்களுடைய சொந்த லாபநஷ்டம் போல் உணரவேண்டும். தவறாமல் சங்கத்தின் கூட்டங்களிற்குச் செல்வதாலும், நடவடிக்கைகளைக் கவனத்துடனும் ஒற்றுமையுடனும் நடத்துவதாலும், அவ்வுணர்ச்சியைக் காட்டலாம். ஒவ்வொரு மெம்பரும், மற்ற ஒவ்வொரு மெம்பரின் க்ஷேமத்தைத் கருதவேண்டும். மனஸ்தாப முண்டாகும்படிக் குறுக்கிடாமல், நல்ல வார்த்தை சொல்லி ஒருவரையொருவர் நேர் வழிகளில் செலுத்த வேண்டும். அவசியமானால், பஞ்சாயத்தாருடைய உதவியினாலாவது அவ்விதம் திருப்ப வேண்டும். பஞ்சாயத்தாரை நியமிப்பதில் திறமையும், பிறர் நன்மையைத்தேடும் குணமும், நிர்வாக சாமர்த்தியமும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நானிப்பொழுது கூறியவைகள் உங்கள் மனதிற்பதிந்து உங்கள் சுபாவமாய் அமைந்து விடவேண்டும். உங்களுடைய தினசரி வாழ்க்கையில் அவைகள் வெளியாகவேண்டும். ஐக்கியம் பரப்ப விரும்பும் ஒவ்வொருவனுக்கும் நான் சொன்னவை இன்றியமையாதவை; அதிலும், இக்காரியத்தில் முதல் செல்பவர்களாயிருக்கும் உங்களுக்கு அவைகள் அத்தியாவசியம்.

உங்களருகில் வசிப்பவர்கள் தங்களுக்கும் உங்களதுபோல் ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று தாமாகக் கேட்டுக் கொள்ளுதலே, உங்கள் முயற்சி பலித்ததற்கு அடையாளம். ஐக்கிய உணர்ச்சி இவ்விதமே பரவவேண்டும். அதிகாரிகளின் நிர்பந்தத்தாலேயோ, ஆத்திரக்காரர்களுடைய தூண்டுதலாலேயோ இங்கு ஒரு சங்கம் அங்கு ஒரு சங்கமாகக் கிளப்புவது பிரயோஜன மில்லையென்பது எனது அபிப்பிராயம். ஒவ்வொரு சங்கமும் தன்னைப் போல் இன்னும் ஒருசங்கம் ஏற்படக்காரணமாய் நின்றால், இப்பொழுதிருக்கிற 68 சங்கங்கள் அடுத்த வருஷம் இரண்டு மடங்காய்விடும். இந்தக் கணக்குப்படி நான்கு வருஷங்களில் 1,000 சங்கங்கள் ஏற்பட்டுவிடும். பின்பு செண்ட்ரல் பாங்கி புறட்டக் கூடிய பணத்தின் வரம்பினாலேயே,புதுச்சங்கங்கள் உண்டாவதற்கும் வரம்பு ஏற்படும்.

* Translation of a speech by the Hon'ble Rao Bahadur V. K. Ramanujachariar, at the Tanjore District Co-operators' Conference.

போட்டியிட்டு முன் செல்லுவதையே இலக்ஷியமாகக் கொண்டது தற்கால நாகரீகம்: ஆனால், இப்பொழுது நடக்கும் மஹா யுத்தம் முடிந்தபிறகு, இனி எழப்போகும் நாகரீகத்தில் ஐக்கிய உணர்ச்சியே வாழ்க்கையின் தர்மமாக ஏற்படும். எடுத்த கருமம் முடித்தல், மனதை ஒருவழி நிறுத்தல், பெருங்காரியங்களைத் தொகுத்துச் சீராயும் செம்மையாயும் செய்துமுடித்தல், இது போன்ற இதுவரைக் கற்றதான குணங்கள் சிறக்கும் (?); ஆனால் அவ்விதத் திறமைகள் பலரை நசுக்கிச் சிலர் ஐசுவரியத்தில் புரளும் வண்ணம் உபயோகப்படாது, இன்னும் மேன்மையான வழிகளில் பயனளிக்கும். வலியுள்ளோர் வலியற்றவர்களைத் தாங்குவர்: அறிவினர் அறிவில்லாதவர்களுக்கு அறிவுபுகட்டி நடத்துவர்; தனமுள்ளவர்கள் ஏழைகளை இரட்சித்து அவர்கள் துன்பத்தைக் குறைப்பர். இவ்விதக் கொள்கைகளை முதலில் ஏற்றவர்களாதலால் நீங்கள் அவைகளை அநுபோகத்திற்குக் கொண்டு வருவதற்கு இடையறாது முயலவேண்டும். ஐக்கிய உணர்ச்சி எல்லாப்பக்கமும் பரவும்படிப் பாடுபடவேண்டும். உங்கள் சங்க மெம்பர்கள் எல்லோரும் ஒருமாதத்துக்கு வேண்டிய பொருள்களை அண்டைப் பட்டணத்திலிருந்து மொத்தத்தில் வாங்கி, சிறுகச் சிறுக மெம்பர்களுக்குக் கொடுக்கலாம். ஒரு கிராமத்தில் பலசரக்குக் கிடங்கு ஒன்று ஸ்தாபிப்பதைக் காட்டிலும், இது சுலபமாயிருக்கும். திருத்துறைப்பூண்டியிலுள்ள நட்பு நண்பர்கள் இம்மாதிரி மொத்தத்தில் வாங்கிப் பிரித்து எடுத்துக்கொள்ளும் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நிலம் வைத்துக்கொண்டிருக்கும் மெம்பர்களின் உபயோகத்துக்காக இம்மாதிரியே, விதை, எரு, கலப்பை முதலிய ஆயுதங்கள், இவைகளும் வாங்கலாம். இதுவே பலர்கூடிப் பொதுவாய்ப் பயனடையும் வழி.

மேற்சொன்ன விஷயங்களைக்காட்டிலும், பிள்ளைகள் பெண்களின் கல்வி, இன்னும் அதிகமாய்க் கவனிக்கத்தக்கது. அதற்குப் பணம்பெற்ற கட்டிடம் வேண்டாம்; நமது பண்டைக்கால வழக்கப்படி ஒரு திண்ணையிலேயே பள்ளிக்கூடம் இருக்கலாம். சம்பளமுள்ள உபாத்தியாயர்கூட வேண்டாம்; நீங்களே ஒழிந்த வேளைகளில் ஒரு நாழிகை இரண்டு நாழிகை பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம். உங்கள் வீட்டு ஸ்திரீகளுக்குக் கல்விப்பயிற்சி யிருக்கும்படிச் செய்திருந்தால், இக்காரியத்தை அவர்கள் வெகு சந்தோஷத்துடன் செய்வார்கள். உபாத்திமைத் தொழில் உங்களுக்குத் தகாததென்று எண்ணுகிறீர்கள். அதைக்காட்டிலும் மேன்மையான தொழில் வேறொன்றில்லை. அதுவின்றி மநுநூல்படிப் பிராமணனுக் குரித்தாய் ஏற்பட்ட வேலை. நமது கிராம விவசாயிகளுக்கு விட்டுவிட்டுத்தான் வேலையிருக்கிறது. தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய சாதாரண மோட்டாத் துணிகளைத் தாங்களே ஒழிந்த நேரங்களில் நெய்யக் கற்றுக்கொண்டால், அவர்களுக்கு எவ்வளவு லாபமாயிருக்கும்? விவசாயிகள் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு பையனுக்கும், சாதாரண ஆயுதங்களை உபயோகிக்கத் தெரியவேண்டும். அப்படிக் கையாடத் தெரிந்தால், சிறு காரியங்களுக்குக்கூடத் தச்சனுக்கும் கொல்லனுக்கும் காத்துக்கொண்டிராது, தாங்களே செய்துகொள்ள முடியும். வாய்க்கால்வெட்டு, கிராம வேலைக்காரர்களிடம் வேலை வாங்குதல், முதலிய சமுதாயக் காரியங்கள் சரிவர நடைபெறும்படிச் செய்யுங்கள். எதையும் கூட்டுக்காரியமாகச் செய்வது மேன்மையென் றெண்ணுங்கள். கூடியமட்டில் கிராமத்திலுண்டாகும் விவஹாரங்கள் வெளியில் செல்லாது பஞ்சாயத்தார்களே தீர்த்துவிடும்படியான முயற்சி செய்யுங்கள். சிறிது, பெரிது எல்லாவற்றிற்கும் கோர்ட்டுக்குப் போய் கட்சியாடும் துர்க்குணமே நம் தேசத்தைப் பாழாக்குகிறது; அது அடியோடு தொலைய வேண்டும். யோக்கியதையுள்ள எவனையும், அவன் பஞ்சமனாயிருந்தாலும் சரி, உங்கள் சங்கத்துக் கழையுங்கள். எல்லாருக்குள்ளும் மேல் கீழின்றிச் சகோதர பாவம் இவ்விதமே பரவவேண்டும். உங்களில் படித்தவர்கள், இரவில் படுக்கைக்குப் போகுமுன், படிக்காதவர்களுக்கு இரண்டு நாழிகையாவது ஏதாவது ஒரு நல்ல விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறதென்று வைத்துக்கொண்டால், தாழ்ந்த ஜனங்கள்

எவ்வளவு நன்மையடைவார்கள்? அதுவும் சாத்தியமா என்று பாருங்கள்.

நான் ஏதோ சிறிது காட்டிய மார்க்கங்களில் நீங்கள் ஐக்கியச் செய்கைகளைக் கைக்கொண்டால், பிரஹ்மம் ஜகத்தை வியாபித்திருப்பது போல், உங்கள் வாழ்க்கையில் ஐக்கிய உணர்ச்சியும் வியாபித்திருக்கும். உங்களைச் சூழ்ந்துள்ள காற்றிற்கூட அவ்வுணர்ச்சியும் நிரம்பியிருக்கும். உங்கள் நினைப்பு, பேச்சு, செய்கை எல்லாவற்றிலும் அது கலந்திருக்கும். பின்பு உங்கள் கிராமம் பலரும் கொண்டாடக்கூடிய நிலையையடையும். இப்படிப்பட்ட கிராமங்கள் பல ஏற்பட, தாலுகாவும் ஜில்லாவுமே அவ்வுணர்ச்சி பரவிப் பரிமளிக்கும். நமது மாகாணமும் தன் காரியத்தைத் தானே நடத்திக்கொள்ளும் பெருமையை அடையும். நம் இந்தியாவும், பிரிட்டிஷ் அரசின் கீழுள்ள ஸ்வாதிபத்தியம் பெற்றுள்ள மற்ற நாடுகளுக்குச் சரிசமனான ஸ்தானத்தையடைந்து கௌரவம்பெற்று விளங்கும். இது சாத்தியமில்லையென்று நினைக்கிறீர்கள்?

நண்பர்காள்! முடிப்பதற்குமுன் சந்தோஷக்காரியம் நான் செய்ய வேண்டியதொன்றிருக்கிறது. அநேக சங்கங்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்தல் சிரமசாத்தியமென்றுணர்ந்து, இந்த ஜில்லாவில் தனிகர்களான வாத்திமர்களிடம் பொருட்சகாயம் விரும்பி, அவர்கள் செய்வதாக ஒப்புக்கொண்டதன்பேரில், சென்ட்ரல் ஜில்லா பாங்கியொன்று ஸ்தாபித்தோம். அந்தப் பக்கத்திலிருந்து நாங்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறவில்லை; ஆயினும் நான் ஒருவர் பேரிலும் குற்றங்கூறவில்லை. அவர்கள் லேவாதேவி செய்தலில் சமர்த்தர்கள்; பாங்கி நடக்கும் விதத்தைக் கொஞ்சகாலம் பார்த்துத் தெளிந்துகொண்டு பின்புதான் புகுவார்கள். பாங்கி இரண்டு வயதுதான் ஆன ஒரு குழந்தை; காலக்கிரமத்தில் நாங்கள் முதலில் எதிர்பார்த்த உதவி வருமென்றே நம்புகிறேன். இதற்குள் இவ்வூர் யூனியன் பாங்கியும், தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் போர்டும், நம்மைத் தாங்க முன் வந்திருக்கின்றன. யூனியன் பாங்கி, நாங்கள் போட்டிருக்கிற பணத்திற்குமேல் ஐம்பதினாயிரம் ரூபாய் வரையில் அதிகப்படியாக கேட்டு வாங்கிக்கொள்ள சம்மதித்திருக்கின்றனர். டிஸ்டிரிக்டு போர்டார் ஸ்திரமான டிபாஸிட்டாக ஒரு லட்சம் ரூபாய் எங்களிடம் வைத்திருக்கின்றது. யூனியன் பாங்கி டைரக்டர்களுக்கும், டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்களுக்கும் நாம் நன்றிசெலுத்தப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். ஜன நன்மையைத் தேடுபவரும், ஜனங்களால் வாழ்த்தப்படுபவருமான நமது கலக்டரவர்கள் இங்கு விஜயம் செய்திருப்பது, உங்களுக்கு முன்னிலையில் அவருக்கு நான் வந்தனம் செய்யவும் இந்த சந்தோஷகரமான வேலையில் நீங்களும் சேர்ந்துகொள்ளவும் இடங்கொடுக்கிறது.

வங்காளத்தில் கல்வியபிவிருத்தி.—1913-14-ம் வருஷத்தில் லோயர் ப்ரைமரி பாடசாலைகளின் தொகை 31,105. குழந்தைகளின் தொகை 10,06,981. 1914—15-ம் வருஷத்திலோ, அப்பாடசாலைகளின் தொகை 3?,728; குழந்தைகளின் தொகை 10,45,948 அப்பாடசாலைகளின் அபிவிருத்திக்காக உபாத்தியாயர்களின் சம்பளத்தை உயர்த்தினதில் செலவானது ரூ.5,07,832. பெண் கல்வியும், பல வழிகளில் விருத்தியடைந்திருக்கிறது. 1913—14-ம் வருஷத்தில் 7,573 பாடசாலைகள் இருந்திருக்க, 1914—15 வருஷத்தில் 8,268 பாடசாலைகளிருக்கின்றன; 1913-14-ம் வருஷத்தில் 2,30,729 பெண்கள் படித்திருக்கிறார்கள். 1914-15-ம் வருஷத்திலோ 2,47,971 பெண்கள் படித்து வருகின்றனர். பாடசாலைகளில் படிக்கும் முகமதியப் பெண்களின் தொகையும் அதிகரித்திருக்கிறது. சில பெண் பாடசாலைகளை, வித்தியா இலாகா அதிகாரிகள் தங்களுடைய செலவில் பஞ்சாயத்து சபைகளின் மேற்பார்வையிலும், சிலபாடசாலைகளை வீடுகளுக்குள்ளேயே படித்த ஸ்திரீகளின் மேற் பார்வையிலும் வைத்து பரீக்ஷார்த்தமாகப் பார்த்து வருகிறார்கள். கீழ் வங்காளத்தில், பெண்பாடசாலைகளில் பெண்களின் தையல் வேலை, மிகவும் விருத்தியடைந்திருக்கிறது.

***

திருப்பனந்தாள்.— காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சிவபக்தியிற் சிறந்த ஒரு பெண்மணியார் தாம் தொடுத்த மாலையை இங்குள்ள சிவபெருமானுக்குச் சாத்தப்போனபோது தமது ஆடை நெகிழ, அதனை இரண்டு முழங்கைகளாலும் இடுக்கிக் கொண்டு திருமாலைத் தொண்டுக்கு இடையூறு நேர்ந்ததே யென்று நோவ, சிவபெருமான் தமது திருமுடியைச் சாய்த்து மாலை யேற்றுக்கொண்ட ஸ்தலம். குங்குலியக்கலயநாயனார் தமது கழுத்திற் கயிறு பூட்டியிழுக்க நிமிர்ந்தது இந்த லிங்கமே.

ஸ்நேஹலதா

SNEHALATHA

கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே.

ஆ! இவ்விஷயம் நடந்து எவ்வளவோ நாட்கள் ஆகின்றன. ஆயினும் இப்பொழுதுதான் நடந்ததுபோல் என் மனத்தின்கண் ஒரு வீராவேசமும் அடக்க முடியாத கோபமும் உண்டாகின்றன. நண்பர்காள்! என்ன? தூங்குகின்றீர்களா? கண்ணைத்திறந்து விஷயத்தை நன்றாய்ப் பார்த்தறியவில்லை போலும்!

நம்மில் ஒருத்தி நமக்குப் புத்தி புகட்டவென்றே செய்த காரியத்தைப் பெரிய பெரிய பரிக்ஷைகளில் தேர்ச்சியடைய வேண்டி அவைகளில் மனதைச். செலுத்தித் தேர்ச்சி யடையும் உங்களுக்கு இவ்விஷயத்தை அறிந்துகொள்ள முடியவில்லையா? ஊக்கமிருந்தாலல்லவோ மனது அதிற் செல்லும்?

நம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர எண்ணங்கொள்ளாத உங்களுக்கு உங்கள் பெரிய பரிக்ஷைகள் எல்லாம் யாது பயனைத் தரப்போகின்றன? நம்மவர் படும் கஷ்டத்தைத் தீர்க்கவழி தேடுகின்றீர்கள் இல்லை. பெரிய பெரிய பரிக்ஷைகளில் தேறி மூட்டை மூட்டையாய்ப் பணம் தேட வழி தேடுகின்றீர்கள். உங்கள் பணம் உங்களுக்குப்பிறகு யாது பயனைத் தருமோ? உங்கள பணமும் உங்கள் பட்டங்களும் உங்கள் பின்னோடு வருமா? புண்ணிய பாவந்தானே கூடவரும்.

நம் உத்தமி இறந்தான இரண்டு மூன்று தினங்கள், தினப் பத்திரிகைகளும், வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் இம்மாதிரி இருக்கக்கூடாது, அம்மாதிரி இருக்கக்கூடாது என்று பற்பல விதமாய்ச் சரமாரி பொழிந்தாற்போற் பொழிந்தன. அதன் பிறகோ அவ்விஷயத்தைப் பற்றி ஏதேனும் நடைபெறும்.என்று எண்ணி எண்ணி ஏமாந்தேன். பத்திரிகைகளைப் பார்த்துப்பார்த்துக் கண்களும் பூத்துப்போயின. ஒன்றும் நடைபெறவில்லை.

நம் சகோதரி தன் உயிரை மாய்த்தனளே வீணாகவா மாய்த்தனள்? நம்மிந்திய மாதா, தன்னொருத்தி மூலமாகவேனும் தன் மற்றைக் குழந்தைகளுக்குப் புத்தி புகட்டி அவர்களுக்குள்ள குறையைத்தெரிந்துகொள்ளும்படிச் செய்யட்டும் என்றுதானே செய்தனள். அவள் இறந்ததுதான் மீதி. வேறு ஒன்றுமே நடக்கவில்லை. மரித்தவர் அந்திமொழியை நிறை வேற்றுதல் இருப்பவர் கடமையல்லவா? இல்லாவிடில் பெருத்தபாபமாயிற்றே. அவள் மனத்திற்கொண்ட எண்ணம் நிறைவேருமற்போனால் அவளுக்கென்ன கெடுதி. ஒன்றுமில்லை. விண்ணவர் வாழ்த்த அங்கும் கியாதிபெற்றிருப்பாள். நமக்கோ? என்ன? பழி மலைபோலக் குவியும்., பெண்வதை விண்போமா? எவ்விதக் கொலைகளிலும் ஸ்திரீ ஹத்தி மிகவும்கொடியதென்று நம்நாட்டு நூல்கள் ஏடுகளாகிய நாக்குகளால் முறையிடுகின்றனவே.

ஆ! நண்பர்களே! வெகுகாலமாக நம்மிடத்துக் குடிகொண்டிருந்து வந்த ஈச்வரபக்தியும் பழைய நூல்களில் வைத்திருந்த நம்பிக்கையும் குறைந்து இருள் மூடிக்கொண்டதோ? பல நாட்டார்களும் நாம் ஈச்வர பக்தியுடையவர்கள், சாஸ்திர நம்பிக்கை கொண்டவர்கள் என்று அடிக்கடி சொல்லக்கேட்டுக்கேட்டு இறுமர்ப்படைந்து அவைகளில் இருக்கும் நம்பிக்கை, தானாகவே பறந்தோடிப்போயிற்றோ? ஆ! தெய்வமே! இதுவும் என்ன? கலிகாலக்கொடுமைதானோ?

நண்பர்காள்! தூக்கத்தினின்றும் எழுந்திருங்கள்! கண்ணைவிழித்துத் துடைத்துக்கொள்ளுங்கள். நம் ஸ்நேஹலதாவை உருவப் படுத்திக்கொள்ளுங்கள். இதோ லதா, ஒரு சிசுவாக இருந்து வளர்ந்து வருகிறாள். கோடி சூரியர்கள் சேர்ந்து உதயமானாற் போன்ற முகமும் செக்கச்செவேலென்று ரோஜா விதழ்போன்ற கன்னத்தின் கதுப்புக்களும், இருண்ட விழிகளும், மருண்ட பார்வையும், பற்றுக்கொம்பைத் தழுவும் லதைகளைப்போல் மூன்று பக்கங்களிலும் முகத்தைத்தழுவும் கேசமும், பால் மணமருது வீசும் வாயும், கொவ்வைக்கனியைப்பழித்த உதடுகளும் எவ்வளவு கம்பீரமாய்ப் பிரகாசிக்கின்றன பாருங்கள்!

பக்கத்தில் யாரோ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களே 'யார்? நம் சகோதரியின் தாயே. அவள் அச்சிசுவைக் கட்டியணைத்து முத்தமிட்டு உச்சிமோந்து தலைவாரித் திலகமிட்டு, பால் ஊட்டிவளர்ப்பதைப் பாருங்கள். அதோ பாருங்கள் அவள் தந்தையை. தன் குழந்தைக்கென்றே வெளியிலிருந்து வீட்டுக்கு வருகையில் மிகவும் அபூர்வமான தின்பண்டங்களையும் நல்ல பரிமளமுள்ள புஷ்பங்களையும் வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு வருகிறார்.

இப்போது லதாவைப் பாருங்கள். அதிக விலையுயர்ந்ததா யில்லாமற் போனாலுங்கூட மிகவும் பரிசுத்தமான பாவாடை யொன்றைத் தரித்துக்கொண்டு ஸ்வர்ணவிக்கிரஹம்போல் விளங்குகின்றாள்.

இப்போதோ முன்னிலும்விட அதிக நேர்த்தியான உடைதரித்துஒரு தேவகன்னிகைபோலவே காணப்படுகின்றாள். இதோ வெளியில் போகின்றாளே, எங்கே போகின்றாள் என்று நீங்கள் கேட்கலாம். தங்கள் குலதெய்வமான அம்பிகையை தரிசனம் செய்ய வெண்ணிப் போகின்றாள். அவள் எவ்வளவு வணக்கத்தோடும், பயபக்தியோடும் போகின்றாள் என்பது அவள் முகத்தைப் பார்த்தளவில் நன்றாய்ப் புலப்படவில்லையா? அவள் அம்பிகை தரிசனம் செய்கையில் அவள் மார்பு படபடவென்று அடிப்பதையும், அவள் .கண்களினின்றும் நீர்த்துளிகள் முத்து முத்தாய் அரும்புவதையும் நீங்கள் கவனிக்கவில்லையா? அவள் அவ்வித மாறுதல்களடையக் காரணம் என்ன? அவள் பக்தியோ? வேறு ஏதேனுமோ?

வீட்டுக்குத் திரும்பின வுடனே அவள் எவ்வளவு சிரத்தையோடு வீட்டுவேலைகளைத் தன் தாய்க்குதவியாகச் செய்கின்றாள்? எவ்வளவு ஒழுங்கு பெறவும் செய்து முடிக்கின்றாள்? வீட்டு வேலை செய்து முடித்ததும், ஊரிலுள்ள பெரியவர்கள் சொல்லும் புராணங்களை எவ்வளவு ஊக்கத்தோடும் பயபக்தி யோடும் கேட்கின்றாள். சற்று உற்று நோக்குங்கள் அவள் முகத்தை. என்ன தேஜஸ் விளங்குகின்றது. அவ்விடத்தில் எவ்வளவோ பேர்கள் புராணங் கேட்கின்றார்களே, அவர்கள் முகத்தையும் பாருங்கள். அவர்களுக்கு மிவளுக்குமுள்ள வித்தியாஸம் நன்றாய் வெளிப்படும்.

ஆ! இப்போது பாருங்கள் லதாவை. முன்போலல்ல. யௌவன பருவமடைந்திருக்கின்றாள். இவளுக்குத் தகுந்த நாயகன் எவ்விடத்திலுளனோ? சை! இவளை நரமனிதனா விவாகம் செய்துகொள்ளத் தக்கவன்? அவ்வளவு காந்தியோடிருப்பினும் அவள் முகத்தைப் பார்த்தளவில் ஏதோ வியாகூலம் அவள் மனத்திற் குடிகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது? அகத்திலுள்ளது முகத்தில் தெரியுமல்லவா? வரவர அவ் வியாகூலம் அதிகமாகிக்கொண்டே வருகிறதே. என்ன வியாகூலம்? அவளைப்போன்ற அவ்வளவு யௌவன பருவமுள்ள ஒரு கன்னிகைக்கு என்ன வியாகூலம் நேரிடலாம்? விவாகத்தைப்பற்றிய வியாகூலமே. தனக்குத் தக்க நாயகன் எவனோ? தாயும் தந்தையும் தரித்திரதசையை அடைந்தவர்களாயிற்றே. ஏற்கெனவே தன் தமக்கைகளையெல்லாம் விவாகம் செய்துகொடுத்து அதனால், கை சளைத்து நிற்கும் காலத்தில் அவர்கள் தனக்கும் ஏற்ற நாயகனைத் தேடியலைந்து கஷ்டப்பட தாய் தந்தையருக்கு இடம் வைத்துவிட்டனளே. பெற்றோர்களுக்குக் குழந்தைகள் உபகாரம் செய்யவிருக்கத், தான் அப்படிக்கின்றி அவர்களுக்குத் துன்பம் உண்டாக்க மூலாதாரமாய் வந்தனளே, என்று எண்ணி யெண்ணி அவள் அடைந்த வருத்தந்தான்.

தாய் தந்தையரோ, தம் பெண் லதா, தன் கண்களைப் பிசைந்துகொண்டு ஒருவனிடம் நிற்காதபடி தகுந்த இடத்தில் விவாகம் செய்து கொடுக்கவேண்டும் என்று எண்ணங் கொண்டு, தங்கள் சிரமத்தைக் கொஞ்சமும் பாராட்டாமலும் தங்கள் தரித்திர தசையை லதாவறியச் சொல்லாமலும், தகுந்த நாயகனைத் தேடி பலமாதங்கள் திரிந்தார்கள். ஒருவரும் அவளை மணந்துகொள்ள முன்வரவில்லை. அவளை யடையத் தக்க பாக்கியம் செய்திருந்தாலல்லவோ கிட்டுவர்? இவ்விஷயங்களனைத்தையும் தாய் தந்தையர்களுக்குத் தெரியாமலேயே உற்றுக் கேட்டறிந்த லதா, தாய் தந்தையர்

படும் துன்பத்திற்கு மிகவும் வருந்தி, அதை வெளிக்காட்டாமல், வீட்டு வேலையைச் செவ்வனே முடித்து, அம்பிகையைத் தரிசனம் செய்து,வீட்டுக்குவந்து நல்ல உடை தரித்துப் பொழுது போகும்வரையும், சௌக்கியமாயிருந்தனள்.

யாரிட்ட சாபமோ? உலகத்தாருக்குப் புத்தி புகட்டத்தானோ? வேறு யாது காரணமோ? பூவுலகில் வேறு ஒருவரும் மணக்காததினால் தேவருள் ஒருவரான அக்கினி பகவான் இவளிடம் இச்சை வைத்து, இவளை மணந்துகொண்டார்.

ஆ! சொல்லும்போதே வாய் பதறுகின்றது. நா குழறுகின்றது. கண்கள் நீரைப் பெருக்குகின்றன. நேரில் பார்த்தால் எப்படிச் சகிப்பதோ. நண்பீர்! கொஞ்சமேனும் இரக்கம் வரவில்லையா? உங்கள் மனம் என்ன? கல்லோ—கருங்கல்லோ—இரும்போ! அல்லது அதைவிட மிகவும் கடினமானவஸ்துவினால் ஆக்கப்பட்டிருக்கிறதோ? உஷ்ணத்தினால் உருகாத வஸ்துவும், இரக்கமுண்டாகிக் கரையாத மனமும் உண்டோ?

இது நிற்க, அவள் வீணாகவா இறந்தனள்? தாய் தந்தையருக்கொரு நிருபம் எழுதிவிட்டகன்றனள். அக்கடிதம் தாய் தந்தையருக்கு விலாஸமாகியிருந்த போதிலும், அவர்களுக்கல்ல; உலகத்தாருக்கே. அதின் விஷயம் 'லதாவாகிய நான் என் தாய் தந்தையர்களைத் துன்பத்திற் காளாக்காதிருக்கவேண்டி உயிர்மாய்க்கின்றேன். சகோதரர்காள்! இனிமேலாவது என் போன்ற உங்கள் சகோதரிகளைப் பெருத்த துன்பத்திற் காளாக்கி வருத்தித் தற்கொலை செய்துகொள்ளும்படிச் செய்யாதீர்கள். அப்படிச் செய்யின், பெரும் பழிக்காளாவீர்கள். இப்படி நான் சொல்லியதிலிருந்து நான் உங்கள் பேரில் கோபங் கொண்டதாக எண்ணவேண்டாம். நானே கொஞ்சமேனும் அதிருப்தியில்லாமல் என்னுயிரை மாய்க்கின்றேன். இனியேனும் நம்மிந்திய மாதா,தன்புத்திரிகளுக்குஉங்கள் மூலமாய்ச் சுகத்தைக் கொடுத்து விருத்திக்கு வந்து சுகமுறுவாள் என்று நம்பி அம்மாதிரியே நடத்தும்படி அம்பிகையைப் பிரார்த்தித்துப் பிராணத்தியாகம் செய்கின்றேன்."

தோழர்காள்! அவளை எரித்த அக்கினி உங்கள் மனத்தைச் சூடாக்கவில்லையா? அவளை எரித்த நெருப்புப்போல் உங்கள் மனமும் எரியவில்லையா? நான் சொல்லுவது அனுசிதமாயிருப்பினும்கூட, சற்று உற்றுக் கவனியுங்கள்.

இம்மாதிரி அவள் உயிர் மாய்த்ததற்குக் காரணம் அவள் கடிதத்திலிருந்தே நன்கு விளங்கும். அதை அநேகர் படித்தும், அநேகர் விஷயத்தை வாயால் மாத்திரம் பேசி செய்கைக்குக் கொண்டுவராமல் விட்டுவிடுவதுபோல, இதையும் விட்டு விடலாகாது.

செல்வத்தைத் திரணமாக மதித்து வந்த பெரியோர்களின் குலத்தினரே! இந்தச் செல்வத்திற்காசை கொண்டா மணம் புரிவது? அவ்வாறு செய்வது சான்றோரெனப் போற்றப்படும் நம்முன்னோருக்கு ஓர் வசைமொழியன்றோ? க்ருஹஸ்தாச்ரம தர்மத்தை நடத்துவதற்காக தர்ம பத்னியைக் கொள்ளுங்கள்.

வரதக்ஷிணை யென்பது இப்பொழுது உங்களில் சிலருக்கு விளங்காமலிருந்த போதிலும், அதைப் பெறுவதன்முன் சற்று யோசியுங்கள். மக்களுடன் கூடி வாழும் நீர், நம் கன்னிகைகளுக்காக கடன் வாங்கிப்பிறகு கடன் கொடுத்தவர்களிடம் கஷ்டப்படுதலில் ஸுகமுண்டோ? நம் மனைவிகளுக்கு "நம்மால் தாய் தந்தையரும் ஸகோதரர்களும் துன்பமடைந்து தரித்ரத்தால் வருந்துகின்றனர்" என்னும் எண்ணமுண்டாகாமலிருத்தல் அவசியமன்றென யார் கூறுர்?

கலாசாலைகளிற் பயிலும் நண்பர்காள்! இவ்விஷயத்தில் வங்கநாட்டு ஸஹோதரரின் உறுதியைக் கைக்கொள்ளுங்கள். "தீராத்துயரையும் மனோவியாகூலத்தையுமுண்டாக்கும் இவ் வரதக்ஷிணை யென்னும் விலங்கிற்கு இரையான ஸஹோதரி ஸ்நேஹலதா! நீ கூறியதை நாங்கள் மறக்கமாட்டோம். எங்கள் விவாகத்தின்பொழுது அதன் காரணமாய் மாம்ஸ விற்பனைக் காசாகும் 'வரதக்ஷிணை' யைப் பெறோம்" என்று ப்ரதிக்ஞைசெய்து அப்படியே நடந்துவருவது இத்தைமாதத்தில்உங்களுக்கும் ஞாபகமிருக்கட்டும்!

தற்செயலாய் நேரும் அபாய ஸம்பவங்களும், அவற்றின் ஆரம்ப சிகிச்சைகளும்

ACCIDENTS & EMERGENCIES

முன்னுரை

"தாமின் புறுவ துலகின்புறக் கண்டு,
காமுறுவர் கற்றறிந் தார்."

உயிரைக் காப்பாற்றும்படியாயும், கஷ்டமடைந்தவர்களுடைய வலியைப் போக்கவும் உதவிசெய்யக்கூடிய ஸம்பவங்கள், பன்முறை உண்டாகின்றன. பிறர்க்கு எதிர் பாராமல் தற்செயலாய் நேரும் அபாயங்களில் அவர்க்கு எவ்வாறு தாம் உதவக்கூடும் என்ற விஷயத்தை யறியவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையும் ஆகின்றது. அவ்வாறு செய்யுமுதவி தக்கதாயிருக்கும்படிச் செய்வதற்கு அவஸரமில்லாமையும், மன அமைதியும் அத்யாவச்யகம். விசேஷமான வைத்யஞான மில்லாதவன், அவஸரமில்லாமல் மன அமைதிபெற்று இயற்கை அறிவுடன் நடப்பானானால், வைத்ய ஞானமுள்ளவன் அவஸரம் மயக்கம் கலவரம் இவற்றோடு வேலைசெய்வதைக் காட்டிலும் அதிகமாக உதவிசெய்யக்கூடும்.

தேக அபாயத்திற்கு ஆரம்பச் சிகித்ஸை செய்பவர் அதிகமாகச் செய்வதைக்காட்டிலும், கொஞ்சம் செய்து, அவ்வபாயம் தானாகவே ஆறும்படிச்செய்வது உத்தமம்.

வைத்யத் தொழிலில்லாதவர்கள் கடுமையான அபாயங்களில், அதாவது பிராண ஹானி யுண்டாகக்கூடிய அபாயங்களில், எது எப்படி இருந்தாலும், வைத்யனை வரவழைக்கும்வரைதான் தாம் உதவிசெய்ய வேண்டுமேயல்லாது, தாங்களே முழு உதவியும் செய்யமுடியுமென்று அலக்ஷியமாக இருக்கக்கூடாது.

சாதாரணமாக, யாவராலும் அல்ப அபாயமாக எண்ணப்பட்டவை சில, மிக ஆபத்திற்கிடமாக விருந்திருக்கின்றன. அம்மாதிரி சில, உயர்ந்த வைத்யர்களையும் அவர்களது திறமையையும் மயங்கச் செய்திருக்கின்றன; அவர்க்கு மிக்க பிரயாசையையும் கொடுத்திருக்கின்றன.

ஆனால் அபாயங்கள் நேர்ந்த சில ஸமயங்களில் வைத்யர்களை அழைத்து வருவது முடியாததாயிருக்கும். அச்சமயங்களில் நேசர்கள் யாவரும், மனிதராகப் பிறந்தவர் எவரும், தம்மால் முடிந்த உதவிசெய்யத் தயாராயிருக்கவேண்டும். அச்சமயங்களில் அவ்விஷயங்களைப்பற்றி இந்தமாதிரி அந்தமாதிரி செய்யவேண்டும் என்று வீண் எண்ணமிடாது, சரீரத்தின் கூற்றையும், காயமடைந்த பாகத்தின் அமைப்பையும், காயத்தின் தன்மையையும், சிகித்ஸையின் வழியையும், நன்கு ஆய்ந்து ஓய்ந்து ஆலோசித்தல் வேண்டும். பின் செய்யவேண்டியதெது வெனப்புலப்படுகிறதோ, அதைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதால், நல்ல புத்திசாலியான ஒவ்வொருவனும் ஆபத்தடைந்தவர்க்குச் செய்யக்கூடிய உதவி அநந்தம். இனி மேற் சொல்லப்பட்ட ஸம்பவங்களும், அச்சம்பவங்களுண்டாகிய காலத்துச் செய்யக்கூடிய உதவியும் விவரித்து எழுதுவோமாக.

1. மூர்ச்சை—மயக்கம்

Fainting

மூர்ச்சை அல்லது மயக்கம் ஸாதாரணமாக நேரும் ஸம்பவம். இதில் உதவி அத்யாவச்யகம். இது, ஹ்ருதயத்தின்வேலை இருந்தாற்போல விருந்து தடைபடுவதாலும், மூளைஸ்தானத்திற்குப் போகும் ரக்தம்குறைவதாலும் நேர்வது. இது, ஸாதாரண தேகஸ்திதியில் உண்டாவதானால், கவலைக்கிடமில்லை. ஏனென்றால், அவ்வாறு மயக்கமடைந்தவர்கள், உதவியில்லாமலேதெளிந்து விடுகிறார்கள். துர்ப்பலமடைந்தவர்களும்,கேவலம் வ்யாதியால், அல்லது வேறு காரணத்தால் மெலிந்தவர்களும், மயக்கமடைந்தால் கவலைக்கிடந்தான்; சில ஸமயங்களில் அதனால் உயிர்க்கே தீங்குண்டாகலாம்.

கூட்டத்திற்போவதினால் ஒருவன் மயக்கமடைந்தால் அவனுக்குதவி அதிகம் வேண்டியதில்லை. ஆனால்இரத்தநஷ்டத்தாலாவது, அல்லது படுவியாதியாலாவது அடிபட்டுக் கேவலம் மெலிந்த சரீரத்தவனுக்கு மயக்கம் உண்டானால்,அவனுக்கு நல்ல வைத்ய உதவி இருந்தாற்கூட மரணம் நேரினும் நேரலாம். உணர்ச்சி யில்லாதிருப்பதாலே, மயக்கம்

என்று நம்பிவிடலாகாது. உணர்ச்சியில்லாமைக்குப் பலகாரணங்கள் உண்டு. மூளையில் இருக்கும் இரக்தக்கால்வாய்களின் முறிவு, ஈரலுள் இருக்கும் இரத்தக் கால்வாயின் உடைப்பு, வயிற்றில் அல்லது குடலிடம் இருக்கும் இரத்தக் கால்வாய்களின் வெடிப்பு இவைகளாலும் உணர்ச்சியில்லாமை யுண்டாகும். மயக்கத்தில் ஞாபகமாக கவனிக்கவேண்டிய முக்யவிஷயம் கீழ்வருமாறு. மயக்கம் வருவதற்குமுன், நல்ல தேகஸ்திதியிலிருக்கும் வாலிபனாவது, நடுப்பிராயமுள்ள மனிதனாவது கூட்டத்தில் நெருங்கினதினாலோ, பயத்தினாலோ, அல்லது ரக்தங் கொட்டுதலைக்கண்டு மனக்குழப்பத்தாலோ மயக்கங்கொண்டு உணர்ச்சியில்லாமலிருப்பானானால், முகம் வெளுத்துவிடும்; உதடுகள் நீலம் பாய்ந்து கிடக்கும்; நாடி அடங்கி ஒலிக்கும். இக்குறிகள் விளங்குமானால் மயக்கமாயிருக்கலாம் என்று நம்பலாம்.

மயக்கத்தில் ஆரம்பத்தில் காணக்கூடியன வர வர உடம்பதிமாக வெளுத்தலும், பலமுறை கொட்டாவி விடுதலுமே. இக்குறிகளைச் சடுதியில்கண்டால், இக்குறிகளுக்குட்பட்டவரைக் கலவரத்தை யுண்டாக்கிய அவ்விடத்திலிருந்து உடனே பிரித்து நல்ல காற்றுலாவுமிடத்தில் கொண்டுபோகவேண்டியது. ஒரு விசிறியை எடுத்து வெகு தீவரமாக அவனுக்கெதிராக விசிறவும். அதே சமயத்தில் குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கச் செய்து முகத்தில் குளிர்ந்த ஜலத்தால் தட்டவேண்டும். அவ்வாறு செய்வதால் மூர்ச்சையின் முழுவேகமும் பாவாமலிருக்கும்படித் தடுக்கலாம். மூர்ச்சையடைந்தவனை நிமிர்ந்தும், காலைக்காட்டிலும் உடம்பும், உடம்பைக் காட்டிலுந் தலையும் தாழ்ந்திருக்கும்படிப் படுக்கவைக்க முடியுமானால் அப்படிச் செய்யவும். பெரிய கூட்டங்களிலும், பொதுஜனஸங்கங்களிலும், வேறெங்கும் கொண்டு செல்லாமல் தொந்தரையில்லாமலும், உதவி செய்வதற்கு உதவியற்று மயக்கமடைந்தவனுக்கு, இதனால் தெளிவடையும்படி செய்யலாம். அப்படிப் படுக்கவைக்க முடியாதானால், மூர்ச்சையடைந்தவன், உட்கார்ந்த நிலையிலிருந்தால், அவன் தலையை, முன் வந்து முழந்தாள்வரையுங்குனித்துத் தொங்கும்படிச் செய்யவும். இந்த நிலையில் வைத்தால் மூர்ச்சையடைந்த ஆள் எளிதில் தெளிவடைவான். இப்படிச் செய்வதால் மூர்ச்சையடைந்தவனுக்குக் கஷ்டங்கொடுப்பதை எவ்வளவு குறைக்கலாமோ, அவ்வளவு குறைக்கலாம். அசுத்தமான இடத்திலாவது, அழுக்குள்ள தரைமேலாவது அவ்வாளைப் படுக்கவைப்பதையுந் தடுக்கலாம்.

மூர்ச்சைக்கு உதவிசெய்யவேண்டி வந்தால், முடியுமானால், மயக்கமடைந்தவனை தரைமேல் முதுகு படும்படி நிமிரப்படுக்கவைத்து, நல்ல காற்று அவ்விடத்தில் உலாவும்படிச் செய்யவும்; அல்லது விசிறியைக் கொண்டு விசிறவும்; பின், சில்லென்றிருக்கும் நல்ல நீரை பானஞ்செய்யச்செய்யவும். மோப்புப்பிடிக்கும் உப்பை (Smelling Salt) யாவது, காரம் தணிக்கப்பட்ட அமோனியா என்னுங் காற்றையாவது லேசாக முகரும்படிச்செய்யலாம். சிறிது கற்பூர நீரையாவது, பிராண்டி என்னும் திராக்ஷா ரஸத்தையாவது உள்ளிற்குக்கொடுக்கலாம்; ஸாதாரணமாக இவை அவசியமில்லை.

இரத்த நஷ்டமான காலத்தில் மூர்ச்சையுண்டானால் மிக்க அபாயத்திற்கிடமுண்டு. வியாதியஸ்தர்கள் இருந்தாற்போல விருந்து சரேலென்று நிமிர்ந்த நிலையை யடையுங் காலத்து மூர்ச்சை நேர்ந்தாலுமப்படியே. இவ்விரண்டு ஸமயங்களிலும்மேல்சொன்ன உதவி போதாதிருக்கலாம். அந்த ஸமயங்களில் மூர்ச்சையடைந்த ஆளை உடனே தரையில் முதுகுபட படுக்கவைத்துத், தலையின் கீழ் இருக்கும் தலையணைகளை யெடுத்துவிடவேண்டும். படுக்கையின் 'கால் மாட்டை அவ்வாளின் கால்கள் அவனது தலைமட்டத்தைக்காட்டிலும் ஒன்றல்லது இரண்டடி உயரமிருக்கும்படி உயர்த்தவும்; கைகளையும் உயர்ந்த நிலையை அடையும்படி உயர்த்தலாம். அதே ஸமயத்தில் பிராண்டியைத் தண்ணீருடன் ஸமமாகக் கலந்து ஐந்தாறு உத்தரணியளவு கொடுக்கவும். இதை மூர்ச்சையடைந்த ஆளால், வாயால் உட்கொள்ளமுடியாதானால், இதைப்போன்ற இரட்டை அளவு ஆஸனவழியாகப் பீச்சாங்குழலால் உள் செலுத்தவும். எந்தக்காரணத்தால் நேரினும், இவ்விதமான அபாயத்

திற்கிடமான மூர்ச்சைகளில், தாமஸஞ்செய்யாது உடனே வைத்யனை அழைத்துக் காட்டவேண்டும். இல்லாவிடில் இங்கு விவரித்துச்சொல்லமுடியாத பலவிதமான உடற்சிக்குகளால் ஸாதாரணமான ஜனங்களுக்குப் புலப்படாத பெருமபாயம் உயிர்க்குண்டாகலாம். நடுப்பிராயத்திலிருப்பவர்க்கும், விருத்ததசையிலிருப்பவர்க்கும், அங்கவிகிர்தஜன்னி நேருமிடத்தில் மயக்கமுமூர்ச்சையுமுண்டாகலாம்; ஆனால் இந்த வயதில்தான் நேருமென்று சொல்லமுடியாது. இரத்தக்கனப்பான உடம்புடையவர்க்குத்தான் வருமென்றும் சொல்லமுடியாது. இம்மாதிரிகாலத்தில் மயக்கமாவது மூர்ச்சையாவது நேர்ந்தால், கஷ்டத்துடனும் சப்தத்துடனும் மூச்சு வாங்கும்; இரத்தம் நிறைந்து முகம் சிவந்துவிடும்; கழுத்தின் இரத்தக் கால்வாய்கள் துடிக்கும்; நாடி நிறைந்து மெதுவாக ஒலிக்கும். ஒரு எச்சரிக்கை: மூளையிலிருந்து இரத்த இழிவை மூர்ச்சையாகப் பாவித்து உதவிசெய்வதைக் காட்டிலும் விபரீதம் வேண்டியதில்லை. மூர்ச்சையில் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தி மூளைக்கு இரத்தம் நிறையப் போகும்படிச் செய்யவேண்டியது; இது அங்க விகிர்தஜன்னியில் செய்யவேண்டியதற்குத் தலைகீழாகும். நுரை ஈரலில் இரத்த இழிவினால் மயக்கமுண்டாயிருந்தால், இருமினால் இரத்தம் விழும். அன்னகோசத்துதிர இழிவால் மயக்கமானால் இரத்தவாந்தி ஆனாலுமாகும், ஆகாமலுமிருக்கும்; ஆனால் நல்ல தேஹஸ்திதியிலிருப்பவர்க்கு ஆகாது. குடலில் இரத்த இழிவு, விஷஜ்வரம், ஈரலைப்பற்றிய வியாதிகள் இவைகளால் மயக்கம் உண்டாகுங் காலங்களில் சிகிச்சை வழியே வேறு. அக்காலங்களில் வைத்யன் உதவி இருக்குமாகையால், அதைப்பற்றி நாம் இங்கு விவரிக்க வேண்டிய தவசியமில்லை.

மூர்ச்சைக்கும், ஸூர்ய வெப்பத்திலுண்டாகும் மூளைத் தாக்கலுக்கும் பேதங் கண்டுபிடிப்பது சில ஸமயங்களில் கஷ்டமாயிருக்கும். மேற்சொன்ன தாக்கல் ஸூர்யனுடைய கொடிய உஷ்ணத்தின் அதிர்ச்சியாலாவது, அல்லது அடைக்கப்பட்ட இடங்களிலாவது, அத்யுஷ்ணமான இடங்களிலிருப்பதினாலாவது நேரும். அப்பொழுது உடம்பைத் தொட்டால் வெகு சூடாகவிருக்கும்; நாடி மெதுவாக விருப்பினும் படபடவென்று அடிக்கும்; அத்தாக்குத் திடீரென்று வராதிருக்குமாயின் வருவதற்குமுன் மூளையிலும் தலையிலும் அதிக வலியிருக்கும்.

மாணவர் பக்கங்கள்

STUDENTS' PAGES

ஆத்திசூடி விளக்கம்

57. திருமாலுக்கடிமைசெய்

மஹாவிஷ்ணுவை பக்திசெய்து வழிபடு என்பது இந்த ஸூத்ரத்தின் பொருள். இது பொதுவாக சிவவிஷ்ணு பேதத்தை வேரறுக்க வந்த ஸூத்ரம். ஔவையார் சிவனைப் பரமாகக்கொண்டு வழிபடுபவள் என்பதற்கு ஆதாரம்:—

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

என்ற ஔவையார் வாக்கியமாகிய நல்வழி 15-ம் செய்யுளே. இவ்வாறு சிவனையே வழிபடும் ஔவையார் இங்கு மஹாவிஷ்ணுவுக்குத் தொண்டு செலுத்த வேண்டியது என்றதன் கருத்து, ஒருவாறு அவளே கூறியுள்ள தெய்வமிகழேல் என்ற 61-வது ஆத்திசூடி வாக்கியத்தால் வெளியாகும். அங்கு இந்தப் பொருத்த விஷயத்தைப்பற்றி நன்கு ஆராய்வோம்.

மஹாவிஷ்ணு மாயைக்கு யஜமானர். அவருக்கு மாயன் என்ற பெயரும், அகட விகட கபட நாடக ஸூத்ரதாரி என்ற பெயரும் பொதுவாக உண்டு. உலக வாழ்க்கை எல்லாம் அவரது மாயாவிகாரமே. அந்த விகாரங்களுள் கர்மவாஸனா வசத்தால் அகப்பட்டுத் திண்டாடுபவர்களாகிய நம்போன்ற ஜீவராசிகள் அவைகளைவிட்டுக் கரையேற மாயைக்கு யஜமானரான விஷ்ணுவின் வழிபாடு வேண்டியது அவசியம். இதுபற்றியே கிருஷ்ண பரமாத்மா கீதையில் (IV-ம் அத்யாயம் 6-ம் ச்லோகத்தில்)

(இதன் தொடர்ச்சி 258 ம் பக்கம்.)

பிறப்பிலனாய்த் தேய்தலறு பெற்றியனாய் யார்க்கும்
சிறப்புமலி ஈசனாய்ச் சீர்மை—உறப்பெறினும்
என்ப்ரக்ருதி தன்னை வசப்படுத்தென் மாயையினால்
ஸம்பவிப்பேன் தானீ துணர்

என்று தம் ஸ்வரூபத்தை விளக்கி, VII-ம் அத்யாயம் 14-ம் ச்லோகத்தில்:—

முக்குணத்தாம் தெய்வ மொழிதருமிம் மாயைதனைத்
தக்கபடி தானரிது தாண்டிடுதல்—புக்கெவர்கள்
என்னையே யீங்கடைவார் ஏதமற மற்றவரே
அன்னதனைத் தாண்டவலார் ஆர்ந்து.

என்று தமக்கு அடிமை பூண்டு ஒழுகுவதன் பலனை நன்றாகக் காட்டியிருக்கிறார். இக்காரணம் பற்றியே இங்கு திருமாலுக்கு அடிமை செய்யச் சொன்னாள் ஔவையார்.

ஆனால், காலகதியில் பரம்பொருளுக்கு விஷ்ணு என்ற பெயரை முக்கியமாகக் கொண்டு ஆராதனா த்யான ஆசார ஒழுங்குகளை ஏற்படுத்தியுள்ள ஆகமங்கள் ஏராளமாக ஏற்பட்டு, சிவத்வேஷத்திற்குக் கூட இடம் வெகுவாக அமைந்துவிட்டது. இப்படியே சிவன் என்ற பெயர் விஷயத்திலும் ஏற்பட்டுவிட்டது. ஆகவே சிவபக்தன் விஷ்ணுவை ஒழுங்காக வழிபடுவது என்பது இப்படிப்பட்ட ஆகமப் பின்னல்களுக்கு இடையில் சிக்கியுள்ள நமக்கு முடியாத காரியம். ஆதலால் திருமாலுக்கடிமை செய் யென்று எழுந்த வாக்கியத்திற்கு, வைஷ்ணவர்கள் விஷ்ணுவை எப்படி எல்லாம் வழிபடுகின்றனரோ, அப்படி எல்லாம் வழிபட வேண்டும் என்று விரிவாகப் பொருள் கூற முடியாது. ஆனால் திருமால் வழிபாடு செய்பவர்களைக்கண்டு த்வேஷம் கொள்ளாது சிவன் வழிபாடு செய்வதற்கு இந்த ஸூத்ரம் ஆதாரமாக விருக்கலாம். இதுவுமன்றி வேறு ஒரு விஷயம் இதனுள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஆகமமும் தம் மூர்த்தியான விஷ்ணு சிவர்களே பரம்பொருள் என்றும், அவரே ப்ரபஞ்சஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார அவஸரங்களுக்கேற்ப ப்ரஹ்ம, விஷ்ணு ருத்ரர்களாகத் தோற்றுகின்றனர் என்றும் கூறும். ஆகவே ஔவையார் சிவபக்தர்களை நோக்கி, அவர்களது பரம்பொருளான சிவத்தை, ப்ரபஞ்சஸ்திதி அவஸரத்தையும், பக்தர்களை அனுக்ரஹிக்கும் சிஷ்டபரிபாலனமான அவஸரத்தையும், ப்ரபஞ்சத் தோற்ற காரணமான மாயையை அடக்கி ஆளும் அவஸரத்தையும் கருதி, விஷ்ணுவாக எண்ணி மாயத்தோற்றங்களை விட்டு நீங்கவேண்டிய மோக்ஷ இச்சையை திருப்தி செய்ய வழிபடவேண்டும் என்பதாகத்தான் கொள்ளவேண்டும். இப்படிப்பார்த்தால் வைஷ்ணவர்களும் சிற்சில அவஸரங்களில் தமது பரம்பொருளைச் சிவனாகக் கருதி வழிபடவேண்டியது அவசியமாகும். ஆகவே, மதஸ்தர்கள் தமது ஆராதனை, ஆசாரம், ஸம்ஸ்காரம் இவைகளின் ஒழுங்குகளுக்கு விரோதமில்லாமலே தமது பரம்பொருளை வேறு மூர்த்திகளாகவும் கருதித் தமது நிலைகளுக்கேற்ப வழிபடலாம் என்க. இதனால் வைதிக மூர்த்திகளிடம் உள்ள த்வேஷம் எந்த ஆகமத்தானுக்கும் நீங்கிவிடவேண்டும் என்பதே ஔவையின் உட் கருத்து என்பது வெளிப்படும்.

இப்படிப்பட்ட மூர்த்திஸமரஸ ரஹஸ்யமுணர்ந்த பெரியோர்கள் எல்லோரும் த்வேஷம் ஒன்றுமின்றியேதான் தமது உபாஸனா மூர்த்தங்களுக்கு அடிமை செய்து வந்துள்ளார். உதாரணம்: அப்பைய தீக்ஷிதர், "ஜகத் அதீச்வரனாகிய ஜனார்த்தனனும் ஸரி (விஷ்ணு) ஜகத்முடிவை உண்டாக்கும் மஹேச்வரனானும் ஸரி (சிவன்), இவர்களுக்குள் வஸ்து பேதம் என்பது எனக்கு இல்லவே இல்லை; ஆயினும் என் பக்தி, பிறைசூடியான பெருமானிடமே பாய்ந்தோடுகிறது" என்றும், க்ருஷ்ணகர்ணாமிருதம் பாடிய லீலாசுகர் "நாங்களோ சைவர்கள், அதைக் கேட்க வேண்டியதேயில்லை; அதிலும் பஞ்சாக்ஷரத்தை மிகுதியாக ஜபிப்பவர்கள். ஆகிலும் என் மனம் காசாம்பூ நிறத்தராயும், கோபஸ்திரீகளிடம் குழந்தையாய்வளரும் புன்சிரிப்போடு விளங்கும் க்ருஷ்ணமூர்த்தியையே நாடுகிறது" என்றும் கூறிய வாக்கியங்களே.

இதுவுமன்றி ஔவையார் இந்த வாக்கிய ஸாரபலத்தாலேயே சைவர்கள் விஷ்ணு கதைகளை உருக்கமாயும், வைஷ்ணவர்கள் சிவகதைகளை உருக்கமாயும் செய்துள்ளார்கள். பாரதம்பாடிய வில்லிபுத்தூரார் ஆரண்ய பர்வம், அர்ஜுனன் தவநிலைச் சருக்கத்தில் சிவபெருமான் வேட உருவுடன் அர்ச்சுனனை வதைக்கவந்த மூகாஸுரப் பன்றி

யைத் தேடிப் புறப்பட்டதை வர்ணிக்கையில்:—

ஒரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்
தொருவனந்தப், போரேனம் தனைத் தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்.

என்று பாடியதும், சைவராகிய கம்பர் இராமாயணம் பாடிய உருக்கமும், அருணாசலக் கவிராயர் அதை நாடகத் தமிழாக்கிய உருக்கமுமே இதற்கு உதாரணம். இந்த ஸமரஸப் பிடிப்பினாலேதான் இக்காலத்திலும் ஸ்மார்த்தர்கள் மூர்த்தி த்வேஷத்திற்கு இடமே கொடுக்காம லிருப்பதும். ஆகவே, இப்படி பொதுப்படை வைதிகர்களாகவேதான் எல்லோரும் இருக்கவேண்டும் என்பது ஔவையார் கருத்து.

இன்னும் வைதிக மரபுப்படி இந்தஸூத்ரத்தை ஆராய்ந்து பார்க்கில், வேறு ஒரு அரிய நுட்பமும் வெளியாகும். மஹாவிஷ்ணுஅவதாரமாகியக்ருஷ்ணபரமாத்மா வேதச்சுருக்கமாக வெளியிட்ட கீதையில் ஆகமவைஷ்ணவத்திற்கு இடமே தாராது, தன்னைவேதத்தில் கூறப்படும் ஸகுண ஈச்வரனென்றே கூறிவருகிறார். தன்னை வழிபட்டால் முக்குணங்களைத் தாண்ட, தன்னில் எந்த பரவஸ்து உலகத்தவருக்கு ஸகுணமாகவே மாத்திரம் விளங்குகிறதோ, அந்த வஸ்து உள்ளபடி நிர்க்குணமாகவே விளங்கிவிடும் என்றும் வற்புறுத்துகிறார். ஆகவே இந்த ஸூத்ரத்தில் கூறப்படும் திருமால் ஸகுணேச்வரனே. வைஷ்ணவ சைவ ஆகமங்கள் தமது பரம்பொருளுக்குக் கூறும் அனந்த கல்யாண குணவைபவ விசேஷங்கள் எல்லாம் வைதிக ஸகுண ஈச்வரனுக்குப் பொருந்துமுடையனவே. அவருக்கு அடிமை செய்வதாவது, அவர் உத்தரவுகளாகிய சாஸ்திரங்களில் வெளியாகும் ஜாதி ஆச்ரம தர்மங்களை மிகுந்த பற்றுடன் கடைப்பிடித்து, அவர் கோட்பாடுகளை மீறாமலும், அவரை ஆராதனை முதலியவைகளால் நேரிட வழிபடுதலும், அவர் ஸகுணத்தில் ஈடுபட்டுத் தன்னை அவரைவிட் டன்னியாக உணராமலிருக்கப் பழகுவதும். இவைகளுள் முதல் பாகமான கர்மானுஷ்டானத்திற்குத்தான் அடிமை செய் என்ற சொல் நன்றாகப் பொருந்தும். இதில்தான் ஆண்டான் அடிமைச் சேர்க்கை நன்றாக அமையும். இதைச் செய்துவந்தால்தான் மற்றைய இரண்டுவித வழிபாட்டுக்கு வேண்டிய ஆற்றல்வரும். ஆகவே, வைதிகவழியில் முனைந்து பரம்பொருளை உள்ளபடி நிர்க்குணமாகக் கண்டு கலந்துவிட ப்ரபஞ்ச காரணமான மாயைக்கு யஜமானனான ஸகுண ஈச்வரனுக்கு, அவன் இட்ட வர்ணாச்ரம தர்ம வரம்புப்படி நடந்து அடிமைசெய்து அவரை வழிபட்டே தீரவேண்டும் என்ற ஆழ்ந்த வைதிகக்கருத்தை அடக்கியுள்ளது ஔவையாரின் சைவவிரோதம்போலக் காணப்படும் வைதிகப் பொருத்தமான இந்த ஸூத்ரம்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

மாதவீகங்கணம்

அத்யாயம் 8

(231-ம் பக்கத்தொடர்ச்சி.)

மந்த்ராலோசனை மண்டபம்

அக்பர் மஹா சக்கரவர்த்தியவர்கள் நாற்பத்தைந்து வருஷகாலம் எவ்விதக் குற்றங் குறையுமின்றி ஸர்வஜன ஸம்மதமாய் செங்கோல் நடத்திவந்தார். சண்டை சச்சரவுகள் என்பதே கிடையாது. எங்கு பார்த்தாலும் ஜனங்கள் மனஸ்ஸந்துஷ்டியடைந்திருந்தனர். இந்த நாற்பத்தைந்து வருஷங்களுக்குள் எத்தனையோ நூதன நாடுகள் சக்ரவர்த்தியவர்களுடைய ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. மொகலாய ராஜபுத்ர ஸைந்யங்கள் அடுத்து இரண்டு வருஷங்கள் சண்டையிராமல் சும்மாவிருந்ததில்லை. இப்படி தமது ஸேனை புதிய புதிய ராஜ்யங்களை ஜயித்துக்கொண்டிருக்கையில், அக்பரவர்கள் ஜயிக்கப்பட்ட ராஜ்யங்களைச் சீரும் சிறப்புமாய் ப்ரஜைகள் அனைவரும் வாழ்த்த செங்கோல் முறைமையுடன் ஆண்டு வந்தார். காபூல், கந்தஹார், காஷ்மீர், ஸிந்து, குஜராத், வங்காளம் இந்த நாடுகள் கடும்போர்கள் காரணமாய் ஒன்றன்

(இதன் தொடர்ச்சி 260-ம் பக்கம்.)

பின் ஒன்றாய் மொகலாய ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டன. அக்பரவர்களது அந்த்ய காலத்தில் அவருடைய ராஜ்யம் ஹிந்துகுஷ் பர்வதம் தொடங்கி, விந்திய பர்வதம் வரைக்கும், மேற்கில் குஜராத் மாகாணம் தொடங்கி கிழக்கில் வங்காளம் வரைக்கும் வ்யாபித்திருந்தது. இதனுடன் நிற்காமல் சிறிது காலத்துக்கு முன்னர் மொகலாய ராணுவப் படைகள் விந்திய பர்வதத்தைக் கடந்து தெற்கில் ஆமத்நகரத்தைக் கைப்பற்றின. இவ்வகண்ட ராஜ்யமானது பதினைந்துமண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒவ்வொரு ராஜ ப்ரதிநிதி நியமிக்கப்பட்டிருந்தது. பலவேறு மதங்களையும், பலவேறு மதக்கோட்பாடுகளையும் அநுஸரித்து வரும் இருபது கோடி ஜனங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டு நின்ற ராஜ்யத்தை, ஸர்வஜன ஸஹோதரப் பான்மையுடனே பரிவாயும் ஸ்நேஹமாகவும் அரசாட்சி செய்துவந்த மஹிபனது பெருமை என்ன பெருமை! ஐரோப்பிய தேசங்களில் இங்க்லண்ட் நாட்டு எலிஜபெத் மஹாராணி, ப்ரான்ஸ் நாட்டு நாலாவது ஹென்றி மன்னர், ஸ்பெயின் நாட்டு இரண்டாவது பிலிப் மஹிபர் முதலிய ராஜநிபுணர்கள் தழைத் தோங்கிய அக்காலத்தில் எண்ணிறந்த ஜாதி பேதங்களும் ஒன்றுடனொன்று எவ்வளவோ முரண்படும் பல மதங்களும் கொண்டு விளங்கிய இருபது கோடி ப்ரஜைகளைக்கொண்ட அகண்டதொரு ராஜ்யத்தை அவ்வளவு விமர்சையாக ஆட்சிபுரிந்த நிகரில்லா ராஜாதி ராஜராகிய மொகலாய திலகத்தின் நாமதேயத்தைக் கேட்டிராதவர் கிடையாது.

ஆயினும், அவருடைய அந்த்ய காலம் அவர் மனதுக்கு அவ்வளவு த்ருப்திகரமாகயில்லை. ஒவ்வொன்றாகப் பல கவலைகள் ஏற்பட்டன; தான் அல்லும் பகலும் வேளை தவறாமல் ஜலம் வார்த்து எருவிட்டு வளர்த்த மரம் நாளடைவில் உலர்ந்து போய்விடுமோ என்ற ஏக்கம் மேலிட்டது. காலையில் தர்பார் மண்டபத்தில் விளங்கிய ப்ரகாசமான சந்த்ரவதனத்தில்நெருங்கிப்பார்க்கும்போது துக்கக்குறிகள் சில தென்பட்டன. இந்த மனக் கவலைகளைப்பற்றிய யோசனை செய்யத்தான் அக்பர் இப்போது இம்மண்டபத்தில் தன் ஆப்த மித்ரர்களுடன் கூடியிருந்தது.

"கான்கானன், நீர் ஆமத்நகரத்தை ஜயித்தது ஒரு பெரிதன்று. இனி அந்நாட்டை ஸரிவரப் பரிபாலிப்பது உண்டே, அதுதான் நான் உம்மிடமிருந்து எதிர்பார்க்கும் பெரிய கார்யம். அத்தொழில் எளிதன்று, எனக்குத்தெரியும்; மிக்க கஷ்டஸாத்யமானது; ஸாமாந்ய உத்யோகஸ்தர்களை நம்பிவிடக்கூடிய தொழிலன்று அது. அந்த நாட்டை நீதியாய்ப் பரிபாலனம் செய்வது உமது பொறுப்பு. அவ்விஷயத்தில் உம்மைவிட நம்பிக்கையானவர்கள் எனக்கு வேறெவரும் கிடையாது."

"அடியேன் ஆமத்நகரத்தை ஜயித்தது? தாங்கள் விந்தியபர்வதத்தைக் கடந்து எங்களுக்கு வழிகாட்டாதிருந்திருந்தால், அப்புறம் தெரிந்திருக்கும் எங்களுடைய ஸாமர்த்யம்! ஸூர்யனின்றி இதர க்ரஹங்கள் ப்ரகாசிக்குமோ? தங்களுடைய மேல்பார்வையும் ஸமயோசித புத்திமதியும் இல்லாமல் என்ன கார்யம் நடக்கும். தாங்களன்றோ எல்லாவற்றிற்கும் மூலகாரணம்.'

கான்கானனுடைய முகஸ்துதியைக் கணிக்காமல் அக்பரவர்கள் அவரைப்பார்த் "ஆமத்நகரத்தில் நமக்கு இன்னும் எ வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. விடத்தில் மஹா வீரதீரம் பொருந்தி ஆவே சத்துடன் நம்மை எதிர்த்த அந்தப் பெ ணரசியின் செயலை மறவாத போர்வீரர்க பலர் உயிருடனிருக்கின்றனர். அவர்கள் மீது நாம் எப்போதும் கண்ணாயிருக்க டும். அம்மாதினியின் சௌர்யமும் பெ மும் அல்ப ஸ்வல்பமானதன்று" கூறினார்.

"தாங்கள் சொல்வது முற்றும் ஸ சண்ட்ஸுல்தானாவை ஆமத்நகரத்தில் மறப்பரோ? நாம்தான் மறப் வோமோ? கொண்டவானா நாட்டு வதி ராணிக்குச் சற்றேனும் சளை அல்லள் ஸுல்தானா. தெய்வத் பொருந்திவிளங்கிய, இந்த இரண் மாதர்களும் தங்களுடைய அரச மகிமையை உலகத்தாருக்குக் க எடுத்துக்காட்ட அவதரித்த தேவஸ்த்ரீகள் போலும்."

எப்போதும் பகைவர்களின் சௌர்யத்தை ஸரிவர மதித்துப், புகழும் ஸ்வபாவமுடையவராயினும் அக்பர் பெருமான் இந்த ஸமயத்தில் வேறு விஷயத்தில் தன் மனதைச் செலுத்தியிருந்ததால் கான்கானன் பேசிய வார்த்தை இரண்டொன்றே அவர் காதில் விழுந்தது. தத்ஸமயம் அவருக்கு புத்தி அவற்றின்மீது செல்லவில்லை.

"கான்கானன், அந்த இரண்டு ஸ்த்ரீகளும் இப்போது உயிர்த்திருந்தால் எனக்கு ரொம்ப த்ருப்தியாயிருக்கும். துர்க்கவதிக்கு நான் முதல்தரமான எனது ஜாகீர்களிலொன்றைக் கொடுத்து அவளை நல்ல அந்தஸ்தில் வைத்திருப்பேன். எனது புத்ரர்களில் ஒருவனுக்கு சண்ட் ஸுல்தானாவை மணம்புரிவித்து அவளை எனது செல்வப் புதல்வியாகப் பாவித்து வருவேன். தாங்களும்தான் இருந்தீரே, அவளவ்வளவு தீரமாய்ப் புருஷர்களில் எவராவது போர் ந்தனரா?"

தல பராக்ரம ஸிம்ஹமே, இணையற்ற ரராகிய மூராது இளவரசரும் நானும் வளுடன் நின்று போர்புரிய ஆண்மை றுப் பின்னடைந்துவிட்டோம். அன் யதினம் கோதாவரி நதிதீரத்தில் நடந்த த்தில் மடிந்த மொகலாய வீரர்களை ண்ணிக்கையிடுவது ஸாத்யமோ? அந்த ண்டு நாள் யுத்தம் என்ன கோரயுத்தம்! ா கொலை! என்ன படுகளம்! டானியல் குமாரர் சிறிது வெற்றியடைந்தார். ம் வெற்றியென்றுசொல்லமுடியாது. யில் தாங்கள் நேரில் வந்து யுத் த நடத்திய பின்னர்தான் ஆமத்நக கைவசப்பட்டது."

து குமாரர்களுடைய நாமதேயங்களைக் போது அக்பர் முகத்தில் துக்கக் ள் தோன்றின. அவர் முகம் களங்க து. வ்யஸனத்தால் தொண்டைய து; பேச நாவெழவில்லை. கடைசியில் தமது துக்கத்தை யடக்கிக்கொ வர் நின்று நின்று பேசலானார். ய பார்வை ஒன்றின்மீதும் நிற் லைந்துகொண்டிருந்தது.

"ரணசூரனாகிய எனது மகன் மூராது பால்ய ஆட்டங்களில் மிதமிஞ்சி உழன்று அகால மரணத்துக்கு ஆளானான். டானியலும் சிறிது துஷ்டவழியில் ப்ரவேசித்திருக்கிறதாகத் தெரிகிறது. வர வர, அவன் தனது வேலையில் சோம்பலாயிருக்கிறான். சிற்றின்ப அநுவல் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கான்கானன், தாங்களும் அவனுக்குப் பிதா நிலைமையிலிருக்கிறீர். உமது தவப்புத்ரியை அவனுக்கு விவாஹம் செய்துவைத்திருக்கிறீர். அவனை ஒரு கண் பார்த்துக்கொள்ளும். அவனைப் பேருக்கு ஆமத்நகரத்துக் கவர்னராக நியமித்திருக்கிறேன். அவனிடம் எனக்கு நம்பிக்கையில்லை. ராஜ்ய நிர்வாகத்தை நீர் பார்த்துக்கொள்ளும். அவனை நம்பி இருந்துவிடாதீர்."

"அப்படியே, எஜமானர் அவர்களது சித்தம். நான் எவ்வளவோ அதிர்ஷ்டம் செய்து என் புத்ரியை டானியலுக்குக் கொடுக்கும் பாக்கியம் பெற்றேன். என்னை விட பெரியவர்களெல்லாம் அந்த விசேஷ மரியாதையை நாடுகின்றனர். பீஜப்பூர் அரசர் தன்மகளைக் கொடுப்பதாக ப்ரஸ்தாபம். அவர் ஒரு பெரியவரைக் கொண்டு அந்த விவாஹத்தை முடிக்கச்சொல்லியிருக்கிறார்."

'யார் அந்தப் பெரியவர் ?"

"அவர் பெயர் பெரிஷ்டா. அவர் தத்காலம் முஹம்மது கஜினி படையெடுத்து வந்த காலந் தொட்டுத் நாளதுவரைக்குமான இந்திய தேச சரித்ரம் எழுதிக்கொண்டிருக்கிறார். அபுல் பாஸலுக்கு இணையானவரெனச் சொல்லிக்கொள்கிறார்கள்."

"அபுல்பாஸல்அப்பேர்ப்பட்ட க்ரந்தகர்த்தாவைப்பரிவுடன் வரவேற்றுஉபசரிப்பார். பாடோனிகூடத் தக்ஷணத்துப் பண்டிதரை ஸ்நேஹத்துடன் அழைத்து மகிழ்வார். இப்பேர்ப்பட்ட நவரத்னங்கள் மூன்று பேருடைய உதவியால் பிற்காலத்தில் நமது நாமதேயம் இந்நாட்டில் அழியாமல் விளங்கிக்கொண்டிருக்கும் பாக்யம் பெறினும் பெறலாகும்"

"இந்நாட்டில் மட்டுமா? இதர நாடுகள் எங்கே போயின? அபுல்பாஸல் சிறப்பு இந்தியாவில் மட்டுமன்று. வெளிநாடுகள் பலவற்

றில் தெரிந்திருக்கிறது. பாரஸீஹ நாட்டரசர், தான் அக்பருடைய வாட்ப்ரதாபத்தை நேரில் கண்டறியாராயினும் அபுல்பாஸலுடைய க்ரந்தங்களைக் கண்டு பயமுறுவதாக ஒருமுறை எழுதியிருக்கிறார். நாமெல்லோரும் மண்ணுடன் மண்ணாய் நசித்துவிட்டபின்பும் அவருடைய க்ரந்தங்களின் மகிமை கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும்". இதைக்கேட்டு அபுல்பாஸல் உடனே "உமது க்ரந்தங்கள் மட்டும் என்ன, ஸாமான்யமானவைகளா, ஆனால் ஒன்று, நீங்கள் மாத்ரம் உமது பேனாவை யாசகர்களுக்குக் கொடுத்துவிடாதிருக்கவேண்டும்." சக்ரவர்த்தியவர்கள் மலர்ந்த முகத்துடன் அபுல் பாஸலைப் பார்த்து, "நண்பரே, நீர் நமக்குப் புரியும் உதவி சொல்லத்திறமன்று. உம்முடைய வீரத்தால் எத்தனையோ நாடுகள் நமது வசமாயின. உமது க்ரந்தங்களால் நம்முடைய ராஜ்ஜியத்தின் பெயரும் ப்ரதாபமும் உலகெங்கும் ப்ரஸித்தியடைந்து வருகின்றது. ஆனால் இப்போது இதரவிஷயங்கள் சிலவற்றில் உமது உதவி நமக்கு இன்றியமையாததாயிருக்கிறது. நமது மூத்த பிள்ளையின் நடத்தை வரவர, அத்ருப்தியாயிருக்கின்றது; நாளுக்கு நாள் அவனுடைய சேஷ்டை நமக்கு அளவிலா வருத்தத்தை உண்டு பண்ணுகின்றது. நமக்குப் பின்னர் அவன் சக்ரவர்த்தியாகப்போகிற விஷயத்தையும், தற்காலம் அவன் இருக்கும் நிலைமையையும் அவனுடைய நடவடிக்கைகளையும், ஒப்பிட்டுப்பார்த்தால் நமக்கு அதிக கவலையாயிருக்கிறது" என்றார். ஆரம்பத்திலிருந்த மலர்ந்தமுகம் மாறி, வரவர இருளடைந்து வந்தது.

"தாங்கள் தக்ஷிணம் சென்றிருந்தபோது ஸாலிம் இளவரசை ஆஜ்மீருக்குக் கவர்னராக நியமித்தீர்கள். அடியேனும் வங்காளத்திலிருந்து இளவரசருக்கு ஸஹாயமாக வந்தேன். வந்தவிடத்தில் வெகு நாள் தங்க ஸாத்யமில்லாமல் போயிற்று. வங்காளத்தில் கலகங்கள் உண்டாயின. அடியேன் வங்காளம் செல்லவேண்டியதாயிற்று. ஆனால் இப்போது ஆப்கானியர்களுடைய துஷ்டத்தனம் அடியோடு அடங்கிவிட்டது. இனி அவர்கள் தலையெடுப்பார்கள் என்ற பயமில்லை. வங்காளத்தைப்பற்றி இனி சிறிதும் கவலைப் படவேண்டிய அவசியமில்லை. எஜமானர் அவர்களுக்கு இஷ்டமானால், அடியேன் ஆஜ்மீர் சென்று மிகுந்திருக்கும் இரண்டொரு ராஜபுத்ர நாடுகளையும் ஜயித்து எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவைக்கிறேன்."

"ராஜபுத்ரனுக்கு ஏற்ற வேலை" என்று ப்ருத்வி ராஜர் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

ராஜாமான்ஜிங் ப்ருத்வி சொன்னதைக் கேட்காதவர் போலிருந்தார். ஆனால் அவர் முகத்தில் மாத்ரம் சிறிது கோபக்குறி தென்பட்டது. ப்ருத்வி ராஜரும் அறிந்துகொண்டார்.

"ராஜா மான்ஸிங்! நீர் வங்காளத்தை விட்டு வரவேண்டியதில்லை. நீர் அந்த மாகாணத்தைப் பத்து வருஷத்துக்கு மேலாக த்ருப்திகரமாய் ஆண்டுவருகிறீர். நானிருக்குமட்டும் நீர் அவ்விடத்திலேயே இருக்கலாம். நீர்தான் அந்த ஸ்தானத்துக்கு ஏற்றவர். ஆப்கானியர்களுக்குத் தகுந்த க உம்மைவிட வேறொருவரும் கிடையா. மேலும் மீவாரைப்பற்றி நான் இப்பே கவலைப்படவில்லை. அவ்விடத்திய ஜயாடயத்தைப்பற்றி நான் நினைக்கவில்லை. எ கவனமெல்லாம் எனது மூத்தபிள்ளையி சென்றிருக்கிறது. நீர் வங்காளம் திரும் வுடன், ஸாலிம் மீவாரை மறந்துவிட்டா அவனுடைய எண்ணங்கள் வேறுபட்ட ஆக்ராவுக்கு வந்து கோட்டையைப்பி ஸிம்ஹாஸனத்தில் உட்காரும் அவா கமாய்விட்டது. அசட்டுப்பையன். ரா ரம் செய்வதென்றால் அவனுக்கு என் வாய்ப்பேச்சா யிருக்கிறது. ஏதோ ரைப்பந்தயம் என்று அவன் எண் றான். ராஜ்யபாரம் தெய்விகமானது. வஹிப்பது கஷ்டஸாத்யம். அது மத்தில் பகவானது அருளால் ஏ டியது என்னும் விஷயங்களை பெ அவன் அறிந்திலன். ராஜ்யபாரம் நல்ல ஆடையாபரணங்கள் தரித் ரில் வீற்றிருந்து களிப்பதுதான் அவன் கருதுகிறான். அதன் உ களை அவன் சிறிதும் அறியவில்லை

சர்கள் இவ்வாறெல்லாம் ஆத்ரப்பட்டுத் தங்கள் தகப்பன்மார்களுடைய அந்த்ய காலத்தில் அவர்களுக்குப் பலவித மனோவேதனைகளை உண்டுபண்ணுகிறார்கள்" என்று சொல்லும்போது அக்பர் புன்சிரிப்பு சிரித்தாராயினும், அவருடைய மனோநிலைமையை மான்ஸிங் உள்ளவாறு அறிந்தான்.

"மஹாராஜா அவர்கள், ஸாலிம் பட்டத்துக்கு அருகனல்லன் என்று எண்ணினால் நமக்குப் பின்னர் ராஜ்யத்துக்குத் தகுந்த ஏற்பாடு செய்துவைக்க வேண்டாமா? ஸாலிமுடைய பிள்ளைகள் எல்லோரும் ஸமர்த்தர்கள். ஸாலிம் ஸிம்ஹாஸனத்துக்கு யோக்யதையற்றிருப்பதால், அவருடைய பிள்ளைகளிலொருவரைத் தெரிந்தெடுத்தலாகாதா"

மான்ஸிங்குடைய கள்ளயோசனை அக்பருக்குத் தெரியாதா? எத்தனையோ மான்ஸிங்குகளைப் பார்த்திருக்கிறாரே அவர்! ஸமாசாரமென்ன வென்றால், மான்ஸிங்கின் ஸஹோதரி ஸாலிமுடைய மனைவிமார்களில் ஒருத்தி. அவளுடைய மகன் குஸ்ரு கான்தான் இளவரசருடைய மூத்தமகன். அவன் நல்ல புத்திசாலி; ராஜாங்கவிஷயங்களில் நல்ல பயிற்சியுடையவன்.

தன் மருமகனிடத்துள்ள ஆசை யொரு காரணம், ராஜ்யம் நாசமுறாமல் பத்ரமாயிருப்பது ஒரு காரணம். கடைசியில் ஹிந்துக்கள் முஸல்மான்களிடம் துன்பமுறாதிருத்தல் ஆகிய இம்மூவித காரணங்களை உத்தேசித்துத்தான் மான்ஸிங் ஸாலிமைத் தள்ளிவிட்டுக் குஸ்ருவுக்குப் பட்டாபிஷேகம் செய்யலாம் என்று கூறியது. அக்பர் மனதுக்கு இந்த ஏற்பாடு ஸம்மதமில்லை. இவ்வித ஏற்பாட்டினால் அநேக கெடுதிகள் உண்டாகும். ராஜ்யம் நிலையற்றுச் சின்னாபின்னமாகும் என்றெண்ணினார் அக்பர். கடைசியில் அவர் மரண காலத்தில், மான்ஸிங்கும் அவருடைய நண்பர்களும் தங்களாலானமட்டும் அவருடைய எண்ணத்தை மாற்ற முயன்றனர். ஒன்றும் பயன்படவில்லை. அக்பரது எண்ணமே முடிவில் நிறைவேறிற்று.

"ராஜா மான்ஸிங், நீர் சொல்லும் யோசனை ஸரியன்று. அது என் மனதுக்கு ஒவ்வாது. உமது ஸஹோதரி மகன் ஸமர்த்தன் தான். எனக்குத் தெரியும். அவனிடம்தான் எனக்கு அளவிறந்த ப்ரேமை. ஆனால் தகப்பனைத் தள்ளி மகனுக்கு மகுடம் சூட்டுவதென்பது அடாத கார்யம். அதனால் பின்னாடி, பல தீமைகள் உண்டாகும். ஒருதரம் இவ்வாறு செய்துவிட்டால், இதுவே வழக்கமாகிவிடும். ராஜ்ய முழுவதும் சண்டை சச்சரவுகள் கிளம்பி நாடெல்லாம் படுகளமாகி ரக்த ப்ரவாகமாய்விடும். ஸாலிம் எனக்கு த்ரோஹம் நினைத்தான் என்பது உண்மையே. ஆனால் அவனை இம்முறை மன்னித்துவிட்டேன். இனி அவனை நல்ல வழிக்குக் கொண்டு வரவேண்டிய ப்ரயத்னங்கள் செய்யவேண்டும், நமது நண்பர் அபுல்பாஸலின் உதவியைக்கொண்டு நான் ஸாலிமைச் சீர்திருத்த உத்தேசித்திருக்கிறேன்" என்றார் அக்பர்.

"எஜமானரவர்கள் ஆஜ்ஞைப்படி நடக்க அடியேன் ஸித்தமாயிருக்கிறேன்."

"நாம் தக்ஷிணத்திலிருந்தபோது ஸாலிம் ஆக்ராவுக்கு வந்தான். கோட்டைக்குள் ப்ரவேசிக்க முடியவில்லை. அங்கிருந்து அல்லஹாபாத் சென்றான். பீஹார் நாட்டுக் கஜானாவிலிருந்த பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டான். வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் மும்முரமாய்ச் செய்துகொண்டிருந்தான். அப்புறம் தன் தாயாரைப் பார்ப்பதாகச் சொல்லிக்கொண்டு அவன் ரஹஸ்யமாய் இந்த அரண்மனைக்குள் வந்துபோனான். என் ஸேவகர்களும் என் உத்தரவின்பேரில் அவனைத் தடங்கல் செய்யவில்லை. அவன், தாயாரைப் பார்க்க வந்தவனாகத் தோற்றவில்லை. வேறு ஏதோ விசேஷ காரணம் இருந்ததாகத் தெரிகிறது. ஆற்றண்டை அவனுடைய குதிரையாட்கள் ஆயுததாரிகளாய் நின்றிருந்தனர். கோட்டைக்குள் பேடிகள் சிலர் அவனுடன் நுழைந்தனர். அவன் அந்தரங்க ஏற்பாடுகள் என்னமோ, எனக்குத் தெரிந்துகொள்ளவேண்டிய அவச்யமில்லை. என்னவானாலும் அவைகளால் ஒரு தீங்கும் நேரிடவில்லை. அதனுடன் போகட்டும். இன்றைய காலை அவனைத் தர்பாருக்கு அழைத்து மரியாதை செய்து அனுப்பினேன். அவன் அல்லஹாபாத் சென்றிருக்கிறான். அபுல்பாஸல்! நீர் ஒரு

பெரிய ஸைந்யத்துடன் அவ்விடம் சென்று அவனை நல்ல வழிக்குக் கொண்டுவர ப்ரயத்னம் செய்யவேண்டும். அபுல் பாஸல், நீர் அவ்விடம் செல்வது ஒரு ராஜத்ரோஹியைத் தண்டிக்கும் ஸேனாதிபதி முறையிலன்று; துஷ்ட ஸகவாஸம் செய்யும் ஒரு அசட்டுப் பையனுக்கு ஸன்மார்க்கம் போதனை செய்யும்படி அவனது தகப்பனார் தம் அன்பின் மிகுதியால் அனுப்புவித்த குருவாவீர் தாங்கள்."

"அப்படியே செய்கிறேன்." என்றார் அபுல்பாஸல்.

"அபுல்பாஸல், நீர் மஹா ஸமர்த்தர். அவரவர்களுடைய குணாதிசயங்களை யறிந்து அவற்றிற்கேற்றவாறு நடக்கும் வல்லமையுடையவர் தாங்கள். ஸன்மார்க்கபோதனை செய்வதற்கு ஸரியானவர் நீர்தான். ஸாம பேததானம் முதலிய உபாயங்கள் உமக்கு நன்றாய்த் தெரியும். ஸலீமை நல்வழிக்குக் கொண்டுவர வேண்டியது உங்களுடைய பொறுப்பு. தக்ஷிணத்திலிருக்கும் நமது மகன் இன்னொருவனுடைய அபிவ்ருத்தியைப்பற்றிக் கான்கானன் கவனித்துவருகிறார். அதுபோல் நமது மூத்த மகன் ஸலீமை உமதுவசம் ஒப்புவித்திருக்கிறேன்."

அபுல்பாஸல் வணங்கித் தலைகுனிந்து சக்ரவர்த்தியவர்களுடைய கட்டளையை நிறைவேற்றுவதாக வாக்களித்தார். அந்த அலுவலில் போனவர் போனவர்தான். திரும்பவேயில்லை. ஸலீம் இளவரசர் சில ஆட்களைத் தயார்செய்து அவரைக் கொலை செய்வித்ததாக அக்காலத்துச் சரித்ராசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அப்புறம் வங்காளத்தைப்பற்றிய ப்ரஸ்தாபம் உண்டாயிற்று. அந்த விஷயத்தில் மான்ஸிங்தான் அதிகமாய்த் தெரிந்தவர். கான்கானனைப்போல் அவ்வளவு வாக்சாலகம் போதாது. அவர் தனக்குத் தெரிந்த மட்டும் வங்காளத்து நிலைமையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் ஸ்வல்ப வார்த்தைகளில் எடுத்துரைத்தார். ஆப்கானியர்களுடைய ப்ரயத்னங்களெல்லாம், விளக்கின் அந்த்யகால ப்ரகாசத்தை யொத்தன. வங்காளம் முழுவதும் மொகலாயர் வசமாய் விட்டது; அந்நாட்டுச் சிற்றரசர்களெல்லாம் அக்பருக்குக்கீழ்ப்படிந்து அவரைத் தம்தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். ஹிந்து அரசர்கள் யாவரும் சக்ரவர்த்தியவர்களுக்குத் தங்களாலான உதவியை த்ருப்தியாய்ச் செய்யத் தயாராயிருக்கின்றனர். கடைசியில் நரேந்த்ரனுடைய ஜமீன்பெயரும் ப்ரஸ்தாபத்துக்கு வந்தது. மான்ஸிங் நரேந்த்ரனது பாட்டனாருடைய வீர தீரத்தைப் பற்றியும், அவர் மொகலாயருக்குப் புரிந்துள்ள உதவியைப்பற்றியும், கடைசியில் தோடர்மால் வங்காளத்தில் கஷ்டநிலையிலிருந்தபோது அவரொருவரே மொகலாயர் பக்கமிருந்து போர்புரிந்த விஷயத்தைப் பற்றியும் ஆதியோடந்தமாய் எடுத்துச் சொன்னார். முடிவாக நரேந்த்ரன் மொகலாயருடைய தண்டைச்சேர்ந்து கடும்போர்கள் பலவற்றில் அஞ்சிப் பின்வாங்காமல் முன்நின்று ஸேனாதிபதிகள் மெச்சும்படி சமர் புரிந்த விஷயத்தையும் கூறினார்.

ராஜாமான்ஸிங் அவர்கள் தன்னை இவ்வளவு புகழ்ந்து பேசியதையும் அவற்றையெல்லாம் சக்ரவர்தியவர்கள் செவிகொடுத்துக் கேட்டதையும் கண்டு, நரேந்த்ரன் ஆனந்த ஸாகரத்தில் ஆழ்ந்தான். அக்பரவர்கள் நரேந்த்ரனைப் புகழ்ந்து இரண்டொரு வார்த்தை பதில் சொன்னார். நரேந்த்ரனுடைய தேகம் புளகாங்கிதமெய்தியது. அவன் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்தான். பேச நா வெழவில்லை. சக்ரவர்த்தியவர்களுக்கு ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தான்.

"அமைச்சர்களே, இன்னொரு விஷயம் உங்களிடம் சொல்லவேண்டும். அதிக நாழிகையாய்விட்டது. இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி முடித்துவிடுகிறேன். தன் ஜன்மநாடாகிய மீவார் நாட்டில் இருபது வருஷகாலம் புறங்காட்டாமல் என்னுடன் போர்புரிந்த ராணா ப்ரதாபஸிங் சிறிதுகால முன்னர் வீரஸ்வர்க்கமடைந்தனர். அவரைப்போன்ற திடசித்தமுள்ள பகைவ்ரை நான் இது வரைக்கும் கண்டதில்லை. சமர் புரிவதென்றால், அத்தகைய சத்ருவுடன் சமர்புரியவேண்டும். அவரன்றோ சுத்தவீரர். மான்ஸிங், நீர் அவருடன் போர்புரிந்ததில்லையா, அவர் எப்பேர்ப்பட்டவர்?"

ராஜாமான்ஸிங்குக்குக் கோபம் ஒரு பக்கம்வர, அதைக் கூடியமட்டும் அடக்கிக்கொண்டு "ஆம், சமர் புரிந்திருக்கிறேன். இருபத்தைந்து வருஷத்துக்கு முன் ஹால்டிகடம் கணவாயில் ஸந்தித்திருக்கிறோம். அன்றைய தினம் மாலைக்குள் கணவாயெல்லாம் பிணக்குவியல்தான். அவர் இறப்பதற்கு முன் இன்னொருமுறை ஸந்தித்துப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று நான் வைரி கொண்டிருந்தேன். ஆனால் இப்போது ப்ரதாபஸிங் மாண்டுவிட்டார். இனி போனதைப்பற்றி நினைப்பானேன்? சுத்தவீரர் அவர் பித்ருலோகத்தில் ஸுகமாயிருக்கட்டும்."

ராஜபுத்ர வீரம் மாத்ரமல்லாமல், ராஜபுத்ர வைரிகளும் மனஸ்தாபங்களும் அக்பருக்கு நன்றாய்த்தெரியுமாதலால் அவர் ராஜா மான்ஸிங் வார்த்தைகளின் உட்கருத்தை நன்றாக உணர்ந்தார். ஆனால் அவர் தன்னால் முடிந்தமட்டும் இந்த வைரிகளையும் விரோதங்களையும் ஒழிக்க முயன்றார். ராஜபுத்ரத் தலைவர்களைத் தனக்குக் கீழ்ப்படியும்படிச்செய்து அவர்களுடைய ஸ்வதந்த்ரத்தை ஸாத்யமானமட்டும் தொந்தரவு செய்யாமல் சீராய்ப் பாதுகாத்துவரவேண்டுமென்பது அவருடைய முக்ய கோரிக்கை.

க்ஷத்ரியர்களுக்குள் ப்ரதாபஸிங் ஒருவர்தான் அக்பருக்குக் கீழ்ப்படியாதவர். ஆயினும் அக்பர் அவருடைய தைர்யத்தையும் சௌர்யத்தையும் புகழ்ந்தார். கூட, அக்பருக்கு ராஜ்யத்தின் வேறு பாகங்களில், தொல்லைகள் ஏற்பட்டன. இவ்வளவு காலமும் பின் வாங்காமல் தன்னை எதிர்த்த ரணவீரரைப் பின்னும் ஹிம்ஸிப்பதால் தன்னுடைய ஹிந்து ப்ரஜைகள் அத்ருப்தியடைவார்கள் என்று அக்பர் சில ஸந்தர்ப்பங்களில் எண்ணினார். இக்காரணங்களைக்கொண்டு சில வருஷங்களாக அக்பர் மீவார் ராணாவுடன் மும்முரமாய்ப் போர் புரிவதை நிறுத்திவிட்டார்.

"மீவார் நாட்டு ப்ரதான நகராகிய சிற்றூர் என் கையிலிருக்கிறது. ப்ரதாபஸிங்கின் புத்ரர் உதயபுரி என்னும் பட்டணத்தில் இருந்துவருகிறார். அந்நகரம் நல்ல மலை ப்ரதேசத்தின் நடுவிலுள்ளது. எளிதில் வெல்லக்கூடியதன்று. இனி நாம் அவரைத் தொந்தரவு செய்யவேண்டாம். அவர் ஸுகமே அவ்விடம் இருக்கட்டும்."

மான்ஸிங்குக்குக் கோபத்தால் கண்கள் சிவந்தன. ப்ருத்வி ராஜரோ அக்பருடைய சொற்களைக் கேட்டு ஸந்தோஷ மெய்தினார்.

"இதுவுமன்றி மீவார் அரசருக்கு ஓர் அநுதாப நிருபம் அனுப்ப உத்தேசிக்கிறேன். அவர் ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் தன் தகப்பனாருடைய செய்கை யுக்தமற்றதென்று உணர்ந்து இதர ராஜபுத்ரர்களைப்போல் என்னைச் சேர்ந்து இந்த அகண்ட ராஜ்யத்து அரசாட்சியில் எனக்கு உதவிசெய்வார் என்பது நிச்சயம். நாளைய தினமே என்னைச் சேரும்படி அவரை நிர்ப்பந்திக்க எனக்கு இஷ்டமில்லை. அவருக்கே அது என்றைக்கு யுக்தமெனப் படுகிறதோ அன்றைக்குச் சேரட்டும்; அவஸரமில்லை. அதுவரைக்கும், அவர் சண்டைகளின்றி ஸந்தோஷமாயிருக்கட்டும்."

மந்த்ரிகளனைவரும் அக்பரது ஏற்பாட்டை ஆமோதித்தனர். மான்ஸிங் மாத்ரம் வெறுப்புடன் மௌனமாயிருந்தான். அவனுடன் சேர்ந்தவர்கள் இரண்டொரு முல்லாக்கள் இருந்தனர். அவர்களுக்கு அந்நிய மதஸ்தனுடன் உடன்படிக்கை யென்பது கர்ணகடூரமா யிருந்தது. மந்த்ரிகளெல்லாம் வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டிய காலத்துங்கூட முல்லாக்கள் பேசத் துணிவார்கள்.

முல்லாக்கள் அத்ருப்தியடைவார்களென்பதை யறிந்த அக்பர், உடனே முல்லாக்களைப் பார்த்து "நண்பர்களே, உங்களுடன் பின்னர் சாவகாசமாய் வார்த்தையாடுகிறேன்" என்று சொல்லிவிட்டு இதரர்களைப் பார்த்து ப்ரதாபஸிங் குமாரராகிய அமார் ஸிங்குக்கு எனது அநுதாபக் கடிதத்தையும் உடன்படிக்கைச் சீட்டையும் எடுத்துப்போக இஷ்டமுடையவர் யார்?" எனக் கேட்டார்.

ஸர் லாலேகுப் பலம் ஹீன்ஸ்:—கல்கத்தா ஹைகோர்ட்டிவரம்புகடந்த ஞானத்தை மிகுந்த கியாதியுடன் ஹொதாரமா யிருக்வந்த இவர், லண்டன் பிரிவி க[illegible]மனியோ பிடிவாத [illegible]பெற்றிருக்கிறார்.

உலக ஸம்பவங்கள்

How the World moves

ராக்ஷஸவருஷம் முடிவடையப் போகிறது. ஆனால் அந்த ராக்ஷஸப்பூண்டு இன்னும் அழிந்தபாடில்லை. இராவணன் தலைபோல் வளர்ந்துகொண்டே இருக்கிறது. ஐரோப்பிய நாடுமுழுதும், விஷக்காற்றும் நெருப்பு மழையுமாகவே இருக்கிறது. 1915-ம் வருஷம் ஆரம்பத்தில், சில நாளில் ஜர்மனிநாடு பெருங்காடாய்விடும் என்று எண்ணப்பட்டது. ஆனால் அவ்வாறு எண்ணியது முற்றும் சரியல்லவெனத் தெரியும்படி செயயும் சென்ற வருஷம் நடந்த யுத்தப்போக்கைச் சற்றுக் கவனிப்போம்.

மேல் அரங்கத்தில், சென்ற வருஷாரம்பத்தில், எல்லாம் நல்லதாகவேயிருந்தது. மார்ன் நதியின்டைச் சண்டையில், பிரான்ஸில் மேல் ஜர்மானியரது ஏற்றம் தடுக்கப்பட்டது. சென்றவிடமெல்லாம் ஜெயித்தல், ஜெயித்த நாட்டைக் கவர்தல் என்னும் ஜர்மானிய ராணுவ அபிப்பிராயமும் முறியடிக்கப்பட்டது. அப்பெரிய சண்டையின்பிறகு, அவர்களும் தங்கள் அபிப்பிராயம் தவறு என்று கண் விழித்துக் கொண்டுவிட்டனர். பின் தமது ஜாலக்கால், தம்மைத் தோற்கச் செய்வது அசாத்தியம் என்ற பெருமெண்ணம் நமது நேசப் படையாரது மனத்தில் தோன்றும்படிச் செய்யவேண்டுமென்றே நடந்து வந்தனர். அவ்விதஞ் செய்தால் கௌரவத்தை இழக்காமல் ஸமாதானஞ் செய்ய இடமேற்படும் என்று எண்ணினார்கள். இவ்வாறு இவர் நடந்துகொள்வது முடியாது போயிற்று. யீப்ரிஸ் அருகுநடந்த சண்டையில் சேலே என்னுங் கோட்டையைக் கவரவந்த ஜர்மானியர், மனமழிந்து பின்வாங்கினர். ஆக, இந்தப் பாகத்திய சண்டையில் அவர் தங்களால் எவ்வளவு [illegible] யுமோ அவ்வளவும் செய்துபார் த்தனங்களெல்லா காரியம் பலித்தபாடில்லை; ரகாசத்தை யெ முனை யைத் தாக்கியுடை தும் மொகலாயர் இந்த ஸமயத்தில் ஜர்மனிநாட்டில் யுத்தஸாமான்கள் குறைந்துவிட்டனவென்று ஒரு வதந்தி உண்டாயது; யுத்தத்தில் 1,200,000-க்கு மேல் வீரர்கள் சேதமாய்விட்டனரெனவும் மதிக்கப்பட்டது. ஆகையால் மழைக்காலம் வருவதற்குள் ஜர்மானிய வீரியம் முதுகொடிந்து விழுமென்று யாவராலும் எண்ணப்பட்டது; உத்தியோக முறையிலும், இவ்வாறே கருதப்பட்டது. ஆகையால் இவ்வருஷம் பிறப்பதற்குள் ஜர்மனி பதராய்ப் பறக்குமெனத் திடமாக நம்பப்பட்டது.

கிழக்கரங்கத்தில், வார்ஸா என்னும் பெருங்கோட்டையை முற்றுகைசெய்த ஜர்மானியரை இருமுறை ருஷியர்கள் தோற்கடித்து ஓடும்படிச் செய்தனர்; டாநன்பர்க் என்னுமிடத்துப் பெருந்தோல்வியை யடைந்திருப்பினும், அதைப்போன்ற பெருந்தோல்வியை அகஸ்டவோ என்னுமிடத்து ஜர்மானியர்க் குண்டாக்கினர்; கலிஷியாவென்னும் பகைவரது நாட்டை ஏறக்குறைய முழுதும் ருஷியர் கவர்ந்தனர்; அந்நாட்டு முக்கியபட்டணமாகிய க்ராகோ என்னும் தலைநகரை முற்றுகை செய்துகொண்டிருந்தனர்; புகநோவியா என்னும் பகைவரது நாட்டையும் கைப்பற்றினர்; கார்பேதியன் மலையைத் தாண்டி ஹங்கரி நாட்டின்மேல் படையெடுத்தனர்; கணக்குமிதமில்லாமல் ஆஸ்ட்ரியர்களை அநேகமுறை நொறுக்கித் தோல்வியடையும்படிச் செய்தனர். இவ்வகைய ருஷியரது ஆற்றலால் ஆஸ்ட்ரியநாடு முற்றும் ஒழிக்கப்பட்டதென்று கருதப்பட்டது.

ஆசியதுருக்கியின் (Asiatic Turkey) வடக்கெல்லையாகிய காகஸஸ் மலையிடம் 1,00,000 துருக்கரைப்பலிகொண்டு, சென்றவிடத்தையெல்லாம் கவர்ந்து ருஷியர் கர்ஸ என்னும் நகர்மேற் படையெடுத்து அதையுங் கவர்ந்தனர். பால்கன் மலையிடம் செர்விய நாட்டார்

ஆஸ்ட்ரியரது இரண்டாவது படையெடுப்பைத் தடுத்து, 40,000 பகைவரைக் கைதியாக்கினர். நமது இராஜங்கத்தாரது நாவாய்ப் பெரும்படை, பகைவரது நாட்டம் கடல்மேல் எட்ட முடியாது பகைவர்களது நாட்டைச் சுற்றிலு முற்றுகையிட்டு, கடல்மேல்போக்குவரவுக்குப் பகைவர் விளைக்கும் பயத்தை ஒழித்துத் துடைத்துவிட்டது.

இவ்வாறு நமது நேசப்படையின் கலந்த செயலால், ஜர்மானியர் அடிவைத்த இடமெல்லாம் அபஜெயமாகவேயிருந்தது; அவர்களுடைய ஆட்கள் சேதமோ அளவிலடங்காது. அச்சேனையின் நன்னடத்தை கெடவாரம்பித்துவிட்டது. ஆஸ்ட்ரியர்கள் தோல்விமேல் தோல்வியாய் முதுகொடிந்து காலோய்ந்துவிட்டனர்; அவரது பெரும் பீரங்கிகள் ஸதா உபயோகித்ததால் மழுங்கிவிட்டனவென யாவராலும் மதிக்கப்பட்டன; அவரது சண்டைச்சாமான்கள் குறைந்துவிட்டனவென்றும் கருதப்பட்டது; குடிப்பதற்குக் கூழுமில்லா நிலையை அவர் அடைந்துவிட்டனரெனவு மதிக்கப்பட்டனர்; அவரது நாணயவாரி ஏற்பாடுகள் மணப்பாலாய் விட்டனவென்றே நினைக்கப்பட்டது. நிற்க, நமதுநேசராஜாங்கங்களின் நிலையோ இதற்கு நேர் விரோதமாக இருந்தது. போக்குவரவுக்குத் தடையே கிடையாது. யுத்தஸாமான்கள் வரவர அதிகமாக விருத்தி பெற்றுவந்தன. உணவுப் பொருள்களுக்கோ பயமே இல்லை; சேனையின் ஆட்களுக்கோ குறைவே கிடையாது; தேசங்கள் ஒன்றோடொன்று போட்டியிட்டுச் சேனைக்கு ஆட்களை அனுப்புகின்றன: நாணய நடமாட்டத்தைக் குறித்தோ சிறிதும் கவலைக்கிடமில்லை; ஆங்கிலேய நாவாய்ப்படை யிருக்கும்வரை அதற்கேன் குறைவரும்?

இவ்வாறு இருந்தபடியால் நேசப்படைகள் கலந்து ஜர்மானியப் படையைச் சின்னபின்னமாக்கிவிடலாம் என்று யோசித்தார்கள். அது தவறல்ல. ஆங்கிலேயரும், ப்ரெஞ்சுக்காரருமாகக் கலந்து மேலரங்கத்தில் பகைவனைத் தொலைத்துவிடுதல் என்றும், கீழ் அரங்கத்தில் ருஷியப்படை, பகைவரை மிதித்துத் தேய்த்துவிடும் என்றும் நேசராஜாங்கங்களால் கருதப்பட்டது.

ஆனால் 1915௵ முடிவில் யுத்தநிலை எப்படி இருக்கிறது? ஆஸ்ட்ரியா ஹங்கேரி நாடுகளிலிருந்து ருஷியர்கள் வெளியேற்றப்பட்டதல்லாமல், கலீஷியா நாட்டிலிருந்தும் வெளியாக்கப்பட்டனர். அம்மட்டோடிருக்கவில்லை. ருஷ்ய நாடாகிய போலண்ட், ஜர்மானியரால் கவரப்பட்டது. ஸெர்வியா நாடு முழுதும் பகைவர்பாலாகியது. துருக்கி தேசத்தின்மேல் படையெடுப்பாகிய டார்ட்னல்ஸ் செயல்கள் முற்றும் பின்வாங்கின. நம் துருப்புகள் தங்குவதற்குக் கிரீஸ் நாட்டில் இடம்பெற்று விளங்குகின்றன. ஆஸ்ட்ரியர்கள் தமது நாட்டில் இட்டாலியர் ஏறுதிருக்கும்படி வெகு கஷ்டத்துடன் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். மெஸபடோமியாவிற்கருகாமையில் நமது இந்தியத் துருப்புகள் குட்-எல்-அமாரா என்னுமிடம்வரை பின்வாங்கும்படி நேர்ந்தது. என்ன நினைத்ததென்னவாகியது?

இம்மாதிரியான நிலையைக்கண்டு சிலர் பயப்படுகிறதாகத் தெரியவருகிறது. பயப்படுவதற்கென்ன நிஜமான காரணமிருக்கின்றது? வெளிக்குத் தடபுடலாக ஜர்மானியர் செய்தது பெருஞ்செயலாகத் தோன்றினும், ஆழ்ந்து யோசித்தால்தான் அதன் நுட்பம் தெரியும். மேற்சொன்ன நிலைக்கு நமது நேசராஜாங்கத்தாரின் முற்றுப்பெறாத எண்ணம் சிறிது காரணமாயிருக்கலாம். ஆயினும், அது அவ்வளவு பிரபலமான காரணமல்ல. முதலில் கொஞ்சம் அச்ரத்தை. இனி அவ்வாறு ஜர்மானியரால் ஏமாற்ற முடியாது. நமது படை, இப்பொழுது வரவர ஜர்மானியரதைக் காட்டிலும் வன்மையிலும், பெருமையிலும் சிறந்ததாகிக்கொண்டே வருகிறது; வெடிகுண்டுகளின் தன்மையும் உயர்ந்துவிட்டது; ஆட்களும் வரவர அதிகமாகின்றனர்.

நிற்க, முன் சொன்னவாறு முடிந்ததற்குக் காரணம் ருஷ்ய தேசத்து நிலையைப்பற்றிய நம் தப்பு அபிப்பிராயமே. நாம் எண்ணாதபடி அவரது யுத்த ஸாமான்கள் குறைந்துவிட்டன. 'பகைவர்களால் தாக்குப் பிடிக்க முடியாது; நமக்குப் பலம் அதிகம்' என்று கொண்ட வரம்புகடந்த நம்பிக்கையுமிதற்குக் கொஞ்சமாதாரமாயிருக்கலாம். இப்படியிருக்க, ஜர்மனியோ பிடிவாதமாய் உணவுப்

பொருள்கள் முதலிய எல்லாவற்றையும், நிறைய விருந்தபோதிலும், கட்டிக்குள் கொண்டுவந்து, அதிகஞ் செலவாகா திருக்கும்படி ராஜாங்கதிட்டம் செய்தது. ருஷியர்களது நிலையை யுணர்ந்து, அவர்களை ஒரு கை பார்த்துத் தம்மைச் சிறிய நாடுகள் மதிக்கும்படியாகச் செய்யவேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் வேலை செய்து, ஆஸ்டிரியரது முறிந்த சேனையையும் ஒன்றுகூட்டிப் பலப்படுத்தி யுத்தத்துக்குத் தயார்செய்தது; தனக்குப் போராத காலமென்பதை நன்குணர்ந்து வெகு ஜாக்ரதையாக வேலை செய்து வந்தது. மேலரங்கத்தில் வேலைசெய்வது அசாத்தியமான காரியமென்றும், ஆயத்தப்படாத ருஷியரை, அவர் அவ்வாறு ஆகும் முன்பே அழித்துவிட வேண்டுமென்றும் வேலை செய்தது. தமக்கு ஜயம் கிடைக்க வேண்டுமென்றால், காலம் அதுதான் என்று உழைத்தது. இந்த ஏற்பாடு ஆழ்ந்த யோசனையால் ஏற்பட்டதுதான்; ஆனால் முழுதும் பயனடைய முடியாததாயிற்று.

மேலும், இதற்குப் பிரபலமான காரணங்களுமுண்டு. பிரான்ஸில் குளிர்நாள்போரில் ஷேம்பேன், வோயர், வாஸ்ஜஸ் என்னுமிடங்களிலும், நாவ்ஷாபேல், ஆர்டாய் என்னுமிடங்களில் நடந்த போரில், நேசத் துருப்புகள் ஜயமடைந்து வந்தாலும், அவரது வெடிகுண்டு சரக்குக் குறைவை ஜர்மானியர் அறிந்தனர். பால்கன் சிற்றரசுகள் எல்லாம் நேசத் துருப்புகளிடம் நல்ல அபிப்பிராயங் கொண்டிருந்தன; டார்ட்னல்ஸ் செயல்கள் துருக்கிக்குத் தலைவலியாகவே இருந்தன. இதற்காகத் தனது பலத்தை அச்சிறு நாடுகள் கண்டு மதிக்கும்படியாக வேலை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ருஷியர்மேல் ஜர்மனி படையெடுத்தது. இந்தச் செயல் முழுதும் பலிக்காவிடினும், பல்கேரியாவை அதனுடன் சேரும்படியாகச் செய்தது. ஆனாலும், ஆள்சேதம் சொல்லியடங்காது. அவ்வாறு ஜர்மனியால் நெடுங்காலஞ் சண்டையிட முடியாது.

1916-ம் வருஷ ஆரம்பம், நம்நேசத் துருப்புகளுக்குச் சங்கற்ப பங்கமாக விருப்பினும், நாம் பயப்படுவதற்குச் சிறிதும் இடமில்லை. காலஞ் செல்லச்செல்லத்தான் நமக்கு ஜயம். இந்த யுத்தம், எவ்வளவுக்கெவ்வளவு நாள் இழுக்குமோ, அவ்வளவும் நமக்கு நல்லது. வெளித் தோற்றங்கள் எப்படியிருப்பினும், உள்நாட்டம் எல்லாம் நயக்கே நல்லது. முக்கியமாக வேண்டிய அம்சங்கள் சில உண்டு: இராஜாங்க நிர்வாஹசக்தியில் திடநம்பிக்கை வேண்டும். நம்பிக்கையில்லாமைக்குக் காரணமுங் கிடையாது. ஆங்கிலேயரது நாவாய்ப் படையே இந்த யுத்தத்தை முடிக்கப்போவது. அது இருக்கும்வரை பயத்திற்குச் சிறிதுமிடமில்லை. சண்டையிற் கலவாத நாட்டார் பக்ஷபாதமில்லாமல் சொல்லுவதால், வரவர நமது துருப்பின் சங்கியை ஜர்மானிய நாட்டாரது சங்கியையைக் காட்டிலும் விருத்தியாகிக்கொண்டே வருகிறதாகத் தெரிகிறது. அவரது சேனைக்குச் சண்டைசெய்யு நாட்டிலிருந்தே ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. நமது துருப்பிற்கோ, போர்க்களங்கள் அல்லாத நாடுகளிடமிருந்தும் ஆட்கள் சேகரிக்கப்படுகின்றன. ஆகையினால் 1916-ம் வருஷ முழுதும் சண்டை செய்யும்படி நேர்ந்தால், ஜர்மனி இருக்குமிடந்தெரியா தழிந்துபோகும்; ஜயம் நமது தான். ஆனால், முன்போல் எதிரியின் பலத்தை அலக்ஷயஞ் செய்யாமல், அதையும் எண்ணிக் கருமம் துணியவேண்டும். அவ்வாறு நடக்க, எம்பெருமான் அருள் புரிவாரென்பது நிச்சயம். இராவணாதியர் கொலையுண்ட கதை நமக்குப் புதிதல்லவே! கொடுமையை யழித்தல், அவ்வளவு ஸுலபமான வேலையல்லத்தான் அடியடியாகத்தான் துலைக்கவேண்டும். நம்பிக்கையுடனும், வைராக்யத்துடனும், உத்ஸாகத்துடனும் முயற்சிசெய்தால் பலன் நம்மதே. அதற்குத் தக்கவாறு நாமும் நம்மால் எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்வோமாக!

* * *

அலுவல்மிக்க டிஸம்பர் மாதம் அகன்று விட்டது! வழக்கம்போலிருக்க வேண்டிய சென்னை பார்க் வேடிக்கை, எப்போதைக் காட்டிலும் சிறந்து ஓங்கியது. அதன் வரும்படியை யுத்தநிதிக்குச் சேர்க்கச்செய்த ஏற்பாடுகள் அத்யத்புதமானவை. அதனுடன் ஏற்படுத்தப்பட்ட சென்னைப் பெரும் பொருட்காட்சி மிகச் சிறந்தது; யாவருங் கண்டிருக்க வேண்டியது. வீடு கட்டவேண்டிய முறை, சாகுபடியின் விஷயங்கள், பட்டுப்பூச்சியை வளர்த்தல், துணி நெய்தல், சோப் செய்தல், இது முதலிய விஷயங்களைப்பற்றிய விபரங்கள் நன்கு காட்டப்பட்டதுடன் எதிருக்கெதிராகக் கண்டுணரும்படி போதனையுடன் விளங்கின. நெல் அறைக்கும் எந்திரம், தேக்கமரத்தால் செய்த சிறுவீடு, தந்தத்தால் செய்யப்பட்ட விஜயநகரத்தரசரது வாஸனைப்பெட்டி இவைகளெல்லாம் அத்யத்புதமானவை என்று நாம் சொல்லவேண்டாம். உத்ஸாகத்துடனும், உண்மை மனத்தோடும் ஏற்படுத்திய ஏற்பாடுகள் மிகச் சிறந்தவை. அதிலும், தாமாகவே வந்து, வாலண்டியர்களாக உழைத்த கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களின் பெருமையையும் நாமெடுத்துரைக்க வேண்டியதில்லை. மதராஸ் பார்க் வேடிக்கை, பெரும் பொருட்காட்சி, இரண்டிலுமாக ஒரு லக்ஷரூபா சேர்த்து யுத்த நிதிக்குச் சேர்ப்பிக்க வேண்டுமென ஏற்பாடு செய்தவர்களுடைய அபிப்பிராயம் நடந்தேறியிருக்குமென் நம்புகிறோம்.

* * *

ஏழாவது ஆயுர்வேத மஹாநாடு நமது நகரத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது. அநீதி என்றெண்ணும்படியாக, மதராஸ் மெடிகல் போர்டாரால், வைத்யர் பட்டியிலிருந்து டாக்டர் கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களுடைய பேர் ஆறுமாதம் வரை நீக்கப்பட்டது, இதற்கின்னும் பெருமியக்கம் கொடுத்ததுபோலும். டாக்டர் ஸர் ஸுப்ரஹ்மண்ய அய்யர் அவர்களுடைய வரவேற்பு மொழிகள், ஆயுர்வேதத்தின் முற்காலப் பெருமையைப்பற்றியே யிருந்தன. அக்ராஸநாதிபதியாகிய கவிராஜ ஜெய்மினி பூஷணராய், ஆங்கில, ஆரிய வைத்யமிரண்டையு முணர்ந்தவர். அவர் ஆயுர்வேத மஹிமையை விரித்துரைத்து, அது நமது கவனமின்மையாலும், ராஜபோஷணையின்மையாலும் குன்றி விளங்குகிறதென்றும், இப்பொழுது பலவிதங்களாகக் கருதப்படும் மேல்நாட்டாரது வைத்ய வழிகள் முழுதும் நமது ஆயுர்வேதத்திலிருந்தே எடுக்கப்பட்டன வென்றும், உலகத்தில் வழிபடும் வைத்யமுறை யாவும் ஆயுர்வேதத்தில் அடக்கம் என்றும் சொன்னார். மங்கி விளங்கும் நமது வைத்ய முறையைப் பொலியும்படிச் செய்ய, நாம் உழைக்க வேண்டுமென்றும், நமது அஜாக்ரதையால் இடை இடையே உண்டாகிய தவறுகளை நீக்கி எங்கும் வைத்யசாலைகள் வைத்துப் படிப்பித்து வைத்தியஞ்செய்யும்படிச் செய்ய வேண்டுமென்றும், அதற்குத் தக்கவாறு நமது ஜனங்கள் உத்ஸாகத்துடன் நடந்துகொள்ளவேண்டுமென்றும், ஆயுர்வேத புத்தகசாலைகளும், பத்திரிகைகளும் தோன்றி விளங்க வேண்டுமென்றும் எடுத்துரைத்தார். மேலும், கிருஷ்ணஸ்வாமி அய்யர் விஷயமாக நடந்த தவறை ரத்துசெய்யும்படிச் செய்யவேண்டுமென்றுந் தூண்டினார். கவர்ன்மெண்டார் இதற்கு உதவி செய்வாரென்பதற்குக் கனம் கார்டியூ அவர்களின் அபிப்பிராயமே சாட்சி.

வீண்பேச்சுக்களோடு போகாமல், ஆயுர்வேதக்காட்சியொன்று இதனுடன் ஏற்பட்டது யாவர்க்கும் ஸந்தோஷமாயிருக்கும். அதில் வைத்திய ஆயுதங்களும், மற்றும் வேறு வைத்திய விஷயமான பொருள்களும் காட்டப்பட்டன; வைத்தியவிஷயமாக எழுதப்பட்ட வியாஸங்களைப் பரிசீலனஞ்செய்து பரிசுகளும் அளிக்கப்பட்டன. இதில் பெண்பாலார் ஒருத்தி பரிசுபெற்றதெமக்குச் சந்தோஷம்.

* * *

இந்திய மஹாநாட்டின் முப்பதாவது பெருங்கூட்டம், இவ்வருஷம், பம்பாய் நகரத்தில் கூடியது. எந்த வருஷத்தைக் காட்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வரவு அதிகம்; விமரிசையுஞ் சிறந்தது. உபசார முரைக்க வந்த கனம் வாச்சா அவர்கள், போர்முனைக்கு நம்மாட்களைத் தாராளமாக அனுப்ப வேண்டுமென்று பேசியதோடு, சுய ஆட்சி, இந்திய சீர்திருத்தங்கள் இவைகளைப்பற்றிப்பேசி, வந்தவர்களை வரவேற்றனர். அக்கிராஸனாதிபதியாகிய கனம் ஸர் ஸத்யேந்த்ர பிரஸந்ந ஸிமஹர் அவர்கள், வெகு ஆழத்துடன் கூறிய புத்திகள் யாவரும் கொள்வார்கள் என்பது நிச்சயம். சுய ஆட்சியைப் பற்றி அவர் பேசியது பின்வருமாறு:—

“ யுனைடெட்ஸ்டேட்ஸ் தேசத்துக் குடியரசின் தலைவராயிருந்தலிங்கன்என்பவர் கூறியவாறு ஜனங்கள் ஜனங்களால் ஜனங்களுக்காக ஆளப்படுவதாகிய சுய ஆட்சியே, நமது லக்ஷ்யம். இப்படிச் சொல்வதால் நம்மைப் பலநாளாக ஆண்டுவரும் ஆங்கிலேயராஜாங்கமே சிறந்ததென்பதை யறியாதவனல்ல. சற்று ஆலோசித்தால், ஆங்கிலேய ராஜாங்கத்தால் நமக்குண்டான நன்மைகள் விளங்கும். ஆனாலும், ‘எவ்வளவு நல்ல ராஜாங்கமாக விருந்தாலும், அந்நிய ஆட்சி சுயஆட்சிக்கு ஈடாகாது’ என்று நமது முதல்மந்திரியார் கூறியுள்ளார். ‘ சுவர்க்கத்திலிருந்து தெய்வம் வந்தாண்டாலும் தன் தேசச்சட்டங்களைச்செய்யத் தனக்குள்ள. பாத்யதையை எந்த ஆங்கிலேயனும் விடமாட்டான்; அப்படி ஸம்மதிக்கவு மாட்டான். அவ்வாறு விட்டுவிட்டுப் பின் வயலையும் வாய்க்காலையுங் காண அவன்மனமெழும்புமா?” தம்மையடக்க ஆளில்லாமல் ஆளுமரசர் எத்தனையோ பேர்கள் நன்மையுண்டாகும்படி ஆண்டிருக்கின்றனர். ஆயினும், பிராஜாபத்தியத்தினுண்டாகும்புத்திகூர்மையும் நன்னடக்கையும், அபிவிருத்தியும் அவர்கள் ஆண்ட காலத்தில் உண்டானதில்லை. தனக்குத்தானே விழுந்து எழுவதைக் காட்டிலும் மேலான உதவி மனிதனுக்குச் சாஸ்திரங்களாலும் பெறமுடியாது. ஆகையால் சுய ஆட்சியை விரும்புவது அபிமானத்தை மேற் கொண்டல்ல; தேச சரித்திரங்களைப் படித்தறிந்த ஞானத்தின் பயனே ஆகும்”.

இவ்வாறு பேசியதன்றி, இராஜாங்கத்தாருக்கும் ‘ நோக்கமதுவேதான் என்றும் சித்தாந்தஞ் செய்த பிறகு, மேற்சொல்லிய லக்ஷியத்தை மூன்று வழியிலடையலாம் என்றார். அவையாவன:— (1) அந்த லக்ஷியத்தை இராஜாங்கத்தார் தாமாகவே கொடுத்தல்; (2) மேற்படி லக்ஷியத்தை நாம் கவர்ந்துகொள்ளல்; அல்லது (3) நம்முடைய புத்தி, நடை, செயல் இவைகளால் மேலோங்கி, சுய ஆட்சிக்குத் தக்க பாத்திரமாகி இனி கொடுக்காம லிருக்கமுடியாதென்ற எண்ணத்தை ஆள்பவர் மனத்தில் மூட்டிப்பெறல் தத்காலம் நமக்குச் சுய ஆட்சி கொடுப்பது, பிஞ்சில் பழுத்துப் பழுதாவதாகும், எட்டுச் சுரைக்காய்போல் உதவாது போகும்; இரண்டாவது வழி, முடியாததாகும்; மூன்றாவது வழி, அனுபவ ஞானத்தை ஒட்டியிருப்பதால் நன்மைக்கிடந்தரும்; அதற்குத்தக்கவாறு நாம் இந்திய சீர்திருத்தங்களை விரும்ப வேண்டுமென்றும் கூறினார். ஆனால் அதி அவசரமாகச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மூன்றுள்ளன வென்று வற்புறுத்தினார். அவைகளாவன:—

(1) ராணுவத்தில் நம்மவர் உத்தியோகப் பதவிகளைப் பெறல்; ஜனங்களை ராணுவப் பயிற்சியிற் பயிற்றல்:

(2) ஸ்தல ஆட்சியை விசாலப்படுத்தல்:

(3) நம்முடைய வியாபாரம்,. கைத்தொழில், விவசாயம் இவற்றை விருத்திசெய்தல்.

பிறகு வழக்கம்போல் செய்யவேண்டிய ஒழுக்கங்களைப்பற்றிப் பேசினார். இந்த மஹாநாட்டின் முடிவில், முன் ஸூரத்தில் பிரிந்தமஹாநாட்டை ஒன்றுபடுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன; வரும் வருஷம் லக்ஷ்மணபுரத்தில் (Lucknow) பொதுஜன சங்கமாக, ஒன்றுகூடிய அபிப்பிராய மந்திரமாக அது கூடும் என ஸந்தோஷப்படுகிறோம்.

***

இந்தியத் தொழில் ஆலோசனை சங்கம்.— இதன் பதினோராவது கூட்டம் பம்பாயில் கூடியது. சிறிய கைத்தொழில்கள் பல ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், ஆங்கில வியாபாரிகள் இருக்குமிடங்களில் இந்திய வியாபாரத்தைக் கவனிக்கக் கமிட்டிகள் நியமிக்கப்படவேண்டியதென்றும், ராஜாங்கத்திற்கு வேண்டிய பொருள் யாவும் கூடியவரை இந்நாட்டிலிருந்தே வாங்கும்படி வற்புறுத்த வேண்டுமென்றும், இராஜதானிப் பட்டணங்களில் வியாபார இலாகாத் தலைவர்களால் பொருட்காட்சிகளை ஏற்படுத்தும்படி ராஜாங்கத்தாரை கேட்டுக்கொள்ள வேண்டு மென்றும், தொழில் விஷயமான பாங்கிகளை ஏற்படுத்தி, ஐக்கிய நாணய நிதிகள்போல், அவை கைத்தொழில் விஷயங்களிற் குதவிசெய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. அக்கிராஸனாதிபதியார் ஸக்சி என்ற ஊரில் ஏற்பட்டிருக்கும் டாடா தொழிற்சாலையின் மேல்பார்வை பார்ப்பவர்க்கு ராஜப்ரதிநிதியாரின் சம்பளத்தைக் காட்டிலும் அதிகமாகக்கொடுக்கப்படுகிற தென்றும், தொழில் விருத்தியால் அந்த நிலைமைக்கு ஒவ்வொருவரும் வரலாமென்றும் எச்சரித்தார். தொழில் விருத்திக்கேற்ப நடக்க வேண்டுமென்று நமது ஜனங்களுக்குச் சொல்ல வேண்டுமோ?

***

அநேக ஸபைகள் வழக்கம்போல் கூடினவாயினும், சில புதிதாகத் தோன்றி விளங்குவதெமக்குச் சந்தோஷம். முக்கியமானவை இரண்டு. இந்திய வியாபார ஜனஸங்கம அதில் ஒன்று. முதல் தடவையாக வியாபாரத் தலைநகரான பம்பாயில் அது கூடியது. இந்தியாவிலுள்ள எல்லா இந்திய வியாபாரச் சங்கங்களும் ஒற்றுமைப்பட்ட சங்கம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்றும் அச்சங்கத்தின் பிரதிநிதிகள் இந்திய வியாபாரத்தை எவ்வாறு உயர்த்தலாமென்று யோசித்து வியாபாரவிஷயங்களைத் தெரியப்படுத்தும்படிக்கும், இந்திய வியாபாரங்களின் குறைகளை ராஜாங்கத்தார்க்குத் தெரிவிக்கவும் இருக்கவேண்டியதென்றும் தீர்மானிக்கப் பட்டது. ரயில்மார்க்கமாக அனுப்பப்படும் பொருள்களுக்கு விதிக்கப்படும் கட்டணத்தின் தாரதம்மியத்தைராஜாங்கத்தார் கவனிக்க வேண்டுமென்றும், சாராயத்தைக்கொண்டு செய்யப்படும் தொழில்களுக்கு வரி விதித்திருப்பது இந்தியக் கைத்தொழில்களின் விருத்திக்கு மிகத் தடங்கலாய் இருக்கிறதென்றும், வியவசாயிகளுக்குச் செலவு குறைவாயும் ஸௌகர்யமாயுமுள்ள இடங்களில் கிணறுகளின் மூலமாக ஸாகுபடி செய்வதை ராஜாங்கத்தார் மேலோங்கிப் பரவும்படிச் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. ஒத்துழைத்தால் பலனில்லாமல் போகுமா? வியாபார விருத்தி தேச விருத்தியல்லவா? இச்சங்கம் என்றும் வாழ்ந்து நமது வியாபார விருத்தி மேலோங்கும்படியான புத்தியைப் புகட்டுமாக!

***

முதல் முதலாக, இவ்வருஷம் கூடியதாகச் சொல்லப்பட்ட ஸபைகளில் இரண்டாவது, இந்தியப் பத்திராதிபர் சங்கம். இச்சங்கத்தின் காரியங்கள், இந்திய மஹா நாடுப் பந்தலிலேயே நடந்தேறின. கனம் பண்டித ஸ்ரீ மதன் மோஹன மாளவியா அக்கிராஸனம் வகித்தார். இச்சபையில் செய்யப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:—

(1) கொடுமையான விதிகளிலிருந்து பத்திரிகைகளைக் காக்க ஒருவர்க்கொருவர் உதவவும், முழு இந்தியாவிலுமுள்ள பத்திராதிபர்கள், பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள், அச்சுக்கூடத்தலைவர்கள், சொந்தக்காரர்கள் கூடிய இந்தியப பத்திராதிபர் சங்கம ஒன்றை ஏற்படுத்தல். (2) சங்கத்தின் விதிகளை ஆலோசித்து முடிவுசெய்ய 40 பேர் அடங்கிய கமிட்டி ஒன்று தயாரிக்கப்பட்டது. (3) 1910-ம் வருஷத்திய அச்சுச்சட்டத்தை ரத்துசெய்ய ஒரு வேண்டுகோளை மேற்சொன்ன கமிட்டியார் தயாரித்தல். இவ்வியக்கம் இந்தியப் பத்திரிகைகளின் கஷ்டங்களைப் போக்க ஒரு நல்ல வழி என்றே நம்புகிறோம்.

***

இந்திய ஆசார சீர்திருத்த சங்கமென உலாவும் மஹாநாடு, 29-ம் முறை பம்பாயில் காங்கிரஸ் பந்தலிலேயே கூடிற்று. ஸர் நாராயண சந்த்ரவற்கர், வந்தவரை வரவேற்றனர். அப்பொழுது ஜாதிபேதத்தால் வரும் தீங்குகளைப் பற்றிப் பேசி அவ்வாறு பேதமில்லாமல் சாப்பாடும் கலியாணமும் நடக்கவேண்டுமென்று கூறினார். அக்கிராஸனாதிபதியாகிய ஸ்ரீகார்வே, மேற்சொன்ன விஷயங்களன்றி பெண் கல்வி வேண்டுமென்றும், விதவா விவாஹம், சமைந்தபின் விவாஹம், இவை அவசியம் என்றும், கோஷா ஏற்பாடுகளை வேரறுக்க வேண்டுமென்றும், தாழ்ந்த ஜாதியாரை மதித்துயர்த்த வேண்டுமென்றும், வயது அடையாப் பெண்களைக் காக்க வேண்டுமென்றும், ஆசாரசுத்தம் ஏற்பட வேண்டுமென்றும், ஒப்பந்தக்கூலிகள் வெளிநாட்டிற்கேகுதலைத் தடுக்கவேண்டுமென்றும் பேசினார். எல்லாம் ஸரிதான். சிலவிஷயங்களில் காலத்தின் போக்கை கவனித்தாரில்லை போலும்! அடித்துப் பழம் பழுத்த தெங்கேனுமுண்டா?

***

இந்திய மது விலக்கு போது ஸங்கம்.— இது பனிரெண்டாவது முறை சென்ற

மார்கழிமீ 15உ பம்பாயிற் கூடிற்று. அக்கிராஸனம் வஹித்த ஐக்கியமாகாணத்திய கனம் ராய் பஹதூர் முன்ஷி கோகுல் பிரஸாத் அவர்கள் மதுவிலக்கிற் கென்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டுமென்றும், சிறுவர்களது பாடபுத்தகத்தில் மதுவிலக்கைப்பற்றிய பாடங்களைச் சேர்க்கும்படியும், பட்டணங்களில் இருக்கும் சாராயக்கடைகளை அப்புறப்படுத்தவும், உத்ஸவ முதலிய ஜனஸங்ககாலங்களில் சாராய விற்பனையைத் தடுக்கும்படியும், சாராயக்கடைகளில் குடிக்க இடம் கொடாது, முத்திரித்த ஸீஸாக்களில் சாராயம் விற்கச் செய்யவும், குடிக்குற்றங்களைக் குறைக்கவும், லைஸென்ஸ் கொடுக்கு மதிகாரத்தை வருமான இலாகாவிலிருந்து பிரிக்கவும், கடைகளை ஏலத்தில் விடும் வழக்கத்தை நீக்கவும், சாராய விற்பனையைக் குறைக்கவும் ஏற்பாடுகள் செய்ய ராஜாங்கத்தார் கவலைகொள்ள வேண்டுமென்று பேசினார். அவ்வாறே தீர்மானிக்கப்பட்டது. குடியால் வருங்கேட்டையொழிக்கும் பாக்கியம், ராஜாங்கத்திற்கு லேசாக முடியும்: நாமும் அம்முயற்சியை விடாமல் கைக்கொள்வோமாக!

***

எல்லா இந்திய ஹிந்து மஹா ஸபையின் இரண்டாவது கூட்டம் பம்பாயில் கனம் பண்டித ஸ்ரீ மதன் மோஹன் மாளவ்யரின் அக்ராஸனத்தின்கீழ்க் கூடியது. வரவேற்பு மொழிகளுரைத்த ஸர் பாலசந்த்ர கிருஷ்ண அவர்கள் ஹிந்து மதஸ்தருக்கும் அன்னிய மதஸ்தருக்கும் மனஸ்தாபமில்லாமையும் ஒற்றுமையும் இன்றியமையாதவென நன்கு விளக்கினார். அக்ராஸனாதிபதியரும் ஹிந்து மதத்தைச் சீர்திருத்தி, முன்னிருந்த உன்னத நிலையைப் பெறும்படிச் செய்து, அம்மதத்தை உறுதிப்படுத்த ஒழுகவேண்டியது ஒவ்வொரு ஹிந்துவிற்கும் கடமை என்றார். பின் ஸபையின் வியவகாரங்களில், மாகாணப் பிரிவுகளில் ஹிந்து ஸபைகள் ஏற்பட வேண்டுமென்றும், அவைகளில் ஸநாதன தர்மக்கோட்பாடுகளையாவது, வேறு ஹிந்து ஸித்தாந்தங்களையாவது புகட்டித், தமக்குள் ஒற்றுமையும் ஐக்கியமும் ஓங்கவும், அஜ்ஜாதியின் குறைகளை விசாரிக்கவும் இடமிருக்கும்படித் தீர்மானிக்கப்பட்டன. ஹிந்துக்கள் மற்ற ஜனங்களிடம் நேசத்தோடும் ஐக்கியத்தோடு முழைத்தலே தேசத்திற்கு க்ஷேமம் என்றும் தீர்மானம் செய்யப்பட்டது. தை பிறந்தால் வழிபிறக்கு மென்றுவலாய் இருப்பதுபோல், யாவரும் மேல்நோக்கத்தை நடத்தையிற் கொண்டுவர ஆவலாயிருப்பார்களென்றும் நம்பிக்கைக்கு அடிசருக்கவும் காரணமுண்டோ?

***

எல்லா இந்திய முஸ்லீம் லீக்.—இதன் 8-வது கூட்டம் பம்பாயிற் செவ்வனே நடந்தது. பார்க்கவந்தவர் செய்த அக்ரமம் பொறுக்க முடியாது, தமது பதவியைப் போலீசாரைத் தருவித்துக் குறைத்துக்கொள்ளக் கூடாதென்று, ௸ லீக்கின் மெம்பர்கள் மாத்திரம் தாஜ்மஹாலில் கூடினார்கள். அக்ராஸனாதிபதியாகிய மஷ்ரல் ஹக் என்பவர் செய்த உபந்நியாஸம் மெச்சத்தக்கது. ஹிந்து மஹம்மதீய விவாதம் இருக்கக் கூடாதென்றும், இருப்பனவற்றை ஒழிக்க இடம் பார்க்கவேண்டுமென்றும், இராஜாங்கத்தில் வரவர உயர்ந்த பதவியை ஐரோப்பியர்க்குச் சமமாகத் தமக்குக் கொடுக்க வேண்டுமென்றும், ராணுவப் படைகளில் உத்தியோகம் தம்மவர்க்குக் கொடுக்கவேண்டுமென்றும், அவர் வற்புறுத்தினார். வரி முதலியவைகளைக் குறைக்க வேண்டுமென்றுங் கூறினார்.

***

முஸ்லீம் கல்விச் சபையின் அக்ராஸனாதிபதியாக கனம் அப்துர் ரஹீம் அவர்கள் பேசியமொழிகள் மஹம்மதியர்க்கேயன்றி யாவர்க்கும் சிந்தைசெய்ய நற்பலன் தரும். இதைப் பற்றிப் பின் விவரித்தெழுதுவோம். இன்னும் பல ஸபைகள் சென்ற மாதங்கூடி, பம்பாய் நகரத்தைக் குதூகலத்தில் ஆழ்த்தின. தென் இந்தியாவிலும், அகோபில மடத்து சிஷ்யஸபை, தென்னிந்திய தமிழ் வைத்திய சங்கம் முதலியன கூடின. நிற்க, மேற்சொன்ன ஒவ்வொரு ஸபையிலும் ஜனங்கள் நமது இப்போதிய கவர்ணர் ஜனரலாகிய லார்ட் ஹார்டிஞ் பிரபுவின் இராஜப்பிரதிநிதித்வ காலத்தை

நீடிக்கும்படிச் செய்யவேண்டுமென்று வெளியிட்ட அபிப்பிராயமெங்கும் கோஷித்துக்கொண்டிருக்க, அவ்வாறின்றி அவர்க்குப் பதிலாக, ஆஸ்ட்ரேலியாவில் ஒரு பாகத்திற்குக் கவர்னராயிருந்த சேம்ஸ் போர்ட் பிரபு என்பவர், வரும் ஏப்ரல்மீ முதல் இந்திய ராஜப் பிரதிநிதியாக ஏற்படுத்தப்பட்டது மனதைச் சிறிது சஞ்சலப்படுத்தலாம். ஆயினும், எங்கும் ஒரே விதமாகவும், இந்தியரிடம் புத்ர வாத்ஸல்யத்துடன், தாய்போல் நடந்துகொண்ட ஹார்டிஞ் பிரபுவின் நெறியைக் கடைப்பிடித்து இனிவரும் இராஜப்பிரதிநிதியார் நடந்துகொள்வார் என்று யார் விரும்பார்? ஹார்டிஞ் பிரபுவின் குணமும் பெருமையும் பல நற்குணமும் அளவிலடங்கா; இவர் உருவம் யாவர் மனத்திலும் அழுந்தியுள்ளது; அவர் தமது நாட்டைச்சேரினும், இந்தியரது மனம் அவரைப் பின்பற்றித் துணையாகும். அவர் நீடூழிவாழ்க! நமது புதிய கவர்னர் ஜனரலவர்கள் ஆதரவுடன் ஆள இந்தியர் வரவேற்கின்றோம். கடவுள் அவர்க்கு நல்ல மனமும், ஸத்யநிலையையும் கொடுத்து, நமது ஆளுகை அவர்க்கோர் ஆநந்தமாகவும் நமக்குப் பேரன்பாகவும் விளங்கச்செய்வாரெனப் பிரார்த்திக்கின்றோம். சுபம்!

ஸ்ரீ காசி ஹிந்து யூனிவர்ஸிடி.—இதற்காக கங்காநதிதீரத்திலே கட்டப்படும் கட்டடத்திற்கு பிப்ரவரிமீ 4உ அஸ்திவாரக்கல் நாட்டும் வைபவச் சிறப்பு, நமதன்பார்ந்த ராஜப் பிரதிநிதி யவர்களதாகும். அம்மஹோத்ஸவம் மிகச் சிறப்பாய் நடந்தேறுமென்பதற்கு, அச்சமயம் வரப்போகும் மாகாண கவர்னர்கள், லெப்டினண்ட் கவர்னர்கள், தேச மன்னர்கள், பல இந்திய பிரமுகர்களும், அச்சுபதினத்திற்குப் பின் 4,5 நாட்கள் தக்கவர்களால் நடைபெறப் போகும் அருமைப் பிரசங்கங்களும் சுபசூசகங்களாகவே இருக்கின்றன. நமது ராஜப்பிரதிநிதி யவர்களும் அடுத்த மாதத்தில் இந்தியாவை விட்டுப்போகவிருப்பதால், ௸ சுபதினத்தன்று எல்லோரும் ஏகோபித்து அவர்க்கு ஆசிகூறி நம் நன்றியறிதலைத் தெரிவிக்கத் தகுந்த சமயமும் அதுவே யாகும்.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

ஸர் சயித் ஆலி இமாம்.—இந்தியா கவர்ன்மெண்டில் சட்ட மெம்பராயிருந்து வந்த இவர், தம் ஸ்தானத்தைவிட்டுவிட்டுச் சீமைக்குச் சென்றிருக்கிறார். இவருக்குப் பதிலாக மிஸ்டர் லௌண்டீஸ் அந்த ஸ்தானத்தை வகித்து வேலை பார்த்து வருகிறார்.

***

பஞ்சாயத்து சபைகள்.—பம்பாய் மாகாணத்திலுள்ள ஆண்டு சமஸ்தானத் தலைவர் தமது சமஸ்தானத்தில் பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருவது தேச நன்மைக்குரிய காரியமே யாகும்.

***

சென்னை அட்வோகேட் ஜனரல்.—மிஸ்டர் F. H. M. கார்பெட் ரஜா வெடுத்துக்கொண்டு தம் ஜன்மதேசம் போயிருக்கிறார். அவர் ஸ்தானத்தில், ஹைகோர்ட் வக்கீல்களுள் ப்ராபல்யஸ்தரும், பொது விஷயங்களில் அக்கறை காட்டிவருபவருமான ஸ்ரீமான் S. சீனிவாஸய்யங்கார் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதைக்கேட்டு மிகவும் சந்தோஷிக்கிறோம்.

***

1913-14-ம்௵ வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியான சாமான்கள்:—

பெப்பர்மண்ட் தினுசுகள்	26,33,000
டப்பிகளிலும், சீசாக்களிலும் அடைத்த பதார்த்தங்கள்	56,69,000
கட்டிப்பால், வகைரா	41,52,000
பிஸ்கோத்துகள்	44,81,000
காகிதங்கள், அட்டைகள்	1,58,77,000
வளையல்கள்	80,45,000
புட்டிகள்	21,93,000
தகடுகள், தட்டுகள்	22,35,000
புனல்களும், குளோப்புகளும்	17,93,000
சோப் தினுசுகள்	75,06,000
பூட்ஸுகளும், செருப்புகளும்	79,26,000
எழுதுவதற்கான சாமான்கள்	69,98,000
குடைகள்	53,10,000
விளையாட்டு சாமான்கள்	44,17,000
கத்தி முதலியன	28,33,000
பதனிட்ட தோல்கள்	15,37,000

ராக்ஷஸ ௵ மாசி௴ CALENDAR—பஞ்சாங்கம்

விவேக போதினி

" எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸ ௵ தைமீ : 1916-௵ பிப்ரவரிமீ } பகுதி 8

பழமொழிப் போதம்

PROVERBS EXPLAINED

காமியகன் மத்தைநெடுங் காலம் விதிமுறையால்
தாழியற்றின் எண்ணம் தனதுபல—னுமிடைந்து
புல்லுகனு வொத்தழியும் பொன்னு றேறுதல்'மலே
கல்லி யெலிகவர்தல்' காண். (40)

'எரியும் நெருகிழிகளின் எஞ்ஞெகிழி நன்றும்'
விரியுணர்வைப் போக்கும் விடயத்—திரளவற்றின்
எவ்விடயஞ் சாந்தினே மீயும் திருவிடய
செவ்வியதாம் ஞானமலா தே. (41)

தன்க ருத்துத் தனித்து நிகழ்வுற
நன்கு ணர்ந்திடின் ஞான சுகமதா
யுன்சொ ரூப முனக்கு விளங்குறும்
'முன்கை நீளின் முழங்கையும் நீளுமால்'. (42)

'ஆமாம் விலாங்குகாண் அன்றன்று சர்ப்பமே'
சேமானு போகஞ் செய்வுலகம்—யாமாள்வோம்
என்றுழன்தா ரேபருவத் திவ்வுலகு-தோற்றமியான்
நின்றுணர்மெய் யின்பமெனும் நோக்து. (43)

'ஆமாம் அரவேயன் றன்று விலாங்கே' காண்
யாமா வதுசிவ னென்றிசைந்து—தாமாழ்கும்
அன்னோர் விசாரவுணர் வான்மெய்ச் சிவமென்று
தன்னோர்வா ரேபருவத் தால். (44)

'உப்பி ருந்திடற் பருப்பிரா பருப்புதில் உப்பின்'
திப்பர் முத்திவேட் புதிற்பிற சாதன மியலா
எப்பில் மற்றசா தனமுதில் முத்திவேட் பிலதால்
ஒப்பு மீச்சுர கருணையாம் பாக்கியம் உறுக்கே. (45)

வில்லார் நித்தி யா நித்த விவேகம் வைராக் கியஞ்
சாந்தம்; புல்லா நின்றும் வீட்டினவாப் பெர்ருந்தா
ரெங்ஙன் மனனமதில்; வல்லா ராகி வீடடைவர் மன
னம் முமூட்சு செயலன்றோ; 'எல்லா முளது பெட்
டகத்தே யிலேயூண் செய்யக் கலமிலதே'. (46)

'நூற்றைக் கெடுத்தது குறுணி'ஆற்றற் குணத்திர
ாதிகம், ஏற்றுப் பினர்ச்சில விழிவும்', ஊற்றத்
துறிற்புக ழுளதோ. (47)

தீவா சனைவசத்தே செல்லு முயிர்களிடத்
தோவா வுபேட்சை புரிதுவெறுத்—தாவாதஞ்
சித்தத்தில் அன்னார் செயிரேற் பது'கல்லேக்
குத்திக்கை நோவார் குணம்' (48)

'இலங்க னம்பர மௌடத' மென்றல்
பலங்கு றைந்துவிட் சேபநோய் பாறப்
புலங்க ளின்வழிப் புகாவகை நிராசை
நலந்த னெஞ்சகம் நண்ணுவ தன்றே. (49)

'உண்ணுதுர் சுற்றிடினும் உடுக்காம லொருவீடும்
நண்ணுதே' யருட்குருவால் ஞானநிலை யுணராமல்
கண்ணுய பலநூல்கள் கண்டிடினும்அடக்கமுளத்
தண்ணுது பரஞானி யகமடைத லுழகன்றே. (50)

'விளைற் பயிரோ, முளையிற் றெரியும்'
வளமுத் தியைமே, வுளமற் புதமே, (51)

'தானடங்குங் காலைத் தனது குலமடங்கும்'.
மீனமனம் சாந்தி பெறுமாகில்—ஞான
கருமவகை யிந்தியங்கள் காயம் பிராணன்
சருவமுமே சாந்தியுறுந் தான். (52)

ராக்ஷஸஹு பங்குனிமீ CALENDAR—பஞ்சாங்கம்

விவேக போதினி

தொ.8] ராக்ஷஸஹு: தைமீ [பகுதி.8

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

7. ஜீவன் : தேஹம்: அவஸ்தை

முன்னர் எடுத்தாராய்ந்தவைகளி லிருந்து, ஸங்மார்க்க முயற்சி காலங்களில் ஸகுணமாகவே தோன்றி, இவைகளின் முடிவான மோக்ஷநிலையில் நிர்குணமாக மாத்ரம் தான் உள்ளபடி, தான்மாத்திரமாக எல்லாவற்றையும் விழுங்கி நிற்கும் ஈச்வரனை வழிபட்டு, உள்ளது உள்ளபடி ஆகிவிடுவதே எல்லா ஜீவராசிகளது முடிவான நிலை என்பது நன்கு விளங்கியிருக்கும். இந்நிலையை அடைவதற்கே எல்லா உயிர்ப்பிராணிகளும் அறியாமலும், சில பெரியோர்கள் நன்கு உணர்ந்தும் தொழிற்படுகின்றனர். பொதுவாகஜீவர்களுக்கு இந்த நோக்கத்தின் விளக்கமே இல்லாததாலே குருட்டுத்தனமான முயற்சியால் அவர்கள் எல்லோரும் புண்யபாபங்களில் முனைந்து விஷயஸுக மயக்கத்தால் பெரும்பாலும் பாபங்களுக்கு ஆளாகி பெருந்துக்கங்களை அனுபவிக்க வேண்டி வருகின்றது. பெரியோர்களோ முயற்சி ஒழுங்கால், வரவர பாபங்களிலிருந்து விடுபட்டு, புண்யபலப்பற்றும் நீங்கப் பெற்று மோக்ஷநிலையை நோக்கி அணுகிப் போவர். இப்படி ஏற்படும் முயற்சி விசேஷங்களால் ஜீவராசிகளுக்கு உண்டாகும்நிலை விசேஷங்களை எடுத்து ஆராயப்புகுவோம்.

எல்லா ஜீவராசிகள் விஷயத்தையும்விட மானிடர் விஷயமே நமக்கு முக்கியம்: அதை எடுத்து ஆராய்வோம். எந்த உயிர்ப்ராணியை எடுத்துக்கொண்டாலும் அதன் தேஹமே நமக்கு எளிதில் எதிரிடையாக விளங்கும். இதை ஆராய்ந்துபார்த்தால் மச்சை,மேதஸ், அஸ்தி, மாம்ஸம், ரக்தம், சர்மம், சுக்லம், ஆகிய இவ்வேழுவஸ்துக்களாலாக்கப்பட்டுத் தலை,கால், தொடை, முதுகு, மார்பு,கை, கழுத்து ஆகிய ஏழு அங்கங்களுடன் அமைந்து காணப்படும். இதற்கே ஸ்தூலதேஹம் என்று பெயர். இதில் ஒழுங்கான தொழில்கள் நடைபெறுவது நமக்கு வெளிப்படையாதலால் இதில் ஜீவன் அல்லது உயிர் இருந்து வேலை செய்கிறது என்று தெரியவருகிறது. மரண காலத்தில் தேஹம் இருந்தும் ஒன்றும் நடைபெறத்தகாது வெறும் கட்டைக்கு நிகராக தேஹம் ஆகிவிடுவதாலும், தூக்ககாலத்தில் இதைப்போல செயலற்றிருப்பினும் மறுபடி தொழிற்பாடு ஏற்பட இடம் இருப்பதாலும், இத்தொழில்களுக்கு எல்லாம் ஆதாரமான ஜீவன் அல்லது உயிர் இந்த ஸ்தூல தேஹத்தை விட்டு வேறானதாக இருத்தல் வேண்டும்: அதன் இயற்கையால் தேஹத்திற்குத் தொழிற்படும் தன்மை ஏற்படுகிறது: ஆதலால் தொழிற்பாடு, தேஹத்தின் இயற்கையல்ல செயற்கையே, பானகத்தின் தித்திப்புபோல: என்பவை தெரியவரும். இந்த ஸ்தூலதேஹம் அசுத்தமானது; துக்கக்களஞ்சியம்; அநித்யம். ஜீவன் தொழிற்பாட்டிற்கு இது கருவியாக இருப்பதால்; இதன் குற்றங்களால் மோக்ஷ முயற்சிக்கு

யாதொரு கேடும் வாராதிருக்கவே ஈசன் சாஸ்திரங்கள் வழி சௌசாதி காயிககர்ம ஒழுங்குகளைவெளியிட்டிருக்கிறார். வர்ணாச்ரம தர்மத்தைப்பற்றி விவரிக்குங்கால் இதைப்பற்றி எடுத்து நன்கு ஆராய்வோம். இந்த ஒழுங்குகளுக்குள் அடங்காது வேறு வழியாகக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ ஸ்தூலதேஹத்தை நடத்திவந்தால், தேஹத்திற்குக் கேடுகளும், அல்லது தேஹவிஷயம் மோக்ஷ விஷயத்திற்கு நேர் தடையாகவும் வந்து, வாழ்க்கை நோக்கம் கைகூட இடமில்லாமலே போய்விடும். நாகரீகமற்ற காட்டு முராண்டி ஜனங்கள், சாஸ்திர விஷயங்களுக்குக் குறைவாக நடந்து மோக்ஷ வழியை நாடமுடியாமலிருப்பர். நாகரீகம் மிகுந்த வேதபாக்கியர்களோ, சாஸ்திர ஒழுங்குக்கு மேற்பட்ட கவலையை ஸ்தூலதேஹ விஷயத்தில் எடுத்துக்கொண்டு, வீணாக மனங்கலங்கி மோக்ஷ வழி விளங்கியும் அதை அணுகமுடியாது தத்தளிப்பர். இந்த ஸ்தூலதேஹத்தில் தொழிற்பட்டு மேற் கூறப்போகும் இரண்டுவித தேஹத் தொழில்களையும் ஸ்தூலத்தின் வழி வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் ஸாதாரண விழிப்பு உலகவ்யவகார நிலைக்கு ஜாக்ரத் அவஸ்தை என்று பெயர். இந்நிலை, ஈச்வரன்ஸ்ருஷ்டியாகிய மாறாது ஒருபடித்தாக எல்லோருக்கும் இருக்கும் தன்மையுடைய வெளி ப்ரபஞ்சத்தில்தான்; மற்றைய தேஹ தொழிற்பாடான தன் ஸ்ருஷ்டியையும் கலந்து குழப்பிக்கொண்டு தொழிற்படுவன் ஜீவன். இப்படி விழிப்புக்காலம் எல்லாவற்றிற்கும் ஜாக்ரத் என்ற பெயர் பொருந்துமாயினும், இதில் மோக்ஷமார்க்கத்தை ஒழுங்காக நாடுவதற்கு ஏற்பட்டுள்ள ஈசன் கட்டளைகளான வேதசாஸ்திர ஏற்பாடுகளின்படி கர்மானுஷ்டான, ஸ்வதர்மானுஷ்டானங்கள் செய்யும் காலங்களுக்கே வைதிகஜாக்ரத் என்று பெயர். மற்றைய தொழிற்படுங்காலங்கள் எல்லாம் மூடஜாக்ரத்தே தானாகும். இதற்கு ஸ்தானம் மூளை (புருவமத்தி). இந்தக் காலத்தில் ஈசன் அவன் கட்டளைகள் மூலமாகவே பெரிய யஜமானனாக உணரப்பட்டு, அவன் கட்டளைப்படி நடப்பதாகிய கர்மானுஷ்டானத்தாலேயே பற்றப்படுவனாதலின், அவன் எங்கும் நிறைந்து நமது தொழில் ஒழுங்குகளை பார்த்திருப்பவனாகிய விராட்டாகக் கருதப்படுவன். இந்த நிலையில் அவனுக்குக்கீழ்படிந்து நடக்கும் ஜீவனுக்கு விச்வன், ப்ரபஞ்சத்தையும் உணருபவன் என்ற பெயர் ஏற்படும். முற்கூறிய ஜாக்ரத் பேதப்படி விராட் தன்மை உணருதல், உணரப்படாமை என்ற பேதத்தால் விச்வனும், வைதிகவிச்வன் மூடவிச்வன், என்ற பாகுபாடுடன் இருப்பன். இந்த நிலையில் ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் ஆண்டானடிமை ஸம்பந்தமே.

ஜீவன் ஸ்தூலதேஹத்தில் தொழிற்படும் வழியை நன்கு விசாரித்துப்பார்த்தால் சிற்சில பாகங்கள் வழியே சிற்சில வேலைகளைச் செய்கிறான் என்பது வெளியாகும். அதாவது கண்ணால் பார்ப்பன்; வாயால் பேசுவன்; மூக்கால் மூச்சிழுத்து வாங்குவன்; உள்ளுக்குள்ளேயே விஷயங்களைப் பார்த்தும் ஆராய்வன் இவைபோன்ற பல காரியங்களைச் செய்வன். இதனால் காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்து ஞானேந்திரியங்கள் வழி வெளி உலகை, ஓசை, தொடுதல், உருவம், சுவை, நாற்றம் இவைகளாக உணருவன் என்பதும், வாய், கை, கால், குதம், குறி ஆகிய ஐந்து கர்மேந்திரியங்கள் வழி, பேசல், எடுத்தல் நடத்தல், மலஜலங்

கழித்தல், ஆனந்தத்தில் இவ்வைந்து தொழில்களைச் செய்வன் என்பதும்; தன் ஸம்பந்தமில்லாமலே இயற்கைபோல, மூச்சுவிடல், மலஜலம் தள்ளுதல், சதைகள் அசைவு, எல்லாம்அடக்கி லோகாந்தரம் போவது தலைஅசைவு முதலியவைகளைச் செய்தல் அன்னரஸம் பரவச்செய்தல் ஆகிய இவைகளை மார்பு,தொப்புளுக்குக் கீழ்ப்பாம், தேஹம்,தலை, வயிறு இவைகள் வழி நடத்தும் ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமானன் என்ற ஐந்துவாயுக்களால் நடக்கின்றன என்பதும்; ஞானேந்திரியாதிகளால் உணரப்படுபவைகளை எதிரிட்டு உள்ளேயே உணர அவைகளுடன் உழன்று திரிந்தும், அவைகளைப்பற்றி அடிக்கடிக் கருதி அவைகள் விஷயமான தொழில்களைக் கர்மேந்திரிய வழி நடத்த ஆதாரமாகவும் இருக்கும் மனம், இவ்விஷயங்களை ஆராய்ந்து தீர்மானித்தும், அபிமானித்தும் நிற்கும் புத்தி இவைகளாகிய இரண்டுவிதமான அந்தஃகரண மாகவிருந்து தகுந்த தொழில்கள் முறையே ஹ்ருதயம், மூளை இவைகள் வழி நடைபெறுகின்றன என்பதும், வெளியாகும். இங்கு காட்டப்பட்ட 17-இன் கூட்டத்திற்கு ஸூக்ஷ்மதேஹம் என்று பெயர். இது ஸ்தூலத்தை விட்டு வேறானது என்பது தூக்கநிலையைக் கருதினாலும், ஸ்வப்னநிலையைக் கருதினாலும் விளங்கும். ஸ்வப்நத்தில் கண்ணில்லாமல் பார்க்கவில்லையா? இதுபோல முற்கூறிய அங்க ஸம்பந்தமின்றித் தொழில் நடக்கவில்லையா? ஆனால் ஸ்தூலஸம்பந்தமே இன்றி ஸூக்ஷ்மம் சேஷ்டிக்கவே மாட்டாது. இந்த ஸூக்ஷ்ம தேஹம் வெறும் பற்பல சக்திகளாலாகியது தான். இது தொழிற்பட ஸ்தூல ஆதாரம் வேண்டும். இதுபற்றித்தான் ஸூக்ஷ்ம சக்திகள் தொழிற்பட ஸ்தூலதேகத்தில் முன்னர் குறிப்பிட்டபடி அங்கங்களும் உள்ளன. ஸ்தூல சரீர ஸம்பந்தத்தை ஒருவாறாகக் கொண்டு பெரும்பாலும் ஸூக்ஷ்ம சரீரத்திலும் மேற்கூறப்போகும் சரீரத்திலும் இருந்து, வெளி விஷய எதிர்ப்பாடு இல்லாது அவைகளில் ஏற்பட்ட பழக்க விசேஷப்பதிவுகள் மாத்திரத்தில் விஷய ஸுகதுக்கங்களை மனமாத்திரமாக நேரில் அனுபவிப்பதுபோல அனுபவிக்கும் கனவுநிலைக்கு ஸ்வப்ந அவஸ்தை என்று பெயர். இந்நிலையில் ஈச்வரஸ்ருஷ்டியைப் பெரும்பாலும் விட்டு விலகிக்-கேவலம் தன் மனோராஜ்ய ப்ரபஞ்சமாத்திரத்தில் மாத்திரம் உழலுவன் ஜீவன். இம்மாதிரியே ஜாக்ரத் அவஸ்தையிலும் ஜீவன் ஸ்வப்நம் போன்ற அவஸ்தையிலிருப்பதுண்டு. சாஸ்திரங்களில் இந்த ஸ்வப்நாவஸ்தையை நன்கு வர்ணித்து இதில் ஜீவன் நிலையை விளக்கிக்காட்டுவதெல்லாம், தன் முயற்சியின்றி தானே வந்து மூடி ஜீவனை அழுத்திவிடும் ஸ்வப்ந நிலைபோன்ற கேவலம் மனோராஜ்ய நிலைகளை ஜாக்ரதவஸ்தையில், தன் முயற்சியாலேயே ஜீவன் ஏற்படுத்திக்கொண்டு, ஈச்வர ஸ்ருஷ்டியை ஆதாரமாகக்கொண்டு அதனுடன் தன் கொடிய மானஸசிருஷ்டி கிடந்து குழம்பாது பிரித்து அடக்கி, அதற்கு இசைந்ததான தன் நல்ல ஜீவசிருஷ்டிகள் எப்பொழுதும் பொருந்தி சிறந்த ஸுகம் தரப் பழகுவதான த்யான நிலைகளை விருத்தி செய்வதற்கே. ஊன்றி மனோராஜ்யம் செய்வதான தொழிலாளி, தொழிலையே எண்ணியும், வ்யாபாரி வ்யாபாரத்தையே எண்ணியும், மாணாக்கன் பாடங்களையே எண்ணியும், சாஸ்திரிகள் சாஸ்த்ரங்களையே எண்ணியும், பக்தன் கடவுளையே கருதியும், மற்

றைய வெளி விஷயங்களைக் கருதாமலே நின்றுவிடும் ஸமயங்கள் எல்லாம் ஜாக்ரத்தில் ஸ்வப்நாவஸ்தைகளே. இவைகளில் கடைசி விஷயம் மாத்திரம் வைதிக ஸ்வப்நம்; தூக்கஸ்வப்நம் உள்பட மற்றவைகள் எல்லாம் மூடஸ்வப்நம். இதற்கு ஸ்தானம் சிறுமூளை, கண்டஸ்தானம். இந்த த்யானாவஸரத்தில் ஈச்வரன் ஹிரண்யகர்பனாகக் கருதப்படுவன். இதில் இந்த ஈச்வரரூபத்தையே இசைந்த விஷய உணர்வுடன் த்யானித்து ஈடுபடும் ஜீவனுக்குத் தைஜஸன் (மன உணர்வு ஒளிமாத்திரமாய் இருப்பவன்) என்று பெயர். முற்கூறிய ஹிரண்யகர்ப்பத்தன்மை உணரப்படுதல் உணரப்படாமை என்ற பேதத்தால் தைஜஸனும், வைதிகன் மூடன் என்ற பாகுபாடுடனிருப்பன். இந்நிலையில் ஜீவனுக்கும் ஈசனுக்கும் த்யானபலத்தால் அங்க அங்கிபாகம் ஏற்பட்டுக்கொண்டு வந்து, ஈசனன்றி தனக்குத் தனி இருப்பில்லை என்ற உணர்வு திடப்பட்டுக்கொண்டே வரும். இம்மாதிரியான வைதிக ஸ்வப்நத்தில்தான் ஈச்வர ப்ரத்யக்ஷங்களாகி ஜாக்ரத்தில் பயன்பட்டு நிற்பது. மூடஸ்வப்நத் தோற்றங்கள் வெறும் தோற்றமாத்திரந்தான், பயன்படா.

இனி இந்தஸ்வப்நத்திற்கும் அப்பாற்பட்டதான மூன்றாவது நிலை நம் அனுபவத்திலேயே இருக்கிறது; அதையும் நம் முயற்சியின்றி நம்மைக் கவியும்படி விடாது வைதிக முயற்சியால் கைகூடி நிலைக்கும்படி நாம் செய்யவேண்டும். இதற்கு ஸுஷுப்தி அவஸ்தை என்று பெயர். இது நமக்கு ஒவ்வொரு தினமும் ஸ்வப்நம் கூட இல்லாது ஓய்ந்து தூங்கும் போதும், ஸுகானுபவங்களில் மூழ்கும்போது ஜாக்ரதாவஸ்தையிலும் ஏற்படும். இதில் வெளிவஸ்து இன்மையான சூந்ய திருஷ்டியும், ஒருவாறு மங்கலான ஸுகானுபவ உணர்வுமேதான் ஏற்றமாக நிற்கும். இதனால் இங்கும் ஜீவனில்லாமல் போய்விடவில்லை, அவன் உணர்வுமாத்திரமாக இருக்கிறான்; ஆனால் உணரப்படும் பொருள்கள் எல்லாம் மறைபட்டுவிட்டன. மறுபடியும் வெளிப்படும் தன்மையுடன் கூட விதையுள் செடிபோன்ற நிலையில் மறைந்துள்ளன. இந்நிலையைவைதிகஸ்வப்நாவஸ்தையாகியத்யானத்திலிருந்து மனப்பூர்வ அப்யாஸத்தால் ஸமாதிபழகி வருவித்துக்கொண்டால் இதற்கு வைதிக ஸுஷுப்தி என்றும் மற்றையஸுஷுப்தி எல்லாம் மூடஸுஷுப்தி என்றும்பெயரிட்டழைப்பர் பெரியோர். இந்த ஸமாதி நிலை நன்கு விளங்கி ஜீவன் மனப்பூர்வமாக அதில் நிலைப்பதற்கே நமது சாஸ்திரங்களில் ஸுஷுப்தி அவஸ்தை நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அறியாமை நீங்கி, அறிபடுபொருளான ஈச்வரனிடம் மனம் நிலைத்து அது மாத்திரமாக தன்னையும் த்யானத்தையும் மறந்த தெளிவான ஸுகானுபவத்துடன் ஜீவன் இருப்பன். இவ்வுணர்வு இந்த ஸமாதி கலைந்து எழுந்திருக்குங்காலும் விடாது தொடர்ந்திருப்பதால் மாத்திரமே இப்படிப்பட்டது என்று ஸுஷுப்தி விஷயத்தில் ஊஹிக்கப்படுவதுபோல ஊஹிக்கப்படும். இங்கு உணருபவனான ஜீவன் உணரப்படும் பொருளான ஈசன் மாத்திரமாக இருப்பதால் இவனுக்கு ப்ராஞ்ஞன் என்ற பெயரும், பரவஸ்துவுக்குத்தான் ஸகுணநாமமான ஈச்வரன் என்ற பெயரும் இடப்பட்டுள்ளன. இந்நிலையில் ஜீவனுக்கு ஈச்வரனுடன் பேதம் மறையக்கலத்தலாகிய பொருத்தம் உண் . ஈச்வரத்தன்மை இரண்டற உணரப்படுதல் படாமைக்கேற்ப ப்ராஞ்ஞனும், வைதிகன்

மூடன் என இருவகைப்படுவன். இந்நிலையில் ஜீவனிருந்து தொழிற்படும் ஸ்தானம் ஹ்ருதய கமலமே. இதிலிருந்தே எல்லாம் வெளிப்பட்டு ஒடுங்குவதாகத் தோற்றுவதால் இதற்குக் காரணசரீரம் என்று பெயர்.

முன்காட்டப்பட்ட மூன்று சரீர அவஸ்தைகளை நன்கு கவனித்தால், ஜாக்ரதாவஸ்தையில் பல்வகைப்பட்ட தேசகால நிமித்த ஒழுங்கான வெளிவிஷய அறிவு, உணர்வு, உருக்கம், ஊக்கம் இவைகளுடன் பொருந்தி நிற்கிறது என்றும், ஸ்வப்நாவஸ்தை பல்வகைப்பட்ட ஒழுங்கு தவறி காலநிமித்த மாத்திரத்தில் வெளிவிஷயம் போன்ற தன் அறிவு உருக்கம் ஊக்கமாத்ரமாக நிற்கிறதென்றும், ஸுஷுப்தி அவஸ்தையில் வெளிவிஷயம் மறைந்து கேவலம் நிமித்த மாத்திரமாகி அறிபடுபொருளில்லா வெறும் தன்னறிவு மாத்திரமாக மிஞ்சி நிற்கிறது என்றும் வெளியாயிருக்கும். இவைகளை வைதிக ஒழுங்குபடி சீர்திருத்தி ஜாக்ரதர்வஸ்தையிலேயேநிலைக்கும்படிசெய்வதற்கு முறையே கர்மானுஷ்டான விராட் விச்வ ஆண்டானடிமைப் பொருத்தமான அங்காவபத்த உபாஸனை, த்யான ஹிரண்யகர்ப தைஜஸஅங்க அங்கிப் பொருத்தமானப்ரதீகோபாஸனை, ஏகாக்ர ஸமாதி ஈச்வர ப்ராஞ்ஞதாதாத்மியப் பொருத்தமான அகங்கிரஹோபாஸனை ஆகிய இவைகளே தகுந்த வழிகள் என்பதும் விளங்கியிருக்கும்.

இவ்வாறு மூன்று சரீரங்களைப்பூர்வகர்மவசமாகப்பற்றித் தொழிற்படும் ஜீவர்கள் மனதில் பொதுவாக மூன்றுவிதப்பதிவுகள் எப்பொழுதும் காணப்படும். இவை கர்மங்கள்செய்வதால் ஏற்பட்டுப்பின்னர் கர்மாக்களாகவும், ஸுகதுக்கங்களாகவும் பலிக்கும் தன்மை உடையவை. முன்காட்டியபடி வைதிக அவஸ்தைகளில் ஏற்படும் முயற்சிக்குத் தகுந்த சுத்தப்பதிவுகளுக்கு வித்யை, உபாஸனைப்பதிவுகள் என்று பெயர். இவைமேலான லோகங்களை அடைந்து மேன்மேலும் வைதிகவழிகளில் முயன்று மோக்ஷம் நோக்கித் திடமாகப்போகும்படி ஜீவனைச் செய்யும். பொதுவாக மூன்று அவஸ்தைகளிலும் செய்யப்படும் நல்ல கெட்ட கர்மங்களுக்கு ஏற்ப ஒரே தடவையிலேயே ஸுகதுக்கமாகப் பின்னர்பலிக்கக்கூடியபதிவுகளுக்குக் கர்மா, விதி, ப்ராரப்தமாகும் ஸஞ்சிதம் என்று பெயர். பல தரம் நல்ல கெட்ட கர்மாக்களைச் செய்வதால் இசைந்த ஸந்தர்ப்பங்களில் அவைகளையே செய்யவேண்டும் என்று பின்னர் எழும் பலத்தை உடைய மனப்பதிவுகளுக்கு வாஸனைப்ரகிருதி ஸ்வபாவம் என்று பெயர். ஸாதாரணமாக உலகில் உழலும் ஜீவர்கள் எல்லோருக்கும் கர்மவாஸனைப் பதிவுகள்தான் பெரும்பாலும் இருக்கும். வைதிகவழியில் முயலும் பெரும்பாலார்க்கும் சிறுபான்மை வித்தியாப்பதிவும் இருக்கும். இம்முயற்சியில் தேறிவருபவருக்கு ஸுவாஸனை, ஸத்கர்மா, வித்யாப் பதிவுகள் பலத்து வரும், முன்னிரண்டும் பலிக்கப்பலிக்க மூன்றாவது அதிகப்பட்டுக் கொண்டேவரும். இப்படி பலிக்காத ஸாதாரண ஜீவர்களுக்குப் பொதுவான் கர்மவாஸனைப் பதிவுகளாலும், வெகு பலக்குறைவான வித்தியாப் பதிவுகளாலும் க்லேச (அவித்யாதிகள்) கர்ம (ஸஞ்சிதம்) விபாக (ப்ராரப்தம்) ஆசயம் (வாஸனை) இவைகளாகிய நான்குவித பந்தங்கள் கவிந்துகொண்டே இருந்து ஓயாஸுகதுக்க பாபபுண்ய கர்மப்பின்னலுக்கு ஆளாக்கி, இவர்களைப் பிறந்திறந்து திண்டாடச் செய்யும். ஆனால் வித்யைப்பதிவுகள் தகுந்த முயற்சிகளால்

பலப்பட்டுவரும் புண்யாத்மாக்களுக்கோ, ஆசயகர்மங்கள் சுத்தமாக மாத்திரம் மிஞ்சிவிடும், விபாகம் பலித்தாலும் தாக்காது, க்லேசங்கள் வரவர வலுவில் குறைந்துகொண்டேவரும்: மேன்மேலும் சிறந்த பிறவியே ஏற்பட்டுத் தயங்காது மோக்ஷம் நோக்கியேபோகும் ஆற்றல் அதிகப்பட்டுக்கொண்டேவரும். இப்படி ஆற்றல் மிகுந்துவரும் மேலான ஸந்யாஸயோக்கியமான ஜீவர்களது பிறவியில் வைதிக அவஸ்தைகளில் நிலைத்து மேல் நிலையை அடைய உதவியாக இருப்பதற்கே மாண்டூக்ய உபநிஷத் என்ற ஸர்வோபநிஷத்ஸாரம் அவஸ்தாநுட்பத்தைக் காட்டி அவைகட்கு இசைந்த ப்ரணவத்யானத்தையும் விதிக்கிறது.

'ஒரு ஸாதாரண கர்மா பலித்து முடிந்து, அடுத்த ஸாதாரண கர்மா பலிக்கத்தொடங்குவதற்கு முன் ஏற்படும் இடைவெளிதான் ஸாதாரண ஸுஷுப்தி அவஸ்தை எனப்படுவது. இதில் எல்லாக் கருவிகளும் தொழிற்படும் ஆற்றலிழந்து அவ்வக்கோளகங்களுள் அடங்க மனமும் அதிநுட்பமான சக்திகுன்றியநிலையை அடைந்து ஜீவன் தன்மையும் மழுங்கி இருக்கும் தருணம் இது. இது தன்முயற்சியின்றியும், ஸாதாரணமாயும், பின்வெளிவரக்கூடும் என்ற நம்பிக்கையை முன்னிட்டும், ஒருவிதமான ஸுக உணர்வுடன் ஸம்பந்தப்பட்டும் இருப்பதால் ஸுஷுப்தி பயங்கரமாக நமக்குப் படவில்லை. ஆனால் மரணமும் இதைப்போலவே சிலவிஷயங்களில் இருப்பினும், மற்றும் சில வேற்றுமைத் தன்மைகளில் பயங்கரமாக உள்ளது. ஜாக்ரத் அவஸ்தையில் கோளகங்களிலிருந்து அவைகளில் நடைபெறும் தொழில் திடீரென்று பிரிக்கப்படுவதாலும் மேல் நடப்பது இன்னது என்பது விளங்காமையாலும், முன்பின் ஏற்படாத அனுபவமாதலாலும், மரணம் பயங்கரமாக உள்ளது. இதுபோன்ற பயங்கர அவஸ்தைக்கு உதாரணமாக மூர்ச்சையையெடுத்துக்கொள்ளலாம். இதில் எல்லோருக்கும் துக்க உணர்வுதான் காணப்படும். இப்படிப்பட்ட மரணாவஸ்தை என்பது ப்ராரப்தகர்மாப்படி ஆயுஸ் (ச்வாஸக்கணக்கு) முடிவில் ஒரு முக்ய ப்ராரப்தத்தைச்சார்ந்த ஸாதாரண கர்மாக்கள் முடிவில் அடுத்த முக்கிய ப்ராரப்தத்தைச்சார்ந்த பலமான கர்மாக்கள் பலிப்பதற்கு முன் ஏற்படும் நிலைமாற்றம். இதன் தொடக்கத்தில் முதலில் கர்மேந்திரியங்கள் தொழிலிழந்து முறையே ப்ராணாதிவாய்க்களிலும் ஞானேந்திரியங்களிலும் அடங்கி வரும். ஞானேந்திரியங்களிலும் ஒன்றனுள் ஒன்றாகக் காதுவரையில் அடங்கி முடிவில் கண்ணும்தெரியாதுபோய்க் காதுமாத்திரம் கேட்கும் நிலை மாத்திரமாகிவிடும். இத்தருணத்தில்தான் மேல் ஒடுக்கம் முதலிய நிலைகளை உணர்த்தும் கர்ணமந்திரம் உபதேசிப்பது: உறவினர்கள் நண்பர்கள் எல்லோரும் இறப்பவன் காதுகேட்க அவனைத்துதித்து அவனைவிட்டுப் பிரிவதைக்கருதி துக்கிப்பது. இதனால் இறப்பவர்களுக்கு ஒருவிதமான ஆறுதல் ஏற்படும். இதை வரம்புக்கு மிஞ்சிச் செய்து இறப்பவர் மனதை வீணாகக் கலக்குவது நியாயமேயல்ல: இதனால் மரணபயம் அதிகமாகுமே ஒழியக் குறையாது. ஸகல சாஸ்திரங்களும் வெறும் மானஸீகமான மரணபயத்தைக் குறைக்கவே முயலுகின்றன. இப்படி இருக்கும் இதை அதிகப்படுத்தத் தொழிற்படுவது எப்படி நியாயமாகும்? பின்னர், காதும் கேட்காமல் போகும். வெறும் மூச்சு மாத்திரம் தடைபட்டு வந்து கொண்டே இருக்கும். இந்நிலையில்

(இதன் தொடர்ச்சி 283-ம் பக்கம்.)

(282-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேல்நடப்பது இன்னது என்பதுவிளங்காது உணர்வெல்லாம் இழந்து தூக்கம் போன்ற நிலை ஜீவர்களுக்கு வரும். அப்பொழுது மூச்சிற்கெல்லாம் ஆதாரமான ஹ்ருதயஸ்தானத்தில் ஜீவன் தன் கருவியாதிகள் எல்லாம் தன் வித்யா கர்மவாஸனைகளுள் அடங்கப்பெற அவைகளுடன் தன்னம் தனியான நிலையில் வந்தமருவன். இதுதான் மரணாவஸ்தை முடிவு. இதுவரையில் தான்படாத பாடெல்லாம் ஜீவன் பட்டுத்தீர்த்துவிடுவன். இப்பொழுது பெருமூச்சு வந்துகொண்டே இருக்கும். மரணம், கர்மா, ஈச்வரன் இவைகளைப்பற்றி வாழ்நாளில் கருதி சாஸ்திரவழி நடந்த ஸத்ஜீவர்களைக் காட்டிலும் ஸாதாரண ஜீவர்களுக்கு இம்மரணாவஸ்தை அதிக பயங்கரமாக இருக்கும். வரவர மரணபயம் அதிகமாகிக் கொண்டேவர, பந்தம் பலப்பட்டுக்கொண்டே வரும்.

இம்மரணாவஸ்தைக்கு அடுத்த அவஸ்தைக்கு உத்க்ராந்தி அவஸ்தை என்று பெயர். இந்நிலையில் ஹ்ருதயத்தில் தனிமையாக வந்தமர்ந்துள்ள ஜீவன், தேஹத்திலுள்ள பலவாறுயுள்ள வழிகளாக தேஹத்தைவிட்டு வெளியேறுவது. ஜீவர்கள் இவ்வாறு வெளியேறி இன்ன இன்ன நிலைகளை அடைந்து கர்மகதிப்படி திண்டாடுவர் என்பவைகளைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

பெரியோர்

THE GREAT MEN

ஐம்புலன்களை அடக்கித் துன்பத்தை முற்றும் தவிர்த்துப் பரம்பொருளைக் காணும் விருப்பத்தோடு, சீவகோடிகளுக்கெல்லாம் பரிந்து, சிற்றின்பத்தை வெறுத்துப் பொருந்திய போகங்களைத் துக்கமுஞ் சந்தோஷமுமின்றி அனுபவித்து, உடம்பைத்தானென்றும் தன்னதென்றுங் கருதாது, ஒரே நிலையில் நிற்பவர் பெரியோரெனப்படுவார்.

'இக்காலத்திற், பெரியோரால் உலகத்திற்கு யாது பயன்? அவர்களையுஞ் சோம்பேறிக்கூட்டத்தோடுதான் சேர்க்கவேண்டும். அவர்கள் இருப்பதில் இல்லாதது உயர்வு' என்று சொல்லுஞ் சில மதியூகிகளுக்கு, பிரசங்கமேடைகளினின்று வெகு ஆடம்பரத்துடன் பேசி, அதனால் உலகத்தாருக்கு விசேஷ நன்மை உண்டாகிவிட்டதென்று தமக்குள்ளே மட்டில் நினைத்துக்கொண்டு பிறத்தலையு மிறத்தலையுமே பெருந்தொழிலாகக்கொண்ட பெரியோர்களைக் காட்டிலும், "புலியாலே வெருட்டப்பட்டு அதனின்றும் தப்பித்துக்கொள்ள ஓடிய மனிதன் ஒரு பாழ்ங்கிணற்றுள் விழ, அங்கு பாம்பு நிறைந்திருக்கக்கண்டு, இருபுறமும் போகமுடியாது அங்குள்ள ஓர் அறுகம்புல்லைப்பற்ற, அப்புல்லும் கனந் தாங்கமாட்டாதுவேரற்றுக் கீழேவிழுந்து பாம்பிற்கிரையாகப் போகுந்தறுவாயில் மேலே கட்டப்பட்டிருந்த கூட்டிலிருந்து ஒருதிவலைத்தேன் அம்மனிதன் வாய்ப்பட, அச்சமயம் அம்மனிதன் அநுபவித்த இன்பத்திற்குச் சமானமான இம்மானுடவின்பத்திற்கு அங்காந்து" பிறந்து, பிறந்து துன்பத்தை அடையவேண்டாம் என்று நற்புத்திகூறும் பெரியோரா உலகிற்குப் பயன் பெறாதவர் என்று விடைகூறி மறுக்க.

இனி அப்பெரியோர் குணாதிசயங்களைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

அப்பெரியோர், தமது மக்களுக்கு நடை பழக்குவதற்குத் தாம் அவர்கள் கையைப் பற்றிக்கொண்டு நடந்துகாட்டுந் தாய்மார் போலவும், நடனங் கற்றுக்கொடுப்போர் நடித்துக்காட்டுதல் போலவும், உலகத்தோருக்கிருக்கவேண்டிய முக்கிய குணங்களாகிய பொறுமை, சீலம், அன்பு, ஈகை, புகழ்பெற்ற வாய்மை, வருணங்களுக்கேற்ற விரதம் ஆகிய இவைகளைத் தாமே செய்து காட்டுவதன் மூலமாய், உபதேசஞ் செய்யுங்குணமுள்ளவர்; பிற மதங்களைப் பழிக்காதவர்; இது செய்யக் கூடியது, இது செய்யக்கூடாதது என்று பொதுவாகச் சொல்லுவதே அன்றி எவரையுங் குறிப்பிட்டுச் சொல்லத் தெரியாதவர்; தமது சுயநன்மையையுங் கெடுதலையுங்கவனியாதவர்; தம்மைச் சுற்றியவர்கள் 'கடைத்தேறு மார்க்கங்களைப்பற்றியே எப்பொழுதும் முயற்சிசெய்பவர்; இவர்பொருளாளர், இவர் தரித்திரர், இவர் நல்லோர், இவர் பொல்லார்

என்று கருதாதவர்; தமது நடுவு நிலைமையினின்றும் பிறழாதவர்; பயன் கருதி வேலை செய்யும் எவரையும் மதியாதவர்; எவர்க்கும் இனியவரா யிருப்பவர்; போனவற்றை நினைந்து வருந்தாதவர்: இனி வருபவற்றை நினைந்து ஏங்காதவர்; உலகத்தோர் விரும்புகிற பொருள்களைத் தமது கண்ணாற் பாராதவர்; அவ்வுலகத்தோராற் பார்க்கமுடியாத பரம்பொருளை உள்ளங்கை நெல்லிக் கனிபோற் பார்ப்பவர். ஒருவர் தம்மைப் பலவாகப் புகழ்ந்து நறுமணம் பொருந்திய சந்தன முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசி உபசரிப்பதில் விருப்பும், அற்பர்களை நடத்துவதுபோற் பலவாக இகழ்ந்து பேசில் வெறுப்பும் இல்லாதவர்; பசிவேளைக்குமட்டிற் கிடைத்தவற்றைப் புசித்துத் திருப்தியாயிருப்பவர்; தமது சரீரத்திற்கு நேர்ந்த பலவகைப்பட்ட நோய்களுக்கும்அஞ்சாதவர்;இந்தப்பேயாஞ் சகம்பழிப்பதற்குச் சிறிதும் பயப்படாதவர்; தங்கண்ணாற் பார்க்கப்படுகிற ஊர்வன முதலாய்த் தேவர் ஈருயுள்ள எல்லாரும் ஞானமுள்ளவர்களேயென்று நினைத்து எவரையும் இகழ்ந்துரையாதவர்: தீபத்தைத் தலைகீழாகக் கவிழ்ப்பினும் அத்தீபம் எவ்விதம் மேல் நோக்கியே எரியுமோ அதுபோலவும், சந்திரன் கலைகுறைந்த காலத்திலும் வெளிச்சந் தருதல்போலவும், விலையுயர்ந்த மணிகள் பொடியாகிய காலத்திலும் ஒளிவீசுதல் போலவும், தமக்கு அடுத்தடுத்துத் துன்பம் வந்த காலத்திலும் தம் மன நிலையினின்றுந் தவறாதவர்; தன்னைக் கடைதலால் வருந்திய தேவர்களுக்குச் சாவா மருந்தாகிய அமுதத்தைக் கொடுத்துதவிய சமுத்திரம்போலத் தமக்குத் துன்பஞ் செய்தவர்களைக் கோபியாது, அவர்கள் தம்மை வருத்தியதன் பயனாகத் துன்பமடைவார்களே யென்றும் வருந்துபவர்; தம் உயிருக்கு இறுதிக் காலம் வந்த பொழுதும் இக்காரியஞ் செய்யின் உயிர் பிழைக்குமென்று பிறர் சொல்லின் அது பழிக்கத்தக்கதாயிருப்பின், சாதல் ஒருநாளைத் துன்பம், பழிபாவங்கள் என்றைக்குந் துன்பத்தை விளைவிக்கக் கூடியன என்பதை நன்குதெரிந்து கொண்டவராதலால் அப்பழி பாவங்கட்குட்பட்ட காரியங்களைச் செய்யச் சம்மதியாதவர்; சந்திரனும் பெரியோரும் பெரும்பானுஞ் சமானமானவர்களாயினுஞ் சந்திரன் தன்னிடங்களங்கமிருப்பதைப் பொறுத்திருப்பதாலும், பெரியோர் ஒரு சிறு குற்றமும் தம்மிடம் பொருந்தப் பொறுக்கமாட்டாராதலாலும் சந்திரனிலும் உயர்ந்தவரெனக் கருதப்படுபவர். பொன்னைத் தட்டியும், பாலை நெருப்பிலிட்டுக் காய்ச்சியும், சந்தனத்தை அறைத்துங், கரும்பைக் கடித்தும், இடித்துமாகிய துன்பங்களைச் செய்தகாலத்தும், அவை தமக்கு முன்பு இருந்த நற்குணங்களின் பயனையே தருவனபோலப் பிறர்தம்மை என்ன கொடுமையாய் நடத்தினும் தம் வாயால் இனிமையையே பேசுபவர்.

இத்தகைய நற்குணமும் நன்ஞானமும் பொருந்திய பெரியோரைப் பிள்ளையாகப் பெற்றோரே மனிதர்களடைய வேண்டிய எல்லாப் பயனையுமடைந்தவராவார். அப்பெரியோர் பிறந்த குலமே பரிசுத்தமானது; அன்னார் பிறந்த தேசமே எல்லா மேன்மையும் பொருந்தியது.

நாம் எவ்வித குற்றஞ் செய்யினும் அவர் பொறுத்துக் கொள்ளுகிறார். இன்னும் எது வேண்டுமாயினுஞ் செய்யலாம் என்று அறியாமையால் நினைத்து எவ்வித சிறு குற்றமுஞ் செய்ய எண்ணலாகாது. ஏனெனின், அவர்கள் கோபித்தால், நாம், “குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்தலரிது” என்ற வாக்கியத்திற்கேற்ப வேறு எவருடைய உதவியாலும் (அன்னார் கோபத்தினின்றுந்) தப்பித்துக் கொள்ள முடியாது.

ஆகையால், “சீவன் முத்தரைச் சேவித்தோர்” என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து அப்பெரியோரை வழிபட்டு அவர்களைப் போலவே நடக்க முயலுவோமாக.

வேங்கடராமய்யர்.

கடையெலாங் காய்பசி யஞ்சுமற் றேனை
யிடையெலா மின்னாத வஞ்சும்—புடைபரந்த
விற்புருவ வேனெடுங் கண்ணாய் தலையெலாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

கள்ளார்; கள்ளுண்ணார்; கடிவ கடிந்தொரீஇ
யெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்;—தள்ளியும்
வாயிற்பொய் கூறார்; வடுவறு காட்சியார்,
சாயிற் பரிவதிலர்.

வெரோனா நகரத்து இருகனவான்கள்

THE TWO GENTLEMEN OF VERONA

இத்தாலியா தேசத்தில் வெரோனாஎன்று ஒரு நகரமுண்டு. அந்நகரத்தில், அன்டோனியோவின் புதல்வனான புரோட்டியஸ், வாலன்டயின் என்னும் தன் நண்பனுடன் அன்புடனும் அதியுல்லாசமாயும் வாழ்ந்திருந்தான். அக்காலத்தில் மிலான்பட்டணத்தில் நாகரீகம் ஓங்கியும், பிரசித்திபெற்ற பிரபு ஒருவர் அரசாட்சி செய்து வந்தமையால், நடையுடை பாவனைகளில் சீர்திருத்தம்பெறவும், மனித இயற்கை, உலகநடவடிக்கை, உலகானுபவங்களால் அறிவைப் பெருக்கவும் பாலியர் அனேகர் மிலானுக்குப் போவதுண்டு. வாலன்டயினும் கல்விகற்பதற்காக அந்நகரத்திற்குப் புறப்பட்டு, விடைபெற்றுக்கொண்டுபோக தன் நண்பனிடம் வந்தான். புரோட்டியஸுக்கும் அதேவயது. அவனுமவ்விதமாய்க் கல்வி கற்கவேண்டிய பருவத்தவனே. ஆகிலும் ஜூலியா என்னுமொரு பெண்மணியை மணம்புரிய வெண்ணங் கொண்டதால், வாலன்டயினையும் விட்டுப்பிரிய மனமில்லாமல், அவனையு மிலானுக்குப் போகவேண்டாமென்று வெகுவாய்க் கேட்டுக் கொண்டான். ஆனால், வாலன்டயினோ கல்வியின் முக்கியத்தை முன்னிட்டு, அவ்விடம் போக முன்னமே தீர்மானித்திருந்ததால், இவ்வாறு சொல்லலுற்றான்: ‘‘ஆ! புரோட்டியஸ், வீடு காத்திருப்பவன் புத்தி விட்டளவேயாகும்.நீ மாத்திரம் ஜூலியாவிடத்தில் அவ்வளவு அன்பு கொள்ளாதிருந்தால், இப்படி ஊரிலிருந்து சோம்பல் பிடித்துப்போக விடாமல், உலக வதிசயங்களைப்பார்த்து,உலகநடை பிடிபடும்படி, உன்னையும் என்னோடு அழைத்துக் கொண்டுபோவேனென்” என்றுசொல்லிப் பின்னும் “இதென்ன! இந்த அன்பு, இராப்பகல் தூக்கமில்லாமல், பெருமூச் செறிந்து கொண்டு, இந்த ஆசை எல்லாம் ஒருபார்வைக்கு, ஒருவார்த்தைக்கு என்றால், மனிதனுடைய புத்தி மிகவும் மாறாட்டமாய்ப் போய்விட்டது என்றுதான் எண்ணவேண்டியது. ஆனாலும் நான் சொல்லுவதெல்லாம் உனக்கெங்கே மனதில் படப்போகிறது; எனக்கு நாழிகை ஆகிறது, நான் போய் வருகிறேன். நீ அடிக்கடி கடிதம் எழுது” என்று சொல்லிவிட்டுப் பயணம் புறப்பட்டுப்போனான். புரோட்டியஸ், “ஆம் இவன் சொல்லுவது வாஸ்தவம்தான். என் விர்த்திக்கான விஷயங்களாவது, என் சிநேகிதனைப்பற்றியாவது, எண்ணுவதற்கில்லாமல், இவளையே நினைத்துக்கொண்டிருக்கிறேனே” என்று ஆலோசிக்கலுற்றான்.

அப்போது வாலன்டயின் என்பவனுடைய சேவகனான ஸ்பீட் என்பவன், தன் எஜமானன் இவ்விடம் வந்ததாகத் தெரிந்து, அவரைத்தேட அவ்விடம் வந்தான். ‘என்னடா ஆடுபோல அங்குமிங்குந் திரிந்துகொண்டிருக்கிறாய்? உன் எஜமானர் அப்போதே போய்விட்டாரே’ என்று புரோட்டியஸ் சொல்ல, ‘ஐயா, நான் இடையன் காணாமற்போன ஆட்டைத் தேடுவதுபோல் நான் என் எஜமானனைத்-தேடுகிறேன், அப்படியென்றால் யார்தான் ஆடோ தெரிந்துகொள்ளுங்கள்’ என்று கேலியாகச் சொல்லிவிட்டு, புரோட்டியஸுக்காக இவன் ஜூலியாவிடங் கொடுத்த கடிதத்திற்குத் தனக்கு அவள் வெகுமதி ஒன்றுங் கொடுக்கவில்லையென்றும், ஆகையால் அக்கடிதத்திற்கே மரியாதை செய்யாதவள் கடிதம் எழுதியவன் பேரில் எவ்வளவு அன்புள்ளவளோ எனச் சொல்லிக்கொண்டே ஓட்டமாய் ஓடிக் கப்பலுக்குச் சென்றான். புரோட்டியஸ் இதைக் கேட்டு வருந்திக்கொண்டிருந்தான்.

வாலன்டயின் மிலானுக்குச் சென்றதையும் அவன் சிநேகிதனான புரோட்டியஸ் அவ்விதம் போகாதிருப்பதையும் பார்த்த சிலர், புரோட்டியஸின் தகப்பனான அன்டோனியோவிடஞ் சொல்லி “அற்பப்படிப்பு சொற்பப்படிப்புள்ளவர்கள் கூட, ஊர்வழி பயணப்பட்டு நாகரீகம், ஜனங்கள் நடவடிக்கை முதலியவைகளை அதிகமாகக் கற்கப்போகிறார்களே. சண்டைக்குச் சிலரும் புதுதேசங்களைக் கண்டுபிடிப்பதற்காக வேறு சிலரும், பெரிய கலாசாலைக்கு மற்றவர்களுமாக எத்தனையோபேர் போகையில் அறிவில் மிகுந்த உமது மகன், வீட்டிலேயேயிருந்து வீண்பொழுது போக்குவானேன்?” என்று கேட்டார்கள்.

அன்டோனியோ, "அப்படியா? நல்லது" என்று சொல்லித் தன்மகனையும் உடனே புறப்படச் சொன்னான். அவன் ஜூலியாவின் அன்பு விஷயங்களைச் சொல்ல வெட்கித் திடீரென்று புறப்படுவதெப்படி என்று முறையிட்டுங் கேட்காமல், வேண்டிய வேலைக்காரரும் வேண்டிய திரவியமுங் கொடுத்து உடனே பிரயாணப்படுத்தினார்.

இதற்குள் ஜூலியா, ஸ்பீட் என்பவன் புரோட்டியஸினிடமிருந்து கொணர்ந்த கடிதத்தைத் தன் வேலைக்காரியாகிய லூஸெட்டா என்பவளிடமிருந்து பெற்றுக் கொண்டு, தனக்குப் புரோட்டியஸின் பேரிலுள்ள அன்பு தன் வேலைக்காரிக்குத் தெரியக் கூடாதென்று அக்கடிதத்தை வேண்டாமென்று சொல்லியும், அதைக்கொண்டு போனபின்பு, 'என்னதான் எழுதியிருக்கிறது பார்ப்போம்' என்று பின்னுங் கொண்டுவரச் சொல்லியும், அப்போதுங்கூட தன்காதல் தெரியாவண்ணம் கோபமாய்க் கடிதத்தைக் கிழித்தெறிவதுபோல் எறிந்துவிட்டு, பின் ஏதோவொரு வேலையாய், லூஸெட்டாவை யனுப்பிவிட்டு, கிழிந்துபோன துண்டுகளை யெல்லாம் ஒன்று சேர்த்துப் படித்துப் பார்த்தாள். அதில் புரோட்டியஸ் பிரியமாய் எழுதியவற்றைப் பார்த்து மிகுதியும் மனமகிழ்ந்தாள். தன்னை மணம்புரிய எண்ணின ஸர் எக்லாமூர் என்பவர் தக்க மனிதராயிருந்தும் அவர்பேரில் அன்பு இல்லாமலும், மார்கேஷியோ என்பவனுக்குப் பணமிருந்தும் அவன் போலியாயிருப்பதுபற்றியும் அவர்களிருவரையுந் தவிர்த்துப் புரோட்டியஸையே மணம்புரிய வேண்டுமென்று மிகுதியும் எண்ணங் கொண்டிருந்தாள். நாணத்தால் அதை வெளியே புலப்படாதபடி காப்பாற்றிவந்தாள்.

முற்கூறியவாறு, புரோட்டியஸ், தன் தகப்பன் ஆணைக்கேற்க, மிலான்பட்டணம் புறப்பட நேர்ந்தபோது, ஜூலியாவைக் கண்டு, அவளுடன் சொல்லிக்கொண்டு போகவந்தான். அவர்களிருவரும், இப்படிக் கட்டாயமாகப் போகவேண்டி யிருக்கிறதே என்று மிகவும் துக்கித்து ஒருவரையொருவர் மறக்காவண்ணம் மோதிரங்கள் மாற்றிக்கொண்டு, அன்பும் பிரிவாற்றாமையுமிகுந்திட, நீர்ததும்பிய கண்ணோடும், வருத்தமுற்ற நெஞ்சோடும், வார்த்தை சொல்லமாட்டாமல், கண்பார்வையால் மட்டுமே பார்த்து, அன்பைத் தெரிவித்துக்கொண்டு, கப்பலிலிருந்து அவசரப்படுத்த ஆள் வந்ததுபற்றிக் கூடியவாறு தேற்றிக்கொண்டு பிரிந்து போயினர்.

லான்ஸ் என்னும் வேலைக்காரன், புரோட்டியஸுக்கு உதவியாக அனுப்பப்பட்டான். அவன் ஊருக்குப் புறப்படும்போது, அவன் தாய், தந்தை, தமக்கை யெல்லோரும் மிகவும் ஆற்றாமல், வெள்ளப் பெருக்காயழுதார்கள். அவன் தனக்கு வீட்டு ஞாபகமாய் கிராப் என்னும் நாயைத் தன்னுடன் கொண்டுபோனான் இந்த நாய் அவனுக்குப் பலவிதமாய்க் கஷ்டம் கொடுத்துக் கதையில் சில வேடிக்கை விஷயங்களுக்குக் காரணமாயிருக்கும்.

இனி மிலான் பட்டணத்திலிருந்த பிரபுவுக்கு ஸில்வியா என்றொரு குமாரத்தி உண்டு. தக்க பெரிய குடும்பத்திலுள்ள பாலியர் அநேகர், அவளை மணம்புரிய எண்ணியும், மற்றும் அதிதியாய் வந்தவர்களும் அரண்மனையில்விருந்தாயும் இருந்துபோவதுண்டு. பிரபுவுக்கோ தன்மகளை, ஸர் தூரியோ என்பவனுக்குக் கொடுக்க மிகவும் வாஞ்சையுண்டு. இதுபற்றிஸர்தூரியோ எல்லோரிலுமதிகமாய் அரண்மனையில் மரியாதை செய்யப்பெற்று அடிக்கடி ஸில்வியாவுடன் பேசிக்கொண்டிருந்தான். என்றாலும், ஸில்வியாவுக்கு ஸர் தூரியோவென்றால் வெறுப்பேயொழியச்சிறிதும் பிரியமில்லை. வெரோனா நகரத்திலிருந்து புரோட்டியஸிடம் விடைபெற்றுக்கொண்டு வந்த வாலண்டயின் என்னுங் கனவான் இவ்விடம் வந்தபோது, இவருக்கும் ஸில்வியாவுக்கும் அதிக அன்பு உண்டாய், தம் மனதுக்குள்ளேயே இருவரும் ஒருவரை ஒருவரன்றி மற்றையெவரையும் மணம் புரிவதில்லை யென்று சொல்லிக் கொண்டார்கள். பிரபுவுக்கோ, வாலண்டயின் அவ்வளவு அதிகமாகப் பிடிக்கவில்லை. ஸர் தூரியோவுக்குப் பல்வகைச்செல்வமும் அதிகமாயிருந்ததால் தன் பெண்ணின் நன்மையைக்கூடக் கருதாமல் ஸர் தூரியோவையே அவள் மணம்புரிய வேண்டியதென்று ஒரே

க்ருத்துக் கொண்டார். என்றாலும், வாலண்டயினையும் அவமரியாதை செய்வானேன் என்று பெருந்தன்மையாய் அவனையும் விருந்திட்டு உபசாரஞ்செய்து வந்தார்.

இப்படிச் சிலகாலங்கழிந்தபின்னர், புரோட்டியஸும் முற்கூறியவாறு மிலான் நகரத்துக்கு வரவே, பழைய சிநேகிதர்களிருவரும் முன்னுள்ள அன்பு அத்தனையும்பற்றி அதிகமாகச் சிறிதும் மறைவின்றி வெகு ஆப்தமாகப் பேசிக்கொண்டார்கள். வாலண்டயின் தான் அனுப்பிய கடிதங்களுக்கு ஸில்வியா பதிலெழுத முடியாமல் தன் கையுரையொன்றையும், பின்னர் வாலண்டயினையே தனக்காக ஒருகடிதமெழுதச்சொல்லி, அதிலன்பு மிகுந்து ஒருவருக்கொருவர் எழுதுமாறு எழுதிவாங்கிஅதைஅவளெழுதியதாக இவனே படித்துக்கொள்ளும்படியாகக் கொடுத்தும், இப்படியும் மற்றும் பலவிதமாய் அன்புபாராட்டி வருவதையும் தன் நண்பனுக்குச் சொல்லி அவளழுக்கேயில்லாமல், மற்ற எவரும் அவளுக்குக் கீழ்ப்படிந்து வேலைசெய்யவே தகுந்தவரென்றும் பலவாறாய்ப் பித்துப்பிடித்தவன்போல அன்பின் மிகுதியால் புலம்பினான்.

புரோட்டியஸ்: "இதென்ன! நானிவ்விதமாய்ப் பேசுங்காலத்தில் என்னை யெவ்வளவோ கண்டித்துப் பேசுவையே! இப்போது உன்மனதின் பித்தலாட்டம் என்னிடத்திலும் பதின் மடங்கதிக மாயிருக்கிறதே?" என்றான்.

வாலண்டயின்: "ஆம், முன்னே வெறுத்ததற்கும், மற்றையோரை ஏளனஞ் செய்ததற்குந் தண்டனையாக இக்காமத்தால் பட்டினியாயும், பெருமூச் செறிந்தும், இரவெல்லாமழுதும், பகலெல்லாம் வருந்தியு மிருக்கிறேன். இனி அன்பின் பேச்சைத்தவிர மற்றெதுவும் என் காதிற் செல்வதில்லை. அன்பைப்பற்றிய பேச்சே எனக்கு உணவும் உறக்கமுமாக இருக்கின்றன. அவற்றைத் தவிர வேறொன்றும் வேண்டாம். இவ்விதமாய் அன்பு கொண்டவருக்கு அன்பையே உயர்வாகப் பேசுவது மிகவும் பிடித்தம். ஸில்வியாவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? உலகில் அவளுக்கு ஈடுமுண்டோ?"

புரோட்டியஸ்: "மிகவும் அழகு வாய்ந்தவள் தான்; என் ஜூலியாவைப் போலிருக்கிறாள். நல்லது நான் போய் கப்பலிலிருந்து என் சாமான்களை வீடு கொணர்ந்து சேர்க்கவேண்டும்."

இவ்விதமாய்க் கூறிய புரோட்டியஸ், உஷ்ணம் உஷ்ணத்தைத் தணிப்பது போலும், ஒரு ஆணியை மற்றொரு ஆணி அடித்து வெளிப்போக்குவதுபோலும், ஸில்வியாவைக்கண்ட மாத்திரத்திலேயே, தனக்கு ஜூலிஜாவிடமிருந்த அன்பத்தனையு மிழந்துவிட்டு, நெருப்பில் அரக்கு உருகுவது போல் உருகி, தானே அவளை மணம் புரிந்துகொள்ளவேண்டுமென் றெண்ணங் கொண்டான். ஆகவே, ஜூலியாவுக்குத் தான் சொல்லியவார்த்தையுமறந்திட்டு, தன் உயிர் நண்பனுக்கே தான் செய்யுந் துரோகத்தையும் நினையாமல், தனக்கென்றே ஒரு முயற்சி தேடவாரம்பித்தான். வாலண்டயின், தூரியோவுக்கு ஸில்வியா வாழ்க்கைப்படாவண்ணம், அவளுடன் தானும், காட்டுக்காவது ஓடிவிடுவதென்று துணிந்து, அன்றிரவில் நூலேணி ஒன்று கொண்டுவந்து தப்பித்தோட ஏற்பாடு செய்திருந்தான். அதை அவன் நட்பின் விஷயமாகச் சொல்லக் கேட்டு, அதை எவ்விதமாயாவது மிலான் பிரபுவுக்குத் தெரிவித்து, வாலண்டயினை அப்புறப்படுத்தித் தன்னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதென்பதே இவன் சூழ்ச்சி.

இது இத்தகையதாயிருக்க, ஜூலியா, புரோட்டியஸின் பிரிவாற்றாமையால் எவ்விதமாயாவது அவனைப்போய்ப் பார்க்கக் கண்ணுவது களிக்குமென்று, தன் வேலைக்காரியோடு யோசனைசெய்து, அவன் சாதாரணமாய்த் திரும்பி வரும்வரை பொறுக்க முடியாமல், ஆண்வேஷம் தரித்து, பெரிய மனிதர் வீட்டில் வேலைக்கிருக்கும் ஆளாக அமர்ந்துகொள்ளும் வகைக்குத் தக்கபடி ஏற்பாடுசெய்து மிலான் நகரத்துக்குப் புறப்பட்டாள். "நீ இவ்வளவு பிரயாசையெடுத்தும் அவ்விடத்தில் உன்னை அவர் கவனியாவிட்டால், என்னசெய்வாய்?" என்று லூஸெட்டா கேட்டாள். "ஆ, இழிவான மனிதருக்கல்லவா இழிவான வெண்ணந்தோன்றி,

சொன்னவார்த்தையை மாற்றுதலும் காதலரைக்கைவிடுவதும் ஸ்வபாவம்? புரோட்டியஸ் வார்த்தையின் உண்மையும், அவரன்பின் அளவும் எண்ணங்களின் நேர்மையும் யோசித்துப்பார்த்தால் இவ்விதமாய் நினைக்கத் தோன்றுமா?" என்றும் பின்னும் 'ஆற்றின் வெள்ளத்தை அணையிட்டுத்தடுத்தால் எங்ஙனம் பொங்கி, வெள்ளம் பெருகி அதன் வேகமும், மூர்க்கமும் அதிகரிக்குமோ, அதுபோலவே, இத்தனை நாள் அவர் முகம் பாராததால் வாஞ்சை அதிகரித்து எப்பொழுது காணப்போகிறோமென்றிருக்கிறது' என்றாள். ஜூலெட்டா, தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தன் தலைவி இங்ஙனங் காதலனைக் காணப்புறப்பட்டபடியால் அவள் இச்சைப்படியே அனுப்புவித்தாள்.

இதற்குள், புரோட்டியஸ், மிலான் பிரபுவை இரகசியமாய்க்கண்டு, தன் சினேகிதன் கயிற்றேணிகொண்டு, ஸில்வியாவிருக்கும் உப்பரிகையினின்று அவளை யழைத்துக்கொண்டு, இருவரும் ஓடிவிட எண்ணியிருந்த ஏற்பாடுகளைத் தெரிவித்தான். பிரபுவும் அவ்விதமாய் அடிக்கடி சந்தேகப்பட்டிருந்ததால், இது விஷயம் இவ்விதமாய்த் தன் காதுக்கெட்டவே, தக்க முயற்சிசெய்ய வேண்டுமென்று, வாலண்டயின் வரும் வழியில் இரவில் நின்றுகொண்டு, அவன் வந்தபோது அவனைக்கூவித் தன் மகள் தன் மனமொப்ப நடந்துகொள்ளாததால் அவளைப் பற்றிச்சிறிதும் அக்கறையில்லாதவனாய், தானே வேறு மணம்புரிந்துகொள்ள இஷ்டமுடையவனென்றும், அவ்விதமாய்த் தான் எண்ணங்கொண்ட பெண் தன்பேரில் பிரியமுள்ளவளாயினும், மற்றவர்கள் தடைசெய்வதால் தன்னெண்ணம் நிறைவேறுதல் முடியாதாயிற்றென்றும், இது விஷயமாய் வாலண்டயின், ஏதாவது உதவி செய்யமுடியுமாவென்றும், பலவாறாக அவன் மனதைச் சோதித்து, அவன் வாயினின்றுமே அவன் குற்றத்தையும் ஏற்பாடுகளையுமறிய வேண்டுமென்று கேட்க, வாலண்டயின், கயிற்றேணிகொண்டு உப்பரிகையேறி, இரவிலோடிவிடலாமென்று யோசனை சொன்னான். அந்த ஏணி எங்கே கிடைக்குமென்றும், எவ்விதமாய் உபயோகிக்க வேண்டுமென்றும், பிரபு பின்னும் வினவ, வாலண்டயின், சாதாரணமாகக் கடைகளில் கிடைக்குமென்றும், ஒரு புறத்தில் இரண்டு கம்பிகள் அறிவாள்போல் வளைந்திருக்குமென்றும், அந்த ஏணி மிகவும் லேசானபடியால், ஒரு முனையை கையில் பிடித்துக்கொண்டு இக்கொக்கிகளுள்ள மற்றொரு முனையை விசிறி, உயர எறிந்தால் கட்டிடத்தில் சன்னல் முதலிய விடங்களில் இவை பற்றிக்கொள்ள, சுலபமாய் ஏறவாவது இறங்கவாவது முடியுமென்றும், கள்ளமில்லாமல் வெள்ளைமனதோடு வெகு ஸ்பஷ்டமாய்ச் சொல்லிவிட்டான்.

பிரபு பின்னும் அந்த ஏணியை எவ்விதமாய்மறைத்துக்கொண்டு போகலாம் என்று கேட்க 'உமது உடைக்குள்ளேயே சுலுவாய் அடங்கிவிடும்' என்றான். 'உன் உடையை எடு பார்ப்போம், அதுயாதிரி உடை ஒன்று செய்தால் போதுமா' என்று கேட்டுக்கொண்டு, அவன் மறுதளிக்க வொட்டாமல் அவன் உடையைப்பற்றிப் பார்க்க அதில் அவ்வித நூலேணி ஒன்றும், ஸில்வியாவாகிய தன் புத்திரிக்கு, 'இதோ உன்னை விடுவிக்க வந்திருக்கிறேன்' என்று வாலன்டையின் எழுதிவைத்திருந்த கடிதத்தையுங்கண்டு, தனக்கு புரோட்டியஸ் சொன்னது உண்மையென்றும், தனக்கே தோன்றிய சந்தேகங்களுக்கு நிஜமாகவே இடமுண்டென்றும், இவ்விதமாய் அவன் செய்த ஏற்பாட்டைச் சாதுர்யமாகக் கண்டுபிடித்துக்கொண்டது அதிர்ஷ்டவசமென்று மாறிமாறி துக்கித்தும் சந்தோஷித்தும், பின் வாலன்டையினைப்பார்த்து "அடா உன்னை நான் எவ்வளவோ அருமையாய் என் அரண்மனைக்கு வரவழைத்து இதுவரை உபசாரம் செய்து வந்தேன். இதுதானா என்னுதவிக்கெல்லாம் நீ செய்யும் கைமாறு. சீச்சீ! நீ ஒரு கனவானா, உடனே இந்த ராஜ்ஜியத்தைவிட்டு வெளியேறு. இது விஷயம் ஒருகணம் தாமதித்தாலும், என் பிரஜைகளில் யாவரேனும் உன்னை எங்கே கண்டாராகிலும், உன்னைக் கொன்றுவிட உத்தரவுண்டு. ஆகையால் ஜாக்கிரதை' யென்றுசொல்லி விரட்டிவிட்டான்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

வாய்

THE MOUTH

ஞானேந்திரியங்கள் என்னும் வீட்டிற்கு வாயிலாக அமைந்தது வாய். நம் வீட்டின் வாயிலில், யாராவது வெறுக்கத்தக்க சரீரத்தோடு வந்தால், நாம் அவரைத் துறத்துகிறோம்; நிற்காமல் போகும்படி தள்ளுகிறோம். நம் வீட்டைத்தேடி, யாராவது சுத்தமான உடையோடும், சுத்தமான சரீரத்தோடும் வந்தால், நாம் அவரை எதிர்வந்து உபசரிக்கின்றோம். அது போலவே, கெட்ட ஆகாரம் வாயில்போட்டால் உடனே குமட்டிக்கொண்டு வெளியே வந்துவிடுகிறது: ஆகாரம் ருசியாகவும் நேர்த்தியாகவும் இருந்தால் வாயில் வெகுநேரம் வைத்து ருசிபார்த்துப் பிறகு உட்கொள்ளுகிறது. வெளியில் போய்விட்டு வந்தமனிதன் வீட்டுக்குட் செல்லுமுன் ஜோடு முதலியவற்றைக் கழற்றிக் குடை முதலியவற்றை ஒரு புறத்தே வைத்துக் கைகால்களைச் சுத்திசெய்து தயாரித்துக்கொள்வது போலவே, ஆகாரம் வயிற்றிற் செல்லுமுன், பற்களால் அறைபட்டு உமிழ் நீரோடு கலக்கப்பெற்றுத் தயார் செய்யப்படவேண்டும்.

வாய் என்னும் வீட்டிற்குக் கூரையாக அமைந்துள்ளது 'அண்ணம்' (palate). அது வாயின் முன்பாகத்தில், கடினமாயும், எலும்பு போன்றும், பின்பாகத்தில் மிருதுவாயும் சதைப்பற்றுள்ளதாயும் இருக்கிறது. மிருதுவான அண்ணத்தின் மத்தியிலிருந்து உள்நாக்குத் தொங்குகிறது. கடைவாயில் மிருதுவான அண்ணத்தின் இருபக்கத்திலும் (Tonsils) உண்ணுக்கு விசைநரம்புகள் இருக்கின்றன. நாவானது, வாய் என்னும் வீட்டிற்குத் தரைபோன்றது வாயின் பக்கங்களில், கன்னங்களும், முன்புறத்தில் உதடுகளும் இருக்கின்றன. கன்னங்களிலும், கீழ்வாய், நாக்கு, இவைகளுக்குக்கீழும், (salivary glands) உமிழ்நீர் விசை நரம்புகள் இருக்கின்றன.

ஆகாரத்தை விழுங்கும்பொழுது (soft-palate) மிருதுவான அண்ணம் மூக்குத்துவாரத்தை அடைக்கிறது. கடின அண்ணம் பேசும்பொழுது உபயோகப்படுகிறது. சில பேருக்கு அண்ணத்தில் ஒரு துவாரம் இருக்கும். இருந்தால் அவர்கள் சரியாய்ப் பேச முடியாது. உண்ணுக்கு விசைநரம்புகள், சுவாசப்பை, இரைப்பை முதலியவைக்குள், விஷப்பூச்சிகள் செல்லாதபடி தடுக்கின்றன. குழந்தைகளுக்கு அடிக்கடி மேற்கண்ட விசை நரம்புகள் பெருத்து நாவும் தடித்துப் போம் அப்பொழுது தொண்டை புண்ணாயிருக்கும். சில சமயங்களில் மூக்கின் பின்பாகம் வீங்கி வாயால் மூச்சுவிடும்படி நேரிடும்; அதற்குத் தக்க சிகிச்சை உடனே செய்ய வேண்டும்.

நாவை எத்திசையிலும் தாராளமாக அசைக்கலாம். நாவின் கீழ்ப்புறம் மிருதுவாயும், மேற்புறம், சொறசொறப்பாயும், இருக்கும். நாவின் மேற்புறமெங்கும் பலா முள் போன்ற வஸ்துக்கள் இருக்கின்றன. இவைதாம் சொறசொறப்புக்குக் காரணம். இம்முட்கள் இருப்பதால்தான் நாம் ருசியை நன்கு அறிகிறோம். நாவின் பின்பாகத்தில் பெரிய முட்களிருப்பதால்தான், ருசியை அங்கே மிகவும் நன்றாகக் கண்டறிகிறோம். சரியான தேகஸ்திதியிலிருக்கும்பொழுது நா சிவந்தும், ஈரமுள்ளதாயுமிருக்கும். மேற்புறத்தில், சொறசொறப்பு உபர்யமாய்க் காணக் கூடியதாய் இருக்கும். நோயுற்றிருக்குங்கால், வெள்ளிய ரோமம் படர்ந்ததுபோல் காணப்படும். நா தடித்தும், வழுவழுப்பாயும், நிறம் மாறியதாயும்இருக்கும். நாவில் ரோம மூடியதுபோல் கண்டால், இரைப்பையும், ஜீரணக் கருவியும் கெட்டுப்போய் விட்டன என்று அறிந்துகொள்ளவும். இது ரோகக் குறியாம்.

நாம் நாவினால் உணவை ருசிபார்க்கிறோம். உணவை மெல்லும்பொழுது பற்களிடத்திற் கொண்டுசேர்க்கவும், உணவை விழுங்குவதற்கும், பேசுவதற்கும், நா உதவுகிறது. தண்ணீரிற் கரையும் வஸ்துக்களைத்தான் ருசிபார்க்க முடியும். மற்றவற்றை ஸ்பரிசத்தினால்தான் அறியலாம். புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கைப்பு, உவர்ப்பு, கார்ப்பு என்னும் அறுசுவைகளைத்தான் நாவினால் ருசியறியலாம். உணவின் மணத்தை அடி மூக்கினால் முகருகிறோமே யல்லது, நாவினால் ருசி

பார்ப்பதில்லை. அதினால்தான் நாம் ஜலதோஷத்தால் வருந்தும்போது, சாப்பாட்டின் மணம் ருசி ஒன்றும் தெரிவதில்லை. மூக்கு அடைபட்டுப் போயிருப்பதால், உணவின் மணம் மூக்கில் எட்டுவதில்லை. அது காரணத்தாலேயே சிலர் விளக்கெண்ணெய் அல்லது வேறு துர்க்கந்தமுள்ள மருந்துகளை உபயோகப் படுத்தும்பொழுது மூக்கை அழுத்திப் பிடித்துக் கொள்கின்றனர். நாவுக்கு அடிக்கடி எரிவு கொடுக்காமல் பாதுகாக்கவேண்டும். இல்லாவிட்டால், பிளவை என்னும் கொடும் வியாதிக்கு இரையாகும்படி நேரிடும். ஆதலால் உப்பு உரைப்பு சேர்ந்த சுவைகளையும், மிக்கப் பக்குவப்படுத்திய ஆகாரங்களையும் அதிகமாய் உபயோகப் படுத்தலாகாது. சுங்கானில் புகைகுடிப்பதினால், நாவில் எரிவு உண்டாகி நாவிலாவது உதட்டிலாவது பிளவை புறப்படுவதுண்டு. பல்லின் உட்புறத்தில் சொறசொறப்பிருந்து நாவின்மேல் அடிக்கடி படுவதினால் பிளவை உண்டாவதும் உண்டு. பல்லின் சொறசொறப்பைத் தந்தவைத்தியர்களைக்கொண்டு சுலபமாய் அராவிக்கொள்ளலாம்.

உமிழ் நீர் என்பது, உமிழ்நீர் விசைநரம்புகளால் செய்யப்படும் ஒருவித வஸ்து. உமிழ் நீரின் உபயோகங்களாவன: (1) உமிழ் நீர் உணவோடு கலந்து உணவை நனைத்து சௌகரியமாக விழுங்கச் செய்கிறது (2) பக்குவஞ்செய்த பசையுணவைச் சர்க்கரையாக மாற்றி ஜீரணத்துக்குச் சாதகம் செய்கிறது. (3) வாயை எப்பொழுதும் ஈரமாகவைப்பதினால், உண்ணவும் பேசவும் முடிகிறது. உமிழ்நீர் உண்டாவதற்கும், வாயில் ஓடிவருவதற்கும், மூளையும், நரம்புமே கர்த்தாக்கள். திடீரென்று ஒருவனைப் பயமுறுத்திவிட்டால், அவன் வாயில் உமிழ் நீரும் சுரப்பதில்லை; வாய் காய்ந்து உண்ணவும் பேசவும் முடியாமற் போகிறது. இங்கே சீனர்களைப்பற்றி வழங்கும் ஓர் கதையைச் சொல்லுகிறேன். குற்றஞ் செய்தவரின்னாரென்று கண்டுபிடிக்க இதை ஒரு வழியாக உபயோகப்படுத்துகிறார்களாம்.

அநேகம் பேர்களுடன் சந்தேகப்பட்டவனையும் வரவழைத்து ஆளுக்குக் கொஞ்சம் அரிசி கொடுத்து உண்ணச் சொல்வார்களாம். அப்பொழுது குற்றஞ்செய்தவன் நெஞ்சு குறுகுறுக்குமாதலால், அவன் பயமடைவதால், மூளையும் நரம்புகளும் சரியாக வேலை செய்யாமற்போக, உமிழ் நீரும் நின்று விடும். மாவாகப்போன அரிசி, மேல் வாயையும் கீழ் வாயையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, தொண்டையில் சிக்கிக் கொண்டுமிருக்க குற்றவாளி உணவை விழுங்க முடியாமல் தவிப்பானாம். இக்கதை விநோதமாயிருந்தபோதிலும், முற்றும் உண்மை என்று எண்ண இடமில்லை. ஏனென்றால், நல்ல ஆகாரத்தைப் பார்த்தாலும் வாசனை பிடித்தாலும், அதைப் பற்றி நினைத்தாலும், வாயில் ஜலம் ஊறுகிறது. புளிப்பு வஸ்துக்கள் உமிழ்நீரைப் பெருகச் செய்கின்றன. எலுமிச்சம்பழ ரசமானது, தாகத்தைச் சுலபமாகவும் சீக்கிரமாயும் சாந்தி செய்கிறது. ஆகையால்தான் மலைமீதேறிச் செல்பவர்கள், எப்போதும் தங்கள் கைவசத்தில், எலுமிச்சம் பழங்களை வைத்திருக்கிறார்கள்.

உமிழ் நீரை வீணாகச் செலவு செய்தால் வாய்சீக்கிரம் வறண்டுபோவதுடன், பேசவும் உண்ணவும் மெல்லவும் முடியாது. தவிர, விசை நரம்புகளுக்கு அநாவசியமாய் அதிக வேலை கொடுக்கும்படியாகிறது. புகைகுடிப்பவரில் சிலர் உமிழ் நீரை வீணாக்குகிறார்கள். உமிழ் நீர் வீணாய்ப்போவது நன்றாய்த் தெரிந்தும், புகை குடிப்பது அறிவிலிகளின் இயல்பு. புகையிலையை வெற்றிலையோடு சேர்த்து உபயோகிப்பதும் தகாத காரியமே; ஏனென்றால் உமிழ் நீர் அடிக்கடி வீணாகச் செலவழிகிறது; பற்கள் வெண்மை நிறங்கெட்டு, பழுப்பு, கருப்புமுதலான நிறங்களையடைகின்றன. தவிரவும், ஒரு விதமான விஷ பதார்த்தம் ரத்தத்தில் சேர்ந்து அதைக் கெடுத்து, சுகத்தையும் கொள்ளைகொள்கிறது.

துப்புதல் அசுத்தமாயிருத்தலோடுகூட ஓர் அபாயகரமான வாடிக்கை. வீடுகளில் கண்ட விடங்களில் துப்பினால், மனதிற்கு அரோசிகமாய் இருக்கிறது. மேலும் யார் மேலாவது எச்சில் பட்டால், அவர் நம்மை வெறுக்கின்றனர். தவிர, ஜனங்களின் வாயில் பல வியாதிகளின் கருக்கள் ஆயிரக் கணக்காக இருக்கின்றன. ஜனங்கள் கண்ட விடங்களில் துப்புவதினால், பற்பல வியாதிகள் பரவுவதற்கு இடமுண்டாகிறது. உமிழ் நீருக்கும் கபத்துக்கும் சம்பந்தமில்லை.

க்ஷயரோகம் என்பது ஒரு பயங்கரமான வியாதி. இதற்கு ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இரையாகின்றனர். இவ்வியாதி உண்டாவதெப்படியெனில், ஒரு சிறிய விஷப்பூச்சி சுவாசப்பைக்குள் புகுந்து, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து விடுகிறது. இவ்வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் சுவாசப்பையிலிருந்து, லக்ஷக்கணக்கான விஷப்பூச்சிகளோடுகூடிய கபத்தை வெளிவிடுகின்றனர்.

இப்பேர்ப்பட்ட கபத்தைக் கண்ட விடங்களில் துப்புவதினால், இப்பூச்சிகள் ஆகாயத்திலும், ஆகாரத்திலும் கலக்க, சுவாசிப்போர், உண்போர் இவர்களையும் க்ஷயரோகம் பீடிக்கிறது. ஆகையால் வீடுகளிலும், தெருக்களிலும் பொது ஸ்தலங்களிலும் கபத்தைக் கக்குதல் கூடாது. க்ஷயரோகம் மாத்திரமன்று; மற்று எல்லா ரோகங்களும் அக்கபத்தின் மூலமாய்ப் பரவலாகும். ஆதலால் அவர்கள் கையில் துணிவைத்திருந்து, அவைகளில் துப்பி, பிறகு அவைகளை எரித்து விடலாம். அல்லது கையில் சிறிய காளாஞ்சி வைத்துக்கொண்டு, அதை உபயோகப்படுத்தி, பிறகு சில திராவகங்களால் காளாஞ்சியைச் சுத்திசெய்யலாம். வாயில் முத்தம் இடுவது அபாயகரமான வழக்கம். ஏனென்றால் அதன் மூலமாய் க்ஷயம், சுரம், வைசூரிமுதலிய வியாதிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவலாகும். க்ஷயரோகிகள் பிறரையாவது, பிறர் க்ஷயரோகிகளையாவது வாயில் முத்தமிடலாகாது.

வீ. சுப்பிரமணியம், பீ. ஏ.

தற்செயலாய் நேரும் அபாய ஸம்பவங்களும், அவற்றின் ஆரம்ப சிகிச்சைகளும்

ACCIDENTS & EMERGENCIES

Hemorrhage— இரத்தத் தெறிப்பு

இரணங்களிடத்திலிருந்தும், தற்செயலாய் நேரும் பல விதமான காயங்களிடமிருந்தும், வெளிக்கொட்டும் இரத்தம், பார்ப்பவர்க்கும், இரத்த நஷ்டமடைபவர்க்கும் கஷ்டத்தையுண்டாக்கக் கூடியது. வீணாக இரத்தம் மிதமிஞ்சிச் சேதமானால், பிராணஹானிக்கிடமென்றும், அப்படியில்லாவிட்டாலும் நெடுநாள்வரை ஸ்வஸ்தமடையமுடியாத துர்ப்பலத்தை யுண்டாக்கக் கூடியதென்றும் யாவருமறிந்த விஷயமே. இதற்குக் காரணம் இரத்தத்தெறிப்பு மிகச் சாதாரணமாக நேரும் ஸம்பவமாகையால், ஒவ்வொருவரும், அந்தஸமயங்களில் இரத்தம் வெளிப்போவதைத் தடுப்பதற்குத் தத்கால சாந்தியாகவேனும் என்ன செய்யவேண்டும் என்பதை அறியவேண்டிய தத்யாவசியகம். இவ்விஷயத்தை அறிவதற்கு உடம்பினுள் இரத்தம் எவ்வாறு ஹிருதயத்திலிருந்து உடல் முழுதுமோடி மீண்டும் ஹிருதயத்துள் வந்து சேர்கிறதென்பதை நன்றாக அறியவேண்டும்; எந்தெந்த எலும்பின் புடைப்புமேல் இரத்தக் கால்வாய்கள் ஓடுகின்றனவென்றும், அவற்றை அப்புடைப்புகளின்மேல் எவ்வாறு தாக்க முடியுமென்பதையும் அறியவேண்டும்.

இரத்தத் தெறிப்பு மூன்று வகைப்படும்; அவ்வகைக்கேற்ப சிகிச்சை வேறுபடும். ஆகையால் அவ்வகைகளை நாம் அறியவேண்டும். அவை;

(1) ஹிருதயத்திலிருந்து வெளியோடும் இரத்தக் கால்வாய்கள், அதாவது சுத்திபெற்ற இரத்தத்தைக் கொண்டுசெல்லுங் கால்வாய்களில் நேரும் இரத்தத்தெறிப்பு;

(2) ஹிருதயத்தை அடையப் போகும் இரத்தக்கால்வாய்கள் அதாவது, அசுத்த இரத்தத்தைக் கொண்டுசெல்லுங் கால்வாய்களில் நேரும் இரத்தத் தெறிப்பு;

(3) ஷை இரண்டு கால்வாய்களும் மயங்குமிடத்தில் நேரும் இரத்தக்கசிவு.

முதல் சொன்னதில், பிராணவாயு நிறைந்து சுத்தமடைந்திருப்பதால் இரத்தம் சிவந்து குருவிந்த வர்ணமாயிருக்கும். தான் குவிந்தும் விரிந்தும் உண்டாக்கும் துடிப்பால் தன்னிடத்திலிருந்து ஹிருதயம் இரத்தத்தை ஓட்டுவதால், சுத்தரத்தமுள்ள கால்வாய்களில் ரத்தம் ஒரேகதியாக ஓடாது. ஆகையால், சுத்த இரத்தமோடுங் கால்வாய்க்கு, இரத்த ஓட்டத்திற்குத் தடையேற்படாது ஊறுண்டானால், வெளித்தோன்றும் இரத்தம் எழும்பிக் குதித்து வெளிவரும்; ஹிருதயத்தின் துடிப்போடொத்து எழும்பிக் குதிக்கும். கால்வாயின் வாய் சிறிது தடைபட்டிருப்பின், இவ்வாறு எழும்பிக் குதிக்காதிருக்கலாம்; ஆயினும் இரத்தம் அதிகுறைவாகவாயினும் நின்று நின்று எழும்பித் தட்டித்தட்டி விழுவது தெரியும்; சிறிய கால்வாயானால் இரத்தம் குதித்து விழாவிடினும் தயங்காது கொட்டும்.

இரண்டாவதாகச் சொன்ன இரத்தம் ஹிருதயத்திடம் போவது; அதை முதல் சொன்ன இரத்தத்தைப்போல் ஓட்ட விசை ஏற்படுத்த ஒன்றுங் கிடையாது. ஆகையால் அது ஒரே நிலையாக ஓடும்; தாரைபோல் விழும். மேலும் இவ்விரத்தம் உடல்முழுதும் பரவித் தான் கொண்டு சென்ற பிராணவாயுவை அங்கங்கு அந்த அந்தக் கோசங்களுக்குக் கொடுத்துத் திரும்புவதால் பிராணவாயுவில்லாமல் இருக்கும். அதனால் இந்த இரத்தம் சிவப்பு வர்ணம் குறைந்து நீலம் பாய்ந்திருக்கும்;. முதல் வகுப்பிற் சேர்ந்த கால்வாய்களிலிருக்கும் இரத்தத்தைக் காட்டிலும் கறுத்திருக்கும்.

மூன்றாவது இரத்தக்கசிவு. சிவப்புரத்தக் கால்வாய்கள் அநேகங் கிளைகளாகப் பிரிந்து உடலில் பாய்கின்றன. அவை வரவர சிறுத்து மயிர்போல் சிறிய ஓட்டையுள்ள கால்வாய்களாகக் கடைசி நிலையில் இருக்கும். அந்த ஸமயத்தில்தான் இரத்தத்திலிருக்கும் பிராண வாயுவை யுடலிற்குக் கொடுக்கும். இவ்விதம் உடலிற்குத் தன்னிடமிருக்கும் பிராணவாயுவைக் கொடுத்துவிடுவதால் இரத்தம் தனது சிவப்பு நிறம் நீங்கி மங்கி விடுவதுடன் உடலிலிருக்கும் அசுத்தங்களையும் பெற்றுக்கொள்வதால் நீலம் பாய்ந்து விளங்கும். இவ்விடம் இரத்தம் மெதுவாக ஓடும். முதல் சிறியஇடத்தில் ஓடிய இரத்தம் இப்பொழுது பரவி ஓடுதலால் இங்கு வேகக்குறைவோடு விளங்கும். இம்மயிர் போன்ற கால்வாய்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்து கனத்தகால்வாய்களாகி இவைமீண்டும் ஒன்றாகி ஹ்ருதயத்துள் சேர்கின்றன. இவற்றிலிருந்துதான் அசுத்தமான இரத்தம் ஹ்ருதயத்துள் சேர்ப்பிக்கப்படுகிறது. நிற்க, முன்சொன்ன மயிர்போன்ற கால்வாய்களில் உடைப்புண்டானால் இரத்தம் மெதுவாகக் கசியும். அதற்கு முன்சொன்ன வேகக்குறைவே காரணம். மேலும் இக்கால்வாய்களின் குழாய்கள் கனமற்றவைகளாயிருப்பதால் நமக்கு எந்த இடத்திலிருந்து இரத்தம் சிந்துகிறதென்று காணமுடியாதாகும்.

உடலில் சிலபாகங்களில்வெட்டுண்டானால் கணக்கு மிதமில்லாமல் இரத்தங்கொட்டும். இடையே எலும்புகள் முதலிய தடை இருக்குமாயின் இரத்தக்கால் வரையும் வெட்டு ஓடாது. மார்பிலும் உடலிலும் ஓடும்பெருமிரத்தக்குழாய்கள் முதுகெலும்புகளால் வெளியிலிருந்து அபாயங்களிலிருந்து காப்பாற்றப்படுகின்றன. ஆயினும், சிறிய கால்வாய்கள் வெட்டுண்டு பெருமிரத்தநஷ்ட முண்டாக்கலாம். மார்பெலும்பிற்கு இரு பக்கங்களிலும் விலாவெலும்புகளின் கீழ்ச் சுத்தரத்தக் கால்வாய்களிரண்டு ஓடுகின்றன. மார்புள் ஊடுருவிய குத்துக் காயத்தால்அவை பிளவடையுமானால் பிராணச்சேத முண்டாக்கக் கூடிய இரத்த நஷ்டத்தையுண்டாக்கும். வேறெங்குண்டாவதைக் காட்டிலும் வயிற்றிடம் காயமுண்டானால், அவ்வெட்டு அவ்வளவு அபாயமுடையதென்று சொல்லமுடியாது.

கழுத்துள் ஓடும் பெருமிரத்தக்குழாய்கள் பக்கத்திற்கொன்றாய் ஓடுகின்றன; பூணுர எலும்புகளிடமிருந்து அவை மேல்பக்கமாகச் செல்கின்றன. பூணுர எலும்புகளிற்கு உள்பக்கம் ஒரு அங்குலம் கீழ் அவை ஆரம்பித்துக் கீழ்த்தாடைக்குங் காதுக்கும் நடுவில் ஒரு இடம்வரைஓடுகிறது. இவ்விடம் கைவைத்துக் கவனித்தால் நாடி சப்தம் நன்றாகத் தெரியும்.

கைகளில், புஜத்திற்கும் முழங்கைக்கு நடுவில், இரத்தக்குழாய்கள் அக்கிளிலிருந்து கிளம்பிப்புயத்தின் உட்புறமாகக்கீழ்நோக்கி வருகின்றன. முழங்கையண்டை வரும் பொழுது, அம்முழங்கையின் வளைவின் முன்பக்கத்தில் நடுப்பாகத்தில் முன்புறமாகப் பாய்ந்து செல்கின்றன. ஆகையினால் இந்தப் பாகத்தில் எலும்பு இரத்தக் குழாய்களை வெட்டு முதலிய அபாயங்களிலிருந்து தடுக்கமுடியாதென்று ஏற்படுகிறது; ஆனால் அக்கால்வாய்கள் கைகளின் உட்பிரதேசத்திலிருப்பதால் தமது இடத்தமைப்பால் காக்கப்படுகின்றன. முழங்கைக்கும் மணிக்கட்டிற்கு மிடையே இரண்டு பெரிய இரத்தக்குழாய்கள் முழங்கை எலும்பிற் கிருபக்கங்களிலும் அடுத்தாற்போல ஓடுகின்றன. இவ்வெலும்புகள் ஒன்றை ஒன்றடுத்திருக்கின்றன. ஆகையால் இவ்விடம் இரத்தக் கால்வாய்கள் வெட்டுக் காயங்களிலிருந்து எலும்புகளால் பின்பக்கத்திலும், பக்கங்களிலும் உண்டாகக் கூடிய வெட்டுக்காயம் படாமல் காக்கப்படுகின்றன. முழங்கையின் மேல்புறத்தில் தடவினால், இரத்தக் கால்கள் கைக்குப் புலப்படும். மணிக்கட்டில் வெளிப்படையாக மேற்புறம் கால்களிருப்பதால்தான் வைத்யர்கள் நாடியைக் கவனித்துப் பார்க்கிறார்கள்.

ஹஸ்தத்தில் பெரிய இரத்தக் கால்வாய்கள் உள்ளங்கையில் நடுப்பாகத்தில் ஆழ்ந்து கிடப்பதால், இவ்விடம் வெட்டுக் காயமுண்டானால், பிளவடைந்த காலின் இரண்டு வாய்களிலிருந்தும் இரத்தம் கொட்டலாம்.

வயிற்றிலிருந்து அரைப்பூட்டு வழியாகப் பாய்ந்துவந்து ஒருபெரும் இரத்தக்குழாய், இடுப்பிற்கும் முழந்தாளிற்கு நடுவே காலில் ஓடுகிறது. அது உட்புறமாகக் கீழ்நோக்கி வந்து, வரவர முழந்தாளண்டை உட்புறமாகக் காலின் பின் பாகத்து மையத்திலோடுகிறது. முழந்தாளிற்குக் கீழ் இரண்டு இரத்தக்கால்களிருக்கின்றன. இவை இரண்டு எலும்புகளின் நடுவிலிருப்பதால் வெட்டுக் காயங்களால் கணைக்கால் வரையும் இவற்றிற்குச் சேதமுண்டாகாது கணைக்காலில் அவ்விடத் தெலும்புகளின் மத்தியில் ஓடுகிறது. பாதத்தில் அவற்றின் அமைப்பு உள்ளங்கையி லெப்படியோ அப்படியே. இங்கும் ஊறுண்டானால் இரத்தக் காலின் வெட்டுண்டு ஏற்பட்ட இருவாய்களிலிருந்தும் இரத்தங் கொட்டலாம்.

நாம் இதுவரையும் எழுதியது சுத்தரத்தக் கால்களைப்பற்றியே. ஆனால் இவைகளோடு இணைந்து கறுப்பு ரத்தக்கால்களுமோடுகின்றன. அவற்றிற்கு முன்சொன்ன கால்களுக்குண்டாகும் சேதங்களுண்டாகும். காலுங் கையும் ஒரேவிதமாக இரத்தத்தைப் பெறுவதால், இரண்டிடங்களிலும் இரத்தத் தெறிப்பிற்குச் சிகித்ஸை முறை ஒன்றுதான்.

முன்விவரித்த இரத்தக்கால்களன்றிவேறு இரத்தக் கால்வாய்களும், காயமடைந்தால் இரத்தத்தை மிகுதியாக வெளியிடலாம்; சில ஸமயங்களில் பிராண நஷ்டம் ஏற்படும்படிக்கூட இரத்தத்தை வெளியிடலாகும். உதாரணமாக, தோலிற் கடுத்தாற்போல காலில் இருக்கும் கறுப்பு இரத்தக் கால்கள் மிகப் பருத்து 'பெரிய காரிரத்தக் கால்' எனவழங்கும் இரத்தக்கால்களையுண்டாக்கலாம். அடி ஒன்றால் இக்கால்வாய்கள் பிளவாவது சேதமாவது அடையலாம். அப்பொழுதுண்டாகும் இரத்தத்தெறிப்பு மிக அபாயகரமானது; பிராணத்திற்கே ஹானியாக முடியினும் முடியலாம். முகத்திலும், கன்னப்பொறியிலும், தலையின் பின்பாகங்களிலும் உண்டாகும் வெட்டுகள் மிக அதிகமாக இரத்தத்தை வெளியிடலாம். ஆகையினால் இரத்தத்தெறிப்பைத் தடுப்பதற்கு உடற் கூட்டுள், இரத்தக் கால்வாய்கள், செவ்விரத்தக்கால்கள், காரிரத்தக்கால்களாகப் பிரிந்து, பரவி விளங்கும் அமைப்பை ஏறக்குறைய அறியக்கூடிய ஞானம் இருத்தல் நலமாயிருக்கும். இனி இரத்தத்தெறிப்பைக் குறைப்பதற்கும், நிறுத்துதற்கும் செய்யவேண்டிய சிகித்ஸா முறைகளைக் கவனிப்போம்.

உலக ஸம்பவங்கள்

How the World moves

யுத்தம் உக்ரமாகத்தான் நடந்து வருகிறது. நாம் முற்கூறியவாறு நேசத்துருப்புகளுக்கே ஜயம் கிடைக்கும் என்பதற்குச் சந்தேஹமே இல்லை.

கிழக்கத்திய அரங்கத்தில் ருஷ்யர்கள் மத்தகஜங்கள்போல, துருக்கி சைன்யத்தை மற்குணத் தொகுதிபோல் தேய்த்து வருகின்றனர். எந்த விதமான கஷ்டத்திற்கும் பின்வாங்காது காகஸஸ் மலையைத் தாண்டி, அவர் துருக்கிநாட்டின் பெரும் படைவீடாயிருந்த எர்ஜரம(Erzerum)கோட்டையைத் தகர்த்துக் கவர்ந்தனர். பிடிபடாத துருக்கிசேனையின் பின்வாங்கிய தொகுதியையும் நாடிச்செல்கின்றதாகத் தெரியவருகிறது. முக்காலே மூன்றுவீசம் அவர்கள் "ட்ரெபிஜாண்ட்" என்னும் பேரரண் கொண்ட துறைமுகத்தை நாடியும் போகலாம். அவ்வாறு போவதால் மேற்சொன்ன பட்டணத்தைக் கடல்மூலமாயும் நிலமூலமாயுங்கலந்து தாக்கலாகும். ட்ரெபிஜாண்டைக் கவரும்படி நேர்ந்துவிட்டால் துருக்கியின் பலம் முறிபடும்.

துருக்கிநாட்டிற்குள் நுழைய மூலவழியாகிய எர்ஜரம் பிடிபட்டது ரஷ்யரது பேராற்றலாலன்றி யாகாது. அக்கோட்டை பிடிபட்டது துருக்கியின் விலா வொடிந்ததேயாகும். மேலும் மெஸபொடேமியாவில் இந்திய சேனையின் வியவஹாரங்களுங் கலந்தால் துருக்கியின் பாடு திண்டாட்டமே. ஈஜிப்டின்மேல் படையெடுப்பு ஆயத்தமெல்லாம் இனி அதனால் முடியாதாகும். வீட்டில் பகைவனை வைத்துக்கொண்டு வெளியேற முடியுமா? இந்தியாமேல் துருக்கி படையெடுக்க வேண்டுமென்று கண்டுகொண்டிருந்த கனவு இனிக்காண ஸமயம் நெடுங்காலம் வரை ஏற்படாது!

மேல் அரங்கத்தில் மந்தகதியாக இருந்த ஜர்மானியர் வெர்டன் என்னுமிடத்தில் பலமாகக் கூடித்தாக்குவதாகத் தெரியவருகிறது இவ்விடம், போர் மும்முரமாக இருத்தல் ஆச்சரியமல்ல; தமது கையாலாகாத் தன்மையை வெளிக்காட்டா திருப்பதற்காக இந்த ஆடம்பரமாகும். மேலும் இவ்விடம் தாக்காவிட்டால் ருஷ்யர்களுக்கு இங்கிலிஷ் பிரெஞ் துருப்புகள் உதவியாகப்போய் முன்னமே வீராப்புடன் விளங்கும் ருஷ்யருக்கு உதவாமலிருக்கத் தடுப்பதற் கிருப்பினுமிருக்கலாம். ஆயினும் இவ்விடத்தில் ஆள் சேத மதிகமாக ஜர்மானியர்க் கிருப்பதல்லாமல் ஜயம் என்பது கிடைப்ப தரிதாயிருக்கிறது. என்ன செய்வார்கள்? அவர்க்குவேறு வழியில்லை. தட்டித் தடுமாறி ஓர் இடத்தில் சற்றுமுன் வந்தார்களென்பதே தவிர்த்து, மற்றுப் போர்முனையின் விஸ்தீர்ண முழுதும் பின்வாங்கினரென்பது அவர் ஆற்றலுக்குப் பெருமையா?

நிற்க, தெற்கரங்கத்தில் ஆஸ்ட்ரியர்களைப் பெஸ்ஸராபியாப் பிராந்தியத்தில் முதுகொடித்துப், புகொநோவியாவிலிருந்தும் துரத்துவதற்கு ருஷ்யர்கள் கார்யம் நடத்துகிறார்கள். அவருடைய கார்யம் பலனடையும் என்பதற்கு உஸ்ஸிஸ்கோ என்னுமிடத்தில் நீஸ்டர் நதிக்கரையிலிருந்து ஆஸ்ட்ரியர்கள் தள்ளப்பட்டதே போதுமான அத்தாட்சி. இங்கிலையை அடைந்தால் யவன தேசத்தில் ஸலோனிகா என்னுமிடத்தில் தங்கிய ஆங்கிலேய சேனையும், ருஷ்ய சேனையுமாகச் சேர்ந்து பல்கேரியாவைக் கத்தரியிலழுத்துவதுபோலத் தாக்கும். அப்பொழுது துருக்கியின் பாடு என்னவாகுமோ? ருமேனியா நாடும் அப்பொழுது மோனநாடக மாட முடியாது. ஜர்மானியர்கள் தமது ஆற்றலாலும் மிரட்டலாலும் ருமேனியாவை வெருட்ட முடியாது; அக்காலம் அப்பொழுதே போய்விட்டது. நல்ல ஸமயத்திற்காகவே ருமேனியா காத்திருக்கும் என்பது

திண்ணம். அதற்குப் பென்ஸில்வேனியாவின்மேல் கண்; அந்நாடு அதனிடமிருந்து ஆஸ்ட்ரியர்களால் கவரப்பட்டது. அதை ஜர்மனி அதற்குக் கொடுக்க ஒப்புவதற்கு ஹங்கரி நாடுஇடம் கொடுக்கும் என்பதுகனவிலுமாகாது. தனக்கு மூன்று பக்கங்களிலும் பகைவர்வீடாக அமைந்திருப்பதை நினைத்தே ருமேனியா மௌனம் கொண்டிருக்கலாம். புககோவியாவில் ருஷ்யர் படையெடுப்பும், ஸலோனிகாவிலிருந்து பல்கேரியாமேலும் நேசத்துருப்பின் படையெடுப்பும் கலக்கும்போதுஅது தனது பகைவரைத் தாக்க நமது சேனையுடன் கலக்கும் என்பது தவறாகாது.

ஆஸ்ட்ரியர்கள் டுரோஜோ என்னுமிடத்தைப் பிடித்து மாண்டிநீக்ரோ நாட்டிற் செல்வது பெரும்பெருமையாகாது. காட்டத்தகுந்த இடத்தில் வீரங்காட்டாது சிறிய நாட்டைத் தாக்குவது, தமக்குப் பெருமைக்குப் வேறுவழியில்லாமையால்எளியோரைப்பிடிப்பதேயாகும்! முற்கூறியவாறு இச்சண்டையைஆங்கிலேயநாவாய்ப்படையேமுடிவிக்கும் என்பதிற் கிவையெல்லாம் அத்தாட்சியாகும்.

* * *

ஜர்மனி நாட்டிற்கு இப்பொழுது இன்னதுதான் செய்வதென்று தெரியவில்லை. பித்தந்தலைக்கு ஏறஏற மயக்க மிகுதியால் தன் நினைப்பு மறந்துவிடுவது இயற்கையேயன்றி வேறல்ல. உயிராபத்திலிருக்கும்பொழுது ஆச்சுது போச்சுது என்றுதான் யாவர்க்கும் காரியங்களை நடத்தமுடியும்; அறிவு நல்லெண்ணம் எல்லாம் அப்பொழுது காற்றாய்ப் பறந்து போகும். தன்வினை தன்னையே சுடும்படியாகச் செய்துகொண்ட ஜர்மனி, தான் சண்டையிலிருந்து கௌரவமாக வெளிவருவதசாத்யமாகையாலும், தாழ்ந்து போவதற்கு மனச்சம்மத மில்லாமையாலும், கண்மூடிதர்பாராக, யுத்த நடவடிக்கைகளின் ஒழுங்குகளைக் கவனிக்காது, எல்லாக் கப்பல்களையும், பேதாபேத மில்லாமல், எந்நாட்டாரதாக விருப்பினும், மதிக்காது, வெடிகுண்டுகளிற் கிரையாக்க நிச்சயித்த கொடுமையிலும் கொடுமைவேறுமுண்டோ? பகுத்துணர் வடையு மனிதன் எவனும் ஸம்மதியாதபடி, அபலைகளாகிய பெண்களையும், குழந்தைகளையும் ஹத்திசெய்வதற்கு எக்காலத்திலாவது,எந்நாட்டிலேனும், ஏதேனும் யுத்தமுறை யிடங்கொடுத்த தெங்கேனுமுண்டா? ஜர்மனிக்கு மாத்திரம்இந்த சீரியமுறையைப் பிரஹ்மா விதித்தாரோ என்னமோ தெரியவில்லை. இக்கொடிய ராக்ஷஸப்பூண்டை ஒழிக்கக் கடவுள் காத்திருப்பார் என்பதற்கையம் சிறிதுமில்லை. கொஞ்சநாள் வரைதான் ஜர்மானிய வீரக்துள்ளும். பின் பல்லைப் பிடுங்கப்பட்ட பாம்புபோல் பெட்டியில் இருக்குமிடம் தெரியாமல் ஒரு மூலையில் விழுந்துகிடக்கும். நாளாக நாளாக அது நிச்சயம். மேலும் மார்ச்மாதம் முதல் எந்த வியாபாரக்கப்பலையும் கவனியாது சுடுதல் என்று விளம்பரப்படுத்திய அந்தஜெர்மனியின் எண்ணமே அதற்கு அறிகுறியாகும். சண்டையில் ஸம்பந்தப்படாத நாவாய் கடல்மேல்கிடக்க ஜர்மனிகண்டால் சுடுவதாக வெளியிட்டதும், அந்நாடு மற்றெந்த நாடும் தன்னிடம் அநுதாபங் கொள்ளாதிருக்கும்வண்ணம் அஸ்திவாரம்போட்டு விட்டதென்றே கருதவேண்டும். பர்ஷியா முதலிய ஸமாசாரக் கப்பல்களையும், போரில் ஸம்பந்தப்படாத ஆட்களைக்கொண்டு செல்லும் கப்பல்களையுஞ் சுடும்படியாக எந்த நாடு இடம் தரும்? ஸமுத்திரத்தின்மேல் கொள்ளைபறிக்கும் ஜர்மானிய கடற் சைன்யம் இவ்வாறு செய்வதால் விரைவில் நாசமடையும். கெடுவான் கேடுநினைப்பானல்லவா?

* * *

கனம் அப்துல் ரஹீம் அவர்கள் மஹம்மதிய வித்தியா பொதுஸங்க அக்கிராஸனம் வஹித்தபொழுது பேசியதைப் பற்றிப் பின் விரித்துரைப்பதாக முன்சொல்லப்பட்டதல்லவா? என்ன உண்மையாக அவர் பேசியிருக்கிறார்? இந்தியாவில் படிப்பில் ஏழ்மை விளங்குவதைப்பற்றி நமக்கு ஒருவர் சொல்லவும் வேண்டுமா? படிப்பின்மையால் அல்லவா நம்மவர் பல தவறான வழக்கங்களிலும் அவைதிக மார்க்கங்களிலும் நுழைகிறார்கள். தமது கௌரவத்தைக் கவனியாது, தலைகீழாக அவர் நடப்பதுமதனால் தான் அல்லவா? இவ்விஷயங்களைத்தான் அவர் நன்றாக விரித்து விளங்கவைத்

திருக்கின்றனர். இராஜாங்கத்தாரும் மேற்படி விஷயங்களில் கவலை கொள்வதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். எழுதவும் படிக்கவும் கணக்குப்பார்க்கவும் தகுந்த ஆரம்பப் படிப்பை யாவருமடையும்படியாகக் கவர்ன்மெண்டார் ஜனங்களைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றவர் சொல்லியது யாவர்தான் ஸரியன்றெனச் சொல்வார்? ஷை விஷயத்தை ஒரேமுறையில் இந்திய நாடுமுழுதும் கட்டாயப்படுத்துவதில் ஸந்தர்ப்பம் ஏற்படும்படி காலஞ்சென்ற ஸ்ரீகோபால்கிருஷ்ண கோகலே சில வருஷங்களுக்கு முன்பு ஓர் மசோதா சட்டம் கொண்டு வந்தனர். நமது துரதிருஷ்டம்! அது அங்கீகரிக்கப்படாது போயிற்று. இப்போது கனம் ரஹீம் அவர்கள் உரைத்தபடி முனிஸிபாலிடிகளை, படிப்பு விஷயமாக வரி ஏற்படுத்தி, வரும் வருமானத்தைக்கொண்டு, பாலபோதனையை முனிஸிபாலிடிகளில் கட்டாயப்படுத்தும்படி கவர்ன்மெண்டார் ஏற்படுத்துவது, அதனால் ஜனங்களுக்குண்டாகக்கூடிய நன்மையைப் பரீட்சிப்பதற்குத் தக்க இடந்தரும். ஏழை ஜனங்களுக்குப் படிக்கவேண்டுமென்ற ஆவல் இருக்கிறது; போதிய பணமில்லை. ஆனால் தக்க உதவியோடு அவர்களைப்படிக்கும்படி கட்டாயப்படுத்துவது பழம் நழுவிப் பாலில் விழுவதேயாகு மல்லவா?

***

திருசிராப்பள்ளி ஜில்லா ஜட்ஜியாகிய ஹார்டிங் அவர்களை ஓர் சித்தபிரமை கொண்டவன் மார்பில் குத்திக்கொன்ற கொடுமையை எவ்விதங் கூறலாகும்? யாவரிடமும் அன்போடு விளங்கி வந்த அவர், வருவதையுணராது, கச்சேரியுட்செல்ல வண்டியிலிருந்து இறங்கியபொழுது, பக்கத்திலிருந்து "இஸ்மேல்" என்னும் பேர்கொண்ட பித்தனால் கொலையுண்டதை நினைக்கும்போது "மணமகனே பிணமகனாய், மணப்பறையே பிணப்பறையாய்" என்று ஆரம்பிக்கும் திருவிளையாடல் பாடல் தானே மனத்திற்கு வரும். நிற்க. பல இடங்களிற் சென்று, தனது பிரியாதைக் எடுத்துக்கொள்ளாமையால் ஆக்ரோஷமும் பித்தமும் உற்று, மயக்க மிகுதியால் அவ்விஸ்மேல் கொடியன், ஹார்டிங் அவர்களிடம் கச்சேரி வாசலில் பிரியாதைக் கொடுக்கவர, அவர், ஸரியான வழியாக அதை அனுப்பும்படி ஆணையிட்டனர். சித்தப்பிரமைலிருந்த இஸ்மேல் நியாயஸ்தத்தில் வந்தும் . நியாயமேற்படுவதசாத்தியமானதாகச்சில புத்திஹீனர்கள் தவறான அபிப்பிராயங் கொள்வதுபோல், பித்தந்தலைக்கேற, தன்னைமறந்து, உயிர் மீது பற்றில்லா முரடனாய், ஒரு தவறும் செய்யாத ஹார்டிங்கைக் கொன்றதோடிருக்கவில்லை. போலீஸ்காரர்களையுந் தாக்கி, ஜெயிலில் காவலாளையுந் தாக்கி உயிர்ச் சேதம் செய்தனன். பின் ஓர் போலீஸ் சேவகனால் கையிற் சுடப்பட்டு ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோகப் பட்டதாகத் தெரிய வருகிறது. அவன் கதி தெரிந்தேஇருக்கிறது. நாம் விவரிக்கவேண்யடிதில்லை.

பாவம் ஹார்டிங் அவர்களின் மனைவியும் குழந்தைகளும் இருந்தாற்போல் இடிவிழுந்தாற்போல, இந்த பெரும் ஆற்றமுடியாத துன்பத்திற் காளானதை நினைக்க துயர் நமக்கே விம்முகிறது. அவர்களுக்கெப்படியிருக்கும்? நமது அநுதாபத்தை அவர்பால் தெரிவிக்கிறோம்.

***

தற்காலம் நடக்கும் பெரும்போரின் பலனாக ஜர்மானியரது வியாபாரம் முறியடிக்கப்பட்டதால், வேறு தேசங்கள் தமது வியாபாரங்களைச் பரவச் செய்யத்தக்க ஸாதனங்களை ஏற்படுத்திக்கொண்டு இந்தியக் கடைகளைத் தமது ஸாமான்களால் நிறப்புகின்றன. இது நமக்கு க்ஷேமம் அல்ல. இந்த ஸமயம் விட்டால், நமது வியாபாரத்தையும், தொழிலையும், வேறு விதமான அன்ய நாடுகளால் நாமடையும் பொருள்களை நாமே செய்தலையும்,கைக்கொள்வதற்கு வேறு ஸமயங் கிடைக்காது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்.கிடைத்த ஸமயத்தை விட்டுப் பின் ஆ! என்று ஆங்காத்திருப்பது எதற்கு? பிறரிடம் நமது வியாபாரம் போகாது நடவடிக்கைகளை நாம் ஏற்படுத்தினாலன்றி தேசம் க்ஷேமம்அடைவதெப்படி? இராஜாங்க உதவியையே நாடிக் காத்திருப்பது மிக்க தவறு. நாம் நமது நன்மைக்குத் தக்கவிதம் நடந்தால்இராஜாங்கத்தார் தாமே உதவி செய்வார் என்பது திண்ணம். நாம் அஜாக்ரதையாக இருப்பது அழகல்ல. ஸமயப்போக்கை நாடி நமது நாட்டில் இப்பொழுது ஜப்பானியர் பலவித வேடிக்கைச் சாமான்கள், சோப்புகள், கண்ணாடிச் சாமான்கள், நெருப்புப் பெட்டிகள் முதலிய சாமான்களை நமது நாட்டுக்கடையெங்கு நிரப்பி நமது வருமானத்தை எல்லாம் தமதாக்கிக்கொள்ளுகிறார்கள். இதைப் பார்த்தும் நாம் சும்மா இருப்பது மடமையிலு மடைமை. கண்கெட்ட பிறகா ஸூர்ய நமஸ்காரம் செய்வது?

***

என்ன கஷ்டம்! நமது நாட்டு ஏழை ஜனங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வெளிநாடு சென்று படும் பாட்டை நினைக்க நினைக்க ஒவ்வொரு இந்தியனுக்கும் மீசை துடிக்கு மல்லவா? கனம் ஹார்டிஞ்சு பிரபு அவர்களின் ஆதரவினால் கலோனியல் கவர்ன்மெண்டார் ஏதோ வழிக்கு வந்ததாக நினைத்து ஸந்தோஷித்தாலும், அனுபவத்தில் சட்டம் ஒருவிதமும், நடவடிக்கை ஒரு விதமுமாக இருப்பதாகத் தெரியவருகிறது. பிஜி (Fiji) என்னும் த்வீபத்தில் நமது ஜனங்கள் படும்பாட்டை டாக்டர் மணிலால் என்பவர், "மாடர்ன் ரிவ்யூ" என்னும் பத்திரிகையில் வெகு விரிவாக எழுதியிருக்கின்றனர். தோல் வெளுப்பில்லாப் பாவத்தால் நம்மவர் படும் பாட்டைத் தவிர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.அது வெளிநாட்டிற்கு நமதாட்களைக் கூலியாட்களாகப் போகாதிருக்கும்படி இராஜாங்கத்தாரால் தக்க சட்டம் அமுலுக்குக் கொண்டுவந்து, அதனால் மாத்திரமே தடுக்க முடியும். அவ்விதம் செய்யாத வரையில் இக்குடிகள் இருதலைக் கொள்ளி எறும்புபோல் திண்டாடவேண்டியதுதான்!

***

ஸ்ரீகாசி க்ஷேத்திரம் புதியபடிப்பிற்கு இடமாகும்படி ஹிந்து விச்வவித்யாலயத்திற்குத் தமது கையால் கனம் ஸ்ரீ ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் அன்போடு அஸ்திவாரக்கல் நட்டனர். இத்தகைய வித்தியாலயங்கள் பன்மடங்காகத் தோன்றி இந்திய நாட்டில் தத்காலம் குறையாய் விளங்கும் படிப்பில்லா விருளை ஓட்டவேண்டுமென அவாக்கொண்டதாக அவர் வெளியிட்டனர். மேலும் ஸ்ரீகாசி ஹிந்து விச்வவித்தியாலயமென்னும் இந்திய ஸர்வகலா ஸங்கத்தில் மாணாக்கர் ஒன்றுகூடி ஒரே யிடத்தில் ஒரே உபாத்தியாயரிடத்தில் படிக்கும்படியான ஒழுக்கமுடைமை முற்காலத்திய பிரஹ்மசரியப் பழக்கத்தை வெளியிடும். சிறுவர்களும் ஒன்றுகூடி ஒரே யிடத்தில் படிப்பதால் வித்யாலயத்தின் லக்ஷ்யமெதுவோ அதனை நேரிலேயே அடையமுடியும். மதப்படிப்பும், ஒழுக்கமும் அவ்விடம் கவனிக்கப்படுவதால் மனத்தின் விசாலத்திற்கோர்குறையுமில்லாது,மதாபிமானம் முற்றி, வேறுமத வெறுப்பின்றி, ஸமநோக்கங்கொண்டு,மாணாக்கர்கள் உயர வழியுமுண்டு. இந்தியநூல்கள்செல்லரித்துப்போவதொழிந்து, மாணவர் கையின்வாய்ந்து, பலநாட்புதை பொருள்களை, யாவருமறிய ஸாதனங்களேற்பட்டு, பல சாஸ்திரசர்ச்சையும், பரிசீலனமும் கொண்டு முன்னதைப் புதிப்பித்து, இந்நாட்டு மத, சாஸ்திர, சிற்பாதி நூல்களை வெளியிட்டும், மேல்நாட்டாரது நூலையும் ஆராய்ந்தும், இரண்டும் ஹிதமாக உலகிற்கு விளங்கும்படி செய்ய இந்த வித்யாலயம் ஜன்மஸ்தானமாகுமென நம்புகிறோம். நிற்க, வித்யாலயத்தின் அஸ்திவாரக்கல் நட்டபோது "ஹிந்து ஸமூஹத்தின் வாழ்க்கையிலும், எண்ணங்களிலும் சிறந்தவை எவையோ அவையும்; ஹிந்து மதத்திலும், ஸாம்பிரதாய வழிகளிலும் சிறந்தன எவையோ அவையும்; ஹிந்துக்களின் பழக்கவழக்கம் நாகரீகம் இவற்றில் உயர்ந்தன எவையோ அவையும்; இவை எல்லாம், கூடிய சீக்கிரத்தில் சாவதானமாக விளங்க, இவ்வித்தியாலய விருக்ஷம் வளர்க்கப்படுமென்றும், அந்த விருக்ஷம் தனது இயற்கை நாட்டில் பலமாக ஆழ்ந்த வேரூன்றி, மேல்நாட்டுச் சிறந்த சாஸ்திர சித்ர போதனாதி ஸாரத்தையுமுண்டு, கப்புங்களையுமாகப் பரவியாவர்க்கும் பலனைத் தருமென நான் விரும்புகிறேன். அப்பொழுதுதான் சிறுவர் தூய்மையு மேன்மையும்பெற்றுத் தமது தாய் நாட்டின் மேன்மைக் குழைத்துத் தமது நாட்டுவளத்தை வளர்ப்பவராவார்" என

அவர் சொல்லிய மொழிகள் எவர் மனத்தை விட்டகலும்? கரும்புதின்னக்கூலியும் வேண்டுமா?

* * *

“மாதாவை ஒருநாளு மறக்கவேண்டாம்” என்றாள் ஔவை மூதாட்டி. இந்திய மாதாவை எந்நாளு மறக்கவேண்டாமென்றுசாஸ்திரப் பிரவீணராகிய டாக்டர் பி. ச. ராயர் (Dr. P. C. Roy) கூறிய மொழிகள் யாவர்க்குமேயாம். மேற்சொன்ன விஷயத்தைப் பற்றி ராயர் அவர்கள் ஸ்ரீகாசி விச்வ வித்தியாலய அஸ்திரவாரக்கல்லை நாட்டியபோது பேசியது. அதை நமது மித்ரர்களுடைய பிரயோஜனத்திற்காக அடுத்த போதினியில் வெளியிடப்படும். இடமில்லாமையே இதற்குக்காரணம். ஆனைக்கும்அடிசருக்குமல்லவா?

* * *

கோவாபரேடிவ் ஸங்கங்கள் வரவர விருத்தியாவது யாவர்க்கும் நன்மையே. அதன் மூலமாக ஜனாபிப்ராயமும் ஸுகமும் விருத்தியாக நல்ல இடமுண்டு. தத்காலம் கோவாபரேடிவ் ஸங்கத்தார், அங்கத்தினர்க்கு வேண்டியதாயிருக்கும் அரிசி முதலிய சாமான்களைச் சேகரித்து விற்பதிலும், ஏழைகளுக்குப் பூமியின்மேல் கடன் கொடுப்பதிலுமே கவனம் செலுத்துகின்றனர். கூட்டுறவு சங்கங்கள் எத்தனை வகையாக இருக்கின்றனவோ அத்தனையும் தேசத்திற்கு நல்லதே. முக்கியமாக ஒன்றில் அச்சங்கத்தினர் கவனம் செலுத்துவது மிக உயர்ந்த நன்மையைத் தரக்கூடியது. தத்காலம் பட்டணங்களில் வீடில்லாது, வீட்டுக்காரர்களுடைய மனம்போன வீம்பிற்குட்பட்டுத் திண்டாடும் எளிய ஜனங்களுக்கு உதவி செய்ய அவர் முயற்சிசெலுத்தல் பேருதவியாகும். இந்த விஷயமாகப் பணஞ் சேகரித்துக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி, வீடுகளை சில ஒழுங்குபடி கட்டி, நியாயமான குடிக்கூலிக்கு விடுவது மிக்கப் பிரயோஜனத்திற் கிடந்தரும். நினைத்தாற்போல காரணமின்றி வீட்டுவாடகையை யுயர்த்தும் வீட்டுக்காரர்களுடைய கர்வத்தையும் ஒருவாறு அது அடக்கும். முக்கியமாகச் சென்னைநகரத்தில் அது அத்யாவச்யகம். ஏழை சொல் அம்பலமேறுமோ?

மதுபிந்து கலகம் என்று முன் நடந்ததாகச் சிறுகதைகளில் முற்காலத்துச் சிறியோர்கள் படித்திருக்கலாம். தத்காலம் கல்கத்தா இராஜாங்கக் கல்லூரியில் நடந்த ஸம்பவங்களைக்கவனித்தால்அது ஞாபகத்திற்கு வராதிராது. சிறுவர்களைச் சரி ஸமானஞ் செய்வதால் வரும் பிரமாதத்தை அது யுணர்த்தும். உலகத்தினுள் அடக்கம், பயம், பக்தி, விச்வாஸம் இவைகளிற் சிறந்து, துன்மார்க்கப் பிரவர்த்தியில் போகுந்தன்மை இல்லாத நமது இந்திய பாலர்க்கு அயல்நாட்டுச் சிறுவர்போல் துஷ்டகுணமடையும்படி செய்வதற்கு ஏதாவது பிரமாதமாக அவர் மனதைத் தூண்டும்படியான அற்பமான விஷயம் இருக்கு மல்லவா? இதற்கு உபாத்தியாயர்களாக வரும் ஐரோப்பியர்கள் இந்திய பழக்க வழக்கங்களில் ஞானானுபவமில்லாமையும், இந்தியச் சிறுவர்களிடம் சிலர் அலட்சியமாக நடப்பதுமே காரணங்களாகும். சிறுபிள்ளை லக்ஷணம் உலகமுழுதுமொன்றே. அதைக் கவனியாது நடப்பது பக்குவமற்ற ஞானத்தை யுணர்த்தும். பிச்சைக்காரன் மேலா பிரம்மாஸ்திரம் விடுவது? பிள்ளை வருத்தம், பெற்றவளுக்கல்லவோ தெரியுப். மற்றவர்களுக்குத்தெரியுமா? உபாத்தியாயர்களும் சிறுவர்களுமிணங்க இரண்டு பக்கங்களிலும் ஒழுக்கம் வேண்டும். இல்லையேல், பிள்ளையார்பிடிக்கக் குரங்காய் முடிந்துவிடும்.

நீரளவே யாகுமா நீராம்ப றான்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

[திற்

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்வேழத்
பட்டுருவங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

மாதவீகங்கணம்

அத்யாயம் 8

(265-ம் பக்கத்தொடர்ச்சி.)

மந்த்ராலோசனை மண்டபம்

உடனே ப்ருத்விராஜர் தன் ஆஸனத்தை விட்டெழுந்து சக்ரவர்த்தியவர்களுக்குத் தலைவணங்கி “மஹாராஜா, க்ஷத்ரியவம்சங்களுள் முதன்மை வஹித்திருக்கும் மீவார் ராஜ குடும்பத்தினருக்கு மரியாதை செய்வதற்கு ப்ரதி க்ஷத்ரியனும் முன் வருவான். ப்ரதாபஸிங் புத்ரருக்குச் சக்ரவர்த்தியவர்கள் அனுப்பும் நிருபத்தை அடியேன் எடுத்துச் செல்ல கருணை புரிய வேண்டும்” என்றார்.

“ராஜபுத்ர ஸிம்ஹமே, அப்படியே நீரே எடுத்துச் செல்லலாம். உம்மைவிட ப்ரதாபஸிங்குக்கு அதிகமாய் வேண்டியவர் ராஜஸ்தானம் முழுவதிலும் வேறெவருங் கிடையாது. அவரைப்பற்றிப் புகழ்ந்துரைப்பதே உமக்கு ஓர் ஆனந்தமாய்விட்டது. நாம் அனுப்பும் செய்தியை நீர் எடுத்துச்சென்றால் அது அமார்ஸிங்குக்குச் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்ததுபோலிருக்கும். நமது ஸமஸ்தானத்திலிருந்து உமக்கு இஷ்டமானவர்களைக் கூட அழைத்துச் செல்லலாம்.”

“ராஜாமான்ஸிங் உத்தரவு கொடுத்தால் அவர் கீழிருக்கும் கஜபதிஸிங்கை அழைத்துச் செல்வதில் எனக்குப் பரம ஸந்தோஷம். அவர் ஜோத்புரி ராஜ்குடும்பத்தைச் சேர்ந்தவர். எமது பீகானீர் வம்சத்துடன் ஸம்பந்தம் செய்திருக்கிறார். நானும் அவரும் பால்ய நண்பர்கள். பின்னாடியும் அதிகமாய் ஒருவரைவிட்டொருவர் பிரிந்ததில்லை. ஆதலால் இப்போதும் நாங்களிருவரும் ஒன்றாய்ச்செல்ல உத்தரவு அளிக்கவேண்டும்.”

மான்ஸிங் சுளித்த முகமாய், “என் கீழ்இருப்பவர்கள் சக்ரவர்த்தியவர்களுடைய ஸேவகர்களே. சக்ரவர்த்தியவர்கள் கஜபதியைப் போகவேண்டுமென்றால் நான் என்ன தடைசொல்லப்போகிறேன்? கஜபதி நல்ல தைர்யசாலி. அவன் இத்தொழிலை ஸரிவர நிறைவேற்றுவான்.”

சக்ரவர்த்தியவர்கள் ஆஸனத்தை விட்டெழுந்து, “ஸரி, கஜபதியும் உடன் செல்லட்டும். அவருடன் அவருடைய நண்பராகிய நரேந்த்ரனும் கூடச்செல்லலாம்” என்றார்.

மந்திரிமார்கள் யாவரும் சக்ரவர்த்தியவர்களுக்கு வந்தனஞ்செய்து செலவு பெற்றுப் போயினர். கடைசியில் நரேந்த்ரன் வந்தான். சக்ரவர்த்தியவர்களுக்கு வந்தனஞ் செய்யும்போது, அவர் கடைசியாய்த் தன்னிடம் காட்டிய அன்பைக்கண்டு ஆனந்தங்கொண்ட நரேந்த்ரனுக்குக் கண்களில் நீர் ததும்பிற்று. அக்பர் பெருமான் தன்மீது இவ்வளவு தயை வைப்பாரென அவன் கனவில்கூட எண்ணியதில்லை. சக்ரவர்த்தியவர்கள் அவனுடைய உள்ள நிலைமையை அறிந்து தன் மகனிடம்போல் பரிவாய்ப் பேசலானார்.

“நரேந்த்ரநாத் ராய், நீ உன்னிஷ்டப்படிக்கு ராஜஸ்தானம் செல்லலாம். தாமஸம் வேண்டாம்; கார்யம் ஜடுதியில் ஆக வேண்டும்” என்று சொல்லிப் பின்னும் பேசலுற்றார். “ஆக்ரா கோட்டையைவிட ராஜஸ்தானமே உனக்கு இப்போது பத்ரமான இடம். ஆக்ராவில் தார்த்தரிப் பெண்களுடைய மோகவலை லேசானதன்று; அதற்குத் தகுந்ததுபோல் பேடிகளுடைய க்ரூரமும் ஸஹிக்கக்கூடியதன்று.”

கடைசியாய்த் தாழ்ந்த த்வனியில் அக்பர் கூறிய மொழிகளைக்கேட்டு நரேந்த்ரன் இடிவிழுந்தவன் போலானான். அவனுக்குத் தன் ப்ரஞ்ஞைவரச் சிறிது நேரமாயிற்று. அதற்குள் அக்பர் போய்விட்டார்.

அத்யாயம் 9

அக்பர்—அபுல்பாஸலும் படோனியும்

“அபுல்பாஸல், இன்றைக்குப் பகலெல்லாம் வேலை நிரம்ப இருந்தது. என்பாடு ஜாஸ்தி களைத்துப்போய்விட்டது. உமது ஸஹோதரர் இயற்றிய இனிமையான கீதங்களில் இரண்டொன்றை யெடுத்துப் பாடினால் கேட்கலாம்போலிருக்கிறது.”

அப்போது அர்த்தராத்ரி. அக்பர் தன் நண்பர்களிருவருடன் யமுனாநதி தீரத்திலுள்ள அரண்மனையின் ஓர் அறையில் உட்கார்ந்திருந்தார். ஜன்னல்கள் வழியாய்ச் சந்த்ரகாந்தி ப்ரகாசித்துக்கொண்டிருந்தது; அடுத்தாப்போல் கீழே யமுனையாற்று ஜலம் கோட்டைச் சுவர்களின்மீது மோதும் சப்தம் மந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. அறைமுழுவதும் சுற்றுப்பக்கத்துத் தோட்டங்களிலுள்ள செடிகளில் புஷ்பித்திருக்கும் மலர்களின் நறுமணம் கம்மென்று வீசிக்கொண்டிருந்தது. அறைக்குள் சந்த்ரவொளியில் பளபளவென்று ஜ்வலிக்கும் பளிங்குச் சுவர்களின் பக்கமாய் ம்ருதுவான ஆஸனங்கள் போடப்பட்டிருந்தன. அறையின் மேற்கூரையில் விசித்ர புஷ்பங்கள் வரையப்பட்டிருந்தன. அக்பர் ஸாயந்த்ரம் சிறிது அன்னம் புசித்துவிட்டுச் சயனக்ருஹம் செல்லுமுன் ஒரு மணி காலம் தனது விருந்தாளிகளிருவருடன் ஸம்பாஷணை செய்ய எண்ணங்கொண்டு இவ்வறைக்குள் வந்தார்.

அந்த இரண்டு விருந்தாளிகளுள் ஒருவர் தான் அபுல்பாஸல். இன்னொருவர் கல்வியிலும், எழுதும் வன்மையிலும் அபுல்பாஸலுக்கு இணையான படோனி என்னும் சரித்ராசிரியர். அவர் அதிக வைதிகர். வீரசைவர்கள், வீரவைஷ்ணவர்கள் என்பதுபோல் அவர் வீரமுஸல்மான். இந்த அறைக்குள்வர எல்லோருக்கும் அநுமதி கிடையாது. அக்பருடைய ஆப்த நண்பர்கள் எனச்சொல்லப்படுபவர்களுக்குள் வெகுசிலரே இந்த அறைக்குள் உட்கார்ந்து அக்பருடன் ஸம்பாஷிக்கும் பேற்றைப் பெற்றவர்கள். அவர்களுள் பிர்பால் என்பவர் ஒருவர். அவர் தமது விகடவார்த்தைகளால் பல தினங்கள் இவ்விடத்தில் அக்பருடைய மனக்கவலையைப் போக்கி அவரை ஸந்தோஷிப்பித்துள்ளார். இவ்வறையில் ப்ருத்விராஜரும் அநேகமுறை தமது ஜன்மபூமியாகிய ராஜஸ்தானத்துக் கீதங்களைப் பாடி அக்பரை மகிழ்விப்பதுண்டு. கிறிஸ்தவப் பாதிரிகளும், மகம்மதிய முல்லாக்களும், ஹிந்து பண்டிதர்களும் தத்தம் மதங்களின் மேன்மைகளை எடுத்துக்கூறிப் பொழுது விடிவது தெரியாமல் ஒருவருடனொருவர் அக்பர் முன்னிலையில் வாதாடுவதுமுண்டு. ஆனால் அன்றிரவு அவர் மனது அவைகள் எவற்றின்மீதும் செல்லவில்லை. அவர் சற்றுநேரம் நிச்சிந்தையாயிருக்க விரும்பினார். அந்திய காலத்தில் அவருடைய மனக்கவலைகளை மாற்றத்தகுந்த யோக்யதை பெற்றிருந்தவர் அபுல்பாஸல் ஒருவரே. ப்ரதி இரவும் அவர் அக்பர் பக்கம் உட்கார்ந்து அவருடைய எல்லையற்ற மனோவேதனைகளைத் தம்மாலானமட்டும் ஸமாதானப்படுத்திவந்தார்.

“பாய்ஸி இருந்தமட்டும் அவர் தம் கர்ணாம்ருத கீதங்களால் என்னை மகிழ்வித்து வந்தார். அக்கீதங்களில் இரண்டொன்றை நீர் பாடும். அல்லது உமது ஸொந்த கீதங்களையாவது பாடும். உமது கவிகளில்போல் ஆழ்ந்தயோசனையும், ச்ருதாம்ருதமான பதங்களும் ஒன்றுசேர்ந்து வேறெவருடைய கவிகளிலும் காணப்படுவதில்லை.”

அபுல்பாஸல் அவருடைய கீதங்கள் சிலவற்றை யெடுத்துப்பாடினார். அவற்றின் தாத்பர்யம் பின்வருமாறு:—

“என்னை உண்மை அன்புடன் நேசித்த எனது ஆதிகாலைய நண்பர்களெல்லாம் ஒவ்வொருவராய் இவ்வுலகைவிட்டு அகன்றனர். நான் எவர் துணையுமின்றித் தன்னந்தனியாய் இந்த அகண்ட அந்தகார வழியில் செல்கின்றேன்.

“இவ்வுலகெல்லாம் எங்கு பார்த்தாலும் எண்ணிறந்த ஜனங்கள்; காடு, மலை, நாடு, நகரங்கள் எல்லாம் ஜனக்கூட்டமாயிருக்கிறது. இருந்தென்ன? ஸமுத்ரமெல்லாம் ஜலமிருந்தாலும், குடிக்க ஒரு துளி நீர் உதவாததுபோல், இவ்வகண்ட புவியில் ஒருவித குற்றங்குறையுமின்றி நிர்த்தோஷியான மனிதனைத் தேடித் தேடிப் பார்த்தலைந்தேன்; ஒருவரையுங் காணேன்.”

“நீ என்ன தேடினாலும் அகப்படுவது கஷ்டம். ஒருவேளை வெகுகாலம் தேடினால் அகப்படுவானோ என்னமோ? தெரியாது. நிர்த்தோஷியானவன் இவ்வுலகில் அகப்படுவது அரிது. உமது கவியிலுள்ள ஆழ்ந்த கருத்துக்கிணை இக்காலத்துக் கவிகளில் கிடையாது. புராதன கவிதாக்களின் நூல்களை ஆராய்ந்தால்தான் அகப்படும்.”

16203

“ஸ்வாமீ, நமது முன்னோர்கள் ஸதா ஈசுவரனது ச்ருஷ்டிகளினிடமே அன்பு வைத்து அவைகளைக்கொண்டே தமது அறிவைத் தீட்டிவந்தனர். அவர்கள் அவைகளின் ரஹஸ்யங்களை நுட்பமாய் க்ரஹித்தவர்கள். நாம் இப்போது இருப்பது மனிதன் நிர்மாணம் செய்த உலகம். இப்போது நகரங்களும் நகரக்காட்சிகளும், ஆடையாபரணங்களுமே அதிகரித்துவிட்டன. ச்ருஷ்டியின் இயற்கையழகைக் கவனிக்கும் வழக்கமே போய்விட்டது. இதுதான் இதற்குக் காரணம்.”

“நமது ப்ரஸித்திபெற்ற பர்டோஸியவர்களுடைய கவிகள், ஹிந்துதேசத்து இதிஹாஸபுராணாதிகள்—இவற்றிற்கு இணையான க்ரந்தங்கள் ஏதேனும் நமது காலத்தில் ஏற்பட்டிருக்கிறதா?”

“ஏதுவுமில்லை. நமது காலத்து நூல்கள் புதிதாய் மலர்ந்த புஷ்பத்தைப்போல் கொஞ்சகாலம் நறுமணத்துடனிருந்து சீக்ரத்தில் வாடி யுலர்ந்துபோகின்றன. ஆனால் இந்தியா, பாரஸீகம் இந்நாடுகளில் பூர்வத்தில் இயற்றப்பட்ட க்ரந்தங்கள் இமயமலையடி தேவதாரு வ்ருக்ஷங்களைப்போல் கற்பாறைக்குள் வேரூன்றி பல்லாண்டு பல்லாண்டுகளாக ஜீவித்துவருகின்றன.”

“இருந்தாலும் நமது அகண்ட ராஜ்யத்தில் ஸாஹித்ய துறையில் இரண்டொரு க்ரந்தங்களாவது அல்லது கீதங்களாவது மார்க்கண்டேய நிலைமையை அடையும் என்று நான் எண்ணுகிறேன்.”

“அடையலாம். ஆனால் நம்முடைய ஸமஸ்தான நூல்கள் ஒன்றும் அவ்வித பாக்யம் பெறமாட்டா. ஸாமாந்ய ப்ரஜைகளுக்குள் வழங்கும் பாஷையில் இயற்றப்படும் நூல்களுக்கு அந்தப் பெருமை உண்டாகும். நமது ஸமஸ்தான பாஷை பாரஸீக பாஷை. நமது அரண்மனையில் தவிர்த்து வெகுசிலரே அந்தப் பாஷையை வழங்குகின்றவர்; ஸாமாந்ய ஜனங்களுக்கு அதன் பெயரே தெரியாது. நல்ல பளிங்குத் தொட்டியில் வைத்து வளர்த்த செடியில் உண்டாகும் புஷ்பத்தின் அழகைக்கண்டு களிப்பது ஒரு நாள் காலம்தான். மறுநாள் அது வாடி விடுகின்றது. இந்தப் புஷ்பத்தையொத்தவை நமது ஸமஸ்தான நூல்கள். ஆனால் ஜனங்களுடைய நூல்களோ, காட்டில் ஸ்வேச்சையாய்ச் செழிப்பாக வளர்ந்து ஆகாயத்தை ஊடுருவி நின்று உலகத்தார் அனைவருக்கும் நிழல் கொடுத்துரக்ஷிக்கும் ப்ரஹ்மாண்டமான வ்ருக்ஷங்களுக்கு நிகரானவை.

“ஏன், ஹிந்துக்கள்கூட நமது பாஷையை எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ளுகிறார்களாமே. நமக்குத் தெரிந்ததுபோல் அவர்களுக்கும் பாரஸீக பாஷை தெரியும் என்று கேள்விப்படுகிறேன். ராஜா தோடர்மால் அவர்கள் இந்தியா முழுவதும் பாரஸீக பாஷையை ராஜ பாஷையாக அநுஸரிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிற விஷயம் உமக்குத் தெரியுமே.”

“ஹிந்துக்கள் மஹா புத்திசாலிகள். அவர்கள் ராஜ பாஷையை எளிதில் கற்றுக்கொண்டுவிடுவார்கள். ஆனால் அவர்கள் தமது எண்ணங்கள், யோசனைகள் அனைத்தையும் வெளிப்படுத்துவது அந்த பாஷையிலன்று. தம் தாய்ப்பாலுடன் சிறிது சிறிதாய் உட்கொண்ட தாய்ப்பாஷையில்தான் அவர்கள் எழுதுவது, பேசுவது யாவும் நடக்கின்றன.”

“அப்படியானால் அவர்கள் தம் தாய்ப்பாஷையில் சிறந்த கீதங்கள் ஏதாவது இயற்றியிருக்கின்றனரா?”

“ஸூர்தாஸ், கேசவதாஸ் இவர்கள் இயற்றிய கீதங்களை ஜனங்கள் அம்ருதமாகப் பானம்செய்யும் விஷயம் தங்களுக்குத் தெரிந்ததே. துளஸிதாஸ் என்னும் மஹான் ராமாயண சரித்ரத்தைத் தமது ஸ்வயபாஷையாகிய ஹிந்தியில் கர்ணாம்ருதமாய்ப் பாடியிருக்கிறார். வட இந்தியா முழுவதும் ப்ரதி க்ராமங்களிலும் இவர்களுடைய பாடல்களைச் சிறியோர் பெரியோர் அனைவரும் தினந்தோறும் சிரவணம் செய்கிறார்கள். நாம், நம் ஸந்ததியார் பலர் எல்லோரும் மாண்டபின்னரும் அந்தக் கீதங்களை ஜனங்கள் பாடிக் கொண்டிருப்பார்கள் என்பதற்கு ஸந்தேஹமில்லை.”

“அபுல்பாஸல், நீர் சொல்வதெல்லாம் அதிக புத்திசாலித்தனமாயிருக்கிறது. வட இந்தியாவைப்போல் இக்காலத்தில் ஸாஹித்ய துறையில் ப்ரஸித்திபெற்ற ப்ராந்தியம் வேறு ஏதாவதுண்டோ?”

"ராஜர்மான்ஸிங்கைக் கேட்டால் அவர் சொல்வாரே. வங்காளத்தில் காசிராம் என்பவர், பூர்வகாலத்துப் புராண இதிஹாஸங்களை ஸாமான்ய ஜனங்கள் பேசும் பாஷையில் பாடியிருக்கின்றார். வங்காள முழுவதும் அவருடைய கீதங்கள் தெரியாத குக்ராமமே கிடையாது. இப்போது முகுந்தராய் என்றொருவர் இருக்கிறார். அவருடைய கீதங்களும் ப்ரஸித்திபெற்றவை. அவர் சிறிது காலத்துக்குமுன்னே மான்ஸிங் அவர்கள் முன் தமது நூதன கீதங்களைப் பாடினார். ராஜா அவர்கள் ஆனந்த பரவசமானார்."

"ஆம், அவர் வங்காளத்துக் கீதங்களைப் பற்றி ச்லாக்யமாகப் பேசியிருக்கிறார். எனக்கும் கேட்கவேண்டுமென்றிருக்கிறது. ஆனால் என்ன செய்வது? எனக்கு வங்காளி பாஷை தெரியாது. கற்றுக்கொள்ளலாமென்றாலோ வயதாய் விட்டது. வரவர ஒழிவு நேரமென்பதே அபூர்வமாய்விட்டது. எனக்கு அந்தப்பாக்யம் இராமலே போய்விடும்."

"தக்ஷிணத்தில்கூட மஹாராஷ்ட்ரர்கள் பல கீதங்கள் இயற்றியிருக்கின்றனர். ஸ்ரீதரருடைய கீதங்கள் உலக ப்ரஸித்தமானவை. மஹாராஜா, இவைகள்தான் தங்களுடைய காலத்து ஸாஹித்ய ரத்னங்கள். இவைகளால்தான் தமது காலத்து நாகரிகம், எண்ணங்கள், யோசனைகள் முதலியவை பின்காலத்தவருக்குத் தெரிய வேண்டும்."

"எனது கோடிக்கணக்கான குடிகள் தத்தம் பாஷைகளில் சிறந்த க்ரந்தங்கள் இயற்றி அவற்றைப் பாடிக் களிப்பதைக் காண்பது எனக்கு அதிக த்ருப்தி. அவர்களுக்குள் பல மதகுருக்களும், மதசீர்திருத்தக்காரர்களும் ஏற்பட்டு ஒவ்வொருவரும் பல்லாயிர ப்ரஜைகளைத் தமது சீஷர்களாக்கொண்டு உலகத்தார் உய்யும்பொருட்டு உழைத்துவருகிறார்கள். நாமும் ஒரு நூதன மதஸ்தாபனம் செய்தோம். அந்த மதத்தை வெகு சிலரே தழுவியுள்ளார்."

"ஸ்வாமீ, இந்த விஷயத்தில் அந்த மதச்சீர்திருத்தக்காரர்களுடைய கருத்தும் தங்களுடைய கருத்தும் ஒன்றே. கருத்தில் யாதொரு வித்யாஸமுங்கிடையாது. ஆனால்அவர்கள் உழைப்பது ஸாமான்ய ப்ரஜைகளுக்குள்; தாங்கள் உழைப்பதோ அரண்மனைக்குள். ஸமஸ்தானத்திலுள்ள அமீர்களும், ப்ரதானிகளுமே தங்களுடைய மதத்தைத் தழுவுகின்றவர்கள். நூறு வருஷங்களுக்கு முன்னர் காசியில் ராமானந்தர் என்றொரு மஹான், கடவுள் ஒருவரே என்னும் உண்மையைப் பலருக்குப் போதித்தனர். அவருடைய சிஷ்யராகிய கபீர்தாஸரும் தங்களைப் போலவே ஹிந்துக்கள் முஸல்மான்கள் எல்லோரையும் ஒன்றேயான முதல்பொருளை வணங்கும்படிச்செய்து அவர்களையொன்றுபடுத்தவேண்டுமென்ற அவாக்கொண்டிருந்தார்."

"ஹிந்துக்களே, காசியா உமது கடவுளின் உறைவிடம்? மகம்மதியர்களே, மெக்காவா உமது கடவுளின் உறைவிடம்? அன்று, அன்று! காசியுமன்று, மெக்காவுமன்று! ஸஹோதரர்களே, உங்களுடைய மனதைத் தேடிப்பாரும். அவ்விடத்திலேயே இருக்கிறார் ஹிந்துக்களுடைய கடவுளும், மகம்மதியர்களுடைய கடவுளும். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் வஸித்திருக்கிறார் அந்தப் பரம்பொருள்?" என்று அவர் பலமுறை போதித்தனர்.

"என்ன அருமையான கருத்து! நமது பண்டிதர்களெல்லாம் பொறுக்கிப் பொறுக்கி அலங்காரமான பதங்களை வைத்துக் கீதங்கள் பாடுகிறார்கள். அவை ஜனங்களுடைய மனதுக்கு ஆனந்தம் கொடுப்பதில்லை. முதலில் அவர்கள் அவைகளைச் செவிகொடுத்துக் கேட்பதுகூடக் கிடையாது. கபீரைப் போன்ற ஸர்வமத ஸம்மதமான மஹான்கள் வேறெவராயினும் உண்டோ?"

"பஞ்சாபில் ஒருவர் இருந்தார் நூறு வருஷங்களுக்கு முன். அவர் ஒரு பெரிய மதகுரு. அவர் பெயர் நானக். அவரும் கபீரைப் போல் ஹிந்து மகம்மதிய ஐக்யத்தை நாடியவர். அவருடைய மதத்தை ஹிந்துக்களும் முஸல்மான்களும் அவலம்பிக்கின்றனர். அவர்களுக்கு ஸிக்ஜாதியார்களெனப்பெயர். அவர்கள் மஹா தைர்யசாலிகள். நல்ல திடகாத்ரர்கள். ராஜபக்தியில் சிறந்தவர்கள்."

"அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களெல்லாம் உண்மையான

ஒரு முதல் பொருளைப் பேதமின்றிப் பூஜிப்பதால் எனக்கு அவர்களிடம் அதிக மதிப்பு உண்டு."

"வங்காளத்திலும் நூறு வருஷங்களுக்கு முன் சைதன்யர் என்றொருவர் இருந்தார். அவரும் ஹிந்து முஸல்மான்களை ஒன்று சேர்க்க முயன்றவர். அவர் மதத்தை தழுவினவர்கள் கணக்கற்றவர்கள்."

"இந்த மதாசிரியர்கள் அனைவரும் ஸாமாந்ய ப்ரஜைகளைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய வாழ்க்கையும் டம்பமற்ற வாழ்க்கைதான். அவர்கள் ஸதா ஸாமாந்ய ஜனங்களுடன் உழைத்து அவர்களைச் சீர்திருத்தி வந்தார்கள். அதனால்தான் அவர்களுக்கு அவ்வளவு ஜயம் உண்டாயிற்று. அத்தனை சிஷ்யர்கள் ஏற்பட்டனர்."

"எப்போதும் அப்படிதான். ஸாமான்ய மனிதர்தான் ஸாமாந்ய ப்ரஜைகளுக்குப் போதித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரக் கூடியவர்கள். அப்பேர்ப்பட்டவர்களுடைய பேச்சுதான் அவர்களிடத்தில் அம்பலம் ஏறும். அவர்களைக்கண்டால் ஜனங்களுக்குத் தேவதா பக்தி. இயேசுகிறிஸ்து பரமதரித்ரர்; அவர் வஸித்தது செம்படவர்களுடன்; அவர் போதித்தது அவ்விடத்தில்தான். அவர்படாதபாடு கிடையாது. அவரை மனம்போனபடிக்கெல்லாம் ஹிம்ஸித்தனர். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்தார். கடைசியில் சிலுவையிலும் அறையப்பட்டனர். அதற்கும் அவர் வாயைத் திறக்கவில்லை. மஹா பொறுமைசாலி. முஹம்மது இருந்தாரே. அவர் கதியென்ன? மெக்காவினின்று மெடினா ஓடி உயிர் பிழைத்தார்."

"மேனாட்டிலிருந்து நமது ஸமஸ்தானத்துக்கு வந்த கிறிஸ்தவ பண்டிதர்கள் இயேசு கிறிஸ்துவின் சரித்ரத்தை எனக்கு ஸாங்கோபாங்கமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவோ ஸஹிக்கக்கூடாத துன்பங்களையெல்லாம் பொறுமையுடன் அனுபவித்துக் கடைசியில் சிலுவைக்கு இரையாகிய அந்த மஹானுடைய சரித்ரத்தைக் கேட்கும்போதெல்லாம் எனது கண்களில் நீர் ததும்பும். மேனாட்டினர்கள் யாவரும் போர்த்துகேசியர், டச்சுக்காரர், இங்கிலீஷ்காரர் முதலியவர்கள்—அவருடைய மதத்தை அநுஸரிக்கிறார்களாம்."

அக்பர் அபுல்பாஸலைப் பார்த்துச் சற்று நேரம் சும்மாவிருந்து மறுபடியும் "ஹிந்துக்கள் மகம்மதியர்கள் இரண்டு மதத்தினரும் பூஜிக்கும் பரம்பொருள் ஒன்றேயென்னும் ஸித்தாந்தத்தை நம்பினவர்கள் சிலர்தான் என்பது எனக்கு ஓர் அருவருப்பன்று; அந்தச் சிலர் நல்ல யுக்தி யோசனையுடைய புத்திமான்களாயிருந்தால் போதும். இன்றைக்கில்லாவிட்டால் நாளைக்கு அநுஸரிக்கிறார்கள் இதரர்கள். அதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியது அநாவச்யம். நாம் விதையை விதைத்துவிட்டால் அறுவடை காலம் தானே வருகிறது. காஷ்மீரத்தை ஜயித்தவுடன் நான் ஹிந்துக்கள் மஹம்மதியர்கள் தம்முள் பேதமின்றி ஈசுவரனைப் பூஜிப்பதற்காக ஓர் ஆலயம் கட்டுவித்தேன். அக்கோவில் மதிற்சுவரில் வரையப்பட்டுள்ள வார்த்தைகளை நீர் அறிவீரன்றோ?"

அபுல்பாஸலுக்கு அம்மொழிகள் குருட்டுப் பாடமாகத் தெரியும்.

"எத்திசை நோக்கினும் எவரைக் கேட்பினும் யாவரும் உன்னையே நாடுகின்றனர். எப்பாஷை வழங்கினும் அப்பாஷையில் அனைவரும் உன்னையே புகழ்கின்றனர். நம்பினோர் நம்பாதோர் யாவரும் நாடும்பொருள் நீயே. பரம்பொருள் நீ ஒன்றே. இரண்டற்றவன். எம்மதம் தொடரினும் யாவரும் கடைசியில் உன்னையே அடைகின்றனர். மசூதியிலும் ஆலயந்தனிலும் கூடிப் பலவேறு விதமாய்ப் பல்லாயிரம் பெயர் நாடும் வஸ்து உன்னையன்றி வேறெதுவுமில்லை. மசூதி சென்றால் அங்கு விளங்குபவனும் நீயே. யாவரும் நாடுவது நினது கடாக்ஷமே. நானும் தேடியலைவது உனதருளே. ஆஸ்திகன்நாஸ்திகன் எவனுக்கும் நீ உனது நிஜஸ்வரூபத்தை வெளியிடுவதில்லை. தம் தம் மதத்தையே தழுவித் தனித்தனியாய் பூஜித்தாலும், நிஜபக்தனது ஹ்ருதயத்தில் நர்த்தனம் புரிகிறாய் ஈசனே."

"அடியேனுடைய உள்ளத்திலும் அவர் எழுந்தருளி அடியேனைக் காத்தருள் நாள் என்றைக்கோ? தமது அடியேனை இவ்வுலகத்தில் அவர் தமது ப்ரதிநிதியாக உழைக்

கும்படி ஆஞ்ஞாபித்திருக்கிறார். படோனி என்னமோ அதிருப்தியாகத் தலையை ஆட்டுகிறாரே. நண்பரே, நீர் உமது மனதிலுள்ளதைத் தாராளமாய் எடுத்துச் சொல்லலாம். அபுல்பாஸல் அவற்றிற்கேற்ப விடையளிப்பார். நீங்கள் இருவரும் நல்ல புத்திமான்கள். உமது வாதத்தைக்கேட்டு நானும் சிறிது பலன் பெறலாம். இப்படிப் பெரியவர்களுடைய ஸம்பாஷணை, வாதம் முதலியவற்றைக் கேட்டதில் எனக்குப்ரியம் அதிகம்."

"நான் பாரஸீகம், அரேபியா எகிப்து முதலிய பல நாடுகளின் சரித்ரங்களைக் கவனமாய்ப் படித்திருக்கிறேன், அவ்விடமிருந்து வந்தவர்களிடமிருந்து கேட்டுமிருக்கிறேன். எல்லாவிடங்களிலும் இஸ்லாம் மதமே அநுஸரிக்கப்பட்டுவருகிறது, அவ்விடங்களில் வேறெந்த நூதன மதமும் போதிக்கப்பட்டதாகக்காணோம்."

"நீர் உரைக்கும் நாடுகளெல்லாம் ஒரே மதத்தைத் தழுவினவை. அத்தேசங்களில் குடிகளுடைய மதமே அரசருடைய மதம்; அரசருடைய மதமே குடிகளின் மதம்; இரண்டாம் மதம் கிடையாது."

"இப்போது அவ்விதமிருக்கலாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவ்வாறில்லையே. பாரஸீகத்தில் ஜொராஸ்டர் மதமும், எகிப்தில் வேறொரு மதமும் தழைத்திருந்தன. அவைகளெல்லாம் மகம்மதிய மதம் ஏற்பட்டவுடன் ஸூர்யனைக்கண்ட பனிபோல் மறைந்துவிட்டன, அவ்விதமே மகம்மதிய அரசர்கள் காலத்தில் இந்தியாவிலும் ஹிந்து மதம் முதலிய விக்ரஹாராதனை மதங்களெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் ஒழிந்து எங்கு பார்த்தாலும் மகம்மதிய மதமே வ்யாபிக்கும் என்று நம்பியிருந்தோம். அரேபியா, பாரஸீகம் எகிப்து இந்நாடுகள் போலவே ஏன் இந்தியாவும் மகம்மதிய நாடாக விளங்கக்கூடாது?"

"ஸ்வாமீ, உமது மதாபிமானம் மஹா சிரேஷ்டமானது. தங்களுடைய பாண்டித்யம் ஒப்புயர்வற்றது. தங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுங்கிடையாது. இந்திய ராஜ்யத்து ஜனத்தொகைக்கும் பாரஸீகம் அரேபியா எகிப்து இந்நாடுகள் ஜனத்தொகைக்கும் ஏற்றக்கோலுக்கும் அறுவாள் பிடிக்கும் போலிருக்கிறது. பாரஸீகம் முதலிய ஜனங்கள் அனைவரும் ஒன்றுகூடினும் இந்திய ராஜ்யத்துப் பதினைந்து மண்டலங்களில் ஒரு மண்டலத்து ஜனத்தொகைக்கு ஈடாகாது. இந்த ராஜ்யத்து ஜனத்தொகை கோடிக்கணக்கானது. அல்க்ஸாந்தர் மகிபர் முதற்கொண்டு எத்தனையோ அந்நிய நாட்டு அரசர்கள் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்திருக்கின்றனர். எத்தனையோ ஜாதியார்கள் இந்நாட்டிலேயே நிலைத்துவிட்டனர். இவ்வளவு அமர்க்களங்களுக் கிடையிலும் இந்நாட்டு மதம், மதக்கோட்பாடுகள், புராணாதி க்ரந்தங்கள் முதலியன நாசமுறாமல், க்ஷீணிக்காமல் அபிவ்ருத்தியடைந்து வருகின்றன. இத்தகைய பெருமையும் உறுதியும் வாய்ந்த மதத்தை நம்மால் வேரறுத்தல் கூடுமா?"

"அபுல்பாஸல், நான் சொல்வதைச்சற்று நிதானித்து கேட்கவேண்டும். இந்தியாவைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிதான ராஜ்யங்களெல்லாம் முஹம்மதைக் குருவாகக் கொண்டிருந்தன. அவர் ஸமாதியடைந்த நூறு வருஷங்களுக்கெல்லாம் இஸ்லாம் படைவீரர்கள் ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிகா இந்த மூன்று கண்டங்களில் தமது மதத்தை நிலைநிறுத்தினர். பாக்டாட் காலிப்கள் காலத்தில் இஸ்லாம் மதம் எவ்வளவோ அபிவ்ருத்தியடைந்தது. இவைகளெல்லாம் அறிந்திருந்தும் நீர் இவ்வாறு பேசுவதின் பொருள் எனக்குப் புலப்படவில்லை."

"பாக்டாட் காலிப்களின் சிறந்த குணங்களும் அவர்கள் தார்த்தரி, ட்யூனிஸ், ஆல்ஜியர்ஸ், மொராக்கோ இந்நாடுகளிலிருக்கும் முரட்டு ஜாதியார்களெல்லோரையும் உண்மையான ஒரேகடவுளை வழிபடும்படிச் செய்ததும் யாவும் ப்ராராட்டற்பாலன. அவர்களைப்போல மதாபிமான விஷயமாய் உழைத்தவர்கள் வெகு சிலரே. இருந்தாலும், இந்தியா, சைனா இந்த ஜனநெருக்கமான தேசங்களில் முஹம்மது அவதரிப்பதற்கு முன்னரே உத்தமமான மதங்களை ஆராய்ந்தறிந்து பல்லாயிர வருஷங்களாக அம்மதங்களை அநுஸரித்து வருகிறார்கள். நண்பரே, யோசித்துப் பார்த்தால் கடைசியில் அவர்களும் மகம்மதியர்களைப்போல் உண்மையான பரம்பொருளைக் கண்டறிய முயல்கிறார்கள். முடிவில் இரண்டு மதங்களின் லக்ஷ்யங்களும் நோக்கங்களும் ஒன்றே. முக்யமான விஷயத்தில் பேதமில்லாமலிருக்கையில், அவர்கள் எவ்வழி சென்றாலென்ன? எந்தப் பாஷை பேசினாலென்ன? எவ்விதம் சென்றாலும் கடைசியில் மகம்மதியர் செல்லுமிடத்தேதான் அவர்களும் வந்துசேர்வார்கள். நமது சக்ரவர்த்தியவர்களுடைய நோக்கம், கூடியமட்டும் இருதிரத்தாரையும் ஒன்று சேர்ப்பதுதான்."

"ஆனால் நமது சக்ரவர்த்தியின் முன்னோர்கள் வேறுவிதமாய் ஒன்றுபடுத்த முயன்றனர். முன் காலத்துக் காலிப்கள் ஐரோப்பா கண்டத்தில்கூட உண்மை மதத்தைப் போதித்தனர். ஐந்நூறு வருஷகாலம் இஸ்லாம் மதம் ஸ்பெயின் நாட்டில் பரவியிருந்தது. அவர்களுடைய நோக்கத்தின் பெருமையென்ன? அதன் ப்ரதாபமென்ன? அவற்றுடன் கொண்டு ஒப்பிடப்போகிறீர்களே நமது சக்ரவர்த்தியவர்களின் நோக்கங்களை!"

"நண்பரே, ஸ்பெயின் தேசத்தைப்பற்றிப் பேசினீரே. இப்போது இஸ்லாம் கொடி அங்கு பறக்கின்றதா? அதன் காரணமென்ன? ஸ்பெயினிலிருந்த ஸராஸன் ஜாதியார்கள், வல்லமையில் என்ன இளைத்தவர்களா? தொகையில் குறைந்தவர்களா? அவர்கள் ஐரோப்பாவில் எத்தனையோ அரண்மனைகள் கட்டினர்; எத்தனையோ கலாசாலைகள் ஏற்படுத்தினர்; ஐரோப்பியர்களுக்கு முதன் முதலில் கல்வி போதித்தனர்; ஐரோப்பிய நாகரிக ஆரம்பத்துக்கு அவர்கள் தான் காரணம். இருந்தும் அவர்கள் கதி என்ன வாயிற்று? அவர்களுக்கு அடங்கியிருந்த கிறிஸ்தவர்களுக்கும் அவர்களுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. கிறிஸ்தவமதத்துக்கும் இஸ்லாம் மதத்துக்கும் பொருத்தமில்லாமல் போயிற்று. எப்போது குடிகள் அவலம்பிக்கவில்லையோ அப்போதே அந்த மதம் க்ஷீணிக்கத் தொடங்கியது. குடிகள் அத்ருப்தியடைந்தால் ராஜ்யம் நிலைக்குமா?

நமது பெருமை வாய்ந்த சக்ரவர்த்தியவர்கள் குடிகளை த்ருப்திசெய்து அவர்களுடைய அன்பாகிய அழியா அஸ்திவாரத்தின்மீது தமது ராஜ்யத்தைச் சாஸ்வதமாய் நிலைநிறுத்த ப்ரயத்னப்படுகிறார்."

"ஸ்பெயினைவிட்டு ஸராஸன்கள் போய்விட்டதால் இதர மகம்மதியர்கள் அவர்களுடைய ஸ்தானத்தை யெடுத்துக் கொண்டனர். இப்போது ஐரோப்பாவில் இஸ்லாம் பூண்டற்றுப் போயிற்றா? நமது சக்ரவர்த்தி ஸிம்ஹாஸனத்துக்கு வருவதற்கு நூறு வருஷத்துக்குமுன் ஓர் இஸ்லாம் தலைவர், கிறிஸ்தவர்கள் தலைநகராகிய கான்ஸ்டாண்டிநோபிளைப் பிடித்துக்கொண்டார். இப்போது அவருடைய ஸந்ததியார்கள் ஐரோப்பா கண்டத்துள் வெகுதூரம் சென்றிருக்கின்றனர்."

"ஐரோப்பாவில் பலபாகங்களைக் கைப்பற்றிய அந்த இஸ்லாம் வீரர்களுக்குக் கடவுள் க்ருபையால் இன்னும் ஜயம் உண்டாகவேண்டும். அவர்களுடைய பராக்ரமம் சொல்லத் திறமன்று. எனக்கு ராஜாங்க விஷயங்களில் ஏதோ அற்ப அநுபவம் இருக்கிறது. அயல் நாட்டுச் சரித்ரங்களையும் சிறிது படித்திருக்கிறேன். அநுபவத்தின்பேரில் நான் சொல்லும் வார்த்தையைச் சற்றுப் பொறுத்துக்கேட்க வேண்டும். கேவலம் அமர்க்களத்தில் வெற்றிதரும் பராக்ரமும் வீரமுமே ராஜ்யத்தை நிலைநிறுத்திவிடாது. துருக்கியர்கள் நல்ல சூரர்கள் தான். இருந்தாலும் இப்போதுகூட ஐரோப்பாவில் அவர்களுடையராஜ்யம் வலிவாயில்லை. சிறிது சிறிது தள்ளாடிக்கொண்டுதானிருக்கிறது. வருங்காலத்தில் எப்போதாவது ஒருவேளை துருக்கியர்கள் தமது மூடராஜாங்கத்தைக் கண்டறிந்து அதனைச் சீர்திருத்தித் தமது கீழிருக்கும் கிறிஸ்தவ ப்ரஜைகளை ஸமாதானப்படுத்தி அவர்களுடைய அன்பைப்பெற்று ராஜ்யத்தைப் பலப்படுத்தினாலும் படுத்தக்கூடும்."

இதைக்கேட்டவுடன் படோனிக்கு ஆத்ரம் அஸாத்யமாய் உண்டாய்விட்டது. "அபுல்பாஸல், உண்மை மதத்தினர்கள் ஒருபோதும் நாஸ்திகர்களுடன் ஸமாதானத்துக்கு வரமாட்டார்கள்" என்று அவர் கோபத்துடன் கூறினார்.

"உண்மை மதத்தினர்கள் ஒருபோதும்

இதர மதத்தினர்களை நிர்பந்திக்கவாவது ஹிம்ஸிக்கவாவது மாட்டார்கள். அரசர்கள் ஜனங்களுடைய ப்ரதிநிதி. ஆதலால் அவர்கள் குடிகளின் விருப்பத்துக் கிணங்கித்தான் நடக்கவேண்டும்" என்று சாந்தமாய் விடையளித்தார் அபுல்பாஸல்.

படோனி சற்றுநேரம் வாய்திறவாமலிருந்தார். மதவைரிகள் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்னும் ஸித்தாந்தத்தை ஒருபோதும் விடமாட்டார்கள். நமது சரித்ராசிரியர், ஒருவர்க்குப் பயந்து வாயைமூடும் ஸ்வபாவ முடையவரல்லர். தமக்குத் தோன்றியதை அஞ்சாமல் சக்ரவர்த்திமுன்னிலையிலும்வெளியிட்டுவிடுவார்.

"ஐம்பது வருஷகாலமாக நீர் ராஜாங்கத்தில் உழைத்து வருகிறீர். அதனால் உங்களுக்கு எவ்வளவோ அநுபவங்கள் உண்டாயிருக்கலாம். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. இருந்தாலும் தங்களுடைய வார்த்தைக்கு விடையளிக்காவிட்டால் நான் இஸ்லாம் மதத்துக்கே த்ரோஹம் புரிந்தவனாவேன். உண்மை மதத்தினர்கள், ஒருபோதும் புறஸமயத்தாருடன் சாஸ்த்ர விரோதமான ஸமாதானம் செய்து கொள்வதில்லை என்பது திண்ணம். உமது நூதன கதம்ப மதக்கோட்பாடுகள் கனவுபோல் மறைந்துவிட்ட பின்னர், இஸ்லாம் மதம் இந்தியாவில் வெற்றிபெற்று வேரூன்றும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை."

"அப்படியே யாகட்டுமே, படோனி, தற்காலத்தில் தமது எளிய குடிகளிலிருந்து கோடிக்கணக்கான ஜனங்களுக்கு ஸர்வேச்வரனைப்பற்றிய உண்மையைப் போதிக்கும் மஹான்கள் செல்லும் வழியே அடியேனும் சக்ரவர்த்தியவர்களுடைய ஸம்மதத்தின்பேரில் சென்றேன் என்பதே எனக்கு ஒரு பெருமை. அவ்வளவு பெயர் எனக்குப் போதும். நமது கடமையை நாம்செய்துவிட்டால் அப்புறம் அது பகவானுடைய பொறுப்பு, அது செழிப்பதும் க்ஷீணிப்பதும். அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்?"

"இஸ்லாம் ராஜ்யம் நிலைபெற்றிருப்பது நாஸ்திகர்களுடைய போதனைகளாலன்று. உண்மை மதத்தினர் கைப்பிடித்த கத்தியால். அது தினேதினே வ்ருத்தியடைந்து வருகிறது. எனக்கும் சிறிது உலக சரித்ரம் தெரியும். அதன் மூலமாய் ராஜாங்க விஷயங்களையும் கொஞ்சங் கொஞ்சம் அறிவேன். சக்ரவர்த்தியவர்களுடைய ராஜாங்க வழிக்கும் அவரது முன்னோர்களாகிய முஹம்மது கஜினி முதலிய மகம்மதிய அரசர்களுடைய ராஜாங்க வழிக்கும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லை. தன் முன்னோர்களெல்லாம் மூடரென நினைத்து நமது சக்ரவர்த்தி ஒரு நூதனவழியில் செல்கிறார். இவருடைய நூதன மார்க்கம் இவருடனே முடிவுபெறும்; இவருடைய ஸந்ததியாரெவரும் இவருடைய மார்க்கத்தைப் பின்பற்றமாட்டார்கள். முஸல்மான் என்பவனுக்கு அடுத்ததா இவர் மார்க்கம்? இவருடைய ஸந்ததியார்கள் ஹிந்துக்களை நிர்ப்பந்தித்து அவர்களுக்கு இஸ்லாம் மதத்தைக் கற்பித்து ராஜ்யத்தைக் கத்திகட்டாரி பலத்தால் செவ்வனப் பரிபாலித்து வருவார்கள். இதர முஸல்மான் தேசங்களைப் பார். நமது நாட்டைப்போல் மானக்கேடான ஸ்திதியில் ஒன்றுவது இருக்கிறதா? அக்பருடைய உபாயம் பயன்படாதென்று உணர்ந்து அவர்கள் தமது ராஜ்யங்களை ஸைந்யபலத்தால் ஆட்சிசெய்து வருகிறார்கள். கொஞ்சகாலத்துக்குள் இந்தியாவும் அத்தகைய நாடுகளில் ஒன்றாக விளங்கும் என்பது நிச்சயம்."

இம்மொழிகள் சக்ரவர்த்திக்குப் படவேண்டுமென்று பேசப்பட்டவை; படோனிக்கு வரவர கோபமும் ஆத்ரமும் அதிகரித்துவிட்டது. ஆனால் இம்மாதிரி விவாதங்களில் பண்டிதர்கள் தமக்கு யுக்தமெனத் தோன்றியதையெல்லாம் பயமின்றிப் பேசலாம். அக்பர் கோபங்கொள்வதில்லை. இவ்வித வாதுகளைக் கேட்பதில் அவருக்கு வெகு ப்ரியம். அபுல்பாஸல் பதிலொன்றும் உரைக்கவில்லை. அக்பர் படோனியைப் பார்த்துச் சொல்லலானார்.

"படோனி, நீர் சொல்கிறபடி எனது ஸந்ததியார் ப்ரஜைகளை த்ருப்திசெய்து அவர்களுடைய அன்பைப்பெற்று அரசாளுவதை யொழித்துக் கேவலம் கத்திகட்டாரி பலத்தினால் அரசாண்டு விடலாமென்று யோசித்து அவ்வாறு செய்யினும் செய்வர்.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

கிராமங்களில் சுகாதாரப் பிரசங்கங்கள்.—தேக சௌக்யத்துடன் இருக்கவேண்டுமாயின், சுகாதாரத்தின் நன்மைகளையும், சுகாதாரக் குறைவினால் உண்டாகும் தீமைகளையும், சுகாதாரம் சீர்கெடாமல் இருப்பதற்கான வழிகளையும் அறியவேண்டிய தவசியம். ஆகவே, ஆகாரம், ஜலம், க்ஷய ரோகம், மலேரியா, காலரா, வைசூரி, பிளேக், குழந்தைகளை வளர்த்தல், சுத்தமாயிருத்தல், தேகாப்பியாசம், வீடுகட்டுதல் முதலிய பல விஷயங்களைப்பற்றிக் கிராமவாசிகளுக்குப் பிரசங்கமூலமாய் எடுத்துச் சொல்ல, நமது கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யப் போகிறார்கள். ஷை பிரசங்கங்கள் தேசபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு யாவர்க்கும் கொடுக்கப்படும். சுகாதார இலாகா, கல்வி இலாகாமுதலிய இலாகாக்களின் உத்தியோகஸ்தர்களின் மூலமாகவும் இன்னும் பொதுஜன நன்மையில் சிரத்தையுள்ள உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தரல்லாதவர்கள் ஆகிய இவர்கள் மூலமாயும் அப்பிரசங்கங்கள் நடத்தப்படும். விஷயங்களை நன்கு அறிவிக்கும்படியான லாந்தர் படங்களும் தயாராகி வருகின்றன.

***

கராச்சியில் வியாபாரக் குறைவு.—1915-ம் ஹு டிஸம்பர் மாதத்தில் 138 லக்ஷம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. 1914-ம் வருஷத்தில் 254 லக்ஷம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருந்தது. இறக்குமதி 129 லக்ஷத்திலிருந்து 62 லக்ஷத்திற்கும், ஏற்றுமதி 125 லக்ஷத்திலிருந்து 65 லக்ஷத்திற்கும் குறைந்திருக்கிறது.

***

மலேரியாஜ்வரத்தைத் தடுக்கயோசனைகள்.—மலேரியா ஜ்வரம் உண்டாவதற்குக் கொசுக்களே காரணமென்றும், அநாவசியமான ஜலத்தேக்கங்களையும், உபயோகமற்ற கிணறுகளையும், குட்டைகளையும் மூடிவிடுவதே நலமென்று இந்நகரிலுள்ள மேஜர் ரா்ஸ் என்பவரும், மற்றொரு டாக்டரான ரெவரெண்ட் மூயர் என்பவர், மலேரியாவைப் போக்க ஒவ்வொருவரும் கிரமமாகக் கொயினாவைச் சாப்பிடவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். கொயினா சாப்பிடுவதில் பலன் உண்டென்றாலும், சில சமயங்களில் தீங்குகளும் சம்பவிக்கின்றன.

***

அஸீஸ் உடீன் இனம் புத்தகால்யம்.—இப்பெயர் கொண்ட புத்தகாலயம் ஒன்று, கூடலூரில் இம்மாதத்தில் ஷை ஊர் ஜில்லா கலெக்டரான கான்பஹதூர் அஜீஸ் உடீன் ஸாகிப்பால் திறந்துவைக்கப்பட்டது. ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள புஸ்தகங்கள் இதில் வாங்கிவைத்திருப்பதுடன், முக்கியமான பத்திரிகைகளும் பொது ஜனங்களால் தருவித்துக்கொடுக்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரி ஒவ்வொரு ஊரிலும் ஏற்பட்டால் ஜனங்கள் மிகவும் பயனடைவார்கள்.

***

டிரான்ஸ்வாலில் தங்கம்.—1915ம்வருஷத்தில் ட்ரான்ஸ்வாலில் 3,86,27,461-பவுன் பொறுமானமுள்ள தங்கம் எடுக்கப்பட்டது. அதற்கு முந்திய வருஷத்தைக் காட்டிலும், இவ்வருஷம் 30,39,306,-பவுன் அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

***

நமது புதிய ராஜப்பிரதிநிதி.—லார்ட் ஹார்டிஞ்சுக்குப் பதிலாக நியமனம் பெற்றிருக்கும் லார்ட் சேமஸ்போர்ட் தம் பரிவாரங்களுடன் அடுத்த ஏப்ரல் மாதம் வருகிறார். இச்சஞ்சிகையில், அவர், அவருடைய தம்பதி ஆகிய இருவருடைய படங்களையும் அனுபந்தமாகச் சேர்த்திருக்கிறோம்.

***

மரக்கூழ்.—சரக்குகளைச்சேர்த்து ரஸாயன முறைப்படி ஸ்வீடன் தேசத்தில் செய்யப்படும் மரக்கூழை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று அத்தேச கவர்ன்மெண்டார் தடுத்திருப்பதால், பெரிய காகிதப் பஞ்சம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நளஹு சித்திரைமீ CALENDAR—பஞ்சாங்கம்

யோ	தெலு	இங்	தமிழ்	வார	நளஹு சித்திரைமீ — சாலிசகம் 1838, கலியப்தம் 5017 — பசலி 1325, கோல்லம்-1091 — ஹிஜரி 1334 — 1916ஹு ஏப்பிரல்மீ, மேமீ
	9	13	1	வியா	தச 13-31, ஆயி 10-44, சூல 8-22, கர 13-31- ரா 12-2, அக-30-35. மே சு ஏகாதிதி ஸமார்கம் புதுக்கணக்குப்
பு	10	14	2	வெ	ஏகா 15-42, மக 14-35, கண் 7-41, பத் 15-42, ரா 4-50 அசு-4, புத 47-4, துவாதிதி சர்வ ஏகா [போட்டுத்தமம்
சு	11	15	3	சனி	துவா 16-50, பூர 17-13 விர் 6-2, பா 16-50, ரா 4-58, ரோ 3 சுக் 59-40, சனிப்பிரதோ மனத்திரயோ
ர செ	12	16	4	ஞா	திர 16-35, உத் 18-36, துரு 3-24. வியா 56-28, தை 16-35, ரா 8-59, அசு-2, ரவி 3-26, ஆயி 2, செ 8-48, பர 1-புத 45-30, தமனசதுர்த்தசி
பு]	13	17	5	திங்	சது 15-5, அஸ் 18-45, ஹர் 55-14, வணி 15-5, ரா 8-46, அக 30-42, பச்சாதுதயபுத 26-10,
புசு	14	18	6	செ	○ பௌ 12-28, சித் 17-49, வஜ் 49-44- பவ 12-28, ரா 0-40, பர 2, புத 54-30, ரோ 4, சுக் 58-30, சித்திரா பூர்ணிமா ரௌச்சம வை ஸ்நா இஷ்டி கரிநாள்
ர	15	19	7	புத	பிர 8-51, சுவா 15-55, சித் 43-35, கௌ 8-51, திவி 26-17, சைத் பகு அசு 3, ரவி 28-43, மழை 7-க்குள்
பு	16	20	8	வியா	துதி 4-26, திரு 54-54, விசா 13-14, விய 36-51 கர 4-26, திவி 22-41, ரிஷபாய 3-16, பர 3, புத 52-25,விய சிரா
கு	17	21	9	வெ	சது 53-39, அனு 9-54, வரி 29-41, பவ 26-29, திவி 23-1, அக 30-48, ரே 3, குரு 58-38, பிராகுதயகுரு 14-9, சங் சது [1, சுக் 8-11,
ரபுசு	18	22	10	சனி	பஞ் 47-42, கேட் 6-7, பரி 22-13 கௌ 20-40, திவி 24-43, ரா 27-8, அசு-4 ரவி 53-56, பர 4, புத 57-20, மிரு
	19	23	11	ஞா	சஷ் 41-31, மூல 1-56, பூரா 55-53, சிவ 14-28, கர 14-36, சே 1-56, திவி 24-17, தாபவிசேஷம்
பு	20	24	12	திங்	சப் 35-44 உத்தி 53-59,சித் 6-58,சா 52-28,பத் 8-37,திவி 15-15,கார் 1,புத 60-0,காளாஷ்டமி(2கே 30-3 சிர உப
சுரா	21	25	13	செ	அஷ் 30-9, திரு 50-28, சுப 52-19, பா 2-56, திவி 3-34, ரா 29-5, அக 30-53, மிரு 2 சுக் 20-0, உத் 4 ரா பூச
ரபு	22	26	14	புத	நவ 25-2, அவி 47-27, சுப் 45-38, கர 25-2, சே 3-58, பர 1 ரவி 19-46, ரிஷப புத 53-20, நவமிதிதி வராஹ-
செ	23	27	15	வியா	தச 20-33 சத 45-8, பிரா 39-31 பத் 10-33, திவி 4-45, ஆயி 3, செ 38-0,திதித்வயம் கரிநாள் [ஸர்வ ஏகா
புசு	24	28	16	வெ	ஏகா 15-52, பூரட் 43-44,மா 34-8, பா 16-52, திவி 0-46, கார் 3, புத 56-40, மிதுன சுக் 30-25, துவாதிதி சர்வ
ர	25	29	17	சனி	துவா 14-12, உத்தி 43-24, வை 29-36, தை 14-12, திவி 7-36 அக 30-58,பர 2, ரவி 45-57,வை சிரா சனிப்பிரதோ
	26	30	18	ஞா	திர 12-40, ரேவ 44-16, விஷ் 26-1, வணி 12-47, திவி 13-50, மா சி பிரவாகமேகோத்பத்தி
புசு	27	1	19	திங்	சது 12-5, அசு 46-3, பிரி 23-9, சகு 12-5, ரா 4-45, கார் 4, புத 1-43, மிரு 4, சுக்55-19, சர்வ அமா கல்பாதி
	28	2	20	செ	● அமா 13.24, பர 49-41, ஆயு 21-50, நா 13-24, திவி 11-30, பிண்டபிய இஷ்டி
ர	29	3	21	புத	பிர 15-40 ✻ கார் 54-8, சௌ 21-12, பவ 15-40, திவி21-54, அக 31-3, வை சுத் பர 3, ரவி 12-23 துதியாதிதி சங் தரி கார் உப [மழை 5-க்குள்
பு	1	4	22	வியா	துதி 19-1, ரோ 59-32 சோ 21-24, கௌ 19-1, ரா 6-40, ரோ1, புத 52-34, திருதியாதிதி
சு	2	5	23	வெ	திரு 23-17, மிரு 60.0, அதி 22-19. கர 23-17,திவி 15-0, திரு 1 சுக் 18-40 அதிதி பாசு ஜ-திரேவாயு அக்ஷயதிருதியா
ரசெ புகு]	3	6	24	சனி	சது 28-7, மிரு 5-48, சுக 23-40, பத் 28-7- திவி 29-2, பர 4, ரவி 40-0, ஆயி 4, செ 55-0 ரோ 2, புத 43-8, ரே 4; குரு 49-0, சதுர்திதி சது விரு லாவண்யகௌரீ அக்கினிநக்ஷத்திராரம்பம் 40-0
ச	4	7	25	ஞா	பஞ் 33-5, திரு 12-12, திரு 25-9, பவ 0-36, ரா 14-14, அக 31-7, திரு 4, ரிசு சனி 60-0, ஸ்ரீகுருசங்கர ஜ
சு	5	8	26	திங்	சஷ் 37-52, புன 18.30, சூல 26-30, கௌ 5-28, ரா 9-21, திரு 2, சுக் 43-26, சஷ்டி உப
	6	9	27	செ	சப் 42-7, பூச 24-23, கண் 27-30, கர 9-59, ரா 27-58, சப் விரு இடிமின்னல் 9-க்குள்
ரபு	7	10	28	புத	அஷ் 45-32, ஆயி 29-33, விர் 27-54, பத் 13-49, சே 3-8, கார் 1, ரவி 7-37, ரோ 3, புத 43-8
	8	11	29	வியா	நவ 47-46, மக 33-39. துரு 27-28, பா 16-39, திவி 1-36, ரா 23-26, அக 31-11. மழை 3-க்குள்
சு	9	12	30	வெ	தச 48-45, பூர 36-32, வியா 26-2. தை 18-15, ரா 23-52, திரு 3, சுக் 28-42, தசமிதிதி
ர	10	13	31	சனி	ஏகா 48-32, உத்தி 38-14 ஹர் 23-43, வணி 18-38, ரா 28-11, ரிஷபரவி 34-42, சூன்யதிதி சர்வ ஏகா விஷ்ணுபதி

மேஷ — ரிஷப

குரு	ரவி புத	சுக்	சனி
	14 ரிஷ புத 16 மிது சுக்		செ கேது
ராகு			

விவேக போதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”—திருவள்ளுவர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 5-JUN 1916 MADRAS.

தொகுதி VIII { ராக்ஷஸஹு மாசிமீ : 1916-ஹு மார்ச்சுமீ } பகுதி 9

பழமொழிப் போதம்

PROVERBS EXPLAINED

தன்க ருத்துத் தனித்து நிகழ்வுற
நன்கு ணர்ந்திடின் ஞான சுகமதா
யுன்சொ ரூப முனக்கு விளங்குறும்
‘முன்கை நீளின் முழங்கையும் நீளுமால்.’ (53)

ஏற்ற ‘நவ நீத மிருந்தும்பின் நெய்க்கலைவார்’
தோற்றி மனமிருந்தும் தூயரினர்—பாற்றங்கி
ஆவற் சலனம் அழியவிசா ரஞ்செய்யா
தோவற்ற ஞானம் வேட் போர். (54)

‘ இல்லாதது பிறவா தள்ளாதது குறையா’
தெல்லார்சம யத்தோ டென்நூலினும் வீடொன்.
றல்லாதில யதைமூ டஞ்ஞானமு மிதயத்
தொல்லாமல்வி சாரித் தோய்வித்தல தோயா. (55)
[இசைகோலோ

‘ காற்றிசையத் தொடுதோலோ கழல் தொடுதோற்
மேற்பெரியோ ரனுபூதி வியன்சுருதி யந்தத்துக்
கேற்பகிழ் யுத்தியெலா மெடுத்துபயோகிப்பதலால்
மாற்பமுயுத் திகட்கிசைய மற்றவைதா மாகாவே.

‘ கெட்டு ளோன்பட்டி னம்புகல்’ கீழ்மையாம்
நட்ட மீயுமஞ் ஞான வசத்திடர்ப்
பட்ட யானெவன் உய்வனென் பானெறி
இட்டு மாமறைக் கேள்வியில் நிற்றலே. (57)

‘ வீட்டிற் றீபம் விருந்தினர் கட்குமாம்’
நாட்டும் ஓர்பர ஞானி விசாரமேய்
பீட்டு நூலின் உணர்ச்சி பினுமலம்
வேட்ட சாதக ருக்கும் விளக்கமே. (58)

‘பந்திக்கு முந்து படைக்குப் பிந்து’
விந்தையாம் ஞான விசாரத்திற் கான்றோர்
சந்தநற் சங்கந் தனைத்தேடாய் நெஞ்சே
தொந்தக்கன் மத்திற் றெடர்ந்துசெல் லேலே. (59)

‘ எண்சா ணுடம்பிற் சிரசே பிரதானம்’
பெண்சோரும் அட்டப் பிரமாணத்—தொண்சத்தம்
போதநெறி யாமேற் புரியட் டகவுடலிற்
சோதிமனம் போம்பிரமத் துள். (60)

‘கடுங்காற்று மழைகாட்டுங்கடுநட்புப் பகைகாட்டும்’
ஒடுங்காதெப்பொருளும்மனியுணரும்விசாரணைஞான
திடந்தோற்றுவிக்குமறை திகழ்தருசற்கருமங்கள் [த்
நெடுங்காலம் மிகப்புரியின் நேருமுமுட் சுத்துவமே.

‘ தீராப் பொறியதற்குத் தெய்வந்தா னேகதி’யாம்
ஓராக்கள் மம்பத்தி யோகத்தால்—நேராய்
முடியாக் வழக்குகள் முற்றுமுயர் ஞானம்
அடியாச் சமாதான மாம். (62)

‘கன்னுக் குங்கும்ப காரற்குஞ் சென்மமுரண்’
மன்னுய ஞானம் மயற்கன்மந்-துன்னுமை
‘ பத்தும் பதன’மிரு பண்பிற் றியங்கள் செலுந்
தத்தம் விடயத் தடை. (63)

மெய்ஞ்ஞானப் பூணிற்கே மேயதலாற் கன்மத்திற்
கெஞ்ஞான் றுங்கண்டனையொன் றில்லாதே யிஞ்ஞால
தோதலுற சித்தாந்தவொப்புரவு சார்வதுவோ [த்
‘சோதினிக்குப் பட்டின்குச் சோ.’ (64)

பரிவுறு சிந்தை பரமசாந்தியைத்தான்
விரவுமுன் முமுட்சு வெந்துயர் மிகவும்
மருவினும் மாயா வாசனை யொடுங்கா
‘எருதுநோய் காக மிவணறி யாதே.’ (65)

நளஹு வைகாசிமீ CALENDAR—பஞ்சாகம்

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸஹு : மாசிமீ [பகுதி. 9

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

ஸ்தூல தேஹ பேதம் : உத்க்ராந்தி

முன்னர், மரண அவஸ்தையைப்பற்றி விவரித்ததிலிருந்து அது ஒரு வ்யாதி முதலிய உலக நிலைகளைமாத்திரம் பொருத்ததேயல்ல, ஒரு முக்ய ப்ராரப்தத்தைச் சேர்ந்த ஸாதாரண கர்மத் தொகுதிகள் முடியுங்கால் ஒரு ஸ்தூல தேஹத்தில் விட்டுத் தீர்க்க வேண்டிய சுவாஸக்கணக்கின் முடிவுதான். இந்தத் தருணத்தில் ஒவ்வொருஜந்துவுக்கும் வியாதிஇருந்தாலும் ஸரி, இல்லாவிட்டாலும் ஸரி, விழித்துக்கொண்டிருந்தாலும் ஸரி, தூங்கிக்கொண்டிருந்தாலும் ஸரி, மரணம் வந்தே தீரும் என்று நன்ருக விளங்கியிருக்கும். இந்த அவஸ்தையின் முடிவில் ஹ்ருதயத்தில் எல்லாக் கருவிகளின் நுட்ப உருவத்தை அடக்கிய தனது வித்யா, கர்ம, வாஸனைகளால் சூழப்பெற்ற ஜீவன் மேல் நடத்தும் விஷயங்களை இங்கு எடுத்து விஸ்தரிப்போம்.

மரணவஸ்தை முடிவில் ஈசாஞ்ஞையான கர்மகதிப்படி, ஒவ்வொருவன் பாப புண்யத்திற்கும் மேல் ஏற்படவேண்டிய லோகாந்தர கதிக்கும் இசைந்தபடியான ஒரு ஸ்தூல தேஹம் சுற்றுமுள்ள அணுக்களின் சேர்க்கையால் உடனே ஏற்பட்டு மரணமடைபவனுக்கு அருகில் தென்படும். இந்தச் சரீரத்திற்கே கர்மஜ தேஹம் என்று பெயர். ஜீவன் இந்த ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டு, முன் ஸ்தூல தேஹத்தைவிட்டு லோகாந்தரம் செல்வன். இந்த லோகாந்திரப் புறப்பாட்டிற்கே உத்க்ராந்தாவஸ்தை என்று பெயர். இந்த அவஸ்தை மரணவஸ்தையைப்போல அவ்வளவு கடுமையாக இராது என்பது நீரில் முழுகி இறக்கும் தருவாயில் வெளி எடுக்கப்பட்டவர்கள் ஸ்வகஉணர்வால் நன்குவெளிப்படும். ஒரு வேளை அவர்களுக்கு மரணவஸ்தை சீக்கிரத்தில் முடிந்து உத்க்ராந்தம் தொடங்கிவிடும்போ லிருக்கிறது. இந்த உத்க்ராந்த முடிவில்தான் ஒருவன் மூச்சு முழுவதும் நின்றுவிட மரணம் வந்து விட்டது என்றும், பிணம் என்றும் உள்ள வ்யவஹாரங்கள் ஏற்படும்.

இனி இந்த உத்கராந்த காலத்தில் பற்றப்படும் ஸ்தூலதேஹ விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். இவைகளுக்கு (1)கர்மஜ சரீரங்கள் என்று பெயர். நமது ஸாதாரண ஸ்தூல தேகங்களான அண்டஜ (முட்டையிற் பிறப்பன), ஸ்வேதஜ (புழுக்கத்தில் பிறப்பன), உத்பிஜ்ஜ (பிளந்து பிறப்பன), ஜராயுஜ (கருப்பையில் பிறப்பன) மாகிய வைகளும் கர்மாக்களால் ஆகுபவையாயினும் கர்மஜங்களைப்போலத் திடீரென்று மாதா பிதா ஸம்பந்தமில்லாது உண்டாகித் தோற்றுபவையுமல்ல, அவைகளைப்போல பலமான கர்ம பலங்களை லோகாந்தரங்களில் உண்ண ஏற்படுபவைகளும் அல்ல, ஸாதாரண கர்மாக்களை இவ்வுலகிலேயே அனுபவிக்க ஏற்படுபவைகளே. இந்தக் கர்மஜ சரீ

விஷயத்தைக் கபிலபகவான் ஸாங்கிய தர்சனத்தில் III-ம் அத்யாயம், 7-ம் ஸூத்ரத்தில்:பெரும்பாலும்தாய்தந்தை சேர்க்கையால் உண்டாவது ஸ்தூலதேஹம் என்று கூறிச் சிறுபான்மையில் அப்படியில்லாதும் ஏற்படலாம் என்று விளக்கியிருக்கிறார். இந்த ஸ்தூல தேகங்களின் தன்மையைப் பற்றிக் கூறுமிடத்து III-17-18-19-இல் கபிலபகவான் முறையே, 'ஐந்து பூதங்களாலாவது தேஹம்; நான்காலாவது என்பர் சிலர்; ஒன்றாலும் ஸ்தூலம் உண்டு என்பர் வேறு சிலர்' என்று கூறி: 'ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவைகளின் சேர்க்கையால் ஸ்தூலதேஹம் உண்டாகும், இவைகள் ஆகாயம் எல்லாவற்றுள்ளும் மாறாது பரவியே நிற்பதாலும், அரூபமாதலாலும்,நான்குதான் கலந்து சேர்வதில் முக்யம் என்றும், இவைகளுள் ஒன்று ஓங்கியும் மற்ற மூன்று பூதங்கள் அடங்கியும் இருப்பதால் ஸ்தூல தேஹங்கள் ஒரு பூதத்தாலாகும் என்றும் மதிக்கலாம்' என்று காட்டியுள்ளார். இதன்படி ஸ்தூல தேஹங்கள் நான்கு விதங்களாகும். அவை முறையே ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு இவைகள் ஓங்கி நிற்பதற்கு ஏற்ப பார்த்திவ சரீரம், ஜலீயசரீரம், ஆக்நேயசரீரம், வாயவீயசரீரம் என்ற பெயர்களைப் பெறும். இவைகளுள் (2) பார்த்திவ சரீரம் என்பது தான் முற்கூறிய நான்கு வகையான உற்பத்திகளை உடையதாக விருக்கும். மற்றைய மூன்று சரீரங்களையும்பற்றி, சற்று விசாரிப்போம். இவைகளில் ஜலம், நெருப்பு, காற்று இவைகள் தனித்துக்காணப்படாது வெகு நேர்த்தியாக விருக்கும், நமது தேகங்களில் மண் காணப்படாது வெகு அழகாக இருப்பதுபோல்.

ஜலீயசரீரம்.—இது ஜல பாகத்தையே முக்யமாகக் கொண்டுள்ளது. இதற்கு உணவு, வாயு, ஆகாயம் முதலியன ஜல ஸம்பந்தமாகவே இருக்கவேண்டும். இந்தச் சரீரத்தில், பார்த்திவ சரீரங்களிலிருப்பது போல உத்தம, மத்யம, அதமப் பாகுபாடுகள் உண்டு. கடலில் வெகு ஆழத்தில் வாழ்வனவற்றின் தேஹம் அதம ஜலீயம், பிதிர் லோகத்திற்குப் போகக்கூடிய புண்யவான்களது தேஹம் மத்யம ஜலீயம்; பூர்வ புண்ய வசத்தால் சந்திராதிலோகம் உண்டாகும் காலத்தில் அங்கு ஈசாஞ்ஞைப்படி அதிகாரம் வகிக்கப் பிறந்தவர்களான பிதிர்க்கள், வருணன் இவர்களது தேஹம் உத்தமமான அமிருத ஜலீயம். இந்தப் புண்யவான்களை வழிபடவேண்டுமாகில் தீர்த்த யாத்திரை, தர்ப்பணம் முதலியவைகளால் தான் ஆகவேண்டும்: இந்தச் சரீரம் கண்ணுக்குப் புலப்படாது, தொடக்கத்தில் உருவாக இல்லாததால்.

ஆக்நேய சரீரம்.—இது அக்கினியின் தன்மையை முக்யமாகக் கொண்டது. இதற்குத் தேஜஸ் அதிகம்; உணவுகள் முதலியன எல்லாம் நெருப்பின் வழியாகவே இருக்கவேண்டும். இந்த சரீரத்திற்குத் தூக்கம் வேண்டியதில்லை, அசுத்திகள் இராது; விஷய ஸுகானுபவ ஆசை அதிகம். இந்திராதி பிறவித்தேவதைகளது சரீரம் மத்யம ஆக்நேயம்; காம்ய ஸத்கர்ம அனுஷ்டானங்களைச் செய்யும் புண்யவான்கள் இறக்குங்கால் பெற்று ஸ்வர்க்கம் புகும் சரீரம் அதமம்; பிரஹ்மாமுதல் இந்திரன் வரையிலுள்ள தேவர்கள் சரீரம் உத்தம ஆக்நேயம். தேவதா கர்மாக்கள் எல்லாம் இதற்கு ஏற்ப அக்னி ஆகுதிகள் வழி விதிக்கப்பட்டுள்ளன. இது தொடக்கத்தில் உருவிலாததாக விருப்பினும் சிற்சில ஸமயங்களில் கண்ணில் படலாம், பீஷ்மாதிகள் சரீரம்போல.

வாயவீய சரீரம்:—இதில் வாயு பாகம் ஏற்றம். இது வெகு வேகமாக உலாவும் தன்மையையும், எளிதில் இறவாத் தன்மையையும், கண்ணுக்குப் புலப்படாது ஸ்பர்சத்திற்கு மாத்திரம் தெரியும் தன்மையையும் உடையது. யமதர்மன், வாயு முதலிய சில தேவர்களுக்கு உத்தம வாயவீய சரீரம்; யமதூதர்கள், வாயு கிங்கரர்கள்,பிசாசுகள் முதலிய சில தாழ்ந்த தேவவர்க்கங்களுக்கு மத்யம வாயவீய சரீரம்; இவ்வுலகிலிருந்து பாபம்செய்து நரகம் புகத்தயாராகும் பாபிகளுக்கும், தற்கொலை செய்துகொள்ளும் பாபிகளுக்கும் அதம வாயவீய சரீரம். இது கட்டைவிரல் அளவுடன் முற்றிலும் அமைந்ததாகஇருக்கும். இது ஸூர்யோபாஸனையால் திவ்ய நேத்திர ஸித்தி பெற்றவர்களுக்கும், இயற்கையிலேயே இந்த ஸித்தி அமையப் பெற்ற நாய், பூனை, பசு, கோட்டான் இவைகளுக்கும் நன்றாகத் தெரியும்; ஸாவித்ரி ஸத்தியவானது யாதனா சரீரத்தைப்பார்த்தாள் என்று புராணங்களில் கூறப்படும். பிசாசு அறைவது எல்லாம் வாயவீய சரீரம் ஸ்பர்ச உணர்ச்சிக்கு வெளிப்படுவதே. இதனால் வாயவீய சரீரத்திற்கு வைதிகர்கள் பயந்து நடுங்க வேண்டியதில்லை; விபூதி, கர்மானுஷ்டானம், ஜபம் இவைகளைக் கண்டால் அதம வாயவீயசரீரம் ஓட்டம்பிடிக்கும்; அணுகவே மாட்டாது.

இவைகளோடுங்கூட மூன்றாவதான ஸித்திஜம் என்ற சரீரமும் உண்டு. இவைகள் தான் யோகிகளும் ஈச்வரனும், ப்ரபஞ்ச நன்மைக்காக ஏற்படுத்துவன ருஷிகள் தங்கள் புண்ய கர்மாக்களைச் சீக்கிரம் அனுபவித்து ஒழிக்க பல சரீரம் ஸௌபரீ முதலியோர் எடுத்தது போல எடுப்பதும்; மஹருஷிகள் கன்யாப் பெண்கள், கிளி முதலிய ஜந்துக்கள், சரவணை, கும்பம் முதலிய விடங்களிலிருந்து குழந்தைகளைத் தமது ப்ரஹ்மசரிய ப்ரதிஷ்டை பலத்தால் தம் நிலை நழுவாது லோகோபகாரத்தின்பொருட்டு உண்டாக்குவதும். ஈச்வரன் அவதார சரீரங்கள் எடுப்பதும் இவ்வகுப்பைச் சேர்ந்தவை. இவை முன் கர்மவாஸனைகளுக்கேற்ப முன் கூறிய சரீரங்கள் போல ஏற்படுபவைகளேயல்ல: ஈச்வரன் அல்லது பெரியோர் ஸங்கல்ப விசேஷத்திற்கு இணங்க ப்ரகிருதி அணுக்கள் சேர்ந்து உண்டாவதும், பின்னர் பிரிந்து முன்போலாவதுமே ஆகும்.

இங்குகுறிக்கப்பட்டமூன்றுவித உத்பத்தியுடைய சரீரங்களில் கர்மஜ சரீரங்களே ஒருவனது மரணாவஸ்தைக்குப்பின் உத்க்ராந்தாவஸ்தையில் வந்து தோன்றுவன. நாம் பொதுவாக மரணம் என்று கூறும் நிலையில் இவ்விரு அவஸ்தைகள் உள்ளதைப் பகவான் கீதை XV-8ம் ச்லோகத்தில்

சீவனொரு தேஹத்தைத் தாவியுற்றுப் பிந்தியிந்தப்
பூவுலகில் விட்டிதனைப் போம்பொழுது.—

என்று காட்டியுள்ளார். மேலும் இப்படிப் புதியவகை ஸ்தூலத்தை மரணமுடிவில் பற்றிப் பின்னர் லோகாந்தரகதி தொடங்குவதை II-22-ம் ச்லோகத்தில் பகவான் பழந்துணி திருஷ்டாந்தத்தால் புதிய ஸ்தூலம் பற்றிப் பின்னரே பழைய ஸ்தூலம் விட்டு உத்க்ராந்தி ஏற்படும் என்பதையும், உபமான உபமேயங்களிரண்டிலும் புதிய வேறு என்று பொருள்படும் இரு பதங்களில் பார்த்திவ சரீரமல்லாததாயும், வேறாயும் உள்ள கர்மஜ சரீரமான ஜலீயாதிகளையும் குறித்திருக்கிறார். ப்ரஹதாரண்யகாதி

உபநிஷதங்களிலும், ஆக்நேய சரீரங்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன., நாயன்மார் சரித்திரங்களில் ஜ்யோதிர் லயம் காட்டப்படும் இடங்கள் எல்லாம் வைதிக ஆக்நேய சரீரப்ராப்திதான். இக்காலத்தில் தர்சனுதி ஆராய்ச்சியும் அவைகள் வழியாக ஏற்படவேண்டிய வைதிகமான பகவத்கீதை ஆராய்ச்சியும் இல்லாமலே போய்விட்டபடியால் மரணத்திற்குப் பின் உத்க்ராந்தம் என்ற அவஸ்தை ஒன்றுண்டு, அதில் ஜீவன் கர்மஜ சரீரம் ஒன்றைப்பற்றி லோகாந்தரம் புறப்படுகிருன் என்ற விஷயம் ஸாதாரண வழக்கத்தில் இல்லாமலே போய்விட்டது. இதை உணராமலே மரணமானதும் இவ்வுலகில் மறுபிறப்பு என்று சில குதர்க்கிகள் தடுமாறுவர். இதெல்லாம் காலக்கொடுமை!

மரணவஸ்தை முடிவில் தேஹத்தை விட்டு வெளியேற புதிய கர்மஜ ஸ்தூலத்தைப்பற்றி நிற்கும் ஜீவன், ஹ்ருதயத்திலிருந்து எந்த வழியாகவாயினும் வெளிப்படலாம். இது பெரும்பாலும் அவன் புண்ய பாபத்தையும், அதனுல் பற்றப்படும் கர்மஜ தேஹத்தையும் பொருத்தது. ஜீவர்கள் மரண முடிவில் விடும் தேஹத்திலிருந்து உத்க்ராந்தி அடையும் விதத்தைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

நான்குவித புருஷார்த்தங்கள்.—தர்ம அர்த்தகாம மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்பவைகளே நான்குவித புருஷார்த்தங்கள். இவைகளில் முதல் மூன்றினுள் பின்னதற்கு முன்னது காரணமாகும். இப்படி இருப்பினும் இகலோக விஷயங்களுக்கு அர்த்தமே (பணமே) மிக முக்கியம். இதனுல்தான் தர்மமும் காமமும் கைக்கூடும். இப்படி இருப்பினும் தர்மமே மிகச் சிறந்தது. தர்மம் தவறினுல் அர்த்தமும் காமமும் ஒழுங்கு தவறிப்போக, வீண் கஷ்டத்திற்குக் காரணமாகும். மனதின் பலமே வரவரத் தளர்ந்து கொண்டேவரும். இவைகள் எல்லாம் பயனற்றவை என்று உணர்ந்து தருணம் பார்த்துப் பக்குவகாலத்தில் பரம்பொருளை அடைய எண்ணி, இவைகளை விடுவதே மோக்ஷம் என்னப்படும். இதற்கும் ஆதியில் தர்மானுஷ்டான மூலமாக வரும் பெரியோர்கள் அனுக்கிரஹம் அவசியம்.

தற்செயலாய் நேரும் அபாய ஸம்பவங்களும், அவற்றின் ஆரம்ப சிகித்ஸைகளும்

ACCIDENTS & EMERGENCIES

இரத்தத் தெறிப்பு - Hemorrhage

சிகித்ஸை.—இரத்தத் தெறிப்புண்டான இடத்திற்குத் தகுந்தபடி சிகித்ஸாமுறைகள் வேறுபடும். இரத்தங் கொட்டுவதைத் தடுப்பதற்கு முன்பாக, இரத்தம் எவ்விடத்திலிருந்து வெளியாகிறதென்று கண்டுபிடிக்க வேண்டும். துணியை இரத்த வாயில் போட்டு அடைத்தாவது, மேலே நிறைத்தாவது, இரத்தம் கொட்டுவதைத் தடுக்கக்கூடாது. ஊறடைந்த இடத்தில் சுற்றப்பட்டு அல்லது அணியப்பட்டிருக்கும் வஸ்திரங்களை ஜாக்ரதையாக எடுத்துக், காயமடைந்த இடத்தைக் காணவேண்டும். அவ்வாறு எடுக்கும்போது இரத்தம் துள்ளிக்குதித்தாலும் அல்லது சிவப்பாக இருந்தாலும் அது சுத்தரத்தக் காலிலிருந்து வெளிவரும் இரத்தமென ஞாபகமிருக்கவேண்டும். ஆகையால், இரத்தங் கொட்டுமிடத்துக்கும் ஹ்ருதயத்திற்கும் நடுவில் இரத்தத்தைக் கக்கும் கால்வாயை அழுத்தினுல் அவ்விரத்தம் கக்குவது நின்று விடும். இம்மாதிரியாகச், செவ்விரத்தக் கால்கள் இருக்கும் இடத்தை நன்றாக அறிந்திருந்தால், அக்கால்களைக் கட்டைவிரலாலாவது அல்லது கையாலாவது அழுத்தினுல், இரத்தத் தெறிப்பை ஸாதாரணமாக நிறுத்திவிடலாம். பிளவுண்டது, காரிரத்தக்காலானுல், ஹ்ருதயத்திற்கு அப்புறப்பட்ட பாகத்தை அழுத்த, இரத்தம் வெளியாவது நின்றுவிடும்.

காயமடைந்த இடத்தில் துவர்ப்புள்ள மருந்துகளையாவது, இரத்தத்தை யுறையச்செய்யு மருந்துகளையாவது விடலாகாது; சிலந்தி வலை(ஒட்டடை)யையாவது, காளானையாவது, வேறெதையாவது திணித்தலுமாகாது; காயத்தைச் சும்மா விட்டுவிடுவதே ஸுகம். காயத்தின் வாயில் திணிக்கப்பட்ட எல்லா வஸ்துக்களையும் மருத்துவன் வந்ததும் வெளியாக்கவேண்டியதேயாகும். ஆதலால் ஷெடி வஸ்துக்களைத் திணித்தல் வைத்ய

னுடைய உதவிக்குத் தடங்கலாகி விளங்கும். அதுமாத்திரமன்றி வைத்யனுடைய வேலைக்குப் பங்கத்தையு மேற்படுத்தலாம்; காயமடைந்தவனுக்குத் தொந்தரையுண்டாக்குவதன்றி, புண்ணைச் சீக்கிரம் ஸ்வஸ்தமடையாதிருக்குபடியுஞ் செய்யலாம். அல்லாமலும், இரத்தத்தில் விஷத்தை யுண்டாக்கித் துன்பத்தைத் தருவதோடு நிற்காமல், வெட்டுக்காயமுண்டவனுடைய உயிர்க்கே ஹானியை யுண்டாக்கினு முண்டாக்கலாம்.

முகத்திலும் மண்டையிலுமுண்டாகும் இரத்தத் தெறிப்பின் சிகித்ஸை.—முகத்திலும், கன்னப்பொறியிலும், உச்சந்தலையிலுமுண்டாகும் காயங்களிலிருந்து இரத்தம் அபரிமிதமாக வெளிவரலாம். ஹ்ருதயத்திலிருந்து இவ்விடங்களிற்கு இரத்தம் மிக அதிகமாகச் செலுத்தப்படுவதே இதற்குக் காரணம். ஆனுல், அவ்விதமாக இரத்தம் வெளிவரினும் ஸுலபமாகவே தடுக்கமுடியும். உதட்டில்வெட்டேற்பட்டால், கைகளால் பிளவுகளைப் பிடித்து, விரல்களிடை வைத்தழுத்தினுல், இரத்தம் வெளிவருவதை முழுதும் நிறுத்திவிடலாம். கன்னப்பொறியிலாவது உச்சந்தலையிலாவது, அல்லது மண்டையோடு ஒட்டிக்கொண்டிருக்குந் தோலிடமாவது, உண்டாகும் காயங்களில் செய்யவேண்டியது, கைவிரலால் பிளவுண்ட பாகத்தின் அடியில் அழுத்தவேண்டியதே; சில வேளைகளில் பிளவுண்ட இடத்திற்கு மேலுங்கீழுமாகவும் அழுத்த வேண்டிவரும்; இதனுல் தற்காலம் இரத்தம்வெளிவருவதைநிறுத்த முடியும். வைத்யனுடைய உதவி உடனே கிடைக்குமானுல், அவன் வரும்வரை இரத்தத்தை வெளிசெல்லாது இவ்வாறு தடுக்கலாம். அவன் வருவதற்கு நேரமுண்டாகக்கூடிய காலத்தில் இவ்வாறு தடுப்பது பிரயாசையை யுண்டாக்கும். அக்காலத்தில் சுத்தமான துணியால் அக்காயத்தின் வடிவிற்குச்சிறிது பெரிய சுமடு அழுத்தமானது ஒன்றுண்டாக்கி அழுத்திவைத்திருந்த கையைச் சரேலென வெடுத்து, உடனே அந்தச் சுமட்டை அந்த காயத்தின் அளவிற்கேற்கவைத்து அழுந்த ஓர் கைக்குட்டையால் மேலிறுகக் கட்டுவது நலம். இவ்வாறு கட்டுதல் ஸாதாரணமாக, ஒரு கைக்குட்டையை மடித்துச்சுமடாக உபயோகித்து, அதைக் காயத்தின்மேல் அழுத்திவைத்து மற்றோர் கைக்குட்டையைக் கொண்டு கவணஞ்செய்வது ஸுலபம். மண்டைத்தோலில் உண்டாகும் பெருங் காயங்களும், முக்கியமாக மண்டைமுழுதும்பரவிய காயங்களும், மிகுதியாக இரத்தஞ் சிந்தாவண்ணமே தோலைக்கிழித்திருக்கும். ஆனுல், அவற்றிலிருந்து இரத்தம் அதிகமாக வெளிவருமானுல், அவ்வாறு மண்டையின் பின்பாகத்தில் தான் உண்டாகும், அல்லது கன்னப் பொறியிலுண்டாகும். அவ்விடங்களில் அழுத்துவதால் இரத்தங் கொட்டலை நிறுத்திவிடலாம்.

கழுத்தில் உண்டாகும் இரத்தத்தெறிப்பிற்குச் சிகித்ஸை.—கழுத்திலிருக்கும் பெருமிரத்தக் கால்வாய்களில் காயம் உண்டானுல் அளவுக்கடங்காது இரத்தம் வெளிவரும்; உடனே தக்ஷணமே, நிறுத்தப்படாதானுல், பிராண ஹானியே நேர இடமுண்டு. செவ்விரத்தக்கால் இரண்டுபட்டால் இரத்த நஷ்டத்தால் மரணமுண்டாகும்; காரிரத்தக்காலில் உண்டானுல், இரத்தநஷ்டமாவதல்லாமல், அக்காலின் வழியாகக் காற்று உள் நுழைந்து ஹ்ருதயத்துள்ளடைந்து, ஹ்ருதயத்தின் வேலையைத்தடுத்து அந்த க்ஷணமே மரணத்தை யுண்டாக்கலாம். கழுத்தில் உண்டாகும் காயங்களிலிருந்து வெளிவரும் இரத்த நஷ்டத்தைத் தடுப்பதற்கு ஒருவழிதான் உண்டு. காயத்துள் விரலைவிட்டு இரத்தக் கால்வாய்களின் பிளவுண்ட வாய்களின் மேல் வைத்துத் தடுப்பதேயாகும்; அவ்வாறு வைத்தியன் வரும்வரை இருக்க வேண்டும்.

பிளந்த கால்வாய்கள் சேர்க்கப் பட்டால் அல்லது கட்டப்பட்டாலல்லாமல், அழுத்துவதால் இரத்தம் வெளிவருவதைத் தடுக்க முடியாது. மூச்சு விடுவதைத் தடுக்காது அவ்வாறு செய்ய முடியாது.

ஆகையால் ஒரு மனிதனுடைய கழுத்திலிருக்கும் ரத்தக் கால்களிற்கு வெட்டேற்பட்டால், அம்மனிதனைக் காப்பதற்குத், தக்ஷணம் காயமடைந்த வாயில் விரலை வைத் தழுத்துவதைத் தவிர்த்து வேறு வழியே கிடையாது.

மேற்கையில் நேரும் இாத்தத் தெறிப்பிற்குச் சிகித்ஸை.—மேற்கையில் நேரும் காயங்கள், மிக உயர்ந்த இடத்திலிருந்தாலன்றி, ஸுலபமாக அவ்விடத்திலுண்டாகும் இரத்தத் தெறிப்பைத் தடுத்துவிடலாம். ஆனால் காயம் மேலே இருந்தால், இரத்தம் வெளிவருதலை மிகப் பிரயாஸையோடுதான் தடுக்க முடியும்.

இரத்தம் வெளிவருவது, போதுமானபடி கீழ்ப்பாகத்திலிருந்தால், செவ்விரத்தக்கால்வாயை, அக்கிளிலிருந்து வெளிவருமிடத்தில் எலும்பின்மேல், கட்டை விரலால் தாக்கியழுத்தினால், நின்றுவிடும். இந்த மாதிரி, கயிறோ, குட்டையோ, வாரோ ஏதாவது கிடைக்கும் வரை இரத்தம் வெளிவருதலைத் தடுக்கலாம். கொண்டுவரும் கயிறோ எதுவோ சதையை யறுக்காதிருக்கும்படியான பருமன் உடைத்தாயிருக்கவேண்டும். அதனால் காயத்தின் மேற்புறமாக கையை இறுக்கக்கட்டலாம். இல்லாவிடில்இலேசாகக்கட்டி, கட்டினுள் ஒரு கட்டையை நுழைத்து அதைச் சுற்றுவதால் கயிற்றை முறுக்கி, கட்டினை இறுகும்படிச் செய்து, ஒரு துளி, இரத்தமும் சிந்தாதவிதம் செய்யலாம். இதனோடு கையையும் தூக்கிக் காற்றில் மேல் தூக்கினால், இரத்தம் வெளிவருதலைத் தடுப்பதற்கு இவ்வாறு செய்தல் உதவியாகவிருக்கும்.

ஆனால் கையை இந்தப்படி அதிக நேரம் கட்டிவைத்தால் நல்லதல்ல. அவ்வாறு செய்தால் துர்மாமிசம் அவ்விடத்துண்டாவதற்கு இடமுண்டாகும். கட்டை அரைமணி நேரம் வைத்திருக்கலாம். இதற்குள் வைத்தியன் வராதிருக்கும் பக்ஷத்தில் அக்கிளிலிருந்து கையின் உட்புறமாக வருவதாக முன்சொல்லப்பட்ட செவ்விரத்தக் கால்வாயைக் காயத்திற்கு மேல் பக்கமாக நன்றாக அழுத்திக்கொண்டு, கட்டை அவிழ்த்து விடவேண்டியது; அப்பொழுது முன் கையில் விரல்களிடமிருந்து தோள் பக்கமாகத் தேய்க்கப்படவும் வேண்டும்.

இப்பொழுது ஒருகயிறோ அல்லது துணியோ கொண்டு மறுபடியும் கையைச்சுற்றி இறுக்கமுன் சொன்ன விதம் கட்டவேண்டும். ஆனால் முன்கட்டிய இடத்திலேயே கட்டக்கூடாது. அதற்குமேலோ, கீழோ, காயத்திற்கு மேலிருக்குமிடத்தில் கட்டவேண்டியது. ஆனால் கட்டை இறுக்குவதற்கு முன் விரல்களால் மேலிருந்து காயமிருக்குமிடம் வரை கையைத் தடவலாம். இந்த இளங்கட்டாலேயே இரத்தம் வெளி வருவது நின்றிருக்கலாம். அப்படியிருந்தால் கட்டையிறுக்க காரணமில்லை. ஆனால் இரத்தம் மீண்டும் வெளிவர ஆரம்பித்தால், கட்டையிறுக்கி முன்போல அரைமணிநேரம் இருக்கச்செய்யவேண்டும்.

ஆனால் கையிலுண்டான காயமானது கட்டமுடியாதபடி அக்கிளில் உயர்ந்திருக்குமானால், கைக்கு இரத்தத்தைக் கொண்டு வரும் இரத்தக்கால்வாயைக் கண்டுபிடித்துப் பூணர எலும்பின்மேல் தாக்கி அழுத்துவதால் இரத்தத் தெறிப்பு நின்றுவிடலாம்.

முன்கைக்கு இாத்தத்தைக் கொண்டு வரும் பெருமிரத்தக் கால்வாயானது, பூணர எலும்பின் கீழ்ப்புறமாக வந்து, பூணர எலும்பின் உட்பக்கத்து மூலையிலிருந்து மூன்றங்குல தூரத்திலிருந்து கையுள் நுழைகிறது. ஆகையால் தோளைக் கீழ்ப்புறமாக அழுத்தி நீவிக்கொடுத்தால், கையிலிருந்து இரத்தம் வெளிவராதபடி, கைவிரலால் செவ்விரத்தக் கால்வாயை யழுத்துவதும் ஸாத்யமாகலாம். கையின் விரலால் அழுத்தி இரத்தங் கொட்டுவதைத் தடுத்தானதும், கதவுப்பூட்டின் சாவியின் கைப்பிடிக்குத் துணியைச்சுற்றி விரல் வைத்து அழுத்திக்கொண்டு விரலை எடுத்துவிடலாம். விரல் சீக்ரத்தில் அயர்ந்து தளர்ந்துவிடுமானபடியால், இவ்வாறு செய்வது சௌக்யமாக இருக்கும். இம்மாதிரியாக, வைத்யன், உதவிக்கு வரும்வரை இரத்தத் தெறிப்பைத் தடுக்கமுடியும்.

சுதேசமித்திரன்.—* * நேர்த்தியான காகிதத்தில், பல சித்திரப்படங்களுடன் விவேக போதினி அழகாய் அச்சிடப்பட்டு மாதாமாதம் தவறாமல் வெளிவருவதை எல்லோரும் அறிவார்கள். ஒவ்வொருமாத சஞ்சிகையிலும் பல அரிய விஷயங்கள் பிரஸ்தாபிக்கப் படுவதால், ஒருவருஷ சஞ்சிகைகளைத் திரட்டி அழகிய கலிகோவால் பயிண்ட் செய்து ஒரு புத்தக ரூபகமாகக் கொடுப்பது அநேகருக்கு உபயோகமாயிருக்கும்.

மழை

THE RAIN

இப்பூவுலகும், இஃது உறுதியாவதற்காதாரமாகிய அறம்பொருளின்பங்களும் இனிது நடைபெறுவது இம்மழையினாலாகையாலும், இதை நாம் நமது அமுதமாகக் கொண்டாடுகிறபடியாலும் இங்கு இதனைச் சிறிது கூறுவோம்.

பூமியிலுள்ள சமுத்திர முதலிய நீர் நிலைகளின் தண்ணீரானது சூரிய கிரணத்தின் வெப்பத்தால் நீராவியாகப் பரிணமித்துப் புகைரூபமாகி இலேசானபடியால் உயரக் கிளம்பி ஒன்று சேர்ந்து மேகமாக மாறுகிறது. இவ்விதம் உண்டாகிய மேகங்கள் காற்றினால் அலைப்புண்டு மேகமண்டலங்களுக்கும் மேலே உயர்ந்திருக்கிற மலைகளாலே தடுக்கப்பெற்று அங்கு உண்டாகுங் குளிர் காற்றைத் தாங்கமுடியாது மழையாகப் பொழிகின்றன. சூரிய பிம்பத்தின் நடு மத்தியிலே ஒரு சிறு புரைபோன்றது உண்டாயின் அக்காலத்திற் சரியான மழை பொழியாது வறட்சியுண்டாகிறது.

இவ்விதம் மழையின் உற்பத்தி யென்பதைத் தெரிந்துகொள்ளாது பூலோகத்தார், யாக முதலியன செய்வதற்குப் பதிலாக இந்திரனால் அளிக்கப் படுகிறதென்றும், அச்செய்கைகள் குறையின் மழை குறையுமென்றும், அக்காலம் நீரின் அதிபதியாகிய வருணனைக் குறித்துத் தோத்திரஞ் செய்தால் மழை பொழியுமென்றும் சொல்வன பொருந்தாவாயினும், அவைகளுங் காலந் தவறாமற் பொழியவேண்டுமென நம்மினும் எத்துணையோமடங்கு உயர்வுள்ள கடவுளைக் குறித்துப் பிரார்த்தித்தலைச் சேர்ந்தனவென்று கொள்ளப்படுமாயின் அவற்றுள்ளுங் குற்றமில்லையென்ப தேற்படுகிறது.

நிற்க, நம்முள்ளும் மழைபெய்யப்போகிறதென்பதை முன்னமேயே தெரிவிக்கக் கூடிய பல அடையாளங்களும், அவற்றைத் தெரிந்து நடந்த பல மனிதர்களும் இல்லாமலில்லை. அவையாவன:—ஈக்களுங் கொசுக்களும் மழை வருவதற்குச் சற்று முன்னே எப்பொழுதும்போல உயரப்பறக்காது கீழே தரை மட்டத்திற்கு வந்து பறக்கும். எறும்புகள் மழை பெய்யப்போகிறதென்பதை அறிந்து, தமதிருப்பிடம் விட்டுக் கூட்டங் கூட்டமாகத் தகுந்த மேடான வேறு ஓர் இடந்தேடிப் போவதால் நமக்கு முன்னமே காண்பிக்கும். தவளை தனது விடாத கத்தலால் மழை வருகிறதென்பதைத் தெரிவிக்கும். இன்னும் இவைபோன்ற பல அடையாளங்கள் முன்காலத்தில் நமது இந்தியாவில் எல்லோராலுங் கீழ்ப்பட்டவர்களென்று தள்ளப்பட்டவர்களாலுங் கையாளப்பட்டுவந்தன. இவர்களைக் கீழ்ப்பட்டவர்களென்று சொல்லுவது, பகலிலே தமது நிழலின் அளவாலும், இரவிலே நட்சத்திரங்களாலும் இப்பொழுது இத்தனை நாழிகை இத்தனை விநாடி என்று தம்து புத்தியினாற் கணக்கிட்டுச் சொல்லுபவரைக் கடியாரம் என்னுங் கருவியைக் கையிலே வைத்துக்கொண்டு தமது புத்திக்கு எவ்வித வேலையுமில்லாமலே காலத்தைத் தெரிந்து கொள்பவர் கீழ்ப்பட்டவரென்று சொல்லுதல்போலாம்.

இன்னும் நமது தமிழ் நாட்டுள்ளே தலை சிறந்து விளங்கிய கவிச்சக்கரவர்த்திகள் ஒவ்வொருவரும், இம்மழை எவ்வித கைம்மாறையும் விரும்பாததாயினும் அதற்குத் தாங்களே செய்யுங் கைம்மாறு போல அவரவர்கள் எழுதிய காவியங்களில் தங்கள் தங்களது புத்திக்குஞ் சத்திக்குந் தக்கவாறு பலவிதமாகப் புனைந்துரைத்திருக்கிறார்கள்.

இனி அம்மழையின் உபயோகத்தைப் பற்றிக் கூறுவோம்.

உலகத்தில் அனைவரும் உயிரோடிருந்து இன்பமனுபவிப்பதற்கு ஆதாரமானவற்றுள் முதன்மையானது உணவு. அவ்வுணவுக்காகக் கூடியன பலவகைப்பட்ட தானிய முதலியவைகளே. அவைகளோ பூமியை நன்றாய் உழுது சாகுபடி செய்து தண்ணீரின்றிக் காய்ந்து போகாமலும், அதிகத் தண்ணீரால் மூழ்கி அழிந்து போகாமலும் பாதுகாத்து வந்தாலன்றிக் கிடைத்தலரிது. அன்றியும் இது விலங்குகளின் உணவுக் காதாரமான புற்பூண்டுகளுண்டாவதற்கும் ஆதாரமாயிருக்கிறது. இதனால் உணவுகளுக்காதாரமாயிருப்பதுடன்

உணவாகவு முபயோகப்படுகிற இம்மழையானது காலங்களிற் பொழியாவிடின் உலகிலுள்ள சீவ கோடிகளனைத்தும் பசியாகிய நோயால் வருந்துமென்று நன்கு விளங்குகின்றதல்லவா?

புகழுக்கும், வீட்டுக்கும் ஆதாரமான தானத்திற்குந் தருமத்திற்கும் இம்மழையே முக்கிய ஆதாரமாகையாலும், இம்மழையில்லாவிடிற் கடலுக்கும், நீர் வாழுயிர்கள் பிறவாதலாலும், மணி முதலியன உண்டாகாதலாலுங், குறைவு நேரிடு மாதலாலும், "ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்கம் உயிரினு மோம்பப்படும்" என்ற வாக்கியத்திற்கேற்ப, உயிரினும் மேன்மைபொருந்திய ஒழுக்கம் தண்ணீரின்றி அமையாதாதலாலும், தண்ணீரின்றி உலகம் நடைபெறாதது போல, அத்தண்ணீரும் மழையின்றி உண்டாகாதலாலும், இம்மழை நமதுலகத்திற்கு இன்றியமையாததொன்றாயிருக்கிறது.

அதனாலேயே எல்லா நன்மைகளையும் நாம் அடைகிறபடியாலும், நம்மால் புகழ்தலைத் தவிர வேறொன்றும் அதற்குச்செய்ய முடியாதென்கிற நிச்சயத்தினாலுமே அம்மழை நம்மிடத்தினின்று எவ்வித கைம்மாறுங் கருதாது உதவுகிறதுபோலும்.

வேங்கடராமையர்

மழை.—இது உஷ்ணப் பரப்பால் வெளி ஏறும் ஜலக்காற்று, குளிர்ச்சியால் உறைந்து பொட்டுப் பொட்டாகப்பூமியின் ஆகர்ஷணத்தால் மேல் விழுவதாகும். இதனால் வரண்ட நிலங்கள் குளிர்ச்சியடைவதல்லாமல், உஷ்ணக்காற்றும் தனது வேகங்குறைக்கப்பட்டு விளங்கும். மழையில்லாவிடில் பூமி வரவர ஸூரிய வெப்பத்தால் காய்ந்து சூடு ஏற ஏற ஜனங்களுக்கு ஸௌகர்ய குறையுண்டாவதல்லாமல் புல் பூண்டு முதலிய எல்லா வகைய வர்க்கங்களிற்குஞ் சேதமுண்டாகும். க்ஷாம முதலியனவன்றி நோய் முதலியவும் பரவும். உலகிற்கு சீதோஷ்ண நிலையைச் சமப்படுத்த மழை ஸாதனமாகும். பருவங்களின் மாறாட்டத்தைக்குறிக்குங் குறியுமாகும். குளிர்ச்சி வெப்பம் ஒன்றன்பின் ஒன்று வந்து ஜீவ ஆதாரமாக விளங்க அது ஏதுவாகியிருப்பதால்தான் ஹிந்துக்களால் "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" எனப் புகழப்படுகிறது.

வெரோனா நகரத்து இருகனவான்கள்

THE TWO GENTLEMEN OF VERONA

வாலன்டயினும் திடுக்கிட்டு, 'இதென்ன நம்முடைய விஷயங்கள் கைகூடுமென்று நினைத்திருந்த தினத்திலேயே இனி யெக்காலமுங் கிட்டாவண்ணம் விலகிப்போயதே, இதென்ன துரதிர்ஷ்டம்!' என்று தன்தலைவிதியை நொந்து இனி அவ்விடத்திலிருக்கத் தகாதென்று உடனே தன் வேலைக்காரனை அழைப்பித்துத் தனக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொண்டு நகர வாயிலை விட்டு, அப்புறஞ்சேர ஆயத்தப்பட்டான். அத்தருணத்தில் புரோட்டியஸ், லான்ஸ் என்னுந் தன் சேவகனுடன் வாலன்டயினைத்தேடிவந்து, 'இதென்ன அநியாயம்! இப்படியும் வருமா! உன்னை ஊரைவிட்டுப் போக உத்தரவு பிறந்திருக்கிறது என்று சொல்லுகிறார்களே' என்று மிகவும் உருக்கமாயும், இதன் விஷயம் ஒன்றுந் தெரியாதவன்போலவுஞ் சொன்னான். வாலன்டயின் மிகுதியும் வருத்தப்பட்டு, உலகமே அந்த க்ஷணத்தில் முடிவுக்கு வந்து எல்லாம் மங்கி மறைந்துவிடும்போ லிருப்பதாய்ப் பேசினது கேட்டுப் புரோட்டியஸ் 'வருத்தத்தை இவ்வளவு அதிகமாக ஏற்கலாகாது. அது உடம்பிற்குக் கெடுதி; மற்றும் அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருப்பது மனோபலத்தை யழித்துவிடும். மனதை திடப்படுத்திக்கொண்டோமானால் நாளடைவில் இது சரிப்பட்டுப்போகும். இவ்விடத்திலேயே இருந்து எப்போதும் இவளையே நினைத்து வாழ்நாளைப் பாழ்படுத்திக்கொள்வதிலும், வெளியூருக்குப் போய்ப் பலகாட்சி கண்டு பல்வேறுவகைசெயலில் புகுந்தால் இவ்விஷயம் மறந்துபோய், இதற்காக வீணிட்டநாளும் ஏளனமாக விளங்கும்' என்று இதுபோல் மற்றக்காரணங்களையு மெடுத்துரைத்து, நண்பனுக்குத் தேறுதல் சொல்லி அவசரமாய் வெளிப்படுத்தி விட்டான்.

இவர்களிவ்விதமாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்ட லான்ஸ் என்னும் வேலைக்காரன் "இதென்ன புதுமை! நானும் ஒரு பெண்ணை மணக்க எண்ணியிருக்கிறேன். அவளொரு பால்காரி. பால் கரக்கவோ, நூல் பின்

னவோ, பாத்திரம் முதலியன சுத்தமாய்த் தேய்த்தலம்பவோ கெட்டிக்காரி. எவ்வித மதுபானமும் முறைப்படி சேர்த்துத் தயார் செய்யுந் திறமையுடையவள். அவள் விஷயத்திலுள்ள குறைவுகள்-அவளுக்குப் பல்லில்லையாம். பட்டினியா யிருக்கும்போது பேசினால் வாய் வீசுகிறதாம். அவள் வார்த்தை மெள்ளத் தடுமாறித் தடுமாறிப் பேசுகிறாளாம். ஆ! இதெல்லாங்குறைவுகள் என்பவன், பெண்களியற்கை யறிந்தவனல்ல. பல்லில்லையாயின் புருஷனைக் கடிக்கமுடியாது; வாய் வீசுவது பட்டினியால் என்றால் சாப்பிடுவதினால் அந்த தோஷம் நீங்கும்; பேச்சுத்தடுமாற்றம் என்றால் அதுபோல் சௌகரியம் ஒன்றுமில்லை. இக்காலத்தில் பெண்களால் உபத்திரவம், அவர்கள் ஓலைப்பாயில் மழைபெய்தாற்போல சளசளவென்று ஓயாமல் மூச்சுப்பிடித்துக்கொண்டு பேசுவதுதான். ஆகையால் இவள் பேச்சில் தடுமாறுவது அவள் குணங்களிலெல்லாஞ் சிறந்தது. உடனே இவளைக் கல்யாணம் முடித்துவிட்டு மறுவேலைபார்க்கவேண்டும்" என்று தன் எஜமானர்கள் கொண்டிருந்த அன்பு, படும் பாடு முதலியவற்றைக் கழித்து தன் வேலைக்காரபுத்திக்குத் தோன்றியபடி உலகவியல் தெரிந்து கொண்டவனாதலால் பல்லுதிர்ந்துபோன கிழவியாயிருந்தாலும் பணமுடையவளானாற் சரியென்று, தன்மனதில் தோன்றிய வெண்ணங்களைத் தனக்குத்தானே உளறிக்கொண்டிருந்தான்.

வாலன்டயின் இவ்விதமாய் வெளிப்புறப்பட்டபின்னர், பிரபுவானவர் புரோட்டியஸையும் ஸர் தூரியோவையுங் கூப்பிட்டு "இனி ஒருவிதக் கஷ்டமுமில்லை. என் மகள் வாலன்டயினைப்பற்றி நினைப்பதையே விட்டுவிடுவாள். உரைபனியில் வெட்டிய உருவம் போல, வெயிலில் கரைந்து மாறுபட்டிடு மிது. ஆகையால் ஸர் தூரியோ இனித் தக்க முயற்சியுடன் அவள் மனதைத் திருப்ப வேண்டு மென்றார். புரோட்டியஸ் எங்ஙனம் இவ்விதமாய், தான் ஒருவனைப்போக்கியும் தனக்கு வழி சீர்படாமற் போகுமோ என்று பயந்து இனிநாமெவ்வழி நன்முயற்சி செய்தல் வேண்டுமென் றாலோசித்து "ஸில்வியா இன்னும் வாலன்டயினைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந்தால் என்ன செய்வது? சிறிது சிறிதாய் அவளுக்கு வாலன்டயின் பொய்யன் என்றும் பேடி என்றும் ஈனஜாதியன் என்றுஞ் சொன்னால், இம்மூன்று விஷயங்களும் பெண்கள் வெறுப்பனவாகையால் அவன் பேரிலுள்ள வன்பு நெகிழ்ந்துபோகும். பின்னர் மற்றையோர் சொல்வனக் கேட்க விடமிருக்கும்" என்றார்.

பிரபு: நாங்கள் யாராவது அப்படிச்சொன்னால் அவனிடத்துள்ள பகையினால் அப்படிச்சொல்லுகிறோம் என்று எண்ணுவாள். அவன் சிநேகிதனான நீ சொன்னால் சரியாயிருக்கும்.

புரோட்டியஸ்: ஒரு சிநேகிதன் மற்றவனைப் பற்றி இங்ஙனம் சொல்லுதல் அடுக்குமா? நான் அப்படிச் செய்யவும் உடன்படுவேனா?

பிரபு: உன் நல்ல வார்த்தை அவன் விஷயத்திற்கு பயன்படாத காலத்தில் கெடுதியான வார்த்தை என்னதீங்கு செய்யப்போகிறது? என புரோட்டியஸ் எவ்விதத்திலும், தான் அடிக்கடி ஸில்வியாவைக்கண்டு, தன்னை மணம்புரிந்துகொள்ளச் சொல்லி ஏற்பாடு செய்யவெண்ணினவனாகையால், இவ்விதமாய் அந்தப் பிரபு ஒரு சமாதானஞ்சொல்லவே, 'சரி அப்படியே ஆகுக' என்று சொன்னான். ஸர் தூரியோ தன்னை மணப்பது சந்தேகமாய் விடாமலிருக்கும்படி தானென்ன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, தக்க பாட்டுக்காரர்களைக் கூப்பிட்டு, இராப்பொழுதில், ஸில்வியா இருக்கும் உப்பரிகையின் கீழ் இன்னிசை பாடி அவள் மனதைக் களிப்பிக்கவேண்டியதென்றும், "எவ்வளவு அவள் விஷயமாய் உன் அன்பு என்பதை, எழுதும் மை காய்ந்துபோகும் வரையிலும், காய்ந்தமை கண்ணீரால் நனைந்து போகும்படியும், மலைகளையும், மரங்களையும் ஆட்டுவித்து, அருங்கவிபாடிய ஆர்பியஸ் என்னும் புராணிக சங்கீத வித்துவான் திறமைக்கொப்ப கவியமைத்துப் பாடினால் உன்னையவன் அன்போடு எண்ணுதல் கூடும்" என்றான். உடனே அவ்விதமாய்ப் பாட்டும் பாடல்களும் ஆயத்தப்படுத்த அவர்கள் வெவ்வேறுவழி சென்றார்கள்.

இது நிற்க, ஊரைவிட்டு வெளிப்பட்ட வாலன்டயின் துக்கசாகரத்தில் மூழ்கி, போகும்

வழி, காலம், பொழுது ஒன்றுமே யோசியானாகி சோர்வடைந்து, வழிதெரியாமல் புதரடர்ந்தகாடொன்றிலகப்பட்டுக்கொண்டான். இக்காட்டில் இவன்போலக்குற்றங்களுக்காக பற்பல தேசங்களினின்று துரத்தப்பட்டவர்கள் அனேகர் கூட்டங்கள்கூடி வழிபறிக் கொள்ளையிட்டு ஜீவனஞ்செய்துவந்தார்கள். வாலன்டயின் அவ்வழிவரவே, இவ்வழிபறிக்காரரிருவர் அவனைத் தடுத்து நின்று, "நீ யார், எங்கே போகிறாய்?" என்று கேட்டார்கள். வாலன்டயின் தனது பரிதாபமான ஸ்திதியைத்தெரிவித்து ஸில்வியா பெயரைச் சொல்லுவது தகுதியல்லாததால், மிலானில் ஒரு மனிதனைத், தான் கோபாவேசத்தில் கொன்றுவிட்டதாகவும் அதற்காக அவ்வூரினின்று தள்ளப்பட்டு உடுத்த உடையோடு வந்திருப்பதாகவுஞ் சொன்னான். அதுகேட்டவுடனே அந்த வழிபறிக்காரர்கள் அவனது நிலைமையைப்பார்த்து மனமிளகி உயர்குலத்தவனென்று விளங்கினதால், தங்கள் கூட்டத்திற்குத் தலைவனாகச் சம்மதிப்பானாவென்றும், சம்மதிக்காத விஷயத்தில் தாங்கள் அவ்விதமாய் வேண்டிக்கொண்டது வெளியே தெரியாவண்ணம் உடனே அவனைச் சிரச்சேதம் பண்ணிவிடத் தயாராயிருப்பதாயுந் தெரிவித்தார்கள். ஏழை ஜனங்களையும் உதவியற்ற பெண்களையும் யாதொரு தொந்தரவு செய்வதில்லையென்று அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணிக்கொடுத்தால் அவ்விதமாய்அவர்களுக்குத் தலைவனாயிருக்கத்தடையொன்றுமில்லை என்று வாலன்டயின் சொன்னான். அவர்கள் எக்காலத்திலும் கொடுமை செய்யாதவர்களாதலாலும் நல்ல ஸ்திதியிலிருந்தே கோபம், வெறிச்சண்டை முதலியவற்றிற்காகத் தள்ளப்பட்டவர்களாதலாலும் "அவ்வித இழிவான செய்கை செய்ய நாங்கள் மனிதரல்ல. நீ யாதொரு தடையுமின்றி எங்கள் வாக்குறுதியை யொப்புக்கொள்ளலாம்" என்று சொல்லி அவனைத் தமது தலைவனாக ஒப்புக்கொண்டு அந்தக்காட்டில் வாசஞ்செய்து வந்தார்கள்.

இனி, வெரோனாவிலிருந்து ஆண்வேஷம் பூண்டு மிலானுக்குச்சென்ற ஜூலியா, ஸிபாஸ்டியன் என்று பெயர் வகித்துக்கொண்டு, மிலான் பட்டணத்தில் ஒரு விடுதியில் வந்து சேர்ந்தாள். அவ்வூரில் உள்ள விசேஷங்களை வினவ, விடுதிக்காரன், அவ்வழியாய் பாட்டுக்காரர்கள் ஸில்வியாவின் உப்பரிகைக் கீழ் இசை கூட்டப்போகிறார்களென்றும், அவர்களுடன் புரோட்டியஸ் போவதாகவுந் தெரிவித்தான். உடனே அதைப் பார்க்கவேண்டுமென்று புறப்பட்டு அதேயிடத்திற்கு ஜூலியாவும் வந்து சேர்ந்தாள். பாடகர்கள் ஸில்வியாவைப் பலவாறாக வியந்துபாடி, அவள் அழகுக்கீடில்லையென்றும், தயாளகுண கீர்த்தி பெற்றவளென்றும் பாடினார்கள். ஜூலியாவுக்கு இந்தப் பாட்டுகள் கேட்கக்கேட்க மனவருத்தம் அதிகப்பட்டது. ஏனென்றால் தன்னை எவ்வளவோ பிரியமாய்ப்பேசி அன்பு கூர்ந்தவன் இங்ஙனம் இன்னிசை கொண்டு, மற்றொருத்தியைப் பாடுவதென்றால் மனிதரது வார்த்தையின் உண்மை யென்ன என்று வருத்தமேலிடவும், தான் அவனுக்காக இவ்வளவு பிரயாசை யெடுத்ததையும் குறித்து விசனப்பட்டாள். பிறகு பாடகர்களை யனுப்பிவிட்டு, புரோட்டியஸ் ஸில்வியாவுடன் பேசத்தொடங்கினான். அது கேட்டு,

ஸில்வியா: அடா பாபி, உன் சிநேகிதனுக்குத் துரோகமாயும் நீஅடிக்கடி என்னிடம் உயர்வாகப் பேசிய ஜூலியாவுக்கு வஞ்சனையாகவுமல்லவா இருக்கிறது உன் பேச்சு?

புரோட்டியஸ்: ஜூலியாமேல் அன்பு கூர்ந்தது வாஸ்தவம். ஆனால் அவள் இறந்து போய்விட்டாளே!

ஸில்வியா: வாலன்டயினுக்கு வாழ்க்கைப் படவேண்டியவளல்லவா நான்?

புரோட்டியஸ்: வாலன்டயினும் இறந்துவிட்டதாய்க் கேள்விப்படுகிறேன்.

ஸில்வியா: அப்படியாயின் நானும் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு, உடனே வீடுபோய்ச் சேர்.

புரோட்டியஸ்: உன் படமாவது கொடு; அதுவாவது எனக்காறுதலாயிருக்கும்.

ஸில்வியா இவன் தொந்தரவு பொறுக்கமாட்டாமல் "நல்லது நாளைக்காலை ஒரு ஆள் அனுப்பு, என் படம் அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டு, தன் உப்பரிகையின் ஜன்னலை விட்டு, உள்ளே போய்விட்டாள். புரோட்டியஸ் சந்தோஷித்துக் கொண்டு வீடு போனான். ஜூலியா வருத்தத்துடன் விடுதி போய்ச்சேர்ந்தாள்.

ஸில்வியா எப்போதும் வாலன்டயினைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தவளாதலால், ஸர் எக்லாமூர் என்பவரைக் கூப்பிட்டு, தான் எவ்விதமேனும் மிலானை விட்டோடிப்போய் வாலன்டயினோடு போய்ச் சேரவேண்டுமென்று சொல்லி, தனக்கிவ்விஷயத்தில் உதவிசெய்ய அவரைக்கேட்டுக் கொண்டாள். ஸர் எக்லாமூர் மிகவும் சத்தியவந்தன்; தன்னன்பிற்கிணங்கிய பெண்ணை மணந்து, பின்னவளிறந்தபின்னர் ஏகபத்தினி விரதனாக பெண்ணாசை நீக்கி, உண்மையுடன் நடந்து மிகவுங் கீர்த்திபெற்று, எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டவர். இவரையெல்லோரும் கஷ்டம் நேர்ந்த வழி தக்க உதவிக்குத் தேடுவதுண்டு. ஸில்வியா தன்னுடைய மனதிலுள்ள எண்ணத்தை வெளிப்படுத்தி மிகுதியும் வருத்தத்தோடு சொன்னது கேட்டு மனமிரங்கி, அவள் கேட்டவண்ணஞ் செய்யச் சரியென ஒப்புக் கொண்டு ஸர் எக்லாமூர் ஒரு கோயில் மதில் பக்கமாய் வந்துசேர வேண்டுமென்றும் பிறகு இருவரும் புறப்பட்டு ஓடிவிடவேண்டுமென்றும் ஏற்பாடுசெய்துகொண்டார்கள்.

புரோட்டியஸ் தான் கேட்டிருந்தபடி படத்திற்காக ஆளனுப்ப ஆள் தேடிக் கொண்டிருந்தான். ஏனென்றால் அதற்கு முன்னம் ஒருதடவை தன் வேலைக்காரனான லான்ஸ் என்பவன் மூலமாய், பெண்களுக்கு அதிகமாய்ப்பிடித்தமான கிங் சார்ல்ஸ் ஸ்பானியல் என்ற பிற்காலத்தில் சார்ல்ஸ் இரண்டாவதவர் தாம் போகுமிட மெல்லாம் இது மாதிரி நாய்களைக்கூட அழைத்துக்கொண்டு போவதால் இப்பெயர்பெற்ற நாய் ஒன்றை அதிக விலைகொடுத்து வாங்கி அருமையாக அவளுக்கு லான்ஸ் மூலமாய் அனுப்பினான். லான்ஸ் மிகவும் அஜாக்கிரதையான மனிதன். ஒரு மார்க்கட்டுப் புறத்தில் சற்று நேரம் அலுப்புதீரத் தங்கிச் சிறிது தூங்கி எழுந்திருக்கு முன்னர் யாரோ திருடன், அந்த அழகிய நாயைக் கொண்டுபோய் விட்டான். லான்ஸ் என்ன செய்வதென்று திடுக்கிட்டுப் போனான். தன் வீட்டிலிருந்து, வீட்டு ஞாபகமாய் ஒரு தடி நாயொன்று வளர்த்து வந்தான் என்று முன்னமே சொன்னோமல்லவா? அந்த நாய்க்காக அடிக்கடி இவன் கஷ்டம் ஏற்றுக் கொள்வதுண்டு. எப்படியென்றால், ஒரு தடவை மிலான் பிரபு அரண்மனையில் எல்லோரும் பெரிய விருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சில நாய்கள், மேஜைக்குக் கீழேவந்து நின்றுகொண்டிருந்தன. அவற்றுள் கிராப் என்று சொல்லப்பட்ட லான்ஸினுடைய நாயுமிருந்தது. கொஞ்சம் நேரஞ் சென்றவுடன் கிராப் காலைத்தூக்கி ஜலஸ்பரிஸம் பண்ணிவிட்டது. உடனே விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் அந்த நாற்றம் பொறுக்கமாட்டாமல் கூச்சலிட்டு "அந்த நாயை அடித்து ஓட்டுங்கள்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு மனிதன் வந்து நாய்களத்தனையும் பிடித்துக் கொண்டு அடிக்கக் கொண்டுபோனான். லான்ஸ் அவனுக்குப் பின்னாலே ஓடிப்போய் தன் நாயைக் காப்பாற்றுவதற்காக "அப்பா, அந்த நாய் ஜலஸ்பரிசம் செய்யவில்லை. நான்தான் செய்தேன். அதற்குப் பதிலாய் என்னையடி" என்று தன்மேலே அந்தத் தண்டனையை யேற்றுக்கொண்டான். இதுபோலவெல்லாம் அந்த நாயை அருமையாய் வளர்த்துவந்தவனாகையால் அந்த நாயை விட்டுப் பிரியவே அவனுக்கு மனமில்லை. என்றாலும், எஜமானன் கொடுத்த சிறு நாய்க்குட்டியைக்காணாமற் போக்கடித்துவிட்டபடியால் என்ன செய்கிறது என்று தன் தடிக் கடா நாட்டு நாயை, அந்த சிறிய சீமை நாய்க்குப் பதிலாய்க்கொண்டுபோய் ஸில்வியாவிடம் கொடுத்தான். அவள் 'இது என்ன கிரகசாரம்! எச்சில் பொறுக்கித் தின்னும் கடாநாயைக் கொண்டுவந்தாய்?' என்றுசொல்லி நாயையும் நன்றாயடித்து, நாயைக்கொண்டுவந்தவனையும் நையப்புடைத்து விரட்டியோட்டிவிட்டாள். பின்பு புரோட்டியஸ் நாய் கொடுத்தாயா என்று கேட்டபொழுது, "ஆம் கொடுத்தேன், ஆனால் அணில்போல சிறிய நாய் கொடுத்தீர்களே அதை யாரோ கொண்டுபோய்விட்டார்கள். அதிலும் பத்தத்தனை மடங்குள்ள என் நாய் கிராப் என்

பதை உங்கள் அன்பு பத்தத்தை என்று காட்டுவதற்காக கொண்டுபோய்க் கொடுத்தேன். அந்தச் சீமாட்டி சீறி, என்னை அடித்து விரட்டி விட்டாள்" என்றான்.

அது பற்றி அவிவேகியான வேலைக்காரனை யனுப்புவது பிசகென்று தெரிந்து, புரோட்டியஸ் தன் மோதிரத்தைக்கொண்டு போய்க்கொடுத்து, படத்தை வாங்கிக்கொண்டுவரக்கூடிய வேலையாள் எங்கே கிடைப்பானென்று விடுதியில் வந்து விசாரிக்க, ஆண்வேஷம் போட்டிருந்த ஜூலியா, அவ்வேலையைச்செய்ய ஒப்புக்கொண்டு, ஸில்வியாவைத் தான் கண்டு எப்படிப் பட்டவளென்று தெரிந்துகொள்வோமென்று அவ்விஷயமாய் அவளிடம் புறப்பட்டுச் சென்றாள்.

ஜூலியா, ஸில்வியா வழியில் வந்துகொண்டிருப்பதைக் கண்டவுடன் தான் வந்திருக்கும் விஷயம் தெரிவிக்க, அவள் புரோட்டியஸினுடைய கடிதம் முழுவதும் பொய்யாயிருப்பதாலும், அந்த மோதிரம் அவனே எத்தனையோ தடவை ஜூலியா தனக்குக் கொடுத்த மோதிரம் என்று சொல்லியிருந்ததாலும், அவ்வளவு உண்மையற்றவனிடம் ஒன்றும் பெற்றுக்கொள்ள மாட்டேனென்று சொல்லிவிட்டு, பிறகு ஜூலியா இன்னாரென்று தெரியாமல் அவளிடமே ஜூலியாவைப்பற்றிக் கேட்டாள். 'அவள் உயரமென்ன? குணமென்ன? அழகென்ன?' என்று கேட்க ஜூலியாவுக்குக் கண்ணீர் ததும்பி ஸில்வியாவுக்கு மனமுருகச் செய்துவிட்டாள். ஸில்வியா ஒரு பை பணங்கொடுத்து பிரியமாய்ப்பேசி அவளை வேலையாளென்றே யெண்ணி யனுப்பிவிட்டாள். ஜூலியாவுக்கு இப்படிநடந்த சம்பாஷணையினின்றும் ஸில்வியாவின் பெருந்தன்மையும் மனநிலைமையும் வாலன்டயினுக்கு இவளிடமுள்ள உண்மையையுந் தெரிந்துகொண்டு அவள் பெருமையைத் தன்னுள் வியந்து, புரோட்டியஸ் அவளிடம் ஒன்றும் ஜெயிக்க முடியாதென்பது கண்டு தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு விடுவந்து சேர்ந்தாள்.

ஸில்வியா தன்வழி தொடர்ந்து அன்றிரவே கோயில் வழியாய் ஸர் எக்லாமூரோடு வாலன்டயினைத் தேடிப்புறப்பட எண்ணி அவரோடு எற்பாட்டின்படியே வெளியேறிவிட்டாள். இது நிற்க, ஸர் தூரியோவும் புரோட்டியஸும், ஸில்வியாவின் நோக்கம் எப்படியிருக்கிறது என்று பேசிக்கொண்டு இனிநடக்கவேண்டிய மற்ற எற்பாடுகளையெல்லாம் யோசித்துப்பார்த்துச் செய்யவேண்டுவன செய்வோமென்று அவள் ஓடிவிட்ட சங்கதி தெரியாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்களிப்படி நிதானமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், பிரபு பதைபதைப்புடன் வந்து "யாராவது எக்லா மூரையாவது என் மகளையாவது கண்டீர்களா?" என்று கேட்டார். ஒருவரும் அவர்களைப் பார்க்காததினாலும், அவர்கள் எங்குந்தென்படாமையாலும் ஓடிப்போய்விட்டார்களென்று தீர்மானித்து உடனே சில ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு காட்டுமார்க்கமாய்ப் போனார்கள்.

இதற்குள், ஸில்வியாவும் எக்லாமூரும் காட்டில் வசித்திருந்த வழிபறிக்காரர்கள் கையிலகப்பட்டு, அவர்கள் உடனே தங்கள் தலைவனான வாலன்டயின் இடம் கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். இதுபற்றியே முன்னமே பெண்கள் யாருக்கும் எவ்விதத் துன்பமும் செய்யக்கூடாது என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தது. ஆனால், அவ்வனம் வந்து கொண்டிருக்கையில் உடனே புரோட்டியஸ் அவளைத் தேடிவந்து அந்த காட்டாள்களை எதிர்த்து ஸில்வியாவைத் தப்புவித்தான். இதுகாரணம்பற்றி வழிநெடுகத் தான் அவளைக் காப்பாற்றினதும் அதற்காக அவள் நன்றியறிவுடையவளா யிருக்கவேண்டியது என்றும் இன்னும் பலவும் சொல்லிக்கொண்டு வாலன்டயின் காட்டிலிருக்கும் வழி வந்தான்.

இதற்குள் வாலன்டயின், சிலகாலமாக இக்காட்டில் தலைமை வகித்து ஆண்டு வந்ததின் நிமித்தமாக அந்த வாழ்வே பிடிபட்டு, மனிதனை ஒரே வழிச்செலுத்தும் வழக்கம் அவனெண்ணங்களை யெல்லாம் அவ்வழி சேர்த்து விடுகிறதல்லவா என்று எண்ணிக்கொண்டே எதிரில் வந்துகொண்டிருந்தான். அவனும் திடீரென்று தன்னெதிரில் ஸில்வியாவும், புரோட்டியஸும் அவர்களோடு உதவியாளாய்வந்த ஸிபாஸ்டியன் என்னும் உண்மையாகப்பெண்ணாயிருந்தஜூலியாவும் வந்துகொண்டிருக்க வாலன்டயினுக்கு முதலில் கனாப்போலவும் பின்பு நேரம் ஆக ஆக, ஆட்களுங்கிட்ட நெருங்க நெருங்க உண்மை புலப்பட்டு, உடனே 'எவனடா அப்பெண்ணைக் கூட்டிக்கொண்டு வருபவ'னென்றான். உடனே எல்லோரும் ஸில்வியா புரோட்டியஸ் வாலன்டயின் என்று தெரிந்துகொண்டார்கள். வாலன்டயின் புரோட்டியஸை தனக்குத்துரோகம் எண்ணித்தனக்கென்றிருந்தவள் மனதைக் கலைக்க முயலுவதைப் படி என புரோட்டியஸ் மிகுதியும் வெட்கி, அதிகத்தாழ்ச்சியுடன் அவளிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டான்.

வாலன்டயினும் மிகுதியுமனமிரங்கி "உனக்கு ஸில்வியாவிடம் அவ்வள வன்பானால் அவளையே மணம்புரிந்துகொள். உன் ஆசையைக் கெடுப்பது சரியல்ல" என்று சொன்னான். இதுவரை பொறுத்திருந்து எல்லாம் மனோ தைர்யமாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஜூலியா, 'இதோ மோசம் வந்ததே' யென்று மூர்ச்சித்து விழுந்து விட்டாள். அவளைத்தேற்றி யெழுப்பினவுடனே அவள் அதை என்னவென்று சொல்லமாட்டாமல், மனதை தைரியப்படுத்திக்கொண்டு 'புரோட்டியஸ் ஸில்வியாவுக்கென்று கொடுத்த மோதிரத்தைக் கொடுக்க மறந்துவிட்டேன். அதுபற்றித்தான்' என்று சொல்லி, தவறுதலாக புரோட்டியஸ் தனக்குக் கொடுத்த மோதிரத்தைக் கொடுத்தாள். பிறகு தான் தவறுதலாகச் செய்ததுகண்டு மற்ற மோதிரத்தையுங் கொடுக்கவே, எல்லோருக்கும் இது ஜூலியாவென்று புலப்பட்டது. புரோட்டியஸ் மறுபடியும் "ஆ! ஜூலியா" என்றான். ஜூலியாவும் "ஆ! புரோட்டியஸ்! இதுசரியா? எத்தனை தடவை நீ வார்த்தை யிரண்டு பேசுகிறாய்? உன்னைத் தேடவல்லவோ இப்படி இழிவான துணியுடுத்து வேலைக்காரன்போல் நானலைந்துகொண்டிருக்கிறேன்?" என்று சொன்னாள். இதற்குள் பிரபுவையும் ஸர் தூரியோவையும் சில காட்டாள்கள் பிடித்துக்கொண்டு வந்து வாலன்டயினிடம் விட்டார்கள். வாலன்டயின், பிரபு சிறைபட்டிருந்தாலும் அவரை மிக்க மரியாதையோடும் வணக்கத்தோடும் நடத்தினான். ஸர் தூரியோ, ஸில்வியாவைக் கண்டவுடன் "இதோ இருக்கிறாள், ஸில்வியா" என்று அவளைப் பிடிக்கப் போனான். வாலன்டயின் அவனைத் தள்ளி நிற்கச்செய்து "அவளைத் தொட்டால் உன்னை இவ்வாளுக்கு இரையாக்குவேன்" என்று சொன்னான்.

தூரியோ: "அப்படி உயிர்கொடுத்து ஒரு பெண்ணை வாங்குபவன் முட்டாளல்லவா?"

பிரபு, "இப்படி ஒரு வார்த்தைக்கு ஒரு பெண்ணை விட்டுப் போகிறவனல்லவா முழு முட்டாள். வாலன்டயின்! நீதான் சரியான மனிதன்; உன்குற்றமத்தனையும் மன்னித்துவிட்டேன். என்பெண்ணை மணம்புரிய நீயே தக்கவன். என் சம்மதத்தை இதோ பெற்றுக்கொள்" என்று சொன்னான். வாலன்டயின் மிகவும் வந்தனம் அளித்து, அந்தக் காட்டில் ஊரினின்று துரத்தப்பட்ட மனிதர்களெல்லாருக்கும் மன்னிப்புப் பெற்று, அவர்களியற்கைக்கேற்க தக்க உத்தியோகங்கொடுத்துப், புரோட்டியஸுக்கும்ஜூலியாவுக்குமுள்ள சங்கதியையு மெடுத்துரைத்து, மிலானுக்குச்சென்று, அதிக ஆடம்பரத்துடனும், மிக்க விமரிசையுடனும் இரண்டு கல்யாணங்களையுஞ் செய்துமுடித்து எல்லோரு மனமகிழ்ந்து நீடித்த காலம் சுகமே வாழ்ந்திருந்தார்கள்.

இனி இக்கதையானது, ஜார்ஜ் டி மான்டிமேயர் என்னும் போர்ச்சுகீஸ் கிரந்தகர்த்தா ஸ்பானிஷ் பாஷையில் எழுதிய லா டையானா இனமோராடா என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. இக்கதையில் அன்பின் மிகுதியால் பெண்ணொருத்தி வேலைக்காரன் வேஷம் போட்டுக்கொள்வதும் தன் காதலன் மற்றொரு பெண்ணை மணம்புரிய எண்ணி, மாறுவேஷம் பூண்ட தன் காதலியையே மற்றவளிடம் அனுப்புவதும், முதலிய விஷயங்களடங்கிய கதைகள் அக்காலத்தி லதிகமாயுண்டு.

இதில் எங்ஙனம் புரோட்டியஸ் காதல் மிகுதியால், அனேகருக்குத் துரோகஞ் செய்கிறானென்பதும், தக்கவாறு மனதை கைவசப்படுத்தி தன்னடக்கையை யொழுங்குபடுத்திவராதவன், எங்ஙனம் தன் மனோ

பலம் நீங்கி பலவிதக் கெடுதி சூழ ஏற்படுகின்றது என்பதுந் தெரிகிறது. அவ்விதமாய் மனோபலத்தை ஒரு வழிப்படுத்தி நின்றவர் ஸர் எக்லாமூர். புரோட்டியஸ் தக்க மனோபலமின்றி, காதலை மேலிட்டு, முதலில் தன் சிநேகிதன் வாலன்டயினுக்குத் துரோகமாயும் பின்பு ஸர் தூரியோவுக்கு விரோதமாயும், மிலான் பிரபுவிடத்து நன்றியறிவில்லாதவனாகவும், அதற்குப் பின்னர் ஜூலியாயிறந்து போய்விட்டாளென்று பொய் சொல்லவும் இடமாயிற்று. இங்ஙனம் ஒருவருக்கெதிராய் ஒரு சூழ்ச்சி சூழ்ந்தது. அதன் தொடர்ச்சியாக மேன்மேலும் மிக்கக் கெடுதியை விளைவித்தது. அத்தீங்கின் அளவு இத்தகையது என்று கடைசியில் அவனுக்கே தெளிவாகத் தெரிந்தபொழுது ஒன்றுஞ் சொல்வதற்கில்லாமல், திகைத்து நின்று, மிகவும் வணக்கமாய் மன்னிப்பு கேட்டுக்கொண்டான். அதுவே அவன் குணம் எவ்வளவு கோணியிருந்தாலும் முற்றிலும் கெட்டுப்போகவில்லையென்பதைக் காட்டும்.

லான்ஸ் என்பவன் அந்த நாய்க்குட்டியை அணிற்பிள்ளைபோன்ற நாய்க்குட்டி என்று சொல்லுவதும் தன் அருமைக் கடா நாயை உயர்வாகப் பேசிக்கொள்வதும், இவனது எஜமானன்புக்கும் தன்னன்புக்கும் ஈடு சொல்வதும் போன்ற அநேக பாகங்கள், கதையினிடையிடையே வேடிக்கை விஷயங்கள் சேர்ந்து கேட்போர் துயரத்தைத் தணிக்கவென்றறியவேண்டியது.

ஜூலியா, எவ்விதக் கஷ்டங்களிலுஞ் சோர்வடையாமல் உண்மையையே மேற்கொண்டு கடைசிவரையில் அன்பின் வைராக்கியஞ்செலுத்தியது, ஷேக்ஸ்பியர், பெண்கள் கற்பையுமுண்மையையும் உயர்வாக எடுத்துச்சொல்வதற்குப் பெரியதோர் அத்தாக்ஷியாகும்.

ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்
(முதல் வால்யூம்)
ஷேக்ஸ்பியர் கவிமாண்பும், பெரும்புயனும்
மிஸ்டர் T.B. கிருஷ்ணஸ்வாமி, எம்.ஏ., பி.எல்.
எழுதியது: அழகிய படத்துடன்
விலை அணா 6
இப்புத்தகம் வேண்டுவோர் 'விவேக போதினி' ஆபீஸ் மானேஜருக்கெழுதிப் பெற்றுக்கொள்க.

சிறுவர்களின் வேவுகார ஏற்பாடு

THE BOY SCOUT SYSTEM

இங்கிலாந்தில் 'ஸ்கௌட்' என்று சொல்லப்படும் வேவுகாரச் சிறுவர்கள், இக்கடும்போர் நடக்கும் சமயத்தில் தேசத்திற்கு பற்பல கைங்கர்யங்கள் செய்து புகழ்பெற்று வந்துகொண்டிருக்கிறார்கள். கொஞ்சகாலத்துக்குமுன், ஒரு கழியைக் கையில் பிடித்துக்கொண்டு படைக் கோலந்தரித்து இவர்கள் உத்ஸாகத்துடன் பவனி செல்லும்பொழுது ஒருவித ஹாஸ்யத்துடன் ஏற இரங்கப்பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் இப்பொழுது இவர்கள் செய்யும் வேலைகள் ப்ரபலமாயிருப்பது கண்டு வெகுவாய் வியந்து கொள்ளுகிறார்கள். இச்சிறுவர்கள் 11வயது முதல் 18வயது வரையில் இருக்கப்பட்டவர்கள்; இவர்களைச்சேர்த்து, சிக்ஷை சொல்லிக்கொடுத்து அநேக ஸத்கார்யங்களில் ப்ரவருத்திக்கச்செய்ய வைத்திருக்கும் ஏற்பாட்டை அரசாங்கத்தார் அங்கீகரித்திருக்கிறார்கள்.

இத்தகைய ஏற்பாட்டின் முக்ய நோக்கம் யாதெனில், பிள்ளைகள், தங்களுக்குத் தானே விஷயங்களை ஊகித்தறிந்து, அவற்றை செவ்வனே செய்வதில் ஒருவித மேன்மையும் சந்தோஷமும் உண்டென விளக்கிக்காட்டுவதே! உதாரணமாய், அவர்கள் தாமே கூடாரம் அடித்துக்கொண்டு அதில் குடியிருக்கவோ, இரவு பகல் எந்த வேளையிலும் எந்தவிடத்திலும் வழி கண்டுபிடிக்கவோ, தத்தமுணவைத் தாமே சமையல்செய்துகொள்ளவோ, இயற்கையற்புதங்களை ஆராய்ந்தறியவோ, தத்தளித்துக்கொண்டிருக்கும் ஜீவன்களைக் காக்கவோ, அல்லது வேறுவித நற்செய்கைகள் ஒரு நாளைக்கு ஒன்றாகிலும் செய்யவேண்டுமென்ற தீர்மானத்துடன் அதற்குவேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டாக்கிக்கொள்ளவோ, இவையெவற்றையும் பிறர் சகாயமின்றித் தாமே செய்துகொள்வார்கள்.

இவ்வேற்பாட்டை இப்பொழுதிருக்கும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தவர் ஜெனரல் ஸர் ராபர்ட் பேடன் பாவெல் என்பவர். அவரது பால்ய ப்ராயத்தில் ஒரு ஸ்கௌட்டுக்கு வேண்டிய கார்யங்களில் அவர் ப்ரவ்ருத்திக்கும்பொழுது அவருடைய பெற்றோர்கள் அவரை அந்தவழியில் பயில உத்ஸாகப்படுத்தி வந்தனர். அவர் பள்ளியில் படிக்கும்பொழுது விளையாட்டு விஷயங்களிலும் நிரம்ப ஒழுங்கா யிருந்தாரென்றும், அவரை எவரும் வெல்ல முடியாதென்ற க்யாதி பெற்றிருந்தாரென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். எப்பொழுதும் பரபரப்புடனில்லாமல் வெகு அமைதியா யிருந்து தன் காரியத்தை ஜெயிக்க அவர் வல்லவராம்; படிப்பு, பரீக்ஷை முதலானவைகளில் அநேக தேசங்களைப்பற்றிக் கற்றுக்கொண்ட விஷயங்களைப் படங்களில் போட்டுக் காட்டுவாராம்; தவிர, எச்சமயத்திலும் எவ்வித நற்கார்யத்துக்கும் முன்வந்து உதவிசெய்ய ஆயத்தமாயிருப்பாராம்.

இப்பொழுது, அமெரிக்காவில் 3,50,000 ஸ்கௌட்களுக்கு மேலிருக்கிறார்களென்று கேட்க அநேகர் அதிசயப்படலாம்! இவர்கள் ஒரு சட்டத்தைப் பின்பற்றி நடந்துகொள்ளுகிறார்கள். அதாவது, "ஒரு சிறுவன் எல்லாவிதத்திலும் சுத்தமுள்ளவனாயிருக்கவேண்டும்; உடம்பை அழுக்கின்றி வைத்துக் கொள்ள வேண்டும்; நல்ல எண்ணங்கள் கொண்டவனாயிருக்கவேண்டும்; தேகப் பயிற்சியில் உத்தமமான முறைகளைத் தழுவவேண்டும்; சுத்தமான உடைகளையே தரிக்கவேண்டும்; நல்ல ஸமூகங்களின் ஸகவாஸத்தையே நாடவேண்டும்." அதனால் கை நகங்களை அழுக்கில்லாமல் வைத்துக்கொள்வதிலும், பற்களை வெண்மையாய்த் துலக்குவதிலும், தலைமயிரைச் செம்மைப்படுத்திக்கொள்வதிலும் இதரப் பிள்ளைகளைவிட இவர்கள் கருத்துள்ளவர்களாயிருப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம்! இங்குள்ள ஸ்கௌட்களின் தலைவர்களுடைய நோக்கம் நல்ல எண்ணங்கள் உண்டாக தேகசவுக்கியம் இன்றியமையாததென்பதும், பிள்ளைகளுக்குள் சகோதர பாவமுண்டாவதற்கும், நற்குணங்கள் தினே தினே வ்ருத்தியடைய வேண்டியதற்கும் அவர்கள் பலவித விளையாட்டுகளில் புக விடப்படவேண்டும் என்பதுமே!

இப்பொழுது இங்கிலாந்தில் 1400 பிள்ளைகளுக்குமேல் ஜனங்களுக்கும், ராஜாங்கத்தாருக்கும் சகாயமாய்க் கடற்கரைப் பாதுகாப்புக்கு வேண்டிய சிலவேலைகளைச் செய்வதாய் முன்வந்திருக்கிறார்கள். அநேகர் ரயில்வேப் பாலங்களிலும், தந்திமார்க்கங்களிலும் காவலாளிகளாய் வைக்கப்பட்டிருக்கிறார்கள். போலீஸாரும் இச்சிறுவர்களில் பலபேரைத் தங்களுக்குள் போலீஸ் விஷயமாய் அமர்த்திக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி அமர்ந்திருப்பவர்களில் லண்டன் நகரில்மட்டும் 2000-க்கு அதிகமுண்டு. கப்பற்படை, தரைப்படை விஷயங்களை விசாரித்துத் தெரியப்படுத்துகிற ஆபீஸ்களில் (Admiralty and War Offices) இப்பையன்களுடைய உதவியைக்கோரி அவர்களை ஏவலாட்களாய் நியமித்திருக்கிறார்கள். இன்னும், ஆஸ்பத்திரி முதலான விடங்களிலும் நோயாளிகளுக்குச் சிகித்ஸைசெய்ய தம்மாலான ஸகாயத்தை இவர்கள் செய்து வருகிறார்கள். இவ்வாறு நாட்டின் க்ஷேமத்திற்காக உழைப்பதுகண்டு இதரப்பிள்ளைகளும் இந்த ஏற்பாட்டில்சேர ஆவல் கொள்ளுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட வேலைகளுக்குத் தகுந்தவர்களாயிருக்க அவர்கள் கற்கவேண்டிய விஷயங்களும், தேறவேண்டிய பரீக்ஷைகளும் பல உள. ஸ்கௌட் சட்டம், அடையாளங்கள், ஸலாம்செய்யும் விதிகள், 'யூனியன் ஜாக்' என்ற ப்ரிட்டிஷ் கொடியின் வர்ண அமைப்புகள், அதை நாட்டிப் பறக்கவிடும் வகை, இன்னும் மரக்கலங்களிலுள்ள கயிறுகளில் அநேகவித முடிச்சுகள் போடும் விஷயங்கள், இவை தீர்மானமாய்த் தனக்குத் தெரியுமென்று, கற்பிக்கும் வித்வானிடத்தில் அவர்கள் ருசுப்படுத்தவேண்டும்.

இந்தக் கோஷ்டியை ஒருவன் சேர்ந்ததும் அவன் மூன்று விஷயங்கள் உறுதியாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதாக வாக்களிக்கிறான். (1) ஈசனுக்கும் அரசனுக்கும் செய்யவேண்டிய என்கடமைகளை சரிவரச் செய்வேன் (2) இதர ஜனங்களுக்கு எச்சமயத்திலும் இயன்ற உதவி செய்வேன் (3) ஸ்கௌட் சட்டத்தை யனுசரிப்பேன். இந்தச் சட்டத்திற்குப் பத்துத் தலைப்பெயர் கொண்ட விஷயங்கள் பின்வருமாறு:—

(1)நம்பக்கூடியதான யோக்யத்தன்மை, (2) அரசன், அதிகாரிகள், பெற்றோர்கள், குரு இவர்களுக்கு த்ரோகம் நினைக்காமலிருத்தல், (3) உதாரகுணம் பொருந்தியிருத்தல், (4) கௌரவக் குறைச்சலான கார்யம் செய்யாதிருத்தல், (5) ஜீவஹிம்ஸையைத் தடுத்தல், (6) எதிர்த்துப் பேசாமல், பெற்றோர் ஆசிரியர் இவர்களுடைய ஆக்ஞைக்குக் கீழ்ப்படிதல், (7) அதிகச் செலவு செய்யாதிருத்தல், (8) மனம், வாக்கு, காயம் இவைகளில் பரிசுத்தமாயிருத்தல்,(9) எந்தச் சந்தர்ப்பத்திலும் சிரித்த முகத்துடனிருத்தல், (10) தன்னோடிருக்கும் இதரப்பிள்ளைகள் எந்த ஜாதிவகுப்பினராயினும் அவர்களோடு ஒத்திருந்து ஸகோதரத்வம் பாராட்டுதல்.

இவ்விஷயங்களில் தேர்ச்சி யடைந்ததும் ஸ்கௌட்டில் இரண்டாவது வகுப்பினராவதற்கு (II Class Scout) ஒரு பரீக்ஷையில் தேறவேண்டும். பிறகு,ஏதோ சில அடையாளங்களால் சமாசாரங்கள் அனுப்பவும், பெறவும், சாதாரணமான சமையல் செய்யவும், படங்கள் வரையவும் கற்றுக்கொண்டு, பரீக்ஷையொன்றில் தேறி, முதல் வகுப்பினராகவேண்டும் (I Class Scout). இன்னும் அவர்களுடைய வேலைகள், காயமடைந்தவர்களுக்கு ஸகாயம் செய்வது, தச்சுவேலை, மின்சாரவேலை, குறிபார்த்துச் சுடுவது, சுரங்கவேலை, அச்சிடுதல், போடோ படங்கள் தயாரிப்பது, நீந்துவது, வான சாஸ்த்ர ஆராய்ச்சி, தையல்வேலை, வேட்டையாடுவது முதலியன.

இந்தியாவில் 1908-ம் ௵ 'கார்கி' என்றவிடத்தில் காப்டின் டாட் என்பவர் இவ்வித கோஷ்டி யொன்று தயாரித்தார். பிறகு இவர் பம்பாய் ராஜதானியில் இம்மாதிரியான ஒரு கோஷ்டிக்குச் சிட்சகராகவும், காரியதரிசியாகவும், பேடன் பாவெல் என்பவரால் நியமிக்கப்பட்டு அநேக பட்டங்கள் பெற்றிருக்கிறார்.

ஏறக்குறைய இத்தகைய சட்டத்தை ஒட்டியே சிறுமிகளுக்காகவும் ஒரு ஏற்பாடு லண்டனில் நடந்துவருகிறது. லேடி பாவெல் என்பவரும் அவருடைய மகளும் இதில் முன்னின்று பாடுபட்டு வருகிறார்கள்.

தேச சரித்ரமும், இயற்கை யமைப்பும்

HISTORY AND PHYSICAL ASPECTS OF A COUNTRY

ஒரு நாட்டின் சரித்ரமானது அந்நாட்டு ஜனங்களின் குணகுணங்களையும், அவர்கள் வேற்று தேசங்களோடு செய்யும் ஸம்பந்தத்தையும், தேச கால நிலைமையையும்,அத்தேச இயற்கை யமைப்பையும் பொருத்திருக்கின்றது. இவைகளில் முதற் கூறியவைகளெல்லாம், 'இயற்கை யமைப்பு' என்னும் பகுதியால் அதிகமாக வேறுபாடடைகின்றதனால், இவ்வியாஸத்தில் இதைப் பற்றி விவரிப்போம்.

ஒரு தேசத்தின் சீதோஷ்ணஸ்திதி, அத்தேசமிருக்கும் மண்டலத்திற்குத் தகுந்தபடி மாறுதலடைகின்றது. சீதமண்லத்திலுள்ள ஜாதியார்கள் உஷ்ணமண்டலத்திலுள்ளவர்களைவிட சுறுசுறுப்பாயும், அழகியவர்களாகவுமிருக்கின்றனர்.இந்தச்சீதோஷ்ண ஸ்திதியானது, ஜனப் பெருக்கம் முதலிய வேறு காரணங்களோடுகூடி, ஒரு நாட்டாரை மற்றொரு தேசத்தை நாடிச்செல்லச் செய்கின்றது. உஷ்ண மண்டலத்திலிருக்கும் இந்திய ஆர்யர்கள், குளிர்ப்ரதேசத்தில் வாழ்ந்துவந்த தம் முன்னோரைக் காட்டிலும் பலங் குன்றினவர்கள் என்று நாம் சரித்ராசிரியர்கள் கூறுவதை யறிவோம். மற்றும் ஒரு தேசம் சீதமண்டலத்திலிருந்தபோதிலும், (ஜப்பான், நார்வே, இங்கிலாந்து) ஸமுத்ர நீரோட்டங்களினால் அது உஷ்ணமடைதலும் உண்டு. குளிர் தேசத்திலிருப்பவன் தான் குளிரினால் விறைத்துப் போகாமலிருக்கச் சுறுசுறுப்பா யிருக்க வேண்டிவருகிறது. அவன் பனி முதலியவைகளுக்கு ஈடுகொடுத்து வருவதால் நல்ல திடம் பெற்றிருக்கிறான். ஆனால் உஷ்ணப்ரதேசங்களிலோ நல்ல மழைபொழிய, ஜீவனத்திற்குக் கஷ்டமில்லை. தீவிரமான ஸூர்யனது வெப்பம் மனிதனை ஒன்றுஞ்செய்ய விடுவதில்லை. கணுக்காணும் கிழக்கு எனப்பெயர் கொண்டது பெர்ஷியாவும் நம் தேசமுமே.

மற்றும், ஒரு தேசம் உள்நாடா, கடலோரத்திலுள்ளதா அல்லது ஒரு தீவா என்றறிதல் முக்யமானது. இவை ஒவ்வொன்றிற்கும் தகுந்தபடி சரித்ரத்திலும் அங்குள்ள ஜனங்களிடத்தும் மாறுபாடுகளுண்டாகின்றன.

உள்நாட்டிலுள்ள ஜனங்கள் தம் அயலாருடைய நடவடிக்கைகளைநன்கறிதல் அவசியம். மற்ற ஜாதியாரோடு தன்பிழைப்பிற்கே (உயிருக்கே) சண்டை செய்வது அவசியமாகலாம். இந்தமாதிரிச் சண்டைசெய்வதில் எது சிறந்து முன் வருகிறதோ, அது மற்ற நாடுகளின்மீது படையெடுக்கமுடியும். ஜர்மனியின் முக்ய மாகாணமாகும் ப்ருஷ்யாவே இதற்கேற்ற நிதர்சனம்.

கடற்கரையோரம் இருக்கும் நாட்டார், கடல்மீது வ்யாபாரஞ் செய்யவும், உள் நாட்டில் வ்யாபாரஞ் செய்யவும் கூடும். பற்பல தேசங்களோடு கூட்டுறவு உண்டாவதால், பழக்கமும் நாகரீகமும், நடையுடை பாவனைகளும் மாறும். தீவாயிருப்பின் அது சில விஷயங்களில் மிகவும் சிறந்திருக்கும். இங்கிலாந்தின் சரித்திர மெழுதும் நூலாசிரியர்கள், அத்தேசம் முன்வந்தது அதன் அமைப்பினாலும் தீவா யிருப்பதனாலும் என்று கூறுகின்றனர். பிறதேசங்களிலிருந்து படையெடுப்பதா யிருப்பின், கடலைக் கடந்து செல்லவேண்டும்.தீவிலுள்ளவர்களுக்குக் கப்பற் பழக்கமிருக்குமாதலின் படையெடுப்போரை ஸுலபமாகத் தோற்கடிக்கலாம். நெபோலியனது காலத்தில் இங்கிலாந்தை அவன் படையெழுச்சியினின்றும் ஆளுகையினின்றும் காத்தது, தேசத்தின் அமைப்பு(தீவாயிருத்தல்)ம் கப்பற் படையின் வன்மையுமெனக் கூறுவர். தீவிலிருப்பதால் மற்ற ஜாதியார்களுடைய பழக்கம் படிவது கொஞ்சம் கஷ்டமாகின்றது. ஆனால் மாலுமித் தொழில் அபிவிருத்தியாகவாக, போக்கு வரவும் வழக்கங்களும் ஸாதாரணமாகிவிட்டன.

எந்த தேசத்திற்குக் கப்பற்படை சிறந்ததோ அதுவே வெற்றிபெறும் என்பது தற்காலவாக்கு.இக்கப்பற் படைக்குத் தங்க இடமும், நிர்மாணிக்கத் துறைமுகங்களும் அவசியமாகின்றன. ஒரு நாட்டின் கடலோரமானது அடிக்கடி வெகு தூரம் உட்சென்று இருக்குமாயின் அது மிகவும் நல்லதென்று கற்றோர் கூறுவர். இதனாலேயே இங்கிலாந்து, க்ரீஸ், நார்வே முதலிய நாடுகள் வெகு காலந் தொடங்கி சிறந்த மாலுமிகளை யடைந்திருக்கின்றன. பாரதவர்ஷத்தின் கடற்கரையோரம் இம்மாதிரியில்லாதது மிகவும் வ்யஸனிக்கத்தக்கது என்று சிலநிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் பண்டைக்காலத்தில் நம் நாட்டார் அரேபியா தேசம் முதல் சீனா, ஜாவா முதலிய இடங்களுடன் வாணிபஞ்செய்து 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று கூறும்படியான நிலைமையிலிருந்தனர். இதற்குக் காரணம், நம் நாடு இந்து ஸமுத்ரத்திற்குள் பாய்ந்து அரேபியா, ஜாவா முதலிய இடங்களிற்கு நடுவிலிருப்பதேயாம். இந்த நிலைமையே இடாலி தேசத்தாலும், க்ரீஸ் தேசத்தாலும் அடையப் பெற்றிருக்கிறது. தனித்திருக்கும் தீவானது ஜனங்களுக்கு நாலாபக்கங்களிலும் செல்ல வசதியளிப்பதால், கப்பற்படையடைந்து, பிறதேசங்களினின்று சத்ரு பயமில்லாததாய் இருக்கிறது. ஆனால் தீவு எவ்வளவு பெரியதாயிருந்தபோதிலும், ப்ரஜைகள் தினே தினே வ்ருத்தியடைந்து, வேறு தேசங்களுக்குக் குடியேறும்படியாய் நேரும். (உ - ம்) இங்கிலாந்து.

இனி நாட்டினுட் பிரிவுகளைப்பற்றிக் கூறுவோம். முதலாவது, மலைகளுக்கும் ஒரு நாட்டின் சரித்ரத்திற்கு முள்ள ஸம்பந்தத்தை ஆராய்வோம். முக்கியமாக நம் நாட்டின் வடக்கேயுள்ள ஹிமாசல மலைத்தொடர் வடக்கே ஆர்க்டிக் மஹா ஸமுத்ரத்திலிருந்து வீசும் குளிர்காற்றைத் தடுக்கின்றது. திபேத் முதலிய நாடுகளிலிருந்து வேறு ஜாதியார் படையெடுக்க முடியாதபடி காக்கின்றது. இவ்விமய மலையைக் கடந்துசெல்ல முயன்ற,முஹம்மது டௌக்லாக்கின் சேனையில் பலர் குளிரினால் மாண்டனர். மற்றும் மலைகள், சிறந்த நதிகள் பலவற்றிற்கு உற்பத்தி ஸ்தானங்களாகி, வருஷ முழுவதும் நீர்பாயச்செய்து ஜனங்களுக்கு நன்மை பயக்கின்றன. இம்மலைகளின்மீது வசிக்கும் ஜாதியார் சுறு சுறுப்பும், தைர்யமும் வாய்ந்தவர்கள். இடாலிக்கு வடக்கேயுள்ள ஆல்ப்ஸ் மலைகளும் இவ்வாறே மானிடர்க்கு உதவிசெய்கின்றன. ஸ்விட்ஜர்லந்து நாட்டார் தாங்கள் ஸ்வய ஆட்சி செய்வதும்,

மஹாராஷ்ட்ர தேசத்தில் முக்யமாய் ஸிவாஜியின்கீழ் அந்நாட்டுவீரர்கள் தீரச்செயல்கள் செய்ததும் மலைகளில் வசித்ததினாலேயே.

மற்றும், அடர்ந்த மலைகளும் குன்றுகளும் ஒரு தேசத்துச் சரித்திரத்தைப் பெரிதும் தன் வழிச் செலுத்துகின்றன. க்ரீஸ் தேசத்திலிருந்த நாடுகள் மிகச் சிறியவைகள்; அதனாலேயே அவை நகர ராஜ்யங்கள் என அழைக்கப்பட்டன. மலைகளிருப்பதால் ஊருக்கு ஊர் செல்வது கஷ்டமாயிற்று. அதனால் தனிப் பழக்கமும், தனித்திருக்க ஆசையும், யாவரும் ஒன்றுகூடி ஒரு கார்யத்தை முடிப்பதை அரிதாக்கின; அப்படி அவர்கள் கூடினும் சீக்ரம் பிரிந்து விடுவர். இது க்ரீஸ் தேசத்தின்மேல் பாரஸீக அரசர்கள் படையெடுத்தபோது நாம் காண்பதாகும். மொகலாய அரசர்கள் தக்ஷிணத்தைக் கைப்பற்றாதது தக்ஷிணத்திற்கும் மத்ய இந்தியாவிற்கும் நடுவிலுள்ள வனங்களும் குன்றுகளுமே. ஒரு தேசமீது படையெடுத்து வந்தவர்கள் ஸமவெளியையும் செழித்த நிலங்களையும் கைக்கொள்ள, முன்னிருந்தோர் தம்முயிரைக் காப்பாற்றக் குன்றுகளையடைந்தனர். இப்பேர்ப் பட்டவர்களின் ஸந்ததியார்களே தோடர்களும், நாகர்களும். ஒரு தேசத்தின் பரப்பிற்கு மலைகள் எல்லைகளாகவு மிருக்கின்றன. (உ-ம். ஹிமயமலை).

இனி யாறுகள் தேசத்தைத் தமது வெள்ளப் பெருக்கில் கொண்டுவரும் சேற்றினாலும், எல்லாப் பருவங்களிலும் பாயும் நீரினாலும் செழிக்கச் செய்கின்றன. கால் வயிறு அன்னம்கிடைக்கக் கஷ்டப்படும் தார்த்தாரியன், இந்தியாவில் இயற்கையினாலேயே தன் கார்யம் ஸித்திக்கப் பெற்றால், பின், அவன் ஆனந்தத்திற் களவுண்டா? பாதைகளேற்படாத காலத்தில் படகுகளினாலும் தோணிகளினாலும் போக்கு வரவு நடைபெற்று வந்தது. இதனாலே நம் தேசத்தில் முக்யபட்டணங்கள் நதி தீரங்களில் ஸ்தாபிக்கப்பட்டன; எகிப்தில் கைரோ, நைல்தீரத்திலும், இங்கிலாந்தில் தெம்ஸ் தீரத்தில் லண்டன் மாநகரும், ப்ரான்ஸில் பாரிஸ், ஸேன் நதிக்கரையிலு முளது. மற்றும் முற்காலத்திய அரசர்களுக்கு நதி தம் தேசத்தின் எல்லையாகவுமிருந்தது. ப்ரஞ்சு அரசர்கள் தம் தேசத்தை ரைன் நதிக்கரை வரைக்கும் பரவ மிகவும் பாடுபட்டனர். நதிஸமுத்ரத்தோடு ஸங்கமாவதால் வேற்றுதேச வ்யாபாரத்திற்கு மிகவும் உபயோகமாகின்றது. மற்றும் ஸ்நானம் முதலிய கர்மாதிகள் அநுஷ்டித்துவந்த ஹிந்துக்களைப்போன்ற ஜாதியாருக்கு நதிகள் அவச்யமாகின்றன. இது 'ஆறில்லா ஊருக்கழகுபாழ்' என்னும் பழமொழியை விளக்கும்.

முற்கூறியபடி நிலத்தின்வளமையும், ஜனங்களது குணத்தைப் பாதிக்கின்றது. இவைகளெல்லாஞ் சேர்ந்து, ஒரு ஜனஸமூகத்தின் ஜீவியத்தைப் பரிணமிக்கின்றது. தேசத்தின் இயற்கையமைப்பால் மழைபெய்தலும் இல்லாமையும் கூடும். ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள ஸஹாராப் பாலைவனத்தில் மழை பெய்வதில்லை; ஆயினும் நடுவிலிருக்கும் அழகிய பசும் புற்றரைகளில் கூடாரமடித்து நிற்கும் ஜாதியாரை ஒன்றுசேர்க்கக்கூடிய தொன்று மில்லை. ஆனால் அவர்களையே மஹம்மது ஒருமதத்தினராக்கினார். குளிர்ந்த துருக்கி ஸ்தானத்திலுள்ள வீரர்களைக் கூட்டித் தைமூரும்அவன் ஸந்ததியாரும் உஷ்ணமதிகமான நாடுகளை ஸுலபமாக ஜயித்தனர். ஐரோப்பாவிலும் வடக்கேயுள்ள ஜர்மன் நாட்டார், அலாரிக் முதலியவர்களின் கீழ் இடாலி முதலியவற்றைத் தாக்கினர்.

நல்லதிர்ஷ்டத்தால் வ்யாபாரஞ்செய்யத் தகுந்த இடத்திலுள்ள இங்கிலாந்து, வ்யாபார விருத்திக்கு இன்றியமையாத இரும்புக்கனிகளையும், நிலக்கரிச் சுரங்கங்களையும் அடைந்துளது; விலையுயர்ந்த பொன்னும் வெள்ளியும் நிறைந்த பெரூ, மெக்ஸிகோ முதலிய தென் அமெரிக்க நாடுகள், பொன்னாசை மிகுந்த ஸ்பானியர்களுக்கு இரையாகி, நிலைகுலைந்தன. ஆனால் இங்கிலாந்தோ பிறர் எதிர்க்காது வாழ்ந்து வந்ததினால் வ்ருத்தியடைந்தது. ஆனால் தேச இயற்கை அமைப்பே ஒரு நாட்டைச் சிறந்ததாக்க முடியாது என்பதைக் காட்டவே ஜர்மனி முன்னுக்கு வந்தது.

ஆஸ்திரேலியாவின் தற்கால நிலைமை இயற்கை அமைப்பினால் தேசசரித்ரம் எவ்விதம் மாறுமெனத் தெளிவாக விளக்குகின்றது: ஜாவா முதலிய தீவுகளிலிருக்கும் கறுநிறமுள்ள ஜாதியார்களால் ஸஞ்சரிக்கப்பட்ட இவ்விடத்திற்கு முதலில் டச்சுக்காரர்களும் பிறகு ஆங்கிலேயர்களுள் டாம்பியரென்னும் மாலுமியும் வந்தனர். பிறகு கொஞ்சகாலத்தில் ஆங்கிலேயர்குடியேறத்தலைப்பட்டனர். சீதோஷ்ணமும், வெள்ளையருக்கு ஒத்திருந்தமையால் ஜனத்தொகையும் அதிகரித்தது. ஸ்வதேசிகளும் வரவரக்குறையவாரம்பித்தனர். போதாக்குறைக்குப் பொன் சுரங்கங்களுமகப்பட, "ஆஸ்ட்ரேலியப் பொன் சுரங்கஜ்வரம்" பரவ ஆரம்பித்தது. புற்றரைகள்செழிப்பாயிருக்கவே, ஆடுமேய்த்தலும் குதிரைவளர்த்தலு முக்யத் தொழில்களாயின: எல்லாம் சேர்ந்து, ஆஸ்ட்ரேலியா, ஆங்கில ராஜ்யங்களில் ஸ்வயாதிபத்யம்பெற்ற நாடுகளி லொன்றாய் விளங்குகிறது; ஆயினும்ஆஸ்ட்ரேலியாவின் நடுப்ரதேசத்திலுள்ள பாலைவனங்களில் ஆங்கிலேயர் குடியேறாதது, சீதோஷ்ணஸ்திதிஐரோப்பியர்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லையென்பதை விளக்குகிறது.

ஒரு தேசத்தின் இயற்கையமைப்பு பூமியின் சிருஷ்டிகாலந் தொடங்கி ஒரே மாதிரியாக இருந்ததென்று கூறுவது தவறாகும். பூமியின் மத்தியிலிருக்கும் அக்கினியின் பலத்தாலும், பூகம்பம் முதலியவைகளாலும், பூமியின் சிற்சில பாகங்கள் உயர்ந்தும் மற்றும் சில ப்ரதேசங்கள் தரை மட்டத்திற்குக் கீழும் தாழ்ந்து விடுகின்றன.

உதாரணமாக ஸஹாராப் பாலைவனமானது பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு ஒரு பெரிய கடலின் அடிப்பாகமாயிருந்தது எனக் கூறுவர் பூதத்வ சாஸ்திரிகள். நம் தேசத்திலும் ஹிமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடுவிலுள்ள ஸிந்து கங்கை ஸமவெளியானது கடலாக விருந்ததாம். ஆனால் மலையிலிருந்து பாறைகள் மழையினாலும் வெயில் முதலியவற்றாலும் பொடியாகி கடலில் விழுந்து ஸமவெளியாக்கின. கங்கை ஸங்கமாகும் இடத்திலிருந்து மேற்கே வெகுதூரம் வரைக்குமுள்ள நிலமானது ஸுமார் 500-அடி ஆழத்திற்கு நல்லமண்ணாயிருக்கிறதேயொழிய, கற்களாவது பாறைகளாவது இல்லையென்று சொல்லப்படுகிறது.

உலக ஸம்பவங்கள்
How the World moves

இம்மாதம் யுத்த ஸமாசாரம் ஒருவித மந்த நிலையிலிருப்பதாகத்தான் தெரிய வருகிறது. உக்ரமாகப்போர் நடப்பினும், லக்ஷ்யமின்னதெனப் புலப்படாமலே நடந்து வருகிறது.

மேலரங்கத்தில் இந்நான்கு வாரங்களாக வெர்டன்என்னுமிடத்தை தாக்குவதிலேயே ஜர்மானியப்படை உபயோகிக்கப்படுகிறது. கணக்கற்ற வீரர்களை அக்களத்தில் அவர் பலியிட்டது இட்டவண்ணமாகவே யிருக்கின்றனர். அவர் இவ்விடத்தை ஜனச்சேதத்தைக் கவனிக்காது தாக்குவதற்கு முக்ய காரண மெதுவோ? கிழக்கில் யுத்த ஸந்நதத்திலில்லாத ருஷ்யரைத்தாக்கி யவர் வரவர முன்போல் பின் வாங்கினால் தமக்குப் பெருமையும், தீர்க்ககார்யமும், பலனுங் கைகூடா தென்ற எண்ண மிருக்கலாம். அல்லது ஒரே மூச்சாக வெர்டன் கோட்டையைப்பிடித்தால் பிரஞ்ச்பலம் குறையும் என்றும், அவர் தமது வீரரைத் தற்காலம் யுத்தத்திற்குக்கொண்டுவர நேருமென்றும், பின் வெர்டன்கோட்டையைப்பிடித்ததும் பிரஞ்ச் நாட்டுத்தலைநகராகிய பாரிஸ்ஸைத் தகர்த்து விட்டால் அந்நாடு ஸமாதானத்திற்கு வர நேரலாமென்றும், நினைத்துச் செய்திருக்கலாம். ஆனால் நமது நேசத்துருப்புகள் முன் அநுபவங்களை முன்னிட்டு தமது ஜாக்ரத நிலையைத் தவறாது காப்பாற்றியதால் ஜர்ம

னியின் ஜபம் சாயாமலிருக்கிறது போலும்! லக்ஷக்கணக்கான வீரரைப் பலிகொடுத்தும் இன்னும் ஜர்மனி தனது மனோபீஷ்டத்தைப் பெற்றபாடில்லை.

ஜர்மனிக்குள் ஜனங்கள் உண்மை நிலையை உணர்ந்ததாகத் தெரியவருகிறது. அவர்கண்களில் மண்தூவுதற்காகி ஜர்மானிய ராஜாங்கம் தாம் பல யிடங்களில் ஜெயம் கொண்டதாகப் பிரசுரித்தும், நேசத்துருப்புகளின் நஷ்டத்தைப் பலமடங்காகக்காட்டியும் வருகிறது. ஜர்மனிக்குப் பலவித தொந்தரை: நேசத்துருப்பால் ஜர்மானிய நீர் முற்றுகையிடப் பட்டதனால் அதன் வியாபாரம் முழுதும் வேரோடொழிந்தது; அதன்செல்வமும் பலவிதமாக இறைந்துபோனதை ராஜாங்கத்தார் எவ்வளவு நயமாக வெளிக்காட்டாது மூடினும் ஜனங்கள் உணராமல்போகவில்லை; வீரர்களின் நஷ்டமோ கணக்கிலடங்காது; பண வருவாய்க்கோ வழியேயில்லை. இவை முதலான கஷ்டங்களால் ஜர்மனி கடைசியாக ஒரு மூச்சுப்பிடித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு வெர்டன் கோட்டையைத் தகர்க்க ஆரம்பித்ததே யாகும். அவ்வாறு அது எண்ணிய வண்ணம் ஆயினும் பிரஞ்சுத்துருப்பிற்கும்,ஜர்மானியத்துருப்பிற் குண்டான நஷ்ட முண்டானாலன்றி ஜர்மனி ஒரு பலனையுங் கண்டதாகாது; அவர் காரியம் ஸமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம்போல் மணமற்று நிற்கும். ஆனால் அவரது லக்ஷ்யமெதுவோ தெரியவில்லை.

கிழக்கரங்கத்தில் என்னநடக்கிறதென்று நன்றாகத்தெரியவில்லை. இது ஏதோபிரமாத காரியத்திற்கே அறிகுறியாகும். ருஷ்ய சேனை ட்ரெபிஜாண்டை நாடிச் செல்கின்றது. கர்மான்ஷா என்னுமிடத்திலிருந்தும் சேனைகள் பாக்டாட் என்னும்அரண்தலத்தைச் சுற்றிலும் நாடிப் பரவிக்கொண்டிருக்கின்றன. மெஸபொடேமியாவிலும் இங்கிலீஷ் துருப்புகள் நெருங்கிக்கொண்டே யிருக்கின்றன. இஜிப்ட் நாட்டின் கிழக்கிலும் துருக்கர் தமது பொருள் யாவும் தத்தஞ்செய்துவிட்டு வெங்கிட்டனர். துருக்கி சைன்யம் அம்முனையிலிருந்து 150 மைல்தூரம் அப்பாலோடும்படித் துரத்தப்பட்டது.

நடுவரங்கத்திலிருந்து ஜர்மானியர் சேனையை மேலரங்கத்திற்குக்கொண்டுவர முயன்றனர். ஆஸ்ட்ரியர் தனியாக இடலியுடன் இஸ்ஸான்ஸோ மேட்டில் எதிர்க்கின்றனர். பல்கேரியா யுத்த ஸந்நாகத்துடன் தன் கூண்டுள்ளேயே கிடக்கின்றது; ருமேனியா தன்னையெங்கு தாக்குமோ என்று அது இவ்வாறு செய்தது போலும்! ஸலோனிகாவில் அரண் கொண்டு நமது ஸேனை விளங்குவதும் அதற்குத் தலைவலிதான்.

நிற்க, ஜர்மானியப் பெருங்கடற்படையை ஒழுங்குபடுத்தி யதன் தலைவராகியிருந்த வான் டர்பிட்ஜ் என்பவர் தமக்கும் ராஜாங்கத்திற்கும் ஒற்றுக்கொள்ளாமையால்,தமது வேலையை ராஜிநாமாக் கொடுத்து விட்டார். மற்றுக் குழந்தைகள், அபலைகள், போரில் ஸம்பந்தப்படாதவர் ஆகிய இவர்களைக் கொலை செய்தலாகிய ஸப்மெரீன் போரும் பலங்குறையாமல் வேகத்துடனே நடந்து வருகிறது.

***

ஸர் சங்கரன்நாயர் இந்திய கவர்ன்மெண்டின் வித்யா இலாகா தலைமையைவஹித்ததும் வெளியிட்ட பெண்கல்வியைப்பற்றிய ஸர்குலர் கடிதம், ஷை கல்வியானது பெண்களுக்கு வேண்டியவிதமிருக்கவேண்டுமென்றும், ஷை விஷயம் பள்ளிக்கூடத்தலைவர்கள் விருப்பத்திற்கும் இசைய ஏற்படுத்த வேண்டுமென்றும், மற்று இந்தியப் பெண்களுடைய நிலைக்கு ஏற்ற விதமும், அவர் பெற்றோர்களால் ஒப்புக்கொள்ளும்படியான விதமும் படிப்பித்தலே நியாயமென்றும், அவ்வாறு செய்யாவிடில் பெண் கல்வி விருத்திக்கு ஏற்றக்குறையுண்டாகும் என்றும் வெளியிடுகிறது. இவ்வுரைகள் மிக உயர்ந்தன என்று எல்லோராலும் கொண்டாடப்படும் அல்லவா? நமது பட்டணத்தில் பெண்களுக்குப் படிப்பு,அவர்களுடைய பெற்றோர் இஷ்டத்திற்கு மாறாக இங்கிலீஷ் மூலமாகச் சொல்லித்தர வேண்டியதென்று கட்டாயப்படுத்தும் நமது கல்வி யிலாகாத் தலைவர்கள் மேற்சொன்ன மொழிகளிடம் தமது கவனத்தைச் செலுத்திப் படித்து, ஆழ்ந்து, தமது எண்ணத்தை மாற்றுவரன்றோ? இருக்க இருக்க எல்லாம் இசைவாகுமல்லவா?

“ஒன்றுந்தெரியாத இங்கிலீஷ் வைத்யனிடம் மருந்துகொள்வதிலும் நல்ல ஆயுர்வேத வைத்யனிடமாவது, ஹக்கீமிடமாவதுதான் மருந்துகொள்ள நான் ஸம்மதிப்பேன். வியாபாரிகள் கூட்டம்போல் மருத்துவக்கூட்ட வியாபார ஒற்றுமையாக இங்கிலீஷ் வைத்யத்தை அனுஸரிப்பவர் கொண்டாடி, ஆயுர் வைத்யரையும் ஹக்கிம்களையும் முட்டாள்களென்றும் மூடர்கள் என்றும் நிந்திக்கும் ஸ்வபாவத்தினிடம் கடுமையாக நான் பகைபாராட்டுவேன்” என்று விசாலமான பாவமும் படிப்பும் ஞானானுபவமுமுள்ள பரமவைத்ய சிகாமணியாகிய ஸர் பார்டேல்யூகிஸ் என்பவர் கவர்ன்மெண்ட் தரப்பில், கனம் அஸத் ஆலி கான் அவர்கள் இந்தியா கவர்ன்மெண்ட்முன் கொண்டுவந்த “ஆயுர்வேத யூநானிவைத்யங்களைப்புறக்கணியாது கவனித்துக் கவர்ன்மெண்டார், அவற்றைச் சீர்குலையாது நல்ல நிலையடையவும் சாஸ்த்ரீயமாக்கவும் தக்க முயற்சிகள் கொள்ள வேண்டும்” என்ற பிரேரேபணையை ஆமோதித்தனர். இம்மொழிகளோடு மதராஸ் வைத்யக் கவுன்சிலரது நடவடிக்கையை ஒப்பிட்டால் மலைக்கு மடுவுக்குமுள்ள ஏற்றமுள்ளதல்லவா? இங்கிலீஷ் வைத்யப் பட்டம் அடைந்தவர்கூட, தமது பெயரைத் தாக்கல் செய்துகொள்ளாவிட்டால், அக்கவுன்ஸிலரால் படித்தவராக மதிக்கப்படுவதில்லை. முன் நாம் கூறிய டாக்டர் கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களை வைத்தியப்பட்டியிலிருந்து விலக்கியதை நீக்கினும், கவர்ன்மெண்டார் முக்கிய விஷயமான “ஒரு இங்கிலீஷ் வைத்யன் ஆரிய வைத்யனுடன் கலந்து வைத்யம் செய்தால் தவறா அல்லவா?” என்ற விஷயத்தைப்பற்றியொன்றும் அபிப்பிராயம் வெளியிடவில்லை. மழை விட்டும் தூவானம் விடவில்லையே! என் செய்வது? அளக்கிற நாழி அகவிலை அறியுமா?

***

இந்தியப் போலி வைத்யப் பரீட்சைப் பட்டச் சட்டம் அமுலுக்கு வரும்படி இந்தியா கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டது நம்மவர்க்குக் கொஞ்சம் ஆயாஸத்தைத் தருமல்லவா? மசோதா சட்டமாக இந்தியச் சட்டசபை முன் கொண்டுவரப்பட்டபோது அது ஆவச்யகமில்லையென, திடமாகவாதிக்கப்பட்டும்,ஸெலெக்ட்கமிட்டியாருடைய அபிப்பிராயத்திற் குட்படுத்தப்பட, அவர் சில சீர்திருத்தங்கள் செய்தனர். தத்காலம் சில இந்திய கலாசாலை முதலியவைகளால் அளிக்கப்பட்டிருக்கும் பட்டதார்களைத் தண்டிக்கக்கூடாதென்றும், அவர் செய்த பிசகுகளைக் கவர்ன்மெண்ட் உத்தரவின்றித் தண்டிக்கக் கூடாதென்றும், ஷை சட்டத்தின்கீழ் குற்றங்கள், முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்களால் மாத்திரந்தான் விசாரிக்கப்படவேண்டுமென்பனவே அவை. ஷை மசோதா சட்டத்திற்கு மூன்றுதிருத்தங்கள் வேண்டுமென வாதிக்கப்பட்டதாயினும், அவை கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப்படவில்லை. இந்தச் சட்டம் வெளிநாட்டிலிருந்து குடியேறும் பல போலி வைத்யர்களைச் சிறிதும் நாடாது; அவர்கள் என்ன செய்தாலும் கேட்பாரில்லை போலும்! இவ்வேகாதசித் திருடர்களைத் தேரேற்றுவதென்நாளோ? ஏழை பேச்சு அரண்மனை ஏறுமோ?

***

காலஞ்சென்ற கனம் வி, கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுடைய உருவச்சிலை சென்னை ஸர்வகலா சங்கத்துக் கார்யஸ்தானத்திற்குக் கிழக்கெல்லையில் நாட்டப்பட்டு, நமது கவர்னர் கனம் ஸ்ரீ பென்ட்லண்ட் பிரபு அவர்களால் அது வெளியாக்கப்பட்டது. இவ்வுருவம் அவ்வளவு ஸரியாக ஐயரவருடைய அமைப்பைக் காட்டாவிடினும், உத்தம இந்தியருடைய ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட சிற்ப நிலையிலிரண்டாவதாகும். இதற்கு ரூ. 16,500 பிடித்தது. ஸர்வ கலா ஸங்கத்திலிருந்து ஒவ்வொரு வாலிபனும் பட்டம் பெற்றுவரும்போது கண்டு தானும் அந்நிலையை அடைய உழைக்க மனங்கொள்ளத் தூண்டும்படியாக அவ்வுருவம் அமைக்கப்பட்டது நல்லதேயாகும்! தேச சேவகனுக்கிதைக் காட்டிலும் பெரும் புகழ் வேண்டுமோ? கவிகொண்டார்க்கே கீர்த்தி அதைச் செவிகொள்ளார்க்கே அபகீர்த்தி அன்றோ?

சாஸ்திரமாணாக்கனது உறுதிமொழி

MESSAGE FROM A STUDENT OF SCIENCE

ஸ்ரீ காசி விச்வ வித்யாலய அஸ்திவாரக்கல்லே நட்ட மஹோத்ஸவகாலத்துக் கீழ்வரும் உபந்யாஸம் ஸ்ரீ ப்ரபுல்ல சந்த்ர ராயர் அவர்களால் செய்யப்பட்டது:—

"ப்ரஸங்கமேடைமேலிருந்து இம்மாநகரில் பேச எழும்பொழுது, வெளியிட முடியாத கிளர்ச்சியால் என் மனம் நிறைந்து ததும்புகின்றதென்று ஸாதாரண ஹிந்து ஒவ்வொருவனும் வெளியிடுவதுபோல் யானும் விஞ்ஞாபனம் செய்கிறேன்.

பனாரஸ், காசி அல்லது வாராணவஸி என வழங்கப்படும் இம்மாநகரம் சரித்தரித்துளடங்காத பண்டைநாள்முதல் ஓங்கி வளரும் நாகரிகத்தைத் தொட்டிலிட்டுத் தவழ்ந்து விளையாட வளர்த்த பெருமைவாய்ந்த புராதன வாசனை கமழ்ந்து தெய்விகம் பெற்ற நகரம். ரோமாபுரி, ஆதன்ஸ் என்னும் மேனாட்டு நகரங்கள் தலையெடுத்துலாவுவதற்கு முன்னரே, இந்நகரம், இந்திய பாவம், படிப்பு, நாகரிகம் இவற்றின் உறையுளாயும், பொதிந்த நிதியாயும் விளங்கி, இன்றும் தனக்கு நிகரில்லையென ஓங்கி வரும் இலக்கியங்களையும் தத்வ சாஸ்திரங்களையும் விருத்திசெய்து பரப்பி வந்த நகரம்.

இத்தெய்விக நகரத்தைப் பூகம்ப மெதுவுங்கிட்ட முடியாதென்ற திட நம்பிக்கை ஒவ்வொரு ஹிந்துவின் மனத்திலும் ஊன்றியிருக்கிறது; கற்பரிட்சை செய்பவரும், பூ சலன ஆராய்ச்சி செய்யும் பெரியோர்களும் அந்நம்பிக்கைக் கேதேனுமாதார மிருக்கிறதா என்று பரிசீலஞ் செய்யட்டும். ஆனால் நமக்கோர் படிப்பினையை உருவகமாய் அந்நம்பிக்கை ஊட்டுகிறது. ஒரு ராஜ வம்சத்தின் பின் வேறு ராஜவம்சங்கள் வந்திருக்கின்றன; அரசாட்சி மாறுபாடுகள் ஒன்றன்பின் ஒன்றாய்க் குவிந்திருக்கின்றன; பலமும் வீரமு நிறைந்த அந்யவீரர் ஒருவர் பின் ஒருவராய் வெற்றியுடன் கவர்ந்தும் ஒழிந்து மிருக்கின்றனர்;—ஆனால் இவ்வாராணவஸி அவற்றையெல்லாம் சிறிதும் கவனிக்கவில்லை; அக்கிளர்ச்சிகளைக் கண்ணெடுத்துப்பார்க்கவும் மனங்கொள்ளவில்லை; அவையெல்லாம் தன்னைப்பற்றிய விஷயங்களன்றென அசைவற்றேயிருந்தது, கவிக்கூற்றிற் கிசையவது,

> சேனைபின் சேனையாய்ச் சென்றொழி கூழீஇ
> மானவ வரசரை மதியாது பாத்துறீஇ
> வெறுத்துக் காண்டும் குறைபடா மாண்பிற்
> தவம்பெரு ஞான புவனத் தொளித்து

விளங்கியது. மூவாயிரம் வருஷங்களிற்கு முன் நடந்தவிதமே இங்கின்றும், பிழைப்புச் சிறிதும் தடைபெறாது லேசாகவே நடந்து வருகிறது. ஆமாம்; ஹிந்துஜாதியின் அழிவிலா நிலைமை, கீழ் நாட்டாரது சலனமற்ற தன்மை இவற்றின் உண்மையை உயிருடன் விளக்கும் ஞாபகக்குறிபோல் இவ்வழிவற்ற நகரம், கரதலா மலகம் போல், காட்டுகிறது. இராஜாங்கத் தொந்தரைகள், வேறுபாடுகள், கிளர்ச்சிகள், இந்நகரத்திற்குச் சிறிதும் வடு உண்டாக்கவே யில்லை.

சாஸ்திரத்தைக் கற்கும் மாணவனுக்கோ, இக்காசி நகரம், ரணவைத்ய சிகிச்சையின் ஆரம்பம் ஏற்பாடு இவைகளின் பிறப்பிடமென மனக்கிளர்ச்சியும்அன்புமேற்படும். இரண வைத்யமாகிய சல்யதந்த்ரத்தை உலகிற் கருளுமாறு, தந்வந்திரிதேவதைகள், சுச்ருதருடைய ஆசாரியராக விளங்கிய காசிநகரத்து அரசராகிய திவதாசராக அவதரித்தனரென ஸ்தல புராணங் கூறுகின்றது. இவ்வாறு சொல்வதை அப்படியே நம்பவேண்டியதில்லை. ஆனால் இதிலிருந்து ஒன்று வெளிப்படையாகத் தோன்றும்; அதாவது சுச்ருத தந்திரத்தின் ஜன்மஸ்தானமாகஇக்காசிக்குப் பெரும் கௌரவமளிப்பதே; 'இந்திய ரஸாயனசாஸ்திரம்' என்னும் எனது புத்தகத்தில் காளிக்காரம் (Caustic Alkali) என்னும் உப்பைச் செய்யுமுறையைப்பற்றிஎழுதும்போது அந்தச்சுச்ருதத்திலிருந்து "க்ஷாரபாகவிதி" என்னுமதிகாரத்தை முழுதுமப்படியே தோற்றுவிக்கும்படி யாகவேண்டியதாயிற்று. ஷெ முறையை விரித்துரைத்து முடிவில் இம்முறை இக்காலத்திய ரஸாயன விஷயக் கிரந்தங்களில் அப்படியே சேர்த்து வெளியிடும்படியாக அவ்வளவு ஸரியாகவும் சாஸ்த்ரீயமாகவும் இருக்கின்றதென்று சொல்லி நான் முடித்தேன். என் புத்தகத்தை விமர்சனஞ் செய்யும்பொழுது, ஷெவிஷயத்தைப்பற்றிச் சர்ச்சிக்கும்போது, அப்போதிய ரஸாயன சாஸ்திரிகளில் மிக உயர்ந்தவரும், ரஸாயனத்தைப்பற்றிய கணக்கற்ற கிரந்த ரத்னங்களின் நூலாசிரியருமான, காலஞ்சென்ற பர்திலா என்பவர் சுச்ருதமெழுதிய காலத்து அவ்வளவு ஸரியானதும் சாஸ்த்ரீயமானதுமானக்ஷாரபாகவிதி தெருந்திருக்க முடியாதென்றும், அது போர்த்துகேசியர் மூலமாக 15-ம் நூற்றாண்டில் இந்தியர்கள் ஐரோப்பியர்களிடமிருந்து கற்றிருக்கலாகும் என்றும் தனுக்காக வெளியிட்டனர். இது ஒரு வேளை, நமது சுச்ருதத்தின் பெருமையை நேர்பட உரையாது, உரைத்த பெரும்புகழாகும். ஏனென்றால், முற்காலத்து, நமது இந்திய நாட்டில் கொடுங்காயங்களைக் காளிக்காரத்தால் சுடுவது ஸாதாரணமாக ஏற்பட்ட வழக்கமென்று இப்பொழுது தீர்மானமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பிரக்ருதத்தில் ஏற்படுத்தப்பட்ட விச்வ வித்யாலயத்தோடு, நெடுநாளாகப் புகழ்பெற்ற இவ்வாராணவஸிக்கும் வைத்திய சாஸ்திரத்திற்கும் ஏற்பட்ட ஸம்பந்தம், இன்றும் குலாவி நிலைபெறுமென நம்புகிறேன். இக்காலத்து நமது காசிராஜாவாகிய இராமநகரத்து அரசர் மருத்துவ சாஸ்திரத்தைக் கவனித்துப் போஷணை செய்யும் பெரும் வள்ளலாக விளங்குவரென நம்புகிறேன். (தொடரும்.)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

மாதவீகங்கணம்

அத்யாயம் 9

(306-ம் பக்கத்தொடர்ச்சி.)

அக்பர் : அபுல்பாஸலும் படோனியும்

"நான் இல்லை என்று சொல்லவரவில்லை. அப்படி ஸைந்ய பலத்தால் ஆளப்படும் ராஜ்யம் இரண்டொரு தலைமுறைக்குள் சின்னாபின்னமாய்விடும். நமது ராஜ்யத்து ரதகஜ துரகபதாதிகள் அனைவரும் நல்ல தைர்யசாலிகள்தான். போர்முகத்து ஒருபோதும் புறங்காட்டாத சூரர்கள்தான். நமது கோட்டை கொத்தளங்கள் ஸாமாந்யமானவையல்ல. அவைகளின்மீது அமைக்கப்பட்டிருக்கும் பீரங்கிகள் நல்ல உரமுடையவை. இவ்வளவு இருந்தும் என்னபலன்? அதோ விறகு வெட்டி ஒருவன், காலையில் ஆக்ரா தெருக்களில் விற்று நாளைய ஜீவனத்துக்குப் போதுமான பணம் ஸம்பாதிக்கலாமென்றெண்ணிக் கழுத்து நிமிர்ந்துபோகும்படிக் கட்டைச்சுமையைச் சுமந்து செல்லுகிறானே பார்த்தீரா? கந்தைத் துணிகட்டி மஹா தரித்ரனாயிருக்கும் அவனையெதிர்க்க நமது ராஜ்யத்து ஸைந்யங்களெல்லாவற்றையும் ஒன்றுசேர்த்தாலும் போதாது. அவன் ஸந்தோஷமுற்றிருந்தால் ராஜ்யம் நிலைக்கும். அவன் ஒப்பி நாம் அரசாட்சி செய்கிறோம். அவன் அத்ருப்தியடைந்தால்நாமும் நமது ராஜ்யமும் அடியோடு நாசமுறுவோம். அவன்மனம் கோணினால் நாம் அதிகநேரம் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கமாட்டோம். நண்பரே! எனக்கு உலகசரித்திரம் அதிகமாய்த் தெரியாது. ஆனால் நான் இந்த ஐம்பது வருஷகாலத்துக்குள் எத்தனையோ நாடுகளையும் நானாவிதமான மனிதர்களையும் பார்த்திருக்கிறேன். எந்நாட்டில் அரசன் குடிகளுக்கு வருத்தத்தையும் அத்ருப்தியையும் உண்டாக்குகிறானோ, அந்நாடு அதிக நாள் விளங்கியிருப்பதில்லை. குடியுயரக் கோனுயரும், குடி இளைத்தால் கோனும் இளைக்கும். எனது ராஜ்யத்தில் காபூல் முதல் வங்காளம் வரைக்கும் உள்ள ப்ரஜைகள் யாவரும் த்ருப்தியடைந்திருக்கிறார்கள். அவர்கள் என்மீது எவ்வளவோ அன்பாயிருக்கிறார்கள். என் அரசாட்சி ஸர்வஜன ஸம்மதமானது. எனது புத்ரபௌத்ரர்கள் யாராவது என்னையும் எனது ப்ரஜைகளையும் பிரித்துவைக்கக் கங்கணங்கட்டி உழைக்கட்டும்; அவர்களுக்கு ஐம்பது வருஷ காலம் தருகிறேன். ஏதோ, அவர்கள் எண்ணம் நிறைவேறுகிறதா பார்ப்போம்' என்று முடித்தார் அக்பர்.

அத்யாயம் 10

மந்த்ராலோசனை மண்டபம்

நரேந்த்ரன் சக்ரவர்த்தியவர்கள் கடைசியாய்க்கூறிய வார்த்தைகளை மறக்கவில்லை. அவற்றைத் தனக்கோர் எச்சரிக்கையாகக் கொண்டான். இனி ஆக்ராவில் தங்கியிருந்தால் தலைபோய்விடுமென்று அவன் எண்ணினான். ஸாலிம் இளவரசர்தம்முடன் ஒரு ஸ்திரீயைக் கோட்டைக்குள் அழைத்து வந்ததாகவும், ஜனானாவில் ஒரு பேடிக்கு நல்ல உதை விழுந்ததாகவும், ஒரு தார்த்தரி அடிமைப்பெண் ஜனானாவிலிருந்து ஓடிப்போய் விட்டதாகவும் வதந்தி உண்டாய் விட்டது. ஸாலிமுடன் வந்த ஸ்த்ரீ எப்படி தப்பித்துக் கொண்டு போனாள் என்பது ஒருவருக்கும் விளங்கவில்லை. ஆனால் யாவரும் ஜெலிகாவின்மீது ஸந்தேஹங் கொண்டனர். அவள்தான் ஒற்றனை உள்ளே அழைத்து வந்தவள், முஸ்ரூரைப் பலமாய்க் காயப்படுத்தியவளும் அவள்தான். அந்த ஒற்றன் நமது நரேந்த்ரனே. இந்த விஷயங்கள் சக்ரவர்த்தியவர்களுக்குக்கூடத் தெரியாது. ஆனால் நரேந்த்ரன் அரண்மனையை விட்டுச் சென்ற தினம்தான் ஜெலிகாவும் ஓடிப்போய் விட்டாள் என்ற ஸமாசாரம் எங்கும் ப்ரஸித்தமாயிருந்தது. அரண்மனை பேடிகளெல்லோரும்ஒன்றுசேர்ந்து எப்படியாவது இந்த விஷயத்தின் உண்மையைக் கண்டறிய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டனர். அவர்கள் அந்தரங்கமாய் எவ்வளவோ விசாரணைகளெல்லாம் செய்தனர். நாலா பக்கமும் வலையை வீசிவைத்

தனர். வேட்டை நாய்களைப்போல் மோப்பம் பிடிக்கத் தலைப்பட்டனர்.

நரேந்த்ரனுடைய ஸேவகர்கள் முன்னே போய்க் காத்திருந்தனர். அவனும் தன் ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள நிமித்தம் ஆக்ராவைவிட்டுத் தக்ஷணமே செல்லவேண்டியிருந்தது. ஆனால் தன் ப்ராணனைப் பெரிதாக நினைத்து வார்த்தை தட்டுவானா? குறித்த நாள் அன்றைய இரவு ஸரியாய் வேளைக்கு அவன் கோட்டையின் வெளிப்புறத்தில் காத்திருந்தான். நகரகாவலினின்று அர்த்த ராத்திரி மணி கேட்டது. தான் நாடிய ஸ்த்ரீயைக் காணோம். தூரத்தில், தலை நரைத்து, கூன் வளைத்து தடியூன்றி ஒரு கிழவன் முதுகில் ஒரு விறகுச் சுமையைத் தூக்கிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடிப் பெருமூச்சுவிட்டு வந்துகொண்டிருந்தான். வந்தவன் திடீரென்று கோட்டை வாயிலண்டை நின்றான். அங்கிருந்த காவலாளிகள் அவனைக் காலாலுதைத்துத் தள்ளினர். கிழவன் இரண்டு கரணங்கள் போட்டுக்கொண்டு தூரப்போய்விழுந்தான். விறகு சுமை அவிழ்ந்து கீழே விழுந்துவிட்டது. மெள்ள ஸமாளித்துக்கொண்டு இது தலைவிதியென்று முணுமுணுத்துக்கொண்டே எழுந்து அவ்வயோதிகன் அப்புறம் போய்விட்டான். அவன் வரும் வழியில் நரேந்த்ரன் நின்றிருந்தான். அருகில் வந்தவுடன் நரேந்த்ரனுடைய செவிகளில் 'வா' என்றொரு க்ஷீணத்வனி விழுந்தது.

நரேந்த்ரன் திடுக்கிட்டான். குரல் இதற்குமுன் கேட்டிருக்கும் குரலாயிருந்தது. திரும்பிப் பார்த்தான்; அந்த வேஷதாரியின் கண்கள் தென்பட்டன. ஆள் இன்னாரென அறிந்துகொண்டான். விறகுவெட்டி தன் வழியே போய்க்கொண்டிருந்தான். நரேந்த்ரனும் ஏதோ யோசனையின்றிக் குதிரை போகும் வழியேபோகிறவன்போல் விறகுவெட்டி பின் சென்றான்.

கோட்டை வாயிலுக்கு ஒரு மைல் தூரத்தில் ஒரு பெரிய வனம் இருந்தது. விறகுவெட்டி மரங்களுக்கிடையில் மறைந்து விட்டான். அவ்விடம் அதிக இருட்டாயிருந்தபோதிலும் நரேந்த்ரன் விறகு வெட்டியைப் பின்பற்றி வேகமாய்ச் சென்றான்.

உடனே ஜெலிகா தன் வேஷத்தைக் களைந்துவிட்டு, "நரேந்த்ரா, நீ உன் வாக்குத் தவறாமல் நடந்தனை. முதல் நாள் உன் கண்ணின் ஒளியைப் பார்க்கும்போதே நீ நிஜஸ்தன், வாக்குத்தவறாதவன் என எனக்குத் தோன்றியது. இன்றையதினம் அரண்மனைப்பேடிகள் வேட்டை நாய்கள்போல் நம்மைப் பின்பற்றி வருகின்றனர். பகவான்தான் இருக்கிறார் நம்மை இன்றைக்குரக்ஷிக்க. எப்படியாவது நாம் அவர்கள் கையில் அகப்படாமல் போய் விடவேண்டும்.

"நான் யுத்தகளத்தில்எப்பேர்ப்பட்ட சூரர்களையெல்லாம் பார்த்திருக்கிறேன். இவர்களைக்கண்டும் பயந்துவிடுவேனா! தவிர, சக்ரவர்த்தியவர்களுடைய தூதன் நான். என்னைத்தொட இந்த அற்பங்கள் துணியுமா?

"போர்வீரா, நீ ஒன்றும் அறியாத சிறுவன். இந்த அற்ப நாய்களின் சேஷ்டை இப்படிப்பட்டதென்பது உனக்குத் தெரியாது. சக்ரவர்த்தியார் மகனாயிருந்தாலும் அவர்கள் விடமாட்டார்கள்".

"ஜெலிகா நீ யாரைக் கண்டு இவ்வாறு நடுங்குகிறாய்? அந்தக் கொடிய ம்ருகமாகிய முஸ்ஸுருக்கா இப்படி பயப்படுகிறாய்?"

"முஸ்ஸுரைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவரை நன்றாய்ப் படுக்க வைத்து வந்துவிட்டேன். அவர் இன்னும் கொஞ்சகாலம் படுக்கையைவிட்டு எழுந்திருக்க மாட்டார். ஆனால் மற்ற பேடிகளெல்லாம் ஒன்று சேர்ந்து இரவு பகலாக இவ்விஷயத்தில் உழைக்கிறார்கள். அவர்களுக்கு நம்மைப் பற்றி எல்லா விஷயமும் தெரிந்திருக்கிறது. ஒருவேளை நாமிருக்குமிடங்கூட அவர்களுக்குத் தெரியுமோ, என்னமோ?"

"நாய்கள் எப்படி வேண்டுமானாலும் குலைத்துக் கொண்டிருக்கட்டும். அருணோதயத்துக்குள் நரேந்த்ரன் தனது ஆட்களைச் சேர்த்துவிடுவான்."

"ஆம் அதுவரைக்கும் உயிருடனிருந்தால் —நில்! நில்!"

ஓர் ஊதல் சப்தம் வனமுழுவதும் ஒலித்தது. போர் வீரனாகிய நரேந்த்ரனுக்கே ஒரு தரம் உடல் நடுங்கிற்று. அவன் ஜெலிகாவுக்கு அருகே வந்து தன் இடது கையால் கெட்டியாய்ச்சேர்த்து அணைத்துக்கொண்டு

வலது கையால் க்த்தியை யெடுத்தான். மறுபடியும் அந்த ஊதல் கேட்டது. மரங்களுக்கிடையில் இரண்டொரு மானிடரூபங்கள் தென்பட்டன. அவ்வுருவங்கள் புதர் புதராய்க் குனிந்து குனிந்து எழுந்திருந்தன. நரேந்த்ரனும் ஜெலிகாவும் அவர்களுக்குத் தெரியாமல் மறைவிலிருந்தார்கள். சில நிமிஷங்களுக்கெல்லாம் மறுபடியும் நிச்சப்தமாயிருந்தது.

ஜெலிகா இப்போதுதான் மூச்சுவிட்டாள். "அரண்மனைவாயிலிருந்து உன்னை யவர்கள் பின்தொடர்ந்து வருகின்றனர். நீ வனத்துக்குள் நுழைந்தது அவர்களுக்குத் தெரியும். இன்னும் அவர்கள் உன்னை விட்டபாடில்லை. அவர்களுடைய பேச்சு ஒன்றிரண்டு என் காதில் விழுந்தது. இன்னும் பலர் இவ்வனத்தில் வந்து தேடுவார்கள். நீ இனியொரு க்ஷணம் இங்கு தாமதித்திருக்கக் கூடாது. துரிதப்படவேண்டும்."

"ஜெலிகா! அவர்கள் என்னை ஏன் தொடர்ந்துவரவேண்டும்? அதுவும் என்னைப்பிடிக்க இரவில் ஏன் அவர்கள் கஷ்டப்படவேண்டும்? நான் ராஜ ஸபைக்குப் போயிருந்தேன், மத்யானமெல்லாம் நகரத்திலிருந்தேன், நகர முழுவதும் சுற்றிக்கொண்டிருந்தேன். அப்போது என்னைப் பிடித்திருக்கலாமே. இவ்வளவு ச்ரமமேன்?"

"நீ அறியாதவன் என்று நான் சொல்லுவதற்கென்ன? உனது வார்த்தைக்கென்ன? பட்டப்பகலில் ஆக்ரா வீதியில் அவர்கள் சக்ரவர்த்தியவர்களுடைய உத்யோகஸ்தனை எதிர்ப்பார்களா? இங்கே இந்த அந்தகாரத்தில் எதுசெய்தாலும் கேட்பாரில்லை. இங்கே உன்னைக்கொன்று புதைத்துவிட்டால் யாருக்குத் தெரியப்போகிறது ஸமாசாரம்? ஸரி, வீண்காலக்ஷேபமேன், உனது வீரர்களெங்கே?"

"நாற்பது மைலுக்கப்பால்."

"இன்றிரவு நாற்பதுமைல் எப்படிப்போக முடியும்."

"வண்டிக்கார ஸம்புநாத் லாயத்தில், எனது குதிரை தயாராயிருக்கிறது."

"ஸரி, நல்ல ஏற்பாடுதான். ஸம்புநாத் அருகில்தான் இருக்கிறான். உனது கூடாரத்துக்கு வழிதெரியுமா உனக்கு?"

"ஆக்ரா தெருக்கள் எவ்வளவு நிருடியாய்த்தெரியுமோ அவ்வளவு நிருடியாய்த் தெரியும்."

"ஸரி, புறப்பட்டுப்போ, நாம் அப்புறம் ஸந்திக்கலாம்."

"ஜெலிகா, நான் போனால் உன் கதி என்ன?"

"நான் எத்தனையோ அபாயங்களுக்கெல்லாம் உட்பட்டிருக்கிறேன், இது எனக்கு ஒரு லக்ஷ்யமில்லை. தார்த்தரிப் பெண்ணைப் பிடித்துச் சிறை செய்யக்கூடியவர்கள் இந்த ஹிந்துஸ்தானத்தில் எவருங் கிடையாது. என்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். எனக்குத் தப்பித்துக்கொள்ள வழி தெரியும்."

"இடிமேல் இடி இடித்தாலும் நான் உன்னை இங்கே தனியாய் விட்டு ஒரு அடி எடுத்து வைக்கமாட்டேன். இது நிச்சயம்."

"நான் இதற்குள் சாகமாட்டேன், இன்னும் இவ்வுலகத்தில் எனக்கு எவ்வளவோ கார்யமெல்லாம் இருக்கிறது. இப்போது இந்த அபாயத்தினின்றும் தப்பித்துக்கொண்டு மறுபடியும் உன்னை ஸந்திக்க எனக்கு வழி தெரியும், நீ உன் ஸமாசாரத்தைப் பார்த்துக்கொள். எனக்காகக் கவலைப்படவேண்டாம். நாழியாகிறது புறப்படு. சற்று நேரத்துக்குள் அந்தப் பிசாசுகள் வந்துவிடும்."

"ஜெலிகா, நீ என்ன தான்சொல், உன்னை இவ்விடத்தில் விட்டு விட்டு நான்போகமாட்டேன். உன்னைப் பத்ரமான இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தபிறகுதான் செல்வேன். பெண்ணே, சில தினங்களுக்கு முன்னர் நீ என் உயிரைக் காப்பாற்றினாய். இன்றையதினம் நான் உன்னைக்காப்பாற்றி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்."

"நரேந்த்ரா, எவ்வளவு வசீகரமாகப்பேசுகிறாய் நீ? ஆனால் தார்த்தரிப்பெண் இதற்கெல்லாம் இசைந்துவிடமாட்டாள். போர்வீரா, வீண் வார்த்தை வேண்டாம். நீ உன் வழியே செல், நான் உன்னை வந்து பார்க்கிறேன் ஒரு நாள்."

"பெண்ணே, அவர்கள் நாடுவது என்னுயிரையன்று; உன்னைப் பிடித்துக் கொல்ல வேண்டுமென்பது அவர்களுடைய உத்தே

சம். தார்த்தரிப்பெண் ஒருத்தி அரண்மனைக் காவலர்களைப் பலமாய்க்குத்திக் காயம் செய்துவிட்டு ஓடிப்போய்விட்டதாக அரண்மனையெல்லாம் ப்ரஸ்தாபம். முஸ்ரூரும் அவனுடைய பரிவாரங்களும் உன்னை லேசில் விடமாட்டார்கள். உன்னை அவர்கள் பிடித்துக் கட்டியுருட்டிக்கொண்டுபோகவும் கொஞ்சங் கொஞ்சமாக உன்னைச்சித்ரஹிம்ஸை செய்துகொல்லவும் நான் ஸம்மதிப்பேனா? உன்னை அவர்களுடையகையில் காட்டிக்கொடுத்ததுபோல் நான் விட்டுவிட்டுப் போவேனா? இவ்வித த்ரோஹம் நான் உனக்குப் புரிய உடன்படுவேனென்று நீ எவ்வாறு எண்ணினாய்?”

நரேந்த்ரனது மொழிகளைக்கேட்டு ஜெலிகா நடுங்கினாள். ஆனால் அதைக் காண்பித்துக்கொள்ளாமல் வெளிக்குச் சிரித்துக்கொண்டே, “நண்பனே, உனக்கு அந்தப்புர ரஹஸ்யங்களெல்லாம் நன்றாய்த்தெரிந்துவிட்டது. என்னை உன்னுடன் அழைத்துச் செல்வதால் உனக்கு அது அபாயம் அன்றா? போ, போ உன்வழியே; நாம் மறுபடியும் ஒருகாலம் ஸந்திப்போம்.”

“ஜெலிகா உனக்கு வர இஷ்டமில்லாவிட்டால் இங்கேயே இரு. நானும் உன் பக்கமிருந்து என் உயிருள்ளமட்டும் ஒரு கைபார்த்து விடுகிறேன்” என்றான் நரேந்த்ரன்.

நரேந்த்ரனது தீரமான குரலைக்கண்டு ஜெலிகாவின் எண்ணங்கள் மாறின. “நீ இன்னும் உலகத்தை அறியாதவன்; தைர்யத்துக்கு மாத்ரம் குறைவில்லை. என்ன சொன்னாலும் ஒரேபிடி பிடிக்கிறாய், அடிமைப் பெண்ணின் நிமித்தம் தமது ப்ராணனைவிடத் துணிபவர்கள் வெகு சிலரே. நீயே நான் இத்தனை நாள் தேடியலைந்த ஆண்மகன்.”

சந்தடியின்றி இருவரும் வனத்தினின்று வண்டிக்காரன் குடிசைக்குச் சென்றனர். குதிரை, சேணம் ஸவாரியுடன் ஸித்தமாயிருந்தது. நரேந்த்ரன் ஒரே குதியாய்க் குதித்துக் குதிரை மேலேறினான். ஜெலிகாவும் அவனுக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டாள். நரேந்த்ரன் ஒரு தோல்வாரைப் போட்டு அவளைக் கெட்டியாய்த் தன்னுடன் கட்டிக்கொண்டான். மறுபேச்சின்றி இருவரும் ஆக்ரா எல்லையைத் தாண்டிவிட்டனர்.

வயல் புறஞ்சென்றவுடன் நரேந்த்ரன் குதிரையை வேகமாய்த் துரத்தினான். சப்தம் அடங்கி நித்திரையிலிருக்கும் பல க்ராமங்களைக் கடந்து சென்றனர். ரஸ்தாவழியைவிட்டுக் கொடி வழியெல்லாம் சென்றனர். எதிரே தீபவெளிச்சந் தெரிந்ததால் அதன் பக்கம் போகாமல் சுற்றுவழியாய்ப் போயினர். சந்திரோதயமாக இரண்டுமணி நேரமிருந்தது. அதற்குள் அபாயகரமான பாதிவழி கடந்தாய்விடும்.

குதிரைமேலேறி உட்கார்ந்தது முதற்கொண்டு இது பர்யந்தம் ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தைகூடக் கிடையாது. ஜெலிகாவுக்குத் தைர்யம் சொல்லக்கூட நரேந்த்ரன் அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. மீன் குட்டிக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க வேண்டுமா? நரேந்த்ரனுடைய இடுப்பைத் தனது இடது கையால் இறுகக் கட்டிக்கொண்டு தனது வலது கையைத் தன் கட்டாரிமீது ஸித்தமாய் வைத்திருந்தாள். புறப்பட்டது முதற்கொண்டு தனது நுட்பமான விழிகளால் எதிரிலிருக்கும் அந்தகாரத்தை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவளுடைய கேசம் அவிழ்ந்து காற்றில் அலைந்துகொண்டிருந்தது. மார்பும் படபடவென்று அடித்த வண்ணமாயிருந்தது. தன்னுடனிருப்பது ஸ்த்ரீஜாதியென்பதைக் கவனிக்காமல் நல்ல நிசியில் குதிரையை வாயுவேகமாய்த் துரத்திப்போகும் மனிதனுடன் செல்ல எத்தனை ஸ்த்ரீகள் துணிந்து முன்வருவார்கள்? அல்லது கட்டாரி கைப்பிடித்திருக்கும் ஜெலிகாவைப்போன்ற பெண்ணுடன் அந்த ஸமயத்தில் காதல் பேச்சுப் பேச எவனாவது துணிந்திருப்பானா?

வெகு தூரம் வந்து விட்டனர். வழியில் க்ராமங்கள் மார்க்கமாய்ச் செல்லும்போது அர்த்த ராத்ரியில் தனியாய்ச் செல்லும் நமது ப்ரயாணிகளைப்பார்த்துச் சில நாய்கள் குலைத்தன. ஓரிடத்தில் சாலையோரத்துத் தர்ம ஸத்ரத்தில் ஒரு நெருப்பைச் சுற்றிச் சில ஈட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ஜெலிகா

தற்செயலாய் நேரும் அபாய ஸம்பவங்களும், அவற்றின் ஆரம்ப சிகித்ஸைகளும்

ACCIDENTS & EMERGENCIES

Hemorrhage— இரத்தத் தெறிப்பு

முன்கையிலும் அங்கையிலும் நேரும் இரத்தத் தெறிப்பிற்குச் சிகித்ஸை.—தோளிற்குக் கீழாகக் கையில் எந்த இடத்திலிருந்து இரத்தம் வெளிவந்தபோதிலும், மேல் கையைக் கட்டுவதாலேயே அவ்வாறு வெளியாதலைத் தடுத்துவிடலாம். ஆனால் அது முன்கையிலாவது அங்கையிலாவது அவ்வாறு நேர்ந்தால், முழங்கைக்குச் சற்று மேலே இறுகக் கட்டுவதால் இரத்தத்தை வெளிவராது நிறுத்திவிடலாம். இதற்குக் காரணம் வெளிப்படை. மேற்கையில் ஒரே எலும்பு தானிருக்கிறது மேற்கையை இறுகக் கட்டுவதால், எல்லா இரத்தக்கால்களும் அவ்வெலும்பைச் சுற்றி அழுத்தப்படுவதால், இரத்தம் இவ்விடத்தின் கீழ் வராதிருக்கும்படியாகத் தடுக்கப்படுகிறது. ஆனால் கயிற்றைமுன்னங்கையில் கட்டினால், இவ்விடத்தில்இரண்டு எலும்புகளிருப்பதால், அவற்றின்நடுவிலிருக்கும் இரத்தக்கால்களை முழுதும்வாய்குவியும்படியாக இறுக்கமுடியாதாகிறது. ஆகையால்முன்கையிலாவதுஅங்கையிலாவது நேரும் இரத்தக்காயங்களிலிருந்து இரத்தம் வெளிவராது தடுப்பதற்கு, முழங்கைக்குமேல், மேல்கையை இறுகக் கயிற்றாலோ வேறெதினாலாவது கட்டுவதே ரத்தம்வெளிவராதிருக்கச் செய்யும். ஆனால் அங்கையில் நேரும் வெட்டுக்களிலிருந்து வரும் இரத்தத்தை நாடிப்பார்க்குமிடத்தில் இரத்தக் கால்வாய்களைக் குறுக்குவதால் தடுக்கலாம்; அல்லது சுமடுகளை நாடியின் இரண்டு பக்கங்களிலும் வைத்து இறுகக்கட்டுவதாலும் பிரயோஜனமுண்டாகலாம்.

தொடையிலேற்படும் இரத்தத் தெரிப்பிற்குச் சிகித்ஸை.—சில ஸமயங்களில் பிரஷ்ட பாகத்தின் தசை (சதை) நிறைந்த இடத்திலேற்படும் ஆழ்ந்த காயங்களிலிருந்து இரத்தம் வெளியாகலாம். காயத்தின் வாயின் மேல் அழுத்துவதல்லாமல் இரத்தம் வெளிவராது தடுக்க வேறுவழியில்லை. இவ்விடத்தில் சதைக்குக்கீழ் மிக ஆழ்ந்த இடத்தில் இரத்தக்கால்கள் இருப்பதால், இங்கு இரத்தக்கால்களைக் கைகளால் தடவித் தேடிக் கண்டுபிடித்து அழுத்துவது அசாத்யமான வேலை. தொடையின் பின்பாகத்திற்கும்கீழ்க் காலுக்கும் இரத்தத்தைப் பங்கிட்டுத்தரும் செவ்விரத்தப் பெருங்காலை அமுக்குவதினால் தொடையிலுண்டாகும் இரத்தத்தெறிப்பைத் தடுக்கலாம். அரைப்பூட்டுவளையுமிடத்தில், நாபிக்கு நாலங்குலம் கீழாக, வயிற்றிலிருந்து தொடையின் முன்பக்கமாக இந்த இரத்தக்கால்வாய் வெளிவருவதைக் காணலாம். இந்த இடத்தில் அதை, அது அடுத்திருக்கும் எலும்பின்மேல் கட்டைவிரலால் அழுத்திஇரத்தம்வெளிவருதலைத்தடுக்கமுடியும். இரத்தம் வெளிவருவது தொடையின் கீழ்ப்பாகமானால், மேல்கையில் செய்த விதமாகவே, தொடையின் மேல் பாகத்தில், இரத்தக்காலின்மேல் அழுத்தமான சுமடையும் வைத்து, கயிற்றால் இறுகக்கட்டினால் இரத்தத்தை வெளிவராது தடுத்துவிடலாம். இது முன்மேல் கைவிஷயமாகசொன்னவிதமே கட்டைத்தகுந்தவிதம்அரைமணிக்கொரு முறை தளர்த்தியும் இறுக்கியும் காலில் துர்மாமிசம் ஏற்படாதபடி செய்யலாம். கட்டைத்தளர்த்தும்பொழுது மாத்திரம் ஜாக்ரதையாக இரத்தம் வெளிவராதபடி முன்சொன்னபடியே கட்டைவிரலால் அழுத்திக்கொண்டபின்புதான் கட்டைத்தளர்த்த வேண்டும்.

காலிலும் பாதத்திலு முண்டாகும் இரத்தத் தெறிப்பிற்குச் சிகித்ஸை.—இவ்விடத்திலிருந்து வெளியாகும் இரத்தத்தை முன்னங்கையிலும் அங்கையிலு முண்டாகும் இரத்தத் தெறிப்பிற்குச் சொன்ன முன் முறைப்படியே நிறுத்தலாம். ஆனால் கீழ்க்காலில் இரண்டு எலும்புக ளிருப்பதாலும், முழங்காலுக்குமேல் ஒரே எலும்பிருப்பதாலும், முட்டுக்குமேல் கட்டியிறுக்குவது மிக்கபயன் தரும்; அவ்வாறு செய்வதால், கட்டை இலேசில் இறுக்கமுடியும்.

அங்க அமைப்பினால் இரத்தத் தெறிப்பைத்

தடுத்தல்.—காயம்பட்ட இடம் ஹ்ருதயமிருக்குமிடத்திற்கு மேல்பக்கமானால், ஹ்ருதயத்தி லிருந்து இரத்தத்தை அங்கு செலுத்துவது மிகவும் கஷ்டமாகவிருக்கும். உதாரணமாக, கையிலாவது காலிலாவது வெட்டு ஏற்பட்டால், அவ்வங்கங்களைச் சரீரத்தைக்காட்டிலும் உயர்ந்த நிலையிலிருத்துவதால் இரத்தத் தெறிப்பைத் தடுக்க வெகு உபயோகமாக இருக்கும்.

கால்களை மடக்குவதால் இரத்தத் தெறிப்பைத் தடுத்தல்.—வேறு வழி ஏற்படாத காலங்களில், கைகால்களை மடக்குவது வெகு நன்மை பயக்கலாம். உதாரணமாக, மேற் கையிலிருந்து இரத்தம் வெளிவருதை, அழுத்தமான சுமட்டையோ, மடிக்கப்பட்ட துணிமடிப்பையோ, அல்லது கம்பையோ கைக்கடியில் வைத்துக் கையை உடல் பக்கமாக அழுத்தினால் (அதாவது அக்கிளில் மேற் சொன்னதை வைத்துக் கையை அதன்மேல் அழுந்தும்படித் தாக்கினால்)—இரத்தம்வெளிவருதலைக்கிட்டத்தட்ட நிறுத்தலாம். இரத்தக் கால்வாய், இவ்வாறு செய்வதால் கம்பிற்கும் கை எலும்பிற்கும் நடுவில் அழுத்தப்படுவதால் இரத்தம் வெளியாவது குறையும்.

முன்னங்கையிலாவது, அங்கையிலாவது இரத்தம் வெளிவந்தால், மேற்சொன்னபடி முழங்கையை மடிப்பதால், தடுக்கலாம்.

தொடையிலேற்படும் இரத்தத்தை மேற்சொன்னவிதம் நிறுத்தமுடியாதானாலும், அவ்வாறு செய்வதால் இரத்தநஷ்டத்தைக் குறைக்கலாம்.

காலிலாவது பாதத்திலாவது உண்டாகும் இரத்தத்தெறிப்பைக் காலை மடக்குவதால் நிறுத்தலாம். ஆனால் வெகுபலத்துடன், ஜாக்ரதையாக முன்சொன்னபடி அழுத்த வேண்டும். அவ்வாறு செய்வதால் இடையே வைக்கப்படும் வஸ்துவிற்கும் காலெலும்பிற்கும் நடுவில் இரத்தக்குழாய் அகப்பட்டுக் குவிந்துவிடும்; ஆகையால் இரத்த நஷ்டமேற்படாது.

பெற்றோர்களும் பிள்ளைகளும்

PARENTS & CHILDREN

'அரிதரிது மானிடராதலரிது' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க, நாம் பெற்றுள்ள இம்மானுடவுடலோ மிக்க சிறந்தது. நமது சாஸ்திரக் கோட்பாட்டின்படி, இவ்வுயிரானது, தான் முந்தின ஜன்மங்களிற் செய்துள்ள புண்ணிய வசத்தாலேயே இப்பிறப்பைப் பெற்றுளது. இச்சென்மத்தினிலேயே 'இது நல்லது, இது கெட்டது' என்றும், 'இதைச்செய்யலாம், இதைச் செய்யலாகாது' என்றும் இத்தகைய நன்மை தீமைகளை அறவே விளக்கத்தக்க பகுத்தறிவென்னும் இப்பெரும் குணத்தைக் கடவுள் அனுக்கிரஹித்திருக்கிறார். மேலும் நாம் பின்பு உய்வதற்கும் மார்க்கமானதலால், இதனில் நாம் செய்ய வேண்டியவைகளென வரையறுக்கப்பெற்ற பல்வேறு காரியங்களையும், நம் வலிமைக்கும், மனோதைர்யத்திற்கும், உதவியின் பலத்திற்கும் தக்கவண்ணம்அவைகளைக்கூடியவகையில் செவ்வனே செய்து, நம் மனசாட்சிக்கு விரோதமாய் நடவாமல் நம் காலத்தைப் போக்க வேண்டும். இவ்விதம் ஒருவன் தன் காரியங்களைச் செவ்வனே செய்து, தனக்கும் பிறர்க்கும் நல்லவனாக நடந்துவருவதற்கு அவன் சற்சங்கங்களில் பழகுதலே காரணமாகும்.

ஒவ்வொரு மனிதனும் பூமியிற் பிறந்தது முதல், வெகுகாலம் வரையில் பழகி வருவது அவனது குடும்பமேயாகும். அவனுடன் பழகுபவர்களும், அவனது பெற்றோர்களேயாவர். பெற்றோரும் உற்றோருமே அவனது ஆயுளையும் நடத்தையையும் உருவாக்குபவர். ஆதலால் ஒவ்வொருவனும் தான் இப்பூமியில் வாழ்வதற்கே காரணபூதராய்நிற்கும் பெற்றோர்களுடைய பெருமையையும்,

> 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற'

என்று மிகத் துணிவுடன் பேசப்பெற்ற இம்மக்களுடைய பெருமையையும், இவர்கள் ஒவ்வொருவருடைய பிரத்யேகமான கடமைகளையும் ஏட்டில் எழுதியுரைப்பது சாத்தியமாகுமா?

மனிதன் இப்பூமியில் உற்பத்தியாகும் காரணங்கள் பலவற்றுள், அவன் பிரஜாவிருத்தியைச் செய்யவேண்டுமென்பது மிக்க அவசியமானதென நமது பண்டை நூற்கள் கூறுகின்றன.

ஆனதுபற்றியே விவாகம் முதலிய லௌகிக காரியங்களை வைதிக கர்மங்களுள் நம்மவர் சேர்த்துளர். மேலும் புத்ர உற்பத்தியில்லாத ஒருவன் தன் குடும்பம் சந்ததியின்றி நாசமுறுவது மாத்திரமேயன்றி, அவனும் 'புத்' என்றதோர் நரகினுள் வீழ்ந்து உழல்கின்றனனென்றும் அவனது இறந்துபட்ட மூதாதைகளும் தம் வம்சம் நாசமடைந்ததை யுன்னிக் கன்னுகின்றனரென்றும் கூறுகின்றனர். ஆதலால் புத்திரப்பேறு மனிதனுக்கு மிகச்சிலாக்கியமானது. ஆனதுபற்றியே திருவள்ளுவரும் 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை மக்கட்பேறல்ல பிற' என்று கூறியுள்ளார். அதுவே, என்றும் குறைவுபெறாத பெருகும் செல்வம். குடும்பத்திற்கும் இராஜாங்கத்திற்கும் அதுவே உண்மையான ஆஸ்தியாகும். ஆதலால் இவ்வளவு மகிமைக்கும் காரணமான பெற்றோர்களின் கடமைகள் யாவையெனச் சற்றுராய்வோம்.

'பெற்றோர்கள் எவ்வழியோ அவ்வழியே மக்களும்' ஆதலால் தன் மகன் அன்பும் அடக்கமும் பொருந்தி, தயை தாட்சணியம் முதலியநற்குணங்கள் செறிந்து, செய்ந்நன்றி மறத்தல், உயிர்க்கொலை செய்தல், கள்ளுண்டல், பொய்மொழிதல், களவாடல் முதலிய பஞ்சமா பாதங்களை அறவே நீக்கி, யாவராலும் தன் மகன் புண்யபுருஷனெனப் புகழுடன் பேசப்படும் யோக்கியதையைப் பெற விரும்பும் பெற்றோன், தானும் மேற்கூறிய நற்குணங்கள் வாய்ந்தவனாயும், தீக்குணங்களை மாய்த்தவனாயும்இருத்தல்வேண்டும். 'விரையொன்றுபோடச் சுரையொன்று விளையுமா?' மஹாலோபியான ஒரு தகப்பனுக்கு மிகத் தர்மவானான மைந்தனுதிப்பனா? ஆதலாலேயே மேலோர் தம்மிடம் புதிதாய் வரும் வாலிபர்களை விளித்து 'உன் வம்சம் என்ன? கோத்திரம் யாது? உன் பெற்றோர் யாவர்? அவர்களது நிலைமையென்ன?' என்று அவனது பிறப்பு வளர்ப்பைப்பற்றிக் கேட்டு, மனத்திருப்தி பெற்ற பின்பே அவர்களிடம் நம்பிக்கை வைப்பர். ஆதலால் பிள்ளைகளைப் பெற்றவர், தாம் எக்காரணம் பற்றியும் தீய ஒழுக்கங்களிற் பிரவேசியாமல், தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். மேலும் தம் குழந்தைகளுடன் பழகும் ஒவ்வொருவரும், தப்புமார்க்கங்களில் பிரவேசியாதவர்களாயும், மனோவாக்குக் காயங்களில் பரிசுத்தமுள்ளவர்களாயுமிருக்கிறார்களாவெனப் பார்த்துக்கொள்ள வேண்டியதவசியம். ஏனெனில்குழந்தையின் மனமானது ஸ்படிகம்போல் பரிசுத்தமானது. இதுபற்றியே கிருஸ்தவமதாசாரியரும் "மனத்தூய்மை பொருந்தியதால் குழவிகளே ஆசீர்வதிக்கப் பெற்றவர்" (Blessed are the children for they are purein heart) என்றும் "தூய்மையும் அறியாமையும் பொருந்தியதால் அக்குழந்தைகளை என்னருகில் கொணருங்கள்" (Bring in ye those children for they are pure and innocent) என்றும் குழந்தைகளின் தூய்மை பொருந்திய மனத்தைப்பற்றிப் புகழ்ந்திருக்கின்றனர். அவர்களுடைய மனமானது ஓர் புகைப்படம் போன்றது. புகைப்படமானது தன் முன்னுள்ள எந்த வஸ்துவையும் அதனுடைய உண்மையான நிலையில் தன்னுள் பிடித்துவிடுகிறது. அவ்வஸ்து நேராக நிற்கின்றதா, அழகாயிருக்கின்றதா அல்லது அதுநிற்கும் அந்நிலைமையில் நாம் பிடித்தல் தகுமா என்று அது சிறிதும் யோசிப்பதில்லை. ஆதலால் தன்னுடைய கருவியில் நல்ல ஒழுங்கான படம்பிடிக்க விரும்பும் படம் பிடிப்போன், தன்னுடைய இயந்திரத்தைமிக்கஉசிதமான இடத்தில் வைத்தோ, அல்லது தான் படம்பிடிக்க விரும்பும் வஸ்துவை ஓர் ஒழுங்கான இடத்தில் வைத்தோ சீர்ப்படுத்தல் வேண்டும். ஆங்கும் முன் நிற்கும் உருவம் எந்நிலையில் இருக்கிறதோ அந்நிலையிலேயே படமும் பிடிக்கப்படும். ஆதலால் புகைப்படமானது தன்னிஷ்டம்போல நன்மைகளைக் கொள்ளவும் தீமைகளைத் தள்ளவும் சக்தியற்றதாயிருக்கின்றது. அதுபோலவே, குழந்தையின் மனமும் தான் காணும் பிறமனிதர்களின் குணங்களையே சிறிதும் மாறுதலின்றிக் கொள்ளும்.

இது இங்ஙனம் நிற்க, நம் பழந்தமிழ் நாட்டார், தம் மக்களை ஏதோ விளையாட்டுக் கருவிகளாக மதித்து வருகின்றனரேயன்றி அக்குழவிகளின் பெருமையையாவது அல்லது அவர்கள் பின் எவ்விதம் ஆவார்கள் என்ற அறிவையாவது சிறிதேனும் பெருமல், அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும், நற்குணங்களின் தேர்ச்சியையும் கல்வியினூக்கத்தையும் புகட்டாது அசட்டை செய்கின்றனர். இதுவும் நீதியோ! இப்பொழுது வயதில் முதிர்ந்த பெரியோர்கள் கிழவர்களாகிக் காலம் சென்றபின் இவ்வுலகத்தில் பெரியவர்களாகத் தம்மக்களேயாவர் என்பதை அவர்கள் அறிந்தும் அறியாதார்போல் நடிப்பதின் தாத்பரியம் யாதோ? அறிவில் முதிர்ந்த பெரியோர்கள் கூட 'என் பிள்ளை ஒன்றுக்குமுதவான். அவனை நல்வழிப்படுத்தல் மிக்க வசாத்தியமான காரியம், அவனுக்குக் கல்வியாவது வரவாவது' என்று கூறி அவர்களைக் கவனியாமல் விட்டுவிடுகின்றனர். இது என்ன பரிதாபம்! அம் மைந்தன் பிறக்கும்போது மூடனாகவும் அயோக்கியனாகவுமா பிறந்தான்? அவன் இந்நிலைமைக்குவர அவன் பெற்றோர்களே யன்றோ காரணமானவர்? பால்யமுதல் அவன் நல்வழிப்பட்டு வருவனேல், அவன் முறை திருப்ப வசதியுண்டாமா? அல்லது முறை திரும்பிய ஓர் இளைஞனைச் சீர்திருத்தல் என்ன இயலாத காரியமா? கருமானொருவன் தன் முன்னுள்ள கும்பிடு சட்டியிலுள்ள சிறிது நெருப்புப் பொரியைக் கொண்டு மிகச் சிரமப்பட்டு ஊதிப் பெருநெருப்பாக்கி வெள்ளியையும், சுவர்ணத்தையும் உருக்கிவிடுகின்றான்: அதுபோல, குணம் மாறிப்போன பிள்ளையினிடமுள்ள சிறிது நற்குணத்தைக் கொண்டு அவர்களுடைய தீக்குணங்களைப் போக்க வழிதேடுவது ஓர் அரிய காரியமன்று. மேலும் கந்துக மதக்கரியை அடக்கலும், கரடி வெம்புலி வாயைக்கட்டலும், ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலும், கட்செவி எடுத்தாட்டலும், மலைகளைக் குடைதலும், ஆறுகளையடக்கலும் இவைபோன்ற அசாத்தியமான காரியங்களே சாத்தியமாவதைக் கண்டும் கேட்டுமுள்ள நமக்கு ஒன்று மறியாச் சிறுவர் எம்மாத்திரம்? அவர்கள் எவ்வளவு துஷ்டராயினுமென்ன? "அன்பின் வழியது உயிர்நிலை" என்றவாறு உயிர்நிலைக்கே ஏதுவான இவ்வன்பு என்னும் மருந்தை ஏற்றவாறு உபயோகித்தால் எவ்விதக் கடுமை பொருந்தியதுவும் எளியதாகும். 'கடிவது மற' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க பிள்ளைகள் குற்றஞ் செய்வாராகில் அவர்களை எப்பொழுதும் கண்டியாமல் 'நயம்படவுரை' என்ற வாக்குப்படி நயமாகவே சொல்லித்திருத்தல் சாலச் சிறப்புடைத்து.

ஆயினும் கடுமை யென்பதே சிறிதும் கூடாதென்பதன்று. சதுர்வித உபாயங்களில் பின்னதாகக் கூறப்பட்ட தண்டம் மிக்க அவசியமானதே. ஆயினும், அதை மற்ற வுபாயங்களெல்லாம் ஆகி, அதுவே யெஞ்சிநின்றால் அவ்வண்ணம் செய்யவேண்டியதே சரியாகும். ஆனால் அப்படித் தண்டிக்கும் காலத்தில் அத்தண்டனையின் முழுப் பிரயோசனத்தையும் பெறுமாறு செய்தலே தகுதி. பிதா அடித்தலும், மாதா அவர் முன்னிலையிலேயே ஆற்றுதலுங் கூடாது. எவ்விதத்திலும் நமக்கு அவர்கள் சீர்பெறுவதே நோக்கமாதலால், நமக்கு மிக்க எளிதான சாதனத்தை யுபயோகித்து நம் காரியத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

மேலும், 'தந்தைமகற்காற்று நன்றி யவயத்து முந்தியிருப்பச்செயல்' என்றபடி தந்தை தன் தனயனுக்குச் செய்யத்தக்க உதவிகளுள் மிகச் சிறந்தது அவனை எச்சபையிலும் முந்தியிருக்கும் வண்ணம் செய்யவேண்டுவதே. திருவள்ளுவர் பெருமான், தமது சாமர்த்தியத்திற்கேற்ப அரிய பெரிய விஷயங்களை நுண்ணிய இரு வரிகளில் அடக்கிவிட்டனர். ஒருவனைச் சபைக்கு முந்தியிருக்கச் செய்தல் இலகுவானதன்று.

'கற்றருட் கற்று ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்'

என்பது போன்றுஒருஸபாநாயகன் மிக்கக் கல்விகளில் மிகத்தேர்ந்தவனா யிருக்கவேண்டும். மேலும் பலரும் மெச்சத்தக்க நடத்தையுடையவனாயும் அவன் இருத்தல் வேண்டும். ஏனெனில், உபதேசத்தினும் அனுஷ்டித்துக் காட்டலே மேலானது. இக்காரணம்பற்றியே உலகினர் எவ்வண்ணம் நடக்கவேண்டுமென்ற விஷயத்தைச் சாஸ்திரங்களில் எடுத்துக் காட்டியிருப்பதுபோதாதெனக் கருதி, ஈசனே மானிடவடிவமெடுத்து நடித்துக்காட்டியிருக்கின்றனர். ஆதலால் பிறருக்குபதேசம் செய்யும் உபந்நியாஸி,தானே, 'காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதல் மறுத்தல்', ஔவியம் பேசல் போன்ற தீக்குணங்கள்பொருந்தினவனாயிருந்து,பிரஸங்க மேடையில்மட்டும் நல்லொழுக்கப் பயிற்சியைப்பற்றிப் போதிப்பானேல் அவனது வார்த்தைகளுக்கு மதிப்புண்டா? பழிப்பேயுண்டு. ஏனெனில் செல்வம் குறையின் நஷ்டம் ஒன்றுமில்லை. தேக சௌக்கியம் குறையின் சிறிது நஷ்டமுண்டு. ஆனால், குணங்கெடில் எல்லாம் நஷ்டமாகும். ஆதலால், ஒவ்வொரு உபந்நியாஸியும் நற்குணம் பொருந்தியவனா யிருத்தல்வேண்டும்.

'அவயத்து முந்தியிருப்பச் செயல்' என்னும் மகிமைபூண்ட ஒவ்வொரு பெற்றோனும் தனது மகவை 'சிம்பிலே வளையாதது தடித்தால் வளையுமா' என்றபடி சிறு குழந்தையாயிருக்கும்பொழுது முதற்கொண்டே சீர்படுத்தி வரவேண்டும். ஏனெனில் தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில் நிற்கும். மைந்தர்கள், சீர்குலைவதற்கு வாலிபப் பருவமே சான்ற காலமாகும். அப்பொழுதே அறியாமையும் முறட்டுத் தைரியமும் துஷ்டர்களின் சகவாஸமும் இன்னகாரியத்தைச் செய்தால் இன்னகாரியம் விளையும் என்ற முன்யோசனையின்மையும் உண்டாகும் காலமாகையால், அக்காலத்தில் அவர்களுடைய நடத்தை, ஸம்பாஷணை, பழக்கம் முதலிய ஒவ்வொன்றையும்பற்றிக் கவலைகொள்ளலோடும் அவர்களுடைய பழக்கவழக்கங்களெல்லாம் எவ்விதம் இருக்கின்றனவென்று அறிந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளை எல்லோரும்பெற்றுவிடுகின்றனர். பெற்றால் மட்டும் போதுமா! அவர்களை ஒரு குறைவுமின்றி வளர்த்து நல்வழிப்படுத்திப் பிள்ளையைச் சான்றோரெனக் கூறும்படி செய்வித்தலன்றோ துன்பம்! ஆனதுபற்றியே, குழவிகளை வளர்த்தலைப்பற்றிப் பெரியோரும்,

"மதலையைப் பெறுநாள் துன்பம்,
வளர்த்திடு நாளும் துன்பம்,
விதலைநோய் அடையில் துன்பம்,
வியன் பருவத்தும் துன்பம்,
கதம் உறு காலர் வந்து,
கைப்பற்றில் கணக்கில் துன்பம்;
இதம் உறல் எந்நாள் சேயால்
என்றைக்குந் துன்ப மானால்."

என்று கூறியுள்ளார்.

அவையத்து முந்தியிருப்பச் செயலுக்குக் கல்வி அவசியசாதனம். இம்மை மறுமைப் பயன்களைக் கொடுக்கவல்லதும்,எடுக்களடுக்கக் குறையாததும், உடையோனுக் குறுங்கேட்டை விலக்கவல்லதும், தன்னை விளக்கத்தக்கதும்,எவ்வித மயக்கத்தையு மறுப்பதற்குக் காரணமானதும் ஆகிய மிக்க யோக்கியதையை ஒவ்வொரு பெற்றோனும் தன் மகனுக்குக் காலத்தில் கொடுத்தல்வேண்டும். 'தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்', என்றபடி தந்தையே கல்விக்கு நாயகனாவான்; தநயனுக்கு எவ்வித செல்வம் வைப்பினும் அது ஒருகாலத்தில் அழிந்துபோம். ஆனால் இச்செல்வமோ,

வெள்ளத்தாலொழியாது வெந்தணலால்வேகாது
வேந்தராலும், கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழியக்குறைபடாது,
கள்ளற்கோ பயமில்லை காவலுக்கோ மிகவெளிது.

இத்தகைய பெருமைவாய்ந்த கல்வியின் பிரயோஜனத்தைப் பிள்ளைகளுக்குக் கொடாமல் அவர்களைப் பிறவிக்குருடர்களாகவும், ஊமைகளாகவும் ஆக்குதல் மிக்கப் பரிதாபம்!

ஆதலால், ஒவ்வொரு மாதாவும் பிதாவும் தங்கள் மக்கள் நல்லறிவும் நல்லொழுக்கமும் பெற்று உலகில் நற்பெயரெடுத்து ஓங்கிப் புகழ்பெறவும், தீர்க்காயுசும் திடகாத்திரமும் பெற்றுத் தன் குடும்பத்திற்கும் தாய் பூமிக்குமே ஒரு திலகம்போல் விளங்கவும், இவனைக் கண்டோர் பலரும் இவனைப்பெற இவன் தந்தை என்னோற்றான் கொல் எனப் பேசப்படவும் தக்கயோக்கியதையைப் பால்யம் முதற்கொண்டு உபதேசங்களினாலும் அனுஷ்டானத்தினாலும் முற்றுப் பெறச் செய்வித்து நற்பெயரை அடைவார்களாக.

சாஸ்திரமாணாக்கனது உறுதிமொழி

MESSAGE FROM A STUDENT OF SCIENCE

(332-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்காலத்திலும் பண்டைநாள் முதல், இத் தெய்வீக நகரம் கணித ககோள சாஸ்திரங்களின் இருப்பிடமாக விளங்குகிறது. இந்திய நாட்டு **டைகோ ப்ராஹ்** என்று புகழ்பெறத்தக்கவராகிய ராஜா ஜய ஸிங்க் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட **மனமந்திர** மென்னும் சோதிமண்டபம், இன்றும் வெளிநாட்டிலிருந்து வருபவர்க்கு ஆச்சரியத்தை யுண்டாக்கித் தன்னைக் கொண்டாடும்படிச் செய்கிறது. அவருடைய தூண்டுகோலினாற்றான், யவனசிகாமணியாகிய **யூக்லிட்** இயற்றிய க்ஷேத்ர கணிதத்தையும், **நேபியர்** இயற்றிய பரிகன்மங்க (Logarithms)ளையும் **பண்டித ஜகந்நாதர்** ஸம்ஸ்க்ருதத்தில் பாஷாந்திரப்படுத்தினர். பண்டிதர்களாகிய **பாபுதேவ சாஸ்திரியாரும் ஸுதாகர விவேதி**யரும் நமது காலத்தில் ராஜா ஜய ஸிம்ஹரது ஸம்பிரதாயத்தைக் கைப்பற்றி நிலைக்கச்செய்துகொண்டிருக்கிறார்களென நாம் கூறவேண்டிய தாவச்யம்.

இந்த ஹிந்து ஸர்வ கலாசாலையின் ஏற்பாட்டைப் பற்றி ஆரம்பத்தில் பேசத் தொடங்கிய காலத்தில் நான் அச்சத்திற்கு ஸமானமான கவலை கொண்டேன். தற்காலத்தில் உத்பவிக்கும் புதிய இந்திய நாட்டில் ஸமயவாதத்திற்குட்பட்ட படிப்பிற்கு இடங்கிடையாதென்று எனக்கு எப்பொழுதும் தோன்றியது. ஹிந்து ஸர்வ கலாசாலைக்குயிர் கொடுத்த பேர்கள், மேற்சொன்ன பாறையில் மோதாது தமது கப்பலை வெளியேற விட்டதற்கவர் கொண்டாடத்தக்கவ ராவர். மேலும், தமது கலாசாலை எவ்வகுப்பினர்க்கும், ஜாதிபேதமில்லாமல், இடந்தருமென்று அவர், தவறாக அபிப்பிராயப்படக்கூடாத விதமாகப் பகிரங்கப் படுத்தி யிருக்கின்றனர்.

சாங்கியத்திலும் கீதையிலும் கரைகண்டவாறே, யவன தத்வதர்சிகளாகிய **ஸாக்ரடீஸ், பிளேடோ** இவர்களுடைய தத்வத்தையு முற்றுணர்ந்து, கி. பி. 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்த முஸல்மன் வகுப்பைச்சார்ந்த ப்ரௌடசிகாமணியாகிய **ஆல்பெருனி** என்பவர், ஹிந்துக்களுடைய தன் மதிப்பையும், அற்பமான எவற்றினுடையுமுள்ள மதிப்புக் குறைவையும் பற்றிப் பேசும்பொழுது "யவனர் மிலேச்சரே: ஆனால் அவர்க்கே வானசாஸ்திரம் சொந்தம்—அவரிடத்தான் நாமதைக் கற்கவேண்டும்; அவரை நமது ரிஷிகளெனவே கொண்டாடவேண்டும்*" என்று பொருள் கொண்ட வராஹமிஹிரரது பிரௌடவாக்கை எடுத்தாண்டிருக்கின்றனர். கி. பி. ஆறுவது நூற்றாண்டிலிருந்த அந்த இந்திய வானசாஸ்திரியின் மொழிகளில் ஸமதிருஷ்டி குடிகொண்டு விளங்கியது.

நாளடைவில் சரித்ரத்தில் நடந்ததே மீண்டும் நடக்கும். பன்னீராயிரம் நூற்றாண்டுகளுக்கப்பால், நமது வானசாஸ்திர சிகாமணியாக விளங்கிய சேவைஜயஸிம்ஹ அரசர், தாம் ஏழுவருஷங்களாகப் பரீக்ஷித்து ஸ்புடமிட்ட கணக்கை ஒப்பிட்டு உண்மை உணர, ஐரோப்பியச் சமர்த்தனது உதவிக்காக போர்த்துகேசிய அரசராகிய எமேனுவெல் ராஜரது சபைக்குப் பிரதிகாரியக்காரர்களை அனுப்பினர். பூர்வத்திலும், இப்போதைய காலத்திற்போலவே சாஸ்திர பரிசீலனைத்துக் குடபட்ட ஹிந்துக்கள் தமது அனுபவங்களையும் கணக்குகளையும், தமது காலத்து ஐரோப்பியப் படிப்பாளிகள் தமக்கு ஊட்டக்கூடிய விஷயங்களையுமுட்கொண்டு, ஒப்பிட்டுச் சீர்ப்படுத்த கவலைகொண்டவர்களே என்பது இதனால் நன்கு வெளிப்படும்.

(எகிப்து தேசத்திலிருக்கும்) முன் அலக்ஸாண்டிரியா நகரத்தில் கிழக்குத்தேசத்தியபாவங்களும், மேனாட்டு பாவங்களும், அடிக்கடி மாறிக்கொண்டிருந்தனவென்பது இப்பொழுது உலகப்பிரஸித்தம். அவ்விடம் பிளேடோமதத்தைச் சேர்ந்த புதிய கட்சியார் வேதாந்த சாஸ்திரத்தின் நுட்பங்களைக் கற்றுக் கொள்ளத் தாமதங்கொள்ளவில்லை. இவ்வகையான ஞான ஸந்திப்பு பாக்டாட் நகரத்து அரசாண்டுவந்த காலிப்களின் காலங்களிலும் வளர்க்கப்பட்டு வந்தது. "சாஸ்திரவிஷயத்திற்கூட ஐரோப்பா இந்தியாவிடம் பெருங்கடன்கொண்டிருக்கிறது. ஏழாவது எட்டாவது நூற்றாண்டுகளில் ஆரபியர்க்குக் கணக்கு, பீஜகணிதம் இவற்றின் ஆசிரியர்களாக இந்தியர்விளங்கினர்; ஆரபியர் மூலமாகவே மேனாட்டார் எவருமவற்றைக் கற்றது. நாம் முற்சொன்ன சாஸ்திரங்களை ஆரபியப் பெயரால் கொண்டாடியபோதிலும், அக்கொடைக்கு நாம்இந்தியாவிற்கேகடன்பட்டிருக்கிறோம்" என **மெக்டோனல்ட்** என்பவர் பொருத்தமாகக் கூறியிருக்கிறார். ரஸாயனத்திலும், நம்மிடம் ஆரபியரும், அவர் மூலமாக ஐரோப்பியரும், பட்டகடனைப் பற்றி எனது ஹிந்து ரஸாயன சரித்ரத்தில் "முஸல்மான் மாணவர்கள், ஞானதாகத்தால் நமது கலாசங்க பீடங்களுக்குக், (இக்காசியு மதலடங்கியது தான்) கூட்டங்கூட்டமாகக் குவிந்து, ஞான ஊற்றினிடமாகிய அவ்விடங்களில்தமது மனவமைதிகொள்ள

*இதனோடு கீழ்வரும் நாலடியார்ச் செய்யுளை ஒப்பிடுக:—

தோணிபி யக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்றிகழார்—காணுய்
அவன் துணையா ஆறுபோ யற்றே நூல்கற்ற
மகன் துணையா நல்ல கொளல்,

ஞானபானஞ் செய்திருக்கின்றனர். அக்காலத்து, இந்தியாவுக்குச் சென்று நேர்பட ஞானஸ்தானங்களில் கற்பதே, ஒருவன் படிப்பை முடித்ததற்கு லக்ஷணமாகக் கொண்டாடப்படுவது வழக்கமாக இருந்தது" என்று கூறியிருக்கிறேன்.

இப்பொழுது நமக்கு அக்கடனைத்திருப்பி, ஒருவேளை வட்டிக்குவட்டியுடன் கூட்டியோ என்னவோ, கொடுக்கவேண்டியது ஐரோப்பாவின் கடனாகும். அஸாத்யமாகத் தோன்றினும், நம்நாட்டுக் கல்வியின் நிலை கீழ்பட நேர்ந்தகாலமும், ஐரோப்பாவில்கல்விக் கிளர்ச்சியுண்டாகிய காலமும் ஒரேஸமயத்தவாகி இருக்கின்றன. நான் முன்னரே ஜயஸிம்ஹரை இந்திய **டைகோப்ராஹ்** என்றுகூறினேன்; அவருடைய பிரயாசையாவது அவருக்குப் பின் வந்தவர்களின் பிரயாசையாவது, மேனாட்டுக் **கெப்லர்**போன்றவர் ஒருவரையாவது உண்டாக்கமுடியாது போயிற்று. கெப்லர்போன்றவர் ஏற்பட முடியாமையாலே பூமியின் ஆகர்ஷண சக்தியின் நெறிகளைக் கண்டுபிடிக்கக்கூடிய **ந்யூடன்** *போன்ற பெரிய சாஸ்த்ர விசாரமுடையவர், உண்டாவதற்கு இடமில்லாது போயிற்று. அந்தப் பெருமை ஐரோப்பாவிற் கென்றே தனித்து வைக்கப்பட்டது போலும்! **பேபர்** கூறியவாறு கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக்கூடிய **பாஸ்கரரே** கணித ககோளசாஸ்திர வானத்துலாவிய கடைசி ஜோதிபோலும். அவர்க்குப் பிறகு இந்திய வானசாஸ்த்ரம் மேனிலையில் ஓங்காது, தான் முதற்கிளம்பிய இடமாகிய ஜ்யோதிஷத்திலேயே முற்றும் மயங்க வாரம்பித்துவிட்டது. தேசபக்தி என்னும் வாஞ்சையாலுண்டாகு மயக்கமே சிலவேளை ஜனங்களை ஸரியான வழியைத் தாண்டி இருள் மூடிய வழிகளிலும், தவறான பாதைகளிலும் புகும்படிச் செய்துவிடுகிறது, நாம் ஜாக்ரதையுடனிருக்க வேண்டும். ஆசியா கண்ட முழுதும் இப்பொழுது புதிய அபீஷ்டங்களிடம் லக்ஷியமே உத்ஸாகத்துடனும் எழுச்சியுடனும் அவாவுடனும் விளங்குகிறது. பழைய பெருமையைப் பாடிக்கொண்டு நாம் கிணற்றுத் தவளைகளாக விளங்குவது நமக்கடாது. **வாரஹமிஹ்ரர**து ப்ரௌட வாக்கைக் கைப்பிடித்து, அவரது ஸமதிருஷ்டியையும் விசாலமனத்தையும் அடைந்து, மேனாட்டுக் கற்றுணர்ந்தாரிடம் கற்றுத்தான் ஆகவேண்டும்.

இக்காசிக்கு வரும் ஒவ்வொரு ஹிந்துபக்தனும் ஞானவாபியின் (அதாவது ஞான ததைத் தருங்கிணற்றின்) நீரைப்பருகாது போகான். இக்காசியிலிப்பொழுதேற்பட்ட, இந்த விச்வவித்பாலயம் உண்மையான ஞானவாபியாக இந்தியநாட்டுவெவ்வேறிடத்திருந்து கற்றிடவென்று குழீஇ வரும் மாணாக்கர் யாவருக்கும் விளங்குமென நான் நம்புகிறேன். சாஸ்திரத்தின் வெவ்வேறு பாகங்களைக் கற்பிப்பதற்கும், அசல் ஆராய்ச்சி விருத்தியின் விருத்திக்கும் தக்கவிதம் அளவற்ற நியமனங்க ளேற்பட்டுள்ளனவென்பது எனக்கு உண்மையான இன்பத்தைத் தர ஆதாரமாகின்றது. இக் கலா ஸங்கமானது இந்நாட்டில் புதிய சுகத்தை ஏற்படுத்திக் கீழ்நாட்டு மேனாட்டு லக்ஷியங்கள குலாவி தெய்விகம் பெற்று, இனிவரும் இந்திய நாட்டின் அபிவிருத்திக்கும் மேன்மையாக இனிக்க விளங்குமென நம்புகிறேன்.

இதுதான் வணக்கத்துடன் நான்கூறும் சுருக்கமான சங்கதி.

* நியூடன். - இவர் ஆங்கிலதேசத்து வான சாஸ்திரிகளுள் முதலில் நிற்பவர். பூமியின் ஆகர்ஷண சக்தியின் முறையைக் கண்டுபிடித்தவர். அவர் அவ்வாறு செயவதற்கு கெப்லர் பார்த்துவைத்திருந்த கணக்குகளே ஆதாரமாயிருந்தன.

ராமபட்டன்

(ஒரு சிறிய கதை)

RAMA BHATTAN (A SHORT STORY)

சிறுமானூர் ஜமீனுக்குப் புதிதாய் வந்திருக்கும் அதிகாரி, ராவ் பஹதூர் மாசிலாமணி முதலியார், நிரம்பக் கியாதி பெற்றவர். அவர் பெயருக்கு முன் நிற்கும் பட்டமே அதை நன்கு விளக்கும். டிவிஷன் டிப்டி கலெக்டரா யிருந்தபொழுது ரீ செட்டில்மெண்டில் சர்க்கார் வருமானத்தை ஒன்றரைப்பங்கு ஜாஸ்தி செய்வதற்கு வேண்டிய உதவி புரிந்தார். அடுத்த புதுவருஷ ஆரம்பத்தில், ராவ் பஹதூர் என்னும் பட்டம் கிடைத்தது. டிபார்ட்மெண்டில் விசேஷக் கியாதிபெற்று டில்லி தர்பாருக்குப் பிரதிநிதியா யனுப்பப்பட்டாரென்றால் இவர் யோக்கியதையைப்பற்றி நாம் ஜாஸ்தி சொல்லவும் வேண்டுமோ? தற்காலம் பென்ஷன் பெற்றவுடன், ஜமீன் அதிகாரியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இவ்வூருக்கு விஜயம் செய்த மூன்றாவது நாள் ராத்திரி, அவருடைய 3 வயதுள்ள அருமைப் புதல்விக்கு ஜுரம் கண்டது. அதிகாலையிலெழுந்து தன் சேவகர்களிலொருவனான காஸிம் என்பவனைக் கூப்பிட்டு 'இவ்வூர்பிரஸித்திபெற்ற டாக்டரை அழைத்து வா' என்று சொல்லி மீசையில் கைபோட்டு நுனிகளை முறுக்கினார். 'வயித்தியரேங்களா எஜமான்' என்று அவன் கேட்டதும், 'ஆமடா—க்ஷவரம்செய்துகொண்டு ஒரு வாரமாகிறது. நல்ல அம்பட்டனொருவனையும் உடனே அழைத்து வரவேணும். யாரடா அங்கே முருகா. கெட்டிக்காரனாயும் நல்ல கிளீனாய் இருப்பவனைக்கூப்பிடு..ஜல்தி' என்று ஆக்ஞாபித்தார். ஜமீனில் கீழ்ச் சிப்பந்திகளுக்குக் குறைவில்லை. கிங்கரர்களுடைய கிருதாமீசையையும்தாடியையும், குடியால்

சிவந்து உருண்டு விழிக்கும் கண்களையும்பார்த்தால் எமபடாளுக்கே யொப்பிடலாம். முதலியாரும் மீசைக்குப் பெயர்பெற்றவராகையால் அவர்களுக்கு ஏற்ற அதிகாரியே அவர். அதிகாரியும் படர்களும் நின்றால் 'மீசையும் இருதாவும், உன்னைப்பார் என்னைப் பார்' என்று வீரியம் பேசுவதுபோ லிருக்கும். இக்காரணத்தாலேயே இவருக்கு இவ்வூரில் வேலை கிடைத்ததென்று சாமானியர்களுள் பிரஸ்தாபம்.

காஸிம், முருகன் ஆகிய இரண்டு படர்களும் வெளியேவந்தவுடன் அவர்களுக்குள் ஓர் ஆலோசனை பிறந்தது. புதிய யஜமான் வந்தபிறகு வீட்டிற்குப் போக சாவகாச மேற்படுகிறதில்லை. வீட்டிற்குப் பக்கத்தில் ஜாதிப் பிள்ளைகள் வசிக்குமிடத்தில் அம்பட்டன் வீடிருப்பதாலும் முருகன் குடியிருக்கும் குடியானத் தெருவில் அவ்வூரில் பிரசித்திபெற்ற ஆயுர்வேத வைத்தியன் ராமபட்டன் வாசம் செய்வதாலும், இருவர்களு மெஜமானுடைய ஏவல்களைச் செய்வதுடன் தங்கள் வீட்டுக்கும் போய்வரலாமென்றெண்ணங்கொண்டு காஸிம் அம்பட்டனை அழைக்கவும், முருகன் வைத்தியனைக் கூப்பிடவுமாகப் பிரிந்தார்கள்.

ராமபட்டனென்பவன் ஜாதியிற் கூத்தாடி, அவன் தாய் ஒரு பிரசித்திபெற்ற தாசியா யிருந்தாள். அவளை ஓரருமை ஆயுள்வேத வைத்தியன் வைப்பாக வைத்திருந்தான். அக்காலத்தில் பிறந்த அந்த ராமபட்டனுக்கு,அவ்வைத்தியன் தானறிந்தபூராவித்தையையும் சிறந்த மூலிகைகளின் குணங்களையும் வஞ்சனையற்று உபதேசித்தான். சிறு வயது முதல்,ஸம்ஸ்கிருதத்திலும் மலையாளத்திலும் அப்பியாசம் செய்வித்துத் தக்கவயதில் அஷ்டாங்கஹிருதயமுறைகளனைத்தையும் நன்கு கற்றுவைத்தான். ராமபட்டனுடைய தகப்பன் மிக்க பிரசித்திபெற்றவனாகையால் பலவூர்களுக்கும் சென்று வைத்தியஞ்செய்யும்பொழுதுராமபட்டனையு மழைத்துச்சென்று அவனையும் கைபார்க்கச்சொல்லி, அவனைமுன்வைத்தே ஏதுகாரியமும் செய்ததால் அனுபோகத்தால் தாதுப்பரீக்ஷையிலும், வியாதி யின்னதென்று தீர்மானிப்பதிலும்,சிறந்த பயிர்ச்சியை யடைந்தான். வைத்தியனிருக்கும்பொழுதேமகனுக்குப்பிரசித்தி ஏற்பட்டுவிட்டது. ராமபட்டனுக்குத் தற்காலம் வயது அறுபதிருக்கலாம். காது கேட்பது கொஞ்சம் மத்திமம்.

முருகன் தன் வீட்டுக்குச்சென்று கஞ்சி குடித்து குழந்தைகளுடன் கொஞ்சி வார்த்தையாடிவிட்டு வைத்தியரிடம் வந்து 'புதிய அதிகாரி அவசரமாய்க் கூப்பிடுகிறார்' என்று தெரிவித்தான். 'என்ன விசேஷம்—யாருக்கு உடம்பு அசௌகரியம்' என்று வைத்தியர் கேட்டார். 'அவிங்க வீட்டுக்கொளந்தைக்கு ஜொரம்போலிருக்குதுங்க. நேரம் பண்ணப்படாதுங்க. உங்க போகலாம்' என்றுசொல்லிக்கொண்டு தன் கையிற்பிடித்திருந்த பூண்கட்டிய சதங்கைகள் தொங்கவிட்டிருந்த தடியைக் குலுக்கினான். காவல்காரன் விடும் வழியில்லையென்று தெரிந்த வைத்தியர் எழுந்து பல்விளக்கி முகத்தைக் கழுவி விபூதி தரித்து இடையில் சுப்பிரமான ஆடையுடுத்தி தலைக்குச் சரிகை முண்டாசு கட்டிச் சால்வையை மேற்போர்த்திச் சிறிய மருந்துப்பெட்டியை ஒரு பட்டுத்துணியிற்சுற்றிக்கமுக்கட்டையில்மறைவாய் வைத்து அதிகாரி வீட்டுக்கு முருகனுடன் வந்தான். பங்களாவின் வாசலில் சாய்வு நாற்காலியில் அதிகாரி முந்தியமாதத்திய 'விவேகபோதினி' சஞ்சிகையைப் பிடித்துச் சாய்ந்து வாசித்துக் கொண்டிருந்தார். முருகனுடனொருவன் வருவதைக்கண்டு 'டேய் ஒரு பலகாய் கொண்டுவந்து போடடா' என்று கட்டளையிட்டார். ஒரு சேவகனோடி பட்டகசாலையிலிருந்து ஒருமணையை எடுத்துவந்து நாற்காலியின் சமீபத்திலிட்டான். வைத்தியரும் வாயிற்படியண்டை வந்தவுடன், செருப்பைக் கழற்றிவிட்டு வணக்கத்துடன் கும்பிட்டுப் படியேறி, அதிகாரியண்டை போட்டிருந்த ஆசனத்தில்புன்சிரிப்புடனமர்ந்தார். வைத்தியருட்காரும்வரையவரையுற்றுப்பார்த்துக்கொண்டிருந்த ராவ்பஹதூருக்கு அடங்காக் கோபம்வந்துவிட்டது. 'யாரடா இவன்—முட்டாள்-அயோக்கியப் பயல்—ஜம்பமாய் சரிகைமுண்டாசு கட்டிக்கொண்டு எனக்காகப் போடச்சொன்ன மணையின்மேல் கோத்திபோலுட்கார்ந்திருக்கான். சால்வைபோர்த்திக்கொண்டிருந்தால் ராங்கி யுயர்ந்துவிட்டது போல இருக்கு இந்தப் பயலுக்கு' என்று முதலியார் சொன்னபோது, சால்வை என்றசப்தம் காதில் கேட்டதும் வைத்தியர்,'ஆமாங்கஜமீன்தார்கொடுத்ததுங்க' என்று சால்வையின் கரையைப் பிரித்துக் காட்டினார். இதைப்பார்த்த ராவ் பஹதூருக்குக் கோபமதிகரித்தது.'டேய் வாங்கடாஇங்கே—குடுக்கிற உதையிலே ஊரை விட்டோடவேணும் இந்த அம்பட்டன்' என்று அட்டகாசம்செய்தார். அதிகாரி முடிவிற் சொன்ன பட்டன் என்ற சொல், அரைகுறையாய் காதில் கேட்டதும்' 'ஆமாம் என்பேர் ராமபட்டன்தான்' என்று கம்பீரமாய்ச் சொன்னார். முதலியாருக்குக் கண்ணிற் றீபறந்தது. 'டேய்-டலாயத்து—இங்கே வர்ஜாவர்ஜ மில்லாமற்போச்சுது. நான் டிப்டி கலெக்டராயிருக்கும்பொழுது இவனிப்படிச் செருப்புப் போட்டுக்கொண்டும் சால்வையைப் போட்டுக்கொண்டும் என்முன் ஆசனத்திலுட்காரத் துணிவானா; உடனே ஆறுமாதங் கடுங்காவலல்லவா? இவனைப் பிடித்து வாயிற் கம்பத்திற்கட்டி அவனுடயோகித்த செருப்பாலேயே யவன் முதுகிலைம்பதடி என் கண் முன் அடிக்கவேணும்' என்று அரவம் போட்டார். அதிகாரி சொன்னவற்றிற் சில வார்த்தைகளைக் கேட்டு ஏதோ கோபிப்பதாக அபிப்பிராயப்பட்டு ஆசனத்தை விட்டெழுந்து கீழே இறங்கி நடந்தார். அப்பொழுதுதான் காஸிம், நாவிதனை யழைத்துக்

கொண்டு வாயிற்படியண்டை வந்தான். அம்பட்டனும் சாமி சாமி என்று அதிகாரியையும் வைத்தியனையும் கும்பிட்டு நின்றான். 'இவன் யாரடா; இவர்களுக்குள்ளேயே மரியாதை பலமாயிருக்கு' என்று சொல்லிக் காஸிமைக் கூப்பிட்டு "நீயேன் இன்னுமொரு அம்பட்டனையழைத்து வந்தாய்; உனக்குப் புத்தியிருக்கிறதா? ஒரு நாவிதனிடம் பட்ட அவமானம்போதாதா? அவனெங்கடா ஓடரான். பிடித்துக் கட்டுங்கோடா" என்று ராமபட்டனைப் பிடிக்கச் சேவகர்களை ஏவினான். அருகில் நின்றுகொண்டிருந்த டலாயத்து பிசகையறிந்து 'எஜமான்—முருகனழைத்துவந்தவர் இந்த ஊர்வைத்தியருங்க, அவர் பெயர் ராமபட்டன், நல்லமரியாதைக்காரருங்க. தாங்கள் சொன்னதைக் கேட்டுக் கோவிச்சுட்டுப் போராங்கபோலிருக்குது' என்று சொல்லி ஓடி வைத்தியரைத் தடுத்து மீண்டும் வரும்படி வேண்டினான். 'செருப்பு கிறுப்பு என்று ஏதோ தாறுமாறாய்ப் பேசுகிறார். ஜமீன்தார்கூட என்னைக் கண்டவுடன் நாற்காலியி லுட்காரச்செய்து மரியாதைசெய்வார். மணையிலுட்கார்ந்ததற்கு இவருக் கிவ்வளவு கோபமா? இதைப்பற்றி நானரண்மனைக்குப் போகும்போது தெரிவிக்கிறேன்' என்று வைத்தியர் தனக்கு நேர்ந்த அவமானத்தை மனதில் வைத்துக்கொண்டு கோபத்துடன் வீட்டைநோக்கி விரைவாய் நடந்தார். அம்பட்டனை யழைத்துவரும்படி யனுப்பப்பட்ட முருகனுடன் கூடவந்தவைத்தியருடைய வேஷத்தாலும் நடையுடை பாவனைகளாலும் கமுக்கட்டையிலிருந்ததை யடப்பமென்றெண்ணியதாலும் முதலியார் இவனையோர் பிரபலமான ஜமீன் நாவிதனென்று மதித்தாராதலால் தானுட்கார்ந்து க்ஷவரம் செய்துகொள்ளப் போடப்பட்ட மணையில் அம்பட்டனமர்ந்ததைப் பார்த்த ஜமீனதிகாரியும் ராவ் பகதூர் பட்டம்பெற்ற பென்ஷன் டிப்டிகலெக்டருமான நம் முதலியாரிவரை யிதோடு விட்டதும் ராமபட்டனதிருஷ்டமென்றே சொல்லவேண்டும். தற்காலம் அதிகாரிக்கு மாஜிஸ்டிரேட் உத்தியோக மில்லாமலிருந்ததால் நிரபராதியான வைத்தியர் ஆறுமாதங் கடுங்காவலிலிருந்து தப்பஹேதுவாயிருந்தது.

முதலியார் முருகனை விளித்து'அம்பட்டனையழைத்து வரப்போன நீ, ஏனிந்தக் கர்னாடக வைத்தியனையழைத்துவந்தாய்?—அதிருக்கட்டும்,இவ்வூரில் நல்ல இங்கிலீஷ் வைத்தியம்தெரிந்த டாக்டரொருவருமில்லையா? இந்தப் பண்டிதக்கார பெக்கர்கள் யாருக்கு வேண்டும்? போனதேநல்லதாய்ப்போச்சு; வீரம்பூரம் என்று எதையாவது பச்சைவெட்டை வைத்துக் கொலைபண்ணிப் போடுவான். டாக்டருண்டா, இல்லையாடா' என்று அதட்டினார். 'பத்து மயிலுக்கப்பால் டவுனில் ஆஸ்பத்திரி டாக்டரிருக்கிறாங்கோ.' என்று முணுமுணுத்துச் சொன்னதை முழுவதும் செவிகொடாமல், டவுனுக்குச்சென்று டாக்டரை உடனே கூட்டிவரும்படி ஜமீன் வண்டியுடன் சிறிய டலாயத்தை யனுப்பினார்.

வபனம் செய்துகொள்ள ஆசனத்தி லுட்கார்ந்தார். அம்பட்டன் க்ஷவரம் செய்துகொண்டிருக்கும்பொழுது உள்ளேகுழந்தையின் ரோதனசப்தம் கேட்டது. உடனே அதைப் போய்ப்பார்க்கப் பரபரப்புடனெழுந்ததால் கையிலிருந்தகத்திபட்டுமுதலியாரின் இடது தோள்பட்டையில் பலத்தகாயம்பட்டு இரத்தம் பெருகிற்று. முதலியாருக்குப் பிரமேகரோகம் உண்டாதலால் ரத்தத்தைக் கண்டதும் அவருக்கும், அவர் பாரியை, தாய் இவர்களுக்கும் பயம் பிடித்துக்கொண்டது. முதலியார் அம்பட்டனை பலமாய் ஐந்தாரடிகள் கைகொண்டடித்தார். இந்த அதிர்ச்சியால் ஜாஸ்தி ரத்தம் சுரந்தது. அடியையும் பட்டுக்கொண்டு அம்பட்டன் நல்ல வைத்தியனாதலால் எழுந்தோடி ஒரு பச்சிலையைக் கொண்டுவந்து அதைக்கையில் வைத்துக் கசக்கி, காயத்தில் வைக்க முயன்றான். முதலியாருக்குக் கோபமதிகரித்தது எல்லோரும் சேர்ந்து என்னைக் கொல்ல ஏற்பாடு செய்தீர்களா' என்று கையை மறுபடியுமோங்கினார். அம்பட்டன் பயந்து, 'பச்சிலை, காயத்தையுடனேஆத்திவிடும். கருப்பண்ணசாமி சாச்சியாச்சொல்லரேங்க, இல்லாட்டா என்னை எப்படி வேணு சிச்சியுங்கோ' என்றான். அவன் கன்னத்தில் பளீர் என்று ஒரு அரை கொடுத்துவிட்டு 'இந்த மூடர்களைக் கட்டிகொண்டு என்ன செய்கிறது? இப்படிப் பண்டிதர்களும் அம்பட்டர்களும் வைத்தியம்பண்ணத் தொடங்கித்தானே ஊரெல்லாம் பாழ்த்துப்போறது. இல்லாதேபோனா ஏனிப்படி ஜனங்கள் சாகிறது? முட்டாள்கள்—ரிஜிஸ்தர் செய்யப்படாத ஒரு வைத்தியனையும் நம்பக்கூடாது. நம்பினால் தலைக்குக் கல்லுதான்' என்று சொல்லி, ரத்தத்தைத் துடைத்து ஈரத்துணியை வைத்துக் கட்டினார். இவருடைய வயது முதிர்ந்த தாய்,பச்சிலையை வைத்துக்கட்டிக் கொள்ளும்படி கெஞ்சியும் கொஞ்சமேனு மிடங் கொடுக்கவில்லை. 'கர்னாடகம், உனக்கென்ன தெரியும்' என்று அதட்டி யனுப்பி விட்டார். நாவிதனும் வேலையைப் பூராவையும் செய்து முடிப்பதற்குள் இனியுமெவ்வளவு பிரகாரங்கள் கிடைக்குமோவென்று சரீரமாத்தியந்தம் நடுக்கமுற்றுக் கையிலெடுத்த கத்தியைக் கீழேவைத்துவிட்டு நின்றான். ராவ் பஹதூருக் கென்னசெய்வதென்று தோன்றவில்லை. கைநடுக்கத்துடன் அவனை வேலை செய்யச்சொல்வது தனக்கே அபாயமென்றறிந்து வேறு நாவிதனை யழைத்துவரும்படி உத்திரவு செய்தார். முன் செய்தவனுடைய விஷேச வேண்டுகோளில்லாமல், அரை வேலையில் மற்றொருவன் வந்து பாக்கி வேலையைச்செய்து முடிப்பது அத்தொழில்காரர்களுக்குள் வழக்கமில்லை. அதிகாரியின் சுபாவத்தையறிந்த இந்நாவிதனுக்கும் இவ்வேலையை முடிக்கச் சிபார்சுசெய்யத் துணியான்

டலாயத்தும் வேறு சேவகர்களும் அம்பட்டர்களை ஊரெங்கும் தேடத் தொடங்கினார்கள். இதற்குள் நாவிதனுக்குப் பிரஹாரம் கிடைத்த சங்கதி ஊரெங்கும் பரவியதுமன்றி அன்று சனிக்கிழமையாதலால் நாவிதர்கள் தங்கள் தொழில் செய்யுமிடங்களில் கூடாமல் கள்ளைக்குடித்து ஊரைவிட்டு வெளியே ஒரு மாரியம்மன் சாவடியில் சூதாடிக்கொண்டிருந்தார்கள். யோக்கியர்கள் வேறு வேலையைச் செய்யும் வியாஜமாய் வெளியேகியிருந்தார்களாகையால் சரியான தொழிற்காரனகப்படுவது அசாத்தியமாயிருந்தது. சாவடியிற் சூதாடும் துப்பறிந்த ஒரு படன் அங்கு ஓடி அவர்களை யழைத்தான். சூதாடுவதற்காக தண்டிக்கக் கூப்பிடுகிறானென்று பயந்து 'இதோ வருகிறோ'மென்று சொல்லி அங்குமிங்கும்போய் மறைந்து கொண்டார்கள். நாவிதர்களைத் தேடிப் படர்கள் திரிகிறார்களென்று தெரிந்து பயம்பிடித்து ஒவ்வொருவரும் அங்கங்கே பதுங்கினார்கள். டலாயத்து வெகு தந்திரம் செய்தும் சரியானவன் யாரும் கிடைக்கவில்லை. முடிவில் ஒருவயதுமுதிர்ந்த கிழவனை யடப்பத்துடனழைத்து அதிகாரியினிடம்கொண்டுபோய் நிருத்தினான். 'ஊரில் இந்தக் கிழந்தானுடா அகப்பட்டது. வேறே யாருமில்லையா' என்று சொன்னார். இதனுள் வந்தகிழவன் தன்னுடைய பழைய கிழிந்துபோன அடப்பத்தை எடுத்து முன்னால் வைக்கப் போகையில் அசைவுற்றசொறியும் ரத்தகாயங்களுமுள்ள அவன் கைகளிலிருந்து அது கீழே விழுந்து பல ஆயுதங்களும் சிதறின. தண்ணீர்வைக்கும் கிண்ணம், முதலியார் மடியில் விழுந்தது. முதலியார் வெறுப்புடன் அதையெடுத்துக் கிழவன்பேரில் எறிந்தார். கிழவனுக்கு முழங்காலில் காயம்பட்டது. எல்லா சாமான்களையும் பொறுக்கி அடப்பத்திலிட்டு நொண்டிக்கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான். மறுபடியும் பழைய நாவிதனைக் கூப்பிட்டு நல்ல வார்த்தை சொல்லி, வேலை செய்ய உத்திரவு கொடுத்தார். அவன் வெகு நிதானத்துடனருகே வந்து கத்தியை எடுத்துத் தோலின்மேல் துடைக்கும்பொழுது அதிகாரி மீசையின் நுனிகளை முறுக்கினார். இதைத் தற்செயலாய்ப் பார்த்ததும், அம்பட்டன் கையிலிருந்த கத்தி நழுவிக் கீழே விழுந்தது. உடனே தலையிலொரு குட்டைச், சம்மானமாகப்பெற்றுப் பயந்து ஒதுங்கி நின்றான். இதற்குள் மணி இரண்டாச்சுது. அதிகாரிக்குக் காலைக் காப்பிமட்டுந்தான் ஆயிருந்தது. க்ஷவரம் முடிந்து ஸ்னானஞ் செய்தல்லவோ போஜனம் முடிக்கவேண்டும். இந்த சமயத்தில் டவுனுக்குப்போயிருந்த வண்டியின் சப்தம் காதில்பட்டது. அங்கு நின்ற அம்பட்டனும் உத்திரவில்லாமல் மறைந்துவிட்டான். 'டாக்டர் வந்துட்டாருங்க' என்று ஒரு சேவகன் ஓடிவந்து சொன்னான். முதலியாருககு முகத்தில் மட்டும் அர்த்தக்ஷவரமாயிருந்தது. வேறு அம்பட்டனும் அகப்படவில்லை. என்னசெய்வதென்று ஏக்கம் பிடித்திருந்தார். டாக்டர் வண்டியை விட்டிறங்கி முதலியாரிடம் வந்து (குட் மார்ணிங்) என்று கையை நீட்டினார். முதலியார், அம்பட்டன் தீட்டானதால், தன் கையை நீட்டாமல் "தயவு செய்து உட்காருங்கோ. நான் க்ஷவரம் செய்துகொண்டிருக்கிறேன். இன்னும் முடிந்தபாடில்லை. காயப்படுத்தியதாலவனை முடிக்கிவிட்டேன். வேறே யாருமகப்படவில்லை. இந்தக் காயத்தைப் பாருங்கோ; வலிக்க ஆரம்பித்துவிட்டது. எனக்குப் பிரமேக வியாதியுண்டு' என்று தோளைக் காட்டினார். டாக்டர் அதைப் பரிசோதித்து 'குழந்தைக்கு ஜுரம் என்று சொன்னதால் அதற்குமட்டும் மருந்து கொண்டுவந்தேன்; இதற்கு வேண்டிய சாதனங்களில்லை. இந்த விவரம் தெரிந்திருந்தால் (டிரஸ்) செய்யச் சாமானெல்லாம் கொண்டுவந்திருப்பேன். (நெவர் மைண்டு) என்று கொஞ்சம் வென்னீர் ஜலத்தைவிட்டு காயத்தைக் கழுவிக் கொஞ்சம் பஞ்சை நனைத்துப்பிழிந்து கட்டிவிட்டார். முதலியாருக்கு அம்பட்டனுடைய பாதை பெரியதாயிருந்தது. இதைப்பற்றி டாக்டருடன் பலமுறை சொன்னார். டாக்டர் தினம் முகக்ஷவரம் செய்துகொள்ளும் வழக்கமுள்ளவராகையால் அந்த வித்தையில் கொஞ்சம் பயிற்சியுண்டு. நெவர் மைண்டு என்று சொல்லி முதலியாரின் சொந்தக் கத்தியைக்கொண்டு முகத்தில் பாக்கியையும் க்ஷவரம் செய்துவிட்டார். 'இன்று தலை தப்பினது தம்பிரான் புண்ணியமாதலால் தலை க்ஷவரம் நாளைக்காகலாம்'என்று சொல்லிக் குழந்தைக்குக் கையைப் பார்க்கும்படி டாக்டரை உள்ளேயனுப்பி தான் ஸ்னானஞ்செய்துவந்தார். 'குழந்தைக்கு நல்ல டைபாய்டு பீவர் (Typhoid fever) என்று அவர் வந்தவுடன் சொன்னார். அதைக் கேட்டதும் முதலியாருக்குப் பயம்பிடித்தது. 'அதிருக்கட்டும். நீங்கள் ரிஜிஸ்டர்டு டாக்டர்தானே' என்றார் முதலியார். 'ஆம்—நான் கவர்ன்மெண்டு ஆபீசர்—அஸிஸ்டண்டுசர்ஜன்' என்றார். ஆனால் பயமில்லை. ஸார் என்குழந்தை பிழைக்கும், என் காயமும்சொஸ்தமாகும். நாட்டுவாக்ஸ்களெல்லாரையு மெப்படி ஸார் நம்புகிறது? நான் மாஜிஸ்திரேட்டாக ஆக்டிங்கானது முதல், டிப்டி கலெக்டராகி நாளதுவரை ஒரு நேடிவ் வைத்தியனையும் கண்ணாலேகூடப் பார்த்ததில்லை ஸார். அது உங்களுக்குத்தெரியுமா ஸார்' என்று சொல்லிவிட்டு முதலியார் போஜனம் செய்ய உள்ளே சென்றார்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

'த்ராவிடாபிமானி' ** இதில கல்வி, வியவஸாயம், கைத்தொழில், மத ஸம்பந்தமான விஷயங்கள், மற்றும் பல சமாசாரங்களும் அடங்கியிருப்பதோடு ஸ்திரீகளுக்கான பக்கங்களும் சிறுவர்களுக்கானபக்கங்களும் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. ** தன் பேருக்கேற்ப இப்பத்திரிகை அறிவைப் பரவச் செய்யும் என்பதற்கு ஐயமில்லை.

மாதவீகங்கணம்

மூன்றாம் பாகம்

அத்யாயம், 1

பாணிக்ரஹணம்

நவகுமாரரும் அவருடைய தர்ம பத்னியும் பலவருஷ காலங்கழித்து மறுபடியும் தேவிபுரத்துக்கு வந்தார்கள். வெகு நாள் பர்யந்தம் தாம் இழந்திருந்த மன்னனைத் திரும்பவும் தமதுநாட்டில் வரப்பெற்ற தேவிபுர ப்ரஜைகளுக்குப் பரமஸந்தோஷம் உண்டாயிற்று. ஊரெல்லாம் ஒரே ஆனந்தம். எங்கு பார்த்தாலும் குதூகலம். அன்றையதினம் ஜமீனிலுள்ள நாடு நகரங்கள் எல்லா விடங்களிலும் பண்டிகை கொண்டாடப்பட்டது. சுற்றுப் பக்கத்து க்ராமங்களிலிருந்து ஜனங்கள் திரள்திரளாய்த் தேவிபுரத்துக்கு வந்துகொண்டிருந்தனர். தங்களுடைய பழய ஜமீன்தார் தமது நாட்டைத் திரும்பப்பெற்றுக் களிப்புற்றிருப்பதைக்காணும்நிமித்தம் குடிகள் அரண்மனை வாயிலண்டை கூட்டங்கூட்டமாய்க் கூடியிருந்தனர். அழகிற் சிறந்த பெண்ணரசியாம் ஹேமலதையைக் காணவந்த மங்கையர்கள் எல்லோரும் அக்கன்னிகையின் அழகையும், அவளுக்கேற்ற புருஷனையும், அவளுடைய கல்யாணத்தையும் பற்றியே இடைவிடாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப்புர முழுதும் விவாக வார்த்தையே சப்தித்துக்கொண்டிருந்தது. என்னதான் நவகுமாரரும் ஹேமலதையும் இருந்து விட்டாலும், கோகுலதாஸை மறந்து விடலாமா? அவரைச்சுற்றி அவரைப்போன்ற வயோதிகர்களான ப்ரபுக்கள் சிலர் காணப்பட்டனர். கொஞ்ச காலத்துக்குள் தேவிபுர ஜமீனும் அதை ஸம்பந்தித்த உலகவர்த்தமானங்களும் அடைந்த நானாவித மாறுபாடுகளையும் அதிர்ஷ்ட துரதிர்ஷ்ட மாறுதல்களையும்பற்றி எல்லாம் பகவானது செயலெனப் பேசிக்கொண்டிருந்தனர். எல்லாம் பத்து இருபது வருஷங்களுக்குள் வங்காள ராஜ்யத்தில் ஏற்பட்ட வேறுபாடுகளைக் கண்டு அவர்கள் அதிசயித்தார்கள். கிணறு குளங்களண்டை கூடியிருந்த ஸ்த்ரீகள் நவகுமாரரின் மனைவியினுடைய நற்குண நல்நடத்தைகளைப் பற்றியும், அவளுடைய பரோபகார சிந்தையைப்பற்றியும், அவள் தனதுநாதருக்கு நேரிட்ட கஷ்ட நஷ்டங்களைக் குறித்து அல்லும் பகலும் தெய்வங்களுக்கு முறையிட்டுக் கொண்டதைப்பற்றியும், ஸ்வாமி அவளுடைய ப்ரார்த்தனைகளைச் செவிசாய்த்துக் கேட்டுக் கடைசியில் அவளுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைத்த விதத்தைப்பற்றியும் ஒருத்தியுடன் ஒருத்தி ஓயாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறாக அன்றையதினம் முழுவதும் நவகுமாரர் பெற்ற பேரையும் பதவியையும் பற்றிப் புகழ்வதிலேயே கழிந்தது.

உண்மையில், நவகுமாரருக்கு உண்டான ஜயத்துக்கு முக்ய காரணம் தெய்வமன்று. கோகுலதாஸ் சலிக்காமல் இரவும் பகலுமாய் உழைத்ததின் பயனாக தேவிபுரம் நவகுமாரருக்குக் கிடைத்தது. இந்த உண்மை நவகுமாரருக்கே நன்கு தெரியும், "கோகுலதாஸ், நீர்தான் எனக்கு ஆப்த மித்ரர். அந்தக்கரணசுத்தியாய் நீர் என் விஷயத்தில் உழைத்ததின் பலன் இப்போது ஸித்தித்தது கஷ்டம் வந்தகாலத்து என்னை விட்டுப் பிரியாது என்னுடனே யிருந்து, எனக்குத் தேறுதல் கூறிக்கொண்டு அதே ஸமயத்தில் என் நன்மையைக்கோரி எவ்வளவோ உழைத்துவந்த தங்களுக்குத் தக்க கைம்மாறு என்ன செய்யப்போகிறேன்! நானும் என் குடும்பத்தாரும் மாத்ரமேயன்று; தேவிபுரத்துக் குடிகளெல்லோருங் கூடத் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். உம்மாலன்றோ, தேவிபுரமும், தேவிபுரத்து அதிபதியும் தம் பழையநிலைமையை அடைந்தனர்? ஜமீனினுடைய பெயரையும் கீர்த்தியையும் நாசமுறாமல் காப்பாற்றிய புருஷர் கோகுலதாஸ்தான் என்பதற்குச் சிறிதளவும் ஐயமில்லை."

"ப்ரபு, அடியேன் இவ்வளவு மர்யாதைக்கு அருகனன்று. நம்முடைய யத்தனத்தில் என்ன இருக்கிறது? எல்லாம் பகவானுடைய க்ருபை. காலம் வந்துவிட்டால் எல்லாம் தானே நடந்தேறுகிறது. மனுஷ்ய ப்ரயத்னத்தில் என்ன இருக்

கிறது? வேளை ஒத்துக்கொண்டால் நமக்கும் அதற்கேற்ப புத்தி தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் தங்களுடைய நல்லதிர்ஷ்டம் தான் முக்யமான காரணம். ஈச்வர க்ருபையிருக்கவேண்டும். என் ஆயுள் முடிவதற்குள் இன்னொரு ஜமீனும் தேவிபுரத்துடன் சேரவேண்டும். அதுதான் என் மனப்பூர்வமான கோரிக்கை."

"கோகுலதாஸ் இருக்குமட்டும் ஒன்றுக்கும் குறைவு வராது. அவர் போடுகிற முடி, பலமான முடியாய்த்தானிருக்கும். இருந்தாலும் சிறிது ஜாக்ரதையாயுமிருக்கவேண்டும். யானைக்கும் அடிசருக்கும். எவ்வளவு ஸாமர்த்யவானாயிருந்தாலும், சில வேளைகளில் அவன்கூட ஏமாந்துவிடுகிறான். ஆகையால் கருத்தாயிரும். இந்த விஷயங்களில் என்னிடமிருந்து தாங்கள் அறிந்துகொள்ள வேண்டியது ஒன்றுமில்லை."

நவகுமாரருடைய மனைவியோ கோகுலதாஸைப்பற்றி யொன்றும் பெருமையாய்ப் பேசவில்லை. பராமுகமாயிருந்துவிட்டாள். அவள் அவருடன் முகங்கொடுத்து வார்த்தை சொல்லவில்லை. அவளைக் காண்பவர்கள் யாவரும் அவள் உலகவாழ்க்கையில் அதிகப் பற்று வைக்காமல் வரவர அவ்விஷயங்களில் அசட்டையாயிருக்கிறாளெனக் கூறலாயினர். ஸதாஸர்வகாலமும் 'பூஜையும் பூஜாக்ருஹமுமே தொழிலாயிருந்தனள்.'

ஸம்ஸாரத்தில் என்னதான் வெறுப்புக்கொண்டாலும், பால்ய நாட்களின் சுகங்களும் அப்போதைய அனுபவங்களும் எளிதிற் மறக்கக்கூடியவைகளோ! அந்த அரண்மனையில் எங்கு சென்றாலும் அவளுக்குத் தன் யௌவன பர்வத்தின் ஞாபகங்களே வந்துகொண்டிருந்தன. தான் அந்த க்ருஹத்துக்குப் புதிய மருமகளாய் வந்த நாளும், அப்புறம் தான் யஜமானியாய் அவ்விடத்தில் உலாவிய நாட்களும், தன் பிறந்தகத்து நினைவுகளும் அவள் மனதில் உதித்துக்கொண்டேயிருந்தன.

அரண்மனையும், நந்தவனங்களும், கோயில்களும் குளங்களும், தோப்புகளும் துறவுகளும் யாவும் முன்போலவேதான் இருந்தன. ஒன்றும் வேறுபாட்டையவில்லை. ஆனால் யௌவனபர்வத்தில் அவளுடைய மனதை ஸந்தோஷிப்பித்த எண்ணங்களும் நினைவுகளும் மறைந்துவிட்டன. வஸ்து முன் வஸ்துதான்; அவற்றைப் பார்க்கும் கண்ணாடிமாத்ரம் மாறிவிட்டது. அந்தக் காலத்தில் ஸூர்யோதய ஸூர்யாஸ்தமன ஸமயங்களில் அவள் அனுபவித்த உத்ஸாஹமும் குதூகலமும் அடியோடு போய்விட்டன. இப்போது காலை ப்ரகாசம் கழிந்துவிட்டது; மாலை இருள் வந்து மூடிக்கொண்டது. வ்ருத்தாப்ய தசை தொடங்கிவிட்டது. இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் வெறுத்தனள். வருங்கால சிந்தனையே அதிகமாயிற்று. போகிற வழிக்கு ஏதாவது புண்யம் தேடத் தலைப்பட்டனள். முன்னரே அவள் சிறந்த தெய்வபக்தியும் ஆசாரமும் உடையவள் எனக் கூறியிருக்கின்றோம். இப்போது அக்குணங்கள் பதின்மடங்காய் அதிகரித்தன. ஸம்ஸார பந்தங்களினின்று நீங்கிப் பிறவிக்கடலைக் கடந்து பகவானது பாதகமலங்களை யடையும் நாள் என்றோ என ஏங்குவாளாயினள். எப்போதும் இதே சிந்தனையாய்த்தான் இருந்தனள்.

விவாஹமாகித் தேவிபுரத்து ராணியாய் வந்தபின்புதான் அவள் கோகுலதாஸை முதல்முதல் கண்டாள். அவனுடைய எழ்மையையும் அவனுடைய சாந்த குணத்தையும், அடக்கத்தையும் கண்டு அவன்மீது கருணை கூர்ந்தாள். அதுமுதற்கொண்டு அவரைப் பரிவாய் நடத்திவந்தாள். அவரும் செய்ந்நன்றி மறவாமல் அவள் விஷயத்தில் அதிக பக்தியாய் நடந்துவந்தார். பல வருஷங்கள் கழிந்தன. அவர் தம் கூர்மையான புத்திசாதுர்யத்தாலும், அரிய ஸாமர்த்யத்தாலும் வெகு சீக்ரத்தில் நல்ல பதவிக்கு வந்துவிட்டார். ஜமீன்தாரரும் அவருடைய அரிய குணங்களை மெச்சி, அவரை உயர்பதவிக்குக் கொண்டுவந்தார். இவற்றையெல்லாம்கண்டு நவகுமாரர் மனைவி ஸந்தோஷித்தாள். தன்னைப்போலவே தனது புருஷரும் கோகுலதாஸின் குணாதிசயங்களைக் கண்டு மெச்சுனாரெனக் கேட்டு அவள் த்ருப்தியடைந்தாள்.

இப்படியிருக்கையில் நவகுமாரர் தேவிபுரத்தை விட்டு நீங்கவேண்டிய காலம் வந்தது. கோகுலதாஸும் நவகுமாரர் குடும்பத்துடன் சென்றார். அந்தக் கஷ்டகாலத்தில் கோகுலதாஸ் நவகுமாரருடைய ஆப்தமித்ரராயிருந்தாரெனக் கூறினோம். இக்காரணத்தால் நவகுமாரருடைய மனைவி அடிக்கடிக் கோகுலதாஸை ஸந்திக்கவேண்டியிருந்தது. கோகுலதாஸரும் நவகுமாரரும் உடலும் நிழலும்போல் பிரியாமலிருந்தனர். கோகுலதாஸ் நவகுமாரருடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்போலிருந்தார். தேவிபுரத்து ராணியும் நாளடைவில் கோகுலதாஸ் முன்னிலையில் முகத்தை மூடிக்கொள்ளும் வழக்கத்தை விட்டுவிட்டாள். அடிக்கடி அவர்கள் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். பழகப்பழக கோகுலதாஸின் சூழ்ச்சிகளும், அவருடைய நோக்கங்களும், அவருடைய அந்தரங்க மனோ லக்ஷ்யங்களும் அவளுக்குச் சிறிது புலப்பட்டன.

"நாதா, அவருடைய முயற்சி வீண்போகாது. நமது ஜமீனைத் திரும்பப் பெறுவோம். அதற்கு ஸந்தேஹமில்லை" என்று நவகுமாரரிடம் அவருடைய மனைவி கூறினாள்.

"நீயன்றோ அம்மணிதனைத் தெரிந்தெடுத்தனை. உனது முன் யோசனை வீண்போகுமா? உண்ணும் உணவிற்கும் உடுக்கும் ஆடைக்கும் பிறர் கையை எதிர்பார்த்து நின்ற அம்மணிதன் வெகு சீக்ரத்தில் தன்னிடமிருக்கும் அரிய சக்தியைக் காண்பித்து முன்னுக்கு வந்தான். அவன் அதுமுதற்கொண்டு எனக்குப் பெருந்துணையாயிருந்து வருகிறான். அவன் நமது விஷயத்தில் உயிருள்ளமட்டும் நம்பிக்கையாய் உழைத்து வருவான்."

கோகுலதாஸ் ஜயமடைந்தார். நவகுமாரர், வீரநகரம் தேவிபுர ஸமஸ்தானங்களுக்குக் கார்யஸ்தரானார். புத்ர ஸம்பத்து இராவிட்டாலும் ஒரு புத்ரி ஜனனமானாள். நவகுமாரருக்கு நல்ல காலம் வந்தது. தவப்புதல்விக்கு ஹேமலதை—அதாவது, பொற்கொடி—எனப் பெயரிட்டழைத்தார். புத்ரி ஜனன காலமும், நவகுமாரருக்கு ஜமீன் திரும்பிக்கிடைக்குங்காலமும் ஒத்துக்கொண்டன. நவகுமாரரும் அவருடைய மனைவியும் ஸந்தோஷமாயிருந்தனர். குழந்தை வளர வளரப் பெற்றோர்களுக்கு அதன்மீது அத்யந்த ஆசை உண்டாயிற்று. ஹேமலதை அன்பெனும்கொடியால் தன் மாதாபிதாக்களின் மனதைக் கட்டினாள்.

ஹேமலதையின் தாயார் நவகுமாரரைப் பார்த்து ஒரு நாள், "நாதா, என் ப்ராணனையெல்லாம் நான் நமது கண்மணியிடம் வைத்திருக்கிறேன். அவள்தான் எனக்கு உலகம், என் உயிருள்ளமட்டும் நான் ஒரு க்ஷணமும் அவளைப் பிரிந்து இருக்கமாட்டேன். நானிருக்கும் வரையில் அவள் என்னுடன் தானிருக்கவேண்டும்."

"கண்மணீ, நீ அவளைப் பிரிந்து இருக்கமாட்டேன் என்றால் நான் மாத்ரம் பிரிந்திருப்பேன் என்று அர்த்தமா? நான் பிள்ளையொன்றும் வளர்த்துக்கொள்ளப் போவதில்லை. அவளையே நான் புத்ரனாகப்பாவித்திருக்கிறேன். நரேந்த்ரன் வீரநகரத்துக்குரியவன். ஹேமலதை தேவிபுரத்துக்குரியவள்."

ஆனால் நாம் நினைத்ததெல்லாம் நிறைவேறுகின்றதா? அப்படி நிறைவேறிவிட்டால் இவ்வுலகில் மனிதர்களுக்குக் கஷ்டமேது, துக்கமேது, சண்டை சச்சரவுகளேது? சீக்ரத்தில் வெவ்வேறு ஸங்கடங்கள் ஏற்பட்டன. நவகுமாரரின் மனம் வேறுபட்டது. அவருடைய ஆசைகளும் அவாக்களும் வேறு வழிபட்டன. வீரநகரப் பகை அவருக்கு அதிகமாகிவிட்டது. எவ்வளவு பதிபக்தியிருந்தாலும், பிறந்தகத்து ஆசை அகன்றுவிடுமா? அதுவும் பிறந்தகத்தாரைப் பகைத்துத் தூஷித்து அவர்களுக்கு த்ரோகம் செய்ய உத்தேசித்தால் என்னதான் பதிவ்ரதா சிரோமணியாய்த்தான் இருந்தாலும் மனம் பொறுக்குமா! நவகுமாரரின்மனைவி வீரநகரப்பெண் என்பது ஞாபகமிருக்கும். ஸ்திரீ புருஷர்களுக்குள் சிறிது அத்ருப்தி உண்டாயிற்று. முன்போல ஸம்பாஷணைகள் அவ்வளவு அதிகமாயிருப்பதில்லை. அவள் தன் புருஷனை ஒரு கேள்விகூடக் கேட்கவில்லை. நாளடைவில் அனைத்தையும் குறிப்பாய் உணர்ந்துகொண்டனள். இது முதற்

கொண்டுதான் அவளுக்குக் கோகுலதாஸின்மீது ஸந்தேஹம் ஜனித்தது.

கோகுலதாஸ் எப்போதும்போலவே அவளிடம் மர்யாதையாயிருந்தார். ஆனால் அவர் வரவர இப்போது முன்போல் அவளிடம் தன் மனதைவிட்டுச் சொல்வதை நிறுத்திவிட்டார். அவளுடன் கூடி ஆலோசிக்கும் வழக்கமும் நின்றுபோய்விட்டது. பார்த்தபோதெல்லாம் மர்யாதையாய்த் தலை குனிந்து வணக்கமாய் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார். பால்யம் முதற்கொண்டு அவள் அன்புகூர்ந்து சொந்தப்பிள்ளையைப்போல் தன் கையால் வளர்த்துவந்த சிறுவன் இப்போது 'வளர்த்த கடா மார்பிலுதைத்த' வாறு, மஹா சதியோசனைக்காரனாகி ஸந்தேஹத்துக்குப் பாத்ரனானன். ஒருகாலத்தில் கேவலம் தாழ்ந்த வேலைக்காரன் அந்தஸ்திலிருந்த மனிதன் இப்போது உண்மையில் தேவிபுர வீரநகரங்களாகிய இரண்டு ஜமீன்களுக்கு அதிகாரியாய் விளங்கினன். இப்போது அவருடைய செல்வாக்கின் மகிமையென்ன? தன் கருத்துக்கு விரோதமாய் எண்ணங் கொள்பவர்கள், நண்பர்களாயிருந்தும் சரி, பகைவர்களாயிருந்தாலும் சரி, அவர்கள் யாவரையும் த்வம்ஸம் செய்துவிடுவதே உத்தமமெனக் கங்கணங் கட்டிக்கொண்டார். அவர் தன் பூர்வ சரிதையைப்பற்றிக் கிஞ்சித்தேனும் கருதவில்லை. மனிதர்களது துன்பத்தையும் வருத்தத்தையும் அவர்களுடைய மனோநிலைமையையும் அவன் துரும்பாக நினைத்தான். தன் எண்ணம் நிறைவேறும் நிமித்தம் எது செய்யவேண்டுமானாலும் அவன் துணிந்திருந்தான். தயை, தாக்ஷண்யம், நன்றி யாவற்றையும் மறந்தான். தன் கார்யம் கைகூடும் பொருட்டு, அவசியமானால் தனது ஆப்தமித்ரனைக்கூடக் கண்டதுண்டஞ் செய்யப் பின்வாங்கமாட்டான். அந்தோ! நவகுமாரர் அவருடைய கையில்நன்றாய்ச் சிக்கிக்கொண்டார்.

நவகுமாரர் என்றைக்குமே ஒருவகைப்பட்ட மனிதர். அவருடைய குணம் அடிக்கடிமாறிக்கொண்டேயிருக்கும். காளடைவில் அவர் அதிகக் குரூரமுடையவரானார். யாரைக் கண்டாலும் பழிக்கத் தலைப்பட்டார். எப்போதும் கோபமும் சிடுசிடுப்புமாயிற்று. அவர் பால்யத்தில் அஞ்சாநெஞ்சராயும் திடசித்தமுடையவராயுமிருந்தார். எத்தனையோ கஷ்ட நிஷ்டூரங்களுக்கிடையிலும் அவர் மனோநிலைமை மாறுதலடையாமலிருந்து வந்தது. அப்பேர்ப்பட்டவர் இப்போது சலன புத்தியுடையவரானார். எதையும் குற்றங்கூறுவதும், எவரையும் தூஷிப்பதும் தொழிலாயிற்று. ஸ்வயபுத்தியும் ஸ்வயசித்தமும் இராமல் போய்விட்டது. ஸர்வ விஷயங்களுக்கும் பிறர்கைப் பதுமை யாயினர். அவருடைய மனைவிக்குத் தன் கணவனரது நல்ல குணங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் மறைந்துகொண்டு வருவதும் அவற்றிற்குப் பதிலாய் துர்க்குணங்கள் தீவிரமாய்ப் படிவதும் தினேதினே விசிதமாய்ப் புலப்பட்டு வந்தன. அவள் மனம் குன்றினாள். வாய்விட்டுச் சொல்லக்கூடாமல் மனதிலேயே எண்ணியெண்ணி வருந்தலானாள். அவள் இப்போது தலைநிமிர்ந்து பார்க்கக்கூட நடுங்கி, ஒரு ராக்ஷஸனது வலையிலகப்பட்டுத் தன் புருஷனுடைய ஸ்வயபுத்தி ஸ்வயயோசனை யாவும் அடியோடு அழிந்து அவருடைய மனம், குணம், எண்ணம் யோசனை, நடத்தை, யாவும் 'புயல் காற்றில் பட்ட மரக்கலம்போல்' அலைவதைப் பார்த்துப் பார்த்து ப்ராணன் துடித்தாள்.

முதயோகம்.—அமிர்தயோகம்; அது ஞாயிற்றுக்கிழமையின் மூலம், திருவோணம், ரேவதி, ஹஸ்தம், ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதியாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், திங்கட்கிழமையின் மிருகசிரம், சோதி, ரோஹிணி, புனர்பூசம், திருவோணமாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், செவ்வாய்க்கிழமையில் ரோகிணி, மூலம், உத்தராடம், உத்தரம் ஆகிய நக்ஷத்திரங்களி லொன்று, வருங்காலம் புதன்கிழமையிற் பூரம், பூராடம், பூரட்டாதி, உத்தராடம், கார்த்திகை, உத்தரமாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், வியாழக்கிழமையிற் புனர்பூசம், சோதி, பூசம், அச்வனி மகமாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், வெள்ளிக்கிழமையின் மூலம் ஹஸ்தம், ரேவதி, அச்சுவனியாகிய. நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், சனிக்கிழமையின் மகம் சோதி, கார்த்திகை, ரோஹிணி, சதயமாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம்.

உலக ஸம்பவங்கள்
How the World moves

மேலரங்கத்தில் சண்டை ஒரே விதமாகத்தான் இருக்கிறது. ஜனச் சேதத்திற்களவேயில்லை. ஆயினும் முடிந்த காரியமாக ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. பிரஞ்ச் துருப்புகள் இப்பொழுது முன்னினும் வலிமையுடனும் பொறுமையுடனும் சண்டையிடுவதால் ஜர்மனியின்பக்கம் ஜயம் அதிகமாகக் கிடைக்கவில்லை ஆயினும் மிடையிடை ஏதேனும் ஜயம் சிறிது கிடைத்தால், அந்த ஜயத்தை மலையாகச் செய்து அந்நாடு பிரசுரிக்கின்றது; அல்லாமலும், அநேகம் பொய்களையும் உத்தியோக முறையில் கூறித் தமது நிலையை ஸ்தாபிக்கவேண்டியிருக்கிறது. ஜர்மானியரால் தகர்க்கப்படும் வெர்டன் கோட்டை விழ முடியாதென்றே எண்ணப்படுகிறது. அப்படியிருக்க, ஜர்மானியர் அதன்மேல் லக்ஷ்யம்வைப்பதின் காரணமென்னவோ தெரியவில்லை!

நடுவரங்கத்தில் ரஷ்யர்கள் ஆஸ்டிரிய நாடாகிய கலீஷியாவில் மெதுவாக நுழைய வாரம்பிக்கின்றனரெனத் தெரியவருகிறது. ரஷ்யத் துருப்புகள் பகைவரது துருப்பை அசையவொட்டாது மடக்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் முக்யமாக நடக்குங்காரியங்கள் ரைகா என்னும் பட்டணத்தைச் சுற்றியே இரண்டு தரப்புக்களிலும் நடக்கின்றன. இவ்விடம் பெருமாயத்தங்களைக் கடல் தரை இவற்றின் மூலமாகச் செய்து, பகைவரைத் தாக்கி, அவரது தலைநகராகிய பெட்ரோகிராட் என்னும் நகரையும் கைக்கொள்ள ஜெர்மானியர் யத்தனம் செய்வதாகத் தெரியவருகிறது.

துருக்கியின் தலைப்பட்டணமாகிய கான்ஸ்டாண்டிநோபிலில் க்ஷாமம் குடிகொண்டிருப்பதாகவும், ஜர்மானியத் தலைவர்க்கும் துருக்கியர்க்கும் மனப்பொருத்தம் ஸுமுகமாகவில்லையெனவும் சமாசாரங்கள் கூறப்படுகின்றன. கிரீஸ் நகரத்து அரசன் இருதலைக்கொள்ளி எறும்புபோல் திண்டாடுகிறான். அவன் தனது மைத்துனனாகிய ஜர்மானியச் சக்ரவர்த்தியிடம் பகை கொள்ளவு முடியவில்லை; தன் நாட்டை முன் காத்துத் துருக்கியிடமிருந்து விடுவித்த ஆங்கில நாட்டிடம சிநேஹமின்றி யிருக்கவும் முடியவில்லை. கிரீஸ்நாட்டில் ஸலோனிகா, கார்ப்யூ முதலிய இடங்களில் இங்கிலீஷ் துருப்புகள் பலப்படுத்தப் படுகின்றன; சிதைந்த ஸர்வியத் துருப்புகளும் சேர்த்துச் சீர்திருத்தப் படுகின்றன.

பல்கேரிய நாடு சும்மா இருக்கிறது. அதற்குக் கிரீஸ் மேலாவது, துருக்கிமேலாவது பகைபாராட்ட முடியவில்லை. ருமேனியாவோ, கண்கொட்டாது, நடப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கிறது. ஆயினும், நேசத் துருப்பிடம் அபிமானத்துடனே விளங்குகிறதென்றே சொல்லவேண்டும். இடலிக்கும் ஆஸ்டிரியாவுக்கு மிடையே நடக்கும் சண்டை எப்பொழுதும்போலே நடந்து கொண்டிருக்கிறது.

ஆசியத் துருக்கியில் எர்ஜரம் கோட்டையைப் பிடித்ததும், ரஷ்யசேனை இரண்டு பிரிவாகப் பிரிந்து மூஷ், பிட்லிஸ் என்னும் பட்டணங்களை நோக்கிச்சென்றன. மூன்றாவது ரஷ்ய சைன்யம் செலிக் நதியைத்தாண்டி அஜூ என்னுமிடத்து இறங்கி, ரைஜ் என்னும் பட்டணத்தைக் கவர்ந்து, கடலோரமே நடந்து, டிரபிஜாண்ட் என்னும் ராணுவத் துறைமுகத்திற்குக் கீழ் 30 மைல் தூரத்திருந்த ஓபி என்னும் பட்டணத்தைக் கவர்நது மூஷ் பக்கஞ்சென்ற சேனை அந்நகரைத் தகர்த்தது. கடல் மூலமாகவும் தரை மூலமாகவும் டிரபிஜாண்ட் துறைமுகத்தை நாடி அவ்வரண் நிறைந்த கோட்டையைத் தகர்த்துக் கவர்ந்தனர். ரஷ்யரது வெற்றியிவ்வளவோடு நிற்கவில்லை. ஒரு தனிசசேனை கர்மென்ஷா என்னும் இடத்திலிருந்து

துருக்கியரது பேரரண் தலமாகிய பாக்டாட் நகரத்தைத் தகர்க்கவும் அனுப்பிக்கப்பட்டது. அதன் வேலை விவரங்கள் இன்னும் தெரியவில்லை. இது குட் - எல் - அமாரா என்னுமிடத்திருக்கும் இந்தியத் துருப்பின் உதவிக்கெனவே நம்பப்படுகிறது.

துருக்கியின் முக்கியவரண் தலங்களாகிய எர்ஜரம், டிரபிஜாண்ட், பிட்லிஸ் முதலிய பட்டணங்களைப் பகைவர் கைக்கொண்டது, அதற்குப் பெருநஷ்டமே. ஆனால் அது சும்மா இருக்குமெனச் சொல்ல முடியாது. தமது தாழ்ந்த நிலையைப் போக்கிக்கொள்ள வேண்டிய ஸாதனங்களைச் செய்ய அதற்குக் காலதாமஸமாகாதிருக்க முடியாது.

நிற்க, கடற்படைச் சண்டை இது வரையிலும் நடக்கவில்லை. ஆனால் ஸப்மெரீன் சண்டை வேகங்குறையாமல், தயை தாட்சணியமில்லாமலே நடந்து வருகிறது. சண்டையிற் கலவாதவர்களுடைய வியாபாரக்கப்பல்களையும், போக்கு வரவுக் கப்பல்களையும் ஜெர்மனி துலைப்பது வர வர விருத்தியாகிக் கொண்டே வருகிறது. ஸமாசாரக் கப்பல்களை உடைப்பதற்குக் கொஞ்சமும் அது தயங்கவில்லை. ஸஸெக்ஸ் என்னும் கப்பல் விஷயமாய் அமெரிக்காக் கண்டத்து யுனைடைட் ஸ்டேட்ஸ் தலைவராகிய மிஸ்டர் வில்ஸன் மேற்படி அநீதமானயுத்தத்தை அவர்கள் ஒழிக்காவிடில், தன்னுட்டிற்கும்ஜர்மனிக்கும் நேசபாவத்திற்குத் தடை ஏற்படுமென ஜர்மானிய இராஜாங்கத்திற்குக் கண்டிதமான ஓலையனுப்பியதாகத் தெரியவருகிறது. அதற்கு ஜர்மனியின் பதில் என்னவென்று பின் கவனிப்போம்.

***

இம்மாசவாரம்பத்தில் கனம் நமது கவர்னர் ஜனரல் ஹார்டிஞ்ச்பிரபு தமது வேலையை விட்டுவிட்டுத் தமது ஜன்மதேசம் அடையப்போகின்றனர். அவரைப்பற்றி நாம் ஒன்றும் கூற வேண்டியதில்லை. அவரைக்கொண்டாடாதவர் எவருமில்லை. அவர் நம்மிடம் மிக அன்புடன் இருந்தவர். நம்மவர் செய்த சிறு பிசகுகளையும் கவனியாது நம்மிடம் அன்போடு விளங்கினவர். அவர் பெருமை நம்மிடம் அவர் கொண்ட அன்பினுல்தான் அளக்கப்படும். தென் ஆப்ரிக்காவில் நம்மவர் பட்டப்பாட்டை நிவர்த்திக்க அவர் உழைத்ததைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. கான்பூர்மஸூதிவிஷயத்திலும், வங்காளப் பிரிவை ஒழிப்பதிலும், இந்தியக்கூலிகள் வெளியேறுவதைத்தடுப்பதிலும் அவர் நடந்துகொண்டவிதம் இதுவரை வந்த நமது ராஜப்பிரதிநிதிகள் ஒருவராவது நடந்ததாகச் சொல்லமுடியாது. நம் நகருக்கு வந்திருந்தபோது தென் ஆப்பிரிக்காவில் நம்மவரது நிலைமையைப்பற்றி அவர் உள்ளன்போடு வெளிப்படையாகப் பேசியதைப் பற்றி அவரோடு சேர்ந்தவரும் பிறரும் பலவிதமாகக் கூறியபோது அவர் "பொறுக்க முடியாது நான் வெள்ளையாகக் கூறியது நயமான மொழிகளில் அமைக்கப்படாவிடினும் நான் பேசிய விஷயம் தர்மத்திற்குப்பட்டது; ஆகையால் வெளிப்படையாகக்கூறினேன்" என்றஅவர் மொழிகளின் ஸத்தியத்தை அளவிடமுடியுமா? மேலும்அவருடையஉழைப்பினுல்தான் காசிஹிந்து யூனிவர்ஸிடியும், மைசூர் யூனிவர்ஸிடியும், பீஹார் ஒரிஸ்ஸா மாகாணத்திற்கு ஆலோசனைசபையும் தேர்ந்தெடுக்கப்படும் சட்டஸபை அங்கத்தினரது மிகுதியும் ஏற்பட்டன. ஐக்கிய மாகாணத்திற்கென்று அவர் விரும்பிய ஆலோசனை ஸபையைப்பற்றிய தீர்மானம் சீமை லார்ட்களின் ஆலோசனை சபையில் ஆமோதிக்கப்படாதுபோயிற்று. ஆயினும் அவர் வரவர இந்தியர்களுக்கு ராஜாங்க விஷயங்களில் வன்மையுண்டாகச்செய்து அவர்களாலேயே இராஜ்யத்தையாளச்செய்து இந்தியாகவர்ன்மெண்டின்கீழேஅவா அடங்கியிருக்கவேண்டியதுதான் தருமமென்று இந்தியமந்திரிக்கு எழுதியமொழிகளும், தான் இந்நாட்டிவிருந்து செலவு பெற்றுக்கொள்ளும்பொழுது 'நான் இங்கு இந்தியனுகவே பாவித்து, அவர்க்காகவே உழைத்து, அவரிடமே வாழ்ந்தேன்' என்ற மொழிகளும் மழுங்காதென்றும் நமது மனத்தில் விளங்குமல்லவா? நமக்கும் அவரைப்பிரிவது மிகவும் வருத்தமாயினும் அவர் எங்கு இருப்பினும் அவர்க்குச் சுகமும் யசஸ்ஸூம் தீர்காயுஸூம் நீடித்து விளங்க விரும்புகிறோம்.

***

கனம் லார்ட் செம்ஸ்போர்ட் நமது இந்திய இராஜப் பிரதிநிதித்வத்தைப் பெற்றுக் கொண்ட தெவர்க்கும் பரமாநந்தமே. அவர் ஹார்டிஞ்ச்பிரபுவின் உறவினரெனவேதெரியவருகிறது. ஹார்டிஞ்ச் பிரபுவின் பாவங்களையே பின்பற்றி நம்மையாள்வதாக வாக்களித்திருக்கின்றனர். அவருடையராஜ்யபாவம் முழுதும் இப்பெரும் எண்ணத்துடனே விளங்குமென நம்புகிறோம். அவர்க்குஆங்கில ராஜாங்க அனுபவமல்லாமல் லோக அனுபவமும் அதிகம். அவ்வனுபவங்களை இந்தியரது நன்மைக்குபயோகித்து, தனது பெருமையையும் கருணையையும் வளரச்செய்து, அன்போடு விளங்கக் கடவுள் அனுக்ரஹிப்பாராக. இந்திய நாடுமுழுதும் அவரைத் தம் பதிஸமேதராக அன்போடுவரவேற்பதைப் பஹிரங்கமாகச் சொல்லவும் வேண்டுமா?

***

'மைஸூர் ஸம்ஸ்தானத்திற்கு ஒரு தனி ஸர்வகலா சங்கம் ஏற்பட்டது படித்தவரனைவர்க்கும் ஸந்தோஷத்தை யுண்டாக்கும் என்பதற்கு ஐயம் இல்லை. இதற்கு அந்த ஸமஸ்தானத்தின் திவானுக இருக்கும் ஸர் எம். விச்வேச்வரய்யா அவர்களே மூலாதாரம். மைஸூர் ராஜாங்கம் பல நாளாகக் கேட்ட இந்த அபீஷ்டத்தை ஏளனஞ்செய்யாது லார்ட் ஹார்டிஞ் பிரபுவே பூர்த்திசெய்தனர். இதன் நடவடிக்கைகள் முதலியவை முற்றும் விரிவாக ஏற்படவில்லையாயினும், பொதுவாக இந்தியாகவர்ன்மெண்டார் ஸர்வகலா ஸங்கஸ்தாபனத்தை ஒப்புக்கொண்டார் எனத் தெரிகிறது. இதில் பி. ஏ. பி.எஸ்ஸி, எம். ஏ., எம். எஸ்ஸி, என்னும் படிப்புப் பட்டங்களும், பி. டி., என்னும் உபாத்தியாயர் பட்டமும், டாக்டர் ஆவ்-லிட்டெரிச்சர், டாக்டர்- ஆவ்-ஸைன்ஸ் என்னும் கௌரதா பட்டங்களும் அளிக்கப்படும். ஆரம்பத்தில் வியவஹார ஸம்பந்தமான படிப்பை இந்த ஸர்வகலா ஸங்கத்தின்கீழ் கொண்டுவருவது முடியாதாயிருக்குமென மைஸூர் தர்பார் அபிப்பிராயப்படுகிறது. இந்த ஸங்கத்தில் இந்திய பாஷையிடம் கவனம் இங்கிலீஷ் பாஷையிடம்போலே நடத்தப்படுமென்பது யாவர்க்கும் இன்பந்தரும். தத்காலம் கன்னடபாஷையையும், ஹிந்துஸ்தானியையுந்தான் கவனிக்கப்படுமென்றும் தெரியவருகிறது. இந்த சங்கஸ்தாபனம், மைஸூர் ஸம்ஸ்தானத்தில் படிப்பை விருத்திசெய்யப் பெருமியக்கம் தருவதல்லாமல், ஜனங்களுடைய புத்தியை விசாலிப்பதற்குமிடந்தரும். இதில் 'ஹானர்ஸ்' படிப்பில்லாமையும், தேசபாஷைக்குப் பிரதானங் கொடுத்ததும், போதிக்குங் கலாசங்கங்களைப் பெரும்பான்மை தழுவியிருத்தலும் உத்தம லக்ஷணங்களென யாவருமதிப்பர். இனி அந்நாட்டு வாலிபர்க்குப் படிப்பைப்பற்றித் தூண்டுதல் வேண்டுமோ? ஆலமரம் பழுத்ததென்று பறவைக்கு யார் சீட்டனுப்ப வேண்டும்?

***

ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர்களுடையதணிக்கைப் பிரயாணங்களில் வாங்கக்கூடிய பத்தாவைப்பற்றிய சில கஷ்டங்களை நீக்கும்படியாகக் கவர்ன்மெண்டார் 'பிரயாணத்தில் செலவிட்ட தினத்தின்' அளவைப் பற்றிய நிரூபணத்தை மாற்றியதற்குக் கனம் வி.எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாருக்கு ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர்கள் யாவரும் கடமைப்பட்டவராவர். இம்மாற்றத்தினுல் பிரயாணபத்தா விஷயத்தில் மற்றைய உத்தியோகஸ்தர்களுடைய அந்தஸ்தையே கிட்டத்தட்ட இவர்கள் அடைந்திருக்கின்றனர். காலஞ் செல்லச் செல்ல மற்றுமுள்ள அல்பபேதங்களையும் கவர்ன்மெண்டார் மாற்றுவர் என்பது திண்ணம்.

***

காகிதத் தொழில் முன்பு நம் நாட்டிலும் சீன நாட்டிலுமே நடந்துவந்தது. முற்காலத்தில் பாஞ்சாலம், காச்மீரம், வங்காளம் இந்நாடுகளில் இத்தொழில் மிக ஓங்கிவிளங்கியது. ஆனால் அப்பொழுது கந்தைகளின் மூலமாகக் காகிதங்கள் செய்யப்படவில்லை. மொகலாயர் குடியேறிய பிறகே, அது நம்மவரால் கற்றுக்கொள்ளப்பட்டது. அன்றுமுதல்அத்தகைய காகிதத்தொழில் இந்தியாவில் குறையாமலே நடந்துவந்தது. பின் ஐரோப்பிய நாடுகளிலிருந்து காகிதங்கள் வர ஆரம்பித்ததுமுதல் நமது தொழில் பிரமுக

மாகத் தலையெடுத்து விளங்க முடியவில்லை; ஆனால் முற்றுமொழிந்தும் போகவில்லை. இந்தியர்களால் கையால் செய்யப்பட்ட காகிதங்கள் உறுதியானவையாயும் நெடுங்காலம் அழிவின்றி விளங்கக் கூடியனவையாயும் விளங்குவதே இதற்குக்காரணம். தற்காலயுத்தத்தின் பயனாக காகிதக்ஷாமம் உண்டாயிருப்பது யாவருமறிவர். இம்மாதம்சென்னை மஹாஜனஸபைக் கூட்டத்தில் நடந்தஇந்தியத் தொழிற்சங்க மீட்டிங்கில் ஸ்ரீ கரியப்பா என்பவர் பேசியகாலத்து, இந்தியாவில் காகிதத்தொழில் விருத்தியாவதற்கு ராஜாங்கபோஷணை அத்யாவசியகமென்று பேசினார். ஜனங்களும் ராஜாங்கமும் போஷித்தால்தான் காகிதத்தொழில் விருத்தியடையும் அதைவிருத்தி செய்வதற்கு இதுவே ஸமயம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமல்லவா?

***

பர்மாவுக்குஓர் தனி ஸர்வகலாசங்கம் ஏற்படுத்துவதைப்பற்றிப் பர்மா கவர்ன்மெண்டுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் நடந்த கடிதங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பர்மா லெப்டினன்ட் கவர்னர், ஷெடி ஸங்கமானது இந்தியாவில் நடைபெறும் மற்றைய ஸங்கங்களைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததாயும், பர்மாவுக்கு வேண்டிய ஸர்வவிதப் படிப்பைகரதலாமலகமாக அனுபவத்துடன் கொடுக்கக்கூடியதாக இருக்கும்படியாகவுஞ் செய்யவேண்டியதென்றும், அவ்வாறு செய்வதற்குத் தக்கவாறு, இலக்கியம், தொழிற்கல்வி, சட்டம், சாஸ்திரம், சிற்பம், வைத்தியம்,மிருகவைத்யம், கட்டிட அமைப்பு, வியாபார தத்வம், ரஸாயனதி சாஸ்திரம், உழவுநூல் முதலியவைகளில் கவனம் செலுத்துவதுடன்,உடனுக்குடன் பிரயோஜனமிருக்கும்படியாகப் பயிற்சியுடன்கூடிய கலாசாலைகளையும் ஏற்படுத்தவேண்டும் என விவரித்திருக்கின்றனர். இந்தியா கவர்ன்மெண்டாரும் பொது அபிப்பிராயங்களைப் பெறுமாறே கடிதங்களைவெளியிட்டிருக்கின்றனர். பர்மா லெப்டினன்ட் கவர்னர் அவர்களுடைய நோக்கம் மிகச் சிறந்தது: அதுவே அதன் ஸித்திக்கு அறிகுறியாகும்.

***

அம்பாலாநகரத்துமேலிந்தியாக் கண்ணாடி வேலை சாலையின் முதலாளியுங் காரியஸ்தருமான வார்ஷ்ணே என்பவர், அமெரிக்கா, ஜப்பான், ஜர்மனி முதலிய தேசங்களுக்குச் சென்று ரஸாயன சாஸ்திரத்தைத் தீவிரமாகக் கற்றவர். முக்கியமாகக் கண்ணாடியின் விவரத்திலேயே கவனமுற்றுஞ் செலுத்தினவர். தான் மீண்டும் தன்னாடு அடைந்து, சிறந்த கண்ணாடிச் சாலை வைக்க வேண்டுமென்ற ஆவலுடன் உழைத்தவர். அவர் தன் நாட்டை யடைந்ததும் மேற்சொன்ன கண்ணாடிச் சாலையை ஏற்படுத்தி நன்றாக நடத்தி வருகிறார். அவர் "இதுவரையும் 24 கண்ணாடி வேலைச் சாலைகள் ரஸாயான ரீதியாகப் புதிதாக ஏற்பட்டிருப்பினும், தான் ஏற்படுத்திய இரண்டு தவிர மற்றெல்லாம் க்ஷீணித்தழிந்தன" என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது, அவரது காரிய சித்திக்குக் காரணங்கள், அவர் இந்தியத்தொழிலாளிகளுக்குக் கற்றுக்கொடுக்கும் திறமையும், அவர் தான் படித்த காலத்தில் தனது உபாத்தியாயர்கள் சொல்லாது ஒளித்த உள்ளுளவுகளைத் தந்திரமாகக் கொள்ளைகொண்டுதானே உழைத்த அனுபவமுமாகிய இரண்டே என அவர் வெளியிட்டிருக்கிறார். இந்தக் கண்ணாடிச்சாலைகள் அழிந்ததின் காரணம் முதலாளிகள் தொழிலாளிகளை அமவதித்தலும், மேஸ்திரிகள் அத்தொழில் கீழ்வேலைக்காரரை அவமதித்தலுமே. வார்ஷ்ணேயர் 40–பேரைக் கண்ணாடிவேலையை ஐரோப்பியச் சமர்த்தர்களிடம் நன்கு கற்கும்படிச் செய்திருக்கின்றார். தொழிலாளிகளை அதிகப்படுத்துவதேஅவர்க்குப்பேரவா. சில நாட்களுக்கு முன் இங்கிலாந்து, ஜர்மனி நாடுகளிற்கற்ற கண்ணாடி வேலைச்சமர்த்தரொருவர், கண்ணாடிவேலைஇந்நாட்டில் நிலைக்க இடமில்லையென்றும், இந்த பூமியதற்கு ஒற்றுக்கொள்ளாதென்றும், தீர்ந்த அபிப்பிராயத்தை வெளியிட்டனராயினும், வார்ஷ்ணேயர் இந்நாடே இவ்வேலைக்குகந்த நாடெனச்சொல்லுவதோடு,விளக்கியுங்காட்டுகின்றனர். இந்தியாவுக்கு $1\frac{1}{2}$ கோடிரூபாய்க்குமேல் கண்ணாடிச சாமான்கள்வெளிநாடுகளிலிருந்து வருகின்றன. வார்ஷ்ணேயர் ஏற்படுத்திய சாலைபோல் 150 சாலைகள்

இருந்தால் வெளிநாட்டிலிருந்துகண்ணாடிகள் நமக்கு வரவேண்டியதே இல்லை. அம்பாலா நகரத்துச்சாலையில் விளக்குச் சிம்னிகளை செய்யப்படுகின்றன. இன்னும்பலவித சாலைகள் சாளரக்கண்ணாடிகள், மணிகள், வளையல்கள், கண்ணாடி ஆயுதங்கள் பாத்திரங்கள் முதலியசெய்ய ஏற்படுவதற்கு இடமிருக்கின்றது. கண்ணாடி செய்வதற்குவேண்டிய சோடா உப்பு,கடலுப்பிலிருந்தாவது பொட்லுப்பிலிருந்தாவதுசெய்யலாம். இவைநமது நாட்டில் ஏராளமாய்க் கிடைக்கும். அவ்வாறு செய்வதால் உப்புத்ராவகமும் ஏராளமாகக் கிடைக்கும். சோடா, உப்புத்திராவகம்,கந்தகத் திராவகம் இவற்றால் அநேக தொழில்கள் விருத்தியாக இடமுண்டு. பலரும் கண்ணாடிச்சாலைகள் ஏற்படுத்தினால் மற்றுந் தொழில்கள் உண்டாக இடமுண்டு.

***

மைசூர் ராஜ்யத்தில் பாலபோதனைப் படிப்புக் கட்டாயப் படுத்தும்படியாகத் தீர்மானப் படுத்தப்பட்டது, அவ்விராஜ்யத்தின் பெருமைக்குப் பெருமைதரும். இருள்மூடிய நிலத்தில் வெளிச்சத்தை யுண்டாக்குவதெவர்க்குமானந்தமே. இந்திய கவர்ன்மெண்டாரால், நடத்தையில் கொண்டு வர முடியாதுபோன பாலபோதனை கட்டாயப்படிப்பு இரண்டு இந்திய ராஜாங்கங்களில் இப்பொழுதுஅமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. மைசூர் ஸம்ஸ்தானத்தில் ஒரு ஸர்வகலாசாலை மிக வுபயோகமாக ஏற்படுத்த நடவடிக்கைகள் நடந்துவருகின்றனவென்று முன்னெழுதினோம். இப்பொழுது கட்டாயப்படிப்பு மேற்படுத்தப்பட்டது அந்நாட்டில் அஞ்ஞான இருள் ஒழிய, ஞானோதயமானதாகுமல்லவா?

***

பிரஞ்சிந்தியாவில் இந்தியர்கள்,பிரன்சுக்காரர்களுடையஎல்லாச்சுதந்திரங்களுடனும் சேனையில் சேரலாமென விளம்பரப்படுத்தியது ஜனங்களுக்கு மிகச்சந்தோஷத்தைக் கொடுத்தது. நமது கவர்ன்மென்டாரும் ஆங்கில இந்தியர்களைத் தனி ரெஜிமெண்டாக ஏற்படுத்தும்படிச் செய்தது ஆனந்தத்தைக் கொடுக்கினும், நமது மற்ற இந்தியர்க்கும் நல்லகாள் என்றுவரும் எண்ண ஏங்கச் செய்கிறது.இந்தியர்களுக்கு ராணுவத்திலும் நன்னிலையடையும்படிச் செய்வது கவர்ன்மெண்டார் கடனேயாகும். அவ்வாறு செய்வது கவர்மெண்டாருக்கும் பெருமை, நமக்கும் கீர்த்தியாகும்.

***

பம்பாய்ப் பஞ்சாலைக்கூட்டங் கூடிய போது, சண்டைக்குப்பிந்தி தொழில் விருத்தியைப்பற்றிச் செய்யவேண்டிய கார்யங்களைப் பேடிட் என்பவர் ஸங்க்ரஹமாகக் கூறியதாவது:—

(1) தொழில்களை எவ்வாறு செய்ய வேண்டுமென்பதைக் காட்ட இராஜாங்கத்தாராலேயே மாதிரிஆலைகள் ஏற்படுத்தல்;

(2) கவர்ன்மெண்டார் தமது செலவைக் கொண்டு சாஸ்திரியமான தொழிலில் சமர்த்த ஞானத்தை ஏற்படுத்துவதுடன் அப்போதைக்கப்போது தக்க புத்திபுகட்டுதல்;

(3) முதல் முதல் செய்யவேண்டிய காரியங்களையும் ஆராய்ச்சி வேலையையும் கவர்ன்மெண்டாரே நடத்தல் ;

(4) அந்தந்தத் தொழிலின் நிலைக்கேற்றவாறு, அவ்வத்தொழிலின் அபிவிருத்திக்கேற்ப பொருளுதவி செய்யும்படியாகக் கவர்ன்மெண்டின் வருமானச் செலவமைக்கப்படுதல்.—

என்பவையே. இந்திய கவர்ன்மெண்டாரும், தேசீயத் தொழில்களின் மொத்தக் கணக்கை எடுப்பதாக இருப்பதால், அதனால் மேற்சொன்னபடி நமது தொழில்கள் புதிது புதிதாகக் கிளம்பி விருத்தியடையவும்,இருப்பவை நீடித்தோங்கவும் இடமுண்டாக வேண்டுமென்று யார் வேண்டார்?

***

கனம் ஸர் ஹாரஸ் ப்ளேங்கேட் அவர்கள், இந்தியத்தொழில் 'கமிஷனில்' அங்கத்தினராக ஏற்படுத்தப்பட்டது யாவர்க்கும் ஸந்தோஷம் விளைவிக்கும். அவர் ஐயர்லாந்தில் ஐக்கிய நாணயவிஷயங்களிலும், கிருஷி கிருஷிகர்கள் விஷயங்களிலும் உழைத்த அனுபவசாலி ; கிட்டத்தட்ட நமது நாட்டு உழவு விஷயங்களைப் போன்ற விஷயங்களில் உழைத்தவர். இங்கு அவரது வரவு

நன்மைக்கே இடந்தரும். ஏனெனில் பயிருந்தொழிற்கல்வியும் ஒன்றிற்கொன்றுதவியாகவேண்டிய தல்லவென்று, தவறெண்ணங் கொண்டார் கூறினும், கனம் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் அவர்கள் இந்தியாவைப் பற்றிப் பேசியபோது, "குடிகள் கஷ்டமொழிந்து, ஸுகத்தோடு விளங்கி, க்ஷாமபிதி யழிந்து, உழவுநூல் சாஸ்திரமிவற்றால் பச்சைப் பசேல் என்று பயிர்தவழ்ந்த கிராமவாஸம், இப்போதைய விளைவினும் பல மடங்கதிகம் விளைந்து விளங்கவும், அதற்கின்றியமையா தமைய பெரும் பட்டணங்கள் யந்திரங்களின்ரீங்காரம்தவழ்ந்தும், மின்ஸார வாலைகளின் பரபரப்பு குலாவி சுக வாழ்வுள்ள கிராம வாஸத்திற்குவேண்டிய சுகத்திற்கு ஏற்ற எல்லாப்பொருள்களையும் வெளியிட்டுவிளங்கவும், இவ்விந்தியா இன்றைக்கிருக்கு நிலையினும் ஓங்கி விளங்கக் காண்கிறேன்" என்றவாறு உழவும் தொழிலும் குலாவி விளங்க உழைப்பர் என நம்புகிறேரம்:

பெரிய மனிதர்கள்.—சில பெரியமனிதர்கள் ஏழைகளைக்கண்டால் பேசுகிறதில்லை. அவர்கள் வருந்தியழைத்தாலும் போகிறதில்லை. இன்னும் சிலர் ஏழைகளைப்பார்ப்பது கூட தங்கள் கௌரவத்துக்குக் குறைவென்று அவர்களுக்கெதிரில் விறைத்த பிணம்போல் முகத்தை அப்பால் திருப்பி நடப்பதுண்டு. இப்படி செய்வதெல்லாம் அவிவேகமேயன்றி வேறல்ல. ஜடப்பொருளாகிய கல்லையும், மண்ணையும், குட்டிச் சுவரையும் பார்க்கும் கனவான்கள் ஏழைகளைக் கண்டால் மூஞ்சியைத் திருப்பி கொள்வானேன்? தான் செய்யும் தர்மங்களை யேற்றுக்கொண்டு, தனக்குப்புண்யத்தை விளைவிக்கும் ஏழைகளிடம் தனவந்தர்கள் நன்றிபாராட்டுவ தவசியம் அவர்களைக் கண்குளிர நோக்கி அவர்களது மனம் குளிரப்பேசி நற்பெயரெடுப்பது நலம். சீமையில் பிரதான மந்திரியாயிருந்த மிஸ்டர் கிளாட்ஸ்டனும் அவர் மனைவியும் ஏழைகள் செய்யும் விருந்துக்கும் கல்யாணத்துக்கும் ஒருதரம் கூப்பிடுவதற்கு முன்னேபோகிறது வழக்கம் கிளாட்ஸ்டன் தன்னுடைய 85-வது வயதில் தமது வேலைக்காரன் வீட்டுக் கல்யாணத்தில் அவனுடன் ஸமபந்தியாயிருந்து போஜனமுண்டார். அவரல்லவா பெருமைக்குரியவர்?

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

அமெரிக்கா யூனிவர்ஸிடிகளில் இந்தியரின் பிரசங்கம்.—ஸர் ரவீந்திரநாத் தாகூர் கல்வி கேள்விகளிற் சிறந்த மேதாவி. இவர் அமெரிக்கா யூனிவர்ஸிடிகளில் 18 பிரசங்கங்கள் செய்ய அமெரிக்கர்களால் அழைக்கப் பெற்றிருக்கிறார். இப்பதினெட்டு பிரசங்கங்களுக்குமாக அவருக்கு 42,000 ரூபாய் கொடுப்பதாகஅவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

***

கௌதமபுத்தரின் விக்கிரஹமும், ஒரு பெரிய மணியும் அகப்பட்டன.—வெண்கலத்தில் செய்யப்பட்ட கௌதம புத்தரின் விக்கிரஹம் ஒன்றும், சுமார் 100 பவுன் நிறையுள்ள ஒரு வெண்கல மணியும் சென்னை துறைமுகத்திற் கருகில் கிணறு தோண்டப்படும்பொழுது இம்மாதம் 16வ அகப்பட்டன. இந்த விக்கிரஹமும், மணியும், கிளைவ் பாட்டரியில் மிஸ்டர் ரிச்சார்ட்ஸ் பங்களாவில் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்க்கப் பிரியப்படுகிறவர்கள் சிறிய தொகை கொடுக்க வேண்டும். அவ்விதம் வசூலாகும் தொகை யுத்த நிதிக்குச் சேர்ப்பிக்கப்படும்.

***

மைசூர் ஸமஸ்தானம்.—இதன் விஸ்தீர்ணம் சுமார் 30,000—சதுரமைலாகும். அதன் ஜனத்தொகை சுமார் 60 லக்ஷம். ஜனங்களில் பெரும்பாலரும் பேசிவரும் பாஷை கன்னடம். அந்த ஸமஸ்தானத்திலே முதல் கிரேட் கலாசாலைகள் இரண்டு உண்டு. அவ்விரண்டிலுமாக சுமார் 800 மாணவர்கள் கல்வி பயின்றுவருகின்றனர். தவிர, 14 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளில் 2,700 பிள்ளைகள் படித்துவருகிறார்கள். மேலும், போதனா முறைக் கலாசாலை யொன்றும் இருக்கிறது.

***

விவேக போதினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - JUL 1916
MADRAS

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { நள ௵ சித்திரைமீ : 1916-௵ மேமீ } பகுதி 11

பழமொழிப் போதம்

PROVERBS EXPLAINED

யாவனொருவன் இதயநிலை யெவ்வணமாம்
அவனுமவ் வண்ண முபதேசம்—எவன்
புனைந்தா ரியவுரு நவம் பூரணனாங் கின்யாம்
'மனம்போலும் மங்கலநாண்' மன். (79)

'விளக்கிருக்கத் தீத்தேடல்' மெய்ஞ்ஞானியைக் கண், குளத்துணர்ந்துஞ் சத்துவமா யொன்றித்—துளக்கில், விருத்தியைக் கொண்டெய்தாது வேறு வகையால், அருத்தியொடு தெய்வந்தேடல். (80)

திலக வாரியன் சீடனுள் மையலை
நலிவு செய்கில னாகிலும் நம்பினோன்
மலமொழிந் திடும் மற்றிவன் அன்பினால்
' புலிகொலாவிடி னுங்கிலி கொல்லுமே.' (81)

அதிட்ட பலதாதா வாமீசன் றெண்டின்
மதிக்கிற் றிருட்டபல வள்ளற்—பதிக்குச்செய்(னுக்
ஏவலுயர் வன்னோன்மெய் பின்னோன் 'மருத்துவ
கிவதனை வாணியனுக் கீ.' (82)

'அளவின் மிகுந்தால் அமுதமும்நஞ் சா'தல்
தெளிக குளிர்காய்வார் தீயின்—உளியுறல்போல்
எண்குருவை யன்பச்சத் தெய்தல் சாணச்சப்
பண்பிலதேல் நண்பரிது பார். (83)

'கோவில் விளங்கக் குடிவிளங்கு மென்'றிடலோ
பூவிற் பாஞானி பூசனையோ—டேவல்
புரிவார் கரணமெலாம் பொங்கு புனிதத்தாற்
பிரியாதல் லின்பம் பெறல். (84)

பகர்'பழம்புண் ணரிமுழுப் பண்டிதனே' மாயைச், சகமொ நங்கு மென் மூமிடர் தானென்—றகமுணர்ந்து, முன்னர் விசாரம்பின் முதிர்ந்து தனைக் கண்டோனே, மன்னிறையாய்த் தேற்றுமதன் மாய்வு.' (85)

'சுண்ணத்தின் மேயது சூக்கங்'குருவின் சொலால் மவுனம், எண்ணத் துநிற்குநெய்ச் சிக்குத் தமமா சிராசதம்போய், வண்ணத் தவளாநற் சாந்த மிகநூல் வழிவெற்றிலை, திண்ணத்தன் ஞட்பாகு சேர்ந்தனு பூதிச் சிவப்புறவே.' (86)

செப்பத் தேயுப தேசத் துணையளித்
தொப்பத் தன்னை யுணர்த்தும் பரன்கணே
துப்புற் றேவுந் துணையும் விருத்திநேர்
'உப்பிட் டாரை யுளவரை யுள்கவே.' (87)

'இடிசுவரின் முட்டச்சா ளேசுரமோ' பல்கால்
படிமிசையின் மாய்வுற்றுப் பாழாந்—தடியுடலைத்
தானென்று நம்பத் தகுமூ டமுமுளதோ
ஏனிந்த மோகமனத் தே. (88)

'பண்டைத் தற்பிர மத்தியல் நித்திய பரிசுத்தா
கண்டச் சத்திய சிற்சுக பூரண கனமேதான்
தொண்டற் முத்திக மூந்தனி யான்மசொருபங்காண்
'அண்டத் துற்றது பிண்டத்தும்'மென வறிவீரே.

'தேரை கறிப்பதுவோ செட்டிபடை வெட்டுங்கோல்'
ஒருமிடத் தின்றி யொழியவித்தை—யீருவதோ
தோற்றமா மாயைத் தொகுகாரியங்களிடர்
ஆற்றிடுமோ சான்று யதை.' (90)

'தாயைப்போ லும்பிள்ளை நூலைப்போ லுஞ் சேலை', மாயைச்சான் றுமீசன் வாய்மை யெனக்—காயத்திற், சான்றே யுயிருண்மை சார்மாயை போற் சகமும், தான் றேரின் இல்லாத தாம். (91)

நளஹு ஆடிமீ CALENDAR—பஞ்சாங்கம்

	முஸ்	இங்	தமிழ்	வாரம்	நளஹு ஆடிமீ — சாலிவாகன 1838, கலியுகாதி 5017 — பசலி 1326, கொல்லம் 1091 — ஹிஜரி 1334 — 1916ஹு ஜுலைமீ ஆகஸ்டுமீ
ч	14	16	1	ஞா	பிர 6-34, திரு 52-8, விஷ் 8-8, கௌ 6-34, திவி 5-20, அக 31-28, ஆஷா-பகு-புன 3 புத 17-48, சூன்யதிதி ஆடிப் பண்டிகை சிர உப ஸ்மார்கம் [திதி கரிநாள்
சு	15	17	2	திங்	துதி 0-45, திரு 54-37, அவி 48-43, பிரி 0-28, ஆயு 53.2, கர 0-45, திவி 1-34, திரு 4 வக்-சுக் 27-30, சூன்ய
ரசெ	16	18	3	செ	சது 50-37, சத 45-51, ஸௌ 47-4, பவ 22-59, திவி 5-51, பூச க ரவி 39-8, உத் 3 செ 50-0, கடகபுத 9-45;
ч]	17	19	4	புத	பஞ் 46-44, பூரட் 43-50, சோ 41-19, கௌ 18-40, திவி 1-19, மழை 4க்குள் [கட இருசதுர்துதிதிசங் சது
கு	18	20	5	வியா	சஷ் 43-48, உத்தி 42-45, அதி 36-20, கர 15-16, திவி 7-24, அக 31-26, பூச 1 புத 3-2, அசு 4 குரு 23-26,
ч ч	19	21	6	வெ	சப் 41-57, ரேவ 42-46, சுக 32-13, பத் 12-52, திவி 12-45, பூச 2 புத 57-10காளாஷ்ட
ரச	20	22	7	சனி	அஷ் 41-21, அசு 43-59, திரு 29-4, பா 11-39 ரா 2-21, பூச 2 ரவி 36-35, பிராகுதய சனி 18-10,
ч	21	23	8	ஞா	நவ 42-0, பர 46-26, சூல 26-55, தை 11-40, திவி 8-58, பூச 3 புத 49-15, மழை 7-க்குள்
செசு	22	24	9	திங்	தச 43-55, * கார் 50-7, கண் 25-46, வணி 12-57, திவி 18-16 அக 31-23, சிம்மாய 51-14, உத்தி 4-செ 20-20, திரு 3, வக்சுக் 39-12, கார் உப
ч	23	25	10	செ	ஏகா 46, 59, ரோ 54-54, விர் 25-33, பவ 15-27, ரா 1-55, பூச 4 புத 5-15, சர்வ ஏகா கரிநாள்
ர	24	26	11	புத	துவா 50-54, மிரு 60-0, துரு 26-5, சௌ 18-56, திவி 10-13, பூச 3 ரவி 7-7, சிலவிடங்களில் வெள்ளப்பெருக்கு
ч	25	27	12	வியா	திர 55-33, மிரு 0-32, வியா 27-12, கர 23-13, திவி 23-43, ஆயி 1 புத 24-25, பிரதோ [ஞால் கெடுதல் உண்டு
ச	26	28	13	வெ	சது 60-0, திரு 6-47, ஹர் 28-42, பத் 27-46, ரா 8-38, அக 31-22, புன 3 சனி 30-0, மாசி
ரசெ	27	29	14	சனி	சது 0-31, புன 13-14, வஜ 30-15, சகு 0-31, ரா 3-56, பூச 4, ரவி 37-38, அஸ் 1 செ 51-30, ஆயி 2 புத 13-14,
ч]	28	30	15	ஞா	● அமா 5-20, பூச 19-27, சித் 31-33, நா 5-20, ரா 23-9, இஷ்டி மழை 15-க்குள் [ஆடி அமாதீப பூ
புசு	29	31	16	திங்	பிர 9-34, ஆயி 25-8, விய 32-23, பவ 9-34, ரா 26-12, சிரா சுக் ஆயி 3 புத 2-3, சுக்கிரவக்கிவ 40-10, சந் தரி
ч	1	1	17	செ	துதி 13-4, மக 29-57, வரி 32-28, கௌ 13-4, சே 1-32, ரா 19-54, அக 31-18, ஆயி 4 புத் 51-0, (விய-சிரா
ர	2	2	18	புத	திரு 15-26, பூர 33-42, பரி 31-43, கர 15-26, ரா 21-10, ஆயி 1 ரவி 7-8 (ர்த்தி விரு
ч	3	3	19	வியா	சது 16-40, உத் 36-14, சிவ 29-58, பத் 16-40, ரா 26-24, விம்மபுத 42.26, நாகசது
செ	4	4	20	வெ	பஞ் 16-34, அஸ் 37-29 வித் 27-11, பா 16-34, சே 1-40, ரா 26-16, அஸ் 2 செ 21-30, நாகசெருடபஞ்ச சஷ்-உப கரிநாள்
ரபு	5	5	21	சனி	சஷ் 15.15, சித் 37-35, சா 23-27, தை 15-15' சே 1-31, ரா 20-5, அக 31-15, ஆயி 2, ரவி 36-33, மக 2, புத 44-44, சப் விரு
	6	6	22	ஞா	சப் 12-47, சுவா 36 31, சுப 18-48, வணி 12-47, ரா 18-50, சீதலா சப் மழை 8 க்குள்
ч	7	7	23	திங்	அஷ் 9-16, விசா 34-32, சுப் 13-19, பவ 9-16, ரா 12-51, மக 3, புத 33-24,
	8	8	24	செ	நவ 4-55, தச 54-54, அனு 31.43, பிரா 7-10, கௌ 4-55, ரா 13-43,
ரசெ	9	9	25	புத	ஏகா 54 12, கேட் 28.18, மா 0-22, வை 52-52, வணி 27-0, ரா 15-50, அக 31-12, ஆயி 3 ரவி 5-59, அஸ் 3, செ 41-20, மக 4, புத 23-24, திரு 4, ரிசுசுக் 9-20, ஸ்மா ஏகா வை சிரா
புசு]	10	10	26	வியா	துவா 48-14, மூல 24-29, விஷ் 45-44, பவ 21-13, திவி 20-29, ரா 15-40, வை ஏகா [பிரதோ
ч	11	11	27	வெ	திர 42-8, பூரா 20-26, பிரி 38-7, கௌ 15-11, ர7-54, பச்சாதுதயபுத 26-10, பூர 1, புத 31-10வரலக்ஷ்மி விரு
ர	12	12	28	சனி	சது 36-5, உத்தி 16-20, ஆயு 30-32 கர 9-6, திவி 25-41, ஆயி 4, ரவி 34 48, சிர உச அகஸ்தியஉதய 34-48,
ч	13	13	29	ஞா	○ பௌ 30-18, திரு 12-24, ஸௌ 23-9, பத் 3-11, திவி 21-49, அக 31-8, பூர 2, புத 41-3 பூர்ணிமாந்தி ரிக் யஜு உபாகர்மம் சிரவணு 1 சர்ப பலி ரக்ஷா போ பூ
செ	14	14	30	திங்	பிர 24-59, அவி 8-53, சோ 16-8, கௌ 24.59 திவி 25-59, சிரா பகு அஸ் 4 செ 52-22, பிரதமாதிதி இஷ்டி காயத்ரீஜப
	15	15	31	செ	துதி 20-13, சத 5-53, அதி 9-33, கர 20-13, திவி 21-16, பூர 3 புத 51-4 திதித்வயம்

	குரு		சு-பு சனி
	3-கட-புத 19-சிம்-பு		ரவி சந்
குரு			
			செ

OFFICE OF THE REGISTRAR ... JUL 1916

விவேக போதினி

தொ. 8] நளஹு சித்திரைமீ [பகுதி.11

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

லோகாந்தரம்

இவ்வுலகிலேற்படும் இறப்பு என்பது வேறு ஒரு தேஹத்தைப்பற்றி இங்கேயோ அல்லது லோகாந்தரத்திலேயோ ஏற்படும் ஒரு புதிய பிறப்பே என்பது விளங்கியிருக்கும். இப்படி மரணத்தின் பின் பிறந்து இன்ப துன்பங்கள் அநுபவிப்பதற்கு இடமாகிய லோகாந்தரத்தைப் பற்றிய விஷயங்களை இங்கு நன்கு எடுத்தாராய்வோம். இந்த உலக விஷயம் எல்லோருக்கும் ஒருவாறு விளங்கியிருப்பதால் அதைப்பற்றி அதிகமாக ஆராய வேண்டியதில்லை.

நாம் ஓர் அகன்ற மைதானத்திற்குப் போய் இரவில் சுற்றுமுற்றும் பார்த்தால், ஆகாயம் ஒரு பெரிய கோளார்த்தம் போலவும், அதின் மேல்புறத்தில் ஸகல நக்ஷத்திராதிகள் பதிக்கப்பட்டிருப்பது போலவும் காணப்படும். இப்படியேதான் நமக்குத் தெரியவொட்டாது பூமியால் மறைக்கப் படும் பாகமும் இருக்கும். ஆகவே, இவைகள் இரண்டையும் சேர்த்து மனத்தில் கருது மிடத்துச் சுற்றுமுள்ள நக்ஷத்திராதிகள் எல்லாம் ஒருபெரிய கோளத்தின்மேல்புறம் அமைக்கப் பட்டுள்ளனவாகவும், நாமிருக்கும் பூமி அதன் மத்தியிலிருப்பதாகவும் தோற்றும். மேலும் இந்த நக்ஷத்திராதிகள் இரவில் சுழன்றுவரும் ஒழுங்கை உற்றுநோக்கும் இடத்தில், இந்த ககோளம் நாம் இருக்கும் இடத்தில் தெற்குவடக்காய்ச் சாய்ந்துள்ள ஒரு இருசுக்கோட்டை மத்தியாகக்கொண்டு சுற்றிவருவதாகவும் காணப் படும். இந்த இருசுக்கோடு ஆகாயத்தில் படும் இடத்திற்கு அருகேதான் வடபுறத்தில் துருவநக்ஷத்திரம் இருப்பது. இதனால் தான் இந்தத் துருவநக்ஷத்திரம் இடம் மாறாது இருந்த விடத்திலேயே எப்பொழுதும் இருக்கும். இந்த இருசுக்கோட்டிற்குக் குறுக்கே நேர்மட்டமாக 15 துண்டாக இந்த ஆகாயகோளம் பகுக்கப்பட்டிருப்பதாக எண்ணிக்கொள்ளவேண்டும். நக்ஷத்திராதிக்கூட்டங்களடங்கிய ஒவ்வொரு கதுப்பிற்கும் பொதுவாக லோகம் என்று பெயர். ஆனால் துருவநக்ஷத்திரத்தின் பக்கமாக உள்ளவைகளுக்கு லோகம் என்றும் எதிர்ப் புறமுள்ளவைகளுக்கு தலம் என்றும்பெயர். லோகங்கள் முறையே ஏழு. அவையாவன:- நரகலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம், ஜனோலோகம், தபோலோகம், ஸத்யலோகம் என்பவைகளே. தலங்களும் ஏழு. அவையாவன:—அதல, விதல, ஸுதல, ரஸாதல, மஹாதல, தலாதல, பாதல என்பவைகளே. பூலோகமாகிய நமது லோகம், இவைகளுக்கு இடையில் மத்தியில் இருப்பது. இவ்வாறு பதினைந்தாக ஏற்பட்டுள்ள கதுப்புக்களில், நரகலோகம் பூமியைச் சுற்றி இருப்பதாலும், இதன் பாகங்கள் மற்றையக் கதுப்புக்களிலும்

சிதறி இருப்பதாலும், இதைப் பெரும்பாலும் பூலோகத்திலும், மற்றையவைகளிலும் அடக்கியே கூறப்படும். இதுபற்றியேதான், பதினான்கு லோகம் என்றவழக்கமும், மேலேழ் லோகம், கீழேழ் லோகம் என்ற வழக்கமும் நம்முள் ஸாதாரணமாகக் காணப்படுகிறது. இவ்வுலகம் ஒன்றுக்குத்தான் கர்மபூமி என்ற பெயர் பொதுவாகக் கொடுக்கப்பட்டிருப்பினும், இதிற் சிற்சில பாகங்களே வைதிக கர்மாக்களுக்குத் தகுந்தவை. மற்றைய உலகங்களெல்லாம் போக பூமிகளே; அதாவது பெரும்பாலும் பூலோக கர்மாக்களின் நீண்டபலன்களை அனுபவிப்பதற்கும், சிறுபான்மை மேல் லோக நிலைக்குப் போக முயல்வதற்குமே தகுந்தவை. இதுபற்றியேதான் இவ்வுலகமொழிந்த மற்றைய உலகங்களில் பிறவியிலேயே அதிகாரம் செலுத்த அமைந்துள்ள தேவதைகள் இவ்வுலகத்தில் புண்ய கர்மாக்கள் செய்து தகுதியான நிலையை அடைந்தவர்களேயாக உள்ளார். இந்த ஆதிகாரிக தேவர்களும், அவர்கள் கீழ் அவர்கள் உலகில் குடியேறி, முன் இவ்வுலகப் பிறப்பில் செய்த கர்மாக்களின் பலன்களை அனுபவிக்க வருபவரும், ஒரே பாஷையான ஸம்ஸ்கிருதம் என்ற தேவபாஷையைப் பேசுபவரும், ஒரேஜாதியான ப்ராஹ்மண ஜாதியைச் சேர்ந்தவரும் தாம். இவ்வுலகில்தான் ஸம்ஸ்கிருதத்திலிருந்து வெளிப்பட்டதான பலபாஷைகளைப் பேசும் நால்வகை வருணத்தாரும், அதற்குப் புறம்பான பலஜாதியாரும் உண்டு. ஆகவே ப்ராஹ்மணராகித்தான் மோக்ஷம் அனுகப்படவேண்டும் என்று கூறும் வேதத்திற்கு, இவ்வுலகில் ப்ராஹ்மணராகப் பிறந்தோ அல்லது புண்ய விசேஷத்தால் லோகாந்தரத்தில் புண்யலோகவாஸியாகியோதான் மோக்ஷஸோபானப் பழக்கம் ஏற்பட வேண்டும் என்பதுதான் பொருள்.

இங்கு எடுத்துக்காட்டப்பட்ட பதினான்கு லோகங்களையும் சாஸ்திரங்களில் பல விதமாகக் குறுக்கிக் கூறுவதுண்டு. முதலில் கீழ் ஏழு தலங்களையும்விட்டு அவைகளை மேல் ஏழு லோகங்களுள் அடக்கி அவைகளை மாத்திரம் கூறுவது உண்டு. இவைகளுள்ளும் முதல் மூன்று லோகங்களான பூ, புவ, ஸுவர் லோகங்களுள் மற்றைய நான்கையும் அடக்கிக் கூறுவதும் உண்டு. கீழ் உள்ள ஏழுதலங்களில் உலகங்கள் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்துபவராயும், மஹா புண்ய புருஷர்களாயும் உள்ள சிரேஷ்டர்கள் இருப்பதாலும், மேல் நான்கு லோகங்களுள் மஹா புண்ய புருஷர்களே சென்று வாழக்கூடியதாதலாலும், இவைகளில் ஸாதாரண உலகத்தவர் போகப் பெரும்பாலும் இடம் இல்லாததாலும், இவ்வுலகத்தவர் மேன்மை அடைய வழி காட்ட வந்த வேதம் இவர்கள் எளிதில் போய்ச் சிறப்படையக்கூடிய மூன்று லோகங்களை மாத்திரம் எடுத்துக் காட்டி மற்றவைகளை அவைகளுள் உபலக்ஷணமாக அடக்கிக் கூறும்.

இவ்வுலகங்களில் எல்லாம் நடைபெறக் கூடிய வைதிக கர்மாக்கள் ஐந்துவிதமாக இருக்கும். அவையாவன:-(1)மனுஷ்ய கர்மாக்களாகிய பிறரது நன்மையைக் கருதியும், மற்றைய ப்ராணிகளின் நன்மையைக் கருதியும் செய்யப்படுவனவான மனுஷ்யபூத கர்மாக்கள்; (2) பிதிர்கர்மாக்களாகிய ஒவ்வொருவரது மூதாதையர் முதலியோரைக்குறித்துச்செய்யப்படுபவை;(3)தேவகர்மாக்களாகிய யாகாதி தேவதைகளைக்குறித்துசெய்யப்படும் அக்னிகார்யங்கள்; (4) ருஷி கர்மாக்களாகிய வேதாத்யயனம், ஜபம், ஆசார்யாராதனை முதலியவைகள்;(5)ஈச்வரகர்மாக்களாகிய பக்தி,பூஜை ஸந்தியா முதலிய பொதுக் கடவுள், வைதிக வழிபாடுகள் ஆகிய இவைகளே. இவைகளுள் பூத கர்மாக்களைத் தனியாகப் பிரித்து ஈச்வரகர்மாக்களாகியவைகளைவிட்டு, வைதிக கர்மாக்கள் சில சாஸ்திரங்களில் ஐந்தெனப்படும். அவைகளின்படி இந்த ஐந்து கர்மாக்களும் சென்று, அடைபவர் மூலமாக ஈச்வரனையே முடிவில்போய்நாடுவன என்ற வைதிக உட்கருத்தை உணர்ந்து செய்வதாலேயே ஈசவர கர்மாக்களாகும் என்பதே முடிவான கொள்கை. ஆகவே, எப்படியும் முடிவில் ஈச்வரனையே நோக்கமாக உடைய கர்மாக்களைக்காட்டி மானிடர்களை லோகாந்தரத்தின் வழி மோக்ஷமடையச் செய்வதற்கே ஏற்பட்டது வேதம் என்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபணை இல்லை. இவ்வுலகங்களில் எல்லாம், வாழ்க்கையும் கர்மாக்களும் இங்குள்ளது போலவே விஷய ஸம்பந்தமாயும் வைதிகமாயும் இருப்பினும், மேல் போகப்போக லோகாந்தரங்களில் கர்மாக்களின் குறைவும், அனுபவகாலம் தன்மை இவைகளின் ஏற்றமும், மேல் மோக்ஷம் நோக்கி முயல வரவரச் சிறந்த ஆற்றலும், அவகாசமும் காணப்படும். இவ்வுலகங்களில் ஆபத்துக்கள் அஸுராதிகளிடமிருந்து உண்டு; ஆயினும் அவ்வுலகைவிட அவைகள் சிறந்தவைகளே.

இனிமேல் லோகாந்தரங்களில் உள்ள விஷயங்களைச் சிறப்பாக எடுத்து ஆராயப் புகுவோம். வ்யாஸர் தாம் எழுதிய யோகதர்சன பாஷ்யத்தில் 3-ம்பாதம், 26-ம் ஸூத்திரத்தில் எழுதியபடி (1) பூலோகம்—மத்ய பாகம் நாமிருக்கும் இடம்; இதற்கு ஜம்பூத்வீபம் என்றும் பெயர். இது, ரமணகம், ஹிரண்மயம், உத்தரகுரு,ஹரி,கிம்புருஷம், பாரத, பத்திராசல, கேதுமாக,இளா என்ற வர்ஷங்கள் என்று கூறப்படும் 9 கண்டங்களை உடையது. இங்குள்ள வைதிகர்களானவர்களுக்கு முன்னர்கூறிய 5 கர்மாக்களும் உண்டு. இங்கு பலஜாதிகள் உண்டு; பலவித ஆதிகாரிகர்கள் உண்டு; பல பாஷைகள் உண்டு;ஸுகதுக்கம் மாறிமாறிவரும். ஆயுஸ் 100-வருஷந்தான். இதிலிருந்து மேலும் உயரலாம், கீழும் தாழலாம்.

(2) நரகங்கள்.—இவைகள் பூமிமுதல் ஸ்வர்க்க லோகத்துள்ளடங்கியவை; பெரும்பாலும் பூமி அருகிலேயே இருப்பவை. இவைகள், மஹாகாலம், அம்பரீஷம், ரௌரவம், காலஸூத்ரம், அந்தம், தாமிஸ்ரம் என்ற ஆறே. இவைகளில் முறையே ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இருள் இவைகள் ஏற்றமாக இருக்கும். யமதர்மன் ராஜா; அவன் தூதர்கள் ஆதிகாரிகர்கள்; வாயவிய சரீரத்துடன் வரும் இவ்வுலகவாஸிகள்தான் பிரஜைகள். இங்கு ஓயாத்துக்கம் தான்: ஒரு வைதிககர்மாவுக்கும் இடமிராது இடை இடையே ஸந்ததிகளது தர்ப்பண ச்ராத்தாதிகளால் துக்க விடுதலை இருக்கும். ஸ்வர்க்கத்தில்கூட சில நரகங்கள் உண்டு. அவை வரம்புமீறிய ஸந்யாஸிகளுக்கு மாத்திரந்தான்; இந்திரனால் ஆளப்பட்டவை.

(2) புவர் லோகம்.—இது பிதிர்க்கள், கிம்புருஷாதிகள் உலாவும் த்ருவமண்டலம் வரையில் உள்ள லோகம். இங்கு ஜலீய சரீரம் பெற்ற புண்யவான்கள்,சிலமத்யமவாயவீய சரீரத்துடனிருக்கும் பூதப்ரேத பிசாச புண்யவான்களும் இருக்குமிடம். இங்கு முக்கியமாக சந்திரமண்டலத்தில் நான்கு வர்ணத்தாருடைய பிதிர்தேவதைகள் இருக்கின்றனர். இவர்கள் பெயர்கள் மனுதர்ம

சாஸ்திரத்தில் நன்ருகக் கூறப்பட்டுள்ளது. இங்கு குடியேறும் புண்ய ஜீவர்களுக்குத் தேவ ருஷி ஈச்வர கர்மா மூன்றுதான்; இங்குள்ள ஆதிகாரிகர்களுக்கு ஈச்வர ருஷிகர்மாக்கள் இரண்டுதான்.

(3) ஸுவர் லோகம்.—இதுதான் ஸ்வர்க்கம் என்பது. இதற்கு ராஜன் இந்திரன். இவன் தூதாதிகள் அதிகாரிகள். இவர்களுக்குப் பிதிர், ருஷி, ஈச்வர கர்மாக்கள் உண்டு. இப்படியேதான் இங்குவந்து ஆக்நேய சரீரத்துடன் குடியேறுபவர்களுக்கும். இங்குள்ளவர்களுக்கு விஷய ஆசை அதிகம். ஸுகங்களுக்கு இங்கு அலையவேண்டியதில்லை. எல்லாம் தயாராக இருக்கும். காமதேனு உணவு வேற்றுமைகளையும், கற்பகவிருக்ஷம் துணி வேற்றுமைகளையும், சிந்தாமணி நகைவேற்றுமைகளையும், விமானதிகள் வாகன வேற்றுமைகளையும், தேவர்கள் நினைத்தவாறு உடனே கொடுக்கும். இவர்களுக்கு இருக்கும் வரையில் வயது 30 ஆகவேதானிருக்கும். தேவர்கள் இவைகளை அனுபவித்துக் கொண்டு மேலே போகவிரும்பினுல், தமது கர்மாக்களைவிடாது செய்துவரவேண்டியது. வெறும் அனுபவமாத்திரமிருந்தால் முடிவில் இங்குவந்து பிறக்கவேண்டியதுதான்.

(4) ருஷிலோகங்கள்.—இவை மஹர் (பிருஹஸ்பதி முதலிய ப்ரஜாபதி விசேஷர்கள் இருப்பது), ஜனே (நாரதர் முதலிய தேவருஷிகளிருப்பது), தபோ (வஸிஷ்ட ஸநகாதி தவ ச்ரேஷ்டர்களிருப்பது) லோகங்களென மூன்று பாகங்களை உடையவை. இங்கு வந்து குடியேறுபவர்களுக்குப் பிதிர் ஈச்வர கர்மாக்களிரண்டுதான் உண்டு. இங்குள்ள ஆதிகாரிகர்களுக்கு ஈச்வரகர்மம் ஒன்றுதான். இவைகளில் முறையே 5, 4, 3 விததவர்கள் உண்டு. ஒருவரைவிட ஒருவருக்கு ஆயுஸ்ஸும் மனதை அடக்கும் ஆற்றலும் தபோபலமும் அதிகம். இவர்கள் எங்கும் உலாவும் வல்லமை உடையவர்கள்.

(5) ப்ரஹ்ம லோகம்.—இதற்கு ராஜா ப்ரஹ்மா. எல்லோரும் ப்ரஹ்மவிசார அதிகாரிகளே. ஈச்வரகர்மா ஒன்று மாத்திரம் உடையவர்களே. இங்குள்ளவர்கள் தமது சித்த ஏகாக்ரப்படும் ஆற்றலுக்கேற்ப 4 வகுப்பர்க இருப்பார். இங்கு வரும் ஜீவர்களில், சில புண்யவான்கள் இந்த உலகம் முடிந்து ப்ரஹ்மா முக்தியடையுங்கால் மறுபடி திரும்பாத மோக்ஷத்தைக் கூடவே அடைந்துவிடுவர். மிகுந்தவர்கள் பொதுவாக ராகிஸத்துக்கள் (தமது ஈச்வர த்யானத்திற்கு விஷயானுகூலங்களை விரும்பிநிற்கும் உபாஸகர்கள்) ஆகவே இருப்பதால் இவ்வுலகில் மறுபடிவந்து வைதிக ஸ்ரீமான்கள் குலத்தில் பிறக்கத் தயாராவர். இந்த ப்ரஹ்மலோகம் உள்பட எல்லா லோகங்களுக்கும் போக்குவரவுண்டு. இதற்கு மேற்பட்ட மோக்ஷம் எப்பொழுதும் மாருநிலையுள்ளது. இதையேதான் பகவான் கீதை VIII-ம் அத்யாயம் 16-ம் ச்லோகத்தில்

முண்டகம் வாழ்தூய உலகம் முதலாகும்
அண்ட மெலாம் மீள்வனவே ஆருலகில்-கண்டாய்
எனையடைந்தார்க் கில்லையே எந்நாளும் மீண்டும்
துனிசெய்பிறப் பென்னத் துணி.

என்ருர். இங்குகூறப்பட்ட மனிதர் ஸத்கர்மாக்களால் அடையக்கூடிய லோகாந்தரங்களில் நரகம் தவிர மற்றையவிடங்களில் எல்லாம் கர்மாக்கள் செய்யப்படின், அந்த உலக வாழ்க்கை முடிவில் போகப்படும் லோகாந்தரத்தில்தான் பலிக்கும். இதனுலும் இவ்வுலகவாழ்க்கை நூறு மனுஷ்ய வருஷத்திற்குள்ளே அகப்பட்டிருப்பதாலும், இங்குசெய்யப்படும் கர்மாதான் எளிதில் சீக்கிரம்

பலிக்கும். சீக்கிரம் பலன் தொடங்கி விடுவதாலும், ஸுகதுக்க மாற்றம் எளிதில் ஏற்படுவதாலும்; இங்கு விஷய வைராக்கியம் உண்டாவது எளிது. இவ்வுலகைக் கர்மபூமி என்று கூறுவதற்கு இதுவும் ஒரு காரணம் பகவான் கீதையில் IV-ம் அத்யாயம், 12-ம் ச்லோகத்தில் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிருர்.

கன்மங்க ளின்பயனைக் காதலிப்பார் ஞாலமிசை
பன்முகமும்செய்வர்பரிந்துசுரர்க்-சென்னையெனில்
மானிடர்வாழ் வையகத்தில் வாய்த்திடுமே கன்மத்
ஆனபயன் ஆசென் றறி. [தால்

இப்படி எல்லாம் லோகாந்தர விஷயத்தையும் மரண, உத்க்ராந்திகளது தன்மைகளையும், வைதிக கர்ம விசேஷத்தையும் உணர்ந்து நடந்துகொண்டுவருபவர் எல்லோருக்கும் வரவர மரணபயம் குறைந்துபோய் அது வெறும் உடைமாற்றம் என்றேதோற்றும். கீதை II-ம் அத்யாயம் 13-ம், 22-ம் ச்லோகங்களில் இத்தோற்ற விஷயம் பின்வருமாறு காட்டப்பட்டிருக்கிறது.

செப்பிடுமிம் மெய்யதனிற் றேகிக்குச் சேருமிள
மைப்பருவம்யௌவனமும்வார்த்திகமும்எப்பரிசோ
அப்பரிசே வேறுடலம் ஆருதலும் இத்திறத்தில்
வைப்பதிலை ஞானி மயல்.

உடுத்துக் கிழிந்ததுநீத் தொண்டுசில்வே றென்றை
எடுத்தொருவன் கட்டுதலை ஏய்ப்ப—விடுத்துயிரும்
முன்னிருந்த மூதுடலை மோதமொடு சென்றுபுகும்
மின்னிருந்த வேறுடலுள் மிக்கு.

இங்கு காட்டப்பட்டுள்ள லோகாந்தர விஷயத்தைப் பதஞ்ஜலி யோகதர்சனம் III-வதான விபூதிபாதம் 26-ம் ஸூத்ரமாகிய, 'ஸூர்ய ஸம்யத்தால் புவன ஞானம்' என்பதற்கு வ்யாஸ மஹருஷி எழுதியுள்ள வ்யாக்யானத்திலும் கராண இதிஹாஸங்களில் விஸ்தாரமாகக் கண்டறியலாம்.

இந்த லோகாந்தரங்களிலிருந்து இவ்வுலகில் ஜீவர்கள் மறுபிறப்படையும் விஷயங்களை மேல் எடுத்து விஸ்தரிப்போம்.

சண்டேசுர நாயனர்

CHANDESWARA NAYANAR

அன்பெறு மாதரவுகொண்டு, வன்பிறவியெனுமாமாயை யனுகா வண்ணம் தற்காத்துப் பொற்பாதம் சேருதல் மானிடர் கடன். அங்ஙன மல்லரெல்லாம், அல்லல் நீக்க அரிய புல்லறிவாளர். அவர் பிறந்தும் பிறவாதவர். 'அறிவை நோக்கிடிலதற்குத் தாய் தந்தை யிலை யிவ்வுடலதனை நோக்கி லிறையுநீருபாதான காரணமன்றிருமாயையினிலுண்டாகும் குறியிதுவிங்காயின் மண்ணிலென்னைப்பெறுதவரிலை' என்ற குமார தேவர் குருமொழிக்கிணங்க, சிவனடி சேருதற்கிடையூருய்த் தோன்றிய தன் பிதாவையே வெட்டி, அடியார்க்குத் தலைவராய சண்டேசுவர நாயனர் சரித்திரமாகிய இனிய தேனை நமது நண்பர்கள் குடித்துக் களிக்குமாறு இங்கு எடுத்துரைப்போம். இப்புனிதன் பிர்ம்ம குலத்திலே உதித்தவர்; சோழ மண்டலத்திலே திருச்சேய்ஞலூர் என்ற திருநாட்டிலே எச்சதத்தன் என்னும் அந்தணனுக்கு மகனுய் வாய்த்தவர். அணங்கரசியாகிய பவித்தாரை வயிற்றில் அவதரித்தவர். கோத்திரங்களுள் சிறந்ததாகிய காசிப கோத்திரர். சேயின் பெயர் விசாரசருமர். நாயனர், கிரமப்படி ஐந்தாமாண்டில், வித்தியாரம்பம் பெற்று வேதங்களையும், வேதாங்கங்களையும், சைவாகமங்களையும், பூர்வ ஜன்மவாஸனை சம்பந்தமாய்ச் சுவபாவமாகவே நன்குணரும் சக்தி பெற்ருர். த்விஜக்குறியாக முறையே ஏழாமாண்டில் உபநயனஞ் செய்யப்பெற்று ஆத்மாசாரமாகிய பிர்ம்மோபதேசம் செய்விக்கப் பெற்று, வேதாத்யயன ஆரம்பம் செய்தார். வேதாத்யானம் கற்பிக்க ஏற்பட்ட

ஆசாரியர்கள், தாங்கள் கற்றுக்கொடுக்கு முன் விசாரசருமருக்கு ஏற்பட்ட புத்தியை வியந்தார். அருள், வணக்க முதலிய குணங்கள் இயற்கையாயமைந்த பாலரான விசாரசருமர், அனாதிபோதம், அலுப்த சக்தி முதலிய எண் சித்திகளுடைய ஈசன் எங்குமுளானென்றும், அவனன்றி ஓரணுவு மசையாதென்றும், அவனே நம் முன்னிருப்பதால்தான் அருட்பிரவாக வெள்ளம் ஓடுகிறதென்றும், அவனன்றி நாம் இல்லையென்றும், கனியின் சுவையே அவனென்றும், என் குணத்தனு மீசனுவனாலேயே மாயையென்ற பெண்ணானவள் வெட்கமடைகிறாளென்றும், உளம் பூத்துக் காய்த்துக் கனிவதும் அவனாலேயென்றும் அவனே வேதங்கள் சொல்லாமற் சொல்லி, நாணமடைகின்ற மெய்ப்பொருளென்றும், அவனே பரமபிதாவென்றும், துணிவுற்றுத்தம் மனத்தை வேறிடம் புகவிடாமல் அவனடி சேராநின்றார். 'வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு யாண்டு மிடும்பை யில" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தேன் மொழிக்கிசைய, புலால் யாக்கையை நீத்து, சிவனடிசேர உன்னியவர். அவருக்கு ஒரு உறுதியுண்டு.

"உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மற
ந்தா லுயிர்விடுவேன் கணந்தரியே னுன்னாணை
யிதுநீ, யென்னைமறந் திடுவாயோ மறந்திடுவா
யெனில்யா னென்னசெய்வே னெங்குறுவே
னெவர்க்குரைப்பே னெந்தா, யன்னையினுந்
தயவுடையாய் நீ மறந்தா யெனினு மகில
மெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே,
யின்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன்,
மறவே லிதுதருண மருட்சோதி யெனக்கு
விரைந் தருளே."

என்றார் திருவருட் பிரகாச வள்ளலார். ஆன்மாக்களாகிய நாமெல்லாம் அநாதிமல பத்தர் என்பதும், நமது அம்மல சத்தியைக் கெடுத்து நித்தியமாகிய பேரின்பத்தை அளிப்பவன் ஒப்பற்ற விசனேயென்றும், அறிந்தவர் விசாரசருமர்.

ஒருநாள் அவர் தம்மோடு அத்தியயனஞ் செய்யும் பிள்ளைகளோடு செல்லுகையில் பசுநிரைகள் எதிர்ப்பட்டன. அவைகளில் ஓரீற்றுப்பசு, அவைகளை மேய்ப்பவனாகிய இடையனைக் குத்தப்போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாவத்துக்கஞ்சாதவனாய் அக்கோவைத்தடியால் புடைத்தான். மெய்யறிவுடையவும், பச்சாத்தாபமுடையவருமாகிய அவ்விசாரசருமர் அது கண்டு, துயரமிகுந்து சீற்றமேற்கொண்டு, பதைபதைத்து அகிருத்தியனை அருகி, 'அடா, என்ன பாபஞ் செய்தாய். கோக்கள் தெய்வலோகத்துக் காமதேனு வல்லவா? அவைகள் தரும் பால் ஈசனுக்கு அபிஷேகத் திருமஞ்சனமாயிற்றே! அவைகளின் ஒவ்வொரு அணுப்பிரமாணமும் முப்பத்து முக்கோடி தேவர்களுறையும் இடமல்லவா? அவைதரும் பஞ்சகவ்வியங்கள் சிவபிரானுக்கு அபிஷேகத் திரவியம்; சிவசின்னமாகிய திருநீறு அவைகள் போடும் சாணம். இவைகளெல்லாம் அறியாது நீ கோக்கள் மேய்க்க அருகனல்ல' என்று உறுமி அப்பசுக்களைத் தாமே மேய்க்கத் தொடங்கினர். விசாரசருமர் பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராம்மணர்களின் சம்மதி பெற்றுத் தினந்தோறும் தம்மூர் அருகாமையில் ஓடுகின்ற மண்ணியாற்றங்கரையில் இருக்கின்ற காடுகளிலும், வயலோரங்களிலும், புல் நிறைந்திருக்கும் தரைகளிலும் அவைகள் திருப்தியடையும்படி மேயவிட்டு,வெயில் கூடப் படாமல் காத்துக்கொண்டிருந்து, சிவந்த கிரணங்களையுடைய சூரியன் தன் வீடடைவதற்கு முன், பசுக்களைத் தத்தம் வீட்டில் ஒப்புவித்து வந்தனர்.

இப்படி நடாத்தி வருங்காலையில், நதியில் தாகம் தீருமாறுத் தண்ணீரருந்தும்பொழுது மச்சங்கள் முலைக் காம்பினருகில் முட்ட, தம் சேய்களென்று விட்டளவும் பால் சொரிந்து, அவ்வளவு செழிப்பாயும், குறைவில்லாமல் போஜன பானங்களுக்கும், ஹோமாதி யஞ்யங்களுக்கும் அவைபால் அளித்தன. விசாரசருமர் மேய்க்கத் தொடங்கிய பின் அமிதமாய் ஈன்ற பாலைக்குறித்துச் சந்தோஷமடைந்தனர் அந்தணர். பசுக்களோ, விசாரசருமர் தம்மேல் வைத்த கருணையால், தம் கன்றுகளைப் பிரிந்தாலும், அப்பாலனைப் பிரிந்து சற்று மாற்றாதவாயின. அவைகள், இவரைக்கண்டு கனைத்து ஆரவாரித்துத்

தாயைப்பிரிந்து தவித்த சேயைப்போல் நாடி இவரண்டை நிற்பவாயின. இப்படியிருக்க, அவைகள் கொடுக்கும் பால் சிவனது திருமஞ்சனத்துக் கேற்றது வென்று கருத்தினுன்னிச் சிவார்ச்சனையிடத்தே அவாவுறுவார் விசாரசருமர்.

அடியார்கள் கருத்துக்கிசையக் காத்துக்கொண்டிருக்கும் ஈசன் அருளால் விசாரசருமர் உளத்தில் ஒரு யோசனை உதித்தவுடனே மண்ணியாற்றின் கரையிலிருக்கின்ற ஒரு மணற்றிட்டிலே திருவாத்தி மரத்தின் கீழே ஒரு மணற் சிவலிங்கங்குவித்துத் திருக்கோயிலும் கோபுரமும் மதிலும் வகுத்து, திருவாத்திப்பூ முதலிய நறு மலர்களும் பச்சிலைகளும் பறித்துத் திருப்பூங்கூடைகளிற் கொண்டுவந்து வைத்துவிட்டுப் புதிய குடங்களைத் தேடி வாங்கிக்கொண்டு வந்து, கறவைப் பசுக்களொவ்வொன்றிடத்திலும் சென்று முலையைத் தீண்டினார். அவைகள் கனைத்துப் பால் பொழிந்தன. பாலினாலே நிறைவுற்ற குடங்களைத் திருவாலயத்திலிட்டு அடியு முடியும் அறிய வொண்ணாத பரமசிவனைப் புஷ்பங்களால் அருச்சித்து, வேத கோஷங்களெனத் திருவாக்கால் அன்பு மொழிகள் கூறி, ஆனந்தபாஷ்பம் சொரிய கண்களில் நீர் பெருகி நின்றார்.

திருமஞ்சனமாய்ப் பாலை அபிஷேகம் செய்வர். அய்யனே, எனக்குக் கிடைக்காத பொருளை மனதினாலே இடுவேன் ஏற்றுக் கொள்ளென்பர்.

இவ்வாறு நடந்து வரும் தினந்தோறும், பசுக்கள் குறையாமல் யஞ்ஞங்களுக்கும் போஜனங்களுக்கும் முன்னிலும் பதின் மடங்கு பால் ஈன்றன.

பார்ப்பவர்களுக்கு விளையாட்டாய்த் தோன்றுகின்ற சிவார்ச்சனையைச் செய்துவரும் பொழுது, ஒருவன் அதன் உண்மையைத் தெரியாதவனாகி அவ்வூர்ப் பிராமணர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் அதைக் குற்றமாகக்கொண்டு சபையாருக்குத் தெரிவிக்க, அவர்கள் அச்சிறுவனுடைய தாதையாகிய எச்சதத்தனுக்கு அறிவிக்க, தன் தனயன் இயற்றிய பிசகைப் பொறுக்க முடியாதவனாகி இனி அவ்வாறு நடவாதபடி காப்பதாக வாக்குக் கொடுத்தான்.

தான் கண்டித்தும் விசாரசருமர் இணங்காதது கண்டு, இவன் யாது செய்கிறானென நோக்க, எச்சதத்தன் ஒரு நாள் விசாரசருமர் அறியாவண்ணம், பசுநிரை மேய்க்குமிடம் சென்றான். வழக்கம்போல் விசாரசருமரோ மணலினால் நிர்மாணித்த சிவலிங்கத்தருகே பசுக்களைக் கூவி, முலைக்காம்பைத் தீண்டினார். தீண்டியவுடன், அபிஷேகப் பாலைக் குடத்துள் நிரப்பின. இதுகண்டு வெகுண்ட எச்சதத்தன், குடத்தைத் தன் காலாலுதைத்தான். சிவலிங்கத்தினபிஷேகத்துக்கு வைத்திருந்த க்ஷீரத்தை உதைத்த வேதனை பொறுக்காமல், அவ்வாறு தவறாகச்செய்த தன் தந்தையின் காலை ஒடிக்க அவ்விடம் ஒரு கோலெடுக்க, அது மழுவாக, அம்மழுக்கொண்டு, ஊன் சம்பந்தமாய்த் தந்தையான எச்சதத்தன் காலை வெட்டியெறிந்தார். வெட்டவும், பரமசிவன் ப்ரசன்னமாகிக் 'குழந்தாய்! என்னிடம் நீ வைத்த பக்தியால் நின் தந்தையை வெட்டினாய்; இனி என்னையே தந்தையாகக்கொண்டு என் பக்கிலிரு' என வாக்கருளி மறைந்தார்.

சிவனடி சேருதற்கு இடையூறு யாது நேர்ந்தாலும், அவற்றை ஞானமென்னும் மழுக்கொண்டு சேதனஞ்செய்து, சம்சாரக்கடலைத் தாண்டுதலே பேரின்பம்.

"மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க வேதண்டெழுந்த தாதையை, மழுவினாலெறிந்த, அம்மையானடிச் சண்டிப் பெருமானுக்கடியேன்"

டி. எஸ். வேங்கடராமய்யர்.

பக்தியின் பலம்.—வைராக்யமும் உண்மைப் பொலிவுமுள்ள பக்தியினால் செய்யக் கூடியதைப் பற்றி விஸ்தரிக்கவேண்டியதில்லை. ஹநுமார் கடலைத் தாவியதனால்தான். கண்ணப்பன் கண்ணளித்துக் கடவுளானது மதனால்தான். உடலைப் பற்றிய ஆசையைக்கடந்து, தலைவனுடைய நிலையையுணர்ந்து, அதில் மயங்கி யீடுபடுதலே அதன் தன்மை. அந்த வழிபெற்று வாழ்வதே பிறவியின் பயன்.

அம்பலக்காரன்

AMBALAKKARAN

1891-ம் வருஷத்திய ஜனசங்கியை ரிபோர்ட்டில் மிஸ்டர் (இப்பொழுது ஆனரபிள் ஸர்) எச். யே. ஸ்டேவர்ட் பின் வருமாறு எழுதுகிறார்:— "அம்பலக்காரன் என்பது, கள்ளர்களும், மறவர்களும் வசிக்கும் ஜில்லாக்களில் உள்ள கிராமங்களின் தலைமை உத்தியோகஸ்தனுக்குக் கொடுக்கப்படும் பெயரோ, அல்லது சாதாரணமாய்க் கள்ளர்களுக் களிக்கப்படும் நாமமோவென திட்டமாய்த் தெரியவில்லை. அம்பலக்கார ஜாதியாருக்கும், கள்ளருக்கும் உள்ள நுட்பமான சம்பந்தம் என்னவென அறியவுங்கூடவில்லை. ஆனால், என் கைவசம் வந்திருக்கும் சில விவரங்களிலிருந்து, அம்பலக்காரர்கள், கிராமத்தலையாரிகள் வகுப்பிற்சேர்த்துக் கணக்கிடப்பட்ட முத்திரியர்களுடன் நெருங்கின சம்பந்தம் உடையவராயிருக்கலாமென ஊகிக்கிறேன் ...... அம்பலக்கார ஜாதியாருள் ருதுவானபிறகே தான் சாதாரணமாய் விவாகம் நடத்துகிறார்கள். கைம்பெண் விவாக வழக்கமுமுண்டு. ஆனால், கள்ளன், மறவன் முதலியோரிடத்து சர்வசுலபமாய் நடைபெற்றுவரும் விவாக விமோசனமானது, அம்பலக்காரர்களிடத்து அவ்வளவு சுலபமாய் நடைபெறுவதில்லை. இறந்தோரைத் தகனஞ் செய்வதுமுண்டு; புதைப்பதுமுண்டு. அவர்கள் மது மாம்சாதிகள் புசிப்பார்கள். அவர்களுடைய வழக்கமான பட்டப்பெயர் சேர்வைகாரன் என்பது. ஆனால் முத்திரியன், அம்பலக்காரன், மழவராயன், முதராசன், வன்னியன் முதலிய நாமங்களையும் அவர்கள் தரிப்பார்கள். ஆனால் முத்திரிய ஜாதியாரின் பட்டப்பெயரோ நாயக்கன் என்பதாம்."

1901-ம் வருஷத்திய கானிஷ்மாரிக் கணக்கில் அம்பலக்காரர்களைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிக்கப் பட்டிருக்கிறது.— "அம்பலக்காரர் பயிர்த்தொழிலும், கிராமப் பாதுகாப்பும் செய்துவரும் ஒரு தமிழ்நாட்டு ஜாதியார். சமீபகாலம் வரை அம்பலக்காரன் என்னும் பதமானது கள்ளர்களின் பட்டப்பெயரெனவே கருதப்பட்டுவந்தது. ஆனால் திரவிசாரிக்குங்கால், முக்கியமாய் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் வசிக்கும் ஒருவகை ஜாதியாரின் பெயர் என்று அது தெரிகிறது. முசிரி தாலூக்காவில் ஒரு கிராமத்தில் வசித்துவந்த சில அம்பலக்காரர்களும், முத்திரியர்களும் சேர்ந்து, ஜனத்தொகைக் கணக்கில், தங்களைக் கள்ளர்வகுப்பாருடன் சேர்க்கக்கூடாதென்று ராஜாங்கத்தாருக்கு மனுப் பண்ணிக்கொண்டார்கள். அப்படியிருந்தும், மதுரைநாட்டுக் கள்ளர்கள் அம்பலக்காரர் வீட்டில் உணவெடார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பலக்காரர், முத்திரியர், முத்ராசர், ஊராளிகள், வேடர், வலையர், வேட்டுவர் முதலிய இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் சம்பந்த முடையவரென்று தோன்றுகிறது. அவர்கள் எல்லோரும் ஒரே கிளையிலிருந்து உதித்தவரெனக் கூறுவதற்கும் நியாயமிருக்கிறது. அம்பலக்காரர்கள், அறுபத்துமூன்று நாயன்மாரில் ஒருவரும், ஜாதியில் வேடருமான கண்ணப்ப நாயனாரிடமிருந்து உதித்தவரெனக் கூறிக்கொள்கின்றனர். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வலையர்களும், தாங்களும் அவ்விதமே உதித்ததாகச் சொல்லிக்கொள்கின்றனர். அந்த ஜில்லாவிலுள்ளவர் வலையன் என்னும பதத்துக்குப் பரியாயமாய், அம்பலக்காரன், முத்திரியன் என்னும் பதங்களைப் பிரயோகிக்கின்றனர். சில வலையர்களுங்கூட அம்பலக்காரன் என்னும் பட்டப்பெயரைத் தரிக்கின்றனர். தவிரவும், வலையஜாதியாரின் வாஸஸ்தானத்தைக் குறிக்கும் தேசவிருத்தாந்தத்தினின்றும், எங்கு வலையர்களின் தொகை மிகுதியோ அங்கு அம்பலக்காரர்களின் எண்ணிக்கை குறைச்சலென்றும், எங்கு அம்பலக்காரரின் சங்கியை அதிகமோ அங்கு வலையர்களின் தொகை கொஞ்சமென்றும் தெரிகிறது. ஆகையால் அவ்விருத்தாந்தத்திலிருந்து சில ஜாதியார் மட்டுமே தங்களை அம்பலக்காரர் எனக்கூறிக்கொள்கின்றனர் என்று ஊகிப்பதற்கும் இடம் கொடுக்கிறது. அம்பலக்காரரால் மேல் வகுப்பார் தங்களைப் 'பிள்ளை' என்றும் பாராட்டியழைத்துக் கொள்கின்றனர். நியாயமாய்ப் பார்க்குமிடத்துப் 'பிள்ளை' என்னும் பட்டம் வேளாளர்க்கே உரித்தானது. அம்பலக்கார ஜாதியாரின் மற்றை வகுப்பினருள் தஞ்சை ஜில்லா வாஸிகள் தாங்கள் மூப்பனென்றும், திருச்சி ஜில்லா வாசிகள் தங்களை அம்பலக்காரனென்றும், முத்திரியனென்றும், சேர்வைகாரனென்றும் இஷ்டம்போல் கூறுகிற்கின்றனர். அம்பலக்கார ஜாதியாரின் பஞ்சாயத்துத் தலைமை உத்தியோகஸ்தனுக்குக் 'காரியக்காரன்' என்று பெயர். அவ்வுத்தியோகமும் சில குடும்பங்களில் மட்டுமே தலைமுறை தத்துவமாய் அடையப்பெற்றுவருகிறது. ஒவ்வொரு தலைமைக்காரனுக்கும் ஒரு வேலைக்காரன் உண்டு. அவன் பெயர் 'குடிப்பிள்ளை' என்பர். அவனுடைய அலுவலோ, அவசியமான காலங்களில் பஞ்சாயத்தாரைக்கூப்பிடுவதும், தூது போவதுமாம். இவ்வுத்தியோகத்துக்குச் சம்பளமாக அவன் ஒவ்வொரு அம்பலக்காரக் குடும்பத்தினின்றும் வருஷம் ஒன்றுக்கு நாலணாவீதம் பெறுவான். அம்பலக்கார வகுப்பை அநேக பாகங்களாகப் பிரித்திருக்கின்றனர். அவைகளுள் முக்கியமானது நான்காம் அவையாவன:—(1) முத்திரியன் அல்லது முத்ராசன், (2) காவல்காரன், (3) வன்னியன், (4) வலையனுமாம். இவ்வகுப்பாருள் ஒவ்வொருவனும் தன் வகுப்பின்றிப் புறம்பில் கொள்வினை கொடுப்பினை செய்யக்கூடாதென்று பஞ்சாயத்தார் திட்டமாய்த் தடுத்திருக்கின்றனர். அதைமீறி எவனாவது புறம்பில் சம்பந்தம் செய்வனேல், அவன் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்படுவான். ஆனால் அவர்களுடைய பழக்கவழக்கங்களோ மேல் வகுப்பாரும் கீழ் வகுப்பாரும் அனுசரித்துவரும் நடவடிக்கைகளின் ஒருவிதக் கலப்பு. அவர்களுள் சிலர் பிராம்மணர்களைப் புரோகிதர்களாகக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் சாவுகாலங்களிலும், சிராத்தகாலங்களிலும் பூணூலைத் தரிக்கின்றனர். ஆனாலும் அவர்கள ஆடு, பன்றி, கோழி இவற்றின் மாமிசத்தை யுண்கிறார்கள். மதுபானஞ் செய்வதுமுண்டு. விதவைகளையும், விவாக விமோசனம் செய்யப்பட்ட பெண்டிரையும் மறுமணம் புரிந்துகொள்ள அநுமதி கொடுக்கின்றனர்."

முத்திரியன், காவல்காரன், என்னும்பதங்களுக்குத் 'தலையாரி' என்று பொருள். வன்னியன் என்பது வேறோர் புறம்பான ஜாதி. ஆனால் அவர்களுள்ளும் சிலர் அம்பலக்காரன் என்னும் பட்டத்தைத் தரிக்கின்றனர். அம்பலக்காரர்களும் செல்வப்பெருக்கினால் தாங்கள் தாய்க்கிளையினின்றும் பிரிந்த வேறு வகுப்பினர் எனக் கூறிக்கொண்டபோதிலும் வெளிப்படைக்கு வலையர்கள் தாம்.

மிஸ்டர் எப். ஆர். ஹெமிங்வே பின்வருமாறு அபிப்பிராயப்படுகிறார்: — இச்சென்னை ராஜதானியில் மற்றப் பிராந்தியங்களைவிட திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலும், புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலுந்தான் அம்பலக்காரன் அல்லது முத்திரியன் இவர்களுடைய தொகை மிகவதிகமாயிருக்கிறது. அவர்கள் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு ஜாதியாராய் எண்ணப்பட்டபோதிலும், இந்தத் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஒரேஜாதியாராகவே தோன்றுகின்றனர். மேலும், தங்களையே திருச்சினாப்பள்ளி தாலூகாவில் முத்திரியன் என்றும், மற்றைப் பாகங்களில் அம்பலக்காரனென்றும் சொல்லிக்கொள்கின்றனர். எப்பெயரிட்டழைத்தபோதிலும், அவர்கள் ஆக்ஷேபனை சொல்வதில்லை. தங்களை வலையர் என்று கூறிக்கொண்டபோதிலும் சாதாரண வலையர்களுடன் கொள்வினை, கொடுப்பினை செய்யச் சம்மதியார். தங்களுக்கு வலையர் என்னும் பெயர் உண்டானதற்கு ஆதாரமாக ஓர் உபாக்கியானமும் சொல்லிக்கொள்கின்றனர். அதாவது பரமசிவனுடைய கையாழி தவறிக் கங்கையில் விழ, அதையோர் மீன் விழுங்கிவிட்டதாம். அம்மீனைப் பிடிப்பதற்காகத் தங்கள் முன்னோர்களில் ஒருவர் வலையொன்றைக் கண்டுபிடிக்க, அதுபற்றி அவர் சந்ததியாருக்கு வலையரெனப்பெயர் வந்ததாம். நிற்க, தாங்கள் முன்காலத்தில் சீருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்ததற்கு அறிகுறியாக ஸ்ரீரங்கத்திலுள்ள 'முத்தராசன் கொரடு' என்று கூறப்படும ஆயிரக்கால் மண்டபத்தையும், பழனியிலுள்ள ஒரு பெரிய மண்டபத்தையும் சுட்டிக்காட்டி அவை தங்களுடைய மன்

னர்களாற் கட்டப்பட்டவையென்று கூறிக்கொள்கின்றனர். மேலும், பழனி மண்டபத்துக்கு இந்தச் சாதியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் வருஷம் ஒன்றுக்குக் கால் ரூபாய் விதம் காணிக்கையும் சமர்ப்பித்து வருகின்றனர். முத்திரியர்கள், பரமசிவனுடைய வெயர்வை முத்திலிருந்து தாங்கள் உண்டானபடியால் தங்களுக்கு அப்பெயர் வந்ததாகவும் சொல்லிக்கொள்கின்றனர். அச்சாதியானது, அநேக வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகுப்புக்கும் 'நாடு' என்று பெயர். அவ்வித நாடுகளின் தொகை எவ்வளவென்றும், ஒவ்வொன்றின் பெயர் என்னவென்றும் நன்கு புலப்படவில்லை. அவைகளுட் சிலவற்றின் பெயர், திருச்சிராப்பள்ளி தாலூகாவிலுள்ள எட்டரை, கோப்பு, அடவட்டூர், திராம்பாளையம், வீமநாய்க்கன் பாளையமும், முசிரி தாலூகாவிலுள்ள ஆமூர், சவிண்டிப்பட்டி, கருங்காலியுமாம். இவைகளில் சில நாடுகளில் மட்டுமே கைம்பெண் விவாகம் செய்யச் சம்மதிக்கிறார்கள். அவர்கள் முத்திரியன், அம்பலக்காரன், சேர்வைகாரன், காவல்காரன் முதலிய பட்டங்களைத் தரிக்கின்றனர். அவர்கள் ஜனசாரத்தில் உயர்ந்த வெள்ளாளன், கள்ளன், நட்டமான், ரெட்டி இவர்களுக்குத் தாங்கள் கீழ்ப்பட்டவரென ஒப்புக்கொண்டு, அவர்களிடமிருந்து உணவு முதலியவை பெற்றுக்கொண்டபோதிலும், பள்ளி, ஊராளி, உப்பிலியன், வலையன் இவர்களைக்காட்டிலும் உயர்ந்தவரெனவே கூறுகிற்கின்றனர். அவர்களுடைய தொழில் விவசாயம். ஆனால் சிலர் சில்லரை வியாபாரம் செய்கின்றனர். சிலர் கொத்து வேலை செய்வதுமுண்டு. சிலர் தலையாரி உத்தியோகமுஞ் செய்கின்றனர். மணக்காலங்களிலும, சாவுகாலங்களிலும் அவர் பூணூல் தரிக்கின்றனர். அவர்களுடைய ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நாட்டுக்கும் பஞ்சாயத்துகள் உண்டு. பட்டணத்துச் செட்டிகள் என்று சொல்லப்படும் சிலர் அச்சாதியில் சற்று மேம்பட்டவரென்று சொல்லப்படுவதுந்தவிற, நாட்டுத்தலைமைக்காரருடன் உட்கார்ந்துகொண்டு, விபசாரம் முதலிய குற்றங்களை விசாரணை செய்வார்கள்.

இராஜ்ய பரிபாலனம்

FORMS OF GOVERNMENT

சட்ட நிரூபண சபை

(The Legislative Council)

மேற்கூறியபடி தற்காலத்தில் அநேகமாய் எல்லாத் தேசங்களிலும் பார்லிமெண்டரி ஸிஸ்டம் என்று சொல்லப்படும் பிரதிநிதிச் சபை அரசாட்சியானது நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய அரசாட்சி நடக்கும் தேசங்களில் சட்ட நிரூபண சபை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அப்பிரிவுகளின் அங்கத்தினர்களால் சட்டங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அவ்விதமாய் அரங்கேற்றப்பட்ட தீர்மானங்களை நாம் சட்டங்கள் என்று சொல்லுகிறோம். சபையின் இரு பிரிவுகளை (1) கீழ் அல்லது முதல் அங்கம், (2) இரண்டாவது அல்லது மேல் அங்கம் என்று கூறுவது வழக்கம்.

ஷை சபையை ஏன் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும் என்று கேள்வி கேட்கலாம். அம்மாதிரிப்பிரிவுக்கு முக்கிய காரணமாவது:— காரியங்களை அங்கத்தினர் அவசரப்பட்டுச் செய்யாமல் நிதானமாய் ஆலோசனைசெய்து முடிப்பதற்கே. எப்படி என்றால், ஒரு மசோதா ஓர் அங்கத்தினரால் ஆலோசனைசெய்யப்பட்டு மற்றொரு அங்கத்திற்கு அனுப்பப்படும். மேற்படி அங்கத்தின்மெம்பர்கள் அந்த மசோதாவைப்பற்றி ஆலோசனை செய்து, தங்களுடைய தீர்மானத்தைக் கண்டு, மறுபடியும் முதல் முதல் மசோதாவைச்சோதித்த பிரிவுக்கு அனுப்புவார்கள். இம்மாதிரி மூன்று தடவைஅனுப்பப்பட்டு ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொரு பிரிவும் தனித்தனியே ஆராய்ச்சி செய்யப்பெற்றுக் கடைசியாகத் தங்கள் தீர்மானங்களை வெளியில் எல்லா ஜனங்களுக்கும் தெரியும்படி பத்திரிகைகளிலோ அல்லது சர்க்கார் கெஜட்டுகளிலோ பிரசுரம் செய்வார்கள்.

அங்கத்தினர்கள்

கீழ் அல்லது முதல் அங்கம்.—இவ்வங்கத்தினர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எவ்வாறு ஜனங்கள் தங்கள்

பிரதிநிதிகளை நியமனம் செய்கிறார்கள் என்பதைப் பின்பு யோசிக்கலாம். அநேகமாய் இராஜாங்கத்தில் பணம் சம்பந்தமான விஷயங்களை இவ்வங்கத்தினர்கள்தான் தீர்மானம் செய்யவேண்டும். இவர்கள் உத்திரவன்னியில் பணம் சம்பந்தமான விஷயம் எவ்விதமாய் இருந்தபோதிலும் சரி, இராஜாங்கத்தார் அவ்விஷயத்தில் பிரவேசிக்க முடியாது. இவ்வங்கத்தின் மெம்பர்கள் சபையிலிருக்கக் காலவரை ஏற்பட்டிருக்கிறது. அந்தந்த நாட்டாரினிஷ்டப்படி ஒரு வருஷம், இரண்டுவருஷம், மூன்று வருஷம், ஐந்துவருஷம், இவ்வாறாகக் காலவரை ஏற்பட்டிருக்கின்றது. அதற்குப்பிறகு ஜனங்கள் மறுபடியும், ஷை மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இரண்டாவது அல்லது மேல் அங்கம்.— இதில் பரம்பரைப் பிரபுக்களும், அரசனால் நியமனம் செய்யப்பட்ட பிரபுக்களும், இராஜவம்சத்தைச்சேர்ந்தவர்களும், ஆகஇவர்களே அங்கத்தினர்களாவார்கள். சிலதேசங்களில் எல்லா அங்கத்தினர்களும் தங்கள் ஆயுள் பரியந்தம் மெம்பர்களாக விருப்பார்கள். சில இராஜ்யங்களில், பாதி அங்கத்தினர்கள் சில வருஷங்களுக்கு மாத்திரம் நியமனம் செய்யப்படுவதும், பாக்கிப்பாதிஅங்கத்தினர்கள் முன்சொன்னப் பிரகாரம் ஆயுள்வரை மெம்பர்களாக ஆக்கப்படுவதுமுண்டு. மேலும் இவ்வங்கத்தினர் காரியம் சட்ட ஏற்பாடு செய்வதாக இருந்தபோதிலும், சில தேசங்களில், இவர்களுக்கு நியாய விசாரணை சம்பந்தமான சில அதிகாரங்களைக் கொடுத்திருப்பதை நாம் பார்க்கலாம். பல மாகாணங்கள் சேர்ந்து நடத்திவரும் அரசாட்சியில் சட்டநிரூபண சபையின் மேலங்கத்தினர்களை அவ்வரசாட்சியி லடங்கிய பலவேறு மாகாண சட்ட நிரூபண சபையார் தேர்ந்தெடுக்கிறார்கள். இதைப்பற்றிப் பின்னால் சேர்ந்தவரசைப்பற்றிச சொல்லும்பொழுது விரிவாகச் சொல்லப்படும்.

சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவோர்கள்

(The Executive)

சட்ட நிரூபண சபையாரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரும் பொருட்டு ஒவ்வொரு இராஜ்யத்திலும் சில புத்திமான்களை நியமித்திருக்கிறார்கள்.

ஆனால் எக்ஸக்யூடிவ் (Executive) என்ற பதத்தை ஒரு இராஜ்யத்திலிருக்கும் சட்ட நிரூபண சபையார்கள், நியாய விசாரணை செய்பவர்கள், ஆக இவர்கள் அல்லாத மற்ற எல்லா அதிகாரிகளுக்கும் உபயோகிக்கலாமென்று சிலர் கூறுவர். சட்டங்களைப் பரிபாலனம் செய்பவர்கள் சிலரே யாவர். அவர்களால் நியமனம் செய்யப்பட்டு வேலைபார்த்துவரும் அதிகாரிகள் அவர்கள் கீழிருந்து அவர்களின் உத்திரவைப்பெற்று, அதற்கேற்றவாறு தங்கள் தங்கள் பிரதேசங்களில் உத்தியோகம் செய்துவரும் விசாரணைக்கர்த்தர்களாவார்கள். சாதாரணமாக, இச்சபையோர்களை அரசாட்சியின் தலைவன் நியமனம் செய்யலாம். அல்லது அவர்களைநியமனம்செய்யும் அதிகாரத்தையுடைய சபையும் உண்டு. இந்த மெம்பர்களுக்கும் காலவரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சபைமெம்பர்களில் மூன்றிலொரு பாகமோ அல்லது பாதியோ சில குறித்த காலத்திற்கொருமுறை மாறவேண்டும். ஆகவே இப்படி மெம்பர்கள் மாறுவதனால் இச்சபை ஒருவாறு இடைவிடாமலிருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால் இங்கிலாந்தில் காபினட் மெம்பர்கள் (Cabinet Members) திடீரென்று தங்கள் காபினட்டு வேலையை விட்டுவிடலாம்.

பின்னால் சில இராஜ்யங்களைப்பற்றி விவரித்தெழுதும்பொழுது அந்தந்த அரசாட்சிக்குரிய சட்ட பரிபாலனசபையை நன்கு விவரித்துச் சொல்லுவோம். இராஜாங்கத்தின் மூன்றாவது பிரிவாகிய நியாயாதிகாரிகள் என்பதைப்பற்றி இனி விசாரிப்போம்.

நியாயாதிகாரிகள்

(The Judiciary)

ஒவ்வொரு அரசாட்சியும், கவனிக்கவேண்டிய விஷயங்களில், பிரஜைகளின் க்ஷேமம் முதன்மையானது. அதற்காகவே இராஜாங்கத்தார் சட்டங்களை ஏற்படுத்தி மேற்படி சட்டங்களுக்கு ஜனங்கள் கீழ்ப்படிந்து நடக்கும்படியாகச் சில அதிகாரிகளையும் வைத்

திருக்கிறார்கள். சட்டப்படி நடக்காதவர்களை விசாரணை செய்வதும், அவர்களுக்குத்தகுந்த தண்டனை விதிப்பதும், இன்னும் ராஜாங்கத்தாருக்கும், ஜனங்களுக்கும் ஏற்படும் மனஸ்தாபங்களைக் கவனிப்பதும், அவைகளைச் செம்மையாக விசாரணை செய்து அதற்கேற்ற பரிகாரங்களைச் செய்து, ராஜ்யத்தில் நீதியை நிலைநிறுத்துவது மாகிய இத்தகைய வேலைகளைச்செய்ய ஏற்பட்டிருக்கும் அதிகாரிகளைத்தான் நியாயாதிபதிகள் என்று சொல்வது. இவர்களில் மேல் தரப்பு அதிகாரிகள், சட்டபரிபாலனம் செய்வோர்களால் நியமனம் செய்யப்பட்டு வந்தபோதிலும், பின்சொல்லப்பட்டவர்கள் ஏதாவது குற்றங்களில் சம்பந்தப்பட்டால் அவர்களுக்கு விரோதமாக நியாயாதிபதிகள் தீர்மானம் செய்வது சாதாரணமான விஷயமாகவிருப்பதை நாம் பார்க்கலாம். இவர்கள் விசாரணைக்குள் வரும் வியாச்சியங்களாவன:— (1) கொலை, களவு, துரோகம், பொய் சத்தியம் முதலானதுகளும்; (2) ஒருவர்க் கொருவர் தங்களுக்குள் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கைக்கு விரோதமான விஷயங்களும், கொடுக்கல் வாங்கல் இன்னும் இதைப்போன்ற விஷயங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுமே. இவைகளை முறையே, (1) கிரிமினல் வியாச்சியம், (2) சிவில் வியாச்சியம் என்று சொல்வது வழக்கம்.

அரசாட்சியின் பிரிவுகளில் ஒன்றற்கொன்று சம்பந்தம்:—

துரைத்தனத்தின் பிரிவுகளை நோக்குங்கால் அவைகளில், ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் சம்பந்தமில்லைபோல் தோற்றலாம். அவைகளைப்பற்றிச் சொல்லும்போதும் கூட நாம் தனித்தனியேதான் எடுத்துக் கூறினோம். ஆயினும் அவைகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலிருப்பது அரிது. ஏனென்றால் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, இத்தேசங்களிலிருக்கும் சட்ட பரிபாலன சபையோர்கள் சட்ட நிரூபண சபை மெம்பர்களாக இருந்து அந் நிரூபண சபையின் இஷ்டத்துக்கிணங்கி நடக்கிறார்கள். வேறு சில தேசங்களிலோ சட்ட பரிபாலன சபையார், சட்ட நிரூபண சபையாரைக் கவனிப்பதே கிடையாது. இதற்கு உதாரணமாக, பிரஷ்யா, அமெரிக்காக் கண்டத்து ஐக்ய நாடுகளை எடுத்துக்கொள்ளலாம். இன்னும் சில தேசங்களில் அதாவது ஸ்விட்ஜர்லாண்டில் ஒன்று மற்றொன்றைச்சார்ந்தே காரியங்களை நடத்தி வருகிறது. மேலும் எத்தேசங்களில் இம்மாதிரி இந்த இரண்டு பிரிவுகள் ஒன்றுக்கொன்று இணங்கி நடக்கின்றதோ, அத்தேசங்களில் பரஸ்பரமாக ஒன்று மற்றொன்றை உண்டாக்கவும், கலைக்கவும் ஏற்படுகின்றது. முன் கூறியபடி, சட்ட நிரூபண சபையின் மேல் அங்கத்தினர்க்குச், சில நாடுகளில் கொஞ்சம் நியாய விசாரணை சமபந்தப்பட்ட அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

E. நரசிம்மன், பீ. ஏ., யல். டி

பெற்றோர்களும் பிள்ளைகளும்
PARENTS & CHILDREN

(357-ம் பக்கத்தொடர்ச்சி)

இவைநிற்க, மகன் தந்தைக் காற்றுமுதவி யெவையென ஆராய்வோம்.

'முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே அந்தி பகலாச் சிவனை யாதரித்து அங்கமெலாம் நொந்து பெற்றுப் பையலென்றபோதே பிரிந்தெடுத்து' ஆன பன்மருந்தும் அருந்தித் துன்புற்றுக் குழந்தை அழுங்கால் கட்டிலிலும், தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் வைத்துக் காதலித்து மகவுக்கு நோய்காணில், தான் மருந்தருந்திக் குழந்தையின் குற்றமனைத்தையுங் குணமாகவே கொண்டு, தன்னுயிரினும் மேம்பாடாகப் போற்றிக் காப்பாற்றிவரும் தாய்க்குப் பசியென்பதே தோன்றாமல் ஊணும் உதவி, உடைகொடுத்துத் துஷ்டஸகவாஸ மெய்யவும் சூதாடிப் பொய்பேசவும் புறங்கூறவும் நியாயஸ்தலங்களில் பொய்ச்சாட்சி சொல்லவும் சிறிதேனும் இடங்கொடாமலும்,

அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாக்
கொள்ளிக்கும் பட்டகந்தனக்கு மென்னக்குறித்து நிதம்
துள்ளித்திரிகின்ற காலத்திலெந்தன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை யாகிய பாதகனே

(இதன் தொடர்ச்சி 387-ம் பக்கம் பார்க்க.)

என்று பின்பு தனது கஷ்டத்தை யுன்னித் தந்தையைப் பழியாமல் இப்பொழுதே சிறந்த பூஷணமான கல்வியைப் புகட்டவும் தம்மக்கட்குத் தீங்கு நேரிடின் தன்னுயிரைக் கொடுத்தேனும் அவ்விடுக்கணினின்றுத் தப்பிவித்தும், இங்ஙனம் போற்றிவரும் தந்தையின் நன்றிக்கும் போதுமான கைம்மாறுதவலும் நம்மாலியலுமோ! அப்படியிருக்க அவர்கள் செய்த பெரும் பேற்றை மறத்தலும் நீதியோ!

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்றபடி பெற்றோர் செய்துள்ள நன்றியைக் கொன்ற மகனுக்கும் பிராயச்சித்த முண்டோ? அவர்கட்கு நரகமேகதி. நாம் நம் பெற்றோர்க்கு எவ்வண்ணம் நன்றியைச் செலுத்துவதுஎன்றோர் கேள்விகேட்கலாம். நாம் அவர்கட்குப் பிரியமுள்ள பிள்ளைகளாயிருந்து அவர்கட்கு ஆபத்துக் காலத்தில் உதவி, அவர்களை மரியாதை செய்து, அவர்கள் சொற்றட்டாமல் கீழ்ப்படிந்து நாமும் நல்வழியில் நடந்து திருப்தி செய்வதே நமது கடமையாகும். உண்மையான பித்ருவாஞ்சை உள்ளோனுக்கு இவைகளைச் செய்து முடித்தல் ஓர் அரியகாரியமன்று.

ஆனால் தற்காலத்துப் பிள்ளைகளிடம் இக்குணம் மாறுபட்டிருப்பதைக் காண்கிறோம். மக்கள் வாஞ்சைக்கே பெயர் பெற்ற நமது இந்தியாவில் இக்கதி வந்து நேர்ந்தது யாவரும் துக்கிக்கத்தக்கதே. மனக்கவலையாலும் நோயாலும் வார்த்திகத்தாலும் வருந்தும் பெரியோர்கள், தம்மக்கட்கு ஏதேனும் ஒரு கட்டளை இடின், இப்பாபி மக்கள் அவர்களை என்னபாடு படுத்துகின்றனர்! வயதுமுதிர்ந்த கிழவரிடம் பாம்புபோல் சீறி வெறியன்போல் விழுகின்றனர். இந் நவீன நாகரீகமும் கல்வியும் பெற்ற இச் சீமான் தன் நண்பர்களுடன் இருக்கும் பொழுது அவன் பிதா தவறி 'இப்படிப் பேசாதே அது அழகல்ல' என்று இவ்விதம் ஏதேனும் புகன்றுவிட்டால் அவர் கதி அன்றே அதோகதிதான். அவர்களைப் பிதற்றல் என்றும், ஒன்றும் அறியாக் கிழந்தானே என்றும், கர்நாடக ஆசாமி என்றும பேசி உதாசீனிக்கின்றனர். இது என்ன பரிதாபம்!, இது எவருடைய சாபமோ! அரைப்படிப்புப் படித்த நம் வாலிபர்கள் பலர்க்கே இக்குணம் வந்திருக்கின்றது. தன்னைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கே இவ்விதமும் சீறலுமென்றால் இவனால் தேசத்திற்கு எவ்வளவு பிரயோஜனம் உண்டாகும் என்பதை யுன்னிப்பாருங்கள். சிலர், தம் நண்பர் முன்னும், பிறர் முன்னும், தம் பிதாவை ஒப்புக்கொள்வதில்லை. இதனினும் பரிதபிக்கத்தக்க செய்கை ஒன்றும் உளதோ! இவர்களுக்குத்தக்க ஒரு நரகமும் பிரும்மனால் சிருஷ்டிக்க இயலுமோ!

இச்சந்தர்ப்பத்தில்நான் நேரில் கண்டனவும், கண்ட ஒருவரிடமிருந்து கேட்டனவுமான இருசிறுசம்பவங்களைச் சொல்லுகின்றேன்.

இந்த ஜில்லாவிலுள்ள பெரிய பாடசாலைகள் ஒன்றனின் தலைமை உபாத்தியாயர் ஒருவர், ஒருநாள் ரஸ்தா மார்க்கமாய் போய்க்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவருக்கு முன்னால் அவரது 18 வயதுள்ள மாணவனொருவன் தன் வயது சென்ற பிதாவுடன் அச்சாலையில் வந்துகொண்டிருந்தான். அக்கிழவர் தலையில் ஒரு பெரிய மூட்டையும் பையன் கையில் ஒரு சிறிய மூட்டையும் இருந்தது. அவன் தன் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் வருவதைத் தூரத்திலேயே யறிந்து, தன் மூட்டையைத் தன் தந்தையிடம் கொடுத்துத் தான் வெகு வேகமாக நடந்துவந்து உபாத்தியாயரைச் சந்தித்துச் சலாம்செய்தான். பாவம்! மூட்டை மாற்றின விஷயத்தையும், பின்னால் வருபவர் அவன் பிதாவே என்பதையும உபாத்தியாயர் அறிந்துவிட்டாரென அவன் தெரிந்து கொள்ளவில்லை. உபாத்தியாயரும் அவனுடன் பேசிவிட்டு 'அதோ வருபவர், உன் பிதாவோ' என்று வினவ, 'அந்தக் கிழவர் யாரோ' என்று அவன் சொல்லிவிட்டான். கவட்டு உபாத்தியாயரும் அங்கொன்றும் பேசாமல் தான் முன்னமே அறிந்து கொண்ட விஷயத்தையும் காட்டாமல் சாதாரணமாக விடைபெற்றுச் சென்றுவிட்டார். பின்பு மறுநாள் காலையில் இவனுடைய சரித்திரம் முழுவதும் 600 பிள்ளைகளுக்கும் 50 உபாத்தியாயர்களுக்கும் முன்னிலையில் பிரசங்கிக்கப்பட்டது. அந்தத்

தலைமை உபாத்தியாயர், முதல் நாள் தன் பிதாவை ஒப்புக்கொள்ளப் பயந்த அந்நாவை அறுத்துவிடத் தனக்கு சக்தியில்லை எனவருந்தி, தாம் மூட்டை தூக்குவதற்கு அகௌரவமென மதித்த, கைகளையும் தோள்களையும் நன்றாய் நெடு நாள் ஞாபகம் இருக்கும் வண்ணம் புடைத்துவிட்டார். அவன் ஒரு வாரத்திற்கு பாடசாலையினின்றும் நீக்கப்பட்டு அக்காலத்திற்குள் அவன் பிதாவினிடமிருந்து மன்னிப்புப் பத்திரமொன்று வாங்கிவரவேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

இத்தகைய மனிதர்களும் உலகில் இருக்கின்றனர்? இவனோ பையன்; உலகமறியாதவன் என்றியம்பலாம்: இத்தகைய குணம் கல்வியில் முதிர்ந்த பெரியோர்களுக்கும் உளதென அறியத் துக்கமாயிருக்கின்றது. கல்வியும் கேள்வியும் முதிர்ந்த ஒரு டிப்டிகலெக்டர் தம் நண்பர்களுடன் உல்லாஸமாக வீட்டில் பேசிக்கொண்டிருந்தபொழுது, அவரது வைதிகமான பிதா ஸ்நாநஞ்செய்துவிட்டு உள்ளே சென்றாராம். அப்பொழுது அவரது நண்பர்கள் கலெக்டரை நோக்கி 'அவாள் யார்?' என்று கேட்க 'யாரோ ஒரு சாஸ்திரிகள்' என்று அவர் சொன்னாராம். அந்த டிப்டிகலெக்டர் இப்பொழுது வேலையை இழந்து மிக்க இழிவானஸ்திதியை அடைந்திருக்கின்றாரென யறிகிறோம்.

இத்தகைய மனிதர்கள் இருப்பது பூமிக்கே ஒரு அவகேடு தன் பிதாவை ஒப்புக்கொள்ளாத மனிதனை நமக்கெல்லாம் உலக பிதாவான ஈசன் ஒப்புக்கொள்வாரா? அவனுக்கு நற்கதியுண்டா? பெற்றோர்கள் தம் மக்கள் தங்களை அவமதிக்கின்றனர் என்றறிய வருவரேல், பின்பு அவர்மனம் என்னபாடு படும்! பெற்றோர்கள் வயிறு எரிந்தால் பிள்ளைகள் வாழ்வார்களா? ஒருநாளுமில்லை. ஆதலால் நண்பர்காள்! எக்காரணம்பற்றியும் நம் பெற்றோரை நாம் அவமதியாமல் கௌரவப்படுத்தவேண்டும்.

ஒருவேளை நம் பெற்றோர்கள் சிறிது கோபிஷ்டர்களாயும், அநாவசியமாய்த் தொந்தரை செய்பவராயும் இருக்கலாம். அப்படியிருப்பினும், நாம் அவர்களிடம் சிறிதேனும் கோபியாமல் அவர்களை மரியாதை செய்யவேண்டும் ஏனெனில், பிழை செய்தல் மனிதர்களுக்கே சுபாவமாகும். ஆயினும், நம்மினும் எவ்விதத்திலும் பெரியோரான நம் பெற்றோர்கள் பிறழ்வதைப் பிறழாகவே கொள்ளல் கூடாது. ஏனெனில், புவியில் பிறந்த மக்களாகிய நமக்கு நம் பெற்றோர்களினும் மேம்பட்டவர்கள் கிடையாது.

'எப்புவிகளும்புரக்குமீசனைத் துதிக்கவேண்டின், அப்பனே ஆயேயென்போம் அவரையே துதிக்க வேண்டின், ஒப்புமை உளதோ வேலை யுலகிற்கட் புலனிற் றோன்றுஞ், செப்பரும் தெய்வ மன்னார் சேவடி போற்றாய் நெஞ்சே'

என்றவாறு கோயில் சென்று துதிக்குமிடத்தும் அப்பனே! அய்யனே! அன்னையே! என்கிறோம். ஆனால் அத்தகையோ பெற்றோரைப் போற்றவேண்டின் அவருக்கு ஒப்புண்டோ? ஏனெனில், உலகத்தில் நாம் எதை இழந்தாலும் சிறிது முயற்சியால் பெறலாம்.

'மனையாள் வீயின் மற்றோர் மனைவியைக் கொள்ளலாகும், தனையராதியரி றப்பின் தனித்தனி பெறலாம், பின் தன் மனைபொருள் நீங்கின் மற்றோர் பொருளையும் பெறலாம், பெற்ற அனையிறந் திடின் பின் வேறு அன்னைவரு வாரோ நெஞ்சே.

என்று கூறியுள்ளார் பெரியோர். ஆதலால் நம்மைப் பெற்றோரே நமக்குப் பெரியோர். அவர்களே நமக்குத் தெய்வம்; நமது குருவும் அவர்களே. அவரே நமது உயிர்நிலையு மாவார். அவர்களுடைய வார்த்தையே அமிர்தம். அவர்களுக்குக் கீழ்ப்படிதலே நாம் பிறந்தபயனாகும். மாதுர் வாக்கிய பிதுர் வாக்கிய பரிபாலனத்தை, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியே ஜனங்கள் அறியும்வண்ணம், நடந்து காட்டியிருக்கின்றனர். பெற்றோருடைய தேகத்தைக் காப்பதிலும் அவர்கள் சொல்லை மறுக்காமலிருப்பதே மேலென்பது ஸ்ரீராமரது கொள்கை.

'தாய் சொற் கேட்டலும் தந்தை சொற் கேட்டலும்; பாசத்தன்பினை பற்றற நீக்கலும், ஈசர்க்கே கடன்'—

என்றார் பிறரும். 'தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை' 'தந்தைசொன் மிக்க மந்திரமில்லை' என்ற ஔவையின் 'தந்தையுறைதட்டினவன் தாயுறை இழந்தோன் செந்தழலின் வாயின் இடை சேர்வது மெய்கண்டீர்' என்ற வசனத்தையும், 'தாயாரை வைவர் இருந்தென்ன போயென்ன' என்ற பட்டினத்தார் வாக்கையும் பிரதிபிம்பிக்கச் செய்தவரான ஸ்ரீராமர் கானகம் போகலாகாதெனக் கூறிய தன்னைச் சேர்ந்தோரை நோக்கி,

'மகர வேலை மண்டொட்ட வண்டாடுதார்ச்
சகரர்தாதை பணிதலை நின்றுதம்
புகரில் யாக்கையினின்னுயிர் போக்கிய
நிகரின் மாப்புகழ் நின்ற தன்றோ வெனா.
'மான் மறிக்கரத்தான் மழுவேந்துவான்
தான் மறுத்திலன் றாதை சொற்றனையே
ஊனரக்குறைத்தா னுரவோ னருள்
யான் மறுப்பதென் றெண்ணுவதோ'

என்று பிதுர்வாக்கிய பரிபாலனம் செய்யும் வண்ணம் சகரருடைய அறுபதினாயிரம் மக்களும் தம் உயிர்களையே விட்டிருக்கவும், அந்தணனான பரசுராமனும் தன் தாதையாகிய ஜமதக்னிமுனிவன் சொற்கடவாமல் தாயையே சங்கரித்திருக்கவும் நான் மட்டும் என் தர்ம பிதாவின் வாக்கியத்தை மறுப்பதோ எனக் கூறி, கானகம் சென்றனர். இவர் போன்றவர்களன்றோ புத்திரர்கள்.

நம் பெற்றோரின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய நம் சௌகர்யங்கள் எல்லாவற்றையும் இழக்கலாம். அவ்வண்ண மிழத்தலால் நமக்கு ஒருகுறைவுமில்லை; கௌரவமும் கீர்த்தியுமே ஆகும். பீஷ்மர் என்பவரைப்பற்றி அனைவரும் கேட்டிருக்கலாம். பாரதயுத்தத்தில் அவருடைய பெயரே குன்றின்மேலிட்ட விளக்குப்போல் பிரகாசிக்கின்றது. அதற்குக் காரணம் யாது? அவரது பிதிர் வாஞ்சையே. அவர் பிதா சந்தனுராஜன் சத்தியவதி யென்னும் ஒரு கன்னிகையை மணம்புரிய யெண்ணினான். அவளா பிதா, பீஷ்மருக்குப் பட்டத்துரிமை இருக்கும் வரையில், தன் பெண்ணைச் சந்தனுவுக்குக் கொடேனெனப் புகல, தன் மைந்தனிடம் மிக்க வாஞ்சையுள்ள மன்னன் இருதலைக் கொள்ளியினிடையே அகப்பட்ட எறும்பு போல் மனம்புழுங்கி ஒன்றும் செய்ய இயலாமல் வருந்தினான். இதனை எவ்விதமாகவோ அறிந்த அப்புத்திரசிகாமணி, அப்பெண்ணின் பிதாவிடம் சென்று, பட்டத்தைத் தான் ஏற்பதில்லையென்றும், ஒருவேளை தனது மக்கள் எங்குபாத்தியத்தைக் கொண்டாட வருவார்களோவென்று ஐயமுற்றால், தான் விவாஹமே செய்துகொள்வதில்லையென்றும் பிரதிக்ஞை செய்து பிரம்மசர்ய விரதத்தையே கொண்டனர். இதனையறிந்த மன்னன் மனம் எவ்விதமிருக்கும்? தன் குமாரன் தனக்காகச் செய்த பரித்யாகத்தைக் கண்டு கண்ணீர் சொரிந்து அவருக்கு ஸ்வச்சந்த மரணசக்தி யென்னும் (தான் இஷ்டப்பட்டால் மரணத்தை வருவிக்கவும் விலக்கவுங்கூடிய ஒரு சக்தியை) சக்தியை ஈன்றருளினர். ஸ்ரீராமரும் பீஷ்மரும் தங்கள் பிதிர்க்களைத் திருப்திசெய்யவே தங்கள் ஸௌகர்யங்களை யெல்லாம் இழந்தனர். ஆனால் தன் பெற்றோர்களைக் காத்தலின்பொருட்டு உயிரையே விட யத்தனித்த மற்றொரு மைந்தனுண்டு.

கௌசிக முனிவரேவலினால் நக்ஷத்ரிகன் பின் தொடர தன் மனைவி மக்களுடன் காசி நோக்கி ஹரிச்சந்திரன் போய்க்கொண்டிருக்கும் ஸமயத்தில் அம்முனிவரது சூழ்ச்சியால் வழியின் எதிரில் தீப்பிடித்தெரிய ஆரம்பித்தது. அப்பொழுது நக்ஷத்ரிகன் அவ்வக்னி பகவானுக்கு யாதேனும் பலியானால் அது தீர்ந்துவிடுமெனச் செப்பினர். அச்சமயத்தில் அருங்குணம் வாய்ந்த சந்திரமதி தன் உயிரை இழந்தேனும் பிறரைக் காப்பாற்றலாமெனக் கருதித் தான் போய் நெருப்பில் விழப்போக, அவள் மைந்தன் லோகிதாசன்,

அன்னைத்தானேக மைந்தன் அலறிச் சென்றடி வீழ்ந்து அன்னாய், என்னை நீர் பயந்தீருங்கள் இடுக்கணுக்குதவவன்றோ, முன்னையூழ் விதியினாலே முந்தயான்றழலில் வீழ்வேன், பின்னை நீர் பிழைமி னென்றான் பெருகிநீ ரருவிக் கண்ணன்.

என்று புத்திரர்களின் கடமையை யெடுத்துக்கூறித் தன்னுயிரையும் மாய்த்துக் கொள்ள வாரம்பித்தான். மக்களெல்லாம் பிள்ளைகளாவாரா? ஸ்ரீராமரும் பீஷ்மரும் ஸகரரும் லோகிதாஸனும் பிறந்து வளர்ந்த இந்நாட்டிலுள்ள நாமோ தர்ம மார்க்கத்தினின்றுப் பிறழ்ந்து நடப்பது? கூடவே கூடாது.

'ஸுருஞ்சதமல்ல உற்றார்சதமல்ல' என்று இவ்வாறு உலகத்தையே வெறுத்துள்ள பட்டினத்தாரும் 'அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே' என்று தன் தாயிறந்ததைக் குறித்துத் துக்கித்தனரென்றால் உலகமாயையிலே மூழ்கிக்கிடக்கும் நாம் நம்பெற்றோர்களிடம் எவ்வளவு அன்பு பொருந்தியவர்களாக இருக்கவேண்டும்? பெற்றோர்களின் பெருமையும் அவர் இல்லாவிடில் நமக்குண்டாகும் சிறுமையும் இவ்வளவென்றறியவும் முடியாது. அதனை விளக்கவே காளமேகரும் தம் வழக்கப்படியே ஈசனைக் குறித்து,

'வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன், கல்லா லெறியப் பிரம்பால் அடிக்க இக்காசினியில், அல்லாற் பொழிற்றில்லை யம்பலவாணர்க் கொரன்னை பிதா, இல்லாத தாழ்வல்லவோ இங்ஙனேயெளிதானதுவே.'

என்று நிந்தாஸ்துதியாக பாடியிருக்கின்றார்.

ஆதலால் நண்பர்களே! நம் பெற்றோரின் கௌரவம் இவ்வளவவ்வளவன்று; அவர்கள் நமக்காகப் படும் பாடும் சிறிதன்று. ஆகையால் நாம் அவர்களுக்கு எப்பொழுதும் மரியாதை செய்து அவர்கட்கு இடுக்கணுற்றுழி நம் உயிரைக் கொடுத்தேனும் அவர்களை அவ்விபத்தினின்றும் நீக்க வேண்டும். அவர்கள் சொல்லுஞ் சொற்கள் கீழ்ப்படிவதற்குக் கடினமாயிருப்பினும், சிறிதேனும் சலிப்படையாமல் அவைகளை நிறைவேற்றவேண்டும்.

கீழ்ப்படிதலிலும் இருவகையுண்டு. ஒன்று மனத்துடன் கீழ்ப்படிவது, மற்றொன்று பயத்துடன் கீழ்ப்படிவது. நமது பெற்றோர்களிடம் நாம் இவ்விருவகையிலும் கீழ்ப்படிய வேண்டும். சில வேலை அவர்கள் ஏவும் தொழில்கள் நம்மனதிற் கொவ்வாதிருக்கலாம். ஆயினும் அவர்கள் நம்மிடம் அதனை ஒப்பித்ததற்காகவாவது சிறிதேனும் முணுமுணுக்காமல் அக்கட்டளைக்கடங்கிக் காரியத்தை முடித்தல் வேண்டும். அதுவே வீரர்களுக் கழகு. 1854-ம் வருஷத்திய கிரிமியன் யுத்தத்தில் ஆங்கில சேனாதிபதி யொருவர் ஏதோ பிசகாக ஒரு ஆபத்தான கட்டளையிட்டார். எந்த புத்திமானும் அவ்விதக் கட்டளை இட்டிருக்கமாட்டான். அவ்விதம் பிறந்த ஓர் உத்திரவினால் 25 நிமிஷத்திற்குள் ஸுமார் 400 போர்வீரர்கள் உயிரிழக்க நேர்ந்தது. ஆயினும், அவ்வுத்திரவு தம் தலைவரிடமிருந்து வந்தமையால் வரப்போகும் ஆபத்தை நன்கறிந்திருந்தும் போர்வீரர்கள் அனைவரும் சிறிதேனும் யோசியாமல் முன் சென்றனர்.

உயிரிழந்தேனும் கீழ்ப்படிதல் என்னும் குணத்தை நிறைவேற்றவே அவர் சென்று உயிரிழந்தனர்! நாமும் பெற்றோர்களிடம் அவ்வண்ணம் செய்து அவருக்காகவேனும் அல்லது பிறரது சொல்லுக்கேனும் பயந்து கீழ்ப்படியாவிட்டாலும், சுயநலம் பாராட்டியாவது அவ்வண்ணம் செய்யவேண்டும். இல்லாவிடில், பின்பு நாமும், பிதாவுக்கு ஓட்டிறக்கஞ்சிவார்த்த பாவியின் நிலைமையை அடைவோம். நாம் நன்னெறியினின்று மாறுமவிருப்பதே அவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும். தன் மகனைப்பற்றி உலகெலாம் புகழின் அவன் அன்னையின் மனம் எவ்விதம் இருக்கும்? ஆனதுபற்றியே வள்ளுவரும்

ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பள் தன் மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்

என்று கூறியுளார். ஆதலால் நண்பர்களே! நாம் நல் வழியில் நடந்தும் அவர்களை மரியாதைப்படுத்தியும், அவர்கள் முகம் கோணாமல் இன்பமூட்ட நாம் முயல்வோமாக! அப்பொழுதே நமக்கு மதிப்பு; அப்பொழுதே நமது கீழோர்க்கும் நம்மிடம் அன்பும் மரியாதையும் இருக்கும். அப்பொழுதே உலகத்தார் யாவரும் 'இவன் தந்தை என்னோற்றான் கொல்' என்று நம்மைக் கொண்டாடுவர்.

புவியிற் பிறந்த பயனை வீணாக்காமல் அடக்கம், பொறுமை, தயை, தாடசணியம், உண்மை, பெரியோரைப் போற்றல், பெற்றோரைப் பேணுதல் முதலிய நற்குணங்களை முற்றுங் கைக்கொண்டு, பொய்ம்மை, புறங்கூறல், செய்நன்றி மறத்தல், பெரியோரைப் பழித்தல், பொய்க்கரி பேசல், களவாடல் முதலிய தீக்குணங்களை ஒழித்து நமக்கும் பிறர்க்கும் நன்மையுண்டாகும் வண்ணம் வாழ்ந்து நற்பெயரையடையக் கடாக்ஷிக்கும் வண்ணம் ஈசனை நாம் பிரார்த்திப்போமாக!

ஆர். விசுவநாதய்யர்.

ராமபட்டன்

(ஒரு சிறிய கதை)

RAMABHATTAN (A SHORT STORY)

(362-ம் பக்கத் தொடர்ச்சி.)

பக்கத்திலிருந்த அவருடைய தாயாருக்குக்கொஞ்சம் கோபம் வந்தது. டாக்டரைப் பார்த்து 'உங்களுக்கென்ன தெரியணும். எனக்குத்தான் தெரிந்திருக்கே போராதா. மாஜிஸ்திரேட்டுத்தியோகமான பிறகு தானுக்கு மீந்தத் தீராத நீர்ரோகம் வந்தது. அது முதல்கொண்டு தினம் மருந்துதான். பாதிச் சம்பளம் இதிலேயேதான் போரது. ஒண்ணு போனா ஒண்ணு. டாக்டரைக் கூப்பிடாத நாளுண்டா; பணங்கொடுக்காத நாளுண்டா. வியாதி மாத்திரம் முத்தியிருக்கேயொழிய, வேறே குணத்தைக் காணும். முன்னாலேயிருந்த ஊரில், பிரசித்திபெற்ற ஒரு யூனனிவைத்திய சாயபு, தங்கம் அப்பிரகமெல்லாம் சேர்த்து பஸ்பஞ்செய்து அதை ஒரு மண்டூரத்திலே வைச்சு ஒரு மண்டலம் சாப்பிட்டா இந்தப் பிரமேக வியாதி அடியோடே போய்விடுமென்று ரொம்பச் சொன்னான். அப்படியவன் வெகுபேர்களுக்கு அனுகூலம் செய்திருக்கானும். நானும் காட்டுப் பெண்ணும் எங்களாலே கூடியமட்டும் சொன்னோம். 'நான் அடியோடே போரதானாலும், பதிவுசெய்யாத வைத்தியனிடம் மருந்து சாப்பிடமாட்டேன்' என்று தடுத்துவிட்டான். என்ன பதிவோ யாருக்குத் தெரிகிறது? எத்தனையோ யுகங்களாகப் பெரியோர்களாலனுஷ்டிக்கப்பட்ட வைத்திய சாஸ்திரத்தில் நம்பிக்கையில்லாமல்போகக் காரணம் தெரியவில்லை. இதற்குமுன் அவர்களெல்லோரும் உயரமும் பெருமனுமா தீர்க்காயுசாத்தானிருந்தார்கள். நம்மவர்கள் வைத்தியம் செய்யும்பொழுது இப்படி ஒரு வியாதியையும் காணும்; பணச் செலவுமில்லை. பெண்டுகளும் டாக்டருதவியில்லாமலே பல மக்களையும் பிரசவித்திருக்கிறார்கள். வலிப்பும் மாரடைப்பும் தூங்கலும் ஏங்கலுமாகவா நாங்களெல்லோரு மிருந்தோம். காலம் கலிகாலம். தொட்டதும் சகாவு மிப்போ மயக்காது. இதையெல்லாம் உங்களிடம் சொன்னா உங்களுக்கு ருசிக்குமா; பையனுக்கு நங்களே பாக்கி க்ஷவரமும் செய்தீர்களாமே. எல்லாத்திலும் ரொம்ப கெட்டிக்காரர்போலிருக்கு. குழந்தைக்கு நல்ல மருந்தாக் கொடுங்கோ. அவன் காயத்தைப் பார்த்தீர்களா; காலமேயே அம்பட்டன் பச்சிலையை வைத்துக்கட்டுகிறேனென்றான், நானும் கட்டட்டுமென்று கெஞ்சினேன். நான் சொன்னா அவன் கேட்கிறானா, என்னா'——, இதற்குள் முதலியார் போஜனம் முடித்துவந்து, 'அம்மா! உன் பேத்தல் போரும். சும்மாயிரு. அப்புறம் போ' என்றனுப்பிவிட்டு 'ஸார் இது வலிக்கிறதே என்ன செய்யலா'மென்று இடது தோளைக் காட்டினார். கட்டைப் பிரித்து வென்னீர் ஜலத்தால் கழுவி மறுபடியும் கட்டிவிட்டு மறுநாள் காலையில் மருந்துகொண்டு வருவதாகச் சொன்னார். குழந்தைக்காக ஒரு குப்பியில் ஆறு வேளைக்கு இருந்த மருந்தை, மூன்று மணிக்கொரு தரம் அளந்து கொடுக்கும்படி ஒப்புவித்து டவுனுக்குத் திரும்பினார்.

இந்த டாக்டர் ஆயுர்வேத வைத்தியத்தை ஆதிமுதல் அருவருப்புடன் நிந்தித்தவர். அவ்வைத்தியத்தை யாதரிப்பவர்களையு மிகழ்ந்தவர். ஆனால் இவர் உத்தியோகஞ்செய்தவிடங்களில் ரணவைத்தியத்தில்மட்டுமிவருக்குக் கியாதியேயன்றி, மற்றவியாதிகளுக்கு மருந்தை யபேக்ஷித்தவர்கள் பெரும்பாலும் அவரிடம் வைத்தியம் செய்துகொள்ளும் வழக்கமில்லை. இவரிருக்கும் டவுனில் வெகுகாலமாக ராமபட்டனுக்கு நல்ல பெயர். புராதனமாய் ராஜ ஸமஸ்தானங்களில் ஏராளமாய்ச் செலவு செய்து செய்யப்பட்ட பற்பல விசேஷமான மாத்திரைகளில் பரம்பரையாயுபயோகித்து மிகுந்ததைக் கைவசம் வைத்து தன்வந்திரியின் நூற்களையனுசரித்து அனுபோகத்துடன் உபயோகித்து வந்தார். இரண்டு வருஷங்களுக்குமுன், டாக்டரால் கைவிடப்பட்ட ஒரு தனிகனை ராமபட்டன் அனுகூலம் செய்தது முதல், டாக்டருக்கு ஆயுர்வேத வைத்தியத்தில கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது. கிரமேண, ராமபட்டனைச் சிநேகம் செய்துகொண்டு அவ்வைத்திய முறையின் ரகசியங்களை நல்ல எண்ணத்துடன் கற்க ஆரம்பித்தார். ராமபட்டனும், ஸ்கூல் முடிவு பரீக்ஷையில் சர்டிபிகேட்டுப்பெற்று ஆயுர்வேதகலாசாலையில் தேர்ந்துவந்த 30 வயதுள்ள சுக

துரப்பட்டனென்னும் அவனுடைய மகனும், டாக்டரிடம் சரீர அமைப்பைப்பற்றியும் மேல் நாட்டு வைத்தியச் சிறப்பையும்பற்றியும் தெரிந்துகொண்டார்கள். வைத்தியருடைய பரிச்சயத்தால் டாக்டர் ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தின் மகிமையையும் மூலிகைகளின் சிறப்பையும் அறிந்தாராதலால் அவ்வைத்தியத்தில் அவருக்கிருந்த அருவருப்பும் பகையும் நீங்கின.

அன்று அர்த்த இராத்திரியிலேயே குழந்தைக்குத் தோஷங் கண்டுவிட்டது. உடனே டாக்டரையழைக்க வண்டியனுப்பினர். முதலியாருக்கும் காயத்தில் வலியதிகரித்தது. காலை 9-மணிக்கு டாக்டர் வந்து குழந்தைக்குக் கொண்டுவந்த மருந்தைக் கொடுத்தார். கொஞ்சமேனும் குணத்துக்கு வரவில்லை. ஒரு மணி நேரத்திற்கெல்லாம் பல் கிட்டிவிட்டது. அகத்திலுள்ளவர்கள் அழத்தொடங்கினர்கள். டாக்டர், முதலியாரின் அறைக்குச்சென்று காயத்தின் கட்டையவிழ்த்தார். நிரம்ப சீப்பிடித்திருந்தது. பக்கங்களி லதுக்கும்பொழுது நாற்றமுள்ள சாமான் வெளியே வந்தது. சுத்தஞ்செய்து பார்த்தபொழுது புரையோடியிருப்பதாகத் தெரிந்தது. க்ஷவரக்கத்தியிலிருந்த அழுக்கு உள்ளே பதிந்திருப்பதால் ஆபரேஷன்செய்துதானாக வேண்டுமென்று சொன்னார். இதைக்கேட்டதும் முதலியாருக்கு மூர்ச்சையாய்விட்டது. இதற்கு உபசாந்தி செய்துகொண்டிருக்கையில், குழந்தையின் அபாயஸ்திதியையறிந்த முதலியாரின் தாயார் டலாயத்தையனுப்பி ராமபட்டனை யழைத்துவரும்படி சொன்னாள். 'நான் அங்கே வரமுடியாது' என்று உறுதியாய் அவர் பதில் சொல்லிவிட்டார். டலாயத்து திரும்பி பங்களா வாயிலண்டை வந்தபொழுது, ராமபட்டனுடைய மகன் வீதியில் போய்க்கொண்டிருந்ததைப் பார்த்துக் கும்பிட்டு, அவனும் வைத்தியம் செய்யப்பட்டவனாகையால் அவனை யுள்ளேயழைத்துவந்தான். தன் தகப்பனுக்கு நேர்ந்த அவமதிப்பை யவனுணர்ந்தவ னல்லன். உள்ளே சென்ற பொழுது, அங்கே டாக்டரைக்கண்டு வந்தனம் செய்தான். அவன் பிறகு குழந்தையைக் கையைப் பிடித்துப்பார்த்து அத்யாஸன்ன ஸ்திதியிலிருப்பதையறிந்து டாக்டருடைய வேண்டுகோளின் மேல் சில மூலிகைகளை வரவழைத்துக்கொண்டு ஒரு மாத்திரையையுரைத்துக், கண்ணில் கலிக்கமும் போட்டான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குழந்தை தலையையசைத்தது. பிறகு மூலிகைகளின் ரசத்தில் சில மாத்திரைகளை யுரைத்து முலைப்பாலில்கலந்து புகட்டும்படிச் செய்தான். கொஞ்சநேரத்திற்கெல்லாம் மலஜலம் பிரிந்து, குழந்தையும் கண்ணைத் திறந்தது. அழுகை சப்தம் கேட்டதும் முதலியார் அங்குவந்தார். அங்கோர் வாலிபன் மருந்துப் பெட்டியை முன்வைத்து வீற்றிருப்பதைப் பார்த்தார். 'இவன் யாரென்று' டாக்டரைக் கேட்டார். 'இவனிவ்வூர் வைத்தியர் ராமபட்டனுடைய மகன். வைத்தியத்திலிவனும் தேர்ந்தவன். உங்களுடைய குழந்தையை இவன்தானிப்பொழுது வந்து காப்பாற்றினான்' என்றார் டாக்டர். முதலியார் கோபத்துடன் 'நான் பதிவுசெய்யப்படாத வைத்தியரிடம் மருந்து பெற்றுக்கொள்வதில்லையென்று சொல்லியிருக்கிறேனே. இவனையேன் அழைத்தீர்கள்' என்று கேட்டார். அதற்கவர் தாய், 'குழந்தைக்குங்கூட அந்தச் சட்டமுண்டோ' என்று சந்தேகித்து, பிழைக்காது என்று டாக்டர் கைவிட்ட பிறகு இவ்வூர் வைத்தியருக்குச் சொல்லியனுப்பினேன். அவருன்னால் அவமதிக்கப்பட்டபடியால் வரமறுத்துவிட்டாராம். வழியில் இவரைக்கண்டு டலாயத்து அழைத்து வந்தான். மருந்து கொடுத்ததிலனுகூலமாச்சுது. பதிவுசெய்யாத வைத்தியனால் என்னருமைக் குழந்தை உயிர்பெற்றெழுந்தால் அதுவுங்கூட வேண்டாமென்பாயா; வேணுமானால் பக்கத்துத் தபாலாபீஸிலாவது ரிஜஸ்திராபீஸிலாவது இவரைப் போய்ப் பதிவு செய்துக்கொண்டு வரச்சொல்லுகிறேன். குழந்தையைப் பிறகாவது அங்கீகரிப்பாயென்று நம்புகிறேன்' என்றாள். முதலியாருக்கு ஒரு பக்கம் கோபமும், ஒரு பக்கம் சிரிப்புமாயிற்று. பிழைத்தெழுந்ததில் சந்தோஷமுற்று, டாக்டரை யழைத்துத் தன் ரூமுக்குள் சென்று 'நீங்களே மருந்து கொடுத்திருக்கவேண்டும். பதிவில்லாத வைத்தியன் மருந்து கொடுத்ததைப் பார்த்துக்கொண்டு நீரங்கிருந்தது சட்டப்படி பிசகு, அதிருக்கட்டும்; எனக்கு இராத்திரி முழுவதும் உறக்கமில்லை. காயம் ஜாஸ்தியாய் வலிக்கிறது. ஆபரேஷன் செய்தாவது சொஸ்தம் செய்யுங்கள்' என்றார். அப்பொழுதுதான் அங்கு வந்த அவர்

தாய், மிக்க மனவருத்தமுற்று நானுயிருடனிருக்கும்வரை, என் கழுத்தை யறுத்தாலும் என் மகன் பேரில் கத்திவைக்கச் சம்மதியேன், இவ்வூர் வைத்தியன் கத்திவைக்காமலேயே சொஸ்தம் செய்வானாம். அவரையே கூப்பிடலாம்' என்றாள். உள்ளே போகும்படி தன் தாயாரை யதட்டியனுப்பிவிட்டு, 'தூக்கம் வரும்படி ஒரு மருந்தைக் கொடுத்தால் நலமாயிருக்கும்' என்று டாக்டரை வேண்டினர். சாயங்காலம் வந்து ஆபரேஷன் செய்வதாய்ச் சொல்லி உறக்கத்துக்கு மருந்துகொடுத்தார். மருந்தைக் கொடுத்த 10 நிமிஷத்திற்கெல்லாம் முதலியார் உறங்கினர். பிறகு முதலியாரின் தாய் வந்து காயத்தைப்பற்றி விசாரித்தாள். புரையோடியிருப்பதால் ஆபரேஷன் செய்யத்தான் வேண்டும் என்று சொன்னதைக் கேட்டு ஸ்திரீகளழத் தொடங்கினர்கள். அவ்வைத்தியவாலிபன் அவர்களைச் சமாதானம் செய்து, தன் தகப்பன் மருந்தாலேயே ஆற்றிவிடுவாரென்று சொன்னான். அவர் வருவதில்லை யென்று மறுப்பதால், அவரை யழைப்பதற் கென்னவழி யென்று எல்லோரும் யோசித்தார்கள். டாக்டருக்கு நிரம்பசினேகமானதால் அவர் கட்டாயப்படுத்தினால் வருவாரென்று வாலிபன் சொன்னான். ஸ்திரீகளின் வேண்டுகோளுக்கிசைந்து, டாக்டர்தானே சென்று ராமபட்டனை நல்ல வார்த்தை சொல்லி அதிகாரியால் அவமானம் வராமல் தான் பார்த்துக்கொள்வதாய்ச் சொல்லி யழைத்துவந்தார். ராமபட்டன் வந்து பார்க்கும்பொழுது முதலியார் தூங்கிக்கொண்டிருந்தார். காயத்தைப் பார்த்து அதில் புரையெண்ணெயில் நனைத்த பஞ்சையடைத்து, மேலே ஒரு பத்தையும் போட்டு டாக்டரைக் கட்டச்சொல்லி அங்கிருந்த நாற்காலியிலுட்கார்ந்தார். டாக்டர்கட்டிமுடியும் சமயத்தில் முதலியார் துயிலெழுந்தார். ராமபட்டன் தன் நாற்காலியிலுட்கார்ந்திருப்பதைப் பார்த்து 'இவரெங்கே வந்தாரென்று' உறக்கக் கேட்டார். 'உம்மை ஆப்ரேஷனிலிருந்து காப்பாற்றிச் சொஸ்தம் செய்யத்தான் வந்தேன். வேஷத்தைப் பார்த்து என்னை நாவிதனென்று நீர் அவமதித்ததாலெனக்கு மதிப்புக் குறைவுமில்லை. ஆயுர்வேதத்திற்குள்ள பகுமானமும் குன்றாது. அதுபோல், பதிவு பெற்று டாக்டராயிருந்து கத்தியை எடுத்து உமக்கு க்ஷவரம் செய்ததாலும் தக்கமருந்துகள் கையிலில்லாமல் வியாதியை அநுகூலம் செய்யக்கூடாமல் என்னையும் என் மகனையும் கொண்டு வைத்தியம் செய்யப்பார்த்திருந்ததால் மேல் நாட்டு வைத்தியத்திற் கோரேனமும் மேற்படவில்லை. வைத்தியகந்தமே இல்லாமல் தாரதம்மியமறியாமல் பதிவு செய்த டாக்டரைக்கொண்டு உயிரிழப்பது மேலேயன்றிப் பதிவு பெறாத பிஷக்கையோ யூனானி வைத்தியரையோ கொண்டு உயிர்பெற மாட்டேனென்ற வீண் விரதம் வைத்த உம்மைப்போல் பட்டம்பெற்ற தேசாபிமானிகள் பலரிருந்தல்லவோ இத்தேசம் இந்நிலைமையி லிருக்கிறது! உம்மிடம் வைத்தியம் செய்து, சம்பளம் பெற நான் வரவில்லை. உம்முடைய தாயார் பிரார்த்தித்தழைத்ததாலும் டாக்டர் வேண்டியவராதலாலும் நானிங்கே வந்தேன்' என்று சொல்லி வைத்தியரெழுந்து வெளியே சென்றார். முதலியாருக்கு மீசைகள் துடித்தன. டாக்டரைப்பார்த்து 'நீராகவே ஆயுள்வேதமுறைகளைக் கற்று உம்முடைய சொந்த மருந்தைக் கொடுத்தாலும் அருந்தலாம். அப்படிச் செய்யாமற் பண்டிதன் கொடுத்ததை வாங்கி எனக்கு உபயோகித்திருக்கிறீராதலால் சட்டப்படிக் குற்றம் செய்தவ ராகிறீர். நான் எப்போதும் சட்ட விரோதமாய் நடக்கேன்; அப்படி நடப்பவர்களைச் சும்மாயும் விடேன்.' நீர் 'போர்ப்பது' என்னும் குற்றத்தைச்செய்தீரென்று என் நேசர் டாக்டர் ராயனுக்கு எழுதி உம்மைச் சரிவர விசாரிக்கச் செய்கிறேன். இனி உம்மை நம்பி உம்மிடம் வைத்தியம் செய்துகொள்ளச்சம்மதியேன். நீர் இதுவரைவந்து செய்ததற்காகக் கூலி இதோ எடுத்துக்கொள்ளும்' என்று கொஞ்சம் ரூபாயை முதலியார் எண்ணி அவர் முன்னளித்தார். டாக்டரும் சினந்து, முதலியாரைப் பார்த்து, 'நீர் இந்துதேச வாசியாயிருந்து தேசாபிமானமில்லாமல் புராதனமாய்ப் பெயர் பெற்ற ஆயுர்வேத யூனானி முறைகளை வெறுப்புடன் தள்ளுகிறீர். மேனாட்டு வைத்திய சாஸ்திரம் படித்துப் பாஸ்செய்து வேலையிலமர்ந்தவுடன் எனக்குமிப்படிப்பட்ட மௌட்டியமிருந்தது. பிறகு தெய்வகதியாலிந்த வைத்தியருடன் கலந்து அம்முறைகளையும் கற்றபின், மேல் நாட்டு வைத்தியத்திலுள்ள நம்பிக்கை இதிலுமேற்பட்டுவிட்டது. ஜன்னி தோஷம் [illegible] சமயத்

களிலும், சில பிரபலமான வியாதிகள் விஷயத்திலும், நாட்டு வைத்தியமே மிக்க குணமுள்ளதென அறிந்திருக்கிறேன். அதற்கு திருஷ்டாந்தமும் உம்முடைய குழந்தையே. லோகப்பிரசித்தரானலாகிஸ் துரையவர்களைப்போன்ற நிஷ்பக்ஷபாதிகளுக்கல்லவோ ஆயுர்வேத யுனானி முறைகளின் அருமை தெரியவரும். நம் வயது முதிர்ந்த அம்மையார்களுக்குத் தெரிந்த கைம்மருந்துகளும் பிரயோகங்களும் பிரபலமான சில டாக்டர்களுக்குத் தெரியவரா. பதிவு செய்யப்பட்டவன், ஆயுர்வேதமுறையைத் தானே யுபயோகிக்கலாமானாலும் மருந்தைத் தயார் செய்யவோ வேறு ஒரு ஆயுர்வேதவைத்தியனை உதவிக்குத் தன்னுடன் வைக்கவோ கூடாதென்றால் இச்சட்டத்தை கவனத்தோடு நிர்மாணம் செய்திருப்பதாக ஏற்படவில்லை. வைத்தியமறியாமற் டாக்டர் பட்டம்பெற்று சட்டத்தில் தேர்ந்த பிரசித்திபெற்ற ஒருவர் இம்மாதிரி அபிப்ராயப் பட்டிருக்கிறார். அவரைக்காட்டிலும், உமக்கு எவ்விதத்திலும் இவ்விஷயங்களில் ஞானமிருப்பதாகத் தெரியவில்லை. நீர் பெரும் அஞ்ஞானி. தேசாபிமானங் கெட்டு துரபிப்பிராயம் கொண்டிருக்கு மும்மிடத்தில் பிரதிபலனைப்பெருவதுங்கூட எனகுத்தகாது. ஆகையால் இந்தத் தொகையை அங்கீகரிக்க இஷ்டமில்லை. இன்றுமுதல்நான் ஆயுர்வேத முறையையும் விசேஷமாகக் கற்று, மேல்நாட்டு அநுபோகத்தையொட்டி வைத்தியம்செய்யத்தீர்மானித்திருப்பதுடன் நாட்டுவைத்தியம் விருத்தியாகும் விஷயத்தில் மிக்க சிரத்தை காட்டுவேனென்பது திண்ணம்' என்று சொல்லி அவ்விடம் விட்டகன்றார். டாக்டருடைய ரிஜிஸ்திரேஷனை நிராகரித்திருப்பதாக உத்திரவு வருமுன், தன் வேலையை ராஜினாமா செய்து ஒரு பெரிய ஆயுர்வேத கலாசாலையில் பிரதம உபாத்தியாயர் வேலையைப்பெற்று மேல்நாட்டுப் பயிற்சியையும், சீரங்களினமைப்பையும்பற்றி உபன்யாச பூர்வமாய்ப் புகட்டிப் பாரதமாதாவின் குழந்தைகளனைவரும் சுகமாயிருக்க வேண்டித், தன்னாலியன்றமட்டும் பாடுபட்டுப் பலரும் கொண்டாடும்படிப் புகழுடன் வாழ்ந்தார்.

மோயடாக்டரை வருத்த, முதலியார் ஆள் அனுப்பும் சமயம் வாயிலில், அவர் வரக்காணாது நான் சென்றது. அதற்குள் முன்கட்டியிருந்த கட்டு அப்படியேயிருந்ததால் காயமும் ஆறிவிட்டது. ஜமீன்தாரும், ராமபட்டனைப்பற்றிப் புகழ்ந்து, அவரையவமதித்தது பிசகென்று முதலியாருக்குச்சொன்னதால் அவரை வரவழைத்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். வீண் பணச்செலவைத் தடுத்து, ஆப்ரேஷனை விடுத்து ஆயுளையும் கொடுத்து, குடும்பத்தைக்காத்து ரக்ஷித்த ராமபட்டனை, முதலியாரின் தாய் புகழ்ந்து சம்மானித்தாள். அப்பொழுதவள், 'இச்சமயமேயினெச்சமயம் வாய்க்குமோ? ஆயுர்வேத யூனானி வைத்தியங்களை யவமதித்ததாகத் தெரிந்தவுடன், இந்தியாமுழுவது மிதைப்பற்றிய உணர்ச்சி பரவியிருப்பது பலருமறிந்த விஷயம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டுமாதலால், இச்சமயத்தில் கூட்டங்கள் கூடி, மேல்நாட்டு வைத்தியத்தை ராஜாங்கத்தார் அபிமானித்து அதையே ஸ்தாபித்து உதவியளிப்பதுபோல் கவர்ன்மெண்டாரா லங்கீகரிக்கப்பட்டு உதவியளிக்கப்பட்ட ஆயுர்வேத யூனானி கலாசாலைகள் நாடெங்கு மேற்படுத்தப்படவேண்டுமென்றும் அவைகளில் படித்துப்பரீக்ஷைகளில்ஜயித்துச் சர்ட்டிபிகேட்டு பெற்றவர்கள் மேல்நாட்டு டாக்டர்களைப் போல், அங்கீகரிக்கப்படவேண்டியவர்களென்றும் சட்ட மேற்படுத்தப் பிரயாசையெடுக்கவேண்டும். அதற்கு நீங்கள் பிரயாசைப்படவேண்டும்" என்றும் வேண்டினார்.

தேசாபிமானி.

சிதம்பரம் முனிசிபல் சேர்மனும், தாலுகா போர்ட் பிரசிடெண்டுமாகிய ம-ள-ள-ஸ்ரீ திவான் பஹதூர் சா. ரு. மு. ம. ராமசாமி செட்டியாரவர்கள்.—'போதினியில் வெளிப்படும் விஷயங்கள் எவருக்கும் நன்மைபயப்பனவாயும், யாரும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்கனவாயும், மதச்சண்டையில் புகாதனவாயும், எவரும் நன்மையென்று பாராட்டத்தக்கனவாயுமிருக்கின்றன. இதுபோன்ற பத்திரிகைகள்தாம் தற்காலத்திற்கு அவசியம் வேண்டும். கவர்ன்மெண்ட் அங்கத்தினரால், ஆதரிக்கப்படாது தள்ளாடும் சுதேச பாஷைகள் அபிவிருத்தியாவதற்கு இது போன்ற பத்திரிகைகள் வெளிவந்துலாவி நடைபெறுவது அவசியமாகும். ஆதலின் தமிழபிமானமுடையாரும் மற்றையதத்தக்காரரும் இப்பத்திரிகை நன்கு நடைபெறும் விஷயத்தில் ஊக்கம் விடலாகாதென்று வேண்டுகிறேன்.

உளவறியும் முறைகள்

ESPIONAGE SYSTEMS

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதாரென்
கனைவரையு மாராய்வ தொற்று. [றாங்

உலகந் தோன்றியது முதல், பல வகையான ஜாதியார்கள் நாகரீகத்திலும், ராஜாங்க பலத்திலும் முதிர்ந்து, வெவ்வேறு காலங்களில் உன்னத பதவி யடைந்து வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜாதியார்களை, வேறு நவீன ஜாதியார்கள் கிளம்பிப் போரில் வென்று, தங்கள் தங்கள் நாகரீகத்தை நிலைநாட்டி யிருந்திருக்கிறார்கள். இவ்வாறு நாகரீகத்தில் வேறுபட்ட அநேக ஜாதியார்கள் தங்கள் தங்கள் தேசமதம், பெண்டு பிள்ளை, கன்று காலி, வீடு வாசல் முதலியவைகளின் பாதுகாப்பின் பொருட்டுப் பெரும்போர் புரிந்துவந்திருப்பதுபோல், தற்காலத்தில் ஐரோப்பாவில் மஹாயுத்தம் ஒன்று நடந்து வருவதைக் கவனித்தால், ஒரு நவீன நாகரிகமும், நவீன ஜாதியும் பிறந்துகொண்டிருக்கிறது என்றுஊகிக்க வேண்டியிருக்கிறது. இவ்வண்ணம் நவீன ஜாதிகள் கிளம்புவது உலக இயற்கையேயாயினும், பல புராதன நாகரிகங்களும் அவைகளுக்கு அறிகுறியான சித்திரங்களும், புஸ்தக சாலைகளும், கட்டிடங்களும் அழிபட்டு வருவது பரிதபிக்கத் தக்கதே. என்றாலும், பொதுஜன சமூகமானது மேன்மேலும் அபிவிருத்தி யடைவதற்கு யுத்தங்களும் தகுந்த சாதனமென்றே பலராலும் கருதப்பட்டு வருகின்றது. ஆகவே, போரானது நெல்லிற்கு உமிபோன்ற ஒரு இன்றியமையாத தோஷம் ஆகின்றது.

நம்மிந்தியாவில் நாம் தினந்தோறும் பாராயணஞ் செய்துவரும் ராமாயணம், பாரதம் ஆகிய இரண்டு இதிஹாஸங்களும் மேற்கூறியவாறு உண்டாகிய போர்களின் சரித்திரங்களே யாகும். அவைகளிலே ராஜ தர்மமும் ராஜ தந்திரமும், ப்ரஜா தர்மமும், நீதிநெறியும், சைன்யங்களைப் போர் முனையில் செலுத்தி நடத்தும் முறைகளும், உளவறியும் வழிகளும், அஸ்திர சஸ்திரப் பிரயோகங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சீதையின் இருப்பிடத்தையும், அழகு, குணம் முதலியவற்றையும் சூர்ப்பனகை ராவணனுக்கு அறிவித்ததும், ராம லக்ஷ்மணர் மாரீசனாகிய பொன்மானைப் பின்றொடர்ந்து செல்ல, ராவணன் சந்நியாசி வேஷம் தரித்துச் சீதையை எடுத்துச் சென்றதும், பின்னர் சீதை அசோக வனத்தில் இருப்பதை ஹநுமான் தேடிக்கண்டுபிடித்து ஸ்ரீ ராமருக்குத் தெரிவித்ததும், உளவறிந்ததினாலேயாமெனக.

மேலும் பிரம்மாஸ்திரம், மோகனாஸ்திரம், நாகாஸ்திரம், ஆக்னேயாஸ்திரம், வருணாஸ்திரம், வாயு அஸ்திரம், விமானம் ஆகிய இவைகளின் விவரங்களும் இந்த இதிஹாஸங்களிலே காணலாகும். என்றாலும், நம்மவர்களில் பெரும்பாலார், அவ்வித அஸ்திரங்களும் விமானங்களும் உண்மையல்லவென்றும், அவையெல்லாம் கவிகளின் கற்பனையேயென்றும் அபிப்பிராயங்கொண்டிருந்தாரென்பது நம்மில் பலர் அறிந்த விஷயமே. ஆயினும், தற்காலத்தில் ஐரோப்பாவில் நடந்துகொண்டிருக்கும் மஹா யுத்தத்தில் ராமாயண பாரதப் 'பொய்களெல்லாம் மெய்யாகக் கண்டோம்; அதி சூக்ஷ்மமான யந்திரங்களும் போர்க்கருவிகளும் கையாளப்பட்டுவருவதையும் கண்டோம்; வெகு தந்திரமாயும் தைரியமாயும் உளவாளிகள் வேஷம் மாறி; பகைவர் ஊர்களிலும்போர் முனைகளிலும் சுற்றித் திரிந்து, தங்கள் தங்கள் பகைவர்களின் பலத்தையும்பலஹீனத்தையும் கவனித்துச், சேனாதிபதிகளுக்கு ரகஸ்யமான சைகைகளினாலும், கம்பியில்லாத் தந்திக் கருவிகளினாலும், அறிவித்து வருவதையும் கண்டோம். ஆகவே இம்மஹா யுத்தம், மிகவும் கொடியதாகவும் பயங்கரமானதாகவும் ஆச்சரியத்தை யுண்டாக்குவதாகவும் இருக்கிறது. இந்த யுத்தத்திலே முக்கியமாக உளவறிதலே இருதிறத்தார்க்கும் சாதகபாதகங்களைச் செய்வதாயும் பொதுவாக ஒருசேனை போர்முனையில் முன்செல்ல இன்றியமையாததாயும் இருப்பதினால், உளவறியுமுறைகளையும் அவற்றிற்கு அநுகுணமான சேனையின் அமைப்பு முதலியவைகளையும் அறிவாளர் கவனித்தறியவேண்டியது அத்தியாவசியமாகும்.

உளவறிதல் ஓர் அரும்பெருங்கலையாகும். பொதுவாக, ஒருவனுக்கு உளவறியும் சக்தி பிறப்பிலேயே அமைந்திருக்க வேண்டுமாயினும், அத்தொழிற்கேயுரிய விசேஷப்பயிற்சியும் பல சாஸ்திர விஷயங்களின் ஞானமும் அவசியமாகின்றது. இயற்கையிலேயே வீரமும் துணிவும், யூகமும் யுக்தியும் உள்ளவர்களே இத்தொழிற்குரியராவார்கள். பெரிய ராஜாங்கங்களினு லேவப்பட்ட நுண்ணிய அறிவையுடைய பல உளவாளிகளின் மத்தியிலேயே அவர்கள் கண்ணில் தென்படாமல் வேறொரு ராஜாங்க உளவாளி ரகஸ்யமாக வேலை செய்யவேண்டியிருப்பதினால், எதிர்பாராத இடையூறுகளும், தன் உபாயம் கைகூடிவரும் சமயத்தில் பிறர் அதற்கு விரோதமாக நடத்தலும், இன்ன சமயத்தில் இன்ன அபாயம் நேரிடுமென்று அறியக்கூடாததினால் மனதில் ஒருவிதமான சஞ்சலமும், இத்தொழிலில் எப்பொழுதும் பொருந்தியிருக்கின்றன. மேலும், ஒவ்வொரு உளவாளியும் தன் நடவடிக்கைகளைப் பிறர் கவனிக்காமலிருக்கும்படியாயும், ஒருவேளை கவனித்தாலும் சிறிதும் சந்தேகத்துக்கு இடங்கொடுக்காமலிருக்கும்படியாயும், எப்பொழுதும் சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருக்கிறது. இவ்விஷயங்களையுந் தவிர, ஏமாந்து ஒரு சிறு பிழை செய்தால் 'கரணம் தப்பினால் மரணம்' என்னும் பழமொழிக்கிணங்க சிறைச்சாலையோ, சிரச்சேதமோ நிச்சயமாய்க் கிடைக்கும் என்னும் பயமும் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கும். என்றாலும், இத்தொழிலில் ஒவ்வொரு உளவாளிக்கும் மனப்பற்றும் மனக்கிளர்ச்சியும் ஒருவித இன்பமும் உண்டு. போர்வீரன் போர்முனையிலே தன் தேசத்திற்காகத் தன் தேகத்தை பகிரங்கமாக அர்ப்பணம் செய்கிறான்; அவனை எல்லாரும் புகழ்கிறார்கள். உளவாளியோ, சமாதான காலத்திலேயே தன் தேசத்திற்காகத் தான் அத்தொழிலை மேற்கொள்ளும்பொழுதே ரகஸ்யமாக ஆத்மபரித்யாகஞ் செய்துவிடுகிறான்; அவனை வேறு ராஜாங்கத்தார் கண்டால் தண்டிக்கிறார்கள். தன் ராஜாங்கத்தார், பகைவரிடம் அகப்பட்டுக்கொண்டதினால் இகழ்கிறார்கள். ஆயினும் ஒவ்வொரு உளவாளி மனதிலும், "ஒரு போர்வீரனைக் காட்டிலும், தேசாபிமானத்துடன் தேச நன்மைக்காக நான் அதிகமாக உழைத்திருக்கிறேன்" என்னும் எண்ணமானது திருப்தியையும் ஆனந்தத்தையும் தருமென்பதில் சந்தேகமில்லை.

ஒற்றாடல் அதாவது உளவறிதல் இவ்வளவு பெருமைவாய்ந்ததாயினும் அது நீதி நெறியாகுமா? பிறருடைய குணகுணங்களையும் நடவடிக்கைகளையும் இரகஸ்யமாயும் திருட்டுத்தனமாயும் கவனித்து வருவதும், சொல்வன்மையினாலும் நயத்தினாலும் நம்மை நம்பி இரகசியங்களை வெளியிடுவோருக்கு "நம்பிக்கைத் துரோகம்" செய்வதும், வேஷம் மாறி உள்ளும் புறம்பும் வெவ்வேறாய்ப் பிறர்களை மயக்குவதும் குற்றமன்றோ? ஒற்றர்களின் உட்கருத்து சுயநயமின்றித் தேசநன்மை யாதலினாலும், ஒற்றாடல் ஒவ்வொரு ராஜாங்கத்துக்கும் இன்றியமையா அங்கமாதலினாலும் நீதிபிறழாத தொழிலேயாகுமென்க. தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் திருக்குறள் என்னும் தம் நீதிநூலில் ஒற்றாடல் விஷயமாக 59-வது அதிகாரத்தில் பத்துக் குறள் பாக்கள் பாடியிருக்கிறார். இங்லீஷ், பிரெஞ்ச், ருஷ்ய, ஜெர்மன் முதலான பல ஐரோப்பிய பாஷைகளில் இது மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே இந்நூலின் பெருமைக்கு அறிகுறியாகும். ஒற்றாடல் விஷயமாகத் திருவள்ளுவர் கூறுவது சர்வ சம்மதமாகும். அவர் கருத்தையே தழுவி, பல ராஜாங்கத்தார்கள் உளவறியு மிலாகா அமைத்து, நடவடிக்கை நடத்திவருவது அதிசயிக்கத் தக்கது. அவர் பாக்கள் பின்வருமாறு:—

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். (1)

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். (2)

ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். (3)

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று. (4)

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று. (5)

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. (6)

மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று. (7)

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல். (8)

ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். (9)

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை. (10)

மேற்கூறிய பாக்களின் கருத்தாவது: ஒற்றாடலும், பல நூல்கள் கற்றுமுதிர்ந்த அறிவும் ஓரரசனுக்கு இரண்டு கண்களாகும். தன்னுடைய கண் செல்லமாட்டாத இடமெல்லாஞ் சென்று, அங்கே நிகழ்ந்தனவற்றை ஒற்றர் உணர்த்தலாலும், தன்னுடைய அறிவு செல்லமாட்டாத விஷயங்களையெல்லாம் படிப்பதினால் நூலானது உணர்த்தலாலும், அரசனுக்கு ஒற்று ஊனக்கண்ணும், நூல் ஞானக்கண்ணும் ஆகின்றன. வேந்தன் தொழிலாவது ஒவ்வொருவருடைய நோக்கங்களையும் செய்கைகளையும் விரைவில் அறிந்துகொள்வதே. ஒற்றர்களின் உதவியால் விஷயங்களின் உண்மையை அறியவல்லவனல்லாத அரசனுக்கு எப்பொழுதும் வெற்றிகிடைப்பதரிது. ரகஸ்யங்களை ஆய்ந்தறிய வல்லவர்களாயும், அறிந்த விஷயங்களில் சந்தேகம் சிறிதுமில்லாதவர்களாயும், எவ்வித இடையூறுகளுக்கும் பின்வாங்காமல் யார் என்ன செய்தபோதிலும் சோர்வின்றி அஞ்சாத நெஞ்சர்களாய் ஒருவரும் சந்தேகிக்கக் கூடாதபடி சமயத்துக்கேற்ற, சந்நியாசி முதலாயினோர் உருவங்களைத் தாங்கித், தங்கள் ரகஸ்யங்களை வெளிவிடாது அரசனுடைய அதிகாரிகள், சிநேகிதர்கள், சுற்றத்தார்கள், பகைவர்கள் ஆகிய எல்லோரையும் அளந்து அறியும் ஆற்றலுள்ளவர்களாயுமிருப்பவர்களே ஒற்றர்கள் ஆவார்கள். சிலசமயங்களில் ஓர் ஒற்றன் அறிந்துவந்த பொருளை, மற்றோர் ஒற்றன் கூறும் பொருளோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை யறிந்துகொள்ளல் வேண்டும். ஓர் ஒற்றன் மற்றோரொற்றனை யறியாத வண்ணம் தந்திரமாக இரண்டு மூன்று ஒற்றர்களை யேவுவதினால் நிச்சயிக்கப்பட்ட விஷயமே உண்மையென்றறிதல் வேண்டும். அரசன் தனக்குப் பேருபகாரம் செய்த ஒற்றனுக்குப் பகிரங்கமாக வெகுமதி முதலிய சிறப்புகளைச் செய்தல், 'இவன் ஒற்றன்' என்னும் ரகஸ்யத்தை வெளிப்படுத்தியதாகும்.

மேற்கூறிய விஷயங்களினாலே உளவறியு மிலாகா ஒன்று, ஒவ்வொரு ராஜாங்கத்துக்கும் பலத்தைக் கொடுத்து, பொது நன்மையையும் பாதுகாக்கும் திறத்தது என்பது நன்கு விளங்கும். இவ்விஷயத்தை உணர்ந்தே முற்காலத்து இந்திய அரசர்கள் இரவில் மாறுவேஷம் பூண்டு நகர சோதனை செய்து தம் குடிகளின் குற்றங் குறைகளையும் ராஜாங்க அதிகாரிகளின் கொடுமைகளையும் கண்டுபிடித்து, அவைகளை நீக்கிவந்திருக்கிறார்கள். காலிப் ஹாரோன் ஆல் ராஸ்ச்சிட் என்னும் மகம்மதிய அரசரும் இவ்வாறு நகர சோதனை செய்துவந்திருப்பதாக நாம் அரேபிய இரவுக் கதைகளிலிருந்து நன்றாக அறியலாம். ஜெர்மனி, ரஷியா, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் உளவறிவதற்கென்றே ஒரு தனி ராஜாங்க இலாகா ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தியாவிலும், 'ஸி. ஐ. டி' (C. I. D) என்று சொல்லப்படும் போலீஸ் இலாகா, குற்றங்களையும் இரகசியமான நடவடிக்கைகளையும் கண்டுபிடிப்பதற்கென்றே ஏற்படுத்தப் பட்டதாகும். பொதுவாக இந்த இலாகாவானது, உள் நாட்டு வெளி நாட்டு விஷயங்களைக்கவனிப்பதற்காகப் பல ராஜாங்கங்களில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் ஜெர்மானிய உளவறியு மிலாகாவே எல்லாவற்றிலும் உயர்நிலையடைந்திருக்கிறதென்றும், அதன் உதவியாலேயே யுத்த ஆரம்பத்தில் இரண்டு மூன்று வாரங்களுக்குள்ளேயே பெல்ஜிய தேசத்தில் ஏறக்குறைய முக்கால் பங்குக்கு மேலாக ஜெர்மனி சுவாதீனப்படுத்திக் கொள்ள முடிந்ததென்றும், நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இவ்விஷயம் உண்மையென்று நினைக்க இடமிருக்கிறது. ஏனெனில் திருவள்ளுவர் கருத்தின்படி, ஒற்றாடலைத் தன் கண்போல பாவித்து, சிநேகிதர், பகைவர் என்னும் வித்தியாசமின்றி யாவரையும் உளவாளிகளைக் கொண்டு கவனித்துப், பணச்செலவைக் கரு

தாது இரகசியமாகப் பல வழிகளில் உளவாளிகளுக்குச் சம்பளம், வெகுமதி முதலியன கொடுத்து, எல்லா தேசங்களின் பலக்குறைவையும் அறிந்துகொண்டு இந்த மஹாயுத்தத்தில் ஜெர்மனி இறங்கி, இரண்டு வருஷ காலமாக ருஷியா, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய மகத்தான ராஜாங்கங்களோடு போர்புரிந்து வருவதை நாம் யோசித்தால், உளவறிதலின் முக்கியம் தெற்றென விளங்கும்.

இனி, உளவாளிகளில் உள்ள பல வித்தியாஸங்கள், அவர்களுக்கு இருக்கவேண்டிய சாமர்த்தியம், கற்பிக்கவேண்டிய விசேஷப் பயிற்சி, சண்டைக் காலங்களிலும் சமாதான காலங்களிலும் அவர்கள் செய்யும் வேலைகள், ஒரு தேசத்தின் பூகோளம், பூஸாரம், ஸ்தல விவரம், ஜனசமூகம் இவைகளைப் பற்றி முக்கிய சமாசாரங்கள் சேகரித்து அவைகளை ஒருவருக்குந் தெரியாமல் ஒளித்து வைத்து, பின் தங்கள் ராஜாங்கங்களுக்கு அறிவிக்கும் வழிகள், உளவாளிகள் வேலையாட்களையும் தொழிலாளிகளையும் வேலை நிறுத்தும்படிச் செய்தல் ஆகிய பல விஷயங்களைப் பற்றிப் பொதுவாகவும், அவைகளில் ஜெர்மனியின் உளவு முறைகளைப்பற்றியும் சேனையின் அமைப்பைப் பற்றியும் சிறிது விசேஷமாகவும் கவனிப்போம்.

சமாதானகாலங்களில் பிறதேசங்களிலே உளவாளிகள் செய்யும் வேலைகளை நன்குயறிவதற்கு, இம் மஹா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன், ஐரோப்பாவின் நிலைமையை அறியவேண்டியது அவசியமாகிறது.

"விவேக போதினி"

எமது பத்திரிகையைப்பற்றி சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதய்யரவர்கள் எழுதுவது:—* * நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளியநடையில் எழுதப்பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலரும் இதனால் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

பூமி

THE EARTH

சூர்யனைச் சுற்றிவரும் கிருஹங்களில் நாம் வசிக்கும் பூமியும் ஒன்று என்று சொன்னோம். இது உருண்டை வடிவமாயிருக்கிறதென்றும், ஆனால் இரண்டு துருவங்களிலும் மாத்திரம் கொஞ்சம் தட்டையாயிருக்கிறதென்றும் நமக்குத் தெரியும். இது ஒரு பெரிய பந்து. சராசரிக்கு, நேர்குறுக்களவில் 7918 மைல் உள்ளது; அதாவது சுற்றளவில் சுமார் 24,900 மைல் உள்ளது. பூமியின் மேற் பறப்பில் அநேக மலைகளும், குன்றுகளும். பள்ளத்தாக்குகளும், ஏரிகளும், கடல்களும் இருக்கின்றன. பூமியை ஒன்றும் தாங்கிக்கொண்டில்லை. மற்ற கிருஹங்களைப்போல் இது ஆகாயத்தில் தாங்குதலில்லாமல் மிதக்கிறது. வானத்தில் காணப்படும் சூர்ய சந்திரர்களும், நட்சத்திரங்களும் இம்மாதிரியேதான் மிதக்கின்றன. ஒன்றுக்கொன்றுள்ள ஆகர்ஷண சக்தியால் இவைகள் அந்தந்த இடங்களை விட்டுப் பெயராமலிருக்கின்றன. இந்த சக்தியைப்பற்றி நாம் இங்கு விசாரிப்பது பொருத்தமாகாது. ஆனால் இம்மாதிரியான ஒரு சக்தியிருக்கிறதென்றும், இதன் குணத்தால் இந்த வான வஸ்துக்கள் இடம் பெயராமலிருக்கின்றனவென்றும் நாம் அறிந்துக் கொள்ளுவோம்.

சூர்ய சந்திரர்களும், நட்சத்திரங்களும் தினம் கிழக்குத் திசையில் உதித்து மேற்கில் அஸ்தமிப்பதை நாம் கவனித்திருக்கிறோம். இப்படித் தெரிவதற்கு அவைகள் கிழக்கிலிருந்து மேற்குக்கு நகரவேண்டும். அல்லது, பூமி மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாக நகரவேண்டும். நாம் புகைவண்டியில் உட்கார்ந்து போகும்போது, பாதையின் இரு பக்கங்களிலுமுள்ள செடிகள் நமக்கு எதிர்ப்பக்கமாக போவனபோல் காணப்படுகின்றன. ஆனால் அந்தச் செடிகள் நகரவில்லையென்றும், நாம் வேகமாய் வண்டியில் போவதால் அவைகள் எதிர்ப்பக்கமாக செல்லுவன போல் காணப்படுகின்றனவென்றும் நமக்குத் தெரியும். இதுபோலவே

சூர்யன் நகர்வதுபோல் காணப்பட்டபோதிலும், உண்மையில் அது நகர்வதேயில்லை. நட்சத்திரங்களும் நகர்வதில்லை. பூமி வேகமாக மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாக நகரவேண்டும். ஏனென்றால், சூர்யன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலிய எல்லாம் பூமியைச் சுற்றி வருவனவாயிருந்தால், பல தூரங்களிலுள்ள இவைகளெல்லாம் பூமியைத் தினத்திற்கொருதரம் சுற்றி வரவேண்டும். அநேக கோடி மைல்கள் தூரத்திலுள்ள இவ்வஸ்துக்கள் பூமியைச் சுற்றிவரும் வீதிகள் எவ்வளவு தூரமுள்ளவைகளாயிருக்கவேண்டும்? இப்பெரும் வீதிகளில் இவை சுமார் 24 மணிக்கு ஒருதரம் சுற்றி வருவனவாயிருந்தால் இவைகளின் வேகம் அளவற்றதாயிருக்கவேண்டும்! இந்த அசாத்திய வேகத்தால் நமது கண்ணுக்கே இவை தெரியமாட்டா. ஆகையால் பூமிதான் நகர்கிறதென்றும், சூர்யன் முதலியவை பூமியைச் சுற்றவில்லையென்றும் தெரிகிறது.

இப்படி பூமி நகர்ந்துகொண்டேயிருந்தால், அதே சூர்யனும், அதே நட்சத்திரங்களும் நமக்கு எப்படி மறுபடியும் மறுபடியும் காணப்படும்? ஒரு பம்பரம் சுற்றுவது போல், இது தன்னைத்தானே சுற்றவேண்டும். இது தன்னைத் தானே சுற்றுவதால்தான் நாம் தினந்தோறும் அதே சூர்யனையும், அதே நட்சத்திரங்களையும் பார்க்கிறோம். சூர்ய உதயத்திலிருந்தும், அஸ்தமனத்திலிருந்தும் உண்டாகும் பகல், இரவுகளுக்கு இப்படி பூமி சுற்றுவதே காரணமாகும். இப்படி தன்னைத்தானே ஒருதரம் சுற்ற 23 மணி 56 நிமிஷம் பிடிக்கிறது. இந்தக் காலம்தான் ஒருநாள்.

நாம் மற்றொரு விஷயம் கவனிக்கவேண்டும். எல்லாத் தினங்களிலும் சாயங்கால வேளையில் அதே நட்சத்திரங்கள் உதிக்கக் காண்கிறோமா? இல்லை. கோடை காலத்தில் சாயங்காலம் உதித்து, நடு நிசியில் தலைக்கு நேராகக் காணப்படும் நட்சத்திரங்கள் மழைகாலத்தில் சாயங்காலம் உதிக்கவாவது, நடுநிசியில் தலைக்கு நேராகவாவது காணப்படவில்லை. ஆகையால் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு நட்சத்திரங்கள் சாயங்காலத்தில் உதிக்கக் காண்கிறோம். அல்லாமலும், நட்சத்திரங்களை விடாமல் உதிக்கும்போதாவது, நடுநிசியில் தலைக்கு நேராக வரும்போதாவது கவனித்தால், முதல் காணப்பட்ட நட்சத்திரங்கள் இரவுகளின் அதே நேரங்களில் வரவர மேற்குப் பக்கமாக ஒதுங்கிக் காணப்படுகின்றன. ஆனால் வருஷத்திற்கு ஒருதரம் அதே நட்சத்திரங்கள் அதே காலத்தில் மறுபடி உதிக்கவும், அதேகாலத்தில் தலைக்குநேராக வரவும் காணப்படும். அதாவது, ஒரு இரவில் சரியாகப் பத்து மணிக்கு நமது தலைக்கு நேராக ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரம் மறுநாள் கொஞ்சம் மேற்குப் பக்கம் ஒதுங்கியிருக்கும். 10, 15–நாட்கள் கழித்துப் பார்த்தால் இப்படி ஒதுங்கியிருப்பது நன்றாய்த் தெரியும். இப்படி நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுங்குகிறது. இந்த நட்சத்திரத்தை மறுபடி அதே பத்துமணிக்குத் தலைநேராக ஆகாயத்தில் காண ஒரு வருஷம் ஆகிறது.

நமது பூமிக்குத் தன்னைத்தானே சுற்றுவதைத் தவிர, வேறுவிதமாய்ச் செல்லுதலொன்றும் இல்லாவிட்டால், ஒவ்வொரு தினமும் அதே காலத்தில் அதே நட்சத்திரங்களை அதேயிடத்தில் ஆகாயத்தில் நாம் காணவேண்டும். ஆகையால் பூமி மேற்கிலிருந்துக் கிழக்குப் பக்கமாக நகர்ந்துகொண்டேயிருக்கவேண்டும். இப்படிநகர்ந்துகொண்டே, தானிருந்த இடங்களைவிட்டுப் போகாமல், வருஷத்திற்கு ஒருதரம் அவ்விடங்களுக்குத் திரும்பிவர வேண்டுமென்றும் தெரிகிறது. சூர்யனும், நட்சத்திரங்களும் இதைச் சுற்றவில்லையென்று சொன்னோம். ஆகையால் இது சூர்யனையும், நட்சத்திரங்களையும் சுற்றிவரவேண்டும். ஆனால் இது சூர்யனை மாத்திரந்தான் சுற்றி வருகிறது. இது ஏன் நட்சத்திரங்களைச் சுற்றி வர முடியாது என்று நட்சத்திரங்களைப்பற்றிப் படிக்கும்போது நன்கு விளங்கும். இப்படி பூமி ஒருதரம் சூர்யனைச் சுற்றிவரப் பிடிக்குங்காலத்தையே ஒரு வருஷம் என்று சொல்லுகிறோம். இது சுற்றும் வழியில் ஒரு செகண்டுக்குச் சுமார் $18\frac{1}{2}$ மைல் தூரம் போகிறது. இந்த வேகத்தை நாம் உணராமலிருப்பதற்கு அநேக காரணங்களுண்டு.

இக்காரணங்களைப்பற்றி இங்கு பேசுவது சரியாகாது.

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டே சூர்யனைச் சுற்றிவருகிறது. இப்படிச் சுற்றுவதற்குப் பூமியின் இரு துருவங்களையும் சேர்க்கும்படியான மத்தியக்கோடு, மைய ஆணியாயிருக்கிறது. சூர்யனைச் சுற்றிவரும் பாதைக்கு இந்தக் கோடு நேர் செங்குத்தாயிருக்கவில்லை. அப்படியிருந்தால், பூமி சூர்யனைச் சுற்றும்போது சரிபாதி கோளம் சூர்யனுக்கு நேரிலும், மற்றொரு பாதிகோளம் எதிரான மறுபக்கத்திலு மிருக்கும் எந்தப் பாகம் சூர்யனுக்கு நேராயிருக்கிறதோ, அதற்குப் பகலும், மறுபாகத்திற்கு இரவுமாயிருக்கும். பூமி தன்னைத்தானே ஒருதரம் சுற்ற ஒரு நாளாகிறது. ஆகையால் பூமியின் ஒவ்வொரு இடமும் சரிபாதி நாள் சூர்யனுக்கு நேரிலும், சரிபாதிநாள் அதற்கு எதிரான மறுபக்கத்திலு மிருக்கும். அதாவது ஒருநாளில் சரிபாதி பகலும், சரிபாதி இரவுமாகக் காணப்படும். இப்பொழுது நமக்கு ஒவ்வொரு தினத்திலும் பகலும் இரவும் சரியாயிருப்பதில்லை. சில காலங்களில் பகல் அதிகமாகவும் இரவு குறைச்சலாகவும், சில காலங்களில் பகல் குறைச்சலாகவும் இரவு அதிகமாகவும் இருக்கிறது. இதைக் கவனிக்காதவர்களில்லை. நமக்குக் கோடைகாலத்தில் அல்லது வெயிற்காலத்தில் பகல்பொழுது அதிகமாகவும், மழைகாலத்தில் இராப்பொழுது அதிகமாகவும் இருக்கிறது. அதாவது, மே, ஜூன், ஜூலை மாதங்களில் பகல்பொழுது அதிகமாகவும், நவம்பர், டிஸம்பர், ஜனவரி மாதங்களில் இராப்பொழுது அதிகமாகவு மிருக்கிறது. ஆனால் எக்காலத்திலும் பகலும் இரவும் சேர்ந்த ஒரு நாளின் காலம் ஒன்றேதான்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? பூமிசுற்றுதலுக்கு மையஆணியாகிய அதன் இரு துருவங்களையும் சேர்க்கும் கோளத்தின் மத்தியகோடு, பூமி சூர்யனைச் சுற்றிவரும் பாதையின் சமமட்டத்திற்கு (The plane of the orbit) நேர் செங்குத்தாயில்லையென்று தெரியவருகிறது. அதாவது, அந்தப் பாதையின் மட்டத்திற்கு இந்தக் கோடு கொஞ்சம் சாய்ந்திருக்கிறது. சூர்யனுக்குப் பதிலாக ஒரு விளக்கையும், பூமிக்குப் பதிலாக ஒரு பந்தையாவது, மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பூகோளத்தையாவது வைத்துக்கொண்டு சுற்றிப் பார்த்தால், இவ்விஷயங்களெல்லாம் நமக்கு நன்றாய்த் தெரியும்! இந்த மத்தியக் கோடு சாய்ந்திருந்தபோதிலும், பூமி சூர்யனைச் சுற்றிவரும் பாதையின் எந்தப் பாகத்திலிருந்த போதிலும், இக்கோடு ஒரே ஸ்திதியி லிருக்கிறது. அதாவது, பல விடங்களில் காணப்படும் இந்தக்கோடு ஒன்றுக்கொன்று சமாந்தரமாகவே காணப்படுகிறது. ஆகையால், இப்படி இந்தக் கோடு சாய்ந்திருப்பதால் ஒரு துருவம் சூர்யனுக்கு நேராகச் சாய்ந்திருந்தால், மற்றொரு துருவம் அதற்கு எதிரான மறுபக்கமாகச் சாய்ந்திருக்கும். சில மாதங்களில், வட துருவம் சூர்யனுக்கு நேராயிருக்கும். அப்பொழுது, தென் துருவம் எதிரான மறுபக்கத்தி லிருக்கும். இந்த மாதங்களில் பூமியின் தென் வடலில் மத்திய பாகமாகிய நிரட்சரரேகைக்கும் வடதுருவத்திற்கும் இடையி லுள்ள இடங்களுக் கெல்லாம், ஒரு தினத்தில் பாதி காலத்திற்கு மேலே சூர்யன் தென்படுமல்லவா? நிரட்சரரேகையி லிருந்து வடக்கே போகப்போக இப்படிச் சூர்யன் தென்படும் காலம் அதிகமாகுமல்லவா? நமக்கு சூர்யன் தென்படும் காலமே பகற்பொழுதாகையால், அவ்விடங்களுக்குப் பகற்பொழுது 12 மணிநேரத்திற்கு அதிகமாயிருக்கும். அதாவது, அவ்விடங்களில் இராப்பொழுதைக் காட்டிலும், பகல் அதிகம். இக்காலங்களில், நிரட்சரரேகைக்குத் தென்பாகத்திலுள்ள இடங்களுக்கெல்லாம் பகலைக் காட்டிலும் இரவு அதிகம். இப்பொழுது வட துருவத்திற்குச் சமீபத்தில் போகப்போக ஒரு தினத்தின் பகற்பொழுதும் வரவர அதிகரிக்கும். வடதுருவத்திலேயே ஒரு தினம் முழுவதும் பகலாயிருக்கும், இரவே யிராது. இம்மாதிரியே தென் துருவத்திற்குச் சமீபத்திலுள்ள இடங்களுக்கு இராப்பொழுது மிகவும் அதிகமாயிருக்கும். தென் துருவத்தில் ஒரு தினம் முழுவதும் இரவாகவே யிருக்கும்.

(இன்னும் வரும்.)

உலக ஸம்பவங்கள்

How the World moves

யுத்தக்காற்று ஒரேமாதிரியாகவேதான் வீசிக்கொண்டிருக்கிறது. மேல் அரங்கத்தில், நிலை முன்போலவேதான் இருக்கிறது. வேர்டனுக்கு இருபுறத்திலும் இருபுறத்தார் சேனையும் நெருப்புமழை பெய்துகொண்டேயிருக்கிறது. ஜர்மானியர்கள் முன் மந்தமாக இருந்ததைவிட அதிக மும்முரமாகப் போரிடுவதாகத் தெரியவருகிறது. இது அவர்களது கடைசி முறைப் பிரயத்தன மெனக் கருதப்படும். வரவர அவர் பலம் குறைந்து வருவது இதனாலேயே தெரியவரும். முதலில் ஜர்மானியர்க்குச் சிறிது ஜயம் வரும்போலிருந்தது. ஆயினும் நமது துருப்புகள் தமக்கு ஜெனரல் பெடேய் என்னும் சேனைத் தலைவர் தமது போர்வீரருடன் உதவிக்கு வரும்வரை மிகச் சிறப்புடன் தாக்கியது கொண்டாடத்தக்கது. அவ்வாறு செய்ததால் நமது பிரெஞ்ச் சேனைக்குப் பெரும் ஜயத்திற்கிடமானது. இதனால் பெருமை தாழ்ந்த ஜர்மானியர் மேலும் தமது காரியங்களை மும்முரமாக நடத்த வாரம்பித்தனர். என்ன நஷ்டமடைந்தபோதிலும், வெர்டன் இடத்தில் தமது விரங்காட்ட அவர் நினைத்திருக்கின்றனர் போலும்! இதற்கு அவரது குறைந்த வீரமே காரணமாகும். அவ்வாறு செய்வதே மிக நல்லது! ஜர்மானிய ராணுவப் பேய் யமனுக்கிரையாக அதுவே நல்லவழி.

நிற்க, தென் அரங்கத்தில் இடலியின் வடப் பிராந்தியத்தில் ஆஸ்டிரியர்கள் வெகுகடுமையாகப் போரிடுவதாகத் தெரியவருகிறது. இதற்கென்றே கலீஷியா, பால்கன் பிராந்தியங்கள் இவற்றிலிருந்த துருப்பையும் இவ்வரங்கத்திற்கு அவர் கொண்டுவந்து சிறிது ஜயமடைந்தன ரென்றே சொல்லவேண்டும். இடாலியர்கள் ராணுவ காரணங்களை முன்னிட்டே தாம் பின்வாங்கினர். இடலிக்கும் ஆஸ்டிரியாவுக்கும் யுத்த மாரம்பித்த காலமுதல், இடலியின் வடபாகத்து இயற்கை அமைப்பு அதற்குப் பெருந்தடையாக இருந்தது; முக்கியமாக இவ்வாறு டிரேண்டினோவென்னுமிடத்தில்தான் விளங்கியது. மேலும் அப்பாகங்கள் மலையடர்ந்தவைகளானபடியால் இடாலியர்க்கு வடக்கில் முன்னிட முடியாது. அவர்கள் கிழக்குப் பார்சவமாகத்தான் முன்னிட முடியும். இஸ்ஸான்ஸோ பாகத்தை அவர் கடந்துவிட்டால், பின் சிறிதும் தடையில்லாமல் பகைவரது தலைநகராகிய வியன்னாவின்மேல் அவர் படையெடுக்கலாம். அவ்வாறு செய்வதற்கும், தமது பார்ச்வ சேனைகள் ட்ரேன்ட் என்னுமிடத்தில் தளர்ந்து, பகைவரது முன்னிடுவதால் படுத்து, இஸ்ஸான்ஸோவி லிருக்கும் சேனையிலிருந்து பிரிக்கப்படாததற்காகவென்றே இடாலியர் பின்வாங்கியது. இல்லாவிடில் வெனிஸ் நகரத்தின்மேல், பகைவர் படையெடுக்க இடமுண்டாயிருக்கும்.

கீழ் அரங்கத்தின் ஸமாசாரம் அதிகமாகத் தெரியவில்லை. பல்கேரியா நல்ல ஸமயத்திற்காகச் சகுனம் பார்த்துக்கொண்டிருக்கிறது. நமது நேசத்துருப்புகள் கிரீஸில் தமது அரண்களைப் பலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. கிரீஸ் நாட்டு நிலையும் அப்படியேதான் விளங்குகிறது.

ஆசியத் துருக்கியில், மெஸபொடோமியாவில் குட் எல்-அமாரா என்னு மிடத்தில் ஜெனரல் டௌன்ஸென்ட் கீழ் இருந்த நமது சேனை, துருக்கியரால் முற்றுகையிடப்பட்டு,

நான்கைந்துமாதம் வரை தமது நிலையைக் காத்து,உணவாதிபோஷணைச்சாமான்கள் இன்மையாகத் தாங்கமுடியாது சரணடைந்தது. இது நமது சேனைக்குப் பெரும் விபத்தேனும், அதி வீரச்செயல். அன்னஹார மற்று 4 மாதத்திற்கு மேல்வரை தாக்குப்பிடித்த அவர்களது கஷ்டங்களும், அவர் வீரத்துடன் அவற்றைக் கவனியாது, மேல்பாகத்திலிருந்து உதவிக்கு வரும் என்று காத்திருந்த 'ருஷ்யசேனை, துருக்கியரால் தடுக்கப்பட்டமையுமே குட் விழுந்ததற்குப் பெருங் காரணங்களாகும். கிட்டத்தட்ட 9000 பேர் நமது வீரர்கள் பகைவரிடம் சிக்கிக்கொண்டனர். டௌன்ஸெண்டின் வீரத்தின் பெருமையைக்கண்ட துருக்கிய சேனாதிபதியும் அவரது கத்தி முதலிய ராணுவ கௌரவங்களை அவ்வாறே இருக்கச் செய்தனரென்பது யாவர்க்குஞ் சந்தோஷமூட்டும். குட்டிலிருந்து, டௌன்ஸென்ட் இஷ்டத்திற்கு மாறாக, பாக்டாட் நகர்மேல் படையெடுத்து நடக்க ஆரம்பித்தது முதல் நமது இந்தியசேனைக்குச் சுகமில்லை யென்றே சொல்லலாம். ஆனால் குட் விழுந்தது அப்பரிதாபக் கதையின் முடிவேயாகும். அது நம்மவர்க்கு ஆராத்துன்பமுண்டாக்கக் கூடியதாயினும், ராணுவ விஷயத்தை நாடுமிடத்து, கவனிக்கத் தக்க விஷயமே அன்று.

மற்று, மேற்குப் பிராந்தியத்தில் ருஷ்யர்கள் துருக்கியின் விலாவை யொடித்துப் புடைத்து, யுத்தகளத்திலிருந்து துலைத்து விடவே பார்க்கின்றனர் போலும்! முதல் ரஷ்யசேனை காகஸஸ் மலையைத் தாண்டி பெருந்துருக்கிச் சேனைகளை நொறுக்கியதும், துருக்கி நாடு முழுதுங் குழப்ப மிருப்பதாகச் சொல்லப்படுவதும், துருக்கியில் நமது நேசத்துருப்புகளிடம் வாஞ்சையுள்ள இரு பிரிவினர்கள் இருத்தலுமே இதற்காதாரங்கள் எனச் சொல்லலாம். முன், டார்டனல்ஸ் ஸந்தியிலிருந்த ஆங்கிலப் படையின் தடையைத் தடுத்தால், போக்குவரவும், உணவுச் சாமான்களும் துருக்கியிலிருந்து தனக்குக் கிடைக்குமென ஜர்மனி வேலைசெய்தது. அவ்வாறு முற்றும் அதற்குப்பயனுண்டாகவில்லை. இப்பொழுது முன்போல் நமது நேசத் துருப்புகள், துருக்கி தமக்குக் கெடுதி செய்யமுடியுமென்று நம்புகின்றனர் இல்லை. ட்ரபிஜாண்ட் எர்ஜிங்காம் என்னுமிடத்திற்கிடையே ரஷ்ய சேனை துருக்கிச் சைன்யங்களைத் தேய்த்து வருகிறது. இருந்தாற் போலிருந்து மிகுவேகத்துடன் பரவியதால், ரஷ்ய சேனையை எதிர்த்துச் சமாளிக்கும்படியான ஆற்றல்களைத் துருக்கியால் செய்ய முடியாதாகியது. ரஷ்ய சேனை துருக்கிநாட்டு மலைகளைத் தாண்டி, பெரிய ஆறுகளையுங் கடந்ததல்லாமல் அவைகளைத் தமக்குத் தக்க விதம் உபயோகமாகும்படி அரணிட்டு பலப்படுத்துகின்றது. ட்ரபிஜாண்டிலிருந்த சேனை எர்ஜிங்காம் பக்கம் சென்று மாமஹ்டம் என்னும் பட்டணத்தைக் கைப்பற்றியது. பாக்டாட் மேல்செல்லும் சேனை காஸ்ர்-இ-ஷீரீன் என்னும் இடத்தைக் கவர்ந்தது. மோஸல் பக்கமாய்ப் புறப்பட்ட சேனை ரேவாண்டுஜ் என்னு நகரைக் கவர்ந்து பொருள்களையெல்லாம் தமதாக்கியது. மோஸல் விழுந்தால் துருக்கிக்குப் பெருங் கஷ்டம். அது துருக்கித் தலைநகராகிய கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் பாக்டாட்டுக்கும் இடையே ரயில்வே மார்க்கத்திலிருக்கிறது. டிரபிஜாண்ட் பக்கத்திலோ துருக்கியர் கோர்ஸ-டின் என்னுமிடம் வரைப் பின்வாங்கி விட்டதாகத் தெரிகிறது. மெஸபடோமியாவிலும் டைக்ரீஸ் நதிக்கரையில் இருக்கும் பேதா-இ-எஸ்ஸா என்னும் தலத்தைவிட்டுத் துருக்கியர் அகன்றுவிட்டதாகத் தெரியவருகிறது. துஜைலா காவற்கோட்டையும் நம்மிந்திய சேனையாற் கவரப்பட்டது. ஸன்னையாட் இடத்தை விட்டுத் துருக்கியர் அகலவில்லை யானாலும், ரஷ்ய சேனை இந்திய சேனைக் குதவியாக இம்மாத முடிவில் வந்தது இனி துருக்கிக்குப் பெரும் பீடைதான்

இச்சண்டை நடக்குங்காலத்து விளங்கிய ஆங்கில மனவமைதியைச் சற்றுச் சலிக்கச் செய்யுமாறு அசப்பியமாக அயர்லாந்தில் நடந்த குழப்பம் விசனிக்கத்தக்கது. தென்னாப்பிரிகாவிலும் இந்தியாவிலும் காட்டிய ராஜவிச்வாஸத்தை அச்செயல் துலையில் கணக்கச் செய்யுமன்றோ? முட்டாள்தனமாக அக்குழப்பத்திற் சம்பந்தப்பட்டவர் டப்ளினில் குழப்பமிட்டு ஜனச்சேதத்தைச் செய்தனர். சிலரது செயலுக்கு அந்நாடு வருந்தும்படி நேர்ந்தது மஹாபாபமல்லவா? அயர்லாந்திலும் தென் ஆப்ரிகாவிலும் குழப்பமுண்டாகுமென்றே ஜர்மனி, யுத்த முதலிலிருந்து எதிர்பார்த்தது. அவ்வாறு அந்நாட்டு ஜனங்களில் சிலர் நடந்து கொண்டது பகைவரது தூண்டுகோலினால்தான். ஸர் ராபர்ட் கேஸ்மாண்ட் என்பவரே இக்குழப்பத்திற்கு முதலாளி. பகைவரிட மிருந்து உதவி சம்பாதித்து யுத்த ஸாமான்களையும் சேகரிக்க யத்தனஞ் செய்தார். ஆனால் அவர் வந்த ஜர்மனியக் கப்பல் நமது கப்பல்களால் பின் தொடரப்பட்டதனால், தானாகவே தகர்ந்து வெடித்து விட்டது. கேஸ்மாண்ட் இப்பொழுது கைதியாக இருக்கிறார்; அவரைப் பற்றி ராஜத்ரோக கேஸ் நடைபெற்று வருகிறது.

* * *

யூனைடட் ஸ்டேட்ஸ் பிரெஸிடெண்ட்வில்ஸனுடைய கடிதத்திற்கின்னும் ஜர்மனி பதில் எழுதவில்லை. ஜர்மனி, ஸமாதானத்தைப் பற்றிப் பேசும்படியாக அவரை வேண்டுவதாக வதந்தி வருகிறது. ஜர்மானிய சக்ரவர்த்தியே இதைப்பற்றி வில்ஸனுக்குக் கடிதமெழுதியதாகச் சொல்லப்படுகிறது.

காமன்ஸ் ஸபையில் ராணுவத்தில் சேரத்தகுந்த கலியாணம் அடைந்தவர்கள் யாவரும், வெளிநாட்டிலிருந்தால் கூட, ப்ரிட்டனில் இருப்பவர்களானால் உடனே ராணுவ உத்யோகஸ்தர் முன் ஹாஜராகவேண்டுமென உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

* * *

ஸப்மேரீன் சண்டை மாத்திரம் வேகம் குறையாமலே நடக்கிறது. அதையொழிக்க நமது நாவாய்ப்படை ஒன்றால்தான் முடியும்.

* * *

ஜில்லாக் கான்பரன்ஸ்கள் பல இந்த மாதம் நடந்தேறின. மலையாள ஜில்லா சபையில் கொல்லங்கோடு ராஜா அவர்கள் ஆயுதச் சட்டத்தைப் பற்றியும்,இந்தியர்க்கு ராணுவ உத்தியோக வாழ்க்கையைப்பற்றியும் பேசினார்; கரூரில் கூடிய திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கூட்டத்தில்ராஜாங்க அதிகாரத்திற்குட்படாத பஞ்சாயத்துகள் ஏற்படுத்த யத்னங்கள் செய்யவேண்டுமென்று ஸ்ரீ அன்னிபெசண்ட் அம்மையார் பேசினார். தேனாலியில் கூடிய குண்டூர் ஜில்லா கான்பரன்ஸில் கனம் ஸ்ரீ ராவ் பஹதூர் ராமசந்திர ராவ் அவர்கள் கிராமவாசமானது ராஜாங்கவிருத்திக்கு ஆதாரமாகும்படி ஒவ்வொரு கிராமவாசியும், தனது தர்மத்தை முற்றுமறியக் கற்கவேண்டுமென வற்புறுத்தினார். ஸ்ரீகாகுளத்தில் கூடிய கஞ்சம் ஜில்லா சபையில் ம-ா-ா-ஸ்ரீ ஆகெல்லா சூர்யநாராயண ராவ் பந்துலு அவர்கள் "ஆந்திர இயக்கம்" என வழங்கும் தெலுங்கரது விருத்தியைப்பற்றிய இயக்கம் ஜாதிய லக்ஷணம் என்றுகூறினார்.

* * *

சென்னை மாகாணக்கூட்டம் இம்மாதம் அப்புராதன நகரமாகிய தென்மதுரையிற்கூடியது. ம-ா-ா-ஸ்ரீ கனம் ராவ்பஹதூர் கேசவப் பிள்ளை அவர்கள் அதில் அக்கிராஸனம் வஹித்தார். ஷை கூட்டத்தை வரவேற்க, கனம் ஸ்ரீ இராமநாதபுரத்து ராஜா அவர்கள் வெகு விமரிசையாக மதுரையின் புராதன பெருமையைப்பற்றியும், அதன் தற்காலப் பொலிவைப்பற்றியும் பேசிய பிறகு, ஸமஸ்தான பூமியைப்பற்றிய சட்டம், வைதிகக் கொடைகளைப்பற்றிய சட்டம், லோகல் போர்ட் சட்டம், கிராமபஞ்சாயத்து முதலிய விஷயங்களைப்பற்றி, அத்யத்புதமாகப் பேசினார். ஸ்ரீ கேசவப் பிள்ளையவர்களும் நமது நாடு ஸுகத்திலுயர நாள் கிட்டியதென்றும், அதற்கொப்ப ஆயுத சட்டத்தை ரத்துசெய்யவும், ராணுவப்பயிற்சியில் இந்தியர்கள் உயரவும் இயக்கமுண்டாக்க வேண்டுமென்றும், வேவுகாரச் சிறுவர் கூட்டமுண்டாக்கி, நமது சிறுவர்களின் பெருமையை யுயர்த்தவேண்டுமென்றும், கூலியாட்களை வெளியேற்றுவதில் தக்க ஆராய்ச்சிக்குகந்த நமது உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்துவதைப்பற்றியும் பேசினார். வீண் கர்வம் வெறுப்புக் கொள்ளாமல், சட்ட சபையங்கத்தினர்கள் உழைப்பது நாட்டிற்குச் சுகமேற்படவே இடந்தருமென்றும், அவ்வாறு நடப்பது இராஜாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் உதவியாக இடமுண்டென்றும் பேசினார். அதற்கு அவர் வாழ்க்கையே நிதர்சனமல்லவா?

கல்வித் கான்பரன்ஸ் மதுரையிற் கூடிய போது பி. டி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள், பள்ளியில் பிள்ளைகளுக்கு இப்போதைக்காட்டிலும் அதிகமாக ரஸாயனப்படிப்பைக் கற்பிக்கவைக்க வேண்டியதென்றும், கல்வியிலாகாவில் கிராண்ட் -இன்- ஏயிட் சட்டம் மிக்க ஆதரவுடன் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், இந்திய பாஷைகளின் மூலமாகச் சாஸ்திரபாடங்களைச் சொல்லித்தரவேண்டும் என்றும், இந்தியபாஷைக்கும், சாஸ்திரப் படிப்பிற்கும் கேடுண்டாகும்படியாக இங்கிலீஷ் படிப்பிற்கு இடங்கொடுத்தல் தகாதென்றும், சென்னை ஸர்வ கலாசாலையின் ஆலோசனை ஸபையின் செயல்கள் ஊக்கத்துடனும், கல்யின் அபிவிருத்திக்கும் மாணாக்கர்களுடைய ஏற்றத்துக்கும் தக்கபடி நடக்கவேண்டும் என்றும் பேசியிருக்கிறார். இம்மொழிகள் ஆழ்ந்த யோசனைக் கிடந்தரத் தக்கன எனச் சொல்லவும் வேண்டுமோ?

***

ஸ்ரீகாகுளத்தில் கூடிய ஆந்திர கான்பரன்ஸில் அக்கிராஸநாதிபதியாக கனம் ஸ்ரீ ராமசந்திர ராவ் அவர்கள் தெலுங்கருக்குத் தனியாக இராஜதானி அமைக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறு செய்யப் பல தடைகளிருக்கும் என்றும் பேசினர். ஆந்திர ஸர்வகலாசாலை ஒன்று எற்படுத்தமுயல வேண்டு மென்றும், அதற்காக, காசி ஹிந்து விச்வவித்யாலயத்திற்கு நம்மவர்கள் உழைத்தவாறு, தாம் ஊக்கத்தோடு உழைக்க வேண்டுமென்றும் பேசினர். தமது பாஷை பேசாதவரைக் கண்டால் வெறுப்பது என்று எண்ணங் கொள்ளாது தமது நிலையையுயர்த்திக்கொள்ள ஆந்திரர்கள் உழைப்பது ஸர்வ ஸம்மதமாகும். குரோதம் குடிகொண்டு விட்டால், ஜாதிய கட்டிடத்திற்குத் தக்க அஸ்திவார மேற்படமுடியாது. நமது பொது ஜனங்களுடைய வாக்கு ஒன்றே. அது ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து!

***

தென்னையை நாசஞ்செய்யும் ஒரு வகை வியாதியைப்பற்றிக் கவனித்துக் கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களில் செய்த பிரயத்தினங்களைப்பற்றி விவசாய இலாகா தலைவர்

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

பம்பாய் கவர்ன்மேண்டும், வைஸ் பிரஸிடேண்ட் ஸ்தானமும்.— பம்பாய் கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் ஒரு மெம்பரான கனம் எம். பி. சௌபால், பம்பாய் சட்ட சபையின் வைஸ் பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டிருப்பது, இந்தியரனைவருக்கும் சந்தோஷத்தை விளைக்கும் முன்னர் ராஜப்பிரதிநிதிச் சட்ட ஸபைக்கு, ஸர் ஸய்யத் ஆலி இமாம், வைஸ் பிரஸிடெண்டாயிருந்திருக்கிறார் —வங்காள சட்ட சபையில் கனம் ஷம்ஸுல் ஹுடா ஒரு சமயம் வைஸ் பிரஸிடெண்டாக் நியமனம் பெற்றிருக்கிறார்.

***

தீக்குச்சிகள் இறக்குமதி.—சென்ற 1915-1916ம் வருஷத்தில் ஜப்பானிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்குமேல் விலையுள்ள தீக்குச்சிகள் இந்தியாவில் இறக்குமதியாயிருக்கின்றன. வெளி தேசங்கள் எல்லாவற்றிலிருந்தும், இந்தியாவுக்கு இறக்குமதியான தீக்குச்சிகளிலே 100-க்கு 83 பங்கு ஜப்பானிலிருந்து வந்தனவெனத் தெரிகிறது.

1915௵ டிஸம்பர் மாதத்திய ரிபோர்ட்டில் விவரித்திருக்கிறார். இப்பிரயத்தினங்களால் ஷை வியாதியைக் குறைக்க வழி ஏற்பட்டதாகவும், அதற்கு அவ்விலாகா, ஜனங்களுடைய உதவியை நன்குபெற்றதாகவும் தெரிகிறது. இம்முறைகளை அனுஸரிப்பது தென்னையை யழிக்கும் வியாதியை யழிக்க ஏற்ற ஸாதனமாகும்.

***

இந்தியாவில் ஸர்வகசாலைக்குமேல் ஸர்வ கலாசாலைகள் ஸ்தாபனஞ் செய்யப்படுவது ஸந்தோஷத்தைக் கொடுக்க, ஸிலோன் ராஜாங்கத்தில், லங்கை த்விபத்திற்கு ஸர்வ கலாசாலை ஆவச்யகமில்லை என அந்த த்வீபத்துக் கவர்ன்மெண்டார் தீர்மானித்தது எல்லார்க்குந் துன்பத்தை யுண்டாக்கும். சீக்ரத்தில் இக்குறையைத் தீர்ப்பதே அந்நாட்டில் படிப்பிற்குப் பெருமை தரும்.

விவேக போதினி

OFFICE OF THE REGISTRAR OF ... 3-AUG 1916 MADRAS

"எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { நள௵ வைகாசிமீ : 1916-௵ ஜூன்மீ } பகுதி 12

ஸ்வகீயம்

OURSELVES

இச்சஞ்சிகையுடன் விவேக போதினியின் எட்டாவது ஆண்டு நிறைவுபெறுகிறது. இச்சமயத்தில் நமது சந்தா நேயர்களுக்கும், மற்றும் படிப்பு அபிவிருத்தியில் அக்கரையுள்ள அனைவருக்கும் இரண்டொரு மொழிகள் சொல்வது உசிதமற்றிருதென நம்புகிறோம்.

நடந்த எட்டு வருஷங்களாக, இப்பத்திரிகை செம்மையாகப் பலராலும் கொண்டாடும்படியாக நடந்தேறியதற்குக் கடவுளை வந்திப்பதுடன், நம் தமிழபிமானிகளனைவருக்கும் அன்பு பாராட்டும்படியான நிலைமையி லிருப்பதைப்பற்றிச் சந்தோஷப்படுகிறோம். மேலும் இப்பத்திரிகையின் பழைய கையொப்பக்காரர்களும், நேயர்களும் ஆதரவாயிருந்து இப்பத்திரிகையை ஆதரித்து வந்ததற்காகவும், இதனை அவரவர் வீட்டுப் பெண்டுகளும், சிறுவர்களும், சிறுமிகளும் படித்துக் களிக்கப் பாடசாலை மாணாக்கர்களுக்கும், மற்றைய தமிழ்நாட்டுப் பிள்ளைகளுக்கும், வெகுமதியாகக் கொடுக்கவும் உபயோகப்பட்டு வருவதற்காகவும் நாம் மிகவும் நன்றி பாராட்டுகிறோம். பத்திரிகை நடத்துபவர்களாலும், மற்றோர்களாலும் மிக உயர்வாக நமது போதினி அபிமானிக்கப்படுவதற்கும், நாம் கடமைப்பட்டவராகிறோம். அன்றியும், இவ்விடத்துத் தமிழ் நாட்டாரும், நமது ராஜதானிக்கு வெளிப்பட்ட நாடுகளிலுள்ளவர்களும் நமது பத்திரிகை சீர்பெற்றோங்கி வளரவேண்டுமென்று அவரவர்கொண்ட நற்கருத்துக்களை கண்டு களித்து நாம் நன்கு மதிப்பதல்லாமல், இப்பத்திரிகையை மேன்மேலும்ஜனங்களுக்கு வித்தியா விநோதகரமாக்கி விசேஷிக்கச் செய்ய ஊக்கமுமடைகிறோம்.

இனி ஆரம்பிக்கும் சஞ்சிகைகளும், நாம் இதுவரைகொண்ட கோட்பாடுகளை அனுசரித்தே நடத்தப்படும். இத்தனை நாளாக நீதி விஷயம், சாஸ்திர விஷயம், சிறுவர்கள் விரும்பத்தக்க சிறு கதைகள், நாடகங்கள், போதனு முறைகள், சாஸ்திர விசாரம் முதலான பல விஷயங்கள், பல படங்களுடன் விளக்கிக் காட்டியது போலவே செய்வதல்லாமல், இன்னும் பல சீர்திருத்தங்களும் செய்யப்படும். தேசபாஷாபிவிருத்தி, சரித்திரக் கதைகள், தற்கால சாஸ்திர விவேகம், பலநாட்டுச் சமாசாரங்கள், கணிதாதி சாஸ்திர நுட்பங்கள், ஐக்கிய நாணயத்தைப் பற்றிய விசேஷங்கள் இவைபோன்ற விஷயங்களிலும், கவனம் செலுத்தப்படும். மற்றும் சிறு கதைகளும், நாடகங்களும் அதிசய நவீனங்களும், விநோத விடுகதைகளும், ஹாஸ்யத் துண்டுகளும், ஆங்காங்கு ததும்பிக் கிடக்கும்படியாகவும் நடத்தப்படும். மஹான்களின் சரிதையும், ஜீவஹிம்ஸா விமோசனமும், நன்னெறி வியாசங்களும், மற்றும் பற்பல உபந்நியாசங்களும், எப்போதும்போல் இடம் பெறும். எவ்விதமும் சிறியோர் பெரியோர் எவர்க்கும் எப்பாலவர்க்கும் உபயோகமாகும்படி விஷயங்கள் சேர்க்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

மேற்சொன்னவாறு நடக்கத் தெய்வத்தை முன்னிட்டு, இடைவிடாது விடாமுயற்சி

யுடன் உழைப்பதற்கு நாம் கங்கணங்கட்டியிருக்கின்றனம். நாம் உழைப்பதற்கேற்ப, நமது சந்தாநேயர்களும், தமிழபிமானிகளும் உண்மையன்புடன் நம்மை யாதரித்து நமது போதினி எப்போதும்போல் தான் பெற்றிருக்கும் உன்னத நிலையிலிருந்து தாழாதிருக்கும்படியாகச் செய்வாரென நம்புகிறோம். தற்காலம் இருக்கும் காகிதப்பஞ்சகாலத்தில் இந்தப் போதினியை நடத்த நமக்கு நேரும் செலவு ஒன்றுக்கு நான்குமடங்கென்று நாம் சொல்லாமலே, யாவருமறிவரென்பது புதுமையாகாது. ஆகையினால், நமது நேயரனைவரும், இப்போதினியின் அபிவிருத்தியைத் தமதாகக்கொண்டு இப்போதினியைத் தமது பந்துமித்திரர்களுக்கு எடுத்துக்காட்டிச் சந்தாவினால் ஏற்படும் தொகையை வரவர அபிவிருத்தி செய்து, அதன் மூலமாக இப்பிரசுரம் பணச் செல்வாக்கால் மேன்மேற் சிறந்த பொருள்களை வெளியிடும்படிச் செய்வதல்லாமல், தன்னைத் தானே தாங்கிக் கொள்ளும்படியாகச் செய்வரென நம்புகிறோம். இது அவர் தமிழ் பாஷைக்குச் செய்யவேண்டிய பெரிய கடமையாகும். நமது நாடும் நமது சாஸ்திரங்களும் எவரையும் தமது கடமைகளைச் செய்யும்படிப் போதிப்பதைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. அன்பற்றவர்க்கல்லவா அதைச் சொல்லவேண்டும்?

பல விதத்திலும் நமது அபீஷ்டத்தைப் பூர்த்திபெருமாறு, விஷயங்களைத் தானம் செய்த நண்பரனைவருக்கும், வாழ்வும் பெருமையும் மேன்மேலும் உயரவேண்டுகிறதன்றி, நமது போதினி அவர்களது உயர்ந்த பாவங்கள் நிறைந்த விஷயங்கள் பொதிந்து, பண்டிதபாமர ரஞ்சகமாகித் தேவர் நாட்டுக் கற்பகமென்ன, வேண்டியார் வேண்டியவண்ணம், மன உத்ஸாகத்திற்கும், அதனால் தூண்டப்படும் பெருஞ்செயல்கட்கும் ஜீவாதாரமாக விளங்கி நம் தமிழ் நாட்டுலாவவோ முதல்வனை உள்ளன்புடன் வேண்டுகின்றோம். அவரது பெருமையை நம்மாற் புகழ்வதுந்தரமா? எல்லாம் எமையாளும் ஈசன்செயல். அவனன்றி ஓரணுவுமசையாது. அவனது கடாக்ஷத்தைப் பெருவதற்கு ஸ்ர்வே ஜனா: ஸுகினோ பவந்து.

சிந்தனை மொழிகள்

STRAY THOUGHTS

“ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி”—“பொருள் ஒன்றே; பெரியோர் பலவிதங் கூறுவர்”—என வேதம் கோஷமிடுகிறது. “எந்தெய்வமெந் தெய்வமென் றெங்கணும் பெரு வழக்கிற்” கிடந்தரும், பொருள் ஒன்றே. இவ்வுண்மை குரோதமற்ற ஞானியருள்ளத்தே, குடியாயிருக்கும். எம்மதமும் ஸம்மதமாய் உயர்நிலைப் பொருளை உள்ளத்துணர்ந்து விளங்க மனங்கொள்வதே மனிதப் பிறவியின் பயன்.

⁂

நம்மை நாம் ஏய்த்துவிடுவதென்ன ஆச்சரியம்! ‘அவசரகாரியமதிகம்; ஒரு நிமிஷங் கூட நிற்க நேரமில்லை’ என்று சொல்லிக்கொண்டே வீண் வம்பிலுட்கார்ந்து காலத்தை எவ்வளவு சந்தோஷமாக வீணாக்குகிறோம்? ஒரு நிமிஷம் தெய்வத்யானம் என்றால், இப்பொழுது முடியாது முடியாது என்பதற்கு நா கூசுவதில்லை. சீட்டாடுமிடத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால், தலைபோகும் காரியமாக விருந்தாலும், அதை விட்டுச்செல்லக் காலெழாது. நம்மிடம் நமது மனம் எவ்வளவு அன்புடன் நடக்கிறது! அதை வெறுத்து, அடக்கியாளும் திறன் எப்போதுதான் நமக்கு வருமோ?

⁂

“நான் கும்பிடும்போது அரைக்கும்பிடு ஆதலால் நான் பூசைசெயல் முறையோ” என்று தாயுமானவர் அலறினர். வெளிவேஷத்துடன் செய்யும் பூசை அவ்வளவுதான். கடவுளிடமிருக்கும் பக்தி உடல் பாசத்தைக் கடந்து உள்ளத்துறவுகொண்டாலல்லாமல், நமக்குக் கதியேயில்லை. தன் பசியை நாடிக் காய்ச்சச் சொல்லிய மாமிசத்தைத், தன் அன்பின் முதிர்ச்சியால், பரமசிவனுக்களித்துத், தன் கண்ணையுங் கொடுத்துநின்ற கண்ணப்பநாயனரது மனோநிலை வருவதே ஆத்ம நிவேதனம். ஊனுக்கு முந்திக்கொள், உறவுக்குப் பிந்திக்கொள் என்பது கேவலம் உதரநிமித்தம் பஹு

கிருத வேஷங்கொள்ளும் பாமரர் வழி; எம்பெருமானிடம் உறவுகொள்பவர், அவர் உறவுக்குத் தான் முந்திக்கொள்ள வேண்டும்!

⁂

தூக்கணாங்குருவி, அதனது அழகிய கூட்டில் ஊஞ்சலாடுவதைக் கண்ட குரங்கு ‘கில் கில கில கில’ என்று சத்தஞ்செய்து, முகத்தைச்சுளித்தது. தூக்கணாங்குருவி அக்குளிர் நாளில் அக்குரங்கின் பரிதாப நிலையைக் கண்டு, ஆதரவுடன் “மர்கடரே! தாங்கள் இத்தனை நாள் காட்டில் வாசஞ்செய்தும், கூட்டில் வாசஞ்செய்ய அமைத்துக்கொள்ளும்படி, கூடுகட்டும் வித்தை கற்றுக்கொள்ளவில்லையே; இப்பாழும் மழையிற் சிக்கிக் கஷ்டப்படும்படியாக வைத்துக் கொண்டீரே. உமது நிலையைப்பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறதே” எனச் சொல்லியது. இவ்வுபதேச மொழிகளைக் கேட்ட குரங்கு கோபங்கொண்டு, மரத்தின் மீது பாய்ந்து குருவியின் கூட்டை நாசஞ் செய்தது. தூக்கணாங்குருவி குரங்கிற்குப் புத்திசொன்னதுபோல், எத்தனைபேர் நமக்குச் சொல்லவில்லை. குரங்குபோன்ற நமது மனம், அவர்களை எத்துணைமுறை அலக்ஷியம் செய்யச்செய்கிறது. துள்ளும் மான் குட்டி, தூரவில் விழுந்ததுபோல, நமது மனம் எத்தனை தரம் படுகுழியில் விழுகிறது. அப்பொழுது, ‘துள்ளாதே துள்ளாதே குள்ளா பக்கத்தில் பள்ளம் அடா’ என்று எச்சரித்து அதை வெருட்டி நல்வழியில் ஓட்டச்செய்வதே அறிவின் வழி.

⁂

அன்பு கொண்டவர்களிடம் கடவுளுக்குப் பேதம் என்பதே கிடையாது அவர்க்கு யாவரும் ஒன்றே. மடுவிலிருந்து ஆதிமூலமே என்று அலறின யானையை மனிதர்களைக் காட்டிலும் பெரிதாகவே பாவித்தனர் குரங்கைத் தனது அத்யந்த ஆத்மநேசனாகப் பாவித் தாண்டதும் அக்கடவுள் தானே. சிட்டுக்குருவியிடம் அன்புகொண்டு சொக்கநாதர் எவ்வளவு அன்புடன் உபதேசம் செய்தார்! தாயற்ற பன்றிகளிடம் தாய்போல் வந்து, பால் கொடுத்த கதை நாமறியோமா? பகுத்துணர்வில்லாத இவற்றை எல்லாம் ஆதரவுடன் ஆண்ட பெருமையல்லவா அவரை “ஆண்டவனே! ஆண்டவனே!” என்று அலறி அழைக்கச் செய்கிறது? இந்த ஸத்ய நிலையை யுணர்ந்து தான் “தெய்வத் துணைக்கொள், தேகம் அநித்யம்” எனப் பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது.

⁂

இந்தப் பாமர ஜனங்கள் என்னபாடு படுகிறார்கள்? சிவன் வேறு, விஷ்ணு வேறு என அவர் விதண்டவாதம் செய்கிறார்கள். ஆனால் அவர் இருவரும் ஒருவரே, அதற்கவர் பெயரே சாட்சி. ஒருவர் ஸபாநாதர், ஒருவர் ரங்க நாதர்; ஒருவர் விச்வநாதர், ஒருவர் ஜகந்நாதர்; ஒருவர் பசுபதி, ஒருவர் நரபதி; ஒருவர் தேவதேவர்; ஒருவர் மஹாதேவர்; இவைபோலின்னும் பல பெயர் வேறாகத்தோன்றினும் அவற்றின் பொருள் ஒன்றே. சம்புவென்றும் விஷ்ணுவென்றும் அவரவர் அழைத்துப் பஜிப்பதும் ஒரே பொருள்தான் என்று நாம் நன்குணர்ந்து நலம் பெறுவோமாக!

⁂

சேற்றிற்பிறந்தாலும் செந்தாமரை போற்றிசெய்யும் பெரும் பூவாகும். அவ்வாறே எந்தச் சாதியிற் பிறப்பினும், பெரியோர் யாரினு முயர்த்தப்படுபவர்—இது தான் ஹிந்துமதத்தின் பெருமை. நந்தன் பிறப்பால் பறையன்; அவனைத்தான் தில்லை மூவாயிரவர் வணங்கியது. கபீர்தாஸர் பிறப்பால் மஹம்மதியர்: அவரைத்தான் வட இந்தியா முழுதும் வணங்குவது இந்திய நாட்டிற்கே ஞானந்தான் ஏற்றம். அது உண்டாகும் வரைதான் ஜாதிபேதம் முதலியன. தெய்விக ஞான முதிர்வு பலித்தால், எந்த வகுப்பைச் சேர்ந்தவனானாலும் அவன்தான் பிரம்மவித்தாவன். இதுதான் நமது நாட்டிற்கு ஞான பூமி யென பெயர் வரக் காரணம்போலும்!

விவேக போதினி

தொ. 8] நள(ஹு) வைகாசிமீ [பகுதி. 12

மோக்ஷ ஸோபாநம்

THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

மறுபிறப்பிற்குத் திரும்புவது

முன்னர் எடுத்து ஆராய்ந்தவைகளிலிருந்து, மரணம் என்பது வேறு தேஹத்தைப்பற்றி லோகாந்தரம் போவதென்றும், அல்லது சற்றுச்சுற்றும் உலாவி இங்கேயே மறுபடி பிறப்பதற்குக் காரணமென்றும் வெளியாகியிருக்கும். இங்கு மரணத்தின் பின்னரோ, அல்லது லோகாந்தர அனுபவங்களுக்குப் பின்னரோ, ஜீவன் மறுபடி இவ்வுலகில் வந்து பிறக்கத் தயாராகும் விஷயங்களைப்பற்றி ஆராய்வோம்.

இவ்வுலகில் மறுபிறப்பு அடைவதற்கு முன், மறுபிறப்பிற்குத் தயாராகும் ஜீவன் முன்பற்றியுள்ள அதிர்ஷ்டஜ (கர்மஜ) சரீரத்தையோ, பார்த்திவ சரீரத்தையோ விட்டு, இதைச்சுற்றியுள்ள நீராவித்துளிகளை லோகாந்தர அனுபவத்திற்குப் பின்னரோ, அல்லது இங்கு மரணத்திற்குப் பின்னரோ பிடித்தல்வேண்டும். இதன் பின்னர், மழை வழி, தகுந்த தருணத்தில் தகுந்த பிராணிகளுக்கு உணவாகக்கூடிய புற்பூண்டு செடி கொடிகளில் வந்து தங்கி, அதன் காய் முதலியவைகளில் அமரவேண்டும். பின்னர் ஆண் பிராணி ஆஹாரத்தின் வழி அதனுள் புகுந்து தகுந்த பெண் பிராணி கருப்பையுள் புகுந்து தேஹம் பெற்று, அந்தத் திரும்பிவரும் ஜீவன் மறுபிறப்பை அடையும்.

நம்முள் காணப்படும் ஆஹார நியமத்திற்கு, ஜீவர்கள் மறுபிறப்பு ஒழுங்கும் ஒரு தகுந்த முகாந்திரமாகும். செடி கொடி புற்பூண்டுகளெல்லாம் மறுபிறப்பை அடையத் தயாராக இருக்கும் ஜீவர்கள் தங்கி நிற்கும் இடங்கள். ஆகவே இவைகளை உணவாகக் கொண்டால் ஜீவர்களை நம்முள் ஏற்றித் தகுந்த பிள்ளைகளை உண்டாக்கலாம். எப்பொழுதும் நல்லபிள்ளையே உண்டாக்குவதற்குத் தான் கண்ட காய்கறிகளைத் தின்னலாகாது என்று வேதம் விதிக்கிறது. பிரஹதாரண்யக உபநிஷத்தின் பின் பாகத்தில் உள்ள ஆகாரநியமமும் இதற்கு இசைந்தது தான். எந்த எந்தக் காய்கறிகள் எல்லாம் நரக ஜீவர்கள் வந்து தங்கக்கூடியவைகளோ (உள்ளிப்பூண்டு, வெங்காயம், சொரைக்காய் முதலியவைகளைப்போல) அவைகளை வைதிக வருணத்தார் தின்னலாகாதென்று வேதம் விதிக்கும். இதைக் கவனியாமலிருக்கும் மானிடர் எவ்வளவு ஸத்துக்களாக இருப்பினும், அவர்களுக்குப் பிள்ளைகளாக அஸத்துக்களே பிறப்பர். நல்லோர் குலங்களில் தீயோர் பிறப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

இங்கு கூறப்பட்ட காரணத்தால் மாம்ஸம் தின்னலாகாதென்பது வெளிப்படையாகி விடும். மாம்ஸம் ஒரு உயிர்ப் பிராணியின் தேஹம். அது தின்னத் தயாராகும்பொழுது உயிரற்ற பிணமாகிறது. காய்கறிகள் போல ஜீவனிருக்கப்பட்ட வஸ்துவாயிராது. ஆதலால், மாம்ஸம் தின்னுவதால் மறுபிறப்பு ஜீவன் ஒருவனுக்கும் உதவியே இல்லை. தின்பவன் தேஹக்கொழுப்பைத் தவிர வேறு பலன் இல்லை. பெரியோர்களும் 'ஊனைத்தின்றூனை பெருக்காமை முன்னினிது' என்று கூறி இப்பொருளை வெளிப்படுத்தி, மரக்கறி தின்னுவது வெறும் ஊனைப் பெருக்குவதல்ல; பரோபகாரத்தையும் அடக்கியுள்ளது என்பது த்வனிக்க வைத்துள்ளார். ஊனையே தின்று வளரும் புலி முதலிய பிராணிகளுக்குங்கூடக் குட்டிகள் பிறப்பதற்கு அவை உண்ட பிராணிகள் வயிற்றிலுள்ள மரக்கறி முதலியவைகளே காரணம்.

ஆனால் யாகங்களில் ஹோமம் செய்த ஆட்டு மாம்ஸத்தைத்தின்ன வேதம் இடங்கொடுத்திருக்கிறதே இது மாத்திரம் ஊனைத் தின்றூனைப் பெருக்குவதாகாதோ என்று சிலர் குதர்க்கம் செய்யத் தொடங்கலாம். முதலாவது, தின்னும்படி விதித்துள்ள மாம்ஸ பாகத்திலிருந்த உயிர் ப்ராணிகள் தகுந்த வேத மந்திர விசேஷங்களாலும், யாகமாகிய ஈச்வராராதனத்தில் உபயோகப்படும் ஆற்றலாலும், நல்ல உயர்ந்த ஜன்மத்திற்கு உடனே ஏற்றப்பட்ட பின்னர்தான் அந்த மாம்ஸத்தைத் தின்ன இடங்கொடுக்கிறது வேதம். ஸாதாரணர் உயிர்ப் பிராணியைப் பழையபடி மழைத்துளிகளில் அகப்பட்டுத் திண்டாடவிட்டுத் தின்னுவது போலத்தின்ன இடங்கொடுக்கவில்லை. இரண்டாவது, ஈச்வராராதன பிரஸாதமாகச் சிறு பாகம் உட்கொள்ளச் சொல்லியதே ஒழிய வேதம் இவைகளை விருந்தில் வயிறு வீங்க ஆவலோடு உண்ணுவதுபோலத் தின்று ஊனைப் பெருக்க இடமே கொடுக்கவில்லை. மூன்றாவது, இந்தப் பிராணி ஹிம்ஸை பிராணியின் நன்மைக்கும் யஜமான் நன்மைக்கும் வைதீக ஆராதனை பூர்த்தியாவதற்கும் கடவுள் வழிபாடாகச் செய்தே தீரவேண்டி இருப்பதால் வேதம் ஹிம்ஸா பாக பாபம் நீங்குவதற்குக்கூட ப்ராஹ்மண போஜனத்தை யாகத்தில் விதித்துள்ளது. நான்காவது, யாகஹோம சேஷத்தை முகர்ந்து பார்த்துப் போட்டு விடலாம்; தின்ன வேண்டியதில்லை என்றும் வழிவிட்டுள்ளது. இக்காரணங்களால் ஈச்வர ஆராதன ரூபமான யாகங்களில்கூட, வேதம் ஊனைத் தின்றூனைப் பெருக்க இடங்கொடுக்கவில்லை. இம்மாதிரியான ஆழ்ந்த ஜீவதத்துவ ரஹஸ்யங்கள் நமது வைதிக ஆசாரங்கள் ஒவ்வொன்றிலும் புதைந்து கிடக்கலாம்.

இனி லோகாந்தரங்களையோ அல்லது முன் பார்த்திவ தேஹங்களையோ விட்டு மழைத்துளிகளை வந்து பிடித்து நிற்கும் வரையில் ஜீவர்கள் எந்நிலைகளிலிருப்பர் என்பதைப் பகுத்து ஆராய்வோம்.

(1) நான்கு வருணத்திற்கு வெளிப்பட்ட ஜீவர்கள்.—இவர்கள் மரணமடைந்ததும் தமது புண்யம், தண்டனைப்படாத பாபம், தண்டனைப்பட்ட பாபம் இவைகளுக்கேற்றபடி சுற்றிலும் உள்ள மழைத்துளிகளைப் பற்றி உலாவி, கூடிய சீக்கிரத்தில் தகுந்த மனிதர் உணவு, அல்லது கழுதையாதித் தாழ்ந்த பிராணிகள் உணவானவைகளில் புகுந்து தகுந்த மானிட அல்லது தாழ்ந்த பிராணி ஜன்மத்தையோ அடைவர். மானிடர் ஒழிந்த மற்றைய ப்ராணிகள் கதியும் இப்படித்தான்.

(2) நரக ஜீவர்கள்:— இவர்கள் நரகில் தமது கொடிய கர்மாக்களின் பலன் ஓயும் வரையில் துடித்து மயங்கி, உணர்வு இழந்து முடிவில் அங்கிருந்து இவ்வுலகை

நோக்கித் தள்ளப்பட்டு மயக்கத்திலேயே விஷய ஸுகத்தை எப்பொழுது காணப்போகிறோம் என்ற அடங்கா உள்ளாவலுடன் மேகமண்டலம்வந்து மழைத்துளிகளைப் பற்றித் தமது வாயவீய சரீரத்தை விடுவர். பின்னர், மழைவழி தாழ்ந்த பிராணிகளுக்கு ஆகாரமாகும் செடிகொடியாதிகளாகிக் கிருமிகீடாதிப் பிறவியை அடைந்து, கிடைத்த விஷய ஸுகங்களை ஆவலுடன் பற்றி உழன்று வெகு மெதுவாய் மேல் மேல் ஜன்மங்களடைந்து முடிவில் மானிட ஜன்மத்தை அணுகுவர். இவர்களுக்குத்தான் சாண் ஏறினால் முழம் சறுக்கும் என்ற கதி ஏற்பட்டுத் தத்தளிக்கும்படியாகும். இவர்களுக்கு ஏற்படும் தடைகள் சிசுவைச் சூழ்ந்திருக்கும் கருப்பைபோல பலமாகப் பிறர் உதவியாலேயே நீங்கத்தக்கவையாக விருக்கும்.

(3) பிதிர்லோக ஜீவர்கள்.— முன்னவர்கள் போலவே இவர்கள் கர்மபல காலமுடிவில் மயக்கம்போன்ற உணர்விழந்த நிலைகளையடைந்து தள்ளப்பட்டு மேகமண்டலம் வரை வந்து மழைத்துளிகளைப் பிடித்து ஜலீய சரீரத்தை விட்டு வைதிக தர்மத்தில் மூடப்பிடிப்புள்ள பணக்கார கிருஹஸ்தர்கள் வீட்டில் வந்து பிறவி எடுப்பர். பின்னர் வைதிக கர்மாக்களை நன்றாக அநுஷ்டித்து ஸ்வர்க்கத்திற்கு யோக்யர்களாவர். இவர்களுக்கு ஏற்படும் தடைகள் கண்ணாடியிலுள்ள அழுக்குப்போலப் பெருமுயற்சியால் நீங்குவனவாக விருக்கும்.

(4) ஸ்வர்க்க ஜீவர்கள்.—இவர்கள் மத்யம ஆக்நேய சரீரம்பெற்று ஸ்வர்க்கத்தில் தமது காம்ய வைதிக கர்மபலன் முடியும் வரையில் இருப்பவர். இவர்கள் புண்ய கர்மபலன்கள் முடிவடைந்ததும் முன்பின் எச்சரிக்கையில்லாது திடீரென்று ஸ்வர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டு நழுவுவர். இவர்கள் ஆக்நேய சரீரம் இவர்கள் முழு உணர்வுடனிருக்கையிலேயே பலவாறாகச் சிதறி அணுவணுவாகப் பிரிந்து போய்க்கொண்டே வரும். இவர்கள் கீழே இறங்கிக்கொண்டேவருகையில், இவர்கள் ஆகாயம், வாயுமண்டலம், வைதிக ஸத்கர்மாக்கள் நடைபெறுவதால் ஏற்படும் ஹோமப்புகைகளைப்பற்றிஏற்படும் மழைத்துளிகளையே அடைந்து ஆக்நேய சரீர ஸம்பந்தம் விட்டு வைதிகவிஷயங்களில் உணர்வுடன் கூடிய பிடிப்புள்ளவர்கள் குடும்பத்தில் வந்து பிறப்பர். இவர்கள் ஸ்வர்க்கத்திலிருந்து விழுங்கால் ஏற்படும் துக்கம் நரகதுக்கத்தையும்விட அதிகமாக இருக்கும் என்று கௌடபாதாசாரியாள் தமது ஸ்வராஜ்யஸித்தியில் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். நல்ல ஸுக மத்தியத்தில் திடீரென்று உணர்வு மயக்கமின்றி இந்த சரீரமாற்றம் ஏற்படுவதே இந்தத் துயரமிகுதிக்கு முக்யகாரணம். யயாதி ஸ்வர்க்கத்திலிருந்து நழுவித், தனது பேரப்பிள்ளைகள் செய்த யாகத்தில் உண்டான ஹோமப்புகையில் ஸம்பந்தப்பட்டு நின்றதுமே இதற்குத் தகுந்த உதாரணம். இக்கலிபோன்றகொடியகாலங்களில்வைதிக கர்மாநுஷ்டானச் சிதைவு ஏற்பட்டு விடுமாயின், ஸ்வர்க்க ஜீவர்கள் நிராதாரமாக மழைத்துளிகளிலேயே இருந்து வைதிக கர்மம் மிகுதியாகும் கிருதயுகத்தைத் தான் எதிர்பார்த்திருக்க வேண்டும். இதனால் தான் ஒவ்வொரு கிருதயுகத்திலும் புண்யவான்கள் இவ்வுலகில் அதிகமாக வந்து பிறப்பர். இந்த ஸ்வர்க்க ஜீவர்கள் புண்ய பலன் முடிவில் அதிகக் கஷ்டப்படுவதால், தாம் அனுபவித்த விஷயம் வரையில் துச்ச புத்தியும் வைராக்யமும் உண்டாக இவர்கள் அவைகட்கு மேல்பட்ட ஸுகத்தை

அடைய முயலவேண்டும். என்ற எண்ணத்துடனேயே வந்து பிறப்பர். ஆகவே ஒரு தரம் ஸ்வர்க்கம்போய் மறுபிறப்படைந்தால் வைராக்கியம் சற்றுத் திடப்படும். இப்படி அடிக்கடி ஸ்வர்கம்போய்த் திரும்புபவர்கள் மனம்சுத்தமாக முறையே மூன்று வித வைராக்யமும் குடிகொண்டுவந்து நான்காவதும் மோக்ஷஸாதனமுமான வசீகார ஸம்ஞான வைராக்யம் தலை தூக்கத் தொடங்கி, மோக்ஷம் கொண்டுசேர்க்கத் தொடங்கிவிடும். இந்தத் தேவலோகப் போக்குவரவு, அது வைராக்கிய முதிர்ச்சிவழி மோக்ஷம் சேர்ப்பிக்கும்விதம், இவைகளைப் பகவான் கீதை III-ம் அத்யாயம் 11-ம் ச்லோகத்தில்,

பன்னியவிவ் வேள்விகளால் பாலிக்கப் பண்ணவரை, அன்னவரும் பாலிப்பர் ஆருளால்—இன்னவிதம், உற்றொருவர் தம்மை ஒருவருறப்பாலித்துப் பெற்றிடுவீர் மேலாகும் பேறு.

என்று கூறி ஸத்கர்மாக்கள் தேவலோகத்தில் ஸத்துக்கள் குடியேறி செழிக்கச் செய்வதற்கும், அங்கிருந்து புண்ய பலன் முடிந்த ஸத்துக்கள் வந்திறங்கி இங்கு மறு பிறப்படைந்து இவ்வுலகம் செழிப்பதற்கும் காரணம் என்பதை விளக்கியிருக்கிறார். இப்படி வந்து பிறக்கும் ஜீவர்களுக்கு ஏற்படும் தடை அக்னியைச் சூழ்ந்திருக்கும் புகைபோல, அக்னி மூண்டெறியச் சிதறி விடுவதுபோல, விவேக பலத்தால் மாத்திரமே சிதறக்கூடியது. இவர்கள் சற்று ஜடபரதரைப்போல ஏமாந்தால் தாழ்ந்த ஜன்மம் அடையவும் ஏற்படும். ஆனால் உடனே விவேக பலத்தால் இவர், ஜடபரதரைப்போல மானிடப் பிறவிக்கே வந்து விடுவர். இவ்வுலகப் பிறவியில் ஏற்படக்கூடிய தடைகள் பரிபாகத்திற்கு ஏற்ப மூன்றுவிதமாக இருக்கும் என்பதை பகவான் கீதை III-ம் அத்யாயம் 38-ம் ச்லோகத்தில்,

தூமத்தால் தீயும் துகளால் தர்ப்பணமும்
சேமக் கருப்பையாலே சிசுவும்—மாமை
அறப்பொதியப்பட்டதுபோல்ஆசையால் ஞானம்
உறப்பொதியப் பட்டிடுமென்றோர்.

என்று பகுத்துக் காட்டியிருக்கிறார்.

5. ப்ரஹ்மலோக ஜீவர்கள்:—உத்க்ராந்தி விவரத்தைப்பற்றிக் கூறியவிடத்து, இவர்களை ராகிஸத்துக்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ப்ரஹ்ம லோகானுபவம் முடிந்த பின்னர், வைதிக நிஷ்காம்ய ஆசையான ஞானப்யாஸத்திற்குவிஷயானுகூலம் வேண்டும் என்ற இவர்கள் ஆவலுக்கேற்பத் தனவந்த மஹான்களான கிருஹஸ்தர்கள் வீட்டில் பிறப்பர். இதையே பகவான் கீதை VI-ம் அத்யாயம் 41-ம் ச்லோகத்தில்:—

புண்ணியர்கள் சேரும் புவனங்களைப் பொருந்தி,
எண்ணரிய காலமவண் இன்புற்று—மண்ணிடைப்
பின், நல்லொழுக்கமுள்ள நவைதீர் செழுங்குலத்
தில், சொல்லுமவன் தோன்றும் துணி.

என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.

வேறு ஒருவகை ஸத்துக்களும் உண்டு. இவர்களுக்கு ரோகி ஸத்துக்கள் என்று பெயர். இவர்களுக்கு வைராக்கியம் அதிகமாயினும் பூர்வ கர்மபலத்தால் ஓயா நோயால் வருந்தும்படியாக இருந்து முத்திபெற நோயில்லா வாழ்விருந்தால் போதும் என்ற சிறுபற்றும் அவரது பெறும் ஈச்வரப்பற்றோடு கலந்திருக்கும். இவர்கள் லோகாந்தர கதியில்லாதே சிறந்து யோகிகள் குலத்தில் மறுபிறப்படைவர். அங்கு தம் தந்தையையே குருவாக அடைந்து அந்த ஜன்மத்திலேயே முக்திபெறுவர். இவர்கள் மறுபிறப்படையும் விதத்தைப் பகவான் கீதை VI-ம் அத்தியாயம் 42-ம் ச்லோகத்தில்,

அல்லதுயர் ஞானம் அடைதருமா யோக்கியர்தம்,
மல்லல்பெருங்குலத்தே வந்துதிக்கும்—தொல்லுல
கில், இப்பரிசின் ஓர் பிறவி எய்தலரிதென்றும் என,
மற்பொரு தோளாய்நீ மதி.

என்று விளக்கியிருக்கிறார்.

இவ்வாறு லோகாந்தரம் அல்லது பூர்வ ஜன்மம் இவைகளிலிருந்து மறுபிறப்படைய இங்கு திரும்பிவரும் ஜீவர்கள் மறுபிறப்படையும் விவர விஷயங்களைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

கிச்சனர் பிரபு

LORD KITCHENER

"ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு."

என்றாற்போல யாரொருவர் தமது நிலையைச் செம்மையாகக் காத்து விளங்குகின்றனரோ, அவர்தாமே பெருமை அடைவர். இதற்கு நமது சேனா மந்திரியாக விருந்த கிச்சனர் பிரபுவே திருஷ்டாந்தம். இவர் ஆங்கில ஹியுகினட் தாய் தந்தையர்க்குப் பிறந்தவர். ஐயர்லாந்து தீவில் பாலி. லாங் போர்ட் எனும் ஊரில் 1850௵ ஜூன்௴ 20௳ பிறந்தவர். அவரது பால்யப் பருவம், ஐயர்லாந்திலும் ஸ்விட்ஸர்லாண்ட் நாட்டிலும் செலவிடப் பட்டது. அம்மனோ ரம்மியமான பிராந்தியங்கள் அவரது மனதைச் செம்மையிற் பாய்ந்து வீரப்பிரபாவத்தி லன்புகொள்ளுமாறு செய்தன என்பதற்குச் சந்தேஹமே கிடையாது. 1868௵ வுல்விச் நகரிலுள்ள ராஜாங்க ராணுவ கலாசங்கத்தில் சேர்க்கப்பட்டு, 1871௵ ராயல் என்ஜினியராக வேலைபெற்றார். இதற்கிடையே அவர் பிரான்ஸ் நாட்டில் நடந்துகொண்டிருந்த பெரும் யுத்தத்தில் வேலையிலமர்ந்து வியாதிமேலிட்த் தம்மூரையடைந்தார். இதன்பின் தான் அவர் ராயல் என்ஜினியர் ஆனது. இவ்வாறானதும் அவர் முதலில் ஸைப்ரஸ், பாலெஸ்டின் இவற்றின் ஸர்வே வேலையில் கவனஞ் செலுத்தினர். 1877-முதல் சில வருஷம் அவர் தேல்-எல்-கபீர்மீது படையெடுத்தபோது வுவஸ்லியின்கீழ் வேலைசெய்தார்.

1883௵ அவர் சேனையில் காப்டன் பதவி பெற்று, அக்காலத்துச் சீர்திருத்தப்பட்டுக் கொண்டிருந்த இஜிப்ட் சேனையில் சேர்க்கப் பெற்றார். இவ்விடத்தில் அவர் காட்டிய ஸமயோசிதமான புத்தி நன்கு மதிக்கப்பட்டது. இவ்விடமே அவரது புத்தி பரவுவதற்கு ஆதாரமாக இருந்தது. கார்ட்டும்மேல் படையெடுத்த கார்டன் கஷ்டதசையிலிருந்தபோது, அவர்க்குதவியாக அனுப்பப்பட்டார்; ஆனால் ஸமயத்திலவரைக் காப்பாற்றப் போகமுடியாது போயிற்று. சேங்கடல் லிட்டோரலுக்குக் கவர்னர் ஜெனரலாகவும், ஸுஆகின் நாட்டுப் படைத் தலைவராகவும் அவர் 1886-ம்௵ நியமிக்கப்பட்டனர். மாதி அரசனுடைய நாட்டுக்குக் கிழக்கி லிருந்ததால் அவனுக்கும் அவன் பின் அரசுபெற்றவர்க்குமிவர் பெரும் பகையாகவும், அவன் நாட்டிற்குத் தீராத் தொல்லைக் கிடமாகவுமே இருந்தார். 1888௵ ஹான்டப் என்னுமிடத்தில்நடந்த சண்டையில் இவர் படைத்தலைமை பூண்டு நேரில் சண்டைசெய்து காயமடைந்தனர். அவ்வருஷத்திலேயே, காமாஜியா, டோஸ்கி என்னுமிடங்களில் நடந்த சண்டைகளிலும் சேனைத் தலைமைபூண்டு அவர் காட்டிய மிக்க விரப்ரதாபம், ஸீ. பீ. என்னும் பட்டத்தால் கௌரவிக்கப்பட்டது. இப்பொழுதுதான், அவர் காலீபாவின் மிகச் சிறந்த சேனாபதியான உஸ்மான் டிக்னா என்பவரது சேனையை முறியடித்துச் சின்னாபின்னப் படுத்தியது. 1892-ம்௵ இஜிப்ட் தேசத்துச் சேனையின் ஸர்தாராக நியமனஞ்செய்யப் பெற்றார். அதுமுதல், மூன்று வருஷங்கள்

அவரது கவனம் அந்நாட்டுச் சேனையைச் சீர்திருத்துவதில் செலுத்தப்பட்டது. கலிபாவின் பலத்தை முறியடித்து நாசஞ் செய்யவேண்டிய சூழ்ச்சியை எல்லாம் எண்ணியே வேலைசெய்துவந்து, 1896௵ தனது அபாரபுத்தியை முன்னிட்டு, அதன்மேல் படையெடுத்தார். வாடி ஹாபாமேல் படையெடுத்து, ஸௌடான் நாட்டைக் கவர்ந்து, ஆபூ-ஆஹ்மட் என்னுமிடத்தில் ஜயம் பெற்ற பிறகுதான், மாதியின் பலத்தை நாசஞ் செய்யவேண்டுமென்றுழைத்த கிச்சனரது எண்ணம் பிறரால் அறிய நேர்ந்தது. அவருடைய வினைசெயல்வகையின் ரஹஸ்யத்தின் தன்மைக்கு இது பெரும் உதாரணமாகும். இதற்குள் சைன்யத்தில் அவர் மேஜர் ஜெனரலாக்கப்பெற்று, கே.ஸீ.பீ. என்னும் பட்டத்தால் அலங்கரிக்கப்பட்டனர். 1898-௵ செப்டம்பர்௴ 2௳ உம்டர்மான் என்னுமிடத்தில் ஆங்கில இஜிப்டிய சேனையை நடத்தி மாதியின் பலத்தை முற்றும் நாசஞ்செய்தனர். இப்பெருஞ்செயலுக்காகப் "பியர்" என்னும் பிரபுத்வமும், ஜீ. ஸீ. பீ. என்னுங் கௌரதாப்பட்டமும், கார்ட்டூம் பிரபுவெனும் பெயரும், 4,50,000 ரூ. பரிசும் இவர்க்கு அளிக்கப்பட்டது. இவரது பெருமையும் புகழும் விருத்தியாகிக் கொண்டே வந்து, அவரை யாவரு மறியு நிலையில் வைத்துவிட்டது.

1899-ம்௵ போயர்கள் சண்டைசெய்த காலத்தில் ராணுவத்தலைவராகிய ராபர்ட்ஸ் பிரபுவின் ராணுவஸபையின் பிரதானியாக இருந்து, அவர் டிரான்ஸ்வால், ஆரஞ்ச் நதி சுயநாடு, இவற்றை ஜயித்து ஆங்கில ராஜாங்கத்தில் கூட்டியதும்,. அந்நாடுகளில் அமைதி ஏற்படுத்த கிச்சனரே தலைவராக ஏற்படுத்தப்பட்டனர். தென் ஆப்பிரிக்காவின் சேனாதிபதித் தலைவராக 1900௵ ஏற்படுத்தப்பட்டதும், அவர்க்கு வைகௌண்ட் பட்டமளிக்கப்பட்டது; ஆர்டர்-ஆப்-மெரிட் என்னும் கௌரதாப்பட்டியிலும் அவர் பெயர் சேர்க்கப்பட்டது.

தென் ஆப்பிரிகா யுத்தத்திற்குப் பிறகு, கிச்சனர் இந்தியநாட்டுப் பிரதான சேனாதிபதியாக 1902-௵ நியமிக்கப்பட்டு, அடங்காவன்மையுடன் கர்ஸன் பிரபு இந்நாட்டில் ராஜப்பிரதிநிதியாகவிருந்தபொழுது, அனேக ராணுவ ஸம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்தனர். இந்தியாவின் காவல்களைச் செம்மையாக அரண்படுத்திச், சேனையானது காவற்கேற்ப நிற்க ஏற்பாடுகள் செய்தனர். இந்திய சேனையானது நான்கு சைன்யங்களுடன் விளங்கியது போதாதெனத் தீர்மானித்து, ஒன்பது சைன்யங்கள் பெற்று விளங்குமாறு செய்து, இந்தியாவில் வெளியிலிருந்து அபாயம் ஏற்படக்கூடிய இடங்களில் பிரபலமான அரண்களை ஏற்படுத்தினர். இவ்வாறு சைன்யங்களை அதிகப்படுத்தி, அரண்களையும் பலப்படுத்தி, அதற்கேற்ப, அச்சைன்யங்களுக்கு வேண்டிய உணவையும் அவற்றைச் சேர்ப்பிக்கும் சாதனங்களை ஏற்படுத்துவதிலேயும், அவர் கவனத்தைச் செலுத்தினார். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டின் ஆலோசனை சபையின் ராணுவ அங்கத்தினரான ஸர் எட்வின் காலின் என்பவரே இதற்கு முதலில் வேண்டிய ஏற்பாடுகள் எல்லாஞ் செய்திருந்தனர். ஆனால் கிச்சனர் செய்த ஏற்பாட்டின்படி சேனையைப்பற்றிய செலவுகள் குறையும்படி செய்ததல்லாமல், உபய அதிகாரவழி ரத்து செய்யப்பட்டது. இந்தியராணுவ கலாசாலை ஏற்படுத்தியதற் கவரே ஆதாரபூதர்.

தமக்கும் கர்ஸன் பிரபுவுக்கும் மனவொற்றுமை பொருந்தாமையால் அவர் 1909-௵ இந்திய சேனாதிபதித் தலைமை வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டார். இந்தியாவை விட்டுப் போகும்பொழுது ஜப்பான் தீவிற்குச் சென்று அங்கு சிலகாலம் யாத்திரை செய்தார். இதற்குள் இவர் மத்தியதரைக் கடல்மீது உலாவும் கப்பல்படைத் தலைமை பெற்றார். அக்காலத்தும், தமது அறிவின் முயற்சியாலவர் குடியேற்றநாட்டின் படைகளைச் செம்மைப்படுத்தினர். 1911-௵ கிச்சனர் இஜிப்ட் தேசத்தில் ஆங்கிலப் பிரதிகார கார்யஸ்தராக நியமிக்கப்பட்டு, நடத்திவந்த வியவஹாரங்கள் முடிவுக்குவரும் ஸமயத்தில், தற்காலம் நடந்துவரும் அகோரஐரோப்பிய மஹாயுத்தம் ஆரம்பமாக ஆங்கிலராணுவப் பிரதான மந்திரியாக அவர் 1914-௵ ஆகஸ்ட் மாதம் 4௳ அழைக்கப்பட்டனர்,

அவர் தமது முற்றுணர்வும் முந்தியுதவ வேலைசெய்து,150,000 காலாட்கள கொண்ட படையை வெகு சீக்கிரத்தில் 5,000,000 காலாட்படையாகச் செய்து, அவற்றின் உணவு விஷயங்களைக் கவனித்து, அவை போதல் வருதலும் தெரியாதிருக்கும்படி தீர்ந்த ஏற்பாடுகள் செய்து, நாட்டில் மிக்க குறைவாகி யிருந்த ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும், போர்ச் சாமான்களையும் ஏராளமாகச் செய்யும்படியாகவும் ஏற்பாடு செய்தனர்.

அவர் ஆங்கிலராணுவ மந்திரி ஸ்தானத்தைப்பெற்ற நாள் முதல் ஓயாமல் ஜர்மானியப் பெரும் பகையை யொழிக்கவேண்டி, ஆளும், படையும், உணவுஞ் சேகரிக்கப் பகிரதப் பிரயத்தினஞ் செய்த தெவர்க்குத் தெரியாது? அவர்தானே, இப்பெரும் யுத்தம் மூன்று வருஷம் வரை முடிவுபெற முடியாதெனச் சொல்லி, வெகுசீக்கிரத்தில் முடிந்துவிடும் என்று ஆலோசனையின்றிக் கூறிய தவறான வார்த்தையைத் தடுத்தவர்! மனிதன் என்றிருந்தால் குறையென்று இல்லாதிருக்க முடியுமா? ஸர் ஜான் பிரேஞ்சுக்குப் படையும் ஆளும் அவர் கேட்டவண்ணம் கொடாது, கிச்சனர் நடந்தது, அறிவுடையோர் தக்கதென்று புகழமாட்டார் என்பது நிச்சயம். ஆனாலும் கிச்சனர் செய்த மற்ற காரியங்களின் முன், இது ஸூரியனைக் கண்ட பனிபோல் மறையும்.

ரஷ்யா நாட்டிற்கு ராணுவ விஷயமாகப் போய்க்கொண்டிருக்கும் போது, அவர் சென்று கொண்டிருந்த "ஹாம்ப்ஷயர்" என்னும் ராணுவக் கப்பல், இவ்வருஷம் மேமீ 31உ ஒரு வெடிக்கும் சுரங்கத்தின் மேல் தாக்கிச் சின்னாபின்னமாகத், தமது யோசனை யாட்களோடு கிச்சனர் பிரபு, கடல் பிரவாஹத்தில், நம்மை மீண்டு வந்து காணாதபடி மயங்கியது, ஆங்கில நாட்டிற்கோர் துரதிருஷ்டமே! ஆயினும் நாம் கவலைப் படுவதற்குச் சிறிதுங் காரணமில்லை. கிச்சனர் மரித்ததினால் நமது யுத்த விஷயங்களுக்கோர் குறையும் வாராது. காலத்திற்கேற்ப மனிதர்கள் முன்னிலைக்கு வருவது ஸஹஜம்.

நிற்க. கிச்சனர் வீட்டு வாழ்க்கையிலும் உத்தமர்; தமது நடத்தையை நிறுத்து ஸத்யத்திற்கேற்ப உழைத்தவர்; வெகு சீலர். மற்றுக் காரிய பாகத்திலோ தமது புத்தியைத் திராசிலிட்டு இடையிட்டு நடப்பவர். வீரத்திலும், பிரதாபத்திலும், அவற்றிற்கேற்ப ஸத்யத்திலும், தர்மத்திலும், பொறுமையிலும் அவர் மனம் நிறைந்து விளங்கியது. அவர் போன்றவர் உலகத்திற் பிறப்பது ஆயிரத்தில் ஒன்றாகும். அவரைப் பற்றி ஸாலிஸ்பரி ப்ரபு போயர் சண்டை காலத்தில் கூறிய மொழிகளை இச்சண்டைக்குமேற்ப நாம் கூறுவ திழுக்காகாது. அவை வருமாறு:—

"ஜயத்திலுயர்ந்த வீரர்களெவருங் காட்டக்கூடிய வீரப்பிரதாபமும் தேச பக்தியும் ஆகிய இவற்றினால் அலங்கரிக்கப் படுவதல்லாமல், காரியசித்தியைத் தெளிந்து அளவிட மதித்துச் செய்யும் அளவை ஞானமும், வியூகரஸஞானமும், இராஜதர்ம சமர்த்த ஞானமும் ஒருங்குகூடி ஸாதாரணமான வீரனுடைய பங்கிற்கேற்படுவதைக் காட்டிலும் அதிகமாகத் திகழ்ந்துவிளங்கும் அத்யத்புதமாக மனதைக் கவருமாச்சரிய விக்ரஹமாக இவர் என்று மிருப்பர். அவர் தமது கார்யங்களைச் செய்ய அத்யாவச்யகமாக எவ்வளவு குறைந்தகாலம்வேண்டுமோ அவ்வளவே அளவு காலம் எடுத்துக் கொள்வர்; அக்காரியங்களுக்கு எவ்வளவு வேலை செய்யவேண்டுமோ அவ்வளவே செய்வர்; ஷை கார்யங்களைப்பற்றிச் செலவிடுவதில் எவ்வளவு காலந்தேவையோ அவ்வளவும், அக்கார்யத்துக்கேற்ப எவ்வளவு ஆதரவும் ராணுவபலமும் வேண்டுமோ அவ்வளவே செலவிடுவர்; அவ்விஷயங்களில் ஜயமும், சாஸ்திர பரிசீலனக் கணக்குகளில் தீர்மானங்கள் சிறிதும் தவறாமல் எவ்வாறு கரதலாமலகமாக வருமோ, அவ்வாறே நிச்சயமாகக் கிடைக்கும்."

இம்மொழிகள் சிறிதும் உத்ப்ரேக்ஷாலங்காரத்திற் குட்பட்டனவல்ல. தமது வாழ்க்கையையும் காரியங்களையும்அவ்வளவு அளவையி லடங்கும்படியாக நடந்த அவரது வாழ்க்கையை நாம் பின்பற்றி நடப்பது இழுக்கென்று கூற யார் நா எழும்?

சென்ட்ரல் கவர்ன்மெண்டும் லோகல் கவர்ன்மெண்டும்

CENTRAL AND LOCAL GOVERNMENTS

சில ஜனங்களுடைய வாஸஸ்தானமாய் இராஜாங்கத்திற்கு இருப்பிடமாக விருக்கும் பூமியின் பாகங்களை, நாம் நாடென்றும் தேசமென்றும் சொல்லுகிறோம். ஆகவே ஒவ்வொரு நாட்டிலும் ஜனங்கள் தங்கள் தேசாசாரமுறை தவறாமலும், சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்தும் வருகிறார்கள். அப்படியிருக்கும் பிரஜைகள் சந்தோஷமாகவும், மன அமைதியாயும் இருக்கக் காரணம் அரசாட்சியால் செய்யப்பட்டிருக்கும் நன்மையான விதிகளே. இராஜ்யாதிகாரமுள்ளவரே இவ்விதமான விதிகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியாதாகையாலும், அவ்விதமான வேலைகளை அவரே மேற்கொண்டுசெய்தால் அவருக்கு ஷை விஷயங்களில் பூராகவனம் செலுத்த முடியாமற் போய்விடுமாகையாலும், இராஜ்ய பரிபாலன அலுவல்களை அதிகாரிகள் சரிவர நடத்தும்பொருட்டுப், பல இலாகாக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கவர்ன்மெண்டிலும் கீழ்வரும் இலாகாக்களை நாம் காணலாம்.

1. அந்நிய நாடுகளைப்பற்றியும், அந்தந்தத் தேசத்தில் நடக்கும் அரசாட்சியைப்பற்றியும் விசாரணை செய்யும் இலாகா—(Home and Foreign Department.)
2. தேசத்தை எதிரிகளினின்றும் காத்துக் கொள்வதற்கு வேண்டிய விஷயங்களைக் கவனிக்கும் இலாகா—(Army and Navy Department.)
3. விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவ்விஷயங்களைக் கவனிப்பதற்கு ஏற்பட்டிருக்கும் இலாகா—(Department of Agriculture, Commerce and Industry.)
4. அரசிறை முதலாகிய பண வருமானம், அதைச் சேர்ந்த விஷயங்களை விசாரணை செய்யும் இலாகா-(Finance Department)

மேற்கூறிய பிரிவுகளில் முக்கியமான பிரிவுகள் ஒவ்வொரு தேசத்திலும், வித்தியாசப்படலாம். அப்படி வித்தியாசங்கள் இருந்தபோதிலும், மொத்தமாகப் பார்க்குங்கால் அவை வித்தியாசங்களாகத் தோன்றமாட்டா. இம்மாதிரிப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு அதிகாரி அதாவது மந்திரி ஏற்படுத்தப்பட்டு ஷை மந்திரியாரால் அவருக்குக் கீழிருக்கும் இலாகாவின் வேலையானது நடந்தேறிவருகிறது. அப்படி நியமனஞ்செய்யப்பட்ட ஒவ்வொரு மந்திரிக்கும், ஒவ்வொரு இலாகாவைக் கொடுத்து, அவரவர் சம்பந்தப்பட்ட பிரிவின் விஷயங்களைச் சரிவர நடத்த, அவர்களில் ஒவ்வொருவருக்கும் வேண்டிய சிப்பந்திகளையும், அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார்கள். இம்மந்திரிமார்கள் உதவியைக் கொண்டு அரசன் செய்யும் அரசாட்சியைத்தான் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் (Central Government) என்று கூறுவது. இம்மந்திரிமார்களால்நியமனஞ்செய்யப்பட்டும், இவர்களுடைய கட்டளைப்படி அரசாட்சி செய்துவரும் அதிகாரிகள் லோகல் கவர்ன்மெண்ட் (Local Government)டைச்சேர்ந்தவர்கள். இக் கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அந்தந்தப் பிரதேசத்திற்கு வேண்டிய கல்வி, சரீர சௌக்கியத்தின் பொருட்டுச் செய்யவேண்டிய ஏற்பாடுகள் ஆகிய இத்தகைய விஷயங்களே.

ஆனால் பல இராஜ்யங்கள் சேர்ந்து, தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைப்படி செய்துவரும் பெடரல் அரசாட்சியில் (Federal Government) அரசாட்சியானது.

1. பெடரல் கவர்ன்மெண்ட்
2. மாகாண கவர்ன்மெண்ட்
3. லோகல் கவர்ன்மெண்ட்

ஆக இம்மூன்று கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டு வருகிறது.

சில ஐரோப்பிய ராஜ்யங்களின் அரசாட்சிகள்

இதுவரையில் துரைத்தனத்தைப் பற்றிப், பொதுவான சில விஷயங்களைச் சொல்லி முடித்தோம். இனி இப்பிரிவில் குறிப்பான சில தேசங்களை எடுத்துக் கொண்டு, அவற்றின் அரசாட்சி எவ்வகைத்து என்பதைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

பிரிட்டிஷ் ராஜ்யம்

முதல் முதல் நம்மை அரசாட்சி செய்து வரும் பிரிட்டிஷ் இராஜ்யத்தில் எம்மாதிரி துரைத்தனம் நடந்துவருகிறதென்ற விஷயம் சொல்லப்படும்.

பிரிட்டிஷ் இராஜ்யம் என்பது, தன்னுள் கீழ்வரும் நாடுகளை அடக்கிக் கொண்டுள்ளது. அவையாவன:—

(a) இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு, அயர்லாண்டு ஆக இம் மூன்றும் சேர்ந்த நாடாகிய ஐக்கிய நாடு (The United Kingdom);

(b) இந்நாட்டார் குடியேறின நாடுகள்;

(c) இந்நாட்டின் சம்ரக்ஷணைக் குள்ளிருக்கும் சிலதேசங்கள். உதாரணம்-இந்தியா.

இப்பொழுது எடுத்துச் சொல்லும் விஷயம் இங்கிலாந்தில் நடக்கிற துரைத்தனம். இதைமட்டும் இப்பொழுது சிறிது விஸ்தாரமாக எழுதி, பிறகு இதிலடங்கிய கனடா (Canada), ஆஸ்த்ரேலியா (Australia), தேன் ஆப்ரிகா (South Africa), இந்தியா (India) இவைகளின் அரசாட்சிகளை எடுத்துக்கொள்ளுவோம்.

இங்கிலாந்து (England)

முதல் முதல் இதை எடுத்துக் கொள்வதற்கு இரண்டு காரணங்களுள்ளன:—

1. தற்காலத்தில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், இன்னும் வேறு சில நாடுகளிலும், இங்கிலாந்தின் அரசாட்சி மாதிரியே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
2. நம் ஜன்ம பூமியாகிய இவ்விந்தியாவானது ஷை பிரிட்டிஷ் இராஜாங்கத்திற்குக் கீழ் வந்து, அதனால் நாம் பல விதமான நன்மைகளை அடைந்திருக்கிறபடியால் அவ்விதச்சிறந்த இராஜ்யத்தின் துரைத்தனம் எவ்வாறு நடத்தப்பட்டுவருகிற தென்பதை நம்மில் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியதவசியம்.

இந்நாடானது ‘லிமிடெட் மானார்க்கி’. அதாவது, இந்நாட்டில் செங்கோல் செலுத்திவரும் மன்னன் தன்னிஷ்டப்படி ஒன்றும் செய்யாமல் குடிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஜனப்பிரதிநிதிச் சபை (Parliament) மெம்பர்கள் தீர்மானப்படிதான் ராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டும்.

பூமி

THE EARTH

(400-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆறுமாதங்களுக் கொருதரம் இந்நடவடிக்கை மாறுகிறது. அதாவது வட துருவம் ஆறுமாதங்களுக்குச் சூர்யனுக்கே நேராகவும், தென் துருவம் ஆறுமாதங்களுக்குச் சூர்யனுக்கு நேராகவுமிருக்கும். தென் துருவம் சூர்யனுக்கு நேராயிருக்கும்போது, நாம் முன் பார்த்த விஷயங்களுக்கு நேர் விரோதமான விஷயங்கள் சம்பவிக்கின்றன. நிரட்சரரேகைக்குத் தென்பாகத்திலுள்ள இடங்களுக்கெல்லாம் தினத்தின் பகற்பொழுது அதிகமாகவும், இரவு குறைச்சலாகவும் இருக்கும். முன்போலவே, தென் துருவத்தில் தினம் முழுவதும் பகலாகவும், வட துருவத்தில் தினம் முழுவதும் இரவாகவும் இருக்கும். அதாவது, இத்துருவங்களில் ஆறுமாதம் பகல், ஆறுமாதம் இரவு. இதைப்பற்றித் தெரிந்துகொள்ள நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் இது உண்மை.

நாம் நிரட்சரரேகைக்கு வடக்கில், வட துருவத்திலிருந்து தூரத்திலும், ரேகைக்குச் சமீபத்திலும் இருக்கிறோம். சென்னைப் பட்டணம் ரேகையிலிருந்து சுமார் 13 டிகிரி வடக்கிலிருக்கிறது. குளிர்காலங்களில் பகல் கொஞ்சமாகவும் இரவு அதிகமாவும் இருப்பதை நாம் கவனித்திருக்கிறோம். அப்பொழுது தென் துருவம் சூர்யனுக்கு நேராயிருக்கிறது. டிசம்பர் மாதம் 22-ம் தேதியில், பாக்கி தினங்களைவிட பகற்பொழுது மிகவும் குறைச்சலாகவும், இராப்பொழுது பாக்கி தினங்களைவிட மிகவும் அதிகமாகவும் இருக்கும். ஆனால் ஒவ்வொரு தினத்திலும் பகலும் இரவும் சேர்ந்த காலம் எப்பொழுதும் ஒன்றுதான் என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்தத் தேதியிலிருந்து பகற்பொழுது அதிகரிக்க ஆரம்பிக்கின்றது. அன்று சூர்யனும் நேர்கிழக்கில் உதிக்காமல், கொஞ்சம் தெற்குப் பக்கமாக ஒதுங்கி உதிக்கின்றது. அன்று முதல், சூர்யன் வடக்குத்திசையை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறது. பிறகு ஆறுமாதத்திற்கு வடக்குத்திக்கை நோக்கியே செல்லும். ஆகையால் அன்று முதல் ஆறுமாதங்களுக்கு உத்தராயனம் என்றும்,

உத்தரதிசை அல்லது வடக்கு திசையை நோக்கிச் சூர்யன் போக ஆரம்பிக்கும் தினத்திற்கு உத்தராயன புண்ணிய காலமென்றும், மகரஸங்கராந்தி என்றும் சொல்லுவதுண்டு. ஆனால் இந்த அயனகாலம் ஹிந்துக்களின் கணக்குப்படி டிசம்பர் மாதம் 22-ம் தேதி வருகிறதில்லை. சாதாரணமாக ஜனவரி மாதம் முதல்வாரக் கடைசியில் இந்தப் புண்ணியகாலத்தை நாம் கொண்டாடுகிறோம்.

இந்தத் தினத்திற்குப்பிறகு, பகல்பொழுது அதிகரித்துக்கொண்டே வருகிறது. கடைசியாக மார்ச்சுமாதம் 21-ம் தேதியில் இரவும் பகலும் ஒரே அளவாயிருக்கிறது. அன்றையதினம் சூர்யனும் நேர்கிழக்கில் உதிக்கப் பார்க்கலாம். இத்தினத்திற்கு ‘அரிபதம்’ என்று பெயர். உண்மையில் அன்று சூர்யன் வரும் அல்லது வந்திருப்பதாகக்காணப்படும் இடத்திற்கு ‘அரிபதம்’ என்று சொல்லவேண்டும். இன்றுமுதல் சூர்யன் கொஞ்சம் கொஞ்சமாக வடக்கில் ஒதுங்கி உதிக்கக் காணப்படுகிறது. இதுமுதல் மூன்றுமாதங்களிற்கு பகல் பொழுது அதிகரித்துக் கொண்டே வருகிறது. சூர்யன் சீக்கிரம் உதயமாகி, நேரம் கழித்து அஸ்தமிக்கிறது போல் காணப்படுகிறது.

மறுபடி ஜூன் மாதம் 22-ம் தேதியில் பகல் மற்றைய தினங்களைவிட மிக அதிகமாகவும், இரவு மிகக் குறைச்சலாகவும் இருக்கும். அன்று முதல், பகற்பொழுது குறையவும், இரவு அதிகரிக்கவும் தொடங்குகிறது. வடக்குத் திசையை நோக்கிச் சென்ற சூர்யனும் தெற்குப் பக்கமாகத் திரும்புகின்றது. ஆகையால் அந்தத் தினத்திற்குத் தட்சிணாயன புண்ணியகாலம் என்று பெயர். இத்தினத்தை நாம் ஆடிப் பண்டிகை யென்றும் கொண்டாடுகிறோம். இன்று முதல் ஆறுமாதங்களுக்கு, அதாவது, டிசம்பர் 22-ம் தேதிவரையில் சூர்யன் தெற்கையே நோக்கிச் செல்வதாகக் காணப்படுவதால் இந்த ஆறுமாதங்களுக்கும் தட்சிணாயனம் என்று பெயர்.

கடைசியாகச் செப்டம்பர் மாதம் 23-ம் தேதியில் மறுபடி பகலும் இரவும் ஒரேயளவாயிருக்கிறது. சூர்யனும் நேர்கிழக்கில் உதிக்கிறது. அன்றைய தினத்திற்கு ‘விசுபத தினம்’ என்று பெயர். மறுபடி டிசம்பர் 22-ந்தேதி வரையில் இரவு அதிகரித்துக் கொண்டும், பகல் குறைந்துகொண்டும் வருகிறது. இப்படிச் சூர்யன் நேர்கிழக்கில் உதிக்கும் தினங்களில் மாத்திரம் பகலும் இரவும் சரியாயிருக்கிறது. சூர்யன் தினம் கிழக்குத் திசையில் உதிக்கிறதென்று நாம் சொல்லுவது வழக்கம். ஆனால் ஒரு வருஷத்தில் இரண்டு தினங்கள் மாத்திரமே சூர்யன் நேர்கிழக்கில் உதிக்கிறது; மற்றையதினங்களில் கிழக்கிற்குக் கொஞ்சம் வடக்கேயாவது தெற்கேயாவது ஒதுங்கி உதிக்கிறது. இந்தத்தூரத்தை அளந்தால், கிழக்கிலிருந்து வடக்கிலும் தெற்கிலும், $23\frac{1}{2}$ பாகை அளவு சூர்யன் போவதாகக் காணப்படும்.

இவ்விதமாகவே வருஷாவருஷம் சம்பவிக்கின்றது. பூமி சூர்யனைச் சுற்றிவரும்போது நேர் செங்குத்தாயில்லாமல் கொஞ்சம் சாய்ந்திருப்பதால் நாம் முன் பார்த்தவையெல்லாம் உண்டாகின்றன. இதே காரணத்தால்தான் பல இடங்களின் சீதோஷ்ணஸ்திதியும் மாறுகின்றது. வஸந்தகாலம், கோடைகாலம், அறுப்புக்காலம்அல்லது இலையுதிர்காலம், மாரிகாலம் ஆகிய நான்கு காலங்களும் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு வருஷமும் வருகின்றன. நிரட்சரரேகைக்கு வடக்கிலுள்ள இடங்களுக்குப் பகல் அதிகமாகவும், இராப்பொழுது குறைவாகவும் இருக்கும்போது, அந்த இடங்களில் ஒரு தினமாகிய சுமார் 24 மணி நேரத்தில் சூர்யன் காணப்படும் நேரம் அது காணப்படாமலிருக்கும் நேரத்தைக்காட்டிலும் அதிகம். ஆகையால் சூர்யனிடத்திலிருந்து வரும் உஷ்ணம் அதிகரித்துச் சேர்க்கப்படுகிறது. அதாவது அக்காலத்தில் அவ்விடங்களில் உஷ்ணம் அதிகமாயிருக்கும். அதைத்தான் கோடைகாலம் என்று சொல்லுகிறோம்.

இதேகாலத்தில், பூமியின் மத்திய ரேகையாகிய நிரட்சரரேகைக்குத் தெற்கிலுள்ள ஆஸ்த்ரேலியா முதலிய இடங்களில் இதற்கு நேர்விரோதமா யிருக்கும். அதாவது இராப்பொழுது அதிகமாயிருக்கச் சூர்ய உஷ்ணம் குறைந்திருக்கும்; ஆகையால் இது குளிர்காலம் அல்லது மாரிகாலமாயிருக்கும். இம்மாதிரியே நமக்கு மாரிகாலமாயிருக்கும்

போது தென்பாகத்திலுள்ள இடங்களுக்குக் கோடைகாலமாயிருக்கும். கோடைகாலத்தின் முடிவாகிய விசுபதத்திற்குப் பிறகு வரும் அறுப்புக்காலத்தில் அநேக விளைவு பொருள்களும், கனிவகைகளும் பக்குவமாய் முதிர்கின்றன. இக்காலத்தில் இராப்பொழுதும் பகற்பொழுதும் ஏறக்குறைய, ஒரே அளவாயிருக்கும். அரிபதத்திற்குப் பின் வரும் வஸந்தகாலத்திலும் இராப்பொழுதும் பகற்பொழுதும் ஏறக்குறைய ஒரே அளவாயிருக்கும். இந்த வஸந்தகாலத்தில் தான் மரம் செடிகள் துளிர்விட ஆரம்பிக்கின்றன. இக்காலம் மிக உற்சாகத்தைத் தரக்கூடியதாக அடிக்கடி வர்ணிக்கப்படுகிறது. இந்த நான்கு காலங்களையும் நமது முன்னோர்கள் ஆறு ருதுக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன:—வஸந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது, ஹேமந்தருது, சசிர்ரிது. ஆனால் நாம் இக்காலங்களை நன்றாய் அனுபவித்தறிந்ததில்லை. இவைகளின் வித்தியாசம் நாம் துருவங்களுக்குச் சமீபத்தில் போகப்போக நன்றாகத் தெரியும். நமக்கு அநேகமாய் வருஷமெல்லாம் வெயிற்காலமாகவே தோன்றுகிறது. நமக்கு ஜூன் மாதம் 21-ம் தேதியில் இரவைவிட பகல்நேரம் சுமார் ஒரு மணி அதிகமாயிருக்கிறதை நாம் கவனித்திருக்கிறோம். இம்மாதிரியே, டிசம்பர் 23-ம் தேதி பகலைவிட இரவு சுமார் ஒரு மணி அதிகமாயிருக்கிறது. இந்த இரண்டு தினங்களிலும் நம்மேல்படும் சூர்யஉஷ்ணம் வித்தியாசப்பட்டபோதிலும் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசப்படவில்லை. ஏனென்றால், சூர்ய உஷ்ணம்படும் நேரத்திற்கும் இது இல்லாத நேரத்திற்கும் அதிக வித்தியாசமில்லை. நம்மைப்போல் நிரட்சரரேகைக்குச் சமீபத்திலுள்ளவர்களுக்கெல்லாம் இம்மாதிரியே யிருக்கும். இந்த ரேகையிலிருந்து 32 பாகை வடக்கிலுள்ள அமிர்தஸரஸ்(Amiritsar)என்னும்பட்டணத்தில் இந்த வித்தியாசம் சுமார் இரண்டு மணி நேரத்திற்குமே லிருக்கிறது. இந்த வித்தியாசம் அதிகரிக்க, நான்குவித பருவகாலங்களும் நன்றாய்த்தெரியும். இந்தக் காலங்களின் மாதங்கள் வெவ்வேறு இடங்களுக்குத்தகுந்தாற்போல் கொஞ்சம் கொஞ்சம் மாறும்.

ஒவ்வொருவனும் தன் தன் ஸ்தானத்திலுயர்ந்தவன்

EACH IS GREAT IN HIS OWN PLACE

ஒரு அரசனுக்கு இல்லறம் பெரிதா அல்லது துறவறம் பெரிதா என்ற ஸந்தேகம் மிகுதியாய் உண்டாயிற்று. உலகத்தையும் அதன் இன்பதுன்பங்களையும் பற்றறத் துறந்து, கேவலம் ஸந்யாஸியாக மாறிக் காட்டிற்சென்று, காய்கிழங்கு, சருகு முதலியவற்றையுண்ணும் துறவி உயர்ந்தவனா, அன்றேல் கிருஹஸ்தாச்ரமம்கைக்கொண்டுதன் மனைவி மக்களுடன் வாழ்ந்துவந்து, தன் சுற்றத்தாரையும், தன்னை நோக்கிவரும் அதிதிகளையும் உபசரிப்பவன் உயர்ந்தவனா என்ற ஸம்சயம் தோன்றிற்று. ஆகவே, தன் ஸபையைக்குறித்துவரும் ஒவ்வொரு புத்திமானையும் நோக்கி, "ஸர்வஸங்க பரித்யாகம் செய்யும் ஸந்யாஸி உயர்ந்தவனா, அல்லது கிருஹஸ்த தர்மத்தை யனுஷ்டிப்பவ னுயர்ந்தவனா" என்று கேட்பான். அவர் ஸந்யாஸமே உயர்ந்தது என்று கூறினால், அதை நிரூபிக்கும்படி வேண்டுவான். அதில் அவர் தவறுவரேல், உடனே அவரைக் கல்யாணஞ்செய்துகொண்டு கிருஹஸ்தர்களாகும்படிக் கட்டாயப்படுத்துவான். அன்றேல், இல்லறம் பெரிதென்று கூறுமவரையும் அதை நிரூபிக்கச் செய்வான். அதில் அவர்கள் தவறினாலும் அவர்களையும் கிருஹஸ்தாச்ரமத்தை வழுவுமாறு நிர்ப்பந்திப்பான்.

இஃதிவ்வாறிருப்ப, ஒருநாள் விருத்த ஸந்யாஸியொருவர் அரசனிடம் வரவே அவரையும் மன்னன்வழக்கம்போன்ற அக்கேள்வியைக் கேட்டான். அதற்கு அவர் "அரசனே! இரண்டும் ஒன்றுக்கொன்று துல்யம் தான். அதது தனித்தனி உயர்ந்ததுதான். எதுவும் உயற்சி தாழ்ச்சி யென்பதற்கு, அவ்வவ்வாச்ரமத்தைப் பூண்டவன் அதைப் பரிபாலிப்பதைப் பொறுத்தது" என்று விடையளித்தார். அதற்கு அப்பூபதி, அதை நிரூபிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவே, துறவி, "நான் அப்படியே செய்கிறேன். ஆனால் நீ என்னுடன் நான் போகுமிடங்

களுக்கெல்லாம் வந்து, நான் கூறுவனவற்றையும் செய்யவேண்டும்." என்றார். அரசன் அதற்குச் சம்மதித்தான். உடனே இருவருமாகப் புறப்பட்டு வெகு நாடு நகரங்களையும், காடு, மலை, வனம், வனாந்தரங்களையுங்கடந்து, ஓரிராஜ்யத்தையடைந்தனர். அந்தராஜ்யத்தின் பிரதான நகரில், விசேஷ ஸம்பவம் ஒன்று அன்று நடந்துகொண்டிருந்தது. கீதநாதமும், வாத்ய கோஷமும் நாலாபக்கங்களிலும் ஒலித்துக்கொண்டிருந்தன. நகரத்தில்வீதிக்கு வீதி மகரதோரணங்கள் நடப்பட்டன. முத்துப்பந்தல்களமைத்து, வாழை, கமுகு, பலா முதலியவை தூக்கி, நிறைகுடம் தீபம் முதலிய அஷ்டமங்கலம் ஸ்தாபிக்கப்பட்டன. சித்திர வஸ்திராபரண புஷ்பங்களால் அலங்கரித்துக்கொண்டு, கலவைச் சாந்தணிந்து வெகு ஆநந்த பரவசராய் மாந்தர் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தனர். கரத்திலணிந்த கேடகத்தின் ஒளிவீச, மதக்களிறு போல் வீரர்கள் வெகு கோலாஹலமாய்த் திரிந்தனர். தவிர, தேரின்மீதும், சிவிகையிலும், ஊர்தியிலும், கால்நடையிலுமாய் அநேக மன்னர், மகுடவர்த்தனர், பட்டவர்த்தனர் முதலியோர் அரண்மனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். காரணம் யாதென விசாரிக்கையில் அவ்விராஜ்யத்து அரசனுடைய மகளுக்கு அன்று ஸ்வயம்வரமென்று தெரிந்தது.

ஸ்வயம்வரமென்பது ராஜ கன்னிகைகள் தங்களுக்கேற்ற மணாளனைத் தெரிந்தெடுப்பதற்காக அனுஷ்டிக்கப்பட்ட பிராசீன பகுஸம்மத ஸம்பிரதாயங்களி லொன்று. ஒவ்வொரு மணப்பெண்ணும் தனக்குக் கணவனாய் வரக்கூடியவன் எவ்வாறு இருக்க வேண்டுமென்று ஓர் அபிப்பிராயத்தைப் பெற்றிருப்பாள். சிலர் மெத்தவும் அழகுள்ளவனைத்தான் மணக்க வேண்டுமென்றிருப்பர். சிலர் அழகில்லாவிட்டாலும் கல்வி கேள்விகளை யுடையவனாய் மட்டும் இருந்தாற்போதுமென்று திருப்தியடைவர். பின்னுஞ்சிலர் திரவியவந்தனாயிருக்கவேண்டுமென்று விரும்புவர். மற்றுஞ்சிலர் புயபல பராக்ரமத்திற் சிறந்தவனா யிருக்கவேண்டுமென்று கணிசிப்பர். ஆகவே, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கமுண்டு. ஸ்வயம்வரம் செய்துகொள்ள விரும்பும் அவ்வனிதையை ஆடையாபரணாதிகளால் அலங்கரித்து, ஒரு பல்லக்கிலேற்றி, அவள் ஊர் பேர் முதலியவற்றைக் கூறி, இன்னார் இன்றையதினம் ஸ்வயம்வரம் செய்துகொள்கிறாள் என்று விளம்பரம் செய்யப்படும். உடனே அருகிலுள்ள ராஜ்யத்து மன்னரனைவரும், தங்களுக்குள்ள கடக கேயூர கவசாதிகளை யணிந்துகொண்டு, தங்கள் வீர சௌர்யப் பிரதாபங்களை விருதுகூறிக்கொண்டு கட்டியக்காரர் முன்செல்ல, தாம் அந்த ஸ்வயம்வர மண்டபத்தை யடைவர். அனைவரும் கூடியபிறகு, கன்னிகையை அவள் தோழியர் மண்டபத்துக்கு இட்டுச் சென்று, அங்கு வந்திருக்கும் ஒவ்வொரு அரசன் முன்னும் நிறுத்தி, அவனுடைய குணாதிகளைத் தமக்குத் தெரிந்தவரை எடுத்துக்கூறுவர். அரச குமாரிக்கு விருப்பமில்லாவிடில் அப்புறம் தன்னையழைத்துச் செல்லுமாறு சைகை செய்வாள். அன்றேல் தன் நோக்கத்துக்கேற்ற மணாளன் கிடைக்கின், தன் கையிலுள்ள ஹாரத்தை அவன் கழுத்திற் போடுவாள். பிறகு அவ்விருவருக்கும் விவாகம் நடைபெறும்.

அன்று ஸ்வயம்வரம் செய்துகொள்ளும் பெண்மணி, அப்பொழுது அந்நாட்டில் அவளுக்கிணையில்லை யென்னும்படி அவ்வளவு அழகுபொருந்தியவள். அதன்றி, அவ்வரசனுக்கு அவள் ஒரே ஸந்ததியானதுபற்றி, அவளை மணப்பவன் அரசனுக்குப் பிறகு அந்த இராஜ்யத்தையடையவும் யோக்யனாகிறான். ஆனால் பெண்ணின் நோக்கமோ நிரம்ப அழகுள்ளவனைத்தான் மணக்க வேண்டுமென்பது. பூதலத்து அரசர்க்குள் தன் மனதிற்கிசைந்தவனையும் அவள் கண்டபாடில்லை. இப்படி இவள் ஸ்வயம்வரம்செய்யவாரம்பித்தது இது முதற்றடவையல்ல. இவ்வாறு அநேகந்தடவைஅரசர்கள் வந்து கூடி, ஒரு தடவையாவது அம்மங்கையின் மன நோக்கின்படி மணாளன் கிட்டாமல், அவர்கள் கூடியது வியர்த்தமாய்விட்டது.

ஜோதிர்மயமான நவரத்தினங்களாற் சிங்காரிக்கப்பட்டுள்ள அரியணைமீது உட்கார்ந்த வண்ணம் அரசகுமாரி ஸபைக்கு வந்தாள். அதாவது அவளைச் சேடியர் பல்லக்கிற்றூங்கி

வந்தனர். அருகில் நடந்துவந்த மற்றைச் சேடியருட்சிலர், ஒவ்வொரு அரசனிடமாய் அவளை இட்டுச்சென்று, அன்னவனுடைய வீர, தீர, சூரப்பிரதாபங்களை எடுத்தோதவாரம்பித்தார்கள். அங்கம், வங்கம், களிங்கம், சிம்மளம், நேபாளம் முதலிய ஐம்பத்தாறு தேசத்து மன்னரும் அங்கு கூடியிருந்தனர். ஒருவரிடமாவது அக்கன்னிகையின் நோக்கம் செல்லவேயில்லை. அரசர்களுடைய ஆசையும் நிராசையாய்விட்டது. இந்தத் தடவையும் தாங்கள் கூட்டங்கூடியது வியர்த்தமாய்விடுமோவென அனைவரும் ஐயுற்றனர்.

இஃதிவ்வாறிருப்ப, மறையவர் குழாத்தின் நடுவில், தபஸே உருவெடுத்து வந்தது போலும் உதிக்கும் பாலஸூர்யன் போலும் பிரகாசிக்கும் ஒரு யௌவன ஸந்யாஸியின்மீது அரசகுமாரியின் கண்ணோக்கம் விழுந்தது. தக்ஷணமே அவள் கரத்தையலங்காரஞ் செய்துகொண்டிருந்த பூமாலை அவர் கழுத்தையலங்காரஞ்செய்தது. ஸந்யாஸிக்கு ஹாரம் கழுத்தில் விழுந்ததும், தூக்கிவாரிப் போட்டது போலிருந்தது. உடனே அவருக்குக் கடுஞ்சினம் உண்டாய்விட்டது. கண்டத்தில் விழுந்த மாலையை வெடுக்கென்றெடுத்தெறிந்துவிட்டு “இதென்ன வெட்கக்கேடு! நான் ஸந்யாஸியல்லவா! கலியாணத்தால் எனக்கு யாது பிரயோஜனம்” என்று முகத்தில் எள்ளுங்கொள்ளும் வெடிக்கக் கூறினார். இதுகேட்ட அரசன் இவர் ஏழையாயிருப்பதாற்றான் தனது மகளை மணக்கத் தைரியங் கொள்ளவில்லையென்றெண்ணிக்கொண்டு, அத்துறவியை விளித்து “ஸந்யாஸியே! நீர் ஏழையாயிருக்கிறீரென்று ஐயுறல்வேண்டாம். என் மகளைக்கலியாணஞ் செய்துகொண்டவுடன் என் ராஜ்யத்தில் பாதி உமக்களிக்கப்படும். எனக்குப் பிற்காலம் மிஞ்சிய பாதி ராஜ்யமும் உன்னையே வந்தடைகிறது. ஆகவே நீர் ஏகசக்ராதிபதியாகிவிடுவீர். என் பெண்ணோடு இன்புற்று வாழ்தற்கென்ன ஆலோசனை? வலியவரும் ஸ்ரீதேவியைக் காலாலுதைக்காதேயும்' என வற்புறுத்திக் கூறுநிற்கையில் மன்னன் மகள் மறுபடியும் ஹாரத்தை அவர்கழுத்திற்றரித்தாள். துறவிக்குக் கோபம் பன்மடங்காயிற்று. உடனே அவர் அம்மாலையை மறுபடியும் எடுத்தெறிந்துவிட்டு, “என்ன முட்டாள்தனம் இது? எனக்குக் கல்யாணமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்” என்று கூறிக்கொண்டு, கூட்டத்தைவிட்டு வெளியே சென்றார்.

அரசகுமாரியோ அப்பால ஸந்யாஸி மீது ஆற்றொணாக் காதல் கொண்டவளாய் “அவரையன்றி மற்றெவரையும் நான் அடையேன். அல்லது இறப்பேன்.” என்று கூறிக்கொண்டு, எப்படியாவது அவரைத் திருப்பி யழைத்துவர வேண்டுமென்ற பிடிவாதத்துடனேயே அவரைப் பின்பற்றினாள். நமது விருத்த ஸந்யாஸியும் தன்னுடன் வந்த மன்னனை நோக்க, “அரசனே! நாமும் அவர்களைப் பின்தொடர்வோம்” எனவே இருவருமாக அவர்களைத் தொடர்ந்து சென்றனர். அரசகுமாரியை மணக்கமாட்டேனென்று கூறிவந்த பால ஸந்யாஸியும் வெகு தூரம் நடந்து வந்து, கடைசியில் ஒரு காட்டுக்குள் நுழைந்தார். மன்னன் மகளும், அவரை விடாமலே பின்பற்றிவந்தாள். ஆனால் அப்பால்ய ஸந்யாஸியோ அக்காட்டின் கொடி வழி முழுதும் நன்றாய் அறிந்தவராதலால் ஒரு சிக்கலான குறுக்கு வழியிற்புகுந்து மான்போற்றுள்ளி மறைந்துவிட்டார். அரசகுமாரி அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்குள் அந்திப் பொழுதாயிற்று. அவளுக்குச் செய்வது யாதெனத் தோன்றாமல், ஒரு மரத்தடியிலுட்கார்ந்துகொண்டு தேம்பித் தேம்பியழவாரம்பித்தாள். உடனே நமது விருத்த ஸந்யாஸியும் அரசனும் அவள் முன்பாகச் சென்று, “பெண்மணி! அழாதே உன்னைக் காட்டினின்றும் விடுவித்து உனது தகப்பனார் இராஜ்யத்துக்குச் செல்லும் வழியைக் காண்பிக்கிறோம். நீ உன் பிறந்தகஞ் சென்று, அங்கிருந்துகொண்டு உன் மணாளனைத் தேடுதற்குற்ற முயற்சிகளைச் செய்யலாம். ஆனால் இப்பொழுது அஸ்தமித்துப் போய்விட்டது. இருட்டில் வழி கண்டுபிடிப்பதும் அஸாத்தியம். ஆகவே இதோ ஒரு மரம் தெரிகிறது. அதனடியிற்றங்கிஇரவைக் கழித்தால் பொழுது புலர்ந்தவுடன் புறப்படுச் செல்லலாம்” என்றனர். அந்த வனி

தையும் அதற்கிணங்கவே மூவருமாகச் சென்று மரத்தடியை யடைந்தனர்.

இவர்கள் வந்து தங்கிய மரத்தின் கிளையொன்றில் கூடு கட்டிக்கொண்டு, மூன்று குஞ்சுகளுடன் தன்பேடு ஸஹிதம் ஒரு பக்ஷி வாஸஞ்செய்துகொண்டிருந்தது. இந்தப் பக்ஷியானது தனது மரத்தடியில் மூவர் வந்து தங்கியிருப்பதைக்கண்டு தன் மனைவியாகிய மற்றொரு பக்ஷியை நோக்கி, “என் இன்னுயிர்க் காதலி! நாம் இப்பொழுது என்ன செய்யலாம்? நம்முடைய இல்லத்திற்கு இப்பொழுது மூவர் விருந்தினர் வந்திருக்கின்றனரே! அவர்களை நன்கு வரவேற்று உபசரியாமலிருப்பது நம்போன்ற கிருஹஸ்தர்களுக்கழகோ? காலமோ குளிர் காலம். நம்மிடம் நெருப்புமில்லையே” என்றது. சற்று நேரம் என்னென்னவோ சிந்தித்துவிட்டுப் பிறகு எங்கேயோ பறந்து சென்று, எரிகொள்ளி யொன்றை வாயிற் கௌவிக்கொண்டு, திரும்பிவந்து அவர்கள் முன்னிலையில் அதைப் போட்டது. அதிதிகளும் அருகே கிடைத்த சில சுள்ளிகளைச் சேர்த்து ஒன்றுகூட்டி அதில் அந்த எரிகொள்ளியைப் போட்டு ஜ்வாலை யுண்டாக்கித் தங்கள் குளிரைப் போக்கடித்துக் கொண்டனர். ஒரு துன்பம் விலகவே மற்றொன்று தலைகாட்ட வாரம்பித்தது. அதாவது, பசி அவர்கள் வயிற்றைக் கிண்டவாரம்பித்தது. இரவு பத்து நாழிகைக்குமேல் நடுக்காட்டில் ஆகாரத்துக்கு அவர்கள் யாதுசெய்வார்கள்? ஆகவே ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு வீற்றிருக்கையில், மறுபடியும்அந்த ஆண்பறவையானது தன் பேடை நோக்கி, “என் பிரிய ஸகி! இப்பொழுது நாம் யாது செய்யலாம்? வந்த விருந்தினர்க்கு உணவிட்டு உபசரிப்பதன்றோ கிருஹஸ்தர்களின் இலக்ஷணம்! நம்மிடம்உணவு ஒன்றுமில்லையே! அவர்களும்பசியினால்வாடியிருக்கின்றனரே! ஆயினும் என்னாற் கூடியதை நான் செய்துவிடுகிறேன். என் சரீரத்தை இவர்களுக்கு ஸமர்ப்பித்து விடுகிறேன்” என்று கூறிவிட்டு உடனே அக்னியில் விழுந்திறந்தது. அதிதிகள் அது விழுவதைக்கண்டு தடுக்க முயன்றனரென்றாலும் அது வீழ்ந்த வேகத்தில் இவர்களால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. உடனே அந்தப் பறவையின் மனைவியானது, “இங்கோ மூவர் விருந்தினர் வந்திருக்கின்றனர். அவர்களுக்கு ஒரு பறவையின் உடல் ஆகாரத்துக்கு எப்படிக் காணும்? பர்த்தா ஆரம்பித்த தர்மத்தை நிறைவேற்றவேண்டியது குலமகட்கழகல்லவோ! ஆதலால் அவர்கள் என் சரீரத்தையும் எடுத்துக்கொள்ளட்டும்” என்று கூறிவிட்டுத் தானும் தீயில் வீழ்ந்திறந்தது. நடந்ததைக் கவனத்துடன் பார்த்துக்கொண்டிருந்த அதன் மூன்று குஞ்சுகளும், வந்த விருந்தினர்க்கு இட்ட உணவு இன்னும் பற்றாது என்று அறிந்துகொண்டு “நமது பெற்றோர்கள் அதிதிகளை வழிபாடு செய்யும் விஷயத்தில் தங்களால் இயன்றதைச் செய்து தீர்த்தனர். ஆனால் அது போதாது. பெற்றோர்கள் ஆரம்பித்த தர்மத்தை அனுஸரிப்பதன்றோ ஸத்புத்திரர்களுக்கழகு. ஆகவே நமது சரீரங்களையும் அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்.” என்று மொழிந்துவிட்டு, அவைகளும் நெருப்பில் வீழ்ந்து உயிர் துறந்தன. ஒன்றன் பின்னொன்றாக நேரும் இக்கோரஸம்பவத்தைத் திக்பிரமை கொண்டவர்கள்போல் பார்த்துக்கொண்டிருந்த அம்மூவரும் அப்பக்ஷிகளுக்காகச் சாலவும் வருத்தப்பட்டு, அன்றிரவு ஒன்றையும் உண்ணாமல் பித்துப் பிடித்தவர்போல் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கியவண்ணம் வீற்றிருந்தனர்.

மறுநாள் பொழுதும் புலர்ந்தது. அரசனும் ஸந்யாஸியும் ராஜகன்னிகையின் தகப்பனார் ராஜ்யத்துக்குப் போகும் மார்க்கத்தைக் கண்டுபிடித்து, அவ்வழியே அவளை யனுப்பிவிட்டனர். பிறகு ஸந்யாஸி அரசனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:—

“வேந்தே! ஒவ்வொருவனும் தன்தன் ஸ்தானத்தில் உயர்ந்தவனெனக் கண்டுகொண்டாயா? நீ கிருஹஸ்தாச்ரமத்தைத் தழுவ விரும்பினாயேயானால் இப்பறவைகள் போலிரு. எந்த ஸமயத்திலும் மற்றவரைத் திருப்தி செய்யும்பொருட்டு ஆத்ம பரித்யாகம் செய்யப் பின்னடையாதே. கிருஹஸ்தாச்ரமம் என்னும் அகராதியில் சுயநலம் என்னும் பதமேயில்லை. அன்றி, துறவறம் கைக்கொள்ள விரும்பி

னாயோனால், நாம் நேற்றுக் கண்ட பால ஸந்யாஸி போலிரு. அவருக்கு அழகிய மடந்தையும், அகன்ற ராஜ்யமும், சீருஞ் செல்வமும் திரணமெனத் தோன்றிற்றல்லவா? சுருங்கச் சொல்லுங்கால், கிருஹஸ்தனுயிருக்க வேண்டின், மற்றோர் நன்மைக்காக உன் உயிரையும் பொருட்படுத்தாதே. துறவியாயிருக்க விரும்பின் அழகையாவது, பணத்தையாவது செல்வாக்கையாவது கணிசியாதே! ஸர்வஸங்க பரித்யாகம் செய்துகொள். அவ்வாறு செய்யும் ஒவ்வொருவனும் தன் தன் ஸ்தானத்தில் உயர்ந்தவனே. ஆனால் ஒருவனுக்கு விதித்த தர்மம் மற்றவனுக்குப் பயன்படாது.”

இவ்வுபதேசத்தை மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்த மன்னவனுக்கு ஓர்ஸந்தேக நிகழ்ச்சி யுண்டாயிற்று. உடனே யதீச்வரரை நோக்கி, “பிரபோ! தாங்கள் உபதேசித்த தர்மத்தை இக்கலியுகத்தில் எல்லாக்கிருஹஸ்தர்களும் யதிகளும்ஸரிவர அனுஷ்டிக்கின்றனரா?” என்று வினவினான். அதற்குப் பதில் வரவில்லை. உடனே துறவிநின்றவிடத்தை நிமிர்ந்துநோக்கினான்; அங்கு துறவியைக் காணவில்லை. ஆனால் ஒரு ஜோதிமட்டும்தோன்றி மறைந்தது.

G. ரகுநாதாசாரி.

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம். எல்லாம் முயற்சியின்பயன் தான். முயற்சி திருவினை ஆக்கும். முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும். முடியாத காரியம் ஒன்று மில்லை. காரியங்களைக் கைக்கொண்டால், பின் எண்ணுவோம் என்பது இழுக்கு. பிறரால் செய்ய முடியாத காரியத்தைக் கையெடுத்து முடிப்பதே காரியத்திற்கழகு. தாயுமானவரும், “இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தை வழி, சொல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே” எனவே கூறியுள்ளார். அதனால் வைராக்யத்தைப் பெற்று, மனத்தை அடக்கி நமது தருமத்தை நாம் நடத்துவதே நமது கடனாகும். அவ்வாறு செய்வதற்குச் சலிக்காத மனோநிலையைப் பெறக் கடவுள் நம்மை அனுக்ரஹிப்பாராக!

ஐரோப்பாவும், உளவறிதலும்

EUROPE AND ITS SYSTEMS OF ESPIONAGE

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்.
பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லைபொருள்.

சாஸ்திர ஆராய்ச்சி மேன்மேலும் அதிக விருத்தி யடைந்ததினாலே, பெருத்த ராஜாங்கங்களில் நூதனமாகப் பலவகைப்பட்ட யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஜனங்களின் சௌகரியத்துக்கேற்பப் பல விதத்திலும் கையாளப்பட்டு வந்தன. மோடார் வண்டிகள், டிரெட்நாட் என்னும் பெரிய நீராவிக் கப்பல்கள், சப்மெரின் என்னும் நீரின் கீழ் மூழ்கிச் செல்லுங்கப்பல்கள், ஆகாய விமானங்கள், ஆகாய கப்பல்கள் ஆகிய நூதன சாதனங்கள், ஜனங்களின் போக்கு வரவுக்கும், ராஜாங்கங்களின் பலத்துக்கும்அனுகுணமாக நடவடிக்கைகள் நடத்தவும் ஏற்பட்டன, இவைகளன்றியும் சேனைகளுக்குப் பலத்தைக்கொடுக்கக் கம்பியில்லாத் தந்திக்கருவிகளும்,மெஷீன் பீரங்கிகளும்,பெரிய ‘ஹவிட்ஜர்’ பீரங்கிகளும், நவீன வெடிமருந்துகளும் உண்டாக்கப்பட்டன. சாஸ்திர ஆராய்ச்சியின் பலனாகக் கைத்தொழிற்சாலைகள் நூதன யந்திர சாதனங்கள் அமைக்கப்பெற்று மகோன்னத பதவியடைந்தன.

இதற்கிணங்கி ஒவ்வொருதேசத்தின் வியாபாரமும் விருத்தியாகி ஐரோப்பாக் கண்டத்தின் ‘பொருள் விற்பனைசாலை’ யென்று சொல்லப்படும் ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களில் பலவிதமான கைத்தொழிற் சாமான்கள் விற்பனையாயின. இவ்விதமாக விற்பனை செய்வதில் ராஜாங்கங்களுக்குள் போட்டியேற்படுவது ஸகஜம். ஆகவே, வியாபாரச் சுதந்தரங்களைப்பற்றி மனஸ்தாபமும், கைத்தொழிலபிவிர்த்தியைப் பற்றிப் பொறாமையும் ஐரோப்பிய ராஜாங்கங்களுக்குள் ஏற்பட்டன. இவைகளில் ஜெர்மனியும் இங்கிலாந்துமே முக்கியம்.

ஜெர்மனிக்குக் குடியேற்ற நாடுகள் மிகவும் கொஞ்சம். இருபது வருஷங்களாக ஜெர்மனி தேசத்தில் ஜனத்தொகையும் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. ஜனசங்கியை

அதிகப்படவே பலர்க்குத் தொழில் ஒன்றும் ஏற்படாது போயிற்று. இதனால் ஜெர்மானியர் தங்கள் சொந்த தேசத்தை விட்டு வெளிக்கிளம்பி வேறு ராஜாங்கங்களுக்குக் கீழ்ப்பட்ட தேசங்களில் கைத்தொழிலோ, வியாபாரமோ அல்லது மற்றெந்தத் தொழிலோ செய்யும்படியாயிற்று. ஆகையினால் இந்த இருபது வருஷமாக உலகமெங்கும் ஜெர்மானியர் பரவிவிட்டனர். ஜெர்மானியர் சாஸ்திர ஆராய்ச்சியிற் சிறந்தவர்களாகையால் அவர்கள் வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து தங்கள் சரக்குகளை உலகமெங்கும் பரவச்செய்தனர். நம்மிந்தியாவிலுங்கூட ஜெர்மன் சரக்குகள் மிகுதிப்பட்டன. இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தியடையாததற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. ஜெர்மானியர் தங்கள் வியாபாரத்தை அதிகப்படுத்தப் பல தந்திரங்களையும் வழிகளையும் உபயோகித்திருக்கிறார்கள். மேற்சொன்ன காரணங்களால் ஜெர்மனி, தேசங்களைத் தன் வசப்படுத்தவெண்ணி, அதற்கு அனுகுணமாகத் தரைப்படை, கடற்படை முதலியவைகளைப் பலவருஷங்களாகப் பலப்படுத்திக்கொண்டே வந்தது.

ஐரோப்பாவானது, யுத்தம் தொடங்குவதற்கு முன்னமேயே பெரிய சேனைகளின் பாசறைபோல விருந்தது. உடன்படிக்கைகளிருந்தபோதிலும், ராஜாங்கங்களில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் பரஸ்பர ஸம்சயமும் அவநம்பிக்கையும் பயமும் இருந்துகொண்டிருந்தது. இதனால் ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா முதலிய ராஜ்யங்கள் யுத்த சன்னத்த தளவாடங்களிலும் கப்பற்படைகளிலும் கோடிக்கணக்கான திரவியம் செலவிடவேண்டிய தாயிற்று. ஜெர்மனி ஒரு போர்க்கப்பல் கட்டினால் இங்கிலாந்து இரண்டு கட்டியது; பிரான்ஸ் தன் சேனைக்கு 10 படை வகுப்புகள் சேர்த்தால், ஜெர்மனி 20 சேர்த்தது. இவ்வண்ணம் ஒன்று மற்றொன்றைவிட பலங்கொண்டு, முன் செல்லப் பிரயத்தனம் செய்தது. ஆகவே ஒரு ராஜாங்கம் மற்றொன்றின் நடவடிக்கைகளைக் கண்கொட்டாமல் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டி வந்தது.

இவ்வாறு கவனித்து ரகஸ்யங்களைக் கண்டுபிடிப்பது ராஜாங்கங்களின் தூதர்களாலும்பிரதிநிதிகளாலும் முடியாத காரியம். உத்தியோக முறையிலே வேறு ராஜாங்க விஷயங்களை அறிவதற்கு முன்னமேயே, அம்முறையில் அரைகுறையாக அறிவதைக்காட்டிலும் விஷயங்களின் முழு உண்மையை வேறு வழிகளில் ஆய்ந்தறிவது ஒவ்வொரு ராஜாங்கத்துக்கும் அவசியமாகிறபடியால், உளவாளிகளின் உதவி இன்றியமையாததாகின்றது. மேலும் தூதர்களும் பிரதிநிதிகளும் எல்லாரும் அறிந்த அதிகாரிகளாயிருப்பதினால் ஒருவரும் அவர்களிடத்தில் உண்மையைச் சொல்லார்கள். தூதர்களின் அதிகார நீதியும் வரம்பும் அவர்கள் உளவாளிகளின் தொழிலை மேற்கொள்வதற்கு விரோதமா யிருக்கின்றன. இன்னும் சாதாரண ஜனங்களுடன் கலந்து பழகி அவர்களின் அபிப்பிராயம், நோக்கம் காரியங்கள் முதலியவைகளின் உண்மையை அறிதல் தூதர்களால் இயலாது. இவ்விஷயத்தை அறிந்துகொண்டே ஒவ்வொரு ராஜாங்கத்தாரும் பிரத்யேகமான உளவறியும் இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இப்படி உளவாளிகளை, ஒவ்வொரு ராஜாங்கத்தாரும் தங்கள் தேசப் பாதுகாப்புக்காகவும், வேறு ராஜாங்கங்கள் தங்களைவிட பலமடையாவண்ணம் சூழ்ச்சிகள் செய்வதற்காகவும் ஏவித், தங்களுக்கிணங்கியுதவிபுரிவதற்குத் தகுந்த ராஜாங்கங்களோடு பரஸ்பர சம்பந்தங்களும் உடன்படிக்கைகளும் செய்துகொண்டும், தங்கள் பலம் எப்பொழுதும் எதிரியின் பலத்துக்குச் சமமாகவோ அல்லது அதற்கும் உயர்வாகவோ இருக்க உபாயம் பண்ணுகிறார்கள். வல்லரசுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ருஷியா முதலியவைகள், சிற்றரசுகளான இடலி, துருக்கி, பால்கன் நாடுகள், க்ரீஸ், பெல்ஜியம் முதலியவைகளின் விவகாரங்களில் எப்பொழுதும் தலையிட்டுக்கொண்டே வந்திருக்கின்றன. இச்சிற்றரசுகளின் நாடுகளெல்லாம் யுத்த தந்திரத்துக்குரிய சௌகரியங்கள் நிரம்பியுள்ளன. மற்றும் வல்லரசுகளுக்குள் யுத்த காலங்களில் இச்சிற்றரசுகளின் உதவி முக்

இயமாகும். எப்படியெனில், அந்நாடுகளின் வழியாக போக்குவரவுக்கும், ஆகார தளவாட சாமான்கள் சேனைகளுக்கும் போர்முனைக்கும் அனுப்புவதற்கும், அவைகளின் மூலமாக யுத்த காலங்களில் பகைவர் தேசங்களுடனும் வேறு தேசங்களுடனும் வியாபாரம் செய்து, வேண்டிய சாமான்களைத் தந்திரமாகப் பெற்றுக்கொள்வதற்கும் சௌகரியங்கள் ஏராளமாக உண்டு. வல்லரசு ஒன்றின் பக்கத்திலுள்ள ஒரு சிற்றரசு, யுத்தத்தில் இறங்காமல் ஒதுங்கி நின்றால், அதனால் அவ்வல்லரசுக்கு உண்டாகும் பிரயோஜனம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. இவ்விஷயங்களெல்லாம் இப்பொழுது நடைபெறும் மஹா யுத்தத்தினால் தெளிவாக விளங்குகின்றன.

மேற்கூறிய பலன்களை உத்தேசித்தும், கைத்தொழிலபிவிர்த்தியைப் பற்றிய பொறாமையினாலும், வியபார சுதந்தரங்களைப்பற்றிய மனஸ்தாபத்தினாலும், வல்லரசுகள் இரு கக்ஷிகளாகப் பிரிந்து ஒவ்வொரு வல்லரசும் தன் நேச வல்லரசுடன் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது. இங்ஙனம் இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகளும் ஒரு கக்ஷியாகவும், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, இடலி இம்மூன்றும் மற்றொரு கக்ஷியாகவும் தனித்தனியே உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்திருக்கின்றன. மேலேசொல்லிய சிற்றரசுகளில் சில பகிரங்கமாகவும், சில ரகஸ்யமாகவும் ஏதாவதொரு கக்ஷியில் சேர்ந்தும், மற்றுஞ்சில இரண்டு கக்ஷிகளிலும் சேராமல் ஒதுங்கிநின்றும் வந்திருக்கின்றன. ஐரோப்பாவின் 'யுத்தகளம்' என்று சொல்லப்படுகிற பெல்ஜியத்தின் நடுநிலைமையைப் பாதுகாப்பதாக இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா முதலிய ராஜாங்கங்கள் உறுதிமொழி கொடுத்திருந்தன. ஜாதீய ஒற்றுமையினால் ஸெர்வியா என்னும் சிற்றரசு ருஷ்யாவினிடம் இயல்பாக மனப்பிடித்தங் கொண்டிருந்தது. இவ்வாறு பால்கன் நாடுகளைச் சேர்ந்தவைகளில் மற்றச் சிற்றரசுகளிலும் மனச்சார்பு இருந்துகொண்டே வந்தது.

பால்கன் நாடுகள் ஐரோப்பாவின் சமாதானத்துக்குத் 'திறவுகோல்' என்று சொல்லப்படும். ருஷிய ஜப்பானிய யுத்தத்தின் பிறகு ருஷியாவின் கௌரவமும் செல்வாக்கும் ஐரோப்பிய நடவடிக்கைகளில் குறைய ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் ஜெர்மனியின் ரகஸ்ய ஆதரவினாலும் பரஸ்பர இணக்கத்தினாலும் ஆஸ்ட்ரியாவானது பால்கன் நாடுகளில் உள்ள ஹெர்ஜகாவினா, பாஸ்னியா என்னும் இரண்டு நாடுகளையும் தன் தேசத்துடன் சேர்த்துக்கொண்டது. ஆகையினால் ருஷியா, தான் இழந்துபோன செல்வாக்கை மீண்டும் அடையவெண்ணி ராஜதந்திரங்கள் செய்ய நேரிட்டது. நம் இந்தியாவிலிருப்பதுபோல, பால்கன் நாடுகளில் ஜாதிவர்ண பேதங்கள் அளவிறந்தன. ஆகவே, அந்நாடுகளில் பெரும்பாலனவற்றைவிசேஷ யூகம் யுக்தி முதலியவைகளைத் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டுவந்து தன்வழிப்படுத்த அதிக சிரமமும், மிகுந்த பணச்செலவும் ருஷியாவுக்கு உண்டாயிற்று. ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்த சிற்றரசுகளெல்லாம் ருஷியாவின் விசேஷ ராஜதந்திரத்தினால் பரஸ்பர அன்னியோன்யமுள்ளவைகளாயின. இந்நாடுகளில் சில, தங்கள் தேசவிஸ்தீர்ணத்துக்கும் வருமானத்துக்கும் மீறிச் செலவுசெய்து தங்கள் சைன்யங்களை ஒழுங்குபடுத்தி, முன்னிலும்பலமடங்குஅதிகமாகப் பலப்படுத்தின. இச்சிற்றரசர்களுக்கு இவ்வளவு திரவியம் எங்கிருந்து வந்தது?

ருஷியாவின் செல்வாக்குக்குட்பட்ட ஸெர்வியா, பல்கேரியா ஆகிய இரண்டும் துருக்கிக்கு மிகுந்த விரோதிகளாயிருந்தன. ஆகையினாலே ஜெர்மனியானது, ஸெர்விய, பல்கேரிய ராஜாங்கங்களில் பல ருஷிய, பிரெஞ்சு உத்தியோகஸ்தர்கள் வேலைக்கமர்ந்து பிரஞ்சுக்காரரால் நவீனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட பீரங்கிகளுடன் சைன்யங்களைப் பலப்படுத்தியிருப்பதைத் தன் உளவாளிகளால் சூக்ஷ்மமாக அறிந்து, இவ்விரண்டு சிற்றரசுகளும் பலமடைந்திருப்பது ருஷிய, பிரெஞ்சு திரவிய பலத்தினாலே தான் என்று நிச்சயித்துத், துருக்கிய ருமேனிய ராஜாங்கங்களைத் தன் வசப்படுத்தத் தொடங்கிற்று. இந்தச்சமயத்தில் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் ஜெர்மன் சக்ரவர்த்தியின் அபாரமான ராஜதந்திரங்களினால் சிநேக

பாவ மேற்பட்டிருந்தபடியால் இவ்விஷயத்தில் இங்கிலாந்து தலையிடவில்லை. ருமேனியா ராஜகுடும்பம் ஜெர்மன் ராஜகுடும்பத்துக்குச் சொந்தமானதால் அது சீக்கிரம் அதன் ராஜதந்திரத்துக்குள் அடங்கியது. பாலஸ்தீன் என்னும் கிறிஸ்தவப் புண்ய பூமிக்கு ஜெர்மன் சக்கிரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் யாத்திரை போனபொழுது, துருக்கிய சுல்தானை அச்சக்ரவர்த்தி சந்தித்தார். துருக்கிய சுல்தான் அவரை நல்வரவேற்று அவரோடு சிநேகபாவங்கொண்டார். இது ராஜதந்திரத்தினாலும், உளவாளிகளின் உதவியினாலுமே ஏற்பட்டது. இது முதல், துருக்கி ராஜாங்கம் ஜெர்மனியிடமிருந்துஏராளமான பீரங்கி முதலியவற்றை விலைக்கு வாங்கியும், ஜெர்மன் உத்தியோகஸ்தர்களைத் தன் சேனையில் அமர்த்தித் தன்போர்வீரர்களுக்கு யுத்தாப்பியாசம் செய்வித்தும், ஜெர்மன் சாமான்களையே அதிகமாக வாங்கி அதனுடன் வியாபாரஞ்செய்தும், இன்னும் பல வழிகளில் அதனிடம் கொண்ட தன் பரஸ்பரஸ்நேகபாவத்தை அபிவிர்த்தி செய்துகொண்டது. ஜெர்மனியினுதவியினால்தான் தேச கலகம் ஏற்பட்டு, அதன்முடிவாகத்துருக்கியில்ஜெர்மனியின் செல்வாக்குக்குட்பட்ட "யங் டர்க்" என்னும் கக்ஷியார் அதிகாரத்துக்கு வந்தார்கள். ஜெர்மனிதேசத்துக்குச்சென்றுஅங்கே படித்து விசேஷப்பயிற்சி பெற்றவர்களே யுயர்ந்த அதிகாரம் வகித்திருக்கிறார்களாகையால் துருக்கியில் ஜெர்மனியின் செல்வாக்கும் அதிகாரமும் தற்காலமோங்கியிருக்கிறது.

இப்படி ஜெர்மனி ருஷியா, பிரான்ஸ் ஆகிய இந்தத் தேசங்களின் செல்வாக்கைப் பால்கன் நாடுகளில் அழித்து, தன் அதிகாரத்தைத் தந்திரமாக அபிவிர்த்தி செய்து, இப்பொழுது நடந்துவரும் யுத்தத்தில் ருஷியாவின் போக்குவரவு யுத்ததளவாட சேகரம் ஆகிய இவைகளைத் தடைப்படுத்தி, ஆகார சாமான்களை வெளிதேசங்களுக்கு அனுப்பவழியில்லாமலும் செய்திருப்பது, துருக்கிக்குச் சொந்தமான டார்டனல்ஸ் ஜலசந்தியின் யுத்ததந்திர சௌகரியங்களைத் தவிர, சாமர்த்தியமாக உளவறியும் ராஜாங்க இலாகாவின் பெருமையாலன்றோ?

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

மூன்று சகோதரர்கள்

முற்காலத்தில் ஒரு குடியானவன் இருந்தான். மிகவும் தரித்திரனாக விருந்தபோதிலும் படிப்பில் அவன் சிறந்து விளங்கினான். அவனுக்கு மூன்று பிள்ளைகள். அவனுக்குவரவர, வயது அதிகமாகத்தள்ளாமை மேலிட்டது. அப்படியிருக்கு நாளில் ஒருநாள், தன [illegible]ன்னிடம் வரவழைத்து மூத்தவனுக்கு ஒரு கோழியும், இளையவனுக்கு ஒரு பூனையும், மற்றவனுக்கு ஒரு அரிவாளும் கொடுத்தான். மேலும் அவர்களைப்பார்த்து, "என் அருமைக் குழந்தைகளே! இப்பொழுது நான் மிகவும் தள்ளாதவனாகி விட்டேன். சில நாள்களில் நான் இறந்துவிடுவேன். அப்போது, உங்களைக் காப்பாற்றவும், உங்களுக்குவேண்டிய புத்திமதிகள் சொல்லவும் வேறொருவரும் இல்லை. என் கையிலும் காசு கிடையாது. பணமற்றவன், பிணமல்லவா? இல்லாதவன் எதுக்கு உபயோகம்? ஆகையால், நான் இப்போது உங்களுக்குக் கொடுக்கும் பொருளோ மிகவும் சொற்பமானது. ஆனாலும், அவற்றை அற்பமாக வெண்ணாமல், புத்தியும் சாமர்த்தியமுங்கொண்டு, நான் தந்த பொருளை அவை இல்லாத தேசத்துக்குக்கொண்டுபோய்த், தகுந்தபடிஉபயோகிப்பீர்களானால், உங்களுக்கு க்ஷேமமே உண்டாகும். இதுதான் அந்திய காலத்தில் நான் உமக்குக் கூறும் உபதேசமாகும். உமது புத்தியைக்கொண்டு, நீங்கள் விருத்தியடைந்து சுகமாக வாழவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்" என்று சொன்னான்.

சில நாள்களுக்குள், கிழவன் இறந்தான். பின், அவனுடைய மூத்தமகன், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் ஔவை முதுமொழிக்கிணங்கத்தன் தந்தைகொடுத்த கோழியைக்கொண்டு, பொருள் சேகரிக்கவெண்ணி, யாத்திரை புறப்பட்டான். எங்குசென்றாலும், எவ்வளவு தூரம்போனாலும், கோழியைமதிப்பவரை அவனால் காண முடியவில்லை. அவன் சென்ற விடமெல்

லாம், கோழிகள் ஏராளமாக உலாவி வந்தன. பெரிய பட்டணங்களில், சேவலிடும் சப்தம் அவ்வூரில் நுழைவதற்கு முன்பே அவன் காதைத் துளைக்கும். என்ன துரதிருஷ்டம்! ஆயினும், அவன் ஊக்கம் அழியாமல் பலவிடங்களையும் நாடிச் செல்லலானான். அவ்வாறு செல்லுங்காலத்து, திமிரத்வீபம் என்னும் ஒரு புதிய தீவையடைந்தான். அத்தீவாருக்குக் கோழியென்பது இன்னதென்றே தெரியாது. அது ஒரு மிருகமென்று [illegible]கூடியவா. அவ்வளவோடு மாத்திரம் இல்லை. இரவும், பகலும் உள்ள பொழுதை அளந்தறிய ஒருவகையும் அவருக்குத் தெரியாது. சூர்யன் உதயமானால் காலையென்றும், அஸ்தமித்தால் மாலையென்றும் மட்டும் அவருக்குத் தெரியும். இரவிலோ, காலத்தைப் பகுத்துணர அவருக்கு வழியே தெரியாது. அவ்விடம் சென்றதும், குடியானவன் மகன், ஜனங்களையெல்லாம் கூட்டிக் கீழ்வருமாறு உற்சாகத்துடன் பேசினான்:— "திமிரத்வீபவாஸிகளே! இதோ என்னிடம் இருப்பது சேவல்; இது காலத்தைக் காவல் செய்யும். இதை எப்படிப்பட்ட பறவை யென்று பார்த்தீர்களா? பொழுதை யளக்கும் பக்ஷி ஐயா இது. கால வட்டத்தைப்பற்றி யிழுத்துக் கூவிப் பொழுதை வெளியிடும் குக்குடமிது தான். சூர்யன் வரவை ஆவலுடன் எச்சரித்துக் கட்டியம்பேசும் பெருமை இதற்கே உள்ளது. இதனுடைய ஞானத்தைக் காட்டவே கடவுள் அதன் தலையில் முடித்த கிரீடம் என்ன செம்மையாக விளங்குகிறது பாரும்! நன்றாகக் கவனித்துப் பாரும்: பகற்பொழுதை மூன்றாகப் பங்கிட்டுப் பேசும். அது பேசுவதெல்லாம் காலக் கணக்குத்தான். இரவிலும் அப்படியேதான். அதன் ஜாக்ரதை உங்களுக்கேது? அதற்குத் தூக்கமென்பதே கிடையாது. இது தூங்குமூஞ்சிப் பறவையல்ல. நீங்கள் மெய்மறந்து வாய்ப்பிளந்து தூங்கினாலும், இது தூங்காமல், நியதியாக மூன்றுவேளை கூவும். மூன்றாவதுதரம், கூவி விட்டாலோ, விடியற்காலம் சமீபித்ததென்று யாவரும் அறிய வேண்டும். பகலில் கூவுவதினாலும் அப்போது அத்தனை நாழிகையாயிற்றென்றறியலாம். இப்பறவையின் பெருமையை யான் என்னவென்று புகழ்வேன்?"

குடியானவன் மொழிகளைக்கேட்ட அத்விபத்து ஜனங்கள் மிகச் சந்தோஷத்துடன் அன்றிரவு முழுதும் கோழி கூவுவதைக்கேட்கவென்று அதிக ஆவலுடன் கண்கொட்டாது விழித்துக்கொண்டிருந்தனர். அக்கோழி அன்றிரவு இரண்டாம் ஜாமத்திலும், மூன்றும் ஜாமத்திலும் விடியற்காலத்திலு [illegible]முறை கூவிற்று. அதைக்கேட்டவர்கள் அப்பறவையை விலைக்குக் கொடுப்பீரா வெனவும், கொடுத்தால் என்ன விலையெனவும் கேட்டார்கள். சொந்தக்காரன் ஒட்டகை தூக்கக்கூடிய அளவு பொன் கொடுத்தால் தனது காலமளந்துபேசும் கடிகாரப் பறவையைக் கொடுத்துப் பிரியப் பிரியப்பட்டான். வெகு சந்தோஷத்துடன் அவர் ஒப்புக்கொண்டு அச்சேவலைப் பெற்றனர். கோழிக்காரனும் சந்தோஷத்துடன் வீட்டுக்குத் திரும்பினான்.

தன் அண்ணன் கொண்டுவந்த பணக்குவியல்களைக்கண்டு அவன் தம்பிகளுக்குண்டான ஆச்சர்யத்திற்கு அளவேயில்லை. அண்ணனுடைய அதிர்ஷ்டத்தினால் தூண்டப்பட்டு இரண்டாவது குமாரன் தன் அரிவாளை எடுத்துக்கொண்டு திரவியந்தேடத் தன் உடன்பிறந்தவர்களிடமிருந்து செலவுபெற்றுப் புறப்பட்டான். அவ்வரிவாளைச் சீந்துவாரற்று அனேக நாடுகள் கடந்து கடைசியாக ஒரு தேசத்திற்குச் சென்றான். அந்த நாட்டாருக்கு அரிவாள் என்று ஒன்றிருப்பதாகவே தெரியாது. அதன் உபயோகம் அவர்க்கு எப்படித் தெரியும்? அந்நாட்டில் தானியங்களை அறுவடைசெய்ய வகையே தெரியாது. நெற்கதிர்களைப் பறித்தோ அல்லது பிசைந்தோ தான் நெல்லை எடுப்பது வழக்கம்; அல்லது கதிர்களையெல்லாம் தாளோடுகொண்டு வந்து தாள்களை நெருப்பிட்டுக் கொளுத்தியாவது அல்லது மாடுகளைவிட்டு மேய்த்தாவது தான் கதிர்களை அவர்களால் சேகரிக்க முடியும். அவ்வாறல்லாமல், தாளோடு அறுத்துக் கட்டிக்கொண்டுபோய் களத்தில்போட்டு அரியடித்துத் தான்யம்சேர்ப்பதென்பது ஒரு காலத்திலும் அவர் செய்ததில்லை. இவ்வாறு செய்யாமையினால் தான்

யங்கள் அநேகமாய்ச் சேதமாய்க் கொண்டிருந்தன. அதைப்பற்றிக் குடிகளெல்லாம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நமது அரிவாள் வீரன் அங்கு சென்று தனது ஆயுதத்தைச் சரேலென எடுத்துத் தரையில்தீட்டிப், பிறகு ஒரு தாள்கூட விண்போகாதபடி சாவதானமாய் அறுப்பறுத்துக் கட்டிக்கொடுத்துத் தன் ஆயுதத்தின் பெருமையைச் சொல்லாமலே விளக்கினான். அதைக்கண்ட அங்கிருந்தவரெல்லோரும் மூக்கின்மேல் விரல்வைத்து அதிசயமுற்று "எது கேட்டாலும் கொடுப்போம்: எதைச் சொன்னாலும் செய்வோம்; அரிவாளை எங்களுக்கு அவசியம் தாரும்; என்ன விலைகேட்டாலும் கொடுக்கத் தடையில்லை" என வாய்விட்டுக் கேட்டார்கள். குதிரை சுமக்கத்தக்க அவ்வளவு பொன் குவியலுக்கு அரிவாளைக் கொடுக்க ஒப்புக்கொண்டு, அந்தவிதமே பெற்று, அரிவாளை விற்றுக் குடியானவன் மகன் தனது சொந்த ஊரை நாடி நடக்கலானான்.

விட்டை யடைந்ததும், மூன்றாவது குமாரன் தன் முன்னவர் இருவரும் அளவற்ற பொருள் தேடிவந்ததைக் கண்டு, சந்தோஷங்கொண்டு அவ்விதமாய்த் தானும் தன் அதிர்ஷ்டத்தைப் பார்த்து வரயெண்ணி, தன் பூனையோடு தேசயாத்திரை புறப்பட்டான். ஆனால் அவன் போனவிடத்தில் எங்கும் பூனையைக் கண்ணெடுத்துப் பார்ப்பாரும் கிடையாது. ஆனாலும் போனவிடமெல்லாம், பூனைகள் அளவுக்கு மிஞ்சிக் கிடைப்பதைக் கண்டும் தான் கொண்ட உத்சாகத்தை விடாது நெடுந்தூரம் நடந்தான். சிகரிநகரி யெனும் ஊரை யடைந்ததும், அவனுக்குண்டான ஆநந்தத்திற் களவேயில்லை. அங்கு எலிகள் அளவுகிடந்து விளையாடுவதைத் தடுக்க முடியாது. ஜனங்கள் திண்டாடிய நிலையைக் கண்டதும் இவனுடைய மனத்தில் வரவர ஆநந்தம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. பேரெலிகளும், சிற்றெலிகளும், படுக்கையிலும் பரணையிலும் கூடிக் கூத்தாடும். மயிரடர்ந்த எலிகள் மகளிரை முத்தமிட ஓடும். மீசைமுறுக்கிக்கொண்டு வெள்ளை எலிகள் வெண்ணெய் திருடி உண்டு, கிச்கிச்சென்று உலாவும், மற்றும், ஸ்வயம்பாகங்களில், தாமாகவே ஸ்வயம்பாகம் கொள்ளச் சிற்றெலிகள் கூட்டங் கொண்டோடும். அன்னமிட்ட கலங்களில் அன்னத்தை யள்ளி, வேறு சில இலைகளில் சூறையிடும். வேறு சில எலிகள் தொட்டிலிலழும் குழந்தைகளுக்கு அருகிலுட்கார்ந்து, கிள்ளைமொழி படிக்கும். இவ்வாறு எலிகள் சுதந்திரம் பாராட்டித், தம்மையாள்வாரற்று, ஜனங்களுக்குச் செய்த தொந்தரைக் களவேயில்லை. அந்நகரத்தரசன், மஹாவீரனாயிருந்தும், இவ்வெலிகளை அடக்க முடியாத வெண்ணெய் வெட்டிச் சிப்பாயாகவிருந்தான். அவன் வீட்டிற்கே நமது குடியானவன் குமாரன் ஆர்ப்பாடம் செய்துகொண்டு அதிதியாகச் சென்றான். அவன் பக்கத்தில் மார்ஜால ராயர் மரியாதையாய் உட்கார்ந்திருந்தார். இலையிட்டு அன்னமிட்டதும் ஆகுமூர்த்திகள் ஆர்ப்பாடத்துடன் அதட்டிக்கொண்டு வந்தன. ஜாடராக்னி நிறைந்த மார்ஜால ராயர் ஐந்து ஆகுமூர்த்தியை அப்படியே கௌவினார். அப்பெருஞ்செயலைக் கண்ட அந்நகரத்தரசர் 'அப்பாடா'யென்று நெடு மூச்சுவிட்டார். பாழான எலிகட்குப் பகையாக வந்த பூனையை எவ்வளவு பணம் கேட்பினும் கொடுத்துவாங்க நிச்சயித்துப் பூனைக்காரன் கேட்டபடி இரண்டுயானைகள் சுமக்கத்தக்க பொன் வெள்ளி இரத்தின ஆபரணங்களை யானை மேலேயே ஏற்றி, பூனைக்காரனுக்குப் பரிசுகொடுத்து அப்பூனையை வாங்கிக்கொண்டார். சிறுவனும் தன் ஊருக்குச் சென்றான். அம்மூன்று சகோதரர்களும், மிகுந்த தனவான்களாகி அளவற்ற காணி பூமிகள் வாங்கிப் பெரும் பதவியில் வாழ்ந்திருந்தார்கள்.

நிற்க, அவர்கள் விற்ற பொருள்களை வாங்கினவர்கள் கதி என்ன வாயிற்றெனச் சற்றுக் கவனிப்போம். கோழியும், அரிவாளும் வாங்கிக்கொண்டவர்களுக்குக் குறைவொன்றுமில்லை. அவர்கள் விரும்பின காரியங்கள் சரியாகவே கைகூடி வந்தன. மற்றும் விற்கப்பட்ட அந்தப் பூனையும் ஓயாமல் எலிகளைப் பிடித்துக்கொண்டே வந்தது. ஆனால் ஒருநாள், எலிகளைத் தின்ற சிரமத்தினால் அதிக தாகமடைந்து ராஜ மாளிகையில் ஓரிடத்தில் நின்று தன் தலை

யைத் தூக்கிக்கொண்டு 'மீயா மீயா' என்று பயங்கரமாகக் கூவத் தொடங்கிற்று. பூனையின் கூச்சலை ஒருநாளும் கேளாத அந்நகரத்து அரசன்முதல் அனைவரும் மிகுந்த திகிலுற்று அரண்மனையைவிட்டு அப்புறம் ஓடிப்போனார்கள். மனங்கலங்கின அரசன் தன் மந்திரிகளை எல்லாம் கூப்பிட்டு ஒரு ஸபை கூட்டினான். தடபுடலாக ஆலோசனைகள் நடந்தன. பூனைக்குத் தூதனுப்பி ஊரைவிட்டுப் போகும்படியாகச் சொல்லும்படி தீர்மானஞ் செய்யப்பட்டது. அந்தப்படியே, ஒரு போர்வீரனை மார்ஜாலராயரிடம் சந்து அனுப்பினார். அவனும் சென்று "மார்ஜால ரூபமஹிபா! தாங்கள் தயவுசெய்து இவ் வூரின் எல்லையைவிட்டுப் போவீர்களாக! இல்லாவிடில் உங்களைக் கட்டாயப்படுத்தி ஊருக்கு வெளியேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமென எங்கள் அரசராணையிட்டிருக்கிறார். உங்கள் இஷ்டப்படி செய்யும்" என்று சொன்னான். ஆனால் நீரில்லாமல் வறண்டு தவிக்கு மந்தப் பூனை "மீயா! மீயா!" என்று பதில் கொடுத்தது. "அப்படியா!" என்று அந்த வீரன் கடுகடுத்து, 'அப்பாழும் மிருகந் தொலையமாட்டேன் என்கிறது' என்று அரசனிடம் போய்ச் சொன்னான். அப்போது கலையாதிருந்த ஆலோசனை ஸபையில் பூனையின்மீது இராஜத்ரோஹ கேஸ் எடுத்து, அதைக் குண்டு போட்டு சுட்டுவிடவேண்டுமெனத் தீர்மானஞ் செய்யப்பட்டது. ஆனால் அந்தப்படிப் பூனை படுகுண்டின் இலக்கிலிருந்து தப்பித்துக் கொண்டேயிருந்தது. இதைக்கண்ட அரசன் கவலைகொண்டு, அது யிருக்குமிடத்திற்கே தீயிட்டுவிட்டால் அது ஒழிந்துவிடுமென நிச்சயித்தான். அரண்மனை, முன் அக்கினிபகவானுக் கற்பணமானது. ஆனால் பூனை வேறோர் வீட்டின் கூரைமேலோடிக் கொண்டேயிருந்தது. விடுவிடாகக் கொளுத்தியும், பூனை கூரைகூரையாகத் தாண்டி ஓடிக்கொண்டே இருந்தது. பட்டணத்து வீடெல்லாம் பாழாயின. ஆனால் பூனையை இப்பொழுதாவது கொன்றாரோ என்னவோ தெரியவில்லை. கம்பியில்லாத் தந்தியிற் கேட்டுச்சொல்லுகிறேன். மறக்காது கேளுங்கள்.

நல்வாழ்வைப் பெறுதற்குரிய விதிகள்
MAXIMS FOR A HAPPY LIFE

'க்ளே' என்னும் கப்பலுடன் மூழ்கியிறந்த கனம் ஸ்டீபன் ஆலன் என்பவரின் சட்டைப்பையிலிருந்து அகப்பட்ட ஓர் பிரதியின் மொழிபெயர்ப்புக் கீழ்வருமாறு:—

இதனை மாணவர்களி லொவ்வொருவரும்
தம் மனதில் பதியச்செய்வ தவசியமாகும்.

1. நீ செய்யும் வாக்குறுதிகள் மிகச் சொற்பமா யிருக்கட்டும்.

2. எப்பொழுதும் உண்மையே பேசு.

3. பிறரைப்பற்றி ஒரு பொழுதும் இழிவாகப் பேசாதே.

4. நண்பர் வேண்டுமானால், நல்ல நண்பர்களை நாடு. இன்றேல் நண்பர்களையே தேடாதே.

5 உன் தொழிலுக்குத் தக்கபடி நடந்துகொள்.

6. உதார குண முள்ளவனாக ஆவதன் முன், ஞாயமுள்ளவனாகச் செய்துகொள்.

7. ஜெயிப்பதும் தோற்பதும் அதிர்ஷ்டவசத்தை யொட்டியிருப்பதனால், எந்த விளையாட்டிலும் தலையிட்டுக்கொள்ளாதே.

8. மயக்கத்தைத் தரக்கூடிய பானத்தை ஒரு பொழுதும் குடியாதே.

9. உன்னிடம் ஏதேனும் இரகசியங்களிருக்குமேல், அவைகளைப் பிறரறியாமல் வைத்துக்கொள்.

10. மற்றெல்லா விஷயங்களைக் காட்டிலும் நற்குணமே சிறப்புடைத்து.

11. கூடுமானவரையில் கடன்வாங்காமல் காலந் தள்ளப்பார்.

12. நீ மகிழ்ச்சியுள்ளவனாக விருக்க விரும்பினால், ஒரு பாவமுமறியாதவனாக யிருக்க முயல்.

13. நீ முன்னுக்கு வர விருப்பங் கொண்டால் செல்வவானாவதில் அவசர புத்திகொள்ளாதே.

14. நீ ஒரு மனிதனோடு பேசும்பொழுது அவன் முகத்தைப் பார்த்துப் பேசு.

15. ஒரு மனைவியை ஸம்ரக்ஷணம் செய்யப் போதுமான சக்தியை நீ பெறும்வரையில் கலியாணம் செய்துகொள்ள நினையாதே.

16. உன் வரும்படிக்குள்ளாகவே நீ செலவு செய்துவா.

17. வயது காலத்தில் உபயோகப்படும்படி வாலிபப் பருவத்திலேயே பொருளைச் சேர்த்துவை.

18 ஒரு கடனிலிருந்து வெளிவர முடியுமென்று நிச்சயமான தைரிய மிருந்தாலொழிய கடன்வாங்க எண்ணங் கொள்ளாதே.

19. வீணாசையானது பயங்காட்டி உன்னை யமுக்கிவிடும். ஆகையால் அதைக் கண்டவுடன் தொலைத்துவிடு.

20. நன்னடத்தையி னடையாளங்கள் நற்பழக்கமும் நற்சம்பாஷணையுமே யாகும்.

21. குறுகியதும் ஒழுங்கானதுமான இலாபமே அமைதியுள்ள மனத்திற்கு இன்பந் தரும்.

22. உன்குணம் உன் நடத்தையினால் மட்டுமே உண்மையான கெடுதலைப் பெறும். (ஆகையால் உன் நடத்தை, நன்னடத்தையாயிருக்கட்டும்)

23. எவரேனும் உன்னை இழிவு கூறுவரேல், அவரது சொற்களைப் பிறர் நம்ப முடியாதபடி நீ நடந்துகொள்.

24. இரவில் படுக்கைக்குச் செல்லும்பொழுது, நீ அன்று காலை முதல் செய்துள்ள காரியங்களை ஞாபகத்திற்குக் கொண்டுவா.

25. ஒருபொழுதும் சோம்பேறியா யிராதே. உன் கைகள் உபயோகமுள்ள காரியங்களி லமர்ந்திராவிட்டால், உன் மனத்தின் நற்பழக்கத்தைக் கவனி.

பிரபஞ்ச அபிவிருத்தி
PROGRESS OF THE WORLD

யுத்தம்

மேலரங்கத்தில் வெகு பிடிவாதமாக ஜர்மானியர் சண்டையிடுகிறார்கள். ஆலோசனை யில்லாமல் ஆட்களையும் பொருளையும் அங்கு பலியிட்டவண்ணமாகவே இருக்கிறார்கள். ஈப்ரஸ் நதியோரம் ஜர்மானிய வீரம் திண்டுமுண்டாடிக்கொண்டிருக்கிறது. மற்றந்த வேர்டனிலோ இருபுறமும் போர்முனை குறையாமல் வளர்ந்து வருகிறது. ஜர்மானியர் தமது தாழ்ந்த வீரநிலை, தமது ஜனங்களுடைய மனத்தில் படாதிருக்கும்படியாக, ஜனநஷ்டத்தையும் பொருள் சேதத்தையுங் கணிசியாது எப்படியும் வெர்டன் கோட்டையைப் பிடித்துக்காட்ட விரும்புகின்றனர் போலும்! அளவுக்கடங்கா ஆட்களைப் பலியிட்டு, அவர் சற்று ஜயம் பெற்றால், அன்றிரவே, அவரது நிலையை நமது பிரஞ்சுசேனை இல்லையாக்கிவிடுகிறது. ஆயினும், ஜர்மானியர் மிக்க ஆட்களையும், மருந்துகளையும் நாசஞ் செய்து, வாஸ் என்னுங் கோட்டையைத் தகர்த்து, விழும்படி செய்ததாகத் தெரிய வருகிறது. வாஸ் என்பது, வெர்டன் கோட்டைகளில் ஒன்றாகும். இதை அவர் கவர்ந்ததினால் அவர்க்கொன்றும் லாபமில்லை; ராணுவமாகப் பிரயோஜனமுமில்லை. மியூஸ் நதிக்குக் கீழாக ஜர்மானியர் சற்றுக்கவர்ந்த டூஅமாண்ட்பார்ம் மீண்டுங் கவரப்பட்டது. லாபாஸீ கால்வாய்க்கும் அர்ராஸ் இடத்திற்கும் இடையேயுள்ள நமது ஆங்கிலப்படையை வெகு கடூரமாகப் பகைவர் தாக்கினர்; லூஸிலுள்ள சைன்யத்தையும் அவர் தாக்கினார்கள். இச்செயல்களால் நமது சேனையை

அசைக்க முடியவில்லை. ஆகாயவிமான வேலைகள் இவ்விடத்தில் முன்னினும் அதிகமாகப் பகைவரால் செய்யப்படுகின்றன. இது அவர் பிராந்தியத்தில் நமது ஆகாயக் கப்பல்கள் பாய்ந்து, அவரது சேனைகளின் நடவடிக்கைகளைக் காணுதிருக்கும்படிக்கேயாகும். ஆயினும் அவரது ஆகாயக் கப்பல்களுக்கும் நம்மவற்றிற்கும் பல முறை சண்டை நடந்து, பகைவரது பல ஆகாயக்கப்பல்கள் கீழ்வீழ்த்தப்பட்டன.

ருமேனிய எல்லைக்கடுத்தாற்போல இருக்கும் பிரிப்பெட் என்னும் நதிக்குப் பக்கத்தில் ரஷ்யர்கள் ஆஸ்டிரியர்களைத் தோற்கடித்து, 13,000 வீரரைக் கைது செய்தது பெருங்காரியமாகும். ரேயான்டூஜ் பக்கத்தில் ரஷ்யருக்கும் துருக்கியருக்கும் சண்டைநடந்துவருகிறது. ஒலிகா என்னுமிடத்தில் மூன்று ஆஸ்டிரியச் சைன்யங்களை ஹதஞ்செய்து ரஷ்யர்கள் வெற்றி பூண்டனர். பிரிப்பெட் நதியைத் தாண்டி அவர் லட்ஜக் என்னுங் கோட்டையைப் பிடித்துக்கொண்டனர். மேலும் 11,000 ஆட்களைக் கைதிசெய்து, தமது ஜயபேரிகையை முழக்கிக்கொண்டே அவர் தென் பார்ச்வமாக வந்து, ஸ்ட்ரைபாவின் தென்பாகத்திலுள்ள பகைவரது பலத்த அரண்தலங்களைக் கவர்ந்து வால்ஹினியா என்னுமிடத்தில் வெற்றிபெற்று க்ஸேர்னேவிட்ஸ் என்னுங் கோட்டைமீது படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்டிரியர்கள் நடுக்கத்தைப்பற்றிச் சொல்ல முடியாது. அவர் திகிலடைந்து லெம்பர்க் கோட்டையை விட்டோடத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்மார்கான் என்னுமிடத்தில் ஜர்மானியர் தாக்கினார்கள்; அவரது செயல் யாவும் பலிக்காதபடி தடுக்கப்பட்டன.

பால்கன் பிராந்தியத்தில் பல்கேரியர்கள் ரூபல் கணவாய் வழியாகக் கடந்து, கிரீஸ் நாட்டிலிருக்கும் ஸ்ட்ரூம் இடுக்கு வழியிலுள்ள கிரீக் கோட்டையுள் நுழைந்து, டேர்மிஹிஸ்ஸார் என்னும் ஊரையும் அதன் பக்கத்திலிருக்கும் பாலத்தையும் கைப்பற்றினர். கிரேக்கர்கள் எதிர்க்காமலே பின்வாங்கினர். எஸ்லிட்ஜ் என்னுமிடத்திலும் ஜர்மானியரும் பல்கேரியரும் வேலைகள் செய்துகொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. டெர்மிஹிஸ்ஸாரில் பல்கேரியர் நுழைந்ததைப்பற்றிக் கிரேக்க ஜனங்கள் மிக்கக் கோபங் கொண்டிருக்கிறார்கள். பல்கேரியர்கள் டிராகோடினு, ஸ்பாடாவோ என்னும் பட்டணங்களிற் குடியேறிக் காவல்லா என்னும் பட்டணம் பக்கமாக வருவதாகத் தெரிகிறது. இவ்வாறு கிரீக் பட்டணங்களில் பல்கேரியரை விடுவதற்குக் கிரீஸ், நேசத்துருப்பிற்கு இடங்கொடுத்தாற் போலவே அவர்க்கு மிடங்கொடுத்ததாகத் தெரிவித்ததாம். ஆனால் அது யுத்தத்தில் தலையிடுவதில்லையென்றே சொல்லுகிறதாகத் தெரிகிறது.

இடாலிய நாட்டிற்கு வடக்கெல்லையில் ஆஸ்டிரியர்களது பெரும் பிரயத்தினங்கள் தடுக்கப்பட்டு வருகின்றன. அஸியாகோ பாகத்தில் மாத்திரம் இன்னும் தடுக்கப்படவில்லை. டிரேண்டினே என்னும் இடத்தில் யுத்தம் முடிந்ததாகவே எண்ணவேண்டும். அஸியாகோ நகரத்தை இடாலியர்கள் காலிசெய்துவிட்டனர். ஆயினும் ஊக்கமழியாது போரிடுகின்றனர். தென் டைராலில் நிலை கவலைக் கிடந்தருவதாயினும், முன்னினும் நல்ல நிலையைப் பெற்றதாகத் தெரிகிறது. ஆஸ்டிரியர்கள் மிகப்பெருஞ் சேனையைத் திடீரெனக் கொண்டுவந்து தாக்கியதால், மாண்டிகேங்கியோ என்னுமிடத்தைக் காலிசெய்யும்படி நேர்ந்தது; ஆயினும் அடுத்த நாளே இட்டாலியர் அதைக் கிட்டத்தட்ட முற்றும் கவர்ந்தனர். லகாரினு, ஸுகனு என்னும் பள்ளத்தாக்குகளில் ஆஸ்டிரியர்கள் செக்பந்தி செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆசியத்துருக்கியில் காகஸஸ் பிராந்தியத்தில் நிலை ஒன்றும் மாறவில்லை. ரேவாண்டூஜிலிருந்து டேர்காலாவரையிலிருக்கும் முனையில் துருக்கியர் ரஷ்யரைத்தாக்கி, அபஜயமும் நஷ்டமுமடைந்தனர். டியாப்கர் இடத்தில் துருக்கியர், ஒஹ்நோட் என்னுமிடத்திலிருந்து கோகாபஜார்மீது படையெடுத்துக் கானிரேட்டை ஆக்ரமித்துக்கொண்டனராயினும், உடனே ரஷ்யர்கள் அவரை மறுமுறை தாக்கி ஓடச்செய்தனர். மாமஹ்டன் என்னும் இடத்தில் துருக்கியர் ரஷ்யர்களைத்

தாக்கியதாகத் துருக்கியர் உத்தியோகமுறையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

மெஸபொடோமியாவில் ஆங்கில சேனையும் ரஷ்ய சைன்யமும் ஒன்றுகூடிவிட்டனர் என்பது ரஷ்யரது வெற்றிநடையை விளக்குமென்பதற்குச் சந்தேஹமில்லை.

ஆங்கில பிரஞ்சுப் படைகள் ஆப்பிரிக்காவில் கோமரூன்ஸ்நாட்டை ஜயித்தனர். மற்று ஜர்மானியக் கிழக்காப்பிரிக்காவில் ஆங்கில சேனை நுழைந்து நியூ லான்கேன்பர்க்கைக் கவர்ந்து யூஸம்பா ரயில்வழியாக விருக்கும் லெஸாராப்பட்டணத்தையு மாக்ரமித்தனர். நமீநா என்னு மிடத்திலுள்ள பகைவரது சேனையும் முற்றுகை யிடப்பட்டுவருகிறது.

இதுவரையும் கீல் கால்வாயில் தூங்கிக் கொண்டிருந்த ஜர்மானியப் போர்க்கப்பல்கள் வெளிக்கிளம்பக்காரணமின்னதென்று தெரியவில்லை. மேமீ 31உ நமது நாவாய்ப் படையும் ஜர்மானியக் கப்பல் படையும் ஜட்லண்ட் த்வீபகல்பத்திற்கு அருகாமையில் ஸந்தித்துக் கடும் போரிட்டதாகத் தெரிகிறது. இதில் ஜர்மானிய நாவாய்ப் படை முழுதும் வேலை செய்தும், தாங்க முடியாமல் பின்வாங்கியது, நமது நாவாய்ப் படையின் பெருமையை வெளியிடும். இந்த யுத்தத்தில் இருபக்கத்திலும் ஜன நஷ்டமதிகமென்று கருதப்படுகிறது. ஆயினும் ஜர்மனியின் பெரிய போர்க்கப்பல்களும், க்ரூய்ஸர்களும், நமது பக்கத்தைக் காட்டிலுமதிகமாக நாசமாயின என்பது இனி ஜர்மனியை வெகுநாள்வரை கடல்மேல் தமது போரை நடத்த முடியாதவண்ணம் செய்யுமெனச் சமர்த்தர்களால் கருதப்படுகிறது.

மற்று, ஸப்மெரீன் கொலை குறையாமலே நடந்துவருகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு ஜர்மனி இவ்விஷயத்தைப்பற்றிக் கண்ணைத் துடைக்கும்படியாகப், பதில் சொல்லியதாகத் தெரிகிறது. இதை நன்குணர்ந்து யுனெடெட் ஸ்டேட்ஸ் பிரஸிடெண்டு சீக்கிரத்தில் ஜர்மனியிடம் கோபத்தைக் காட்டுவர் என்பது நிச்சயம்.

***

கிச்சனர் பிரபு மேமீ 31உ ஆர்க்னீஸ்வழியாக ராணுவ விஷயமாகக் கிச்சனர் பிரபு ரஷ்யாவுக்குப் போகும்போது, அவர் போய்க்கொண்டிருந்த போர்க் கப்பல் கடலில் மிதந்து கொண்டிருந்த வெடிச் சுரங்கந்தாக்கி யுடைய, மரணமடைந்தனரென்பது உலக முழுதையுந் துன்பத்துள் ஆழ்த்தும். அவர் பரமதீரர். அவரது ஜீவியச் சுருக்கம் வேறிடத்தில் எழுதப்பட்டுளது.

***

யூவான்-ஷி-கே சீனு நாட்டில் அமளியாக இருந்து கொண்டிருக்கிறது. சிலர் ஜனபரிபாலனம் வேண்டுமென்றும், சிலர் அரசியல் வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். முன்னமேயே அரசனால் ஆட்சி செய்வது கூடா தெனச் சீனு ராஜ்யத்தில் ஜன ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இதற்கு யுவான் ஷி-கே என்பவர் ஜன ஆட்சித் தலைவராக இருந்து பலகக்ஷிகளின் வேலைக்கு மிணங்கத் தமது பதவியைச் சமாளித்தனர். அவரது மரணம் மிக்க துக்கத்தை விளைவிக்குமென்பது திண்ணம். பலவகை வைத்யரும்கொடுத்த மருந்தை யுண்டதால் அவர் மரித்தனரெனவும், விஷத்தால் கொல்லப்பட்டனரெனவும் கருதப்படுகிறது. எப்படியாயினும், அவர் உலக வாழ்க்கையைத் துறந்தார். அவர் ஜன ஆட்சித் தலைவராகச் சீனுவில் நடந்த அமளி குமளி காலங்களிலெல்லாம் மனோவன்மையுடன் ஆண்டதை நினைக்குமிடத்து அவரைச் சாமான்யராகக் கருதமுடியாது!

***

4%-கடன் கவர்ன்மெண்டாருக்கு 100-க்கு 4-வீதம் வட்டிக்கு ஆறுகோடி ரூபாய்கள் கடன் வேண்டுமென்றும், 12 கோடி பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. இக்கடன் 1931௵ முதல் 1936-ம்வருஷத்திற்குள் திருப்பிக் கொடுக்கப்படும். 100-க்கு $3\frac{1}{2}$-வீதம் வட்டிக்குட்பட்டுக் கவர்ன்மெண்டுக்குக் கடன் கொடுத்தவர், விரும்பினால், இந்தக் கடனுக்காக அதை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் 100 ரூ. கவர்ன்மெண்ட் சீட்டு ரூ. $82\frac{1}{2}$ ஆகக் கணக்கிடப்படும். போஸ்டாபீஸ் மூலமாகக் கொடுப்பு

வர்களும் கொடுக்கலாம். பணங்கொடுப்பவர்க்குத் தக்க ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கப்படும். இவ்விஷயத்தில் நமது நேயரனைவரும் கவனஞ் செலுத்துவரென நம்புகிறோம்.

***

மாணவர் கஷ்டம்

பாகவதத்தில் கம்ஸன் குற்றமொன்றுமறியாத சிசுக்களைத் தனது பயத்தால் தூண்டப்பட்டுக் கொன்றதாகப் படித்திருக்கிறோம். பைபிளில் ஹேரட் என்பவனும் பயத்தால் மயங்கித் தாட்சணியமில்லாமல் சிசுக்களை எல்லாம் கொன்று களித்ததாகவும் படித்திருக்கிறோம். நமது சென்னை ஸர்வ கலாஸங்கத்தார் நமது சிறுவர்களைப் பரீட்சைக் கத்தியால் கருணையற்ற கல்நெஞ்சோடு கொலை செய்வதற்குக் காரணமெதுவோ தெரியவில்லை. இச்சங்கத்திற்குத் தன் பெருமை குன்றும் என்ற பயம் போலும்! பரீக்ஷை செய்யும் வகை இந்தச் சங்கத்திற்கென்று எம்பெருமான் ஏற்படுத்தினர் போலும்! சிறுவர்களுடைய மனதை விசாலப்படுத்திப் பெருமையிற் பாய்ந்துழைக்கச் செய்வதைவிட்டு, துக்கத்தில் ஆழ்ந்து பித்தம்பிடித்துத் திரியச் செய்வதா படிப்பின் வழி? நமது சங்கத்தின் வழிப்படி போதிக்கப்படும் படிப்பு அவ்வளவழகியது! இவ்வருஷம் இன்டர்மீடியட்டுப் பரீட்சையின் தேர்ச்சிப்பட்டி இதை வெளியிடும். வடிகட்டப்பட்டுப் பரீட்சைக்கனுப்பப்படும் பிள்ளைகளில் 100-க்கு 25க்கு மேல் ஸரியாகப் படிப்பவர்களல்ல போலும்! இதை நோக்குமிடத்துப் போதனை செய்யும் உபாத்தியாயர்களாவது தமது வேலையைச் செம்மையாகச் செய்யவில்லை; அல்லது பரீட்சைக்குப்போன சிறுவர்களாவது முட்டாள்களாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் வித்தியாபிலாகாத் தலைவர்கள் கவனஞ் செலுத்தாமலிருக்க முடியாது. அல்லது பரீக்ஷகர்களாவது, பரீக்ஷைக் காகிதத்தைத் திருத்துபவர்களாவது ஸரியாக நடக்காமலிருந்திருக்கவேண்டும். வேறெந்தக் காரணத்தால், கஷ்டப்பட்டுப் படித்த நல்ல பிள்ளைகள் பரீட்சையில் தேறாதிருப்பது?

கனம் ஸ்ரீ சிவஸ்வாமி அய்யர்

கனம் ஸ்ரீ சிவஸ்வாமி அய்யர் அவர்கள் சென்னை ஸர்வகலாஸங்கத்தின் உப அக்ராஸனாதிபதியாக ஏற்படுத்தப்பட்டதெவர்க்கும் சந்தோஷத்தை விளைவிக்கும். அதுவும் தற்காலம் எல்லாரும் விரும்பத்தக்கது. அவர் தமது கவனத்தைச் சற்று முன் வெளியிடப்பட்ட இன்டர்மீடியட் பரிக்ஷையின் தேர்ச்சி விஷயத்தில் செலுத்தி, வீடுதோறும் கவலையில் ஆழ்ந்து கிடக்கும் தந்தைகளது துயரத்தையும், ஜனங்களுடைய பீதியைப்போக்கவும், மாணக்கர்களுடைய குறையை ஒழிக்கவும், ஷை பரீக்ஷையின் தேர்ச்சி விஷயத்தை மீண்டும் விசாரித்துப், பரீட்சையின் தேரிய பட்டியில் காட்டியவரன்றி, மேலும் பலரைக் காட்டும்படி ஏற்பாடு செய்வரென நம்பப்படுகிறது. பணமுற்றும், படிப்பிற்குச் செலவிட்டுத் தத்தளிப்பவரின் கஷ்ட நிவாரணத்திலீடுபட்டு, அவர் சிறுவர்களது பரிதாப நிலையை நிவர்த்திக்கச் செய்வாராக! எம்பெருமான் அவ்வாறு உழைக்கச் செய்யின், அவர் பெயர் அழியாப் பெருமையுடன் இந்திய இல்லந்தோறும் பழகுமென்பதற்கையமே இல்லை.

***

மைசூர் பொருளாதாரக் கான்பரன்ஸ்

இம்மாதம் மைஸூர் பொருளாதாரக் கான்பரன்ஸ் மைஸூரில் கூடியது. இதில் மூன்று பிரிவுகள் உள்ளன. அவை: (1) கல்வி, (2) விவசாயம் (3) தொழில்—வியாபாரம். கல்வித்தரப்பில் பலபிரேரேபணைகள் கொண்டுவரப்பட்டன. வயதானவர்க்குப் படிப்பைப் பற்றியும், அவர்க்கு இரவில் பள்ளிவைத்துப் படிப்பித்தலைப் பற்றியும், தீர்மானங்களேற்பட்டன. அவ்வாறு படிப்பிக்கும் போது லக்ஷணக்கிரந்தங்களுடன் தொழிற் கல்வியும் சொல்லிவைக்க வேண்டியதவசியமென்றும் வெளியிடப்பட்டது யாவரும் விரும்பத்தக்கது. பெண்கல்வி விஷயமாகக் கவர்ன்மெண்டார் செலவிட்டதும், கிராமங்கள் தோறுஞ் சென்று படிப்பிக்கும் விஷயத்திலும் அவர் கொண்டசிரமமும் மெச்சத்தகுந்தது. மற்று விவசாய விஷயமாகப் பல துண்டுப்பத்திரங்களை வெளியிட்டதல்லாமல், குடியானவர்க்கு விவசாய விஷயங்களைப் போதிக்கும்படியாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தொழிலிலாகாவில் வீட்டிற் செய்யப்படும் தொழில்களை முன்னுக்குக் கொண்டுவரும்படியான முறைகள் விஸ்தாரமாக ஏற்படுத்த ஏற்பாடுகள் யோசிக்கப்படுகின்றன. இந்தக் கான்பரன்ஸினால் ஜனங்கள் தமது குறையையுணர்ந்து நிவர்த்திக்க நல்லவழி ஏற்படும் என்பதற்கையமில்லை.

***

ந்யூ இந்தியா

சென்னையில் நடைபெற்றுவரும் ந்யூ இந்தியா பத்திர அச்சுக்கூடத் தலைவியிடமிருந்து கவர்ன்மெண்டார் ரூ. 2000 கட்டும்படி அச்சுச்சட்டத்தின் கீழ்க் கேட்டது, அச்சுச் சட்டத்தால் இந்திய பத்திராதிபர்க்கேற்படக்கூடிய விபத்தை விளக்கும். இவ்வச்சுச்சட்டத்தைச் சீர்திருத்தும்படிச் செய்வது ஒவ்வொரு இந்தியனுடைய அபீஷ்டமே ஆகும்.

***

மைசூரில் ஜூரி விசாரணை

மைஸூரிலும் பெங்களூரிலும் குற்றக்கேசுகளை ஜூரிகளின் உதவியைக்கொண்டு பரிசோதனைக்காக நடத்தும்படி மைசூர் தர்பார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இம்மாதிரி ஏற்படுத்தல் மைசூர் ராஜ்யத்தில் புதிதல்ல. சில விஷயங்களில், இந்தியா கவர்ன்மெண்டார் ஸரியாக நடைபெறமுடியாதென அபிப்பிராயப் பட்டனர். மைசூர் தர்பாரும் பரிசோதனைக்கென்றே ஷை ஏற்பாடுசெய்தனர் என்பது மெச்சத்தகுந்தது.

***

கனம் ஸ்ரீ அப்துல் ரஹீம்

கனம் ஸ்ரீ அப்துல் ரஹிம் அவர்கள் சென்னை ஹைகோர்ட்டின் முக்கிய ஜட்ஜாக நியமிக்கப்பட்டது யாவர்க்கு மானந்தத்தை யுண்டாக்கும். அவாது, தர்மசிந்தனை, ஸத்தியவழி, நியாயதர்மம், கல்வியபிவிருத்தியில் அக்கரை இவற்றைப்பற்றி நாம் சொல்லவேண்டியதே இல்லை.

புஸ்தக விமர்சனம்.

REVIEWS OF BOOKS

ஸ்ரீராமன்*.—வாழ்குடை ம-ள-ள-ஸ்ரீ பி. வேங்கடராம சாஸ்த்ரிகள் இயற்றியது. விலை அணா 4. இனியதமிழில் எழுதப்பெற்றுள்ள இப்புத்தகம், சிறுவர்களுடைய பாடப்புத்தகமாக உபயோகப்படுத்தத் தக்கது. இராமாயணக் கதையைச் சுருக்கமாகப் பட்டாபிஷேகம் வரை அடக்கியுள்ளது. பெண்களும் சிறுவரும் படிக்கும்படியாகப் பள்ளிகளிலும் வீடுகளிலும் இப்புத்தகம் மிக்க நன்மை தரும்படியாக உபயோகித்தல் பயன்தராதிராது.

நளன்: கர்ணன்*.—இப்பெயர்கொண்ட புத்தகங்கள் அவ்வப்பெயர் கொண்ட அரசர்களது சரித்திரத்தைச் சுருக்கமாக எளிய நடையில் யாவரும் அறியும்படியாகத் தமிழில் எழுதப் பெற்றுள்ளன. இடை யிடை, நல்ல புத்திமதிகளை எடுத்துக் காட்டியிருப்பது புகழத்தக்கது. பள்ளியில் படிக்கும் சிறுர்களது கையை யலங்கரிக்கத்தக்க பெருமையுள்ளது. இத்தகைய புஸ்தகங்களை ம-ள-ள-ஸ்ரீ வா. பி. வேங்கடராம சாஸ்திரியார் இயற்றுவது இந்நாட்டுச் சிறுவர்க்குப் பெருமுதவியாகும். நளன் விலை அணா 2, கர்ணன் அணா 3.

இந்திய மாதர் சரித்திரம்†—இப்புத்தகமும் ம-ள-ள-ஸ்ரீ வா. பி. வேங்கடராம சாஸ்திரியார் இயற்றியது. முதற்பாகமாகிய இதில் கிட்டத்தட்ட இருபது இந்தியப் பெண்களை பற்றி எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் நமது பெண்பாலார் அனைவரும் படித்தல் பெரும் பயனைத் தரும். தற்கால நாகரீகத்தால் தலைகவிழ்ந்துவிளங்கு மனைவர்க்கும் நல்ல புத்தியை யூட்டக்கூடியது. இத்தகைய புத்தகத்தை எழுதியதற் கெவரும் சாஸ்திரிகளவர்களிடம் அன்பு பாராட்டவேண்டிய தவசியம். விலை அணா 5.

நறுந்தொகை*. — அதிவீரராம பாண்டியன் இயற்றிய நறுந்தொகையை பி. வேங்கட

---

* சென்னை, மெஸ்ஸர்ஸ் R. வெங்கடேச்வர் கம்பெனி பிரசுரம்.

† சென்னை, மெஸ்ஸர்ஸ் ஆர். திருமலை அண்ட் கம்பெனி பிரசுரம்.

ராம சாஸ்திரிகள் உரையுங் கதைக்குறிப்புடனும் வெளியிட்டிருக்கிருர். இதைச் சிறுவர்க்கு மிகப் பயன்தருமாறு உபயோகப் படுத்தலாம். ஒவ்வொரு அடியிற்கும்பொருள்கூறி இனிய கதையோடு விளக்கப்பட்டிருப்பது, இப்புத்தகத்தின் புதிய குணமாகும். மூன்றணு விலைமாத்திரம் அதிகமாகத் தோன்றுகிறது.

மிதபோஜனமும் மதுபான விலக்கும்.—இது ஸ்கூல்ஸப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ S. பஞ்சாபகேச சர்மா அவர்கள் இயற்றிய ஒரு சிறு புத்தகம். எடுத்துக்கொண்ட விஷயத்தை, சர்மா அவர்கள் நன்கு விளங்கியிருக்கிருர் என்பது படிப்பவர்க்குச் சொல்லாமலே விளங்கும்.

ஸ்காந்தபுராண கீர்த்தனங்கள்.—இது மதுரை ஜில்லாவில் இயல் இசை நாடக ஸங்கீதங்களில் பெரும் வித்வானுக விளங்கிய காலஞ்சென்ற கவிகுஞ்சர பாரதிகளியற்றியது. இது கம்பராமாயணத்தைத் தழுவி, இராம நாடகத்தை அருணுசலக் கவிராயர் இயற்றியதைப்போல், கச்சியப்ப சிவாசாரியரது கந்த புராணத்தைத் தழுவி எழுதப்பட்டது. இதன் பெருமையை நாம் அதிகமாகவிஸ்தரித்தெழுத நியாயமில்லை. கவிகுஞ்சர பாரதியின் கீர்த்தனங்களைக் கேட்டு ஆநந்தியாதவரில்லை. இதுவரை அச்சுவாகனங்காணுதிருந்த இந்நூலைச் சேர்த்து ஷ்டி பாரதியாரது பேரராகிய பிரஹ்மஸ்ரீ கோடீச்வர அய்யர் வெளியிட்டது தமிழ் நாட்டிற்குச் செய்த பேருதவியாகும். மற்றுக் கீர்த்தனங்களின் பெருமைகளை நாடுமிடத்து, நாத பிரஹ்மத்தில் பதங்களடங்கிக், காலவளவிற் தயங்காது மயங்கி, இசை இன்பங் குறையாத வண்ணம், அடைமொழிகளின்றிச் சற்றுங் குறையாது, பதங்கள் உடையாது அர்த்தம் குன்ருது, கதைப் போக்கும் வழுவாது, பல ப்ரௌடவாக்கும் பழமொழிகளும் பொதிந்து, சுருங்கச் சொல்லலென்னுங்குணம் பொதிந்து யாவர்மனத்தையும்மயக்கித் தன்பால்இழுத்துப் பக்தியிற் பாயச் செய்யுந் தன்மையது. குறையென்பதில்லாததென்றே மதிக்கக் கூடியதாயினும், சில கீர்த்தனங்களில் கஷ்டமான பதங்கள் நிறைந்திருப்பது, பொருளைச் சீக்கிரத்தில் எல்லாரும் அறியும்படி செய்யாது என்று சிலர் எண்ண இடந்தரும். ஆயினும் பெரும் பாவங்களை வெளியிடும் பொழுது வெறும் வெள்ளைப் பதங்களால் சிறந்த பொருளை வெளியிடமுடியாமை யாவருமறிந்த விஷயம். அச்சமயங்களில்தான் ஒருவேளை கஷ்டமான பதங்கள் இக்கீர்த்தனங்களில் இடை இடை ஏதாவது வந்திருக்கலாமென்று இக்கீர்த்தனங்களை முற்றுமனுபவித்தவர் கூறுவரென்பது திண்ணம். 404 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ 1-8-0 அதிகமென்று சொல்ல முடியாது. யாவருமிதை ஆதரிப்பது தமிழிடையும் சங்கீதத்திடையுமுள்ள அபிமானத்தையே வெளியிடும். கீர்த்தனைக் கிரந்தங்களில் பெருமையுடன் விளங்கும் நூல்கள், தற்காலம் இராமநாடகமும், நந்தன் சரித்திரமும், இந்நூலுமே. ஆதலால் இந்நூலை யாவரும் ஆதரிப்பதுஇழுக்காகாது; தமிழிடம்பட்ட கடனேயாகும்.

அழகர் குறவஞ்சி.—இதுவும்கவிகுஞ்சரபாரதியார் இயற்றியது.அவர் பேரர் ம-ா-ா-ஸ்ரீ கோடீச்வரய்யர் வெளியிட்டது. இதுவரை தமிழில் திருக்குற்ருலக் குறவஞ்சி பெரும் புகழுடன் உலாவிவந்தது. அழகர் குறவஞ்சி வெளிவந்த பின்னர் இரட்டையர்போல் அவையிரண்டும் சேர்ந்துதான் உலாவமுடியும். இரண்டிற்கும் வேற்றுமை யிருப்பதாக வெளியிட முடியாது. ஸங்கீத விஷயத்தில் குற்ருலக் குறவஞ்சியினும் அழகர் குறவஞ்சி ஓங்கி விளங்குவது வெளிப்படை. விஷயத்தில் ஒன்றிற் கொன்று தாழாது. யாவருமாதரிக்கத்தக்க பெருநூலாகும். இதன் விலை அணு 8. அச்சு முதலிய விஷயங்களைப்பற்றி பேசவேண்டியதேயில்லை.

பேரின்பக் கீர்த்தனங்களும் பதிகங்களும்.—இவையும் கவிகுஞ்சர பாரதியார் இயற்றியவை. இதைப்பற்றிப் பேசுவது மிகையாகும். பதிகங்கள் திராக்ஷா பாகமாக இருப்பதுடன் பக்திரஸம் நிறைந்துமனத்தையுருக்கிப் போதனைசெய்யக்கூடியவை.

இந்நூலை யாவரும் படிப்பது நன்மையே பயக்கும்.—இதன் விலை அணு 8.

சேரன் - செங்குட்டுவன்.—இப்பெயருடன் தமிழிலெழுதப்பட்ட சரித்திரகிரந்த மொன்று சமீபத்திற் கிடைக்கப்பெற்ருேம். இஃது எழுதியவர், 'செந்தமிழ்'ப் பத்திராசிரியராயிருந்தவரும் சென்னையில் இப்போது நடைபெறும் தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் பிரதம பண்டிதருமான மிஸ்டர். மு. இராகவையங்கார். சிலப்பதிகார மியற்றிய இளங்கோவடிகள் தமையனுன சேரன்-செங்குட்டுவனது வாழ்க்கை வரலாற்றைப் பழைய தமிழ் நூல்களை ஆதாரமாகக் கொண்டும் பல சரித்திர கிரந்தங்கள், சாஸனங்கள் முதலியவற்றைத் துணைக்கொண்டும் இவர், நவீன சரித்திர வாராய்ச்சி முறைவழுவாது இந்நூலில் விளக்கியிருக்கிருர். செங்குட்டுவன் முன்னேராய்ப் பிரசித்திபெற்ற சேரர்களுடையவும், இவன் சுற்றத்தாருடையவுமான வரலாறுகளையும் இவனது போர்ச் செயல்களையும் இவன் காலத்து நிகழ்ந்த கோவலன் கொலை, மணிமேகலை துறவுகளையும் கோவலன் மனைவியாகிய கண்ணகியின் தெய்வீகத்தன்மையை நோக்கி முற்காலவழக்கப்படி அவளுடைய பிரதிமையை வகுக்க இமயத்திலிருந்து சிலை எடுத்து வருவதற்கும் அதனுடன் தன் வடநாட்டுப் பகைவரை வென்றுவரும் பொருட்டும் இச்சேரன் உத்தர கோசலம்வரை சென்று பகைவரை வென்று ஜயசீலனுகத் திரும்பியதையும், அப்பத்தினியைத் தன்னுட்டிற் பிரதிஷ்டித்து கௌரவித்ததையும் இவனது சமயம் சமகாலத்தரசர் புலவர் நாடு நகரம், அரசியல் குணுதிசயங்களையும் இவன் வாழ்ந்த காலவிசேஷத்தையும் இக்கிரந்தத்தால் செவ்வையாக அறிந்துகொள்ளலாம். செங்குட்டுவனுல் தெய்வமாகவணங்கப்பட்ட கண்ணகிப் பிரதிமையின் மாதிரியொன்று இலங்கையிலகப்பட்டதற்கும் பிரதிசாயையும் வீரக்கல் மஹாஸதிகற்களின் படங்களும் இந்நூலுட் சேர்த்திருப்பது மிகவும் விரும்பத்தக்கது.சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தின் செய்யுள் நடையை இதனுசிரியர் இனிய வசனநடையில் எழுதியிருப்பது அடியார்க்கு நல்லாருரை கிடைக்காத அப்பகுதியை நம்மவரெல்லாம் எளிதிற் படித்து மகிழ்தற்கு அநுகூலமாகும். சேரவரசர் தலைநகரமாக நூல்கள் கூறும் வஞ்சி என்பது இப்போது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அடங்கிய கருவூரே என்றும், செங்குட்டுவன் காலம் கி-பி. 5-ம் நூற்ருண்டாகவேண்டுமென்றும் ம-ா-ா-ஸ்ரீ இராகவையங்கார் பல ஆதாரங்கள் மூலம் வற்புறுத்துகிருர். இவ்விஷயங்கள் சரித்திரம் வல்லோரால் மிகவும் கவனித்தற் குரியவை யென்றே எண்ணுகின்ருேம். இப்புத்தகத்தால், ஒரு பழைய தமிழ் வேந்தனது வாழ்க்கைமட்டுமன்றிப் பண்டைத் தமிழரின் நடையுடை பாவனைகளின் உயர்வும், தமிழ் நாட்டின் சீரும் சிறப்பும் கரதலாமலகமாக விளங்குகின்றன. பண்டை நூல்களில் மறைந்து கிடக்கும் சரித்திர விசேஷங்கள் தமிழ்ப் பண்டிதர்களால் அதிகமாக வெளிவரவில்லை என்ற குறையை இப்புத்தகம் ஒருவாறு மாற்றத்தக்கதென்று சொல்லலாம். கானுடுகாத்தான் மிஸ்டர்.பெத்தாச்சிசெட்டியார் அவர்கள் இதுபோன்ற நூல்களுக்குப் பொருளுதவி செய்து ஊக்கப்படுத்திவருவது அவரது சிறந்த தமிழபிமானத்தையும், தேசாபிமானத்தையும் விளக்கும். பெதர் வெயிட் என்னும் விலையுயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பெற்ற இப்புத்தகத்தின் விலை ரூ. ஒன்றே. வேண்டுவோர் 'விவேக போதினி' மானேஜருக்கு எழுதிக்கொள்க.

பக்தியோகம்.—மயிலாப்பூர், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பிரசுரம்: பக்கங்கள் 103, விலை அணு எட்டு.

காலகதியால் உறங்கிக்கொண்டிருந்த நம் ஸஹோதரர்கள், தம் முயற்சியினுலும்வாக்வன்மையாலும் விழிக்க வைத்த ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரின் ஆங்கில ப்ரஸங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப் பாகுமிது ஆங்கிலத்திலும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற ஸ்ரீமான் மே. சி. தாதாசார்யரவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூல் மிகவுமெளிய இனிய நடையில் பக்தியின் பல ப்ராகாரங்களைப்பற்றி விவரிக்கின்றது. மதாபிமானம் உள்ள ஹிந்துக்கள் யாவரும் படிக்க வேண்டிய சில நூல்களில் இது ஒன்ருகும். என்று கூறுவதனுவசியம்.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

லால்குடி கல்விப் பொருட்காட்சி.—அடுத்த ஆகஸ்ட் மாதம், லால்குடி ரேஞ்ச் உபாத்திமைச் சங்கங்களை யொட்டி ஒரு வித்தியா காட்சி சாலை திறக்கப்பட்டு நடத்தப்படும். அப்பொழுது அக்காட்சிச் சாலையை திறந்து வைக்க நிர்வாக சபை மெம்பர் கனம் ஸர் சிவஸ்வாமி அய்யரவர்களை கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அய்யரவர்களும் இதற்கு முற்றிலும் சம்மதப்படுவாரென நம்புகிறோம். உபாத்தியாயர்களும், மாணவர்களும் இக்காட்சிச் சாலையில் போட்டியாகவித்தியா சம்பந்தமானவும், விவசாய சம்பந்தமானவும், கைத்தொழில்சம்பந்தமானவும், தாவரவர்க்க சம்பந்தமாயுமுள்ள சித்திரங்கள் வகைராக்களை ஷெ காட்சிசாலைக் கனுப்பி, அவைகளின் சிறப்புக்குத் தகுந்தவாறு பதக்கங்களையும், சர்டிபிகேட்டுகளையும் பெறப் பிரயத்தனப்பட இதுவே சமயம். இக்காட்சி விஷயமாக ஊக்கமெடுத் துழைக்கும் இரு கனவான்களும் கல்வியபிவிருத்தியில் அக்கரை கொண்டவர்களும் தவிர, அவர்களில் ஸ்ரீமான் பார்த்தசாரதி நாயக்கரவர்கள் இவ்விஷயங்களில்மிக்க பழக்கமுள்ளவரென்றே சொல்லவேண்டும். ஏனெனில், 1911-ம் ௵ ஏப்ரல்மீ இராமநாதபுரம் ஜில்லா பாளையம்பட்டியில், அவ்வூர் நாடார்கள் பண உதவியைக் கொண்டு ஏறக்குறைய ரூ. 5000 செலவில் ஒருகல்விப்பொருட்காட்சி வெகு விமர்சையாக நடத்திவைத்தவர். அதுபோல, லால்குடிப் பொருட்காட்சியும் எவ்விதத்திலும் உயர்வாகவே யிருக்குமென்பது எமது நம்பிக்கை.

***

மேஸ்ஸர்ஸ் ராலி பிரதர்ஸ்.— பம்பாயிலுள்ள இக்கம்பெனியார், கள்ளிக்கோட்டைக்குச் சமீபத்திலுள்ள பேரோக் என்னுமிடத்தில் ஒரு காகிதச்சாலை ஏற்படுத்த உத்தேசித்திருக் கிறார்களென்றும், அவர்கள் அவ்விதம் ஏற்படுத்தி நடத்தினால், மிகவும் ஒழுங்காயும், செம்மையாகவும் நடைபெறுமென்றும் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது.

திருவிடைமருதூர் மஹா கும்பாபிஷேகம்.—இப்புராதன க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமிக்கும், ஸ்ரீ பிரஹத் ஸுந்தர குசாம்பிகைக்கும், ஸமஸ்த பரிவார தேவதைகளுக்கும் மிதுனமீ 27உ (10-7-1916) சோமவாரம் தசமி, சுவாதி நக்ஷத்திரம் $7\frac{1}{2}$ நாழிகைக்கு மேல் $11\frac{1}{2}$ நாழிகைக்குள் ஸிம்ம லக்கினத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். அச்சமயம் சிவநேசச் செல்வர்கள் யாவரும் விஜயம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் கொடுத்த மத்தியார்ஜுனம் கோயில் கிராம வரும்படியிலிருந்து ஒரு லக்ஷத்துக்கு மேலும், தேவகோட்டை ஸ்ரீமான் மெ. லெ. மெ. ராமனாதன் செட்டியார் தம் சொந்தப் பொருளிலிருந்து ஐந்து லக்ஷத்துக்கு மேலும் செலவு செய்து பலவருஷங்களாக திருப்பணி மிகச் செவ்வையாகச் செய்யப்பெற்று இனிது நிறைவேறியிருப்பது யாவருக்கும் திருப்தியைவிளைவிக்கும். இவ்வைபவத்திற்குசுமார் இரண்டு லக்ஷம் ஜனங்கள் வரை வந்து சேருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

***

புதுவயல், ஞானப்பிரகாசசபை.—இதன்பிரதமவருஷ நிறைவுக்கொண்டாட்டம்சென்ற வைகாசிமீ, 31உ ஆனிமீ 1உ (ஜூன்மீ 13,14உ) ஆகிய இரு தினங்களிலும் மிக்க விமரிசையாக நடை பெற்றதென்றும், ஸ்ரீமான் K. சதாசிவ செட்டியாரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ், பல கனவான்கள் பற்பல விஷயங்களைப்பற்றி உபந்யசித்தார்க ளென்றும் நம் நிருபர் ஒருவர் எழுதுகிறார்.

***

மானாமதுரை, ஹிந்து லோயர் ஸகண்டரி பாடசாலை.—சிலகாலமாக இப்பாடசாலை நன்கு நடத்தப் பெறவில்லை யென்ற குறையானதுஇப்போதுஒருவாறுநிவர்த்திக்கப்பட்டதெனவே கருதவேண்டும். சென்ற ஏப்ரல் மாதம் முதல், இப்பாடசாலை ஆறு கனவான்கள் கொண்ட ஒரு கமிட்டியின் நிர்வாகத்தில் வந்திருக்கிறது. இவ்வாறுவரும் வக்கீலுத்தியோகத்திலிருப்பவர்கள். இவர்களின் கீழ், இப்பாடசாலை ஓங்கி வளருமென நம்புகிறோம்.

தனது நுட்பமான விழிகளால் தூரத்திலிருந்தே அவற்றைக் கண்ணுற்றனள். அவ்விடத்தில் சில போர்வீரர்கள் படுத்திருக்கிறார்களென நிச்சயித்து நரேந்த்ரனைப் பின்னும் இறுகக் கட்டிக்கொண்டாள். நரேந்த்ரன், விஷயத்தை அறிந்துகொண்டான். சாலையைவிட்டிறங்கி அரைமைல் சுற்றித் தர்ம ஸத்ரத்துக்கப்பால் சாலையை வந்து பிடித்தான். அப்போர்வீரர்கள் தங்களுடைய சத்ருக்களால் அனுப்பப்பட்டவர்களா, அல்லது ஆக்ராவுக்கு கஜானுப்பணத்தைக் கொண்டுவரும் காவலாளிகளா என்னும் விஷயம் நமது நரேந்த்ரனுக்காவது ஜெலிகாவுக்காவது தெரியாது.

பாதி வழியாய்விட்டது. இருபது மைல் தூரம் வந்து விட்டார்கள். குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு ஜெலிகாவைக் கீழே இறக்கினான். "உன் தைர்யம் என்ன தைர்யம்! ஜெலிகா, உடம்பு களைப்பாயிருக்கிறதா? இனி நமக்கு அவ்வளவு பயமில்லை யெனத் தோன்றுகிறது" என்றான் நரேந்த்ரன்.

"பயமில்லையென்று எப்படி சொல்லிவிடலாம். பேடிகளுடைய ஸமாசாரம் உனக்குத் தெரியாது."

"ஜெலிகா, ஆக்ராவை விட்டு, நாம் இருபது மைல் வந்துவிட்டோம். இவ்விடத்தில் குதிரை மாற்றவேண்டும்."

"இருபது மைல் வந்துவிட்டாலென்ன? இருநூறு மைலாயிருந்தாலும் அவர்கள் விடமாட்டார்கள். இந்தக் குதிரை மாற்றுமிடம் அவர்களுக்குத் தெரியாதா, உனக்கு மாத்ரந்தான் தெரியுமா?"

"சிறையிலிருந்து வந்தவன் விலங்குகளின் ஞாபகமாகவே இருப்பதுபோல் நீ இருக்கிறாய். எங்கு பார்த்தாலும் உனக்கு ஆக்ராஜனனுவாகவேதோன்றுகிறது. அதோ நமது குதிரை கனைக்கிறது. என் குதிரைதான் அது, எனக்கு அதன் கனைப்பு நன்றாய்த் தெரியும். சந்திரோதயமாய்விட்டது. இரண்டு மணி நேரத்துக்குள் நாம் நம்மிடம் போய்ச் சேர்ந்துவிடலாம்.'

குதிரை கட்டியிருந்த மரத்தண்டை வந்தவுடன் ஜெலிகா நரேந்த்ரனைப் பார்த்து "உன் குதிரையைப் பார். நிற்க முடியவில்லை, தள்ளாடுகிறது."

கிட்ட நெருங்கிப் பார்த்தார்கள். பின்னங்கால்களில் இரண்டு பெருத்த கத்திக் காயங்கள். குதிரை நிற்குமிடத்தில் ரத்தம் தேங்கியிருந்தது.

நரேந்த்ரன் பீதியடைந்து "இதென்ன ஸமாசாரம்?" என்றான். "என்ன ஸமாசாரம்? குருடனுக்குக்கூடத் தெரியுமே. நீ போகிற இடம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. உனது குதிரையைப் பின் தொடர்ந்து கால்களை உடைத்துவிட்டனர். இதுதான் ஸமாசாரம். நமது சத்ருக்கள் சுற்றுப்பக்கத்தில் ஒளிந்துகொண்டிருக்கின்றனர்."

"அந்த அற்ப நாய்கள் எங்கே ஒளிந்துகொண்டிருக்கின்றனர்.?"

"இங்கே இருக்கமாட்டார்கள்; இதுவெட்டவெளியான இடம். அதோ அந்தப் புதர்களில் ஒளிந்துகொண்டிருப்பார்கள். வேறெங்கும் இடமில்லை."

"அவர்களை என்ன செய்கிறேன் பார்? இந்தக் கத்தியால் கண்டங் கண்டமாய் வெட்டியெறிகிறேன். எத்தனை நாழிதான் நம் கையில் அகப்படாமல் ஒளித்துக்கொண்டிருக்கப்போகிறார்கள்?"

"ஆத்ரப்படாதே. நீ சக்ரவர்த்தியவர்களுடைய தூதன், ஞாபகமிருக்கட்டும். இந்த இருளில் நம்மை அவர்கள் இன்னும் பார்த்திருக்கமாட்டார்கள். காலொடிந்த குதிரையைக் கவனிக்க நேரமில்லை. அது இறக்கவேண்டியதுதான். நாம் அவர்களுக்குத்தெரியாமல் இந்த இடத்தைவிட்டுச் சென்றுவிடவேண்டும். இன்னும் இருபது மைலிருக்கிறது. நிசிக்குள் போய்விடலாம்."

முதல் குதிரையைக் கையில் பிடித்துக்கொண்டு நரேந்த்ரன் வேண்டாவெறுப்பாய் நடந்து சென்றான். நொண்டிக் குதிரையை விட்டுப்பிரிய அவனுக்குச் சிறிதேனும் மனம் வரவில்லை. நிரபராதியான ஜந்துவைக் கொன்றவர்களைத் தண்டிக்காமல்செல்வது அவனுக்குக் கொஞ்சமேனும் ஸம்மதமில்லை.

சிறிது தூரம் நடந்து சென்றார்கள். குதிரைகளின் காலடிச் சப்தம் கேட்டது. எதிரே உற்றுப் பார்த்தார்கள். ஜெலிகா காண்பித்த புதரினின்று இரண்டு குதிரை வீரர்கள் வந்துகொண்டிருந்தனர்.

"ஜெலிகா! இந்தக் குதிரையை மரத்தடிக் கழைத்துக்கொண்டுபோ, அவர்கள் இருவர்; நான் ஒருவன். இருந்தாலும் இந்தக் கற்பாறை துணையிருக்கிறது. பார்த்துக்கொள்வோம், போ."

குதிரையினின்று இறங்கினது முதற்கொண்டு நரேந்த்ரனையும் ஜெலிகாவையும் அக்குதிரை வீரர்கள் கவனித்துக்கொண்டிருந்து அவர்கள் அருகே வந்தவுடன் எதிரே வந்தனர். நரேந்த்ரன் கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு ஒரு பெரிய கற்பாறையின்மீது சாய்ந்துகொண்டு நின்றான். ஆக்ராவிலிருந்து இருபது மைல் தூரம் ஓட்டத்தின்மேல் வந்ததால் களைப்புற்றிருந்த குதிரையை மரத்தில் கட்டிவிட்டு ஜெலிகா மரத்தின் பின்னர் மறைந்து நின்றாள்.

சக்ரவர்த்தியவர்களுடைய ஊழியர்களாகிய குதிரைவீரர்களுக்கு நரேந்த்ரனும் ஜெலிகாவும் நன்றாய்த்தெரியுமாதலால் கைகலந்து தாக்குமுன் வார்த்தையால் தமது காரியத்தை ஸாதிக்க முடியுமா என்று ஒரு ஆசை பார்த்தார்கள்.

"இன்றிரவு நீர் செய்யும் கார்யத்துக்குப் பதில் சொல்லியாகவேண்டும். உம்மை லேசில் விடப்போகிறதில்லை."

"நான் சக்ரவர்த்தியவர்களுடைய கார்யார்த்தமாகச் செல்கிறேன். ராஜ துரகத்தின் காலை வெட்டி ராஜ தூதனை வழிமறிக்கும் கொள்ளைக்காரர்களை ஸரியானபடி தண்டித்து அவ்விஷயத்தை நான் எனது எஜமானர் சக்ரவர்த்தியவர்களுக்குத் தெரிவிப்பேன், ஜாக்ரதை!"

"ஆஹா, ராஜ தூதர்கள் செய்யும் வேலைதானே நீர் இப்போது செய்வது! பேஷ்! நல்ல வேலை செய்தீர்! அரண்மனை அடிமைப் பெண்ணை அப்படியே தூக்கி வந்துவிட்டீரே நரேந்த்ரநாத், உமது குற்றத்துக்கு என்ன தண்டனை தெரியுமா? மரண தண்டனை, ஞாபகமிருக்கட்டும். ராஜ தூதரே, உம்மை இம்முறை மன்னிக்கிறோம். நீர் உமது வழி செல்லலாம், உம்மைப்பற்றி எங்களுக்குஅவஸ்யமில்லை. ஜோத்பாய் அடிமையைத்தான் நாங்கள் தேடிவந்தோம். அவளை விட்டுவிட்டு நீர் ஸுகமே போகலாம். அவளைப் பிடித்துக்கொண்டு வரும்படித்தான் எங்களுக்கு உத்தரவு."

"அன்றையதினம் நள்ளிருளில் பெண்ணைக் குத்திக்காயப்படுத்தியது ஜோத்பாய் ராணியாரின் உத்தரவின் பேரிலா அல்லது உங்களுடைய எஜமானன் முஸ்ரூருடைய கார்யமா அது? அந்த மானங்கெட்ட பேடி பேச்சைக்கேட்டு இங்கு வந்தீர்களே, அவனிலும் கேடுகெட்ட குட்டிச்சுவர்களே! வாருங்கள், உங்களை இந்தக் கத்திக்கு இரையாக்கிவிட்டு மறுவேலை பார்க்கிறேன். ஜீவராசிகள் எவையாயினும் ஸரி, அவை அந்யாய மரணமடைவதைக் கண்டு சும்மாவிரேன். அந்தக் கொலைபாதகர்களை த்வம்ஸஞ்செய்தே தீருவேன்."

"நள்ளிருளில் ஒருவரையொருவர் குத்திக் காயப்படுத்திய ஸங்கதி யொன்றும் எங்களுக்குத் தெரியாது. அரண்மனையிலிருந்து ஓடிவந்துவிட்ட ஜெலிகாவை எங்கள் வசம் ஒப்புவிக்கும்படி ராஜ உத்யோகஸ்தராகிய உம்மைக் கேட்கிறோம். பதிலென்ன?"

"ஸரி, ஜெலிகாவைப் பிடித்து வரும்படி உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ராஜகட்டளை எங்கே, காண்பியுங்கள். ராஜகுதிரையைக் காலொடித்து ராஜதூதனை வழிமறிக்கும்படி உங்களுக்கு இடப்பட்ட உத்தரவு எங்கே? எனக்கு வேறோர் உத்தரவும் வேண்டாம். உமது எஜமானர் முஸ்ரூர் உத்தரவு, துரும்புக்கு ஸமானம். ராஜ உத்தரவைக் காண்பித்துவிட்டு ஜெலிகாவை அழைத்துப் போகலாம்."

இனி வார்த்தையில் பயனில்லையென்று குதிரைவீரர்கள், "நாளைய ஸூர்யாஸ்தமனத்துக்குள் அதோ நிற்கும் ஓடிவந்துவிட்ட அடிமைப் பெண்ணுக்காக நீர்பதில் சொல்ல வேண்டிவரும்" என்று சொல்லிக்கொண்டே நரேந்த்ரனைத் தாக்கினர்.

"நாளைய ஸூர்யோதயத்துக்குள்! ராஜ குதிரை காலை ஒடித்ததற்கு நீ இப்போதே பதில் சொல்லப்போகிறாய்" என்று சொல்லிக்கொண்டே நரேந்த்ரன் திடீரென ஒரு குதிரைவீரன்மீது பாய்ந்து கத்திப்பிடியால் ஒரு பலமான உதை கொடுத்துக் கீழே உருட்டிவிட்டு "இதோ, என் குதிரைக்குப்

பதில் இந்தக் குதிரை" என்று அக்குதிரையின்மீது ஏறிக்கொண்டான்:

ஜெலிகாவும் தனது கட்டாரியால் இன்னொருவனை இடதுகையில் வலிவாய்க் குத்தினாள். அவன் எங்கே இன்னுமொரு குத்து வருமோ எனப்பயந்து கீழே குதித்து விட்டான். உடனே ஜெலிகாவும் ஒரு குதிரையின்மீது ஏறிக்கொண்டாள்.

இரண்டு வீரர்களும் கோபாவேசத்துடன் தங்களுடைய கத்திகளைக் கையிலெடுத்துக்கொண்டனர். ஆனால் நரேந்த்ரனுக்கு அவர்களை மறுபடியும் தாக்கிக் காயப்படுத்த விருப்பமில்லை. "போய்விடுங்கள். உங்களுடைய கோபத்தைக் காட்டி அவமானமடையவேண்டாம். ஜாஸ்தி பேசினால் முஸ்ரூர் கதியாகும் உங்களுக்கும். முஸ்ரூரைக் குத்திப் படுக்கவைத்த பெண்முன் நீங்கள் எம்மாத்ரம்? திரும்பிப்போய் முஸ்ரூரிடம் 'ராஜதூதருடைய குதிரையைக் கொன்றதற்குத் தண்டனை எங்களுடைய குதிரைகளை யிழந்தோம்' என்று சொல்லுங்கள். காலொடிந்த குதிரையையும் கையொடிந்த மனிதனையும் ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். இன்றைக்குத் தப்பிப்பிழைத்தது தம்பிரான் புண்யம். என்றைக்காயினும் ஒரு நாள் நீங்கள் தூக்குமரத்தில்தான் ப்ராணனை விடவேண்டியவர்கள்."

எதிர்ப்பதில் பயனில்லை யென அறிந்து காயப்பட்டவன் தனது நண்பன்மீது சாய்ந்துகொண்டு இருவரும் போய்விட்டார்கள்.

நரேந்த்ரனும் ஜெலிகாவும் இன்னொருவழி சென்றார்கள். குதிரைகளிரண்டும் சுறுசுறுப்பாயிருந்தன; காற்று சில்லென்றடித்துக்கொண்டிருந்தது. இருவரும் குதிரையை வேகமாய்த் துரத்திச் சென்றனர். ஜெலிகா தலைதெரியாத வேகத்தில் முன்னர் சென்றாள். நரேந்த்ரனால் அவளுக்கு ஸரியாய்ப் போகமுடியவில்லை. அவளுடைய தலையயிரெல்லாம் அவிழ்ந்து காற்றில் பறந்துகொண்டிருந்தது; ஆடைகளெல்லாம் அலங்கோலமாய்க் கிடந்தது; இந்தக் கோலத்தில் அவள் ஒரு சிரிப்பு சிரித்துக்கொண்டிருந்தாள். வெள்ளை வெளேரென்றிருந்த அவளுடைய கைகள் சேணத்தைப் பிடித்துக் கொண்டிருந்தன. அப்போது அவளைப் பார்த்தால் காற்றில் பறந்துகொண்டிருக்கும் ராக்ஷஸி போலிருந்தாள். வழிமுழுவதும் அதே வேகத்தில் சென்றார்கள். நரேந்த்ரனுடைய கூடாரம் கண்ணுக்குத் தென்பட்டவுடன் அவர்கள் நின்றுவிட்டார்கள்.

நரேந்த்ரன் கீழேயிறங்கிக் குதிரைமீதிருந்த ஜெலிகா அருகில் வந்தான். அவள் தோற்றத்தைப் பார்த்தான்; ப்ரமித்துவிட்டான்.

அவளுடைய முகம் கோவைப் பழமாகச் சிவந்திருந்தது; நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. அப்போது ஸூர்யோதய காலம். கதிரவனது செங்கிரணங்கள் முகத்தின்மீது விழ, அவளுடைய ப்ரகாசமான கண்கள் வைரக்கற்கள்போல் ஜ்வலித்தன; அவளுடைய முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது, அதரங்கள் சிறிதே திறந்திருந்தன. கூந்தல் அவிழ்ந்து, நெற்றி, புஜங்கள், இவைகளின்மீது விழுந்து கிடந்தது. ஆடை தாறுமாறாய்க் கலைந்திருந்ததால் அவளுடைய வயிறு விம்முவது வெளிக்கு நன்றாய்த் தெரிந்தது. இவ்வளவு அலங்கோலங்களுக்கிடையிலும் அவளுடைய முகத்தின் வசீகர சக்தியையும் அவளுடைய துடியிடையின் அழகையும் கண்டு நரேந்த்ரன் மயங்கினான்.

அந்தத் தேவகன்னிகை குதிரையினின்று குதித்தாள். நரேந்த்ரன் அவளை விழவொட்டாமல் கையில் பிடித்துக்கொண்டு அந்தக் கட்டழகி கன்னத்தில் ஒரு முத்தங் கொடுக்க எத்தனித்தான். அவள் உடனே விடுவித்துக்கொண்டு அகலப்போய்ச் சிரித்தாள்; நரேந்த்ரன் விழித்தான்.

உடனே அவள் அன்பாய் அவனிடம் வந்து நய வார்த்தைகள் பேசினாள். அப்போது அவள் விழிகளில் நீர் ததும்பிற்று.

"போர்வீரா, நேசமற்றுத் திக்கற்று அநாதையாயிருந்த அடிமைப் பெண்ணின்பொருட்டு நீ எவ்வளவோ ஸாஹஸங்கள் புரிந்து, கடைசியில் அவளை அந்த அடிமையினின்றும் விடுவித்தாய். உனது குணம் என்ன மேன்மையான குணம்! எனது பெற்றோர்கள் செய்த புண்யம் உன்னை ஆக்ராவுக்கு இழுத்தது; என்னை அடிமையினின்றும் விடுவித்தது. நரேந்த்ரா, நாம் இன்றைய

தினம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிகிறேம், ஆனல் தார்த்ரிப்பெண் செய்ந்நன்றி மறக்காதவள். ஜெலிகா தனது ப்ராணநேசனைக் கனவிலும் மறந்திருக்கமாட்டாள்."

நரேந்த்ரன் பதில்மொழி கூற யோசித்தாவதற்குள் அவள் மறைந்து விட்டாள். அவன் தனக்கு ஆக்ராவினின்று வழிகாட்டி வந்த ஒரு மகம்மதியப் பெண் திடீரென மறைந்து விட்டாளெனச் சொல்லி தனதாட்களை விட்டு அப்பெண்ணைத் தேடும்படிச் சொன்னன். அவர்களும் காடுமேடெல்லாம் தேடித்திரிந்தும் பயன்படவில்லை ஜெலிகா கடைசியாய்க் கூறிய வார்த்தைகளையும் அப்போது அவள் கண்களில் ததும்பிய நீரையும் நரேந்த்ரன் நினைத்து நினைத்துப் பார்த்தான். என்னதான் யோசித்தாலும் அப்பெண்ணின் நிஜஸ்வரூபம் அவனுக்கு விளங்கவில்லை.

மாதவீகங்கணம்

இரண்டாம் பாகம் முற்றிற்று

வே. கா. ராமநாதன்.

மதுரை ஜில்லாவில் நேசவுத்தொழில்.—ஆறு மாதங்களுக்கு முந்தி, மதுரை நகரிலும், வேறு முக்கியமான இடங்களிலுமுள்ள நெசவுத்தறிகளின் மொத்தம் வருமாறு:—

	நெசவுத்தறிகள்
மதுரை தாலூக்கா	8223
திண்டுக்கல் தாலூக்கா	2000
பழனி தாலூக்கா	1164
பெரியகுளம் தாலூக்கா	1025
நிலக்கோட்டை தாலூக்கா	833
மேலூர் தாலூக்கா	732
திருமங்கலம் தாலூக்கா	23
ஆகமொத்தம்	14,000

இதில், மதுரையில் நெசவுத்தொழில் நடந்துவரும் தறிகள் 6562. புருஷர்களுக்கு உபயோகப்படும் பருத்தி நூல் வஸ்திரங்கள் 3655 தறிகளில் நெய்யப்படுகின்றன. ஸ்திரீகளுக்கு உபயோகப்படும் சாயம் போட்ட நூல் புடவைகள் 2608 தறிகளில் நெய்யப்படுகின்றன. பட்டு வஸ்திரங்கள் 299 தறிகளில் நெய்யப்படுகின்றன. 91 தறிகளில் பல நிறமுள்ள விலையுயர்ந்த புடவைகள் நெய்யப்படுகின்றன.

விசேஷக் குறிப்புகள்

NEWS AND NOTES

பாங்கூராவில் கொடிய பஞ்சம்.—வங்காள மாகாணத்தில் கல்கத்தாவுக்கு வடமேற்கிலுள்ள பாங்கூரா ஜில்லாவில் சென்ற இரண்டு வருஷங்களாக மழைக் குறைவால், கொடியபஞ்சம் உண்டாகியிருக்கிறது. பாங்கூராவிலிருக்கும் $11\frac{1}{2}$-லக்ஷம் ஜனத்தொகையில் 8 லக்ஷம் ஜனங்கள் க்ஷாமத்தினலும், குளிரினலும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறர்கள். கவர்ன்மெண்டார் செய்யும் உதவி போதாததாயிருக்கிறது. ஏழைகளையும், சங்கடத்திலிருக்கிறவர்களையும் காப்பாற்ற வேண்டுமென்பதே ஹிந்துக்களின் தர்மமாகையால், வயிற்றுக்குச் சோறில்லாமலும் அணிவதற்கு வஸ்திரமில்லாமலும் கஷ்டபட்டுக்கொண்டிருக்கும் லக்ஷக்கணக்கான நமது சகோதரர்களுக்கு இயன்றவரையில் இச்சென்னைமாகாணவாசிகளாகிய நாமும் உதவிபுரிந்து நலமடையவேண்டுமென்பதே நமது கோரிக்கை.

***

இந்திய ஸ்திரீகளின் யூனிவர்ஸிடி.—பூனு பெர்கூஸன் காலேஜில் முந்தி புரொபஸராயிருந்த புரொபஸர் கே. டி. கார்வே என்பவர், இந்திய ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமாய் ஒரு யூனிவர்ஸிடி ஸ்தாபிக்க வேண்டுமென்று மிகுந்த சிரத்தை எடுத்து வருகிறர். ஜப்பான் தேசத்தில், தேச பாஷை மூலமாகவே சகல பாடங்களும் கற்பிக்கப்பட்டு வருவதுபோல, மிஸ்டர் கார்வே ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் யூனிவர்ஸிடியில், தேச பாஷைகள் மூலமாகவே சகல பாடங்களும் கற்பிக்கப்பட்டு வருமாம். ஸ்திரீகளுக்குவேண்டிய சகலவித தேவைகளும் கவனிக்கப்பட்டுவர, வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும் சொல்லப்படுகிறது. இது விஷயமாக இச்சென்னை மாகாணவாசிகளில் அநேகர் பண உதவி புரிந்திருக்கிறர்கள். மற்றும் சிலர், உதவி புரிவதாக வாக்குமளித்திருக்கிறர்கள்.

இம்மாதிரியாக வான சாஸ்திரத்தை முதல் முதல் மிகக்கற்றறிந்தவர்கள் ஹிந்துக்கள் என்று தெரியவருகிறது. இவர்களுடைய மதவிஷயமான புஸ்தகங்களில் நட்சத்திரங்களைப்பற்றியும், க்ரஹங்களைப் பற்றியுமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வெகுகாலமாக தினங்களையும், நாழிகை முதலிய காலக் கணக்குகளையும் நமது கிரஹ நட்சத்திரங்களின் உதயாஸ்தமனங்களிலிருந்து இவர்கள் கணக்கிட்டு வருகிறர்கள். இப்படியே சீனர்களும், எதிப்தியர்களும் வான சாஸ்திரத்தைப் படித்து வந்தார்களென்று தெரியவருகிறது. க்ரேக்கர்கள் ஹிந்துக்களிடத்திலிருந்து இதைக்கற்றுக்கொண்டு, பிறகு அதிகமாக விருத்தி செய்ததாகத் தெரியவருகிறது. ஆனல் இவ்வித விஷயங்களைப்பற்றி ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. இப்பொழுது இந்த சாஸ்திரம் நல்ல விருத்தியை அடைந்திருக்கிறது. இருந்தபோதிலும், இதைப் பற்றிக் கொஞ்சங்கூடத் தெரியாதவர்கள் அநேகர் இருக்கிறர்கள். கண்களிருந்தும் இவர்கள் குருடர்களல்லவா?

நமக்கு வெளிச்சத்தைத் தருகிற பெரிய தீபங்களாகிய சூர்யசந்திரர்களை நாம் பார்க்கிறேம். சூர்யன் பகலில் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் தருகிறது. சந்திரன் இரவில் வெளிச்சத்தை மாத்திரம் தருகிறது. சூர்யனை இரவில் நாம் பார்ப்பதில்லை. உண்மையில், சூர்யோதயத்திலிருந்து சூர்யாஸ்தமனம் வரைக்கும் உள்ள நேரத்திற்குப் பகலென்றும், சூர்ய அஸ்தமனத்திலிருந்து அடுத்த சூர்ய உதயம் வரைக்கும் உள்ள நேரத்தை இரவென்றும் சொல்லுகிறேம். சந்திர வெளிச்சம் சூர்ய வெளிச்சத்தைக் காட்டிலும், பிரகாசத்தில் மிகக் குறைந்தது. அல்லாமலும், சந்திர வெளிச்சம் குளிர்ச்சியாயிருக்கிறது. சந்திரன் எல்லா இரவுகளிலும் பிரகாசிப்பதில்லை; சில தினங்களில் இரவு முழுவதும், சில தினங்களில் இரவில் கொஞ்ச நேரம் மாத்திரமும் பிரகாசிக்கின்றது.

இதுபோலவே, சந்திரன் எப்பொழுதும் ஒரே அளவாக நமக்குக் காணப்படவில்லை. நாளுக்கு நாள் வளர்வதாகவும் அல்லது குறைவதாகவும் காணப்படுகின்றது. பௌர்ணமி தினம் நமக்கு முழுச்சந்திரனும் தெரிகிறது; இரவு முழுவதும் பிரகாசிக்கின்றது. அன்று முதல் அமாவாஸ்யை வரையில் சந்திரன் வரவரக் குறைவதாகக் காணப்படுகிறது. அல்லாமலும், அது வரவர நேரம் சென்று உதயமாகிறது. ஆகையால் அதன்



கிரகங்கள்

வெளிச்சமும் முன்னிரவில் இல்லாமல் போகிறது. கடைசியாக, அமாவாஸ்யையன்று இரவில் நமக்குச் சந்திரன் காணப்படுகிறதேயில்லை. ஆகையால் அன்றிரவு சந்திர வெளிச்சமுமில்லை. மறுதினம் முதல், சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாக வளர்வதுபோல் சாயங்காலத்தில் வானத்தில் காணப்படுகிறது. அதன் வெளிச்சமும் வரவர இரவில் அதிக நேரம் காணப்பட்டு, மறுபடி பௌர்ணமிதினம் இரவு முழுவதும் இருக்கிறது.

இந்த சூர்ய சந்திரர்களைத் தவிர நமக்கு

வெளிச்சம் தருகிற வேறு வஸ்துக்களும் வானத்தில் உண்டு. இவைகள் நட்சத்திரங்களும் கிரஹங்களும். இவைகளை எண்ணிக் கணக்கிடுவது அசாத்தியமென்றே தோன்றுகிறது. நட்சத்திரங்களெல்லாம் மினு மினு என்று பிரகாசிக்கின்றன. சிலவற்றைத் தவிர எல்லா நட்சத்திரங்களும் சிறிய வைரங்கள்போல் பிரகாசிக்கின்றன. வானத்தில் இச்சிறிய நட்சத்திரங்களுக்கு நடுவில் கொஞ்சம் பெரிதான வஸ்துக்களும் சில சமயங்களில் காணப்படுகின்றன. இவைகள் நம்முடைய கண்ணுக்கு நட்சத்திரங்களைப் போல் காணப்பட்டாலும், அவைகளைப் போல் 'மினு மினு' என்று பிரகாசிக்காமல் ஒளியசையாமல் பிரகாசிக்கின்றன. இப்படிப்பட்ட வஸ்துக்களில் ஒன்று சில காலங்களில் காலை நேரத்தில் கிழக்குத்திசையிலும், சில காலங்களில் மாலை நேரத்தில் மேற்குத் திசையிலும் காணப்படுகிறது. இது ஒரு பெரிய நட்சத்திரம் போலிருக்கும். இதை நாம் சுக்ரன் என்றும், வெள்ளி என்றும் சொல்லுகிறோம். இதைப்போன்றவைதான் கிரஹங்கள். வானத்தில் நட்சத்திரங்கள் நாளுக்கு நாள் கொஞ்சங் கொஞ்சமாக மேற்குத்திசையாக நகர்ந்திருப்பதாகக் காணப்படும்போது, இவைகளின் இடையிலுள்ள இக்கிரஹங்கள் நட்சத்திரங்களோடு கூட நகராமல், அவைகளுக்கு முன்னும் பின்னுமாக நகருகின்றன.

உதாரணமாக, ஒரு கிரஹம் ஒரு நட்சத்திரக்கூட்டத்தின் நடுவில் காணப்பட்டு, அக்கூட்டத்துடன் ஒருநாள் உதித்து அஸ்தமிக்க, பிறகு 10, 15-நாட்கள் கழிந்தவுடன் அக்கூட்டத்தைவிட்டு விலகி கொஞ்சம் கிழக்கில் காணப்படும்; அல்லது மேற்கில் காணப்படும். இம்மாதிரியான முக்கிய கிரஹங்கள் புதன், சுக்ரன், செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன். நாமிருக்கும் பூமியும் இவைபோன்ற ஒரு கிரஹந்தான். இவைகளைத்தவிர, வேறு சிறிய கிரஹங்களுமுண்டு. இந்தக் கிரஹங்களெல்லாம் சூரியனைச் சுற்றுகின்றன. ஒவ்வொன்றும், ஒரு கணக்கான காலத்தில், சூரியனைச் சுற்றி வருகிறது. இனி இவைகளைப்பற்றித் தனித்தனியாகப் பார்ப்போம்.

காலஞ்சென்ற ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர்

THE LATE Mr. G. SUBRAHMANYA AYYAR, B. A.

இந்திய மண்டலத்து நெடுநாளாக உலாவி வந்தசோதி இம்மாதம் அஸ்தமித்தது. வியாதியால் மெலிந்தும், தமது நாட்டின்மேல் வாஞ்சை யொழியாது, தன்னுயிரைத் தனது நாட்டிற் கென்றே அர்ப்பணஞ்செய்த சுதேசமித்திரன் பத்திராதிபராகிய ஜி. சுப்பிரமணிய அய்யரவர்கள் தேஹ வியோகமானது, நமது இராஜதானியில் மாத்திரமல்லாமல் இந்திய நாடு முழுதும் வருத்தத்தைக் கொடுக்கும். அவர் கைதேர்ந்த வன்மையர்; பத்திரிகையின் நிலையை ஸ்தாபிக்க நெடுநாள் உழைத்து, இப்பொழுதிங்குலாவும் 'ஹிந்து' என்னும் ஆங்கிலப் பத்திரிகையையும், 'சுதேசமித்திரன்' என உலாவும் தமிழ்ப் பத்திரிகையையும், அத்தகைய பத்திரிகைகளில்லாக் காலத்தில் ஏற்படுத்தி நடத்தி, அவற்றை எல்லாப் பத்திரிகைகளுக்கு முன்னாக முந்தும்படியான நிலைக்குக் கொண்டு வந்தவர். தென்னிந்தியாவில் ஜனங்களைப் புனருஜ்ஜீவனஞ் செய்ய அவரைப்போல உழைத்தவர் தற்காலத்து வேறெவருமில்லை என்று நாம் சொல்லவேண்டிய தநாவச்யம். எவ்வாறுழைத்தால் இந்நாட்டை உயர்த்தலாமென்று அவர் இயற்கையால் அடைந்திருந்த அபார புத்தியையும், ஊக்கத்தையும், மெய்ம்மையோடு கூட்டி உபயோகித்தார்; பொதுஜனவாழ்க்கை இத்தன்மையாக இருக்கவேண்டுமென்றுங் காட்டினார்.

ஆங்கிலக் கல்வி நலத்தை முழுதுங்கொண்டு அய்யரவர்கள் இந்தியப் படிப்பின் அபிவிருத்தியில் தமது கவனத்தை முதலிற் செலுத்தினார். 1878-ம் வருஷம் அவர் 'ஹிந்து' பத்திரிகையை ஏற்படுத்தி அதன் பத்திராதிபராக இருந்தார். அடங்கா மனத்தோடும், மனசாட்சிக்குச் சிறிதும் தவறாது, கம்பீரமாக வெளிப்படுத்திய அபிப்பிராயங்களின் பெருமையால், அப்பத்திரிகையை முன்னோங்கும்படிச் செய்தனர்; ஹிந்துபத்திரிகையின் தற்காலநிலையும்பெருமையுமே அதற்குச் சான்றாகும். இவர் இத்

தென்னிந்தியாவில் தேசபத்திரிகையின் தந்தையாக விளங்கினார்; இவருக்குமுன் இம்மாதிரிப் பத்திரிகைகள் உலாவி வரவில்லை. ஹிந்துவின் பத்திராதிபரானதும், இவரது கவனம் பல விஷயங்களில் நுழையவாரம்பித்தது. இந்திய மஹா நாட்டிற்கு (Indian National Congress) ஆரம்பமுதல் உழைத்தவருள் இவர் ஒருவர். பம்பாயில் முதல் முதல் 1885-ம்வருஷம் கூடிய இந்திய மஹாநாட்டிற்கு இந்த ராஜதானியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; அதில் இவரே இந்திய ராஜாங்கத்தின் சீர்திருத்தத்தினிமித்தம் 'ராயல் கமிஷன்' ஒன்று ஏற்படுத்த வேண்டுமெனத் தெரிவித்த முதல் பிரேரபணையைப் பற்றிய தீர்மானத்தை வெளியிட்டனர். அது காலஞ்சென்ற ஸர். பி. எம். மேடா, காலஞ்சென்ற நரேந்த்ரநாத் சேன் இவர்களால் ஆமோதிக்கப்பட்டது. அன்றுமுதல் ஐயரவர்கள் இந்திய மஹா நாட்டு விஷயத்திலேயே கவனஞ் செலுத்தி, பத்திரிகைகளிலும் ஸதஸ்ஸுகளிலும் மேற்படி விஷயங்களைப்பற்றி வெளியிட்டுக் கொண்டே இருந்தனர். அய்யரவர்கள் நமது நாட்டுத் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற அவா நிறைந்து விளங்கினவர். சென்னை மஹாஜன ஸபையை அவர்தான் ஸ்தாபித்தார்; அதன் முதல் காரியதர்சியாகவிருந்து பொது ஜன அபிப்பிராயம் வெளியிடு மார்க்கங்களையுங் காட்டினார். அவர்க்கு இராஜாங்கச் செலவு முதலிய விஷயங்களைப் பற்றி நல்ல ஞான மிருந்ததைக் கவனித்தே அவரை கவர்ன்மெண்டார் இங்கிலாந்தில் நடந்த 'வெல்பி கமிஷன்' முன் சாக்ஷியங் கொடுக்கத் தேர்ந்தெடுத்தனர். அவர் நமது நாடு ஸ்வராஜ்ய மடையவேண்டுமென்றும், அன்ய நாட்டு ஸாமான் முதலியவைகளை விலக்க வேண்டுமென்று மபிப்பிராயப்பட்டவர்; ஸ்வதேசி ஸாமான்களை ஆதரிப்பதில் அவாக் கொண்டவர். அவர் சென்னை ஜாதிய நிதியும், தொழிற் சங்கமு மேற்படுத்தி அதற்காக உழைத்ததும், தீபாவளிப்பண்டிகை காலத்து வீடு வீடாகச்சென்று பணம் வசூல் செய்து நிதி சேர்த்ததும் யாவருமறிவர். மற்றும் ஆசார விஷயங்களிலும் அவர் சில தீர்ந்த கோட்பாடுகள் அடைந்திருந்தனர். பிறர்போல் வீணே பேசாது தனது மனமொப்ப நடப்பவரானபடியால், சென்னை ஆசாரச் சீர்திருத்த சங்கத்தின் அங்கத்தினராய்த், தான் மதவிஷயங்களில் முன்னோர் முறையைத் தழுவாது, விதவா விவாஹம்முதலியது செய்யவேண்டுமென்று

ஜி. சுப்பிரமணிய அய்யர் (1855-1916.)

பேசிய வண்ணமே, தனது வைதவ்யமடைந்த பெரிய பெண்ணுக்கு மறு கல்யாணஞ் செய்வித்துப் பல கஷ்டங்களுக்காளானார். இவ்வகையினராயிருந்ததுடன், சிறியர் பெரியர் என்று பாராட்டாது அவர் பேதாபேதமின்றி எவரிடமும்ஒரேவிதமாய் நடந்து வந்தனர்.

நிற்க, ஹிந்து பத்திராதிபராக இருக்கும்பொழுது அவர்க்குத் தேசபாஷையில் வர்த்தமானப் பத்திரிகைகள் உலாவவேண்டுமெனத் திடமாகத் தோன்றிக்கொண்டி

ருந்ததற்கொப்ப, 'சுதேச மித்திரன்' என்னும் தமிழ்ப் பத்திரிகையை 1882-ம் வருஷத்தில் நடைபெறச் செய்து, அது தமிழுலகில் முதல்நிலை பெறும்படியாகவும், எல்லாரும்அதைமதிக்கும்படியாகவும்,அதன் அபிப்பிராயங்களை 'நிதானத்துடன் கவனிக்கும்படியாகவும் செய்தனர். 1898-ம் வருஷம் ஹிந்து பத்திரிகையின் பத்திராதிபநிலையையும், அதில் தான் பெற்றிருந்த பாத்யதையையும் விட்டு விலகியதும், அவர் கவனமுழுதும் சுதேசமித்திரன் பத்திரிகை அபிவிருத்தியிலேயே செலுத்தினர். இந்த ராஜதானியில் தேசபாஷை வர்த்தமான பத்திரிகைகளுக்கு அவரே தாயாக விளங்கினவர்.

அயருடைய கவனமிவற்றுடன் நிற்கவில்லை. காரியபாக விஷயமான ஞானம் ஜனங்களுக் கேற்படவேண்டு மென்று 1902-ம் வருஷம் 'யுனைடட் இந்தியா அண்ட் நேடிவ் ஸ்டேட்ஸ்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று மிக்க நேர்த்தியுடன் நடத்தினர்.

நிற்க, இராஜத்ரோகப் பேய் குடிகொண்ட 1908-ம் வருஷம் ஐயரவர்களிடம் தவறாக அபிப்பிராயங்கொண்ட நமது கவர்ன்மெண்டார் அவர்மீது இராஜத்ரோக கேஸ், சுதேசமித்திரனில் வெளிவந்த சில விஷயங்களுக்காக எடுத்தனர். ஆனால் சில நிபந்தனைகளின்மீது அதைஅமுலுக்குக்கொண்டு வராதிருக்கும்படியாக நேர்ந்தது.

நெடுநாளாக அவருடன் குடிகொண்ட கொடிய வியாதியின் வலிமையால் பொது விஷயங்களில் வரவர அவர் அதிகமாகத் தலையிடமுடியாமற் போயிற்று. ஆயினும், அவர் தமது அபிப்பிராயத்தை அடிக்கடி வெள்ளிடைமலைபோலப் பத்திரிகைகளின் மூலமாக வெளியிட்டுக்கொண்டே யிருந்தனர்.

அவருடைய வியாதி குறையாது நீடித்துவர, யமதருமனே பரமநேசனாகவந்து அவர் ஆவியைக் கவர்ந்து, ஏப்ரல்மீ 18-ம் தேதியன்று வியாதிக் கூட்டிலிருந்து அவரை விடுவித்துவிட்டான்.

அவரது பலவகைப்பட்ட ஞானமும், முடிந்த எண்ணமும், கோட்பாடும் பேதமற்ற நினைவும், யாவரையுமுயர்த்த வேண்டுமென் றுழைப்பதும், மனத்தெண்ணத்துக்கொப்ப நடப்பதும், ஆகிய அரிய குணங்களை உள்ள பெரியவரை இந்த ராஜதானி மாத்திரமன்று, இந்திய நாடே கைசோர விட்டுக் கண்ணீர் சோர, உறுதியுரைக்கும் துணையற்று விளங்குவதின் பரிதாபத்தை நாம் எழுதிமுடியுமா? கவர்ன்மெண்டார், எதுகாரணத்தைப்பற்றி அவரிடம் தவறாக எண்ணங்கொண்டனரோ நமக்குத் தெரியாது. ஆனால் ஜனங்களுக்கோ,அவர் பெரிய மஹானாகத்தான் விளங்கினர். அவர் பேரைக்காட்டிலும் பெருமை பெற்றபெயர் இச்சென்னையிற் கிடையாது. பொதுவிஷயத்திற்கு முன்னின்றவர் அவரே; நமது தேசத்துவர்த்தமானப் பத்திரிகைகள் முன்னிலைபெற உழைத்தவரும் அவரே; பேசுந்திறத்திற் சிறந்து அத்திறத்தை உலக நன்மைக்குபயோகித்து விளங்கியவரும் அவரே; அவரே பெரியவர். அவர் நம்மை விட்டுப் பிரிந்தது நெடுநாள்வரை மறையாது: அவரிடம்கொண்ட மதிப்பைக் கொள்ளை கொள்ளத்தக்க மஹான் ஏற்பட நெடுங்காலம்வரை முடியா தென்பதை வெளிப்படுத்துவும் வேண்டுமோ?

"வாயுவினை நோக்கியுள மாண்டவய நாவா
யாயுவினை நோக்கியுள யாக்கையவை யேபோல்
தீயவினை நோக்கும்இயல் சிந்தனையு மில்லாத்
தூயவனை நோக்கியுள துப்புரவு மெல்லாம்."

—குண்டலகேசி.

மனதை அடக்கல்.—யானையைக் கட்டுத்தறியினின்றும் அவிழ்த்துவிட்டால் மரங்களையும் கிளைகளையும் முறித்துவிடும். பாகன் மாவெட்டியால் அதன் மண்டையில் ஒரு குத்துகுத்தினால் துஷ்டத்தனத்தை யொழித்து ஸாதுவாகும். அதுபோல் மனதை அடக்காமல் விட்டுவிட்டால் அது கெட்ட விஷயங்களில் பிரவர்த்திக்கும். அதை விவேகமென்னும் வாளால் வெட்டித் தடுத்தால் துர் விஷயத்தில் பிரவேசியாது. நம்முடைய தேகத்தில் நமக்குள்ள அபிமானத்தை நாம் எப்படித் தொலைக்கலாம்? தேகமானது எலும்பு, மாமிசம், இரத்தம் முதலியவற்றா லாகியிருக்கிறது. இவைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எண்ணிப் பார்த்தால்வெகு அசங்கியமாகத் தோன்றும். அன்றியும், ஒவ்வொன்றும் நாள்பட்டிருந்தால் நாற்றமெடுத்து அழுகிப்போய்விடும். இப்படி எண்ணியெண்ணி அதன்மேலுள்ள பிரியத்தை அகற்ற வேண்டும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
நூலகம்